
குறளோவியம்



கலைஞர் மு.கருணாநிதி

குறிஞ்சிலாவியம்

கலைஞர் மு.கருணாநிதி



பாரதி பதிப்பகம்

126/108, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

தபால் பெட்டி எண் : 4984. போன் : 24340205.

Email : bharathipathippagam@gmail.com

Editions

First Edition : February 1985
Second Edition : June 1986
Third Edition : September 1992
Fourth Edition : June 1997
Fifth Edition : December 1999
Sixth Edition : January 2004
Seventh Edition : December 2008
Eighth Edition : April 2009
Nineth Edition : February 2011
Tenth Edition : September 2018

12800

பதிப்புகள்

முதற் பதிப்பு : பிப்ரவரி 1985
இரண்டாம் பதிப்பு : ஜூன் 1986
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர் 1992
நான்காம் பதிப்பு : ஜூன் 1997
ஐந்தாம் பதிப்பு : டிசம்பர் 1999
ஆறாம் பதிப்பு : ஜனவரி 2004
ஏழாம் பதிப்பு : ஜூன் 2009
எட்டாம் பதிப்பு : ஏப்ரல் 2009
ஒன்பதாம் பதிப்பு : பிப்ரவரி 2011
பத்தாம் பதிப்பு : செப்டம்பர் 2018

விலை : ரூ.1200.00

❑ KURALOVIYAM ❑ By : Dr. KALAIGNAR M. KARUNANIDHI ❑ Price : Rs.1200.00 ❑ © TAMILKANI PATHIPPAGAM ❑ © Design, Setup & Pictures : BHARATHI PATHIPPAGAM ❑ Produced By : PAZHA. CHIDAMBARAM ❑ Published By : BHARATHI PATHIPPAGAM, T.Nagar, Chennai- 600 017. P.B. No. 4984.❑ 1A, Earikkarai Street, S2, Sarala Enclave, Nerkundram, Chennai - 107 Mob: 9383982930 / 9962109349 ❑ Printed at: ANANDA OFFSET Chennai - 107,

முகப்புரை

கலைஞர் மு.கருணாநிதி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்க்கை நெறி வகுத்துக் காட்டிய வள்ளுவரால் வழங்கப் பெற்ற அறிவுக் கருவூலமே திருக்குறள்.

விஞ்ஞானம் பெருகிப் பரவி வளர்ந்திருக்கும் இந்தக் காலத்தில், நிழற்படக் கருவியின் வாயிலாக ஒளிப்பதிவாளர்கள் அவர்கள் திறனுக்கேற்பவும் கற்பனைக்கேற்பவும் ஓர் அழகுமிழ்ச் சோலையையோ - ஓர் ஆலயத்துக் கோபுரத்தையோ - ஓர் ஆடற்பாவையின் சிலையையோ - பல்வேறு கோணங்களில் சித்திரித்துக் காட்டுகிற வித்தகத்தைக் கண்டு மகிழ்கிறோம்.

அஃதே போல், அழியாப் புகழ் கொண்ட குறளுக்குப் பதவுரையென்றும் விரிவுரையென்றும் விளக்கவுரையென்றும் அக்காலந் தொட்டு இக்காலம் வரையில் ஆய்ந்து வழங்கியுள்ள அறிஞர் பெருமக்கள் பலர் எனலாம்.

பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர், பரிப்பெருமாள் போன்றோர் குறளுக்குத் தந்துள்ள விளக்கங்களேயன்னியில் பிற்காலத்திலும் புலவர் பெருமக்கள் அரிய விளக்கங்களை அளித்துள்ளனர்.

குறளின் பெருமை கூற வந்த அக்காலப் புலவர் கபிலர்,

> "தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
> பனையளவு காட்டும் படித்தால்....."

என்று வியந்து போற்றுகிறார்.

காலைநேரம், கபிலர், பசும் புல் ஒன்றைப் பார்க்கிறார். தரையுடன் ஒட்டிக் கிடக்கும் அந்தச் சிறிய புல்லின் நுனியில், தினையின் அளவைக் காட்டிலும் குறைவான ஒரு பனித்துளியையும் அவர் காண்கிறார். பனித்துளியை உற்று நோக்குகிறார். அந்தப் பனித்துளியின் அளவுக்குள்ளே - ஆங்கருகே ஓங்கி உயர்ந்து நிற்கும் பனைமரம் முழுவதும் தெரிகிறது! அந்தக் காட்சி கபிலரைக் கற்பனைச் சிறகடித்துப் பறக்கச் செய்கிறது! "ஆகா! ஒரு சிறு பனித்துளிக்குள்ளே பக்கத்தேயுள்ள பனைமரம் முழுதும் தெரிகின்றதே; இதே போலத்தான் வள்ளுவனின் குறட்பாவுக்குள்ளும் இந்த வையகத்துக்குத் தேவையான பெரும் பொருள் பொதிந்து கிடக்கிறது" என்கிறார்.

குர்ஆன், பைபிள் போன்றவை, மார்க்க மத நூல்களாகப் போற்றப்படுகின் றன! அந்த மார்க்க மதங்களைச் சேர்ந்த கோடானு கோடி மக்கள், தங்களுக்குத் தக்க வழி காட்டும் அருட் பிழம்புகளென அந்த நூல்களை ஏற்றித் தொழுது பின்பற்றுகின்றனர்!

குறள், ஒரு குறிப்பிட்ட மதத்தின் அல்லது மார்க்கத்தின் வழி காட்டும் நூலாக இல்லாமல், பொதுவான வாழ்க்கை நெறி வகுக்கும் நூலாகத் திகழ்கிறது.

RAJ BHAVAN LIBRARY

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு உருவாகியிருந்த தமிழ் நிலத்துச் சமுதாயச் சூழலின் நடுவிலே எழுத்தாணி பிடித்து ஏடெழுதிய வள்ளுவப் பெருந்தகையார், அறம் எதுவென அறுதியிட்டுக் கூறினார். இல்வாழ்க்கையின் இனிய பயனையும் எப்படியிருந்தால் துறவறம் சிறப்புடையது என்பதையும் வாழ்க்கையில் கொள்ளுவன - தள்ளுவன எவை எவை எனப் பகுத்துக்காட்டியும் முடியரசு ஆட்சி நடந்த காலத்திற்குச் சொல்லப்பட்ட அறிவுரைகள் குடியரசு ஆட்சி நடக்கும் நாடுகளுக்கும் பொருந்துமெனக் கூறுமளவுக்கு அரசியல் கோட்பாடுகளை வகுத்தளித்தும் உயிர் இனத்தின் இயற்கை உணர்வான காம உணர்வு, ஆறாவது அறிவையும் பெற்றுள்ள மனித இனத்தினையும் ஆட்படுத்தக் கூடிய ஆற்றல் கொண்டது எனினும் அதற்கு அன்பினை அடிப்படையாகக் கொண்ட இலக்கண இலக்கியக் கவசம் அணிவித்தும் எப்பாலினும் சிறந்த முப்பாலினைப் பொழிந்து அதில் தேன் தமிழும் கலந்து நம் இதயத்தின் வாயிதழ் திறந்து ஊட்டுகின்ற அமிழ்தமே திருக்குறள்!

ஒன்றுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களுக்கோ பதவுரை, விரிவுரை என்று எழுதிக் கொண்டிராமல், பலரும் விரும்பிப் படிக்கத் தக்க வண்ணம் அவர்களைக் கவர்ந்திழுத்துக் கருத்துக்களை நெஞ்சத்தில் பதிய வைத்திட வேண்டுமென்ற ஆசைத் துடிப்பு, எனக்கு முப்பது ஆண்டுக் காலமாகவே உண்டு.

முதல் முயற்சியை 1956-ஆம் ஆண்டு தொடங்கினேன். 'முரசொலி' வார இதழில் "குறளோவியம்" என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதிடத் துணிந்தேன்.

அதற்கென முதலில் நான் தேர்ந்தெடுத்து சொல்லோவியம் தீட்டிய குறள்-

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"

என்பதாகும்.

(குறளோவியம் - இந்நூலில் 190 ஆம் பக்கம்)

"தமைக்காத்த தலைவன் தமக்காகக் கண்ணீர் சிந்துமளவுக்கு ஏற்படுகின்ற களச்சாவினை வீரர்கள், யாசித்தாவது பெறவேண்டும்."

என்பதே இதன் பொருளாகும். களம்பட்டுத் தியாகியாக நான் மாண்டு கிடக்க, என் உடல் மீது என் தலைவர் அண்ணா அவர்கள் கண்ணீர் சிந்தும் பேறு பெறவேண்டு மென்ற அவா மிகுதியால் எழுதப்பட்ட முதல் குறளோவியம் இது.

ஆனால், நான் நினைத்ததற்கு மாறாக நடந்து விட்டதே! என் அன்புத் தலைவர் எனக்கு முன் மறைந்து விட்டாரே!

'முரசொலி' வார இதழ், நாளிதழாக மாறிய பிறகு, வாரந்தோறும் "குறளோவியம்" எழுதிட வாய்ப்பில்லாமற் போயிற்று.

அதுவரை வெளிவந்த குறளோவியங்களைத் திரட்டி மிகச் சிறு நூல் வடிவில் வேலூர் நண்பர் திராவிடர் பதிப்பகக் கிருட்டினன் அவர்கள் வெளியிட்டார்.

பின்னர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு எழுத்தாள நண்பர் சாவி அவர்கள், அவர் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தி வந்த "தினமணி கதிர்" வார இதழில் குறளோவியத்தைத் தொடர்ந்து எழுதுமாறு என்னைத் தூண்டிக் கொண்டேயிருந்தார்.

"தினமணி கதிர்" இதழில் வாரந் தோறும் குறளோவியம் இடம் பெற்றது.

அதன் பிறகு முரசொலி மாறன் வெளியிடும் 'குங்குமம்' வார இதழில் குறளோவியம் தொடர்ந்தது.

இந்த நூலில் முன்னூறு குறளோவியங்கள் இடம் பெற்றுள்ளன. பயன் படுத்தப்பட்டுள்ள குறட்பாக்கள் 354 ஆகும்.

அறத்துப்பாலில் 76 குறட்பாக்கள், பொருட்பாலில் 137 குறட்பாக்கள். இன்பத்துப் பாலில் 141 குறட்பாக்கள்.

இந்த 354 குறட்பாக்களுக்கும் சொல்லோவியம் இயற்றிட, செழிப்பு மிகுந்த செந்தமிழ் எனக்குத் துணை நின்றுள்ளது என்பதை நூலுக்குள் நுழைந்தவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

கவிதை நடையை உரைநடையிற் கலந்து, அதனைக் கரடுமுரடான கடுந் தமிழ்நடையாக்கிவிடாமல், எழில் கூட்டி எளிய நடையில் வழங்கிடும் புதிய நடையொன்றை 1945-ஆம் ஆண்டு நான் ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் தந்தை பெரியார் அவர்களின் அரவணைப்பில் இருந்தபோதே அறிமுகப்படுத்தினேன்.

"கவிதையல்ல" என்ற தலைப்பில், புதுக்கவிதைகளை அப்போதுதான் எழுதத் தொடங்கினேன்.

"மடிந்தான் உன்மகன் களத்தில்" என்றான்
மனம் ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க் கிழவி ஒரு முறை!
தாயம் ஆடுகையில் காய்களை வெட்டுவதுண்டு,
களமும் அதுதான்!
"காயம் மார்பிலா? முதுகிலா?
கழறுவாய்" என்றாள் – முதுகில் என்றான்!
கிழவி துடித்தனள்; இதயம் வெடித்தனள்;
வாளை எடுத்தனள்;
முழவு ஒலித்த திக்கை நோக்கி
முடுக்கினாள் வேகம்!
"கோழைக்குப் பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர் போர் வீரனா?
முன்பொரு நாள்
பாய்ந்து வந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச்
சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளர்.
அவருக்குப் பிறந்தானா?
அடடா! மானமெங்கே?"

"புறநானூற்றுத் தாய்" என்ற தலைப்பில் எழுதிய நீண்டதோர் புதுக் கவிதையின் சில வரிகளே இவைகள்!

1953ஆம் ஆண்டு திருச்சி சிறையில் ஆறுமாதக் கடுங்காவல் கைதியாகக் கல்லக்குடி போராட்டத்தின் காரணமாக அடைபட்டிருந்தபோது, 'புதுக் கவிதை' பாணியில் பல எழுத்தோவியங்கள் உருப்பெற்றன. "வைரமணிகள்" எனும் நூல் வடிவில் அவை வெளிவந்துள்ளன.

"புகழே! நீ ஒரு கணிகை. கால் கடுக்க உன்னைத் தேடி அலைபவர்களிடம் காசு பெற்றுக் காதல் வழங்குகிறாய்!

புகழே! நீ ஒரு சந்திர மண்டலம். உன்னை முழுமையாக அடையும் முயற்சியில் பல மேதைகள் இன்னும் வெற்றி பெற முடியவில்லை!

புகழே! நீ இமயத்தின் உச்சி. இடைவிடா முயற்சியால் உன்னைச் சிலர் பிடித்து விடுவார்கள்!

புகழே! நீ ஒரு பனிக்கட்டி. உன்னைக் கைக்குள்ளேயே வைத்துக் கெட்டியாகப் பிடித்திருந்தாலும் நீராகக் கரைந்து மறைந்துவிடுகிறாய்!

புகழே! நீ ஒரு மதுக்கலயம். உன்பால் வீழ்ந்த ஈக்கள் எழுந்ததே இல்லை!

புகழே! நீ ஒரு நிழல். உன்னைப் பற்றிக் கவலைப்படாதவர்களைத் தொடர்ந்து கொண்டேயிருப்பாய்!"

புதுக் கவிதைகள் எனப் பெயர் சூட்டிக் கொண்டு இன்று ஏராளமாகப் பெருகிவிட்ட செல்லோவியங்களை, சுமார் நாற்பது ஆண்டுகட்கு முன்பே நான் உருவாக்கிடமுயற்சித்தேன் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு! இதோ மற்றொன்று:

"மலையே! வைரமணி விளக்குகள்
ஒளிவிடும் வானப்பந்தலின் கீழ்
அரியாசனம் வீற்றிருக்கும்
பூமி அன்னையின் தலையை அலங்கரிக்கப்
பொன்னாலும் பச்சையாலும்
இழைக்கப்பட்ட மணிக்கிரீடம் என்பேன் உன்னை!
விண்ணகத்து வெண்முகில்கள் எல்லாம்
கீழே வீழ்ந்து கண்ணுக்கெட்டா உயரம்
வளர்ந்தனவோ எனத் திகைக்கின்றேன்!
பனியால் நீ உடலை மூடிக்கொண்
டிருக்கும் போது!"

இது போலச் சிறையில் நான் வார்த்தெடுத்த சிற்பங்கள் பல உண்டு.

கவிதை நடைச் சிறு கதைகள் பலவற்றை "தேனலைகள்" எனும் தலைப்பில் பல ஆண்டுகட்கு முன்பே எழுதிய பழக்கமும் எனக்குண்டென்பதைத் தமிழகம் அறியும், அந்தப் புத்தகத் தொகுப்பின் வாயிலாக!

எனவே, எழிலார் தமிழ் எடுத்து, எண்ணத்தை எழுத்து வண்ணமாகக் குழைத்தளித்துக் குறளுக்குக் கருத்தோவியங்கள் தீட்டுவதில் எனக்குத் தயக்கமில்லை; தடங்கல் குறுக்கிட்டதுமில்லை!

என் ஆற்றல் பற்றி அளக்கிறேன் ஆணவத்துடன் என்று அருள் கூர்ந்து நினைத்திட வேண்டாமெனப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறளோவியம் எழுதிடப் புதிதாகப் பயிற்சி பெறவில்லையென்பதையும் நாற்பது ஆண்டுக் காலமாக நான் பல்வேறு கோணங்களில் வளமை மிகு தமிழ் மொழியைப் படம் பிடித்துக் காட்டி வருவதன் தொடர்ச்சியே இந்த நூல் என்பதையும் விரித்துரைக்கத்தான் இத்தகைய எடுத்துக்காட்டுக்களே தவிர, இறுமாப்பின் விளைவல்ல! அந்தத் தீய பண்பு, என் இதயத்தில் எள்முனையளவு கூட என்றைக்கும் இடம் பெற்றதுமில்லை!

உரைநடையில் குறட்பாக்களை மலர் மாலையாக ஆக்கியோர் உளர்.

செய்யுள் செய்து குறளுக்குப் பொருள் உரைத்தோர் உளர்!

சுருக்கமாகச் சுவையாகக் குறளுக்குப் பொழிப்புரை புகன்றோர் உளர்!

இசைத் தமிழால் இனிய குறளைச் செவி வழி பாயச் செய்து சிந்தை குளிர்விப்போர் உளர்!


இவற்றுக்கிடையே என் பங்காக, நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி, நிழல் தரும் குளிர்தருக்கள் அடர்ந்த நீரோடைத் தமிழிலும் நெஞ்சில் கனலேற்றும் முழவோசைத் தமிழிலும் நீள் விழியில் நதி தோன்றத் தூண்டும் உருக்கமிகு உணர்ச்சித் தமிழிலும் குறட்பாக்களை உங்கள் முன்னால் உலவ விட்டிருக்கிறேன்.

கருத்தோவியங்களுக்கேற்ப கவின்மிகு ஓவியங்களை வரைந்துள்ள திறன் மிகு ஓவிய வல்லுநர்கட்கு என் வாழ்த்துக்கள்!

சென்னை - தமிழ்க்கனிப் பதிப்பகத்தார்க்கே முழு உரிமையும் உடைய இந்த நூலின் முதற் பதிப்பை வெளியிட முன் வந்த பாரதி பதிப்பகத்து நண்பர் சிதம்பரம் அவர்கட்கு என் நன்றி!

புலவர் பெருமகனாரும் - நல்ல தமிழறிஞரும் - மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்து முன்னாள் துணைவேந்தருமான டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் இந்த நூலுக்கு எழுதியுள்ள அணிந்துரை, இலக்கியப் பணியில் என்னை மேலும் மேலும் தொடர்ந்து ஈடுபடத் தூண்டுகின்ற உளமார்ந்த வாழ்த்தாகவே அமைந்துள்ளது. அவரது பண்பும் பாசமும் அன்பும் நிறைந்த இதயத்துக்கு என்றைக்கும் நன்றியுடையவனாக இருப்பேன் நான்!

இன உணர்வுடன் இலக்கியப் பணியாற்றும் தன்மானத் தமிழ் அறிஞர்கட்கு இந்நூலைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.



மதுரை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
பெரும்புலவர் டாக்டர் வ.சுப.மாணிக்கம் அவர்களின்

மதிப்புரை

நம் கலைஞர், நாள்தோறும் சிந்தித்து வாரந்தோறும் தமிழோவியமாக வரைந்த குறளோவிய நூலுக்கு நான் மதிப்புரை எழுதுவது என் கடமை; என் எழுத்துக்குக் கூடுதற் பெருமை.

குறளோவியம் எழுதிய நூலாசிரியர் யார்? எத்தகையர்? அவர்தம் நெஞ்சின் மாண்பென்ன? நினைவின் மூச்சு எத்தகையது? பன்னூறாண்டு கழித்து இக்குறளோவியத்தைப் படிப்பவர் கூடப் பின்வருமாறு எண்ணுவர்: "இந்நூலை எழுதியவர் தமிழ்ப்பற்று, தமிழறிவு, தமிழுணர்வு மிக்கவர். சங்க இலக்கியப் பயில்வினர். தமிழ் நாகரிகமே மனித நாகரிகம் என்ற கடைப்பிடியினர். புத்திலக்கியம் படைக்கும் கற்பனைக் கவிஞர். எழுத்திலும் சொல்லிலும் தொடை வளமிக்க உரைநடைக் கவிதையர். நாடகப் பார்வையர். உரைபல கற்றவர். நாட்டின் ஆட்சியில் உயர்பதவி தாங்கியவர். உலக அரசியற் கண்ணோட்டத்தர். பல்துறை மக்களொடு அணுகிப் பழகிக் காலவுலகியல் கைவரப் பெற்றவர். வாழ்வுப் பாசறையில் மலையும் கடலும் கண்டவர். தோலா நாவினர். தொய்யா நெஞ்சினர். சாதிசமயச் சழக்கிற்புகாப் பகுத்தறிவினர். சிந்தனைச் செயலினர். திருக்குறட் சிந்தையர். தமிழினத் தலைவர். எழுத்துக்கலை, செந்நாக்கலை, நாடகக்கலை, கவிதைக்கலை, அரசியற்கலை, எழிற்கலை என்றாங்கு பல்வேறு கலைகளிலும் நெஞ்சு அறிவு செயல் தோய்ந்த கலைஞரே இவர்" - இவ்வாறு நாம் இன்று காண்பது போல எதிர்காலத் தமிழுரும் இந்நூலாசிரியரின் பல திறங்களைப் பற்றி மதிப்புக் கொள்வர் என்பதில் ஐயமில்லை. ஏன்? இத்துணைக் கலைகளும் ஒருங்கு குடிகொண்ட பெருங் கலைஞர் ஒருவராலல்லாது பிரிதொருவரால் இக்குறளோவியம் கலைக்காவியமாக எழுதியிருக்க முடியுமா? மண்ணின் சிறப்பை வளங் காட்டும்; பண்ணின் சிறப்பைத் தமிழ் காட்டும்; கலைஞரின் சிறப்பைக் கருத்து வண்ணம் காட்டிவிடும்.

டாக்டர் கலைஞரின் குறளோவியத்திற் பல புதுநெறிகள் உள. ஒவ்வொரு குறட்கு முன்னும் ஏற்ற சூழ்நிலை அல்லது பின்புலம் அமைத்துக் காட்டியிருப்பது முதற் சிறப்பு. திருக்குறள், ஒரு நூலின் கிளையில்லை. அதுவே முதல்; மக்கள் வாழ்வியக்கத்தை அலசிப்பார்த்துக் குறளுருக் கண்டவர் வள்ளுவர். அவர் கண்ட பல நிகழ்ச்சிகள் குறட்பிழிவாயின. இவ்வுண்மையை அறிந்த நம் கலைஞர் கருணாநிதியார், கற்பனையானாலும் குறட்கேற்ற சூழ்நிலைகளைத் தொடுத்தும் அடுத்தும் கற்பாரை வழிபடுத்துகின்றார். இத்தனிநெறி நோக்கிக் குறளோவியத்தைச் 'சூழ்நிலையுரை' என்றும் கூறலாம். உரையென்ற மரபுப்பெயர் சிறப்பாக இருக்குமாயின் சொற்புலங்காட்டுவது எளிது; பின்புலங்காட்டுவது அத்துணை எளிதன்று. சில குறட்பாக்கட்கு இரண்டு மூன்று பக்கங்கள்கூடப் பின்புலம் போட்டிருக்கும் பெருந்தடத்தைக் காண்கின்றோம்.

தன் பின்புலக் கட்டுமானத்தில், திருவள்ளுவரையும் ஈடுபடுத்திப் பணி கொண்டிருப்பது இந்நூலின் மற்றொரு தனிச்சிறப்பு. மக்களின் புரட்சிக் கண்ணீரையும் கொடிய அரச

குலத்தின் ஒட்டகக் கால்களையும் கண்டபோது தான், வள்ளுவருக்கு "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்" என்ற திருக்குறள் பிறந்தது எனவும் ஏரிக்கரை ஓரமாக நடந்து சென்றபோது "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல" என்ற உவமையைக் கண்டுபிடித்தார் எனவும் வெற்றி வேலொடு தன் முன் நின்ற மன்னனைப் பார்த்து "வேலன்று வெற்றி தருவது" என உண்மை கூறினார் எனவும் "கயவனைக் காட்டுக" என்று கேட்ட இளங்கோவுக்கு நேரிடையாக ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டித் தெளிவித்தார் எனவும் குறளோவியத்தில் வள்ளுவரின் நடமாட்டத்தைக் காண்கின்றோம். கம்பர் தன் இராமாயணத்திற்குப் பாடபேதத்தைத் தன் காலத்திலேயே கேட்டார் என்பது போல, "அறத்தாறு இதுவென வேண்டா" என்ற குறட்குப் பொருந்தா உரையை வள்ளுவரே கேட்டு உண்மையுரை கூறித் திருத்தினார் என்று ஒரு பின்புலத்தைக் கலைஞர் செப்பனிட்டிருப்பது, துணிவு கலந்த புலமையாகும்.

'வள்ளுவம்' என்ற என்நூலில், திருக்குறள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற வாழ்வுத் தனிமறை எனவும் தத்தம் நடைமுறைக்கு ஒத்த செயல்நூல் எனவும் அவரவரும் தம் வாழ்வுப் போக்கோடு வைத்துப் பார்ப்பதே திருக்குறட்பயன் எனவும் வலியுறுத்தியிருக்கின்றேன். என் கருத்தோடு ஒத்த கருத்துடைய கலைஞர் அவர்கள், பல்வேறு மாந்தர்களின் நடைமுறை வாழ்வுப் பின்னணியாக முப்பாற் குறட்களையும் பின்னிக் காட்டியிருப்பது இதுகாறும் திருக்குறள் பற்றி எழுந்த நூல்களிற் காணப்படாத, ஆனால் காணவேண்டிய புதிய முறையாகும் என்று சுட்டிக்கூற விழைகின்றேன்.

அறிவுசான்ற திருக்குறட்கு விளக்கமாகத் தேவர்களின் வான வாழ்வையும் புராணங்களின் மயக்கக் கதைகளையும் காட்டிவரும் போக்கு ஒவ்வாது. நம் போல் மானுடமாய் வாழ்ந்த நன்மக்களின் ஒழுகலாறுகள்தாம் திருக்குறட்குக் காட்டாகத் தக்கவை. "தொழுத கையுள்ளும் படையொடுங்கும்" என்ற குறட்குக் காந்தியடிகள் சுடப்பட்ட கொலையையும் "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்" என்பதற்குப் பாகித்தானில் பூட்டோவின் தூக்குநிலையையும் "நிறைமொழி மாந்தர் பெருமை" என்பதற்குப் பேரறிஞர் அண்ணாவின் அறவுரையையும், "நிறைநீர நீரவர் கேண்மை" என்பதற்குப் பெரியார் - மூதறிஞர் கேண்மையையும் "வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்பதற்குக் காரல் மார்க்சின் மனைவி சென்னியாளின் மாட்சியையும் இவ்வாறே நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுவர் நம் கலைஞர். நடப்பினைக் காட்டுவதால் திருக்குறள் வாழ்க்கை நூல் என்பதும் பிறநாட்டு நல்லறிஞர்களின் வாழ்வையும் மேற்கோட் படுத்துவதால், திருக்குறள் உலக அறநூல் என்பதும் கற்புப் பெண் கழுத்துத் தாலிபோல் விளங்கக் காணலாம்.

இத்தகைய பின்புலச் சூழலில் கலைஞர் வெளியிடும் தம் குடும்ப நிகழ்ச்சி ஒன்று உண்டு. அதுகேட்டு நம் மெய் அரும்பி விதிர் விதிர்க்கின்றது. கலைஞரின் அருமைத் தந்தையர் முத்துவேலர், தன்மேல் நல்ல பாம்பு ஊருவதை அறிந்தபோது, ஏறிய பாம்பு தானே இறங்கும் வரை உள்ளம் நடுங்காதும் உடல் அசையாதும் இருந்து கடிவாய் பிழைத்தார் எனவும் "வெள்ளத்தனைய இடும்பை" என்ற குறட்பாவிற்கு இவ்விருக்கை எடுத்துக்காட்டாம் எனவும் குறளோவியம் மெய்ம்மை சுட்டுகின்றது. எங்கெல்லாம் கலைஞர் குறட்காட்சி காண்கின்றார் என்பதற்கு இஃதோர் வீட்டுச்சான்று. இதற்கு வரைந்த ஓவியத்தில் அஞ்சுக அன்னையும் அதனை அசையாது பார்த்துக் கொண்டிருப்பதாகப் பின்னணி செய்திருப்பது, கலைஞர் பிறந்த குடியின் மாட்சியைப் புலப்படுத்தும்.

குறளோவியத்தின் தனிச்சிறப்பு, பரந்த சூழ்நிலைப்புலமாகும். கலைஞர் கற்பனையில் வந்துபோம் எந்நிலைப் பெண்களும் ஆண்களும் சின்னஞ்சிறு குழந்தைகளுங்கூடத் திருக்குறளைக் கற்றும் உரையாடலிற் குறள் கலந்தும் பேசுகின்றனர். கலைஞர் கண்ட

பட்டிதொட்டி நாடு நகரமெல்லாம் குறள் மணக்கின்றது. "உறையூர்க் கோழிக்கும் உரனுண்டு" என்பது போலத் தமிழ்நாட்டுக் கரடியும் இவ்வோவியத்தில் "கேட்டினும் உண்டு ஓர் உறுதி" என்ற நட்புக் குறளை நல்லான்செவியுள் அறிவுறுத்துகின்றது. மண்ணுலகம் வந்து திரும்பிய விண் மண்டல வீரர்களுங்கூட, வள்ளுவரின் வான் சிறப்பினைப் பாராட்டுகின்றனர். மக்கள் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் திருக்குறள் தொடரும், தொடர வேண்டும் என்ற கலைஞரின் பெருந்தமிழுணர்வை இது காட்டவில்லையா? வள்ளுவர்கோட்டம் கண்ட கலைஞர்க்கு இவ்வுணர்வு இருப்பது இயல்புதானே. உயர்திணை அஃறிணை அனைத்தையும் திருக்குறட்கண்ணாகக் காண்பது நம் கலைஞரின் தமிழொருமைப்பாடு.

கலைஞர், ஒரு பெருங்கட்சியின் தலைவராகவும் தமிழ்கூறு நன்மாநிலத்தின் முதலமைச்சராகவும் பல்வேறு அரசியல் தொடர்பினராகவும் ஆட்சிநிலைகளை நன்கறிந்தவர். ஆதலின் குறளோவியத்தில் ஆட்சிக்குறள்கள் பெரிதும் இடம் பெற்றுள. இன்னும் உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளைப் பல பொருட்குறள்கட்கு அவரால் காட்டமுடியும். எனினும் நனிநாகரிகம் கருதி, குறட்பார்வைக்கு வேண்டுமளவு கோடிட்டுச் சென்றார் எனக் கொள்ள வேண்டும்.

குறளோவியத்தின் மேலும் ஒரு சிறப்பு, காதற்குறள்கள் கணக்காகச் செம்பாகம் இடம் பெற்றிருப்பது. கற்பவர்க்குப் பொருளும் இன்பமும் அடுத்தடுத்துக் கிடைக்குமாறு இருபாற்குறள்களும் ஒன்றன்பின் ஒன்றாக வைக்கப்பட்டுள. ஒரு பக்கம் புற ஓவியம்; அடுத்த பக்கம் அக ஓவியம். தமிழுக்கு இனிமை, இன்பம் என்ற பொருளுண்டு. அப்பொருள், அன்புக்காதல் கூறும் அகத்திணையால் வந்தது. தமிழ் அகப்பொருள் தெரிந்தவரைத்தான் தமிழகம் தெரிந்தவர் என்று கூறலாம். அதனாலன்றோ அறங்கூறவந்த திருவள்ளுவர், காமத்துப்பாலினை நெறி படவும் சுவை படவும் பாடினார்.

கலைஞரின் குறளோவியத்திற் காதற்காமக் குறள்கள், கற்புக் காவியமாக உயர்கின்றன. அறக்குறட்கும் பொருட்குறட்கும் பின்புலம் பருப்பொருள் வடிவுடையது. வெளிப்படையானது. காதற்குறளின் பின்புலமோ எண்ணத்திலும் நுண்ணியது. சிறிது வழுவினும் தள்ளுபடியாவது. சங்க இலக்கியத் தோய்வுடைய தமிழ்ப் பெருமகனார் தொல்காப்பியம் வரையறுத்த நெறியில் நின்று, காதலோவியங்களைப் பொன்வண்ணத் தமிழ் நடையில் வரைந்துள்ளது கண்டு வியந்தேன். அன்றொழியும் ஐம்புல நுகர்ச்சியாகக் காட்டாமல், என்பும் அன்பும் இன்பும் கலந்த ஆராப்புணர்ச்சியாக ஒவ்வொரு குறட்கும் உள்ளழகு காட்டியிருப்பது எம் போன்ற புலவோர்க்கு விருந்துப்படைப்பு.

கடலின் ஆழ்ந்த ஒண்தீந்தமிழின் அகத்திறத்தினை இடைக்காலப் புலவர்களும் இக்காலப் புலவர்களும் கூடச் செவ்வன இதுகாறும் தெரிந்திலர்; தெளிந்திலர். அகத்திணை அரச குடிகட்கும் படைமறவர்கட்கும் செல்வப் பெருமக்கட்கும் உரியதென அப்புலவர்கள் தவறாகக் கருதி வழுவாகப் பரப்பி வருகின்றனர். உண்மையைத் தெளிந்து கண்டு, தெளியக் காட்டுகின்றார் நம் பெரும் புகழ்க் கலைஞர். உழவுக் குடும்பத்தார், உப்பங்கழிக் குடிசையார், ஆனினம் மேய்ப்பார், மீனினம் பிடிப்பார், விறகு வெட்டுவார், இன்னும் என்ன, தெருவீதிக் குப்பை கூட்டுவார் எல்லாரும் குறட்காதலர்களாக விளங்குவது மட்டுமில்லை, குறள் கற்றுத் தம் ஊடற்காலத்தும் கூடற்காலத்தும் காதற்குறளை, கன்னித்தமிழை, பாலும் தேனும் பழமும் கலந்தாற் போலப் பேசிப் பின்னிப்பிணைந்து இரண்டறக் கலந்து ஒரு மெய்ப்பாடு எய்துகின்றனர். 'எளிய குடும்பத்துப் பருவப் புறாக்கள்' குறளகத்துத் தலைவன் - தலைவியராக இணைகின்ற அகத்தமிழ் உண்மையை மீண்டும் உயிர்ப்பித்துக் காட்டுகின்றார் கலைஞர். இக்கலைத் தொண்டிற்கு எவ்வளவு நன்றி கூறினும் நன்றி என்ற மூன்றெழுத்துக்குள் நம் உணர்வு அடங்கும் அளவினதன்று.

குறளோவியத்தின் பதிப்பு, பேறு பெற்ற பாரதி பதிப்பகம்; புகழ்மிக்க பெரியவர்களின் புதுமை சான்ற நூல்களை வெளியிட்டுவரும் பெருமை தாங்கியது. 'வாழிய செந்தமிழ்' என்று வாயூறிப் பாடிய தேசிய மகாகவி பாரதியின் பெயரைக் கொண்ட பாரதி பதிப்பகம், தமிழ்த் தொண்டாற்றும் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ! அப்பெருந்தொண்டுகளுள் ஒன்று குறளோவிய வெளியீடு. எழுத்தோவியத்துக்குத்தக, பெரிய வடிவோவியம் கொடுத்திருப்பது இவ்வெளியீட்டின் தனிச்சிறப்பு. காதல் நோய்ப்பட்ட பெண்ணின் கவலை நெஞ்சம் பருத்துப் பெருத்து இருகையாலும் மணலை அள்ளி அள்ளிக் கடலைத் தூர்த்துக் கொண்டிருப்பதாகக் காட்டும் பூதநெஞ்சின் ஓவியமும் மூதறிஞர் இராசாசி நீடுதுயில் கொண்டபோது பெரியார் கைத்தடியைச் சாய்த்துப் பிடித்துச் சுடலை மண்ணுத்தரையில் அமர்ந்திருக்கும் சோக ஓவியமும் கற்பனைக் குற்றம் கணவனைக் கண்டவுடன் தோன்றாது என்று காட்டும் தலைவியின் மைக்கோல் ஓவியமும் இன்ன பல வனப்புக்களும் தனிச்சுட்டுக்கு உரியவை. குறளோட்டம் கண்ட வள்ளுவர்க்கு, வள்ளுவர் கோட்டம் கண்டார் நம் கலைஞர். ஆதலின் பக்கந்தோறும் வள்ளுவர் கோட்டம் பதிவு பெற்றிருப்பது இயல்பும் இனிமையும் ஆம். ஒப்பில் கலைஞரின் ஓவியக் குறளை ஓவியமாகவே பதிப்பித்த பதிப்புச் செம்மல் சிதம்பரனார்க்கு நன்றி கூறுவது மட்டும் போதாது; நும் பதிப்பகம் புகழோவியமாக வளர்க என்று வாழ்த்தும் கூறுவல்.

"இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் வள்ளுவர் என்று யார் கூறியது? அவர் இன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர். அவர் வழங்கிய குறட்பாக்கள் உள்ள வரையில் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்."

என்ற கலைஞரின் நிறைமொழி, தமிழினத்துக்கு வழங்கிய உறுதிமொழியாகும். கற்புத்தெய்வமாம் கண்ணகிக்குச் செங்குட்டுவன் கல்லோவியம் கண்டான்; இளங்கோ சிலப்பதிகாரம் என்னும் சொல்லோவியம் கண்டார். இங்ஙனம் வேந்தர் இருவர் செய்த ஓவியங்களையும் தமிழ்த்தெய்வமாம் திருவள்ளுவர்க்குக் கலைஞர் என்னும் ஒருவரே கண்டார். வள்ளுவர் கோட்டமாகவும் குறளோவியமாகவும் தமிழ் என்ற குருதியோட்டம் ஓடும்வரை நிலைநிறுத்தினார்.

தமிழ்ப் பெருமகன் கலைஞர்க்கு நாம் செய்யவேண்டிய கடப்பாடு என்ன? திருக்குறளைக் குழந்தைப் பருவமுதலே முழுதும் கற்க; நும் வாழ்க்கை நடைமுறையோடு திருக்குறளைப் பொருந்தி நினைக. உங்கள் ஒரு கைக்குத் திருக்குறளும் ஏனைக்கைக்கு குறளோவியமும் கையணிகளாக விளங்குக.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்று என் தொல்நட்பும் நன்மதிப்பும் வாய்ந்த கலைஞரை வாழ்த்துகின்றேன்.

கதிரகம்
காரைக்குடி
டாக்டர் வ. சுப. மாணிக்கம்

மூன்றாம் பதிப்பின் முகப்புரை

"தேனருவியம்" மூன்றாம் பதிப்பு வெளிவருவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

இதற்கு முந்திய இரண்டு பதிப்புகளும் விரைவில் விற்றுத் தீர்ந்து போனதற்கு முக்கிய காரணம் தேனருவியத்தின் தனித்தன்மை வாய்ந்த பாடல்களே ஆகும்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தேனருவியத்தை தனது பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டதும் மாணவர்கள் தேனருவியத்தை விரும்பிப் படிக்கத் தொடங்கினர்.

இந்த முறை பெருமளவில் பாடல்களை - குறிப்பாக சின்னஞ் சிறிய புதுமை வடிவம் கொண்ட பாடல்களை எனது நண்பர்களும் மாணவர்களும் தந்து உதவினர்.

இவர்களுக்கு எனது நன்றி, வணக்கங்கள்.

நான் மேலும் புதிய சொற்களில் இதழ்களிலும் பாடல்களை வரைந்தேன்.

இந்த புதிய பெருமளவிலான பாடல்களை - குறிப்பாக சின்னஞ் சிறிய புதுமை வடிவம் கொண்ட பாடல்களை எனது நண்பர்களும் மாணவர்களும் தந்து உதவினர்.

இவர்களுக்கு எனது நன்றி, வணக்கங்கள்.

இம்முறை பதிப்பு வெளியிடுவதில் இந்தோனேசிய பதிப்பகத்தாருக்கும், எனக்கு உள்ளன்பான நெருங்கிய நண்பர் ஒருவர், ஜகார்த்தா என்னும் நகரில் வாழ்ந்து வருகிறார். அவருக்கும் என் நன்றி உரியதாகுக.

17/7/1992

அன்புள்ள
இரவீந்திரன்

இரு கண்கள்

நான்காம் பதிப்பின் முகப்புரை

கலைஞர் மு. கருணாநிதி

முரசொலியைத் தந்த "முத்தமிழ்" நூலையே
மீண்டும் முதலாவதாக இங்கே தருகிறேன்.

முதல் பதிப்பை வெளியிட்ட "பாரதி பதிப்பக"மும்
பதிப்பகமும் விலகிவிட்டதால் எனது மகன் மு.க.மு.

அதன்பிறகும் பிறகும் "முரசொலி"
மலரில் வெளிவந்த பல்வேறு
நல்ல பதிப்பு முகப்புரைகளை இந்தப் பதிப்பில் தந்துள்ளேன்.
இந்த முகப்புரையும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளது.

முரசொலியை, நான்கு பதிப்புகள் வெளிவருவதற்கு இடையே
1330 முறைப்படி ஆண்டுகள் நான் எழுதிய மூன்று வெளிவர்
துன்பமும் என் வாழ்வில் என்றென்றும் மாறாத்
தன்னலமற்ற மக்கள் அன்பைத் தந்த ஆண்டவனுக்கும்.

இந்தப் பதிப்பையும் எழுதுகின்ற வேளையில் நான்கு
பாதிரிப்பாத்தாண்டுகள் - வெளியிட உரிமை வழங்கிய
'திருப்பதி' பதிப்பகத்தாருக்கும் என் நன்றி.

எத்தனையோ இதழ்கள், வெளிவந்து, நிறைய படைப்புகள்,
புனைகதைகள் எழுதியுள்ளேன் என்றும் முரசொலியைப் போல்,
உயிர்த்துடிப்பும் என் படைப்புகளில் வீசுத்துள்ளதும்
இல்லை என்பதும்.

அன்புடன்
மு.க.
1.1.1997

ஆறாம் பதிப்பின் முகப்புரை


'திருக்குறள்' பதிப்பகம் உரிமை பெற்றுள்ள
"திருவேங்கடம்" திருவாளர்கள் பாதிப்பதிப்பகத்தின் வெளியீடாக
உள்ளது பதிப்புரிமை வெளியிடப்பட்டு கிட்டுவது தொடர்பதிப்பு
என்பதால் உள்ளது.

இந் நிலையில் நாடெங்கும் திருக்குறள், உரைகள்
பெருகுதல் - திருவள்ளுவரும் பிறந்தநாள் - திருநாளும் விழாவும்
கொண்டாடுதல் - இந்நாளும் பதிப்புரிமை வெளியாக்குவது என்பது
எளிதல்ல என்பதால்; திருக்குறள் நூல்கள் விரைவாக விற்பனை
செய்வதை விரும்பும் வகையில் குறைந்த விலையில்
வெளியிடுவது தொடர்பதிப்பு என்பதால் 'திருவேங்கடம்'
பதிப்பகத்தார் இந்நூலின் விலையை மிகவும் குறைத்து
வெளியிட்டுள்ளனர்.

இந்நூல் எழுதுவதற்கு 'தொல்காப்பியப் பூங்கா'
திருவளர்ச்சி பதிப்புரிமை வெளியீட்டாளர்களும் மகிழ்வுடன்
இசைவு தந்துள்ளனர்; என்னுடைய அன்பு நண்பர்
தொல்காப்பியர் நகரம் - திரு. இரா. குமரவேலன் அவர்கள் -
'குறுந்தகடு' வடிவில் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.
அவர்களுக்கு இந்நூல் நன்றி கூறுகிறது.

'திருவேங்கடம்' பதிப்பகத்தார்களுக்கு மீண்டும்
விரைவாக நூலை வெளியிட்டு பாதிப்பதிப்பகத்தின் நோக்கம் -
உரிமையாளர் திருக்குறள் பதிப்பகத்தாரின் அன்பிற்கினியும்
வாய்த்தும் உரியதாகவே.





குறளோவியம்

முதற்பதிப்பு 17.2.85 அன்று
சென்னையில் வெளியிடப்பட்டபோது
அறிஞர் பெருமக்கள் ஆற்றிய
உரைகளில் சில பகுதிகள் வருமாறு...

ஆறாம் பதிப்பின் பதிப்புரை

கலைஞர் அவர்கள் எழுதிய 'குறளோவியம்' நூலைப் படிக்கின்ற போது ஒவ்வொரு பக்கமும் தெவிட்டாத தெள்ளமுது. நெஞ்சை அள்ளுகின்ற வர்ணனைகள்; படிக்கப் படிக்க இன்பமூட்டும் கதைகள்.

இவ்வாறு திருக்குறளில் உள்ள அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பாலில் உள்ள குறட்பாக்களுக்கு அழகாக விளக்கத்தை எழுதி உள்ளார்.

இந்நூல் எங்கள் பதிப்பக வாயிலாக ஐந்து பதிப்பு வெளியிட்டு அதை தொடர்ந்து ஆறாம் பதிப்பாக வெளிவருகிறது. பாரதி பதிப்பகத்தின் பெருமைக்குரிய வெளியீடு மற்றும் தமிழர்களின் ஒப்பற்ற நூலான **குறளோவியத்தை** ஆறாம் பதிப்பாக அச்சிட்டு வெளியிடுவதற்கு எங்களுக்கு அனுமதி அளித்த தலைவர் **கலைஞர்** அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதிலுள்ள ஒவ்வொரு குறளுக்கும் தேவையான படங்களை அழகாக வரைந்து தந்த ஓவியர்கள் **திரு. ஜெயராஜ்** அவர்களுக்கும், **திரு. பத்மவாசன்** அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூல் வெளிவரத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தந்த தலைவர் கலைஞர் அவர்களின் உதவியாளர் **திரு. கோ. சண்முகநாதன்** அவர் களுக்கும், **தமிழ்க்கனி பதிப்பகத்திற்கும்** நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்த ஆறாம் பதிப்பு வெளிவர எங்களுக்குப் பக்கபலமாக இருந்து அனைத்து வகையிலும் உதவிய **திரு. G. சிவநேச பாண்டியன்** அவர்கள் (பின்னக்கிள் சாஃப்ட்வேர் (பி) லிட்.) **திரு. T.SP. முத்துராமன் செட்டியார்** அவர்கள் (முத்துராமன் எண்டர்பிரைசஸ்), **திரு. G. தேவராஜன்** அவர்கள் (Retd. Chief Telephone Supervisor) **திரு. A. முத்துராமன் செட்டியார்** அவர்கள் (விசாலாட்சி பேப்பர் மார்ட்) **திரு. இரா. முத்துக்குமாரசாமி** அவர்கள் (மேலாண்மை இயக்குனர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்) **திரு. அகிலன் கண்ணன்** அவர்கள் (தாகம்), **திரு. அ. ராமநாதன் செட்டியார், திரு. ம. திருப்பதி செட்டியார்** அவர்கள் (திருமகள் நிலையம்) ஆகியோருக்கும் எங்களது நன்றிகள்.

இந்த சிறந்த நூல் ஒவ்வொருவரின், குடும்ப வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த ஆறாம் பதிப்பை சிறப்பாக வெளியிட்டி ருக்கிறோம். இதை வாங்கிப் பயனடையும் வாசகர்களுக்கு எங்கள் நன்றி!

சென்னை-17
1.1.2004

- பாரதி பதிப்பகத்தார்.

பேராசிரியர்

கலைஞருடைய மணிவிழாவை நடத்தியதற்குப் பின்னர், அதுபோன்ற இன்னொரு விழாவை நடத்துவதற்கு ஒரு வாய்ப்பு என்று கருதக் கூடிய அளவு இந்த விழா; அது மணிவிழா; இது மணிமுடி விழாவாக அமைந்திருப்பதாக நான் உணருகிறேன்.

அரசியல் என்பது முழுவதுமே போர்க்களக்காட்சி அல்ல என்று சொன்னாலும் கூட, உலைக்களக் காட்சியாகத்தான் பெரும்பாலும் அரசியல் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. உலைக்களக்காட்சியிலே அயராது பணியாற்றுகிற ஒரு தொண்டனாக - ஒரு தளபதியாக - ஒரு தலைவனாகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருப்பவர் கலைஞர்.

ஓயாது உலைக்களத்திலே நிற்பவன், அங்கே உள்ள வெப்ப மிகுதியினாலே வியர்வை கொட்டக்கொட்ட, வேலை தடைபட, அது காரணமாக சோர்வு கொள்ளக்கூடிய அளவுக்கு அவன் பணியாற்ற வேண்டியவனாகத்தான் இருப்பான்.

அந்த உலைக்களத்திலே நின்று போர்க்கருவிகளை வடிக்கக்கூடிய கடமையும் இருக்கக்கூடிய அந்த அரசியல்வாதி, சோலையிலே உலவச் சென்றால், அப்போது அங்கு வீசுகின்ற மென்காற்று அவனுடைய மனதிற்கு எப்படிப்பட்ட மகிழ்ச்சியை - நிறைவை - உற்சாகத்தை - புன்னகையை வழங்குமோ அதைப் போல கலைஞர் அவர்கள் அரசியலிலே உலைக்களத்திலே நிற்பவர். தேவைப் படுகிற நேரத்திலே போர்க்களத்தில் நிற்பவர். எனவே, அவர் இந்த இலக்கியச் சோலையிலே உலவுவதை, ஏறத்தாழ அவருடைய பதினைந்தாவது வயதிலே இருந்து ஓர் இயல்பாக ஆக்கிக் கொண்டு இலக்கியச் சோலையிலேயும் உலவுவார்; அந்தச் சோலையிலே உள்ள நறுமலர்களையெல்லாம் நுகர்வார். அதன் நறுமணங்களையெல்லாம் தனித்தனியாகப் பிரித்து அறிவார்; அந்த மணங்களையெல்லாம் மறுபடியும் ஏட்டிலே நிரப்புவதைப் போல தன்னுடைய எழுத்திலே நிரப்புவார்; மற்றவர்களுக்கெல்லாம் விருந்தாக்குவார் என்று சொல்லத்தக்க அளவுக்கு இலக்கியச் சோலையிலே உலவுகிற ஒரு கலை உணர்வுமிக்க கலைஞனாக அவர் விளங்கி, அது காரணமாகத் தன்னையே கூட அரசியலிலே ஏற்படுகிற சோர்வுக்கெல்லாம் மாற்றாக - இந்த இலக்கியப் பூஞ்சோலையிலே இருப்பவராக ஆக்கிக் கொண்டிருப்பவர்.

பேரறிஞர் அண்ணா, அந்த வழியிலேதான் தமிழ்நாட்டிலே பணியாற்றினார் கள். அரசியலிலே எவ்வளவுதான் ஆர்வம் இருந்தாலும் கூட, அவருக்கு இருந்த இலக்கிய ஆர்வம் மிகுதியாகும். அதே வழியிலே கலைஞர் அவர்கள், அறிஞர் அண்ணாவுக்குத்

தப்பாத தம்பி; தவறாத தம்பி; அவர் வழிமாறாத தம்பி; அண்ணாவின் வழியிலே வளர்கிற ஆற்றல் மிக்க தம்பி என்று அறிஞர் அண்ணாவாலே உணரப்பட்டு அந்த வகையிலே வளர்ந்தவர். இன்றைய தினம் நாட்டுக்குக் குறளோவியத்தை வழங்கியிருக்கிறார்.

வள்ளுவர், குறளைத் தந்தார்; வைரமணிகளைத் தந்தார். அந்த வைர மணிகளைத் தங்க ஏட்டிலே பதித்துத் தந்தார். மூன்று பாலாக அவர் வகுத்துத் தந்தார். அவர் தந்த வைரமணிகளைக் காணுகிறபோது - அவை எவ்வளவு அழகுடையனவாக இருந்தாலும் காணுகிறபோது - கண் கூசுகிறது. அதைப் பார்க்க முடிவதில்லை. ஏனென்றால், அதைப் பார்க்கிறபோது அவற்றில் அறிவாற்றல் ஒளி மிகுந்திருப்பது காரணமாக, வைரமணியை நேராகப் பார்க்க முடியாத நிலைமை ஏற்படுவது உண்டு.

இன்னும் சொல்லப் போனால் அந்த ஒளி பளிச்சிட்டுத் தெரிகிற ஒளியாக இருக்கிற பொழுது, அந்த வைரத்தினுடைய அழகு தெரிவதில்லை. ஒளி மட்டும் தான் தெரியும். ஆனால், அதே வைரத்தை மரகதத்தோடு, கோமேதகத்தோடு வேறு பல வண்ண வண்ண வைரத்தை ஒத்த கற்களோடு இணைத்துப் பொன்னை இழைக்கிறபோது, அந்த வைரம் தனித்து ஒளி பெறுவது மட்டுமல்ல; அதனுடைய அழகை முழு அளவிலே காணக்கூடிய அளவு முழு ஒளியைத் தரும்.

அதைப்போல வள்ளுவர் தந்த குறளை ஓவியத்திலே வைத்து இழைத்து, அந்த வைரத்தினுடைய ஒளியினை நம் கண்ணாலே காணக்கூடிய அளவுக்கு உருவாக்கித் தருகிற அரும் பெரும் பணியை, ஒரு பேராற்றல் மிக்க பணியை வைரத்தைப் பொறுத்து, பொன்னைப் பொறுத்து, பெற்கொல்லர் [illegible]ரும் ஆற்றக் கூடிய பணியை தமிழைப் பொறுத்து, அதன் குறளைப் பொறுத்து, அ[illegible]ருவாக்கக் கூடிய பணியை, ஆற்றக் கூடிய ஒரு கலைஞனாக இருந்து கலைஞர் அவர்கள் அதை இன்றைக்கு நிறைவு செய்திருக்கிறார்கள்.

வள்ளுவன் வரிகள் முழுதும் வாழ்வதற்கு வழி காட்டிய காரணத்தால், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதி பாடினார். அந்த வள்ளுவன் தந்த குறளை, நம் உள்ளம் கொள்ளத்தக்க வகையிலே எடுத்துச் சொன்ன புலவர்கள் என்று சொல்லத்தக்கவர்கள் மிகப் பலர் அல்லர். மிகச் சிறந்த உரையாசிரியர்கள் பரிமேலழகரோ, மனுப் புலவரோ அல்லது இன்னும் அண்மைக் காலத்திலே தோன்றிய உரையாசிரியர் கா. சு. பிள்ளையோ, டாக்டர் மு. வ. வோ, என்னுடைய அருமைப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. அவர்களோ அல்லது இன்னும் பலப்பல ஆசிரியர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களோ அல்லது புலவர் குழந்தை அவர்களோ நாமக்கல் கவி அவர்களோ, வகைவகையாக வண்ணவண்ணமாக வள்ளுவனுடைய குறளுக்கு உரை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், அந்த உரைகளைக் காணுகிறபோது, வள்ளுவனுடைய கருத்தை ஒரு கோணத்தில் உரையாசிரியர்கள் மூலமாக நாம் காண்கிறோம்.

கலைஞர், வள்ளுவரை எந்தெந்த குறள் மூலமாகத் தொட்டுக் காட்டினாலும் வள்ளுவரை முழுத் தோற்றத்திலே காட்டுகிறார்.

வள்ளுவரின் அழகைக் காட்டுகிறார்; முகத்தைக் காட்டுகிறார்; அவருடைய சீற்றத்தைக் காட்டுகிறார்; அவர் பெரிய அறிவு மேதையாக விளங்குவதைக் காட்டுகிறார்; வள்ளுவரை ஒரு தலைவராக்கிக் காட்டுகிறார்; வள்ளுவரின் உள்ளத்திலே இருந்த ஒரு தலைவியையும் சித்திரித்துக் காட்டுகிறார்; வள்ளுவரை வணிகராக்கிக் காட்டுகிறார்; வள்ளுவரை வேடனாக்கிக் காட்டுகிறார்.

வள்ளுவர் உள்ளத்திலே ஒரு பெரிய உலகம் இருப்பதை - அந்த உலகத்தை விவரித்துக் காட்டுகிறார்.

இருபதாம் நூற்றாண்டுக் கலைஞர், இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவரின் மறுபதிப்புக் கலைஞர் என்று கூறத்தக்க அளவிற்கு இந்த குறளோவியத்தின் மூலமாக "வள்ளுவரை உணர்ந்த கலைஞன் நான்" என்று கலைஞர் காட்டிக் கொண்டிருக்கின்றார்.

கலைஞர் தீட்டியிருக்கின்ற குறளோவியம் அஜந்தா ஓவியத்தைப் போல; தமிழகத்தில் இருக்கின்ற சில திருக்கோயில்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தீட்டப்பட்ட ஓவியம் இன்னும்கூடப் போற்றப்படுவதைப் போல, இந்தக் குறளோவியமும் நிலைக்கும்.

இந்த ஓவியத்தின் மூலம் தமிழ்க்குலம் நிலைக்கும்; அந்தக் தமிழ்க்குலம் நிலைக்கும் அளவுக்குக் கலைஞருடைய புகழும் நிலைக்கும்.

வாழ்க கலைஞர்!

வளர்க அவர் புகழ்!

மகா வித்வான் தண்டபாணி தேசிகர்

இந்த நூலின் அமைப்பு முறை, அழகான அமைப்பு முறை; இரண்டு குறள் அறத்திற்கும் பொருளிற்கும்; மூன்றாவது குறள் இன்பத்தைப் பற்றியதாக இருக்கும். ஏன் இப்படிக் கையாண்டார்கள் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

எப்போதும் ஒரு காவியத்தையோ ஓவியத்தையோ தீட்டுகின்ற ஒரு கலைஞன், கடைசிவரையில் அதன் சுவை குன்றாமல் அழைத்துச் செல்லக் கூடியவனாக இருக்க வேண்டும். இந்த உரம், கலைஞர் மனத்திலே நன்றாக ஊறியிருக்கிறது. அதனாலேதான் இன்பத்துப்பாலை இடையிடையே அமைத்து, நம்மிடம் தளர்ச்சி உண்டாகாதபடி அந்த ஓவியத்தை முடித்துக் காட்டுகின்றார்.

கலைஞர் அவர்கள் மிகவும் அழகிய முறையிலே, சுவை குன்றாமல் இந்த ஓவியத்தைத் தீட்டிச் செல்கின்ற முறையைப் பார்த்தேன். இந்த நூல் எனக்கே - ஏன் எனக்கே என்றால் நான் சுவையறிவு உள்ளவன் - எனக்கே ஒரு விம்மிதத்தை உண்டாக்கிற்று; அதைப் பாராட்டக்கூடிய நேரமும் எனக்குக் கிடைத்திருக்கிறது.

கலைஞர் அவர்கள் மற்ற அனைத்துக் குறள்களுக்கும் ஓவியம் தீட்டித் தந்தால், எல்லோருக்கும் அது பயன்படும் என நம்புகிறேன். எங்கள் முயற்சியெல்லாம் ஏட்டு முயற்சி; அவர்கள் முயற்சியெல்லாம் எண்ண முயற்சி, இந்த எண்ண முயற்சி வெல்லும்; தமிழ் மக்கள் ஏற்றம் பெறுவார்கள்.

திருக்குறள், பண்டிதரின் பாவையாகவே நெடுநாள் இருந்து வந்தது. என்னுடைய பன்னிரண்டாவது ஆண்டிலேயே நான் பரிமேலழகர் உரையோடு கூட மனப்பாடம் செய்து ஒப்பித்தேன்.

இப்படி மனப்பாடம் செய்து ஒப்பித்த ஒன்று, பிறகு எப்படியெல்லாம் பயன்படுத்தப்படலாம் என்று சொல்ல அப்பொழுது ஆள் இல்லை. இப்பொழுது நமது கலைஞர் பெருமான் அவர்கள், தன்னுடைய கலையழகினாலே காட்சிப் பொருளாகக் கருத்தில் பதிவித்தார்கள்.

அதனை அவ்வப்போது நான் படித்து மகிழ்ந்திருக்கின்றேன். இன்று இளைஞர் முதல் என்னைப் போன்ற கிழவர் வரை எல்லோருக்கும் பயன்படக் கூடிய முறையில் குறளோவியம் அமைந்துவிட்டது.

சுவைத்துச் சுவைத்து என்னுடைய முதுமையை மாற்றிக் கொண்டேன்.

இந்தக் குறளோவியம் 354 குறள்களோடு நின்றுவிடாது, பிறகும் வளர்ந்து திருக்குறள் முழுமைக்கும் ஓவியமாகத் தீட்டப்பட வேண்டும். அது வரையில் கலைஞர் அவர்களின் வாழ்வும் வளமும் பெருகிக் கொண்டிருக்கும்; தமிழ் உய்யும்; தமிழ் வளரும்; தமிழ் வாழும் என்ற நிலையில்தான், ஒரு எதிர் நோக்கோடு அவர்களை வாழ்த்துகிறேன்.

டாக்டர்
வ.சுப.மாணிக்கம்

இந்தக் குறளோவியத்தில் உள்ள பெரிய சிறப்பு, முப்பதாண்டுகளுக்கு முன் கலைஞர் அவர்கள் தொடங்கி, இந்தக் குறளோவியத்தை எழுதியிருக்கிறார். 1956ஆம் ஆண்டு தொடங்கி இதுவரை எழுதியிருக்கிறார். அப்பொழுது நல்ல இளமையாக இருந்திருப்பார் - ஏன் இப்போதும் நல்ல இளமையுடன்தான் இருக்கிறார்.

முப்பதாண்டுகளுக்கு முன் தொடங்கி முப்பதாண்டுகளாக விடாமல் எழுதியிருக்கிறார் என்றால், அவருடைய தெளிவு, உறுதி, இதை எப்படியும் முடிப்பது என்ற எண்ணம். எவ்வளவு சிறப்பான ஓர் எண்ணத் திண்மை இருந்தால், முப்பதாண்டுகளுக்கு முன் தொடங்கி முடித்திருப்பார்.

அவர்களுக்கு, பிறப்பில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, எனக்கு அதைவிட நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, இருந்தாலும் முப்பதாவது வயதில் அவருக்கு என்ன தமிழ் நடை வாய்த்ததோ, அந்த நடை இப்பொழுதும் இருக்கிறது. நல்ல கை வந்த நடை, அவரது முப்பதாவது வயதிலேயே இருந்திருக்கிறது.

சிலருக்கு முப்பதிலே ஒரு நடை வரும்; முப்பத்தைந்திலே ஒரு நடை வரும்; அறுபதிலே தள்ளாடிப் போகும்.

ஆனால், முப்பதாண்டுகளாக ஒரே நடையைப் பெற்றிருக்கக்கூடிய சங்கத் தமிழாற்றல் உள்ள சங்கப் புலவருள் ஒருவர்; சங்கச் சான்றோருள் ஒருவர்; சங்கத் தமிழ் பேசும் ஒருவர், கலைஞர்.

எவன் ஒருவனுக்குச் சங்கத் தமிழில் நாட்டம் இல்லையோ, அவன் வெறும் பங்கத் தமிழன் என்பது எனது கருத்து.

திருக்குறள், தொல்காப்பியம் போன்ற சங்க நூல்கள், நமது தமிழுக்கு மூல வேர்கள், விழுதுகள். இந்தச் சங்க இலக்கியங்களில் யார் ஊறித் திளைக்கின்றார்களோ அவர்கள்தான் தமிழினத்தின் நாகரீகத்தையும் சிறப்பையும் உணர முடியும்.

அந்த வகையில், இளமைக் காலந்தொட்டே நல்ல சங்கத் தமிழில் புலமை இருந்த காரணத்தால் அவருடைய குறளோவியத்தில் இருக்கின்ற தமிழ் நடை அவ்வளவு அழுத்தமான - அழகு நிறைந்த - இனியதாக அமைந்திருக்கின்றது.

கலைஞரை நான் மட்டுமே பாராட்டவில்லை; தமிழகமே இன்று பாராட்டுகின்றது.

எவன் ஒருவனுக்குத் தமிழ்ப் பற்று - தமிழ் இனப்பற்று இருக்கின்றதோ, அவன் தான் பெருஞ்செல்வன் என்பது வரலாறு கண்ட உண்மை.

அந்த வகையில் நம்முடைய கலைஞர் அவர்கள் முப்பது ஆண்டுகள் நூல்களையும் படித்து, மிகத் தெளிந்த புலமை பெற்று இந்த நூலை எழுதி இருக்கிறார்கள்.

இந்த நூலில் ஓர் இடத்தில் கலைஞர் சொல்லுகிறார்:

தலைவி, தலைவனுக்கு விருந்து படைக்கிறாள். பல்வேறு காய்கறிகளுடன் பாகற்காயும் படைக்கிறாள். அந்தப் பாகற்காய் "பகுத்தறிவு போல் கசந்தது" என்கிறார்!

என்ன நயம்! இந்த ஒரு தொடர் போதும் கலைஞரை உணர்வதற்கு.

எதிர்காலத்திலே குறளோவியத்தின் பல பக்கங்கள் கிடைக்காவிட்டாலும் இந்த ஒரு பக்கம் மட்டும் கிடைத்தால்கூட போதும், கலைஞரைத் தெரிந்து கொள்ள முடியும்.

இதுவரையில் ஆயிரம் ஆயிரம் உரைகள் எழுதப்பட்டு இருக்கின்றனவே ... அவற்றில் எங்காவது ஓர் இடத்தில் பகுத்தறிவு என்ற கருத்தை யாராவது குறிப்பிட்டிருக்கிறார்களா? இல்லை!

அந்த வகையில் நமது கலைஞர் அவர்கள் - நன்றாகத் தமிழ் அறிந்தவர்கள் - தமிழ் வாழ வேண்டுமென்று நினைப்பவர்கள்!

கலைஞர் அவர்கள், பரிமேலழகர் உரைக்கு மேலாக- மணக்குடவர் உரைக்கு மேலாக - இதுவரையில் வந்துள்ள உரைகளுக்கெல்லாம் மேலாக - பல பக்கங்களில் கண் கவரும் ஓவியங்களோடு குறளோவியம் தந்துள்ளார்.

எதிர்காலத்தில் ஒரு பெரும் ஆராய்ச்சிக்குரிய இந்த நூலைத் தமிழறிஞர்கள், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அடங்கிய இந்த மன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமையடைகின்றேன்.

பாரதி பதிப்பகத்தார் இந்த நூலை மிகுந்த - சிறந்த முறையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

குறள் படைத்த வள்ளுவருக்கு எவ்வளவு மதிப்பு உண்டோ அவ்வளவு மதிப்பு, இந்தக் குறளோவியம் படைத்த இந்தக்கவிக்கும் உண்டு.

மதுரை யாதவர் கல்லூரி முதல்வர் தமிழ்க்குடிமகன்

கலைஞர் அமைத்த வள்ளுவர் கோட்டம் நெடுங்காலம் நிலைத்து நிற்குமா? குறளோவியம் நிலைத்து நிற்குமா? என்று ஒரு பட்டிமன்றம் வைத்தால், நான் குறளோவியத்தின் பக்கம்தான் பேசுவேன். ஏனென்றால், கட்டடங்கள் என்ற முறையில், அவை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் சற்றுத் தளர்வு பெறலாம். ஆனால், ஓர் இலக்கியம் என்ற முறையில், ஒரு இலக்கிய கர்த்தா பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கிக்கொடுத்த கருத்துக்களுக்கு இப்படி ஒரு ஓவியத்தை இதுவரையில் எந்தத் தமிழறிஞனும் எழுதியதில்லை என்பதுதான்.

திருக்குறளுக்கு நூற்றுக்கு மேற்பட்டவர்களின் குறிப்புகள், உரைகள் வந்திருந்தாலும் ஒவ்வொருவருடைய நெஞ்சத்திலும் முற்றிலும் உத்தியைக் கையாண்ட ஒரே தலைவன் கலைஞர் மட்டும்தான்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் திருக்குறள் பாடமாக வைக்கப்பட்டிருக் கிறது. ஆனால், மாணவர்கள் அதைப் பொருட்படுத்துவதே இல்லை. அது திருக்குறளின் குற்றமல்ல; ஒவ்வொரு மாணவனுடைய உள்ளத்திலும் அதைப் பதிய வைக்கின்ற உத்தியை, எந்தக் கல்வித் துறையும் கையாளாதது ஒரு குற்றம்.

ஆனால், இனிமேல் திருக்குறளை வெறும் குறள் பாடமாக வைப்பதைவிட, இந்தக் குறளோவியத்திலிருந்து நான்கு காதைகளைப் பாடமாக வைத்தால் அது பதிவதைப்போல வேறு எவனுக்கும் எதுவும் பதியாது என்பதை என்னால் ஓர் ஆசிரியன் என்ற முறையில் உறுதியாகச் சொல்ல முடியும்.

பாடக்குழுவிலே இருக்கின்ற அறிஞர்கள், அரசியல் வேறுபாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல், உள்ளபடியே அவர்கள் வள்ளுவர் கூறுகிற நடுநிலை உணர்வு படைத்தவர்களாக இருப்பார்களேயானால் - வள்ளுவர் கூறுகிற செய்நன்றி உணர்வு இருக்குமேயானால் - அவர்கள் இதைப் பாடமாக வைக்கவேண்டும்.

காசி ஆனந்தன்

கலைஞர் அவர்கள் இந்தக் குறளோவியத்தில், வீரர்களையெல்லாம் - பழைய புறநானூற்று வீரர்களையெல்லாம் ஓவியமாக்கித் தந்திருக்கிறார்கள்.

ஆனால், எங்களுடைய நாட்டிலே இதே கலைஞர் மிக நீண்ட காலங்களுக்கு முன்பு - அவர்தான் - ஆம்! அவர்தான் ஓவியங்களாக இருந்தவர்களையெல்லாம் வீரனாக ஆக்கினார்! இந்தத் தமிழ் மண்ணிலே, வீரர்களையெல்லாம் ஓவியமாக ஆக்கியிருக்கிறார்; ஈழநாட்டில், ஓவியங்களையெல்லாம் வீரர்களாக ஆக்கியிருக்கிறார்.

அதனால்தான் இன்று நாங்கள் களத்தில் நின்று போராடிக் கொண்டிருக் கிறோம்.

இங்கு வந்து கலைஞர் அவர்களுக்கு நன்றிக்கடன் தெரிவிக்கின்ற வகையில், இந்த விழாவில் கலந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்; கலந்து கொள்கிறோம்.

அண்ணா அவர்கள், அன்றைக்குக் கலைஞர் அவர்களுடைய விரலில் கணையாழி அணிவித்தார்கள். இன்று அண்ணா உயிரோடு இருந்திருந்தால், இந்தக் குறளோவியம் எழுதிய கலைஞருடைய அடுத்த நான்கு விரல்களுக்கும் கணையாழி போட்டிருப்பார்.

தமிழ்நாட்டில் மிகப் பெரிய உயர்ந்த நூலாக, இந்த நேரத்தில் கலைஞர் அவர்களுடைய குறளோவிய நூல் வெளியிடப்படுகிறது.

மக்களால் உருவாக்கப்படுகிறவன் தலைவன் அல்ல; மக்களை உருவாக்குகிறவனே தலைவன் - தலைவர் கலைஞர் அவர்கள் 'தலைவர்'. அவர் தமிழ் இனத்தில், உலகத்தில், ஈழமண்ணில், மலேசியாவில், சிங்கப்பூரில், பிஜியில், தென்னாப்பிரிக்காவில் ... எங்கு தமிழன் வாழ்ந்தாலும், இந்த மண்ணில், இந்த இனத்தில், இந்தக் காலத்தில் மக்களை உருவாக்குகிற ஒரேயொரு தலைவர் கலைஞர்.

இந்த மண்ணில் இதுவரை தோன்றியவர்களில், கலைஞர் ஒருவர்தான் திருவள்ளுவருக்கு மிகப்பெரிய நன்றிக்கடனைச் செலுத்தியவர்.

ஆட்சிமொழிக் காவலர் இராமலிங்கனார்

"நீராருங்கடலுடுத்த" என்ற தமிழ் வாழ்த்து எங்கே பாடப்பட்டாலும் அந்தப் பாடலைக் கேட்கும்போதெல்லாம் அந்தப் பாடலின் நலத்தை நான் நுகர்வதை விட, கலைஞர் பெருமான் அவர்களைத்தான் நான் நினைத்துக் கொள்வேன்.

அதைப்போல, வள்ளுவர் கோட்டத்தை நினைக்கும்போதெல்லாம், அந்தப் பக்கம் போகும் போதெல்லாம், அதைக் காணும் போதெல்லாம் கலைஞர் பெருமான் அவர்களுக்கு ஒரு கும்பிடு போடுவேன்.

இவையெல்லாம் நிலையான செயல்கள்.

காவிரிப்பூம்பட்டினம் என்ற நகரம் இருந்தது என்று கேள்விப்பட்டிருக் கின்றோம். ஒரு சிறு கிராமமாக இருந்த அந்த ஊரை வளமாக்கி, அங்கு பழம்பெருமையைப் பறை சாற்றும் பூம்புகாரை அவர்கள் உருவாக்கினார்கள். அதை நினைக்கும்போதும் கலைஞர் அவர்களைத்தான் நான் நினைத்துக் கொள்வேன்.

இப்படி என் உள்ளத்தைக் கவர்ந்தவர் கலைஞர்; என்பால் நிறைந்த அன்புடையவர்.

படித்தவர்கள் பாராட்ட வேண்டிய நூல் குறளோவியம். குறளோவியம் ஒரு கவிதை நூல் என்பது என் கருத்து.

கவிதை என்பதே "கௌவு" என்ற பகுதியிலிருந்து வருகிறது. உள்ளத்தைக் கௌவுவது கவிதை - பாட்டு என்கிறோம்; அது உள்ளத்திலே பட்டுச் சொல்வது; மற்றவர் உள்ளத்திலே படும்படியாகச் சொல்வது பாட்டு. இப்படி உள்ளத்தைக் கௌவுகின்ற தன்மையை இந்த நூலில் நான் காண்கிறேன்.

புதுக் கவிதை என்கிறார்கள். மரபுக் கவிதை என்கிறார்கள். எது சிறந்தது என வாதங்கள் நடப்பதைப் பார்க்கிறோம்.

இலக்கண மரபுப்படி எதுகை மோனையோடு அசை, சீர், தளை கெடாமல் பாடுவதுதான் கவிதையா அல்லது அவற்றைப் பொருட்படுத்தாமல் புதுக் கவிதை என்று சொல்கிறோமோ, அப்படிப் பாடுவதுதான் பாட்டா என்று வாதங்கள் நடக்கும்போது நான் எண்ணிப் பார்த்தேன்.

இதையோ அதையோ கவிதை என்று சொல்லிவிட முடியாது. கவிதை என்றால் கௌவுகின்ற தன்மை இருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால், இது புதுக் கவிதைக்கும்

மரபுக் கவிதைக்கும் இடையிலே இருக்கின்ற உரைக் கவிதை. இந்த நூலைப் படிக்கிறபோது, ஒவ்வொரு தொடரும் உள்ளத்தைக் கௌவுகிற வகையிலே கலைஞர் அமைத்திருக்கிறார்கள். இது ஒரு கலைத்திறன்.

எப்படித்தான் நல்ல வண்ணங்களை ஒருவரிடம் கொடுத்தாலும் கலைத்திறன் இருந்தால்தான் நல்ல ஓவியங்களை உருவாக்க முடியும். கலைத்திறன் இல்லாவிட்டால், எத்தகைய வண்ணங்களைக் கொடுத்தாலும் ஓவியங்கள் உருவாகாது.

இந்த நூலில் நிறைய எதுகை மோனைகள் இருக்கின்றன. நல்ல பல கருத்துக்கள் இருக்கின்றன. மனதைக் கவரக்கூடிய கவிதை நூல் என்றுதான் நான் நினைக்கிறேன்.

குறளோவியத்திற்குப் பொருளாக இருப்பது திருக்குறள். திருக்குறள், தமிழர்களுக்குப் பொது நூல்; வேதம் என்றால்கூட பொருத்தமாக இருக்கும். மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்கு, நேர்மையாக ஒழுங்காக வாழ்ந்து தெய்வ நிலைக்குப் போவதற்குத் துணையாக இருக்கக் கூடிய செய்திகள் அந்த நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த நூலை எளிதில் படித்துப் புரிந்து கொள்ள முடியாது. அதற்கு உரை வேண்டியிருக்கிறது. எவ்வளவோ உரைகளும் இருக்கின்றன. ஆனால், அந்த உரைகளைப் படிப்பதற்கும் உரை தேவைப்படுகிறது.

படிப்பதற்கு எளிதாகப் பாமரர்களும், பட்டிக்காடுகளில் உள்ளவர்களும் எளிதில் குறள் கருத்துக்களைப் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் இந்தக் குறளோவியம் எழுதப்பட்டிருக்கின்றது.

வீட்டில் நான் குறளோவியம் நூல் படித்துக் கொண்டிருக்கும்போது, ஆறாவது வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் என் பேத்தி, நூலின் அட்டையைப் பார்த்ததும் அழகாக இருக்கின்றது என்று பிடுங்கியவள், அதைப் படிக்கவும் ஆரம்பித்து விட்டாள். படித்துவிட்டு "இதில் கதைகள்கூட நிறைய இருக்கிறது தாத்தா" என்று கூறினாள். நானும் "தொடர்ந்து படியம்மா; 354 குறளும் எளிதில் மனப்பாடம் ஆகும்" எனக் கூறினேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், படிப்பவர்கள் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இந்தக் குறளோவியம் எழுதப்பட்டி ருக்கின்றது.

உடல் நலத்தைப் பெறுவதற்கு சுக்கு - மிளகு - திப்பிலி ஆகியவற்றை அப்படியே சாப்பிடக் கடினமாக இருக்கும். ஆனால், அதனையே லேகியமாக்கித் தேனில் கலந்து எளிதாகச் சாப்பிட்டு உடல் நலத்தைப் பெறலாம்.

நல்ல மருந்துப் பொருட்களை லேகியமாக்கித் தருவதுபோல இந்தக் குறளோவியம் அமைந்திருக்கின்றது.

இவ்வளவு அருமையான நூலை - உலக மக்கள் அனைவருக்கும் பயன் தரக் கூடிய நூலை கலைஞர் ஆக்கித் தந்திருக்கின்றார்கள். முப்பதாண்டுகால முயற்சியில் கிடைத்த இந்த நூலைப் போற்றிப்பயன்படுத்த வேண்டும்; உருவாக்கித் தந்த கலைஞருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

ஆசிரியர் சாவி

திருக்குறளுக்கு எவ்வளவோ பேர் உரை எழுதியிருக்கிறார்கள். ஆனால், அந்த உரைகளுக்கெல்லாம் மேலாக கலைஞர், வள்ளுவருக்குப் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார்.

நான்கூட எவ்வளவோ உரைகளைப் படித்திருக்கிறேன். எனக்கு ஒன்றும் புரியாது. அவைகளுக்கு யாராவது விளக்கம் எழுதினால் நன்றாக இருக்கும் என நினைப்பதுண்டு.

கலைஞர் எழுதியிருக்கிறார் - அவர் எழுதியிருக்கின்ற ஒவ்வொரு ஓவியமும் - நான் உண்மையாகச் சொல்கிறேன்; ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு அப்புறம், ராஜாஜிக்கு அப்புறம் குட்டிக் கதைகள் சொல்வதில் கலைஞருக்கு இணை கலைஞர்தான். மிகவும் பொருத்தமான கதைகள். இப்பொழுது நடந்த கதையை எப்பொழுதோ எழுதப்பட்ட குறளுக்குப் பொருத்தமாகச் சொல்வார்.

நான் தினமணிக் கதிரில் இருக்கும்போது, கலைஞர் குறளோவியம் எழுதிக் கொடுப்பார். வாராவாரம் அவருடைய குறளோவியம் எப்போது வரும் என்று நானும் என்னுடைய உதவி ஆசிரியர்களும் குறளோவியத்திற்காகக் காத்துக்கொண்டிருப்போம்.

பத்திரிகை அலுவலகத்தில், இந்தக் கதை வந்து விட்டதே என்று எண்ணுவது போக, எப்பொழுது வரப் போகிறது என்று காத்திருந்து - அது வந்தவுடன் கையெழுத்துப் பிரதியிலேயே அதைப் படித்து விடுவோம். ஒரு இடத்தில்கூட அடித்தல் திருத்தல் இராது. இரண்டாவது முறை மாற்றி எழுதமாட்டார்.

கலைஞருக்குத்தான் அப்படி எழுத்து வரும். தெளிவான சிந்தனை இருப்பவர்களுக்கு அடித்தல் திருத்தல் எதுவும் இருக்காது.

வள்ளுவருக்கு அருமையாக ஒரு நினைவாலயம் எழுப்பி, குறளோவியமும் எழுதி வள்ளுவருக்குப் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார்.

தமிழகத்தில் உள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல. உலகில் எங்கு இருந்தாலும் அவர்களை மேம்பாடடையச் செய்யும் அளவிற்குக் கலைஞர் இந்த நூலை எழுதியுள்ளார்.

வீட்டுக்கு ஒரு நூலகம் என்பார்கள். நூலகம்கூட வேண்டாம். குறளோவியம் இருந்தாலே போதும்; எந்த நேரமும் பயன்படக்கூடியது.

டாக்டர்
மெ.சுந்தரம்

இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதல் முதல் ஆறு எம்.பில். பட்டங்களையும் ஐந்து டாக்டர் பட்டங்களையும் பெறக்கூடிய அளவிற்குப் படைப்பிலக்கியத்தை எழுதிய ஒரே பெருமகன் கலைஞர் அவர்கள்தான்.

ஏனென்றால், அந்தப் பதினொன்றையும் மேற்பார்வையிட்டு வழங்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பைத் தமிழ்த்தாய் எனக்கு அளித்தாள்.

கலைஞருடைய படைப்பிலக்கியத்தை வைத்துப் பெறப்பட்ட ஆறு எம்.பில். பட்டங்கள், சிலப்பதிகாரம் தொடங்கி குறளோவியம் வரை வந்திருக்கின்றது.

கலைஞருடைய பேச்சுக்கள், எழுத்துக்கள், சிந்தனைகள், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள், கவிதைகள், நாடகங்கள் அனைத்தையும் சேர்த்து ஐந்து டாக்டர் பட்டங்கள் வழங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இப்படிப் பதினொரு ஆராய்ச்சிப் பட்டங்கள் உருவாக்கும் அளவிற்குப் படைப்பிலக்கியங்களைக் கலைஞர் உருவாக்கி இருக்கிறார். அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

கலைஞர் அவர்களை நான் பாராட்டுவதைக் காட்டிலும் அமெரிக்கப் பேராசிரியப் பெருமக்கள் இரண்டு பேர் பாராட்டியதை இங்கு கூற விரும்புகிறேன்.

அமெரிக்காவில் உள்ள மினசோட்டா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிலிப்ஸ் செகல் மென் 11-2-85 அன்று எனக்கு எழுதிய கடிதத்தில், கலைஞரின் இன உணர்வையும் மொழி உணர்வையும் இலக்கியப் புலமையையும் பெரிதும் பாராட்டியிருக்கிறார்.

கலைஞரின் பணி தமிழ்த் தாய்க்கு மணிமுடிசூட்டிடும் பணி என்று மற்றொரு பேராசிரியர் ஹார்டு கிரேவ் எனக்கு எழுதிய கடிதத்தில், கலைஞரைப் பாராட்டியிருக்கிறார்.

இவர்கள், கலைஞரை நேரடியாக அறியாதவர்கள், அவரது எழுத்தைப் படித்து விட்டு இந்தப் புகழாரத்தைச் சூட்டியிருக்கின்றார்கள்.

டாக்டர்
மா.நன்னன்

'குறளோவியம்' நூலுக்கு டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் மதிப்புரை வழங்கியிருக்கின்றார்கள். அந்த மதிப்புரை, வானத்திலே பறந்து கீழேயிருக்கின்ற பொருள்களைப் படம் பிடித்துக் காட்டுகின்ற பருந்துப் பார்வை போன்ற அமைப்புடையது.

ஆனால், என்னுடைய உரையிலே, சோலையிலே நுழைகின்ற குயில் போல ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சுட்டிக் காட்டலாம் எனக் கருதுகிறேன்.

கலைஞர் அவர்களின் உவமையழகுக்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டுமானால்,

"வெள்ளிப் பாற் குடத்தின் வாய்போன்ற வட்ட நிலா" என்று ஒரு இடத்திலே கலைஞர் கூறியிருக்கிறார்.

நிலாவைப் பற்றி பாரதிதாசன் நிரம்பப் பாடியிருக்கிறார். ஆனால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பார்வையிலேகூட படாத ஓர் உவமையைக் கலைஞர் அவர்கள்,

"வெள்ளிப் பாற் குடத்தின் வாய் போன்ற வட்ட நிலா" என்று நிலவுக்கு மிக அழகாக உவமை கூறியிருக்கிறார்.

கலைஞரின் உருவகச்சிறப்பிற்கு ஓர் எடுத்துக் காட்டுத் தர விரும்புகிறேன்.

"ஒரு பெண் காதலனைப் பிரிந்த வருத்தத்திலே இருக்கிறாள். தூக்கம் வரவில்லை. உடனே கண்ணயர்ந்தாவது கவலைகளை மறப்போம் என விழிகளை இமைகளால் தாழிட்டுக் கொள்கிறாள். அந்தப் பொல்லாத விழிகள், இமைக்கதவுகளைத் தட்டிப் பார்த்து விட்டு நினைவுச் சாளரத்தின் வழியாக வெளியே எட்டிப் பார்க்கின்றன."

இதுவரை எங்காவது, எந்த இலக்கியத்திலாவது இதுபோன்ற உருவகம் இருக்கின்றதா என்று விசாரித்துப் பாருங்கள். நான் கேட்டறிந்த வரையிலேகூட இப்படி ஓர் உருவகத்தை யாரும் அமைத்ததாக எனக்கு நினைவில் இல்லை.

கலைஞர் ஏந்புரை

1956-ஆம் ஆண்டில் குறளோவியம் எழுதத் தொடங்கினேன் என்பதை, நூலில் முன்னுரையாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அதை நம்முடைய அன்புக்குரிய நண்பர்களும் இங்கே விளக்கியிருக்கின்றார்கள்.

சற்றொப்ப 30 ஆண்டுகால உழைப்பால் 354 குறட்பாக்களுக்கு 300 குறளோவியங்கள் தீட்டப்பட்டு, அது நூல் வடிவிலே வெளியிடப்பட்டுள்ளது.


புகழ்ந்து பேசினார்கள்; பாராட்டிப் பேசினார்கள். இதற்கெல்லாம் நன்றி கூறுகின்ற வகையிலே நான் நீண்ட நேரம் பேச வேண்டுமென்று நீங்கள் யாரும் நினைக்கக் கூடாது. நான் பேசவும் கூடாது.

ஏனென்றால் பத்து மாதம் சுமந்து, பேற்று வலிகண்டு, அந்தப் பேற்று வலியினால் துடியாய்த் துடித்து இறுதியாகக் குழந்தையைப் பெற்றெடுத்து, குழந்தை பக்கத்திலே படுத்திருக்கிற நேரத்தில் அதைப் பார்த்துக் கண்களால் மகிழ்ச்சியைக் கொட்டிக் கொண்டிருக்கின்ற தாயின் அருகாமையில் அவளுடைய தோழிகளெல்லாம் வந்து - பக்கத்து வீட்டிலே உள்ளவர் களெல்லாம் வந்து - வயதான மூதாட்டியரெல்லாம் வந்து குழந்தையைப் பார்த்து "ஆகா எவ்வளவு அழகான குழந்தை; வைரம் போல் இருக்கிறது; தங்கம் போல் இருக்கிறது" (இருந்தாலும் இல்லாவிட்டாலும்) அப்படித்தான் சொல்லுவார்கள். அப்படிப் பலரும் வந்து குழந்தையைப் பாராட்டுகிற நேரத்தில், உடனே அந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த தாய், அவர்களையெல்லாம் பார்த்து "இதைப் பெற நான் எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா? பத்து மாதம் சுமந்தேன் தெரியுமா? மூன்றாவது மாதம் நாலாவது மாதம் பாடெல்லாம் உங்களுக்குத் தெரியுமா? எவ்வளவு மாங்காய் தேவைப்பட்டது தெரியுமா?" என்றெல்லாம் அவர்களைப் பார்த்தவுடன் இவ்வளவு கதைகளையும் சொல்லிக் கொண்டிருக்க மாட்டாள். பக்கத்து வீட்டுக்காரரானாலும் மூதாட்டியரானாலும் முதியோர்களானாலும் அல்லது கணவரேயானாலும் மாமன் மாமிகளானாலும் அத்தனைப் பேரும் அந்தக் குழந்தையைப் பாராட்டி மகிழ்கிற நேரத்தில், பதிலுக்கு ஓர் இன்பமான புன்னகையைத்தான் களைப்புற்றிருக்கின்ற அந்தத் தாய் வீசுவாள். அந்தப் புன்னகையைக்கூட அவர்களைப் பார்த்து வீசமாட்டாள்; அந்தக் குழந்தையைப் பார்த்துக்கொண்டுதான் வீசுவாள்.

அதைப் போல மூதாட்டியாக - பக்கத்து வீட்டுப் பெண்மணிகளாக- தோழிகளாக - பெரியவர்களாக - என் தாய் தந்தையர்களாக நீங்களெல்லாம் வந்து என் குழந்தையைப் பாராட்டினீர்கள். நான் அந்தக் குழந்தையைப் பார்த்துக் கொண்டே புன்னகை புரிகின்றேன். அதுதான் நான் காட்டுகின்ற - தெரிவிக்கின்ற நன்றி.

சமயபுரினின்

சுறுகோகவியம்



திருவள்ளுவர் கடவுளை ஒப்புக்கொண்டாரா - இல்லையா?

திருவள்ளுவர் கடவுளை ஒப்புக்கொண்டாரா - இல்லையா? ஒப்புக் கொண்டார் என ஒரு வாதமும் - இல்லவே இல்லை என ஒரு வாதமும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது. வள்ளுவர், குறள் எழுதிய காலத்தில், கடவுள் நம்பிக்கையுள்ள மக்களே தமிழ்நிலத்தில் வாழ்ந்தார்கள் என்பதைத் தொன்மை வாய்ந்த இலக்கியங்களிலிருந்து உணர்ந்துகொள்ள முடிகிறது.

எல்லையற்றது வானவெளி! விண்வெளியின் விளிம்பு எது என்று இயற்கை கோடுபோட்டு வைக்கவில்லை. விரிந்து பரந்து கிடக்கும் இந்தப் பெருவெளியில் அந்தக்காலத்து "வானசாஸ்திரிகள்" முதற்கொண்டு, இந்தக்காலத்து விஞ்ஞான,

மேதைகள் வரையில் கண்டறிந்து கூறும் கோள்கள் மட்டுமே நமது எண்ணிக்கைக் கணக்கிற்கு உட்பட்டவை!

அந்தக் கோள்களைவிடப் பலமடங்கு பெரியதான விண்மீன்கள், இலட்சோப இலட்சம் கல் தொலைவுக்கு அப்பால் சுழன்றுகொண்டு கண் சிமிட்டுகின்றன என்பதையும் நாம் அறிகிறோம். அந்த விண்மீன்கள் எத்தனை எத்தனையோ?

வெப்பமிகு கோள்களில் ஒன்றான சூரியனிலிருந்து சிதறிய ஒரு துண்டுதான் இந்தப் பூமி! நெருப்புப் பந்தாக இருந்த இந்தப் புவி, எவ்வளவோ கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு குளிர்ச்சியடைந்து நீர்வளம், நிலவளம், மலைவளம், மரம் செடி கொடிவளம் என்றெல்லாம் வளங்களைப் பெற்று புழு, பூச்சி, கிருமிகள் போன்ற உயிரினங்கள் தோன்றக்கூடிய பக்குவத்தையும் அடைந்தது.

உயிரினங்களிடையே ஏற்பட்ட உடலுறவில் விலங்கினம், பறவையினம், மனித இனம் முதலிய இனங்கள் தோன்றின.

வானிலிருந்து மழை பொழிந்தது - காற்று வீசியது - இயற்கையின் அற்புதங்களையெல்லாம் கண்டு வியப்படைகிற அளவுக்கு மனிதனுக்கு மூளை வளர்ச்சியிருந்தது. இந்த வளர்ச்சி, மற்ற உயிரினங்களிலிருந்து மாறுபட்ட ஒன்றாகும். ஏதோ ஒரு சக்தியில்லாமல் இத்தனை மாற்றங்கள் புவியிலும் சரி, விண்வெளியிலும் சரி நடைபெற முடியாது என்று தீர்மானித்த மனிதன், அந்தச் சக்தியைக் கடவுள் என்று வர்ணித்தான்.

அதற்குக் கைகால்கள் உண்டா? அது பேசுமா? அது வரம் அருளுமா?

இந்தக் கேள்விகளுக்கு இடம் தராதவர்கள், அந்தச் சக்தியை ஒப்புக் கொண்டனர்.

எங்கோ ஓர் இடத்தில் ஓர் ஆள் அமர்ந்துகொண்டு விண்ணிலும் இந்த மண்ணிலும் இத்தனை அதிசயங்களை நடத்துகிறார் என்பதை நம்பமுடியா விட்டாலும்; அண்ட பகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகிய ஒரு சக்தியின் இயக்கத்தால்தான் எல்லாமே அசைகிறது என்பதில் கடவுளை அறவே மறுப்பவர்களும் எதிர்க்கருத்துக் கொண்டிருக்க இயலாது!

அந்தச் சக்தியை "இறைவன்" என்றனர்! "இறை" என்று பொதுவாகக் கூறினர்! ஆணா - பெண்ணா என்று தெரியாத அளவுக்குக் "கடவுள்" என்றனர். "தெய்வம்" என்றனர்!

மதங்கள் தோன்றியபிறகு, அவரவர்க்கு ஏற்றவாறு பெயர்களையும் சூட்டினர்!

வள்ளுவர், தான் வாழ்ந்த காலத்து நிலையைத் தனது குறளில் வடித்துக் கொடுக்கத் தவறவில்லை. இறை அல்லது இறைவன் அல்லது தெய்வம் - இவற்றுக்குச் சொல்லப்படும் இலக்கணங்களை அவர் புறக்கணிக்காதது மட்டுமல்ல; அந்த இலக்கணங்களின் வடிவமாக, மாந்தர் திகழவேண்டுமென விரும்பினார்.

"கடவுள் வாழ்த்து" என்ற அதிகாரத்தில், எழுத்துக்களுக்கு 'அகரம்' முதல் என்பது போல, உலகிற்கு ஆதிபகவன் அடிப்படை என்றார்.

‘வாலறிவன்’ என்றால் தூய்மையான அறிவு வடிவாக விளங்கக்கூடியவன் எனக் கூறி, அவன் திருவடிகளைத் தொழாவிட்டால் - கற்றும் பயனில்லை என்று சுட்டிக்காட்டினார்.

‘வேண்டுதல் வேண்டாமை இலான்’- அதாவது விருப்பு வெறுப்பு இல்லாதவனுடைய நிழலை நாடுபவர்க்குத் துன்பம் இல்லையென்று குறிப்பிட்டார்.

“தனக்குவமை இல்லாதான்”

“அறவாழி அந்தணன்”

இவ்வாறெல்லாம் கடவுள் எனப்படும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்தார்.

இறைவனுக்குரிய இத்தனை பெருமையும் கொண்டு ஒருவன் வையத்தில் வாழவேண்டுமென்று வள்ளுவர் கருதினார்.

அதனால்தான் அவர், திட்டவட்டமாக ஒரு கருத்தை உலகிற்கு அறிவித்தார்.

“தெய்வத்திற்கென எத்தனையோ அருங்குணங்கள் சொல்லப்படுகின்றன! உலகில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானத்தில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்.”


அதற்கு இதோ குறள் :

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”

அதிகாரம் 5 - இல்வாழ்க்கை; பாடல்: 50

(குறிப்பு: ‘கடவுள் வாழ்த்து’ அதிகார விளக்கமும் இணைந்துள்ளது)





மாலை நேரத்திலே - சோலை ஓரத்திலே - வேலை நிகர்த்த விழியினர் காதல் பயில்வர். அதுபோல் ஆலையிட்ட கரும்பென அவதிப்பட்டு உழல்வர் ஆளன் அருகிலா மாதர். அந்திவானத்தில் அழகு காண்பர் - அதனோடு தன் இதழை ஒப்பிடும் அழகன் அங்கு வரவில்லையே என அயர்வர். தென்றல் அவர்தம் ஆடை நகர்த்தும். அதற்கு வாழ்த்துக் கூறித் தம்மைக் கேலி செய்யும் இன்பலோக ஏந்தல் இன்னும் வரக் காணோமே என விம்முவர். பூங்கொம்பு மலரிதழைத் திறப்பதற்கு முன்பே தேன்வண்டு பறந்து வரும் தன்மை காண்பர். "வண்டு தழுவும் மலர் பார்கற்கண்டே! என இன்பம் மொண்டு தரும் என் துரையை இன்னும் காணோமே?" என ஏங்குவர். மனம் வீங்குவர். மாலைப் பொழுது, அவர்தம் நெஞ்சில் படை

கொண்டு தாக்குவது போல் தோன்றும் - இன்பம் தரவல்ல காதலையே நோயென்று கூறுவர். அந்த மனோநிலையைத்தான் வள்ளுவர் அழகாகக் கூறுகிறார்.

காலைப் பொழுதிலே அரும்பாய்த் தோன்றி, பகலெல்லாம் பேரரும்பாகத் தழைத்து, மாலையில் மலராக மாறுகிறது இந்தக் காம நோய்; அதற்கு இதோ குறள்:

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந் நோய்"

அந்நோய் மலருகிற மாலை நேரம் எப்படி இருக்கிறது தெரியுமா மங்கைக்கு? அவளைக் கொல்ல வருகிற சேனையானது, நெருப்புப்போல் உள்ள மாலை நேரத்திற்குத் தூதாக வருகிறதாம்.


"கொல்லும்படி; அழல்போலும் மாலைக்குத் தூதாகி" என்கிறார். அது மட்டுமா?

மாலை நேரத்திலே ஆயன் குழலூதிக் கொண்டிருக்கிறான். குழலிலேயிருந்து இனிமை அருவியெனக் கொட்டுகிறது, தென்றலுக்கே இன்பம் சேர்க்கிறது, அந்த இசை! அசைந்தாடும் மலர்க் கொத்துக்கள், குழலிசைக்கு அபிநயம் காட்டுவதுபோல் காட்சி தருகின்றன. குழலோசை, நாகத்தையும் மயங்க வைக்கும் என்பர். அந்தக் குழலோசையைப் பற்றிக் காதலனைக் காணாக் கட்டழகி என்ன கூறுகிறாள் தெரியுமா? "என்னை வருத்தும் சேனை, மாலைக்குத் தூதாக மட்டுமல்ல - ஆயன் குழலாகவும் வருகிறது போலும்!" என்று புலம்புகிறாள்.

"அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை"

அதிகாரம் *123* - பொழுதுகண்டு இரங்கல்;பாடல்கள் *1227, 1228*





தமிழ்த் தேன்மொழியாள்

"என் வாழ்க்கைத் துணைவி, வார்த்தெடுத்த தங்கப்பதுமை. இல்லறத்து முல்லைக்கொடி. தாமரை மலர்மீது இரு வண்டு அமர்ந்தாற்போல் அவள் விழிகள். கோத்து வைத்த முத்துமாலை அவள் சிரிப்பு. இத்தனை உயர்வுடையாள் யாழெடுத்து மீட்டிவிட்டால் இத்தரைமீதினிலே யாருமில்லை என்பேன்.

"தெங்கின் இளம்பாளை சுவைத்து வரும் தென்றல் உடலில் மோதும். அதை அந்த யாழ் வெல்லும் - என் துணைவி மீட்டுகின்ற யாழ் வெல்ல, இவ்வுலகில் யாருண்டு? எங்குமில்லை?

"குயிலோசை கேட்டதுண்டு. கோதை நான் மீட்டுகின்ற யாழோசை எனக்கே தெவிட்டியதுண்டு; என் கொழுநன் வழங்குகின்ற அந்தக் குழலோசை சேர்த்த இன்பம் பேரின்பம் என்பேன்! கூதிர் காலம் கொட்டுகின்ற பனிக் காற்றில் குளிரில்லை; என் கோமான் ஊதுகின்ற குழலோசை குளிர் வெள்ளம்!

“சத்துள்ள முத்தமிடக் குவிகின்ற இதழ்பொருத்திக் குழலூதும் அவரை வெல்லக் கத்துகடல் சூழ்கின்ற இப்புவியில் யாருமில்லை - எங்குமில்லை!

யாழ் மீட்டும் துணைவி - குழலூதும் துணைவன் - ஒருவரையொருவர் புகழ்ந்தனர். வாழ்த்தினர். குழலையும், யாழையும் வெல்லக் குவலயத்தில் எதுவுமில்லையென்ற நினைப்போடு இருவரும் தழுவினர். பின் தம்மை மறந்தனர்.

குழல் இனிதா? யாழ் இனிதா? இரண்டையும்விட இனியது ஒன்றிருக்கிறது எனக் கண்டனர். அப்போதே அல்ல; ஓரிரு ஆண்டுகள் ஓடியபின்!

இரு மலர் - ஒரு மொட்டு என்று ஆகிவிட்டது குடும்பம்-

அன்புச் சின்னம் - அழகின் பெட்டகம் - அழித்தெழுதாச் சித்திரம் - அவர்கள் வீட்டில் நடமாடுகிறது.

தன் சிறு கையால் கூழை அளாவி அமிழ்தினும் இனிதாக்குகிறது. தன் மெய் தீண்டிய பெற்றோர்க்கு உடற்கின்பம் அளிக்கிறது.


‘இதோ உங்களிருவரின் குழலையும் யாழையும் வெல்லுகின்ற மழலை மொழி’ என அறைகூவல் விடுக்கிறது.


முற்றாத இதழ்களிலேயிருந்து முதிராத சொற்கள் உதிரும்போது, யாழெங்கே - குழலெங்கே - அனைத்தும் இந்த மழலைக்குப் பிறகுதான் என்று முடிவு கட்டுகின்றனர், துணைவனும் துணைவியும்.

இந்த இன்பத்தைத்தான் வள்ளுவர் இரு வரிகளில் எழுதிக் காட்டுகிறார்.

“குழல்இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்”

அதிகாரம் 7 - மக்கட்பேறு; பாடல் - 66





ஒருவனுடைய ஆற்றலைப் புகழும்போது "இவனை வெல்ல உலகத்திலேயே யாரு மில்லை" என்கிறோம். நமக்கு அந்த ஊர் அளவுக்குத்தான் தெரியும். உலகில் அப்படி யொரு ஆற்றலாளன் இருக்கிறானா; இல்லையா என்பது தெரியாது! இருந்தாலும் இவனைப் போற்றும்போது உலகையே எதிர்நிறுத்தி மிகைபடக் கூறுகிறோம்.

ஆற்று வெள்ளத்தில் மூழ்கித் தப்பித்து விடுகிறான் ஒருவன். அவனைப் பார்த்து, "இனிமேல் உன்னை இமயமலையிலேயிருந்து உருட்டிவிட்டாலும் சாக மாட்டாய்!" என்கிறோம். அவன் ஆற்றில் மூழ்கிச் சாகாமல் பிழைத்துக் கொண்டதை அப்படிப் பாராட்டுகிறோமே தவிர, அவனை மலையிலிருந்து உருட்டினால் சாகமாட்டான் என்பது நமக்கு எப்படித் தெரியும்! இருந்தபோதிலும் அவனது உயிரின் வலிமையை மிகைப்படுத்திக் கூறுகிறோம்.

இப்படி மிகைப்படுத்திக் கூறும்போது - நம்முடைய கருத்துக்கு ஏலாததும், நாமே நம்பிக்கை கொள்ளாததுமான சிலவற்றைக்கூட நாம் சிறப்பாகக் கையாளுகிறோம்.

"அவன் உனக்குச் செய்திருக்கிற உதவிக்கு நீ ஏழு ஜென்மம் எடுத்தால் கூட அவனுக்கு நன்றி தெரிவித்து மாளாது!"

இப்படிக் கூறும்போது, நாம் ஏழு ஜென்மங்களை ஒத்துக் கொள்வதில்லை! அதாவது மறுபிறவியையே ஒத்துக்கொள்வதில்லை! இருந்தாலும் மிகைப்படுத்திக் கூறிவிடுகிறோம்.

மனிதன் தீவினைகளில் ஈடுபடாமல் தடுத்திடவே, மறுபிறவி என்ற பயம் காட்டப்பட்டது என்பது தெளிவு!

இந்த நிலை, வள்ளுவர் காலத்திலும் இருந்திருக்கிறது! அதனால்தான் கல்வியின் சிறப்பைக் கூறவந்தவர், அதன் தேவையை எல்லை கடந்து புகழ்ந்திருக்கிறார்.

"ஒரு பிறப்பில் கற்றுக்கொள்கிற கல்வியானது, அப்பிறப்பிற்கு மட்டுமின்றி, ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மையுடையதாகும்."

"தம்பீ! நீ படிக்கிற படிப்பு உனக்கு ஏழு ஜென்மத்துக்குப் பயன்படும்!"

ஓர் இளைஞனைப் பார்த்து இப்படிச் சொன்னால் - அந்தக் கருத்தின் அழுத்தம் கல்விக்குத் தரப்படுகிறதே தவிர, ஏழு பிறவிகளுக்கு அல்ல என்பதை உணர்தல் வேண்டும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

ஒரு பிறப்பில் கற்ற கல்வி, ஏழு பிறப்பும் பயன்படும் என்கிறார்! இது கல்வியின் பெருமையை மிகைப்படுத்தலேயன்றி ஏழு பிறப்பை ஒத்துக்கொண்டதாகாது.

உலகில் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் இளந்தளிர்களாகிப் பள்ளிக்குச் சென்றே கல்வி பயிலுகின்றன! முற்பிறப்பில் கல்வியே கற்காத குழந்தைகளா அத்தனையும்? முற்பிறப்பு என ஒன்றிருந்து, அப்போது கல்வி கற்றிருந்தால், இப்போது கற்கத் தேவையில்லையே!

வள்ளுவர் காலத்திலும் நம்பப்பட்ட ஏழு பிறவிகளை - அல்லது மறு பிறவியை - அவர், கல்வியின் சிறப்புக்காக எடுத்துக் கையாண்டுள்ளார் - அவ்வளவே!

"கல்வி"யெனும் அதிகாரத்தில் இவ்வாறு குறிப்பிடும் வள்ளுவர், "மெய்யுணர்தல்" எனும் அதிகாரத்தில் "பிறவிகள்" குறித்து என்ன கூறுகிறார்?

"ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு"

உள்ளமானது உண்மைப் பொருளை ஆராய்ந்து உறுதியாக உணர்ந்தால் - மீண்டும் பிறவி உள்ளதென எண்ணவேண்டாம்.

உள்ளம் தெளிவுபெற்று உறுதியாக இருந்தால் - பிறப்பு மீண்டும் உண்டு என நினைக்கவே தேவையில்லையென்கிறார்.

உள்ளம் தெளிவுபெற்று உறுதியாக நிலைக்கக் கல்வி தேவை! ஆம்; உள்ளத் தெளிவு எது என்பதை விளக்கி அறிவிக்கவும் ஒரு கல்வி உண்டன்றோ! அந்தக் கல்வி தேவை!

கல்வி கற்றாலோ; அது ஏழு பிறவிக்கும் பயன்படும்!

கற்றிடும் கல்வி, உள்ளத்தில் உண்மைப் பொருளை ஆராய்ந்து உறுதி விளக்கைக் கொளுத்தி வைத்திடுமேயானால் - மீண்டும் பிறப்பு உண்டு என்ற எண்ணமே வேண்டாம்! ஆம்! அந்த எண்ணமே எழாது!


"ஏழு பிறவி" என்ற கருத்தைப் பயன்படுத்தியது, கல்வியின் பெருமையைக் கூறுவதற்காகவே!

உண்மைப்பொருளை ஆராய்ந்திட உறுதியான உள்ளம் தேவையென்பதை வலியுறுத்துவதற்காகவே - அத்தகையோர்க்கு "மீண்டும் பிறப்பு" இல்லையென்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்!

மெய்யுணர்தலின் வலிமையையும் - கல்வியின் பெருமையையும் - மிகைப்படக் கூறியேனும் மக்களுக்கு உணர்த்திட வேண்டும் என்ற வள்ளுவரின் அவாவே இந்த இரு குறட்பாக்களின் வாயிலாக வெளிப்படுகிறது.

அதிகாரம் - 40 - கல்வி; பாடல் - 398

அதிகாரம் - 36 - மெய்யுணர்தல்; பாடல் - 357



வைத்தியர் ஊசி குத்துகிறார்; உடலில் வலி ஏற்படுகிறது. ஆனால், அந்த ஊசி வழியே உடலுக்குள் செல்கிற மருந்து, நோய் தீர்க்கப் பெரிதும் உதவுகிறது. வைத்தியரிடம் வேதனை தரும் ஊசியும் இருக்கிறது; நோய் வேதனையை நீக்கும் மருந்தும் அதனுள் இருக்கிறது!

இங்கே திருவள்ளுவர் ஒரு வைத்தியரைக் குறள் மூலம் அறிமுகப் படுத்துகிறார் பாருங்கள். அழகி, அழகனைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையை அவன் வர்ணிக்கிறான். இந்த அணங்கு இரு பார்வையுடையவள்; ஒரு பார்வையால் அவனுக்கு வேதனை உண்டாக்கினாள். அடுத்த பார்வையால் அந்த வேதனையைப் போக்கினாள். இந்த விசித்திரமான மருத்துவப் பெண்மணியின் பார்வைச் சிறப்பை வள்ளுவர் வாய்மொழியாகவே கேளுங்கள்:

"இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

அப்படி அவள் பார்க்கிறாளே என்பதற்காகப் பருவ இளைஞன் வாளாயிருந்து விட்டானா? அவனோ ஒரு வம்புக்கார வாலிபன் போலும். காதல் மயக்கத்தில் என்னென்ன சொல்கிறான் பாருங்கள் :

"நான் அவளைப் பார்க்கும்போது அவள் என்னைப் பார்க்காமல் நிலத்தை நோக்குகிறாள். நான் அவளைப் பாராதிருக்கும்போது அவள் என்னைப் பார்த்து மகிழ்கிறாள்" என்று கூறுகிறான். இது எவ்வளவு பெரிய பொய் தெரியுமா?

"நான் அவளைப் பாராதிருக்கும்போது அவள் என்னைப் பார்த்து மகிழ்கிறாள்" என்கிறானே - இவன்தான் அவளைப் பார்ப்பதில்லையே; அப்படி இருக்கும்போது அவள் இவனைப் பார்ப்பது மட்டும் இவனுக்கு எப்படித் தெரிந்தது? அதேபோல் இவன் அவளைப் பார்க்கும்போது அவள் நிலத்தை நோக்குகிறாளாமே; அது எப்படி? இவனைப் பார்த்துவிட்டுத்தானே அவள் தனது பார்வையை வேறு பக்கம் திருப்ப வேண்டும்?

இந்தப் பார்வைக்குத்தான் 'பார்க்காமல் பார்க்கும் பார்வை' என்று பெயர் போலும்! இத்தகைய நிகழ்ச்சியால், வள்ளுவர் எதை விளக்குகிறார் தெரியுமா? காதலன் கூறும் பொய்யை மட்டுமல்ல; அவர்கள் கண்களை வேறு பக்கம் திருப்ப அவர்களே முயன்றாலும் அது முடியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள் என்பதைத்தான் சொல்லாமல் சொல்கிறார் செந்நாப் போதார். இதோ அந்தக் குறளோவியம் :

"யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்"

அதிகாரம் - 110 - குறிப்பறிதல்; பாடல்கள் - 1091, 1094

'மெல்ல நகும்' - உள்ளுக்குள் மகிழ்ச்சியடைவாள்.





"மலையொன்றைத் தலையில் தூக்கிக்கொண்டு நாடு முழுவதும் பவனி வருவேன்! இது என்னுடைய முதல் திட்டம்! வானத்தை வில்லாக வளைத்து அந்த வில்லுக்கேற்ற நாணாக மணலைக் கயிறாகத் திரித்துக் கட்டுவேன்! இது என்னுடைய இரண்டாவது திட்டம்! அடுத்தடுத்து இன்னும் பல அற்புதத் திட்டங்களை வைத்திருக்கிறேன். அவற்றைப் பின்னர் இந்த நாட்டு மக்களின் முன்னிலையில் நிறைவேற்றிக் காட்டுவேன்."

இவ்வாறு, பொதுமக்களின் மன்றத்தின் நடுவே தோள்தட்டி அறைகூவல் விடுத்தான் ஒரு வாலிபன். மக்கள் அவன் வார்த்தைகளை வாய்பிளந்தவாறு கேட்டு மயங்கிப் போயினர். இப்படி ஒரு வாலிபன் வீரம் பேசிக்கொண்டு திரிவது, மன்னரின் காதுக்கும் எட்டியது. அவனைக் கொலு மண்டபத்திற்கு அழைத்துவருமாறு ஆணை பிறப்பித்தார். பீடுநடை போட்டுக் கொலு மண்டபத்தில் நுழைந்த வாலிபனை மன்னர் அலட்சியப்படுத்தாமல், அவன் மக்களிடம் அறிவித்த திட்டங்கள் சாத்தியமானவைதானா? என்ற வினவினார்!

"இயலாதது என்று இவ்வுலகில் எதுவுமில்லை அரசே! நான் அறிவித்த திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றுவேன்" என்று, நிமிர்ந்து நின்று முழங்கினான் அந்த வாலிபன்.

"அப்படியானால், வீரமிக்க வாலிபனே! உன் முதல் திட்டத்தை என் எதிரில் செய்து காட்டுக! தயார்தானா?"

மன்னரின் இந்த ஆவல் ததும்பிய கேள்விக்கு, அவன் மிக்க அமைதியாகப் பதில் அளித்தான்.

"மன்னர் மன்னவா! எதற்கும் சில வசதி வாய்ப்புகள் வேண்டுமன்றோ? நான் நாட்டு மக்களிடமும், தங்களின் திருமுன்னும் கூறிய செயல்களை நிறைவேற்றியே தீருவேன். ஆனால் ஒன்று! நான் நெடுநாட்கள் பயணம் செய்து களைத்துப் போயிருக்கிறேன். தங்களுக்கு விருப்பமிருந்தால் அரண்மனை விருந்தினனாக ஓரிரு மாதங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். உடலில் வலிவு மிகுந்ததும், என்னுடைய முதல் திட்டமான மலையைத் தலையில் தூக்கும் காரியத்தைச் செய்து காட்டுகிறேன்."

மன்னர் மகிழ்ச்சியுடன் அவன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். "ஓரிரு மாதங்கள் என்ன; மூன்று மாதங்கள் முழுமையான காலம் எடுத்துக் கொள்க! அந்த மூன்று மாத காலமும் அரண்மனையில் உனக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்" எனக் கூறி அவனைத் தட்டிக் கொடுத்தார்.

வாலிபனின் வீரச்செயல்களைக் காண, பொதுமக்கள் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தனர்.

அவனுக்கு அரண்மனையில் உல்லாசமான வாழ்க்கை! உடலுக்கு வலிவு தரும் உணவு வகைகள்! உள்ளத்திற்குக் களிப்பூட்டும் பானங்கள்! கேட்டதெல்லாம் கிடைத்தது அவனுக்கு!

அவன் வெளியிட்ட திட்டங்களை நிறைவேற்றி விடுவானேயானால், அவனையே தனது படையின் தலைமைத் தளபதியாக நியமித்துக் கொள்ளப் போவதாக மன்னர், அமைச்சர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

மூன்று மாதங்கள் முடிவுற்றன. முதல் திட்டம், மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான நாள் அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் மலையடிவாரத்தில் கூடியது. மன்னரும், அமைச்சர் பெருமக்களும், அரண்மனை அலுவலாளரும் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்திருந்தனர். வாலிபன், வண்ண ரதமொன்றில் வந்து இறங்கினான். அவன் மேனி புதுப்பொலிவுடனும் வலிவுடனும் விளங்கியது. மூன்றுமாத கால அரண்மனை வாசத்தின் விளைவு அவன் உடற்கட்டில் நன்கு தெரிந்தது.

அவனைக் கண்ட மன்னரும் மக்களும் கையொலி செய்து வரவேற்றனர். முரசுகள் அதிர்ந்தன. இசைக் கருவிகள் ஒலித்தன. வாலிபன், தன் இரு கைகளையும் உயர்த்தினான். அனைத்து ஒலிகளும் நின்று அமைதி நிலவிற்று. அவன், மலையின் அடிவாரம் நோக்கிச் சென்றான். அனைவரது விழிகளும் இமைக்காமல், நடக்கப்போகும் நிகழ்ச்சியை உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

"நான் மலையைத் தலையில் தூக்கிக்கொண்டு நடக்கத் தயார்!" என்று கூவினான் அவன்! ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்!

ஆனால் நடந்தது என்ன? அவன் மலையைத் தூக்கவில்லை. திரும்பத் திரும்ப - "நான் மலையைத் தலையில் தூக்கிக்கொண்டு நடக்கத் தயார்" என்பதையே சொல்லிக் கொண்டிருந்தான். அந்தச் சொற்களையே கேட்டுக் கேட்டு அலுத்துவிட்ட அனைவரும் அவனை நெருங்கிச் சென்றனர்.

"ஏன், அதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய்? செய்து காட்டு!" என்று மன்னர் உரத்த குரலில் கூறினார்.

"மன்னா, மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடப்பதாகத்தான் சொன்னேன். அதை மறந்து விடாதீர்கள். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இப்போதே இந்த மலையை என் தலையில் தூக்கி வையுங்கள். அதைத் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் நடக்கிறேனா இல்லையா என்பதைப் பிறகு பாருங்கள்!" என்று, மிக்க அடக்கமாக வாலிபன் விளக்கம் கூறினான்.

"இவனைக் கைது செய்யுங்கள்" என்று மன்னர் உறுமினார், சிறுத்தை போல!

"என்னை இனிமேல் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் ஒன்று! நான் என் நண்பர்களிடமும், மனைவியிடமும் செய்த சபதத்தை நிறைவேற்றி விட்டேன். அதாவது அரண்மனையில் முக்கியமான விருந்தினனாக ஒரு மாதமாவது இருந்துவிட்டு வருகிறேன் என்று சபதம் செய்தேன். அது நிறைவேறிவிட்டது."

புன்முறுவல் முகத்தில் பூத்திட, அந்த வாலிபன் அச்சமின்றிப் பதில் அளித்தான்.

"அடே! அப்படியொரு ஆசையிருந்தால், உன்னால் செய்ய முடிந்ததைச் செய்து அதற்குப் பரிசாக அரண்மனையில் தின்று தொலைத்திருக்கலாமே?" என்று மன்னர் கடிந்து கொண்டார்.

"செய்யக்கூடியதைச் சொன்னால் அப்படிச் சொல்கிறவனை யார் மதிக்கிறார்கள் அரசே! அற்புதங்களைச் செய்து முடிப்பேன் என்று கூறினால்தான் ஆராதனைகள்! அன்பான வரவேற்புகள் அத்தனையும் கிடைக்கின்றன!"

வாலிபனின் பதிலைக்கேட்ட மன்னர் வெகுண்டெழுந்து,

"ஓகோ அதற்காகத்தான் எங்களை ஏமாற்றினாயா?"

என்று கர்ச்சித்தார்.

"அரசர்க்கரசே! நான் இந்த நாட்டுக்குள் நுழையும்போதே, இங்கு திருக்குறள் புழக்கத்தில் உள்ளதா? என்று விசாரித்தேன்! அரசரே அறியார் திருக்குறளை, எனக் கேள்வியுற்றதும் என் முயற்சியில் துணிவுடன் இறங்கினேன். திருக்குறளைப் படித்திருந்தால், தாங்களும் சரி, தங்கள் நாட்டு மக்களும் சரி, என் கூற்றினை ஒப்புக்கொண்டிருக்க மாட்டீர்கள்!"

இப்படி வாலிபன் பதில் அளித்தான்.

"அப்படியென்ன இருக்கிறது அந்தக் குறளில்?"


இது மன்னரின் கேள்வி!

வாலிபன் கூறிய குறள் இதுதான் :

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

ஒரு செயலைச் செய்து முடிப்பேன் என்று வாயளவில் கூறிவிடுவது யார்க்கும் மிக எளிது! ஆனால் சொல்லியவாறு அச் செயலை முடிப்பது எளிதானதல்ல; அரிதானதாகும் - என்பதே இந்தக் குறளுக்குப் பொருள்.

அதிகாரம் - 67 - வினைத்திட்பம்; பாடல் - 664



கடலின் முதலாவது

ஒரு நாள் கடற்கரையோரம் சென்று கொண்டிருந்தேன். ஒரு புதுமையான உருவம், கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வியப்பு மேலிட்டது எனக்கு! ஓர் ஆணைப் போலவோ அல்லது பெண்ணைப் போலவோ அந்த உருவம் இல்லை. பறவையினம் போலவும் தெரியவில்லை. விலங்கினமாகவும் தோன்றவில்லை. எப்படியும் இந்தப் புதிருக்கு விடை கண்டாக வேண்டுமென்ற அவா உந்தித் தள்ள, அந்த உருவத்தை நோக்கி வேகமாக நடந்தேன். அருகில் செல்லச் செல்ல அந்த உருவத்தின் முழுத் தோற்றப் பொலிவையும் என்னால் காண முடிந்தது. ஆலிலை போன்ற வடிவத்தில் உடல். தலையென்று தனியாக இல்லை. ஆலிலை வடிவத்திலேயே கண், காது, மூக்கு, வாய் என்ற முகத்துக்குரிய உறுப்புக்கள் இருந்தன. கொடி போன்ற இரண்டு கால்கள்; கொடி போலவே இரண்டு கைகள்! திகைத்து நின்றேன். அந்த உருவம் என்னைப் பார்த்தது; ஆனால் நிற்கவில்லை. என்னதான் செய்கிறது பார்ப்போம் என அமைதியாக அங்கேயே நான் நின்று கொண்டிருந்தேன். அந்த உருவம், திடீரெனத் தனது கைகளை விரித்துக் கடற்கரை மணலை அள்ளியது! அள்ளிய மணலைக் கடலில் கொண்டுபோய்ப் போட்டது! மீண்டும் மீண்டும் அதே காரியத்தைச் செய்து கொண்டிருந்தது. மணலையள்ளி விளையாடுகிறதுபோலும் என்று முதலில் எண்ணிய எனக்கு அந்த உருவத்தின் செயல், பெரும் பிரச்னையாகவே ஆகிவிட்டது! மணலை அள்ளுகிறது! கடலில் வீசுகிறது! சற்றுக் களைப்புற்று நிற்கிறது! மறுபடியும் மணலை அள்ளுகிறது! கடலில் தூவுகிறது.

துணிவை வரவழைத்துக் கொண்டு இன்னும் கொஞ்சம் நெருக்கமாகச் சென்றேன். உருவம், என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு மணலை அள்ளுவதற்குக் குனிந்தது.

"நீ யார்?"

இது என் கேள்வி!

"என்னைத் தெரியவில்லை? நான்தான் இதயம்!" என்றது அந்த உருவம்.

"ஓகோ! இதயமா? உனக்குக் கால் கை முளைத்து, கண்ணும் மூக்கும் வந்துவிட்டதா? சரி! சரி! நீ யாருடைய இதயம்? ஆண்பாலா? பெண்பாலா?"

"என் கொடி நிகர்க் கால் கைகளைப் பார்த்தாலே நான் பெண் இதயம் என்று புரியவில்லையா?"

எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது! ஒரு பெண்ணின் நெஞ்சம், ஏதோ வேதனையின் காரணமாக இப்படி வெளியே வந்திருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டேன். தொடர்ந்து கேள்வி கேட்டேன்.

"ஏ, பெண் நெஞ்சே! எதற்காக நீ மட்டும் தனியாக வந்திருக்கிறாய்?"

"இது என் தலைவியின் கட்டளை."

"தலைவி உன்னைத் தனியாக அனுப்பினாளோ? அனுப்பியது சரி! இந்த மணலையெடுத்துக் கடலில் போடச் சொன்னதும் உன் தலைவியின் கட்டளை தானோ?"

"ஆமாம்!"

"ஏன் இந்த வீண் வேலை உனக்கும், உன் தலைவிக்கும்?"

"என் தலைவி என்னைக் கூப்பிட்டாள். 'அடியே! என் நெஞ்சமே! நீ, உன் மீது அன்பு இல்லாதவரிடம் உன் மிகுந்த துன்பத்தையும், பிரிவின் வேதனையையும் சொல்லிப் பயன் கிடையாது. அதைவிட எளிதான வேலை, மணலை அள்ளிப் போட்டு ஆழ்கடலைத் தூர்ப்பதாகும்! எனவே அந்த வேலையைச் செய்' என்றாள். அதைத்தான் இப்போது செய்கிறேன்."

இந்தப் பதிலைக் கேட்டதும் என் தலை சுற்றியது. அடடா! அந்தத் தலைவியின் துயரம் எத்தகையது? காதலனிடம் தன் வேதனையைச் சொல்லி, அவனைத் தன்பால் அன்பு கொள்ளச் செய்வதைக் காட்டிலும் கடலைத் தூர்ப்பது எளிதாம்!


விழித்துக் கொண்டேன்.

கனவு என்பது புரிந்தது.

என் நெஞ்சின் மீது கிடந்த திருக்குறள் சுவடியை உற்று நோக்கினேன். எந்தக் குறள் என்னை இந்தக் கற்பனைக் கனவுக்கு அழைத்துச் சென்றதோ, அந்தக் குறளை மீண்டும் ஒரு முறை படித்தேன் :

"உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு"

அதிகாரம் - 120 - தனிப்படர் மிகுதி; பாடல் - 1200



சாலையில் பல்லக்கு ஒன்றைச் சிலர் தூக்கிக்கொண்டு நடந்தனர். பல்லக்கில் ஒருவர் சாய்ந்தவாறு, சாலையின் இருமருங்கிலுமுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தவாறு பயணம் நடத்திக்கொண்டிருந்தார். கழுத்து வலியெடுக்கவும் கால் கொப்பளிக்கவுமான நிலையில், பல்லக்குத் தூக்கிகள் தங்கள் பணியினை ஆற்றிக்கொண்டிருந்தனர்.

இரண்டு முதியவர்கள் இந்தக் காட்சியை ஒரு மண்டபத்தில் இருந்தவாறு கண்டனர். அவர்களில் ஒருவர் தமிழ் நூல்களை நிரம்பப் படித்தவர். அவர் சொன்னார்: "பார்த்தீரா? இதுதான் பாவம் செய்த ஜென்மத்திற்கும் புண்ணியம் செய்த ஜென்மத்திற்கும் சரியான எடுத்துக்காட்டாகும்" என்று! அவருடன் இருந்த முதியவர் "எப்படி? எப்படி?" என்று ஆவலுடன் கேட்டார். தமிழ் படித்த முதியவர் கூறினார் விளக்கமாக:

"திருக்குறளில் வள்ளுவர் இதுபற்றி மிகச் சிறப்பாகச் சித்திரித்துள்ளார். அறத்தினால் ஏற்படும் பயன் என்னவென்று நூல்களைக் கொண்டு ஆராயத் தேவையில்லை. பல்லக்கில் செல்பவனையும் பல்லக்குத் தூக்குபவனையும் பார்த்தாலே அவர்களில் அறஞ்செய்தது யார் என்று புரிந்துவிடும். ஒருவர் செய்த அறத்திற்கு ஏற்ப அவர் பல்லக்கில் ஏறுகிறார். அறம் செய்யாதோர் பல்லக்கைச் சுமக்கிறார்."

இவ்வாறு- படித்த முதியவர் விளக்கம் கூறிக் கொண்டிருந்தபோது, "என்னே, கொடுமை! என் குறளையே குழிதோண்டிப் புதைக்கிறீர்களே" என ஒரு குரல் கேட்டது. இரு முதியவர்களும் வியப்புடன் திரும்பிப் பார்த்தனர். வள்ளுவர் கண்கலங்க நின்று கொண்டிருந்தார். முதியவர்கள் அவருக்கு வணக்கம் தெரிவித்தனர்.

பதிலுக்கு வள்ளுவர் அவர்களை வணங்கிவிட்டு, "நான் எழுதிய குறளுக்கு இப்படி ஒரு பொருந்தாத உரை கண்டது யார் என்றே எனக்குத் தெரியவில்லையே! முதியவர்களே! பல்லக்குச் சுமப்போரையும் பல்லக்கில் செல்வோரையும் வைத்து நான் பாடிய குறளுக்கு நீங்கள் உரைத்தது சரியான பொருள் அல்ல. பல்லக்கில் ஏறியவன் அறச்செயல் புரிந்தவன் என்றோ, பல்லக்கைச் சுமப்பவன் தீச் செயல் புரிந்தவன் என்றோ நான் கருத்தறிவிக்கவில்லை. அது அறிவுக்கு ஒவ்வாத ஒன்றாகும். அற வழியில் நடப்பவர்கள் பல்லக்கில் செல்பவனைப் போல வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்கள் இரண்டையும் எளிதாகக் கருதிப் பயணத்தைத் தொடர்வர். தீய நெறிக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்களோ பல்லக்கைத் தூக்குகிறவர்களைப் போல இன்பத்திலும் அமைதி கொள்ளாமல் அதேசமயம் துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவமின்றி வாழ்வையே பெரும் சுமையாகக் கருதுவர். இவ்வாறு, அறச்செயலின் பயனுக்கு பல்லக்கில் செல்பவனையும் தூக்குபவனையும் உவமை காட்டினேனேயல்லாமல் அவரவர்களின் பாப புண்ணியங்களுக்கேற்ப பல்லக்குச் சுமப்போராகவும் பல்லக்கில் செல்வோராகவும் ஆகிறார்கள் என்று நான் குறிப்பிடவே இல்லை! என்னையும் என் குறளையும் உணர்ந்து கொள்ளாமல் தவறான எண்ணங்களை மக்களிடம் பரப்பாதீர்கள்" என்று உருக்கமுடன் கேட்டுக்கொண்டார்.


படித்த முதியவர், வள்ளுவரிடம் தன் செயலுக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டு- இனித் தன்னைத் திருத்திக் கொள்வதாகவும் கூறினார்.

"உம்மைத் திருத்திக்கொண்டால் மட்டும் போதாது. ஊரையும் திருத்துக" என உரைத்து வள்ளுவர் அவர்களிடம் விடைபெற்றுச் சென்றார். அதற்குள் பல்லக்கு, வெகு தொலைவுக்குச் சென்றுவிட்டது.

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"

அதிகாரம் - 4 - அறன் வலியுறுத்தல்; பாடல் - 37





சமயகுரவரின் குருபரம்பரை

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மூத்த மகன் செங்குட்டுவன்! இளைய மகன் இளங்கோ! ஒரு நாள் இமயவரம்பனின் கொலுமண்டபத்திற்கு வந்த நிமித்திகன் ஒருவன், செங்குட்டுவன் மூத்த மகன் எனினும் அவன் நாடாளும் வாய்ப்புக் கிடையாது என்றும் இளையவன் இளங்கோதான் முடி சூட்டிக்கொள்ள முடியுமென்றும் அழுத்தம் திருத்தமாக ஆரூடம் கணித்துச் சொன்னான். நிமித்திகனின் சொல்லைப் பொய்யாக்கிக் காட்டுகிறேன் என்று இளவரசன் இளங்கோ, அரண்மனையை விட்டு வெளியேறித் துறவுக்கோலம் பூண்டு குணவாயிற் கோட்டத்தில் இருந்தான்; செங்குட்டுவன் தங்கு தடையின்றி முடிசூடிக்கொள்ள வழிவகுத்துத் தந்தான்.

துறவுக் கோலத்தில் குணவாயிற் கோட்டத்தில் இருந்த இளங்கோ அடிகளை, இப்போது அவரது உற்ற நண்பர் ஒருவர் சந்திப்பதாகக் கற்பனை!

"என்ன இளங்கோ; இப்படிச் செய்துவிட்டாய்! கொடிபறக்கும் கொத்தளங்கொண்ட கோட்டையென்ன! முகில் தழுவ உயர்ந்து நிற்கும் கூட கோபுரமென்ன! அகிற்புகையால் மணங்கமழும் மாட மாளிகையென்ன! பாதம் நோகாமல் நடப்பதற்குப் பட்டு விரித்த தரைகள் என்ன! கூப்பிட்ட குரல் கேட்டுக் கும்பிட்டு ஓடிவரும் ஆள் அம்புப் பட்டாளமென்ன! நவமணிகள் பதித்த ஆடை அணிகலன்கள் என்ன! உனை நாயகனாக ஏற்க நயன மணிகள் போட்டியிட்டு நின்ற காட்சி என்ன! ஒப்பம் வைத்து உறவு கொண்ட சிற்றரசர்கள் கட்டும் கப்பம் என்ன! ஒய்யார வாழ்வு! உல்லாசபுரி! உற்சாக நாட்கள்! இத்தனையும் இழந்துவிட்டு இப்படி ஏதுமற்ற துறவுக்கோலத்தில் இருக்கிறாயே; இப்படியொரு துன்பத்தை நீயாக ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும்?"

உளம் நொந்து உருக்கமுடன் கேள்வி கேட்ட உற்ற நண்பருக்கு உடனடியாக விடையளித்தார் இளங்கோவடிகள்!

"நண்பரே! நீர் வர்ணித்த அத்தனை செல்வச் சிறப்புக்களையும்- நான் பெற்றிருந்தபோது, ஆகா! இத்துணை வளத்திற்கும் உரிமையுடையவனாக இருக்கின்ற பேறு பெற்றிருக்கிறேனேயென்றோ - அடடா இத்தனையும் பெற்றோமேயென்றோ - நான் ஒரு நொடிப்பொழுதுகூட எண்ணி அவற்றைக் காத்திட வேண்டுமென்று கருதியதில்லை! அப்படிக் கருதியிருந்தால்தான் அவற்றையெல்லாம் இழந்துவிட்டோமே என்ற துன்பம் துளைத்தெடுக்கும். நான் பெற்றிருந்த நிலையையும் - இழந்துவிட்ட நிலையையும் ஒன்றாகக் கருதுகிற காரணத்தினால் தான் - துன்பம் என் நெஞ்சைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை."

இளங்கோவடிகளின் விளக்கம் கேட்டு அவர் நண்பர், அவரது காலடி வீழ்ந்து வணங்க முயன்றார். அவரைத் தடுத்துத் தழுவிக்கொண்டு அன்பினைப் பொழிந்தார் அடிகள்!

இதோ குறளடிகள் :

"அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர்"

அதிகாரம் - 63 - இடுக்கண் அழியாமை; பாடல் - 626

அற்றேம் = இழந்தோம்
ஓம்புதல் தேற்றாதவர் = பாதுகாத்திட எண்ணாதவர்



வெள்ளிப் பாற்குடத்தின் வாய்போன்ற வட்டநிலா. அல்லிக்குளமோ என ஐயுறும் வண்ணம் நட்சத்திர வானம். அவைகளைப் பற்றியெல்லாம் தேனிசை மீட்டிவிட்டு, உலகத்தையே மறந்து அசைவற்று இருக்கின்றன அந்த நல் யாழ்கள் இரண்டும். அந்த உயிர் யாழ்களின் கனவுலகத்தைக் கலைத்துவிடக் கூடாதேயென்ற பயத்தோடு, மென்காற்று அவர்களைக் கீழ் ஸ்தாயியில் தாலாட்டுகிறது.

வானத்தில் உள்ள விண்மீன்களோ, பெரியதோர் குழப்பமான ஆராய்ச்சியில் இறங்கிக் கலங்கித் திரிகின்றன. என்ன அந்த ஆராய்ச்சி?

தாங்கள் எங்கேயிருக்கிறோம் - நிலவு எங்கேயிருக்கிறது என்பதுதான் அவைகளின் ஆராய்ச்சியாகும்.

வானத்திலே உள்ள கண்ணாடியில்தான் இவள் முகம் தெரிகிறதோ, அல்லது பூமியில் உள்ள கண்ணாடியில்தான் நிலவு தெரிகிறதோ என வியக்கும் அளவுக்கு, நிலா முகம் படைத்த பேரழகி அவள்! ஆகவேதான் அவளுக்கும் நிலவுக்கும் வேறுபாடு தெரியாமல் விண்மீன்கள் கலங்கித் திரிகின்றன. அதற்கு இதோ குறள்: :

> “மதியும் மடந்தை முகனும் அறியா
> பதியிற் கலங்கிய மீன்”

இப்படி விண்மீன்களுக்கே கலக்கத்தை உண்டு பண்ணிய அந்தக் கட்டழகியின் தோளிலே ஒருவன் மெய்மறந்து சாய்ந்து கிடக்கிறான் என்பதைக் காணும்போது, இளம் உள்ளங்களில் பொறாமைக் கீறல் விழத்தான் செய்யும்! ஆனால், வள்ளுவர் உள்ளமோ அறிவு மணக்கும் அழகான கேள்வியொன்றை எழுப்புகிறது.

தான் விரும்பும் காதலியின் மெல்லிய தோளில் சாய்ந்திருந்து துயிலும் துயில்போல் இனிமை வாய்ந்ததா அந்தத் தாமரைக் கண்ணன் உலகம்?


இல்லை, இல்லை!

இதோ, குறளோவியம் காணுங்கள் :

"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு"

அதிகாரம் - 112 - நலம் புனைந்துரைத்தல்; பாடல் - 1116

அதிகாரம் - 111 - புணர்ச்சி மகிழ்தல்; பாடல் - 1103





வள்ளுவரின் மாணவர் ஒரு நாள் வள்ளுவரிடம் ஒரு விளக்கம் கேட்டார். "வாள் போன்ற பகைவர்க்கு அஞ்சத் தேவையில்லை என்று குறள் தீட்டியிருக்கிறீர்களே; பகையை வாளுக்கு ஒப்பிடுவதற்குக் காரணம் என்ன? எத்தனையோ போர்க்

கருவிகள் இருக்கும்போது வாளை ஒப்பிட்டது எதற்காக?" இதுதான் அந்த மாணவர் கேட்ட விளக்கம். அதற்கு வள்ளுவர் விடை அளித்தார்.

"அன்ப! குறளை, ஒரு முறைக்கு இருமுறை ஆழமாகப் பாடித்துப் பார். நான் என்ன சொல்லுகிறேன் என்பது தெளிவாகும். வெளிப்படையாகத் தெரியும் பகையைவிட, மறைந்திருந்து உறவினரைப் போல நடித்துத் திடீரெனத் தாக்கும் உட்பகை மிகக் கொடிது என்பதையும், வெளிப்படையான பகைக்கு அஞ்சா விடினும் பரவாயில்லை, உட்பகைக்கு அஞ்சி எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதையுமே இந்தக் குறள் வாயிலாக வலியுறுத்துகிறேன்."

வள்ளுவரின் விளக்கத்தைக் கேட்ட மாணவர், மற்றொரு வினாவை எழுப்பினார்.

"பெரியீர்! வாள் கூடச் சில நேரங்களில் மட்டுந்தானே வெளிப்பட்டுக் காட்சி தருகிறது. எஞ்சிய நேரமெல்லாம் அது உறைக்குள்தானே ஒளிந்து கொண்டிருக்கிறது! இதை நோக்குமிடத்து, மறைந்திருந்து தாக்கும் பகையை வாளோடு ஒப்பிடுவதுதானே பொருந்தும்! வெளிப்படையான பகையை எவ்வாறு வாளோடு ஒப்பிடலாம்?"

புன்முறுவல் பூத்தவாறு வள்ளுவர் பதில் அளித்தார்.

"வாள் உறைக்குள் இருப்பினும், அது தன்னை முழுமையாக மறைத்துக் கொள்வதில்லை. வாளின் பெரிய பிடி, உறைக்கு வெளியேதான் தலையை நீட்டிக் கொண்டிருக்கும். வாளைப் போல அல்லாமல் தன்னை முழுவதுமாக மறைத்துக் கொண்டு, நண்பனாக உறவு கொண்டாடி, சமயம் பார்த்துத் தலையில் கல்லைத் தூக்கிப் போடக் கூடிய பகைவர்களும் இருக்கிறார்கள் என்பதற்காகவே, 'வாள்' போன்ற பகைவர்க்கு அஞ்சாவிட்டாலும், 'கேள்' போன்று தொடர்பு கொண்ட பகைவர்க்கு அஞ்ச வேண்டும், என்று குறிப்பிட்டுள்ளேன்."


வள்ளுவரின் பதில் மாணவரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

ஆம்! உறைக்குள் இருக்கிற வாளை உருவி நம் மீது வீசலாம்! அல்லது உறையிலிருந்து விடுபட்டுக் கரத்தில் பிடித்துள்ள வாளும் நம் மீது எந்த நேரத்திலும் பாயலாம்! அதனை முன் கூட்டியே அறிய முடியும் என்பதால் அஞ்சத் தேவையில்லை. ஆனால் நம்மவராகவே பழகி, நட்புறவு கொண்டு, நாசம் விளைக்க நேரம் பார்த்திருப்போரின் பகைக்குச் சிறிதும் இடம் தராமல், அந்தப் பகைக்கு அஞ்சி முன் கூட்டியே பாதுகாப்பாக இருத்தலே சிறப்புடையதாகும்.

அதை அழகுறச் சித்திரிப்பதே இந்தக் குறள்:

"வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு"

அதிகாரம் - 89 - உட்பகை; பாடல் - 882



தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

இந்தக் குறளுக்கு உரையெழுதிய பலரும் தவறான உரையே எழுதியிருக்கிறார்கள்.

"தன் கணவனுக்கு மேலான தெய்வம் ஒன்றில்லை என்ற எண்ணத்துடன் கணவனைத் தொழுது வணங்குகிறவள் பெய்யென்று கூறினால் மழை பெய்யும்."

இத்தகைய உரைகளும் இதனிலும் பிற்போக்கான கருத்தை விளைக்கும் உரைகளும் இந்தக் குறளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இந்தக் குறளுக்குத் தந்துள்ள உரைதான் பொருத்தமுடையது என அறிவுலகம் ஏற்க முடியும்.

"பெய்யெனப் பெய்யும் மழை" என்பதற்குப் பெய்ய வேண்டுமென்று சொன்ன மாத்திரத்தில் பெய்யக் கூடிய மழை என்றுதான் பொருள் கூறிட முடியும். கணவனே தன் தெய்வமெனக் கொண்டவள் மழையைப் போன்றவள். யாருக்கு? அவளது கணவனுக்கு அவள் மழை போன்றவள். அதுவும் எத்தகைய மழை? பெய்ய வேண்டுமென்று கூறிய மாத்திரத்தில் பெய்யக்கூடிய மழையைப் போன்றவள்.

கழனி, காய்ந்து கிடக்கிறது; கதிர், நீர் தேடி வாடுகிறது; அந்த நேரத்தில் உழவன் வான் நோக்கி நிற்கிறான்; மழை பொழியவில்லை - உழவன் வாடுகிறான் - வேதனைக் கீதம் பாடுகிறான் -

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

எல்லாம் வல்லதல்லவா மழை! அத்தகைய மழையின்றி மனிதன் வாழ முடியுமா? உலகத்தை உய்விக்கும் மழையை மகளிரோடு ஒப்பிடும் அழகே அழகு! அந்த அழகை - வள்ளுவர் தந்த மிக உயர்ந்த இடத்தை - உரை எழுதியோர் கெடுத்தனர்.

கழனிக்கு மழை தேவை என்று உழவன் நினைத்தபோது உடனே மழை பொழிந்துவிட்டால் - அந்த மழை எத்தனைக் குடும்பங்களின் நல்வாழ்த்தைப் பெறுகிறது! பெய்யெனப் பெய்யும் மழை, பெறுகிற புகழ்மாலைகள் எண்ணிலடங்கா!

அதுபோன்றவளாம், கணவனையே தெய்வமாகக் கருதும் பெண்! அந்தக் கருத்தைத்தான் வள்ளுவர் வண்ணத் தமிழிலே குழைத்துத் தருகிறார்- மீண்டும் ஒருமுறை படியுங்கள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

அதிகாரம் - 2 - வான்சிறப்பு; பாடல் - 15

அதிகாரம் - 6 - வாழ்க்கைத் துணை நலம்; பாடல் - 55





போர்க்களக் காட்சிகளையும் போருக்குப் புறப்படும் வேந்தர்கள் உரைத்திடும் சூளுரைகளையும் தமிழ் இலக்கியம் சிறப்பாகக் கூறும்.

'போரில் தோற்றுவிடுவேனாயின் புலவர்கள் என்னைப் பாடாது போகட்டும்' என்றும் 'என் நாட்டு மக்கள் என்னைக் கொடுங்கோலன் என்று இழித்துரைக் கட்டும்' என்றும் முழங்கியவாறு களம் புகுந்தனர் நாட்டுடைத் தலைவர்கள் என்று, தமிழர் வரலாறு கூறுகிறது.

"என் மகன் களம் சென்றுளான். அந்தப் புலி வாழ்ந்த குகை இதோ இருக்கிறது" என்று, தன் மகனைச் சுமந்திருந்த வயிற்றைக் காட்டினாளாம் வீரத் தாயொருத்தி.

"மன்னனைத் தொடர்ந்து சென்றுள்ள வீரர் அணிவகுப்பில், என் மகன் மீது மன்னன் தனியன்பு காட்டுகிறான் என்பதறிந்து மகிழ்கிறேன். எனினும் இன்னும் என் மகன் போரில் விழுப்புண் பெற்றுக் களம்பட்டான் என்ற செய்தி எனக்குக் கிடைக்கவில்லையே; அப்படிக் கிடைத்தால் அல்லவா - அவன் மன்னனையும் இந்த மண்ணையும் உயிரெனப் போற்றுகிறான் என்பது உண்மையாகும்?" என்ற கருத்துப்படக் கதறுகிறாளாம் இன்னொரு வீரத் திருமகள்!

காவா நாவிற் கனகனும் விசயனும் தமிழ் மன்னர்களை இகழ்ந்துரைத்தார்கள் எனக் கேள்வியுற்று வடபுலம் சென்று, அவர்களை வென்று, அவர்தம் முடியினில் கல்லேற்றி வந்து கண்ணகிக்குச் சிலையெடுத்தான் சேரமன்னன்.

இலங்கையை வென்றனர்; கடாரம் வரை சென்று வெற்றிக்கொடி நாட்டினர் - சோழ மன்னர்கள்.

இளந்தளிரென இருந்த பாண்டியனோ போர்முரசு கேட்டவுடன் அரிமா எனக் கிளம்பி, ஒரே களத்தில் பல அரசர்களை மோதி வென்றான்.

இவையனைத்தும் தமிழகத்தின் கடந்தகால வீர வரலாற்றுக் கருவூலங்கள்!

'பாய்ந்துவரும் வேலைக் கண்டு இமை கொட்டினால்கூட அது வீரத்திற்கு இழுக்காகும்' எனக் கொள்ளப்பட்டது.

இரு வீரர்கள் பேசிக் கொண்டார்களாம். இருவரும் இரண்டு பகை நாட்டைச் சேர்ந்தவர்கள்.

ஒரு வீரன் : எமது மன்னர் முதுகில் உமது மன்னரின் வாள் பாய்ந்திட முடியாது!

இன்னொரு வீரன் : ஆம்! உண்மைதான்! புறங்காட்டி ஓடுபவர்மீது எமது மன்னர் வாள் வீசிப் பழக்கமில்லை.

தங்களின் தலைவர்களாம் மன்னர்களைத் தமிழ் வீரர்கள் எவ்வாறு பற்றுக் கொண்டு மதித்தார்கள் என்பதற்கு இந்த உரையாடல் எடுத்துக்காட்டாக அமைகிறதல்லவா?

'எமனே கோபமுற்று எதிர்த்து வந்தால்கூட ஒன்றுகூடி எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதுதான் சிறந்த படையாகும்' என ஒரு குறள் வாயிலாகக் கூறும் வள்ளுவர், அந்தப் படையின் வீரர்கள் எத்தகையோராக இருக்க வேண்டுமென்றும் வரையறுத்துக் காட்டுகிறார்.

மறம், மானம், மாண்ட வழிச்செலவு, தேற்றம் என்ற நான்கு சிறப்புப் பண்புகளும் உடைய வீரர்கள் கொண்டதே படைக்குப் பெருமை தருவதாகும் என அறுதியிட்டுக் கூறுகிறார்.

வீரம், நாவிலே நர்த்தனமாடிப் பயனில்லை. அது களத்திலே நிர்ணயிக்கப் படக்கூடிய ஒன்று. அத்தகைய வீரமுடையவர்களே படையில் இருந்திட வேண்டும்!

அதன் தொடர்பாகத்தான் மானமும் வீரர்க்கு வலியுறுத்தப் பெறுகிறது. பகைவனின் காலைவிடச் சாவின் வாய் சிறந்தது என்ற உறுதிப்பாட்டுடன் எழுந்து நிற்பதே மான உணர்வு!

அதேபோன்று வீரமும் மானமுங்கொண்ட வரலாற்றுக்குரியவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டவர்களின் வழியைப் பின்பற்றுகிற ஆசையும் பின் பற்றும் பண்பும் படை வீரர்க்குத் தேவை.


இந்த மூன்று சிறப்பியல்புகளுடன், படைத்தலைவனின் நம்பிக்கைக்குரிய வராகவும் திகழ்ந்திட வேண்டும்.

புறப்பாடல் இலக்கியத்தில் காணப்பெறும் இந்த நான்கு பண்புகளையும் ஒரு படைக்குரிய சிறப்பாக வள்ளுவர் வகுத்திருப்பது, எக்காலத்திற்கும் - எத்தகைய போர்முறைக்கும் பொருந்தும்.

இதோ அந்தக் குறள் :

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

அதிகாரம் - 77 - படைமாட்சி; பாடல் - 766



கொடி இடையாள் ஒருத்திக்குத் தொடியொடு தோள் நெகிழ்கிறது. ஆம், வளையல்கள் கழன்று தோள்களும் மெலிவடைகின்றன. காதலன் பெருமையே, பிரிந்திருக்கும் வேளையில்தான் தெரிகிறது. நிழலின் அருமையை நிழலில் உணர்வதைவிட வெயிலில்தானே அதிகமாக உணர முடிகிறது. அந்த அருமையை உணரும் நிலைமை அவளுக்கு ஏற்பட்டுவிடுகிறது. பொட்டு வைத்தது, தொட்டு இழுத்தது, கட்டித் தழுவியது, பட்டு நிகர் மேனியெங்கும் இதழ் முத்திரை பதித்தது,

கொஞ்சியது, குலாவியது, அவள் மிஞ்சியது, அவன் கெஞ்சியது - அனைத்தும் நெஞ்சில் நிழலாட, அவள் சோகத்தைப் போர்த்திக் கொண்டு சுருண்டு கிடக்கிறாள், காதல் உணர்வெனும் வாடைக்காற்று தாங்காமல்! அந்த வேதனையால் உடல் இளைத்துத் தோள் மெலிந்து வளையல்களும் கழன்று விழுகின்றன.

"தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து."

அவள் மெலிந்து கிடப்பது கண்டு ஊரார் வருந்துகின்றனர்; உறவினர் வாட்டமுறு கின்றனர்; தோழிகளும் அவளின் துன்பத்தில் பங்கு பெறுகின்றனர். எனவே அவர்கள் அனைவரும் அவளுடைய காதலனைக் "கொடியவன்" என்று கூறுகின்றனர். "பிரிவுத்துயர் தாங்காமல் இந்தப் பெண் இப்படி இளைத்துப் போய் விட்டாளே! இந்தத் துயரத்தை இவளுக்கு அளித்த இவள் காதலன் கொடியவனன்றோ!" எனப் பேசுகின்றனர். "அய்யோ! அவரின்றி என் மேனி மெலிந்திடுவது கண்டு அவரைக் கொடியவர் எனக் கூறுகிறார்களே!" என்று அந்தக் கோலமயில் வருந்துகிறாள். அவள் வருத்தம் அத்துடன் முடிவுரையை எழுதிக் கொள்கிறதா? அதுதான் இல்லை!

"என் கண்களே! கயல்கள் என அவரால் புகழப்படும் என் ஆசைக் கண்களே! நான் யாசிப்பது உங்களுக்குப் புரியவில்லையா? அவரை நீங்கள் தேடித் தேடி அலைந்து என்னை, மழையின்றி வயலில் வாடிக் கிடக்கும் பயிராக ஆக்கியது போதும்! தயை செய்து நான் உங்கள்முன் வைக்கும் முறையீட்டைக் கேளுங்கள்! கனவிலாவது என் காதலர் தோன்றுவாரேயானால், அவரிடம், 'நான் எப்படி உயிரோடிருக்கிறேன்' என்ற செய்தியைச் சொல்லுவேன். 'நனவில் வந்து அன்பு காட்டாத அத்தானே! உம்மைக் கனவில் காண்பதால்தான் என் உயிர் இன்னும் நிலைத்திருக்கிறது' என்று அவருக்குத் தெரிவிப்பேன்."

"நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர்."


"அந்தக் கனவு வந்தால்தானே, நான் இந்தச் செய்தியையாவது அவருக்குக் கூறமுடியும். அந்தக் கனவும் வராமல் இருப்பதற்கு யார் காரணம்? கண்களே! நீங்கள்தான் காரணம்! நான் வேண்டுவதுபோல நீங்கள் தூங்கிவிடுவீர்களே யானால், அப்போது கனவு வரும்! கனவில் காதலர் வருவார்! நான் உயிரோடிருக்கும் காரணத்தை அவருக்குச் சொல்வேன். எனவேதான் உங்களிடம் கெஞ்சிக் கேட்கிறேன், அருள்கூர்ந்து தூங்கிடுக என்று!"

இப்படிப் புழுவெனத் துடித்திடும் பூங்கோதையைத்தான் 'உறுப்பு நலன் அழிதல்' எனும் அதிகாரத்திலும் 'கனவு நிலை உரைத்தல்' எனும் அதிகாரத்திலும் வள்ளுவர் நமக்குக் காட்சிப்படுத்துகின்றார்.

"கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன்."

அதிகாரம் - 124 - உறுப்பு நலனழிதல்; பாடல் - 1236

அதிகாரம் - 122 - கனவு நிலையுரைத்தல்;பாடல்கள் - 1213, 1212



திருநாட்டை வெற்றிகொள்ளப் பக்கத்து நாட்டுப் பகைவர்கள் போர் தொடுக்காத நேரமே இல்லை என்று கூறலாம். எந்த நேரமும் எதிரிகளின் தாக்குதல் களைச் சந்திக்கத் திருநாடு போர்க்கோலத்துடனேயே காட்சியளித்துக் கொண்டி ருந்தது. பிற நாடுகளின் எல்லைக்கோட்டை அழிப்பதிலோ, அந்நாடுகளுக்குரிய சிற்றூர்களில் ஒன்றைக் கவர்வதிலோகூடத் திருநாட்டுக்கு எண்ணம் உதித்ததில்லை. அப்படியிருந்தும்கூடப் பகைவர்களின் மோதல்களை அடிக்கடி சமாளிக்க வேண்டிய தவிர்க்கவொண்ணாத சூழ்நிலை, திருநாட்டுக்கு ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது.

திருநாட்டின் பயிர் பச்சைகள் அழியும், வகைப்படுத்தப்பட்ட வாய்க்கால்கள் சேதமுறும், எல்லைப்புறத்து அரண்கள் பழுதாகும், போர்வீரர் பலரை பலிகொடுக்க வேண்டியிருக்கும். இவ்வாறு அடிக்கடி மூண்டெழுந்த போரினால், திருநாடு அல்லலுற்றது என்றாலும் அத்தனைப் படையெடுப்புக்களுக்குப் பிறகும்கூட அந்நாடு செழுமையாகவே திகழ்ந்தது. பசித்தழும் மக்கள் யாரையும் அங்கு காணமுடியாது. புன்னகை தவழும் மகளிரும் தோள்வலி கொண்ட காளையரும் மகிழ்ந்தாடும் இன்பச் சோலையாகவே இருந்தது திருநாடு!

இளஞ்சிறார்க்கு அறிவாரக் கல்வி கிடைத்தது. உழவர் பெருமக்கள், உவகையுடன் தம் பணியில் ஈடுபட்டனர். வணிகர்கள், கலை பயின்றோர், சிற்பிகள், ஓவியர்கள்

அனைவருமே குறையேதுமின்றி நிறை வாழ்வு நடத்தினர். போர்கள் பலவற்றைச் சந்தித்த நாடு எனினும், ஒரு போராட்டம் முடிந்தவுடன் அந்தப் போரின் வடுக்கள் தெரியாத அளவுக்கு அழிக்கப்பட்டு, மக்களுக்குப் புது வாழ்வு தருகின்ற அரும்பணியினை அந்த அரசு மேற்கொண்டது. எதிரிகளைத் தடுக்கும் கேடயமாகவும் அதே சமயத்தில் குடிமக்களின் துன்ப துயரங்களை வீழ்த்துகின்ற வாளாகவும் திருநாட்டின் அரசு செயல்பட்டது. மக்களின் முறையீடுகளை அவ்வப்போது ஆராய்ந்து உரிய நேரத்தில் அவர்களுக்கு ஆவன செய்து, குறைகளைப் போக்கிடும் அரசாக இருந்த காரணத்தால்தான், எத்தனை படையெடுப்புகளானாலும் அவற்றைத் தாங்கிக்கொண்டு நாடு கெடாமல் பார்த்துக்கொள்ள முடிந்தது.


இதோ இன்னொரு நாடு! இதன் பெயர் வளநாடு. பெயர்தான் வளநாடு, இங்கு நிலத்திலே வளமும் இல்லை, மக்கள் வாழ்விலே இன்பமும் இல்லை. மக்களுக்கென்று வளநாட்டு அரசால் உருவாக்கப்படும் திட்டங்கள் எதுவும் அவற்றுக்குரிய பயனைத் தரவே இல்லை. இத்தனைக்கும் பகைவர்களின் தொல்லை துளிகூட இல்லை வளநாட்டுக்கு! எனினும் வளமிழந்து கிடக்கிறதே! என்ன காரணம்? அகன்றதோர் ஆறு இரு புறமும் கரைபுரண்டு ஓடத்தான் செய்கிறது வள நாட்டில்! நெல், கரும்பு, வாழை, கமுகு எனச் செல்வம் பெருக்கும் வகையில் வளம் நிறைந்த நாடுதான் வளநாடு. ஆனாலுங்கூட அந்த வயல்களும் தோட்டங்களும் வகைப்படுத்தப் பெறாத காரணத்தால் முழுமையான பயன்களை வழங்கிடவில்லை. மக்கள் தமக்குற்ற குறைகளைநாடி வந்து கேட்பதற்கோ, அல்லது அவர்பால் ஓடிவந்து களைவதற்கோ வளநாட்டு அரசுக்கு அக்கறையே எழுந்ததில்லை.

திங்களுக்கொரு படையெடுப்பைத் தடுத்து நிறுத்திடவேண்டிய தொல்லைக்குத் திருநாடு ஈடு கொடுத்ததோடு, மக்களின் குறைகளையும் நாடிச்சென்று அவற்றைப் போக்கிடும் செயலிலும் இடையறாது ஈடுபட்டது.

ஆனால் வளநாட்டு அரசோ, தன் நாட்டில் நிகழும் தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அதற்கேற்ற முறைமையைச் செய்யாத அரசாக இருந்து, நாட்டைக் காடாக்கிக்கொண்டு விளங்கியது. ஓர் அரசால் மக்களுக்குப் பயன் விளையாவிட்டால், அந்த அரசு தன் நாட்டின் பகுதிகளை நாள்தோறும் இழந்து வருவதாகத் தான் கூறவேண்டும் - ஆம்; அதைத்தான் வள்ளுவர் அழகுபடச் சொல்லுகிறார்.

> "நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
> நாடொறும் நாடு கெடும்."

அதிகாரம் - 56 - கொடுங்கோன்மை; பாடல் - 553



கருவேலம்பூ

வயலோரத்துக் களத்தில் வசந்தப் பறவைகள்போல அந்த உழவர் குலத்துப் பெண்கள், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்ற மொழிக்கேற்ப, முறங்களைக் கைகளில் ஏந்தி நெல்மணிகளைத் தூற்றிக் கொண்டிருந்தனர். நல்ல நெல்மணிகள் குவியல் குவியல்களாக உயர்ந்தன. பதர்களும் வேறு பகுதியில் சேர்ந்தன. களத்துமேட்டு வேலை சுறுசுறுப்புடன் நடைபெறுவதைக் கவனித்தவாறு ஒரு கருங்கல் மேட்டின்மீது அமர்ந்திருந்தார் கழனிக்குரியவர். கார்மேகம் அவரது பெயர். தனது பண்ணையில் உழைத்திடும் பெண்களைத் தன் மகள்களைப் போலக் கருதுபவர். அவர்தம் பணி முடிந்ததும் அவர்களுக்கான ஊதியத்தை நெல்மணிகளாகவே மரக்காலில் அளந்து கொடுக்கத் தொடங்கினார்.

"இன்றைக்குத் தூற்றியதில் பதர் குறைவுதான்" என்றவாறு புன்னகை ததும்ப ஒரு பெண் - பெயர் பூவழகி - தன் கைகளில் அள்ளியிருந்த பதரைக் கார்மேகத் திடம் காட்டினாள். அவரும் மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டே அவளைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்!

"அம்மா! பூவழகி! தானியங்களில் பதரை எளிதாகக் கண்டுபிடித்து ஒதுக்கி விடுகிறோம். ஆனால், மக்களுக்கிடையிலும் பதர்கள் இருக்கிறார்களே, அவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?"

பூவழகி மட்டுமல்ல - அவளுடன் சேர்ந்து வேலை பார்த்த எல்லாப் பெண்களுமே திகைத்து நின்றனர். அப்போது கார்மேகத்தின் மருமகன் கண்ணாயிரம் என்பான் அங்கே வந்தான். அவனைக் கண்டதும் பெண்கள் ஓரமாக ஒதுங்கிக் கொண்டனர்.

"என்ன; சிட்டுக்குருவிகள் - என்ன சொல்கின்றன? எனது மாமனாருக்கு வாய்ப்பு என்றால் வாய்ப்புத்தான்! எப்போதும் இளம் புறாக்கள் சூழ - அடடா! இந்தக் களத்து மேட்டில் ஒரே களியாட்டம்தான்!"

கண்ணாயிரம் இப்படிச் சொன்னதும், கார்மேகம் வெகுண்டார்!

"ஏய்! இப்படியெல்லாம் பேசாதே! எல்லோரும் நான் பெற்ற பெண்களைப் போல!"

கண்ணாயிரம் அதைக் கேட்டு உரக்கச் சிரித்தான்.

"என்ன மாமனாரே; உலகம் தெரியாமல் பேசுகிறீர்கள்! இவர்களில் நீங்கள் யாரைத் தொட்டாலும் துவளுவார்கள்! என்ன கிள்ளைகளா! நான் சொல்வது சரிதானே?"

அதுவரையில் பொறுமையாக நின்றிருந்த அந்த மகளிர் கூட்டத்திலிருந்து பூவழகி புயல்போலப் புறப்பட்டுக் கார்மேகத்தின் எதிர்வந்து நின்றாள்.

"அய்யா! மக்களில் பதர்களை எப்படிக் கண்டுபிடிப்பது என்று கேட்டீர்களே! அதற்கு அலையத் தேவையில்லை - இதோ இந்த உருவம்தான் மக்களில் பதர்!"

என்று சீற்றம் பொங்கச் சத்தமிட்டாள்!

"ஆம்; பூவழகி! பயனில்லாத சொற்களையே சொல்லிக் கொண்டிருக்கிற ஒருவனை மனிதன் என்றே சொல்லக் கூடாது! மனிதர்களில் பதர் என்றுதான் சொல்லவேண்டுமென வள்ளுவரே கூறியிருக்கிறார்!"

என்று கார்மேகம் விளக்கமளித்தார்!


"அடடா! சிட்டுக்குருவியின் பேச்சு, கிழவருக்குத் தினைமாவுப் பிட்டுப் போல் இனிக்கிறது"

என்று கூறிக்கொண்டே கண்ணாயிரம் அங்கிருந்து அகன்றான்; தன்னை "மக்கட் பதடி" என்று நிரூபித்துக் கொண்டு!

"பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல்"

அதிகாரம் - 20 - பயனில சொல்லாமை; பாடல் - 196

பதடி = பதர் மகன் = மனிதன்



"அமைச்சரே! நமது எல்லைக் கோட்டையில், கொள்ளைக்காரர்களைப் போல புகுந்து கொடிமரத்தை வெட்டியெறிந்தும், எல்லைக் காவலர்களைக் கவர்ந்து சென்றும், நமது நாட்டுக் கலாசாரத்தின் அடையாளமாக விளங்கிக் கொண்டிருந்த சிற்பக்கூடத்தை நாசம் செய்தும், நம்மைப் பெரும் அவமானத்திற்கு ஆளாக்கிவிட்ட பகை மன்னன் படைகொண்டு வரப்போகிறானாம், நமது நாட்டையும் கைப்பற்றி ஆள்வதற்கு! இதோ வந்திருக்கிறது ஓலை! இதுபற்றி நாம் எடுக்கவேண்டிய முடிவுபற்றி உடனடியாக உமது கருத்தைக் கூறுக!"

அரசனின் ஆலோசனை மண்டபத்தில், இப்படியொரு பணியை அமைச்சருக்கு அளித்தான் மன்னவன். அமைச்சர், மௌனமாகக் காட்சி தந்தார். அவரது சிந்தனை நீண்டு கொண்டிருப்பதைக் கண்ட தளபதி, மன்னனை நோக்கிக் கூறினான்.

"அரசே! சித்திரைத் திருநாள் விழாக் கொண்டாடி நமது வீரர்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்த வேளையில் இந்த ஆர்ப்பாட்டங்களைப் பகைநாட்டு மன்னன் நடத்தியிருக்கிறான். நமது கொடிக்கம்பத்தை வீழ்த்துவது என்பது தாங்கமுடியாத அவமானம். அவன் மீண்டும் படையெடுத்து வருகிறான் என்றால், இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? நமது படைகளைத் திரட்டி அவனை எதிர்கொண்டு தாக்க வேண்டியதுதான். இந்தப் போரில் நாம் அனைவருமே அழிய நேரிட்டாலும் நமது மண்ணின் மானம் காப்பாற்றப்படுமல்லவா?"

தளபதியின் வீர உரைக்கிடையே அமைச்சர் குறுக்கிட்டார்.

"நன்று, நன்று தளபதியாரே! அரசர் அழிவதற்கா யோசனை கேட்கிறார்? அல்ல! அல்ல! நாமும் நாடும் வாழ்வதற்கு! நமது ஆட்சி தொடர்வதற்கல்லவா யோசனை கேட்கிறார்? வீரங் கொப்பளிக்கும் உமது வார்த்தைகளும் செயல்களும் நமது மானத்தைக் காப்பாற்றும். ஆனால், நமது மணிமுடியைக் காப்பாற்றுமா? எனவே, உமது பேச்சை நிறுத்தும். அரசே! நான் கூறும் வழியே சிறந்த வழி. பகை மன்னனுக்குக் கோபமெல்லாம் தங்கள் மீதுதான். அந்தக் கோபத்தைத் தணிக்க ஒரேவழி தாங்கள் முடிதுறந்து விடுவதுதான். முடிதுறந்தால், இந்த ஆட்சிப்பொறுப்பை யார் ஏற்பது என்ற கேள்வி எழும். நியாயமான கேள்விதான். இடைக்கால ஏற்பாடாக நான் வேண்டுமானால் இந்தச் சுமையை என் தோளில் சிரமம் பாராமல் தாங்குகிறேன். இப்படி ஒரு முடிவினை எடுத்தால், பகை மன்னன் நம்முடன் நட்பாக இருக்கவும் தயாராக இருப்பதாகச் சொல்லியனுப்பியுள்ளான்."

அமைச்சர் பேச்சை முடிக்கவில்லை; தளபதி, தன் இளம் மீசை துடிக்க எழுந்து நின்று, எக்காளக் குரல் எழுப்பினான்.

"மன்னவா! நான் மறைத்து வைத்துள்ள ரகசியத்தை இப்போது சொல்லியே தீரவேண்டும், இந்த நாடு வாழ! நமது அமைச்சர், பகை மன்னனோடு நீண்டநாள் உறவு கொண்டிருப்பவர். இவரும், அவனும் கூடி வகுத்த திட்டமே நமது கொடிமரத்தின் மீது தாக்குதல். இதோ, இந்த அமைச்சர் பெருமான் பகைவனுக்கு எழுதிய சதிக் கடிதம். நமது ஒற்றர்கள் மூலமாகக் கைப்பற்றப்பட்டுள்ளது. படித்துப் பாருங்கள்!" மடலைப் பார்த்துவிட்டு மன்னன் திகைத்துப் போனான். வியப்புற்றான். வியர்த்துக் கொட்டியது உடலெங்கும்.

"ஆகா! இப்படித் தவறானதும் ஆபத்தானதுமான வழியை எண்ணிக் கூறுகிற அமைச்சரைவிட, எழுபது கோடிப் பகைவர் என் பக்கத்திலே இருந்தாலும் பரவாயில்லை. அந்தப் பகைவர்களால் நன்மையே ஏற்படும். பழுதெண்ணும் மந்திரியைவிட அவர்கள் எவ்வளவோ மேலானவர்கள்" என்று கூச்சலிட்டான் மன்னன். அதற்கு இதோ குறள் :

"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்."

அதிகாரம் - 64 - அமைச்சு; பாடல் - 639



"காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று."

குவளை மலர்களுக்கு மட்டும் கண்கள் இருக்குமேயானால், அந்தக் கோமளவல்லியின் கண்களைக் கண்டு, "அய்யோ! நாம், அவள் விழிகளைப்போல அவ்வளவு அழகாக இல்லையே" என்று தலைகவிழ்ந்து பூமியை நோக்குமாம்; அத்தகைய விழியழகி அவள்.

மென்மை நிறைந்த அனிச்ச மலர்களைக் காம்பு களையாமல் சூடிக் கொண்டாளாம். அந்தக் காம்பின் கனம் தாங்காமல், அவளது இடை நொந்து வருந்தியதாம்.

வானத்து வெள்ளி மீன்கள், திங்களையும் அந்த வடிவழகியின் வதனத்தையும் கண்டு, 'எது திங்கள்? எது அவள்?' - எனக் கலங்கித் திரிந்தனவாம்! அன்னப் பறவையின் இறகு அவளது பாதங்களில் படும்போது, நெருஞ்சிப்பழம் தைப்பது போலிருக்குமாம் - அத்தகைய பட்டு ரோஜாப் பாதங்கள் அவளுக்கு!

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்."

அதிகாரம் - 112 - நலம்புனைந்துரைத்தல்;பாடல்கள் - 1114, 1120

அழகின் இலக்கணமாகத் திகழும் அவளைத் தன் கண்களிலேயே குடிவைக்க விரும்புகிறான் ஒரு குமரன். விழிவீட்டில் இருப்பவரை வெளியேற்றி விட்டல்லவா எழிலரசிக்கு இடம்தர வேண்டும்? ஆகவே 'கண்ணகத்'தில் குடிக்கூலிக்கு வசிக்கும் ஆளிடம் போய், "தயவுசெய்து நீ வீட்டைக் காலி செய்துவிடு" என்று கெஞ்சுகிறான்.

வள்ளுவர் நடையில் அதைக் கேளுங்கள்.


"என் கண்ணின் கருமணியில் உள்ள பாவையே! யான் விரும்புகின்ற இந்த அழகிக்கு என் கண்ணில் இருக்க இடமில்லை - ஆகவே நீ வெளியேறிவிடு!"

பார்வை தரும் பாவையைப் போகச் சொல்லிவிட்டு, முத்துக்கோவை தரும் பாவைக்குக் கண்ணில் இடமளிக்க விரும்புகிறான். அதற்குக் குறள் :

"கருமணியிற் பாவாய்நீ போதா யாம்வீழும்
திருநுதற்கு இல்லை இடம்."

அதிகாரம் - 113 - காதற் சிறப்புரைத்தல்; பாடல் - 1123





வழிப்பறிக் கொள்ளையடித்துக் கொலைகள் செய்து காடுகளில் திரிந்து கொண்டிருந்த இரட்சன், இராமாயணம் பாடும் வால்மீகியாக ஆனான் என்று அவனது வாழ்க்கைத் திருப்பத்தை வியந்து பாராட்டுவோர் உண்டு; கண்டிருக்கிறோம். இதோ ஒரு வீரன்; இளைய தலைமுறையின் விடிவெள்ளியாக விளங்குகிறான். விடுதலைக் கனலாக ஒளி பொழிகிறான். ஆனால், இப்போது அவன் சிறைப் பறவை! விரைவில் அந்தச் சுதந்திரப் பறவையின் உயிரைக் குடிக்க மரணமேடை தயாராகிக் கொண்டிருக்கிறது.

எதிரிகளின் நாட்டில் போய்ச் சிக்கிக் கொண்டான். பகைவனின் கோட்டைக்குள்ளேயே பாசறை அமைக்கவேண்டும் என்பதற்காகவே, அவன் அந்தக் கோட்டைக்குள் போகத் துடித்தான். தொலைவில் இருந்தே அணியினைத் திரட்டுவோம் என்ற கருத்துக்கள் சொல்லப்பட்டபோது, அவற்றையெல்லாம் புறக்கணித்துத் தன்னை எதிரியின் கோட்டைக்குள்ளேயே அனுப்பிவைக்க வேண்டுமென்று அவனது தோழர்களைக் கேட்டுக் கொண்டான். அவன் விருப்பம்போல் அனுப்பி வைக்கப்பட்டான்.

எட்டாண்டுக் காலம் தனது உற்ற தளபதிகளுடன் ஒத்துழைத்து ஓயாது பணியாற்றிப் பெரும்படை திரட்டிப் பகைக் கோட்டையைக் கைப்பற்றத் தயாரானபோது திடீரெனப் பிடிபட்டான். பகைவர்க்குக் கொண்டாட்டம்; அவன்மீது பொய்ப்பழி சுமத்தி மரணதண்டனை விதித்தனர். அந்தத் தீர்ப்புக் கேட்டு அவன் புன்னகை புரிந்தான்; தித்திப்பான செய்தி என்றான்; செவிகளில் தேன் பாய்கிறது என்றான்.

ஆனால், அவனது இனத்தார் அவன் அநியாயமாகப் பலியாவதை விரும்பவில்லை. விழிகளில் நீர் வழிந்தோடப் பேரவையொன்றினைக் கூட்டினர். அவன் உயிர் பிழைத்து மீள வேண்டுமென உண்மையாக எண்ணியவர்கள் எல்லாம், அவன் ஏன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதையும் - அவன்மீது வேண்டுமென்றே குற்றம் கற்பிக்கப்பட்டுத் தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனையும் எடுத்து விளக்கி - எதிரி நாட்டுக்கு எச்சரிக்கை விடுத்தனர். அந்த அவைக்களத்தில் பொறுப்புமிக்கவர்கள் எனக் கருதப்படுபவர்களில் ஒருவர், அந்த விடுதலை வீரனுக்குப் பரிவு காட்டிப் பேச எழுந்தார்.

"அவன் யார் தெரியுமா?" எனக் கேட்டு அதற்கு அவரே விடையும் அளித்தார்.

"அந்த வீரன், பத்தாண்டுகளுக்கு முன்பு பராரியாகத் திரிந்தவன்; கடற்கொள்ளையடித்தவன்; மிகவும் முரட்டுப்பண்பு கொண்டவன்"

இப்படி அவர் விவரித்துக் கொண்டே போனார்!

"அவர் சொன்னது உண்மையாகவே இருந்தாலும்கூட, இப்போது அவன் அந்தப் பழைய மனிதனல்லவே! பண்பட்ட பாசறைத் தளபதிகளில் ஒருவனன்றோ! இப்போது அவனுக்கு இழுக்குத் தேடுவதோ? அவனது விடுதலையில் காட்டவேண்டிய ஆர்வத்தை விட்டுவிட்டு, அவனது பெருமையைக் குறைப்பதில் அல்லவா அவர் மிகுந்த அக்கறை காட்டுகிறார்!" எனச் சலித்துக் கொண்டனர் அவையிலிருந்தோர்! "எதிரிக்கு இடம் கொடுக்கும் பேச்சு இது!" என வருந்தித் திரும்பினர்.

என் செய்வது? இத்தகையோரை எண்ணித்தான் போலும் வள்ளுவன் அப்போதே திட்டவட்டமாகக் கூறியிருக்கிறான்.

"அவையின் தன்மை அறியாமல் பேசுகின்றவர், சொற்களின் வகை தெரியாதவர் மட்டுமல்ல; சொல்லக்கூடிய நல்ல கருத்துக்களும் இல்லாதவர்."

"அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்."

அதிகாரம் - 72 - அவை அறிதல்; பாடல் - 713



நெருங்கிய உறவினர் ஒருவருடைய மகளுக்குத் திருமணம் நிகழவிருந்தது. ஊரோ நெடுந்தொலைவு. அதற்காக அங்கே போகாமலும் இருக்க முடியாது.

எனவே, மனைவி மக்களுடன் மணவிழாவில் கலந்து கொள்ளக் கிளம்பினான் அவன். இடையிலே குறுக்கிட்டது இரவு. அதனால் பாதிப் பயணத்திலேயே ஓர் ஊரில் படுத்துவிட்டுத்தான் போகவேண்டும் என்கிற நிலை.

அங்கே பயணிகள் தங்கிச் செல்லக்கூடிய பழங்காலச் சத்திரம் ஒன்று இருந்தது. அதிலே குடும்பத்துடன் அவன் படுத்துறங்கினான். நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கினான். பயணக் களைப்பு; அதனால் ஆழ்ந்த உறக்கம். விடிந்து வெகுநேரம் கழித்தே அவனுடைய குடும்பம் விழித்தது.

முதலில் கண்ணைத் திறந்த அவன் மனைவி, "என்னங்க இது! மூட்டை, முடிச்சுக்களையெல்லாம் காணோம்!" என்று பதறிப்போய்க் குரல் கொடுத்தாள்.

"அய்யோ! என் காசுப்பையையும் காணோமே?" என்று அவனும் அலறினான்.

கட்டுச்சோற்று மூட்டை, காசுப்பை எல்லாமே களவு போய்விட்டன. அந்தக் குடும்பமே கதறித் துடிக்காமல் என்ன செய்யும்? உதவிக்கு வரக்கூடியவர்களும் அங்கே ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை.

இனி, எப்படிப் பயணத்தைத் தொடர்வது? பசியை ஆற்றிக்கொள்வது? என்பதே விடை காண முடியாத சிக்கலாகிவிட்டது. வேதனை வெள்ளம் அவர்களை விழுங்கித் திணறச் செய்தது.

குழந்தைகளோ, "பசிக்குதே! பசிக்குதே!" என்று கூட்டுக்குரல் எழுப்பிச் சோற்றுக்கு வழி செய்யுமாறு கெஞ்சினர்.

இப்படியொரு புயல் வீசும் என்று குடும்பத் தலைவன் எதிர்பார்க்கவே இல்லை. அச்சமயம் கயல் வீச்சுக் கண்ணழகி ஒருத்தி, கையிலே பழத்தட்டை ஏந்தி விலை கூறி வந்தாள் அந்தப் பக்கம்.

அந்தக் குடும்பத்தினரைப் பார்த்ததும் "அம்மா நீங்களா? எங்கே இவ்வளவு தூரம் வந்தீர்கள்? எதற்காகக் குழந்தைகள் அழுகிறார்கள்?" என்று வியப்பு மேலிட வினவினாள்.

குடும்பத் தலைவி, தங்களுக்கு ஏற்பட்ட கொடிய சோதனை பற்றி எடுத்துக் கூறினாள். அதனைக் கேட்டதும் பாகாக உருகிப்போனாள் பழத்தட்டுக்காரி. தன் தட்டிலிருந்த பழங்களையெல்லாம் குழந்தைகளுக்கு வழங்கினாள். அத்துடன் அவள் விடவில்லை. "நீங்கள் ஒன்றும் தப்பாக நினைக்காமல் என் வீடு வரை வர வேண்டும். பானையிலே இருக்கின்ற கஞ்சியைப் பகிர்ந்து குடித்துவிட்டு நீங்கள் பயணத்தைத் தொடரலாம். என்னிடம் கொஞ்சம் காசு இருக்கிறது; அதையும் நீங்கள் வழிச் செலவுக்கு வாங்கிச் செல்லலாம்."

அவளுடைய அன்பான சொற்களைக் குடும்பத் தலைவனால் நம்பவே முடியவில்லை. அவனுடைய திகைப்பைத் தெளிவிப்பவளாக அவள் மேலும் இப்படித் தொடர்ந்தாள்:

"இவள் எதற்காக நமக்கு உதவி செய்ய ஓடிவர வேண்டும் என நினைக்கிறீர்களா? ஆனால், என்னை யாரென்று அறியாமலே உங்கள் மனைவி செய்த உதவிக்கு இது தினையளவுகூட ஈடாகாது. உங்களைப் போலத்தான் எனக்கும் ஒரு நிலைமை ஏற்பட்டது. ஒரு முறை தீயவர்களிடமிருந்து தப்பியவளாக உங்கள் ஊரிலே வந்து அடைக்கலம் புகுந்தேன். அப்போது பட்டினியால் நான் படாத பாடுபட்டேன். தெருத் தெருவாக அலைந்தும் ஒரு கவளம் சோற்றுக்கும் வழியில்லாது துவண்டுவிட்ட நிலையில், இந்த அம்மாதான் என் பசியை ஆற்றினார்கள். உயிருள்ளவரை அந்த நன்றியை நான் மறக்கலாமா?"


-விழிகள் நீரில் மிதக்கப் பழத்தட்டுக்காரி இவ்வாறு கூறிவிட்டு, அவர்களைப் பிடிவாதமாகத் தன் இல்லத்துக்கு இட்டுச் சென்றாள்.

சாலையில் செல்லும்போது தன் கோலமயிலிடம் அவன் கூறினான்:

"வள்ளுவர் வாக்கு அப்படியே பலிக்கிறது, பார்த்தாயா? பட்டினி என்று சொல்லி வந்தவர்களின் பசியை ஆற்றுவது என்றுமே வீண் போகாது. அதுவே, தான் பெற்ற ஒரு பொருளைப் பிற்காலத்தில் உதவுவதற்கு ஏற்பச் சேமித்து வைக்கக் கூடிய கருவூலம் ஆகும் என்கிறார் அவர். ஈகைப் பண்புக்குள்ள வியக்கத்தக்க சிறப்பைப் பார்த்தாயா?"

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

அதிகாரம் - 23 - ஈகை; பாடல் - 226



உலைக்கூடத்திலே கொட்டப்பட்ட புழுக்களின் கூட்டமெனத் துடித்தனர் குடிமக்கள். ஆட்சியின் பேயாட்டத்தை அவர்களால் தாங்கிட முடியவில்லை. "அய்யோ தாங்க முடியவில்லையே" என்று கதறிடவும் அவர்களுக்கு உரிமையில்லை. வாய்களுக்குப் பூட்டு! கைகளுக்கோ விலங்கு! சிறைச்சாலைகளின் வயிறுகள் புடைத்தன. தூக்குமேடைகளின் பசி, நாள்தோறும் நாற்பது தடவைகளுக்கு மேல் தணிக்கப்பட்டது. வரிக் கொடுமை, ஏழைகளின் முதுகெலும்பை உடைத்து நொறுக்கியது. வறுமையின் ஊழிக்கூத்தோ தாங்கவொண்ணாததாக இருந்தது. "பசிக்கிறதே" என்று குரல் எழுப்பினால், பசிக்காத இடத்திற்கு அந்தப் பஞ்சைகள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

நாடு முழுவதும் அமைதியை ஏற்படுத்துகிறோம் என்ற பெயரால் இடுகாட்டு அமைதியை அரசு உருவாக்கியது. கட்டுப்பாட்டினைக் கண் எனப்போற்றுகிறோம் எனக் கூறிக்கொண்டே குடிமக்கள்மீது அடக்குமுறைகளின் வாயிலாகக் கட்டுப்பட்டுக் கிடக்கும் அடிமைத்தனத்தைத் திணித்தது. "இம்" என்றால் சிறைவாசம், "ஏன்?" என்றால் வனவாசம் என்று கூறுவதுண்டல்லவா. அந்த ஆட்சியில் "இம்" என்று சொல்லாமலிருந்தால்கூடச் சிறைவாசம்தான்; "ஏன்" என்று கேட்காமல் இருந்தால்கூட "வனவாசம்"தான்! கருத்து மாறுபாடு கொண்டோர் கழுவில் ஏற்றப்படுவதும் அறிவுரை கூறுவோர் வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டு வஞ்சம் தீர்க்கப்படுவதும் அந்த அரசின் பொழுதுபோக்கு விளையாட்டுக்களாக விளங்கின.

அந்தக் கொடுமைபுரியில் செங்கோல் செலுத்தப்படவில்லை; செந்தணலே கோலோச்சியது; செக்குமாடென மக்கள் கூட்டம் சீரழிந்து கொண்டிருந்தது; சிந்தனையாளர்கள் சிற்றெறும்புகள் போல் நசுக்கப்பட்டனர். நிந்தனையாளர் களோ அந்த நேர்மையற்ற ஆட்சியில் நித்தமொரு விருது பெற்றுக் கொண்டிருந்தனர்.

சிரச்சேதம் செய்யப்பட வேண்டுமென்று சிறையில் தள்ளப்பட்டிருந்த ஒரு சிங்க இளைஞன், ஒருநாள் சிறையிலிருந்து தப்பியோடி நாட்டைவிட்டு வெளியேறினான்; வள்ளுவர் வாழுமிடம் சென்றான்.

"பெருந்தகையீர்! எம் நாட்டில் எரிதழலுக்குத் தண்ணீர் என்று பெயர்! காட்டாட்சி முறைக்கு நாட்டாட்சி என்று பெயர்! மாற்றியமைத்திட, மக்களைக் காப்பாற்றிட, மார்க்கமொன்று கூறிடுக!" எனக் கதறினான். அந்த இளைஞனின் குரல், வள்ளுவர் கோட்டத்தில் எதிரொலித்து முழுங்கியது. அதற்குள் அவனைப் பின் தொடர்ந்து துரத்திவந்த சிறைக்காவலர்கள், அவனைப் பிடித்து விலங்கிட்டனர். வள்ளுவர், அந்த நிகழ்ச்சியை அமைதியோடு பார்த்துக் கொண்டு நின்றார். விலங்கிடப்பட்ட இளைஞனைத் தேர்க்காலில் கட்டி, அந்தத் தேரை வேகமாகச் செலுத்தித் தம் நாடு நோக்கிச் சென்றனர். வள்ளுவரும் அவர்களைத் தொடர்ந்தார். கொடுமை நடனமாடும் அந்த மண்ணுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட அந்த இளைஞனை அவர் தேடினார். நடுவீதியில் கழுமரத்தில் அவனை ஏற்றுவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆயிரமாயிரம் மக்கள், அந்தக் காட்சி காண அழைத்து வரப்பட்டிருந்தனர். அப்போதுதானே அவர்கள் அரசுக்கு அஞ்சியொடுங்கி ஆமைகளாகக் கிடப்பர்! அப்படி அச்சுறுத்துவதற்காக அந்த மக்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இளைஞர் கழுவில் ஏற்றப்படுவதற்கு முன், காவலர்கள் தடுத்தும் பணியாமல் அந்த மக்களைப் பார்த்துக் கேள்விக்கணைகளைத் தொடுத்திட்டான்.

அந்த வினாக்கள், நாட்டில் நடைபெறும் வேதனைகளைச் சித்திரித்துக் காட்டின. தாலியிழந்த மங்கையரின் தவிப்பு; தாயை இழந்த குழந்தைகளின் ஓலம்; மகனை இழந்த மாதாக்களின் புலம்பல். இந்தத் துன்ப கீதத்தை அவனது காய்ந்துபோன உதடுகள் இசைத்தன! வெள்ளமெனத் திரண்டிருந்த மக்களின் விழிநீர் கண்டான், அந்த வீர இளைஞன்! "ஆகா! இந்தக் கண்ணீரன்றோ, கொடுங்கோலை முறிக்கும் படைக்கலன்! இன்னும் ஏன் காலதாமதம்? இரு விழி கொட்டும் நீர், உமது இதயமிருந்து கிளம்பிய செந்நீர் அல்லவா! இந்தக் கண்ணீரின் வலிமை காட்டப் புறப்படுவீர்!" இப்படிப் போர்ப்பாட்டுப் பாடினான். அந்த மக்கள் கடல் கொந்தளித்தது. அணையுடைத்து எழும் நீத்தம் என மாறியது. கழு மரம் நொறுக்கப்பட்டது. இளைஞனின் கைவிலங்கு உடைக்கப்பட்டது. அரசின் படை வரிசை ஓட்டமெடுத்தது. அந்தக் கண்ணீர்த் துளிகள், கோட்டைக்குள்ளும் புகுந்தன. அதற்கு முன்பே அங்கிருந்த அரச வம்சம் எங்கோ ஓடித் தப்பித்துக் கொண்டது. அதோ! அதோ! ஓடுகிறார்கள் அரச வம்சத்தினர்! அவர்கள் நாடிழந்து, நகர் இழந்து, வளமிழந்து, வற்றாத செல்வமிழந்து ஓடுகின்ற காட்சியினை வள்ளுவர் காண்கிறார். கழுமரத்தருகே இளைஞன் குரல் கேட்டு எழுச்சி முரசு கொட்டிய மக்களையும் அவர் கண்டவரல்லவா? அந்த மக்களின் கண்ணீருக்குள்ள வல்லமையை வியக்கிறார். ஆனை, சேனை, ஆயிரம் வசதிகளுடன் அரண்மனை வாழ்வு நடத்தியோர் அரை நொடியில் அனைத்துச் செல்வமும் இழந்த நிலையை அவர் எண்ணிப் பார்க்கிறார். இளைஞனின் குரலே, இன்பத் தமிழ்க் குறளாக, எழுச்சியூட்டும் குறளாக, நம்பிக்கையூட்டும் உரையாக அமைகிறது. அது, இது!

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

அதிகாரம் - 56 - கொடுங்கோன்மை; பாடல் - 555



வெள்ளி மணல் படுக்கையிலே அந்தப் புள்ளி மயில் படுத்திருந்தாள். அந்தச் சயனத்துச் சாயலைத் தூர இருந்து காண்கிறான் அவன். அந்த அழகுமிழும் காட்சியால் உள்ளத்தில் வெல்லப்பாகு தடவிய அவன் கண்களை வாழ்த்துகிறான்; பாராட்டுகிறான்.

குளிர் மொண்டுவரும் தென்றலிலே கதகதப்பு உணர்ச்சி கலந்து வருவதாக அறிகிறான். சிறிது நேரம் சிலையானான். உணர்வு வந்தபின் அசைந்தான். அப்போது அந்த நிலாப் பதுமையைக் காணவில்லை. அவள் போய் விட்டாள்.


அவன் நெஞ்சு துடித்துக் கனத்துவிட்டது. 'ஐயோ! ஏன் இந்த அழகியைப் பார்த்தோம்! பார்க்காமலிருந்தால் இப்படிப் பதைக்கவேண்டிய அவசியமே வந்திருக்காதே' என்று புலம்பினான்.

வேதனையை உண்டாக்கிய தன் கண்களை வசைபொழிந்து கண்டித்தான்; வீடு சென்றான். தூக்கம் வரவில்லை. அவளை நினைத்து நினைத்து அழுதான். அப்போது அவனுக்கு ஓர் ஆறுதல் ஏற்பட்டது.

"சும்மா இருந்த என்னைச் சுந்தரியின் நினைவால் வாடச்செய்யும் நோயை உண்டாக்கிய ஏ, கண்களே! நீங்கள் தூக்கம் வராமல் அழுகிறீர்களே... அது எனக்கு மிக மகிழ்ச்சி. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதற்கேற்ப தண்டனையை நன்றாக அனுபவியுங்கள்" என்று முணுமுணுத்தான். அந்த முணுமுணுப்பை முத்தமிழ் வள்ளல் குறளார் எப்படி அமைத்திருக்கிறார், படியுங்கள்.

"ஓஓ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது."

அதிகாரம் - 118 - கண்விதுப்பழிதல்; பாடல் - 1176



இளமை குன்றுகிறது; கட்டுடல் கரைகிறது; பிறைநிலவெனப் புகழப்பட்ட நெற்றிக்கு மேலே முழுநிலவின் வெண்ணிறந் தாங்கிய தலைமுடி தோன்றுகிறது. ஆடியிற் பார்த்துப் பார்த்துக் களித்த அழகிய முகத்தில், கோடி கோடி ரேகைகள் முதுமைக் கணக்கை எழுதிக் காட்டுகின்றன. வேங்கைபோல் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியும் வீங்கி வெடித்துக் கிடக்கின்றன. வீணையை மீட்டி இசையமுதம் பொழிந்த விரல்களோ, இப்போது மீட்டப்பட்ட வீணையின் கம்பிகளைப்போல அதிர்ந்து கொண்டிருக்கின்றன! ஈளை, இருமல், தொண்டை வறட்சி போக்க ஒரு குவளைத் தண்ணீர்! இயற்கைக் கடமைகளை ஆற்றக்கூட எழுந்து செல்லமுடியாத

நிலைமை! அவையனைத்தும் பாயுடனும் படுக்கையுடனும்தான்! வலிவு இருந்த வரையில் ஒளிந்து கொண்டிருந்துவிட்டு, இளைக்கட்டும் ஒரு கை பார்க்கலாம் என்று நோய்நொடிகள் ஒன்றுகூடி முற்றுகையிட்டுக் கொத்தளத்தில் கொடிபோட்டு விடுகின்றன.

இவ்வளவுக்குப் பிறகும் "சாவே! வா!" என்று அழைத்திட அந்த உயிருக்குத் துணிவில்லை!

எப்படியாவது பிழைத்துக் கொள்ள வேண்டும், மருத்துவர்களின் திறமையினால்; மருந்து - மூலிகைகளின் சக்தியினால்; மீண்டும் புது வலிவு பெற்று வாழவேண்டும்; உலகின் இன்பங்களையெல்லாம் இதுவரை அள்ளிப் பருகியது போதாது - இனியும் பருகித் திளைத்திட வேண்டும் என்றுதான் உலக வாழ்வின்மீது தீராக் காதல் கொண்டு தவிக்குமாம் சில உயிர்கள்.

அப்படி எண்ணி ஏங்கித் துடிக்கும் அந்த உயிர்களுக்கு உவமை தேடி அலைகிறார், வள்ளுவர்.

இறுதியாக அவருக்கு உவமை கிடைக்கிறது! எங்கே தெரியுமா? சூதாடும் இடத்தில்!

சூதாடுபவர்களில் சிலர், கைப்பொருளை வைத்து இழக்கின்றனர்! தோல்விமேல் தோல்வி. ஆனால் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை; தொடர்ந்து சூதினை ஆடிக்கொண்டேயிருந்தால் இழந்த பொருளை மீட்டுவிடலாம் என்று!

பொருளை இழக்க இழக்க - அந்தச் சூதின் மேலேயே அவர்களுக்கு நாட்டம் செல்கிறது. இவர்கள் ஒரு வகையினர்!

உடல் நோயினால் சோர்ந்து துன்புற்று வலுவினை இழக்க இழக்க - உயிரை மட்டுமே மிச்சமாகக் கொண்டிருப்பவருக்கு அந்த உடல்மீதே மேலும் மேலும் அடங்காத ஆசை ஏற்படுகிறது. இவர்கள் ஒரு வகையினர்!


இந்த இரு வகையினரையும் உவமை காட்டிக் குறள் எழுதிய அந்தப் பெருந்தகையின் அறிவாற்றலை எப்படித்தான் புகழ்வது.

"இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்"

அதிகாரம் - 94 - சூது; பாடல் - 940

உழத்தொறூஉம் = நுகரும் போதெல்லாம்
காதற்று = காதலை யுடையது

காமத்துப்பால்



காதலர் பிரிந்து விட்டால் காதலியின் மேனியில் பசலை நிறம் பாய்கிறதாம். 'பசப்புறு பருவரல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவனார் அந்தப் பசலை நிறத்திற்கு அடிமையான பாவையரின் வேதனைகளை மிக அருமையாகச் சித்திரித்திருக்கிறார்.

மஞ்சத்திலே கொஞ்சுமொழிகள் உதிரும்; ஆடல் - பாடல் - ஊடல் - கூடல் - எல்லாமே ஒன்றையொன்று போட்டியிடும். காலையிலே எழுந்து கண்ணாடி

பார்க்கும் தலைவி, கண்ணாடியிலிருப்பதும் தன் உருவம்தான் என்பதை மறந்துவிட்டுத் திடீரென்று, தன் கன்னத்தை மூடிக் கொள்வாள். பிறகுதான் அவளுக்கு நினைவுக்கு வரும், எதிரேயிருப்பது கண்ணாடி - அதிலே தெரிவது தன் உருவம் என்று. யாரும் தன் கன்னத்தைப் பார்த்து விடவில்லையென்ற திருப்தி ஏற்படும் அவளுக்கு. ஒவ்வொரு நாளும் காலையிலே இப்படி ஒரு நிகழ்ச்சியைச் சமாளித்துத் தீர வேண்டியிருக்கிறது என்று தெரிந்தும்கூட, இரவு நேரத்திலே அவள் அதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்வதில்லை; முன்னெச்சரிக்கையாக இருப்பதுமில்லை. அதனால் கன்னத்தில் பசலைநிறம் பாய்ந்த ஒரு வட்டம் உதயமாகி விடுகிறது. யாராவது பார்த்து விடுவார்களோ என்ற வெட்கம் இருந்தாலும்கூட, மெல்லிய விரல்களால் தடவிப்பார்த்து ஏதோ ஒரு நடந்துபோன நிகழ்ச்சியை எண்ணி அவளாகவே சிரித்துக் கொள்கிறாள். காதலன் போனதும், கண்ணாடியில் தோன்றும் முத்திரை அவள் கண்ணுக்கு விருந்தூட்டிக் கருத்துக்கும் இனிமை சேர்க்கிறது.

இவளைப் போலவே ஓர் எழிலரசியைப் பேச வைக்கிறார் திருக்குறளார். காதலன் பிரிந்து விட்டான், காதலியிடம் விடைபெற்று! நிலவு போனதும் வானத்துக்கு இருள் நிறம் வருகிறதே, அது போலவே இந்த நேரிழையாளுக்கும் பசலை நிறம் மேனியில் பரவி விடுகிறதாம். இந்தப் பசலை தன் உடலில் ஏறிப்பரவுவதை அவள் காண்கிறாள். காதலரின் பிரிவால் அல்லவா இந்நிறம் ஏற்பட்டது என வருந்துகிறாள். அதே சமயம் அந்த வேதனையிலும் அவளுக்கோ பெருமிதம் ஏற்படுகிறது.


கன்னத்தில் அடையாளம் பெற்ற காரிகை, வெட்கத்தால் வேதனையுற்றாலும், அது தன் காதலன் தந்த அடையாளம் என எண்ணி மகிழ்கிறாளே; அதுபோலவே இவளும் பிரிவுத் துயரால் 'என் உடலில் பரவும் இந்த நிறம், என் காதலரால் ஏற்பட்டது' என எண்ணுவது பெருமைக்கு உரியது என்கிறாள்.

அந்தக் குறள் இது:

"அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு."

அதிகாரம் - 119 - பசப்புறுபருவரல்; பாடல் - 1182





பகைநாடு புகுந்து வெற்றிபெற்ற மன்னன், தனது படையினர் புடை சூழத் தலைநகரம் நோக்கி வந்து கொண்டிருந்தான். வரும் வழியில் வள்ளுவப் பெருந்தகையாரைச் சந்தித்தான். அவரைக் கண்டவுடன் தன் தேரைவிட்டு இறங்கிக் கீழேவந்து வணக்கம் தெரிவித்தான். வள்ளுவரும் வாழ்த்தி நின்றார்.

"மன்னவனே! மாற்றாருடன் நடத்திய போர் எப்படி இருந்தது?"

என வள்ளுவர் கேட்டு வாய் மூடுவதற்குள், மன்னன் தனக்குக் கிடைத்த வெற்றிச் செய்தியைக் கூறிவிட்டு, களத்தில் தானும், தனது வீரர்களும் எவ்வாறு போரிட்டு அந்த வெற்றியைப் பெற முடிந்தது என்பதை விளக்கத் தொடங்கினான்.

"பகையரசனின் படைவலிவைக் குறைத்து மதிப்பிட இயலாது. இரு தரப்பிலும் யானைப்படைகள் மோதிக்கொண்ட காட்சி கருமுகிற் கூட்டங்கள் மோதிக்கொள்வதை ஒத்திருந்தது. குன்றங்கள் ஒன்றோடொன்று இடித்துக் கொண்டு சிதறி நொறுங்குவதைப்போல் தேர்ப்படைகளின் தாக்குதல் அமைந்தது. குதிரைகள் பாய்ந்து போரிட்டன, என்று கூறமாட்டேன்! பறந்து பறந்து போரிட்டன! வேலும் வாளும் தாங்கிய வீரர்களோ எதிர் எதிரே கொந்தளித்து அலைபாய்ந்து மோதியெழும் கடல்களின் ஆவேசத்தையும் மிஞ்சுகிற அளவில் களக்காட்சியை உருவாக்கினர். ஒரு கட்டத்தில்; ஆமாம், அதுதான் போரின் இறுதிக்கட்டம். பகையரசனும் நானும் ஒருவரையொருவர் நேரடியாகவே சந்தித்தோம். அவன் வீசிய வேல், என் நெஞ்சைக் குறிபார்த்து வேகமாகப் பாய்ந்துவந்தபோது, நான் கண்இமைக்கும் நேரம் தாமதித்திருந்தால்கூட வீரமரணத்தைத் தழுவியிருப்பேன். ஆனால், அதற்குள் அதனைத் தடுத்தது மட்டுமல்ல; இதோ இந்த வேலினால் அவன் உயிரையும் போக்கிவிட்டேன். நான் எறிந்த வேல்பட்டுப் பகையரசன் விழுந்த அடுத்த நொடியிலேயே அவனது படை வரிசை சிதறியோடத் தொடங்கியது. நமது வீரர்கள் வெற்றிக்கொடியை உயர்த்தினர். பெருந்தகையீர்! இந்த வேலின் நுனியைப் பாருங்கள். பகையரசனின் செங்குருதி தோய்ந்து காய்ந்திருப்பதைக் காணுங்கள்."


என்றவாறு வெற்றிக்களிப்பில் ஆழ்ந்திருந்த மன்னன், வேலை வள்ளுவரிடம் நீட்டினான். அவர் அதைக் கையால் தொடாமலே, அவனைப் பார்த்துச் சொன்னார்:

"மன்னவனே! நீ பெற்ற வெற்றியினைப் புகழ்கிறேன். உன் படையின் ஆற்றலைப் போற்றுகிறேன். பகையரசை வீழ்த்திய இந்த வேல் உன் வெற்றியின் சின்னமாகத் திகழ்கிறது என்பதை நான் மறுத்திடவில்லை. மன்னர்கள் போரைத் தவிர்த்திட இயலாது என்பது உண்மைதான். இந்தப் போரில் கிடைக்கும் வெற்றி மகிழ்ச்சியூட்டக்கூடியதுதான்! ஆனால், ஒன்றை மறந்துவிட வேண்டாம் வேந்தனே! ஓர் அரசுக்கு உலகம் போற்றும் வெற்றியைப் பெற்றுத் தருவது பகைவரை வீழ்த்தும் வேல் அல்ல; குடிமக்களை நடத்தும் கோல்தான்! அந்தக் கோலும் வளையாத செங்கோலாக அமைந்திட வேண்டும். அத்தகைய செம்மையான ஆட்சியை மக்களுக்கு அளித்து நிலையான வெற்றியைப் பெறுவாயாக!"

வள்ளுவரின் அறிவார்ந்த கருத்துக்களில் உள்ளத்தைப் பறிகொடுத்த மன்னன், கையிலிருந்த வேலைக் கீழே எறிந்துவிட்டு, அவரை வணங்கித் தேர் ஏறித் தலைநகர் நோக்கிக் கிளம்பினான். வள்ளுவர் புன்னகை புரிந்தவாறு நின்றார். சிந்தனை எழுத்தாணி கொண்டு தனது இதயத்தில் பின்வரும் குறளை எழுதிக் கொண்டார். அந்தக் குறள் இதோ :

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்."

அதிகாரம் - 55 - செங்கோன்மை; பாடல் - 546



அவளோர் சித்திரப் பாவை. உரித்தெடுத்த அல்லித் தண்டின் நிறம் பெற்ற உருக்குலையா மங்கை. அவள் ஒளி முகம், ஓராயிரம் நிலவுகளை ஒன்றாக அடுக்கி வைத்துக் கற்பனை செய்து போட்டி போட்டுப் பார்த்தாலும், எதிர் நிற்கக்கூடிய

ஆற்றல் வாய்ந்தது. அத்தகைய அழகின் வடித்தெடுத்த கூட்டு அவள்! காணக் கிடைக்காத தங்கம்! தேடக் கிடைக்காத வைரம்! களிப்பிலாடும் மயில்! காதாரப் பண்பாடும் குயில்! நடக்கும் பொன் வண்டு! நடனமிடும் நட்சத்திரம்!

அவள், அன்னத்தூவி பரப்பிய மஞ்சத்திலே ஆனந்த நித்திரை செய்து கொண்டிருக்கிறாள். தூங்கும் அந்தத் தோகையாளின் துடியிடை நெளிவதேன்? தூய்மை நிறை அவள் செவ்விதழ்களிலே அமுதம் நிறைவதேன்? மின்னித் தேங்கும் அந்த அமுதத்தை, அவளது அரும்பு இதழ்கள் அவளையுமறியாமல் சுவை பார்ப்பதேன்? ஆக - ரத்தினத்தின் நிறம் பழிக்கும் விதத்திலே அவள் கன்னங்கள் மாறுகின்றனவே, அது ஏன்? எத்தகைய மந்தகாசமான புன்னகை! முல்லைச் சிரிப்பா? முழு நிலாத் தோற்றமா? எல்லையிலா மகிழ்ச்சியின் கோடுகள் அவள் வதனமெங்கும் அழகுக் கோலங்கள் போடுகின்றனவே!

இதற்குக் காரணம் யாரைக் கேட்பது? வள்ளுவரைத்தான் கேட்க வேண்டும்.

"தம்பி! அவளே - அதோ எழுந்து விட்டாள் - அவளையே கேள்."

இப்போது அவள் தனக்குத்தானே பேசிக்கொள்கிறாள். அது நம் காதுகளில் விழுகிறது - கேளுங்கள்:

"கனவிலே வந்து என்னை என் காதலர் கூடினார். இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி ஆனந்தம் பெற்றேன். என்னை விட்டு நீங்காமல் கனவிலே கூடியிருந்த என் காதல் தேவனை, நனவு என்று சொல்லப்படுகிற ஒரு கொடியவன் ஓடிவந்து பிரித்து விட்டானே!"


காரிகை கதறுகிறாள்: நனவைத் திட்டுகிறாள்.

காதலனோடிருப்பதாகக் கனவு கண்டாளாம். விழித்துக் கொண்டாளாம். அதற்காக வருந்துகிறாள். அந்தச் சோகத்தை வள்ளுவர் நடையிலே கேட்டு இன்பம் பெறுங்கள் - இதோ!

"நனவென ஒன்றில்லை யாயின் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்."

அதிகாரம் - 122 - கனவுநிலையுரைத்தல்; பாடல் - 1216





ஒரு நாட்டின் இளவரசன், தலைநகரத்துப் பொது மன்றத்தில் மிக்க துடிப்போடு உரை நிகழ்த்தினான். ஆட்சியில் அவன் தலையீடுபற்றி நாட்டில் எழுந்துள்ள அடுக்கடுக்கான கேள்விகளுக்கு அவன் பதில் சொல்ல வேண்டியிருந்தது. பதிலில் தெளிவோ உண்மையோ இல்லாத காரணத்தால், ஆத்திர உணர்ச்சி அலைபாய்ந்து கொண்டிருந்தது. அறிவுசான்ற பெரியோர்களை அவன் அலட்சியமாகப் பேசினான்; தொடர்ந்து பேசுகிறான். அனுபவமிக்க அமைச்சர்களை அவன் தனது அடிமை களைப்போல நடத்துகிறான். அந்த ஆட்சிக்குக் கட்டுப்பட்டுள்ள குறுநில மன்னர் களை அவன் தனது எடுபிடிகளாக இருக்குமாறு உத்தரவிடுகிறான். இந்த இழிவு தரும் நடவடிக்கைகளை யெல்லாம் வேறு வழியின்றி அமைச்சர்களும் குறுநில மன்னர் களும் பொறுத்துக் கொள்கிறார்கள். இளவரசனின் இத்தகைய அத்துமீறிய போக்கிற் குக் காரணம் அவனைச் சார்ந்துள்ள பாதுகாப்புகளேயாகும். ஆம்! பகைவர்கள் நுழையமுடியாத அளவுக்குப் பலமான அரண் இருக்கிறது. பெரியதோர் வலிமை வாய்ந்த படை இருக்கிறது. கருவூலம் கொள்ளாத அளவுக்குப் பொருள் குவிந்து கிடக்கிறது. பேரரசர்கள் சிலரின் நட்பும் அந்த நாட்டு அரசுக்கு இருக்கிறது. இத்தனை யும் இருக்கும்போது யார் என்ன செய்ய முடியும் என்ற இறுமாப்பு இளவரசனுக்கு! இந்நிலை நீடிப்பது நாட்டுக்கும் அரசுக்கும் நல்லதல்ல என்று ஒரு பெரியவர் கூறினார். அந்தப் பெரியவர், தன் இளமைக்காலத்தில் அந்த நாட்டின் படைத்தளபதிகளில் ஒருவராக இருந்து இப்போது ஓய்வு பெற்றிருப்பவர். தளபதிகளில் ஒருவராக இருந்தபோது பகை நாட்டுடன் போரிட்டு, பிறந்த மண்ணைக் காப்பாற்றினார் அவர்.

அந்தப் போரில் அவர் தன் கைகளில் ஒன்றை இழக்க நேரிட்டது. எதிரிகளின் சிறையி லும் சில ஆண்டுகள் இருக்க நேரிட்டது. இப்படிச் சொந்தநாட்டு வெற்றிக்காகக் கடுந்தவம் ஏற்ற அந்தப் பெரியவர், இளவரசனின் போக்கிலே வெறுப்புக்கொண்டு, தான் ஓய்வு பெற்றிருப்பதையும் மறந்து ஓய்வின்றிப் பணியாற்றினார். அதனால் எழுந்த சீற்றத்தால் இளவரசன், பொதுமன்றில் கூடியிருந்த மக்களிடம், அந்தப் பெரியவர் குறித்து மிகக் கீழான முறையில் உரை நிகழ்த்தினான். குடிமக்களுக்கு இளவரசனின் போக்கும் பேச்சும் கிஞ்சிற்றும் பிடிக்கவில்லை. அவற்றை அவர்கள் வெறுப்பதைக் காட்டிக்கொண்டு பொது மன்றத்தைவிட்டு வெளியேறத் தொடங்கினர். அந்த அவமானத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத இளவரசன், குடிமக்களின்மீது போர் வீரர்களை ஏவினான். குடிமக்கள் எலும்பு நொறுங்கத் தாக்கப்பட்டார்கள்; சிலர் உயிரையும் இழந்தனர். அந்தச் செய்தி பெரியவருக்கு எட்டியது. பொறுமையின் உறைவிடமாக இருந்த அவர் வெகுண்டு எழுந்தார். குடிமக்கள் கொடுமைப்படுத்தப்படும் இடம் நோக்கி நடந்தார். குருதி வெள்ளம் பெருக்கெடுக்கும் அந்தப் பொதுமன்றத்தருகே சென்றார். 'அய்யோ! அய்யோ!' என ஓலமிட்டவாறு ஓடிக்கொண்டு இருக்கும் மக்களைப் பார்த்து அவர் கூறினார்:

"உங்களுக்கு இருப்பது ஒரு உயிர்தானே! அது போகப்போவதும் ஒரு முறைதானே! அதற்குள் ஏன் இப்படி அஞ்சிச் சாகிறீர்கள்? அநியாயத்தை எதிர்த்து நில்லுங்கள்! வாருங்கள். அடிபடும் உங்களுக்கு நான் தலைமை வகிக்கிறேன். இனி விழுகிற அடிகள் அத்தனையும், என்மேல் விழட்டும்."


அடிபட்டுக் கொண்டிருந்த மக்கள் நிமிர்ந்து நின்றனர். ஓடியவர்கள் திரும்பி வந்து அவர் பின்னே அணி வகுத்தனர். மக்கள் கடல் உருவாகியது. அதன் கொந்தளிப்பு வெளியே தெரியவில்லை. குமுறலும் கொந்தளிப்பும் அவர்களின் உள்ளத்திலே இருந்ததை அவர்களின் விழிகள் காட்டிக் கொண்டிருந்தன.

பெரியவர் தலைமையில் அந்தப் பேரணி, இளவரசன் நின்ற இடத்தை நோக்கி நகர்ந்தது. ஓங்கிய கைகளுடன் இருந்த வீரர்கள் திகைத்துப்போய் ஒதுங்கி நின்றனர். பெரியவர், இளவரசனின் முன்னே மிக நெருக்கமாக வந்து விட்டார். அவர் முகம் எழுஞாயிறு போலச் சிவந்திருந்தது. அவர் பின்னே வந்த மக்களின் முகமும் அவ்வாறே!

நிலைமை மோசமாகிவிட்டதை உணர்ந்த இளவரசன், அந்த இடத்தை விட்டு ஓடத் தொடங்கினான். பெரியவரின் நெஞ்சு உறுதியின் முன்னே அவனால் நிற்க முடியவில்லை; அவன் படையும் செயலிழந்தது; அரணும் அவனுக்குக் கை கொடுக்கவில்லை; நட்பு அரசுகளும் துணை புரியவில்லை; கருவூலத்துப் பெரும் பொருளும் அவனைக் காத்திடவில்லை. அவன் தன்னைத்தானே நாடு கடத்திக் கொண்டான். சிறப்புடைய பெரியவர்கள் சீற்றம் கொள்வாராயின் அரண், படை, பொருள் போன்ற அளவுகடந்த சார்புடையவர்களானாலும் அவர்களால் அந்தப் பெரியவர்களின் சீற்றத்திற்கு எதிராகத் தப்பிப் பிழைக்க இயலாது என்பதையே இது விளக்குகிறது.

"இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்."

அதிகாரம் - 90 - பெரியாரைப் பிழையாமை; பாடல் - 900



"நகை தந்தார் - நகை தந்தேன்; தொட்டார் - சுட்டேன்; தழுவினார் - நழுவினேன்; தொடர்ந்தார் - படர்ந்தேன்; பிரிந்தார் - இருக்கிறேன்!"

வேதனையை விழிமூலம் விளக்கி நிற்கிறாள் அவள். இன்னொருத்தியோ இடுப்பொடியாமல் இருப்பதற்காகத் தோழியின் தோளைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். 'உயிரைக் காவடித் தண்டாகக் கொண்டு காம நோயும் நாணமும் இரு பக்கமும் தொங்குகின்றன; நான் என் செய்வேன்?' - என்று துவளுகிறாள் அந்தத் தோகை.

"காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பி னகத்து"

அவள் குமுறலை உணர்த்துகிறது இந்தக் குறள். இவர் நிலைதான் இதுவென்றால், என்றன் நிலையோ அதைவிட மோசம் - என்று மழைக் கண்களைக் காட்டுகிறாள் மற்றொருத்தி.

காதலன் விடைபெற்றபோது அவள் கூறிய வார்த்தை என்ன தெரியுமா? "நீ போகவில்லையென்றால் என்னிடம் சொல்! போய்த் திரும்புகிறேன் என்று சொல்வதானால், நீ திரும்பும் வரையில் உயிரோடு இருப்பவளிடம் விடைபெற்றுப் போ!"

இப்படிச் சொல்லிக் காதலனைத் திணற அடித்தவள் அவள். பாவம், அவளால் காம நோயைப் பிறர் அறியாமல் மறைக்கவும் முடியவில்லை; அந்த நோயைத் தந்த காதலனிடம், நோயின் கடுமைபற்றி விவரிக்கவும் வெட்கமாயிருக்கிறது. இப்படித் திண்டாடுகிறாள், அந்த வண்டாடும் மலர்க்குழலாள்.


"கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்."

"உடலிற் பூசிய சந்தனத்தின் ஈரம் காய்வதற்குள் அவசரப்பட்டார்; பாடச் சொன்னார்; உடனே இதழ் மூடச் சொன்னார். 'இசை கசக்கிறதோ?' என்றேன். 'இல்லை, இதழ் இனிக்கிறது' என்றார். விளக்கைக் காட்டி, 'அணையுங்கள்' என்றேன். அணைத்தார். உயிர், அணு ஒவ்வொன்றையும் தேனில் நனைத்தார். பக்கத்தே சிறிது நகர்ந்தேன். உடனே என் உடம்பெங்கும் பசலை நிறம் பரவிவிட்டது. அந்தப் பிரிவைக்கூட என்னால் தாங்க முடியவில்லையே; இந்தப் பிரிவை எப்படியடி தாங்குவேன்?" என்று வருந்துகிறாள், அந்த வண்ணமணிச் சிலையாள்.

"புல்லிக் கிடந்தேன்; புடைபெயர்ந்தேன்; அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு."

அதிகாரம் - 117 - படர்மெலிந்திரங்கல்; பாடல்கள் - 1163, 1162
அதிகாரம் - 119 - பசப்புறுபருவரல்; பாடல் - 1187





சுயமரியாதைச் சுடரொளி

"அவனது அழகிய கவர்ச்சிகரமான தோற்றமே அவனை உத்தமன் என்று ஊருக்கு உணர்த்துகிறது. அவன் கண்களில்தான் எவ்வளவு கனிவு! புன்னகை புரிகிறான். 'புனிதனே! புவிக்கோர் நல்முத்தே!' என்று புகழ்ந்திட முந்துகிறது நா! அதிகமாகக்கூட அவன் யாரிடமும் பேசுவதில்லை. கேட்ட கேள்விக்குக்கூட இதழ் அசைவது தெரியாமல் பதில் கூறுகிறான். பெண்கள் நிறைந்த கூட்டமொன்றில் அவனுக்கு விழாக் கொண்டாடி வரவேற்பு வழங்கினர். அந்தப் பெண்களை அவன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மகளிர் அவனைச் சீலம் நிறைந்தவன் என்று சிங்காரப் பண்பாடிப் போற்றி மகிழ்ந்தனர். அவனோடு இன்னொருவன் வந்தானே அவன் மிகவும்

கெட்டவன்; அவன் பார்வையே சரியில்லை; பெண்களிடம் சுற்றிச் சுற்றியோடித் தான் யார் என்பதைக் காட்டிக் கொண்டான். முறுக்கு மீசை - முரட்டு உடல் - மூடத்தனம் நிறைந்த மூளை - மொத்தத்தில் நல்லவன் அல்லன்! அலையும் விழிகளும், இளித்த வாயும், போதும் - அவன் ஒரு காமுகன் என்பதை எடுத்துக் காட்ட!"

-இப்படி அந்த இரண்டு மனிதர்களைப் பற்றியும் ஊரார் தங்கள் மதிப்புரையை எழுதித் தள்ளினார்கள்! இருவருமே அந்தப் பகுதி மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் படைவீரர்களைக் கண்காணிப்பதற்காகப் புதிதாக ஊருக்கு வந்த தளபதிகள்.

வரவேற்பு விழா முடிந்து ஒரு கிழமை கழிந்தது. அழகிய தோற்றமும் ஊரார் மதிப்புரையும் பெற்ற தளபதி, ஒரு நாள் இரவு ஒளிந்து ஒளிந்து தெருவில் நடந்தான். ஊரார் அவனை உற்றுக் கவனித்தனர். தெருக்கோடியில் தேன்மொழி என்ற குடும்பப் பெண்ணொருத்தி. அவள் ஆளன் ஊரில் இல்லை. அவளை அணைத்து இன்புற இல்லில் நுழைந்தான்.

மலர் கசங்கிடும் வேளையில், இன்னொரு தளபதி உள்ளே பாய்ந்தான். "இழிமகனே! கடைப்பிறவியே! உயிர் தேவையெனில் ஓடிப்போ!" எனச் சீற, அது கண்டு கொடியவனும் குமுறலானான். இருவருமே போரிட்டனர். முதலாமவன் மாண்டான். அடுத்தவனே நல்லவன் எனும் பெயர் பூண்டான்.


"நேர்மையானவன்போல் தோன்றிய தளபதி கீழ்மைச் செயல் புரிந்தான். கீழோன்போல் தோன்றியவனோ மேலான செயலாலே மேலோன் ஆனான்" என வாழ்த்தியது ஊர்.

இதையே வள்ளுவர் இரு அடியில், "நேராகத் தோன்றும் அம்பு கொலைச் செயல் புரியும் - வளைந்து தோன்றும் யாழ் இன்பம் பயக்கும்"- என்று கூறிவிட்டு, "அவ்வாறே மாந்தரையும் அவர்தம் உருவத்தால் கணக்கிடுவதை விடுத்து, அவர்களின் செயல்களைக் கொண்டு கணக்கிடுதல் நன்று" என்று விளக்குகிறார். அதற்கு, இதோ இணையற்ற குறள் :

"கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்."

அதிகாரம் - 28 - கூடாவொழுக்கம்; பாடல் - 279





"தீடும்! திடும்! திடும்!

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்....."

இவ்வாறு பறையை முழக்கிவிட்டுச் செய்தியைச் சொல்லத் தொடங்கினான் பறையறிவிப்போன்! அவன் தொடர்ந்து சொல்லப் போவது நல்ல செய்தியா? கெட்ட செய்தியா? அது பற்றியெல்லாம் அவள் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. சற்றே திறந்திருந்த தெருக்கதவின் வழியாக அவனைப் பார்த்தாள்; அந்த ஒலியைக் கேட்டாள். அவன் சொல்லப் போகிற செய்தி என்ன? அதுபற்றி அவா எழுந்திடவில்லை. கதவைச் சாத்திவிட்டுத் தாழ்வாரத்து முற்றத்தில் போய் உட்கார்ந்து

கொண்டாள். பறை அறைதல் என்னும் நிகழ்ச்சியைக் கற்பனை செய்து பார்த்தாள். ஊர்மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய பொதுவான செய்தியைத்தான் பறை முழக்குவோன் அறிவிக்கிறான். அப்போது அவளுக்குத் தன் கண்களைப் பற்றிய நினைவு வருகிறது.

"என் கண்களும் இந்தப் பறையைப் போல்தான் இருக்கின்றன. பறை அறைதல் வாயிலாகவாவது ஊர்ப் பொதுச் செய்திகள் கூறப்படுகின்றன. ஆனால் என் கண்களோ, காதலரை எண்ணி வருந்துகிற - மறைத்து வைக்கப்பட வேண்டிய துன்பச் செய்தியையும் ஊராருக்கு அறிவித்து விடுகின்றன. என் கண்களுக்கும், பறை அறைதலுக்கும் எந்த வேறுபாடும் இல்லை."

"மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து."

"அறையப்படும் பறை போன்றன என் கண்கள். துன்பத்தை வெளிப்படுத்தும் கண்களையுடைய எம்மைப் போன்றவர்களிடத்தில் மறைபொருளான செய்தியை அறிதல் ஊர்மக்களுக்கு அரிய காரியமல்ல!"

இப்படித் தனக்குத் தானே அந்தத் தாழம்பூ மேனியாள் பேசிக்கொண்டிருந்தபோது, தோட்டத்துக் கதவைத்திறந்து கொண்டு தோகை வந்தாள்! வந்த தோழியைப் பைங்கிளி வரவேற்றாள்!


"ஏன் தோகை, உன் கண்கள் சோர்வடைந்து காணப்படுகின்றன? ஒரு வேளை உன்னுடையவர் நேற்றிரவு வரவில்லையா? அதனால் அவர் வரவு பார்த்து விழித்துக் கிடந்தனையோ, விடியுமட்டும்?"

என வினவினாள் பைங்கிளி! தோகை பதில் சொன்னாள் :

"அட பைத்தியமே, பைங்கிளி! இதுகூடவா உனக்குத் தெரியவில்லை? காதலர் வராவிட்டால், 'வரவில்லையே, வரவில்லையே' என்று வழிபார்த்து விழி மூடாமல் கிடக்கிறேன். அவர் வந்துவிட்டாலும் விழி மூடுவதில்லை. வந்தாலும் உறக்கமில்லை. வராவிடினும் உறக்கமில்லை. என் கண்கள் சோர்வடையாமல் என்ன செய்யும்?" இந்தப் பதில் கேட்டுப் பைங்கிளி நாணமுற்றாள்; அவள் தோகையைவிட வயதில் இளையவள், அதனாலே!

"வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்"

அதிகாரம் - 118 - கண் விதுப்பழிதல்; பாடல்கள் - 1180, 1179



இளங்கவிஞர் ஒருவர், திருமணமாகாதவர். அவருக்கு மணம் முடித்திட அவாக் கொண்ட அவரது நண்பர், ஓர் அழகிய பெண்ணைப்பற்றி அவரிடம் கூறினார். அந்தச் சிற்றூரிலேயே அந்தப் பெண் இருப்பதாகவும் அவளுக்கு வயதுமுதிர்ந்த ஒரு தாயாரைத் தவிர வேறு யாரும் துணையில்லையென்றும் அந்தத் தாயைக் கேட்ட தற்கு அவர்களும் சம்மதம் தெரிவித்துவிட்டதாகவும் கவிஞரிடம் நண்பர் கூறினார். இளங் கவிஞரும் அந்தச் செய்தி கேட்டு மனமகிழ்ந்தார். தனக்கு வாழ்க்கைத் துணை யாகப் போகும் அந்த மங்கைநல்லாள் எப்படியெல்லாம் இருப்பாள் என்று கவிதைத் தேர் ஏறிக் கற்பனை வீதியில் வலம்வரத் தொடங்கினார்: நடைபயிலும் அன்னமோ - இள மடமயிலோ - நகை முத்தோ - முல்லையோ? இதழ்கள் தேன் நனைத்த சுளையோ - இன்பத்தின் எல்லையோ? - இப்படிக் கற்பனை விளைவித்த தொல்லை யால் ஏங்கிய கவிஞரை அழைத்துக் கொண்டு அவரது நண்பர், பெண்ணை நேரில் பார்த்து வரப் புறப்பட்டார். தன் கவிதைத் திறனால் உருக்கொடுத்துப் படைத்திருந்த அந்த வடிவழகியைக் காணும் ஆவலுடன் கவிஞர், நண்பருடன் அந்தப் பெண்ணின் இல்லம் சென்றார். கூடத்தில் விரித்திருந்த தாழம்பாய் மீது கவிஞரும் நண்பரும் அமர்ந்தனர். பெண்ணின் தாயார், அவர்களை மிக்க மரியாதையுடன் வரவேற்றாள். சிறிது நேர உரையாடலுக்குப் பிறகு பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரையொருவர் நேரில் காணும் வாய்ப்பினை ஏற்படுத்த அந்தத் தாய் முனைந்தாள்.

"கயல்விழி! கயல்விழி!" என இருமுறை அழைத்தாள். அடுக்களையிலிருந்து பதில் வரவில்லை.

மூன்றாவது முறை அழைத்த பிறகு, "உம்!" என்ற ஒலியெழுந்தது. "கயல்விழி! கண்ணு! அந்த மோரைக் கொண்டுவா அம்மா!" என்று தாயார் அன்பொழுக ஆணையிட்டதும், 'இட்டடி நோக எடுத்தடி கொப்பளிக்க' என்பது போலக் கயல்விழி இரண்டு மோர்க் கலயங்களைக் கையில் ஏந்திக் கொண்டு கூடத்திற்கு வந்தாள். அவற்றைத் தாயார் வாங்கி, கவிஞரிடமும் அவரது நண்பரிடமும் கொடுத்திடும்போது கவிஞரின் இதயம் அவரிடத்தில் இல்லை. அது இறக்கை கட்டிக் கொண்டு கற்பனை வானில் பறக்கத் தொடங்கிவிட்டது. அவர் எதிர்பார்த்ததற்கும் மேலாக அவ்வளவு அழகி அவள். பொங்கிப் பூரித்து வழியும் அந்த இளமை எழிலுக்குச் சிகரமாக விளங்கியவை அவளது விழிகளே என்பதைக் கவிஞர் உணர்ந்தார். அவர் உள்ளம் பேசிற்று. "ஆகா - காதளவு நீண்ட கரிய விழிகள்! அந்த விழிகளுக்குத்தான் எவ்வளவு காந்த சக்தி! கண்ணாடிப் பேழைக்குள் கருவண்டு சிக்கிச் சுழல்வது போல் கவர்ச்சிமிக்கக் கண்ணின் மணிகள்! சேல்விழி என்பதா? அல்லது என் நெஞ்சில் ஊடுருவும் வேல்விழி என்பதா? இவள் கடைக்கண் ஆணைக்குக் கடல்சூழ் நிலஉலகு மட்டுமல்ல; கதிரவன் திரியும் வானும் கட்டுப்பட்டு நடக்குமே! கண் என்றால் இதுதான் கண்! இவள் பெண் அல்ல; கண் என்று கூறுவதே பொருத்தம்." இவ்வாறு தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்த கவிஞர், எதிரே நின்று கொண்டிருந்த கயல்விழியிடம் ஏடு ஒன்றை நீட்டி, "இந்தாம்மா! இது நம் எதிர்கால இல்வாழ்வைப் பற்றி நான் எழுதிய கவிதை! எங்கே, உன் வாய் திறந்து இதனைப் படித்திடு" என்றார்.

கயல்விழி, "ஊஹூம்" என்றவாறு தலையசைத்து நின்றாள்.

"அதற்குள் இதெல்லாம் நடக்குமா? பெண்ணுக்கு வெட்கமிருக்காதா?" என்றார் நண்பர்.

"வெட்கம் மாத்திரமில்லிங்க! என் பெண்ணுக்கு எழுதப்படிக்கத் தெரியாதுங்க! அதுதாங்க அவளுக்கு ஒரு குறை" என்று தாயார், முகவாட்டத்துடன் கூறினாள்.


உடனே, இளங்கவிஞரின் மலர்ந்திருந்த இதயம் கூம்பிவிட்டது; முகம், கறுத்துப் போயிற்று; நண்பரின் காதில் மெல்லிய குரலில் சொன்னார்:

"இவள் பெண்ணல்ல; கண் என்று கருதி மகிழ்ந்தேன். இவளுக்குக் கல்வி அறிவு இல்லையாம்! இவள் முகத்திலிருப்பது கண்ணே அல்ல; புண்! என்ற முடிவுக்கு வந்து விட்டேன். என் மனமும் முறிந்தது. இந்த மண ஏற்பாடும் முறிந்தது. வாரும் போகலாம்."

நண்பரின் பதிலுக்குக் காத்திராமல் கவிஞர் அந்த வீட்டைவிட்டு வெளியேறி விட்டார். இனம் தெரியாத ஒரு அமைதி அந்தக் கூடத்தில் நிறைந்திருந்தது. கண் ணைக் காட்டிலும் கல்வியே சிறந்தது என்பதற்கு வள்ளுவர் வழங்கிடும் குறள் இது:

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

அதிகாரம் - 40 - கல்வி; பாடல் - 393



எழில் குலுங்கும் பொழில் நடுவே ஏந்திழையாள் வருவது வாடிக்கைதான்! அவள் வரும்போது அங்குள்ள மலர்கள் எல்லாம் நாணமுற்று வேறுபக்கம் திரும்பிக் கொள்ளும். காரணம், அவள் மலர்விழிக்கிடாக எந்த மலரும் அங்கில்லை. எனவே அவள் முகத்தில் பதித்துவரும் ஒளிமலர்கள் கண்டு பொழில் மலர்கள் வெட்கித் தலைகுனிவது இயற்கைதானே! ஏனோ தெரியவில்லை, இரண்டு மூன்று நாட்களாக அந்த மலர்க்கண் மங்கை, பூங்காவின் பக்கம் வரவே இல்லை.

இன்று அதோ வருகிறாள். ஆனால் நடையிலே தெம்பு இல்லை. கொடி ஒன்று பரதக்கலை பயின்றது போல்தான் அவள் நடையிருக்கும். இன்றோ அந்த நடைக்கென்ன தடையோ தெரியவில்லை. அவளைக் கண்டதும் நாணமுறும் மலர்கள், இன்றைக்கு அவ்வாறின்றித் தலைநிமிர்ந்து நிற்கின்றன. அந்த மலர்களைக் காண்பதற்கு நாணமடைந்து அவளுடைய விழிகள் வேறுபக்கம் திரும்பிக்கொண்டன. நிலைமையில் தலைகீழ் மாற்றம். பூவினை வெல்லும் அந்தப் பூவையின் விழி கண்டு பூந்தோட்டமே நாணியதற்கு மாறாக, இன்று அவள் விழிகளன்றோ பூக்களைக் கண்டு புறமுதுகிட்ட போர்வீரனைப் போல வெட்கமுற்று நிற்கின்றன.

இதுபற்றி இருமலர்கள் பேசிக்கொள்வதைக் கேட்டால் உண்மை வெளியாகிவிடும். உற்றுக் கேட்போம், மலர் இதழ்களின் அசைவுகள் உதிர்க்கும் சொற்களை!

"நம்மை நாணமுறச் செய்யும் அளவுக்கு அழகு கொழிக்கும் அவள் கண்கள் இன்று ஏன் இப்படி வாடிய மலரைக் காட்டிலும் சிதைந்த நிலையில் காட்சி தருகின்றன?"

அதற்கு மற்றொரு மலர் விடையளிக்கிறது, விளக்கமாக!

"உனக்குத் தெரியாதா சேதி? அவள் காதலன் இரண்டு நாட்களுக்கு முன்பு வேற்றூர் சென்றுவிட்டான்; இன்னும் வீடு திரும்பவில்லை. அந்தப் பிரிவை நினைத்து அழுது அழுது அவள் கண்கள் வதங்கிவிட்டன. அதனால்தான் இன்று நாம் அவள் விழிகளைத் தோற்கடித்துவிட்டோம்."

புன்னகை புரிந்தவாறு தன்னைக் கேலி செய்து பூக்கள் உரையாடியதை, அவளும் காது கொடுத்துக் கேட்டுவிட்டாள் போலும்! உடனே அவள் நெஞ்சுக்குள்ளே மெல்லிய குரலில் திருக்குறள் பாடல் ஒலிக்கிறது. சோகத்தை நமக்கு வழங்கிவிட்டுக் காதலர் வெளியூர் சென்று விட்டமையால், அழுத கண்கள் அழகினை இழந்து நறுமலர்களுக்கு நாணும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.


"சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்."

இந்தக் குறள் ஒலித்துக் கொண்டிருந்தபோதே, "கண்மணீ!" எனும் காதலன் குரல் ஒலிக்கிறது. ஒரு மின்வெட்டு! தழுவிக் கொள்கிறார்கள். வீணையும் நாதமுமாக ஆகிவிடுகிறார்கள். இதைக்கண்டு மலர்களுக்கு வியர்த்துக் கொட்டுகிறது. என் செய்வது! தங்களுக்குக் கிடைத்த வெற்றி சிறிது நேரம்கூட நிற்கவில்லையே! அந்த அதிர்ச்சியில் வியர்வை! உடனே மலர்க்கொடிகளும், செடிகளும் தென்றலை இழுத்து விசிறிக் கொள்கின்றன. மலர்களில் மோதிய குளிர்ந்த காற்று, தழுவிக்கொண்டு இருந்த காதலர்களுக்கிடையே நுழைந்து செல்கிறது. தழுவுதலுக்கிடையே காற்று நுழையவும் இடமிருக்கக்கூடாது என்று கருதித் தழுவிய அவளுக்கு அந்தச் சிறு இடைவெளிகூட ஒரு பிரிவு உணர்வை உண்டாக்குகிறதாம். காதலன் வருகையால் அழகுபெற்ற அவள் கண்கள் இப்போது பசலை நிறம் அடைந்து விடுகின்றனவாம்! காற்று நுழைந்து செல்லவும் இடமின்றிக் கட்டித் தழுவிட வேண்டும். இல்லையேல் அந்தச் சிறிய பிரிவையும் அவள் கண்கள் தாங்கிக் கொள்ளமாட்டா!

"முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்."

மிகச் சிறிய பிரிவையும் பொறுத்துக்கொள்ள முடியாமல் உறுப்புநலன் அழிகிறது என்பதற்கு வள்ளுவர் தீட்டியுள்ள இந்த ஓவியங்களுக்கு நிகரான ஓவியம் உலகில் உண்டோ? இந்தக் கேள்விக்குப் பதில் 'இல்லை! இல்லை!' என்பதுதான்.

அதிகாரம் - 124 - உறுப்பு நலனழிதல்; பாடல்கள் - 1231, 1239



'ஊர்க்காவலன்' என்பது அவன் பெயர் மட்டுமல்ல; அந்த ஊருக்கும் காவலன் அவன்தான். பத்தாயிரம் மக்களைப் பாதுகாக்கவும் பரிபாலிக்கவுமான பொறுப்பு அவனிடம் விடப்பட்டிருந்தது. ஒரு நாள் அவன் இல்லம் நோக்கி நூற்றுக்கணக்கான மக்கள் ஆடவரும் பெண்டிருமாகப் பதட்டத்துடன் ஓடிவந்தனர். வந்தவர்களை வாயிற்புறத்தில் அமரச் செய்துவிட்டு வீட்டுக் காவலர், ஊர்க்காவலனிடம் தகவலை அறிவித்தனர். அப்பொழுதுதான் உறங்கச் செல்லலாம் என்று படுக்கை அறைக்குச் சென்றவன், செய்தி கேள்வியுற்று, "அடடா! தூங்கக்கூட விடமாட்டார்கள்

போலிருக்கிறதே!'' என்று முணுமுணுத்தவாறு வாயிற்புறம் வந்தான். பகல் வேளைதான் அது; பிற்பகல்கூட அல்ல - முற்பகல் வேளைதான்! வந்தவர்களை விசாரிக்கத் தொடங்கினான். அந்த ஊரைச் சார்ந்துள்ள ஒரு குப்பத்து மக்கள் அவர்கள். குப்பத்துக்கு அருகாமையில் உள்ள மலைக்காட்டிலிருந்து புலியொன்று குப்பத்துக்குள் நுழைந்ததாகவும் எல்லோரும் சேர்ந்து தீப்பந்தங்களை எடுத்துக் கொண்டு விரட்டி விட்டதாகவும் மீண்டும் அந்தப் புலி, குப்பத்துக்குள் நுழையக் கூடுமென்றும் - எனவே அதனைக் காட்டுக்குள்ளேயே சென்று வேட்டையாடிக் கொன்று தங்களையும் தங்கள் குழந்தை குட்டிகளையும் காப்பாற்றுமாறும் அவர்கள் கண்ணீர் கொட்டி, காலில் விழுந்து முறையிட்டனர். ஊர்க்காவலன், அவர்களுக்குத் தைரியம் கூறியதோடு, அன்றைக்கே அவன் தன் ஆட்களுடன் சென்று அந்தப் புலியைக் கொன்று தீர்ப்பதாகவும் உறுதி கூறி அனுப்பி வைத்தான்.

மறுநாள் காலையில் சிற்றுண்டி அருந்தும்போது, ஊர்க்காவலனின் துணைவி அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''நேற்று வாக்களித்தபடி அந்தப் புலியைக் கொன்று குப்பத்து மக்களைக் காப்பாற்றி விட்டீர்களா?''

அவன் விடையளித்தான்.

''இல்லை! நேற்று வேறு ஓர் அலுவல் எனக்கு! அதனால் இன்றைக்குச் செல்கிறேன் வேட்டைக்கு!''

''அய்யோ ... அந்த மக்கள் எவ்வளவு நடுக்கத்தில் இருக்கிறார்கள். இதில் போய் நாட்களைக் கடத்தலாமா? உடனே அவர்களைக் காப்பாற்றுங்கள்'' என்று அவள், அவனிடம் கேட்டுக்கொண்டாள். அவனும் 'நிச்சயமாக' என்று கூறிவிட்டுச் சிற்றுண்டி முடித்து எழுந்தான். தன் தாய்க்கு உடல் நலமில்லை - போய்ப் பார்த்துவிட்டு மறுநாள் காலையில் வந்துவிடுவதாக, அவன் மனைவி அவனிடம் அனுமதி கேட்டாள். அவன் சரியென்று தலையசைக்கவே அவளும் புறப்பட்டுச் சென்றாள். கூறியவாறு மறுநாள் காலையில் திரும்பி வந்தாள். கணவன் தூங்கிக் கொண்டிருந்தான். பெருமுயற்சி செய்து அவனை ஒருவாறு எழுப்பினாள். அவன் எழுந்தவுடன் அவள் கேட்ட முதல் கேள்வி, ''அந்தக் கொடிய புலியைக் கொன்று விட்டீர்களா?'' என்பதுதான். ''அடடே! அந்த விஷயத்தை மறந்தேபோய் விட்டேன்'' என்று அவன் சொன்ன பதில் கேட்டு அவள் பதறிப்போனாள்.

''என்ன இது? நேற்று முன்தினமே செய்திருக்கவேண்டிய காரியம் - அதையும் காலம் கடத்தினீர்கள். நேற்று போயிருப்பீர்கள் என நினைத்தேன். தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இன்று கேட்கிறேன். மறந்துவிட்டதாகச் சொல்கிறீர்கள்! உங்களை நம்பியிருக்கும் மக்களுக்கு இப்படியா தொண்டாற்றுவது? சரி - சரி! இப்போதாவது புறப்படுங்கள். உடனே புறப்படுங்கள்'' என்று உரக்கக் கூறினாள் அவள். ''இப்போது என்னால் முடியவே முடியாது. அவ்வளவு சோம்பலாக இருக்கிறது. மாலையில் போகிறேன்'' என்று மீண்டும் சுருண்டு படுத்துக் கொண்டான் அந்த ஊர்க்காவலன்.


மாலையில் மனைவியின் தொல்லை தாங்க முடியாமல், புலி வேட்டைக்கான கருவிகளுடனும் ஆட்களுடனும் கிளம்பினான். காடு நோக்கிச் செல்வதற்கு முன்பு அந்தக் குப்பத்திற்குச் சென்று மேலும் சில விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினான்.


குப்பத்திற்குள் நுழைந்தபோது, அங்கிருந்த மக்கள் அவனை வெறுப்போடு பார்த்தார்கள். சிலர் அலட்சியப்படுத்தினார்கள். அவன் ஓர் இடத்தில் நின்று கொண்டு அனைவரையும் அழைத்தான். குப்பத்து மக்கள் அவனைச் சூழ்ந்து திரண்டனர். "உங்கள் வேண்டுகோளின்படி புலி வேட்டைக்குப் புறப்பட்டு விட்டேன்" என்றான். கூட்டத்தில் அழுகையுடன் கூடிய சிரிப்பொலி எழுந்தது. அந்தச் சிரிப்பு வெறிச் சிரிப்பாக இருந்தது. ஒரு மூதாட்டி அவனுக்கு எதிரே வந்தாள்.

"நீ ஊர்க்காவல் புரிகிற அழகே அழகு! உன்னிடம் நாங்கள் முறையிட்ட பிறகு இந்தக் குப்பத்தில் புலிக்கு இரையான குழந்தைகள் மூன்று! இதோ பார் - அருமைச் செல்வங்களை இழந்து நிற்கும் வேதனை உருவங்களை! உன் ஊர்க்காவல் எங்களுக்குத் துணை புரியாது என்று தெரிந்துகொண்டோம். நீ எதிலும் காலம் கடத்துபவன்; மறதியின் வடிவம்; சோம்பலின் சுரங்கம்; தூக்கத்தில் மன்னன். உன்னால் எங்களைக் காப்பாற்ற முடியாது என்று உணர்ந்தோம். நாங்களே ஒன்று திரண்டு புலியை வீழ்த்திவிட்டோம். தேவையானால் உன் ஆட்களைவைத்து அதன் தோலை உரித்துக் கொண்டுபோ! அதன் நகங்களை வெட்டிக் கொண்டுபோ! எங்கள் குழந்தைகளின் குருதியில் மூழ்கிய அதன் பற்களைப் பிடுங்கிக் கொண்டுபோ!" என்று ஆவேசமாகப் பேசினாள். ஊர்க்காவலன் குனிந்த தலை நிமிரவில்லை. வெட்கம் நெஞ்சினைத் தாக்கவே, யாரிடமும் பேசாமல் அடிமேல் அடிவைத்து நடந்து அந்தக் குப்பத்தைவிட்டு அகன்றான். அதனால்தான் வள்ளுவர் சொன்னார்: காலம் தாழ்த்தல் - மறதி - சோம்பல் - அளவு மீறிய உறக்கம் ஆகிய நான்கும்; கெடுகின்ற இயல்பு படைத்தவர்கள் விரும்பி ஏறுகிற மரக்கலமாகும் என்று! இதோ குறள்:

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்."

அதிகாரம் - 61 - மடி இன்மை; பாடல் - 605





“என்னுயிர்த் தோழி! நான் கூறுவதைக் கேட்டிடுக. நேற்றிரவு என்ன நடந்தது என அறியத் துடிக்கின்றாய் நீ! முதலில் அதற்கு முதல் நாளிரவு நடந்ததை உனக்குச் சொல்லுகிறேன். ஊர் உறங்கும் வேளையிலே வருவதாகச் சொல்லிப் போயிருந்தார் அவர். ‘யானைத் தலைகளைப்போல் உருண்டு கிடக்கும் சிறிய கற்பாறைகளுக்கருகே நிலவொளிபட்டு வெள்ளித் தகடுகளைப் போல அசைந்து கொண்டிருக்கும் நீரருவியின் பக்கம் நீ வந்து காத்திரு பெண்ணே - நான் எப்படியும் வந்துவிடுவேன் கண்ணே’ - எனக்கூறி, என் கழுத்துக்குக் கீழே அவர் பற்குறியும் இட்டுச் சென்றார். கண் பார்வைபடும் இடங்களில் சிவந்திருந்தால் வீட்டிலோர் களம் அமைந்துவிடும். விறகு வெட்டும் கருவியைத் தூக்கித் தலையைப் பிளப்பேன் எனக் குதித்திடுவார் தந்தை! அதை அவரும் உணர்ந்திருந்ததாலே, என்னை முல்லையினைத் தொடுவதுபோல் தொல்லையின்றித் தொட்டுச் சுகம் கொட்டியளந்தார். எனினும் அவர் இட்டுச் சென்ற அடையாளங்கள், அவர் முகங்காட்டி எனை மயக்கும் கண்ணாடிகளாய் இருந்தன. அவர் குறிப்பிட்ட நேரம் எப்போது வருமெனத் தவம் கிடந்து சிறு பாறைகளுக்கருகேயுள்ள சிற்றருவியோரம் சென்று நின்றவள்தான்! அப்படியே நின்று கொண்டேயிருந்தேன். அருவியினை முத்தமிட்டு முத்தமிட்டு நிலவும் களைப்புற்றது போலும்! முகிற் போர்வையினை இழுத்து மூடிக்கொண்டு உறங்கிவிட்டது. அங்கிருந்த நொச்சி மரமொன்றில் சாய்ந்திருந்த என் விழிகளும்

சோர்ந்து போயின. என் வீட்டுச் சேவல் பொழுது விடியப்போவதை அறிவித்து விட்டது. தாய் தந்தை விழிப்பதற்குள், ஊர் நடமாடத் தொடங்குவதற் குள் மனை திரும்ப வேண்டுமென்று விரைந்தோடி இல்லில் புகுந்து கொண் டேன். நேற்றுப் பகல் முழுவதும் நெருப்பின் மீது நடந்தேன்; நெருப்பின்மீது அமர்ந்தேன்; நெருப்பின் மீதே படுத்தேன். என் துயர் கண்டோ என்னவோ கதிரவனும் தன் கடமையை விரைவில் முடித்துக் கொண்டு மேற்றிசையில் ஓய்வு கொண்டான்.

அதே பாறைகள்! அதே சிற்றருவி! முதல் நாளைப்போலவே நொச்சி மரத்தடியில் நின்றுகொண்டு காத்திருந்தேன். அருவியின் இசை, மரங்களின் ஒலி, மரக்கிளைகளில் அமர்ந்திருந்த புள்ளினங்களின் சிறகடிக்கும் ஓசை, என்னைப் பரபரப்பில் ஆழ்த்திக் கொண்டு இருந்தன. சற்றுத் தொலைவிலே அவர் வரும் குறிப்புத் தெரிந்தது. ஆம், அவரேதான்! முதல் நாள் இரவு முழுதும் என்னைச் சோதனைக்கு ஆளாக்கிய அவரேதான்!

தோழி! அவருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்று திட்டம் தீட்டினேன். அதனைச் செயல்படுத்த மிக்க உறுதியாக இருந்தேன். அவரிடம் நான் புரியும் ஊடலில், இனி அவர் ஒருமுறை, தான் அளித்த வாக்குறுதியைத் தவறக்கூடாது என்ற அளவுக்குப் பாடம் கற்பித்திடத் துணிவு கொண்டேன். 'என் உயிரல்ல, என் இன்பமல்ல. இனி இப்படி உன்னை ஏமாறச் செய்திட மாட்டேன். அய்யோ பாவம், நேற்றிரவெல்லாம் எனக்காகக் காத்திருந்த உன் கால்கள் நோகுமே... எங்கே அந்த வலி போக்கட்டுமா?' என்று அவர் கெஞ்சி, நெளிந்து வளைந்திடுகிற வரையில் நான் அவரை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை; ஊடல் முடித்திடப் போவதில்லை என என்னைத் திடப்படுத்திக்கொண்டு ஊடல் போருக்கு ஆயத்தமானேன். அவரும் அருகே வந்துவிட்டார். அவர் முகத்தில் அச்சம் குடிகொண்டிருந்ததை நிலவின் ஒளி எனக்குத் தெளிவாக்கியது. முதல் நாள் என்னை ஏமாற்றிய தவறு, ஊடலுக்குத் தொடக்கவிழா நடத்தப் போகிறதே என்ற அச்சம்தான் அது.

அவர் மிக அருகே வந்துவிட்டார்! நான் அவரை நோக்கினேன். அசைவற்று நின்றேன். அதற்குள் பெரிய துரோகம் நடந்துவிட்டது. அந்தத் துரோகி வேறு யாருமல்ல! என் நெஞ்சம்தான்! நான் ஊடலைத் தொடங்குவதற்குமுன், அந்த அவசரக்கார நெஞ்சு என்னைப் பிடித்துத் தள்ளிவிட்டு அவரைப் போய்க் கூடிவிட்டது! பிறகு ஊடலுக்கு என்ன வேலை? என்னருகே வந்துவிட்ட அவரை ஓடிப்போய்த் தழுவிக்கொண்டேன். ஊடல் தலை நீட்டவேயில்லை. கூடலின் முற்றுகை பலமாகிவிட்டது. என் நெஞ்சே அவசரப்பட்டு என்னைக் காட்டிக் கொடுத்துவிட்ட பிறகு நான் என்ன செய்யமுடியும்? என் தாயும் தந்தையும் ஒப்புதல் அளித்து விட்டார்களாம். அந்தச் செய்தியை சிறிது நேரங்கழித்து அவரே சொன்னார். பிறகு அந்தத் தழுவல் இன்பத்தைப் பற்றி விவரிக்கவா வேண்டும்?"

தலைவி மகிழ்ச்சியில் ஆழ்ந்திருப்பது கண்டு தோழி, களிபேருவகை கொண்டாள்.

"புலப்ப லெனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு."

அதிகாரம் - 126 - நிறையழிதல்; பாடல் - 1259



வில்லவன் என்ற வீரன், தன் இல்லத்து வாயிற்புறம் நின்றிருந்தான். அப்போது எதிர்ப்படைகளின் போர்முரசு, அவன் நாட்டு எல்லையில் கேட்டது. அதற்கிடையே அவனது மன்னனின் அழைப்பும் கிட்டியது. 'நாட்டுக்குள் நுழையும் பகையை விரட்டிட வீட்டுக்கொரு வீரர் கிளம்பிடுக' என வேந்தன் அறிவித்தான். பிறந்த மண்ணைக் காப்பாற்ற என்றைக்கும் தயாராக இருக்க வேண்டும்; எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்பதுதானே வீரர்கட்கு இலக்கணம். அந்த இலக்கணத்தின் எடுத்துக்காட்டாக விளங்குகிறவனே வில்லவன்.

அவன், களம் புகுதற்கேற்ற உடைகளை அணிந்து கொண்டான். கவசம் பூண்டான். கூர்வேல், கேடயம், வாள் எனும் போர்க்கருவிகளை எடுத்துக் கொண்டான். தனது

குதிரையின்மீது ஏறிக்கொண்டு, மன்னர் குறிப்பிட்ட இடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

எதிரிகளை வழியிலேயே மடக்கித் துரத்திடும் திட்டத்துடன் மன்னர், தனது படைவீரர்களைக் கோட்டை முகப்பில் அணிவகுத்து நிற்கச் செய்து, ஆணையிட்டதும் புறப்படுவதற்குத் தயாராக இருக்குமாறு பணித்தார்.

தலைநகரையும் தலைநகரைச் சுற்றிலுமுள்ள ஊர்களையும் சேர்ந்த வீரர்கள் ஒவ்வொருவராகக் குதிரையில் வந்து, அந்தப் படை வரிசையில் இணைந்த வண்ணமிருந்தனர்.


வில்லவனும் குறித்த நேரத்தில் அந்தப் படை அணிவகுப்பில் போய்ச் சேரும் ஆர்வத்துடன் தன் குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டிருந்தான். ஆனால், அவன் எதிர்பார்த்தது நடக்கவில்லை. சற்றும் எதிர்பாராத வகையில் அவன் ஏறியிருந்த குதிரை, ஒரு துள்ளுத் துள்ளி, அங்குமிங்கும் ஆடி அசைந்து, அவனைக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டது. கீழே விழுந்த வலியைவிட, குதிரை அவனைத் தள்ளிவிட்டு ஓடிய அதிர்ச்சியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. குதிரை இல்லாமலே ஓடிப்போய் அந்த அணிவகுப்பில் சேர்ந்து கொள்ளத் துடித்தான். காற்றினும் கடு வேகமாக ஓடினான், தன் நாட்டுப் படை வீரர்களுடன் சேர்ந்து பிற நாட்டுப் பகையை வீழ்த்த!

இந்தக் காட்சியை வள்ளுவர் பார்த்துக்கொண்டே நின்றார். எவ்வளவு நம்பிக்கையுடனும் அன்புடனும் வளர்க்கப்பட்ட குதிரை; அவனுடன் எவ்வளவு பழகிய குதிரை; அந்தக் குதிரை அவனுக்கு முக்கியமான நேரத்தில் பயன்படாதது மட்டுமல்ல; அவனைக் கீழேயும் தள்ளி விட்டல்லவா போய்விட்டது.

அடடா! அந்த வீரன், தன் குதிரையின் செயலால் எவ்வளவு மன மொடிந்து போயிருப்பான். இவற்றையெல்லாம் எண்ணியது வள்ளுவரின் மனம். அந்தக் காட்சியை எதற்கு ஒப்பிடலாம் என்று சிந்தித்தார். "போர் வந்த நேரத்தில் களத்தில் தள்ளிவிட்டு ஓடிவிடும் குதிரையைப் போன்றவர்களின் நட்பைவிட ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருப்பதே சிறந்தது" என்ற அறிவுரைக்கான குறள் பிறந்தது. அதுதான் இது;

"அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை."

அதிகாரம் - 82 - தீ நட்பு; பாடல் - 814



கலிங்கனும் கதிரவனும் உற்ற நண்பர்கள். சில நாட்கள் பிரிந்திருந்து ஒருநாள் சந்தித்தனர். ஊர்க் கதைகள் சிலவற்றைப் பேசினர். கதிரவன், கலிங்கனிடம் மெத்த ஆர்வத்துடன் கேட்டான்.

"நண்பா, இப்போது உன் கோபமெல்லாம் எப்படியிருக்கிறது? இன்னும் சினங்கொண்டு சீறி விழுந்தபடிதான் இருக்கிறாயா? தென்றல் என மாறித் திருந்தி விட்டாயா?"

கதிரவனின் கேள்விக்குக் கலிங்கன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான்:

"அன்புத் தோழனே! நீ வியப்படைகிற அளவுக்கு என்னிடத்திலே மாற்றம் ஏற்பட்டு விட்டது! நான் ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன் கேள்! நேற்று நடந்த நிகழ்ச்சிதான்! கேட்டால் நீ என்னைப் பாராட்டுவாய்!"

"அப்படி என்ன அற்புத நிகழ்ச்சி? அதையும்தான் சொல்லேன்; கேட்கிறேன்."

"நேற்றுப் பாசறைப் பயிற்சி முகாமில் உட்கார்ந்திருந்தேன். என்னுடன் போர் வீரர்கள் பலரும் அமர்ந்திருந்தார்கள். அப்போது தளபதி அந்தப் பக்கம் வந்திருக்கிறார். நான் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. அவர் வருவதைக் கண்ட மற்ற வீரர்கள், எழுந்து நின்று மரியாதை செலுத்தியிருக்கிறார்கள். அவர் அருகே வந்த

பிறகுதான் எனக்குத் தெரிந்தது. நான் எழுந்து நின்று வணக்கம் செலுத்துவதற்குள், தளபதி என்னிடமே வந்துவிட்டார். என் கையில் கண்ணாடிப் பாத்திரமொன்று இருந்தது. அப்போதுதான் தண்ணீர் குடித்துவிட்டு அந்தப் பாத்திரத்தைக் கையில் வைத்திருந்தேன். கண் இமைப்பதற்குள் தளபதியின் முரட்டுக் கால், அந்தக் கண்ணாடிப் பாத்திரத்தை உதைத்துக் கீழே உருட்டியது. பாத்திரம் உடைந்து சிதறியது. பதறிப் போய் எழுந்தேன். முகத்தில் காரித் துப்பிவிட்டுப் போய்விட்டார். நான் அமைதியாக நின்றேன். சரி! சினம் காக்கவேண்டும்; அதுவே சிறந்தது என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். நண்பா! என் கையில் இருந்த பாத்திரத்தைக் காலால் உதைத்தமைக்கும், என் முகத்தில் காரி உமிழ்ந்தமைக்கும், எனக்குக் கோபம் மட்டும் வந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்! என் தலைக்கே ஆபத்து வந்திருக்கும் அந்தத் தளபதியால்! என் இன்னுயிர்த் தோழனே! இப்போது சொல், நான் சினம் காப்பவனாகிவிட்டேனா இல்லையா?"

கலிங்கன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த கதிரவன் பதில் சொன்னான்:

"கலிங்கா, நேற்று நடந்ததைச் சொன்னாய் இப்போது! இரண்டு கிழமை களுக்கு முன் நடந்தது நினைவிருக்கிறதா? நான் உன் இல்லத்துக்கு வந்திருந் தேன். வெயிலில் திரிந்துவந்த காரணத்தால் வந்ததும் வராததுமாக வேட்கை மிகுதியால் தண்ணீர் கேட்டேன். நீ உன் தம்பியைக் கூப்பிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னாய். அவன் ஓடோடிச் சென்று ஒரு கண்ணாடிக் குவளையில் நீர் கொண்டு வந்தான். வந்த அவசரத்தில் குவளையைக் கீழே போட்டுவிட்டான். கண்ணாடிக் குவளை நொறுங்கிச் சிதறிவிட்டது. உடனே நீ என்ன செய்தாய்? அந்த இளந் தளிரின் கன்னங்களில் உன் கைகள் விளையாடின. அவன் 'அய்யோ! அம்மா!' என்று அலறிக்கொண்டே உள்ளே ஓடினான். 'ஏனப்பா, இப்படி அவன் கன்னம் வீங்கும்படி அடித்தாய்?' எனக் கேட்டுக்கொண்டு வந்தார்கள் உன் தாயார்! என்ன பதில் சொன்னாய்? சே, சும்மா கிட; பிள்ளைக்கு வாதாட வந்துவிட்டாயா? மரியாதையாக உள்ளே போ!' இது, நீ உன் தாயாரிடத்திலே காட்டிய கோபம்! கலிங்கா! நான் ஏன் அதை நினைவுபடுத்துகிறேன் புரிகிறதா! தளபதி காலால் உதைத்துக் காரி உமிழ்ந்தபோது சினத்தை அடக்கிக்கொண்டது போற்றத்தக்கதல்ல! காரணம், அங்கே உன் சினம் செல்லாது! அதனால் அந்தச் சினத்தை அடக்கினால் என்ன - அடக்காவிட்டால் என்ன? நீ சினத்தை அடக்கியிருக்க வேண்டிய இடம், உன் தம்பியிடமும் தாயிடமும்!

"இதைத்தானப்பா வள்ளுவர் கூறுகிறார்: நம் சினம் பலிக்குமிடத்தில் அதனை அடக்க வேண்டும்; சினம் பலிக்காத இடத்தில் அடக்கினால் என்ன- அடக்காவிட்டால் என்ன! சினம் செல்லுபடியாகாத இடத்தில் அடக்குவது பெரிய காரியமல்ல; செல்லுபடியாகும் இடத்தில் அடக்குவதே சிறப்புக்குரியதாகும்."

கதிரவன் மேற்கோள் காட்டிய குறளைக் கேட்டுக் கலிங்கன் தலை குனிந்து கொண்டான்.

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்."

அதிகாரம் - 31 - வெகுளாமை; பாடல் - 301



சேரன் வில்லோ புருவம்? வீரன் கணையோ விழிகள்? சிந்தைக்கு விருந்தோ இந்தக் காந்தச் சிலை? - என்றெண்ணத் தோன்றும் இந்த எழுதாத சித்திரப் பெண் - ஏழடுக்கு மாளிகையில் எழில்காட்டும் கண்ணாடியின் எதிரேயும் இல்லை; இயற்கையின் அழகு மலிந்த அந்திநேரத் தோட்டத்து நடுவிலேயும் இல்லை; அடுக்களையிலே அமர்ந்திருக்கிறாள். ஏன்? கேள்வி குடையத்தான் செய்யும்.

அந்தப் பட்டு நிகர்ப்பாவை, தன் காதலனுக்குப் பிட்டுத் தயாரிக்கிறாள். உப்பிட்டு வளர்த்த பெற்றோர், அவளை மலருக்கு ஒப்பிட்டு அவனிடம் தந்தார்கள். அவனோ கொப்பிட்டு வளரும் பகை சாய்க்கக் கொடுவாள் ஏந்திச் சென்றான். அவள் கும்பிட்டுக் கேட்டும் அவன் இருந்தானில்லை. நகர்ந்து ஒழிந்தன நாட்கள். அவளோ நெஞ்ச ஏடுகளைத் திருப்புகிறாள். நெடுஞ் சுவரிலேயுள்ள கோடுகளை எண்ணுகிறாள். பால் கணக்கு, தயிர்க் கணக்குக் காட்டும் கோடல்ல அவை. அவளின் பற்றுக்கோடு, அவளை விட்டுப் அவன் பிரிந்திருக்கும் நாட்களின் கணக்கு! கோடுகளைப் பார்த்துப் பெருமூச்செறிகிறாள். இன்றுதான் வருவானோ?- இன்பம் தருவானோ இல்லையோ?- இன்றிரவும் தொல்லையோ? - என ஏங்குகிறாள், தாமரை மொட்டு நிகர் தனம் படைத்த பேரழகி. தான் சுட்டுத் தரும் பிட்டுண்ணப் பேரழகன் வரக் காணேனே எனத் துடிக்கிறாள். அது மட்டுமா? அத்தான் தன்னைப் பிரிந்து எத்தனை நாட்களாயின என அறிவிக்கும் அந்தச் சித்திரக்கோடுகளைத் தொட்டுத் தொட்டு, எண்ணி எண்ணி, அவள் விரல்களும் தேய்ந்துவிட்டதாகக் கூறுகிறார் குறும்புக்கார வள்ளுவர் - அதற்கு இதோ குறள்.

> "வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
> நாளொற்றித் தேய்ந்த விரல்."

அதிகாரம் - 127 - அவர்வயின் விதும்பல்; பாடல் - 1261

வழி பார்த்துப் பார்த்து கண்களும் மங்கின - நாட்கோடுகளை எண்ணி விரல்களும் தேய்ந்து விட்டன என்பது பொருள்.



அவை கூடியது. ஆயிரக் கணக்கானோர் அரங்கின் மேடையையே எதிர்நோக்கிய வண்ணமிருந்தனர். அன்று உரை நிகழ்த்த வருபவரைப் பற்றி மக்கள் அவ்வளவு கேள்விப்பட்டிருந்தார்கள். ஏழெட்டு மொழிகள் கற்றவர் மட்டுமல்ல; அந்த மொழிகளின் இலக்கணங்களை ஆய்ந்து உணர்ந்த ஆற்றல் படைத்தவர். காலையில்

மலரும் அவர் கண்கள், ஏடுகளின் மீதே மலருமாம். இரவில் நீண்டநேர விழிப்புக்குப் பிறகு இலக்கிய நூல்களோடு இணைந்துதான் அவர் விழிகள் மெல்ல மூடிக் கொள்ளுமாம். அவர் இல்லமே பெரியதோர் நூல்நிலையமாகக் காட்சி தரும் என்பார்கள். அவர் படித்து முடிக்காத நூல்களே உலகத்திலே இல்லை. இனிமேல் யாராவது புதிதாக எழுதினால்தான் உண்டு - அவ்வளவு படித்திருக்கிறார். இலக்கியங்கள், வரலாற்று ஏடுகள், ஆராய்ச்சித் தொகுப்புகள், இதிகாச புராணங்கள், வானநூல், நிலநூல் - இப்படிப் பல கற்ற பேரறிவாளர் ஒருவர் உரை நிகழ்த்த வருகிறார் என்ற செய்தி பரவிய பிறகு, பெருந்திரளாக மக்கள் கூடுவதற்குக் கேட்கவா வேண்டும்!

நீண்ட நேரம் மக்களைக் காத்திருக்குமாறு செய்யாமல், அவரும் அரங்க மேடையில் வந்தமர்ந்தார். சங்கத்தின் அமைப்பாளர் எழுந்து, எதிரில் குழுமியிருந்தோர்க்குச் சொற்பொழிவாளரை அறிமுகப்படுத்திச் சில புகழுரைகளை உதிர்த்தார்.

"கற்றது கைம்மண் அளவு-
கல்லாதது உல களவு"

என்று கூறுவார்கள். ஆனால் அதற்கு மாறாக, இன்றைய சொற்பொழிவாளர் "கற்றது உலகளவு-கல்லாதது கைம்மண் அளவு" என்று கூறலாம். அவ்வளவு கற்றவர் ஒருவர், நமது அவைக்குப் பெருமை வழங்க வந்திருக்கிறார். அவர் இப்பொழுது உரையாற்றுவார்."

சங்க அமைப்பாளரின் அறிவிப்பைத் தொடர்ந்து கையொலி, கடலொலியென எழுந்தது. சிறப்புச் சொற்பொழிவாளர் உரை நிகழ்த்தத் தொடங்கினார்.

"அன்புருவான பெரு மக்களே" என விளித்துவிட்டு ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டார். அவரது சொற்பெருக்கிற்கு இலக்கியங்களின் மேற்கோள்கள் பயன் பட்டன. வரலாற்று ஆதாரங்கள் வந்து குவிந்தன. பேச்சு நீண்டு கொண்டே சென்றது. பேசத் தொடங்கி சில நாழிகைகள் முடிவதற்குள்ளாக, மண்டபத்திலிருந்த கால்பகுதி மக்கள் மெல்ல எழுந்து வெளியே சென்று விட்டனர்.

அவர் பேசிக்கொண்டேயிருந்தார். புத்தகங்களை வாய்விட்டுச் சற்று உரக்கப் படிப்பதுபோல் இருந்தது அவர் பேச்சு.

அவர் உரைநிகழ்த்தி முடிவதற்குள்ளாக, முக்கால் பகுதிக் கூட்டம் கலைந்து போய்விட்டது. சங்க அமைப்பாளர் எழுந்து, கலைந்து செல்வோரைப் பார்த்து, "அருள்கூர்ந்து அமர்ந்திடுக! அரிய கருத்துக்களைக் கேட்டிடுக! சென்றவர் போக எஞ்சியிருப்போராவது இருந்து கேட்பதே சிறப்புச் சொற்பொழிவாளருக்குச் செய்யும் பெருமையாகும்" எனக் கேட்டுக் கொண்டார். அதற்குக் கட்டுப்பட்டு முதல் மூன்று வரிசைகளில் அமர்ந்திருந்தோர் எழாமல் இருந்தனர். ஆனால், உடலை அடிக்கடி நெளித்துக் கொண்டனர். பலர் 'கொட்டாவி' விடவும் செய்தனர். சிலர் தலைக்குக் கையை முட்டுக்கொடுத்துக் கொண்டு தூங்கினர். இடையிடையே 'குறட்டை' ஒலியும் கிளம்பிற்று. ஒருவாறு சொற்பொழிவு முடிந்தது. மண்டபத்தில் மிச்சமிருந்தோர், விடுதலைபெற்ற உணர்வோடு இல்லம் நோக்கிப் புறப்பட்டனர்.

சங்க அமைப்பாளருக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. மெத்தவும் கற்ற ஒருவரை அழைத்து இழிவு செய்து விட்டது போன்ற எண்ணத்தால் நாணமுற்றார்.

எனவே, அவர் சொற்பொழிவாளரிடம் பணிவாகக் கூறினார்: "நடந்தவைகளை மறந்துவிட வேண்டுகிறேன். தாங்கள் எவ்வளவு கற்றறிந்த பெருமகனார் என்பதை இவ்வூர் மக்கள் புரிந்துகொண்டு அதற்கேற்ற மதிப்பினைத் தந்திடவில்லை. அதற்காக என்னைப் பொறுத்தருள்க" என்று!

சொற்பொழிவாளர் புன்னகை மிளிர, சங்க அமைப்பாளரைத் தட்டிக் கொடுத்தார்.

"நண்பரே! அது இவ்வூர் மக்கள் குறையன்று! என் குறைதான். நான் நிறையக் கற்றவனே தவிர, அவற்றை நிரந்து இனிதாகச் சொல்லும் வல்லமை பெற்றவனல்ல. கருத்துக்களை ஒழுங்குறக் கோத்து இனிமைபொழியச் சொல்லுகின்ற ஆற்றல்படைத்தவர்களின் ஏவலை, உலகம் விரைந்து கேட்கும் என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அது மட்டுமல்ல, வள்ளுவர் என்னைப் பற்றி என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? கொத்தாகப் பூத்திருந்தாலும் மணம் கமழாத மலரைப் போன்றவனாம் நான்! அதாவது, தாம் கற்ற பல்வேறு நூல்களின் கருத்துக்களைப் பிறர் உணருமாறு விரித்துரைக்கும் ஆற்றல் இல்லாதவர், கொத்தாகப் பூத்திருப்பினும் மணம் வீசாத மலரைப் போன்றவர் என்பது வள்ளுவரின் முடிவு."


அமைப்பாளருக்கு ஆறுதல் கூறிவிட்டுச் சொற்பொழிவாளர் விடை பெற்றுக் கொண்டார்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

"இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்"

அதிகாரம் - 65 - சொல்வன்மை; பாடல்கள் - 648, 650





மலையென மோதிய மாற்றாரின் படையைத் தூள் தூளாக்கிவிட்டுத் திரும்பும் மாவீரன், மழுங்கிப் போயிருக்கும் தன் வேலின் கூர்மையைக் காணுகிற நேரத்தில், இப்படித்தான் நம் வருகையை நோக்கிக் காதலியின் வேல் விழிகளும் மங்கியிருக்கும் என்று கவலை கொள்கிறான். மன்னன், தனக்கென ஏற்பாடு செய்த பரிசளிப்பு விழாவிலேகூட மனமின்றிக் கலந்து கொள்கிறான். பாவை தரும் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளக் காத்திருக்கும் தன் கன்னத்தைத் தன்னையறியாமல் தடவிப் பார்த்துக் கொள்கிறான்; ஓடி வருகிறான் வீடு நோக்கி. அவன் எதிரே வந்ததும்-வந்து, 'வஞ்சீ!' என அழைத்ததும்கூட அவளுக்குத் தெரியவில்லை. அப்படி மெய்மறந்து வழிமேல் விழி வைத்துக் கிடக்கிறாள், "வரக்காணேனே கண்ணாளனை" என்ற சோக கீதத்தின் அலைகளை எழுப்பியபடி!

'த்சு' என்ற ஒலிக்குப் பிறகே திடுக்கிடுகிறாள். கன்னத்தை ஈரமாக்கியவன் தன் எண்ணத்தில் நிறைந்துவிட்ட மன்னவன்தான் என உணருகிறாள் - பிறகு பேச்சில்லை!

அன்றிரவு, பவனிவரும் நிலவுக்கு இருவருமே வாழ்த்துப் பாடுகிறார்கள்; பள்ளியறையிலே துள்ளி விளையாடுகிறார்கள். ஒருவரையொருவர் இழுத்தும் போர்த்தும் - இதழோடு இதழ் சேர்த்தும் இன்பவிருந்து அருந்துகிறார்கள். இன்ப விருந்து இன்னும் சுவையாக இருப்பதற்கு ஓர் அருமையான கனியையும் அளிக்கிறார் திருவள்ளுவர், காமத்துப்பால் வாயிலாக!

அந்தக் கனி-முக்கனியினும் சுவையானது! முத்தக் கனிக்கு மூத்த முழுமுதல் கனி அது. சித்தங் களிப்பேற்றும் சிற்றின்பக் கனிக்கு அடிப்படை அமைக்கும் அன்புக் கனியாகும் அது.

இந்தக் கனியின் பெயர்தான் 'ஊடல்கனி'. இன்பப் போதையூட்டும் இந்தக் கனியை உண்ட பிறகே இளங்காதலர்க்கு ஆனந்த மயக்கம் ஏற்படுகிறதாம். இதை உண்ணாது தேடும் இன்பம், உருசி உடையதே எனினும் 'முழுமை' அடைந்ததல்ல என்பது வள்ளுவர் கண்ட உண்மை-வாழ்வில் துணை பெற்றோர் வழங்கும் அனுபவ ஏடு!


கட்டிலறையிலே-கணவனும் மனைவியும் செல்லமாகச் சண்டை போட்டுக் கொள்ளுங்கள்-ஏன் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும் தெரியுமா? ஒன்று சேருவதற்காக; ஊடல் புரிக! ஏன்? கூடுவதற்காக! - கிண்டல் நிறைந்த அழகான உண்மையல்லவா இது! செல்லச் சண்டை - பிறகு இருவரும் தனித்தனியே! ஓரிரு நாழிகைகள் நகருகின்றன. அதுவரைகூடப் பொறுக்காது அதற்குள்ளாகவே மங்கிய ஒளியில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தல் - இருவரும் ஏககாலத்தில் பார்த்துக்கொண்டு ஒருவருக்கொருவர் நாணுதல் - நெருங்குதல் - கரம்படுதல் - "சூ என்னைத் தொடவேண்டாம்" என்ற கடுமொழி - ஆனால் கரும்பை வெல்லும் மொழி! அவன் கையை எடுத்துக் கொள்ளல்-பிறகு அவள், அவன்மீது கைபடுமாறு நெருங்கல். "அட நீ ஏன் என்னைத் தொடுகிறாய்?" அவன் சீறுதல் செல்லமாக!

"நீங்கள் மட்டும் ஏன் தொட்டீர்களாம்"- உரிமைக் குரல் இப்படி!-

"நீயும் தொடு; நானும் தொடுகிறேன்" ஒருவருக்கொருவர் போட்டாப்போட்டி! பிறகு-ஊடல்கனி தந்த உற்சாக வெள்ளம்! இந்த ஊடல் எவ்வளவு அவசியமானது என்பதைத்தான் வள்ளுவர் அழகாக எழுதிக் காட்டுகிறார்-இதோ குறள் :-

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின்."

அதிகாரம் - 133 - ஊடலுவகை; பாடல் - 1330



கல்லைக் கலையாக்கும் சிற்பியொருவனும் சித்திரங்களைப் பேசவைக்கும் ஓவியன் ஒருவனும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தவாறு மலைச்சாரலில் நடந்து கொண்டிருந்தனர். இளங்காற்றின் இன்பத்தழுவல் அவர்தம் கற்பனை உள்ளத்திற்கு அமுதமாக இருந்தது. கரிய யானைகளும் வெள்ளைக் குதிரைகளும் மலைமுகடுகளில் நடைபழகுவதுபோல, வான்முகில்கள் பல்வேறு வடிவங்களில் பரவிக்கிடந்தன. இருவரும் தாங்கள் படைத்த அற்புதக் கலைகளைப்பற்றி ஒருவரோடொருவர் உரையாடி மகிழ, அந்த வளம் கொஞ்சும் பகுதி ஏற்றதாக இருந்ததை உணர்ந்து, உவகை கொண்டனர். பெருங்காற்றில் வேகமாக அசைந்தாடும் நரை மூதாட்டியின் வெள்ளிய கூந்தலையொத்துத் தொலைவில் காட்சி தந்த நீர்வீழ்ச்சியைப் போல, தான் ஓர் ஓவியம் தீட்டியிருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொண்ட நண்பனைப் பார்த்து, "அதோ மயிலாடுவதை, மான் ஒன்று பார்த்துக் கொண்டு நிற்கிறதே, அதேபோலச் சிற்பமொன்று நேற்றுத்தான் கல்லில் வடித்து முடித்தேன்" என்று களிப்புமிகக் கூறினான் அந்தச் சிற்பி.

உரையாடலுக்கிடையே ஓவியன், விழிகளை அகல விரித்தவாறு, "அடடே! யாரது? அழகே உருவெடுத்து வருவதுபோல் தெரிகிறதே" எனத் திகைத்து நின்றான். அவன் நோக்கிய திக்கில் சிற்பியும் நோக்கினான். வருவது யார் என்று சிற்பிக்குத் தெரியும். ஓவியன் எதிரே வரும் அழகோவியத்தை வர்ணித்திடத் தொடங்கிவிட்டான்.

"நண்பரே! நான் இதுவரையில் இப்படி ஓர் அழகின் மலர்ச்சியை என் தூரிகையால் உருவாக்கியதே இல்லை."

"ஓவியரே! வருவது வண்ணக் கிளியல்ல; வடிவழகன்; கட்டிளங்காளை; அது தெரிகிறதல்லவா உமக்கு?"

"தெளிவாகத் தெரிகிறது. தேன் மணக்கும் தமிழால் இந்த ஆணழகனைப் புகழ்ந்து பாட அருகில் யாரும் புலவர்கள் இல்லையே என்று கவலைப்படுகிறேன். அவன் நடை கண்டு வியக்கிறேன். அண்மையில் வந்து கொண்டிருக்கிறானே- ஆகா- அவன் முகத்தில்தான் எவ்வளவு கவர்ச்சி- வண்ணத் தூரிகையின் வளைந்த நுனிபோல வாகான இளம் மீசைகள் - செந்தாமரையின் இதழை எடுத்து அவனது மேனிக்குத் தோலாக்கினாளோ இயற்கை அன்னை? சிற்பியாரே! அர்ச்சுனன், மன்மதன், கண்ணன், முருகன் என எத்தனையோ ஆடவர் பற்றிப் படித்து மிருக்கிறேன், அந்த ஆணழகர்களை ஓவியமாகத் தீட்டியும் இருக்கிறேன். ஆனால், இன்று காணும் ஆண்மகனின் எழிலுக்கு அவை ஈடாகமாட்டா என்பதே என் கருத்தாகும்."

ஓவியனின் புகழ்ப்பாட்டை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சிற்பி, சிரித்துக்கொண்டே பேச ஆரம்பித்தான்.

"உமது பாராட்டு அனைத்தும் பொருத்தமானதே! ஆனால் ஒன்று - நீர் இப்போது காணுகிற அந்த அழகின் உருவம் மனிதனல்ல; மண்ணால் மிகத் திறமையாகச் செய்யப்பட்ட ஒரு பொம்மை."

இதைக் கேட்டதும் ஓவியனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்ன விளையாடுகிறீர்? உமது கூற்றை நம்பிட நான் ஒன்றும் அறிவிலி அல்ல! பொம்மை, இப்படித்தான் நடந்து வருமோ? நம்மை நோக்கி வந்து கொண்டே யிருக்கிறானே - அடேடே! இடையே ஒரு சிறு வாய்க்கால் - அதைக் கூடத் தாண்டிப் பாய்ந்து வருகிறான். பொம்மையாம், பொம்மை! நன்றாக வேடிக்கை செய்கிறீர்!"

'ஓவியரே! பொம்மையல்ல - உண்மைதான்! மனிதன்தான்! நானறிவேன் இவனை நன்றாக! ஆனால் ஒன்று; இவனை மனிதன் என்று யார் ஒத்துக் கொண்டாலும் சரி; திருவள்ளுவர் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை."

"அப்படியென்றால்? புரியும்படியாகச் சொல்லும் சிற்பியாரே!"

"நுட்பமானதும் ஆராய்ந்திடக்கூடிய தெளிவு நிறைந்ததுமான அறிவு இல்லாத ஒருவன், எவ்வளவு அழகும் கவர்ச்சியும் உடையவனாக இருந்தாலும் கூட, அவன் மண்ணால் உருவாக்கப்பட்ட பொம்மைக்குச் சமமானவனே என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அதற்குச் சரியான எடுத்துக்காட்டுத்தான் இவன்."

பேசிக் கொண்டிருக்கும்போதே, அந்த அழகன் அவர்களுக்கு மிக அருகே வந்துவிட்டான். சிற்பி, அவனைப் பார்த்து, "என்ன அழகா! நலம்தானே?" என்று கேட்டுவிட்டு, அவனுக்கு ஓவியனை அறிமுகப்படுத்தி வைத்தான்.

"ஓகோ! ஓவியரா நீர்? இதுவரையில் என்னைப்போல ஓர் அழகனைப் படமாக வரைந்ததுண்டா? வரைந்திருக்க முடியாதே!"

அழகனின் சொற்கள் செவியில் விழுந்ததும் ஓவியன், சிற்பியைப் பார்த்து, "நீர் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை" என ஒத்துக் கொண்டான்.

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று."

அதிகாரம் - 41 - கல்லாமை; பாடல் - 407



எலுமிச்சம் பழத்தைச் சுவைக்காமலிருக்கும்போதே - நேரிலே காணும் போதே நாவிலே நீர் ஊறுகிறது; புளிப்பு உணர்ச்சியால் ஆட்கொள்ளப் படுகிறோம். ஆனால், மனிதனை நிலை தடுமாறச் செய்யும் சக்திபெற்ற மதுவை நினைப்பதாலோ - நேரில் காண்பதாலோ 'போதை' உணர்ச்சி அவனை ஆட்டிப் படைப்பதில்லை. அதை அருந்திய பிறகே மயக்கமும் அது தரும் மன உற்சாகமும், இன்பவெறியும் தலையெடுக்கிறது. அதிகப் போதையில் வீழ்ந்தவனையும் நிமிரச் செய்யும் வல்லமை எலுமிச்சைக்கு உண்டு என்பார்கள். எலுமிச்சை, மதுவை வெல்லக் கூடியது; மதுவின் ஆதிக்கத்தை முறியடிக்கக் கூடியது. கள்ளைப் போலன்றிக் கண்ட மாத்திரத்தில் நாவில் புளிப்பு உணர்ச்சியைப் பொழியும் தன்மை வாய்ந்தது!

'எலுமிச்சையைப் போன்றதே காமம்' என்பதை வள்ளுவர் சொல்லாமற் சொல்லுகின்றார். இன்ப விருந்தளிக்கும் எழில் நிறை பெண்ணாளை - அவள் இடை காட்டும் நெளிவை - இதழ் காட்டும் சுவையை - இருவிழி காட்டும் குளிரை - பிரிந்திருக்கும் காதலன், தொலைவிலிருந்து எண்ணிப் பார்த்தே களிப்படைய முடியும். விரக விருந்தளிக்கும் பாவை விழியெதிரே நிற்பதைக் கண்டாலே மகிழ்ச்சி பொங்கும். இந்தப் பெருமை, வெறியூட்டும் மதுவுக்குக் கிடையாது; மங்கை தரும் சுகத்திற்கே நினைத்துக் களித்தலும், கண்டு மகிழ்தலுமான சிறப்புக்கள் உண்டு என்று செந்நாப்போதார் சித்திரத் தமிழில் தீட்டுகின்றார்.

அதனால்தான் போலும் பெண்களை எலுமிச்சம்பழம் எனவும் சிறப்பிக்கின்றனர். இரண்டுமே கண்டவுடன் உணர்ச்சியூட்டுவன அல்லவா!


கண்டவுடன் உணர்ச்சி கிளப்பும் எலுமிச்சம்பழம், மதுவை வெல்கிறது.

அந்த எலுமிச்சையை, நேரில் கண்டவுடன் மட்டுமின்றி நினைத்தவுடன் மகிழ்ச்சியூட்டும் காதற் பெண்டிர் வெல்லுகின்றனர்.

அந்தச் சிறப்புக்கு இதோ குறள் :-

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்(கு)இல் காமத்திற்(கு) உண்டு."

அதிகாரம் - 129 - புணர்ச்சி விதும்பல்; பாடல் - 1281



வழக்கம்போல், வள்ளுவர் தம் மாணாக்கனுக்குத் தமிழ் இலக்கணம் கற்றுக் கொடுக்கும் நேரம். அவரது அகன்ற நெற்றியில் தேக்கப்பட்ட சிந்தனைப் பெருவெள்ளம், ஒளிவிழி மடைகளின் வழியாகப் பாய்ந்து கொண்டிருந்தது. அப்போது அழகிய மான் குட்டியொன்று அச்சத்தால் நடுக்குற்றுத் தன் இனத்துக்குரிய இயல்பான வேகத்தை இரட்டிப்பாக்கிய வண்ணம் வள்ளுவரின் குடிலுக்குள் ஓடி

ஒளிந்து கொண்டது. குறளாரின் குளிர்பார்வை அந்த இளம் மானின் மீது படுவதற்குள் வில்லும் அம்பும் தாங்கிய வேடன் ஒருவன் விரைந்து வந்து, வள்ளுவருக்கெதிரே நின்றான். "இந்தப் பக்கம் ஒரு மான் ஓடி வந்ததே! கண்டீர்களா? கண்டிருந்தால் சொல்லி விடுங்கள்; அது என் அம்புக்குத் தப்பிய மான்! ஒருவேளை உமது இல்லத்திற்குள் நுழைந்து விட்டதோ?" என்று பரபரப்புடன் கேட்டான்.

வள்ளுவர் அமைதியாகச் சொன்னார்: "மானா? இந்தப் பக்கம் வரவில்லையே! அதோ, அந்தப்பக்கம் அல்லவா சற்று நேரத்துக்குமுன் ஒரு மான் துள்ளியோடியது."

இந்தப் பதிலைக் கேட்டதும் வேடன், "அப்படியா?" என்று கூவியவாறு அவர் காட்டிய திக்குநோக்கி ஓடத் தொடங்கினான்.

மாணாக்கன் மிக்க பணிவுடன் வள்ளுவரைப் பார்த்துக் கேட்டான்.

"பெருந்தகையீர்! பொய் கூடாது - அது பெருந் தீது என்று பலமுறை விளக்கியிருக்கிறீர்களே; இன்று தாங்களே அந்த வேடனிடம் ஒரு பொய் கூறினீர்களே, சரிதானா?"

வள்ளுவர், புன்னகை புரிந்தவாறு விடையளித்தார்.

"கேடு இல்லாத நன்மையை விளைவிக்கக்கூடிய பொய்யான சொல், வாய்மை என்று கூறத்தக்க இடத்தைப் பெற்றுவிடும். நான் வேடனிடம் உண்மையைச் சொல்லியிருந்தால், அந்தப் புள்ளிமான் உயிர் போயிருக்குமல்லவா? நான் கூறியது பொய்யானது எனினும் அது ஒரு நன்மையைச் செய்த காரணத்தால் வாய்மையாகவே கருதப்படும்."

வள்ளுவர் இந்த விளக்கத்தைச் சொல்லி முடித்துவிட்டு, எதிரேயிருந்த ஏட்டையும் எழுத்தாணியையும் எடுத்தார். குறள் உருவாயிற்று.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்."

அதனைத் தொடர்ந்து மாணாக்கனிடம் கூறினார்.


"இளைஞனே! இந்த விளக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பொய் சொல்லு வதையே வாழ்க்கையாக ஆக்கிக்கொண்டு விடக்கூடாது! ஒருவன் தன் நெஞ்சம் அறிந்த உண்மையை மறைத்துவிட்டு, தன்னைக் காத்துக் கொள்ளவோ அல்லது பிறருக்குக் கேடுசூழவோ பொய் கூறுவானேயானால், அப்படிப் பொய் கூறியவ னுடைய நெஞ்சமே அவனைச் சுட்டுப் பொசுக்கிவிடும். அதனைக் குறிப்பிடவே இந்தக் குறளையும் எழுதியிருக்கிறேன்."

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்."

வள்ளுவரின் அருமைமிகு கருத்துக்களைக் கேட்டு மகிழ்ந்த மாணாக்கன், அவர் கால் மலர் தொழுது நின்று, "வாழ்க வள்ளுவம்" என்று முழங்கினான்.

அதிகாரம் - 30 - வாய்மை; பாடல்கள் - 292, 293

RAJ BHAVAN LIBRARY



கணவன், தன் மனைவிக்குத் தவறிழைத்து விடுகிறான். பெரிய தவறு எதுவாயிருக்கும்? நாளைக்கு வந்து விடுகிறேன் என்று கூறிவிட்டுப் போனவன் சொன்னபடி வந்திருக்கமாட்டான். கொடுத்த முத்தம் காய்வதற்குள் அடுத்த முத்தம் அளித்திருக்கமாட்டான். நிலவின் அழகில் ஈடுபட்டிருந்திருப்பான். 'என்னைவிட நிலவு அழகோ?' என அங்கிருக்கும் ஆரணங்கு கேட்டிருப்பாள்- "ஆமாம்-உனக்கு ஒரு

குறையுண்டு" என்று கூறுவான்-நிலவைப் போலக் களங்கம் காதலியின் முகத்தில் இல்லை என்ற எண்ணத்தை மறைத்துக் கொண்டு, "குறையுண்டு" எனக் குறும்பு மொழிந்ததை அவளால் புரிந்துகொள்ள முடியாமல் போயிருக்கும்.

இப்படி ஏதோ ஒரு வகையில் அவன் தவறு செய்திருப்பான். எந்தத் தவற்றைக் கணவன் செய்திருந்தாலும் அவள் மன்னித்து விடுகிறாளாம்-இல்லை இல்லை-மறந்து விடுகிறாளாம் - அதுவுமில்லை - அந்தத் தவறு அவளுக்குக் காணப்படாமலே போய்விடுகிறதாம். எப்போது? கணவன் அருகே வந்து விட்டபோது! அதற்கு உதாரணம் தருகிறார் வள்ளுவப் பெருந்தகை:

கண்ணுக்கு மையெழுதுங்கோலைக் கையிலே வைத்திருக்கும்போது பார்க்க முடிகிறது. அதே கை அந்தக் கோலைக் கண்ணிடத்திலே கொண்டுபோய் மை எழுதும் நேரத்தில் கண்களுக்கு அந்த எழுதுகோல் தெரிவதில்லை.

அதேபோல, கணவன் எந்த வகையான தவறு செய்திருந்தாலும் - அவனைத் தன்னருகே கண்டதும் அந்தத் தவறுகள் எல்லாம் கண்ணருகே வந்துவிட்ட மையெழுதும் கோல்போல் மறைந்து விடுகின்றன.

"வரட்டும் சொல்லுகிறேன் - என்ன பாடுபடுத்துகிறேன்!"

"என்னை அழைக்காமல் விழாவுக்கு இவர் மட்டும் எப்படிப் போகலாமாம்?"

"என் மனம் நோக நடந்தவரை - நான் சும்மா விடப் போவதில்லை!"

இப்படியெல்லாம் கச்சை கட்டிக்கொண்டு நிற்கிறாள். அவன் வந்து விட்டதும், தன் கோபத்தையெல்லாம் மறந்து - அவன் மீது சுமத்திய குற்றச்சாட்டுகளை நினைக்கவே முடியாமல் - வேறு ஒரு புது உலகத்துக்குப் போய் விடுகிறாள். மையெழுதுகோல் போலக் கணவன் தவறுகள் மறைந்து விடுகின்றன. வள்ளுவர் குறள் அதைத்தான் அழகாக விளக்குகிறது.

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து."

அதிகாரம் - 129 - புணர்ச்சி விதும்பல்; பாடல் - 1285





கடல் கடந்து சென்று வெளி நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டிருந்தார் ஒருவர். அவருக்கு ஓர் உற்ற நண்பரும் உண்டு. இருவருமே பங்குதாரர்களாக இருந்து வாணிபத்தைச் சீர்பெற நடாத்திப் பெரும் பொருளீட்டினர். இருவருக்கும் தாயகம் திரும்பிட வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. ஈட்டிய பொருளில் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டு நாவாய் ஏறி, நாட்டுக்குத் திரும்பினர். அவர்கள் தங்கள் நாட்டுக் கரைக்கு வந்து சேர்ந்த நேரம் நள்ளிரவு. அவர்களிடமுள்ள பேழையிலோ ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட பொற்காசுகள் இருந்தன. எனவே, அந்தத் துறைமுகப்பட்டினத்திலேயே ஓர் ஓய்வு விடுதியில் இரவைக் கழித்துவிட்டுக் காலையில் தங்கள் ஊருக்குப் புறப்படுவது என முடிவு செய்தனர். அவ்வாறே ஓய்வு விடுதியை நாடிச் சென்றனர். விடுதியின் உரிமையாளன், யாரையும் கவரத்தக்க முறையில் பேசவும் நடக்கவும் கற்றவன். பொற்காசுப் பேழை, இரண்டு பங்குதாரர்களில் மூத்தவர் வசம்தான் இருக்கிறது என்பதை அவன் புரிந்து

கொண்டான். மூத்தவருக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தான். இளைய பங்குதாரருக்கு, அந்த மனிதன் மீது சந்தேகம் ஏற்பட்டது. இருவரும் தங்குவதற்கு ஒரு நல்ல அறையையும் ஒதுக்கிக் கொடுத்தான் உரிமையாளன். மூத்தவரைப் பார்த்து, உரிமையாளன் தன் நாவன்மையைக் காட்டத் தொடங்கினான்.

"இந்த ஓய்வு விடுதியில் நமது சிற்றரசர்கூட ஒருமுறை வந்து தங்கியிருந்தார். இன்னொரு முறை இளவரசியார் வந்து ஓய்வெடுத்துச் சென்றார். அப்போது அவர் அணிந்திருந்த நவரத்தினங்கள், மாலைகள் அனைத்தும் என் பாதுகாப்பிலேதான் இருந்தன. இந்தத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதிக்காக வருகிற எல்லா வாணிப வேந்தர்களுமே என் பொறுப்பிலேதான் தங்கள் பொருள்களைவிட்டு வைப்பார்கள். நீங்கள் இங்கு எந்தவித அச்சமுமின்றி உறங்கலாம்."

விடுதி உரிமையாளனின் பேச்சு, மூத்தவருக்கு நம்பிக்கையை வலுப்படுத்தி யது. மிக்க மகிழ்ச்சியுடன் உறங்குவதற்குப் படுக்கையிடம் சென்றார். உரிமையாளன் அவரை விடவில்லை.

"ஒரே ஒரு செய்தி! தனிமையாகப் பேசவேண்டும்" என்றான். அவரும் இணங்கி அவனுடன் வேறு பக்கம் தனியாகச் சென்றார்.

"உங்களுடன் வந்திருப்பது யார் என நான் அறிந்து கொள்ளலாமா?"

"அவர் என் நண்பர். வாணிபத்தில் இருவரும் பங்குதாரர்கள்."

"நம்பிக்கைக்கு உரியவர்தானா?"

"நிச்சயமாக! நீண்ட நாட்களாக நாங்கள் இணைந்தே வாணிபம் நடத்துகிறோம்."

"என்மீது சினங் கொள்ளக் கூடாது! இதே ஓய்வு விடுதியில் முன்பு ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது."

"என்ன, அந்த நிகழ்ச்சி?"

"இப்படித்தான் பெரும் பொருளுடன் இரு நண்பர்கள் ஒரே அறையில் தங்கினார்கள். காலையில் எழுந்து பார்த்தால் இருவரில் ஒருவர் பிணமாய்க் கிடந்தார். மற்றவர் பேழையுடன் மாயமாய் மறைந்துவிட்டார்."

"அப்படியா?"

"அதனால்தான் சொல்லுகிறேன். தாங்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது."

"அது எவ்வாறு?"

"தாங்கள் பேழையுடன் இந்த அறையில் உறங்குங்கள். தங்கள் நண்பர் மற்றொரு அறையில் உறங்கட்டும்."

"அதுவும் நல்ல யோசனைதான்." இந்த உரையாடல் முடிந்ததும் மூத்தவர், இளைய நண்பரைப் பார்த்து, "நீ பக்கத்து அறையில் படுத்துறங்கு. இருவருக்கும் வசதியாக இருக்கும்" என்று கூறினார்.

இளையவர் சற்றுத் திகைத்தார். எனினும் அவ்வாறே அடுத்த அறைக்குச் சென்று விட்டார்.

மூத்தவர், இளையவர் இருவருமே, தனித்தனி அறையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, ஓய்வு விடுதி உரிமையாளன், மெல்ல அந்த அறையின் பின்புறமாக வந்து மூத்தவருக்கு அருகே இருந்த பேழையைத் தூக்கிக்கொண்டு ஓடினான். அதற்குள் மூத்தவர் விழித்துக்கொண்டு, அவனைப் பிடித்துக் கொண்டார். பிடிபட்டவன் தன்னிடமுள்ள கொடுவாளால் அவர் நெஞ்சில் குத்திவிட்டான். இந்த அமளியில் இளையவர் எழுந்தோடி வந்து ஓய்வு விடுதி உரிமையாளனைத் தடுத்து நிறுத்தி, அங்குள்ள தூணில் கட்டிப் போட்டார். அவருக்கு எதிரே தன் நண்பர் உயிருக்கு மன்றாடுவதையும் கண்டு கண்ணீர் வடித்தார்.

"என் இனிய நண்பா! இளைய நண்பா! உன்னுடைய நட்பை ஆராய்ந்து தெளிவடைந்துதான் நான் பெற்றிருந்தேன். இருந்தாலும் தேவையில்லாமல் உன் மீது திடீரென்று சந்தேகம் கொண்டேன். இதோ, இந்தக் கொடியவன் என் மனத்தைக் கெடுத்துவிட்டான். அது மட்டுமல்ல; இவனைப் பற்றி ஆராயாமலே இவனை உடனடியாக நம்பியும் விட்டேன். அந்தத் துன்பத்தை இப்போது அனுபவிக்கிறேன். என்னை மன்னித்துவிடு.

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்ற குறள்வாக்கு என் அளவில் பலித்து விட்டது."

இவ்வாறு கூறிக் கொண்டே மூத்தவர் உயிர் விட்டார்.

இளையவரின் கண்கள் நீர்வீழ்ச்சிகளாய்க் காட்சி அளித்தன.

"ஒருவனை ஆராய்ந்து உணராமல் நம்பிக்கை வைப்பதும், ஆராய்ந்து உணர்ந்து நம்பியவனிடம் ஐயம் கொள்வதும் பெருந்துன்பத்தைக் கொடுக்கும்."

அதிகாரம் - 51 - தெரிந்து தெளிதல்; பாடல் - 510





கூடத்துப் பலகணியின் ஓரம் அமர்ந்திருந்தாள், கூன்பிறை நெற்றியும் கோவைப்பழ இதழும் கூர்வேல் விழியும் குங்கும ஒளியுமிழும் கன்னமுங் கொண்ட அந்தக் குளிர் தமிழாள்.

வயது பதினாறு இருக்கும். இளமையின் செழிப்பு மலைமுகட்டில் கொடி கட்டிப் பறந்தது. பரந்த வான்வெளியை அவளது பார்வை விழுங்கிக் கொண்டிருந்தது. மெல்ல வீசிக் கொண்டிருந்த காற்றில், அவளது பட்டாடை அசைந்து கொண்டிருந்தது.

தெருத் தாழ்வாரத்தில் அவள் தாய் சற்று உரக்கப் பேசுவது அவள் காதில் விழாமல் இல்லை. பத்து வயது மகனை அவள் கடிந்து கொண்டிருந்தாள். பலகணிப் பாவைக்குத் தம்பிதான் அவன்.

"ஏண்டா மருதா! எங்கே போய் விளையாடிவிட்டு வருகிறாய்?"

"அடுத்த வீதியிலிருக்கும் என் தோழன் தேனப்பன் வீட்டுக்குப் போய் அவனோடு விளையாடினேன் அம்மா!"

"நானும் பார்க்கிறேன். நாள்தோறும் நீதான் அவன் வீட்டுக்கு நாய் மாதிரி ஓடுகிறாய்; அவனோடு விளையாடுகிறாய். என்றாவது ஒரு நாள் அவன் நம் வீட்டுக்கு வந்து உன்னோடு விளையாடியதுண்டா? உன்னை மதியாதவன் வீட்டுக்கு நீ போவானேன்? இனிமேல் போனால் பார்! நான் பிறகு சாதுவாக இருக்க மாட்டேன்!"

"சரியம்மா! இனிமேல் போகவில்லை!"

இந்த உரையாடல், தன் தாய்க்கும் தம்பிக்கும் நடந்ததில், அவள் ஏன் அவ்வளவு ஆழ்ந்த கவனம் செலுத்துகிறாள்? அடடா! அவள் முகத்தில் எத்தனை மாற்றங்கள்! ஓடினாள் பலகணியை விட்டு! கட்டில் மீது தன் உடலைப் போட்டாள். கண்ணீர் கொட்டியது. தம்பியிடம் தாய் சொன்னது, திரும்பத் திரும்ப வேகமாக ஒலித்தது.

"நீதான் அவன் வீட்டுக்கு ஓடுகிறாய். என்றாவது ஒரு நாள் அவன் நம் வீட்டுக்கு வந்ததுண்டோ?"

இந்தச் சொற்களுக்காக அவள் அழுவானேன்? அவள் நெஞ்சம் அவளைப் பார்த்துக் கேட்டது, "ஏன் பெண்ணே அழுகிறாய்" என்று! அவள் பதில் கூறவில்லை. நினைத்துக் கொண்டு குமுறினாள்.

"நெஞ்சே! என் தாய், என் தம்பிக்குச் சொன்னதைத்தான் நானும் உனக்குச் சொல்கிறேன். என் தம்பி மருதன், அடுத்த தெரு தேனப்பன் வீட்டுக்கு விளையாட ஓடுகிறான். ஆனால், தேனப்பனோ இந்த வீட்டுக்கு வராமல் அவன் வீட்டிலேயே இருக்கிறான். என் நெஞ்சமே! என் காதலரின் நெஞ்சம் என்னைத் தேடி வராமல் இருக்கும்போது, நீ மட்டும் என்னை விட்டு விட்டு மருதன், தேனப்பனைத் தேடி ஓடுவதுபோல, அவரைத் தேடி ஓடிக்கொண்டு இருப்பது ஏன்?"


அதற்கு அவள் நெஞ்சு பதில் கூறியிருந்தால் என்ன கூறியிருக்கக் கூடும்?

"பெண்ணே! என் கண்ணே! நான் உன் தம்பி மருதன், தாய்க்கு அடங்கியதுபோல் அடங்கிவிட மாட்டேன். உன் காதலன் நெஞ்சு என்னைத் தேடி வராவிட்டாலும் நான் அவரைத் தேடிச் செல்வதை நிறுத்த மாட்டேன்!" என்று கூறியிருக்கும்.

ஏந்திழையின் இதயம் இப்படித்தான் இருக்குமென்பதை உணர்த்திடவே, வள்ளுவப் பெருந்தகை வண்ண மயிலனையாளின் உள்ளத்தை ஓவியமாக்கிக் களிக்கிறார்.

"அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது."

அதிகாரம் - 130 - நெஞ்சொடு புலத்தல்; பாடல் - 1291



சிந்தனமெடுத்துச் செய்த உருவமொன்று நடந்து வருகிறது. கையில் ஓர் ஊன்றுகோல். அதுவும், தரைக்கு வலிக்குமேயென்று அஞ்சியோ என்னவோ மெதுவாக ஊன்றப்படுகிறது. அருள் பொழியும் முகம்; கனிவு ததும்பும் விழிகள்; புன்னகையைத் தேக்கியிருக்கும் பொக்கை வாய்ப் பூவிதழ்கள். அவரைச் சுற்றி நூற்றுக்கணக்கானவர் இருக்கின்றனர் என்றாலும், அவர்கள் எல்லாம் பகல் நேரத்து விண்மீன்களாகவும், அவர் மட்டுமே கதிரவனாகவும் நம் கண்களுக்குக் காட்சி தருகிறார். அவர் வாய்மையின் வடிவம்; அன்பின் திருவுருவம். அவர் தான் கருணைக் கடல், காந்தியடிகள்.

அறவழியே அவர் வழி. அநியாயத்தை எதிர்க்கும்போது அவர் தன்னைத் தானே பலி கொடுத்துக் கொள்ளவும் தயாராகக் களம் நோக்கிச் செல்வார். இந்திய மண்ணின் சுதந்திரத்தைப் பெற்றிட, அவர் தியாக நெருப்பில் குளித்தார். அந்த நெருப்பிலிருந்து அவர் புடம்போட்ட தங்கமாக வெளிவந்தார். அடிமைத்தனம் எங்கிருந்தாலும் அவர் அதனைக் களைந்திடவே விரைந்தோடுவார். மனிதனை மனிதன் தீண்டக்கூடாது எனும் சாதிக்கொடுமையை வேரோடு வீழ்த்தக் கொடி தூக்கினார். சமுதாயத்தைச் சாய்க்கும் தீமைகளாம் குடியாட்டம், குதிரை ஓட்டம் முதலியவற்றை அறவே ஒழிக்க வேண்டுமென நாளெல்லாம் பாடுபட்டார். அமளிகள், கலகங்கள், குழப்பங்கள் எங்கு

நடந்தாலும் அவைகள் ஓயும் வரை உண்ணமாட்டார், உறங்கமாட்டார், மகா வீரரைப்போல், புத்தரைப்போல்,

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்"

என்றுரைத்த வள்ளுவரைப்போல் வாழ்ந்து காட்டியவர் அவர். அந்த உலக உத்தமர்தான் அதோ வருகிறார்.

மேற்றிசையில் கதிர் மறையும் நேரம். இளங்காற்று மென்மையாக வீசி, அவரை வலம் வருகிறது. அவர் அந்த மேடையில் அமர்ந்து இறைவணக்கம் தொடங்கப் போகிறார். அவரோடும் அவர் இதய உணர்வுகளோடும் இணைந்து அங்குள்ள நல்லோர் அந்த வணக்கப்பாடலை இசைக்கப் போகின்றனர். எப்பொழுது வருவார் என்று எதிர்பார்த்து ஏங்கிய விழிகளுக்கு விருந்தாக, எப்பிணியையும் நெஞ்சிலிருந்து நீக்கும் மருந்தாக, அவர் வந்துவிட்டார்.


அங்குள்ளோர் கரங்கள் அனைத்தும் மலர்ந்த பூக்கள், மீண்டும் மொட்டானது போல் விளங்குகின்றன. ஆம், அனைவரும் அவரை வணங்குகின்றனர். அவரும் அவ்வாறே வணங்குகிறார். அந்த வணக்கத்தைச் சூழ்ந்திருந்தோர் வாழ்த்தாக எண்ணிக் கொள்கின்றனர். காலமுணர்த்தும் கருவி, அவரது இடுப்பிலே ஆடிக் கொண்டிருக்கிறது. கூப்பியிருந்த கரங்களில் ஒரு கரம் அவரை நோக்கி நகருகிறது. கூட்டத்திலிருந்தவர்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, அந்த மனிதன் மட்டும் அவரருகே செல்கிறான். "ஏன் அருகே செல்கிறான்?" என்று நினைப்பதற்குள்ளாக, அவன் அவரைத் தாழ்ந்து வணங்குகிறான். அந்தத் தும்பை மலர் உள்ளம் அவன்மீது அன்பை அள்ளி வீசுகிறது. அம்மவோ! அந்தக் கொடியவனின் கும்பிட்ட கைக்குள்ளே கொலைக்கருவி பதுங்கியிருக்கிறது. அந்தக் கைத்துப்பாக்கி, திடீரென அந்த இடத்தின் அமைதியைக் கெடுக்கிறது. அசை போட்டவாறு கண்மூடியிருக்கும் பசுவின்மீது புலியொன்று பாய்ந்தது போல், அந்த அமைதியான சூழ்நிலையின்மீது வேட்டுச் சத்தம் தாக்கியது.

அமைதி அழிந்தது! இருள் மூடிக்கொண்டது. இதயப் பகுதியிலிருந்து குருதி வெள்ளம் பெருக்கெடுக்க, அந்த எளிய உருவம், ஏழைகளின் நம்பிக்கை விளக்கு, பூமியில் சாய்ந்துவிட்டது. தொழுத கைக்குள்ளிருந்த படை, நாட்டுத் தந்தையின் உயிரைக் குடித்துவிட்டது. இது போலவும் நடக்கக்கூடும் என்பதை வள்ளுவரின் நுண்ணறிவு எப்படித்தான் முன்கூட்டி உணர்ந்திருந்ததோ!

"தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து."

"பகைவர்கள் வணங்குகின்றபோது அவர்களின் கைக்குள்ளே கொலைக் கருவி மறைந்திருக்கும்; அவர்கள் கண்ணீர் கொட்டி அழுவதும் அப்படிப்பட்டதே" என்று அடையாளங் காட்டுகிறார் அவர்! அண்ணல் காந்தியடிகளின் முடிவு, இந்தக் குறளை மெய்ப்பிக்கும் எடுத்துக் காட்டல்லவா?

அதிகாரம் - 83 - கூடா நட்பு; பாடல் - 828



யாராவது நம்மை நினைக்கும்பொழுது தும்மல் வருமென்றும் அப்படித் தும்மிடும்போது வாழ்த்துச் சொல்வது என்றும் ஒரு நம்பிக்கை பழங்காலந்தொட்டுத் தமிழகத்தில் பரவி நிற்கிறது. அந்தப் பழக்கத்தை வைத்து வள்ளுவனார் ஓர் அரிய காதல் காட்சியைச் சித்திரிக்கிறார்.

சோலைப் பசும் புற்றரையிலே - பால் வண்ண உடை உடுத்தி - காதல் மகனும் காதல் மகளும் இன்பயாழை மீட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆரத்தழுவி அகமகிழும்போது முகத்தில் பதிந்த முழு நிலவுப் பெண்ணின் கரிய கூந்தலின் சிறு தொகுப்பு, அவளையுமறியாமல் அவன் மூக்கில் பட்டதாலோ என்னவோ தும்மி

விட்டான். உடனே அந்த அணங்கு அவனை 'வாழ்க' என்று வாழ்த்தினாள். வாழ்த்தியவளுக்குத் திடீரென ஒரு நினைவு எழுந்தது.

"ஆமாம் - எந்தப் பெண் மயில் உம்மை நினைத்தாள்? எதனால் தும்மினீர்?" என்று ஒரு கேள்வியைப் போட்டு ஊடல் புரிந்தாள்; செல்லமாக அழுதாள்.

"வழுத்தினாள் தும்மினேன் ஆகனாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று."

தும்மினால் அருகிருப்போர் வாழ்த்துவர். இது பழைய கால வழக்கம். அந்த வழக்கத்தை வைத்து வள்ளுவர், காதலர்களை ஊடல் புரியமட்டும் விடவில்லை; ஊடல் தீர்ப்பதற்கும் அந்தப் பழக்கத்தைப் பயன்படுத்துகிறார்.

துப்புறச் சிவந்த வாயாள் தூய பஞ்சணையின் மீது ஒப்புறக் கணவனுடன் இருந்த காலை, இடையே எழுந்தது ஊடல் என்னும் காதல் திருவிளையாடல். ஒன்பது முத்தம் தருவேன் என்று எட்டு தந்து நிறுத்தினானோ, அல்லது அவள்தான் எட்டி நின்று விட்டாளோ - கட்டிக் கரும்பே என அழைத்துவிட்டுச் சுவைக்காமல் தயங்குகிறானே என்று ஊடல் புரிந்தாளோ? 'எண்ணி ஏன் ஒன்பது கேட்டாள்? எண்ணாமல் பெறுவதற்கு ஏன் அஞ்சினாள்' என்று அவன்தான் மடிவிட்டு எழுந்தானோ? எப்படியோ உல்லாசபுரியில் ஊடல் நிலவு உதயமாகிவிட்டது. சில வினாடிகள் அமைதி!

காதலன் திடீரெனத் தும்மிவிட்டான். காதலியும் ஊடலை மறந்து, "வாழ்க" என்று வாழ்த்திவிட்டாள்.


'தோற்றாய்! தோற்றாய்!' என்று தோகையின் சிவந்த கன்னத்தைச் சிவக்க வைத்தான். அவளும் பின்னிக் கொண்டாள். 'தும்மல்' அவர்கள் ஊடலைத் தீர்த்து விட்டது.

காதலன் சாதாரணமாகக்கூடத் தும்மியிருக்கலாம். ஆனால், அவளோ மறுநாள் காலை தன் தோழியிடம், தன் காதலனின் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக,

"நான் ஊடினேன் - அவர் வேண்டுமென்று தும்மினார். நான் ஊடலை மறந்து வாழ்த்தி விட்டேனடி!" என்று கன்னத்தைத் தடவிக்கொண்டே கனிமொழி சிந்துகிறாள். அந்தக் குறள் இதோ:

"ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து."

அதிகாரம் - 132 - புலவி நுணுக்கம்; பாடல்கள் - 1317, 1312



சற்றுக் கண்ணொளி மங்கிய முதியவர் ஒருவருக்குக் காதுகளும் ஓரளவு மந்தம். வழியில் அவருக்குத் துணையாக அவரது பேரப்பிள்ளை வந்து கொண்டிருந்தான். அறவே அவரது விழிகளின் ஒளி பழுதாகி விடாத காரணத்தால், அவரைக் கரம் பிடித்து அழைத்துச் செல்லவேண்டிய அவசியமில்லை. எனினும் பேரப்பிள்ளை, தன் பாட்டனுக்குத் துணையாக அவர் அருகாமையிலேயே நடந்து கொண்டிருந்தான்.

சிறிது தொலைவில் நூற்றுக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். அந்தக் கூட்டத்தின் நடுவே ஒரு மேடை. அந்த மேடைமீது ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். முதியவரின் கண்களுக்குத் தெளிவாகத் தெரியாவிட்டாலும் மேடையில் மனிதன் ஒருவன் இருப்பதும் அவனைச் சுற்றிக் கூட்டம் இருப்பதும் நிழலாட்டம் போல் தென்பட்டன. ஒளியுமிழும் விழிகள் படைத்த அந்த இளைஞனை நோக்கி முதியவர், "அங்கே என்னப்பா கூட்டம்?" என்று வினவினார். இளைஞன், கண்களுக்கு மட்டும் வேலை தராமல், காதுகளுக்கும் வேலை கொடுத்துக் கூர்மையாகக் கவனித்து விட்டு, சிறிது நேரங்கழித்துத் தன் பாட்டனாருக்குப் பதில் சொன்னான்.

"தாத்தா! அங்கே ஒருவன் தோப்பிலே நின்று கொண்டு பழங்களைப் பறிக்காமல் காய்களைப் பறித்துத் தின்று கொண்டிருக்கிறான். அந்தக் காட்சியை மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்."

பேரனின் பதிலைக் கேட்டு முதியவர் வியப்படைந்தார். தன் கையை நெற்றிக்கருகே கொண்டுபோய், கண்களை கூர்மையாக்கிக் கொண்டு ஆழமாகப் பார்த்தார்.

"என்னப்பா! என்னைக் கேலி செய்கிறாய்? அங்கு தோப்பு எதுவுமே தெரிய வில்லை. மக்கள் கூட்டம்தான் இருக்கிறது. யாரோ ஒருவன் கைகளை மேலும் கீழும் வேகமாக அசைத்துக் கொண்டிருக்கிறான். மரங்களும் இல்லை. காய்களும் இல்லை. கனிகளும் இல்லை. நீ என்னை முழுக் குருடனாகவே ஆக்கிவிட்டாயே!"

பாட்டனின் பதிலைக் கேட்டுப் பேரன் சிரித்துக் கொண்டான். இன்னும் அருகாமையில் சென்றால், அவருக்குத் தான் அளித்த விடைக்கான விளக்கம் கிடைக்குமென்று கருதி, அவரை அந்தக் கூட்டத்தின் பக்கம் அழைத்துச் சென்றான். மேடையில் இருப்பவன் உரக்கப் பேசியது முதியவர் காதிலும் விழுந்தது.

"பொது மக்களே! ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். நம்மை எதிர்ப்பவர்கள் அறிவற்றவர்கள். அவர்களின் பிறவியிலேயே எனக்குச் சந்தேகம். அவர்களை நாட்டில் நடமாட விடுவதே பெருங்குற்றம். கருத்துக்குக் கருத்து மோதவிடு என்றெல்லாம் அவர்கள் பேசுவார்கள். தேவையில்லை. கத்திக்குக் கத்திதான் மோதவேண்டும். அந்த நாய் மனிதர்களின் தலையை வெட்டிக் கடலில் எறியவேண்டும். என்னை எதிர்த்துப் பேசுவோர் யாராயினும் அவர்களை நான் பூச்சி, புழுக்களாகக் கருதுகிறேன்."

இந்தச் சொற்பொழிவைப் பாட்டனும் பேரனும் கேட்டார்கள். சற்று மந்தமான செவிகளாக இருந்த போதிலும் முதியவர், அவைகளைக் கைகளால் பொத்திக் கொண்டு, "சே! சே! என்ன இழிவான சொற்கள். கருத்தரங்குகள் இப்படியா கெட்டுப் போய்விட்டன" என்று முணுமுணுத்தார்.

"தாத்தா! மரமெங்கே? காய் எங்கே? என்று கேட்டீர்களே, இப்போது நன்றாகத் தெரிகிறதா?"

பேரன், புன்னகை சிந்தியவாறு கேட்டான். முதியவர் வேண்டுமென்றே பேரனைப் பார்த்து, எதுவும் விளங்காதவர்போல, "என்னடா விளையாடுகிறாய்? யாரோ ஒருவர் பேசுகிறார். அவ்வளவுதானே! அவர் எங்கே பழங்களை விடுத்துக் காய்களைச் சாப்பிடுகிறார்" என்று கேட்டார்.

"தாத்தா! இனிய வார்த்தைகள் நிறைய இருக்கும்போது, அவைகளை ஒதுக்கி விட்டு, இழிவும் கடுமையும் நிறைந்த வார்த்தைகளைக் கூறுவது, கனியிருக்கும் போது அதனை உண்ணாமல் காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றதாகுமென, இன்று காலையில் எங்கள் ஆசிரியர், குறளுக்கு விளக்கம் அளித்தார். அதற்குச் சரியான எடுத்துக்காட்டு இந்தக் கூட்டம்" என்று பேரப்பிள்ளை கூறியதும் முதியவர் அந்த இளந்தளிருக்கு முத்த மழை பொழிந்தார். அவன் வருங்காலம், வள்ளுவர் வகுத்த வழியில் அமையும் என எண்ணி மகிழ்ந்தார்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

அதிகாரம் - 10 - இனியவை கூறல்; பாடல் - 100



பெண்களைக் கொடியெனக் கூறினர் - ஏன்? துவண்டிடும் மேனியர் என்பதாலா? வளைந்து நடம்புரியும் மெல்லியலார் என்பதாலா? இல்லை - இல்லை! கொடி ஒரு மரத்தைத் தழுவிக் கிடப்பதுபோல், பெண்ணுக்கும் தான் படர்ந்து கிடக்க ஒரு துணை தேவை. கொடி படர்ந்த மரத்திற்கே தனி எழில்தான்! கொடி படராத மரங்கள், நிர்வாண மனிதர்களைப்போல!

கோட்டையின் உச்சியிலே கொடி பறந்தால்தான் கோட்டைக்குப் பெருமை! கொடிக்கும் கோட்டையின் உச்சியிலே பறக்கும்போதுதான் அதிக மதிப்பு!

ஆணின் இருதயக் கோட்டையிலே ஒரு பெண்கொடி பட்டொளிவீசிப் பறந்து கொண்டேயிருக்க வேண்டும்!

வள்ளுவனார், மாந்தர்க்கு இல்லறத்தை வலியுறுத்தியதன் வாயிலாகவும் - காமத்துப்பாலை வழங்கியதன் வாயிலாகவும் - இந்த உண்மையைத் தெளிவாகவும், தெளிதேனினும் சுவையாகவும் விளக்கியிருக்கிறார். அப்பப்பா! அவர் படைத்துள்ள காதற் குறள்கள் எத்தனை எத்தனை வகை! அத்தனையும் தமிழ்ப் பண்புக்கு ஏற்ற வகையில் அளிக்கும் உவகை!

ஊடலுக்குப் பின் கூடலே தனிச் சிறப்புடைத்து என்பது குறளாரின் எண்ணம்; அனுபவமுள்ளோருக்குத் தெரிந்த உண்மையுங்கூட!

அத்தகைய இரு இளம் புறாக்களை, இதோ சந்திக்க விடுகிறார் பாருங்கள்!

கொடிமலர் சூடினால்தான் தோகை கோபிப்பாளோ என எண்ணி, அவன் கிளைகளில் மலர்ந்த பூக்களைச் சூடிக்கொண்டு வருகிறான். அப்போதும், அவள் அவனைப் பார்த்து, "நீர் யாரோ ஒருத்திக்கு உமது அழகைக் காட்டுவதற்காக இதைச் சூடினீர்" என்று சினம் கொள்ளுகிறாள்.

"கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று."

கொஞ்சித் தாவி அணைத்திடும்போது தன் கோமளவல்லியின் முகத்தை அவன் சரியாகப் பார்த்திட இயலாது. ஏனெனில் இருவரின் முகமும் ஒட்டிக் கிடக்கும் வேளை அது! நான்கு கண்களுமே பார்வையற்றுப்போகும் நேரம்; அதனால் அவன் கண்டதில்லை, 'அக்கால' முகத்தை! இப்போதோ, அவள் விலகி நின்று பேசுகிறாள். அதனால் அவன், அவள் முகத்தைக் கூர்ந்து கவனிக்கிறாள். கோபத்திலும்கூட அவள் முகம் புது எழில் கொட்டுகிறது. சினத்தால் துடிக்கும் செவ்விதழ்களிலே, அவளையுமறியாமல் புன்னகை மின்னலிடுகிறது! அந்தப் பொலிவை இரசிக்கிறான்; புது இன்பம் காணுகிறான் காளை! கண் வழியே கள் பருகுகிறான் - வைத்த கண்ணைப் பெயர்த்தெடுக்க முடியாமல் தவிக்கிறான். அவளோ ஊடலின் உச்சிக்குப் பயணம் போகிறாள்.

"என்னையே இப்படி உற்றுப் பார்க்கிறீர்களே; காரணம் என்ன? யாருடைய அழகோடு என்னை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள்?" என்று கோபிக்கிறாள். என்னதான் செய்வான்; பாவம், அவன்! பார்த்தாலும் குற்றம்; பார்க்காவிட்டாலும் "அவ்வளவு வெறுப்பா?" என்று குற்றப் பத்திரிகை வாசிக்கப்படும்! இந்த நிலையில் உள்ள ஒரு காதலனைப் பற்றிய குறள் இது.

"நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று."

அதிகாரம் - 132 - புலவி நுணுக்கம்; பாடல்கள் - 1313, 1320



கண்ணைக் கவரும் இசையரங்கம்! மண்ணையாளும் மன்னவனும் அவன் மன்றத்துப் பெருமக்களும் வீற்றிருக்கின்றனர். எண்ணையும் எழுத்தையும் தந்த தாய்மொழி, இசைக்கோர் இலக்கணத்தையும் வழங்கி, விண்ணை எட்டும் புகழைப் பெற்றிருப்பதை எடுத்தியம்பும் ஏற்றமிகு இசைக் கலைவாணர், அரங்கிலமர்ந்து அமுதமழை பொழிந்து கொண்டிருந்தார். அருவியின் ஆலோலம்! தென்றலின் தெம்பாங்கு! குயிலின் தாலாட்டு! சிற்றாறு பாடுகிற சிந்தோ? செந்தமிழ் மகளிர் வீசி ஆடுகிற மலர்ப்பந்தோ? வியப்பும் வினாக்குறியும் ஒன்றையொன்று முந்தும் வண்ணம் அமைந்தது அந்த இசை நிகழ்ச்சி. குரல் வளமோ குழல் வளம் போல! குழைவு, நெளிவு, ஏற்றம், இறக்கம் எல்லாமே முழுப் பொருத்தம்.

சீரிளமைத் திறம் கொண்ட தமிழன்னையை வாழ்த்தி வணங்கித் தொடங்கிய இசை நிகழ்ச்சியில் எடுப்பும் தொடுப்பும் முடிப்பும் இனிமை மேவிட அமைந்தன எல்லாப் பாடல்களிலுமே!

“அத்தர் புனுகு சவ்வாது இன்னும்
எத்தனை நறுமணம் தேடுகிறோம்!
செத்தபின் வருமணம் தாங்காமல்
எத்தனை காதம் ஓடுகிறோம்?”

என்ற தத்துவப் பாடலை உருக்கம் கனிந்திட அவர் பாடிய போது, அந்த மன்றமே மயங்கிக் கிடந்தது என்றுகூடக் கூறலாம்.

அதையும் பாடிவிட்டு, உடனே அந்த இசைவாணர்

“நிலையாமை வாழ்க்கை யென நைந்து
நெற்பதராக மாறுவது மடமை!”

என்று பாடியவுடன், "ஆகா! ஆகா!" என அந்த அரங்கில் உள்ளோர் பாராட்டித் தலையசைத்தனர். இசைவாணரின் உற்சாகம் பெருகிற்று! தான் பாடிய இரண்டு வரிகளின் தொடர்பாக,

"நிலையானது தான் என நினைந்து
முட்புதராக வாழ்வது வோர் கொடுமை!"

எனப் பாடி முடித்தபோது, கையொலியால் மாமன்றம் அதிர்ந்தது. இறுதியாக நாட்டு வாழ்த்துடன் நிகழ்ச்சி முடிவுற்றது. அரங்கின் முன் அமர்ந்து, அரசன், மேடையில் உள்ள இசை மேதையை வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான். தன் இசையில் வேந்தன் இதயத்தைப் பறி கொடுத்திருக் கிறான் என வாணனும் மகிழ்ந்திருந்தார். மன்னனுக்கருகே பொன்னுருக்கிய தட் டுக்களில் சுவைமிகு பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. இசையரங்கைப் பார்த்த வாறு, அருகில் உள்ள சுவையுணவை வாய்க்குள் திணித்துக் கொண்டிருந்தான் மன்னன். அதிரசம், அக்காரவடிசல், தேன்குழல், தினைமாவு அனைத்தும் அவன் வயிற்றுக்குள் தொடர்ச்சியாக ஊர்ந்து கொண்டிருந்தன. இசை நிகழ்ச்சி முடிந்ததும் வாணன் எழுந்து அவையை வணங்கி விட்டு அரசனிடம் வந்து குனிந்து நின்றார். முத்தாரமொன்றை இசைப்புலவரின் கழுத்தில் அணிவித்தான் மன்னன்.

"மண்டிலமாளும் மன்னர் மன்னவ!
முத்தாரமீந்தீர் வணங்குகிறேன்;
முத்தான உமது வாயாலே ஒரு
பாராட்டை வேண்டுகின்றேன்."

என்றார் இசைவாணர்.

மன்னன் கூறுகின்றான்:

"பாராட்ட வார்த்தைகளே இல்லை!
அதிரசம் ஆறு தின்றேன் - ஆயிரம்
தின்றாலும் தெவிட்டா தென்பேன்.
தேன் குழல் தேவலோகத்து
அமிர்தத்தையும் வென்று விடும்!
தினைமாவு தான் என்ன? முருகனுக்கு
வள்ளி வழங்கியதை விடச் சுவை
மிகுதியானது என்பேன்!"

இசை பற்றிக் கேட்டால், இவன் தான் விழுங்கிய இரைபற்றிக் கூறுகிறானே யென்று - இறையை நொந்து கொண்டார் இசை மேதை, இவனை ஏன் படைத்தான் என்று! இத்தனை நேரம், மன்றத்தில் கடமைக்காக அமர்ந்திருந்த மன்னன், வகைவகையான தீனிகளுக்காக வாயைத் திறந்திருக்கிறானே தவிர, செந்தமிழ் இசைகேட்கச் செவியைத் திறந்தானில்லை. இந்த மனிதனைப் பற்றி அறிந்த வள்ளுவர், பொறுமையிழந்து சீறுகிறார்!

செவிச் சுவையில்லாமல் வாயின் சுவை மட்டும் உணருகிற மக்கள் இருந்தால் என்ன? இறந்தால் என்ன? என்று சினம் பொங்கிடக் கேட்கிறார்.

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்."

அதிகாரம் - 42 - கேள்வி; பாடல் - 420



கழுமலத்தின்

அவள் இளவரசி; அழகின் உறைவிடம். அவளை மணந்துகொள்ளப் பக்கத்து நாட்டு மன்னன் விரும்பினான். அவளோ தன் நாட்டுத் தளபதியிடம் இதயத்தைப் பறி கொடுத்திருந்தாள். இளவரசியின் எண்ணத்தைத் தெரிந்து கொண்ட அவள் தந்தை, பக்கத்து நாட்டு மன்னனுக்கு உண்மையை விளக்கி மடல் விடுத்தான். அவனோ, அனல் விழிகொண்டு போர்முரசு கொட்டுமாறு ஆணையிட்டான்.

இளவரசியின் தந்தையும் தன் படை வீரர்களைத் தயார்படுத்தினார். பக்கத்து நாட்டுப் படைகளின் முற்றுகையை நீண்ட நாட்கள் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கோட்டைக் கதவுகளை உடைத்துப் பகைவர்கள் உள்ளே நுழைந்தனர். கடும்போர் நடைபெற்றது. இளவரசியும் வாளெடுத்துப் போர் புரிந்தாள். அவள் கண் எதிரிலேயே அவள் தந்தையின் தலை வெட்டுண்டு வீழ்ந்தது. இறுதியில் அவளும் சிறை

பிடிக்கப்பட்டாள். அவள் இனிய காதலன் - அந்த நாட்டுத் தளபதியின் முடிவு என்னவென்று தெரியவில்லை. அவனை நினைத்து அவள் அழுது புலம்பினாள். சிறை யெடுத்துச் செல்லப்பட்ட அந்த செந்தமிழ்ச் சித்திரத்தைப் பகைமன்னன் எவ்வளவோ வற்புறுத்தித் தன்னை மணக்குமாறு வேண்டினான்; அச்சுறுத்தினான்; பயனில்லை. எனவே, தனக்குப் பயனில்லாத அந்த அழகு அழியட்டும் என்று தீர்மானித்தான். அந்தக் கொய்யாக் கனியைக் கொலைக்களம் கொண்டுசென்று வெட்டிப் போடுமாறு உத்தரவிட்டான். அந்த இன்பத்தின் வடிவத்தை, பேரழகுப் பெட்டகத்தைக் கொலைக்களத்தில் நிறுத்தினர். கொடுவாட்களுடன் அவளைக் கொல்லப் பகைவர்கள் நெருங்கினர். தன் உயிர் போவதை எண்ணித் துடித்தது மட்டுமல்ல; தன் உயிரனைய காதலனையும் காணாமல் சாகப்போகிறோமே என எண்ணி அவள் துடித்தாள். கொலை வாட்கள் ஓங்கி உயர்ந்தன. அப்போது 'நிறுத்துங்கள்' என்ற ஒரு குரல்! அனைவரும் திரும்பிப் பார்த்தனர். இளவரசியின் காதலன் வீராவேசமாக எதிர் வந்து நின்றான்.

"அத்தான்!" என அலறினாள் அவள்!

"அஞ்சாதே! உன்னைச் சிறையிட்டுக் கொண்டு வந்த பகை மன்னன் இப்போது சிறையில் கிடக்கிறான். எதிர்பாராமல் நம் நாட்டை வளைத்து வெற்றி கண்ட அந்த வீணனை வீழ்த்த, நான் தந்திரமாகக் கோட்டையைவிட்டு வெளியேறி நமது நட்பு நாட்டுப் படைகளுடன் இங்கு வந்து பகைவனை முறியடித்துவிட்டேன்" எனக் கூறி, அவளைத் தழுவிக் கொண்டான். கொலையாளிகள் சிறைப்பட்டனர். வெற்றி வீரனின் தோளில் சாய்ந்தவாறு அந்தத் தோகை தன் நாட்டுக்குத் திரும்பினாள். அவள் விரும்பியவாறே மணவிழா நடந்தது. அரசுப் பொறுப்பை தளபதியே ஏற்றுக் கொண்டு மன்னனானான். இன்ப நாட்கள் தொடர்ந்தன. இடையிலே அரசு அலுவல்கள் காரணமாக அவன் இரண்டொரு கிழமைகள் அடுத்த நாடுகளுக்குச் செல்ல நேரிட்டது. அவன் சென்று திரும்பியதும் அவள் ஓடிச் சென்று அவன் தோளில் தொத்திக் கொண்டாள்.

"கண்ணே, பிரிவு உன்னை மிகவும் துன்புறுத்தி விட்டதா?" எனக் கேட்டான் அவன்!

"அத்தான்! நீங்கள் என்னருகே இல்லாதபோது ஒவ்வொரு மாலைப் பொழுதும் எப்படி வந்தது தெரியுமா?"


"எப்படி வந்தது?"

"அன்று பகை நாட்டுக் கொலைக் களத்தில் எதிரிகள் வாட்களை ஓங்கி என்னை நோக்கி வந்தார்களே; அதைப் போல ஒவ்வொரு நாள் மாலைப் பொழுதும் என்னை நோக்கி வந்தது."

"அடி என் தங்கமே!" என்று அவன், அவளை மடியில் சாய்த்துக் கொண்டு முத்தமாரி பொழிந்தான்.

"காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்."

அதிகாரம் - 123 -பொழுதுகண்டு இரங்கல்; பாடல் - 1224



இருள் சூழ்ந்த நேரம். இயற்கைப் பெண், தன் ஒளி பொருந்திய முகத்தைத் திருப்பிக்கொண்டு கரிய கூந்தலின் அழகைக் காட்சியாக்கி உயிரினங்களை மயங்கச் செய்தும் இன்பக் கூத்து ஆடச் செய்தும் சோர்ந்து போய்த் தூங்கச் செய்தும் இடையிடையே நட்சத்திரப் பற்கள் காட்டிச் சிரித்துக் கொண்டி ருந்தாள். காற்றில் மெல்ல அசையும் இலைகளின் இசையொலியைக் கிழித்துக் கொண்டு, அடிக்கடி ஒரு பறவையின் ஆரவாரச் சத்தம் கேட்டவண்ணமிருந்தது. அந்தப் பேரொலி கிளம்பும்போது மட்டும், மரக்கிளைகளில் உறங்கிக் கொண்டிருக்கும் மற்ற பறவைகள் சிறிது இமை திறந்து, சிறகைச் சற்றுத் தூக்கித் தங்கள் சிறிய கால்களைக் கிளைகளில் அழுத்தமாக ஊன்றிக்கொண்டு படபடத்துப் பின்னர் அமைதிபெற்றுக் கொண்டிருந்தன.

தன் ஆரவாரக் குரல் கேட்டுப் பறவைக் குலமே நடுங்குவது கண்டு அந்தக் கோட்டான் பறவைக்கு ஒரே மகிழ்ச்சி; அடர்ந்த அந்தக் காட்டில் உள்ள வண்ண வண்ணக் கிள்ளைகளும் எண்ணத் தொலையாப் புறாக்களும் எல்லாப் பறவைகளுமே தன் அடிமைகள் - தன்னை எதிர்க்கும் வலிவற்றவை - ஆற்றலற்றவை என்ற ஆணவ நெஞ்சத்தோடு, கோட்டான் தொடர்ந்து கத்திக் கொண்டேயிருந்தது. அந்தப் பயங்கர ஒலியைக் கேட்டு மற்ற பறவைகள் மிரட்சி கொள்வதிலே கோட்டானுக்கு ஒரு

கொண்டாட்டம். கோட்டான் அமர்ந்திருந்த உச்சிக் கிளைக்குக் கீழே அடிக்கிளையொன்றில் இரண்டு காக்கைகள் ஒன்றுக்கொன்று மெல்லப் பேசிக் கொண்டன:-

"என்ன இது, இந்தக் கோட்டானின் கொட்டத்தை அடக்கவே முடியாதா?"

"பொறுமையாக இரு. காலம் வந்தே தீரும்."

"காலம் எப்போது வருவது? நம் கவலை என்றைக்குத் தீருவது?"

"அடி அசட்டுப்பெண்ணே! எதற்கும் காலம்-நேரம் பார்க்க வேண்டாமா?"

"போ அத்தான் - உனக்கு வீரமே இல்லை! எந்த ஆருடக்காரனிடம் போய்க் காலமும் நேரமும் கேட்கப் போகிறாய்? இந்தப் பாழுங் கோட்டானை அடக்க உனக்குத் துணிவே கிடையாது!"

காக்கைகள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது, உச்சிக் கிளையிலிருந்து கோட்டான் உறுமிற்று. "ஏய் யாரங்கே? என்ன கூச்சல்?" கூகையின் அந்த அதிகாரக் குரல் கேட்டுக் காக்கைகள் வாய் பொத்திக் கொண்டன. ஆனால், அவைகளின் விழிகளில் மட்டும் கனல் பொங்கியது. பிறகு ஒரே அமைதி. நீண்ட நேரத்துக்குப் பின்னர், பெண் காக்கையிடம் ஆண் காக்கை, காதோடு காதாகச் சொல்லிற்று, "நான் சொன்ன காலம் வரப்போகிறது பார்!" என்று.


விடிவெள்ளி முளைத்தது. உதயக்கதிரவன் ஒளிக்கரங்களை நீட்டியவாறு எழுந்தான். எங்கும் தகத்தகாயம். வெளிச்சப் பெருவெள்ளம். "நான் சொன்ன காலம் வந்துவிட்ட" தென்று கூறியவாறு, ஆண் காக்கை உச்சிக்கிளை நோக்கிப் பறந்தது. கோட்டான் மீது பாய்ந்தது. தாக்குண்ட அந்தக் கூகை, மயங்கிக் கீழே விழுந்தது. காக்கை வென்றது. காலம் பார்த்துத் தாக்கியதால் கிடைத்த வெற்றி அது.

பகையை வெல்வதற்குக் காலமும் நேரமும் கணக்கிடப்பட வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

மாஸ்கோ வரையில் இட்லரின் படைகள் நுழைந்தபோது, பனிக்காலம் வரும்வரையில் காத்திருந்து இறுதியில் வெற்றி பெற்றார்கள் அல்லவா, சோவியத் நாட்டுக்காரர்கள்! காலத்தின் அருமையை விளக்குவதே இந்தக் குறள்.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது."

அதிகாரம் - 49 - காலம் அறிதல்; பாடல் - 481



"தங்கச்சி, எங்கேயம்மா போகிறாய்?"

"என்னக்கா, இப்படியொரு கேள்வி கேட்கிறாய்? காலையிலிருந்து காடு கழனியில் உழைத்துக் கொண்டிருக்கும் நமது அத்தானைப் பார்ப்பதற்குத்தான் போகிறேன்."

"ஓ! நான் ஏதோ உளறுகிறேன். இதோ அவருக்காகத்தான் அமுதம் போல் உணவு சமைத்து வைத்திருக்கிறேன். அதை நீதான் எடுத்துக் கொண்டு போகப் போகிறாய் என்று தெரிந்திருந்தும் ஏதோ குழப்பத்தில் இப்படி ஒரு கேள்வி கேட்டுவிட்டேன். நான் ஒரு பைத்தியக்காரி!"

"அத்தானைக் கொஞ்ச நேரம் பிரிந்திருந்தால்தான் உனக்குப் பைத்தியமே பிடித்துவிடுமே அக்கா!"

"போடி குறும்புக்காரி! அக்காளிடம் பேசுகிறோம் என்றுகூடத் தெரியாமல் கேலியும் கிண்டலும் செய்வதைப் பார்!"

"நான் சின்னஞ்சிறுமிதானே அக்கா! வேடிக்கையாகப் பேசக்கூடாதா? உன் அத்தானைப் பற்றிப் பேசினால் உனக்குப் பிடிக்காமலிருக்காது. வெட்கப் படுவது போல நடிக்கிறாய். இல்லையா அக்கா?"

"சரி! சரி! சோறும் சாறும் ஆறிவிடப் போகிறது. எடுத்துக்கொண்டு புறப்படு. வேலை முடிந்ததும் அவரை விரைவில் வரச்சொல்லு."

"பறந்து வரச் சொல்லட்டுமா? அக்கா! இரண்டு இறக்கைகள் இருந்தால் கொடு என்னிடம்! அதை அத்தானுக்குக் கட்டிவிட்டுப் பறந்து வரச் சொல்லுகிறேன்."

இவ்வாறு கூறியவாறு அந்தச் சிறுமி சோற்றுக் கூடையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டாள். அவள் நடந்து செல்வதைப் பார்த்தவாறு திண்ணையோரம் நின்று கொண்டிருந்த அவள் அக்காளின் காதில் உள்ளே, குழந்தை அழும் ஒலி கேட்டது. "அப்பா! அப்பா!" என்று அழுதுகொண்டே அவன் தத்தி நடந்து திண்ணைக்கு வந்துவிட்டான். அவள் அவனைத் தூக்கியும்கூட அழுகை ஓய்ந்திடவில்லை. "அப்பா! அப்பா! அப்பா வேணும்!" என்று உரக்கக் கத்திடத் தொடங்கினான்.

தெருவில் போய்க்கொண்டிருந்த தங்கச்சியைக் குரல் கொடுத்து அக்காள் அழைத்தாள். "என்ன? ஏன் என்னைக் கூப்பிட்டாய்?" என்றவாறு சிறுமி, திரும்பி ஓடிவந்தாள்.

"இந்தா! இவனைக் கொஞ்சம் அவன் அப்பாவிடம் தூக்கிக்கொண்டு போ! அவரைக் காணவேண்டுமென்று என்னைப் பிடுங்கித் தின்கிறான்!" என்று, குழந்தையையும் தங்கையிடம் கொடுக்கிறாள். குழந்தை முகத்தில் மலர்ச்சி. சிறுமி, அந்த அரும்பைச் சுமந்துகொண்டு, அக்காளிடம் விடைபெற்று ஓடுகிறாள்.

இந்தக் காட்சியையும், அக்காள் தங்கை உரையாடலையும், எதிர்வீட்டுப் பலகணியிலிருந்தவாறு ஒருத்தி கவனித்துக் கொண்டிருக்கிறாள். அவள், காதலனைப் பிரிந்து கலங்கித் தவிக்கும் கயல் விழியாள்.

எதிர் வீட்டில் அத்தானுக்குச் சோறு கொண்டுபோகும் சிறுமியைப்போல, அந்தக் காதலியின் நெஞ்சம் அவள் காதலனைத் தேடிச் செல்கிறதாம்! அப்பாவைக் காணவேண்டும் என்று அடம் பிடித்து அழுதிடும் குழந்தையைப் போல், காதலனைக் காணவேண்டுமென்று கண்கள், அவளைப் பிடுங்கித் தின்கின்றனவாம். அதனால் அவள், தன் நெஞ்சத்தைப் பார்த்துக் கெஞ்சுகிறாள்:

"என் நெஞ்சே! நீ அவரிடம் போகும்போது என் விழிகளையும் உடன் எடுத்துக் கொண்டு செல்க! அவரைக் காணவேண்டுமென்று என் கண்கள் என்னைப் பிடுங்கித் தின்கின்றன.

"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று."

அதிகாரம் - 125 - நெஞ்சொடு கிளத்தல்; பாடல் - 1244



கொம்பு விட்டுக் கொம்பு தாவும் குரங்கினைப்போல், கொள்கை விட்டுக் கொள்கை தாவும் மனிதர்கள் சிலரில், அந்த மருத்துவ சிகாமணியும் ஒருவர். உண்மையில் மருத்துவத்தில் அவர் சிகாமணி அல்ல. பெயர்தான் அவருக்குச் சிகாமணி. அந்தப் பெயர் மருத்துவத் தொழிலுடன் ஒட்டிக்கொண்டு 'மருத்துவ சிகாமணி'யென அழைக்கப்பட்டார். மருந்து தயாரித்து விற்பனை செய்யும் வாணிபமும் அவருக்கு உண்டு. தான் தயாரிக்கும் மருந்துகளே உயர்ந்தவை; உன்னதமானவை; நேர்த்தியானவை என்பதைக் காட்டிக்கொள்ள, அவர் ஒரு மலிவான வியாபார தந்திரத்தைக் கையாண்டு வந்தார். அதாவது, தன்னைத்தவிர மற்றுமுள்ள மருந்து வணிகர்கள் அனைவருமே நேர்மையற்றவர்கள் - கலப்படம் செய்து மக்களின் உயிரோடு விளையாடுகிறவர்கள் என்று பிரச்சாரம் செய்து வந்தார்.

யாரைப் பற்றியாவது, அல்லது எதைப் பற்றியாவது முந்திக்கொண்டு ஒரு குறையைச் சொல்லாவிட்டால், அப்படிச் சொன்னவரைக் குறைகளே இல்லாத பத்தரைமாற்றுத் தங்கமென ஊரார் எண்ணிக் கொள்வார்களாம்! அந்த வகையைச் சேர்ந்தவர், மருத்துவ சிகாமணி.

அவருக்கு எப்படியாவது அரசாங்கப் பதவியொன்றில் அமர்ந்து புகழ்பெற வேண்டுமென்று ஓர் ஆசை. அதற்குத் திட்டமிட்டே அவர் அரண்மனை விதூஷகர் ஒருவரைத் தோழமை கொண்டு, அவர் வாயிலாகத் தன் ஆவலை அரசரின் காதில் போட்டு வைக்குமாறு கேட்டுக் கொண்டார். அந்த விதூஷகர், சிகாமணிக்கு

மாத்திரமல்லாமல், தனக்கும் சேர்த்து அரசரிடம் ஒரு பதவியைக் கோரினார். அடுத்த நொடியிலேயே விதூஷகர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

சிகாமணியின் நடவடிக்கைகளையும் அரசுத் துறையினர் கூர்மையாக நோக்கிக் கொண்டிருந்தனர். ஒரு நாள் சிகாமணியின் மருந்தகத்தின் முன்னால் பெருவாரியாக மக்கள் கூடியிருந்தனர். அரசுத் துறையினர் அங்குள்ள மருந்துகளைச் சோதனையிட்டுக் கொண்டிருந்தனர். மருந்துகளில் அவர் கலப்படம் செய்து விற்றது கையும் மெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்டதாலேயே அந்தச் சோதனை நடைபெற்றது. மக்கள் பேசிக் கொண்டார்கள்.

"எவ்வளவு உத்தமராக, ஒழுக்கசீலராக இவர் இதுவரையில் காணப்பட்டார். இப்போது உண்மை அம்பலமாகிவிட்டதே!"


"தன் குற்றத்தை மறைக்க ஊரார்மேல் குற்றம்கூறி வாழ்ந்தார். கள் அருந்துவது தீது என்று அன்று கடல் மடை திறந்தாற்போல் பேசிவிட்டு, அன்றிரவு இவரே கள் அருந்தியதை நானே நேரில் பார்த்திருக்கிறேனே!"

இப்படிப் பல்வேறு கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டபோது, இடையே ஒரு பெரியவர் குறுக்கிட்டுச் சொன்னார்:

"புறத்தில் குன்றிமணியைப் போலச் செம்மையானவர்களாகக் காணப்பட் டாலும், அகத்தில் அந்தக் குன்றிமணியின் மூக்கைப் போலக் கறுத்திருப்பவர் களும் இந்த உலகில் இருக்கிறார்கள் என்று வள்ளுவர் கூறியிருப்பதை மறந்து விட்டீர்களோ? அதற்கு எடுத்துக் காட்டுத்தான் இந்த மருத்துவ சிகாமணி."

"புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து."

அதிகாரம் - 28 - கூடா ஒழுக்கம்; பாடல் - 277





அகன்ற நெற்றி.

ஆண்மையை அறிவுறுத்தும் கண்கள்; உயர்ந்த தோள்கள்.

உறுதியைப் புலப்படுத்தும் நடை.

அந்த எழிலார் வீரனைத்தான் அவள் காதலித்தாள். அவனும் அவ்வாறே தன்னை அவளிடம் ஒப்படைத்திருந்தான். இந்த ஒப்பந்த ஏட்டில் அவளது கடைவிழியும் அவனது காந்த விழியும் கையெழுத்திட்டு நாட்கள் பலவாயின. பிரிவெனும் கோடை வெப்பம் "தழுவுதல்" என்னும் குளிர்காலத்திற்குக் குறுக்கே நின்றது. யாருமறியா வண்ணம் எப்படியும் ஒரு நாள் சந்தித்துவிட வேண்டுமென்று இருவருமே துடித்தனர்.

வீட்டுக்கருகேயுள்ள அழகிய தென்னந்தோப்பு. நிலவொளியோ பாலைப் பொழிந்து கொண்டிருக்கிறது, நிலமகள் மீது! அன்னை, தந்தை, அண்ணன், தம்பி அனைவருமே ஆழ்ந்த உறக்கத்திலிருக்கின்றனர். அவள் மட்டும், ஆணிகள் நீட்டிக் கொண்டிருக்கும் பலகையில் படுத்தவளைப்போல உறக்கமின்றித் தவிக்கிறாள்; மெல்ல எழுகிறாள். "அனைவரும் தூங்குகிறார்கள், அஞ்சாமற் செல்வாயாக!" என்று அகல் விளக்குத் தனது சுடர் நாக்கை அசைக்கிறது. கொல்லைப்புறக் கதவு திறக்கப்படுகிறது. முல்லைக்கொடிப் பந்தலைத் தாண்டும் வரையில், மூச்சுக்கூட வெளிப்படாமல் ஓசையின்றி நடக்கிறாள்.

பின்னர், அவள் கால்கள் அந்தத் தென்னந் தோப்பை நோக்கி நடக்கின்றன. அன்று மாலை, அவன் விழிகாட்டிய குறிப்பு, "அந்தத் தோப்பில் காத்திருப்பேன் - கண்மணியே வந்திடுக" என்ற மொழியைப் பேசியதாகவே அவள் தீர்மானித்துக் கொண்டிருந்தாள். மண் கலயங்களைத் தலையில் தூக்கிக் கொண்டு சந்தைக்குச் செல்லும் குயவரைப்போல், குலைகளைத் தாங்கிக் கொண்டு தென்னை மரங்கள் காட்சியளிக்கும் அந்தச் சோலையில், தன்னை மடியில் தாங்கிட அந்த மறவன்

இன்னும் வரவில்லையே என்று ஏங்கினாள். ஏக்கத்துடன் அவள், வளைந்த தென்னையொன்றில் சாய்ந்தவாறு நிலவை நோக்கினாள். அந்தத் தெங்கிற்கு இரு கை முளைத்ததோ - அவைதான் அவளை அப்படியே அணைத்துக் கொண்டதோ - என்று அவள் வியப்படையத் தொடங்குவதற்குள்ளாக, அவன்தான் வந்துவிட்டான் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். இருவரிடையே சிறிது நேரம் பேச்சில்லை. இதயங்கள் இரண்டும் அதிர்ந்தன.

"நீங்கள் வந்ததை யாரும் பார்க்கவில்லையே?"

"இல்லை! உன்னைத்தவிர யாரும் பார்க்கவில்லை! நீ வந்ததை யாராவது பார்த்திருப்பார்களோ?"

"இல்லையத்தான்! இல்லத்தில் ஒளிவிடும் அகல் விளக்குக்கும் என் இதயத்தில் ஒளிவிடும் இந்த அணையா விளக்குக்கும் தவிர, வேறு யாருக்கும் நான் இங்கு வந்தது தெரியாது."

"ஏன் தெரியாது? இதோ தென்னை! அதோ புன்னை! மேலே நிலவு - இவைகளுக்கெல்லாம் தெரியாதா?"

"என் வீட்டாருக்கோ, இந்த ஊர் மக்களுக்கோ நம் காதல் செய்தி தெரியாது என்பதைத்தான் சொல்லுகிறேன். உங்கள் வாயிலாக யாரேனும் அறிவாரோ அத்தான்?"

"நிச்சயமாக யாரும் அறிய மாட்டார்கள்."

உரையாடல் வேறு திசையில் திரும்பியது. நிலவுப் பெண், தன் முகத்தை முகிலெனும் துகிலால் மறைத்துக் கொண்டாள்.

பொழுது விடிந்தது. யாருக்கும் தெரியாதென்று இருவரும் எண்ணியிருந்த அந்தக் காதல் சந்திப்பு, ஊர் முழுதும் தெரிந்துவிட்டது.

அவள் தோழி, அவளை அணுகி, தென்னந்தோப்புச் சந்திப்புப்பற்றி தெருக்கோடி மண்டபத்தில் ஐந்தாறு பெண்டிர் பேசிக் கொண்டிருந்ததை விளக்கமாக உரைத்தாள்.

அதற்கு, அவள் வேதனையுடன் பதில் கூறினாள்:

"நான் என் காதலரைச் சந்தித்தது ஒரு நாள்தான் - அடடா! அதற்குள் இந்தச் செய்தி, சந்திர கிரகணம் ஏற்பட்டால் எல்லோருக்கும் தெரிவதுபோல் பரவி விட்டதே!"

சூரியனையோ, சந்திரனையோ பாம்பு விழுங்குவதால்தான் கிரகணம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறதல்லவா? வானநூலோர் பூமியும் கதிரவனும் சந்திரனும் - வானில் ஒரு குறிப்பிட்ட நிலையில் வரும்போது கிரகணம் ஏற்படுவதைக் கண்டறிந்துள்ளனர். பழைய நாட்களிலேயே கோள்களின் நிலையை ஆராய்ந்து விண்வெளி நுணுக்கங்களை வெளியிட்ட மேதைகள் இருந்திருக் கின்றனர். அப்படிக் கண்டு தெளிந்த ஓர் உண்மைதான் கிரகணம்.

அந்தக் கிரகணம் பிடிப்பது எப்படி ஊருக்கெல்லாம் பரவலாகத் தெரிந்து விடுகிறதோ, அதுபோல அவள், தன் காதலனை ஒரு நாள் சந்தித்த நிகழ்ச்சியும் விரைவில் ஊர்முழுக்கப் பரவி விடுகிறதாம். அதற்கு இதோ குறள்.

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று."

அதிகாரம் - 115 - அலர் அறிவுறுத்தல்; பாடல் - 1146



சிறுவெண்காக்கை

அடர்ந்த காடு! முட்புதர்கள் மொய்த்த தரை! பகல் வேளைதான் எனினும், ஒளி உட்புக முடியாத அளவுக்கு நிழல் வழங்கும் தருக்கள்! அந்தக் காட்டைக் கடந்து அடுத்த ஊருக்குச் செல்லவேண்டிய மருத்துவர் ஒருவர், வேறு வழியின்றி அவ்வழியே நடந்து கொண்டிருந்தார். பயணம், ஒரு வகையில் பயன் படக்கூடியதாகவும் அமைந்திருப்பதாகக் கருதி மகிழ்ந்தார், அந்த மருத்துவர். காரணம், அவர் மருந்து தயாரிப்பதற்குத் தேவையான பச்சிலைகள், மூலிகை வேர்கள் அந்தக் காட்டில் ஏராளமாகக் கிடைத்தன. அவைகளையெல்லாம் மிக்க உற்சாகத்துடன் அவர் தன் மருந்துப் பையில் நிரப்பிக் கொண்டார். அந்த வட்டாரத்திலேயே அவருக்கு நிகரான மருத்துவர் இல்லையென்றுகூடக் கூறலாம். ஏழைகளுக்கு நோய் எனில் அவர்களிடம் காசு எதுவும் பெறாமலே அவர் சிகிச்சை செய்வார்.

அவரது கால்கள், எளிய மக்கள் வாழும் பகுதிகளையே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும். செல்வம் படைத்தோர், நிலக்கிழார் இல்லங்களில் சிகிச்சையளித்துப் பெறுகிற தொகையினைக் கொண்டு, வறுமையில் வாடும் மக்களுக்கு மருத்துவத் தொண்டினை நடத்தக் கூடியவர். அதனாலேயே அந்தப் பகுதி மக்கள் ஒன்றுகூடி அவருக்கு 'மருத்துவ மேதை' என்ற விருதினைக்கூட வழங்கிக் களித்தார்கள். 'அவர் மருந்து கொடுத்தால் தீராத நோயே கிடையாது' என்ற புகழாரங்கள் வேறு குவிந்து கொண்டிருந்தன. மானிடர்க்கு மட்டுமின்றி விலங்கினங்கள், பறவையினங்களை வீட்டில் வளர்ப்போரும் இந்த மருத்துவரைத் தான் நாடுவர், அவைகள் நோயுற்றால்!

அத்துணை சிறந்த திறமையாளர். மேலும் மருத்துவத் துறையில், தான் ஆற்றிட வேண்டிய பணிகளைப் பற்றிச் சிந்தித்தவாறு காட்டுப் பாதையில் நடந்து கொண்டிருந்தார்.

அப்போது எங்கிருந்தோ ஓர் உறுமல் ஒலி கேட்டது! அவர் அஞ்சி நடுங்கிட வில்லை. ஒலிவந்த திக்கு நோக்கிச் செவியைத் திருப்பி உற்றுக் கவனித்தார். அந்த உறுமல் ஆத்திரம் கலந்ததாகவோ, வெறி கலந்ததாகவோ இல்லை; வேதனை கலந்ததாக இருந்தது. எனினும், அது ஒரு கொடிய மிருகத்தின் ஒலிதான் என்பதை மருத்துவர் புரிந்து கொண்டார்.

ஒலியின் வேகமும் சிறிது சிறிதாக அடங்கியவாறு இருந்தது. எதற்கும் நெருங்கிச் சென்று பார்ப்போம் என்று மருத்துவர் முடிவு செய்தார். ஒலிவந்த திசையில் நடந்தார். வேதனையான ஒலிதான்! ஆனால், அது ஒரு வேங்கைப் புலியின் ஒலி. மருத்துவர், அன்பு நிறைந்த விழிகளோடு அந்த வேங்கையை நோக்கினார். வேங்கைப்புலி தரையில் வீழ்ந்து கிடந்தது. அதன் பாதத்தில் ஒரு கூரிய அம்பு தைத்திருந்தது. மருத்துவர் புரிந்து கொண்டார். யாரோ வேடன் வேங்கையைக் குறி பார்த்து வில்லை வளைத்திருக்கிறான். அது கண்ட வேங்கை, அவன்மீது பாய முனைந்திருக்கிறது. அதற்குள் வேடன் விடுத்த அம்பு, புலியின் பாதத்தில் தைத்திருக் கிறது. கணைபட்ட வேங்கை, கடும் வேகத்தில் ஓடி வந்திருக்கிறது. அதனால் அம்பின் நுனி அதன் பாதத்தில் நன்றாக அழுந்திப் புலியினால் நடக்க முடியவில்லை. வேதனை தாங்காமல் விழுந்து கிடக்கிறது.

நல்ல உள்ளங் கொண்ட மருத்துவர், ஒரு கணமும் தாமதிக்கவில்லை. வேங்கையின் அருகே சென்று அதன் முதுகை வருடினார். தலையில் தட்டிக் கொடுத்தார். புலிக்கு அந்தச் செயல் சிறிது இதமாக இருந்தது போலும்! அமைதியாகப் படுத்திருந்தது. பிறகு மருத்துவர், தன்னிடமுள்ள சில பச்சிலைகளைக் கசக்கிப் பிழிந்து அம்பு பட்டிருக்கிற புலியின் பாதத்தில் தடவினார். புலிக்கு வலி தெரியாத அளவுக்கு அதன் பாதத்தில் உள்ள அம்பினைப் பிடுங்கிட, அந்தப் பச்சிலைச் சாறு உதவிற்று! அம்பைத் தொலைவில் வீசிவிட்டு, காயத்துக்கு மருந்து தடவினார். வேங்கைப்புலி எழுந்து நின்றது.

மருத்துவரும் மன நிம்மதியுடன் எழுந்தார். தன் வாழ்க்கையில் ஒரு கொடிய மிருகத்திற்குக்கூட உதவி செய்துவிட்டோம் என்ற ஆறுதல் அவருக்கு!


திடீரென உறுமல் ஒலி பயங்கரமாகக் கேட்டது. மருத்துவர் திடுக்கிட்டார். அந்த வேங்கைப்புலி அவர் மீதே பாய்ந்தது. அவர் மார்பகத்தைப் பிளந்து, கை கால்களைத் துண்டித்து, தலையை நொறுக்கித் தன் பசியைத் தீர்த்துக் கொண்டது. சற்று நேரத்துக்குமுன் தன் உயிருக்காகப் போராடிய வேங்கைப்புலி, தன்னைக் காப்பாற்றியவர் உயிரையே போக்கி மகிழ்ந்தது.

"வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடதாரி" என்ற பாட்டைப் படித்திருக்கிறோம் அல்லவா? அந்தப் பாட்டு விளக்கும் உண்மையைத்தான் திருவள்ளுவர், குறள் வடிவில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அறிவித்துவிட்டுப் போயிருக்கிறார்.

அவரவர்களுடைய இயல்புகளை அறிந்து, அவரவர்க்குப் பொருந்துமாறு செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும் தவறு ஏற்பட்டுவிடும்.

"நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை"

அதிகாரம் - 47 - தெரிந்து செயல்வகை; பாடல் - 469



கண்ணகியின் துயரம்

"நிலவு நெருப்பாகச் சுடுகிறதே - அய்யோ! கொடுமை நிறைந்த நிலவே! உனக்குத் தண்ணிலவு என்று பெயராயிற்றே; என்மீது எதற்காகத் தணலைக் கொட்டுகிறாய்?" என, முழுமதியின் மீது சினங்கொப்பளிக்கச் சீறிவிழும் மங்கை யர் உண்டு, மார்புறத் தழுவி மகிழ்ந்த மணாளனைப் பிரிந்திருக்கும்போது!

"பொல்லாத நிலவே! நில்லாதே என் முன்னால்! போ! போ! மறைந்து விடு" எனச் சொல்லாலே கணைபொழிந்து, கண்ணீரும் பொழிந்து நிற்கும் காரிகையர் உண்டு -

காதலன் பிரிவு எனும் கடுஞ்சோதனைக்கு ஆளாகும்போது. ஆனால் இதோ ஒரு பெண், காதலனைப் பிரிந்து கவலை கொண்டிருப்பவள்தான்; எனினும் அவள் நிலாவைப் பார்த்து வசை பாடினாள் இல்லை; வருந்திக் கோபித்துக் கொள்ளவும் இல்லை. கோலநிலா வந்து கொஞ்சுகின்ற இரவில், அவள் காதலனோடு களித்துக் கிடக்க முடியவில்லைதான்; அதற்காக அவள் அந்த நிலாவின்மீது காய்ந்து விழுவதற்குப் பதிலாக, வேண்டுகோள் ஒன்றை வைக்கிறாள். என்ன வேண்டுகோள் அது? இருட்டு நேரத்தில் அவள் கண்கள் காதலனைத் தேடிப் புறப்பட்டு விட்டனவாம்.

ஒருவேளை அந்தக் கண்கள் அவனிருக்குமிடத்திற்கு அருகே வந்து விட்டாலுங்கூட இருள் சூழ்ந்திருந்தால் அவனைக் கண்டுகொள்ள முடியாதல்லவா? அதற்காக அந்தக் கண்களுக்குத் துணையாக ஒரு விளக்குத் தேவைப்படுகிறது. அதுதான் அந்த வான விளக்கு. அந்த விளக்கை, "விலகிப் போ! என் உள்ள வேதனையைக் கிளறாதே!" என்று விரட்டி அடித்துவிட்டால், பிறகு ஏற்படுகிற காரிருளில், அவள் காதலனைத் தேடிப் பிடிக்கமுடியாமல் கண்கள் திண்டாடுமல்லவா? அதற்காக, அவள் நிலவைப் பார்த்துக் கெஞ்சுகிறாள்.


"திங்களே! நீ மறைந்து விடாமல் இருந்திடுவாயாக! என்னைவிட்டுப் பிரியாமலிருந்து பிரிந்து சென்றுவிட்ட என் அன்புக் காதலரை என் கண்களால் தேடிக் காண்பதற்கு உதவியாக நீ ஒளி வழங்கிடல் வேண்டும். ஆகவே, மதியே! நீ மறையாது வாழ்வாயாக!"

அதற்கு இதோ குறள்:

"விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி."

அதிகாரம் - 121 - நினைந்தவர் புலம்பல்; பாடல் - 1210





சுமைதாங்கியின் மறுகோவையம்

அரண்மனையொன்றில் இரண்டு இணைபிரியா நண்பர்கள், உயர்ந்த ஊதியம் பெறும் பதவியில் இருந்தார்கள். அவர்களுடைய பெயர்கள் கற்பனைப் பெயர்கள்தான். எனினும் கதைக்காகவும் கதையின் கருத்துக்காகவும் தேவைப்படுகிற பெயர்கள்.

ஒருவன் பெயர் 'தெளிந்தான்.'

மற்றொருவன் பெயர் 'நெளிந்தான்.'

இருவரும் திருமணமானவர்கள். தெளிந்தானின் மனைவியும் நெளிந்தானின் மனைவியும் அழகில் ஒருவரையொருவர் வெற்றி கொள்ளக்கூடிய அளவுக்குச் சிறப்புறத் திகழ்ந்தவர்கள்.

மிக நெருக்கமான நட்புக்கு இடையிலேயும் நெளிந்தானின் நெஞ்சத்தில் தெளிந்தானின் மனைவியைப் பற்றிய தீய நினைவுகள் தலையெடுத்தன. தன் நண்பனின் உள்ளத்தில் இப்படியொரு நோய் வளர்ந்து வருவதைத் தெளிந்தான் உணர்ந்திடவில்லை. அதைப் போலவே அவன் துணைவியும் கள்ளம் கபடமற்றவள். நெளிந்தானின் பார்வையில் படிந்துள்ள காமக்குறிப்புக்களை அவள் கவனித்திடவில்லை. எப்படியும் ஒரு நாள், தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தான் நெளிந்தான்.

அவன் எதிர்நோக்கியவாறு, அவன் முயற்சிக்குச் சாதகமாக ஒருநாள் அமைந்தது. அவன் நண்பன் 'தெளிந்தான்' அரண்மனை அலுவலாக வேற்றூர் செல்ல நேரிட்டது. அன்று நெளிந்தான், தெளிந்தானின் இல்லத்துக்குச் சென்றான். தெளிந்தானின் மனைவி அவனை வரவேற்று, முன்கூடத்தில் அமரச் சொன்னாள். "ஏதாவது அருந்துகிறீர்களா?" என அன்புடன் கேட்டாள் அவள்.

"எதுவும் இப்போது தேவையில்லை" என்றான் அவன், கண்களில் வெறி நடனமாட!

"வீட்டுக்கு வந்துவிட்டு எதுவும் பருகாமல் செல்வதா? பால் இருக்கிறது; கொண்டு வருகிறேன்."

"வேண்டாம்! வேண்டாம்! திருக்குறளில் மூன்றாவது பால் தெரியுமா உனக்கு?"

"என்ன சொல்கிறீர்கள்?"

"அதுதான் காமத்துப்பால்!"

என்று கூறியவாறு, அவளை ஓடிப் போய்த் தழுவத் தொடங்கினான். ஒரு கணம் அதிர்ச்சி அடைந்தாள். பிறகு எரிமலை- கடலின் கொந்தளிப்பு- கைகளில் வலிவு உள்ள வரையில், அவன் கன்னங்களில் அறைந்தாள். நெளிந்தான், தன் பெயருக்கேற்ப நெளிந்தான். ஓட முயன்றான். அவள், அவனைப் பார்த்து உரக்கப் பேசினாள்:

"குறளில் மூன்றாவது பால் தெரியுமா என்றா கேட்கிறாய்? மூடனே, முதற்பால் அறத்துப்பாலைப் படித்துப் பார்! அப்போது புரியும் உனக்கு!

"அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்."

இந்தக் குறளுக்குப் பொருள் விளங்குகிறதா? சொல்லுகிறேன் கேள்! அறத்தை விட்டுத் தீய வழிகளில் நின்றவர்கள் எல்லாரையும்விட, பிறருடைய மனைவியை விரும்பி அந்த வீட்டு வாயிலில் போய் நின்றவர்கள் அறிவிலிகள். ஆம்! அவர்களைப்போல் அறமொழிந்த அறிவிலிகளே இல்லை."

நெளிந்தான், வாயடைத்துப் போய், வலியெடுத்த கன்னங்களைத் தடவிக் கொண்டே, தலை குனிந்தவாறு வெளியேறினான்.

மறுநாள் தன் மணாளன் தெளிந்தான் வந்ததும், 'நெளிந்தான்' நடந்து கொண்ட முறையைச் சொல்லிக் கதறி அழுதுவிட்டாள். தெளிந்தானுக்குச் சினம் பொங்கிற்று. நண்பனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தான். தன் மனைவி வேதனையுற்றதுபோல், அவன் மனைவியும் வேதனையுற வேண்டுமென்று எண்ணினான். தெளிந்தான் என்று பெயர் இருந்தும்கூடக் கோபத்தின் காரணமாக தேர்ந்தெடுக்கக்கூடாத ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தான்.

நெளிந்தான் ஒரு நாள் வெளியூர் சென்றிருந்தான். அதுதான் சமயமென்று தெளிந்தான், நெளிந்தானின் வீட்டுக்குச் சென்றான்.

தன் மனைவியிடம் தவறாக நடந்துகொண்டு, அவள் மனத்தைப் புண்படுத்தினான் அல்லவா நெளிந்தான்? அதற்குப் பதிலாக நெளிந்தானின் மனைவியின் மனத்தைப் புண்படுத்த வேண்டுமென்பது அவன் திட்டம்.

தெளிந்தானைக் கண்டதும், நெளிந்தானின் மனைவி, "வாருங்கள்" என்று மிக்க அன்புடன் அழைத்தாள். "பால் பருகுகிறீர்களா? கொண்டு வரட்டுமா?" எனக் கேட்டாள். "கொண்டு வா!" என்றான் கோபத்தை அடக்கிக்கொண்டு!

அவள் பால் கிண்ணத்தை அவனிடம் நீட்டினாள். அவனோ, அவளுடைய கைகளைப் பற்றிக் கொண்டான்.

அவள் பதறுவாள், துடிப்பாள், அடிப்பாள் என்று அவன் எதிர்பார்த்தான். அவளோ, நாணிக் கோணி, "இருங்கள்" என்றவாறு கதவை மூடுவதற்காகச் சென்றாள்.

அதிர்ச்சியும் மயக்கமும் அவனுக்கு! அவன் ஒரே ஓட்டமாகத் தன் வீடு போய்ச் சேர்ந்தான். நடந்ததைத் தன் மனைவியிடம் சொன்னான். துணைவனின் போக்கை அவள் கண்டித்தாள். இருப்பினும், அவள் வலையில் சிக்காமல் விடுபட்டதற்காக மகிழ்ச்சி தெரிவித்தாள். அவன் சொன்னான்:


"எனக்கும் குறள் தெரியும் பெண்ணே!"

"எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி."

"அதாவது, இச்செயல் எளிதாக நிறைவேறும் என்ற நிலையிலேகூடப் பிறன் மனைவியிடம் நெறி தவறிச் செல்கிறவன் அழியாத பழிக்கு ஆளாவான்."

கொழுநன் கூறிய குறளையும் விளக்கத்தையும் கேட்டு அந்தக் கார் குழலாள் களிபேருவகை எய்தினாள்.

அதிகாரம் - 15 - பிறனில் விழையாமை; பாடல்கள் - 142, 145



"என் இனிய நெஞ்சமே! சே! உன்னைப் போய் இனிய நெஞ்சம் என்று கூறுகிறேன் பார்! எத்தனையோ இன்னல்களைத் தாங்குகிற உனக்கு; இந்த ஒரு விஷயத்தில் மட்டும் உறுதி என்பது ஒரு துளியும் கிடையாது. அவரைத்தான் உன்னுடையவர் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறாய் - ஆனால், அவரைப்பற்றி உனக்கேன் இத்தனை ஐயப்பாடு? அதனால்தானே அடிக்கடி ஊடல் கொள்கிறாய்? அந்த ஊடலாவது நிலைத்துநிற்கும் உறுதியை நீ பெற்றிருக்கிறாயா? அவரைக் கண்டவுடன் என்ன செய்கிறாய்? தீர விசாரித்துத் தெளிவுறாத ஒரு குற்றத்தை அவர்மீது சுமத்தி ஊடல் கொண்டிருக்கும்போது - அவர் கரங்கள் என்மீது பட்டவுடன் நீ எங்கேயோ போய்விடுகிறாய் நெஞ்சே! கட்டித் தழுவுகிறார் - காதல் இலக்கியம் வரைகிறார் - எட்டித் தள்ளமுடியாமல் என்னை முழுமையாக அவருக்குக் கொடுத்துவிடுகிறேன். கூடலெனும் தேர்த்திருவிழாவில் ஊடலென்பது எங்கேயோ காணாமற் போய்விட்ட செல்லாப் பணமாகி விடுகிறது.


ஊடலைத் தீர்த்துக் கூடலால் என்னை மகிழ்விக்கும் அவரைக் காணும்போது, நெஞ்சே! நீயல்லவா குறுக்கே நின்று என்னைத் தடுத்து அவருடன் பிணங்கி ஒதுங்கச் செய்யவேண்டும்! அதைச் செய்வதற்குப் பதிலாக, அப்போது நீ எங்கேயோ தொலைந்து விடுகிறாய்! அவர் இல்லாத நேரத்தில் அவர் மீது பொய்யாகச் சினங்கொண்டு குதிக்கின்றாய்!"

இப்படியொரு கிள்ளைமொழியாள், தன் நெஞ்சோடு கிளத்தலை இந்தக் குறள் குறிப்பிடுகிறது.

"கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தினென் நெஞ்சு."

அதிகாரம் - 125 - நெஞ்சொடு கிளத்தல்; பாடல் - 1246

உணர்த்தும் = நீக்கும்



"அன்பே" என்றான். "ஆருயிரே" என்றாள். "அமிழ்தே" என்றான். "தரட்டுமா" என்றாள். "தடையேது?" என்றான்.

"தங்கம் நீ எனக்கு" என்றாள். "தங்கத்தில் பதித்த வைரமல்லலோ நீ" என்று, அவளை இடைவெளிவிடாது தழுவிக் கொண்டான்.

பக்கத்தில் பண் எழுப்பியவாறு பாய்ந்து கொண்டிருந்த தேனருவியின் சிதறிப் பறக்கும் நீர்த்துளிகள், அவர்களுக்கு இயற்கையே பன்னீர் தெளிப்பதுபோல் இருந்தது. நனைந்திருக்கும் பாறைகளின் உச்சியிலே படர்ந்திருக்கும்

பூங்கொடிகளுக்கு நடுவில் அமர்ந்து, குயிலினம், அவர்களின் இன்ப விளையாட்டுக்குப் பின்னணி இசையைப் பொழிந்து கொண்டிருந்தது. தருக்களின் இளந்தளிர்கள் மென்காற்றில் அசைந்து, தங்களைக் குடையாகக் கொண்டு கலவியின்பம் நுகரும் காதலர்தம் நெற்றியினில் முத்து முத்தாகத் தோன்றிடும் வியர்வையினைப் போக்க 'விசிறி' போட்டுக்கொண்டிருந்தன. உதிர்ந்த சருகுகளோ அவர்கட்குப் பஞ்சணையாக மாறும் பெரும் பேற்றினை அடைந்தோமே என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் சலசலத்தன.

இன்பத்தின் நாட்டியம், இரு கை வளையொலியின் நட்டுவாங்கத்துடனும் இதழ் நான்கின்- பக்கவாத்தியத்துடனும் (இன்னும் விவரிக்க வேண்டுமா?) இனிது நிறைவேறியது.

சுவைமிகு பழச்சுளையாம் அந்த இன்பத்தை உண்டவர்க்கு மேலும் சுவை அளிக்க 'ஊடல்' எனும் மாமருந்தும் கிட்டுகிறது. சுவையளிப்பதை மருந்து என்கிறேன் நான்! இல்லை, இல்லை- வள்ளுவர் அப்படிச் சொல்கிறார்.

ஒருவன் அறுசுவை உணவைச் சாப்பிட்டுக் கொண்டேயிருக்கிறான். அந்தச் செயலை அவன் தொடர்ந்து கொண்டேயிருந்தால், அருந்திய உணவின் சுவையை அவனால் அனுபவிக்க முடியுமா? முடியாது! அதனால் என்ன செய்ய வேண்டும்? உணவு செறிப்பதற்குத் தேவையான இடைவேளை தரப்பட வேண்டும். "உண்பதை விட முன் உண்ட உணவு செறிப்பது இன்பமான்து" என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். அதுவும் ஒரு வகையில் உடலுக்கேற்ற மருந்துதானே! அதுபோலவே காதலர் கூடிப் பெறும் சுகத்தைவிட, அந்தக் கூடலுக்குப் பிறகு விளையும் ஊடலில் சுகம் அதிகமாம். முதலில் உண்டது செறித்துப் பிறகு பசித்தபின் உண்ணத் தொடங்குவதுதானே சிறப்புக்குரியதாகும்?

இதோ அதற்குக் குறள்:

"உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது."

அதிகாரம் - 133 - ஊடலுவகை; பாடல் - 1326





ஒருவன் குப்புற வீழ்ந்து மூக்கை உடைத்துக் கொண்டான். எல்லாரும் அவனைக் கேலி செய்தார்கள். கேலியைத் தாங்க முடியாமல் அவனொரு சூழ்ச்சி செய்தான். ஒருநாள் காலையில் வானத்தைப் பார்த்துக் கரம் கூப்பியவாறு, "ஆகா! கடவுளே!" என்று கசிந்துருகிக் கத்தினான்.

ஊரார் கூடினர்! 'என்ன? என்ன?' என்று வினவினர். "அதோ ஆகாயத்தில் ஆண்டவன் தெரிகிறார்" என்றான் மூக்கிழந்தவன்.

"எங்களுக்குத் தெரியவில்லையே?" என்றனர் ஊரார்.

"மூக்கை அறுத்துக் கொண்டால் தெரியும்" என்றான்.

யாரும் முன் வரவில்லை.

பிறகு நாலைந்துபேர் மூக்கை அறுத்துக்கொண்டு விண்ணைப் பார்த்தனர். கடவுள் தெரியவில்லை; கருமேகங்கள்தான் தெரிந்தன. அந்த நாலைந்து பேருக்கும் வெட்க மாகப் போய்விட்டது. மற்றவர் கேலி செய்து புண்படுத்துவரே எனப் பதைத்தனர். எனவே, அவர்களும் தாங்கள் ஏமாந்து போனதைக் காட்டிக் கொள்ளாமல், "ஆமாம்! அதோ கடவுள்! அடடா! என்ன அரிய காட்சி! அருமை! அருமை! ஆண்டவனைக் கண்டதில் எமக்குப் பெருமை! பெருமை!" எனக் குதித்தாடினர்.

ஆண்டவனைக் காண ஆசைப்பட்ட ஒவ்வொருவரும் இவ்வாறே மூக்கைச் சிதைத் துக்கொண்டு, இறுதியில், அந்த ஊர் மக்கள் அனைவருமே மூக்கிழந்தோராயினர்.

இப்படி ஆராயாமல் அறிவிழப்போர் ஒரு சாரார்!

ஊருக்குப் பெரியவன்! அவன் உத்தரவுக்கு அனைவரும் அடிபணிய வேண்டும். மறுத்தால் தலை மண்ணில் உருளும்! அவன் ஒருநாள் புரவியேறி வீதி வலம் சென்றபோது, பூங்கொடியாள் ஒருத்தியைக் காணுகின்றான். அடுத்த கணம் அவன் இல்லத்திலிருந்து ஆணை கிளம்புகிறது, அந்த வெல்லத்தை எப்படியும் கொண்டு வரவேண்டுமென்று! ஏவி விடப்பட்டோர் தாவிச் சென்று தங்கள் இறைவனின் தவிப்பை எடுத்தோதினர். தங்கம் நிகர்த்தவளோ தரையை உதைத்தவாறு பதில் விடுத்தாள். "நான் உதைத்தது தரையை அல்ல! உங்கள் தலைவனின் தலையை என்பதை எடுத்துரைப்பீர்" எனச் சீறினாள்.

பட்டாக்கத்தி வீரர் பதைத்துப் போயினர். அவள் கண்கள் கக்கிடும் அனலை எதிர்க்கமாட்டாமல் திரும்பி ஓடினர். ஊர்ப்பெரியவன் உறுமினான், அடிபட்ட புலிபோல! சிற்றூரைக் கூட்டினான். தன் விருப்பத்துக்கு இணங்காதவள் மீது வீண் பழி சுமத்தினான். பொது மன்றத்தில், அந்தப் பூந்தளிர் கொண்டுவந்து நிறுத்தப்பட்டாள்.

அவளைக் கற்பிழந்தவள் என்று சாதித்தான் அவன்! விலைமகள் என்றான்! அவன் ஆணைக்கு அதுவரை அடங்கிக் கிடந்தவர்களால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவள் கற்பின் திறத்தை, ஊரார் நன்கறிவர். பொற்புடை மங்கை பற்றிப் பொல்லாங்கு உரைப்பதை ஏற்றிட எவரும் முன் வரவில்லை. காமுகனோ, கையில் வாள் தூக்கி கம்பீரமாக எழுந்தான். ஊரார் அவனுக்கு எதிரே தங்கள் கைகளை மட்டுமே உயர்த்தினர். "வீண்பழி சுமத்தாதே!" என்ற குரல் நாலா திக்கிலுமிருந்து எழுந்தது.

அவன் கைவாளும் அவன் ஆட்களின் துணையும் என்ன செய்யமுடியும் மக்களின் ஒன்று திரண்ட சக்தியின் முன்னே!

அவன் ஆட்டம் அடங்கிற்று - ஆணவம் அழிந்துவிட்டது - தலை குனிந்தவாறு தன்னகம் நோக்கி நடந்தான்.


இரு கதைகள்! இரண்டிலுமே பொய்களின் மூலம் ஊராரை ஏமாற்ற முயற்சி!

முதற் கதையில் ஊர் ஏமாறுகிறது; அடுத்த கதையில் ஊர் விழித்துக் கொள்கிறது.

எப்பொருளை, யார் யாரிடம் கேட்டாலும் அவர்கள் சொன்னதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல், அது பற்றிய உண்மை என்ன என்பதை ஆராய்ந்து உணர்வதே அறிவாகும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

அதிகாரம் - 43 - அறிவுடைமை; பாடல் - 423



வாணிபத்தின் பொருட்டுப் பிறநாடு சென்றுவரத் திட்டமிடுகிறான் மாவெண்கோ! ஆனால், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறான். வாணிபத்திற்குத் தேவையான பொருள் இல்லாத காரணமா என்றால் இல்லை! அவனது மூதாதையர் சேர்த்துவைத்த பொற்குவியல் குன்றுபோல் உண்டு, அவன் வீட்டில்! அவன் தயக்கத்திற்கும், தவிப்புக்கும் காரணமே அவன் துணைவி மாங்கனிதான்! அவளைப் பிரிந்து அவனாலும் இருக்கமுடியாது என்றாலும் அவனைப் பிரிந்து அவளால் உயிர்வாழவே முடியாது என்பதை அவனறிவான். இதற்கிடையே அவனது வணிகத்துறைக் கூட்டாளிகள் அவனை வலியுறுத்திக் கொண்டேயிருந்தார்கள், பிறநாடு சென்று வாணிபம் நடாத்திப் பொருளீட்டுவதன் மேன்மை குறித்து! வேறு வழியின்றி, ஒரு நாள் மாவெண்கோ, அவர்களுடன் பயணம் புறப்படுவதாக ஒப்புதல் அளித்துவிட்டான்.

அன்றிரவு கட்டிலறையில் மாங்கனியிடம் எப்படியாவது சம்மதம் வாங்கிவிடலாமென்ற துணிவுடன் இல்லம் வந்தான்.

சோர்வுற்றிருந்த அவன் முகத்தில், தன் கன்னங்களால் ஒத்தடம் கொடுத்து அந்தச் சோர்வினைப் போக்கினாள் மாங்கனி.

உணவருந்திட அழைத்தாள். வாழை இலை விரித்து வகை வகையாய் உணவு பரிமாறினாள். அவற்றைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான் மாவெண்கோ. அவன் உணவை அள்ளிச் சுவைக்காதது கண்ட புள்ளி மயில், துள்ளியோடிவந்து தன் காந்தள் விரல்களால் இலையில் உள்ள பண்டங்களை எடுத்து அவன் இதழ் பிளந்து ஊட்டி

விட்டாள். தனைமறந்த மாவெண்கோ, மாங்கனியின் மடிமீது சாய்ந்து கொண்டான். பிள்ளையில்லாக் குறையும் தீர்ந்ததென்று அவன் உச்சந்தலையில் ஓர் முத்தமீந்தாள்.

உண்ணுமிடம் நீங்கிப் பின்னர், பண்ணும் யாழும் கலந்ததுபோல் கலந்திடவே பள்ளியறை நோக்கி நடந்தனர் இருவரும் ஒருவராக!

முல்லை மலர்க்கொத்தினை எடுத்து மாங்கனியின் தலையில் சூட்டினான் மாவெண்கோ!

அவளோ, அவனுக்குத் தன் புன்னகையால் முல்லைமலர்த் தோட்ட மொன்றைக் காட்டினாள்.

"விளக்கு, தேவைதானா?" என்றான்.

"விளக்குத் தேவையில்லை, ஆனால் விளக்கம் தேவை; முகவாட்டத்திற்குக் காரணம் என்ன?" எனக் கொஞ்சினாள் அந்தக் கோதை!

"அல்லி மலர் என் முகம்! நிலவு நீயிருக்கும்போது எதற்காக வாடப் போகிறது!" என்றான் சிரித்துக்கொண்டே, மாவெண்கோ.

விளக்கின் ஒளி இல்லை அந்த அறையில்! பேசும் ஒலியும் இல்லை! வானத்தில் நிலவும் முகிலும் தழுவிக்கொண்டன. இளந்தென்றல், மலர்த் தோட்டத்தை அப்படியே வாரியணைத்துக் கொண்டது. அருகம்புல்லின்மீது பனி நீர்த் துளிகள் மென்காற்றுக்கேற்ப நடனமாடின.

"அத்தான்!"

"மாங்கனி!"

இங்கே பள்ளியறையில் மௌன ஓவியங்கள் பேசத் தொடங்கின.

"நான் ஒன்று கேட்பேன்; கொடுப்பாயா மாங்கனி?"

"வைகறைப் பொழுதின் விளிம்பு வரையில் கொடுத்ததெல்லாம் திக்திக்கவில்லையா அத்தான்?"

"இப்போது, உனக்குக் கசப்பான ஒன்றைக் கேட்கிறேன்."

மாங்கனியின் இதழ்களில் அசைவில்லை. அருகம்புல்லில் பனித்துளிபோல், அவள் கண் இமையில் நீர்த்துளிகள் தோன்றின.


"வாணிபத்தின் பொருட்டு ஒரே ஒருமுறை பிறநாடு சென்று வருகிறேன் கண்ணே! நீ தயங்காமல் ஒப்புதல் கொடு!"

"நீர், என்னைப் பிரிந்து எங்கும் செல்வதில்லையென்றால் என்னிடம் அதுபற்றிக் கூறுக. இல்லை; சென்றுதான் தீர வேண்டுமென்றால் நீர் திரும்பி வரும்போது யார் உயிரோடு வாழ்வார்களோ, அவர்களிடத்தில் இப்போது விடை பெற்றுக்கொள்க. என்னைப் பொறுத்தவரையில், நீர் பிரிந்து சென்றுவிட்டால், நீர் திரும்பி வரும்போது நான் உயிரோடு இருக்க மாட்டேன்."

இந்தப் பதிலுக்குப் பிறகு அவனது பிறநாட்டுப் பயணம் நிறைவேறியிருக்க முடியுமா? பிரிவாற்றாமையை உணர்த்திட எவ்வளவு அருமையான குறள் இது!

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்லரவு வாழ்வார்க்கு உரை."

அதிகாரம் - 116 - பிரிவாற்றாமை; பாடல் - 1151



யானை ஒன்று, தண்ணீர் குடிப்பதற்காக ஆற்றிலே இறங்குகிறது. அப்போது அந்த யானையை முதலையொன்று பிடித்துக் கொள்கிறது. யானை உயிர் தப்ப முடியாமல் தவிக்கிறது; அலறுகிறது. கடைசியாக அந்த யானை, "நாராயணா! நாராயணா!" என்று கத்துகிறது; உடனே மகாவிஷ்ணுவான நாராயணன் தோன்றி, அந்த யானையை முதலையிடமிருந்து விடுவிக்கிறான். இதைத்தான் புராணீகர் 'கஜேந்திர மோட்சம்' என்று கதைப்பார்கள்.

மலை போன்ற யானையும் நீரில் கால் வைத்துவிட்டால், முதலையிடம் சிக்கிவிட வேண்டியிருக்கிறது என்பதை விளக்கவும் அதுபோலவே தரையிலே பலமில்லாத முதலை தண்ணீரில் இருந்தால் யானையை இழுக்கக்கூடிய பலம் பெறுவதாகச் சொல்லப்படுவதை எடுத்துக்காட்டவும் நிகழ்ச்சிச் சித்திரம் தீட்டிய புராணீகக் கற்பனையாளன், இறுதியில் அந்த யானையை அபயக்குரல் எழுப்ப வைத்து, அனந்த சயனனையும் அங்கே வரவழைத்து - கஜேந்திர மோட்சம் என்ற கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறான்.

தண்ணீரில் இறங்கி, முதலை வாயில் காலைக் கொடுத்து, பரந்தாமனை அழைத்துப் பரகதி அடைந்த யானை, புராணீகனுடைய யானை!

இதோ, இன்னொரு யானையை நமது வள்ளுவப் பெருந்தகையார் அறிமுகப்படுத்துகிறார், பாருங்கள்.

வேல் கொண்டு வீரன் வருகிறான். அந்த வீரனை யானை எதிர்க்கிறது. வீரனும் யானையை வெல்லத் தீரமாகப் போரிடுகிறான். தமிழனல்லவா? முதுகு காட்டாத மரபு அல்லவா?

நிமிர்ந்த நெஞ்சோடும் தூக்கிய வேலோடும் அவன் யானைமீது பாயும் போது, யானையும் தந்திரமாகத் தன் தந்தங்களை நீட்டி, அந்த வீரனின் வயிற்றைக் குத்தி அவனை மேலே தூக்கிவிடுகிறது. மரண முகப்பிலே அந்த வேலேந்தி, வேதனைக் குரல் எழுப்புகிறான். அதுவும் வீரத்தோடு கலந்துவரும் குரல்தான். வீரனைக் குத்திய வேகத்திலே, அந்த வேழம் வெற்றி நடைபோட்டு ஆவேசமாகவும் ஆத்திரமாகவும் - அங்குமிங்கும் ஓடுகிறது. அப்படி ஓடும்போது, ஒரு பாறைக்குப் பக்கத்திலே தேங்கி நிற்கும் சேறு நிரம்பிய குட்டையிலே காலை வைத்துவிடுகிறது. காலை எடுக்க முடியவில்லை. கனமான மிருகம் யானை. அதன் கனம் பூமியை நோக்கி இறங்குகிறதே தவிர, மேலெழுந்து கரையேற யானைக்கு உதவி செய்யும் அளவின தாய் இல்லை. யானை தவிக்கிறது. அப்போது ஒரு வேடிக்கை நடக்கிறது - என்ன அந்த வேடிக்கை?

ஒரு நரி, யானையின் நிலையைப் பார்த்து விடுகிறது. இதுதான் சமயமென்று, அந்த நரி யானையின் மீது பாய்ந்து தன் ஆகாரத்திற்கு வழிதேடுகிறது. யானையின் உடலெங்கும் நரி, தன் பற்களாலும் நகங்களாலும் பிராண்டி இரத்தம் குடிக்கிறது; மாமிசமும் தின்கிறது. யானையோ எதிர்த்துப் போராட முடியாமல் - ஏங்குகிறது - வேதனை தாங்காமல் துடிக்கிறது. சேற்றிலே மட்டும் அது அகப்படவில்லை யானால், அந்த நரி, ஒரே மிதியில் கூழாகிவிடும். இப்போதோ நரிக்கு ஒரே வேட்டை! நாள் முழுவதும் காட்டைச் சுற்றினாலும் இதுபோல் உணவு அதற்குக் கிடைக்காது.

வீரனையே சுழற்றும் பலமுள்ள யானை, சேற்றிலே சிக்கினால் நரியிடமும் தோல்வியுறும் என்ற கருத்தை வள்ளுவர் அழகான ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள் ளார், குறள் மூலமாக! புராணீகன், கஜேந்திர மோட்சமென்ற நம்பமுடியாத கற்பனையை யானையின் மூலம் சொன்னான். ஆனால், வள்ளுவரோ யானையின் வாயிலாக - ஓர் அரசுக்கு வேண்டிய அறிவுரையையே தீட்டிக் காட்டியிருக்கிறார்.

எத்துணைப் படைபலம் இருந்தாலும் - ஒரு சிறு பலவீனத்தின் காரணமாக, அந்த அரசு, பலமற்ற எதிரிகளால் பறிக்கப்படலாம் என்பதற்காகவே வள்ளுவர் - யானையின் வலிமையையும் அது சேற்றிலே செல்லாக் காசாகிவிட்ட சேதியையும் - சிறு நரி ஜெயித்த விந்தையையும் குறளோவியம் தீட்டிக் காட்டியிருக்கிறார்.

உலகிலேயே போற்றப்படும் பெரும் பெரும் மேதைகளும் - வீரர்களும்கூட சிறு தவறுகளாலேயே சிறியவர்களால் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மராட்டியம் தந்த மாவீரன் சிவாஜி, மூட நம்பிக்கைச் சேற்றிலே கால் வைத்ததால் அல்லவா, காகப்பட்டர் என்னும் வைதீகத் தலைவனுக்கு மண்டியிட்டான்! உலகச் சரித்திரத்தின் ஜோதி விளக்குகளான சீசரும் ஆண்டனியும் தங்கள் சமுதாயத்தைக் கட்டிக் காக்கமுடியாமல் மண்ணாகப் போனதற்குக் காரணம், அழகி கிளியோபாட்ரா தந்த இன்பச் சேற்றிலே அகப்பட்டுக் கொண்டதனாலன்றோ!

நாடாளும் அரசுகள் அனைத்துக்கும் நமது தமிழ்த் தலைவர் தந்த குறளறம் இதோ தரப்படுகிறது! வேல்கொண்ட வீரனைக் குத்திக் கொன்ற யானை, சேற்றிலே சிக்கினால் - அதை நரிகூட எதிர்த்து அழித்துவிடும்.

"காலாழ் களரின் நரிஅடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு."

அதிகாரம் - 50 - இடனறிதல்; பாடல் - 500



"மலையா! நமது ஊர்க் கூனனும் குள்ளனும் எப்போது பார்த்தாலும் உன்னைப் பற்றியே இழித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றிரவு பக்கத்துச் சிற்றூரில் மணவிழா விருந்தொன்றுக்குப் போயிருந்தேன். அங்கே இந்தக் கூனனும் குள்ளனும் வந்திருந்தார்கள். விருந்துக்கிடையே உன்னைப் பற்றிய பேச்சு வந்தது. அந்த இருவரும் மாறிமாறி உன்னைத் தாக்கிப் பேசிக்கொண்டேயிருந்தார்கள்."

தன் நண்பன் மலையனிடம் சிலம்பன் இந்தச் செய்தியைக் கூறும்போது, மலையனின் மற்றொரு நண்பன் கலிங்கனும் அருகே இருந்தான். கலிங்கன், கண்களில் கனல் பறக்கச் சிலம்பனைப் பார்த்துக் கேட்டான்!

"அவர்கள் மலையனை இழிவுபடுத்திப் பேசும்போது நீ கேட்டுக்கொண்டா இருந்தாய்?"

சிலம்பன் விடையளித்தான்: "கேட்டுக் கொண்டிராமல் என்ன செய்வது; அவனிடம் போராட்டமா நடத்த முடியும்? கூனன் ஒரு அறிவிலி! குள்ளன் ஒரு தற்குறி! இரண்டு பேருக்கும் ஊர் வம்பு பேசத்தான் தெரியும். அவர்களோடு பேசினால் நமது நேரம்தான் கெடும்."

"அட! அவர்களோடு சண்டை வேண்டாம் அய்யா! அவர்களின் அவதூறுக் கற்பனைகளை விருந்துக்கு வந்திருந்தவர்களில் சிலராவது நம்பியிருக்கக் கூடுமல்லவா?

அவர்களுக்காகவாவது உண்மை நிலையை விளக்கிச் சொல்லி, மலையன்மீது வேண்டுமென்றே மாசு கற்பிக்கிறவர்களின் வேடத்தைக் கலைத்திருக்கலாம் அல்லவா?"

இப்படிக் கலிங்கன் கேட்டதும் சிலம்பன், பதில் ஏதும் அளிக்காமல் தன் பேச்சை வேறு திசைக்குத் திருப்பினான்.

"மலையன்மீது எனக்குப் பற்றோ பாசமோ இல்லாததுபோலவும் யாரோ சிலருக்குத்தான் மலையனிடம் உண்மையான அன்பு இருப்பதுபோலவும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் மலையனை என் உயிரினும் மேலாக நேசிக்கிறேன் என்பது மற்றவருக்குத் தெரியாவிட்டாலும் மலையனுக்குத் தெரியும். மலையன் இல்லையேல் இந்த ஊரே பாழாகியிருக்கும் என்பதை நான் அறியாதவனல்ல. மலையா! எனக்கு வேறு ஓர் அவசரமான பணி இருக்கிறது. பிறகு வந்து பார்க்கிறேன்." எனக் கூறியவாறு, சிலம்பன் அதைவிட்டு அகன்றான். சிலம்பன் சென்றவுடன் கலிங்கன், மலையனைப் பார்த்துக் கேட்டான்:

"ஆமாம்! இந்தச் சிலம்பன் எப்போது பார்த்தாலும் நமது ஊர்க் கூனனையும் குள்ளனையும் பற்றியே உன்னிடம் சேதிகொண்டு வருகிறானே, என்ன காரணம்? அவர்கள் ஏதாவது உன்னைப்பற்றிக் குற்றமாகப் பேசினால், இவன் அந்த இடத்திலே உள்ளவர்களுக்கு உண்மையை விளக்கிச் சொல்வதுதானே சரி! அதை விடுத்து, எப்போது பார்த்தாலும் கூனனைப் பற்றியும் குள்ளனைப் பற்றியும் உன்னிடம் எதற்காகக் குறைகூறித் திரிய வேண்டும்?"


கலிங்கனின் கேள்விக்கு, மலையன் பொறுமையுடன் பதில் சொன்னான்:

"கலிங்கா! என் நண்பன் சிலம்பனின் இயல்பை நீ உணரமாட்டாய்! நான் அவன் இயல்பைச் சரியாகக் கணக்கிட்டு வைத்திருக்கிறேன். அயலார்களான குள்ளன், கூனன் இருவரைப்பற்றியும் சிலம்பன் நம்மிடம் குற்றம் குறை சொல்கிறானே; அவற்றில் பாதிக்குமேல் நான் நம்புவதில்லை. ஏனெனில், சிலம்பன், நெருங்கிப் பழகுகிற உயிர் நண்பனான என்னைப்பற்றியே புறங்கூறித் திரிகிறான் என நான் கேள்விப்பட்டிருக்கி றேன். நண்பனே இவ்வாறு புறங்கூறிடும் இயல்பு படைத்தவனாயிருக்கும்போது, அயலார் நம்மைப்பற்றிப் பேசுவதுகுறித்து நான் என்ன சொல்ல இருக்கிறது? அதுமட்டுமல்ல, கலிங்கா! கூனனும் குள்ளனும் அப்படிப் பேசினார்கள் என்பதைத் தான் எப்படி நம்ப முடியும்? இவனே ஒருவேளை, என்னைப் பற்றிப் பேசிப் புறங்கூறி விட்டு, அவர்களைப் பற்றி என்னிடம் பழி போடலாமல்லவா? நெருங்கிய நண்பர் களைப் பற்றியே குறை கண்டு புறங்கூறித் தூற்றுகின்ற இயல்புடையவர்கள், அயலார் களைப் பற்றி என்ன சொல்வார்கள் என்பதை நாமே சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டுமல்லவா? இதைத் தான் வள்ளுவர், வியப்புக் கலந்த வினாவாக எழுப்புகிறார்; இதோ கேள், அந்தக் குறள்!"

"துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு."

மலையன், அமைதி தவழும் முகத்துடன் அளித்த இந்த விளக்கத்தைக் கேட்டுக் கலிங்கனின் கண்களில் நீர் துளிர்த்தது. அது, அவர்களின் நட்பின் ஆழத்தை உணர்த்தியது. புறங்கூறும் நண்பர்களையும் மலையன் எப்படிப் பொறுத்துக் கொள்கிறான் என்ற உண்மையையும் வெளிப்படுத்தியது.

அதிகாரம் - 19 - புறங்கூறாமை; பாடல் - 188



"பரிசுப் போட்டியொன்றை அறிவித்து, இந்தப் புவிமீதுள்ள பெண்கள் எல்லாம் அதில் கலந்து கொள்வர் எனினும் அந்தப் போட்டியில் அவள்தான் வெற்றி பெறுவாள். அழகில், அறிவில், பண்பில், நடையில், உடையில் அனைத்திலுமே ஒப்பற்றவள் அவள். மான் என்றோ, மயில் என்றோ, மாடப்புறா என்றோ, மனங்கவர் கிள்ளை என்றோ, அவளை நான் வர்ணிக்கமாட்டேன். அவளுடன் ஒப்பிடுதற்குரிய எதுவும் யாரும் இந்த உலகில் இல்லை என்பதே என் கணிப்பு! அவளைத்தான் நான் விரும்புகிறேன்; நினைந்து உருகுகிறேன், நெஞ்சில் வைத்து ஆராதனை செய்கிறேன்."

-இப்படி என் நண்பன் பேசிக்கொண்டேயிருந்தான், என்னிடம்! தனிமையில்தான்.

"அதிருக்கட்டும், அவள் உன்னைக் காதலிக்கிறாளா?" என்று கேட்டேன்.

"அது தெரியாது எனக்கு! அவள் உள்ளத்தை அறிந்துகொள்ளும் முயற்சியையே நான் இன்னும் மேற்கொள்ளவில்லை. ஆனால், அவள் என் கனவில் வந்து சதிராடுகிறாள்; நினைவில் நின்று களிப்பூட்டுகிறாள். என் இமைக் கதவுகளை மூடினால், என் எதிரே வந்து நின்று புன்னகை புரிகிறாள். எப்படித்தான் அவளை என்னுடையவளாக ஆக்கிக் கொள்வதென்றே புரியவில்லை நண்பா!" என்று ஏக்கப் பெருமூச்சு விட்டான் அவன்.

"சரி! சரி! காவடி எடு!" என்றேன் நான்!

"காவடியா? நானா? காதலி வீட்டுக்குக் காவடி எடுத்துச் சென்றால், தெருவில் உள்ளோர் கேலி பேசிட மாட்டாரோ? கெக்கலி கொட்டிச் சிரிப்பரே! என்னப்பா, என்னைக் காவடி எடுக்கச் சொல்கிறாய்?" என்று நண்பன் முகத்தைச் சுருக்கிக்கொண்டு கேட்டான்.

"இதோ! இங்கேயிருக்கிறதே; இந்தக் காவடியை என்னருகே எடுத்துவா" என்றேன்.

(பழனிக்குப் பிரார்த்தனை செலுத்துவதற்காக என் வீட்டுப் பழங் கொள்கையினர் தயாரித்து வைத்திருந்த பாற்காவடி அது!)

காவடியை, நண்பன் அருகே கொண்டு வந்ததும் நான் அவனுக்கு விளக்கமளிக்கத் தொடங்கினேன்:

"நண்பா! காதலில் வெற்றிகிட்ட வேண்டுமெனில், காவடி எடுக்க வேண்டுமென்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார்!"

"என்ன? வள்ளுவர் காவடி எடுக்கச் சொன்னாரா?"

"ஆமாம்! காவடியை எடுத்து, அதனை உற்றுப்பார்க்கச் சொல்லியிருக்கிறார்!"

"ஏனப்பா?"

"தேனப்பா, அவர் கூறும் மொழி! அதனைக் கூறுகிறேன் கேள்! காதல் ஓர் ஆணுக்கோ அல்லது ஒரு பெண்ணுக்கோ ஒரு பக்கமாக இருப்பது துன்பம் தரக்கூடியது. அது எப்படியிருக்க வேண்டுமென்றால், இதோ இந்தக் காவடியின் 'பாரம்' இரண்டு பக்கங்களிலும் சமமாக இருப்பதுபோல் இரு பக்கமும் அந்தக் காதல் இருந்திடல் வேண்டும். ஒரு தலைக் காதல் இன்பம் தராது! துன்பம் பயக்கும்! இருவரிடை முகிழ்க்கும் காதலே இன்பம் பொழியவல்லது!"

நண்பன் வியப்புடன் கேட்டான், "அது என்ன குறள்" என்று! அந்தக் குறள் இதுதான்:-

"ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது."

அதிகாரம் - 120 - தனிப்படர்மிகுதி; பாடல் - 1196



தேருநடுவே சிறு கூட்டமே கூடிவிட்டது. தன்னைப் பெருவீரன் என்று பிறர் புகழ வேண்டும் என்பதற்காக, வலிமையே இல்லாத இளைஞன் ஒருவன், வாளை எடுத்து அப்படியும் இப்படியுமாக ஆட்டியவண்ணம் இருந்தான். அவன் செய்கை, எல்லாருக்கும் சிரிப்பை மூட்டுவதாகவே இருந்தது. கூட்டத்தில் இருந்த முதியவர் ஒருவர்:

"இவன் என்ன, பெண்ணைப்போல நெளிந்துகொண்டு நிற்கிறான்? பிடிக்கவே தெரியவில்லையே வாளை! இந்த மண்குதிரையை நம்பி நாம் போருக்குப் புறப்பட்டால், நம் நாடு மண்ணாகவே போய்விடுமே!" என்றார்.

"இவன், பெண்கூட அல்லன்; ஒரு பேடி! எள்ளளவேனும் முயற்சி எடுத்துக் கொண்டு பயிற்சியினைப் பெற்றிருக்கக் கூடாதா? வாளை எவ்வாறு ஆள வேண்டும் என்பதையே அறியாமல், இப்படி வீண் பொழுது போக்குகிறானே! இந்தப் பேடியின் செயலையும் நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்பதா?" எரிச்சலை உமிழ்ந்தவாறே அந்தக் கூட்டத்தைவிட்டு ஏகினான் ஒரு வீரன்.

அவனுடைய கால்கள், மருத்துவர் ஒருவருடைய மனையை நோக்கித் திரும்பின.

சூறை நோய் விழுந்துவிட்டால் தோகைகள் பழுத்துவிடும் நெற்பயிர் போலவே, சோகை நோய்கண்டு இளைத்துப் பழுத்துவிட்டான் அவனுடைய பிள்ளை. மருத்துவர் ஒருவரிடம் காட்டியதற்கு, அஞ்சத்தக்க அவசரநிலை ஏதும் இல்லையென்றும் மறுநாள் தம் வீடு வந்தால் மருந்து தந்து உதவுவதாகவும் அவர் உரைத்தார். அதனால்தான் வீரனின் கால்கள் மருத்துவரின் மனை நோக்கி விரைந்தன.

அவன் சென்றபொழுது, திண்ணை மேடையில் துண்டைவிரித்துப் போட்டுத் தூங்கியவண்ணம் இருந்தார். அவர் அருகில் காய்ந்துபோன மூலிகைகள் சில கவனிப் பாரற்றுச் சிதறிக் கிடந்தன. மருந்து அரைக்கப்படும் கல்வமும் ஓய்ந்து போய்க் கிடந்தது.

நெடுநேரம் கடந்தும் நீடுதுயில் நீங்கவில்லை மருத்துவரை விட்டு! எனவே பொறுமை இழந்தவனாக அவரைத் தட்டி எழுப்பினான் அவன். கண்விழித்த அவர், கடுகளவும் கவலைப்படாமல், பரபரப்பும் காட்டாமல் இவ்வாறு உரைத்தார்:

"இன்னும் ஒரு மூலிகை தேடவேண்டும்; நாளை வாயேன்; தந்து விடுகிறேன் மருந்தை!"

இப்படி ஒரு நாள் அல்ல; இரண்டு நாள் அல்ல; பல நாட்கள் ஏமாற்றமே அவனுக்குப் பரிசாகக் கிட்டியது.

ஒரு முறை, மருத்துவர் இல்லத்திலிருந்து வெறுங்கையோடு வீரன் திரும்புகையில், பெரியவர் ஒருவர் எதிரே வந்தார்.

"என்னப்பா, வாட்டமாக இருக்கிறாய்?" என்று கேட்டார்.

உதவி புரிவதாக உறுதி கூறிவிட்டு, உறக்கத்திலேயே புதைந்து கிடக்கும் மருத்துவரைப் பற்றி அலுத்துக் கொண்டு பேசினான் வீரன்.

தேனடை போலத் தொங்கும் தாடியை நீவியவாறே, முறுவலை இழையவிட்டார் பெரியவர்.

"இருந்திருந்து இவரிடம் போய்த்தான் பிணிவந்த உன் பிள்ளையைக் காட்டினாயா? பனி விழுந்து பதத்துப் போய்விட்டதால், உடனே எரியாத ஈரவிறகைப் போன்றவர் அல்லவா இவர்! மருந்து தந்து உதவுகிறேன் என்று உரைப்பார்; ஆனால், எந்த முயற்சியிலும் இறங்கவே மாட்டார். உறங்கியே கிடப்பார். அதனால் அவர் இல்லமும் உறங்குகிறது; மருந்து அரைக்கும் கல்வமும் உறங்குகிறது. அவரை நம்பினால் நோயாளிகளின் உயிரும் உறங்கிவிடும், சாக்காட்டில். அன்றொரு நாள் பேடியொருவன் வாளை ஆட்டி வேடிக்கை காட்டினானே நினைவிருக்கிறதா? வாளை எவ்வாறு ஆளவேண்டும் என அறியாத பேடியைப் போன்றவன்தான், முயற்சி ஏதும் மேற்கொள்ளாமலே உதவுகிறேன் என உரைப்பவனும்! இந்த மருத்துவரை விட்டுவிட்டுச் சோம்பலின் மடியில் துயிலாத வேறு மருத்துவரைப் பார்! அப்போதுதான் உன் பிள்ளை பிழைப்பான். பேடியின் கையிலுள்ள வாளும் முயற்சியே இல்லாதவன் புரிவதாகக் கூறும் உதவியும் ஒன்றுதான்! பெரியவரின் எண்ணமே குறளாக எழிலோவியம் பெறுகிறது.

"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்."

அதிகாரம் - 62 - ஆள்வினையுடைமை; பாடல் - 614



குங்கும நிறங்காட்டும் கொவ்வைச் செவ்வாய்! குத்துவிளக்குச் சுடர் காட்டும் ஒளிவிழிகள்! கோலத் திருநிலா முகம்; பளிங்குக் கல்லெடுத்து இயற்கையெனும் சிற்பி செதுக்கிய சிலை; மாதுளைகள் இரண்டு காய்த்துக் கிடக்கும் மார்பகம்; பால் உருக்கிச் செய்த பல்வரிசை; பட்டுமேனி; கெட்டித் தங்கம்; கலையெனும் பெயருக்குச் சொந்தக்காரி; களையிழந்து சோர்வுற்றுக் காணப்படுகிறாளே... ஏன் என்று தோகையெனும் அவள் தோழி அருகில் வந்தாள்.

"பூங்காற்றுக் கவர்ந்துவரும் மணம் பெற்று மகிழாமல் மனம் வாட்டம் ஏன் கலை, உனக்கு?"

தோழி கேட்டாள்:

"தோகை! தொல்லை எனக்கு வந்ததே அந்த மணம் பெற்றதால்தானே!" கலை, பதில் அளித்தாள்.

நந்தவன மணம் பற்றித் தோழி சொன்னாள். இவளோ, நடந்து முடிந்த மணம் பற்றிப் பதிலை அவிழ்த்தாள்.

"ஓ! ஓ! புரிந்து விட்டது, உன் புன்னகை பதுங்கிப் பதுங்கிக் கிடப்பதற்குக் காரணம்! பசலையுற்ற உனது மேனி, முழுக்கதையும் சொல்லுகிறது எனக்கு!

அணைப்பதால் சொர்க்கத்தையும் அகன்று செல்வதால் நரகத்தையும் காட்டுகின்ற உன் அத்தானைச் சபித்துக் கொண்டிருக்கிறாய், பிரிவைத் தாளாமல்! இல்லையா கலை?"

"இதுகூடப் புரியாவிட்டால் நீ எப்படியடி பெண்ணாக இருக்க முடியும்? ஒரு பெண்ணுக்குத்தானே இன்னொரு பெண்ணைப் பற்றித் தெரியும்?"

"பிறகேன்? பெண்ணைப் புரிந்து கொள்ளாத ஆணுக்கும் பெண்ணுக்கும் பிணைப்பை ஏற்படுத்துகிறது இந்தப் பாழும் இயற்கை, என்று வசைபாடத் தோன்றுகிறதல்லவா?"

"போடி! வாழ்த்தத்தான் தோன்றுகிறது - நினைத்து நினைத்துப் போற்றத்தான் தோன்றுகிறது, தோகை!"

"அவர் பிரிந்துள்ள நேரத்தில் தூற்றவும் தோன்றுகிறதல்லவா?"

கலை, இந்தக் கேள்விக்கு விடையளிக்கவில்லை. அடக்கமுடியாத பெரு மூச்சால் அவள் நெஞ்சம் விம்மியெழுந்து பின் தணிந்தது. துணைவன் இருந்து காணவேண்டிய காட்சி! தோழியன்றோ இருக்கின்றாள்! என்ன பயன்? பதில் கூற இடைவேளை அளித்த அந்தப் பைங்கிளி, தோகையிடம் கூறினாள்:

"தோகை! பிரிவால் என்னை வாட்டிடும் அவர்மீதுகூட எனக்கு அவ்வளவு சினமில்லை. ஆனால்.....ஆனால்....."

"பிறகு யார்மீது கலை, உனக்குக் கோபம்?"

"துன்பத்தால் துயர் அடைபவர்களை விட்டு அவர்தம் நண்பர்கள் பிரிந்துவிடுகிறார்களே; நீ அறிவாய் அல்லவா!"

"அப்படியும் நண்பர்கள் இருக்கிறார்கள். கேள்விப்பட்டிருக்கிறேன். துன்பம் வரும்போது பிரியாதிருக்கிற நண்பர்களையும் பார்த்திருக்கிறேன்."

"நான் சொல்வது அந்த நல்லவர்களைப் பற்றியல்ல! வேதனை வந்துற்றபோது விலகிவிடுகிற நண்பர்களைப் பற்றி!"

"சரி!, சரி! இப்போது அந்த நண்பர்களுக்கு என்ன வந்தது?"

"தோகை! நான் இப்போது துன்புற்றிருக்கிறேன் அல்லவா?"


"ஆமாம்!"

"இந்த நேரத்தில் என்னோடு இருக்கவேண்டிய என் நெஞ்சம், துன்பத்தில் அகன்றுவிடும் நண்பர்களைப்போல - என்னோடு இல்லாமல் அவரோடு போய்விட்டதே! நீ சொல் தீர்ப்பு! என் நெஞ்சம் பொல்லா நெஞ்சந்தானே! அதனால்தான் தோகை, பிரிந்து சென்றுள்ள அவர்மீது வருகிற ஆத்திரத்தைக் காட்டிலும் எனக்குத் துணையிருக்காமல் அவரைத் தொடர்ந்து ஓடிவிட்ட என் நெஞ்சின்மீதே அதிக ஆத்திரம் வருகிறது!"

இப்படி நெஞ்சுடன் கோபங் காட்டும் வஞ்சியைச் சந்திப்பதே இந்தக் குறள்.

"கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்."

அதிகாரம் - 130 - நெஞ்சொடு புலத்தல்; பாடல் - 1293



"எனதருமை ஏதன்சு நகரத்துப் பெருமக்களே!" என நீட்டி முழங்கி அந்தக் கிழவன் அழைத்ததும் அவனைச் சுற்றிச் சூழ்ந்து கொள்வர் இளைஞரும் முதியோரும்-ஆடவரும் பெண்டிருமாக நூற்றுக்கணக்கில்! அந்தக் கிழவனின் நெஞ்சுரத்தைச் சுட்டிக் காட்டுவதுபோல் மார்பு நோக்கி நீண்டிருக்கும் தூய வெண்தாடி! சிந்தனையாளன் என்பதை விளக்கிடும் வண்ணம் அகன்ற நெற்றி! எதிர்காலத்தை ஊடுருவி நோக்குகின்ற எடுப்பான கண்கள்! சற்றுத் தழுதழுத்த குரலாயினும் அழுத்தம் திருத்தமான சொற்களின் நீர்வீழ்ச்சியாக அமைந்திடும் அழகு மிகு சொற்பொழிவு! குறிபார்க்க வளைப்பதற்குமுன் இருக்கின்ற வில்லின் தோற்றத்திலே, சிறிது வளைந்த உடல்! எப்போதும் மக்கள் மத்தியிலேயே இருக்க வேண்டும் என்ற துடிப்பும் ஆர்வமும் தொய்வின்றிச் சுழலும் இயல்பு! சூழ்ந்து நிற்கும் கூட்டத்தினரைப்பார்த்து அவன் உரைத்தது என்ன? "உன்னையே, நீ அறிவாய்!" என்பதுதான். "ஏமாற்றுக்காரர்களிடம் ஏமாந்துவிடாதே! சிந்தனைச் செல்வத்தை இழந்துவிடாதே! 'ஏன்?' 'எதற்காக?' 'எப்படி?' என்ற கேள்விகளை எழுப்பி, அறிவுப் புரட்சி செய்!" - இதுதான் அந்தக் கிழவனின் அறிவுரை. இதனை அவன், கிரேக்கத்து மூலை முடுக்குகளில் எல்லாம் பரப்பிட விரும்பினான். ஏதன்சு நகரத்து எழில்மிகு வீதிகள், வீதியோரத்துத் திண்ணைகள் அனைத்தும் அவன் அறிவுப் பிரச்சாரம் நடைபெறும் மேடைகளாயின.

அந்த எழுச்சியை, அவனுடைய எதிரிகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவனை நீதிமன்றத்து நெடிய படிக்கட்டுகளிலே ஏறச் செய்தனர். குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தினர்.

"சாக்ரடீஸ் என்னும் இந்தக் கிழவன், நச்சுப் பிரச்சாரம் செய்து நம் நாட்டு மக்களைக் கெடுக்கிறான்; குறிப்பாக இளைஞர்கள் மனத்தைக் குழப்புகிறான்." என்று எதிரிகள் வாதாடினர். அந்த எதிர்ப்புக்குத் தலைமை தாங்கியவன் மெலிட்டஸ். விவாதங்கள் தொடர்ந்தன; விசாரணை முடிந்தது; சில வாக்குகள் வித்தியாசத்தில் சாக்ரடீஸ் குற்றவாளி என்று கூறப்பட்டது. நஞ்சு குடித்து மாண்டிடவேண்டும் என்று தீர்ப்பும் வழங்கப்பட்டது. சிறையில் அந்தச் சிங்கக் கிழவன், சிரித்துக்கொண்டே உலவினான். அவன் துணைவி எக்சேந்திபியும் குழந்தைகளும் அவனைக் கண்டு கதறி அழுதனர். தான் கொண்ட கொள்கைகளுக்காகத் தனக்குக் கிடைத்த தண்டனையை, அரியதொரு பரிசாகவே அவன் கருதினான். அவன் கையில் விஷக்கோப்பை தரப்பட்டது. அதை வாங்கிக்கொண்டான்; இன்முகத்துடன். புன்முறுவல் பூத்திட, விஷத்தை அருந்தினான். கண்கள் சுழன்றன; கால்கள் தடுமாறின; படுக்கையில் விழுந்தான். உயிர் பிரியும் தருவாயில் நண்பனை அருகே அழைத்து, "அடுத்த வீட்டுக்காரனிடம் ஒரு கோழிக்குஞ்சு இரவல் வாங்கியிருந்தேன். அதைக் கொடுத்துவிடு" என்றான். நிம்மதியாக உலகத்தைப் பிரிந்தான். பாவம், அவனோடு பழகியவர்கள்தான் அவனுக்கு நஞ்சு கொடுக்குமாறு வழக்குத் தொடுத்து வெற்றி பெற்றனர். அதற்காக அவன் யாரையும் கோபிக்கவில்லை.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்."

என்ற குறள் எவ்வளவு பொருத்தமாக அமைகிறது, சாக்ரடீஸ் வாழ்க்கையோடு!

அதிகாரம் - 58 - கண்ணோட்டம்; பாடல் - 580





காதல் ஒரு நிலவு - அது மாளிகையில் மட்டுமல்ல; மண் குடிசையிலும் இன்ப ஒளி பரப்பும். அதோ - ஆற்றோரத்தில் ஆலமரத்துக்கருகே வெண்ணிலவின் உதவியால் வெள்ளிக்கீற்று வேய்ந்ததுபோல் காட்சியளிக்கும் அந்தக் குடிலுக்குள்ளே, புனுகுப் பூனைபோல் அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கிறானே அந்த ஆணழகன்; அவன் பெயர் என்ன தெரியுமா? வேங்கை! வேட்டை நடத்திப் புசிப்பவனல்ல! வேளாண்மைத்தொழில் புரிந்து, தானும் புசித்துப் பசித்தோர்க்கும் துணைநிற்கும் இளைஞன். ஏரின் பின்னால் நிற்கும் உலகமென ஏர்த்தொழிலுக்கு ஏற்றம் தரும் மரபில் வந்தவன். அவன், தன் இளம் மனைவியின் வரவு பார்த்துத்தான் காத்திருக்கிறான். ஆருயிர்த் தோழியருடன் அவள் ஆற்றில் குளித்துவிட்டு, ஆளன் காத்திருப்பானே யென்று அவசர அவசரமாய் ஈர உடையுடன் மனைநோக்கி வருகின்றாள். இரவு உணவு அத்தானுக்கு அளிப்பதற்கு முன், குளித்தால்தான் அவளுக்குக் கலகலப்பு!

குளித்த உடலை உணவாகப் புசிப்பதிலே அவனுக்கும் தனி இன்பம்! ஈர உடை, அவள் எழிலுருவின் மேடு பள்ளங்களை அவனுக்குத் தெளிவாக்கிப் புலன் மாற்றிப் போட்டுக் கொண்டிருந்தன.

அந்த உணர்ச்சிப் பெருக்கையும் மீறிய கவலையொன்று அவன் நெஞ்சைத் திசை திருப்பிக் கொண்டிருந்தது. மணமாகித் திங்களொன்று முடியவில்லை.

இளமை விருந்தின் சுவை, ஒரு கணமும் தெவிட்டவில்லை.

"வந்துவிட்டீர்களா? இதோ ஒரு நொடியில் இலை போடுகிறேன்" என்றவாறு அந்த ஏந்திழை; ஆம் - அவள் பெயரேகூட ஏந்திழைதான் - சுவரோரம் எரிகின்ற விளக்கருகே சென்று மறைவுக்குத் திரையிட்டுக் கொண்டு உடை மாற்றிக்கொண்டாள். விளக்கொளி அவள் வடிவில்வீழ்ந்து, நிழல் வடிவு மறைவுத் திரையிலே அசைந்தது கண்டு, வேங்கை வியப்புற்றான்; இவள் நிழலுக்கும் தன் நெஞ்சையள்ளும் திறன் இருக்கிறதே என்று!

வானத்து நிலவு, தெளிந்த நீர்த் தடாகத்திலே தெரியும்போது, அதைக் காண்ப திலே ஓர் அழகு உண்டல்லவா? அப்படித்தான் ஏந்திழையின் ஆடையற்ற அங்கத் தின் பொங்குதலைத் திரை நிழலில் கண்டு விழியெல்லாம் தித்திப்பாய் அவன் நின்றான்.

விரைவில் உடுத்தி, உடைதிருத்தி, இலையெடுத்துப் போட்டு உணவு பரிமாறினாள். அவளும் அருகே அமர்ந்தாள். இளங்குறும்பு விளையாட்டுக்கள், காதல் ஆர்ப்பாட்டங்களுடன் சாப்பாடு முடிவுற்றது.

தரை மெழுகித் தூய்மைப் படுத்திவிட்டு, வீட்டுக் கதவைத் தாழிடச் சென்றாள் அவள்.

"தாழிடாதே தங்கம்! தவிர்க்க முடியாத பணியொன்றுள்ளது. இரட்டைக் காளை வண்டிதனில் என் நண்பன் வீரன் வந்திடுவான்...இன்றிரவு வேற்றூர் சென்று, நாளை இரவு வந்திடுவேன்" என்றான் வேங்கை.

அவள் திடுக்கிட்டாள்; திகைப்புற்றாள்.

ஆயிரம் சொற்களை அள்ளிப் பொழிந்து, அவன் பிரிவைத் தடுக்கக் கெஞ்சிட வேண்டுமென்று துடித்தாள்.

அன்றிரவு ஈடில்லா இன்ப இரவாகக் கழியுமென்று அவள் கட்டிய மனக்கோட்டைகள் தூளாயின!

"அத்தான்! இன்றிரவு என்னால் உங்களைப் பிரியவே முடியாது. அரும்பு மீசை படர்ந்த உங்கள் உதடுகளுடன் போராடுவதற்காக, காலையிலிருந்தே என் இதழ்கள் தயார் நிலையில் இருக்கின்றன. உச்சி முதல் உள்ளங்கால் வரையில் கச்சிதமாய்த் தழுவிக்கொண்டு ஈருடல் ஒருடலாய் இருப்பதுகண்டு, காமவேளும் வெட்கத்தால் கண்மூடிக் கொள்ளவேண்டும் இன்றிரவு, என நினைத்திருந்தேன். என் நினைப்புக்கு மாறாக வேற்றூர் செல்வது நியாயந்தானா? என் உடல் அனலாகக் கொதிப்பதை அறியவில்லையா? நான் வரவில்லையென்று நண்பருக்குச் சொல்லிவிட்டு, நங்கையென்றன் தாபம் தீர்த்திடுக; இல்லையேல் காமத்தீ என்னைச் சுட்டுப் பொசுக்கிவிடும்."

-இப்படியெல்லாம் ஏந்திழை, வேங்கையிடம் சொல்லவில்லை; இப்படி எண்ணினாள். எனினும், அவற்றை வாய்வழி வெளியிட இயலாமல் அவளது பெண்மை தடுத்தது. பிறகு தனது உணர்வை எப்படித்தான் வெளியிட்டாள் அவள்!

அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவனும் அவள் விழிகளை நோக்கினான். அவள் பேச முடியாதவைகளையெல்லாம் அவளது விழிகள் பேசின.

அவளது அழகிய வாய்க்குப் பதிலாக இமை, உதடுகள் அசைந்தன. கண்ணின் கருமணிகள் காதலை வெளிப்படுத்திக் காம உணர்வைப் புலப்படுத்தின.

சுருக்கமாகச் சொன்னால், அவளுக்காக அவள் விழிகள் அவனிடம் கெஞ்சின. அவள், தன் காமநோயை வார்த்தைகளால் வெளிப்படுத்தாமல் - அல்லது வேறு எந்தச் செயலாலும் வெளிப்படுத்தாமல் - கண்ணால் மட்டுமே வெளிப்படுத்திய தானது, அவளது பெண்தன்மைக்கு மேலும் பெண்தன்மை யைத் தரக்கூடியது என்று வள்ளுவர் வர்ணிக்கிறார்:

"பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப நண்ணினால்
காமநோய் சொல்லி இரவு."

அதிகாரம் - 128 - குறிப்பறிவுறுத்தல்; பாடல் - 1280



தமிழரின் போர்க்களம்

நால்வகைப் படைகளும் மோதிக்கொள்ளும் போர்க்களம். வாள்கள் மின்னலென ஒளி வீசுகின்றன. கணைகள், மழையெனப் பொழிகின்றன. முரசுகள், இடியென முழங்குகின்றன. தேர்களும் புரவிகளும் பாய்ந்தோடித் தாக்கும் வேகத்தில், களத்தில் சாய்ந்து கெடுகின்றன. மேகக்கூட்டம்போல் வரும் யானைக் கூட்டம், குன்றுகள் மோதுவதுபோல் போரிடுகின்றன. பிறந்த மண்ணின் பெருமையைக் காக்க, இருதரப்பு வீரர்களும் களத்து மண்ணில் குருதி சிந்துகின்றனர். இறுதி வெற்றி, இருதரப்பினரில் ஒருதரப்பினர்க்கே கிட்டுகிறது. எனினும் புறங்கொடாது போரிட்டு மாண்டிடச் சபதமேற்று வில்லும் வேலும் வாளும் கேடயமும் தாங்கிய மறவர், அந்தக் களத்தினில் அங்குமிங்கும் துள்ளிச் சென்று வீர விளையாட்டு நிகழ்த்துகின்றனர்.

ஆங்கோர் யானை, தன் துதிக்கையைத் தூக்கியவாறு போர்முழக்கம் புரிந்துகொண்டு, எதிர்த்துவரும் வீரர்கள்மீது தாக்குதலைத் தொடங்குகிறது. விண்முட்ட வளர்ந்து நிற்கும் மலையொன்றின் உச்சியிலிருந்து பெரும் பாறையொன்று நகர்ந்து கீழ்நோக்கி வரும்போது இடையில் நிற்கும் செடி, கொடி, சிறு மரங்கள் அனைத்தும் அழிந்துபடுதல்போல், அந்த யானையின் தாக்குதலைத் தாளாது பகைவர்கள் வீழ்கின்றனர். அதன் காலடியில், வீரர்கள் தலைகள் முற்றிய தேங்காய்கள் போல் ஆகின்றன.

வீறுகொண்டு போரிடும் அந்த யானையின்மீது, அதில் ஏறிவந்த தலைவனில்லை. அவன் களம்பட்டான் போலும். அதனால்தான் அந்த யானை சினங்கொண்ட புலிபோலப் பாய்கிறது. அதனை வளைத்து மாய்த்திட நான்குபுறமும் தேர்ப்படை சூழ்ந்தது. எட்டுத் தேர்கள் சுற்றி நின்றன. எஃகுள்ளம் படைத்த தளபதிகள், எடுத்தனர் வில்லை! பூட்டினர் கணைகளை! தொடுத்தனர் யானைமீது! ஒன்றிரண்டு நூறு எனப் பல நூறு அம்புகள் அந்தப் போரிடும் யானையின் உடலெங்கும் தைத்தன. அம்புகள் தைத்த அந்த யானையின் உடலே மறைந்துவிட்டது என்கிறார் வள்ளுவர்.

ஆம், அவ்வளவு பெரிய உடலை மறைக்குமளவுக்கு அம்புகள் அதன்மீது தொத்திக் கொண்டிருக்கின்றன என்றால், எவ்வளவு அம்புகள் பாய்ந்திருக்க வேண்டும்! யானை, முள்ளம்பன்றிபோல் காட்சி தந்திருக்கக்கூடும்! நூற்றுக் கணக்கான அம்புகளால் புண்பட்ட யானை, ஊக்கம் தளரவில்லை! அய்யோ! இத்தனை அம்புகளா? என்று அதிர்ச்சியடைந்து அந்த இடத்தைவிட்டு ஓடிவிடவில்லை. பிறகென்ன செய்கிறது? அந்தச் சூழ்நிலையிலும் அது ஊக்கம் தளராத தன்னுடைய பெருமையை நிலைநாட்டுகிறது. மேனியில் இனி ஒரு அம்புகூடப் படுவதற்கு இடமின்றி அத்தனை அம்புகள்!

யானை, தன் இரு முன்னங்கால்களையும் மேலே தூக்குகிறது. துதிக்கையைக் கம்பீரமாக உயர்த்துகிறது. தன்னைச் சுற்றி நிற்கும் தேர்களையும் தேர்களில் உள்ள தளபதிகளையும் பார்க்கிறது. இமைகொட்டித் திறப்பதற்குள் பெரும் ஒலியுடன் தன் எதிரேயுள்ள ஒரு தேரைப் பொடி செய்கிறது. மற்றொரு தேர் நொறுங்குகிறது. ஏனைய தேர்களில் உள்ள தளபதிகள் கீழிறங்கி ஓடுகின்றனர். தன் வாழ்வு முடிவதற்குள் அந்தக் களத்தில் பகைவர்கள் பலர் வாழ்வை முடிப்பதென அந்த யானை சுழலும் கடுமைகண்டு அனைவருமே வியப்படைகின்றனர். வள்ளுவரும் அதற்கென ஓர் அழகான குறள் வழங்கி 'ஊக்கம் உடைமை'யின் உயர்வினை எடுத்துக் காட்டுகிறார்.

"சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப் பாடுன்றும் களிறு."

'மேனி மறையுமளவுக்குக் கணைகளால் புண்பட்டாலும்கூட, யானை, இறுதிவரையில் தன் பெருமையை நிலைநாட்டும். அதுபோல, ஊக்கம் உடையவர்கள், அழிவே வந்தாலுங்கூடத் தளர்ச்சி அடைய மாட்டார்கள் என்பது இதற்குப் பொருள்.

அதிகாரம் - 60 - ஊக்கம் உடைமை; பாடல் - 597

மலர்ப்பூங்கா - அதனிடையே மணிமண்டபம் - மண்டபத்திற்குள் மஞ்சம் - மஞ்சத்தில் வஞ்சிக்கொடி!

கொடியல்லவா, அதனால் நினைவுக்காற்றில் நெளிந்துகொண்டிருக்கிறது. நினைவும் காதல் பிரிவைப் பற்றியது. ஆதலால், அந்தக் கொடிஉடல், நெளிவதோடு மட்டுமல்ல; துவளவும் செய்கிறது.

இமைகளை மூடிப்பார்க்கிறாள். அவற்றையும் பொருட்படுத்தாமல் தடையை மீறி, அவள் விழிகள் அவனைத் தேடிப் புறப்படுகின்றன. தடையினால் பயனில்லையென்று இமைக்கதவுகளைத் திறந்து விட்டுவிடுகிறாள்.


அந்த இருண்ட அறையில் அவளது அழகை அணு அணுவாகக் கண்டு ரசித்துக்கொண்டிருக்கும் அந்த விளக்கை அணைத்துவிடலாமா என்ற கேள்வி எழுகிறது. 'அணைத்தல்' என்ற சொல் ஆயிரமாயிரம் உணர்வுகளை எழுப்புகிறது அவள் நெஞ்சில். தலையணையை மார்போடு இறுக அணைத்துக்கொள்கிறாள். காதலனின் வடிவை, அவளே எழுதி அங்கு வைத்திருக்கிறாள். அந்த ஓவியத்தின் கன்னங்கள் ஈரமாகின்றன. எனினும் அவள் இதழ்களின் பசி தீரவில்லை. பட்டுப் பாதங்கள் தரையில் பட்டிடச் சிறிது நேரம் உலவுகிறாள். பின்னர் தாமரை மொட்டுக்கள் மேலே நோக்கிட மஞ்சத்தில் சாய்கிறாள். அவள் அவசரத்திற்கு இரவுப்பொழுது ஒடுவதாகத் தெரியவில்லை.

காதலன் உடன் இருக்கும்போது, கட்டித் தழுவி இன்பக் கனிரசம் பருகிய போது இரவுகள், பந்தயக் குதிரைகள்போல் ஓடியதாகத் தெரிந்தது அவளுக்கு! அவசரக்கார இரவு அதற்குள் தொலைந்துவிட்டதே என்று வசைகூடப் பாடியிருக்கிறாள். இன்றோ, அந்த இரவு ஆமையைக் காட்டிலும் குறைவான வேகத்தில் நடப்பதாகத் தோன்றியது.

"கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா."

என்னைப் பிரிந்து சென்ற கொடியவர் எனக்கு விளைத்த பிரிவுக் கொடுமையைவிட; விடியாமலே நீண்டுகொண்டு போகிற இந்த இரவு கொடியதாகும் என்று இரவின்மீது சீறி விழுகிறாள். பாவம், இரவு!

அந்தப் பைங்கிளியின் கோபம்கண்டு நடுங்குகிறது. பிறகு அவளுக்கே, இரவைக் கடிந்து கொண்டது அந்த இரவின் மீது இரக்கத்தை ஏற்படுத்துகிறது. பிரிந்த இரவுகள் குறைவு; காதல் புரிந்த இரவுகள் அதிகமன்றோ! அதனால் 'கொடிய இரவு' என்று கூறிய அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறாள்; இரவின்மீது இப்போது ஒரு பரிவு!



இந்த உலகத்தில் இரவு வேளையில் காதலனைப் பிரிந்து, தான் ஒருத்தி மட்டுமே தனித்திருந்து தவிப்பதாக அவளுக்கு நினைவு. ஆம்; பிறரைப் பற்றி அவளுக்கென்ன கவலை? அவளும், அவள் காதலனும் இருக்குமிடமே அவளுக்கு உலகம். அவனில்லாத இடம் அவளுக்குப் பாலையினும் கொடிய பகுதியேயாகும்.

அதனால்தான், தணல்பட்ட தளிர்வாழைக் குருத்தைப் போல் அவள் வதங்குகிறாள். உண்ண உணவில்லையே என்று ஒருவன் வாடுவது இயல்பு! இங்கோ, உணவு; தன்னை உண்பதற்கு அவன் இன்னும் வரவில்லையே என்று வாடுகிறது.

அந்த வாட்டத்தின் காரணமாகத்தான் இரவுக்கு, வசை கிடைக்கிறது. பிறகு அதுவே இரவின்பால் இரக்கமாக மாறுகிறது.


"உலகில் எல்லா உயிர்களையும் தூங்கச் செய்கின்ற இரவே! உனக்கு இப்போது என்னைத்தவிர வேறு யாரும் துணையில்லை. உன் நிலை இரங்கத்தக்கது."


என்று இரவைப் பார்த்து இரங்கல் தெரிவிக்கின்றாள். உயிரனைய தன் ஆளனை எண்ணி எண்ணி, அவள் ஒருத்திதான் தூக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாளாம். அவளும் தூங்கியிருந்தால், பாவம் - இரவுக்கு யாருமே துணையிருக்கமாட்டார்களாம். இரவில் தனக்கேற்பட்ட பிரிவுத் துன்பத்தை எவ்வளவு அழகாக வெளியிடுகிறாள் அந்தப் பாவை!

அவளா கூறுகிறாள் - அவளை வள்ளுவர் அவ்வாறு கூற வைக்கிறார்!

"மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை"

அதிகாரம் - 117 - படர்மெலிந்திரங்கல்; பாடல்கள் - 1168, 1169





தன் அமைச்சரிடம் கனிந்த அன்பு காட்டி வரும் மாமன்னன் ஒருவன், ஒரு நாள் சற்றுக் கடுமையாகப் பேசி அலட்சியப்படுத்தி விட்டான். அதற்குக் காரணமே அமைச்சரைப்பற்றி மன்னனிடம் ஒற்றன் தந்த தவறான தகவலேயாகும். அரசனுக்கு எதிராக அமைச்சர் சூழ்ச்சியில் ஈடுபடுகிறார் என்பதே, அந்த ஒற்றன் கண்டறிந்ததாகக் காவலனிடம் கூறப்பட்ட செய்தியாகும். நாடாளும் காவலனால் முதலில் நம்பத்தான் முடியவில்லை. அந்த ஒற்றனுக்கு அமைச்சரைப் பிடிக்காது என்பதும் அந்த வெறுப்பின் காரணமாக இப்படி ஒரு விபரீதப் பொய்யை அவன் விளைத்து அறுவடை செய்து வெற்றி கண்டுவிட்டான் என்பதும், மன்னனுக்குத் தெரியவில்லை. தன் சினம் கண்டு தலைகுனிந்தவாறு வெளியேறிய அமைச்சரின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கவனித்திட வேண்டுமென்று மன்னன் கருதினான். ஒற்றனை மீண்டும் அழைத்து, அமைச்சரின் ஒவ்வொரு அசைவினையும் மிகக்கூர்மையாகக் கவனித்திடு மாறு ஆணை பிறப்பித்தான். அதே ஒற்றன்தான்! அரசனுக்கும், அமைச்சருக்கும் பிளவு உருவாக்கிடச் செயல்பட்ட அதே ஒற்றன்தான்! ஒற்றர்களும் மனிதர்கள்தானே! அவர்களிலும் சிலர் விருப்பு வெறுப்புக்கு ஆட்படுகிறவர்கள்தானே! அரசாணையை நிறைவேற்ற அந்த ஒற்றன் கிளம்பிவிட்டான். அவனை அனுப்பியபிறகு, அரசனுக்கு சிந்தனை வேகமாகச் சுழன்றது. அந்த ஒற்றன் கூறுவது உண்மைதானா என்று அறிந்திடவும் அவன் நேர்மையாகச் செயல்படுகிறானா என்று தெளிந்திடவும் அவனுக்கும் தெரியாமல் இன்னொரு ஒற்றனை அனுப்புவதே சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வருகிறான். அவ்வாறே இன்னொரு ஒற்றனுக்குக் கட்டளையிடப்படுகிறது. முதல் ஒற்றன் பெயர் ஒதியன்! அடுத்து அனுப்பப்பட்டவன் பெயர் இனியன்!

அன்றிரவு, அமைச்சர் இல்லத்துக்கு வெளியில் மாறுவேடத்தில் ஒதியன் உலவுகிறான். ஒதியனுக்குத் தெரியாமல் மாறுவேடத்தில் இனியனும் அந்தப் பகுதியில் திரிந்து கொண்டிருக்கிறான். அமைச்சர், மாளிகைக்குள் உரையாடுவது வெளியே

கேட்கிறது. ஓதியனும் இனியனும் ஒருவரையறியாமல் ஒருவர் வேறு வேறு இடங்களில் நின்று அந்த உரையாடலைக் காது கொடுத்துக் கேட்கின்றனர். அமைச்சரும் அவர் துணைவியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது அமைச்சரின் மெய்க்காப்பாளன், மாளிகைக்கு வெளியே மாறுவேடத்தில் இருவர் பதுங்கியிருப்பதுகண்டு உடைவாளை ஓங்கிப் பாய்கிறான். ஒற்றர்கள் காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தோடி விடுகிறார்கள்.

மறுநாள் காலை, மன்னனை ஓதியன் சந்திக்கிறான். "என்ன நடந்தது? என்ன நடக்கிறது?" எனக் கேட்கிறான் மன்னன்.

"தங்களை எதிர்ப்பது என்று அமைச்சர் முடிவுசெய்து, அதற்கு ஒப்பானது எதுவுமில்லையென்று தன்னுடைய மனைவியிடம் கூறியதை என் காதுகளாலேயே கேட்டேன்" என்கிறான் ஓதியன்.

"சரியாகச் சொல்! என்ன வார்த்தைகளைக் கூறினார்?"

"'அடுத்தூர்வது அஃதொப்பது இல்' என்று அமைச்சர் தன் துணைவியிடம் கூறி னார். அதற்குப் பொருள்; நெருங்கி எதிர்ப்பதற்கு ஒப்பானது வேறு எதுவுமில்லை என்பதுதானே அரசே!" என ஓதியன் உருக்கமுடன் கூறியதும் மன்னன் உரக்கச் சிரித்து விட்டான். அந்தச் சிரிப்பு ஒலி அடங்குவதற்குள் இனியனும் அங்கு நுழைந்து விட்டான்.

"என்ன, இனியா? என்ன அறிந்து வந்தாய்?"

"அரசே! அமைச்சரின் துணைவியார் அமைச்சரைப் பார்த்து; 'உங்களுக்கு இப்படி ஒரு துன்பம் வந்ததே! மன்னரே உங்களைச் சந்தேகித்துச் சோதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதே!' என்று வருந்தினார். அதற்கு அவர் ஆறுதல் கூறும் பொருட்டு,

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

என்ற குறளைக் குறிப்பிட்டார்."

மன்னன் மீண்டும் சிரிக்கத் தொடங்கினான். பிறகு ஓதியனிடம் உறுமினான்:

"ஓதியா! துன்பம் வந்தால் கலங்காமல் இருந்து அந்தத் துன்பத்தை எதிர்த்து வென்றிடவேண்டும் என்ற குறளின் கருத்தைக் கூறியிருக்கிறார் அமைச்சர். நீ, அவர்மீது கொண்டுள்ள வெறுப்பின் காரணமாகப் பாதிக்குறளைப் பயன்படுத்தி எனக்கும் அவருக்கும் பகைமூட்டப் பார்க்கிறாய்! உன்னைப்போலவும் சில ஒற்றர்கள் இருப்பார்கள் என்று அறிந்துதான் வள்ளுவர், 'ஒரு ஒற்றன் தெரிந்துவந்து சொன்ன செய்தியை, மற்றொரு ஒற்றனைவிட்டு அறிந்துவரச் செய்து ஒப்பிட்டுப் பார்த்து உண்மை காணவேண்டும்' என்று கூறியிருக்கிறார்.


"ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்."

இந்தக் குறள் தரும் அறிவுரையைக் கேட்டதனாலன்றோ உன் தவறு எனக்குப் புரிந்தது? ஓடு; என்முன் நில்லாதே! இனியா! இப்போதே சென்று அமைச்சரை நான் அன்புடன் அழைத்ததாகக் கூறி அழைத்து வா!"

இனியனும் அமைச்சரை அழைத்திடச் சென்றான். மன்னனும் இன்முகத்துடன் அமர்ந்தான்.

அதிகாரம் - 63 - இடுக்கண் அழியாமை; பாடல் - 621
அதிகாரம் - 59 - ஒற்றாடல்; பாடல் - 588

சுமையின் மறுபக்கம்



நீலத் திரை கடலோரம்! வெண் மணற்பரப்பை, மல்லிகை முல்லை பரப்பிய மஞ்சம்போல் ஆக்கிக் கொண்டிருந்தது அமுத ஒளி பொழியும் நிலவு! அலைதழுவும் கரையோரத்தில் அலுவல் முடித்துக்கொண்டு களைத்துப்போய் இளைப்பாறிக் கொண்டிருந்தது பெரிய படகு ஒன்று! அதன் நிழல் மறைவில் இரண்டு உருவங்கள்!

உற்று நோக்கினால்தான் இரு உருவங்கள்; இல்லையேல் ஒருருவாய் ஆகியிருந்தனர் என்றே கூறவேண்டும்.

வளர்த்துவானேன்! காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி இதழ்விரித்து மாலை மலரும் நோய்க்கு, ஒருவருக்கொருவர் மருந்து வழங்கிக்கொள்ள அந்தப் படகின் நிழலைப் பஞ்சணையாக்கிக் கொண்டிருந்தனர் அந்த இளஞ் சிட்டுக்கள்!

கலகல என்னும் வளையொலியும், இடையிடையெழும் இளநகையொலியும், அருகிருப்போர் யாருக்கும் கேட்காவண்ணம் அலையொலிகள் துணைபுரிந்து கொண்டிருந்தன.

விண்ணில் முழுநிலவை முகிலொன்று தழுவி நிற்கும் - அதுவும் மண்ணில் இவர் நடத்திடும் காதல் திருவிழாக் கண்டு, வெட்கத்தால் நிலவை விட்டு நெடுந்தொலைவு ஓடிவிடும்.

முத்துநகை எதுவும் கழுத்திலோ, கைகளிலோ இல்லை அவளுக்கு! அந்த நகையை வெல்லுகின்ற தூய முத்துநகைப் பேழையொன்றை இதழ்களாலே பூட்டி வைத்திருந்து, அடிக்கடி திறந்து காட்டி, அவன் கொள்ளையடிப்பதற்குள் மூடிக்கொண்டாள்.

விலை உயர்ந்த அணிமணிகள் அவனுடலில் இல்லை! எதற்காக அவைகள்? அவள்தான் அவனுடல் தங்கத்தில் பதிந்திருக்கும் வைரமாக ஒட்டிக்கொண்டு கிடக்கிறாளே!

எளிய குடும்பத்துப் பருவப் புறாக்கள் அவர்கள்.

ஏழையென்றும் செல்வரென்றும் தரம் பிரித்து மதிப்பதில்லையே காதல்! ஏழை வீட்டு உணவுத் தட்டில் இனிப்புத் தரும் பலாச்சுளை இருப்பதில்லை; உண்மை தான்! இதழ் நான்கும் இனிய பலாச்சுளையை வெல்லும் என்று, இதோ செயலால் காட்டுகின்றார் கடற்கரையில்!

உப்பரிகையில் உருள்வோர்க்குத்தான் ஊடல் கூடல் என்று உளதோ?- இதோ உப்பங்காற்றுக் குடில்களில் வாழ்வோர்க்கும் ஊடல் உண்டு, கூடல் உண்டு என்பதற்கு எடுத்துக் காட்டாய் இந்த இணை, இசை எழுப்பும் யாழ்போலப் பேசுதல் கேட்போம்.

"அத்தான்! ஆழ்கடலில் நெடுந்தொலைவு சென்றுதான் இன்று மீன் கொணர்ந்தீரோ?"

"ஆம்! துள்ளும் மீன் பிடிக்க நெடுந்தொலைவு சென்றேன். ஆனால், என் நெஞ்சை அள்ளும் மீன் இதோ, மிக அருகே இருக்கக் கண்டேன்."

அவன், அவள் விழிகளைத் தன் விரல்களால் தடவிக் கொடுத்தான்.

"அத்தான்! நடுக்கடலில் பெருங்காற்று வீசியதாமே; அப்போது என்ன நினைத்தீர்?"

"என்ன நினைப்பேன் கண்ணே? உன்னைத்தான் நினைத்தேன்!"

இந்தப் பதில் வெளி வந்ததும் அந்தப் பருவக்கொடி, அவள் படர்ந்திருந்த அத்தானின் மேனியை விடுத்து நகர்ந்து கொண்டு சிணுங்கி அழுதாள். காரணம் புரியாது கண்ணாளன் திகைத்தான்.

அவள் கரந்தொட்டான். தட்டி விட்டாள். இடையணைக்கப் புரண்டு சென்றான். அவள் எழுந்து சென்று சற்றுத் தொலைவில் அமர்ந்து கொண்டாள்.

அருகில் சென்று 'முத்தம் ஒன்று தருவேன்' என்றான்.

அவளோ முகத்தை மூடிக் கொண்டு முணு முணுத்தாள்.

"என்ன தவறிழைத்தேன் தையலே! ஏனிந்த ஊடல்?" என்றான்.

"நீர் சொன்ன சொல்லை மீண்டும் ஒருமுறை சொல்லிப் பார்த்திடுக!" என்று முகம் கடுகடுத்தாள்.

"என்ன சொன்னேன், ஏந்திழையே! உன்னை நினைத்தேன் என்றுதானே சொன்னேன்" என்று கெஞ்சினான்; கொஞ்சினான்; அவளோ மிஞ்சினாள்.

"நினைத்தேன் என்று சொன்னீரே; அதுதான் என் இதயத்தைப் பிளக்கிறது" என்று அழுதாள். "உன்னை நான் நினைப்பது தவறா? நினைக்கக் கூடாதா, என் நித்திலமே! இதில் குறை என்ன கண்டாய்?"

என மண்டியிட்டான்.

"என்னை மறந்திருந்ததால் அல்லவா திடீரென நினைத்துக் கொண்டீர்? மறவாதிருந்திருந்தால் நினைப்பதற்குத் தேவையிருக்காதே அத்தான்?"

எனப் பதிலளித்தாள்.


உயிரனையாள் ஊடல் புரிவதற்குத் தேர்ந்தெடுத்த காரணத்தை அவன் புகழ்ந்தான்! வியந்தான்! மன்னிப்புக் கேட்டான்! மடியினிலே படுத்துக் கொண்டான்! மழலையினை அணைப்பதுபோல், அவளும் அவனை மார்புறத் தழுவிக் கொண்டாள். ஊடல் தந்த இன்பத்தால் உவகை பொங்கிற்று.

ஓய்வெடுத்துக் கொண்டிருந்த படகு, உறங்குவதுபோல் கண்களை மூடிக்கொண்டது. நிழலின் இருள் போதாதென்று அவர்கட்கு உதவிட நிலவும் மேகத்துக்குள் நுழைந்து கொண்டது.

இந்த ஊடலுக்கு வள்ளுவர் தீட்டிய குறள் இதோ:-

"உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்"

அதிகாரம் - 132 - புலவி நுணுக்கம்; பாடல் - 1316



சிலப்பதிகாரம்

புயலும் மழையும் ஓய்ந்து, ஊர்மக்கள் வெளியில் தலைகாட்டத் தொடங்கினார் கள். ஆங்காங்கே பெருமரங்கள் அடியற்றுக் கிளைகளுடன் வீழ்ந்து கிடந்தன. காற்றுக்கு வளைந்து கொடுத்துத் தப்பித்துக் கொள்ளும் நாணலும் படுகை மண்ணோடு தூக்கியெறியப்பட்டுத் தலைகுப்புறச் சாய்ந்து கிடந்தது. ஊர்க் கோயிலின் கோபுரத்துக் கலசம், ஒரு கல் தொலைவுக்கப்பால் உருண்டு கிடந்தது. கால்நடைகள், ஒன்றிரண்டு தெருக்களில் மூச்சற்றுக் கிடந்தன. கிழங்கள், நடுங்கும் மேனியைப் போர்த்துக்கொண்டு தங்கள் இல்லத்துத் திண்ணைகளில் படுத்திருந்தன. வீதிகளில் தேங்கியிருந்த மழைநீர்க்குட்டைகளில், குறும்பு செய்யும் இளைஞர்

கூட்டம் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. கழனிகளில் தலைசாய்ந்து மிதந்தவண்ணமிருந்த நெற்கதிர்களை, உழவர்கள் பெருமூச்சுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். புயலுக்குப்பின் ஏற்பட்ட அந்த அமைதியில், பெரும்பாலும் சோகத்தின் பின்னணியே ஒலித்துக் கொண்டிருந்தது. ஊரின் நடுவே தலையில் வகுத்த நேர்வகிடு போல் அமைந்திருந்த ஆறு, நிம்மதியிழந்து வெறி பிடித்தது போல் ஓடிக்கொண்டிருந்தது. கடுமழையும் புயலும்தான் ஆற்றின் ஆவேசத்துக்குக் காரணம்! இலை தழைகள், கிளைகள், ஆட்டுக்குட்டி, கன்றுக்குட்டிகளின் சவங்கள் ஆற்றின் தோள்மீது சவாரி செய்து கொண்டிருந்தன.

ஊர் நாட்டாண்மைக்காரரும் அவருடைய உதவியாளரும் ஆற்றின் வேகத்தைக் கண்டவாறு ஆற்றங்கரை மீது நடந்து வந்து கொண்டிருந்தனர். அப்போது எதிர்க்கரையில் ஒரு கட்டுடல் படைத்த வாலிபன், ஆற்றையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். அவன் பரபரப்பு அடைந்திருந்தான். அவனை நாட்டாண்மைக்காரர் பார்த்துவிட்டு, உதவியாளரிடம் கேட்டுச் சந்தேகத்தைப் போக்கிக் கொண்டார்.

"ஏய்! எதிர்க்கரையில் நிற்பவன் நம்ம ஊர் சிங்கன்தானே?"

"ஆமாங்க! அவனேதான்! உங்க பரம விரோதி சிங்கனேதான்!"

"என்ன அப்படி, ஆற்றையே பார்க்கிறான், வைத்த விழி வாங்காமல்?"

"சாமி! சாமி! அடேடே! ஒரு மான்குட்டி உயிருக்குத் தவிக்குதுங்க! அதோ பாருங்க ஆற்று நடுவினிலே!"

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே, எதிர்க்கரையில் நின்ற சிங்கன், மான்குட்டியைக் காப்பாற்ற ஆற்றில் குதித்துவிட்டான். குதித்தவனைச் சிறிது நேரம் காணவில்லை. நாட்டாண்மைக்காரருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

"பாரடா! பார்! என் பகைவன் ஆற்றோடு போய்விட்டான் அமிழ்ந்து!" என்று அவர் கூச்சல் போட்டார்!

"இருங்க சாமி! அவசரப்படாதீங்க! அவனுக்கு நீச்சல் தெரியும்" என்றார் உதவியாளர்.

அவர் சொன்னபடியே சிங்கன் நீச்சலடித்துக் கொண்டு மான்குட்டியைக் காப்பாற்ற முன்னேறிக் கொண்டிருந்தான். ஆற்றின் கடுமையான வேகத்தைச் சமாளிக்க முடியாமல் அவன் தத்தளித்தான்.

நாட்டாண்மைக்காரர், தன் உதவியாளரிடம் சொன்னார்:

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்று வள்ளுவர் சொன்ன வாக்குப் பொய்யாகப் போகாது பார்! ஊழைவிட மிக்க வலிமையுள்ளது எதுவுமில்லை! அதை விலக்குவதற்காக மற்றொரு வழியைப் பின்பற்றினாலும் அங்கேயும் ஊழ்தான் முன்வந்து நிற்கும். எனவே, இப்போது

சிங்கனைவிட ஊழ் வலிமையாக நிற்கிறது! அதோ, அவன் திண்டாடுகிறான் பார்! அவன் கைகள் ஓய்ந்து விட்டன பார்! மான்குட்டியை வேறு தோளிலே போட்டுக் கொண்டு நீந்துவது எளிதா? தொலைந்தான் சிங்கன்!"

இவ்வாறு நாட்டாண்மைக்காரர் துள்ளிக் குதித்தார். உதவியாளர் விளக்கினார்:

"சாமி! ஊழை வெல்ல முடியாது என்பது சரிதான். ஒன்று நம்மை வெல்லும்போது, ஊழ் வென்றுவிட்டது என்கிறோம்! மாறாக, நாம் வெற்றி பெறும்போது, ஊழ்தான் அந்த வெற்றியை நமக்குத் தந்தது என்கிறோம். எனவே, ஏற்படுகிற ஒரு விளைவுக்கு நாம் கற்பிக்கிற காரணம்தான் ஊழ் என்பதாகும். அதைத்தான் வள்ளுவர் கூறுகிறார்."

உதவியாளரின் விளக்கத்தைக் கேட்டு நாட்டாண்மைக்காரர் வியந்து போனார். அதற்குள் சிங்கனும் ஆற்றுச்சுழல்களை எதிர்த்து வெற்றி கண்டு, மான் குட்டியுடன் கரையை வந்து அடைந்தான். நாட்டாண்மைக்காரருக்கு மேலும் வியப்பு! சிங்கன் மீது கொண்டிருந்த பகையைக்கூட மறந்துவிட்டு அவன் வீரத்தையும் மன உறுதியையும் இரக்கமுள்ள இதயத்தையும் பாராட்டி, ஓடிப் போய் அவனைத் தழுவிக் கொண்டார்.

"எப்படியப்பா உன்னால் இந்தப் பயங்கர வெள்ளத்தைக் கடக்க முடிந்தது?" என்று அவர் முகமலர்ச்சியுடன் கேட்ட கேள்விக்கு, சிங்கன் அளித்த பதிலும் ஒரு திருக்குறள்தான்!


"அய்யா! சோர்வின்றி உறுதியுடன் முயற்சியில் ஈடுபடுகின்றவர்கள் ஊழையும் தோல்வி காணச் செய்து விடுவார்கள்! இதோ அதற்குக் குறள்!" என்று உரக்கப் பாடினான் சிங்கன்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

அதிகாரம் - 38 - ஊழ்; பாடல் - 380

அதிகாரம் - 62 - ஆள்வினையுடமை; பாடல் - 620





'தன்னைப்போல உளம் கலங்கிய நிலையில் உலகில் எந்தப் பெண்ணும் இருக்கமாட்டாள்' என்று எண்ணியவாறு அந்த அழகிய மங்கை கண்ணீர் உகுத்தாள். மாவிலையில் தேங்கியிருந்து வடிந்த பனித்துளிகள் மாங்கனிகளின் மீது ஊர்ந்து செல்வதைப்போல், அந்தக் கண்ணீர் அவள் கன்னங்களில் வழிந்தது.

'இதயத்தை விட்டுப் பிரியாத துடிப்பைப்போல் என்னை விட்டுப் பிரியாமல் இருப்பேன் என்றார். இதோ பிரிந்துவிட்டார். ஆயினும் என் இதயம் இன்னும் நிற்காமல் இருக்கிறதே'யென்று பெருமூச்சு விட்டாள்.

உன் உயிர் மூச்சு நான்தான் என்றார். இதோ அந்த மூச்சு என்னைவிட்டு விலகிச் சென்றுங்கூட நான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே! காலை மலர்ந்ததும் முத்தம் பொழிந்துவிட்டு, நாளை வருகிறேன் என்று அந்தக் காளை பிரிந்து விட்டான். நாளைக் காலைவரை பொறுத்திருக்க இயலாமல் அந்தப் பாளைச் சிரிப்பழகி பரிதவித்தாள்.

பகல்பொழுது முழுதும் அவளுக்குத் தணல்மீது தணல் கொட்டினாற்போல் இருந்தது. பகல் அகன்று மாலைப்பொழுதும் வந்தது. அந்த மாலைப்பொழுது எப்படி வந்தது? அதுவும் ஒரு மங்கை உருக்கொண்டு வந்தது. காதலனைப் பிரிந்து கலங்கித்

தவிக்கும் அவள், எதிரே வந்த மாலையெனும் மங்கையை நோக்கினாள். மாலைப்பொழுதுக்கு ஒளியில்லை அல்லவா?

பகலும் இரவும் தம்முள்ளே விரவி, கலங்குதல் தோன்ற நிற்பதுதானே மாலை நேரம்!

அந்த ஒளியிழந்த மாலைப்பெண்ணை அவள் கேட்டாள்.

"நீ ஏன் மயங்கிக் கலங்கியிருக்கிறாய்? நான்தான் அவரைப் பிரிந்து வேதனை தாளாமல் துவண்டுபோன கொடியாகக் காட்சி தருகிறேன். உனக்கென்னடி வந்தது?"

அவள் கேள்விக்கு மாலைப்பெண் பதில் கூறவில்லை. மேலும் அவள் முகம் வாடத் தொடங்கியது.

அவளோ விடவில்லை. மாலை மங்கை கூறவேண்டிய பதிலை அவளே கூறினாள்.

"ஒருவேளை நீயும் என்னைப் போலத் துன்பப்படுகிறாயோ?"

மாலைப் பெண்ணாள், மெல்ல இதழசைத்துச் சோகம் இழையோடச் சொற்களைச் சிந்தினாள்.

"காலைமுதல் இதுவரையில், ஒளிபடைத்த மேனியளாய்க் களிநடனம் புரிந்தேன். என் கண்நிகர்க் காதலன் கதிரவன், என்னைக் கட்டித் தழுவிக்கொண்டேயிருந்தான். அந்த இன்பசுகத்தில் மெய் மறந்திருந்தபோது, மெதுவாகத் தன் கரங்களைத் தளர்த்தி என்னைத் தரையில் கிடத்திவிட்டு மேலைத் திசை நோக்கிச் சென்றுவிட்டான். துன்பமிருக்காதா எனக்கு? நீயே சொல்!"

என்று, மாலை மங்கை அவள் தோள்மீது கைவைத்துச் சாய்ந்து கொண்டாள். மாலையின் கூந்தலைக் கோதியவாறு அவள் கூறினாள்.


"மயங்கிய மாலைப்பெண்ணே! என் துணைவன்தான் இரக்கமற்றவன். என்னை ஒளியிழக்கச் செய்துவிட்டுப் பிரிந்து சென்றான் எனக் கருதியிருந்தேன். உன் துணையும் என் காதலனைப்போல் இரக்கம் அற்றவன்தானா?"

ஒளி குன்றிய மாலைப்பெண்ணுக்கு, அந்த வார்த்தைகள் சற்று ஆறுதல் அளித்தன போலும்!

துணையைப் பிரிந்து துன்புறுகிற இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொள்வதோடு - தங்கள் துணைவர்களை இரக்கமற்றவர்கள் என்று குறிப்பிடுவதன் வாயிலாக, அவர்கள் மீது கொண்டுள்ள ஆறாக் காதலையல்லவா வெளிப்படுத்துகிறார்கள். அதுமட்டுமல்ல; மாலைப்பொழுது அவளுக்குத் துன்பம் செய்கிறதாம்! அதனால் அந்த மாலைப் பொழுதுக்கும் இன்பம் இல்லையாம். எனவே "வாழி!" என்ற குமுறலோடு வாழ்த்துகிறாள். இதோ குறள்:

"புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை"

அதிகாரம் - 123 - பொழுதுகண்டுஇரங்கல்; பாடல் - 1222



நல்ல பாம்பு எனச் சொல்கிறோம் என்றாலும் கொடிய நஞ்சு கொண்ட பாம்பு அது! பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்ற பழமொழி அதனால்தானே பிறந்தது! அதனுடைய போக்கில் ஏதாவது தடை ஏற்பட்டால் அந்தத் தடை, தன்னை எதிர்ப்பதற்காகவே வந்த தடை என அது கருதிக்கொண்டு சீறிப் பாய்ந்து தன்னுடைய நச்சுப் பல்லை அழுத்திவிடும். அந்தப் பல்லின் ஊசி போன்ற துளையின் வழியாக நஞ்சு இறங்கி, தாக்கப்பட்ட உடலின் உள்ளே சென்று குருதியை நஞ்சாக்கிக் கொன்றுவிடும். அப்படித் தாக்கப்பட்டது, ஒரு மிருகமாகவும் இருக்கலாம்; அல்லது மனிதனாகவும் இருக்கலாம். பெரும்பாலும் தனக்கு ஒரு தடை வரும்போது தன்னைக்

காத்துக்கொள்ளவே அது கடிக்கிறது. பூந்தோட்டத்தில் புல் தரையில் பஞ்சுப்பாதம்பட நடந்து செல்லும் பாவையொருத்தி, அவளையறியாமல் பாம்பொன்றை மிதித்துவிட்டால், உடன் அதனுடைய நச்சுப் பல்லுக்கு இரையாக நேரிடுகிறது.

என் அருமைத் தந்தை முத்துவேலரின் வாழ்க்கையில் நடைபெற்ற, ஒரு நிகழ்ச்சியைக் கூற விழைகிறேன். என்னைப் போலவே அவர் வாழ்விலும் துன்பங்கள் தொடர்கதைகளாக இருந்திருக்கின்றன. ஒரு நாள் அவர், கிராமத்து ஓட்டு வில்லை வீட்டின் உள்ளே அமர்ந்து அமைதியாக ஏதோ பணியில் ஈடுபட்டிருக்கிறார். கிராமத்து வீடுகளில் வழக்கமாக இருக்கும் பரண், அவர் தலைக்கு மேல் இருந்திருக்கிறது. அதில்தானே வீட்டில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்கள், பாய்கள், படுக்கைகள் எல்லாமே நிறைந்து கிடக்கும்.

அந்தப் பரணில் நெளிந்துகொண்டிருந்த நல்ல பாம்பொன்று எப்படியோ தவறிப்போய், ஓர் இடுக்கின் வழியாகக் கீழே விழுந்திருக்கிறது. விழுந்த பாம்பு, நேராகத் தரையில் விழாமல், என் தந்தையின் தோள்மீது விழுந்திருக்கிறது. உடனே என் தந்தை கூச்சலிட்டு அலறிக் கையால் அந்தப் பாம்பைத் தூக்கி எறிய முனைந்திருப்பாரேயானால், பாம்பு தலையைத் தூக்கிப் படத்தை விரித்து இமைப்பொழுதில் அவர் உடலில் நஞ்சினை ஏற்றிவிட்டு ஓடியிருக்கும். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. தன் தோளில் பாம்பு விழுந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டார். அதே சமயம் பாம்பின் இயல்பையும் நினைவுபடுத்திக் கொண்டார். 'நாம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளத் துடித்துத் துள்ளினால் அது கடித்துவிடும்; ஆகவே அமைதியாக இருப்பதே நல்லது' என்ற முடிவுக்கு வந்தார். பாம்பு தோள்மீது ஊர்ந்து கொண்டிருக்கிறதே என்ற அதிர்ச்சிக்கு இடம் தராமல், ஆடாமல் அசையாமல் அப்படியே சிலைபோல உட்கார்ந்திருந்தார். தோளில் இருந்த பாம்பு, மெல்ல அவர் தொடை வழியாக இறங்கிப் பிறகு தரையில் நெளிந்து அங்கிருந்து அகன்றுவிட்டது. இந்த நிகழ்ச்சியை என் தாயார் அஞ்சுகத்தம்மை அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பார்கள்.


எனவே நமக்கு எவ்வளவுதான் துன்பம், வெள்ளம்போல் வந்தாலும் அந்தத் துன்பத்தின் இயல்பு என்ன என்பதை உணர்ந்துகொண்டு செயல்பட்டால், அந்தத் துன்பம் நமக்குக் கேடு ஒன்றும் செய்யாது.

"அறிவுடைய ஒருவன் தனக்கு வரும் துன்பம் வெள்ளம்போல் அளவு கடந்ததாக இருந்தாலும் அவன் அந்தத் துன்பத்தின் இயல்பை நினைத்த அளவில் அத்துன்பத்தின் வேதனையிலிருந்து விடுபடுவான்" என்பது வள்ளுவர் வாக்கு! அதாவது துன்பத்தின் இயல்பை நாம் புரிந்துகொண்டால், அந்தத் துன்பம் தானே கெட்டுவிடுமாம்.

பாம்பின் இயல்பைப் புரிந்துகொண்டது மட்டுமல்ல, அதை நினைவிலும் கொண்டதால்தானே பாம்பினால் ஏற்பட இருந்த துன்பம் அகன்றது!

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்"

அதிகாரம் - 63 - இடுக்கண் அழியாமை; பாடல் - 622



வானத்தில் முகிற்கூட்டம் திரளுகிறது. நிலமடந்தை அண்ணாந்து பார்த்து முகம் பூரித்துக் கிடக்கிறாள். மழைக் காதலனைச் சந்தித்து நீண்ட நாட்களாயின. அவன் குளிர்க்கரங்களின் தழுவலுக்காக ஏங்கியிருந்தவளுக்கு, அவன் வரப்போகிற அறிகுறிகள் தெரிவதால் மகிழ்ச்சி பொங்குகிறது. நிலமகளின் எழிலுடலைத் தொடும் ஆசை துள்ள, மாரிக் காதலன் பாய்ந்தோடி வந்துவிட்டான். அவனை வாரி அணைத்துக்கொள்கிறாள் பூமகள்! நிலமும் நீரும் பொருந்திக் கலந்துவிட்டால் அதனைப் பிரிப்பது எளிதில் முடியுமா? எளிதில் முடியாது என்கிறது திருக்குறள். குறுந்தொகை, இந்தக் கருத்தை மெருகூட்டி மேலும் விரிவாக வழங்குகிறது. சிவப்பு நிறமுடைய மண்ணில் மழைபெய்து தேங்கி நின்றால், அந்த மண்ணின் நிறத்தை அந்த நீரும் பெற்று இரண்டறக் கலந்துவிடுகிற காட்சியைக் குறுந்தொகை காட்டுகிறது.

நிலமும் நீரும் ஒன்றிக் கலந்திடுவதைக் குறளும் குறுந்தொகையும் அன்புடைய காதலர்களின் நெஞ்சம் இணைந்திடுவதற்கு உவமையாகக் கூறுகின்றன.

அத்தகைய நிலையில் உயிர், மெய், உள்ளமெலாம் ஒன்றாகமாறிப் பின்னிப் பிணைந்துள்ள காதலரைக் காணுகிறோம், அந்த மாந்தோப்பின் நடுவில்!

மாங்குயில்கள் இசை முழங்க, தென்றலின் நட்டுவாங்கத்திற்கேற்ப மாவிலைகள் நடனமாடுவதைத் தங்கள் காதல் கொலுமண்டபத்தின் கலை நிகழ்ச்சியாக்கிக் கொள்கின்றனர் அவர்கள்!

அந்த அன்புநிறை இணையிடையேதான் ஊடல் ஏற்படவேண்டும்; அதுவே இன்பம் என்று அறுதியிட்டுக் கூறுகிறது குறள். அந்த இன்பமும் எப்படிப்பட்ட இன்பமாம்! அந்தக் காதலர்களையே பேச வைக்கிறார் வள்ளுவர்; நாமும் கேட்டறிவோம்.

"கண்ணே! என்மீது எந்தத் தவறும் இல்லாதபோதுகூட ஊடல் கொண்டு கூட மறுத்திடுகிறாயே; சிலநேரங்களில் - அது ஏன் இன்பமே?"

"அத்தான்! தவறேதும் நீங்கள் இழைக்கவில்லையென்றாலும் தவறு இழைத்தது போல் நான் பாவித்துக்கொண்டு ஊடுவதிலும் எனக்குப் பெரும் இலாபம் இருக்கிறது."

"எப்படி கண்ணே! எங்கே அதனை விளக்கிடுக!"

"நான் ஊடல் கொண்டு அகன்று செல்வதால், உங்களுக்கு என்மேல் அன்பு மிகுதியாகிறது. உங்கள் அழகிய கரங்கள் என்னைப் பற்றிடத் துடிக்கின்றன. என்னை இழுத்துப் போர்த்திக்கொள்ள மாட்டீர்களா? என்று என் இதயமும் துடித்திடும். இப்போது புரிகிறதா நான் ஊடல் கொள்வதன் ரகசியம்?"

"அன்பே! அந்த ரகசியத்தை நீ வெளியிட்டு விட்டாலுங்கூட, நீ இனி எத்தனை முறை ஊடல் புரிந்தாலும் ஊடலுக்குப்பின் விளைகிற இன்பம் குறைந்துவிடப் போவதில்லை!"

"அத்தான்! தேவருலகம் என்று கூறுகிறார்களே; நிலமும் நீரும்போல் நெஞ்சாற் கலந்த நாம் ஊடுவதைவிட இன்பம் தரக்கூடிய இடமா அது? இருக்காது! இந்த உலகத்தை மிஞ்சக்கூடிய உலகமாக அது இருக்கவே இருக்காது!"

மாங்குயில்கள் இசையை நிறுத்தின! அந்தக் குயில்கள் ஒன்றையொன்று துரத்திப் பறந்தன! அவர்களால் வந்த வினை அது!

இந்தக் குறளோவியத்திற்கான இரண்டு குறட்பாக்கள் இதோ:

"இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு."

"புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து."

அதிகாரம் - 133 - ஊடலுவகை; பாடல்கள் - 1321, 1323



குமண மன்னன், தனது தம்பியின் சூழ்ச்சியால் காட்டில் வாழ நேரிடுகிறது. நாடிழந்து நகரிழந்து நலிவுற்றுக் காட்டில் வாழும் அவனை, உயிருடன் விட்டுவைப்பதும் தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்து என நினைத்த அவனது தம்பி, அண்ணனின் தலையைக் கொண்டு வருபவர்க்குப் பொற்கிழி வழங்கப்படுமென்று அறிவிக்கிறான்.

குமணனுக்கும் இந்தச் செய்தி எட்டுகிறது.

அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையுடன் அரண்மனையில் வீற்றிருந்த மன்னன், அடவியில் அலைந்து திரியும் நிலையைப் பெற்றதுடன் துன்பம் அவனை விட்டுவிடவில்லை. சாவின் வடிவில் அவனைத் துரத்தத் தொடங்கியது.

களத்திலே வீரர்கள் புன்னகையுடன் ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான் சாவு என்றாலுங்கூட, அந்தச் சாவு தரும் துன்பத்தைத் திருவள்ளுவர் மற்ற துன்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தவறவில்லை.

அதனால்தான் அவர் "சாதலின் இன்னாதது இல்லை" என்றார். அதாவது சாவதைவிடத் துன்பமானது வேறொன்றுமில்லையென்று அழுத்தமாகக் கூறுகிறார்.

அந்தத் துன்பத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உள்ள உறுதி கொண்டவர்கள் இருக்கலாம். ஆனாலும் சாவது என்பது துன்பமானதுதான். அதைவிடத் துன்பமானது வேறொன்றுமில்லையென்பது வள்ளுவரின் கருத்து. ஆனால், அந்தத் துன்பம்கூட இனியதாக ஒரு சமயத்தில் ஆகிவிடுகிறது என்கிறார் வள்ளுவர்! அது எந்தச் சமயத்தில்?

மீண்டும் குமணனிடம் செல்வோம்.

தம்பியின் ஆணைப்படி சாவு என்னும் துன்பம், தன்னை என்றாவது ஒருநாள்-அதுவும் விரைவில் அணுகிவிடும் என்று குமணன் எதிர்பார்க்கிறான். எப்படியும் ஒருநாள் மனிதன் மறைந்துதான் தீரவேண்டும் என்பது உண்மையென்றாலும், அதனை மாற்றிட இயலாது என்றாலும் வலுவிலே சென்றுகூடச் சாவைத் தழுவிக்கொண்டாலும் அந்த நேரத்தில் சாவு தரும் துன்பம் கொடுமையானது தானே! அந்தத் துன்பத்தின் வருகையை எதிர்பார்த்துக் காட்டில் வாழும் காவலன் குமணனிடம், வறுமையில் வாடிய புலவர் ஒருவர் சென்றார்.

அவர் பெயர் சாத்தனார் என்பர்.

சாத்தனாரின் வறுமைக் கோலத்தைக் கண்டதும் குமணன் மனம் வருந்தினான்.

அவரது வறுமை நிலையைவிட, அவன் மனத்தை மிகவும் வாட்டியது வேறொன்று உண்டு. என்ன அது? "அய்யோ! வறியவராக வந்துள்ள புலவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாத நிலைமை எனக்கு வந்துவிட்டதே!" என்று கலங்குகிறான்.

"அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை அடைந்தாய்
தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்து
விலைதனைப் பெற்றுன் வறுமைநோய் களையே!"

என்று புலவரைப் பார்த்துக் கூறுகிறான்.


சாவதைவிடத் துன்பம் வேறொன்றுமில்லையென்று உணர்ந்திருந்தாலும், தன் எதிரே நிற்கும் வறியவருக்கு ஒரு பொருள் வழங்கிட முடியாத நிலை வந்துவிட்ட போது சாவதுகூடக் குமணனுக்கு இனியதாக ஆகிவிடுகிறது. அதனால், தன் தலையைக் கொண்டு போய்த் தன் தம்பியிடம் கொடுத்தாவது பொற்கிழியைப் பெற்று வறுமையிலிருந்து விடுபடுக என்று அவன் வேண்டுகிறான்.

தன் தலையை வெட்டித்தரத் தானே முன் வருகிறான்.

சாவதைவிடத் துன்பமானது வேறொன்றுமில்லை என மொழிந்த வள்ளுவர், வறியவர்க்கு எதுவும் வழங்கிட முடியாத நிலை வந்துவிட்டபோது அந்தச் சாதலும் இனியதே என்ற அருங்கருத்தினைப் பொழிந்திடுகிறார். இந்தக் குறளுக்கேற்ற ஓவியமாகத்தான் குமண வள்ளலின் வாழ்வுக் காவியம் அமைந்திருக்கிறது.

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

அதிகாரம் - 23 - ஈகை; பாடல் - 230



போர்க்களத்தில் யானைகளை வேல் எறிந்து வீழ்த்தி, குதிரைப்படைகளைத் தன் கணைகளின் வலிமையால் துரத்தியடித்து, எதிரிகளின் தேர்க்கால்களை வாள் கொண்டு வெட்டிச் சாய்த்து, வெற்றி முழக்கமிட்டவாறு வீரனொருவன் வீடு திரும்புகிறான். அவனை வரவேற்று மாலை அணிவித்து, மார்பகம் அழுந்தத் தழுவி, விழுப்புண்களில் இதழ்களால் ஒத்தடம் கொடுக்க, அவன் இனிய மனையாட்டி வீட்டில் காத்திருக்கமாட்டாள். காரணம்; இன்னும் மணமாகாத இளம் வீரன் அவன். அவனைப் பெற்றெடுத்த வீரத்தாய், வழிமேல் விழி வைத்து வீட்டின் வாயிற்புறத்திலேயே காத்துக் கிடக்கிறாள்; வீரத்திருமகனை வாரியணைத்து வாழ்த்து மலர் தூவ!

ஆனால் அந்த வீரனுக்கு அவன் வரும் வழியில், பிறிதோர் பெரும் படையை எதிர்த்து நிற்கும் எதிர்பாராத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. மலர்ந்த மலர்கள், மரம் செடி கொடிகளிலும் உதிர்ந்த மலர்கள், மண்ணிலும் அழகூட்டிக் கொண்டிருக்கும் சோலையிடையே தனியாக நடந்து வந்துகொண்டிருக்கும் அவனை, அந்தச் சேனை திடீரெனத் தாக்கி அதிர்ச்சியடையச் செய்துவிடுகிறது.

அவன் எதிரே நின்றது ஒரு பெண்தான்! அவளைக் கண்டவுடன் களம் பல கண்ட அந்தத் தீரன் திகைத்து நின்றுவிடுகிறான்.

"ஒண்ணுதற் கோஓ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு."

என்ற குறள் அவன் நினைவுக்கு வருகிறது.

அதாவது, போர்க்களத்தில் பகைவர்கள் அஞ்சி நடுங்கிடக் காரணமாக உள்ள என் வலிமை, இந்தப் பேரழகியின் ஒளிபொழியும் நெற்றிக்கு முன்னால் முடங்கிப் போய்விட்டதே என்று வியப்படைகிறான். களத்தில் தேர்களின் முகப்பில் கதிரின் ஒளிபட்டு அந்தத் தேர்கள் ஒவ்வொன்றும் ஒளிப் பிழம்பாகக் காட்சி தரும்போதுகூடக் கண் கூசாமல் எதிர்த்து நின்று போர்புரிந்து, வெற்றி பெற்றிருக்கிறேன். அந்தத் தேர்ப்படையை வென்ற எனக்கு, இவளது நெற்றியின் ஒளிக்கு முன்னால் நிற்கவும் முடியவில்லையே என ஏங்குகிறான்.

தேர்ப்படையை அடுத்து யானைப்படையையும் அவளிடமே காணுகிறான். அதை வள்ளுவர் தீட்டும் அழகே அழகு!

"கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்."

மாதருடைய சாயாத கொங்கைகளின் மேல் அணிந்துள்ள அழகிய மேலாடை, மதம் பிடித்த ஆண் யானையின் மேல் இட்ட முகபடாம் போன்று இருக்கிறது.

கண்ணை மறைக்கின்ற அளவுக்கு யானையின் முகத்தில் போடப்படுகிற முகபடாம் அமைவதால், அதனைக் 'கட்படாம்' என்கிறார் வள்ளுவர். யானை முகபடாத்தினையும் மாதர் மேலாடையையும் ஒப்பிடுவதன் வாயிலாக, விம்மிப் பூரித்து நிற்கும் பெண்ணின் மார்பகத்திற்கு யானையின் தலையையே உவமையாக்குகிறார் போலும்! தேர்ப்படையை அடுத்து, அந்த வாலிப வீரன் இந்த யானைப் படையையும் தன் எதிரே காணுகிறான்.


எதிர் எதிரே இரு படைகளும் எவ்வளவு நேரம் நின்றுகொண்டிருக்க முடியும்? "கீதை உபதேசம்" நடக்கிறதா என்ன? இல்லையே! அவள் கணை வீசத் தொடங்கினாள். ஆம்; அவனை நோக்கினாள். அந்தப் பார்வை அவனுக்கு எப்படியிருக்கிறது? அவன் தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறான்.

"அவள் என்னை நோக்கினாள். நான் அவளை நோக்கினேன். நான் பார்த்த பார்வைக்கு, அவள் திரும்ப என்னை எதிர்ப்பார்வை பார்க்கிறாள். அய்யோ! அவள் ஒருத்தியே போதும் என்னைத் தாக்கி வீழ்த்துவதற்கு! அத்துடன் நில்லாது, அவள் விழிகளால் என்னை நோக்குவது எப்படியிருக்கிறதென்றால்; அவள் என்னை வீழ்த்த ஒரு சேனையையும் கொண்டு வந்ததுபோல் இருக்கிறதே!"

போர்க்களத்தில் பகைவரைப் புறங்கண்ட அந்த மாவீரன், தன் எதிரே தேர்ப்படையாக, யானைப்படையாகத் தோற்றமளிக்கும் ஒரு தோகையைக் கண்டு எவ்வளவு தோல்வி மனப்பான்மைக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்கிறான் என்பதற்கு இந்தக் குறட்பாக்கள் அளிக்கும் விளக்கம், பலாச்சுளைபோல் இனிக்கிறதல்லவா?

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைகொண் டன்னது உடைத்து."

அதிகாரம் - 109 - தகையணங்குறுத்தல்; பாடல்கள் - 1088, 1087, 1082



"அன்பரே! தங்களுடைய தகுதி, திறமை, அறிவு, புலமை இவற்றை நான் இதுவரையில் யாரிடத்திலும் கண்டதுமில்லை; இனிமேல் காணப்போவது மில்லை. தங்களின் தலையெல்லாம் மூளை; அந்த மூளையிலிருந்து கிளம்பும் ஒளிக் கதிர்கள். இந்த உலகத்தின் இருட்டையே போக்கிடும் வல்லமை வாய்ந்தவை என்பேன்! தாங்கள் புன்னகை புரிகிறீர்கள்; வெறும் சிரிப்பா அது? இல்லை! தங்கள் இதயக் கடலின் ஆழத்திலிருந்து எடுக்கப்பட்ட சிந்தனை முத்துக்களின் கோவை அது! தங்கள் எழுத்து - தேன் பாகு, செங்கரும்பின் சாறு, ஆவின் பால், அமுத ஊற்று!

- ✡ தங்கள் பேச்சோ - யாழின் ஒலி, தென்றலின் தாலாட்டு, அருவியின் கீதம்!
- ✡ தங்களுடன் உரையாடுவதே ஒரு தனி இன்பம்!
- ✡ தங்களைப் போற்றாத நாவும் ஒரு நாவோ?
- ✡ தங்களை வணங்காத கரமும் ஒரு கரமோ?

✡ இப்படி ஓர் அறிவாளி இந்த உலகத்தில் இதுவரையில் பிறந்திடவே இல்லை.

இப்படிப் புகழ்ந்து கொண்டே இருந்தான் ஒருவன், அரங்கில் அமர்ந்திருந்த விழாத் தலைவரைப் பார்த்து!

விழாத் தலைவர் புன்னகை புரிந்தவண்ணம் அமர்ந்திருந்தாரேயொழிய அந்தப் புகழ்ச்சி மயக்கத்தில் ஆழ்ந்துவிடவில்லை என்பதை, அவரது முகமே தெளிவாக்கிக் கொண்டிருந்தது. புகழ்ந்து கொண்டிருந்தவன், தன் பேச்சை முடித்துவிட்டு எழிலார் பொன்னாடையொன்றை எடுத்து விழாத் தலைவருக்கு அணிவித்தான். மல்லிகை மாலை யொன்றினைச் சூட்டினான். அவர் கால்களில் விழுந்து வணங்கினான். மண்டபத்தில் அமர்ந்திருந்தோர் அனைவரும் வாழ்த்து முழக்கம் செய்தனர். புகழ்ந்து கொண்டிருந்தவன், விழாத் தலைவர் குறித்துத் தான் இயற்றிய பாடல் ஒன்றை இசைகூட்டிப் பாடத் தொடங்கினான். விழாத் தலைவரிடம், அருகிலிருந்த அவரின் நண்பர் கேட்டார்.

"உமக்குத்தான் எவ்வளவு பெருமை! எவ்வளவு புகழ்! இதைப் பார்க்கும்போது என் இதயமே இன்பத்தால் நனைகிறதே! ஆனால், உமது முகத்தில் இன்பத்தின் சாயலே தெரியவில்லையே, என்ன காரணம்?"

நண்பரின் கேள்விக்கு விழாத் தலைவர், அவர் காதோடு பதில் சொன்னார்!

"நண்பரே! எனக்கு ஏதோ பெருமையும் புகழும் ஏற்பட்டிருப்பது உண்மை தான்! ஆனால் இதோ இவர் வரம்பு கடந்து வானளாவப் போற்றிப் புகழுகிறாரே!... அவ்வளவுக்கு நான் ஏற்றவனா என்றால் இல்லை! மன்னர் அவைக் களத்துத் தலைமைப் புலவராக என்னை நியமித்திருக்கிறார்கள். அதற்கு உரிய பொறுப்புக்களை நான் உணர்ந்து நடந்துகொள்ள வேண்டுமே தவிர, 'ஆகா! இந்தப் பெருமை யாருக்குக் கிடைக்கும்? இதுவன்றோ இன்பமான நாள்!' என்று நான் கருதிக்கொண்டு செயல்பட்டால் நாளைக்கு இந்தப் பொறுப்புப் போய்விட்ட பிறகு, 'அய்யோ! பெருமை போய்விட்டதே!' என்று நான் கவலையுற நேரிடுமல்லவா? எனவேதான் கூறுகிறேன்: இன்பம் வந்த காலத்தில் அந்த இன்பத்தை விரும்பிப் போற்றக்கூடாது."

நண்பரால் இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் மறுத்து வாதாடினார். விழாத்தலைவரான புலவர், நண்பரிடம் இறுதியாக ஒன்றைச் சொன்னார்:

"நண்பரே! நான் சொன்னால் நம்பமாட்டீர்! செயல் வாயிலாகக் காட்டுகிறேன்."

புகழ்ந்தவன் பாடி முடித்ததும், புலவர் எழுந்து சிறிது நேரம் உரையாற்றி நன்றி கூறிவிட்டு ஓர் அறிவிப்பைச் செய்தார்.

"மன்னர் அவைக்களப் புலவர் பொறுப்புக் கிடைத்தமைக்காக என்னை இவ்வளவு பாராட்டினீர்கள். ஆனால், இந்த இன்பத்தை என்னால் அதிக நேரம் அனுபவிக்க முடியவில்லை. இப்போதுதான் அரண்மனையிலிருந்து ஓலை வந்தது. என்னை அந்தப் பொறுப்பில் நியமித்த ஆணையைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்களாம்!"

மன்றத்தில் கூடியிருந்தோரிடையே அதிர்ச்சி! இடுகாட்டு அமைதி! கண்ணீர் வெள்ளம்! அரங்கில் நின்று புகழ்ந்து கொண்டிருந்தவனைக் காணவில்லை.

புலவர் எழுந்து நடந்தார், மன்றத்தை விட்டு! அவருடன் அவர் நண்பரும் தொடர்ந்தார்!

அருகாமையில் ஒரு சிறிய மண்டபம். அங்கே அந்தப் புகழ்ந்தவன் நாலு பேரைக் கூட்டிவைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருக்கிறான். அதனைப் புலவரும் அவர் நண்பரும் மறைந்திருந்து கேட்கின்றனர்.

"என்ன தெரியும் இவனுக்கு? நான் அப்போதே நினைத்தேன். இவனைக் கொண்டு போய் அவைக்களப் புலவராக ஆக்கி இருக்கிறார்களேயென்று! நாடோடி இவன்! எழுத்தா அது? தலையெழுத்து! பேச்சா அது? பேயின் கூச்சல்! இவன் மூளையைச் சூளையில்தான் வைக்க வேண்டும். நல்ல காரியம் செய்தார் மன்னர்!"

புலவரின் நண்பரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை; அவரைப் புலவர் அமைதிப்படுத்தினார்.

"அய்யோ! இது தாங்கமுடியாத துன்பம்! என்னை விடுங்கள். அவனைச் சின்னாபின்னமாக்குகிறேன்!" என்று நண்பர் குதித்தார்.

புலவர் விளக்கினார்:

"நண்பரே! இதை ஏன் துன்பம் என்று கருதுகிறீர்? சற்று முன்பு இதே மனிதர் என்னைப் புகழ்ந்தார்; இப்போது இகழ்கிறார்; அவ்வளவுதானே! அவர் புகழும்போது இன்பமாக இருந்தால்தானே இகழும்போது துன்பமாக இருக்கும்! இன்பம் வந்த காலத்தில் அதை விரும்பிப் போற்றி பாராட்டாமல் இருந்தால், துன்பம் வந்த காலத்தில் அந்தத் துன்பத்தின் வேதனையை அடையத் தேவையில்லை. அதனால்தான் நண்பரே, வள்ளுவர் கூறுகிறார்:


> "இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
> துன்பம் உறுதல் இலன்."

என்பதாக! எனவே இன்பத்தைத் தாங்கிக் கொண்டால், துன்பத்தையும் தாங்கிக் கொள்ளலாம். இன்பத்தில் மயக்கமுற்று அலைந்தால், துன்பத்தைப் புறங்காண இயலாது!

இவன் புகழ்ந்ததையும் இப்போது இகழ்ந்ததையும் நான் ஒன்றாகவே கருதுகிறேன். வாரும் போகலாம்.!"

புலவரும் நண்பரும் அந்த இடத்தைவிட்டு அகன்றார்கள்.

அதிகாரம் - 63 - இடுக்கண் அழியாமை; பாடல் - 629



கன்னத்துடன் கன்னம் பதித்து கட்டித் தழுவினர்.

களத்தில் அவன் பெற்ற விழுப்புண்ணை மார்பில் கண்டு, இதமாக இதோ தருகின்றேன் ஒத்தடமென்று இறுகத் தழுவினாள் இரு மாங்கனியழுந்திட! யாழ் மீட்டி இசையெழுப்பும் அவள் செங்காந்தள் விரல்களுடன் வாள் தூக்கிப் போராடும் அவன் விரல்கள் பின்னிக் கொண்டன. விடுவித்துக்கொண்ட விரல்களாலே அவள் பட்டு மேனியினைத் தடவிச் சுகம் கண்டான். அந்தச் சுகம் அவனையுமறியாமல் அவளைக் கசக்கிப் பிழிவதுபோல் தழுவிக்கொள்ளச் செய்தது. மகிழம்பூ விரிந்ததுபோல் தோன்றுகின்ற தொப்பூழ் அவளுக்கு!

தன் வயிற்றோடு அது ஒட்டிக் கொள்ளும் வண்ணம், மெய்மறந்து தழுவினான். அவளோ, அவன் குன்றத் தோள்களைத் தனதாக்கிக்கொண்டு தழுவற் போராட்டத்தில் அவனை வென்றிடத் துடித்தாள்.

ஆனைத் தந்தமெடுத்து அழகுறச் செதுக்கியதோ இந்தக் கால்கள் - அதற்கு மேல் ஒரு நூலிற் பாதியாய் நெளியுதே இடையும்!

தழுவலில் அவை வகிக்கும் இடம்; அடடா! சொல்லித் தெரிவதோ அந்த இன்பரசக் கலை! வெள்ளி நிலவும் வெட்கி மறையுது முகில் திரையில்!

நான்கு இதழ்கள் உமிழ்நீரை அமுதமாக்கி, நாடி நரம்புகளில் எல்லாம் இசை பெருகச் செய்கின்ற அற்புதம்தான் என்னே!

இப்படித் தழுவியும் அவளுக்கு நிறைவு ஏற்பட்டதா?

"இருவருக்குமிடையில் தென்றலைப் புகவிடாதீர் அத்தான்!" என்று அவள் வேண்டுகோள் விடுத்ததாகப் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிக் காட்டி, தழுவிக் கிடக்கின்ற காதலரைக் காட்சியாக்கினார் தனது கவிதை வரிகளில்! காற்று நுழையவும் இடமில்லாதபடி தழுவிட வேண்டுமாம்!


அந்தக் காதல் இணையொன்றை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, வள்ளுவர், குறள் வாயிலாக அறிமுகப்படுத்தும் அழகே அழகு!

"ஒருவரையொருவர் உயிர்போலக் கருதும் காதலர் இருவர்க்கும் இனிமையான இன்பம் அளிப்பது; காற்று இருவர் உடலுக்கும் நடுவில் நுழைந்துவிடாதபடி தழுவிக் கொள்ளுதலேயாகும்"

என்று தழுவலின் சிறப்பைக் கூறுகிறது குறள்:

"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
பேரழப் படாஅ முயக்கு."

அதிகாரம் - 111 - புணர்ச்சி மகிழ்தல்; பாடல் - 1108



தெற்குச் சீமை வீரத்தின் விளைநிலம். ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டியவன் கோழை: இது தமிழர்களின் போர்க்குரல்.

இருபெரும் நாட்டு வீரர்கள் சந்தித்துப் பேசினார்கள்.

ஒருவன் சொன்னான் பெருமையோடு, "எமது மன்னர் முதுகிலே கவசம் அணியும் பழக்கமில்லை" - என்று!



வீரர்கள் இருவர் சந்திக்கும்போது விருந்து மண்டபத்திலும் விழியாலே மொழி பேசும் அரங்கிலும் தமிழகத்து வீரம் முதலிடம் பெறத் தவறியதில்லை. புறங்காட்டி ஓடுதலும் முதுகில் தழும்பு ஏற்றலும் புலி நிகர் தமிழர் வாழும் பூமிக்கு இழுக்குத் தருவன என்பதை நமது களம்புகு காதைகள் விளக்குகின்றன.

ஒரு போர்க்களம். தானைகள் மோதிக்கொள்கின்றன; யானைகள் முட்டிக் கொள்கின்றன; குருதியாறு பெருக்கெடுத்தோடுகிறது; வேலும் வாளும் விண்ணிலே மின்னி, வீரச்சிரிப்பைக் கொட்டுகின்றன; மண்ணிலே கிடக்கும் வீரர்கள் மரணத்தைப் பூரிப்போடு அணைத்து மகிழ்கிறார்கள். மார்பிலே பாய்ந்த வாளை எடுத்து முத்தமிட்டு, வீரச் சத்தமிட்டுச் சாகிறார்கள் மறவர்குடிப் பெருமக்கள்.

அந்தக் களத்திலே ஒரு நிகழ்ச்சி. வீரனொருவன் தன் கையிலிருந்த வேலை ஒரு யானையின்மீது எறிந்து எதிர்க்கிறான். அடுத்து இன்னொரு யானை வருகிறது; அதனை எதிர்க்க அவனிடம் ஆயுதம் இல்லை. வேலோ வாளோ தேடி அலைகிறான்; கிடைக்கவில்லை! திடீரென்று நினைவு வருகிறது, அவன் மார்பிலே ஒரு வேல் பாய்ந்திருக்கிறது. அதை எடுத்து யானை மீது எறிய முயலுகிறான். வேல் கிடைத்தமைக்காக மகிழ்கிறான்.


இந்த வீரன் யார் தெரியுமா?


திருக்குறளிலே வரும் போர்க்களத்துக் 'கதாநாயகன்.'

இதோ, வீரஞ்செறியும் குறள்:-

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்!"

அதிகாரம் - 78 - படைச்செருக்கு; பாடல் - 774





குறளில் 'அலர்' என்ற சொல்லுக்குப் 'பலர் அறிதல்' என்று பொருள் கூறுவர். அதாவது, தங்களுக்குக் கிடைத்த ஒரு தகவலைப் பலரும் அறியும்படியாக அந்தத் தகவலுக்குக் கால் கைகளை ஒட்டவைத்துப் பரப்புதல் என்று விரித்துரைக்கலாம். குறிப்பாகவும் சிறப்பாகவும் காதல் வயப்பட்ட ஓர் ஆணைப்பற்றியோ பெண்ணைப்பற்றியோ - அந்தச் செய்தியைத் தங்கள் மனதுக்குள் புதைத்து வைக்காமல் - ஊர் பொது மண்டபத்தில், குளக்கரையில், கோயில் வாயில்களில், திருவிழாவில், சந்தையில் எப்படியாவது பிறருக்குத் தெரிவித்து அதுபற்றிய கற்பனைகளை அடுக்கிக்கொண்டே போகிற சிலர், ஊர்களில் இருக்கத்தான் செய்கிறார்கள்! "கௌவை" என்று குறளில் வருமிடத்தில் அதற்கு, 'அலர்' என்றே பரிமேலழகர் பொருள் கூறுகிறார். "கௌவை" என்பதற்கு 'பழிதூற்றுதல்' எனப்பொருள். எனவே 'அலர்' என்பதும் அப்பொருளையே குறிக்கிறது எனலாம். "கௌவையால்" என்பதற்கு ஏதிலார் எடுக்கின்ற அலரால் என்று பரிமேலழகர்

பொருள் காணுகிறார். இதில் மற்ற உரையாசிரியர்களிடம் மாற்றுக் கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. "ஏதிலார்" என்பதற்கு "யாரும் தொடர்பில்லாதவர்" என்று பொருள்!

இளநங்கை யொருத்தியை, இளம் நம்பி யொருவன் காமுற்று, நிலவு காயும் நித்திலப் பந்தரில்கூடிக் கிடந்தான் எனில், அந்தப் பிரச்சினைக்குத் தொடர்பே இல்லாத ஊரார் சிலர், (ஏதிலார்) அதுபற்றி 'அலர்' கூறுவதைத்தான் இன்பத்துப்பாலில் பல இடங்களில் வள்ளுவர் பல்வேறு கோணங்களில் சித்திரித்துக் காட்டுகிறார்.


காதலனுடன் களித்திருந்து, கன்னங்களிலும் மார்பகத்திலும் நகக்குறி, பற்குறியுடன் இல்லம் திரும்பி, நடந்ததை எண்ணிக் குறுநகை புரிந்துகொண்டி ருந்தவளைக் கேலி செய்தவாறு, அவளின் தோழி உள்ளே நுழைந்தாள். "ஏனம்மா! உங்கள் காதலைக் கொஞ்சம் ரகசியமாக வைக்கக்கூடாதா? ஊர் முழுவதும் 'அலர்' கூறப்படுகிற அளவுக்கு ஆகிவிட்டதே! இனி என்ன செய்யப் போகிறாய்! உன் காதல் நினைவுகளைக் கட்டிப்போட வேண்டியதுதான்" என்று எச்சரித்தாள் அவள் தோழி!

ஆனால், ஆடை குலைந்தும் அகமகிழ்வு குலையாமல் சாய்ந்து படுத்திருக்கும் அவளோ, தோழியின் எச்சரிக்கைக்குப் பதிலாக ஓர் அலட்சியச் சிரிப்பை உதிர்த்தாள். தோழி ஒன்றும் புரியாமல் திகைத்துக் கன்னத்தில் கைவைத்துக் கொண்டாள். தன் தோழியின் மேனியில் பவழம்போல் சிவந்திருக்கும் அழுந்திய கோடுகளைக் கண்டபோது, எச்சரிக்கை விடுத்த தோழிக்குக்கூட என்னவோ போல் தான் இருந்தது. அப்போது அடுப்பிலிருந்த நெருப்பு, தேவைக்கு மேல் எரியத் தொடங்கியது. "அதை அவித்துவிடு" என்று வீட்டுக்காரியிடம் தோழி சொன்னாள். உடனே இல்லத்துக்குரியாள் எழுந்து சென்று உரியில் தொங்கிக் கொண்டிருந்த கலயத்தை எடுத்து, அதிலிருந்த நெய்யை அடுப்பின் நெருப்பில் கொட்டினாள். "என்னம்மா உனக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டதா? நெருப்பை நெய்யால் அணைக்க முடியுமா?" என்று கேலியாகக் கேட்டாள் தோழி.

அதற்கு அவள், "நெய்யை ஊற்றுவதால் நெருப்பை அவிக்க முடியாதல்லவா? இதைப் போலத்தான் ஊரார் 'அலர்' கூறுவதால் நான் அவர் மீது கொண்ட காதலை (காமம்)யும் அவிக்க முடியாது! நெய் ஊற்றுவதால் நெருப்பு அவியாமல் பெரிதாக எரிவது போல- 'அலர்' கூறுவதால் எனது காதல் தணியாமல் மேலும் வளரும் என்பதை அறிந்து கொள்வாயாக" என்று விளக்கமளிக்கிறாள். அதற்கான குறட்பா இதோ:-

"நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்."

அதிகாரம் - 115 - அலர் அறிவுறுத்தல்; பாடல் - 1148



வேலும் வாளும் உண்டாக்கிய குருதிக் கடலில் பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும் வீரர்களின் தலைகளை முத்தமிட்டபடி பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும் அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகாரி பாடாமல், முதுகு காட்டாமல், "முன்னேறு நீ! முன்னேறு நீ!" என முரசொலித்து, எஞ்சிய வீரர்களை நெஞ்சுரம் கொள்ளச் செய்து 'எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ? எதிரியின் கணை பாயுமோ?' என்று சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பதும் வீரர்களுக்கு அழகில்லை எனும் போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும் மறந்து விடாமல்- 'மரணம், மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு; மங்கையின் இதழைவிடச் சுவையானது' என்று மனவலிமையோடு படையை நடத்திச் செல்பவனே மாவீரன்; மறவர் படைத் தலைவன் எனும் பாசறைக் காவியத்தின் சிறப்புப் பாயிரத்தைப் படித்தவன்தான் அவன்.

அவன் தலைமையில் அணிவகுத்தது நால்வகைச் சேனை.

தலைநகரை முற்றுகையிட்ட பகைவர் படை, கோட்டைக்குள் நுழைந்திடவும் கொடிமரத்தை வீழ்த்திடவும் பரபரப்புக் காட்டியது.

சூழ்ந்து வந்த பகையைச் சுக்குநூறாக்குவதிலேதான், தங்கள் நாட்டின் எதிர்கால நல்வாழ்வே இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட படைத்தலைவன், அணிவகுத்த வீரர்களுக்கு மத்தியில் போர் முழக்கம் செய்தான்:

"காளை நிகர்த்த வீரக்கண்மணிகாள்!
வீரனுக்கு அழகு என்ன தெரியுமா?
தன் வாழ்நாளில்; கழிந்து போன நாட்களில்;
எல்லா நாட்களும் நாட்கள் அல்ல!
வேறு எந்த நாள் அவனுக்குரிய நாள்?
அவன் விரும்பும் பொன்னாள் எது?

இதோ! வள்ளுவர் கூறுகிறார்; கேளுங்கள்:

"விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து."

போர்க்களம் சென்று அவன் உடலில் விழுப்புண் ஏற்காத நாட்கள் எல்லாம் பயன்படாத நாட்களேயாகும் என்பது வள்ளுவரின் வீர வரிகளன்றோ!

அதை யுணர்ந்துள்ள என் ஆருயிர் வீரர்களே!

ஆறிலும் சாவுதான்; நூறிலும் சாவுதான்; ஆனது ஆகட்டுமே என்று போர்க்குரல் கொடுங்கள்! அதோ! நமது பகைவன்! விழுப்புண்களை விலையாகக் கொடுத்து வெற்றிக்கனியைப் பெற்றிடுவோம் வாரீர்! நம் கோட்டை மதிலைச் சுற்றிப் பார்க்கிறது, எதிரியின் கொடித்தேர்! அதனை உடைத்துப் பிளந்து அகழியில் வீசுவோம் புறப்படுவீர்! அதோ! அதோ! அவை விண்வெளியின் அடித்தளத்து மின்னல்களல்ல; பகைவர் படையின் வாள் ஒளி!

உங்கள் விழிகள் பகைவர்களை நோக்கிக் கோபம் கொப்பளிக்கத் திறக்கட்டும். ஆனால் ஒன்று; மறந்து விடாதீர்கள்! பகைவரைச் சினந்து நோக்கிய கண்களுக்குரிய இலக்கணத்தை, வள்ளுவன் வகுத்திருக்கும் சிறப்பினை மறந்து விடாதீர்கள்! பகைவரை நோக்கிச் சீற்றமுடன் திறந்த விழிகள், பகைவர் எறியும் வேலைப் பார்த்திடும்போது மூடி இமைக்குமானால், அது வீரர்களுக்கு ஏற்பட்ட தோல்வியையே காட்டுவதாகும்.

"விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு."


வேலின் பாய்ச்சல் கண்டு விழி இமைப்பதும் கோழைத்தனம் என்று கூறுகின்றார் குறளார்!

அந்தக் குறளை ஒலித்திடுக! முரசை முழக்கிடுக! தேள்போல் திரளும் பகையைத் தூள் தூளாக்குக!"

போர் தொடங்குகிறது-

இந்த வீரமிகு காட்சிக்கேற்ற இரண்டு குறள்களைத்தான் நாம் மறக்க இயலுமோ?

அதிகாரம் - 78 - படைச்செருக்கு; பாடல்கள் - 776, 775



வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அந்த வெள்ளத்தைக் கண்டதும் அவளது கண்களுக்கு ஓர் ஆறுதல். அவளையும் அறியாமல் அவைகள், வெள்ளத்தில் குதித்து நீந்திச் செல்கின்றன.

"எங்கே போய்விட்டீர்கள், என் கண்களே!" என்று அவள் அலறுகிறாள். அந்தக் கண்கள் அவளுக்குப் பதில் சொல்லத் தவறவில்லை.

"அவரைக் காணாமல் எங்களால் இருக்க முடியவில்லை. அவரைத் தேடித்தான் இந்தக் கண்ணீர் வெள்ளத்தில் நாங்கள் நீந்திச் சென்று கொண்டிருக்கிறோம்" என்று கண்கள் சொன்னதும் அவளது சோகம் படிந்த முகத்தில் ஒரு புன்னகை பளிச்சிட்டு மறைந்தது.

அந்தக் கணநேரத்தில், காதலன் அவளைப் பிரிந்துசென்ற நிகழ்ச்சி அவள் நெஞ்சில் நிழலாடத் தொடங்கிவிட்டது.

'பொழுது' கறுப்புப் போர்வையைப் போர்த்திக் கொண்டவுடன், அதற்குள்ளே அவனும் அவளும் புகுந்து கொண்டனர்.

தங்களை யாரும் காணமுடியாதபடி இரவுத்திரை போடப்பட்டுவிட்டது என்ற நினைவில், இன்பத்தின் எல்லைக்கோடு வரையில் சென்றனர். முத்து விரிசைகள் மோதிட மோதிட- செம்பவள இதழ்கள் கலவிச் செய்திகள் கூறிடக் கூறிட- முகத்தொடு முகமும் அகத்தொடு அகமும் இணைத்துக் களித்தனர்.

இரவோ, இவர்கள் ஆட்டத்தால் மிதிபட்டுக் களைத்துப் போயிற்று. இனிப் பொறுக்க முடியாதென்று 'பொழுது' தனது கறுப்புப் போர்வையைக் களைந்து வெண்துகிலை உடுத்தக் கிளம்பிற்று.

வைரம் பாய்ந்த பனைமரத்தில் தழுவிக்கிடக்கும் பசலைக் கொடியைப் பார்ப்பது அரிது! ஆனால், இங்கே அவனை, அவள் அப்படித்தான் தழுவிக்கிடந்தாள்.

வைகறையின் வரவு, அவளை வாட்டி வதக்கியது. வாணிபத்தின் நிமித்தம் அவன் புறப்பட்டு விடுவானே என்பதால்தான், அவ்வளவு வேதனை! "போய் வருகிறேன்" என்று சொல்லி முடிப்பதற்குள் உச்சரித்த எழுத்துக்கு ஓர் முத்தம் வீதம் அவன் கொடுத்து, ஒன்றுக்கு இரண்டு வீதம் திரும்பப் பெற்றான்.

அந்த முத்தத்தின் சத்தம் இன்னும் காதுகளில் அவளுக்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அணைப்பின் சுகஉணர்வு அவள் அகமலரில் வண்டுபோல் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. ஆனால், கண்களில்தான் வெள்ளம் பெருக்கெடுக்கிறது. அந்த வெள்ளத்தில்தான், அவளது கண்கள் நீச்சலடிக்கின்றன, அவனைப்போய்க் காண்பதற்கு!

அவள், அந்தக் கண்களிடம் சொல்லுகிறாள்! என்ன அது!

"ஓ, என் கண்களே! என்னைப் பிரிந்துசென்ற காதலர் இருக்குமிடத்திற்கு என் உள்ளத்தைப்போல ஓடிச் செல்லும் ஆற்றல் உங்களுக்கு இருக்குமேயானால், இப்படிக் கண்ணீர் வெள்ளத்தில் நீங்கள் நீந்த வேண்டியதில்லையே!"

இந்த ஓவியம் தீட்டக் கிடைத்த குறள்தான் இது;

"உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண்."

அதிகாரம் - 117 - படர்மெலிந்திரங்கல்; பாடல் - 1170



அலைகடலெனத் திரண்டு வந்த பகையரசின் படைகள், திடீரெனத் தென்னவனின் கோட்டையை முற்றுகையிட்டுத் தாக்கின. எதிர்பாராமல் ஏற்பட்ட அதிர்ச்சியினால், தென்னவனின் படைகள் திகைத்துப் போயின. மன்னவன் தென்னவனுக்குப் பெரும் வியப்பு. ஆற்றல் மிக்க ஒற்றர்களிருந்தும் அவர்களையுமறியாமல் பகைநாட்டான் தன் கோட்டையை முற்றுகையிட்டது எப்படி என்ற கேள்விக்கு அவனால் விடைகாண முடியவில்லை. எனினும், அந்தக் கேள்விக்கு விடை கிடைக்காமலே போய்விடவில்லை.

எதிரியின் வசம் கோட்டை சிக்கியது; பகைவனின் கொடி, கோட்டை முகப்பில் ஏற்றப்பட்டது. முன்னேறி எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருந்த தென்னவனை, முகமூடியணிந்த மூவர் சூழ்ந்து கொண்டு அப்படியே பிடித்துவிட்டனர். பகையரசன், தென்னவனின் முன்னே வெற்றிச் சிரிப்புடன் வந்து நின்றான். 'தன்னைப் பிடித்துக்கொண்டவர்கள், தன் படைவரிசையில் இருந்து நுழைந்தார் களே... அவர்கள் யார்' என்று அறியத் தென்னவன் திரும்பிப்பார்த்தான். அந்த மூவரும், தங்கள் முகத்தை மூடியிருந்த துணியை அகற்றினார்கள். வேறு யாருமல்ல! தென்னவன் மிகவும் நம்பியிருந்த தலைமைத் தளபதியும், தென்னவனின் அந்தரங்க ஒற்றர்களுந்தான்! அவர்களைப் பார்த்து, கைதாகிவிட்ட மன்னன் கலகலவெனச் சிரித்தான்: "பரவாயில்லை! என் படையின் திறமையின்மையால் நானும் என் நாடும் தோற்றுவிட்டோமோ என்று கவலைப்பட்டேன்! இல்லை! இல்லை! துரோகி களால் ஏற்பட்டது இந்தத் தோல்வி என்பதை எனக்குத் தெளிவாக்கி, என் கவலை யைப் போக்கி விட்டீர்கள்!" என்று தென்னவன் மிக அமைதியாகப் பேசினான்.

பகை மன்னன், தென்னவனைத் தனியொருவனாக நாடு கடத்தி "அவனை யாரும் பின்தொடரக் கூடாது" என்று ஆணை பிறப்பித்தான். அந்த ஆணை கேட்டு அதிகமாக மகிழ்ந்தவர்கள் தென்னவனின் முன்னாள் தளபதியும் ஒற்றர்களுந்தான்! தென்னவனின் ஒரே மகனைச் சிறைபிடித்து, யானைக்காலால் அவன் தலையை இடித்துத் துவைக்குமாறு மற்றொரு உத்தரவும் பறந்தது! துரோகம் செய்தவர்களைப் பார்த்துத் தென்னவன், "நண்பர்களே! வருகிறேன்! வாழ்க நீங்கள்!" என்று கூறிவிட்டுத் தனியொருவனாக நாட்டை விட்டு வெளியேறினான். நாட்டைத் துறந்து காட்டில் வாழ்ந்த தென்னவனை, அங்கேயும் அமைதியாக வாழவிடவில்லை பகையரசன். ஏற்கனவே அவனைக் காட்டிக் கொடுத்தவர்கள், பகையரசனிடம் தூபம் போட்டுத் தென்னவனுக்குத் தொல்லைகள் கொடுக்கும் பணியைத் தாமே மேற்கொண்டனர்.

தென்னவன் வசித்த பகுதியில் கொடிய வனவிலங்குகளை விரட்டி விட்டனர். அவற்றையெல்லாம் தனது மனவலிமை கொண்டு வீழ்த்தினான் அந்த மன்னவன்.

தங்களின் முயற்சி பலிக்காமற் போனதுகண்டு துரோகிகள் வருந்தினர். நாட்கள், மாதங்கள் உருண்டன. பகை மன்னன் சிந்திக்கலானான். துரோகம் செய்து தங்கள் அன்புக்குரிய மன்னனையே காட்டிக் கொடுத்தவர்கள், தன்னையும் சூழ்ச்சியால் வென்றிட எவ்வளவு நாளாகும் என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். பகையரசன் தங்களைச் சந்தேகப்படுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட துரோகிகள், சூழ்ச்சி வலையை வேகமாகப் பின்னுகிறார்கள். அவர்களது சூதுமதி யால் அந்தக் கோட்டையையே கைப்பற்றுகின்றனர். அவர்களிடம் சிக்கிக் கொள் ளாமல் பகைமன்னன் கோட்டையை விட்டு ஓடிவிடுகிறான். தன்னந்தனியாக ஓட நேரிட்ட அவன், காட்டில் தென்னவனைச் சந்திக்கிறான்: "உனக்குத் துரோகம் செய்தவர்கள், எனக்கும் துரோகம் செய்துவிட்டனர்" என்று கூறுகிறான். அப்போது அங்கே ஒரு வீரன், ஓங்கிய வாளுடன் பாய்கிறான். அவன் யார்? தென்னவனின் மீது உயிரையே வைத்திருக்கும் ஒரு படைவீரன்தான் அவன்! பகையரசனை வெட்டிச் சாய்க்கத்தான் அவன் தனது நாட்டிலிருந்து பறந்தோடி வந்திருக்கிறான். ஆனால், தென்னவன், அவனைத் தடுத்து நிறுத்தி பகை மன்னன் உயிரைக் காப்பாற்றுகிறான்.

"தென்னவா! உனக்கு அடுக்கடுக்காகத் துன்பங்களைக் கொடுத்தேன் நான். போதாதென்று, துரோகிகள் உனக்கு விளைத்த தொல்லைகளையும் அனுமதித்தேன். ஆனால், நீ அதற்கு மாறாக என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாயே; என்ன காரணம்?"

என்று பகை மன்னன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"தன்னை வருத்துவோர்க்கும் தீய செயல்களைத் திருப்பிச் செய்யாமல் இருப்பது தான் எல்லா அறிவிலும் தலையான அறிவு என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்."

என்று விடையளித்துவிட்டுத் தென்னவன் அந்தக் குறளையும் பகையரசனுக்குப் பாடிக் காட்டினான். அந்தக் குறள் இதோ:

"அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்."

அதிகாரம் - 21 - தீவினையச்சம்; பாடல் - 203



அன்று நிலவின் ஒளி இல்லை. விண்மீன்கள் மட்டுமே கார்த்திகை விளக்குகளைப்போல் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. கட்டுப்படுத்த முடியாத இன்ப உணர்ச்சி கட்டுடல் முழுதும் பரவிய நிலையில், துடிதுடிக்கும் விழிகளோடு, பூங்குழலி மாங்கொல்லையில் காத்திருந்தாள். அங்குதான் அவன் வந்து அவளைச் சந்தித்துச் சங்கமமாவதாகக் கூறியிருந்தான். ஒரு கிழமைக்கு முன்பு அதே மாங்கொல்லையில்தான் அந்தச் சந்திப்பு நடந்தது. அவர்கள் வரைந்த காதற் கலவி ஓவியங்களைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த மாமரங்கள், இப்போது பூங்குழலி தனியே நிற்பதைப் பார்த்து, அவன் எப்போது வருவான்? அடுத்த காட்சி எப்போது தொடங்கும்? என எதிர்நோக்கிக் கொண்டிருந்தன.

அன்று கண்ட சுவையை நினைத்து நினைத்து எழில்மேனியைச் சூடாக்கிக் கொண்டு, ஒரு மரத்தின்மீது சாய்ந்தவாறு, தான் சாய்வதற்கேற்ற அந்தக் காளையின் தோளுக்காகத் தவமிருந்தாள் பூங்குழலி! நாழிகை, நகர்ந்தது- பின்னர் ஓடியது!

இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவான்; இனியும் தன்னைவாட விடமாட்டான்; வாரியணைப்பான் - மாரியெனப் பொழிவான் முத்தம். இந்த நினைவோடு, அவள் சாய்ந்திருந்த இளம் மாமரத்தைத் தங்கக் கரத்தால் தடவினாள். அதுகண்டு, மற்ற மரங்கள் சிலிர்த்தன. அந்த இளம் மாமரத்தின்மீது பொறாமைப் பார்வையை வீசின! சந்தனச் சிலையாள் தங்கள் மீது சாய்ந்திட வில்லையே என்ற ஏக்கத்தில் பெருமூச்சு விட்டன. அவள் விழிகளோ, அவன் வரும் வழிபார்த்து வெறியேறிக் கிடந்தன.

அதோ! அதோ! மங்கலான ஒளியில் அந்த ஆடவனின் உருவம் அசைந்தாடி வருகிறது. வழக்கமாக அவன் அணியும் தூய வெண்ணிற ஆடை! கையின் மணிக்கட்டு வரையில் மறைந்திருக்கும் சொக்காய்! தலையில் அழகிய முண்டாசு! அந்த உருவத்தின் வரவுக்காகத்தான் பருவக்கிளி ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தது. அவன் வருகிறான் என்றதுமே வீங்கிப் புடைத்து நின்ற நெஞ்சகம், அருகில் நெருங்கிவிட்டான் என்றதும் துள்ளிக் குதித்தது. "அத்தான்!" என்று கத்திவிட்டாள். அந்த ஒலியிலேதான் எவ்வளவு விரகதாப வேதனை!

அவனோ எதுவும் பேசாமல் எதிரே வந்து நின்றான். "ஏனத்தான் இவ்வளவு நேரம்?" என்று கேட்டவள், அவனிடமிருந்து பதில் வருவதற்குள் அவனைத் தாவி அணைத்தவாறு தரையில் விழுந்தாள், அவனுடன் சேர்ந்து! "ஏ அப்பா! அவ்வளவு அவசரமா?" என்று அவன் கேட்டுக் கலகலவெனச் சிரித்தான். பூங்குழலி மிரண்டு போனாள்! காரணம், அவளுடன் பேசிய குரல் ஆண்குரல் அல்ல; பெண்ணின் குரல்!

அதுவும் அவளுடைய அருமைத் தோழி, 'இனியவள்' என்பவளின் குரல்! பூங்குழலி, அவளை உதறிவிட்டு எழுந்து நின்றாள். தோழி இனியவளும், தான் அணிந்திருந்த ஆணுடையைக் களைந்துவிட்டு எதிரே நின்றாள். உயிர்த் தோழிதான் என்றாலும் தன்னுடைய ஏக்கத்தையும் தாபத்தையும் அவளிடத்தில் இவ்வளவு வெளிப்படையாகக் காட்டிக் கொண்டோமே என்ற வெட்கம் பூங்குழலியைத் தலைகுனிய வைத்துவிட்டது. இனியவள், பூங்குழலியை ஏமாற்றியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். பிறகு இருவரும் மனம்விட்டுப் பேசிக் கொண்டார்கள். பூங்குழலி, இனியவளிடம்:

"என்னடி செய்வது? அவர் மறந்தாலும் அவரை மறக்க முடியாத மாட்சிமையற்ற மடநெஞ்சத்துடன், நானும் சேர்ந்து வெட்கத்தையும் மறந்து விட்டேன்" என்றாள்.

அதற்கு, இனியவள்;

"ஆமாம்! ஆமாம்! கண்டவுடனே கட்டித்தழுவிக் காதல் காவியம் பாடத் தொடங்கிவிட்ட உன் செயலை நோக்கும்போது, நீ நாணம் எனும் சிறந்த பண்பை மறந்துதான் விட்டாய் என்பதை உடனே புரிந்து கொண்டேன்" என்று கேலி செய்தாள்.

"நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மானா மடநெஞ்சில் பட்டு."

அதிகாரம் - 130 - நெஞ்சொடு புலத்தல்; பாடல் - 1297



சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி ஆனை மிதிக்கும் அருஞ்சேறாம் போர்க்களத்தில் எதிரிகளின் முடி நடுவதற்கு முரசம் ஆர்த்துவிட்டது. அழைப்பு வந்துவிட்டது, அந்த வீரனுக்கு!

"படை முழக்கம் பாராய் கண்ணே - தடையின்றி விடை தாராய் பெண்ணே" என வேண்டுகின்றான், விழுப்புண்படாத நாளெல்லாம் வீணான நாட்கள் எனக்கருதும் வீரமகன் விழிப் பண்பாடும் வடிவழகி, முத்துநகை சிந்துகின்ற இதழ் குவித்து முத்தமீந்து, 'வெற்றியோடு திரும்பிடுக அத்தான்' என்று அணைத்து நின்றாள் - கண்ணீரை அவனுக்குத் தெரியாமல் அவன் தோளில் துடைத்துக்கொண்டு!

"வேலெடுத்து வா" என்பான் - விழி தருவாள். "ரத்தம் படிந்த வாள் எங்கே" எனக் கேட்பான். செவ்விதழ் கொடுப்பாள். "அக்களமில்லை பெண்ணே, இக்களம்! இணைபிரியா எந்தன் துணையே!" தலைவனவன் தயாராய் நின்றிருப்பான் எனை நோக்கி! "வேல் தருவாய்; விடை தருவாய்! இடையில்லாப் பேரழகே!" என மடை திறந்த காதல் வெள்ளம்விட்டு மறவனவன் நடக்கலுற்றான் மாவீரர் அணிவகுப்பின் பக்கம்!

வழியில் தாய் கண்டாள்; வாழ்த்தினாள்; 'வருக புலியே வெற்றியோடு!' என்றாள். "தலைவனவன் உன்மீது சிறு கோபம் கொண்ட சேதி நானறிவேன். நீ மறைத்தால் தெரியாமல் போகுமா தம்பீ! தாயகத்தின் மேன்மைக்குத் தலை கொடுக்கச் செல்கின்ற படைவரிசை காத்திருக்கும் - கடமை செய்து வா, என் கண்ணே" என்று முன்பவன் மார்பிலே பெற்றிருந்த புண்மீது முத்தமிட்டாள்.

போருக்குச் சென்ற வீரன் எதிரிகளைப் பொடிசெய்து எலும்புப் புழுதியிலே சேர்த்துவிட்டான். இரத்தச் சகதியிலே இரு தரப்புவீரர்களும் இறுதி யாத்திரைக்குச் சித்தமானார்கள். கடைசி வெற்றி பகைவருக்கு என்றோர் சேதி பறந்து வர, "கண்ணிருந்தும் குருடரா நாம்?" எனக் கேட்டபடி களத்தினிலே, நம் காளை சுழல்காற்றாய்ப் பறந்து சென்றான். தனியொருவன் - தலைவனவன் கண்ணெதிரே பகைப் படையின் பலமழித்தான்; தோல்விப் புகைப்படலம் ஒழித்து நின்றான்; வெற்றிக்கு வித்திட்டான். அம்மவோ! இறுதியில் மறைந்துவந்த அம்புக்கு இரையானான்!

வெற்றிகண்ட படைத் தலைவன், வீரன் சாய்ந்துவிட்ட காட்சிதனைக்கண்டு கதறிவிட்டான்.

சிறியோர் சேட்டை விளைத்த சிறு கசப்பால் கருத்தினிலே வேறுபாடு கொண்டிருந்த காவலனும், களம்பட்டு வீழ்ந்திருந்த காளைதனைக் கண்ணீரால் குளிப்பாட்டுகின்றான்.


சாகின்ற வீரன் சொல்வான்:

"தலைவா! தமைக்காத்த தலைவன் கண்களில் நீர்ப்பெருக்கெடுக்குமாறு ஏற்படுகின்ற இதுபோன்ற களச் சாவுகளை - வீரர்கள் யாசித்தாவது பெறுதல் வேண்டும்."

தலைவன், தன் சாவு கண்டு கண்ணீர் விடுவது, வீரனுக்கு அவ்வளவு பெருமையாக இருக்கிறது! தலைவனுக்குக் கண்ணீரை வரவழைத்த அந்த வீரச் சாவு பாராட்டுக்குரியது. அதற்கு இதோ குறள்:

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து."

அதிகாரம் - 78 - படைச் செருக்கு; பாடல் - 780



அலுவலகம் சென்றிருந்த கணவனின் வரவை எதிர்பார்த்துக் கால்கடுக்க, வாயிற்புறத்தில் நின்றிருந்தாள் துணைவி. "காலொடிந்து போகுமுன்னே கணவனும் வந்து சேர்ந்தான்" என்ற பாரதிதாசனின் கவிதைக்கேற்ப அவன் வீட்டுப் படியை மிதித்ததும் அவள் புன்னகை சிந்த வரவேற்று கைகால் முகம் கழுவத் தண்ணீர் மொண்டு தந்தாள். ஈரம் துடைக்கத் துண்டொன்றும் ஏந்தி நின்றாள். அவன் கண்ணாடியில் முகம் பார்த்துச் சீர் செய்து கொண்ட பின்னர், உணவருந்தும் மேடையில் உட்கார்ந்து கொண்டான்.

வாழை இலையை அவன் எதிரே போட்டவாறே "ஏனத்தான் இன்று இவ்வளவு நேரம்? அலுவலகத்தில் பணிப்பளு அதிகமோ?" என்று கிள்ளை மொழியில் கேட்டாள்.

"இல்லை! வரும் வழியில் குறள் விழாக் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. சற்று அந்த இன்பத்தையும் பருகலாமே எனச் செலவிட்டேன் கொஞ்ச நேரத்தை" என்றான் அவன்.

"தமிழ் மணக்கும் அந்த மண்டபத்திற்கு அழைத்திருந்தால் நானும் வந்திருப்பேனே" என்றபடி, வெள்ளியுருக்கியதுபோல் குழைந்திருந்த வெண்சோற்றை இலையில் இட்டாள். வெங்காயம் உடலுக்கு நல்லதென்று அடுத்த வீட்டு சித்தவைத்தியர் சொல்லியிருந்தார்; தவறாமல் நாள்தோறும் செய்யும் அந்தப் பச்சடியையும் இலையின் ஓரத்தில் வைத்தாள். "கிழங்கு வறுவல், அதிகம் உண்ணக் கூடாதாம்; ஒன்றிரண்டு மட்டும் சுவை பாருங்கள்" என்று சிரித்துக் கொண்டே சொல்லி அதையும் பச்சடிக்குப் பக்கத்தில் வைத்தாள். "கசக்குமெனினும் பாகற்காய், பகுத்தறிவுக் கொள்கை போல நல்ல பயன் தரும் என்பீர்களே; அதற்காக இன்று அதைச் சமைத்தேன்" என்று நான்கைந்தை எடுத்து வைத்தாள். "பிஞ்சு முருங்கைக்காய்க் குழம்புதான் பிடிக்குமே" எனப் புன்னகை புரிந்தவாறு, கண்களில் குறும்பினை நடமாடவிட்டுக்கொண்டு, குழம்பினையும் சோற்றிலே ஊற்றிவிட்டு, ஆளன் உணவருந்தும் அழகை அருகே உட்கார்ந்து பார்க்கத் தொடங்கினாள். இது அவளுக்கு வாடிக்கை!

குழம்பும் சோறும் பிசைந்த ஒரு பிடிச் சோற்றை அள்ளி வாயில் போட்டுக் கொண்டான். "குழம்பு எப்படி இன்றைக்கு?" எனக் கொஞ்சினாள் அவள்.

"நேற்றிரவு நீ புரிந்த ஊடல் போலிருக்கிறது" என்று குழம்புக்கு ஒப்புவமை காட்டினான் கணவன்.

"குழப்பமாயிருக்குதத்தான் உங்கள் உவமை! தெளிவாகக் கூறுக!" என்று சிணுங்கினாள்.

"வரும் வழியில் குறள் அரங்கம் சென்று வந்தேன் என்று சொன்னேன் அல்லவா; அங்கு ஊடலைப்பற்றி ஒரு விளக்கம் கூறப்பட்டது. ஊடல், காதலர்க்கு இன்பம் தரக்கூடிய ஒன்றுதான் என்றாலுங்கூட, அந்த ஊடலையும் அளவு கடந்து நீட்டித்துவிட்டால், அது உணவில் சிறிதளவு உப்பு அதிகமாகிவிட்டால் எப்படியிருக்குமோ அப்படி ஆகிவிடுமாம். உணவில் அளவோடு கலக்கப்படும் உப்புப்போல இருக்கவேண்டுமாம் ஊடல்! இவ்வளவு அழகாக ஊடல் குறித்து வள்ளுவர் எழுதியிருக்கிறார். அந்த விளக்கம் கேட்ட நினைவோடு வீட்டுக்கு வந்தேன். அதனால் இன்றைய உணவு பற்றி அப்படிச் சொன்னேன்" என்று மலர்ந்த முகத்துடன் அவன் பதிலிறுத்தான்.

"அப்படியானால் குழம்பில் உப்பு அதிகமோ?"

மனவாட்டத்துடன் அவள் கேட்டாள்!

"ஓகோ! நேற்றிரவு நீ நடத்திய ஊடல் சற்று அளவுக்கு மீறியது என்பதை ஒப்புக்கொள்கிறாயா?" என்று அவன் அவளைக் கேலி செய்தான்.

அன்றிரவு, தான் கொண்ட ஊடலை அளவுக்கு அதிகமாகவே நீட்டித்ததை எண்ணிப் பார்த்து அந்தப் பேரழகி வெட்கத்தால் தலை குனிந்து கொண்டாள்.

"உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்."

அதிகாரம் : 131 புலவி பாடல் : 1302

RAJ BHAVAN LIBRARY



நாட்டுக் காவலர் அவர். பாட்டுத் தமிழ்ப் புலவர்க்குப் புரவலர். வரலாற்று ஏட்டுக்கு ஒளிசேர்க்கும் வலிமை படைத்த தோளுடையவர். அவர் நெஞ்ச வீட்டுக் குள் கலக்கமெனும் காரிகை, கணநேரமும் நுழைந்ததில்லை. களம்பல கண்டவர் எனினும், பகைப் புலம் மீது பழி தீர்க்க எண்ணிடாத இதயம் கொண்டவர். எதிரி களின் வாள்வீச்சு அவர் மார்பகத்தில் வீர ரேகைகளை உருவாக்கியதுண்டு. போர்க் களத்தில் பொல்லாப் பகைவர்களை ஆயிரக்கணக்கில் சாவூருக்கு விடை பொடுத்த னுப்பி, வெற்றி மாலைகளைச் சூடிய அந்த வீரர்குலச் சீயம், இதோ சாவூரிலிருந்து வந்துள்ள அழைப்பிதழைப் படித்துக்கொண்டு படுக்கையில் கிடக்கிறது. தூதுவர் செல்ல அஞ்சி நடுங்கியதால், தானும் சென்றிடப் பயந்துகொண்டு காலன் அவருக்கே அழைப்புக் கடிதம் விடுத்தனன் போலும், அத்தனை ஆற்றல் மிகு மறவரன்றோ அவர்! அணிதேர்ப்புரவி, ஆட்பெரும் படையுடன் அவரது தலைநகரை முற்றுகையிட்டவர் கள், மஞ்சத்தில் சிரித்து மறுநாள் காலையில் வாடிய மலர்களைப்போல அள்ளிக் கொட்டப்பட்டனர், அவரது போர் முறையின் திறனால்!

அவருக்கும் இயற்கை ஒரு முடிவுரையை எழுதித்தானே தீரவேண்டும். இல்லையேல் மனிதனின் கதை முடிவுறாமல் போய் விடுமே! முடியாத மனித சமுதாயத் தொடர் கதையில், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒவ்வொரு கதையுண்டல்லவா? அந்தக் கதையை முடிக்கச் சாவு, ஏட்டைப் புரட்டிக் கொண்டிருக்கிற நேரம்! எழுத்தாணியைக் கையில் எடுத்துவிட்ட வேளை!

மாவீரர், வயது முதிர்ச்சி, நோயின் தாக்குதல் - இவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், இளநகை இதழ்களில் தேக்கி மரணப்படுக்கையில் வேங்கை நோக்குடன் வீழ்ந்து கிடக்கிறார். படுக்கையைச் சுற்றி மருத்துவர்கள், உற்றார், உறவினர், பெற்றெடுத்த கண்மணிகள்! பேரன்புப் பெட்டகமாம் வாழ்க்கைத் துணைவி! அனைவரது விழிகளுமே அருவிகள்தாம்! விம்மியழும் வேதனைக் குரல்கள், சற்றுத் தொலைவில்! இன்னும் சில நொடிகள்தான் மிச்சமிருக்கின்றன. மருத்துவர்கள் புரிந்து கொள்கிறார்கள். மாவீரர், தன் வெள்ளிக்கம்பி மீசையைத் தடவிக் கொண்டே சூழ்ந்து நிற்போரைப் பார்த்து ஆறுதல் கூறுகிறார். கொலு மண்ட பத்தில் அமர்ந்து தீர்ப்புக் கூறுவாரே, அதே போன்று அழுத்தம் திருத்தமான தொனி:

"கவலையற்று நான் மகிழ்ச்சியுடன்தான் புறப்படுகிறேன். அழாதீர்கள். அழுது கொண்டு பிறக்கிறவர்கள் சிரித்துக்கொண்டு சாகவேண்டும் என்ற தத்துவத்தை மறவாதவன் நான். பிரியமுள்ளவர்களே! பிரிவு நம்மை நெருங்குகிறது. விடை கொடுங்கள், வருகிறேன்."

மலர்ந்த முகத்துடன் மாவீரர் விடை கேட்டார். அவர் கண்களில் புத்தொளி வீசியது. அனைவரையும் ஒருமுறை ஆர்வத்துடன் பார்த்தார். திடீரென ஒரு மாற்றம்! மலை குலைந்தாலும் நிலைகுலையா மனம்படைத்த அவரது விழிகள் குளமாயின. சுற்றி நின்றோர் வியப்புடன் அவரைப் பார்த்தனர்.

அவர் அவர்களிடம் மீண்டும் பேசினார் - ஆமாம்! கடைசியாகப் பேசினார்:

"என்ன வியப்படைகிறீர்கள்? எதற்கும் கலங்காத என் விழிகளில் ஏன் கலக்கம் என்றுதானே! களத்தில் வேல்பட்டுச் சாகாமல் இயற்கையான மரணத்தைத் தழுவுகிறேனே என்பதற்காகக் கலங்குகிறேன் என்று கருதுகிறீர்களா? அந்தக் கவலையுண்டு எனினும் அதைவிடப் பெரும் வேதனையொன்று என்னை இப்போது தாக்கிவிட்டது. ஆம்! சாகும்வரையில் மறக்க முடியாத துன்பந்தான் அது! அதனால்தான் கலங்கிவிட்டேன். சாவுக்காகக் கலங்கவில்லை! உங்களுக்கு நினைவிருக்கிறதா? பத்தாண்டுகட்கு முன்பு பழையனூர்ப் படையை எதிர்த்து நான் தலைமையேற்றபோது, தங்கியிருந்த பாசறைக்குத் தீ மூட்டப்பட்டுவிட்டது. எதிரிகள் சூழ்ந்து கொண்டனர். என்னுடைய தளபதிகளில் ஒருவரைக் காணவில்லை. அவர் எனக்குத் தளபதி மட்டுமல்ல, இளமைக் காலந்தொட்டு நண்பருங்கூட! 'என்ன ஆனாரோ?' என்று நான் பதைத்து நின்றபோது, அவர் தான்மட்டும் உயிர் தப்பினால் போதுமென்று என்னை ஆபத்தில் விட்டு ஓடிவிட்டார்! நானும் என் வீரர்களும் எஞ்சியிருந்த தளபதிகளும் இறுதிவரை போரிட்டுப் பழையனூர்ப் படையைத் துரத்தியடித்து மீண்டோம்! இப்போது அந்த நண்பரின் செயலை நினைத்துக்கொண்டேன். கலங்கி விட்டேன்."


இந்த வார்த்தைகளுடன் அந்த மாவீரர் விழிகள் மூடின. உயிர் நின்றது. கண்ணீர் மழையால் அவர் உடல் நனைந்தது.

அந்த நீர்த்துளி எடுத்துத் தீட்டப்பட்ட குறளோவியம்தான் இது!

"கேடு வருகிற நேரத்தில் கைவிட்டு ஒதுங்குகிறவரின் நட்பு, சாகும்போது நினைத்தாலும் உள்ளத்தைச் சுடக்கூடிய வேதனையளிக்கக் கூடியதாகும்."

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்."

அதிகாரம் - 80 - நட்பாராய்தல்; பாடல் - 799



பச்சைப் பட்டாடை உடுத்தி அழகு மிளிர விளங்கினாள் நிலமடந்தை! பசுக்களும், கன்றுகளும், காளைகளும் வயிறுபுடைக்கப் புல்லைத் தின்றும்கூட நிலமங்கையின் அழகுவளம் குறையவில்லை.

இன்றைக்குப் போதும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்பதைப் போல, மாடுகளும் கன்றுகளும் அந்தப் பரந்த மேய்ச்சல் நிலத்தில் செழித்து வளர்ந்து கிடக்கிற புல்லை அலட்சியப்படுத்திவிட்டுத் தலைநிமிர்ந்து நின்றன.

அந்த வீட்டு விலங்குகளை மேய்ச்சல் காட்டுக்கு ஓட்டிவந்த ஆயர்குடி மகன், திரும்ப ஊர்நோக்கி நடத்திச்செல்ல ஆயத்தமானான். கூரான கொம்புகளைக் கொண்ட காளைகள், துள்ளியாடும் கன்றுகள் அனைத்துமே அவன் குரல் ஒலிக்குக் கட்டுப்பட்டு ஊர்நோக்கி அணிவகுத்தன.

இடுப்பில் மடித்துக்கட்டிய வேட்டி! தலையில் முண்டாசாக ஒரு துண்டு! கையில் ஒரு நீளமான கம்பு! கழுத்தில் புலி நகம் கோக்கப்பட்ட ஒரு சங்கிலி! அரும்பு மீசையுடன் அமைதியும் வீரமும் ஒருசேரக் கலந்த ஒளி படைத்த முகம்!

அந்த ஆயர்குடி வாலிபனுக்குப் பெயர் அமுதன். அமுதனுக்கு ஒரு அமுதவல்லியும் உண்டு. முழுமையாக மலராத நிலையில் இருந்த காதலுக்கு, இருவரும் தங்கள் நெஞ்சைப் பறிகொடுத்திருந்தனர்.

மாடுகளை மேய்ச்சல் முடிந்ததும் ஓட்டிச்செல்லும் வேளையில், நாள்தோறும் அமுதவல்லியும் அவளின் தாயும் அந்த வழியேதான் வருவார்கள். பால், தயிர், வெண்ணெய் விற்பனைக்காகப் பக்கத்துச் சிற்றூர்களுக்கு சென்றுவிட்டுப் பொழுது சாய்வதற்குள் வீடு திரும்புவது அவர்களுக்கு வாடிக்கை!

காலைமுதல் கடும் வெயிலில் மாடுமேய்க்கும் அமுதனுக்கு, மாலை மயங்கும் வேளையில் அவளைச் சந்திப்பதுதான் மிகப் பெரிய ஆறுதல்! இப்படி எத்தனையோ நாள் அவளைச் சந்தித்திருக்கிறான். இவன் அவளைக் காதல் பொங்கப் பார்த்திடுவான். அவளோ எந்தவிதமான பொருளையும் கண் வாயிலாகக் காட்டாமல் அவனைச் சாதாரணமாகப் பார்த்துவிட்டுப் போவாள்.

அவளுக்கு, அவன் மீது அளவு கடந்த ஆசைதான். எனினும் அருகே தாய் இருக்கிறாள் என்பதற்காக அவள் விழிமூலம் குறிப்பை உணர்த்துவதற்கும் அஞ்சி நடுங்கினாள்.

அன்றைக்கு என்றுமில்லாத துணிவை வரவழைத்துக்கொண்டு, அமுதன் அவளுடைய தாயாரிடம் பேச்சுக் கொடுத்தான். "இன்றைக்கு வியாபாரமெல்லாம் எப்படி?" என்று கேட்டான். அமுதவல்லியின் தாய், பேச ஆரம்பித்தால் நிறுத்துவது கடினம். மழை பொழிவது போலத்தான் இருக்கும். அவள் என்ன பதில் சொல்கிறாள் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் அமுதன், அமுதவல்லியின் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.

நல்லவேளையாகத் தாயின் பின்புறமாக நின்று கொண்டிருந்த அமுதவல்லிக்கு, அவனைத் தன் நீளவிழிகளால் செல்லமாகக் கண்டித்து, தாயின் முகத்தைப் பார்த்துப் பேசு என்று ஊமை மொழியில் உத்தரவிட வாய்ப்புக் கிடைத்தது. பேசிக்கொண்டே அமுதவல்லியின் தாய் நடந்தாள். அமுதவல்லியும் அவனைத் திரும்பிப் பார்த்து, கண்ணால் கள்ளக் குறிப்பொன்றைக் காட்டிவிட்டுத் தாயைப் பின்தொடர்ந்தாள்.


மேய்ப்போன் பின்னால் வருகிறான் என்ற உணர்வோடு, மாடுகள் வெகு தொலைவு சென்றுவிட்டன. அமுதன் மட்டும் அசைவற்று நின்றான். அவன் நாடி நரம்புகளில் சூடு பரவியது, மின்னல் வேகத்தில்! அவன் முகத்தில் நம்பிக்கையொளி!

"அடாடா! என் காதலி, என்னை நோக்கிச் செய்துவிட்டு சென்ற அந்தக் கள்ளமான குறிப்பில் என் காதல் நோயைத் தீர்க்கும் மருந்தல்லவா குழைக்கப்பட்டிருக்கிறது! இனி என் பிணி அகலும்."

என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு மகிழ்ச்சியடைகிறான். அதனை விளக்கவே இந்தக் குறள்:

"செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன்று உடைத்து."

அதிகாரம் - 128 - குறிப்பறிவுறுத்தல்; பாடல் - 1275



'பே'தைமை' என்ற சொல்லையோ, அல்லது 'பேதை' என்ற சொல்லையோ நாம் அடிக்கடிப் பயன்படுத்துகிறோம். சில சொற்களைப் பயன்படுத்தும்போது, அதற்குரிய ஒழுங்கான பொருள் என்ன என்பதைப்பற்றி நாம் ஆராய்ந்து கொண்டிருப்பதில்லை. வழக்கத்தில் நீண்ட காலமாக வந்துவிட்ட ஒரு சொல் என்ற அளவில், அதன் பொருளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆர்வம் நமக்கு ஏற்படுவதில்லை. ஒருவன்மீது சினம் கொள்கிறபோது, "அவன் கிடக்கிறான் பேதை!" என்று கூறுகிறோம். அந்தப் பேதை, பேதமை என்ற சொற்களுக்கு வள்ளுவர் வடித்தளிக்கும் குறட்பாக்களின் வாயிலாக எத்துணை தெளிந்த பொருள் கிடைக்கிறது!

தனக்குத் தீமையானவைகளைக் கைக்கொண்டு, நன்மையானவைகளைக் கைவிடுவதற்குப் பெயர்தான் 'பேதமை' எனச் சுட்டிக் காட்டுகிறார் அவர். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், நல்லது கெட்டது தெரியாத தன்மை! அதனால் நல்ல மனம் படைத்தவன் என்றும் கூறிவிட முடியாது. ஒழுக்கத்திற்குப் புறம்பானவற்றைச் செய்வதிலேயே தனி விருப்பமுடையவராகப் பேதைகள் இருப்பார்கள் என்பதும் வள்ளுவர் கருத்தாகும். இதோ பேதையைப்பற்றி ஓர் அழகான உவமையை நம் முன் வைக்கிறார் பொய்யாமொழிப் புலவர்.

தெருவில் ஒருவன் பித்துப் பிடித்து உளறிக்கொண்டிருக்கிறான். சிறுவர்கள், கூட்டம் கூட்டமாக அவனைச் சூழ்ந்துகொண்டு கேலிமொழி பேசுகிறார்கள். அவன், "நான்தான் இந்த ஊருக்கே மன்னன்! எங்கே என் செங்கோல்? கூப்பிடு மந்திரியை! கோட்டைச் சுவருக்கு, இன்னும் ஏன் சுண்ணாம்பு அடிக்கவில்லை? தளபதி என்ன செய்கிறார்? போர்வாளுக்குச் சாணை பிடித்துக் கொண்டிருக்கிறாரா? எல்லோரையும்

பிடித்துத் தொழுவத்தில் கட்டிப் பருத்திக் கொட்டைப் பிண்ணாக்கு போடுங்கள்! ஏது எனக்கு அரண்மனை? நான் தான் ஆகாயத்தில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறேனே!" என்று உளறியவண்ணம் கூத்தாடுகிறான். அப்போது ஒரு குறும்புக்கார வாலிபன் கையில் ஒரு குவளையுடன் அவனை நெருங்கி, "மன்னாதி மன்னரே! நீங்கள் மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்கள். கொஞ்சம் பால் சாப்பிடுங்கள்" என்று பணிவுடன் கேட்கிறான். பைத்தியக்காரன் அந்தக் குவளையை வாங்கி அதில் உள்ளதை மளமளவென்று குடித்து முடிக்கிறான். வாலிபன் சொன்னது என்னவோ பால்தான்! ஆனால் குவளையில் இருந்தது மரப்பால்! ஏற்கனவே பைத்தியம் - அத்துடன் கள்ளும் குடித்துவிட்டால் எப்படியிருக்கும்? ஏற்கனவே ஏறியுள்ள பித்தமுடன் இந்தப் பித்த மும் துணை சேர்ந்து கொள்கிறது. அந்த மனிதனை யாருடன் ஒப்பிடுகிறார் வள்ளுவர்?

பேதையொருவனுக்கு அவன் கையில் ஒரு பொருள் கிடைக்கிறதாம். அந்தப் பொருளைப் பெற்றதும் அவன் நிலைமை எப்படி ஆகிவிடுகிறது தெரியுமா? பித்துப்பிடித்த ஒருவன், கள்ளையும் குடித்து விட்டதுபோல் ஆகிவிடுகிறதாம்!

இந்த விளக்கத்திற்கு இதோ ஒரு குறள்:

"மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்."

இவ்வளவு இழிவுகொண்ட பேதை ஒருவனிடம் கொள்ளுகின்ற நட்பு, மிகவும் இனிமையானது என்று சிறப்பிக்கிறார் குறளார்.

விந்தையாக இருக்கிறதல்லவா? நல்லது கெட்டது தெரியாதவன், ஒழுக்க நெறியிற் செல்லாதவன், ஒரு பொருள் கையில் கிடைத்தால் - பித்தன் கள்ளுக்குடித்ததுபோல ஆகிவிடக்கூடியவன்; அவனுடைய நட்பு மிகவும் இனிமையுடையது என்கிறாரே? இது என்ன வேடிக்கை!

"பெரிதினிது பேதையார் கேண்மை...."- ஆமாம்! பேதைகளின் நட்பு பெரிதும் இனிமையுடையதாம்.

ஏன்? எப்படி?

".....பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல்."

அந்த நட்பைப் பிரியும்போது, துன்பம் எதுவும் ஏற்படுவதில்லை. பேதையின் நட்பு, பட்டுப் போய்விட்டால் - வேதனைக்கு ஆளாவதில்லை நெஞ்சம்! எனவே பேதையின் நட்பு இனிமையானது! அறிவாளர்கள், ஆற்றலாளர்கள், நல்லவர்கள், வல்லவர்களின் நட்புக்குக் கேடு ஏற்பட்டால் அது உள்ளத்தை வருத்தும். பேதைகளின் நட்பு ஒழிந்தால் உள்ளத்திற்குக் கலக்கமில்லை. ஆகையால் பேதையின் நட்புச் சிறந்தது.

எவ்வளவு மகத்தான உண்மையை, மறைமுகமான நகைச்சுவை ஓவியமாக இந்தக் குறள் வரைந்து காட்டுகிறது என்பதை எண்ணிட எண்ணிட இதயம் மகிழ்ச்சியால் விம்முகிறது அல்லவா!

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல்."

அதிகாரம் - 84 - பேதைமை; பாடல்கள் - 838, 839



"**து**ம்மல்" பற்றி வள்ளுவர் மூன்று நான்கு இடங்களில் குறிப்பிடுகிறார், குறளின் மூன்றாவது பாலில்!

அன்பால் பிணைக்கப்பட்ட நெருங்கிய உறவினர் நினைக்கிற காரணத்தால், அவ்வாறு நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல் வரும் என்று கூறுவது, அக்காலத்தில் நம்பிக்கையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இன்றும் அப்படி நம்பிக்கையுடையோர் இருக்கின்றனர். அந்த நம்பிக்கையை அடிப்படையாக வைத்து வள்ளுவர் தீட்டியுள்ள அற்புதக் குறட்பாக்களுக்கு ஈடு இணைதான் உண்டோ?

கட்டிலில் தழுவிய நிலையில் இருந்த காதலன் தும்முகிறான். தும்மல் ஒலி கேட்டதும் காதலி, "நூறாண்டு வாழ்க!" என் வாழ்த்தி விடுகிறாள். வாழ்த்திய பிறகு, அவளுக்குத் திடீரெனச் சந்தேகம் மின்னலிடுகிறது! "யார் உம்மை இந்நேரத்தில் நினைத்ததால் தும்மினீர்? யார் அவள்?" என்று கேட்டு, தன் வாழ்த்தையும் விட்டுவிட்டு அழத்தொடங்கினாள் அந்தக் காதலியென்று, ஒரு காட்சியை அமைத்துக் காட்டுகிற வள்ளுவர், மேலும் சில சுவையான காட்சிகளையும் நம்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார்.

அழகியொருத்தி, தன் ஆளனைப் பிரிந்த வேதனையில் நிலா முற்றத்தில் அமர்ந்திருக்கிறாள். 'அவருக்குள்ள ஓயாத பணிகளுக்கிடையே அவர் தன்னை நினைப்பாரா' என்று அவள் ஏங்குகிறாள்! அந்த ஏக்கம் வினாக்குறியாக விரிவடைகிறது! அப்போது அவளுக்குத் தும்மல் வருவது போன்ற ஓர் அறிகுறி! ஆம்;

அவள் தும்மிடப் போகிறாள். ஆனால், வந்த தும்மல் அப்படியே அடங்கிவிட்டது. அவளால் அந்தத் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

'அய்யோ! தும்மல் வருவதுபோல் அறிகுறி காட்டி, வராமல் அடங்கிப் போய்விட்டதே! இதற்கு என்ன காரணம்? ஒருவேளை என் காதலர் என்னை நினைப்பவர்போல இருந்து நினைக்காமல் விட்டுவிட்டாரோ?'

இப்படி எண்ணிக் கலங்குகிறாள் அந்த எழிலரசி!

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்."

சினைத்தல் என்றால், அரும்புதல் எனப் பொருள்! தும்மல், அரும்பிய நிலையிலேயே கெட்டுவிட்டதாம், காதலன் நினைத்த நிலையிலேயே அந்த நினைப்பை மறந்துவிட்டதால்!

இன்னொரு காதற்கூடம்! அங்கே காதலனுக்கு ஓர் அச்சம்! என்ன அது? அவனுக்குத் தும்மல் வருகிறது. அதனை எப்படியாவது அடக்கிக் கொள்ள வேண்டுமென்று முயற்சி செய்கிறான். தும்மிவிட்டால், காதலி உடனே ஐயுற்றுக் கேட்பாள், யார் உம்மை நினைத்தது? என்று. அதன் தொடர்பாக ஊடல் ஏற்படக்கூடும் - எதற்காக இந்த வம்பு என்று அவன் தும்மலை அடக்கிக் கொள்ளத் தவிக்கிறான். அதைப் பார்த்துப் புரிந்து கொள்கிறாள் அந்தப் பாவை! "ஏன் தும்மலை அடக்குகின்றீர்? உம்மை ஒருத்தி நினைப்பதை எனக்குத் தெரியாமல் மறைக்கின்றீரோ?" எனக் கேட்டு அழத் தொடங்கி விடுகின்றாள்.

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று."

அந்தப் பச்சைக் கிளியின் சந்தேகத்தைப் போக்க அவன் என்ன பாடுபட்டிருப்பானோ?


இன்னொரு இளம்புறா எப்படி வருந்துகிறது என்பதற்கு, தும்மலை உவமையாகக் கொண்டு, இதோ மற்றொரு இனிமைக் குறள்:

"நான் என்னடி செய்வேன் தோழி! அவர்பால் எனக்கேற்பட்டுள்ள காம உணர்வை எனக்குள்ளாகவே மறைத்துக் கொள்வதற்கு எப்படியெல்லாமோ முயலுகிறேன். ஆனால் அது என் கருத்தின்படி மறையாமல், தும்மலைப் போல், தானே வெளிப்பட்டு விடுகிறது."

காம உணர்வு மறைக்கமுடியாத ஒன்று என்பதற்கு 'தும்மல்' உவமையை எத்துணைப் பொருத்தமாகத் தீட்டிக் காட்டுகிறார் - அந்தத் தேன் தமிழ்ப் புலவர் ஏறு!

"மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்."

அதிகாரம் - 121 - நினைந்தவர் புலம்பல்; பாடல் - 1203
அதிகாரம் - 132 - புலவி நுணுக்கம்; பாடல் -1318
அதிகாரம் - 126 - நிறையழிதல்; பாடல் - 1253



திருக்குறளின் திருக்கோலம்

ஒருநாள் மாலைப்பொழுது! ஏரிக்கரை ஓரமாக வள்ளுவர் மெல்ல நடந்து சென்று கொண்டிருந்தார். ஆழ்ந்த சிந்தனை. சற்று நிற்பார். மீண்டும் நடப்பார். அவரைக் கடந்து இருவர் ஏதோ வாயாடிக்கொண்டு போயினர்.

"யாரப்பா இந்த ஆள்? எப்போது பார்த்தாலும் ஏரிக்கரை, குளக்கரை, மலைப்பாறை என்று அலைந்து கொண்டேயிருக்கிறான். வானைப் பார்க்கிறான். பூமியைப் பார்க்கிறான். நெற்றியைச் சுருக்குகிறான். யார் இது?"

இப்படி ஒருவன் கேட்க, மற்றவன் ஏளனமாக விளக்கமளித்தான்.

"வள்ளுவனாம்! அதிலும் சாதாரண வள்ளுவன் இல்லையாம்! திருவள்ளுவனாம்! சிந்திக்கிறானாம்! அறநூல் எழுதுகிறானாம் கிறுக்கன்! எத்தனையோ பித்தர்களில் இவன் ஒரு பித்தன்!"

சிந்தனை கலைந்தது வள்ளுவப் பெரியாருக்கு! செவியில் விழுந்தது அவர்கள் வாரியிறைத்த வசைமொழி! இழிமொழி! அவர்களைத் திரும்பிப் பார்த்தார். அவர்கள் வள்ளுவரை நோக்கி ஏகடியம் செய்துகொண்டே போய்விட்டனர். ஏரியோரத்தில் சிலர் கழனி வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தனர் ஒரு பகுதியில்! கழனியில் உழுது கொண்டிருந்தனர் ஒரு பகுதியில்! கிணறு தோண்டிக் கொண்டிருந்தனர் மற்றொரு பகுதியில்! அனைத்தையும் பார்த்த வள்ளுவருக்கு ஓர் அழகான உவமைக் குறள் கிடைத்தது.

"தன்னை வெட்டியும் தோண்டியும் புண்படுத்துகிறவரையும் நிலம் பொறுத்துக்கொண்டு அவர்களையும் தன்மீதே தாங்கி நிற்கிறதல்லவா? அதைப் போலத்தான் நம்மை இகழ்ந்து பேசுகின்றவர்களையும் பொறுத்துக் கொள்வது நம் தலையாய பண்பாகும்." என்று தனக்குத்தானே வள்ளுவர் சொல்லிக் கொண்டார். குறள் பிறந்துவிட்டது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

நெஞ்சில் இந்தக் குறளை எழுதிக்கொண்ட வள்ளுவர், நிலமகளைப் பார்த்து ஒரு கேள்விக் கணையைத் தொடுத்தார்.

"நிலமகளே, உன்னைத் துன்புறுத்துவோரை நீ பொறுத்துத் தாங்கிக் கொள்கிறாய்! உன்னைப் பார்த்து நானும், என்னை என் எதிரில் இகழ்ந்து பேசியோரைப் பொறுத்துக் கொண்டேன். ஆனால் எனக்கு ஓர் ஐயப்பாடு! அதனை நிலமகளே, நீ எனக்கு விளக்குவாயாக! நேரில் பழிச்சொல் கூறுவோர் ஒருபுறமிருக்க, ஒருவர் நேரில் இல்லாதபோது அவர்மீது பழிச்சொல் கூறுவதைச் சிலர் தங்கள் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்களே, அத்தகையோர் உடல் பாரத்தையும் சுமப்பதுதான் உனக்கு அறம் என்று நீ கருதிக் கொண்டிருக்கிறாயா?"

வள்ளுவர் கேட்ட இந்தக் கேள்வியும் ஒரு குறளாக வடிவெடுத்துவிடுகிறது.

"அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை."

அதிகாரம் - 16 - பொறையுடைமை; பாடல் - 151

அதிகாரம் - 19 - புறங்கூறாமை; பாடல் - 189



மருத்துவத் துறையில் பட்டம் பெற்றவள் மரகதம். அவள் அலுவல் பார்க்கும் மருத்துவமனையில் நோயாளிகள் அனைவருமே, அவள் கையால் மருந்து வாங்கிக் குடித்தால் நோய் தீரும் என்று கருதுவார்கள்.

கொஞ்ச வயதுடையாள், குறையொன்றிலா அழகுடையாள், அவள் மருத்துவ மனைக்குள் நுழைந்துவிட்டாலே ஒரு புதிய பரபரப்பு ஏற்படுவது வாடிக்கை. படுக்கையில் இருக்கும் ஒவ்வொரு நோயாளியையும் அருகே சென்று கவனிப்பாள். ஒரு நோயாளியைத் தலைவலி படாதபாடு படுத்திக்கொண்டிருக்கும்; அந்த வலியை உடனடியாக நிறுத்த மருந்தொன்று கொடுக்கச் சொல்வாள்.

இன்னொருவன் கடுமையான காய்ச்சலால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பான். காய்ச்சல் எவ்வளவு என அளக்கும் கருவிகொண்டு ஆராய்ந்து, அதனை மெல்ல மெல்லக் குறைத்து அவன் நலிவு தீர்ப்பது எப்படி என்பதற்கான குறிப்புக்களை யும், கொடுக்கவேண்டிய மருந்துகளையும் உதவியாளர்களிடம் எழுதிக் கொடுப்பாள்.

மின்னல் வேகத்தில் வயிற்றின் அடிப்புறத்தில் தாக்கிய வலியால் துடித்துப் போன ஒரு பெண், "அம்மா! என்னால் தாங்க முடியவில்லை. சாவதற்கு ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்கள்" என்று கதறி அழுவாள். அப்போதும் மரகதம் புன்னகை மலர அவளைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறி - உடனடியாக அவளுக்கு அடிவயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்து குணப்படுத்துவாள்.

"என் பெண், இருந்தாற்போல் இருந்து ஏதேதோ பிதற்றுகிறாள். பேய்ச் சேட்டை போல் தெரிகிறது. உங்களிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா அம்மா? மந்திரவாதியோ

வெளியூர் போயிருக்கிறார்!" என்று ஒரு வயதான தாயார், தன் மகளை அழைத்துக் கொண்டு மரகதத்திடம் வருவாள். மரகதம், அந்த முதியவள் அறியாமையை எண்ணி வருந்துவாள். இப்படி ஒரு மூடநம்பிக்கை தாய்க் குலத்தைப் பிடித்து ஆட்டுகிறதே யென்று கவலைப்படுவாள்.

"பேயுமில்லை - பிசாசுமில்லை! ஏதோ அதிர்ச்சியில் மூளை கலங்கிப் போயிருக் கிறது. நாலைந்து நாட்கள் மருத்துவமனையில் என் கண்காணிப்பிலேயே இருக்கட்டும். அவளுக்கு ஓய்வும் அமைதியும் தூக்கமும் தேவை! அத்துடன் மருந்துகளும் தர வேண்டும்" என விளக்கமளித்து, அந்தப் பெண்ணின் பிதற்றல் பிணியைப் போக்கிடுவாள்.

இப்படிக் காலை முதல் இரவு வரையில் விதவிதமான நோயாளிகள்! எந்த நோயாளி வந்தாலும் அலுத்துக் கொள்ளாமல், அந்த நோயைப் போக்கிவிடலாம் என்ற துணிவுடனும் நம்பிக்கையுடனும் அவள் செயல்பட்ட காரணத்தால், அவளது திறமை, ஊரெங்கும் புகழப் பெற்றது. ஆனால் ஊரார் நோயை எல்லாம் தீர்க்கக்கூடிய முறைகளையும் மருந்துகளையும் தெரிந்து வைத்திருந்த மரகதத்திற்கு, தனக்குற்ற நோயைத் தீர்த்துக்கொள்ளத்தான் மருந்து தெரியவில்லை. அந்த நோய், மாபெரும் மருத்துவ மேதைகள் கண்டு பிடித்த மாத்திரைகளால் தீரக்கூடியதல்ல!

அந்த அழகிய மரகதத்திற்கு ஓர் அழகிய காதலன் உண்டு! அவனும் மருத்துவத்துறை யில் வல்லவன்தான்! அவன், மருத்துவத்துறை அறிவைப் பெருக்கிக்கொள்ள அயல் நாடு சென்று ஆறு கிழமைகள் ஓடிவிட்டன. இன்னும் மூன்று திங்கள் கழித்தே அவன் தாயகம் திரும்புவான்.

காலை முதல் நூற்றுக்கணக்கானவர்களின் உடல் நோய் தீர்க்கும் மரகதத்திற்கு, இரவு நேரத்தில் அவளுக்குத் தொல்லைகொடுக்கும் மனநோயைத் தீர்க்க மருந்து கிடைக்கவில்லை!

மருந்து, ஆயிரக்கணக்கான கல்தொலைவில் அல்லவா இருக்கிறது! அவனைப் பிரிந்து தன்னந்தனியாகப் படுக்கையில் புரளும் மரகதம், அவளருகே கிடக்கும் நீண்ட தலையணையை அழுத்திப் பிடித்து அணைத்தவாறு, அவளாகவே தனக்குத் தானே பேசிக்கொள்கிறாள்.


"நெஞ்சே! காதலால் உருவாகி என்னைத் தொல்லைப்படுத்தும் இந்தத் துன்ப நோயைத் தீர்க்கக்கூடிய மருந்தொன்றை, நீயாவது நினைத்துப் பார்த்துச் சொல்ல மாட்டாயா!"

இவ்வாறு ஏக்கத்தோடு தன் நெஞ்சையே கேட்கிறாள், மருந்தொன்று கண்டு பிடித்துக்கொடு என்று!

எல்லா நோய்க்கும் மருந்து அளிக்கும் அவளுக்குத் தனக்குற்ற காதல் நோய்க்கு, காதலன் வருகையைத்தவிர வேறு மருந்து இல்லை என்று தெரியும்; எனினும், நெஞ்சிடம் கெஞ்சுகிறாள்! அதை ஓவியமாகத்தீட்டுவதுதான் இந்தக் குறள்:

"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து."

அதிகாரம் - 125 - நெஞ்சொடு கிளத்தல்; பாடல் - 1241



குன்றின்மேல் அசைந்தாடும் முகிற்புகை போன்ற மேலாடையை, வேண்டு மென்றே நழுவ விட்டுக் கொண்டு, இடைக்குமேல் இருக்கும் தாமரைமொக்கு வேண்டுமா - அல்லது மலர்ந்த செந்தாமரை முகத்தை முத்தங்களால் ஈரப்படுத்த

வேண்டுமா - எதற்கும் தயார் - என்று காமக்களத்தில் அறைகூவல் விடுகின்ற அறைப்பாவை அவள். ஆம்; பள்ளியறைப் பாவை! இன்ப வெறிக் கூத்தாடும் ஆடவர்க்கு ஆடலரங்கம்தான் இந்த உடல் என்று 'ஏலம்' போடும் ஏந்திழையாள். சந்தனத்தைச் சேறாக்கி மிதித்து, அதில் அத்தரும் புனுகும் சேர்த்துக் கட்டப்பட்ட அழகு மணிமண்டபம்தான் அந்த மங்கை. அவள் அங்கமனைத்தும் காமனின் கேளிக்கைக் கூடம். கன்னல் மொழிக்காரியின் மின்னலிடையைக் கரம் நீட்டிப் பிடிக்க முயலுகின்றான் கட்டழகுக் காளை. காதல் சுவையைக் கடையிலே வாங்க வந்த ஆளைக் கடைக்கண்ணால் மாய்த்தவாறு, "என் புன்னகையைக் காண்பதற்கே பொன் குவியல் தரவேண்டும். கண்ணா; முன்னழகு, பின்னழகு, என் அழகு முழுவதுமே சுவைப்பதற்கு மன்பதையையே தந்தாலும் ஈடாகுமா மன்னா?"- எனக் கேட்டுப் பொருள் முழுவதும் பெற்ற பின்னர்; இன்ப அருள் காட்ட இழுத்துப் போட்டாள் கட்டில் மீது! ஆடை எதற்கென்று அவன் தாடையிலே இதழ் பதித்தவாறு ஆரணங்கு கேட்டதோடு விடவில்லை; செயல்பட்டாள்; தழுவினாள்; சிறிது நழுவினாள்; தவித்திட்டான்; தணித்திட்டாள் அவன் தணற்சூடு. 'உயிரே!' என்றாள். அந்த அழைப்பில் உயிர்தான் இல்லை. 'கண்ணே!' என்றாள்; அந்தச் சொல்லில் ஒளிதான் இல்லை. 'அன்பே' என்றாள்; அந்த மொழியில் மெய்தான் இல்லை! மெய்யிரண்டும் விலங்குகளின் உணர்ச்சி விளையாட்டில் திளைத்திடும் செயலுக்குப் பெயரோ இன்பம்! இல்லை இல்லை! இல்லவே இல்லை!!

அலைபோல நெளிகின்ற உடலை, இரவு விலைபோக வளர்ப்பவள் அவள். அவள் ஆயிரத்தைச் சொல்லிக் கொஞ்சினாலும் குலவினாலும் கூடல் இன்பக்கலை வழங்கும் கூடாரமாய் விளங்கினாலும் அதனை உண்மை இன்ப உணர்வாக ஒப்புதற்கு வள்ளுவர் ஒருபோதும் இணங்கவில்லை. இருட்டில் ஒரு பிணத்தை அணைத்துக் கிடப்பதற்கும் வரைவின் மகளிராம் விலைமாதருடன் கூடுதற்கும் வேறுபாடில்லை என இகழ்ந்துரைக்கிறார்.

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று."

அதிகாரம் - 92 - வரைவின் மகளிர்; பாடல் - 913





விழாக் காணச் சென்றிருந்தேன். வெள்ளம்போல் கூடியிருந்த மக்களிடையே என் தாயின் துணையுடன் விழா நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தேன். வண்ணவண்ணத் துணிகளைத் தோளில் சுமந்து விற்பனை செய்பவர்கள், பெண்கள் நிறைந்திருந்த பகுதிகளையே சுற்றிச்சுற்றி வந்தனர். பச்சை வண்ணச் சேலையொன்றின்மீது என்

பார்வை பட்டதை, அன்னை புரிந்து கொண்டாள். அதை விலை பேசி வாங்கி என் கையில் கொடுத்தாள்.

புலிகளைப்போல், பூதங்களைப்போல் வேடமிட்டோர் நடத்திய ஆட்டங் கள் - பொங்கலோ பொங்கல் என்று வாழ்த்துக் கூவியவாறு கரும்பு விற்கும் சிறுவர்களின் பாட்டுக்கள் - கொட்டு முழக்குகள் - விழாக்காண வந்திருந்தோர் அனைவரையும் இன்பத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்தன. வானவில்லை வடிவில் சிறியதாக்கி ஓராயிரத்தை அடுக்கி வைத்திருந்ததுபோல் ஒரு வளையல் கடை! வளையல் போட்டுக் கொள்கிறாயா என்று அன்னை ஆசையுடன் கேட் டாள். "வேண்டாம் அம்மா" என்று கூறிவிட்டேன். அதுவரையில் வளையல்கள் மீது மொய்த்திருந்த என் விழிகள் திடீரென வளையல் கடைக்காரன் மீது திரும்பின.

வளையல் வேண்டாமெனத் தாயிடம் சொல்லிவிட்ட நான், அந்தக் கடையின் முகப்பைவிட்டு நகரவில்லை. ஆம், அவன் அழகு என்னை நகரவிடவில்லை. அந்த வளையல்கார வாலிபன், குழந்தைப் பருவத்தில் என்னோடு சேர்ந்து வீதிகளில் விளையாடிய ஊர்ச் சிறுவர்களில் ஒருவன். பிறகு அவன் குடும்பம் நகர்ப்புறத்திற்குச் சென்றுவிட்டது. இப்போது அவன் சிலப்பதிகாரத்துக் கோவலன் போல் எழிற்சிலையென என் எதிரே தோன்றிவிட்டானே! என் செய்வது, ஒருவேளை அவனுக்கு ஒரு கண்ணகி உண்டோ என்னவோ; அதைப் பற்றியெல்லாம் ஆராயாமல் நான் மாதவியாக மயங்கி நின்றேன்.

அவனும் என்னை விழிகளால் தழுவினான். என் உடற்கட்டின் ஒவ்வொரு பகுதியையும் அவன் விழிகள் அளந்து கொண்டிருந்தன. என் விழிகளோ அவனை விடுத்து விழாக்காண மறுத்துவிட்டன. தாய் என் தோளை அழுத்தி, என்னை அங்கிருந்து அகற்றி வேறுபக்கம் இழுத்துச் சென்றாள். எத்தனையோ வகை வகையான விழா நிகழ்ச்சிகள்! எதிலும் இதயம் ஈடுபடவில்லை. அந்த வளையல் கடையையே என் நெஞ்சு வட்டமிட்டுக் கொண்டிருந்தது. விழா முடிந்து வீடு திரும்பியாகிவிட்டது. படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறேன், வயிற்றுக்கு ஒரு பருக்கையும் தேவையில்லையென்று கூறிவிட்டு!


வளையல்கடை வடிவழகன், என் மனத்தில் ஓவியமாக ஆகிவிட்டான். என்னையறியாமல் என் கண்கள் அழுகின்றன.

"இது என்ன வேடிக்கை! இந்தப் பொல்லாத கண்கள் அவனைக் காட்டிய காரணத்தால்தான், தீராத காதல் நோய் எனக்கு ஏற்பட்டுள்ளது! அப்படியொரு நோய்க்கு என்னை ஆளாக்கிவிட்ட இந்தக் கண்கள் இப்போது எதற்காக அழுகின்றன?"

இப்படி விழிகளை நோக்கி வினாக்கணை தொடுக்கின்ற ஓர் இளமங்கையின் ஏக்கப் பெருமூச்சே இந்த இன்பம் பொங்கும் குறளோவியம்.

"கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது."

அதிகாரம் - 118 - கண்விதுப்பழிதல்; பாடல் - 1171



அன்புமணி, இன்பமணி இருவரும் பிஞ்சுப்பருவத்து நண்பர்கள். அவர்கள் பிறந்த ஊரில் கல்வி பயிலப் பள்ளியொன்று இல்லாமையால், நாள் தோறும் நாலு கல் தொலைவு நடந்துசென்று, அயலூரில் படித்துத் திரும்புவது வாடிக்கை.

இன்பமணி, செல்வம் கொழிக்கும் தந்தைக்கு ஒரே மகன்! அன்புமணியும் வீட்டுக்கு ஒரே பிள்ளை; ஆனால், ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவன்!

ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் முடிவுற்றுத் தங்களூருக்குத் திரும்பும் போது வழியில் உள்ள சிற்றுண்டிச்சாலை சென்று முறுக்கோ, அப்பமோ தின்பது அந்த நண்பர்களின் வாடிக்கை! ஆனால், ஒரு நாளாவது அவர்கள் உண்டதற்குரிய பணத்தை இன்பமணி, கடைக்காரனுக்குத் தந்ததில்லை. எல்லா நாட்களுமே அன்புமணிதான் பண்டங்களுக்குரிய பணத்தை இன்பமணிக்கும் சேர்த்துக் கொடுத்து வந்தான். இன்பமணி அவ்வளவு செட்டானவன்.

அவர்தம் பள்ளிப்பருவமும் துள்ளி விளையாடிய நாட்களும் பறந்தோடின. வேலை வாய்ப்புத் தேடி அன்புமணி தலைநகர்ப் பக்கம் சென்று விட்டான். இன்பமணியோ தந்தை தேடிவைத்த சொத்தினைக் கொண்டு பெருந்தொழில் ஒன்றினை நடத்த நாட்டின் துறைமுகப்பட்டினத்திற்குக் குடியேறிவிட்டான்.

ஒருநாள், வெளிநாடு செல்லும் கப்பல்களில், தனது தொழிற்சாலையில் உற்பத்தியான பொருட்களையெல்லாம் ஏற்றி அனுப்பிவிட்டு, மகிழ்வுடன் இல்லம் திரும்பிக் கொண்டிருந்த இன்பமணி, திடீரெனத் தன் இளமைக்கால நண்பன் அன்புமணியைக்

கடைத் தெருவில் சந்தித்தான், "ஏ, அப்பா! எவ்வளவு காலத்திற்குப் பிறகு ஒருவரையொருவர் பார்க்கிறோம்" என்று கூறியவாறு, இருவரும் தழுவிக் கொண்டனர்.

அன்புமணி, தலைநகரில் காவல்துறை தலைமையகத்தில் அலுவலில் சேர்ந்து வாழ்க்கையை நகர்த்திக்கொண்டு கடமையாற்றுவதாகச் சொன்னான். இன்பமணி, துறைமுகப் பட்டினத்தில் தொடங்கிய தொழிலின் காரணமாகச் செல்வச் சீமானாக விளங்குவதாக விவரித்தான். இருவரும் கடைத்தெருவின் ஓரப்பாதையில் நின்றுகொண்டே ஒருவரையொருவர் நலம் விசாரித்துக் கொண்டனர்.

ஒரு முக்கிய அலுவலின் நிமித்தம் துறைமுகப்பட்டினத்திற்கு வந்ததாகவும் அலுவல் முடிந்து திரும்புவதற்குமுன்பு இன்பமணியின் வீட்டுக்கு வருவதாகவும் கூறி, இல்லத்து முகவரியும் பெற்றுக்கொண்டு, அன்புமணி தன் பழைய நண்பனைப் பிரிந்து சென்றான். சிரிப்புத் தழைத்த முகத்துடன் அன்புமணிக்கு விடைகொடுத்துவிட்டு, இன்பமணி இல்லம் திரும்பினான்.

அன்றைய தொழிற்சாலைப் பணிகள் பற்றிய விசாரணைகளையெல்லாம் முடித்துவிட்டு, இனிய குரலில் இல்லத்தரசியை அழைத்து உணவு பரிமாறச் சொன்னான், இன்பமணி!

அவளும் இலைபோட்டுப் பரிமாறி, கணவனை உணவருந்த அழைத்தாள்.

அப்போது "இன்பமணீ!" என்று கூப்பிட்டுக்கொண்டே அன்புமணி உள்ளே நுழைந்தான். "வாப்பா வா!" என்றான் இன்பமணி, சற்று இழுத்தாற் போன்ற குரலில்!

"சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறேன், எனக்கும் ஓர் இலை போடச் சொல்லு!" என்று புன்னகை சிந்தப் புகன்றான் அன்புமணி!

அந்தச் சொற்கள் அன்புமணியின் நாவிலிருந்து வெளிப்பட்டவுடனே, இன்பமணியின் முகம் அவனையுமறியாமல் மாறியது! விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கும் பழக்கத்தையே அறியாத அவனுடைய முகத்தில் அவனாலேயே தடுத்துக்கொள்ள முடியாத ஒரு வேறுபாடு தோன்றியதைக் கண்ட அன்புமணியின் உள்ளம், தணலில் விழுந்த தளிர் என வாடிவிட்டது. எப்படியும், உடனடியாக அங்கிருந்து திரும்பிவிட வேண்டுமென்று முடிவு செய்துகொண்டான்.

"அடேடே! மறந்துவிட்டேன். வருகிற வழியில் நான் ஒரு நண்பரைப் பார்ப்ப தாகச் சொல்லியிருந்தேன். அவர் வேறு எங்கேனும் போய் விடுவதற்குள் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன். எனக்காகக் காத்திராதே! நீ உணவருந்து!" என்று சொல்லிக் கொண்டே, பதிலுக்குக் காத்திராமல் அன்புமணி அங்கிருந்து வேகமாக வெளியேறினான்.

இன்பமணி, தன் துணைவியின் முகத்தைப் பார்த்தான். அவளுக்கு, விருந்தோம்பல் பிடிக்காத தன் கணவனைப்பற்றி நன்கு தெரியும். அவள், கணவனைப் பார்த்து அடக்க உணர்வோடும் அதே நேரத்தில் அவனுக்கு அறிவில் படுமாறும் ஒரு குறளைச் சொன்னாள். அந்தக் குறள் இதோ!

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."

அதாவது, அனிச்ச மலரை மோந்தால் உடனே வாடிவிடும்! அதைப் போலவே முக மலர்ச்சியின்றி விருந்தினரை வரவேற்றாலும் அவர்கள் வாடிவிடுவார்கள் என்று பொருள்!

அதிகாரம் - 9 - விருந்தோம்பல்; பாடல் - 90



அழகு! அழகு! அழகு! அந்தக் கவிஞன் எங்கும் எதிலும் அழகைத்தான் காண்பான்; அழகைத்தான் வழிபடுவான்; அழகைத்தான் காதலிப்பான். அவன் கவிதைக் கற்பனையில், உலகத்து அழகையெல்லாம் ஒன்று திரட்டி எழிற்பாவை யொருத்தியை உருவாக்கிக் கொண்டான்.

செந்தாமரை மலர்களின் சேர்க்கை! முல்லை மொட்டுகளின் குவிப்பு! உதய வானத்தின் ஒளிமயம்! மாலைநேரத்து இளங்காற்றின் இன்ப சுகம்!

இத்தனையும் கூட்டிய இணையற்ற அழகுமங்கை அவன் மடியில் படுத்து, அவன் தரும் முத்தங்களைச் சுவைத்து மகிழ்ந்து, பதிலுக்குப் பதில் வழங்கிக் கொண்டிருந்தாள், கடற்கரையோரத்தில்!

கலவி மயக்கத்தில் ஏற்பட்ட களைப்பு நீக்கும் தேன்கலந்த பாலாக இருந்தது அவளுக்கு, அவன் தந்த இதழ்ப்பரிசு! மெல்ல இமை மூடினாள்; கண்ணயர்ந்தாள்.

அழகின் திருவுருவத்தின் கூந்தலை மெல்ல வருடியவாறு, வானத்தை நோக்கினான் கவிஞன். ஒளி மழை கொட்டிக்கொண்டிருந்த நிலவைக் காணவில்லை. எனினும் அவனைச் சுற்றி ஒளி நிறைந்தே இருந்தது. நிலவில்லாது ஒளி எவ்வாறு பொழிகிறது எனும் வியப்புடன் சுற்றும்முற்றும் பார்த்தான்.

நிலவு பெண்ணுருவங்கொண்டு அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. அவன் விழிகள் விரிந்தன. நிலவுப்பெண், தன்னை நோக்கி வருவதை உணர்ந்தான். அவள்,

அவனருகே வந்தே விட்டாள். வந்தவள், அவன் பக்கத்தில் மண்டியிட்டு அந்த வெள்ளி மணலில் உட்கார்ந்துகொண்டாள்.

"திங்களே! எங்கு வந்தாய்; என்ன வேண்டும்?" என்று கவிஞன் கேட்டான்.

"என் காதற் கவிஞனே! நானிருக்க, என் இதழில் தேனிருக்க - நீ இவளைக் காதலிப்பது முறைதானா?" எனச் சிணுங்கினாள் நிலவுப்பெண்!

கவிஞன், தன் மடியில் துயில்கொள்ளும் மங்கையின் முகத்தைப் பார்த்தான். பிறகு நிலவுப்பெண்ணின் முகத்தையும் பார்த்தான்.

"நிலவே! நீ பேரழகுப் பெட்டகம்தான். நான் மறுக்கவில்லை. ஆனால், நான் உன்னைவிட்டு இவளைக் காதலிப்பதற்குக் காரணம், உன் முகத்தில் உள்ள களங்கம் இவள் முகத்தில் இல்லை!

"அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து."

என வள்ளுவர் எழுதியுள்ளதை மறந்தனையோ! அந்த மறுவும் இல்லாத முகம் படைத்த இந்த உயிரோவியத்தை நான் காதலிப்பது கண்டு நீ வருந்துவதில் பயனில்லை" என்று, கவிஞன் இனிய குரலில் பதிலளித்தான்.

திங்களழகியோ கை கூப்பி தொழுதவாறு கண்கலங்க, அவனைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்டாள்.

"என் அன்புக் கவிஞனே! அப்படியானால் உன்னைக் காதலிக்கும் உரிமை கிடையாதா எனக்கு?"

கவிஞன் மெல்ல நகைத்து விடையளித்தான்.

"இதோ என் மடியில் தலைவைத்து உறங்கும் இந்த அழகியின் முகத்தைப் போல ஒளிவீச உன்னால் முடியுமானால், நீயும் இவளைப்போல என் காதலுக்கு உரிமை கொண்டாடும் தகுதியைப் பெறுவாய்! இதைக்கூட வள்ளுவர் குறளாகத் தீட்டியிருப்பதை நீ அறியமாட்டாயா?


இதோ அதையும் சொல்கிறேன் கேள்:

"மாதர் முகம்போல் ஒளிவிட வில்லையேல்
காதலை வாழி மதி"

களங்கமுள்ள முகம், கவிஞனின் காதலைப் பெற உரிமையில்லாத அளவுக்கு அவன் காதலியின் முகத்து ஒளியோடு போட்டியிட முடியாத முகம்!" இந்த விளக்கத்தைக் கேட்டதும் நிலவு மங்கை வெட்கத்தால் தலைகுனிந்து எழுந்தாள். அவனிடம் விடைபெற்றுக் கொள்ளாமலே விண்ணோக்கிப் பறந்து கருமுகில் திரைக்குள்ளே ஒளிந்துகொண்டு கண்ணீர் சிந்தினாள்.

மணாளன் மடிமீது தூங்கிய மங்கையின் முகத்தில் மழைத்துளிகள் விழுந்தன. எழுந்தாள்! எழுந்தான்! இருவரும் கடற்கரை விடுத்து இல்லம் நோக்கி வேகமாக நடந்தார்கள்! அவர்கள் வீடுபோய்ச் சேரும் வரையில் விண்மங்கையாம் திங்கள், வெளியில் தலைகாட்டவில்லை.

அதிகாரம் - 112 - நலம்புனைந்துரைத்தல்; பாடல் - 1117, 1118



விழி சிவந்தது. மொழி குழறியது. வெறி ஏறிக்கொண்டேயிருந்தது. ஏன்? பகை வெட்டிச் சாய்க்கும் வெஞ்சினம் கொண்டதாலா? இல்லை! கொண்ட கொள்கைக்கு ஊறு விளைத்துச் சில துரோகிகள் முளைத்துவிட்டனரே என்ற உள்ளக் குமுறல் அப்படி வெளிப்பட்டதா? அதுவுமில்லை. பின் எதற்காக? அவன் ஒரு குடிகாரன். வழக்கமாகக் குடிப்பவன். மொந்தையிற் கள்ளை மொண்டு குடிப்பதைவிட அவன் சிந்தையில் எதுவும் சிறப்பாகத் தோன்றுவதில்லை.

ஆடி நடப்பது - பாடிச் சிரிப்பது - கூடிக் குதிப்பது - அவன் அன்றாட அலுவல்கள். இழித்துப் பேசுவர் ஊரார், அவன் எதிரில் அல்ல, திண்ணைக்குத் திண்ணை அமர்ந்திருப்போர் அவனைப்பற்றி ஏசுவர்; ஏகடியம் செய்வர். தெருவோரம் அவன் தள்ளாடி வருவதைக் கண்டு விட்டால் வாய் பொத்திக் கொள்வர். சிலர் அவனை வாழ்த்தவும் செய்வர். வசவுக்கும் வாழ்த்துரைக்கும் வேறுபாடு தெரியாத நேரம்தானே அவன் கணக்கில் அதிகம். அதற்கோர் சிரிப்பு! தொடர்ந்து ஓர் அழுகை! வீட்டுக்குள் நுழைந்தாலோ துணைவியின் முதுகு வீங்கும்; முகம் கிழியும். தாய் தந்தை குறுக்கிட்டாலோ, அவர்களுக்கு 'நாய் நரி' பட்டம்தான் மிஞ்சும். "அப்பா" என அலறி அழும் செல்வங்கள், அவன் முரட்டுக் கால்களால் மிதிபடும்.

அவனில்லாத நேரம், அந்த ஊர்ப் பொதுமன்றத்தில் அவனது சேட்டைகள் குறித்துப் பலரும் வருந்தினர். அவன் செயல்களால் அவன் வீட்டுக்கு மட்டுமல்ல;

ஊருக்கே அவமானம் சூழ்கிறது எனக் கலங்கினர். இந்தக் களங்கத்திற்கு ஏதாவது ஒரு முடிவு கட்டத்தான் வேண்டும் என்று சிலர் முழங்கினர். அவனை ஊரைவிட்டே துரத்தினால் என்ன என்று ஒருவன் துடிப்புடன் கேட்டு விட்டுச் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான், அவன் எங்கேயாவது வருகிறானா என்று!

அவனை என்னால் திருத்தமுடியும் என்று ஒருவன் நெஞ்சைத் தட்டிக் கொண்டு எழுந்து நின்றான். அப்போது 'கலகல' என ஒரு சிரிப்பொலி. அனைவரும் வியப்புடன் திரும்பி நோக்கினர். "முடியாதப்பா முடியாது" என்று கூறியவாறு வள்ளுவர், மன்றத்தில் நுழைந்தார்.

"ஏன் முடியாது? என்னால் முடியும்" என்றான் முன்னால் முழங்கியவன்.

வள்ளுவர் அமைதியாகச் சொன்னார்: "யாரிடமாவது ஒரு பொன் நாணயமிருந்தால் இதோ எதிரேயுள்ள குளத்தில் வீசி எறியுங்கள்"

வள்ளுவர் சொன்னதைக் கேட்டு ஒருவர், தன்னிடமிருந்த பொன் நாணயத்தைக் குளத்தில் வீசி எறிந்தார்.

அங்கிருந்தவர்களைப் பார்த்து வள்ளுவர், "யாராவது ஒருவர் நீரில் மூழ்கி அந்த நாணயத்தைத் தேடி எடுத்து வரமுடியுமா?" எனக் கேட்டார். என்னால் முடியுமென ஓர் இளைஞன் நீரில் மூழ்கி நாணயத்தைத் தேடத் தொடங்கினான்.

குடிகாரனைத் திருத்த முடியுமென வீரம் பேசியவனைக் கூப்பிட்டு, "தம்பி! பொன் நாணயத்தைத் தேட நீரில் மூழ்கியிருக்கிற இளைஞன் இப்போது எந்தப் பகுதியில் தேடிக் கொண்டிருக்கிறான் என்பது தெரியுமா?" என வினவினார்.

"தெரியாது" என விடை கிடைத்தது. "இதோ இந்த விளக்கை எடுத்துக்கொண்டு நீயும் நீரில் மூழ்கித் தேடினால் அவனிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விடலாமே" என்றார் வள்ளுவர். ஓர் அகல் விளக்கையும் அவன் கையில் தந்தார்.


அவன் ஏளனச் சிரிப்புடன் கூறினான்: "என்னய்யா வேடிக்கை. நீருக்குள் இருப்பவனைத் தேட விளக்கை எடுத்துக் கொண்டு போவதா? விளக்கு அணைந்து விடாதா?"

"அதைத்தான் தம்பி நானும் சொல்கிறேன். நீரில் மூழ்கியிருப்பவனைத் தீ விளக்குக் கொண்டு தேடுகிற முயற்சியைப் போன்றதுதான், கள்ளுண்டு மயங்கிக் கிடப்பவனிடம் காரணங்களைச் சொல்லித் திருத்துகிற செயலுமாகும்" என வள்ளுவர் கூறிவிட்டு, அதற்கோர் குறளையும் மொழிந்தார்:

"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று."

அதிகாரம் - 93 - கள்ளுண்ணாமை; பாடல் - 929

களித்தான் - குடிகாரன் எனப் பொருள்படும்.



அழகிய விளக்கொன்று அந்த வீட்டுக்குள் ஒளிபரப்பிக் கொண்டிருந்தது. அந்த விளக்கு எப்போது அணையும் என்று வீட்டுக்கு வெளியே ஓர் ஆள் காத்திருந்த காட்சியை நான் கண்டேன். யார் அந்த ஆள்? ஒளியிருக்கும்போது வீட்டுக்குள் நுழையத் தயங்குகிற ஆள்; ஒரு கள்வனாகத்தான் இருக்கவேண்டும்; அல்லது அந்த வீட்டிலிருக்கும் தன் இதயக்காதலியை அப்போதுதான் யாருமறியாமல் சென்று தொட்டுத் தழுவிக் களிக்கலாம் என ஏங்கித் தவிக்கும் கள்ளக் காதலனாக இருந்திடவேண்டும்.

ஆனால், நான் கண்ட ஆள் இந்த இருவகையினரும் இல்லை! கள்வனுமில்லை; கள்ளக் காதலனுமல்ல!

அப்படியானால், விளக்கு அணைவதை அத்துணைத் துடிப்போடு எதிர் பார்த்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே நிற்பதுதான் யார்?

பெயர் சொல்லட்டுமா? "இருள்" என்பதுதான் அந்தப் பெயர்!

விளக்கொளி, எப்போது மறையும்; வீட்டுக்குள் சென்று ஆதிக்கம் செலுத்தலாம் என்று இருள் காத்துக் கிடக்கிறது. விளக்கணைந்தால் இருள் சூழ்ந்துவிடும் என்பதைத்தான் வள்ளுவர் முற்றிலும் புதுமையான முறையில் எழுதிக் காட்டுகிறார்.

விளக்கு எப்போது ஒளியிழக்கும் என்று இருள் காத்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார்.

இந்தக் கற்பனையை எந்த நிகழ்ச்சியுடன் ஒப்பிடுகிறார் என்று பார்க்கும் போதுதான், இலக்கியச் சுவையை முழுவதுமாக அனுபவிக்கும் மனநிறைவு ஏற்படுகிறது. விளக்கு எப்போது நிறுத்தப்படும்; நாம் உள்ளே நுழையலாம் என்று காத்துக் கிடக்கும் இருளைப்போலவே - இன்னொரு ஆளும் காத்துக் கிடக்கிற காட்சியை வள்ளுவர் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

அது யார் தெரியுமா? பெயர் பசலை! இருட்டுத்தான் விளக்கொளி மறைவதற்காகக் காத்திருக்கிறது; இந்தப் பசலை எதற்காகக் காத்திருக்கிறது? ஒரு பெண்ணின் மேனியிற் சென்று படர்வதற்காகக் காத்துக் கிடக்கிறதாம்! அதற்கு வழி என்ன?

தலைவியைத் தழுவிக் கொண்டிருக்கிறான் தலைவன்! மெழுகால் இரண்டு ஆண் பெண் உருவங்களைச் செய்து இரண்டையும் தழுவுவதுபோல் ஒட்டிக்காட்டி இடையே நெருப்புக் கனலையும் மூட்டிவிட்டால், எப்படி இரண்டு உருவங்களும் உருகி ஒன்றாகி இணைந்து கிடக்குமோ அவ்வாறு அந்தத் தலைவனும் தலைவியும் தழுவி மகிழ்ந்தனர். பசலை நிறமோ அந்தப் பைங்கிளியின்மீது படரத் துடிக்கிறது!

விளக்கு அணைந்தால்தானே இருள் நுழைய முடியும்! அதைப்போல்- தலைவன், தலைவியைத் தழுவுவதில் இடைவேளை ஏற்பட்டால் உடனடியாகப் பறந்தோடிச் சென்று பசலைநிறம் அந்தப் பாவையை ஆட்கொண்டுவிடும் ஆரத்தழுவி அகமகிழும் அந்தக் காதல் நிகழ்ச்சியில், தலைவி தனித்து விடப்பட்டால் போதும்; பசலை நிறம் அவள்மீது படர்ந்து விடுமாம்!

அதற்காகத்தான் விளக்கின் மறைவை எதிர்பார்க்கும் இருளைப்போல, தலைவியைத் தழுவுகின்ற தலைவன் எடுத்துக் கொள்கிற ஓய்வை எதிர்பார்த்துக் காத்திருக்கிறதாம் பசலை! அந்த இன்ப அணைப்பில் சிறிது தொய்வு ஏற்படினும் பசலையின் படையெடுப்பு அந்தத் தலைவியின் உடலைத் தாக்கிவிடும்.

என்ன சிறப்பான கற்பனை! விளக்கின் மறைவுக்குக் காத்திருக்கும் இருள்- தழுவலின்போது ஏற்படும் ஒருகணச் சோர்வுக்காகக் காத்திருக்கும் பசலை- இரண்டையும் ஒப்பிட்டுக் காட்டும் இனிமைக் குறள் இதோ!

"விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு."

அதிகாரம் - 119 - பசப்புறுபருவரல்; பாடல் - 1186

முயக்கம் - தழுவுதல்; அற்றம் - நீங்குதல்; பசப்பு - பசலை.



காலை அரும்பும்போதே கண் மலர்ந்த கட்டழகி. "வேலை மிக இருக்கின்றதத்தான் கழனியிலே, துயிலெழுவீர்!" எனத் தொட்டு, இதழ் மொட்டு அவன் முகத்தில் பதித்து, உழைப்பதற்கு அனுப்பி வைத்தாள். தோள்கொண்டு நீள்வையம் பெயர்த்தெடுத்துப் பொன்னை - மணியைத் தருகின்ற பாட்டாளி, வாள் கொண்ட வீரன் களம்புகும் வேகம்போல் வயல் புகுந்தான். வியர்வை தனைப் பாய்ச்சுவதற்கு முற்பட்டான். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்று தனக்குத்தானே பெருமையடித்துக்

கொண்டான். பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம் ஏர்த்தொழிலின் பின்னேதான் நடைபோடுகிறது. ஆகவே, எவ்வளவுதான் துன்புற்றாலும் உழவுத்தொழிலே உயர்வுடையது என ஆறுதல் பெற்றான், தன் காலில் தைத்த முள்ளை எடுத்தெறிந்துவிட்டு!

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

என்று இசை முழக்கியவாறு, இடையிலே குழந்தையும் தலையிலே கூடையுமாக நடையழகு காட்டி அங்கு வந்தாள் அவன் ஆருயிர்த் துணைவி.

"வஞ்சீ! இன்றென்ன வயிற்றுக்கு?" என்றான்.

"கஞ்சிதான்" என்றாள் கொஞ்சும் குரலில்!

"அய்யோ - இன்றைக்கும் கூழ்தானா? ஏழையின் நிலை என்றைக்கும் இதுதானா?" -என வேதனை மொழியுதிர்த்து, வியர்வையைத் துடைத்தவாறு மரநிழலில் அமர்ந்தான். கலயத்தையும் அவளையும் மாறிமாறிப் பார்த்தான். 'கூழ் குடிக்க வேண்டுமா?' அவன் கண்கள் கலங்கின; அவளும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள், குளமாகிவிட்ட விழிகளை அவனுக்குக் காட்டக் கூடாதென்று!

என்னே விந்தை!

திடீரென அந்தக் கூழ் அமுதமாக மாறி விடுகிறது. கலயத்தை எடுக்கிறான்- மடமடவெனக் குடிக்கிறான். 'அமுதம்! அமுதம்! அழகே! நீயும் குடி! என அவள் வாயிலும் கலயத்தைக் கவிழ்க்கிறான்.

கூழ் எப்படி அமுதமாயிற்று?


அவர்கள் பெற்ற அருமைச் செல்வம் தவழ்ந்தோடி வந்து, கஞ்சிக் கலயத்தில் தன் பிஞ்சுக் கரத்தைவிட்டுக் கலக்கி விடுகிறதாம். அதன் கை பட்டதும் கூழ் அமுதமாகி விடுகிறதாம். வள்ளுவர் அதனைக் கூறுகிறார்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்."

கூழ் அமிழ்தமாகிறதா? அல்லது அதைக் கூறும் இந்தக் குறள் நமக்கு அமிழ்தமாகத் தோன்றுகிறதா?

ஆகா! நினைக்கவே இனிக்கிறது!- இந்தக் குறள்தான் அமிழ்தம்! தெவிட்டாத தேனமிழ்தம்!

அதிகாரம் - 104 - உழவு; பாடல் - 1031
அதிகாரம் - 7 - மக்கட்பேறு; பாடல் - 64



மாங்கனியும் பூங்குழலியும் இணைபிரியாத் தோழிகள். அடுத்த அடுத்த வீடுகளில் பிறந்து, ஆடைகட்டாப் பருவமுதல் கலந்து பழகி, ஒன்றாக உண்டு உறங்கி, ஒருயிர் ஈருடல் என உண்மை நட்புக் கொண்டு, ஊரார் புகழவும் உற்றார் வாழ்த்தவும் அகவை பதினாறுக் குரியவராயினர்.

பூங்குழலிக்கு அவளது பெற்றோர் எடுத்த முயற்சியின் காரணமாக மணவிழா நடைபெற்று முடிந்தது. வாய்த்த மணாளன் அன்பின் ஊற்றாக இருந்தமையால்,

பூங்குழலி, தனக்குக் கிடைத்த பேற்றினை எண்ணி எண்ணி மகிழ்ந்தாள். தன்னைப் போலவே மாங்கனியும் மணம்பெற்று நல்வாழ்வு பெற வேண்டுமென வாழ்த்திக் கொண்டிருந்தாள்.

மணவிழாவுக்குப் பிறகு, பூங்குழலியை அடிக்கடிச் சந்தித்து ஆடிப்பாடி மகிழ முடியாமல், மாங்கனி தவித்துக்கொண்டுதான் இருந்தாள். ஐந்தாறு திங்கள் கழிந்தன. மாங்கனிக்கும் மணநிகழ்ச்சி ஏற்பாடாயிற்று.

பூங்குழலியும் அவள் கணவனும் முன்னின்று மாங்கனியின் வாழ்வு மங்கலவிழாவைச் சீரோடும் சிறப்போடும் நடத்தி முடித்தனர். மாங்கனியின் கணவன், அவளை அழைத்துக் கொண்டு தன் ஊருக்குப் புறப்பட்டான்.

பூங்குழலிக்குக் கிடைத்தது போன்று சொந்த ஊரிலேயே மணமகன் கிட்டாத காரணத்தால், எட்டாத தொலைவில் உள்ள ஊருக்கு மாங்கனி செல்ல வேண்டியதாயிற்று.

உயிர்த்தோழிகள் பிரிக்கப்பட்டனர். அந்தப் பிரிவுத் துன்பம் பூங்குழலியைப் பொறுத்தவரையில் அவளது கணவன் பொழிந்த அன்பால் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது.

மாங்கனிக்குக் கிடைத்தவனும் அவளை மயக்கிடும் பேரழகு வாய்ந்தவன் தான்! அழகனுக்கு, அவள் மாங்கனியாகவே ஆனாள். உடல் பெற்ற இன்பம் ஏனோ அவள் உள்ளம் பெறவில்லை!

சில நாட்களுக்குப்பிறகு மாங்கனியும் அவள் கணவனும் ஊருக்கு வந்தனர். இரண்டொரு நாட்கள் மாமனார் வீட்டில் தங்கிச் செல்லவேண்டுமென்ற அழைப்பை மாங்கனியின் கணவன் மறுக்கவில்லை. வந்த நாளன்று மாலை பூங்குழலியைக் காண ஓடினாள் மாங்கனி. இருவரும் ஒருவரையொருவர் அள்ளிக்கொண்டனர்.

"எப்படியிருக்கிறது இல்வாழ்வு?" எனக் கேட்டாள் பூங்குழலி, மாங்கனியிடம்! இருவரும், ஒவ்வொரு நாள் இரவும் எப்படிப் பறக்கின்றன என்பதுப்பற்றிப் பேசினர்.

மாங்கனி, ஒரு பெருமூச்சோடு சொன்னாள்; "பூங்குழலி! உன்னிடம் சொன்னால் என்ன? என்னை இன்பபுரிக்கே அழைத்துச் செல்கிறார் என் கணவர் உடலுறவில்! ஆனால், அந்த உணர்ச்சிப் பூரிப்புடன் என் உள்ளம் நிறைவு கொள்ள ஏனோ மறுக்கிறது? அவரிடம் நான் உடலின்பத்தை மட்டுமின்றி வேறு எதையோ எதிர்பார்க்கிறேன். அதில் எனக்கு ஏமாற்றம்தான்! என் வாழ்வும் நான் பெறும் இன்பமும் முழுமைபெற நீதான் வழி கூறவேண்டும்!"

இதைக் கேட்டுப் பூங்குழலி புன்னகை புரிந்தாள். சிரித்துக்கொண்டே வழியும் சொன்னாள்.

"மாங்கனி! நன்றாகப் பழுத்துவிட்ட பழத்தைப் போலவும், முற்றாத இளங்காயைப் போலவும் காதல் பயன்படாததாக ஆகிவிடுமென்று, வள்ளுவர் கூறியிருக்கிறார். எப்போது அப்படிக் காதல் பயனற்றதாகிவிடும் தெரியுமா? காதல் வாழ்க்கையில் பெரும் பிணக்கும் சிறு பிணக்கும் இல்லாவிட்டால், அப்படி ஆகிவிடுமாம்! அதனால்தான்

ஊடுதல் காதலுக்கே இன்பம் என்று அவர் குறள் தீட்டினார் - அந்த ஊடலைத்தான் 'புலவி' என்றும், 'பிணக்கு' என்றும் கூறுகிறார்கள். நீ, உன் இன்ப வாழ்வில் ஊடலுக்கே வழி விடாமல் இயந்திர வாழ்வு நடத்திக் கொண்டிருக்கிறாய் போலும்!

"துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று."

என்ற குறள் மொழியை மறந்து விடாதே! இன்று நான் சொன்னதைக் கடைப்பிடித்துப்பார்! நாளைக்குச் சொல்லு நடந்ததை!"

பூங்குழலியின் அறிவுரைப்படி அன்று நடந்துகொள்ளும் முடிவுடன், மாங்கனி வீட்டுக்குத் திரும்பினாள்.

மறுநாள் மாலைவரையில் மாங்கனியின் வரவுக்காகப் பூங்குழலி காத்திருந்தாள். அவள் வரவில்லை. பூங்குழலியே மாங்கனியின் மனைக்கு விரைந்தாள். மாங்கனி, கண்கலங்கப் படுத்திருந்தாள்; காரணம் அறியத் துடித்தாள் பூங்குழலி! அவள் சொன்னாள்:

"பூங்குழலி! இரவு கட்டிலறையில் என்றும்போல் அவர் என்னை இழுத்துப் போர்த்துக்கொண்டார். நான் ஊடல் புரியவேண்டுமென்ற திட்டத்துடன் அவரைவிட்டு விலகினேன். மீண்டும் இழுத்தார். கைகளைத் தட்டி விட்டேன், மென்மையாகத்தான்!

'என்ன கண்ணே கோபம்' எனக் கேட்பார் என எதிர்பார்த்தேன். அவரோ, 'சீ!' எனச் சீறினார். அதிர்ச்சியடைந்து ஓடிப்போய்க் கட்டிக் கொண்டேன். என்னை உதறித் தள்ளிவிட்டு, ஊருக்கு அவர் மட்டும் கிளம்பிவிட்டார். உன் 'ஊடல் அறிவுரை' என்னை இப்படி வேதனைக்கு ஆளாக்கி விட்டது! நல்ல குறளைச் சொன்னாய் போ!"

குறள்மீதே சினங்காட்டிய மாங்கனியைத் தேற்றியவா,று பூங்குழலி விளக்கம் தந்தாள்.

"மாங்கனி! வள்ளுவரே மற்றொரு குறளும் எழுதியிருக்கிறார். நீராக இருந்தாலும் அது நிழலை அடுத்து இருந்தால்தான் இனிமையானது. அதுபோல ஊடலும், அன்பு உள்ளவர்களிடம் கொள்வதுதான் இன்பம் பயக்கும்.

"நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது."

இந்தக் குறளின்படி, உன் கணவன் அன்பெனும் ஒரு பொருளிலா மனிதன் என்று தெளிவாகிறது."

பின்னர், பூங்குழலியிடம் விடைபெற்றுக் கொண்டு, "ஏதோ வாழ்ந்தால் சரி!" என்ற முடிவுடன், மணாளனைத் தேடி அவனிருக்கும் ஊருக்குப் புறப்பட்டாள் மாங்கனி!

அதிகாரம் - 131 - புலவி; பாடல்கள் - 1306, 1309

துனி = பிணக்கம்; புலவி = ஊடல்.



புலி பசுத்தோலைப் போர்த்துக்கொண்டு மந்தையில் நுழைந்து, மாடுகளை ஏமாற்றி, அவைகளைக் கொன்று தின்றது என்று, இளவயதில் கதைகள் கேட்டிருக்கிறோம். கற்பனை மிகுந்த கதைதான் எனினும் நல்லவனைப்போல நடிக்கிற ஒருவனை நம்பி ஏமாறக்கூடாது என்பதற்காகத் தோன்றிய கதையாகும். "அதோ வருகிறான் பார், பசுத்தோல் போர்த்திய புலி!" என்றெல்லாம் நாடகங்களிலேகூட உரையாடல்களை அமைப்பதுண்டு.

இப்படி, ஒரு விலங்கின் தோலை மற்றொரு விலங்கு போர்த்துக்கொண்டு ஏமாற்றும்போது, சாதுவான விலங்கு என்று கருதப்படுகிற ஒன்றின் தோலை, பொல்லாத விலங்கு ஒன்று போர்த்துக் கொள்வதுதானே பொருத்தமாக இருக்க முடியும்.

ஆனால், வள்ளுவரின் சிந்தனை வேகம்- கற்பனைப் பெருவெள்ளம் வேறு விதமாக உருவெடுத்து நம்மை வியப்பிலாழ்த்துகிறது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்."

என்ற குறளுக்கொப்ப உழவுத் தொழிலில் ஈடுபட்ட சிறுநிலக் கிழான் ஒருவன் எழிலார்ந்த சிற்றூர் ஒன்றில் வாழ்ந்தான். அவன் வியர்வையின் விளைவால், பச்சைப் பட்டாடை அணிந்து நின்றாள், அவன் வளர்த்த கழனிப் பெண்ணாள்! ஆம், செழிப்பு மிகுந்த பசும் பயிர்கள் அவனது வயல்களை அழகுக்கோலம் கொள்ளச் செய்தன.

அந்தப் பயிரின் வளத்தைக் கண்டதும் நாக்கில் நீர் ஊறிற்று, அவன் வீட்டுப் பசுவுக்கு! எப்படியாவது அந்த வயல்களில் இறங்கி, அந்த இளம் பயிர்களை ஆசைதீரச் சாப்பிடவேண்டுமென்று முடிவு கட்டியது. பயிரை மேயும்போது உழவன் பார்த்துவிட்டால் நன்றாக உதை வாங்க வேண்டுமேயென்ற அச்சம்வேறு அதற்கு! என்ன தந்திரம் செய்யலாம் என்று சிந்திக்கத் தொடங்கியது அந்தப் பசு!

ஒருநாள், மாலைப்பொழுது சாயும் நேரம். உழவன், வீட்டுப் பணிகளை முடித்துவிட்டு வாய்க்கால் வரப்புகளை வகைப்படுத்த, வயலின் பக்கம் வந்தான். காற்றிலாடும் முற்றாத பச்சைப் பயிர்களை இரு விழியால் கண்டு இன்பங் கொண்டான். வரப்போரம் நடந்து வந்தவன், திடீரென, "அய்யோ!" என்று அலறினான். அலறியவன் அங்கு நிற்கவில்லை. கழனியைவிட்டுத் தெருவின் பக்கம் ஓடினான். "அய்யோ! அய்யோ! என் கழனியை எல்லாம் புலி அழிக்கிறது. பயிர்களையெல்லாம் புலி மேய்கிறது" என்று கத்தினான். ஊரார் ஓடிவந்து கூடினர். "என்னடா வேடிக்கை? புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?" என்றார் ஒரு முதியவர். "அதோ என் பயிரைத் தின்னுகிறதே!" என்று அழுதான் உழவன்! ஊரார் வயல்களை நோக்கி ஓடினர். உண்மைதான், புலியொன்று பயிரை மேய்ந்து கொண்டிருந்தது. ஆட்கள் கூட்டமாக வருவது கண்டு, புலி அவர்களை மிரட்டுவதுபோல் நிமிர்ந்து நின்றது! அதைக்கண்டு அச்சத்தால் நடுங்கியவர்கள், "சரி! சரி! அதை ஒன்றும் செய்யாதீர்கள். மேய்கிறவரையில் மேய்ந்துவிட்டுப் போகட்டும். வயல் முழுவதையும் மேய அதற்கு வயிறுதான் இடம் கொடுக்குமா?" என்று திரும்பிட முடிவு செய்தனர். அந்தக் கூட்டத்தில் அஞ்சா நெஞ்சர்களும் இல்லாமற் போகவில்லை! அவர்கள் தங்கள் கைகளில் ஏந்தியிருந்த ஈட்டிகளையும் வேல்களையும் புலியை நோக்கி வீசினர். புலி மிரண்டோடிக் கழனிக்குள்ளே சென்று, சேற்றில் சிக்கிக் கீழே விழுந்தது. அஞ்சா நெஞ்சர்கள் விடவில்லை. அருகே சென்று பார்த்தனர். சேற்றில் விழுந்து கிடந்தது உழவன் வீட்டுப் பசுமாடு! அதனருகே கிடந்தது ஒரு புலியின் தோல்!


பசுவின் தந்திரத்தைக் கண்டு எல்லோரும் வியப்புற்றனர். உழவன் மட்டும் சீற்றங்கொண்டு, அந்தப் பசுவுக்கு நன்றாக அடி கொடுத்து நையப் புடைத்தான்.

"புலி, பயிரைத் தின்னாது" என்று எல்லோரும் எண்ணிக்கொண்டு ஏமாந்து விடுவார்கள். அப்படியே யாராவது பார்த்துவிட்டாலும் புலியின் அருகே வர பயப்படுவார்கள் என்றல்லவா இந்தப் பசு இவ்வளவு பெரிய சூழ்ச்சி செய்திருக்கிறது!" என்றார் அந்த ஊர் முதியவர் ஒருவர். "ஆமாம்! மனத்தை அடக்கமுடியாத சிலபேர், தாங்கள் தவறு செய்யும்போது யாரும் அருகே நெருங்கி வந்து தடுக்க முடியாதபடி தவக்கோலம் பூணுவதுபோல, இந்தப் பசு புலித்தோலைப் போர்த்துக்கொண்டு பயிரை மேய்ந்திருக்கிறது!" என்று விளக்கமளித்தார், இன்னொரு முதியவர்.

கற்பனைக் கதையாக இருந்தாலும்,
புலித்தோல் போர்த்திய பசுவின் கதை
முற்றிலும் புதிய கதையன்றோ?
இந்தக் கருத்தை அடக்கிய குறள்தான் இது!

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று."

அதிகாரம் - 28 - கூடாஒழுக்கம்; பாடல் - 273



"ஊடுதல் காமத்திற்கு இன்பம்" என்றுரைத்து, ஊடலின் பெருமையை உணர்த்திடும் வள்ளுவர், பிறிதோர் குறளில் தினையளவு ஊடலும் கொள்ளுதல் கூடாது என இடித்துரைக்கின்றார்.

"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்."

பனையளவினதாகக் காமம் பெருகிடும்போது தினையளவு ஊடல் கூடச் செய்து பார்ப்போமேயென்று எண்ணக்கூடாதாம்! கூடாது என்பதோடு அவர் நிறுத்தினாரா? அதுதான் இல்லை!

இரவு முழுதும் அணுவளவு இடைவெளியுமின்றித் தழுவிக் கிடந்து இன்பத்தின் உச்சிக்குச்சென்று திரும்பிய காதலர் இருவரைக்கொண்டே, ஊடல் எப்படி ஒடிவிட்டது என்பதையும் அவர் சொல்லவைக்கிறார்.

காலை மலர்கிறது; கட்டிலறை பெருமூச்சுவிடுகிறது. உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் 'இச்' என்ற ஒலியுடன் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொண்டு முத்தங்களைப் பரிமாறிக்கொண்ட காதலர், அறையைவிட்டு வெளி வருகின்றனர். புனலிடை மூழ்கிப் பொன்னார் இழையும் துகில் பூணுகின்றனர்.

அவளை, அவளுடைய தோழி சந்திக்கிறாள். நெருக்கமானவர்கள், நெஞ்சில் எதையும் ஒளிக்காமல் பேசிக் கொள்பவர்கள்!

"நேற்றிரவுக் கதை என்னடி?" என்று கேட்கிறாள் அந்தத் தோழி, புன்னகையை அவிழ்த்துக்கொண்டே!

கேள்விக்கு விடை உடனே கிடைக்கிறது.

"தோழி! நான் அவரோடு ஊடியபிறகே கூடுவது என்ற நினைவுடன் சென்றேன், படுக்கையறைக்குள்ளே! ஆனால், என்னுடைய நெஞ்சம் என்னை ஏமாற்றிவிட்டது! என் நோக்கத்தையே என் நெஞ்சம் மறந்துவிட்டு, அவரோடு கூடுவதற்குச் சென்று விட்டது.

"ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு."

இந்தக் குறளை அவள் சொன்னதும், தோழி கூறினாள்:

"உண்மைதான்! பனையளவாகக் காமம் பெருகிய பின்னர் தினையளவு ஊடலும் பயன்தராது என்று வள்ளுவர் சும்மாவா சொன்னார்!"

அந்தக் காதலியின் மேனித் தித்திப்பு முழுவதையும் சுவைத்த காதலனும் தன் தோழனைச் சந்திக்கிறான். யார் அந்தத் தோழன்? வேறு யாருமல்ல! அவனேதான்! ஆம்! தன்னை நிலைக்கண்ணாடியில் பார்த்துக் கொள்கிறான். கண்ணாடியில் தெரியும் அவன் உருவம், அவனைப் பார்த்துக் கேட்கிறது: 'இரவு அவள் ஊடல் புரியவே இல்லையே - நீ அதனை உணர்ந்தாயா' என்று!

கண்ணாடியின் உருவத்திற்குக் காதலனின் நெஞ்சம் விளக்கமளிக்கிறது. இரவு நடந்த இன்பக் களியாட்டத்தை அது விவரிக்கிறது.

"முதலில் அவள் பிணங்கிடவேண்டுமென்று நினைத்துத்தான் கண்பார்வையின் அளவில் தனது ஊடலைத் தொடங்கினாள். ஆனால், உணர்ச்சியின் கட்டுக்கடங்காத நிலையில் என்னைவிட விரைந்து முந்திக்கொண்டு, கண் அளவில் கொண்ட பிணக்கத்தையும் மறந்துவிட்டுக் கலங்கியவாறு தழுவிக்கொண்டாள்."

ஊடல் புரிய நினைத்தவள், பனையளவாகக் காமம் நிறைந்து பொங்கியதும் தினையளவு ஊடல்கூடப் பயன்படாது என்பதைப் புரிந்துகொண்டாள்போலும் என எண்ணி, அவன் உள்ளம் உவகையால் கூத்தாடியது.

"கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று."

அதிகாரம் - 129 - புணர்ச்சி விதும்பல்; பாடல்கள் - 1282, 1284, 1290



அது அறுவடைக் காலம்.

தங்கச்சுரங்கமே தரையில் விரிந்ததுபோல், எங்கே நோக்கினாலும் செந்நெற் கதிர்மணிகள் சிரித்துக் குலுங்குகின்றன. பகுத்தறிவுப் பயிர் செய்யக் கலப்பையாகப் பயன்படுவது வினாக்குறி; அந்தக் கேள்விக் குறியொத்த கருக்கரிவாளால் கழனிகள் எல்லாம் அறுவடை நடக்கிறது. நட்டுவனார் இல்லாமல் நடனப் பயிற்சி செய்வதுபோலக் கட்டழகுக் காரிகையர், கட்டுக்கட்டாக நெற்கதிர்களைச் சுமந்தவண்ணம் வரப்பு மேடைகளில், இடுப்பை வளைத்தும் நெளித்தும் செல்கின்றனர்.

களத்துமேட்டில் அரிஅரியாக நெல் தாளையெடுத்து ஆரணங்கு நீட்டிட, வாளைச் சுழற்றிப் பாய்ச்சும் வரிப்புலி மறவனைப்போலக் கதிர்த்தாளைச் சுழற்றி அடிக்கிறான் காளை. அங்கே, நெற்குவியல் பொற்குவியலாக நெடிதுயர்ந்து வளர்கிறது.

எல்லோருடைய கழனிகளும் இப்படிப் பொற்களஞ்சியங்களாகப் பொலிவோடு திகழ்ந்திட - ஒரு நிலத்தில் மட்டும் சோகை பிடித்த தோகையுடன் வாடிக் கிடக்கின்றன பயிர்கள். அதனுடைய வேர்கள், நீரைக்கண்டு வெகுகாலம் ஒடியிருக்கவேண்டும். எருவும் இடவில்லை - களையும் எடுக்கவில்லை என்பது மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போதே தெரிகிறது. பித்தவெடி கொண்டுள்ள

பாதம்போன்று வயலெங்கும் வெடிப்புகள் - வறட்சியின் துடிப்புகள்! பல நூறு விளக்குகள் சுற்றிலும் கொழுந்து விட்டெரிய, அந்த ஒரே ஒரு கழனி மட்டும் எண்ணெய் அறியாத விளக்குப்போல இருண்டு கிடப்பானேன்?

அந்த நிலத்துக்கு உரியவன் சோம்பலின் தத்துப்பிள்ளை. உழைத்துக் களிக்காமல் உறக்கத்தில் திளைக்கிறவன். திண்ணை கண்டவிடமெல்லாம் கண்ணை மூடிடு வான். பெயருக்குப் பயிர் செய்துவிட்டு வந்தபிறகு, வயற்பக்கம் அவன் திரும்பியே பார்ப்பதில்லை.

இல்லக் கிழத்தியின் ஏக்கத்தை நீக்கினானா? அதுவும் இல்லை. 'அருகிருக்க மாட்டானா? அழகைப் பருகிக் கிடக்கமாட்டானா?'- என்றெல்லாம் உருகிக் கரைந்திடுவாள் அவன் உயிர்த்துணைவி. அவனோ நஞ்சையைப் புறக்கணித்ததைப் போலவே, அந்த வஞ்சிக் கொடியையும் வதைத்தான்.

எப்போதாவது அந்த 'வீண் பொழுது போக்கி' வீட்டுக்கு வந்தால், வெண்ணிலவு முகத்தாளின் கண் சிவக்கும் - வேட்கையால் இல்லை, வெறுப்பால்! ஒரு மொழியும் பேசாள்! 'ஊடல்' மிகக் கொள்வாள். அவளுடைய நிலாமுகம் நெருப்புப் பந்தாக மாறுவதும் இயற்கைதானே!

அன்று மாலையும் அப்படித்தான், அவன் வந்து நின்றான் வாயிலில். தன் மனைவியை அன்பொழுக அழைத்தான். அவளோ, 'அத்தான் வந்து விட்டீர்களா?' என்று வழியும் ஆசையுடன் வரவேற்க வரவில்லை. ஆயினும் எட்டிப் பார்த்தாள். கணவனின் வடிவத்தையும் கடந்து அவளது கண்கள் பறந்து சென்றன வீதிக்கு! அங்கோ, களத்துமேட்டிலிருந்து, வண்டி வண்டியாக நெல் மூட்டைகளின் அணிவகுப்பு வந்து கொண்டிருந்தது.

அவளுடைய நெஞ்சம் பொருமிற்று. வேதனையும் வெறுப்பும் பின்னிக் கொண்ட பார்வையைத் தன் கணவன்மீது வீசினாள். "நீங்களும் ஓர் ஆண் பிள்ளையா? என்னைப் பார்க்கத்தான் நேரம் இல்லை; நிலப்பெண்ணைப் பார்த்தாவது கொஞ்சி யிருக்கக் கூடாதா கொஞ்சம்? அவள் ஊடல் கொண்டதால் கேடல்லவா வந்துவிட் டது? இனி இந்த ஆண்டு முழுவதும் ஒட்டிய வயிற்றோடு நாம் பட்டினியில் சாக வேண்டியதுதானா?"

-சொற்களைக் கொட்டாமலே விழியினால் கொட்டினாள் தேளாக!

அவள் சினந்து நோக்குவதும் நியாயந்தானே!

மனைவி ஊடல் கொண்டால் ஒரு நேரம் இல்லாவிட்டால் மறுநேரம் மனம் மாறுவாள்; மலர் முகம் காட்டுவாள். ஆனால், நிலமங்கையை அந்தந்தப் பருவத்தில் அடிக்கடி பார்த்துச் சீராட்டாவிட்டால் - உழைப்பால் நீராட்டா விட்டால் - உழவ னின் வாழ்க்கையே வறுமையில் கருகும்வண்ணம் அவள் ஊடல் கொண்டுவிடுவாளே!

அதனால்தான், கட்டிய மனைவியின் ஊடலைப்போல - ஏன் அவளது ஊடலைக் காட்டிலும்கூடக் கழனியின் ஊடல் கொடியது என்கிறார் வள்ளுவர்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்."

அதிகாரம் - 104 - உழவு; பாடல் - 1039



அவள் அன்று வீட்டில் தனியாக இருந்தாள். துணைக்கு யாருமே இல்லை. இருட்டு வேளை. வீடோ, காட்டுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. வன விலங்குகளின் பயங்கர ஒலிகள், அவளை நடுங்க வைத்துக் கொண்டிருந்தன. வீட்டின் கதவு சரியாக மூடப்பட்டிருக்கிறதா என்று ஒருமுறைக்கு இருமுறை பார்த்துக் கொண்டாள். தாழ்ப்பாள் அழுத்தமாகப் போடப்பட்டிருக்கிறதா என்று கவனித்து அதையும் செம்மையாகப் போட்டுவிட்டு, கட்டிலில் படுத்து உறங்குவதற்கு முயற்சி

செய்தாள். தூக்கம் வரவில்லை. கதவு மெதுவாக ஆடுவதுபோலத் தோன்றியது. கையில் அகல்விளக்குடன் சென்று கதவை உற்று நோக்கினாள்.

ஆட்டம் எதுவும் கதவில் இல்லை. தனக்குரிய அச்சத்தின் விளைவு எனப் பெருமூச்சு விட்டவாறு, மீண்டும் சென்று கட்டிலில் படுத்துக்கொண்டாள். புரண்டு புரண்டு படுத்தாள். ஏதோ எண்ணங்கள், இளமையின் வசந்தகாலத் துடிப்புகள்! மணமாகாத மலர்க்கொடி அவள். அதனால் எதையும் நினைப்பது கூடத் தன் கற்புக்கு ஊறு தேடக்கூடியது எனக்கருதி, நாணத்துடன் கண்களைப் பொத்தியவாறு குப்புறப் படுத்துக்கொண்டாள்.

அப்போது திடீரென்று ஒரு பேரொலி! கதவு உடைந்து நொறுங்கிப் போய்விட்டது. கதவை உடைத்த கோடரி, வீட்டுக்குள் வந்து அவள் கட்டிலருகே விழுந்தது. அலறியடித்துக்கொண்டு எழுந்து, உடைந்த கதவின் வழியாக வெளியே ஓடிவிட முனைந்தாள். ஆனால், என்ன வேடிக்கை! கதவருகே போனதும், அது தாழ்ப்பாள் போட்டவாறு மூடப்பட்டே இருக்கிறது. குளிர்காலத்தில் நீர் வீழ்ச்சியில் குளித்ததுபோல் மேனி நடுங்க, அப்படியே தரையில் உட்கார்ந்து கொண்டாள். அவள் இதயம் அவளோடு பேசிற்று!

"பெண்ணே! மணமாகாத கண்ணே! கற்பு எனப்படும் கதவுக்கு நீ என்னதான் நாணம் என்ற தாழ்ப்பாளைப் போட்டுப் பாதுகாத்தாலும் காமம் என்னும் கோடரி, ஒரு நாள் அந்தக் கதவை உடைத்தே விடும்."

இதயத்தின் ஒலியைக் கேட்டதும் அவளுக்கு அன்று மாலை நடந்த நிகழ்ச்சி நினைவில் நிழலாடிற்று.

அவள் விரும்புகிற காதலன் அவளை மாந்தோப்பில் கரம்பிடித்து இழுத்தான். அவளோ, தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள நாணத்துடன் ஓடிவந்து விட்டாள்! காதலன் அவளை அப்போது விட்டுவிட்டாலும் காம உணர்வு இப்போது அவளை விடவில்லை. அது நாணமெனும் தாழ்ப்பாள் போடப்பட்ட நிறை என்னும் கதவை உடைத்துக்கொண்டு அவளை ஆட்கொண்டுவிட்டது. நாளை மாலை, அதே மாந்தோப்பில் அவன் தொடுவதற்கு முன்பு, அவன் தோளில் தொத்திக் கொள்ளவேண்டும் என்ற முடிவுடன், இரவு முழுதும் விழித்துக்கொண்டே இருக்கிறாள்.

"காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு."

அதிகாரம் - 126 - நிறையழிதல்; பாடல் - 1251



வறுமைத் துன்பத்தை வெறும் துன்பம் என்று கூறாமல், 'வறுமைத் தீ' என்று உருக்கமுடன் உரைப்பர். வறுமைத்தீ, வயிற்றுப் பசித்தீயை மூட்டி, அது புரட்சித் தீயாக மாறிய வரலாறுகள் உலகில் பல உண்டு. தீ என்று இதனைக் கூறினாலும் கூட, அது தீயினும் கொடியது என்பதை வள்ளுவர் சித்திரித்துக் காட்டியிருக்கிறார்.

அதோ! ஒரு பெரிய சத்திரம். ஆனால், இடிந்து கலனாகிக் கிடக்கும் சத்திரம். என்றோ ஒருநாள் அது வழிப்போக்கருக்கு உணவு வழங்கும் கொடை வள்ளலாகத் திகழ்ந்தது போலும். இன்று அது வழிப்போக்கருக்கும் உழைத்துப் பிழைக்க வழியில்லாதோர்க்கும் ஓய்வு மடமாக விளங்குகிறது. ஆடுமாடுகள் அங்கே நடமாடுகின்றன! குரங்குகள் ஓடுமாற்றிக் கொண்டிருக்கின்றன!

கோழிகள், தங்கள் குஞ்சுகளுடன் உலவுகின்றன. நாலைந்து சிறுவர்கள் அந்தச் சத்திரத்து மூலையில், செத்துப்போன ஒரு முயல்குட்டியை நெருப்பில் வாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அய்யோ! திடீரென நெருப்புப் பிடித்துக் கொண்டது! நெருப்பின் நீண்ட நாக்குகள் சத்திரத்துக் கூரையைச் சுவை பார்க்கத் தாவுகின்றன. அங்கு படுத்திருந்தோர் அலறி எழுந்து ஓடுகின்றனர். கால் நடைகள் திசை தெரியாமல் சிதறி ஓடிவிட்டன. கோழிகள், தங்கள் குஞ்சுகளுடன் வெளியேறிவிட்டன.

தீயின் கொழுந்துகள் சத்திரத்தை முழுமையாக மூடிக்கொண்டு விட்டன. ஊரார் தீயை அணைக்க முடியாமல் தவித்தனர்; அப்போது கையில் ஒரு பிச்சைப் பாத்திரத்துடன் அங்கு வந்த சிறுமி, தன் கையிலிருந்த பாத்திரம் கீழே விழுந்து அதிலிருந்த சோறு பூமியிலே சிதறிவிட்டதைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல், "அய்யோ! என் அப்பாவைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று கதறியவாறு, சத்திரத்தை நோக்கி ஓடினாள்.


அதைக் கண்ட ஓர் இளைஞன், சிறுமியைத் தடுத்து நிறுத்தி விட்டு, ஒரே பாய்ச்சலில் சத்திரத்துக்குள் நுழைந்தான். அடுத்த கணம், ஒருவனைத் தூக்கிக் கொண்டு அந்த இளைஞன் வெளியே ஓடி வந்தான். அவன்தான் அந்தப் பிச்சைக்காரச் சிறுமியின் தகப்பன். அவனைப் பார்த்து எல்லோரும் கேட்டார்கள், "என்னய்யா, எரிகின்ற நெருப்பின் நடுவே இப்படி ஒரு மனிதன் தூங்கிக் கொண்டிருப்பானா? இந்த இளைஞன் இல்லையேல் உன் கதி என்ன ஆகியிருக்கும்?" என்று சினந்து கேட்டனர். அவன் கண்களைக் கசக்கியவாறு, அசதி மிகுந்த நிலையில் பதில் சொன்னான்:


"இந்த நெருப்பைக் கொடியதாக எண்ணி நீங்கள் பேசுகிறீர்கள். ஆனால், என்னை வாட்டி வதைக்கிற வறுமையோ, இந்த நெருப்பைவிடக் கொடியது. நெருப்புப் பிடித்தது தெரியாமல்கூட நான் சற்று நேரம் அயர்ந்து தூங்கி விட்டேன். ஆனால், வறுமை தாக்கும்போது தூங்கவே முடியவில்லையே! அது தெரியவில்லையா, உங்களுக்கு? ஏன்? என் தூக்கத்தைக் கெடுத்தீர்கள்? நான் இந்த நெருப்புக்கு மத்தியில் தூங்கியிருப்பேனே; வறுமையை எனக்கு நினைவூட்டி மீண்டும் தூங்க முடியாமல் செய்து விட்டீர்களே!"

இப்படிச் சொல்லி அழுதான் அவன். அந்தக் குமுறல்தான் இதோ குறளாக வெளிப்படுகிறது;

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது."

அதிகாரம் - 105 - நல்குரவு; பாடல் - 1049





சூளையில் வைத்து எடுத்த பானைகள் ஒருபக்கம் அடுக்கப்பட்டிருக்கின்றன. பச்சை மண்ணால் செய்து பக்குவமாக வைக்கப்பட்டிருந்த பானைகளும் சட்டிகளும் இன்னொரு பக்கம் காட்சி அளிக்கின்றன. பானை செய்யும் சகடு, ஓய்வு கொண்டிருக்கிறது. அதனருகேதான் அவள் உட்கார்ந்திருக்கிறாள். அவள் முகத்தில் இனம் தெரியாத ஒரு சோகம். காதலனை இன்னும் காணவில்லையே என்ற

ஏக்கத்தைத்தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்! அவளைக் கேலி செய்வதற்காக அடுத்த வீட்டுத் தோழி வருகிறாள்.

"என்னடியம்மா! கண்ணை மூடிமூடித் திறந்து கொண்டிருக்கிறாய்? உன் காதலன் கண்ணுக்குள்ளேயே இருக்கிறார் என்று சொல்வாய் - இப்படிக் கண்ணை மூடி இமைத்தால் கண்ணுக்குள் இருக்கும் காதலன் வருந்தமாட்டாரா?"

என்று தோழி புன்னகை சிந்தியவாறு கேட்கிறாள். அப்போது, அவள் காதலன் அங்கு வந்தவன், அவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்பதற்காக, அடுக்கப்பட்டிருந்த பானைகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு கவனிக்கிறான். தோழியின் கேள்விக்கு அவள் சொல்கிற பதில், அந்தக் காதலன் நெஞ்சில் தேன்மழை பொழிய வைக்கிறது.

"என் காதலர், என் கண்ணுக்குள்ளிருந்து எங்கும் செல்லமாட்டார். கண்ணை மூடி இமைப்பதாலும் அவர் வருந்தமாட்டார். காரணம்; அவர் அவ்வளவு நுட்பமானவர்."

அவள் இந்தப் பதிலைக்கூறி, அதற்கான குறளையும் பாடிக் காட்டுகிறாள்.

"கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர்."

தோழி குறுக்கிட்டு, "அவ்வளவு நுட்பமானவர் உன் அருங்குணத்தை நினைத்துப் பார்க்காமல் அடிக்கடி உன்னைப் பிரிந்து விடுகிறாரே!" எனக் கேலி செய்கிறாள். தன் காதலியை அவள் தோழியிடம் சிக்கவைக்க விரும்பாத காதலன், உடனே எதிர்வந்து நிற்கிறான். அடுத்த வீட்டுப் பாவையைப் பார்த்து அவன் ஒரு அழகான விளக்கத்தை அளிக்கிறான்.


"என் அன்புக் காதலியின் போர்புரியும் வலிமைவாய்ந்த கண்களை உணர்ந்தவன் நான். அத்தகைய வேல்விழியாளின் அருங்குணங்களை நான் மறந்தால்தானே பிறகு நினைக்க முடியும். அந்தக் குணங்களை நான் ஒருபோதும் மறந்தது கிடையாதே!"

இந்த விளக்கத்திற்குரிய குறட்பாவையும் அவன் பாடிக் காட்டுகிறான்.

"உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்"

அவனைப்பற்றி அவன் காதலியிடம் குறை பேசியமைக்காக, அடுத்த வீட்டுத் தோழி நாணமுற்று, அங்கிருந்து துள்ளிக் குதித்து ஓடுகிறாள்.

அதிகாரம் - 113 - காதற்சிறப்புரைத்தல்; பாடல் - 1126, 1125



அஞ்சுவயதுக் குழந்தை அவன்! பெயர் அழகன்! அந்தப் பிஞ்சுப் பருவத்திலேயே அன்னையையும் தந்தையையும் இழந்துவிட்டான். மாமன் வீட்டில் வளர்ந்து வந்தான். அழகன்மீது மாமன் அன்பினைப் பொழிந்தான் என்றாலும் அத்தைக்கு அவனைக் கண்டால் வேப்பங்காயாகத்தான் இருந்தது.

தான் பெற்ற மூன்று பிள்ளைகளுக்குச் சமமாக அழகனையும் வளர்த்திட, அந்த அத்தையின் உள்ளம் இடம் தரவில்லை. தன் குழந்தைகளுக்குச் சோறு படைத்தபின்னரே, அழகனை அழைப்பாள் அடுக்களைக்கு.

பசியால் வாடும் அந்த இளம் வயிறு, பறந்தோடிச் சென்று அத்தை வீசியெறியும் உணவினை விழுங்கி மகிழும்.

"அம்மா - அப்பா இருந்தால் இந்த நிலை தனக்கு வருமா?" என்று அந்தச் சின்ன அரும்பு ஏங்கும்போதெல்லாம் மாமனின் கரம் அவனை வாரியணைத்து ஆறுதல் வழங்கும். அழகனின் வேதனை மாறும்.

ஒருநாள், பணியின் பொருட்டு மாமன் வெளியூர் செல்ல நேரிட்டது. நான்கு பிள்ளைகளும் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஓட்டப் பந்தயத்தில் யார் வெற்றி பெறுவது என்ற போட்டி, அந்தப் பிள்ளைகளுக்குள்ளாக! அந்த விளையாட்டில் அழகன் வெற்றி பெற்றான்.

அழகனை முந்திடவேண்டும் என்று வேகமாக ஓடிய அத்தையின் பிள்ளைகளில் ஒருவன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான். மிகச் சிறிய காயம்தான்! ஆனாலும் அழுதுகொண்டே வீட்டுக்குள் ஓடினான். நடந்ததை அறிந்துகொண்ட அத்தை

ஆவேசங் கொண்டாள். இரும்புக் கம்பியொன்றை அடுப்பில் நுழைத்துப் பழுக்கக் காய்ச்சி அழகனின் முன்கையில் வைத்தாள். பாவம்! பிள்ளை துடித்துப் பதறிவிட்டான்.

"எந்த வேசியோ பெற்றுப் போட்டுவிட்டுப் போனதையெல்லாம் வளர்த்துத் தொலைக்கவேண்டியிருக்கிறது!" என்று அத்தை கூறிய இழிமொழி, இரும்புக் கம்பியால் சுட்டதைவிட அதிகமாக அழகனைத் துடிக்க வைத்தது.

தன்னைப் பெற்ற தாயை - ஊரே தங்கமெனப் புகழ்ந்து பேசுகிறது. 'வேசியென்று ஒரு வேலை வீசிவிட்டாளே அத்தை'யென்று அவன் ஏங்கினான். வெளியே ஓடினான்.

ஓடியவன் திரும்பவேயில்லை. எங்கு போனான்? என்ன ஆனான்? என்று யாருக்குமே தெரியவில்லை. அவன் மாமனோ, அவனை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தான். ஆண்டுகள் உருண்டன.

அத்தை பெற்ற மூன்று பிள்ளைகளும் திருமணம் முடித்துக்கொண்டு, தனித்தனியே குடும்பம் நடத்த வெளியூர்களில் குடியேறிவிட்டனர். அழகனின் மாமன் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருந்தான். அவனைப் பார்க்கக்கூட அந்தப் பிள்ளைகள் யாரும் வரவில்லை.

அழகனின் அத்தை, தன் பிள்ளைகளின் போக்கை நினைத்துக் கண்ணீர் வடித்தவாறு கணவனின் அருகே அமர்ந்திருந்தாள். அப்போது 'அத்தை' என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார்கள்.

போர் வீரனின் உடையில் அழகன் எதிரே நின்றான். மாமனின் உடல் நலம் கெட்டிருக்கும் செய்தி கேட்டு ஓடி வந்ததாகக் கூறினான்.

மாமனுக்கு அழகனைப் பார்த்ததில், பாதி நோய் மறைந்துவிட்டது. இத்தனை நாள் படையிலா சேர்ந்திருந்தாய் என்று கேட்ட அத்தை, அவனை அன்புடன் உபசரித்து, மாமனுக்கு அருகே உட்காரவைத்துப் பருகுவதற்குப் பாலும் பழமும் கொண்டுவந்து கொடுத்தாள். அதை வாங்கிய அழகனின் முன்கையில், அவள் போட்ட இரும்புக்கம்பிச் சூட்டின் அடையாளம் அப்படியே இருந்தது.


"என்னை மன்னித்துக் கொள்ளப்பா அழகா! ஏதோ ஆத்திரத்தில் அன்றைக்கு அப்படிச் செய்துவிட்டேன். இந்தப் பாவியால் ஏற்பட்ட அந்தப் புண் எப்போதப்பா ஆறியது?" எனக் கேட்டாள் அத்தை!

"தாங்கள் தீயினால் சுட்டபுண் விரைவில் ஆறிவிட்டது அத்தை! ஆனால் பத்தினித் தெய்வமாம் என் அன்னையை வேசி என இகழ்ந்து வாயினால் சுட்டீர்களே, அந்தப் புண்தான் என் உள்ளத்தில் இன்னமும் ஆறவில்லை."

என்று பதிலளித்தான் அழகன். கண்கலங்கிட மாமன், அழகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, 'மன்னித்து விடப்பா, உன் அத்தையை மன்னித்துவிடு' என்று கெஞ்சினார். அத்தையும் அழுதுகொண்டே அழகனின் கையை எடுத்துத் தன் முகத்தில் ஒத்திக்கொண்டாள்.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

அதிகாரம் - 13 - அடக்கமுடைமை; பாடல் - 129



அழகு நிலவே, நீ குளத்தின்மீது குதித்து அலைகளிலே பரதம் ஆடுகிற பாங்கினைப் பார்த்துப் பார்த்துக் களிக்கிறேன். விழிகளை உயர்த்தி நான் விண்ணைப் பார்த்திட விரும்பவில்லை. அவ்வாறு பார்த்தால் நீ என்னைவிட்டு எட்டாத தொலைவில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆம்! என் காதலியைப்போல!

அதனால்தான் அருகே தோன்றி அலைகளிலே அழகு நடமிடும் உன்னை, அள்ளி அணைத்திடக் குளத்திலும் இறங்கிவிட்டேன். அடடே! உன் ஒளியுடல் இப்படி ஏன் நடுங்குகிறது? தழுவிக் கொண்டவுடன் எங்கே நீ, நழுவிப் போய்விட்டாய்?

தங்கமேனிச் செல்வம், தளிர் உடல் தேனமுதம், இன்ப ஊற்று, என்றன் இணையற்ற உயிரோவியம் - அவளும் இப்படித்தான் நான் தழுவிடத் துடித்திடும் போது துள்ளிப் பாய்ந்திடுவாள் மீன்போல! தாவி ஓடிடுவாள் மான்போல!

நிலவே! நான் ஆடாமல் அசையாமல் குளத்திற்குள் நின்றவாறு, அலைமீது நீ ஆடும் நாட்டியத்திற்கு என் இதயத் துடிப்புக்களால் "ஜதி" சொல்லிக் கொண்டிருக்கிறேன். வா, நிலவே வா! வெள்ளைப்பூவே! வெள்ளிமயிலே! வா! வா!

வந்துவிட்டாயா பேரழகே! ஆமாம், உன் முகத்தில் என்ன! இரு! இரு! கொஞ்சம் கூர்ந்து பார்க்கிறேன். ஓ! ஓ! அன்றைக்கு நான் இட்ட முத்திரையின் தழும்புதானே அது! நானா? உனக்கு முத்திரை பதித்தேனா? இல்லை - இல்லை - எனக்கும் என் காதலிக்குமிடையே நடந்த கதையை உன்னிடம் கொட்டிவிட்டேன். அவள் என்னைப் பிரிந்துசென்று எத்தனை நாட்களாயின! பிரிந்துசென்ற அன்று, நான் அவளுக்குப் பொறித்த முத்திரையும், அவள் திரும்பி வரும்போது இப்படித்தான் அவள் கன்னத்தில் காட்சி தருமோ?

நிலவே! உன் பரதத்தைச் சற்று நிறுத்திவிட்டு, என் பரிதாபத்தைக் கொஞ்சம் பாரேன். நீ இல்லாவிட்டால் வானுக்கு எழில் இல்லை - அவள் இல்லாவிட்டால் எனக்கு வாழ்வே இல்லை.

உன்னோடு அவளை ஒப்பிடுவதே தவறு! உன்னையும் மீறிய ஒளி படைத்தது அவள் முகம். நீ வெள்ளிநிலா, அவள் தங்க நிலா; சேல்கள் இரண்டைச் சேர்த்துத் தீட்டப்பெற்ற சித்திரம் என் செந்தமிழாளின் முகம். மாணிக்கப் பேழையிலே முத்துக்களைத் திணித்து, அவை உள்ளே இடமின்றி வெளியே எட்டிப் பார்ப்பது போலிருக்கும் அவளுடைய புன்சிரிப்பு! ஆயிரம் ஆண்டு தவமிருந்தாலும் அந்த வரம் உனக்கு அளிக்க எந்த ஆண்டவனும் இல்லையென்றேன்.

அவளுக்குப் பதிலாக உன்னைப் பார்த்து ஆறுதல் கொள்ளலாமென்றால், அதற்கும் இடமில்லை - அள்ளிப் பொழிகிறாய் காதல் நெருப்பை என்மீது! வாரி இறைக்கிறாய் அந்த வண்ணக்கிளியின் இன்ப நினைவுகளை!

யார், குளக்கரையில் கூடி நின்று சிரிப்பது? ஓகோ, ஊரில் உள்ள இளைஞர்களா? நான் காதல் பிரிவால் கடுந் தொல்லைக்கு ஆளாகி என்னை அறியாமல் உன்னிடம் பேசுவதுகண்டு, அவர்கள் கரைமீது நின்று கைகொட்டிச் சிரிக்கிறார்கள், பார்த்தாயா?

சிரிக்கட்டும், என்னைப் பைத்தியம் என்று எண்ணிக்கூடச் சிரிப்பார்கள்!

சும்மாவா சொன்னார் வள்ளுவர்; நான் பட்ட துன்பங்களை அவர்கள் படாமையால், அறிவில்லாத அவர்கள் என் கண் எதிரே நின்று என்னைக்கண்டு நகைக்கின்றனர் - என்னைப்போல அவர்களுக்கும் துன்பம் வந்திருந்தால் அல்லவா தெரியும்!

இது ஒரு காதலனின் குமுறல்.

இதனை வெளிப்படுத்துவதே இந்தக் குறள்:

"யாங்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு."

அதிகாரம் - 114 - நாணுந் துறவுரைத்தல்; பாடல் - 1140



அடர்ந்த காட்டுவழியாக இரண்டு நண்பர்கள் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவன் பெயர் நல்லான். மற்றொருவன் பெயர் வல்லான். இருவரும் காட்டில் விலங்குகளின் பயம் தெரியாமல் இருக்க, நாடோடிப் பாடல்களை உற்சாகமாகப் பாடிக்கொண்டு நடந்தார்கள். இருட்டுக்குமுன்பு காட்டைக் கடந்து தங்கள் ஊருக்குச் சென்றுவிட வேண்டுமென்பதில் அவர்கள் குறியாக இருந்த காரணத்தால், வேகமாகவே நடந்தார்கள்.

அவர்கள் எதிர்பாராதவாறு ஒரு பெரிய ஆபத்துக் காத்திருந்தது. அவர்கள் காட்டுப்பாதையில் ஒரு குன்றினைக் கடந்து ஓர் ஒற்றையடிப்பாதையில் திரும்பியபோது, திடுக்கிடத் தக்கவண்ணம் ஒரு கரடி நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் இருவரும் ஒருவர் கையை ஒருவர் கோத்துக்கொண்டு ஓடத் தொடங்கினார்கள். கரடியும் அவர்களைத் துரத்திக் கொண்டு ஓடிற்று. வல்லான், நல்லானைப் பார்த்துக் கேட்டான்: "ஏய்! உனக்கு மரம் ஏறத் தெரியுமா?" என்று! நல்லான், "தெரியாதே!" என்று பதில் சொன்னான். வல்லான், "அடப் பாவி! உன்னால் நானும் கரடியின் வாயில் சிக்கவேண்டும் போலிருக்கிறதே!" என்று நடுங்கினான்.

அதற்குள் கரடியும் அவர்களை நோக்கி வருவது தெரிந்தது. இருவரும் ஓடிப்போய் ஒரு புதருக்குள் ஒளிந்து கொண்டார்கள். கரடி, அந்தப் புதரின் பக்கம் வந்து கொண்டிருந்தது. வல்லான் திடீரென்று நல்லானின் கையை உதறிவிட்டு அங்குள்ள உயரமான மரத்தின்மீது மளமளவென்று ஏறி உச்சிக்குப் போய்விட்டான். கரடி, அவர்களைத் தேடிச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தது. அதற்குள் மரத்தின்

உச்சியிலிருந்த வல்லான், நல்லானைக் கூவி அழைத்து, "ஏய், நீ எங்கேயாவது ஓடித் தொலை. இல்லாவிட்டால் கரடி உன்னைத் தீர்த்துவிட்டுப் பிறகு என்னையும் கண்டுபிடித்துவிடும்" என்று கூறினான்.

"நான் எங்கிருந்தாலும் கரடி என்னை விடப் போவதில்லை. நான் இங்கேயே இருக்கிறேன்" என்றான் நல்லான்.

"அடப்பாவி! உன்னைக் கண்டுகொண்டால், பிறகு என்னையும் கண்டு கொண்டு விடுமடா! நீ வேறு இடத்துக்குப்போய் அங்கேயாவது அதன் வாயில் அகப்பட்டுக் கொள்! என்னையாவது காப்பாற்று!" என்று வல்லான் கதறினான்.

அதற்கிடையே கரடி, அந்தப் புதரின் பக்கம் வருவது தெரிந்தது. நல்லான் திடீரெனக் கீழே விழுந்து மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு உயிரற்றவனைப் போலக் கிடந்தான். கரடி அவனருகே வந்து பார்த்தது. அவனது முகத்தின் பக்கம் தனது முகத்தை நீட்டி உயிர் இருக்கிறதா, இல்லையா? என்று கவனித்தது. செத்துவிட்டான் என்று எண்ணி ஏமாந்து - கரடி, வந்த வழியே போய் விட்டது.

சிறுவர்களுக்கு இப்படியொரு கதை, ஆரம்பப் பள்ளியில் சொல்லிக் கொடுப்ப துண்டு. அந்தக் கதையுடன் குறள் ஒன்றினை இணைத்து, சற்றுத் திருத்திப் படித்துப் பார்ப்போம்.

கரடி போனதும், மரத்தின் உச்சியிலிருந்த வல்லான் கீழே இறங்கி வந்தான். அதற்குள் நல்லானும் அவனுடைய நண்பனை வரவேற்கத் தயாராக எழுந்து உட்கார்ந்து கொண்டான். வல்லான் வியப்புடன் நல்லானைப் பார்த்துக் கேட்டான்:

"ஆருயிர் நண்பா! அந்தக் கரடி உன் காதில் ஏதோ செய்தி சொல்லிற்றே, அது என்ன செய்தி?"

நல்லான் சிரித்துக்கொண்டே, "கரடி எனக்கு ஒரு குறளைச் சொல்லி அதற்கு விளக்கமும் சொல்லிச் சென்றது" என்றான்.

"என் இனிய நண்பா! என்ன குறளப்பா அது?"

நல்லான் மீண்டும் சிரித்துக்கொண்டே,

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்."

என்ற குறள்தான் அது!" என்றான்.


"அப்படியா? கரடிக்கு குறள் கூடத் தெரியுமா? ஆமாம், அதற்கு அந்தக் கரடி, என்ன விளக்கம் சொல்லிற்று?" என்று வினவினான் வல்லான்.

நல்லான் அந்த விளக்கத்தையும் சொன்னான்:

"நமக்கு வருகிற தீமையிலும் ஒரு வகையான நன்மை உண்டு. எப்படியென்றால், அந்தத் தீமைதான் நம்முடைய நண்பர்களின் இயல்புகளை நமக்கு அளந்து காட்டுகிற அளவுகோலாகும்."

இந்த விளக்கத்தைக் கேட்டு, வல்லான் வெட்கித் தலைகுனிந்தான்.

அதிகாரம் - 80 - நட்பாராய்தல்; பாடல் - 796



முல்லை மலர்க்காட்டில் மெல்லியலாளின் மெய் தழுவிக்கிடந்த காதலன் பிரிகிறான். வாலிபத்தின் விருந்தை இடையறாது சுவைக்கும் வாய்ப்பை இருவருமே இழந்து தவிக்கின்றனர். வாணிபம் குறுக்கிடுகிறது. ஆகவே பிரிகிறார்கள். "தலைவனை அணைத்திருக்கும்போது அவன் சிறிது நகர்ந்தாலே மேனியெங்கும் பசலை நிறம் படர்ந்து என்னை வாட்டுமே; அப்படிப்பட்ட என்னைவிட்டு அவர் இத்தனை நாள்

பிரிந்து செல்வது நியாயமா?'' என்ற கேள்விக் கணைகளைத் தொடுக்கிறாள் கண்ணாடிக்கு முன்னே நின்றுகொண்டு! அந்தப் பளிங்கியிலே தோன்றும் உருவம் அவளை மேலும் அழவைக்கிறது. ஏனெனில் பசலை படிந்த அவளது உருவமே அது! அதைக் காணுகிறாள். கண்ணீர் முத்துக்கள் உருள்கின்றன. இதழிடை முத்துக்கள் எங்கேயோ ஒளிந்து கொள்கின்றன. பிரிவின் சோகத்தால், காதலன்மீது ஏற்பட்ட கோபத்தோடு படுக்கையிலே படுக்கிறாள்; இல்லை விழுகிறாள்; உடலைப் 'பொத்' தென்று போடுகிறாள். தூக்கம் அவளைத் தொடமுடியாமல் தவிக்கிறது; இறுதியில் வெல்கிறது; தூங்குகிறாள்.

காதலன் வருகிறான். அவனது கற்பகம் சேர்ந்த மார்பில் அற்புத அழகு முகத்தை ஒட்டுகிறாள். உச்சிமுதல் உள்ளங்கால்வரை முத்த மழையால் நனைகிறது! நேரம் போவதே தெரியவில்லை. தொடர்ச்சி கெடாமல் இன்பம்! கேளிக்கை! கீதம்! திடீரென்று விழிக்கிறாள்; அவளோடு சேர்ந்து கதிரவனும் விழிக்கின்றான்; எல்லாம் கனவு. கலக்கத்தோடு வாயிற்புறத்தே வந்து நிற்கிறாள்.

அவளைக் கண்ட ஊர் மக்கள், "அய்யோ பாவம்! காதலன் பிரிந்து விட்டான். அதனால் கலங்கி நிற்கிறாள் இந்தப் பாவை!" என்று பேசிக்கொண்டு போகிறார்கள்.

காதலன்மீது ஊரார் பழி கூறுவதாக அவள் கருதுகிறாள். அவன்மீது பழிகூறத் தன்னைத்தவிர வேறு யாருக்கும் உரிமையில்லை என்பது அவள் எண்ணம். பிரிந்துபோன காதலனைப்பற்றிப் பழி கூறும் ஊராரைப் பழிக்கிறாள். எப்படி?


"என்னைவிட்டு என் காதலர் நீங்கியிருப்பதாக அவரைக் குற்றம் சாட்டுகிறார்களே இந்த ஊரார் - இவர்கள், பிரிந்து சென்ற தமது காதலனைக் கனவில் காண்பது கிடையாதோ?" என்று வியப்படைவதுபோலக் கேலி பேசுகிறாள்.

இதோ குறள்:

"நனவினால் நம்நீத்தார் என்பர்; கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர்."

அதிகாரம் - 122 - கனவுநிலை யுரைத்தல்; பாடல் - 1220





குடிநீர்த் தொட்டி ஒன்று தெருக்கோடியில் இருக்கிறது. கொடிபோலும் தளிர் மேனிக் கோதையர்கள் அங்கே குடம் ஏந்தி வந்திடுவர், நீர் எடுக்க.

குறிப்பிட்ட சில நேரங்களிலேயே புறப்பட்டு வந்து சொட்டும் குழாய் அருவி; அதுவரையில் வரிசை வரிசையாகக் குடங்களைக் கீழே வைத்து விட்டுக் காத்துக் கொண்டு நிற்பர், எழில் பூத்துக் குலுங்கிடும் பூவையர்கள்.

அந்த வேளையாகப் பார்த்துக் கட்டுக்கடங்காத காளைகளாகச் சில இளைஞர் கள், கொட்டம் அடித்துக்கொண்டு வருவார்கள்; முற்றுகையிடுவார்கள், குடிநீர்த் தொட்டியினை. பாவையர்க்கோ பற்றிக் கொண்டு வரும் எரிச்சல்! அவர்களுடைய உள்ளுணர்வுகளைப் பற்றி எள்ளளவுகூடக் கவலை கொள்ளாமல், இளைஞர்களோ எள்ளி நகைப்பார்கள்; இழிந்த சொற்களையெல்லாம் அள்ளி இறைப்பார்கள்.

ஒரு நாள் அந்த வழியாக வந்தார் ஒரு பெரியவர். இளைஞர்களின் அடாத செயல் கண்டு, அவரது மனம் படாதபாடு பட்டது.

"தம்பிகளே! அந்தப் பெண்களின் நெஞ்சத்தை நீங்கள் புண்படுத்துவது முறை இல்லை. உங்களுடைய தங்கைகளையோ தமக்கைகளையோ யாரேனும் இப்படிக் கீழ்த்தரமாகக் கேலி செய்தால் நீங்கள் பொறுத்துக் கொள்வீர்களா? 'பேசியவனின் நாவை அறுத்து விடுவேன்!' என்று ஆர்ப்பரிக்க மாட்டீர்களா? மற்றவர்களைப் பழித்துச் சிரிப்பதால் உங்களுக்கு வரக்கூடிய பலன்தான் என்ன?"

-பெரியவர் இவ்வாறு பெண்களுக்குப் பரிந்து பேசியதும் இளைஞர்கள் தங்களது தகாத செயலுக்காக வருந்தினார்களா? திருந்தினார்களா? இல்லை! மாறாக அந்தப் பெரியவரை அவர்கள் சுற்றி வளைத்தார்கள்; நெட்டித் தள்ளினார்கள்; கைகொட்டிச் சிரித்தார்கள். அவரது தோளிலே கிடந்த துண்டை எடுத்துச் சுருக்குக் கயிறுபோல

அவரது கழுத்திலே சுற்றி முறுக்கினார்கள்; துண்டின் இரு முனைகளை யும் இழுத்துப் பிடித்து, இப்படியும் அப்படியுமாக அவரை அசைத்தார்கள்; ஆட்டினார்கள்.

அவர்களது கொடிய செயல்களைக் கூர் ஈட்டிச் சொற்களைப் பொறுமைக் கட லாகவே பொறுத்துக் கொண்டார் பெரியவர். தம்முடைய தரத்தைக் குறைத்துக் கொண்டு வாயாலோ கையாலோ திருப்பித் தாக்கிடவில்லை, அந்தத் தருக்கர்களை!

குடிநீர்த் தொட்டியின் பக்கம் வந்திருந்த பெண்டிர் அனைவரும், பெரியவரை விட்டுவிடுமாறு கெஞ்சினர் - கூத்தாடினர். இளைஞர்களின் நெஞ்சமோ இரக்கங்கொள்ள இசைந்திடவில்லை. அவரை வருத்துவதன் மூலமே தங்கள் இன்பத்தை வளர்த்துக்கொள்ள முனைந்தனர்.

சிறிது நேரத்தில் அரசாங்கக் காவலர்கள் சிலர் தற்செயலாக அங்கே வந்தனர். அவர்களது தலைப்பாகைகளைக் கண்டதுமே குலைநடுக்கம் கொண்டனர் இளைஞர்கள்! தாங்கள் தப்ப முடியாமல் சிக்கிக் கொண்டதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டனர்.

பெரியவரோ பழி தீர்த்துக் கொண்டிருக்கலாம். அந்த அளவுக்கு அழுகிவிட வில்லை - பண்பின் முழுமை படைத்த அவரது நெஞ்சம்! காவல் துறையினருக்கே இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

"அவர்கள் எல்லோரும் என் அருமைப் பேரப் பிள்ளைகள். உரிமையோடு என்னி டம் இப்படி விளையாடுவது அவர்களுக்கு எப்போதுமே வேடிக்கையான ஒரு வாடிக்கை - நடுத்தெருவில் அவர்கள் இதுபோல் நடந்து கொண்டது தவறுதான். அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்; அவர்களை விட்டுவிடுங்கள்!"

-பெரியவரின் சொற்களைக் கேட்டதும் இதயம் குன்றிவிட்டது இளைஞர் களுக்கு; தலைகுனிந்து நின்றனர் வெட்கத்தால்.

"எத்தகைய தகுதிமிக்க சான்றோரை - பொறுமைமிக்க பெரியவரைச் சிறுமை செய்துவிட்டோம்; அதனால் சிறுமைப்பட்டு நிற்கிறோம்! நாங்கள் கொடிய சொற்களினால் குத்தித் துளைத்தும் கருணைவெள்ளந்தானே வடிகிறது, அவர் கண்களிலிருந்து! செருக்கின் உச்சிக்குச் சென்று தீய சொற்களால் கருக்கி எடுத்தும், தீயில் உருக்கிடும் பொன்போல் அல்லவா ஒளி வீசி நிற்கிறார் அவர்!? எங்களைக் காட்டிக் கொடுத்திடாமல் காப்பாற்றவும் துணிந்திட்டாரே! அவரது பொறையுடைமைக்கு, நிறைகுடமான பெருந்தன்மைக்கு நிகர் ஏது?"

-இவ்வாறெல்லாம் எண்ணிக் குமைந்தனர் இளைஞர்கள்; அந்த எண்ணங்களே கன்னங்களில் வழிந்தோடின, கண்ணீராக!

அந்தக் காட்சியை வள்ளுவப் பெருந்தகை, எவ்வாறு வடித்துக் காட்டுகிறார் பாருங்கள்:

"ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து."

அதிகாரம் - 16 - பொறையுடைமை; பாடல் - 155



இளமதி, இளம் பொற்கொல்லன். திருமதி, அவனை மணந்துகொண்ட அழகுப்பாவை. தொழில் புரியும் இடத்தில் அமர்ந்து தங்க வளையல்களுக்கு மெருகூட்டிக் கொண்டிருந்தான்.

களைப்புத் தெரியாமல் கண்ணாளன் பணியாற்ற வேண்டுமென்ற நினைப்புப் பொங்கிடக் குவளையொன்றில் மோர் எடுத்துக்கொண்டு, அவனிடம் திருமதி வந்து நின்றாள். குவளையை வாங்கும்போதே அவள் விரல்களைத் தன் விரல்களால் அழுத்தியவாறு புன்னகையை இதழில் தேக்கி அவளை நோக்கினான். அவளும் கடைக்கண்ணால் விடையளித்து அருகமர்ந்தாள்.

"வேலையில் கவனம் வைத்து அணிகளைச் செம்மையாகச் செய்திடுங்கள். கவனம் வேறெங்கோ இருப்பதாகத் தெரிகிறது." என்றாள் கேலியாக!

"எங்குமில்லை என் கண்ணே! நேற்றிரவு ஊடலிலே வெற்றி யாருக்கு? தோல்வி யாருக்கு? என்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன்" என்றான் இளமதி.

"அதில் ஐயம் என்ன இருக்கிறது? எனக்குத்தான் வெற்றி!" என்றாள் அவள்.

"எப்படி உனக்கு வெற்றி என்கிறாய்?"

"என்னைத் தொடாதீர் என இடித்துரைத்துக் கட்டிலின் ஓரமாகச் சென்று உம்மை நீங்கிப் படுத்துக் கொண்டேன் நான். நீங்கள்தான் என்னை நெருங்கிவந்து தொட்டி முத்துக் கட்டியணைத்துக்கொண்டீர்கள்! அதனால் தோல்வியைத் தழுவிக்கொண்டது நீங்களேதான்."

"உண்மைதான். உன்னைத் தழுவிக்கொண்டேன். உனக்குப் பெயர் 'தோல்வி' என்று நீயே ஒப்புக்கொள்கிறாய்! இல்லையா?"

"சொல்லால் வெல்லலாம் என எண்ணாதீர். நேற்றிரவு ஊடலில் தோற்றுப் போனது நீங்களேதான்! நானல்ல!"

"ஊடலில் தோற்பவர்கள்தான் வெற்றி பெறுகிறார்கள் தெரியுமா?"

"இது என்ன புது இலக்கணம்? அப்படியானால், போர்க்களத்தில் தோற்றுவிட்ட மன்னனுக்கே நாட்டைக் கொடுத்து முடிசூட்டிவிடலாமே!"

"போர்க்களத்தில் வீரர்கள் பகைவரை மண்டியிட வைத்தால்தான் வெற்றி! போகக் களத்தில் ஒரு பெண்ணிடம் ஆண் மண்டியிட்டால்தான் அந்த ஆணுக்கு வெற்றி!"

"வேடிக்கையாக இருக்கிறதே உங்கள் விளக்கம்!"

"என் விளக்கம் அல்ல! வள்ளுவர் தரும் விளக்கம்! நானும் என் அனுபவத்தில், கண்ட உண்மை!"

"ஓகோ! ஊடலில் தோற்றவர்களை வெற்றி வீரர்கள் என்று வள்ளுவரே கூறிவிட்டாரா?"

"ஆமாம்! ஊடலில் தோற்றுப் போனவரே வெற்றியடைந்தவராவார். இந்த உண்மையை ஊடல் முடிந்தபிறகு கூடிமகிழும் நிலையில் கண்டு கொள்ளலாம் என்று குறள் கூறுகிறது. அதாவது, நேற்றிரவு நான் தோற்றுப் போனதுபோல உன்னிடம் சரணடைந்து பெறவேண்டிய இன்பம் முழுதும் பெற்று வெற்றியடைந்தேன் என்பது எனக்குத்தான் தெரியும். என்ன சொல்கிறாய்? இன்றிரவும் நான் தோல்வி அடையட்டுமா?"

"போங்கள்!"

என்று நாணத்தோடு முகம் புதைத்துக்கொண்டு, திருமதி அந்த இடத்தை விட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

மெருகேறிய நிலையில் அவன் கைகளில் இருந்த தங்க வளையல்களின் நிறத்தோடு அவள் நிறத்தை ஒப்பிட்டுக்கொண்டே வள்ளுவரின் குறட்பாவை வாய்க்குள்ளேயே சொல்லிப் பார்த்துக்கொண்டு இளமதி மகிழ்ந்தான்.

அந்தக் குறள் எது?

இதோ:

"ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்"

அதிகாரம் - 133 - ஊடலுவகை; பாடல் - 1327



இராமாயண கதாகாலட்சேபம், வெகுசிறப்பான ஏற்பாடுகளுடன் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இராமனின் முடிசூட்டுவிழா நிகழ்ச்சிகளைப் பாகவதர் வர்ணித்துக் கூறிய பாங்கே தனி! பக்த கோடிகள் தலையசைத்துத் தங்களின் பாராட்டுக்களைப் பாகவதருக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். பெண்டிர் கூட்டமும் மண்டபத்தில் நிரம்பி வழிந்தது. ஆடவர் - பெண்டிர் அனைவருமே உயர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அதாவது உயர்ந்த வகுப்பினர். மேலும், செல்வம் படைத்தவர்கள்கூட!

பதினான்கு ஆண்டுகள் இராமனும் சீதையும் இலக்குவனும் காட்டில் அனுபவித்த வாழ்க்கையையும் இராம - இராவணப் போரும் இறுதியாக இராமன் நாடு திரும்பி மகுடம் புனைந்துகொண்ட மாட்சியும் பாகவதரின் உரையால் - இசைப்பாட்டால் அங்குள்ள ரசிகமணிகள் அனைவரையும் உற்சாக வெள்ளத்தில் மிதக்கச் செய்தன.

நள்ளிரவில் கதாகாலட்சேபம் முடிவுற்றது. பாகவதர், தான் தங்கியிருக்கும் வீட்டுக்குச் சென்றார். அந்த ஊரில் பெரும் பணக்காரரான ஓர் உயர் ஜாதிக்காரர் வீடு அது! அந்த வீட்டு அம்மாளும் இராமாயணம் கேட்க வந்திருந்தார். அம்மாளுடன் துணைக்கு அந்த வீட்டு வேலைக்காரியும் வந்திருந்தாள். அவள் ஜாதி, சற்றுக் குறைவானதுதான்.

கதை முடிந்ததும் அம்மாளும் வேலைக்காரியும் பாகவதருக்கு முன்பே வீடு திரும்பினார்கள். பாகவதரும் வீட்டுக்காரச் சீமானும் சிறிதுநேரங் கழித்து வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

பாகவதருக்கு வீட்டுமாடியில் தனியாக, ஒரு வசதியான அறையில் படுக்கை. அவர் உணவருந்திவிட்டு மாடிக்கு வருவதற்குள் மாடிஅறையைத் தூய்மைப்படுத்தப் படுக்கையைத் தட்டிப்போடுமாறு வேலைக்காரிக்குச் சீமான் உத்தரவிட்டார். அவ்வாறே வேலைக்காரியும் சென்று பணியாற்றிக்கொண்டு இருந்தாள்.

உணவருந்திய பாகவதர், உடலெங்கும் சந்தனம் பூசிக்கொண்டு மாடி அறைக்குள் நுழைந்தார்.

அங்கே இருந்த வேலைக்காரியைக் கண்டதும் பாகவதர் மெய்மறந்தார். கதாகாலட்சேபத்தில் சீதையைப்பற்றி அடுக்கிய வர்ணனைகளையெல்லாம் கொட்டித் தீர்த்தார். இறுதியில் அவளைத் தொட்டும் பார்த்தார்.

வேலைக்காரி வெகுண்டாள். பாகவதரைப் பார்த்து "தூ!" என்று இழித்துரைத்துவிட்டு, மாடியிலிருந்து கீழே இறங்கி ஓடினாள்.

வீட்டுக்கார அம்மாள் - சீமானின் மனைவி - பாகவதருக்கு வெள்ளிக் கிண்ணத்தில் பால் எடுத்துக்கொண்டு மாடிக்கு வந்தாள். பாகவதர் முகம் ஒரு மாதிரி சோகமாக இருந்தது கண்டு, "ஏன் - என்ன காரணம்?" என்று வினவினாள். "காலட்சேபம் செய்த களைப்பு உடம்பு வலிக்கிறது; அவ்வளவுதான்" என்றார் பாகவதர்.

"உடம்பு பிடித்து விடுகிறேனே!" என்றாள் அந்த அம்மாள்! பாகவதர் மறுப்பாரா என்ன? உடலைப் பிடித்த அந்த அம்மாள், பாகவதர் பிடியில் சிக்கினாள். அவள் விரும்பியது நடந்தது.

கீழ் ஜாதிப் பெண் ஏற்றுக் கொள்ளாத ஒன்றை, உயர் ஜாதிப் பெண் விரும்பி ஏற்றுக்கொண்டாள். உயர் குடிப்பிறப்பு என்பதும் இழிந்த குடிப்பிறப்பு என்பதும் கற்பிக்கப்பட்ட ஜாதி முறைகளால் ஏற்படுவதில்லை.

ஒழுக்கம் உடையவராக வாழ்வதுதான் உயர்குடிப் பிறப்புக்கு எடுத்துக் காட்டு! ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாராயினும் அவர்கள் இழிந்தகுடிப் பிறப்பாளர்களேயாவர்! குறளின் அளவுகோல்படி அந்த வேலைக்காரி உயர் குடிப்பிறப்பு! சீமான் வீட்டு அம்மையார் இழிந்த குடிப்பிறப்பு! இதோ அதற்குக் குறள்:-

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

அதிகாரம் - 14 - ஒழுக்கமுடைமை; பாடல் - 133



"கதிரைக் காணாது குவிந்திருந்த தாமரை போலவும் நிலவைக் காணாது கூம்பியிருந்த அல்லிபோலவும் வாடிக்கிடக்கும் உன் முகம், வசந்தப் புன்னகை புரியப் போகிறதடி! ஆநிரை கவர்ந்துசென்ற பகை நாட்டானை விரட்டிச் சென்று போரிட்டு வென்றதோடு மட்டுமன்றி, அவனைத் தேர்க்காலிலே கட்டி இழுத்துவரும் இளவரசரை வரவேற்கத் தலைநகரமே விழாக்கோலம் பூண்டிருக்கிறது. வெற்றி கிடைக்குமா என ஏங்கித் தவித்தாயே; நான் அப்பொழுதே சொன்னேன் அல்லவா? உன் புருவங்களை வில்லாக வளைத்து, விழிகளைக் கணைகளாகப் பொழியும்போது மட்டுந்தான் இளவரசர் தோல்வி காண்பாரே தவிர, எதிரிகளின் ஈட்டிக்கோ, வேலுக்கோ, புறமுதுகு காட்டாத புறநானூற்றுத் தமிழன் நமது இளவரசன் என்று!

அது பொய்த்துவிடுமா என்ன? இருட்டு வேளையில் திருட்டுத்தனமாக நுழைந்த பகையின் இடுப்பொடித்து, வெற்றிக்கொடி விண்ணைமுட்ட வந்து

கொண்டிருக்கிறார். இந்த நற்செய்தி கூறத்தான் ஓடிவந்தேன். இனி நீ அவரை வரவேற்கத் தயாராகலாம். பன்னீர் கலக்கிய தண்ணீரில் குளித்து புத்தாடை உடுத்து! அவர் பிரிவை எண்ணியெண்ணி வளைகள் கழன்றுவிழும் அளவுக்கு மெலிந்துபோன உன் கரங்கள், புதிய வலிவைப்பெறும் என்று எனக்குத் தெரியும். நெளிந்து நடக்கும்போது மட்டும் தெரியக்கூடிய உன் கொடி இடையைத் தாங்கிடக் கொழுக்கொம்பாக வருகின்றார் இளவரசர். பாவம், பவளங்களும் முத்துக்களும் பதித்த இந்தக் கட்டிலைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. வாயில்லாப் பொருள்! இன்றிரவு என்ன பாடுபடப் போகிறதோ?"

இப்படிச் சொல்லிக்கொண்டே குறும்புச் சிரிப்புக் குலுங்கிட அவள் தோழி கீழேயிறங்கி ஓடிவிட்டாள்.

பகை விரட்டிச் சென்றவன் - பிரிவுத் துயரைத் தனக்கு அளித்துச் சென்றவன் - பசலை படரவும் இதயம் பதைக்கவும் தன்னைப் பிரிந்து சென்றவன், விரைவில் வரப்போகிறான் எனக்கேட்டு அவள் அடைந்த இன்பம் உலகையே வெல்லக் கூடியது. உடைகளைக் களைந்து குளித்தாள். அருந்தப்போகும் விருந்தினை எண்ணி அவள் அங்கங்கள் ஒவ்வொன்றும் விம்மிப் பூரித்தன. கண்ணாடிமுன் நின்று அணிமணி பூண்டாள். அவன் கன்னத்தில் ஒட்டிக் கொள்ளட்டும் என்பதற்காகவே குங்குமப் பொட்டைக் கனமாக வைத்துக்கொண்டாள்.

கண்ணாடியில் அவள் உருவம் தெரியவில்லை. அவன்தான் தெரிந்தான். கால்கள் ஓரிடத்தில் நிற்கவில்லை. வெற்றிப்படை தலைநகருக்குள் நுழைந்து விட்டது என்பதற்கான முரசங்கள் ஆர்த்தன.

இப்போது அவளுக்கு ஒரு பெரிய பிரச்சினை! மூன்று கேள்விகள் அவள் நெஞ்சைத் துளைத்தெடுக்கத் தொடங்கின.

"என் கண்ணான கணவன் இன்னும் சிறிதுநேரத்தில் இங்கு வந்து விடுவார். அவர் வந்ததும், ஏன் என்னைப் பிரிந்து வாடவிட்டீர்கள் என்று ஊடல் புரிவதா? அல்லது அவரைத் தழுவிக் கொள்வதா? அல்லது அவருடன் கூடிக்களிப்பதா?"

இப்படித் திண்டாடுகிறாள் அவள்! ஊடிக் கொண்டிருந்தால் தழுவிக் கிடக்கும் நேரத்தில் சிறிது வீணாகப் போய்விடும். தழுவிக் கொண்டேயிருந்தாலும் கூடலின் இன்பத்தைப் பெறத் தாமதமாகிவிடும். மனப்போராட்டம் அவளைத் தவிக்க வைக்கிறது!

ஊடுவதா?

தழுவுவதா?

கூடுவதா?

இந்த மூன்று கேள்விக்கு விடைகாண முடியாமல் திணறும் தேன்மொழி யொருத்தியின் நிலையை விளக்குகிறது இந்தக் குறள்:

"புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின்."

அதிகாரம் - 127 - அவர்வயின்விதும்பல்; பாடல் - 1267



தமிழ்நாட்டின் தேசிய மரம்

நெட்டிலிங்க மரம் என்பது, தேக்கு மரம்போல உயரமாக வளரக்கூடியது. ஆனால், அவ்வளவு உறுதியாகத் திகழக்கூடிய மரமல்ல. நெட்டிலிங்கத்தழை, கிளையும் கொப்புமாகத் தளதளவென்று வளமாக இருக்கும். விழாக் காலங்களில் வரவேற்பு வளைவுத் தூண்களில் அந்தத் தழையை அழகுக்காகக் கட்டுவது வழக்கம். இளமைப் பருவத்தில் மாணவர் அணியினைத் திரட்டி, தமிழ்காக்கும் விழாவொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். நிகழ்ச்சிகளுக்கான எல்லா ஆக்கப் பணிகளிலும் நண்பர்களுடன் நானும் கலந்துகொண்டேன். விழா அறிவிப்புக்களை மக்களிடையே செய்வதிலிருந்து, விழாச் சிறப்புறப் பந்தலை அலங்கரிப்பது வரையில் முன்னின்று காரியங்களைக் கவனித்தேன். அந்த வேலைகளில் ஒன்றாக நெட்டிலிங்கத்தழை வெட்டிவரும் வேலையும் அமைந்தது. நானும் நண்பர்களும் ஆற்றோரமிருந்த நெட்டிலிங்க மரங்களை நாடி இரவு நேரத்தில் சென்றோம்.

மரம் ஏறிக் தழைகளை ஒடித்துப்போட ஓர் ஆளையும் கூப்பிட்டுக்கொண்டு சென்றோம். அந்த ஆள் நன்கு குடித்திருந்திருக்கிறான். மளமளவென்று மரத்தில் ஏறித் தழைகளை ஒடித்துப் போட்டுக்கொண்டேயிருந்தான். நாங்கள் கீழேவந்து விழும் தழைகளையெல்லாம் கொப்புகளோடு சேர்த்துப் பொறுக்கி ஓர் இடத்தில் குவித்துக்

கொண்டிருந்தோம். அந்த ஆள், சிறிது சிறிதாக மரத்தின் நுனிவரையிலே சென்று தழைகளை ஒடித்துத் தள்ளிக் கொண்டிருந்தான். எங்களுக்கு ஒரே மகிழ்ச்சி. விழாப்பந்தலைச் சீரோடு அமைக்க வேண்டிய தழைகள் கிடைத்து விட்டன என்பதில் அளவுகடந்த உற்சாகம். அப்போது மரத்தின் உச்சியிலிருந்து அந்த ஆள் குரல் கொடுத்தான். நாங்கள் திடுக்கிட்டு விழிகளை மரத்தின் நுனிப்பக்கம் திருப்பினோம். அவன் சொன்னான்:

"நான் எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன் பார்த்தீர்களா? இப்போது இதைவிட உயரத்துக்குப் போகப் போகிறேன்."

கீழே நின்ற நாங்கள், அவன் பேச்சைக்கேட்டு அலறிவிட்டோம்.

"ஏ! ஏ! நீ மரத்தின் உச்சியில் இருக்கிறாய். அதற்குமேல் போக இடமில்லை. தயைகூர்ந்து இறங்கிவிடு" என்று கெஞ்சினோம். அவனோ குடி வெறியில் இருக்கிறான். எங்கள் வேண்டுகோள் அவன் காதில் விழவில்லை.

"இதோ பாருங்கள்! இதுதான் மரத்தின் நுனி! இதற்குமேலே ஏறப்போகிறேன்!"

இப்படிச் சொல்லிக்கொண்டேயிருக்கிறான். அவன் சொன்னதைச் செய்திருப்பானேயானால் மரத்தின் உச்சிக்கு மேலே போயிருக்கமாட்டான். மண்ணின் அடித்தளத்தில் இடம் தேடிக்கொண்டிருப்பான். எப்படியோ ஒருவகையாக நாங்கள் அவனை மரத்திலிருந்து கீழே இறங்கச் செய்தோம். தழைகளைக் கட்டித்தூக்கிக்கொண்டு விழாப்பந்தலுக்கு வந்து சேர்ந்தோம்.

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்."

என்ற குறள் எவ்வளவு பொருத்தமாக விளங்குகிறது, அந்த நிகழ்ச்சியை நினைத்திடும்போது! ஒரு மரத்தின் நுனிக்கொம்பில் ஏறியவர் அதையும் தாண்டி மேலும் ஏற முனைந்தால், அதுவே அவரின் உயிருக்கு முடிவாக அமைந்துவிடும்.

மரம் - நுனிக்கொம்பு - அதனையும் கடந்து ஏற நினைத்தல் - ஆகியவற்றை வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஒப்பிட்டுப் பார்த்து வலிமையை அறிந்து நடந்திடவேண்டும் என்பதே அக்குறள் மொழியின் கருத்தாகும்.

அதிகாரம் - 48 - வலியறிதல்; பாடல் - 476





"ஊடல் ஊடல் என்று மிகவும் சிறப்பித்துப் பேசுகிறார்களே; ஊடலுக்குப் பின் ஏற்படும் கூடலுக்கு இணையான இன்பம் எதுவுமே இல்லையென்று பெருமையாகக் கூறுகிறார்களே; அதையும் என் மனைவியிடம் அனுபவித்துப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசை எழுந்தது எனக்கு!"

என்றான் கிள்ளி என்பவன், தன் நண்பன் நல்லி என்பவனைப் பார்த்து! நல்லி, சிரித்துக்கொண்டே கேட்டான் - "முயற்சி செய்தாயா? அதில் வெற்றி கண்டாயா" என்று! "நான் நினைத்தது ஒன்று! நடந்தது ஒன்றாக முடிந்துவிட்டதப்பா!" என்றான் கிள்ளி, சோகத்துடன்!

"விபரமாகச் சொல்! உன் கதையைச் சிறிது சுவைக்கிறேன்."

"வீட்டுக்குள் நுழையும்போதே முகத்தை வெறுப்பாக வைத்துக்கொண்டு நுழைந்தேன். 'ஏன் இப்படி வாட்டமாக இருக்கிறீர்கள் கண்ணாளா?' என்று என் மனைவி கேட்பாள் என்று எதிர்பார்த்தேன். அதை அவள் பொருட்படுத்த வேயில்லை. உணவருந்துவதற்கான தட்டினை எடுத்துவந்து கூடத்தில் பொத்தெனப் போட்டாள்! நான் எப்போதும் கலகலவென்று பேசிக்கொண்டே சாப்பிடுகிறவன், அன்று ஊமைபோல உட்கார்ந்து சாப்பிட்டு முடித்தேன்."

"சாப்பிட்ட பிறகு படுக்கையறைக்குப் போயிருப்பாய். உன் மனைவி வந்திருப் பாள். படுக்கையில் வேறுபக்கமாகத் திரும்பிக்கொண்டு படுத்திருப்பாய்! அவள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு உன் தோளைத் தொட்டு இழுத்திருப்பாள்! பிறகு இருவரும் மாறிமாறி ஊடல் புரிந்திருப்பீர்கள். அதன் பின்னர்..."

"ஏய் நல்லி! சும்மா இரு! ஊடலாவது மண்ணாங்கட்டியாவது. நான் சொல்லி முடிப்பதற்குள் அவசரப்படுகிறாயே! அவள் என்னைத் தொடுவாள்! தூக்கத்தில் புரள்வதைப்போல என்மீது கையைப் போடுவாள்! நான் மேலும் ஊடல் விளையாட்டு நடத்தலாம்; பிறகு கூடலில் எல்லையற்ற இன்பம் பொங்கும் என்று நினைத்துத் தூங்குவதுபோலத் திரும்பிப் படுத்திருந்தேன். அவளிடமிருந்து எந்தவிதமான குறிப்பும் கிடையாது. பிறகு யோசித்தேன். 'அறையிலிருந்து வெளியேபோய்த் தாழ்வாரத்தில் குளிரில் படுத்துக் கொள்வோம்; அப்போது துடித்துப்போய் வந்து என்னை அழைத்துக்கொண்டு போவாள்' என்று நம்பி, என் முடிவை - நடைமுறைப்படுத்தினேன்."

"ஓ! சரியான ஆளடா நீ கிள்ளி! நீ தாழ்வாரத்தில் படுத்து, குளிரில் நடுங்குவதைக்கண்ட உன் மனைவி ஓடோடி வந்து உன்னைத் தழுவிக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாளாக்கும்!"

"ஓடோடி வந்தது உண்மை! வந்து என்ன செய்தாள் தெரியுமா? படுக்கையறைக் கதவைத் தாழிட்டுக்கொண்டு போய்ப் படுத்துவிட்டாள்!"

"அய்யய்யோ! உன் கதி? உன் ஊடல் என்ன ஆயிற்று?"

"என்ன ஆயிற்று! ஊதற் காற்றில் கையது கொண்டு மெய்யது போர்த்தி இரவு முழுதும் தாழ்வாரத்தில் தவித்தேன் - நன்றாகச் சளி பிடித்துக் கொண்டது!"


நல்லி, ஒலியெழுப்பிச் சிரித்தான். கிள்ளியின் முகத்தில் அசடு வழிந்தது. இருவரும் பேசிக்கொண்டே ஆற்றங்கரைமீது நடந்து கொண்டிருந்தனர்! ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அப்போது ஒருவன் "இந்த வெள்ளத்தில் நீச்சல் அடிக்கப் போகிறேன்" என்று அறைகூவல் விடுத்தவாறு ஆற்றில் குதித்து நீந்தினான். சில நொடிகளில் அவனை வெள்ளம் இழுத்துச் சென்றுவிட்டதைக் கிள்ளியும் நல்லியும் கண்டனர்.

"என்னப்பா இது? இவ்வளவு முட்டாளாக ஆகிவிட்டான்! வெள்ளத்தின் வேகம் தெரிந்திருந்தும் நீச்சலடிக்கச் சென்று சிக்கிக்கொண்டானே; பாவம்!" என்றான் கிள்ளி!

"நீ ஊடல் நடத்திய கதைதான் இதுவும்! நண்பா! ஆற்று வெள்ளம் அடித்துச் செல்லும் என்று தெரிந்தும் அதில் நீச்சல் அடிக்கப் பாய்பவனைப் போலத்தான், தன் ஊடல் பயன்படாது எனத் தெரிந்தும், ஊடல் செய்ய முனைகிறானே; அவன் நிலையும் இப்படித்தான் ஆகிவிடும் என்று வள்ளுவர் எழுதிய குறளை நீ படித்ததில்லையா?" என்று கேட்டான் நல்லி!

"உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து."

அதிகாரம் - 129 - புணர்ச்சி விதும்பல்; பாடல் - 1287



அது ஓர் எளிய குடும்பம்; எனினும் எல்லாவற்றிலுமே ஏற்றம் தவழும் குடும்பம்.

இல்லக்கிழத்தியோ தங்கச்சிலை; மங்கல விளக்கு! தன்னைப்போலவே தன் குடும்பமும் மங்கலம் நிறைந்ததாக - மற்றவர் வியந்து போற்றிடும் மலர்த் தோட்டமாக விளங்கிட வேண்டுமென்று நினைப்பவள்; அதற்காக உழைப்பவள்.

வாழும் வீடு சிறியதுதான். எனினும் அவளது விழிகளுக்கு ஒரு தூசும் பட்டுவிடக்கூடாது. அடிக்கடி குப்பைக் கூளங்களைப் பெருக்கித்தள்ளி வீட்டின் பொலிவைப் பெருக்கியவண்ணம் இருப்பாள்.

உடையாயினும், உறங்கிட உதவும் படுக்கையாயினும் கலையழகோடு அவளுக்குக் காட்சியளிக்க வேண்டும். அவற்றில் கறை ஏதும் இருந்திடக்கூடாது என்பதில் அவள் கருத்தாக இருப்பாள்.

ஆனால், அவளுடைய பிள்ளைகளில் ஒருவனோ தான்தோன்றியாக - தறுதலையாக - நடக்கக்கூடியவன். தூய்மைக்கும் அவனுக்கும் வெகுதொலைவு.

துப்புரவுக்கும் அவனுக்கும் ஒப்புரவு கிடையாது. என்றாலும், பிறர் குறையைப் பற்றிப் பேசுவதென்றால் அவனுக்குப் பொல்லாத ஆசை! பொழுதுபோக்கு!

தன் உடையிலும் உடலிலும் மலையளவு அழுக்கினைச் சுமந்துகொண்டு, அடுத்தவரிடம் உள்ள கடுகளவு கரும்புள்ளியைக் கடல் அளவாகப் பெருக்கிக் கூறுவது அவனுக்கு வாடிக்கை.

ஒருமுறை ஊர் சுற்றிவிட்டு வீடு திரும்பிய அவன், நேரே படுக்கையறைக்குச் சென்றான். அங்கே சுவரை ஒட்டியுள்ள ஒரு தட்டிலிருந்து, ஏதோ ஒரு பொருளை எடுப்பதற்காகப் படுக்கைமீது ஏறினான்.

அரவம் கேட்ட அன்னை, அடுக்களையிலிருந்து எட்டிப் பார்த்தாள். அவன் படுக்கையில் ஏறி நிற்பதைப் பார்த்ததும் பதறிப் போனாள். வேலையை அப்படியே போட்டுவிட்டு அதட்டிக்கொண்டே ஓடி வந்தாள். அதற்குள் அவன் கீழே இறங்கிவிட்டான்.

ஆயினும் மல்லிகை விரிப்பைப்போலத் துல்லியமாக விளங்கிய அந்தப் படுக்கையோ, அவனது அழுக்கேறிய அடிச்சுவடுகளால் ஆங்காங்கு கறுப்புநிறம் பூசிக்கொண்டு கிடந்தது.

"ஏண்டா, உனக்கு எள்முனையளவாவது பொறுப்பு வேண்டாமா? இப்படித் தான் அழகான படுக்கையை அலங்கோலமாக்குவதா? உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன், வெளியில் சென்று வந்தவுடன் கால்களைக் கழுவ வேண்டு மென்று. நாள்தோறும் கூறுகிறேனே; ஏன் இப்படித் திருந்தவே மறுக்கிறாய்?"

வருந்தி வசைபாடினாள் அந்தத் தாய்.


"நீ எவ்வளவுதான் அறிவுறுத்தி என்ன? அடித்துக்கொண்டு என்ன? தான்போன போக்கிலேயேதானே அவன் போய்க்கொண்டிருக்கிறான்! ஆனால், இத்தகைய இயல்பு கொண்டவர்களைப் பற்றியும் வள்ளுவர் சொல்லாமல் விடவில்லை. வெளியே சேறு போன்றவற்றை மிதித்துவிட்டு வந்த ஒருவன், தன் கால்களைக் கழுவாமலே படுக்கையை மிதித்துக் கறைப்படுத்துவது எதைப் போன்றதாம் தெரியுமா? சான்றோர்கள் குழுமியுள்ள ஒரு கூட்டத்தில் அறிவிலி ஒருவன், தனக்கு எல்லாம் தெரிந்திருப்பதைப்போலப் புகுவதைப் போன்றதாம்! அதைவிடப் பேதைமையே இல்லை என்கிறது குறள்! இனியாவது நம் பிள்ளை, அந்தப் பேதைமையிலிருந்து விடுதலை பெறுகிறானா என்று பார்ப்போம்."

இவ்வாறு கூறிக்கொண்டே அவள் கணவன் உள்ளே நுழைந்தான்.

அந்தக் காட்சியை விளக்கும் ஓவியம்தான் இந்தக் குறள்:

"கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழா அத்துப் பேதை புகல்."

அதிகாரம் - 84 - பேதைமை; பாடல் - 840



அம்மா அரிவை அவள்! ஆம்; அழகிய மாமை நிறத்தையுடையவள் என்று வள்ளுவர் அந்த நிறத்துக்குச் சிறப்புக் கூறுகிறார். மாம்பழ நிறத்துக்கும் மரகதக் கல்லின் நிறத்துக்கும் இடைப்பட்ட நிறம் போலும் அந்த நிறம். அந்தப் புது நிறப் பேரழகுப் பெட்டகத்தைத் தன் இல்லத்தரசியாகப் பெறுகிறான் கொடுத்துவைத்த குடுமிக்காளையொருவன். இல்வாழ்வின் இன்ப ஊற்று - உழைத்தலுத்த களைப்பினைப் போக்கும் கொம்புத்தேன் - 'புணர்ச்சி மகிழ்தல்'' எனும் கட்டமன்றோ! இரண்டு உள்ளங்கள் பாலும் கற்கண்டுமாகி, ஈருடல்கள் பின்னலிட்டக் கூந்தல் போலாகி, கடவுளே ஒருவேளை எதிரே வந்து நின்று

"வேண்டுகிற வரம் தருகிறேன்" என்று அழைத்தாலும் விழிதிறந்து பார்க்காத நேரமன்றோ அந்த நேரம்!

புணர்ந்து மகிழ்ந்தனர் - அதனால் மகிழ்ந்து புணர்ந்தனர். மஞ்சத்தில் பரப்பிய மல்லிகை முல்லைகளுக்குச் சத்தம் போட்டு அழச் சக்தியில்லை. பாவம், நசுங்கியும் கசங்கியும் தங்கள் வாழ்வை முடித்துக்கொண்டன. வாழ்வின் சுவையைத் தெவிட்டாது அனுபவித்து, அந்தக் காதலர் இரவை வாழ்த்திக் கொண்டிருந்தனர். கற்பகம் சேர்ந்த கணவனின் மார்பில் கனதனம் இரண்டும் தைத்து அப்புறம் உருவிற்றோ என்று அவன் முதுகினை அவள் தடவிப் பார்த்தாள். அவனோ அவளது இதழ்க் கனிகளைப் பறிப்பதற்குத் தன் உதடுகளைப் பயன்படுத்தி அவற்றை மீட்க முடியாமல் தவித்தான். வீணைகளின் நரம்புகள் மீட்டப்பட்டன. இதயங்களின் துடிப்புகள் தாளங்களாக ஒலித்தன. இரண்டறக் கலந்த மூச்சு, இசையாகி ஒலித்துக்கொண்டிருந்தது.

மிகக் குறுகிய ஓய்வு! அந்த இடைவேளையிலும் அவன் கைகள், அவள் இடையைத் தழுவிக்கொண்டுதானிருந்தன.

அவள், அவனைப் பார்த்துப் புல்லாங்குழல் குரலில் கேட்டாள்.

"அத்தான்! இந்த இன்பம் எப்படியிருக்கிறது? இதற்கு ஏதாவது உவமை கூறமுடியுமா?"

அவன், அவளை இறுக அணைத்துக்கொண்டு விடையளித்தான்:

"கண்ணே! இதற்கு நிகராக வள்ளுவர், ஓர் இன்பத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்."

"என்னத்தான் வேடிக்கை! இதற்கு நிகரான இன்பமும் உள்ளதோ? அப்படியொன்றை வள்ளுவர் கூறியிருக்கிறாரா?"

"ஆமாம், தங்கம்! சொல்கிறேன் கேள்! ஒருவன், தன்னுடைய உழைப்பாலேயே ஒரு வீட்டைக் கட்டி, அதில் தானே பாடுபட்டுப் பொருளை ஈட்டிக்குவித்து, அப்படிக் குவித்த பொருளை மற்றவர்களுக்கும் பகுத்துக் கொடுத்து, தானும் உண்ணும் போது ஏற்படுகிற இன்பத்தை இந்த இன்பத்துடன் வள்ளுவர் ஒப்பிடுகிறார்."


"அத்தான்! தன்னம்பிக்கையுடன் உழைத்தல், பயனை விளைத்தல், விளைத்த பயனைப் பிறர்க்கும் பகிர்ந்தளித்தல், எவ்வளவு சிறந்த இன்பம் என்பதை வள்ளுவர் எவ்வளவு அழகாகச் சித்திரித்திருக்கிறார்."

"ஆமாம் என் உயிரே! புணர்ச்சி மகிழ்தலோடு இப்படியொரு புதுமைக் கருத்தை ஒப்பிட்டுக்காட்டிய புலவனை உலகில் வேறெங்கும் காண்பது அரிது!"

இப்படிக் குறளைப் புகழ்ந்தவாறு இருவரும் கூடிக்களித்தனர். அந்தக் குறள்தான் இது:

"தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு."

அதிகாரம் - 111 - புணர்ச்சி மகிழ்தல்; பாடல் - 1107



இருவேறு நாடுகளைச் சேர்ந்த புலவர் பெருமக்கள் இருவர், தமிழ் விழா ஒன்றில் சந்தித்துக்கொண்டனர். அவர்களின் சந்திப்பு, விழாமேடைச் சந்திப்பாக மட்டும் அமையவில்லை. அவ்வாறு இருந்திருக்குமேயானால், நலம் விசாரிப்பதோடு அவர்தம் உரையாடல் முற்றுப் பெற்றிருக்கக்கூடும். விழாவில் இருவருமே விரிவுரையாற்றினர். வல்லினத்தில் உள்ள 'த' என்ற எழுத்தும் மெல்லினத்தில் உள்ள 'ம' என்ற எழுத்தும் இடையினத்தில் உள்ள 'ழ' என்ற எழுத்தும் இணைந்தே 'தமிழ்' எனும் மொழிப்பெயர் உருவாயிற்று என்பதை ஒரு புலவர் விளக்கினார். முக்கனியில் 'பலா' வல்லினம் என்றும் 'வாழை' மெல்லினம் என்றும் 'மா' இடையினம் என்றும் மற்றொரு புலவர்

எடுத்துக் கூறினார். மூன்று கனிகளின் தோலையும் உள்ளேயிருக்கும் சுளை அல்லது பழத்தின் தன்மையையும் எடுத்துக்காட்டாகக் கொண்டு இனவகையை அவர் பிரித்துரைத்தார். விழா முடிந்த பிறகு, புலவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. அப்போது அவர்களிடையே நடைபெற்ற கருத்துரையாடல் வருமாறு:

"தங்கள் நாட்டு வளப்பமெல்லாம் எப்படி?"

"காலத்தில் மழை பொழிகிறது. வறுமைக்கு எங்கள் நாட்டில் வறுமை! மொழியார்வம், கலையார்வம் சிறந்தோங்கி நிற்கிறது. உழவும் வாணிபமும் உயர்ந்து விளங்குகின்றன. தங்கள் நாட்டு நிலை யாதோ?"

"தாங்கள் மொழிந்ததற்கு முற்றிலும் மாறுபட்ட நிலை. நாட்டு மக்கள் நடைப்பிணங்களாகத் திரிகிறார்கள். நீண்ட நாட்களுக்குப்பிறகு இன்றுதான் உங்கள் நாட்டைக் கண்ட மகிழ்ச்சியில் சற்று ஆறுதலடைகிறேன்."

"மன்னர் எப்படியிருக்கிறார்?"

"எங்கள் நாட்டு மன்னரா? அவரை யாரும் அசைத்திட இயலாது. மிக்க வலிமை கொண்டவர். அவர் போக்கில் குறுக்கிடும் துணிவு யாருக்கும் கிடையாது."

"அப்படியா! எங்கள் மன்னர், ஒரு சாதாரணக் குடிமகனின் கருத்தைக் கூடக் காது கொடுத்துக் கேட்பவராயிற்றே! உங்கள் மன்னர் முற்றிலும் மாறாக அல்லவோ இருக்கிறார்!"

"ஆமாம்! அவரை இடித்துப் பேசவோ அறிவுரை கூறவோ எங்கள் நாட்டில் யாருமே முன்வர மாட்டார்கள். உங்கள் நாட்டில் மிகச் சிறியவருக்கு இருக்கிற உரிமை, எங்கள் மண்ணில் மிகப் பெரியவருக்குக்கூடக் கிடையாது."

"அய்யகோ! அயல் நாடொன்றில் இப்படி ஓர் அரசு நடைபெறுவது கண்டு வருந்துகிறேன். ஆனால், ஒன்று புலவரே! உமது மன்னன் எவ்வளவு வலிவுள்ளவனாக இருந்தாலும் அவனை அழித்திட யாரும் முன்வரத் தேவையில்லாமல் அவனே, தன் அழிவைத் தேடிக்கொள்வான்."

"அஃதெப்படி? அவ்வளவு உறுதியாகக் கூறுகிறீர்கள்?"

"வள்ளுவர் உரைத்திருப்பதை மறந்துவிட்டீரா? இடித்துச் சொல்லித் திருத்துகிற பெரியவர்களின் காவலைப் பெற்றிராத மன்னவன், தன்னைக் கெடுப்பவர் யாருமின்றித் தானே கெட்டழிந்து விடுவான் - என்று அழுத்தந் திருத்தமாக எழுதியிருக்கிறாரே!"

புலவர்களின் உரையாடல் முடிந்தது. இருவர் உள்ளத்திலும் அந்தக் குறள் அழியாத ஓவியமாக ஒளிவிட்டுக் கொண்டிருந்தது.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்."

அதிகாரம் - 45 -பெரியாரைத் துணைக்கோடல்; பாடல் - 448



அவன் மீது உயிரையே வைத்திருந்தேன். அவனையும் என்னையும் யாராலும் எந்த சக்தியாலும் பிரிக்கமுடியாது என்று திடமாக நம்பி, அதன் காரணமாகப் பெருமை கொண்டிருந்தேன். அவன் வாழ வேண்டுமென்பதற்காக நான் நஞ்சு அருந்த வேண்டுமென நிபந்தனை விதிக்கப்படுமேயானால், அதற்கும் உளமாரத் தயாராக இருந்தேன்.

அவனும் என்பால் கொண்டிருந்த அன்பு, அளவிட முடியாதது என்று நான் மட்டும் அல்ல; எங்களை அறிந்தவர்கள் அனைவருமே புகழ்ந்துரைத்தனர். பிறந்த மண்ணை

மீட்கும் போரில் அவன் முன்னணியில் நின்றான். நாள் கணக்கில் முடியுமென எதிர்நோக்கிய போராட்டம் ஆண்டுக்கணக்கில் நடைபெற்றது.

என்னுடையவன் எந்தக் களத்தில் இருக்கிறான் என்ற செய்திகூட எனக்குக் கிட்டவில்லை. ஓரிரு மடல்கள் அவனிடமிருந்து வந்தன. அதன்பிறகு தொடர்பே இல்லை. அவன் பகைவர்களை எதிர்த்து முறியடித்து முன்னேறிக் கொண்டேயிருக்கிறான் என்று, களத்தில் ஊனமுற்றுத் திரும்பிய வீரர்கள் சிலர், எனக்கு அறிவித்தார்கள்.

அந்த வெற்றித் திருமகளின் அணைப்பில் என்னைக்கூட மறந்துவிட்டான் போலும் என்று நினைத்து உருகினேன். ஒரு செய்தி வந்தது; அவன் களத்தில் மார்பில் விழுப்புண் ஏற்று மடிந்துவிட்டான் என்று!

மற்றுமொரு செய்தி வந்தது; அவன் நெஞ்சில் வேல் தாங்கி விழுந்தது உண்மை! ஆனால், இறந்து போகவில்லையாம்! அவனைப் பகைவர்கள் சிறைப்பிடித்து மன்னிப்புக் கேட்கச் சொல்கிறார்களாம். மறுத்தால் மரண தண்டனையென்று மிரட்டுகிறார்களாம். அந்தச் செய்தியைக்கூட அவன் எனக்கு எழுதவில்லை.

பகைவர்களிடம் அவன் கூறிவிட்டதாகக் கேள்விப்பட்டேன்: "சிறையில் செத்து மடிவேன்! அல்லது நீங்கள் என் சிரமறுத்தாலும் ஏற்றுக் கொள்வேன் புன்னகையுடன்! மண்டியிடுதல் - மன்னிப்பு - என்ற சொற்களுக்கு என் வாழ்க்கையில் இடமே இல்லை." - இவ்வாறு என் மனம் கவர்ந்தவன், வீர முழக்கம் செய்தானாம்!

அவன் என்மீது அன்பு காட்டி, உயிர் மீண்டு வருகின்ற அளவுக்கு என்னிடம் இரக்கம் கொள்ளாவிட்டாலும் அவன் எதிரிகளிடம் சரணடையத் தயாராக இல்லை என்று ஊரும் உலகும் புகழுகிறபோது - அவன் என்னைப் பிரிந்திருப்பதைக்கூட மறந்துவிட்டு என் செவிகளில் இன்பம் பெருக்கெடுக்கிறது.

விரும்பிய காதலன் மீண்டு வந்து அன்பு செய்யமாட்டார் என்றாலும் அவரைப்பற்றிப் புகழக் கேட்பது என் செவிக்கு இன்பமாக இருக்கின்றது.

காதலனின் பிரிவால் ஏற்படும் துன்பத்தைக்கூட, அவனுக்குக் கிடைக்கும் புகழை எண்ணி அவளால் தாங்கிக்கொள்ள முடிகிறது என்பதை விளக்குகிறது; இதோ - இந்தக் குறள்!

"நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு."

அதிகாரம் - 120 - தனிப்படர் மிகுதி; பாடல் - 1199



"துறவற வாழ்வு மேற்கொள்ள முடிவு செய்துவிட்டேன். அதற்குத் தாங்கள் எனக்கு வழங்கும் அறிவுரை என்னவோ?"

நடுத்தரமான வயதும் - நல்ல உடற்கட்டும் - விழிகளில் மங்காத ஒளியும் கொண்ட ஒருவன், வள்ளுவரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டவாறு தலை வணங்கி நின்றான்.

"முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலைக்கு உரியவர். துறந்தவரைப் போல நடிப்போரை நான் துறவி என அழைக்கமாட்டேன். நடை, உடை, பாவனைகளால் தங்களைத் துறவியெனக் காட்டிக்கொண்டு மக்களை ஏமாற்றுவோர் பெருகிவருகிறார்கள். அவர்களை நான் வெறுக்கிறேன். அவர்களிடம் அறிவைப் பறிகொடுக்கும் மக்களைக் கண்டு இரக்கம் கொள்கிறேன். துறவு என்பது வேடத்தில் இல்லை. முதலில் அதற்கு உள்ளம், பக்குவப்பட வேண்டும்."

வள்ளுவர், துறவுபற்றித் தான் கொண்டுள்ள கருத்தைக் கோடிட்டுக் காட்டினார்.

"அதனால்தான் தங்களை நாடி வந்தேன். என் உள்ளம் பக்குவமடைய உற்றது கூறுவீராக."

வள்ளுவர், மென்சிரிப்பொன்றைத் தவழவிட்டவாறு அவனைப் பார்த்துச் சொன்னார்.

"பற்றுக்களைப் பற்றிக்கொண்டு விடாதே! அப்படிப் பற்றிக்கொண்டால் துன்பங்களும் உன்னை விடாமல் பற்றிக் கொள்ளும்."

இதைக் கூறிவிட்டு, இந்தக் கருத்துச் செழித்துக் குலுங்கும் குறளையும் பாடிக் காட்டினார்.

"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு."

குறளைக் கேட்டதும் வந்தவன், வள்ளுவப் பெருமகனாரை வணங்கி;

"பெரியீர்! இந்தக் குறள்மொழி போதும் என் துறவு நெறி காப்பதற்கு! விடையருள்க!" என்றான். "பற்றுக்களை அறவே விட்டு விடுவேன்" எனச் சூளுரைத்துக் கிளம்பிய அந்தப் புதுத் துறவியின் செவியில் வள்ளுவர் குரல் விழுந்தது. என்ன குரல் அது?

"பற்றுக!"

என்பதுதான் அந்தக் குரல்! அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். "இப்போதுதானே 'பற்றினை விடுக' என்றுரைத்தார்! அதற்குள் 'பற்றுக' என்கிறாரே. இஃதென்ன முரண்பாடு?" என்று திகைத்து நின்றான்.

"பற்றுக்களை விட்டொழிப்பதற்கு ஒரு பற்றைப் பற்றவேண்டும். அதுவே துறவுக்குரிய இலக்கணம்."

வள்ளுவர் விளக்கினார். வந்தவனுக்குப் புரியவில்லை! எந்தப் பற்றும் கூடாது என்கிறபோது, ஒரு பற்று மட்டும் எங்கிருந்து வந்தது? அவனே வினாக்குறியானான்.

"எதிலும் பற்றில்லாதவராக யார் இருக்கிறாரோ அவரிடம் மட்டும் பற்றுக் கொள்ளவேண்டும். உன் பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அத்தகையோரிடம் நீ கொள்ளும் பற்றுத்தான் துணை நிற்கும்."

குறளையும் பாடிக் காட்டினார் வள்ளுவப் பெருந்தகை:

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

பற்று விடுதல் - பற்றினைக் கொள்ளுதல் - இரண்டுக்கும் கிடைத்த விளக்கமென்னும் ஒளி கொண்டு, துறவற வாழ்க்கையில் சிறந்து விளங்கினான் வள்ளுவரைக் காண வந்தவன்.

அதிகாரம் - 35 - துறவு; பாடல் - 347, 350



பொன்னி, வான் நோக்கியவாறு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். “என்னடி, முகிற்கூட்டத்தின் அணிவகுப்பைக் கண்டு மயங்கிப் போய்விட்டாயா?” எனக் கேட்டவாறு தாமரை, அவளருகே வந்தாள். பொன்னி மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு முகத்தில் தேக்கிய புன்னகை, நீடிக்காமல் மின்வெட்டுப்போல் மறைந்துவிட்டது. தாமரை, அவளை நோக்கிக் கேட்டாள்:

"ஒரு நாளைக்கு எத்தனை நாழிகை?" என்று! தயக்கம் சிறிதுமின்றிப் பொன்னி பதில் அளித்தாள்: "ஒரு நாளைக்கு நானூற்றி இருபது நாழிகை" என்று! தாமரைக்கு வியப்பு மேலிட்டது.

"என்ன பொன்னி, புதிர் போடுகிறாய்? எனக்கும் அல்லிக்கும் இதுபற்றித்தான் சற்று நேரத்துக்கு முன் தகராறு! அல்லி சொன்னாள், ஒரு நாளைக்கு ஐம்பது நாழிகையென்று! நான் சொன்னேன், அறுபது நாழிகையென்று! நான் சொன்னதுதான் சரியானது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இருந்தாலும் உன்னையும் கேட்டுப் பார்க்கலாம் என்று ஒரு பேச்சுக்குக் கேட்டால், நீ ஒரேயடியாக நானூற்றிஇருபது நாழிகை என்கிறாயே!"

பொன்னி, வேதனை கலந்த ஒரு சிரிப்பை உதிர்த்தாள்!

"உனக்கு ஒரு நாள் என்பது அறுபது நாழிகைக் கணக்கு! ஆனால், என்னைப் பொறுத்தவரையில் நான் சொன்ன கணக்கே பொருந்தும்."

தாமரைக்குப் புரியவில்லை. பொன்னியிடம் விளக்கம் பெற விரும்பினாள்.

"யாரும் சொல்லாத ஒரு கணக்கையல்லவா நீ சொல்லுகிறாய்! ஒரு நாளைக்கு நானூற்றிஇருபது நாழிகை என்றால்; அப்படிச் சொல்பவர்க்கு மூளைக் குழப்பமோ என்றுதான் எல்லோரும் கேட்பர்!"


அதைக் கேட்ட பொன்னி, தாமரையின் தோளில் கையைப் போட்டவாறு மீண்டும் ஒரு பெருமூச்சுடன் பேச்சைத் தொடர்ந்தாள்.

"தாமரை! நீ குறளில் படித்ததில்லையா? வெளிநாட்டுக்குச் சென்ற காதலன் திரும்பி வரும் நாளை எண்ணி எண்ணி ஏங்கும் காதலிக்கு, ஒருநாள் என்பது ஏழுநாளைப் போலத் தோன்றும் என்று வள்ளுவர் எழுதியிருக்கிறாரே! அதே நிலைதானே எனக்கு! தொலைவில் உள்ள வெளிநாடு சென்றுள்ள என்னுடையவருக்காக ஏங்கித் தவிக்கும் எனக்கு, ஒருநாள் பொழுது என்பது நானூற்றிஇருபது நாழிகைதானே! அதாவது ஏழு நாள்தானே."

இப்போது பொன்னியின் கண்களில் நீர்த்துளிகள் வழிந்தன; தாமரை அவளுக்கு ஆறுதல் கூறினாள்.

"ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேட்சென்றார்
வருநாள் வைத்துஏங்கு பவர்க்கு."

அதிகாரம் - 127 - அவர் வயின் விதும்பல்; பாடல் - 1269



என்னுடைய நண்பன் ஒருவன் இருக்கிறான். மிகவும் குறும்புக்காரன். மனிதர்களுடைய வாழ்க்கையில், இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவது இயற்கைதான். இன்பத்தை எத்துணை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோமோ அத்துணை மகிழ்ச்சியுடன் துன்பத்தையும் ஏற்றுக்கொள்வதுதான் உறுதி படைத்த உள்ளத்துக்கு அழகு என்பதை உணராதவனல்ல நான்.

அந்த வகையில் என்னை நன்குணர்ந்தவன்தான் என் நண்பன். எனக்குத் தொல்லைகள் வந்த நேரத்திலும் என்னுடன் இருந்தவன்; இருப்பவன். எனினும் நான் குறிப்பிட்டபடி குறும்புக்காரன். ஒருநாள் குறட்பாடல் ஒன்றை முணுமுணுத்தவாறு என்னருகே வந்து உட்கார்ந்தான்.

என்ன குறள் என்று உற்றுக் கவனித்தேன்.

“பற்றற்ற கண்ணும்
பகைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணேயுள”

என்று, குறளை மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

“என்னப்பா! நீ, புதுக் குறள் எழுதுகிறாயா?” என்று கேட்டேன்.

"ஆமாம்! உன்னையும் உன்னைச் சுற்றியிருந்தார்களே சிலர், அவர்களையும் நினைத்துப் பார்த்தேன். குறளில் ஒரே ஓர் எழுத்தை மட்டும் மாற்றினேன். உன் வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது" என்று பதில் அளித்தவன், தான் மாற்றியமைத்த குறளுக்குப் பெருளுங் கூறிடத் தொடங்கிவிட்டான்.

"பற்றற்ற கண்ணும் = ஒருவன் தாழ்வுற்றிருக்கும் காலத்திலும் -

பகைமை பாராட்டுதல் = விரோத உணர்ச்சியுடன் செயல்படுதல் -

சுற்றத்தார் கண்ணேயுள = அவனது சுற்றத்தார் எனக் கூறிக் கொண்டும் அண்ணன், தம்பி என அழைத்துக்கொண்டும் சுற்றியிருந்தார்களே அவர்களி டத்திலே காணப்படும் சிறப்பாகும்."

குறும்புக்கார நண்பனின் குறள் விளக்கம் கேட்டு நான் சிரித்தேன்; "என்னைச் சூழ்ந்திருந்தோர் எல்லோருமா அப்படி ஆகிவிட்டார்கள்? உன்னைப் போன்றவர்கள் இல்லாமலா போய்விட்டார்கள்?" என்று கண்களில் நீர் துளிர்த்தவாறு அவனைத் தழுவிக் கொண்டேன். அவன் விழிகளும் அருவிகளாயின.


"எனக்கொன்றும் தாழ்வு வந்துவிடவில்லை. துன்பங்களை எதிர்த்து நிற்பது தாழ்வாகி விடாது. அதை எதிர்ப்பதற்கும் ஒரு செல்வம் வேண்டும். அந்தச் செல்வத்தை நான் நிறையப் பெற்றிருக்கிறேன். அதுதான் நெஞ்சுறுதி எனும் செல்வம்" என்று நான் அவனுக்கு விளக்கினேன். "என்னமோ, உன்னைச் சுற்றிக்கொண்டிருந்த சிலர், அவர்களேதான் உன் சுற்றத்தாரைப்போலத் தோற்றமளித்துக் கொண்டிருந்தார்கள். உனக்கொரு தீங்கு என்றதும் அவர்கள் விலகியோடிவிட்டது மட்டுமல்ல 'பகைமை' பாராட்டவும் தவறிவிடவில்லை என்பதை எண்ணித்தான் குறளைச் சற்று மாற்றி எழுதினேன்" என்றான் நண்பன்.

'பழைமை' என்ற சொல் இருக்கவேண்டிய இடத்தில், 'பகைமை' என்ற சொல்லை நீ பதித்ததால் எத்துணை விபரீதவிளக்கம் தோன்றிவிட்டது பார்த்தாயா நண்பா! நீ ஏன் அந்தச் சிலருக்காகக் குறளை மாற்றுகிறாய்? இருக்கின்ற குறள், உன்னைப் போன்ற உண்மையான நண்பர்களுக்காகத்தானே ஒலிக்கின்றது! உன் போன்ற நண்பர்களே எனக்குச் சுற்றத்தார்! ஒருவனுக்குத் தாழ்வு வந்த போதும் அவனுக்கும் தனக்கு மிகுந்த பழைய உறவுகளைப் பாராட்டிப் பேசுவதே சுற்றத்தாரின் பண்பு என்ற நிலையை விளக்கவே, வள்ளுவர் குறள் எழுதியுள்ளார். எனவே தயவு செய்து, நீ திருத்திப் பாடிய குறளை மறந்துவிட்டு - அதாவது உன் திருத்தக் குறளை விட்டுவிட்டுத் திருக்குறளைப் பாடு" என்றேன் நான். அவனும் திருக்குறளைப் பாடினான்.

அது, இது:

"பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள."

அதிகாரம் - 53 - சுற்றந் தழால்; பாடல் - 521



விறகு வெட்டும் தொழில் அவனுக்கு! அவற்றைத் தலையில் சுமந்து விற்றுவரும் வேலை அவளுக்கு! ஒவ்வொரு நாளும் கோடரி சுமந்து காட்டுக்குச் செல்வான். மரங்களை வீழ்த்தி, கிளைகளை வெட்டி விறகுச் சுமையுடன் வீட்டுக்கு வருவான்.

முதல்நாள் கொணர்ந்த விறகுகளை, மறுநாள் அவள் விற்பனை செய்யக் காலைமுதல் மாலை வரை கடும்வெயிலில் அலைவாள்.

காலையில் பிரிந்திடும் அந்தக் காதல் பறவைகள், இரவுதான் கூட்டுக்குத் திரும்புவது என்பது வாடிக்கையாகிவிட்ட வாழ்க்கை!

கொளுத்தும் கோடையில் அலைந்து விறகு விற்றுத் திரும்பியவளின் மேனி கறுத்திருப்பதைச் சுட்டிக்காட்டிக் கவலை கொள்வான் காதலன்.

ஏற்கனவே என் நிறம் கறுப்புத்தானே எனக் கேட்டு, அவன் மடியில் சாய்வாள் அவள். கறுப்புத் திராட்சைக்கு இனிப்பு அதிகமென்று, அவளைச் சுவைத்து மகிழ்வான் அவன்.

தன்னைத் தழுவிடும் அவன் கரங்கள், கோடரி பிடித்து, விறகு வெட்டி வெட்டிக் காய்ப்பேறிக் கிடப்பதை வேதனையுடன் தடவிப்பார்த்து, அந்த உள்ளங்கைகளில் தன் உதடுகளை அழுத்தி ஒத்தடம் கொடுப்பாள்.

"என் கைகள் முரடாக இருப்பது உனக்குத் தொல்லையாக இருக்கிறதா?" எனத் தோகையிடம் அவன் கேட்க, "இல்லை; இல்லை! உன் முரட்டுத்தனத்திலேதான் காலைமுதல் நான் வேலைசெய்த களைப்பெல்லாம் நீங்குகிறது" என்று அவள் பதில் சொல்ல - இருவருமே தாங்கொணாத மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொள்வர்.

ஒருநாள் முழு நிலவு! அந்த நிலவொளியில் இன்பங்காண இருவருமே விழைந் தனர். அந்தச் சிறிய வீட்டுக்கெதிரே மாமரம் ஒன்று! அதன் நிழல் மறைவிலே பாய்போட்டுப் படுத்துக்கொண்டு நிலவின் அழகொளியைப் பருகினர். 'அந்த நிலவுகூடத் தன்னை மறைக்கும் முகிலை விலக்குகிறது பார்' என்று அவள் மார்பகத் துத் துகிலை விலக்கினான் அவன். மாமரத்தின் கீழே காதல் மாகாவியம் இயற்றினர்.

அந்த இன்ப நாளுக்கு அடுத்தநாள் அவன், அவளை விடுத்து வெளியூர் சென்றான். ஒருநாள் பிரிவுதான். அவளோ அந்த மாமரத்தடியில் உட்கார்ந்தவாறு அவன் வருகைக்காகக் காத்திருந்தாள். உண்ணவில்லை, உறக்கமும் வரவில்லை; பொழுதும் தொலைந்தது!

இரவோ, அன்று அவளுக்கு ஒரு பகைபோல வந்தது. அப்போதும் மரத்தடியில்தான் அமர்ந்திருந்தாள். நிலவுவேறு தோன்றி, முதல்நாள் அந்த மரத்தடியில் அவர்கள் எழுதிய இன்ப இலக்கிய ஏட்டினைத் திரும்பத் திரும்பப் படித்துக் காட்டியபடி இருந்தது.

அவள் அசைவற்றுப் போனாள். அவளையறியாமலே அடிமரத்தில் சாய்ந்தாள். விழிகள் என்னவோ அப்படியே குத்திட்டு நின்றன. இப்படியே நேரம் கழிந்தது.

நீண்ட நேரத்துக்குப் பிறகு அவன் திரும்பி வந்தான். வந்தவன் எதிரே வராமல் பின்புறமாக வந்து, தோளில் தலையை வைத்து அவள் கழுத்தை இதழ்களால் பற்றினான். திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தாள் அவள்.

"இத்தனை நாழிகை, நெஞ்சத்தை எங்கே பறி கொடுத்திருந்தாய்? நிலவின் அழகிலா?"


எனக் கேட்டான்.

"இல்லை! இல்லை! உன்னைக் காணாமற் கலங்கிய என் நெஞ்சம், நீ வருகிறாயா என்று தொலைதூரம் பார்ப்பதற்காக இந்த மரக்கிளையிலே ஏறிக் கொண்டிருந்தது. இப்போதுதான் கிளையைவிட்டுக் கீழே இறங்கியது."

என்று பதில் சொல்லி, அவனை அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டாள் அவள்.

"கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறும்என் நெஞ்சு"

அதிகாரம் - 127 - அவர் வயின் விதும்பல்; பாடல் - 1264



நடைபெற்ற பெரும் போரில் தோல்வி ஏற்பட்டுவிடுகிறது. படையின் வலிவு குன்றிவிடுகிறது. வெற்றி பெற்றவன், இந்தச் சூழ்நிலையைப் பயன் படுத்திக்கொண்டு, தோல்வி அடைந்த படையினர்மீது இடையூறுகளைத் தொடர்ந்து பொழிந்துகொண்டேயிருக்கிறான்.

பழிவாங்கும் படலம்!

வஞ்சம் தீர்க்கும் முயற்சி!

எதிரியை, இல்லாமலே அழித்துவிட வேண்டும் என்பதற்கான திட்டங்கள்!

அதற்கென எத்தனை சூழ்ச்சிகள் வலைகளாகப் பின்னப்பட வேண்டுமோ அத்தனையும் நடைபெறுகின்றன.

போரில் சிறைப்பட்ட வீரர்களை நையப்புடைக்கச் செய்கிறான். அவர்களைப் பட்டினி போட்டே கொன்றுவிட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிறான்.

தோற்றுவிட்ட பகை மன்னன் போர்க்களத்தில் காட்டிய வீரத்தையும் தீரத்தையும் புலவர்கள் பலர் பாராட்டிக் கவிதைகள் இயற்றினர்.

வெற்றி பெற்ற தன்னைப் பற்றிப் பாடிய பாடல்கள் மட்டுமே நாட்டில் கேட்க லாமென்று உத்தரவு பிறப்பித்துவிட்டு, அதே நேரத்தில் எதிரியின் போர்த்திறனைப் புகழ்ந்து பாடிய கவிஞர்களையெல்லாம் சிறைப் பறவைகளாக ஆக்கிவிடுகிறான்.

தோற்றுவிட்ட மன்னவனின் போர்த்திறமோ புகழோ யாராலும் எடுத்துச் சொல்லப்படக் கூடாதென்று கடுமையான அறிவிப்பை வெளியிட்டுவிடுகிறான்.

கையூட்டு வழங்கிச் சில புலவர்களைத் தன்வயப்படுத்திக்கொண்டு, தன் பெருமைகளைப் பாடச் செய்திட்டான்.

பகை மன்னனின் ஆருயிர்த் தளபதிகள் சிலர் படுகொலைக்கும் ஆளாக்கப் பட்டனர்.

பகை நாட்டின்மீது போர் தொடுத்து, பிணங்களைக் குவித்து, களத்திலே வெற்றிக் கொடி நாட்டியதைப் பிறநாட்டினர் ஏற்றுக் கொள்ளாதது கண்டு, பழிச்சொற்கள் பலவற்றைப் பகை நாட்டு வேந்தன் மீது சுமத்திடவும் அவன் தவறவில்லை.

தோற்றுவிட்ட பகைநாட்டு மன்னன், படை வீரர்களுடன் தங்கியிருக்கும் பாசறை களை நோக்கி, காட்டு விலங்குகளைத் துரத்திவிட்டான், அந்த வெற்றி வேந்தன்.

இத்தனை இன்னல்களையும் தோற்ற அந்த மன்னனும் அவன் படைவீரர்களும் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டனர்.

போரில் ஏற்பட்ட தோல்வியாலோ அல்லது படைவீரர்கள் பலர் மாண்டு மடிந்து ஏற்பட்ட வலிமைக்குறைவாலோ அந்த மன்னனும் அவனது படையினரும் அஞ்சி நடுங்கி, வெற்றி கண்டவனின் கால்களில் விழுந்து விடவில்லை.

வெற்றியும் வெறியும் ஒருங்கிணைந்த காரணத்தால், வேதனைக்கணைகளை வீசிக் கொண்டேயிருந்தான்; தோற்றவர்களும் இதனைத் தாங்கிடும் மனப்பக்குவமும் உறுதியும் அஞ்சாநெஞ்சும் பெற்றிருந்தனர்.

காரணம் என்ன?

தோற்றுவிட்ட மன்னவனின் படை, தொன்று தொட்டுப் பெருமையுடைய படை யாகும்! அதனால் அது தோல்வியாலோ வலிமைக் குறைவாலோ கலங்கிவிடவில்லை.


அப்படிக் கலங்காமல் இருப்பது, தொன்று தொட்டுப் பெருமையுடைய படைக்கல்லாமல் வேறு எப்படைக்கும் இயலாது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

தோல்வியிலும் இது அந்தப் படைக்குரிய பெருமையன்றோ?

இதோ அந்தக் குறள்:

"உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது."

அதிகாரம் - 77 - படைமாட்சி; பாடல் - 762



கடலின் அலைகள் ஆரவாரமின்றிக் கரையில் மோதிக் கொண்டிருந்தன. உதய ஞாயிறு தகத்தகாயமாக ஒளி பரப்பி எழுந்தது. கடலில் மிகத்தொலைவு சென்று மீன் பிடிக்க மீனவர்கள், தங்களின் கட்டுமரங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தனர். கரையோரம் ஒதுங்கிக் கிடந்த கட்டுமரங்கள், நீலக் கடலை முத்தமிட்டவாறு அலைகளில் ஆடிக்களித்தன.

"முகிலன் இன்னும் வரவில்லையா?" மீனவர் கூட்டத்தில் கேள்வி எழுந்தது. "முல்லைக்கொடி அவனை விட்டால்தானே அவன் வருவதற்கு" என்ற பதிலும் கேலிச் சிரிப்பினூடே எழுந்தது.

திருமணமாகித் திங்கள் இரண்டுகூட முடியவில்லை. பொழுதெல்லாம் ஒருவருக் கொருவர் தின்பண்டமாகவே இருக்கவேண்டும் என்றுதான் அந்த இளம் உள்ளங் கள் ஏங்கின. எனினும் தொழில் தொடர்ந்தால்தானே குடும்பம் நகர முடியும்.

"விடை கொடு நாளை விடிவதற்குள் வந்துவிடுகிறேன்" என்று தன்னை இழுத்துப் போர்த்தியவாறு அழுதுகொண்டிருந்த முல்லைக்கொடியிடம், முகிலன் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

கொஞ்சி மகிழ்ந்த இராப் பொழுதை உதயம் எனும் கொடியோன் வந்து கெடுத்துவிட்டானே என விம்மியழுதாள் முல்லைக்கொடி.

அந்த விம்மலிலும் அவளுக்குத் தனி அழகு - தன்னைக் கவர்ந்திழுக்கும் அழகு உயர்ந்து நின்றதை முகிலன் கண்டு பெருமூச்சு விட்டவாறு அவளைத் தழுவிக் கொண்டான். முத்துக்களை மூடி வைத்த சிப்பியெனும் அவள் உதட்டில், தன் உதட்டால் முத்திரை பதித்தான். வழிந்துகொண்டிருந்த அவள் கண்ணீர்த்துளிகள் அவன் உதடுகளை நனைத்தன. கரிக்காமல் இனித்தது, அந்தக் கண்ணீர் அவனுக்கு.

ஓட்டிக் கொண்டிருந்த அவள் உடலை, மிக்க வலிமையைப் பயன்படுத்தித் தன்னிடமிருந்து விலக்கிக்கொண்டு வெளியே வருவதற்குள் முகிலன், படாதபாடு பட்டுவிட்டான்.

மீனவர் கூட்டம், அவனைக் கிண்டல் செய்து வரவேற்றது. அவனுடைய கட்டுமரமும் கடலில் மிதக்கத் தொடங்கியது.

முல்லைக்கொடி, தன் குடிலின் வாசலில் நின்று கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். கட்டு மரங்கள் அனைத்தும் கடலில் வெகு தொலைவு சென்று மறைந்துவிட்டன. அவள், அன்று பகல் உணவு பற்றிக் கவலைப்படவில்லை. இரவு உணவும் தேவைப்படவில்லை. அவளுக்குத் தேவையான விருந்து - கடலில்... கட்டு மரத்தில்... மறுநாள் காலைதான் அவளை நாடி வரும்.

நீண்ட நேரம் விழித்திருந்த அவள் நீள் இமைகளைக் களைப்பும் காரிருளும் மெதுவாக மூடச் செய்தன. தூங்கி விட்டாள். அந்தத் தூக்கமும் அவளுக்கு இன்பமானதே!

அவள் கவலையைத் தீர்க்க, கனவு வந்து சேர்ந்தது. கனவில் வேறு யார் வருவார்கள்? முகிலன்தான் வந்தான். 'முல்லைக்கொடீ!' என்றான். அத்தான் என்றாள். முத்தமழை! இன்பம் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது. இடைவேளை சிறிது நேரம் - அந்த வேளையிலும் அவளின் தோளைப் பற்றிக்கொண்டு அவளது எழில் நிறை முதுகில் தன் மார்பை அழுத்திக் கொண்டிருந்தான்.


களிப்பிலேற்பட்ட களைப்பால் அவளுக்கு ஒரு புதுக்களிப்பு. திடுமென விழித்துக் கொண்டாள். கனவு கலைந்துவிட்டது. அவள் தனக்குத்தானே கூறிக்கொண்டாள்:

"தூங்கும்போது கனவில் தோன்றி என் தோள்மீது சாய்ந்து இன்பம் தந்தவர், நான் விழித்துக் கொண்டபோது எங்கே போய்விட்டார்? எங்கும் போய்விடவில்லை! கனவு கலைந்ததும் விரைந்து வந்து என் நெஞ்சில் அமர்ந்து கொண்டார்."

இந்த அழகான வரிகள் அடங்கிய பெட்டகம்தான் இதோ இந்தக் குறள்:-

"துஞ்சுங்கால் தோள் மேலராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து."

அதிகாரம் - 122 - கனவு நிலை உரைத்தல்; பாடல் - 1218



நண்பன் ஒருநாள் கலகல எனச் சிரித்துக்கொண்டே என் வீட்டுக்குள் நுழைந்தான். அவசரமாக வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்த நான், "என்னப்பா, என்றுமில்லாத கும்மாளச் சிரிப்பு" என்று கேட்டேன்.

அவன் சிரித்தவாறே கேட்டான்: "திருமகளுக்கு மூதேவி அக்காளா? தங்கையா?" என்று!

நான் சொன்னேன், "இதுகூடத் தெரியாதா உனக்கு? அக்காள்தான்!" என்று!

நண்பன், உரக்கச் சிரித்துக்கொண்டு, "மூதேவியும் இல்லை - திருமகளும் இல்லை என்பது என் வாதம்! ஆனால் என் நண்பர்கள், 'அந்த இருவருமே உண்டு! அதில் அக்காள் யார்? தங்கை யார்? என்பதுதான் வாதத்திற்கு உரியது' என்றனர். அதனால் விளைந்த சிரிப்பை அடக்க முடியாமல்தான் உன்னிடம் வந்தேன். ஆனால் நீயோ, திருமகள் தங்கை - மூதேவி அக்காள் என்று கூறி, எனது பகுத்தறிவுக்கே அறைகூவல் விடுக்கிறாய்" என்றான்.

நான், என் நண்பனின் முதுகில் தட்டிக்கொடுத்து, "வா என்னோடு! திருமகளும் மூதேவியும் எப்படியிருப்பார்கள்? எங்கே வாழ்கிறார்கள்? என்பதைக் காட்டுகிறேன்" என அழைத்தேன்.

நண்பன் வியப்பு மேலிட வினவினான்: "அவர்கள் எங்கே வாழ்கிறார்கள்? முகவரிகூட உனக்குத் தெரியுமா? தேரோடும் வீதியிலா? அல்லது கப்பலோடும் கடலோரத்துக் குப்பங்களிலா?"

இந்தக் கேள்விக்கு நான் நண்பனுக்கு உறுதியுடன் அளித்த பதில், "வா என்னுடன்! அவர்கள் வாழுமிடத்தைக் காட்டுகிறேன்" என்பதுதான்!

இருவரும் பல தெருக்களைக் கடந்து சென்றுகொண்டிருந்தோம்.

உலைக்கூடம் ஒன்றில் பழுக்கக் காய்ச்சிய இரும்பை, சம்மட்டியால் ஓங்கி அடித்துக்கொண்டிருந்தான் ஒருவன். இன்னொருவன், நெருப்பு உலைக்குத் தேவையான காற்றை வழங்கிடத் துருத்தியை இயக்கிக் கொண்டிருந்தான். மூன்றாமவன், இரும்புத் துண்டை இப்படியும் அப்படியும் அசைத்துக் கொண்டிருந்தான். மூவர் மேனியிலும் வியர்வை மழை கொட்டிக் கொண்டிருந்தது. நண்பனை அங்கேயே நிறுத்தி, "இந்த உலைக்கூடக் காட்சியைப் பார்!" என்றேன். அவனும் உருக்கத்துடன் அந்தக் காட்சியில் ஒன்றிப்போய் நின்றான்.

பிறகு, நண்பன் என்னை நோக்கி, "சரி! சரி! வந்த வேலையை விட்டுவிட்டு இந்த வேலையைப் பார்ப்பானேன்? வா! போகலாம்!" என்றான். நானும் அவனுடன் நகர்ந்தேன்.

அடுத்து எங்கள் வழியில் ஓர் அழகான மண்டபம் தென்பட்டது. அங்கே நின்றோம். பளிங்குக் கற்களால் ஆன அந்த மண்டபத்தின் எழிலை நாள் முழுதும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். ஆனால் ஒன்று! அந்த மண்டபத்தின் அழகைச் சிதைப்பது போல் சிலந்திகள் வலை பின்னிக் கொண்டிருந்தன! குளவிகள் கூடு கட்டிக் கொண்டிருந்தன! வெளவால்கள் தங்கள் புழுக்கைகளை எள் பரப்பியதுபோல மண்டபத்துத் தரையில் பரப்பியிருந்தன. குப்பைக் கூளங்களுக்கும் குறைவில்லை. மண்டபத்து உள் திண்ணையொன்றில் சதைப் பிடிப்பான ஓர் அழகான வாலிபன், அப்போதுதான் தூக்கத்திலிருந்து எழுந்து கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தான்.

"நண்பா! இந்த மண்டபத்தையும் அந்த மனிதனையும் நன்றாகக் கவனி" என்றேன்.

"விபரங் கூறுக" என்றான் நண்பன். "இந்த மண்டபம், மறைந்த பெரியவர் ஒருவருக்காக எழுப்பப்பெற்ற நினைவுச் சின்னம். இதனைப் பாதுகாக்கும் பொறுப்பேற்றுள்ளவன் அந்த வாலிபன்" என்று விளக்கினேன் நான்.

நண்பன் வேதனையுடன் சிரித்து, "மிக ஒழுங்காகப் பாதுகாக்கிறானே சோம்பேறி!" என்றான்.

மீண்டும் நடந்தோம்!

"வீட்டுக்குத் திரும்பலாமா?" என்றேன். நண்பன் திகைத்துப்போய், "என்னப்பா, விளையாட்டு! திருமகளும் மூதேவியும் வாழுமிடத்தைக் காட்டுவதாகச் சொல்லி ஏமாற்றி விட்டாயே!" என்றான்.

"அவர்கள் இருவர் வாழும் இடங்களையும் உனக்குக் காட்டிவிட்டேன்!" என்றேன்.

"எப்போது" என்றான்.

"இப்போதுதான்!" என்றேன்.

"எங்கே?" என்றான்.

அவனுக்கு விளக்கமளித்தேன். "உலைக்கூடத்தில் அயர்வை எண்ணியும் பாராமல் வியர்வை வடித்து உழைத்தார்களே; அவர்களின் உள்ளத்தை மாளிகையாக்கிக் கொண்டு 'திருமகள்' வாழ்கிறாள். அழகான மண்டபத்தை அழுக்கு மண்டபமாக்கியவாறு சோம்பிக் கிடக்கிறானே காவல் காப்போன், அவன் உள்ளத்தை வீடாக்கிக் கொண்டு அந்த இருண்ட இல்லத்தில் வாழ்கிறாள் மூதேவி!"


"ஆகா! அருமையான கருத்து!" என்றான் நண்பன். "இது என் கருத்தோ கற்பனையோ அல்ல; வள்ளுவரின் குறளப்பா" என்றேன்.


அந்தக் குறளையும் சொன்னேன்.

அதுதான் இது:-

"மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரை யினாள்"

அதிகாரம் - 62 - ஆள்வினை உடைமை; பாடல் - 617





திங்களுக்கும் செவ்வாய்க்கும் இடையே நடந்த சந்திப்பு இது!

நாட்களின் பெயர்கள் அல்ல! அழகின் வார்ப்படங்களான இரு வனிதா மணிகளின் பெயர்கள்!

குளிர் கொட்டும் தளிர் முகவதியைத் திங்கள் என அழைத்தனர், அவளைப் பெற்றோர். மாங்கனி பிளந்ததே போன்ற சிவப்புநிற இதழ்கள் உடையவளைச் செவ்வாய் என்றே அழைத்தனர், அவளை ஈன்றெடுத்தோர்.

திங்களுக்கும் செவ்வாய்க்கும் பிரச்சினை எதுவாக இருக்கமுடியும்?

"என்னடி திங்கள்! யாரையோ சபிப்பதுபோல் முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்?" எனக் கேட்டவாறு செவ்வாய் அருகே வந்தாள்.

"யாரையும் சபிக்கவில்லை! என்னைத் தொத்திக்கொண்ட நோயைத்தான் சபிக்கிறேன்; இதோ பாரடி செவ்வாய்! என் காதலனால் என் மேனியெங்கும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய காமநோய் - என்னையே விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு, என்னைப் பிரிந்து சென்றுள்ள காதலனைப் பின்தொடர்ந்து என்னையும் செல்லுமாறு தூண்டுகிற அளவுக்குக் கொடுமையானதாகி விட்டதடி!"

இதைச் சொல்லிவிட்டுத் திங்கள் கண்ணீர் முத்துக்களை உதிர்த்தாள்.

செவ்வாயின் இதழ்கள் அவளையறியாமல்,

"செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர்."

என்ற குறளை முணுமுணுத்தன.

"அடி என் தோழியே! திங்களே! காதலன் உனக்குக் காமநோயைத் தந்துவிட்டுப் பிரிந்திருக்கிறான் அல்லவா? அவன் இன்றிரவு திரும்பி வரும்போது அதற்காக அவனுக்குத் தண்டனை கொடு! 'இனிமேல் பிரிந்தே செல்லமாட்டேன், என்னை மன்னித்துவிடு' என்று அவன் கெஞ்சுகிறவரையில் ஊடலை நடத்து! அப்போது தான் அவன் வழிக்கு வருவான். பிரிவுத் துயரமும் காம நோயும் உன்னை வாட்டா மல் இருப்பதற்கு நான் சொன்னதைத் தவறாமல் செய்! என்ன சரிதானா? இன்றிரவு ஊடல் நடக்குமா?

செவ்வாயின் தோளைப் பிடித்துக்கொண்டு திங்கள், தலை குனிந்தவாறு பதில் சொன்னாள்.

"நானும் ஊடல் நடத்தி நீண்டநேரம் அவரைத் தவிக்கவிட வேண்டுமென்று எத்தனையோ முறை நினைத்திருக்கிறேனடி; ஆனால், அவரைக் கண்டதும் தீயில் இடப்பட்ட கொழுப்புபோல என் நெஞ்சம் உருகிவிடுகிறது. என்னைப் போன்ற இதயமுடைய யாருக்கும் ஊடல் புரியும் சக்தி இருக்கவே முடியாதடி!"

திங்களின் மொழி கேட்டுச் செவ்வாய் சிரிப்பைச் சிந்தினாள். அஃது முல்லை விரிப்பாயிருந்தது. செவ்வாய்க்கு மற்றுமொரு குறள் நினைவுக்கு வந்தது.

"நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்"

திங்களும் செவ்வாயும் பிரிந்து சென்றனர். வானில் வந்தது வட்டத் திங்கள்!

வாட்டத் திங்களோ வழிமேல் விழிவைத்து வாயிலில் காத்திருந்தாள்.

நெடுநேரம் கழிந்த பின்னர், அவனும் பறந்து வந்தான். பச்சைக்கிளியை இச்சையுடன் தூக்கிக் கொண்டான். வாயிற் கதவுக்கு அவனே தாழிட்டான். தோளில் போட்டவாறே துகிலுரிந்தான் தோகைக்கு! ஆளுக்கொரு நீதியோ எனக் கேட்டாள்! அந்த அநீதியை நீயே கண்டிக்கலாம் - நடவடிக்கை எடுக்கலாம் என்றான். ஆடையகற்றிய பால், ஆவின் பால் - கட்டிலோரம் காத்திருந்தது. ஆண்பாலும் பெண்பாலும் கட்டிலிலே ஒரே மலராய்ப் பூத்திருந்தது.


மென்மைமிகுந்த அவள் மேனியெங்கும் அவன் விரல்கள் வீணை மீட்டின. நரம்புகள் அதிர்ந்தன. நான்கு இதழ்கள் நாலாயிரம் வகையான ஒலிகளை எழுப்பின. அவள், அவனுக்குள் கலந்துவிட்டாள். செவ்வாய் உபதேசித்தாளே அந்த ஊடல்; அது தலையைக்கூட நீட்டி அவன் தழுவுவதைத் தடுக்கவில்லை.

"காதலன் காம உணர்வுடன் நமக்கு விருப்பமான செயல்களைப் புரியும் போது, நாணம் என்று கூறப்படும் அந்தப் பண்பையே மறந்து விடுகிறோம்" என்று அவளது பெண்மை பேசிற்று!

அந்தப் பெண்மையின் தன்மையைத்தான் இதோ இந்தக் குறள் சுட்டிக் காட்டுகிறது.

"நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்"

அதிகாரம் - 126 - நிறையழிதல்; பாடல்கள் - 1256, 1260, 1257



கற்பனைத்திறன் காட்டிக் கவிபுனையும் பாவாணன் அவன். எழினியெனும் பெயர் கொண்டோன். அவன் பிறந்து வளர்ந்து பெரும் புகழ் பெற்ற வளநாட்டின் விடுதலைக்காக அமைந்த படையினர்க்கு, உணர்ச்சியூட்டும் வீரப்பாடல்களை இயற்றி வழங்கியவன்.

வளநாட்டின் எழுச்சியை எப்படியும் அடக்குவதற்குத் திட்டமிட்ட கொல்லி நாட்டு மன்னன், வளநாட்டுப் படைத் தளபதிகளில் ஒரிருவரைப் பெருங்கையூட்டின் மூலம் தன்வயப்படுத்திக் கொண்டான்.

எழுச்சிப் பண்கள் இயற்றிய எழனிதான், அதற்கு இடைத்தரகனாகவும் மாறித் தன்னை வாழவைத்த வளநாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயலைச் செய்து வந்தான்.

இந்த உண்மை வளநாட்டில் பரவிடவே, எழினி கொல்லி நாட்டுக்கே, தன் குடும்பத்துடன் போய்ச் சேர்ந்தான்.

எதிரிகளின் நாட்டுப் பாவாணன், தன் கொலுமண்டபம் நுழைந்து தனது கால் வணங்கி நிற்பது கண்டு, கொல்லி மன்னன் பெருங்களிப்படைந்து அரியாசனத்தில் கம்பீரம் மிகுந்திட அமர்ந்திருந்தான். கொல்லி நாட்டு வேந்தனைப்பற்றி எழினி

பாடப் போகிறான் எனக் கேள்வியுற்று, கொலுமண்டபம் நிறைந்திருந்தது. கொல்லி நாட்டுப் படை வீரர்கள், புலவர் பெருமக்கள், மற்றும் பொது மக்கள் சூழ்ந்திருந்தனர்.

எழினி, பாடத் தொடங்கினான். கொல்லி நாட்டானைக் குறித்து ஓரிரு வரிகள் பாடிவிட்டு - அதன் பிறகு வளநாட்டை வசைபாடும் இசையாகப் பொழியத் தொடங்கினான். அவனை வாழவைத்த நாட்டு மக்கள்மீதும் நாட்டின்மீதும் நன்றியுணர்வு காட்டி, அவற்றைக் குறித்துப் பாடாது இருந்திருக்கலாம். அதற்கு மாறாக, வளநாடு குறித்தும் அந்நாட்டார் குறித்தும் பண்பற்ற முறையில் பயனிலாத சொற்களைத் தனது பாட்டாக அவன் ஆக்கிக் கொண்டதைக் கொல்லி நாட்டுப் புலவர்களும் படை வீரர்களும் ஏனைய மக்களுமே ஏற்றுக் கொள்ளவில்லை.

அவன் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் கண்ணை மூடிக்கொண்டு "வசை இசை" முழங்கிக் கொண்டிருந்தான். தன் பாட்டில் மகிழ்ந்து, கொல்லி நாட்டான், மற்ற புலவர்களை ஒதுக்கிவிட்டுத் தனக்கு அந்த அவையில் முதலிடம் கொடுப்பான் என்பது எழினியின் கருத்து! அப்படிப்பட்ட பண்பு வாய்ந்தவன் கொல்லிக் காவலன் என்பது எழினிக்குத் தெரியும்.

கண்ணை மூடிக்கொண்டு கடுஞ்சொற் கவிதைகளை வளநாட்டின் மீது வீசிக் கொண்டிருந்தபோது, அந்தக் கொலுமண்டபமே காலியாயிற்று. கண்ணைத் திறந்து பார்த்தான், இறுதியாக இசைப்பதை நிறுத்திவிட்டு! மண்டபத்தில் யாருமே இல்லை. அரியாசனத்தில் மன்னனும் இல்லை. அவனும் கடைசியாக எழுந்து போய்விட்டான், பள்ளியறைக்கு!

ஏமாற்றமடைந்த எழினி, கொலு மண்டபத்தை விட்டு வெளியே வந்தான். வெளியே கூட்டம் கூட்டமாகப் புலவர்களும் - படை வீரர்களும் நின்று கொண்டு எழினியின் பாடல் குறித்து எள்ளி நகையாடிக் கொண்டிருந்தனர்.

"கொல்லி நாட்டைப் புகழ வந்தானா? வளநாட்டை இகழ வந்தானா?"

"மன்னரின் மனத்தைக் கவர்ந்து உயர்பதவி பெற இப்படியொரு கூத்து!"

"வளநாட்டுக்கும் கொல்லி நாட்டுக்கும் பகை மூளவே காரணமாக இருந்தவன்; இப்போது இங்கு வந்து நன்றாக நடிக்கிறான் - நன்றிகெட்டவன்!"


எழினியின் காதில் விழும்படியாக அவர்கள் இப்படி இகழ்ந்து பேசினர். வளர்ந்த இடத்துக்குத் துரோகம் செய்துவிட்டு வந்த இடத்திலும் நம்மை மதிப்பாரில்லையே என்று பெருமூச்சு விட்டபடி தலைகவிழ்ந்து நடந்தான் எழினி!

கேட்போர் பலரும் விரும்பத்தகாத வெறுப்புக் கலந்த, பயனில்லாத வார்த்தைகளைப் பேசுகின்றவனை, அவன் பகைவர்கள் மட்டுமல்ல; அவன் சேர்ந்துள்ள இடத்தில் உள்ளவர்களேகூட இகழ்ந்துதான் பேசுவார்கள்.

அதற்கு இதோ குறள்:

"பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்."

அதிகாரம் - 20 - பயனில் சொல்லாமை; பாடல் - 191



வஞ்சிக்கொடி, வாடிக் கிடந்தாள். வயலோரக் களத்துமேட்டு நிகழ்ச்சிகள், அசையும் நிழற்படங்களாக அடுக்கடுக்காகப் புரண்டுகொண்டிருந்தன. முற்றிய மணிக்கதிர்களைச் சுமக்க முடியாமல் தங்கநிறப் பயிர்கள் மணமகளைப் போல் தலைகுனிந்து நின்றன. அவற்றை அறுவடை செய்து, கட்டுக் கட்டாகக் களம் கொண்டுசென்று குவித்து வைத்தனர்.

அந்தப் பணியில் ஈடுபட்ட இளம் புறாக்களில் ஒருத்திதான் காளி! பெயர்தான் அப்படி! கட்டழகுப் பெட்டகம். அவளைத் தொட்டணைத்துச் சுகம் காணும் கடம்பனுக்கு இன்பப் பேழை!

நிலவுதனைத் துண்டுதுண்டாக்கி, அவற்றைக் கோர்த்து வைத்ததுபோல் இதழ்களிடையே ஒளிவிடும் பல் வரிசை!

வீரம் எதுவும் என் முன்னே செல்லுபடியாகாதென விழுங்கிவிடும் ஆற்றல் வாய்ந்த விழியழகி!

நிறம் சற்றுக் கறுப்புத்தான் என்றாலும் கரும்புபோல் கடம்பனுக்குச் சுவை கூட்டும் பெண்ணரசு! அறுவடை நடக்கும்போதே இருவரின் கண்களும் இரும்பும் காந்தமும் ஆயின.

சூரியன் வழங்கும் சூடு போதாதென்று, அன்றிரவு சுவைக்கப்போகும் விருந்தையெண்ணி இருவர் உடலும் உள்ளுக்குள் தகித்துக் கொண்டிருந்தன.

மாலையும் வந்தது; அறுவடை வேலையும் முடிந்தது; அவரவர் வீடு திரும்பினர். களத்துமேட்டுக்குக் கடம்பன் அன்று காவல் இருக்க வேண்டும். இருட்டியபின் காளியை அங்கே வரச் சொல்லியிருந்தான்.

அவளா வராமல் இருப்பாள்?

இருட்டு ஏன் இன்னும் வரவில்லையென்று திட்டிக்கொண்டிருந்தாள்.

அவளுக்குப் பயந்ததுபோல், பாய்ந்து வந்தது இருட்டு! திருட்டுப் பூனை போலப் பதுங்கிச் சென்றாள் காளி - அறுவடை நெற்குவியலுக்கும் கதிரடித்துப் போட்டி ருந்த வைக்கோற் போருக்குமிடையே - பூனையாக வந்தவள், பூவாக மாறி நின்றாள்.

கடம்பனோ வண்டாகித் தேன் பருகினான். களத்துமேட்டுப் புழுதி மண்ணோ, வைக்கோலின் மீது உடல் அழுந்துவதால் ஏற்படும் அரிப்பு உணர்வோ - அவர் தம் இன்பக் களியாட்டத்துக்கு இடையூறாகத் தெரியவில்லை. அவர்கள்தான் இந்த உலகத்திலேயே இல்லையே! இவள் மடியில் அவன்! அவன் தோளில் இவள்! 'இச்' என்று கேட்கின்ற இன்ப நாதம்!

இரவெல்லாம் பலாச்சுளையைத் தேனிற் கலந்து மாங்கனியும் வாழைக் கனியு மென முக்கனியின் முழுச் சுவையில் மயங்கிக் கிடந்தனர். பொழுது விடியாமலே இருந்திருந்தால், அவர்களின் இன்பம் முடியாமலே தொடர்ந்திருக்கும்.

மறுநாள், நிலக்கிழார் ஆணைகேட்டுக் கடம்பன் அவசர வேலையாக அயலூர் சென்றுவிட்டான். அவன் திரும்ப, ஆறு ஏழு நாட்களாகுமெனச் சொன்னார்கள்.

வஞ்சிக்கொடி, வாடிக் கிடக்கும் காரணம் இப்போது புரிகிறதல்லவா? பிரிந்து சென்ற காதலன்மீது பெண்களுக்குத் தேவையில்லாத ஒரு கோபம் வரும். அது இயல்பு! விரகதாபத்தின் விளைவு போலும்! காளிக்கும் அப்படித்தான் கோபம் வந்துவிட்டது! அவள் நெஞ்சம் அவளைப் பார்த்துச் சொன்னது:

"காளீ! உன்னைத் தவிக்கவிட்டுப் பிரிந்துசென்ற கடம்பன்; அதோ வந்து கொண்டிருக்கிறான். அவன் வந்தால் அவனோடு எந்த உறவும் உனக்கு இல்லை என்று திட்டவட்டமாகக் கூறிவிடு!" என்பதாக!

காளி, சிரித்தாள்! அந்தச் சிரிப்பில் கோபமும் கலந்திருந்தது! அவள் பேசினாள்:


"என் நெஞ்சே! எனக்கு உரிமையுடைய நீயே; அவர் என்னைப் பிரிந்து சென்றதும் என்னை விட்டு அவரோடு போய்விட்டு இப்போதுதான் திரும்பி வருகிறாய்! நீயே என் உறவை மறந்துவிட்டாய் என்றால்; அவர் என் உறவை மறந்து பிரிந்து சென்றதில் பெரிய பிழையொன்றுமில்லை."

இப்படிக் காளி, தன் நெஞ்சை நொந்துகொண்டு, பிரிந்துசென்ற காதலனையும் 'அயலார்' என்று சினந்து குறிப்பிட்டாள்.

அதற்குள் கடம்பன் ஓடிவந்து அவளைக் கட்டிக்கொண்டான். 'அயல்' என்ற வார்த்தை அடிபட்டுப்போயிற்று! கயல், அவன் அன்பு வலையில் சிக்கிக் கொண்டது.

"தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி."

அதிகாரம் - 130 - நெஞ்சொடு புலத்தல்; பாடல் - 1300



1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ஆம் நாள் காலை மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் 120 கல் தொலைவு (200 கிலோமீட்டர்) நெடிய பயணம் ஒன்று புறப்பட்டது. நீதியைப் புறக்கணித்துவிட்ட அரசின் செயலைக் கண்டித்துக் கழகத்தினர் நடத்திய அந்தப் பயணத்திற்கு நான் தலைமை தாங்கினேன். தொடக்கத்தில் ஐம்பதினாயிரம் பேராகக் கிளம்பிய அந்தப் பேரணி, எட்டு நாட்களில் இரண்டு லட்சம் பேரைக் கொண்ட மிகப்பெரும் பேரணியாக நடந்தே சென்று திருச்செந்தூரை அடைந்தது. அத்தனை தொலைவு - எட்டு நாட்கள் - இலட்சக்கணக்கானோர் - நடந்தே சென்று 'நீதி கேட்கும் நெடிய பயணத்தை' நிறைவு செய்திட முடியுமா? இந்தத் தயக்கம் பலரது ஐயப்பாடாக வெளிவந்தது! அரசு அலுவலர் ஒருவர் - அறநெறி வாய்ந்தவர் - அவரை, ஆளுந்தரப்பினரான சில கொடியோர் கொன்று குவித்துக் கள்வர் என்றும் கதை கட்டிவிட்டனர். அவர் கள்வர்

அல்ல என்றும் கள்வர் என்று கழறியோரே அவரைக் கொன்றுவிட்டனர் என்றும் நீதிபதியும் முடிவு அறிவித்துவிட்டார். அந்த முடிவையும் மீறி, அரசினர் நீதியை வளைத்தனர். வளைந்த செங்கோல் கண்டு தனது வாழ்வை முடித்துக்கொண்டு, நிமிர்ந்த செங்கோலுடன் வீழ்ந்துவிட்ட நெடுஞ்செழிய பாண்டியன் ஆண்டிருந்த மதுரையிலிருந்து தொடங்கப்பெற்ற நெடிய பயணம், மக்களின் குரலை மண்ணாள்பவருக்கு எதிரொலித்துக் காட்டியது.

ஐயம் - அச்சம் - இயலுமா என்ற வியப்பு - இத்தனைக்குமிடையே நெடிய பயணத்தில் ஈடுபட்டோர் உள்ளத்தில் வள்ளுவரின் குறள் வரிகள் செம்மாந்து எழுந்து நின்றன.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை."

"சோர்வு இல்லாத ஊக்கமுடையவனிடத்தில், ஆக்கமானது தானே அவனிடருக்கு மிடம் தேடி வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேர்ந்திடும்."

இந்தக் குறளின் கருத்துப் போதாதா, அந்தப் பேரணியினர் தங்களின் வரலாற்றுப் புகழ்மிக்க நடைப்பயணத்தை மேற்கொண்டிட!

வழியில் எத்தனையோ இடையூறுகள்! இன்னல்கள்! நோய் நொடிகள்!

வானத்துச் சூரியனோ நெருப்புமழை பொழிந்து கொண்டேயிருந்தான்! கால் மிதிக்கும் தார்போட்ட சாலையோ கருஞ்சாந்து என உருகியோடித் தகித்துக் கொண்டிருந்தது.

எதையும் தாங்கும் இதயங்கொண்ட அந்தப் படையினர், நெருப்பு வெயிலையும் நிலா மிதந்து நீந்தும் ஏரிக்கரையோரமென எண்ணிக்கொண்டு நெஞ்சு நிமிர்த்தி நடந்தனர்.

எண்ணியவாறு எண்ணற்ற தொல்லைகளைக் கடந்து தங்களின் நெடிய பயணத்தை நிறைவுசெய்து என் நெஞ்சில் குடியேறிக் கொண்டனர்! அப்போது என் நினைவில் ஒளிவிட்ட குறளின் கருத்தோவியம் என்ன தெரியுமா?

"மேடு பள்ளம் குண்டுகுழி போன்ற தடைப்பட்ட இடங்களில் எல்லாம் வண்டியை இழுத்துச் செல்லும் எருதுபோல, விடா முயற்சியுடைய ஒருவனுக்கு ஏற்படும் துன்பங்களுக்குத் துன்பம் வருமே அல்லாமல், அவனுக்கு அந்தத் துன்பத்தால் தயக்கம் நேராது."


"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து."

அதிகாரம் - 60 - ஊக்கம் உடைமை; பாடல் - 594

அதிகாரம் - 63 - இடுக்கண் அழியாமை; பாடல் - 624

அதர்வினாய் = வழிகேட்டு; உழை = இடம்

பகடு = எருது ; மடுத்தவாய் = தடைப்பட்ட இடம்



"என் அன்பே! ஆருயிரே! பத்தே நாட்களில் பறந்தோடி வருவேன் பைங்கிளியே" என்று முத்தமழை பொழிந்து உடல் முழுவதும் நனைத்துவிட்டுச் சென்றீரே - எண்ணிக்கொண்டுதானிருக்கிறேன். நாள்கள் இருபதையும் தாண்டி விட்டன! என்னை மறந்து எப்படித்தான் உங்களால் தனிமையில் இருக்கமுடிகிறதோ? நீங்கள்

என்னைப் பிரிந்தவுடனே கைவளைகள் கழன்றுவிட்டன. மேனியெங்கும் படர்ந்து விட்டது பசலை. விழிகளோ நீங்கள் சென்ற திக்கினை நோக்கியே தவம் கிடக்கின்றன.

பஞ்சணையில் படுக்கிறேன். இமைகளை மூடிப் பார்க்கிறேன்; என் கண் இமைகள் மட்டும் கண்ணாடியால் அமைந்தனவோ என்னவோ; மூடிய இமையின் வழியாக நீங்கள்தான் என் எதிரே நின்று இதழ்களைக் குவிக்கிறீர்கள்! என் இதழ்களும் குவிகின்றன! 'இச்' ஒலியும் எழுகிறது! பிறகுதான் தெரிகிறது அத்தான்; நான் தலையணையின் முனையை என் உதடுகளால் அழுத்திக் கொண்டிருப்பது!

படுக்கையில் குப்புறப் படுத்துக்கொண்டால் இதமாக இருக்காதா? இப்படி ஒரு நினைப்பு! அய்யோ! உங்களின் பரந்த மார்பில் என் மார்பகம் அழுந்தும்போது நான் அனுபவிக்கும் சுகத்தில் ஒரு அணுவளவுகூட இல்லை! அனலாகிறது நெற்றி, கழுத்து, இடை எல்லாமே! வலிமை பொருந்திய உங்கள் கரங்களால் வளைத்துப் பிடிப்பீர்களே என் இடையை! அப்போது துள்ளுவேன்; துவளுவேன்; தோளில் ஒட்டிக்கொள்ளுவேன். நினைக்க நினைக்க நெருப்பு மூச்சுத்தான் வெளிப்படுகிறது இப்போது!

நான் படும் காம வேதனையில், ஒரு கடுகத்தனை வேதனைகூட நீங்கள் படுவது கிடையாதா? அதனால்தான் என்னை இத்தனை நாட்கள் மறந்துவிட்டுப் பிரிந்திருக்க மனம் துணிந்தீரோ? என் துன்பத்தை இந்த மடலில் வெளிப்படுத்திவிட்டேன். நீங்கள் தொட்டு மகிழ்ந்து சுகமளித்த பட்டுடல், இங்கு பட்டமரம் போல் காட்சியளிக்கின்றது! அதில் இன்பத்தளிர்கள் குலுங்க - காதல் மலர்கள் பூக்க - காமக் கனிரசம் பெருக - என் காதலரே; இறக்கைகள் இருந்தால் எடுத்துக் கட்டிக்கொண்டு வான் வழியே ஒரு கணத்தில் வருக! என் தாபம் தணித்திடுக - அன்புள்ள அல்லி."

எழுதிய மடலை, அந்த ஏந்திழை ஒருமுறைக்கு இருமுறை படித்துப் பார்த்தாள். காதலனுக்கு அனுப்ப உறையில் இட்டாள். பின்னர் உறையிலிருந்து மடலை எடுத்தாள். மீண்டும் படித்தாள். பின்னர் அந்த மடலைக்கண்டு நாணம் கொண்டாள்! வெட்கம், அவள் விழிகளில் ஊசலாடிற்று! திடீரென அந்த மடலைக் கிழித்தெறிந்துவிட்டுப் பஞ்சணையில் போய் விழுந்தாள். அவள் வாய் முணுமுணுத்தது.

"நெஞ்சமே! ஒன்று காமத்தை விட்டுவிடு! அல்லது நாணத்தை விட்டுவிடு! இரண்டையும் பொறுத்துக்கொள்ள என்னால் இயலாது. என் உணர்ச்சியைக் கொட்டி மடல் தீட்டினேன். அதை அவருக்கு அனுப்பமுடியாமல் நாணம் தடுத்துவிட்டதே!" கண் கலங்கியவாறு மஞ்சத்தில் புரண்டாள் அல்லி!

"காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு."

அதிகாரம் - 125 - நெஞ்சொடு கிளத்தல்; பாடல் - 1247



கழனியோரத்தில், தலையில் முண்டாசு கட்டியவாறு கார்மேகம் உட்கார்ந்திருந்தான். கட்டுக்கோப்பான உடல் அமைப்புக்கொண்டவன் அவன். அவனருகே சிறிய வாய்க்கால் ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அந்த வாய்க்கால், நீரால் நிரம்பி வழிந்தவாறும் இருந்தது. எனினும் கார்மேகத்தின் எதிரேயிருந்த அவனது கழனி, வெடித்துக் காய்ந்து கிடந்தது. அவன் கழனியை அடுத்துள்ள மற்றவர் கழனிகளில், வாய்க்காலில் மடைகோலித் தங்கள் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தனர். கார்மேகம் தனியாக உட்கார்ந்திருப்பதைக் கண்ட அந்த ஊர்ப்பெரியவர், அவனிடம் வந்தார். கழனியில் வேலை செய்த அவரது மேனியெங்கும் சேறு, சந்தனம் போல் பூசப்பட்டிருந்தது. பெரியவர், கார்மேகத்தைப் பார்த்துக் கேட்டார்: "என்ன தம்பி! வாட்டமுடன் இருக்கிறாய்? உனக்குத் திருமணம் என்றார்களே; எப்போது?" என்று! கார்மேகம், பெரியவரிடம் சலித்துக் கொண்டே பதில் சொன்னான்: "மணமாவது மண்ணாங்கட்டியாவது! அதற்கெல்லாம் செலவுக்குப் பொருள் வேண்டாமா? என்னிடம் என்ன இருக்கிறது?" இந்தப் பதிலைக் கேட்ட

பெரியவர், "அய்யோ பாவம்! இல்வாழ்வில் ஈடுபடவேண்டிய இளமைப் பருவம் - இன்பங்கள் துய்க்க வேண்டிய வசந்த காலம் - அந்த வாய்ப்பைப் பெற முடியாமல் உன்னை வறுமை தடுத்துவிட்டதே!" என்று கவலையைத் தெரிவித்தார். அப்போது யாரோ கலகலவென்று சிரிக்கும் ஒலி கேட்டது. பெரியவரும் இளைஞனும் திரும்பிப் பார்த்தனர். சுற்றுமுற்றும் நோக்கினர். யாரையும் காண முடியவில்லை. ஆனாலும் சிரிப்பொலி அடங்கவில்லை. அது ஒரு பெண்ணின் சிரிப்புத்தான். ஆனால், யார் அந்தப் பெண்? இருவரும் திகைத்துப் போயினர். பெரியவர், துணிவை வரவழைத்துக்கொண்டு, "யாரது? யார் சிரிப்பது?" என்று உரக்கக் கேட்டார். பதில் பிறந்தது.


"நான்தான் நிலமகள் சிரிக்கிறேன். நான் எனக்குள்ளாகவே சிரித்துக் கொள்கிறேன். ஏன் தெரியுமா? பெரியவரே! நான் சிரித்த காரணத்தைச் சொல்லட்டுமா? இந்த முதிர்ந்த வயதிலும் உழைப்பால் உயர்கிறீர் நீர். உமது வியர்வைத் துளிகள், நெல்மணிகளாகக் குலுங்கிக் காற்றில் அசைகின்றன. உமது கரம்பட்டு உமது கழனியின் கரைகள் உயர்ந்தன. அயராத உழைப்பால் வளமான விளைவைக் காணுகிறீர். குறைவின்றி வாழ்கிறது உமது குடும்பம். இதோ; இந்த இளைஞன், இரும்பினையொத்த உடலமைப்புக் கொண்டவன். இருப்பினும் சோம்பல் இவனை அடிமையாக்கிக் கொண்டது. அதனால்தான் இவன் எதிரே காய்ந்து கிடக்கும் கழனி! அருகே, பெருக்கெடுத்தோடும் வாய்க்கால்! வாய்க்கால் நீரை வகைப்படுத்திக் கழனிக்குப் பாய்ச்சவோ, கழனியில் கதிர் கண்டு களிக்கவோ, அது தரும் பொருள்கொண்டு வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்ளவோ இவன் தயாராக இல்லை - புரிகிறதா முதியவரே! நிலமகளான நான், எல்லா வளமும் தரத்தயாராக இருக்கிறேன். இவன் அதனைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பாமல் சோம்பேறியாகத் திரிகிறான். 'கையில் பொருள் இல்லை; அதனால் கடிமணம் நிறைவேறவில்லை' என்கிறான். இந்த விந்தையான இளைஞனை நினைத்துக்கொண்டுதான், நான் எனக்குள்ளாகவே சிரித்துக் கொள்கிறேன்."

இந்த விளக்கத்திற்குப் பிறகு நிலமகளின் குரல் கேட்கவில்லை. சிரிப்பு முழக்கமும் இல்லை. பெரியவர், கார்மேகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். கார்மேகம், தோளைக் குலுக்கிக்கொண்டு எழுந்தான். ஒரு மூலையில் கிடந்த மண்வெட்டியைக் கையில் எடுத்தான். "பெரியவரே! என்னைப் பார்த்து இந்தப் பூமியே கேலி பேசிவிட்ட பிறகு, இனியும் நான் சோம்பல் புழுவாகச் சுருண்டு கிடக்கமாட்டேன் - இதோ! உழைக்கப் புறப்பட்டு விட்டேன்" எனக் கூறியவாறு, வாய்க்காலை வெட்டித் தன் வயலின் பக்கம் திருப்பினான். பெரியவர், புன்னகை புரிந்தவாறு அவனைத் தட்டிக் கொடுத்து, "தம்பீ! என் பெண்ணையே உனக்குத் துணைவியாக்குகிறேன்" என்று கூறினார்.

இந்தக் கற்பனை ஓவியத்திற்கு அடிப்படையான குறளோவியம் இதோ:-

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."

அதிகாரம் - 104 - உழவு; பாடல் - 1040



சுமங்கலிப் பிரார்த்தனை

பிரிவாற்றாமையால் உடலில் ஏற்படும் நிற வேறுபாட்டைப் 'பசலை படர்தல்' என இலக்கியங்கள் குறிப்பிடும். உள்ளம் வாடும்போது உடல் மெலிகிறது. வளைகள் கழன்றுவிழும் அளவுக்கு உடல் இளைத்தால், மாம்பழமேனிகூட நிறங்குன்றித்தான் போய்விடும்.

புன்னகை ஒளி காட்டும் இதழ்களுக்குச் சொந்தக்காரி சேயிழை! குண்டு மல்லிகை போன்ற வெள்ளை விழிகளுக்கு நடுவே, வண்டு நிகர் கருவிழிகள் அசைந்தாடும்

அழகே அழகு! இடமும் வலமும் இரு பிறைகளை இணைத்தாற் போல் இடையுடையாள்! நடன நடையுடையாள்.

அவள்தான், மலர்கள் எல்லாம் உதிர்ந்துவிட்ட மாலையின் நார்போலத் தரையினில் கிடக்கின்றாள். வேறென்ன வேதனை?

அணைத்தும், பிடித்தும், இதழ் நனைத்தும், சுவைத்தும், இன்பமெல்லாம் அளித்தும், களித்தும் மாதவிக்குச் சுகம் தந்த கோவலன்போல் சேயிழைக்குச் சுகம் தந்த சேவலான், பொருளீட்டப் புறப்பட்டுத் திங்கள் இரண்டு தேய்ந்து மாய்ந்தன.

எப்போது அவன் பிரிந்து செல்வான்; நாம் பறந்து சென்று அவளைப் பற்றிக்கொள்ள வேண்டுமென்று துடித்துக்கிடந்த பசலைநிறம், சேயிழையின் உடலைத் தழுவிக் கொண்டது.

தீப்பிடித்த ஆடைபோல அவிழ்த்தெறிய முடியுமோ அந்த நிறத்தை? அவளைப் பிடித்த பசலையெனும் துன்பம் அவிழ்க்கத் துணைவனவன் வந்தன்றோ துகில் அவிழ்க்க வேண்டும், அகில் மணக்கும் மஞ்சத்தில்!

எரிநெருப்பாய், பெருமூச்சு! சுடுதழலாய்க் குருதியோட்டம்! ஒளியில்லா வெற்றுப் பார்வை! பழமாகிப்போன கிழமொன்று அவள் பாட்டி! பருவத்தில் அவள் சிலநேரம் பட்டபாட்டைத்தான் இன்று போர்த்தியும் படுகிறாள் என்றறிவாள்! எனினும் ஆறுதல் கூற அணுகினாள் சேயிழையிடம்!

"என்னடி கண்ணே! இத்தனை துன்பம்? பிரிந்தவன் வராமலா போய் விடுவான்? சே! சே! முட்டாள் பெண்ணாக இருக்கிறாயே! பிரிவை நினைத்து இப்படியா பசலை நிறம் படர்ந்து கிடப்பது?"

பாட்டி, தன் இளமைக் காலத்தை மறந்துவிட்டுப் பேசவில்லையென்பது சேயிழைக்குத் தெரியும். தன்னைத் தேற்றுவதற்காகச் செல்லமாகக் கோபிக்கிறாள் என்பதும் புரியும். இருப்பினும் இளைத்த உடல் - களைத்த நிலை - இத்தனையும் மறந்து சீற்றமுடன் எழுந்தமர்ந்து பதில் சொன்னாள்.

"பாட்டீ! பிரிவால் வருந்திப் பசலை நிறமடைந்தேன் என்று என்னைப் பழி சொல்வது உன்னைப் போன்றவர்களுக்கு எளிதான செயல்! என்னைப் பழி சொல்வது விடுத்து, என்னை விட்டுப் பிரிந்து சென்ற காதலனைக் குறை சொல்லும் எண்ணம் உங்களுக்கெல்லாம் ஏற்படவில்லையே! ஏன் பாட்டி, ஏன்? பழியோரிடம் பாவமோரிடம் என்ற பழமொழியை மெய்ப்பிக்கிறீர்களே எதற்காக? அவர் பிரிந்து சென்றது குற்றமா? அவர் பிரிவால் எனக்குப் பசலை படர்ந்தது குற்றமா?"

சினங் கொப்பளிக்கப் பொறிந்து தள்ளினாள் சேயிழையாள்!

அவள் சொல்வதும் நியாயந்தானே என்று தோன்றியது பாட்டிக்கு! ஆமாம்; பாட்டிக்கும் பழைய நினைப்பு!

"பசந்தாள் இவள் என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்."

அதிகாரம் - 119 - பசப்புறு பருவரல்; பாடல் - 1188



தன்னை வெல்வார் யாருமில்லையென்று, ஒருவன் வீர முழக்கமிட்டான். தன் னால் முடியாதது உலகில் எதுவுமில்லையென்றும் அறைகூவல் விட அவன் தவற வில்லை. உள்ளத்தில் உறுதியிருக்கிறதோ இல்லையோ, அவன் உதடுகள் வெடித்த எரிமலைச் சொற்களைக் கேட்டு ஊரார் அவனைத் தீரன் என்றும் ,திண்தோள் கொண்டோன் என்றும் அஞ்சாநெஞ்ச அரிமா என்றும் மலர் தூவி வாழ்த்தி மகிழ்ந் தனர். உள்ளத்தால் அவனொரு கோழையென்பதை ஊர்மக்கள் உணர முடியாத படி, அவனது உரைகள் அமைந்தன. அந்த ஊருக்கு வெளியே சற்றுத் தொலைவில் ஒரு செங்குத்தான மலைப்பாறை உண்டு. அந்தப் பாறையின் உச்சிக்குச் செல்லப் பலபேர் முயன்று பாதி வழியிலே சறுக்கி விழுந்தனர். "என் பலத்தைப் பாருங்கள். அந்தப் பாறையின் மீது ஏறிக் காட்டுகிறேன்" என்று அவன் ஒருநாள் ஊர் மக்களுக்கிடையே சூளுரைத்தான். உரைத்த மொழியை நிறைவேற்ற, ஒரு நாளும் குறிக்கப்பட்டது. செங்குத்துப் பாறையைச் சுற்றி ஊரார் குழுமினர். அவனும் அங்கே வந்து சேர்ந்தான். "ஊர்மக்களே! ஒன்று சொல்வேன் கேளீர்! பாறையின் உச்சிக்குச் செல்வேன் என்றுதான் உங்களிடம் கூறினேன். எப்படிச் செல்வேன் என்பதை அப்போது விளக்கிடவில்லை. எனது குறிக்கோள் பாறையின் உச்சிக்குச் செல்வதுதான்! அதற்கு வீரத்தை மட்டுமல்ல; சிறிது விவேகத்தையும் பயன்படுத்த வேண்டும். இங்குள்ள நான்கு பேர் ஒருவர் தோள்மீது ஏறி ஒருவர் நின்றிடுக! பயப்படத் தேவையில்லை; பாறையில் சாய்ந்தவாறு நின்றிடுக!"

என்று உரத்த குரலெடுத்துக் கூறினான். அவ்வாறே நான்கு பேர் ஒருவர் தோள்மீது ஒருவர் ஏறி அந்தச் செங்குத்துப் பாறையில் அணைந்தவாறு நின்றனர். அவன் அவர்கள் மீது கால்வைத்து ஏறிச்சென்று நான்காமவன் தோளில் தொத்தி, பாறையின் உச்சிக்குப் போய்ச் சேர்ந்தான் இலகுவாக!

ஊரார், தங்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தை எழுப்பி அவனை வாழ்த்திப் பாராட்டினர். "நாங்கள் நால்வரும் இல்லையெனில் பாறை உச்சிக்குச் சென்றிருக்க இயலுமோ?" என்று கேட்டனர் தோள் கொடுத்த வாலிபர்கள்!

அவன், அவர்களைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்தான்: "உங்கள் ஒத்துழைப்பு இல்லாமல் என்னால் இதைச் செய்திருக்க முடியும்" என்று மார்தட்டிக் கூறினான்.

நால்வருக்கும் சினம் பிறந்தது. "உன் வலிமையின் அளவு தெரியாமல் எங்களைப் பகைத்துக் கொள்கிறாய்" என்று எச்சரித்தனர் அவர்கள்!

"யார் துணையும் எனக்குத் தேவையில்லை. என் வலிமை உலகம் உணர்ந்த ஒன்றாகும். நானிருக்குமிடம் தெரிகிறதா? நான் ஏற முடியாது என்று சொன்ன செங்குத்துப் பாறையில் இப்போது ஏறியிருக்கிறேன். பாறையிலிருந்தவாறு உங்களையெல்லாம் கீழ்நோக்கிப் பார்க்கிறேன். நான் உயரத்தில்! நீங்கள் பள்ளத்தில்!"

இப்படி ஆர்ப்பாட்ட மொழி பேசத் தொடங்கினான் அவன்! ஆரவாரத்தோடு அவனைச் சூழ்ந்து வாழ்த்திய ஊரார், அந்த இடத்தை விட்டு அகன்று சென்றனர்; அகந்தை தலைக்கேறிவிட்டது என்று முணுமுணுத்தவாறு!

"எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசாதே! ஆணவத்தைக் குறைத்துக் கொள்! அடக்கத்தைக் கடைப்பிடித்திடு!" என்று அவனுக்கு வேண்டியவர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்தனர்.

"எனக்கு அறிவுரை கூறுவோர் யாருமில்லை. நானே எல்லாம்! என் வலிமை எனக்குத் தெரியும்! பேசாது செல்க!" என விரட்டியடித்தான் அவர்களை!

அனைவரும் தொலைவில் சென்று, அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அவன் அவர்களைப் பார்த்து ஓங்கிய தொனியில் உரை நிகழ்த்தினான்:

"உங்களால்தான் மேலே ஏறினேன் என்று சொன்னீர்கள்; இதோ என் மன வலிமைக்கும் உடல் வலிமைக்கும் சான்று காட்டுகிறேன் பாரீர்! இந்தச் செங்குத்தான பாறையிலிருந்து கீழே குதிக்கிறேன் காணீர்! அப்போது புரியும் என் வீரமும் தீரமும் உங்களுக்கு!"

எனக் கூறிக்கொண்டே பாறையிலிருந்து கீழே குதித்தான். தரையில் குதிப்பது போல் குதிக்காமல், தண்ணீரில் தலைகீழாகக் குதிப்பதுபோல் குதித்த காரணத்தால், தரையில் மோதிய தலை சிதறுண்டது. குருதி வெள்ளத்தில் அவன் உடல் நனைந்து துடித்து இறுதியாக அசைவற்றுக் கிடந்தது. பாவம்; தன்னைப் பற்றிப் பெரிதாக எண்ணிக்கொண்டு மற்றவர்களோடு ஒத்துப் போகவும் இசையாமல், அவர்களையும் மதிக்காமல், தன் வலிமையையும் உணராமல் வீணாக நொறுங்கிப் போனான், தன்னைத்தானே வீரனென்று பிதற்றித் திரிந்த அந்த வீணன்.

இப்படிப்பட்டவர்களுக்காக வள்ளுவர் தீட்டிய குறள்தான் இது:-

"அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்."

அதிகாரம் - 48 - வலியறிதல்; பாடல் - 474

RAJ BHAVAN LIBRARY



உறக்கமெனும் பெண்ணாள், இமைக் கிளையில் கயிறுகட்டி ஊஞ்சலாட வரவே இல்லை. சுண்டக் காய்ச்சிய பாலும் சுவைமிகு கனிகளும் அந்தச் சுந்தரியின் கவனத்தைக் கவரவே இல்லை. படுக்கையறையினை, அவள் பட்டுப் பாதங்கள் அளந்து கொண்டிருந்தன. ஐந்துமுகக் குத்துவிளக்கின் கொழுந்துச் சுடர்கள் அனைத்தும் அவளையே நோக்கி ஆவலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. நடந்து

கொண்டேயிருந்தவளின் நாக்கு நிறப் பாதங்கள் செம்பருத்திப் பூப்போலச் சிவப்பேறிவிடவே, படுக்கையறையையொட்டிய வெளிமாடத்துக் கைப்பிடிச் சுவர் ஒன்றில் இடையழுந்த நின்றுகொண்டு, செங்காந்தள் விரல்கள் சேர்கரங்கொண்டு நிலவு முகத்திற்கு முட்டுக்கொடுத்தவாறு, விண்நோக்கி வெறித்துப் பார்த்து "எரிக்கின்ற தண் நிலவே, என்னை மட்டும் ஏன் தகிக்கின்றாய்?" என விழிகளால் சினந்து கேட்டாள்.

அப்போது வெளிமாடத்திற்கருகே ஒலியொன்று எழுந்து, பின்னர் ஓய்ந்தது.

என்னவென்று தெரிந்துகொள்ள, அந்தப் பொன்மகளின் இதயம் துடித்தது.

ஒலி வந்த திசையை நோக்கினாள்.

மாடத்தை யொட்டியுள்ள மரக்கிளையில் தாவியேறி, அவள் நிற்குமிடம் நோக்கி அவன் வந்துகொண்டிருந்தான். ஆம், அன்று மாலையில் அவள் அருவியோரத்தில் சந்தித்த அவனேதான்!

அருவியில் நீராட அவள் சென்றிருந்தாள். அவனும் வந்திருந்தான். அருவியின் நீர்ப்பெருக்கில் அவள் கண்மூடிக் குளித்தபோது, அந்தக் குளிர் அருவி எத்தனையோ குறும்புத்தனங்களை அவள் உடைமீதும் உடல்மீதும் செய்து காட்டியது. அருவியினை வாழ்த்தியவாறு தொலைவில் நின்றான் அவன். குளித்து முடித்து ஈரக்கூந்தலைக் கோதியவாறு - சரிந்த உடைகளைச் சரிசெய்து கொள்ளாமல், யாரும் அங்கில்லை என்று நினைப்பில் அலட்சியமாக வந்தவள், அவன் மீது மோதிக்கொண்டாள். அப்போதுதான் அவன், அந்தப் பூச்செடியின் மறைவிலிருந்து வெளிப்பட்டான்.

அவளையறியாமல் ஆடைகள் தங்களைத் திருத்திக்கொண்டன. அதுதானே உண்மையான பெண்மை!

எதிரிப் படையைப் பார்ப்பதுபோல அவனைப் பார்த்தாள். "இதுதான் ஒரு ஆண் மகனுக்கு அழகோ?" என்று கடுஞ்சொல் வீசினாள். அவன் மறுமொழி கூறாது மயங்கி நின்றான். அவளும் தயங்கி நின்றாள். பிறகு கால்களுக்கு வேகம் சேர்த்து அங்கிருந்து மறைந்துவிட்டாள். அருவிக்கரையில் மட்டுமல்ல; அவனை அவள் பல இடங்களில் பார்த்திருக்கிறாள்; அவனும் பார்த்திருக்கிறான். அவள் யார் வீட்டுப் பைங்கொடியென்று அவனுக்குத் தெரியும். அவனும் யார் என்ற விவரங்கள் அவளுக்குத் தெரியும். ஆனால், அன்று மாலை அருவியோரத்து நிகழ்ச்சி இருவருமே எதிர்பாராதது! எப்படிப்பட்ட நிலையில் இப்படியொரு நெருக்கமான சந்திப்பு!

அவனேதான் மரக்கிளையிலிருந்து வெளிமாடத்திற்குத் தாவியவன். ஏற்பட்ட அதிர்ச்சியை மெல்ல மூடிக்கொண்டு கோபக்குறி தோன்ற "யார் அது? இந்நேரத்தில் இங்கென்ன வேலை?" என்று அவன் காதில் மட்டும் விழுமாறு கேட்டாள்.

"தெரியவில்லையா என்னை! நானேதான்" என்றவன், அவள் பக்கம் வந்து நின்றான்.

"உங்களுக்கு என்ன துணிச்சல்! மாலையில் அருவியோரத்தில் இப்படித்தான் பண்பாடற்று நடந்து கொண்டீர்கள். இப்போதும் அதே தொடர்கதையா?"

"தொடரவேண்டிய கதை தோகையே! தொடலாமா! தொடரலாமா?"

"என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. நான் பொல்லாதவளாக இருப்பேன்; போய்விடுங்கள் தயவுசெய்து!"

"உன்னைப் பற்றி நான் தெரிந்துகொண்டேன். நீ பொல்லாதவளல்ல! உள்ளத்தில் இருப்பதை வெளியில் சொல்லாதவள்!"

"குளிக்குமிடத்திற்கு வந்தீர்கள்! அதுவே குறும்புத்தனம் - செடி மறைவில் ஒளிந்திருந்து...சே!.....சே!....."

"ஏன்! வெட்கமாக இருக்கிறதா?"

"இல்லை! வெறுப்பாக இருக்கிறது!"

"உண்மையாகவா?"

"அருவிக்கரையில் உங்கள் செயல்கண்டு அனல் தெறிக்கப் பார்த்தேனே; கனல் தெறிக்கப் பேசினேனே - அதற்குப் பிறகும் உங்களுக்கு எப்படி வந்தது இந்தத் துணிவு?"

"கடுஞ்சொல் இருக்கும். ஆனால், அதன் பின்னே கொடும்பகை இருக்காது. சுட்டெரிப்பதுபோல் பார்வை இருக்கும். ஆனால், அதன்பின்னே நெருப்பான நினைப்பு இருக்காது. வெளியில் அயலார்போலத் தோற்றமளித்தாலும் உள்ளத்தில் அன்பு கொண்ட காதலியின் குறிப்பாகும் இது! இப்படி எழுதியிருக்கிறார் வள்ளுவர்! நீ படித்ததில்லையா? அந்தக் குறளை நம்பித்தான் கண்ணே; குளிர் அருவியின் கரையில் நீ கொட்டிய கடுமொழிக்குப் பிறகும் இங்கு குதித்தோடி வந்தேன். வெல்லமாக இனிக்கும் அன்பு இருக்கும் காரணத்தால்தான், நீ என்னைச் செல்லமாகக் கடிந்து கொண்டாய்! இல்லையா?"


அவள் அசைவற்று நின்றாள். அவனையே அவள் விழிகள் விழுங்கி விடுவதைப்போல் மொய்த்துக் கிடந்தன. "தங்கம்!" என்றவாறு தொட்டான். தடையில்லை! தழுவினான். நழுவி ஓடினாள். நாணம் படையெடுத்தது. "சப்தம் போட்டு எல்லோரையும் கூப்பிடுவேன்" என்று அவன் காதுக்குள் வாய் வைத்துச் சொன்னாள். காதலுக்கு அதுதானே முதல் ஒப்புதல்! ஐந்து முகக் குத்துவிளக்கு தன் முகத்தை மறைத்துக்கொண்டது.

"செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு."

அதிகாரம் - 110 - குறிப்பறிதல்; பாடல் - 1097

செறாஅ = பகையோடு பொருந்தாத

செற்றார் = பகைவர் உறாஅர் = அயலார்



குறளில் அரசியல் எனும் தலைப்பில் வரும் 'வலியறிதல்' என்னும் அதிகாரத்தில் வருகின்ற பாக்கள் குறித்து ஒருநாள் ஆசிரியர் ஒருவர், தனது மாணாக்கர்கட்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அவரிடம் கற்றிடும் மாணாக்கர்களில், அரைவேக்காட்டு அறிவு கொண்ட ஒருவனும் இருந்தான். குறட்பாக்களைப் பலரும் தமது போற்றுதற்குரிய புலமைக்கேற்ப பல்வேறு கோணங்களில் பொருள் கூறி உணர்த்தியிருக்கின்றனர் என்றும் அந்த உரைகளையெல்லாம் "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று வள்ளுவரே தெளிவாகச் சுட்டிக் காட்டுவதற்கேற்ப, ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளும் அறிவினைப் பெற்றிட வேண்டுமென்றும் ஆசிரியர் விரிவுரை நிகழ்த்திவிட்டு, அரைவேக்காட்டு மாணாக்கனை யழைத்து, "தம்பீ! அதிகாரத்தின் தலைப்பு 'வலியறிதல்' என்று உள்ளதே; அதற்கென்ன பொருள்?" என்று வினவினார்.

அவன், வழக்கம்போல் விழித்துக்கொண்டு நின்றான். "உன் தலையில் எதுவுமே ஏறமாட்டேன் என்கிறதே!" என்று கூறிக் கோபத்துடன் அவன் தலையில் ஓங்கி ஒரு குட்டுக் குட்டினார் ஆசிரியர்!

"இப்போது புரிகிறதய்யா பொருள்!" என்றான் மாணவன்!

"என்ன புரிகிறது சொல்!" என்றார் ஆசிரியர்!

"என் தலையில் குட்டினீர்கள்! வலி தாங்க முடியவில்லை! அந்த வலியை என்னால் அறிய முடிகிறது. இதைத்தான் வள்ளுவர் 'வலியறிதல்' என்ற அதிகாரமாக எழுதியுள்ளார்."

இப்போது ஆசிரியர் தனது தலையில் குட்டிக்கொண்டார்!

"நீங்களும் இப்போது வலியை அறிவீர்களே! இதுதான் வலியறிதல்" என்றான் அந்த மண்டு மாணாக்கன்.

என்ன செய்வது; அந்த ஊரில் பெரும் செல்வாக்கும் அதிகாரபலமும் கொண்ட சீமான் வீட்டுப்பிள்ளை அவன்! அவனைக் குட்டியதற்குக்கூட நாளைக்கு அந்த ஆசிரியர்க்குத் தண்டனை கிடைக்கக்கூடும். அவனை விடுத்து, ஆசிரியர் 'வலியறிதல்' அதிகாரம் பற்றி விளக்கிடத் தொடங்கினார்.

"தனக்குள்ள பலத்தையும் பிறர்க்குள்ள பலத்தையும் அறிந்து தெளிந்து செயல்பட வேண்டுமென்று கூறுகிற அதே நேரத்தில், செய்யத்தக்க காரியங்களை எண்ணினாலும் அதனைச் செய்து முடிக்கக்கூடிய வலிமையிருக்கிறதா என அறிந்து செய்ய வேண்டுமென்று மணக்குடவரும், பரிப்பெருமாளும் உரை கூறியுள்ளனர். அரசியலில் இந்த வலிமையை, படைவலிமை என்று மட்டும் எடுத்துக்கொள்ளாமல், அரசு நடாத்துவோரின் பொருளாதார வலிமையையும் குறிப்பது என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அதனால்தான்,

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்."

என்று குறள் எச்சரிக்கிறது! இருக்கின்ற பொருளின் அளவறிந்து நடந்து கொள்ளாதவனுடைய செயலால், நாட்டில் பலவளமும் இருப்பதுபோல் தோன்றக் காட்டி, எதுவுமே இல்லாமல் மறைந்து கெட்டுவிடும் என்பதுதான் இதற்குப் பொருள்! தமிழறிஞர் மு. வரதராசனாரின் உரை இப்படித்தான் அமைந்துள்ளது! "வலியறிதல்" அதிகாரத்தில் வரும் குறள்தான் இது!

இருக்கின்ற வளமும், இயற்றக்கூடிய வளமும், இனி ஈட்டக்கூடிய வளமும், கருவூலத்தில் குறையாதிருந்து - தான் எண்ணியதை சாதிக்க முடியும் என்று கணக்கிட்டுத்தான் ஓர் அரசின் செயல்முறைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்! அஃதன்றிக் கவர்ச்சிகரமான விளம்பரத்துக்காகக் கருவூலத்தின் வலிமையை அறிந்துகொள்ளும் கருத்தற்றுப் பலபேர், தாங்கள் மேற்கொண்ட செயல்களில் ஊக்கத்துடன் முனைப்புக்காட்டி, அதன்பிறகு அதை முடிக்க வகையில்லாமல் தோற்றுவிடுவர் - என்றும் வள்ளுவர் 'வலியறிதல்' அதிகாரத்தில் அறிவுரையைத் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரித்தார் பலர்'

என்ற குறட்பா, அவர்களின் வலிமையறியாத் தன்மையால் ஏற்படும் கேட்டினைத் தான் சுட்டிக் காட்டுகிறது!"

விரிவுரையை முடித்த ஆசிரியர், மண்டு மாணாக்கனைப் பார்த்து "என்னப்பா! விளங்குகிறதா?" எனக் கேட்டார். அவன் சினத்துடன் பதில் அளித்தான்.

"இப்படிப் பல கோணங்களில் பலரும் குறளுக்கு உரை எழுதுவதைத் தடுத்திட வேண்டும்! நான் மட்டும் ஆட்சிக்கு வந்தால், குறளுக்கு யாரும் விளக்கமெழுதக் கூடாது என்று தடைச்சட்டம் கொண்டு வருவேன்."

அவன் பதிலைக் கேட்டு, அந்த வகுப்பறையில் உள்ள மாணாக்கர்கள் அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

அதிகாரம் - 48 - வலியறிதல்; பாடல்கள் - 479, 473



சுயமரியாதையின்

பொன் வண்ணப் பாவையொருத்தியை மணந்துகொண்டு இல்வாழ்வைத் தொடங்கினான், இராமன் என்பான். அவள் பெயர் அன்னம்.

இராமனுக்குப் பெரியதோர் அலுவலகத்தில் உயர்பதவி!

பணி முடித்து வரும்போது வீட்டு வாயிற்புறத்தில், அன்னம் நின்று கொண்டிருப்பதை அவன் கண்டு வெகுண்டான். அவன் வருகைக்காகத்தான் அவள் காத்திருந்தாள்.

ஆனால், அவனோ அன்னத்தின் கன்னத்தில் அறைந்து, "வீதியில் போகும் எவனைப் பார்த்து மயங்கிக் கொண்டிருக்கிறாய்?" என்று நெருப்பு மொழியையும் கொட்டினான்.

அன்னம் கண்ணீர் விட்டாள். அப்போது இராமன் அமைதி கொண்டானா யினும் அவளைப் பிற ஆடவர் பார்த்திடவும் கூடாது என்று கருதினான்.

"உனக்குத் தெரியாது அன்னம்! இந்த உலகத்தின் வாய் மிகப் பொல்லாதது. இப்படித்தான் என் அலுவலகத்தில் அமுதம் என்று ஒரு பெண் பணிபுரிகிறாள். மாலை நேரத்தில் கடற்கரையில் திரிவாள்; கடைத்தெருவில் அலைவாள்; ஆண்களுடன் கலகலவெனச் சிரித்தவாறு பழகுவாள். அவளைப் பற்றி ஊரே இழித்துப் பேசுகிறது. பெண்கள் என்றால் அடக்கம் இருக்க வேண்டும்."

இப்படி அன்னத்துக்கு அறிவுரை கூறத் தொடங்கியவன், ஒவ்வொரு நாளும் அலுவலகம் செல்லும்போது அவளை வீட்டுக்குள் வைத்துப் பூட்டிக் கொண்டு போவதையும் பணி முடிந்து திரும்பிவந்து பூட்டிய கதவைத் திறப்பதையும் வாடிக்கையாக ஆக்கிவிட்டான்.

இப்படி நாட்கள், கிழமைகள், மாதங்கள் ஓடின.

ஒரு நாள் இராமன், அலுவலகத்தைவிட்டுப் புறப்பட்டுத் திரும்பும் வழியில் காற்று வாங்கக் கடற்கரைப் பக்கம் தலை நீட்டினான்.

அந்த வெண் மணற் பரப்பில், அமுதம் நடை பழகிக் கொண்டிருந்தாள்.

இராமனைக் கண்டு, அவள் புன்னகை புரிந்தவாறு "ஏது இந்தப் பக்கம்?" எனக் கேட்டாள். அன்னத்தைவிட அமுதம், அழகு வாய்ந்தவளல்ல எனினும் அவளது உடற்கட்டும் அங்க அசைவும் தனிக் கவர்ச்சி கொண்டவை என்பதை, இராமன் அவளருகே நின்றவாறு கண்டுபிடித்தான்.

ஏதோ ஓர் உணர்ச்சி அவனை ஆட்டிப் படைத்தது.

தொட்டால் துவளக் கூடிய பூங்கொடிதானே என்ற துணிவுடன், அமுதத்தின் தோள் மீது கையை வைத்தான்.

அவள் எந்த மறுப்பும் சொல்லாமல் நடந்து கொண்டிருந்தாள். அவனும் அவளைத் தொடர்ந்துகொண்டிருந்தான்.

ஒரு படகின் ஓரம் இருள் மெல்ல மெல்லத் தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தது.

"உட்காரலாமே!" என்றான் இராமன்.

சிரித்துக் கொண்டே அமுதமும் அங்கே உட்கார்ந்துகொண்டாள். அலுவலகப் பணிகள் குறித்து அமுதம் பேசினாள். இராமனோ அவளுடன் பேசிக்கொண்டே அவளை இறுகத் தழுவிக்கொண்டான். இமைப்பொழுதுதான்! அதற்குள் அமுதம் இராமனின் பிடியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு, "சீ! என்ன நினைத்துக் கொண்டாய் என்னை! கள்ளங் கபடமில்லாமல் எல்லோரிடமும் கலகலப்பாகப் பழகுவதாலேயே என் கற்பைக் கடைச்சரக்கு எனக் கருதிவிட்டாயா?" எனச் சீறிச் சினந்து, புயல் வேகத்தில் அந்த இடத்தை விட்டுப் பறந்துவிட்டாள்.

இராமனின் முகத்தில் அசடு வழிந்தது. வீட்டுக்குத் திரும்பினான், வெட்கத்தால் தலை குனிந்தவாறு!

வீட்டு வாயிலில் அவனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. கதவிலிருந்த பூட்டு உடைக் கப்பட்டிருந்தது. விழிகளை அகலத் திறந்து பார்த்தான். கதவின் முகப்பில் ஒரு தாளின் சுருள்! அந்தத் தாளை எடுத்துப் பிரித்தான். அதிலிருந்த எழுத்துக்களைப் படித்தான்.

"அன்பு மிகுந்த இராமனுக்கு, அடுத்த வீட்டுக் கண்ணன் அறிவிப்பது! அன்னத்தைச் சிறைப்படுத்தி அவள் கற்பைக் காக்க நீ வகுத்த திட்டத்தில் தோல்வி அடைந்துவிட்டாய்! சிறையிட்டு ஒரு பெண்ணைக் காப்பதைவிட, அந்தப் பெண், கற்பு எனும் நிறையைக் காத்துக் கொள்ளும் பண்புடையவளாக இருப்பதே, தன்னை தானே காத்துக்கொள்ளும் அரணாக அமையும் என்பதை நீ அறியவில்லை. எங்களை மன்னித்துவிடு! அன்னமும் நானும் உன்னைவிட்டு நெடுந்தொலைவு சென்று விட்டோம்."

அந்த எழுத்துக்கள் இராமனைப் பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரித்தன. இராமன் அப்படியே மயங்கிய நிலையில் தலையைப் பிடித்துக்கொண்டு வாயிற் படியில் உட்கார்ந்தான்.

"சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

அதிகாரம் - 6 - வாழ்க்கைத்துணைநலம்; பாடல் - 57



"என்னப்பா எழினி! திங்கள்சந்தைக்குப் போய் இப்போதுதான் திரும்புகிறாயா? கைகளில் எதுவும் பொருளைக் காணோம்! ஏன்; ஒன்றும் வாங்கவில்லையா? சந்தைக்குப் போகவேண்டுமென்று துடித்துக்கொண்டு கிளம்பினாய்! சோர்ந்துபோய் வருகிறாயே; என்ன காரணம்?"

இனியனின் கேள்விக்கு, எழினி விடையளிக்காமல் எங்கேயோ நினைவை அலையவிட்டுக்கொண்டு நின்றான்.

குன்றென விளங்கும் அவன் தோளைப் பிடித்துக் குலுக்கி, "இலவு வெடித்துப் பஞ்சு காற்றில் பறப்பதுபோல உன் சிந்தனையை எங்கோ பறக்க விட்டுவிட்டுத் திகைத்து நிற்கிறாயே; ஏன்? என்ன நடந்தது?" என்று இனியன், கேள்விகளை அடுக்கினான்.

"ஒன்றுமில்லை இனியா! எமனைச் சந்தித்துவிட்டு வந்தேன்" என்றான் எழினி, அமைதியாக!

"எமனையா? எங்கே சந்தித்தாய்? எப்படியிருக்கிறான் அவன்? உண்மையிலேயே எமனைச் சந்தித்தாயா? அல்லது ஏதாவது விபத்திலிருந்து தப்பியதைத்தான் இப்படிக் கூறுகிறாயா?"

"இல்லை! இல்லை! எமனைத்தான் பார்த்துவிட்டு வருகிறேன்."

"அப்படியா? அதுதான் மிரண்டு போயிருக்கிறாய்! எப்படியிருந்தான் எமன்? எருமை வாகனத்தில் எதிரே வந்தானா? கையில் உயிர்களைப் பறிக்கும் பாசக்கயிறு வைத்திருந்தானா? அந்தக் கயிறு எப்படி இருந்தது? தூக்குக்கயிறு போல இருந்ததா? ஆள், அமாவாசை இருட்டைப்போல கறுப்பா? நெருப்பைப் போல இருந்தனவா கண்கள்? இரு கோடரியை மாட்டிவிட்டதுபோல மீசைகள் உண்டா அவனுக்கு? அவன் சிரித்தால் கோடையிடி இடிப்பதுபோல் இருக்குமாமே! என்ன எழினி? ஏன் என் ஆவலைத் தூண்டுகிறாய்? எமன் எப்படித்தான் இருந்தான் சொல்லேன்!"

"இனியனே! என் நண்பனே! எமன் என்று கூறப்படுவதைத்தான் நானும் நீயும் கேள்விப்பட்டிருக்கிறோம். எமன் என்பது எருமையில் வருவதுமில்லை! பயங்கர வடிவம் கொண்டதுமில்லை! உயிர்களைக் கவரக் கையில் பாசக்கயிறு வைத்திருக்கவுமில்லை.!"

"பின் என்ன எழினி? நீ என்னதான் பார்த்தாய்?"

"எமன் ஓர் ஆணே அல்ல!"

"பிறகு?"

"அழகின் வடிவம்! அற்புதப் படைப்பு! நிலவொளியை உருக்கி வார்த்த மேனி! தாமரையின் மலரே முகம்! அதன் மொட்டுக்களே மார்பகம்! புன்னகை மின்னும் பொன் இதழ்கள்! பூவையொத்தவளாம் அந்தப் பூவையைக் கண்டேன் சந்தைக் கூட்டத்தில்! நான் எதிர்பாராத நிலையில் இரண்டு கூரிய வேல்கள் என் நெஞ்சில் தைத்தன. நான் தோல்வியை ஒப்புக்கொண்டு புறங்காட்டி ஓடிவந்து விட்டேன். இனியா! என் நண்பா! இப்போது புரிகிறதா? எமன் என்று கூறப்படுவதை இதுவரையில் நான் அறியாமல் இருந்தேன். சந்தையில் கண்டேனே அந்தச் சந்தனப் பாவையை; அவளைப் பார்த்த பிறகுதான் எமனுக்கே எனக்குப் பொருள் புரிகிறது. எமன் என்பது பெண் தன்மையுடன் கூடியதும் ஆண்கள் மீது போர் செய்து வெற்றி பெறக்கூடிய பெரிய கண்களாம் போர்க்கருவிகளையும் கொண்டது."


"ஓகோ! விழிவேல் பாய்ந்து காயத்துடன் ஓடிவந்திருக்கிறாயா? உன் உயிரையே பற்றியிழுக்கும் பாசக்கயிறு அந்தக் கண்கள் வழியாக வீசப்பட்டு விட்டது போலும். சந்தேகமில்லை; நீ சந்தித்தது எமனேதான்!"

"இனியா! அந்த எமனை மீண்டும் காணவேண்டும் நான்! திங்கள்தோறும் எதற்காகச் சந்தை கூடவேண்டும். தினந்தோறும் கூடினால் என்ன?"

எழினியை, இனியன் கட்டிப் பிடித்துக்கொண்டு கலகலவெனச் சிரித்து, "கவலைப்படாதே! இப்படியொரு எமனை நான் ஏற்கனவே சந்தித்து - எல்லாமே முடிந்து, இரண்டு குழந்தைகளுடன் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறேன். அடுத்த திங்கள்சந்தையின்போது, நீ கண்ட எமனை உனக்கே உரியதாக்குகிறேன்" என்று உறுதி கூறினான்.

"பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு."

அதிகாரம் - 109 - தகையணங்குறுத்தல்; பாடல் - 1083



அழகோவியம்
அச்சுப்பதுமை
இளங்கிள்ளை
எழில்புறா
மாதுளைமுத்து
மாணிக்கவல்லி

- இப்படி அவளைப்பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம். சொற்களுக்குத் தான் பஞ்சம் ஏற்படும், அந்தச் சொக்கத்தங்க மேனியாளைப் புகழ இயலாமல்! உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் இளமை கொழிக்கும் உருவம். உலகைத் துறந்த முனிவனையும் கவர்ந்திழுக்கும் கன்னிப் பருவம். வில்லொத்த புருவம். விழியிரண்டும் கணைகள். பல் வரிசை முத்தாரம் எனலாம். ஆனால், முத்தாரம் முத்தமிடும்போது சுவைக்காதே! தேனமுத அருவியினிலே நனைந்திருக்கும் முத்துக்கள் அன்றோ அவள் பற்கள்! ஒடியுமோ அவள் இடையென்ற கவலையின்றி ஓங்கி நிற்கும் இரு கொடுமுடிகள்! "மொத்தத்தில் அழகுப் பூங்கொடியென்று கூறிவிடலாம்" என முத்தாய்ப்பு வைத்தால்தான் தமிழ்க் கவிஞர்கள் தப்பமுடியும் எனும் அளவுக்கு இன்பக் கவிதைகட்கும் கட்டுப்படாத பேரழகுப் பெட்டகமாய் அந்தப் பெண் விளங்கினாள்.

தாயில்லை - தந்தையுமில்லை - உற்றார் உறவினர் யாருமில்லை! தனியாகத் தான் அவள் வீட்டில் இருந்தாள். "கதவோரம் நிற்கமாட்டாளா? கணநேரம் அவள் எழில்

கண்டு இதயத்தில் இன்பம் மொண்டு செல்லலாம்" எனத் துடித்திட்ட இளைஞர்கள் அந்த ஊரில் பலருண்டு.

குளம் சென்று அவள் நீராடும்போது அவளழகை, அவள் வயதுள்ள பெண்களே கண்டு வியப்பதுண்டு. 'அவள், யாரைத்தான் காதலிக்கிறாள்? யாருக்குத் தன்னை ஒப்படைத்திருக்கிறாள்; அந்தப் பெரும்பேறு பெற்றவன்தான் யார்?' என அறிந்துகொள்ளவும் ஊர் தவியாய்த் தவித்தது.

அந்த இன்பக் கனியை யாருமே சுவைக்கவில்லை. அவள் யாருக்கும் அந்த வாய்ப்பைத்தரத் தயாராயில்லை. தன்னேரில்லாத தன் அழகைக் குறைத்துக் கொள்ள அவள் விரும்பவில்லை. தன் எழிலைத் தானே கண்ணாடியில் பார்த்து மகிழ்வாள்; பெருமைப்படுவாள். ஆடவன் ஒருவன் கைபட்டால், தன் உடற்கட்டு உருக்குலையும் - அழகு சரியும் - அதனால் எவனுக்கும் ஒப்புதல் தரவுமில்லை; அந்தப் பேச்சுக்கே இடம் வைக்கவுமில்லை.

நாட்கள் நகர்ந்தன. ஆண்டுகள் உருண்டன. மணவிழா நடக்காமலே மணிவிழாப் பருவம் வந்தது அவளுக்கு! அந்த அழகுச் சிலைக்கு இப்போது வயது அறுபது! காளையொருவன் கரம் பிடித்தால் கட்டழகு பட்டொழியும் எனக்காத்து வந்த அவளழகு, காலத்தின் கரம்பட்டு மெல்லமெல்லக் கரைந்து போயிற்று! கிழமானாள்! நரை, திரை, மூப்புடன் நடமாடும் பழமானாள்!

இப்படியொரு பெண்ணின் கதையை, வள்ளுவர் ஒரே வரியில் உருக்கமுடன் எழுதிக் காட்டுகிறார்.

"மிகுந்த அழகுடைய ஒரு பெண் தனியாகவே வாழ்ந்து முதுமையடைந்துவிட்டாளாம்."- இதுதான் வள்ளுவர் கூறும் ஒரு பெண்ணின் கதை! இந்தக் கதையை ஏன் சொல்கிறார் தெரியுமா? இது கதையல்ல! ஒரு ஈடு இணையற்ற உவமை!

"பொருளற்று ஏங்கும் வறியவனுக்கு ஒரு பொருள் கொடுத்து உதவி செய்யாதவனுடைய செல்வம், ஒரு அழகான பெண், தனியாகவே வாழ்ந்து முதுமை அடைவதைப் போன்றது."

இதோ அந்தக் குறள்:-

"அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று."

அதிகாரம் - 101 - நன்றியில் செல்வம்; பாடல் - 1007



கிறிஸ்தவ நிகழ்வுகள்

“தாத்தா! அதோ - தள்ளாடி நடந்து போகிறாரே; அவர் யார்? ஆளைப் பார்த்தால் கட்டுடல் வாய்ந்தவராகக் காணப்படுகிறார்! ஆனால், நடையில் ஏன் இந்தத் தளர்ச்சி?” என்று பேரன் கேட்டான்.

“அவரா? ஆள் வலுவானவர் மட்டுமல்ல; அறிவு நூல்களைக் கூடக் கற்றவர்! ஆயினும் அவர் தடுமாற்றத்தோடு நடப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தூக்க முடியாத சுமையைத் தூக்கிக்கொண்டு செல்கிறார். அதனால்தான் தள்ளாடிடும் நிலை” என்று பேரனுக்கு அந்த முதியவர் பதில் அளித்தார்.

இளைஞனல்லவா? அத்துடன் அவனுக்கு மன நிறைவு ஏற்படவில்லை. “என்ன தாத்தா! அந்த மனிதர் தலையில் எந்தச் சுமையையும் காணவில்லையே! நீங்கள், அவர் பளுவைத் தூக்க முடியாமல் திண்டாடுவதாகக் கூறுகிறீர்களே!” என்று கிழவரை மடக்கினான்.

“தளிர்ப் பருவம் உனக்கு! அதனால் அந்த மனிதர் தடம் மாறி நடப்பது உனக்குத் தெரியவில்லை. அற வழியிருக்க, அதனை விடுத்துப் பிற வழியில் அவர் செல்வது ஏன் என்று எனக்குத் தெரியும். அவர் சுமந்திருக்கிற மூட்டைகளின் அழுத்தத்தால் அவர் கால்கள் பின்னுகின்றன. எனவே அறவழியை விடுத்து எங்கு செல்கிறோம் என்று தெரியாமல் கால்கள் போகும் வழி போய்க் கொண்டிருக்கிறார்”

"கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் தாத்தா! என்ன மூட்டை? என்ன சுமை? ஏன் அவற்றை அவர் வீணாகச் சுமக்கிறார்? அந்தச் சுமை எதுவும் என் கண்ணுக்குத் தெரியவில்லையே!"

"கண்ணுக்குத் தெரியாது! ஆனால், அறிவுக்குப் புலப்படும் அந்தப் பெரும் சுமை! சொல்லுகிறேன் கேள்! ஒரு பொருளின் மீது மனிதன் விருப்பங்கொள்வது - அல்லது ஆசைப்படுவது இயல்பு! ஆனால், அதை அடைவதற்காக எத்தகைய குறுக்கு வழிக்கும் ஒருவன் தாயராகிக் கொள்கிறான் என்றால், அந்த ஆசை அவனை மனித சமுதாயத்தின் மதிப்பை இழக்கச் செய்து, அவன் தலையில் பெரும் சுமையாக ஏறி உட்கார்ந்து கொள்கிறது. அப்படிப்பட்ட ஆசையை இதோ அந்த மனிதர் சுமந்துகொண்டு நடக்கிறார். தன்னுடைய தனிப்பட்ட ஆசாபாசங்களுக்காகத் தன்மானத்தையும் இழக்கத் தயாராகிவிட்டாரே என்று விபரமறிந்தோர் வியந்தனர். அவர்களைக் கண்டு அவர் கொண்ட சினம் மலைபோல் உருவெடுத்தது! அந்தச் சினமெனும் பெரும் சுமையையும் தூக்கிக்கொண்டு நடக்கிறார். எப்படியிருந்த மனிதர் இப்படி ஆகிவிட்டாரே என்று அவருக்காக இரக்கப்பட்டவர்கள் மீது கடுஞ்சொற்களை வாரியிறைத்தார். அந்தக் கடுஞ்சொற்கள்; யானையானது தன் தலையில் தானே மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்டது போல் - அவர் தலைக்கே மற்றுமொரு சுமையாக வந்து சேர்ந்தது! இத்தனை சுமையுடன் அவரால் எப்படி அறவழியில் பயணம் செய்திட முடியும்? அதனால்தான் பாதை தவறிப் பரிதவிக்கிறார்."

"தாத்தா! தாத்தா! அய்யோ - அந்த மனிதர் ஆற்றில் விழுந்துவிட்டார்! விழுந்தவர் நீந்திடக்கூட முடியாமல் தவிக்கிறார். அதோ பாருங்கள் தாத்தா, அவர் ஆற்றில் முழுகிக் கொண்டேயிருக்கிறார். ஆமாம்! ஆளையே காணவில்லை! ஆற்றோடு போய்விட்டார் தாத்தா!"

"அவர் விழுந்துவிட்ட ஆறு என்ன ஆறு தெரியுமா? அதுதானப்பா அழுக்காறு! அதில் விழுந்த யாரும் தப்பமுடியாது! எந்த ஆற்றில் விழந்தாலும் ஒருவேளை தப்பிவிடலாம் - இந்த அழுக்காறு இருக்கிறதே; இதில் விழுந்து பிழைத்தோர் யாரும் இல்லை."

"தாத்தா! அழுக்காறு என்றால் என்ன?"

"அதுதானப்பா அடுத்தவன் வாழ்வதைப் பார்த்து - அடுத்தவன் புகழப்படுவதைப் பார்த்து - அடுத்தவனின் அறிவாற்றல், வீரம், உறுதி, இவற்றைப் பார்த்து - பொறாமை கொள்ளுதல்! அதற்குப் பெயர்தான் அழுக்காறு! அதனால்தான் வள்ளு வர் பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு சுமைகளையும் சுமக்காமல் நடந்தால், அறவழியில் எளிதாகச் செல்லலாம் என்று கூறியிருக்கிறார்."

தாத்தாவின் விளக்கம் கேட்டுப் பேரனின் விழிகள் ஒளி சிந்தின.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."

அதிகாரம் - 4 - அறன் வலியுறுத்தல்; பாடல் - 35



"நாடாளும் நாயகனே! நமது ஆட்சிக்குட்பட்ட மக்கள் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கோட்டை வாயிலில் குழுறிக்கொண்டு நிற்கிறார்கள்."

"காவலனே! காரணம் என்னவாம்? ஏன் அந்தக் கழுதைகளைக் கோட்டை வாயில் வரையில் வருவதற்கு அனுமதித்தீர்கள்?"

"பசியாம்! பட்டினியாம்! பல நாட்களாக!"

"அவர்களை உண்ணக்கூடாதென்று தடுத்தது யார்?"

"உணவு இல்லை! அதனால் பட்டினி கிடக்கிறார்கள்."

"ஓகோ! அப்படியா? உணவு இல்லாமற்போனதற்குக் காரணம் என்னவாம்?"

"வேலையில்லை! எனவே ஊதியத்திற்கு வழியில்லை! உயிரைத் துளைக்கிறது பசி என்று..."

"ஊளையிடுகிறார்கள்! அதை எனக்கு உரைத்திட நீ வந்துவிட்டாய்! நான் நிம்மதியாக இருப்பதே உங்களுக்குப் பிடிக்காது!"

"தங்களைக் கண்டு குறையினைத் தெரிவித்து விட்டுத்தான் திரும்புவோம் என்று அந்தக் கூட்டத்தினர் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்."

"ஆர்ப்பாட்டம் செய்வார்கள்! பிறகு போர்ப் பாட்டும் பாடுவார்கள்! இன்று எனக்கு அரசவை நடனக்காரிக்குப் பரிசு வழங்கும் விழா இருக்கிறது. பார்க்க வாய்ப்பில்லை என்று கூறி விரட்டி அடியுங்கள், அந்த வீணர்களை!"

"சிந்தித்துக் கூறுங்கள்! தங்கள் ஆணையை அப்படியே நமது காவலர்கள் நிறைவேற்றினால், கோட்டை வாயிலில் கண்ணீர் வடித்துக்கொண்டு நிற்கும் உருவங்கள், கனற் பிழம்புகளாக மாறிவிடக்கூடும்."

"எச்சரிக்கை செய்து என் வீரத்தை இகழ்கிறாயா? எலிகள் கூடி புலியை வென்ற தாகக் கதைகூட எழுதிக் களிக்க முடியாது! வேலையில்லாமல் அவர்கள் அலைவது விதிப்பயன்! தலையெழுத்து! ஆண்டவன் கட்டளை!"

"ஊதியம் போதவில்லையென்றார்களாம்! உரிமைக் குரலுக்கு இடமே இல்லையென்று, அவர்களை வைத்து வேலை வாங்கியவர்கள் விரட்டி விட்டார் களாம். தாங்கள் தலையிட்டால் அவர்களின் தலையெழுத்தை மாற்றலாம்; தரித்திரத்தைப் போக்கலாம்."

"சரியான திமிர் பிடித்தவர்கள்! உயிர் வாழ உணவு கொடுத்தவனை எதிர்த்து, உரிமைக்குரல் கொடுக்கும் நாய்களுக்கு நமது நாட்டிலேயே இடமில்லை. நான் அந்த அடங்காப் பிடாரிகளைக் காண இயலாது! முடியாது! இதுவே என் இறுதி யான - உறுதியான முடிவு! இதனை அறிவித்துவிடு அவர்களுக்கு! போ உடனே!"

கோட்டை வாயிலில் நின்ற கூட்டம் திரும்பிச் செல்ல மறுத்தது. காவலர் சூழ்ந்தனர். கடுமையாகத் தாக்கினர். அந்த ஆயிரவருக்குத் தலைமையேற்று முன்னணியில் வந்த ஆறு வாலிபர்கள்மீது கொலைக்குற்ற வழக்கு! அதுவும் நாடாளும் நாயகனையே கொல்ல வந்தார்கள் என்று வழக்கு!

அறுவருக்கும் மரண தண்டனை அளிக்கப்பட்டது. செய்தி, காட்டுத் தீயாகப் பரவியது.

தண்டிக்கப்பட்டவர்கள், தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். மக்கள் கடல் பொங்கியெழுந்தது. சிறைக்கோட்டத்தின் மதிற்சுவர் நொறுக்கப்பட் டது. அறுவரையும் விடுவித்தனர்.


சீறிக்கிளம்பிய அந்தச் சினவேங்கைக் கூட்டத்தின் அடுத்த இலக்கு அரண்மனை தான். மக்கள் வெள்ளம் அங்கும் நுழைந்தது. மன்னன் அங்கில்லை; அவன் எங்கோ ஓடிவிட்டான். மக்களின் வெற்றிமுரசம் விண்ணைப் பிளந்தது.

கடுமையாகப் பேசுவதையும் முறை கடந்த தண்டனை வழங்குவதையும் கொள்கையாகக் கொண்டவர்களின் ஆட்சி வலிமை, அரத்தால் இரும்புகூடத் தேய்ந்து விடுவதைப்போலத் தேய்ந்து விடுமென்று வள்ளுவர் எச்சரிக்கிறார்.

அதற்கு இதோ குறள்:-

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்"

அதிகாரம் - 57 - வெருவந்த செய்யாமை; பாடல் - 567



சுமைதாங்கியின் கதை

"என் குற்றமல்ல மனமே! என் குற்றமல்ல! என் கண்கள் செய்த குற்றம்!

அந்தக் குற்றத்திற்குத் தண்டனையை நான் அனுபவிக்கிறேன். புல்கட்டு சுமந்துகொண்டு ஒற்றையடிப் பாதையிலே, வயல்வெளியிலே நான் வந்து கொண்டிருந்தேன். மண்வெட்டியும் கையுமாக மடைகோலிக் கொண்டிருந்த என் அத்தை மகன் ஒளியன், எதிரே வருவார் என்று நான் எதிர்பார்த்தேனா என்ன? எனக்கு வழிவிடவேண்டுமென்று அவர் ஒற்றையடிப் பாதையோரம் ஒதுங்கியிருக்கிறார். வரப்பு வழுக்கி விட்டுவிட்டது; கழனிச் சேற்றில் மல்லாந்தவாறு விழுந்துவிட்டார். பருவப்பெண் நான்! பாய்ந்தோடி அவரைத் தூக்கிவிட முடியுமா? பண்பு தடுத்தது! நாணம் என்னைச் சிலையாக நிற்கவைத்து விட்டது! என் கண்கள் மட்டும் கழனியில் விழுந்து எழுகின்ற அவரை, உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அள்ளிப்பருகிடத் தவறவில்லை!

மனமே! அவை பொல்லாக் கண்கள்! மன்னிக்க முடியாத குற்றவாளிகள்! அடடா! ஒளியனின் உடலழகு பற்றி வர்ணிக்க ஓரிரு நாக்குகள் போதாதே!

மல்லாந்து கிடந்தபோது, அவரின் அகன்ற மார்பினைக் கண்டேன். அதில் முகம் பதித்துக் கிடந்தால், உலகமே வெடித்துச் சிதறினாலும் எனக்குத் தெரியாமற் போய்விடும். இரு குன்றங்களே அவரின் தோள்கள். அவற்றை அழுத்திப் பிடித்துக்கொண்டு, சற்றே தடித்த அவர் உதடுகளை என் மெல்லிய இதழ்கள் கொண்டு மெதுவாக உரசினால், அந்த இன்பத்திற்கு இணையாக இந்தப் புவியில் வேறென்ன இருக்கமுடியும்! ஒளியன் எனும் பெயருக்கேற்ப உருண்டு திரண்ட விழிகள்! அந்த விழிகளின் மூடிகளை என் காந்தள் விரல்கள் கொண்டு தடவிக் கொண்டே அவர் அருகே படுத்திருக்கலாம்போலிருக்கிறது! அவருக்கும் எனக்கும் திருமணம் முடிப்பதாக இரு வீட்டாரும் நிச்சயித்துவிட்டனர். அந்தப் பாழும் பஞ்சாங்கம் மட்டும், ஓராண்டு காலம் வரையில் ஒத்திப்போட வேண்டுமென்று உளறிக் கொட்டிவிட்டதாம்! அது வரையில் நான் காத்திருக்க வேண்டுமென்பது முடிகிற காரியமா? சரி; என் தலையெழுத்து; காத்துக் கிடக்கிறேன். அதற்குள் ஏன் என் கண்கள் இப்படியொரு சந்திப்பை அவருடன் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்! விழுந்து எழுந்த அவர் என்ன செய்தார் தெரியுமா?

ஒரு தட்டுத் தட்டிவிட்டு, ஒரு கிள்ளும் கிள்ளிவிட்டுப் புன்னகையைச் சிந்திவிட்டுப் போய்விட்டார்! கிள்ளியது என் கன்னத்தில்! தட்டியது எங்கே என்று கேட்காதே! சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது! ஆனால், அந்தக் கை பட்டதால் ஏற்பட்ட உணர்ச்சி என்னை என்னவோ செய்கிறது! தீராத காமநோய் தீப்போலப் பிடித்துக்கொண்டது என்னை!

நானிழைத்த குற்றமா இது? இல்லை! இல்லை! என் கண்கள் இழைத்த குற்றம்! அதற்குத் தண்டனையாகத்தான் என் கண்கள் அழுது இறுதியாக நீர் வரண்டு கிடக்கின்றன.

தீராத காமநோயை எனக்கு உருவாக்கிய கண்கள், நீர் வரண்டு போகும் வரையில் அழுதது நியாயம்தானே!"

-காதலனைக் கண்டு விட்ட ஒரு பெண்மணி, தனக்கேற்பட்ட கடுமையான காதல் நோயைக் குறித்துக் கவலைப்படுகிறாள். அதை விளக்குவதே இந்தக் குறள்:-

"பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து"

அதிகாரம் - 118 - கண்விதுப்பழிதல்; பாடல் - 1174





“எவ்வளவு பொருள் செலவானாலும் பரவாயில்லை. அந்த நரித்தலையனின் பகையை நான் பெற்றாக வேண்டும். அப்படிப் பெறுவதுதான் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியூட்டக் கூடியதாகும்.”

அருகில் அமர்ந்திருந்த புலவரிடம், அவரால் புகழ்ந்து பாடப்பெற்ற அரிமாநெஞ்சன் சொன்னான். கயல்நாடு எனும் சிற்றரசுக்குத் தலைவன்தான் அரிமாநெஞ்சன்! அவனுக்கு நெருங்கிய நண்பனாக விளங்கிடும் வாய்ப்பு பெற்றவன்தான் நரித்தலைவன். பெயருக்கேற்றாற்போல சூதுமதி கொண்டு, சூழ்ச்சிவலை பின்னி அரிமாநெஞ்சனுடைய அன்புக்குரிய சுற்றத்தாரையும் நண்பர்களையும் விரட்டி விட்டவன். இந்த உண்மையை புலவர் எடுத்துரைத்த போதெல்லாம் அதை நம்ப மறுத்தான் அரிமாநெஞ்சன்! இப்போதும் அதே புலவரிடம் அவன், நரித்தலையனின் பகையைப் பொருள் கொடுத்தாவது பெற்றிட வேண்டும் என்று கூறியதும் அவர் வியப்பில் ஆழ்ந்தார்!

“கயல் நாட்டுக் காவலனா இவ்வாறு பேசுவது? நரித்தலையன்மீது திடீரென இப்படிக் கோபம் பொங்குவானேன்? அவன் தீயவன் - தீயினும் கொடியவன் - என்று நான் எடுத்துக் கூறியபோதெல்லாம் என் பேச்சை ஏற்றுக்கொள்ள மறுத்தாய்! இப்போது அவன் எந்தப் பகையும் உன்னோடு கொள்ளவில்லை! நண்பனாகத்தானே இருக்கிறான். திடுமென அவனைப் பகைவனாக்கிக் கொள்வதால் பயன் என்ன?”

என்று புலவர், கேலிப் புன்னகை புரிந்தவாறு அரிமாநெஞ்சனைக் கேட்டார்.

"புலவரே! என்னை மன்னித்துவிடுக. தொடக்கத்தில் அந்தத் துரோகியைப் பற்றி நீவிர் எச்சரித்தபோது, என் செவிகள் அடைபட்டுக் கிடந்தன. என்னுடன் மிக நெருக்கமாக இருக்கிறானேயென்று எண்ணி ஏமாந்தேன். அடுத்துக் கெடுக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவன் நரித்தலைவன் என்பதை, அவனது அண்மைக் காலச் செயல்கள் வாயிலாகத் தெளிவாக உணர்ந்து கொண்டேன்."

அரிமாநெஞ்சனின் கண்கள் கலங்கின. புலவர், அவனுக்கு ஆறுதல் வழங்கியவாறு அறிவுரை கூறினார்:


"என் செய்வது! எளிதில் யாரையும் நம்பிவிடும் இயல்பு உனக்கு! யாரிடமும் அவன் பெறமுடியாத மதிப்பை நீ அவனுக்கு அளித்தாய். கொள்ளிக் கட்டையால் தலையைச் சொரிந்து கொள்வது என்பார்களே, அதைப்போல நரித்தலையனுக்கு நண்பர்கள் வரிசையில் முதலிடம் வழங்கினாய். இன்று அவனைப் பகைவனாக ஆக்கிக் கொள்ள என்ன விலை கொடுக்கவும் தயார் என்கிறாய். இதைத்தான் வள்ளுவர் அழகாக எழுதியிருக்கிறார். அதாவது; தன்னை அடுத்திருந்தவாறே தனக்கு மாறான காரியங்களைச் செய்பவனுடைய பகையை பொருள் கொடுத்தாவது வாங்கவேண்டும் என்று குறிப்பிடுகிறார். இப்போதாவது அந்தக் குறள் மொழி, உன் கண்ணைத் திறந்தது கண்டு களிபேருவகை கொள்கிறேன்."


சிற்றரசன், செந்தமிழ்ப்புலவரைக் கட்டித் தழுவிக்கொண்டு "எங்கே? என்னைத் திருத்திய அந்தக் குறளை உங்கள் வாயால் ஒருமுறை சொல்லுங்கள் புலவரே!" என்றான். புலவர் அந்தக் குறளை இசையுடன் பாடிக் காட்டினார்.

இதோ அந்தக் குறள்:

"கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை."

அதிகாரம் - 87 - பகைமாட்சி; பாடல் - 867





சிறைவாசியின்

ஏழாண்டுக் காலம் தண்டனை பெற்றுச் சிறையில் வாடிக்கொண்டிருந்தான் அந்த வாலிபன். செய்யாத குற்றத்திற்கு அவனுக்குச் சிறை வாழ்வு கிடைத்தது. குற்றம் புரியாத அவனுக்கு நீதிமன்றம் தந்த பரிசை எண்ணி எண்ணிக் குமுறிக் கொண்டிருந்தான் என்றாலும் சிறை வாழ்வுக்கு ஏற்றாற்போலத் தன்னை மாற்றிக்கொண்டு, அந்த ஏழாண்டுக் காலத்தைக் கழிப்பதற்கு நெஞ்சில் உறுதியேற்றுக்கொண்டான்.

சிறைக் கைதிக்குரிய பணிகளைச் செம்மையாகச் செய்வதிலும் சிறையில் உள்ள நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்வதிலும் அவன் மிகுந்த அக்கறை காட்டினான். அங்கிருந்த அதிகாரிகளில் ஒருவனுக்கு ஏனோ தெரியவில்லை; அந்த வாலிபன்மீது தேவையில்லாத ஒரு வெறுப்பு! இத்தனைக்கும் சிறை விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு அனைத்து அதிகாரிகளிடமும் அவன் பணிந்தே நடந்து வந்தான்.

சிறையில் உள்ள மற்ற கைதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் அவர்களுக்கு நோய்நொடியெனில் ஓடிச்சென்று உதவி செய்வதிலும் அந்த வாலிபனுக்குத் தனி ஆசை! அந்த நற்செயல், ஏனோ குறிப்பிட்ட அந்த அதிகாரிக்குப் பிடிக்கவில்லை. அதன் விளைவை அந்த வாலிபன் சிறைக்குள் அடிக்கடி அனுபவித்தான்.

வேண்டுமென்றே அவனைக் கடுமையான குரலில் கூப்பிட்டு, இழிவாகப் பேசுவான் அந்த அதிகாரி. சில நாட்களில் கைத்தடியால் அந்த வாலிபனை

அடித்துவிட்டும் செல்வான். 'ஏனய்யா என்னை வீணாக அடிக்கிறீர்கள்' என்று அந்த வாலிபன் கேட்டபோதெல்லாம் அதற்குத் தண்டனையாக, சிறைக்கூண்டுக் கதவைத் திறக்காமல் சிறைக்குள்ளேயே சிறை வைத்து அவனை வதைக்கவும் தயங்கவில்லை. சோறு தண்ணீர் கொடுக்காமல்கூட அவனைப் பட்டினியால் துவளவிட்டதும் உண்டு.

ஏழாண்டுத் தண்டனையில் இப்படி இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. அதற்கிடையே அவன் செய்திருந்த மேல் முறையீட்டின்பேரில் விசாரணை முடிவுற்று, குற்றமற்றவன் எனத் தீர்ப்பு வழங்கப்பெற்று விடுதலை பெற்றுவிட்டான். இரண்டு ஆண்டுகள் சிறைப் பறவையாக இருந்த அந்த வாலிபன் தன் பெற்றோரைக் காண, பிறந்த சிற்றூர் நோக்கிப் புறப்பட்டான்.

அவன் சென்ற வழியில், அந்த சிறை அதிகாரி பாதையில் விழுந்து கிடந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டான். அருகே சென்று கவனித்தான். அதிகாரியின் உடலின் பல பகுதிகளில் குருதி வழிந்து கொண்டிருந்தது. அவனைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு "அய்யா! அய்யா!" என்று அழைத்தான்.

அதிகாரி, கண்ணைத் திறந்தான். 'தண்ணீர்! தண்ணீர்!' என்று முனகினான். வாலிபன், பக்கத்திலிருந்த குளத்திற்குச் சென்று கை நிறையத் தண்ணீரை அள்ளிவந்து அதிகாரியின் வாயில் ஊற்றினான்.

"வெறிபிடித்து ஓடி வந்த மாடு ஒன்று இப்படி முட்டித் தள்ளி உருட்டி விட்டது" என்று அதிகாரி அழுதுகொண்டே சொன்னான். அவனைத் தூக்கி அந்த வாலிபன் தோளில் போட்டுக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான். அவன் குணமடை யும் வரையில் அருகிலேயே ஐந்தாறு நாட்கள் இருந்து கவனித்து வந்தான்.

ஒரு நாள், அந்த வாலிபன் அதிகாரியிடம் விடைபெற்றுக் கொண்டபோது, அவன் கைகளை அன்போடு பிடித்துக்கொண்டு அதிகாரி கேட்டான்: "நான் உனக்கு எவ்வளவோ தீமை செய்திருக்கிறேன். ஆனால், நீ அதற்கு மாறாக இவ்வளவு உதவி செய்திருக்கிறாயே! அது எப்படி முடிந்தது உன்னால்?"


வாலிபன் பதில் கூறினான், புன்னகையுடன்!

"அய்யா! நீங்கள் எனக்குச் செய்த தீமைகளையும் இப்போது நான் உங்களுக்குச் செய்த நன்மையையும் நான் மறந்துவிட்டேன். தீமை செய்தவர்களைத் தண்டிக்க, அவர்கள் வெட்கப்படும்படி அவர்களுக்கு நன்மையைச் செய்துவிட்டு, அந்தத் தீமையையும் அதற்கு மாறாகச் செய்த நன்மையையும் மறந்துவிடல் வேண்டுமென வள்ளுவர் கூறியிருக்கிறார். இது, துறவறம் மேற்கொண்டோர்க்கு மட்டுமல்ல, அனைவர்க்கும் பொருந்தும்."

அதிகாரி அந்த வாலிபனை நன்றிப் பெருக்குடன் தழுவிக்கொண்டு, தன்னை மன்னித்துவிடுமாறு கேட்டுக்கொண்டான்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்."

அதிகாரம் - 32 - இன்னா செய்யாமை; பாடல் - 314



"நான் மட்டும் அவரை நினைத்து நினைத்து ஏங்குகிறேன் - ஆனால், அவர்மட்டும் என்னை நினைப்பதாகவே தெரியவில்லை!"

இப்படியொருத்தி கவலைப்படுகிறாள்.

"அவர் என்னை நினைத்துக்கூடப் பார்க்காதபோது, என் நினைவிலிருந்து மட்டும் அவர் அகலாமல் இருக்கிறாரே!"

இப்படியொருத்தி கவலைப்படுகிறாள்.

இருவருமே தங்களின் காதலர் தங்களை நினைத்திடவில்லையென்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். அவர்தம் காதலர் அவர்களை நினைத்தார்களா இல்லையா என்பது எப்படித் தெரியும்! பிரிந்து சென்றவர் பறந்து வந்து இன்பத்தில் மிதந்து கொண்டிருக்க வேண்டுமென்ற தாபத்தால் உருவாகும் குற்றச்சாட்டு இது!

பிரிவு என்னும் வேதனையில் உழலும் காதலிக்குத் தன் காதலனை இழித்துப் பேசவேண்டுமென்று தோன்றுகிறது. "நான் நினைத்துக்கொண்டேயிருக்கிறேன். அவர் நினைக்கவே இல்லையே" என்ற ஒரு பெண்ணின் குமுறலை, வள்ளுவர் குறள் எத்துணை அழகுபட விளக்குகிறது!

காதலனின் நெஞ்சமெனும் மாளிகையில் குடியேறக் காதலி சென்றாளாம். மாளிகையின் வாயிலில் காவல் போட்டு அவளை உள்ளே விடாமல் காதலன் தடுத்துவிட்டானாம். அதனால் அவள், அவன் நெஞ்சுக்குள் நுழைய முடியாமல் போய்விட்டதாம்!

அதே சமயம் அந்தக் காதலன் மட்டும் ஓயாமல் அவளுடைய நெஞ்சமெனும் மாளிகைக்குள் நுழைந்து விடுகிறானாம்! அப்படி அடிக்கடி ஓயாமல் நுழைவதில் அவனுக்கு நாணமே கிடையாதா என்று அவள் கடிந்துகொள்கிறாள்.


காதலி, காதலனின் நினைவாகவே இருக்கிறாள் என்பதற்கும் - காதலனுக்கோ காதலியின் நினைவு இல்லையென்று காதலி சுமத்தும் குற்றச்சாட்டுக்கும் ஒரு புதிய கோணத்தில் இந்தக் குறள் விளக்கம் அளிக்கிறதல்லவா?

தம்முடைய நெஞ்சில் எம்மை வரவிடாமல் தடுத்துக் காவல் கொண்ட காதலர், எம்முடைய நெஞ்சில், தாம் ஓயாமல் வருவதைக் குறித்து நாணமுற மாட்டாரோ!

"தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத்து ஓவா வரல்."

அதிகாரம் - 121 - நினைந்தவர் புலம்பல், பாடல் - 1205





கி.பி. 1947 ஆம் ஆண்டு, இந்தியநாடு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. "இந்தியாவுடன் இணைந்திருக்க முடியாது" என்று கூறி முஸ்லீம்கள் தங்களுக்கெனத் தனியொரு நாட்டை அமைத்துக் கொண்டனர். இந்தியாவின் நிலப்பரப்பு அதனால் குறைந்தது.

அந்தத் தனி நாட்டுக்குப் பெயர்தான் பாகிஸ்தான். அந்த நாட்டை உருவாக்கிய தலைவர் முகமது அலி ஜின்னா, நோயுற்று இயற்கை எய்தினார். பல்வேறு குழப்பங்களுக்கிடையே பாகிஸ்தான் ஆட்சி நடைபெற்று, யாகியாகான் என்ற சர்வாதிகாரியின் ஆட்சியில் அந்த நாடு தன் நிலப்பரப்பில் ஒரு பகுதியை இழந்தது.

அந்தப் பகுதி புதிய வங்கதேசமாக உருவெடுத்தது. சர்வாதிகாரத்தை எதிர்த்து மக்கள் சக்தியைத் திரட்டி, பூட்டோ எனும் தலைவன், யாகியாகானை விலக்கிவிட்டு எஞ்சிய பாகிஸ்தான் நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றான்.

போர்ப்படைத் தளபதியாக - அதுவும் தலைமைத் தளபதியாக - யாரை நியமிப்பது என்ற பிரச்சினை எழுந்தது. தகுதி அடிப்படையிலும் வரிசை அடிப்படையிலும் தலைமைத் தளபதிப் பதவிக்கு ஏற்றவர்களாக ஏழெட்டுப்பேர் இருந்தனர்.

தலைமை அமைச்சர் பூட்டோவோ அவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளி விட்டுத் தன்னுடைய நம்பிக்கைக்குரிய நண்பன் என்று கருதி ஜியாவைத் தலைமைத்

தளபதியாக அறிவித்தான். நாட்டின்மீது உயிரையே வைத்துத் தன் மக்களுக்காக உழைப்பதில் தியாக உள்ளத்தைப் பெற்றிருந்த பூட்டோவுக்கு, தன் நம்பிக்கைக் குரிய தளபதியைத் தேர்ந்தெடுப்பதில் சரியான கணிப்பு இல்லாமற் போய்விட்டது.

அதன் விளைவு என்ன ஆயிற்று? அந்த நாட்டில் நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தைக் காரணம் காட்டித் தளபதி ஜியா, பூட்டோவைப் பிடித்துச் சிறையிலே பூட்டிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். அத்துடன் முடிந்ததா? ஒரு கொலை வழக்கில் பூட்டோவைத் தொடர்புபடுத்தி முறையான விசாரணைகளுக்கு இடமளிக்காமல், பூட்டோவுக்குத் தூக்குத் தண்டனையென்றும் தீர்ப்பு வெளியிடப்பட்டுவிட்டது.

உலகத்தில் உள்ள பெரும்பாலான நாட்டு அரசுகளின் சார்பில், பூட்டோவைத் தூக்கிலிடக் கூடாதென்று ஜியாவுக்கு முறையீடுகள் வந்து குவிந்தன. ஜியாவின் மனம் இரங்கவில்லை. பூட்டோ, தன் உயிரைக் காத்துக் கொள்ள ஜியாவிடம் கருணை கேட்கவில்லை. வீரனாகவே சாகிறேன் என்று அறிவித்து விட்டான்.

சிறையில் பூட்டோவுக்கு இழைக்கப்பட்ட கொடுமை - அவனை நீதி மன்றத்துக்கு அழைத்து வந்த போதெல்லாம் நடத்திய இழிசெயல் - கல்நெஞ்ச முடையவர்களாலும் தாங்கிக்கொள்ள முடியாதவைகளாகும். ஆனால் ஜியா, தன்னைப் பெரும் பொறுப்பில் தூக்கி வைத்த நண்பன் பூட்டோவுக்கு அந்தக் கொடுமைகளையெல்லாம் பரிசாக வழங்கினான்.

ஒரு நாள் காலை உலகத்து மக்கள் அனைவரும் கண்ணீர் வடிக்கத்தக்க அந்தச் செய்தியும் வந்தது. அதுதான், சிறைச்சாலையில் பூட்டோ மரண தண்டனைக்கு ஆட்படுத்தப்பட்டான் என்பது! தன்னை நம்பியவனுக்குத் தரவேண்டுமென்று தயாராக வைத்திருந்த அந்த அன்பளிப்பையும், ஜியா, பூட்டோவுக்குத் தந்து விட்டான்.

"ஒரு முறைக்குப் பலமுறை ஆராய்ந்து பார்த்து நண்பனைத் தேர்ந்தெடுக் காதவன், அந்த நண்பன் என்ற நயவஞ்சகனாலேயே சாகப் போகிறேன்" என்று பூட்டோவின் மனம் நிச்சயமாக அழுதிருக்கும். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலே அந்த வீரன் மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டான்.

'பலமுறை ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுடைய நட்பு, இறுதியில் தான் சாவதற்கே காரணமான துன்பத்தை உருவாக்கிவிடும்.'

என்று இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வள்ளுவர் எழுதிவைத்த குறள் எத்துணை உண்மையாகிவிட்டது என்பதற்குப் பூட்டோ, ஜியாவிடம் ஆராயாமல் கொண்ட நட்பே எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது அல்லவா?

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்."

அதிகாரம் - 80 - நட்பாராய்தல்; பாடல் - 792



அத்தியெனும் வணிகன், அகமும் முகமும் வாடிய நிலையில் வள்ளுவரைக் காண வந்தான். "சிரிப்புத் தழைத்திருக்கும் உன் முகத்தில் கவலையின் ஆதிக்கம் ஏற்படக் காரணம் யாது?" குறளார் உருக்கமுடன் வினவினார்.

அத்தியின் விழிகள், மழைத்துளி உதிர்க்கும் முகில்களாயின. தழுதழுத்த குரலில் அவன் பேசினான்:

"பெருமகனாரே! நான் பாடுபட்டுத் தொழில் செய்து சிறுகச்சிறுகப் பொருள் சேர்த்து ஊர்மெச்சும் வணிகனானேன். தங்களுக்கும் அது நன்கு தெரியும். அரண்மனைகூடக் கட்டிக்கொண்டு வாழ்வான் அத்தியென்று உற்றார் உறவினர் பெருமையுடன் கூறினர். ஆனால், இன்று என் நிலை என்ன தெரியுமா? ஆலமரத்தடி நிழலில் கூடத் தங்குவதற்கு எனக்கு இடம் கிடைக்குமா? இப்படியொரு அவலம் வந்து சூழ்ந்து விட்டது!"

வள்ளுவர் திகைத்தார்.

"உண்மையாகவா? உன் தொழில் கெடவும் வளமைப் பொழில் கருகவும் காரணம் என்ன? எப்படி நடந்தது இந்த மாற்றம்?"

அத்தியினால் உடனடியாக விளக்கமளிக்க முடியவில்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்தான்.

"கொஞ்சம் கொஞ்சமாகக் குவித்த பொருளை, பன்மடங்கு பெருக்கிட வேண்டுமென்று, அயல் நாட்டுடன் வாணிபம் நடாத்தக் கப்பல் ஒன்று வாங்கினேன்; அதில் கொற்கை முத்தும், மிளகும், மயில்தோகையும் ஏற்றியனுப்பினேன் யவனத்திற்கு! கைப்பொருள் அத்தனையும் போட்டு அந்தக் கப்பல் நிறைய ஏற்றுமதி செய்த பொருள், யவன நாட்டுக்குச் சென்றிருக்குமேயானால், அதற்கென எனக்குக் கிடைக்கும் வருமானம் அளவிட முடியாததாக இருந்திருக்கும்! ஆனால்...ஆனால்.....!"

அழத்தான் முடிந்தது அத்தியினால்! அதற்கு மேல் எதுவும் சொல்ல முடியவில்லை. வள்ளுவர் புரிந்துகொண்டார். அவனை ஆறுதலாகத் தழுவியவாறு கேட்டார்: "புயல் காற்றில் அந்தக் கப்பல் கடலில் கவிழ்ந்துவிட்டது- அப்படித்தானே?" என்று!

ஆம் என்பதை அத்தி, தன் தலையை அசைத்ததன் வாயிலாகக் காட்டிக் கொண்டான். வள்ளுவர், அத்தியை அமைதிப்படுத்தி உணவளித்து உறங்கச் செய்தார். மறுநாள் பகல் முழுதும் அத்தியின் மனத்தைத் தேற்றுகிற வேலையிலேயே ஈடுபட்டார். "மீண்டும் தொழிலைத் தொடங்கி வாழ்வில் நிமிர்ந்திட வழியுண்டு! நடந்ததை யெண்ணி வளைந்து கிடக்காமல் சோகம் துடைத்துப் பீடுநடை போட வேண்டும்" என்று அறிவுரை கூறினார். அத்தியும் ஓரளவு ஊக்கம் பெற்று எழுந்தான். வள்ளுவரும் அவனுடன் சிறிது தொலைவு நடந்தார்.

"பெருந்தகையே! ஒவ்வொரு பொன்னையும் என் வீட்டுப் பேழையில் அடுக்க ஒவ்வொரு நாளும் நான் உழைத்தேன். சேரும்போது ஒவ்வொன்றாக வந்த பொன், இப்போது போகும்பொழுது ஒரேயடியாக ஒரே நாளில் போய்விட்டது பார்த்தீர்களா?"

என்று அத்தி, ஆதங்கத்துடன் திருவள்ளுவரிடம் சொன்னான். வள்ளுவர் நின்றார்.

"அதோ பார் அத்தி! அது என்ன தெரிகிறதா? கூத்தரங்கம்! அந்தக் கூத்தரங்கத்தில் கூத்துப் பார்த்துக் களிக்க மக்கள் வரும்போது, அரங்கத்திற் குள்ளே ஒவ்வொருவராகத்தான் வருவார்கள்! இல்லையா?"

"ஆமாம்! ஆமாம்!"

"ஆனால்; கூத்து முடிந்து மக்கள் செல்லும்போது அப்படியே கூட்டமாகக் கலைந்து சென்று விடுவார்கள்! அல்லவா?"

"ஆமாம்! ஆமாம்!"

"அதைப் போலத்தான் செல்வம் வந்து சேர்வதும், போதலும்! கூத்தரங்கில் கூட்டம் சேர்வதைப் போலச் செல்வம் சிறிது சிறிதாகச் சேரும்! அந்தச் செல்வம் நம்மை விட்டு நீங்கிப் போவது, கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றதாகும்"

"அடடா! என்ன உவமை! என்ன உவமை! இப்படியொரு உவமையைக் கேட்ட எனக்கு, என் கப்பல் மூழ்கிய கவலைகூடத் தெரியவில்லை. இத்தகைய அற்புத உவமையொன்றைத் தாங்கள் கூற வேண்டுமென்பதற்காகவே, நான் சேர்த்த பொருளனைத்தும் என்னை விட்டு நீங்கியது போலும்!"

இப்படி வியந்து பாராட்டிக்கொண்டே அத்தி, வள்ளுவரின் கைமலர்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டான்.

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று."

அதிகாரம் - 34 - நிலையாமை; பாடல் - 332



மேற்றிசையில் மறைந்த கதிரவன், மறுநாளும் மேற்றிசையில் மறையும்போது - பொழுது அதற்குள் விடிந்துவிட்டதேயென்று ஆறாத்துயருடன் கீழ்த்திசையைப் பார்க்க மஞ்சத்துத் திரையை விலக்கிட - தாம் காண்பது உதயமல்ல; இப்போதுதான் இரவே வருகிறது என எண்ணி மீண்டும் இறுகத் தழுவிக்கொண்டு ஈரிரவு, ஓர் பகலை ஒரு நாள் எனக் கணக்கிட்டு ஓயா இன்பத்தில் திளைத்திருந்ததையெல்லாம் மறந்தாயோ அத்தான்?" என்று கொட்டும் விழிமழையால் அவன் குன்றத்தோள் நனைத்தாள்.

"எப்படிக் கண்ணே மறப்பேன்? ஏன் கண்ணே உனக்கு இப்படி ஓர் ஐயம்? நாளைக் காலையில் நாம்தான் இருக்கப் போகிறோமா? அல்லது இந்த உலகம்தான் திடீரென உடைந்து சிதறிவிட்டால் என்ன செய்யப்போகிறோம்? எனவே அதற்குள் அள்ளிப் பருகவேண்டிய காதலின்பக் கலவியமுதையெல்லாம் அள்ளிப் பருகிச் சுவைத்துக் கிடப்போம் என நான் சொல்லி உன் இடையை வளைக்க - நீயோ அல்லித் தண்டுபோல் துவண்டு - இந்த வண்டுக்கு மலராக உன்னையே என்பால் தந்தாயே, அந்த இனிய நிகழ்ச்சிகள் என் இதயத்தில் கல்லில் செதுக்கிய சிற்பக் கண்காட்சியாக விளங்குகிறது என்பதை நான் சொல்லித்தான் நீ தெரிந்துகொள்ள வேண்டுமா?" - அவளின் கண்ணீர் துடைத்து, உச்சியில் இதழ் பதித்தவாறு கேட்டான் அவன்.

"எதையும் மறக்காமல் இருக்கின்ற கண்ணா! என்னை மட்டும் மறந்து விட்டு யவன நாட்டுக்குச் செல்வதாக உரைக்கின்றாயே; நியாயம்தானா? நீயே எண்ணிப்பார்!"

"தமிழகத்தின் வளத்தைப் புகழ்ந்து பாடும்வண்ணம் அயல்நாடுகளிலும் நமது வாணிபம் சிறக்க வேண்டாமா இன்பமே! கடமை செய்யத்தானே இந்தக் கடற்பயணம் மேற்கொள்கிறேன், கனியமுதமே! கலங்காமல் எனக்கு விடையளித்து வழியனுப்பு!"

"நெஞ்சு வெடிக்கும் செய்தியன்றோ, கண்ணா! நீ கொஞ்ச நேரம் என்னைப் பிரிவதுகூட!"

"நான் மட்டும் என்னவாம்? எனக்கு மட்டும் கல்நெஞ்சமா? எவ்வளவு விரைவில் திரும்பி வந்து உன்னைக் கட்டியணைத்துக்கொண்டு, காலம் போவது தெரியாமல் உன் அருகிலேயே கிடக்கிறேன் பார்!"

"ஏனத்தான், இந்த ஏமாற்று வார்த்தை? பிரிவைப்பற்றித் தெரிவிக்கும் அளவுக்குக் கல்நெஞ்சம் உடையவராகிவிட்டபிறகு; திரும்பி வந்து அன்பில் திளைத்திடுவோம் என எண்ணுகின்ற ஆசை என்னைப் பொறுத்தவரையில் பயனற்றது! நம்பமுடியாதது!"


இருவரும் விம்மியழுதவாறு தழுவிக்கொண்டு மஞ்சத்தில் வீழ்ந்தனர். யவனத்திற்கு மயில், மிளகு, முத்துக்களை ஏற்றிக்கொண்டு நின்ற நாவாய், அவன் வருகைக்காகக் கடலில் காத்துக்கொண்டு இருந்தது.

"பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை."

அதிகாரம் - 116 - பிரிவாற்றாமை; பாடல் - 1156

நசை = ஆசை நல்குவர் = அன்பு செய்வார்





"நாள் என்பது ஒரு வாள்" என்றவாறு நுழைந்தான் அறவாழி!

அவனை வியப்புடன் நோக்கிய வீரன்: "வாப்பா! வா! என்ன வரும்போதே 'வாள்! வாள்!' என்று கத்திக்கொண்டு வருகிறாய்!" எனக் கேலி செய்தான்.

அறவாழி, வீரனைத் தட்டிக் கொடுத்தவாறு, "என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்று கேட்டான். வீரன் எப்போதும் குறும்பாகப் பேசக்கூடியவன்.

"அறவாழி! நீ இப்போது கேட்கிறாயே; இதற்குப் பெயர்தான் குருட்டுக் கேள்வி என்பது!" என்றான் சிரித்துக்கொண்டே!

வீரன் அப்போது தன் உடைவாளைக் கூர்மைப்படுத்திப் பளபளப்பு ஏற்றிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்துக்கொண்டே வந்த அறவாழிதான், "என்ன செய்து கொண்டிருக்கிறாய் வீரா?" என்ற கேள்வியைக் கேட்டு வைத்தான்.

"வாள் எப்படி ஒளிவிடுகிறது. பார்!"

வீரன் வாளைத் தூக்கிக் கம்பீரமாக உயர்த்தினான்.

"இந்த வாள், எத்தனை பகைவர்களின் தலைகளையும், கை, கால்களையும் வெட்டி வீழ்த்தியிருக்கும் தெரியுமா?"

வீரன் பெருமையுடன் பேசினான்.

அறவாழி சிரித்துக்கொண்டான். "வீரா! உன் கையில் உள்ள வாள், பகைவர்களின் உயிரைப்பறிக்கும் வலிமை வாய்ந்தது! உண்மைதான்! ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், ஒன்று புரியுமா உனக்கு? நம் உயிரைச் சிறிது சிறிதாக உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் கண்ணுக்குத் தெரியாத வாள் ஒன்று உள்ளதே, அதைக் கண்டிருக்கிறாயா நீ?"

அறவாழியின் இந்தக் கேள்விக்கு வீரன் விடையளிக்காமல் திகைத்தான். "கண்ணுக்குத் தெரியாத வாளா? இது என்னப்பா புதுமை?"

"ஆமாம் வீரா! வாழ்க்கையை ஆராய்ந்து உணர்பவர்களின் அறிவுக்கு மட்டுமே அந்த வாள் தெரியும்!"

"சற்று விளக்கமாகத்தான் சொல்லேன்." வீரன் ஆவலை விழிகளில் தேக்கிக் கொண்டு அறவாழியையே நோக்கினான்.

"வீரா! இன்றைக்கு நாள் என்ன?"

"இதுகூடத் தெரியாதா அறவாழி? இன்றைக்கு நாள் தைத்திங்கள் ஏழாம் நாள்!"

"வீரா! நாள் என்பதை ஒரு கால அளவுகோல் என்று மட்டுந்தானே எண்ணிக்கொண்டிருக்கிறோம்!"

"ஆமாம், அறவாழி! அதிலென்ன சந்தேகம்? நாள் என்பது காலத்தின் அளவுகோல்தான்! இந்தக் தைத்திங்கள் ஏழாம் நாளுடன் எனக்கு இருபத்தெட்டு வயது நிறைவு பெறுகிறது. எனவே நாள்கள் கால அளவைக் காட்டும் கருவிகள் தானே!"

"அதுதான் சொல்ல வந்தேன்! நாள் என்பது கால அளவுகோல் மட்டுமல்ல! உன் கையில் பிடித்திருக்கிறாயே, அந்த வாளைப் போன்றது நாள்! அதாவது ஒவ்வொரு நாளும் நகரும்போது, அந்த நாள் நம் உடம்பிலிருந்து உயிரைப் பிரிக்கும் வாள் போல இருந்து, நம்மைச் சிறிது அறுத்திருக்கிறது என்று பொருள். உன் கை வாள், ஒரேயடியாக எதிரியின் உயிரை அவன் உடம்பிலிருந்து பிரித்து விடக்கூடும். ஆனால் உன் உயிரையும் என் உயிரையும் நம்மைப் போன்ற பல உயிர்களையும் அவரவர் உடல்களிலிருந்து பிரிக்கும் வேலையை மெல்ல மெல்லவும் சில நேரங்களில் வேகமாகவும் செய்யக்கூடிய வாளாக இருக்கிறது நாள்!"

"அறவாழி! அழகாகச் சொன்னாய்! ஆமாம்! உண்மைதான்! நாள் என்பது கால அளவுகோல் மட்டுமல்ல! கால அளவுகோல் போல இருந்து உடம்பிலிருந்து உயிரை அறுத்துப் பிரிக்கும் வாளாகத்தான் உள்ளது! சரியாகச் சொன்னாய்!"

"வீரா! இதை நான் சொல்லவில்லை. வள்ளுவர் சொல்லியிருக்கிறார்! இதோ அந்தக் குறள்" என்று சுவடியைக் கொடுத்தான் அறவாழி.

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்"

அதிகாரம் - 34 - நிலையாமை; பாடல் - 334



இளம் தளிர்களின் அறிவுப்பசி போக்கும் அரும்பணியை மேற்கொண்டிருந்த ஆசிரியன்தான் அன்பானந்தன். மாலை நேரம். கல்விச் சாலை முடிந்து இரண்டு கல் தொலைவில் உள்ள தன் ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்தான்.

திடீரெனக் கனமழை பிடித்துக்கொண்டது. இடி மின்னல்! இள வயது படைத்தவன் என்பதால் இயற்கையின் சீற்றம் கண்டு அன்பானந்தன் அஞ்சிட வில்லை. மழையில் நனைந்துகொண்டே வீடு போய்ச் சேர்ந்தான்.

அவன் அவ்வளவு அவசரமாக அந்த மழையிலும் வீடு போய்ச் சேரத்துடித்ததற்குக் காரணம் ஒன்றும் இருந்தது. பக்கத்து வீட்டு அழகரசி அன்றைக்கு ஊரிலிருந்து திரும்பியிருப்பாள்; அவளைக் காண வேண்டும்! இருவரும் மணம் முடித்துக் கொள்ளாத காதல் புறாக்கள்.

அழகரசி, தன் அத்தையின் உடல் நலம் விசாரித்துவரச் சென்றவள். அத்தையின் உடல் நலிவு விரைவில் தீராத காரணத்தால் இன்னும் நாலைந்து நாட்கள் கழித்தே திரும்பி வருவாள் என்ற செய்தி அன்பானந்தனுக்குக் கிடைத்தது. ஏமாற்றம். மழையில் நனைந்தோடி வந்ததுதான் மிச்சம்.

மழையை எதிர்த்ததன் விளைவு, அன்றிரவு அவனைக் கடும்காய்ச்சல் தாக்கியது. பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. வீட்டிலே படுத்துவிட்டான். மருத்துவர் சித்த

வைத்தியச் சூரணங்களையும்...மூலிகைகளையும் கொடுத்தார். காய்ச்சல் குணமாயிற்று. எழுந்து நடமாட முடிந்தது என்றாலும் மிகக் களைப்புற்றிருந்தான்.

நான்கு நாட்கள் பறந்தோடின. உடலுக்கு வந்த நோய் போய்விட்ட தென்றாலும் உள்ளத்தில் கனல்விட்ட காதல்நோய் தீர்ந்தபாடில்லை. அழகரசியை எண்ணியவாறு பல் துலக்கிக்கொண்டே குளக்கரைக்குச் சென்றான். அங்கே அவன் எதிர்பாராத நிலையில், அழகரசி குளித்துக் கொண்டிருந்தாள்.

இருவர் கண்களும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு விழுங்கின.

"எப்போது வந்தாய் இன்பமே!" என்று காதல் பொங்கிடக் கேட்டான் காளை! பாளைச் சிரிப்பழகியோ, "விடியற்காலைதான் வந்தேன்! அதிருக்கட்டும்; உங்களுக்கு உடல் நலமில்லை, காய்ச்சல் என்று கேள்விப்பட்டேனே?" எனக் கொஞ்சினாள்.

"உண்மைதான்! மழையில் நனைந்து காய்ச்சலை வரவழைத்துக் கொண்டேன். மருத்துவர் நல்ல மருந்து கொடுத்தார். நோய் பறந்துவிட்டது!"

என்றவாறு அவளருகே வந்தான் அவன்.

அழகரசி, தங்களை யாரும் பார்க்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டாள். நீரில் மிதக்கும் தாமரை மலர்போன்ற அவள் முகத்தையே அவன் பார்த்துக்கொண்டிருந்தான்.

பின்னர் அவளை வியப்போடு கேட்டான்:

"அழகரசி! என் உடலுக்கு வந்த காய்ச்சல் நோயைத் தீர்க்க வேறு பொருள்களே மருந்தாக இருந்தன! ஆனால், நீ என் உள்ளத்தில் ஏற்படுத்திய காதல் நோய்க்கு நீயே அல்லவா மருந்தாக இருக்கின்றாய்! இந்த வேடிக்கையைக் கவனித்தாயா?"

என்று புன்னகை மின்னிடக் கேட்டான்.

"அத்தான்! இதுபற்றி நீங்கள் படித்த குறளில் ஏதாவது இருக்குமே!"

"நிச்சயமாக இருக்கிறது! நான் காய்ச்சலால் வருந்தியபோது அந்தக் குறளைத்தான் படித்துச் சுவைத்தேன்."

"என்ன குறளத்தான் அது?"

அவன் சொன்ன குறள் இதுதான்:

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து"

அதிகாரம் - 111 - புணர்ச்சி மகிழ்தல்; பாடல் - 1102

பிறமன் = வேறு பொருள்கள்
அணியிழை = அணிகலன் பூண்ட அழகி



‘மனோன்மணியம்’ நூலில் சில கதாபாத்திரங்களைக் காணுகிறோம். பாண்டியநாட்டு மன்னன் ஜீவகன் - எல்லோரையும் எளிதில் நம்பிவிடும் இயல்பினன். அவனுக்கு ஓர் அமைச்சன். பெயர் குடிலன்! குடிகெடுக்கும் குணம் படைத்தவன். அவனிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டு, அவன் சொற்படியெல்லாம் பாண்டிய மன்னன் கேட்கிறான்.

அதன் விளைவாகப் பாண்டிய நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் போர் மூளுகிறது. சேர மன்னன், தன் படையுடன் கிளம்பி பாண்டிய நாட்டை வென்றிட வரும் வழியில் பாசறை அமைத்துத் தங்குகிறான்.

குடிலன், பாண்டிய நாட்டைச் சேர நாட்டுக்குக் காட்டிக் கொடுத்து, பாண்டியப் பேரரசின் மன்னனாகத் தான் ஆகிவிடத் திட்டம் தீட்டுகிறான்.

பாண்டிய மன்னன் தங்கியிருக்கும் கோட்டையில் ஒரு பாதுகாப்புக் குகையிருக்கிறது. குடிலன் அவ்வழியாக வெளியே சென்று சேர மன்னன் புருடோத்தமனை இரகசியமாகச் சந்தித்து, குகை வழியாகச் சென்றால் பாண்டியனைப் பிடித்துச் சிறையில் தள்ளிவிடலாம் என்று கூறுகிறான்.

புருடோத்தமன், குடிலன் சொன்னது அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, இறுதியாகத் தன் காவலரை நோக்கிக் குடிலனைக் கைது செய்யுமாறு ஆணை பிறப்பிக்கிறான்.

குடிலன் நடுங்கிப் போகிறான்.

"அரசே! தங்களுக்குத் துணைபுரிய வந்த எனக்கு இப்படி ஒரு தண்டனையா?" எனக் கேட்டுக் கதறுகிறான்.

அவனைப் பார்த்துப் புருடோத்தமன் சொல்லுகிறான்;

"குடிலா! நேரான வழியில் போர் புரிந்து பாண்டியனைக் களத்தில் சந்திக்கும் ஊக்கமும் வீரமும் எனக்கும் என் படைத் தளபதிக்கும் உண்டு. உன் மன்னருக்குத் துன்பம் வருகிற நேரத்தில் அவரைக் கைவிட்டுக் காட்டிக்கொடுக்கத் துணிந்து விட்ட நீ; பிறிதொரு நாள் அதே காரியத்தை எனக்குத் தீங்கு வரும்போது செய்ய மாட்டாய் என்று எப்படி நான் நம்ப முடியும்? அதனால்தான் உனக்கு இந்தத் தண்டனை!"

குடிலன் விலங்கிடப்பட்டுப் பாண்டியன் முன் நிறுத்தப்படுகிறான். பாண்டியன், குடிலனின் துரோகச் செயலை உணருகிறான். சேர பாண்டியர் களிடையே நட்பு உருவாகிறது - இவ்வாறு மனோன்மணியம் மகிழ்ச்சிகரமாக முடிகிறது. இந்தக் கதாபாத்திரங்களின் வாயிலாக "மனோன்மணியம்" ஆசிரியர், திருக்குறளின் அரிய கருத்தொன்றை வெளிப்படுத்துகிறார்.


"ஊக்கம் குறைவதற்கான காரியங்களை எண்ணவே கூடாது. அதே போலத் துன்பம் வருகிற நேரத்தில் கைவிடுகிறவர்களின் நட்பைக் கொள்ளவும் கூடாது."

குடிலனைப் புருடோத்தமன் புரிந்து கொண்ட காரணத்தால், குறள் மொழிப்படி நடந்து காட்டினான்.

"உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு."

அதிகாரம் - 80 - நட்பாராய்தல்; பாடல் - 798





கார்மேகத்திற்குக் கழனியுண்டு. கரும்பு விளையும் நிலம் உண்டு. தென்னந்தோப்பும் ஒன்று உண்டு. அந்த ஊரில் பெரிய வீடும் உண்டு. எல்லையற்ற செல்வமும் இல்லை; தொல்லை தரும் வறுமையும் இல்லை; நடுத்தரமான வாழ்க்கைக்கும் மேம்பட்ட வாழ்க்கைதான். அந்த வாழ்க்கையில் கார்மேகம் மகிழ்ச்சியுடன்தானிருந்தான்.

ஆனால், திடீரெனச் சில தினங்களாக அவன் முகத்தில் எப்போது பார்த்தாலும் வெடிப்பின் இரேகைகள்! கண்களில் ஏதோ ஒரு சோர்வு! நடையில் தளர்ச்சி. அவனது மாற்றத்தைக் கண்டு ஊர்ப் பொதுமண்டபத்தில் பேச்சு எழுந்தது.

"எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடியவன் ஏன் இப்படி மாறிக்கொண்டு வருகிறான்? ஏதாவது நோய் பற்றிக் கொண்டிருக்கிறதா? அதனால் ஏற்பட்ட கவலையா?"

இப்படி ஐய வினா எழுப்பியவருக்கு, கார்மேகத்துக்கு வழக்கமாக வைத்தியம் செய்யும் மருத்துவர் விடையளித்தார்.

"சே!சே! அப்படியொன்றுமில்லை. கார்மேகத்தின் மருத்துவனே நான்தானே! உடல் வலிக்கு ஒன்றும் குறைவில்லை. ஏதோ உள்ளத்தில்தான் குடைச்சல்! அதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை."

இன்னொருவர், அந்த மண்டபத்தில் பின் வருமாறு ஒரு கற்பனையைப் பொழிந்தார்.

"கார்மேகத்துக்குப் பக்கத்து ஊரில் சில பகைவர்கள் உண்டு. அவர்களால் ஏதாவது தீங்கு நேரிடக் கூடும் என்று கார்மேகம் அஞ்சிக் கொண்டிருப்பதாகக் கேள்வி! அதிலும் வர வர அந்தப் பகைவர்கள் வலிவு பெருகிக் கொண்டிருக்கிறதாம்! வாய்க்கால் வரப்புச் சண்டையில் வளர்ந்த அந்தப் பகைமை 'உன்னை வாழவிட்டேனா பார்' என்கிற அளவுக்கு வளர்ந்து விட்டதாம்."

இதை அவர் சொல்லி முடிப்பதற்குள் அந்த ஊர்ப் பெரியவர் - கலகலவென நகைத்தவாறு பேசலுற்றார். எல்லோரும் அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதையே ஆவலுடன் எதிர்பார்த்தனர். பெரியவர் பேசினார்:

"ஒளியழகன் எனும் ஓர் இளைஞன் நமது ஊர்ப்பிள்ளை என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அவன், கடலோடி வாணிபம் செய்து பெரும் பொருள் திரட்டிச் சிறந்த செல்வனாகத் திகழ்கிறான். ஒளியழகன், நமது கார்மேகத்துக்கு உறவுகூட! அவனொன்றும் கார்மேகத்திடம், எந்த வம்புக்கும் வருவதில்லை. பக்கத்து ஊரில் பெரியதோர் வீடு கட்டுகிறான், நிறைந்த தொகை செலவிட்டு!

தன் கண் எதிரே எளியோனாய்த் திரிந்த இளைஞன் இன்று பெருவணிகனாய் விளங்குவது கண்டு கார்மேகத்துக்குப் பொறாமை தாங்கமுடியவில்லை. அவனையு மறியாமல் அவன் எரியும் உள்ளத்தை என்னிடம் திறந்தும் காட்டிவிட்டான். பொறாமைத் தீ, அவன் நெஞ்சைச் சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது.

யாரோ - எவரோ - என்றால்கூட இவ்வளவு பொறாமை இருக்காது! உறவுக் காரன் ஒருவனே, தன்னை மிஞ்சிச் செல்வந்தனாகி விட்டதும் - சீர் பல பெற்று வாழ்வதும் - கார்மேகம் போன்ற கடுகு உள்ளத்தினரால் தாங்கிக் கொள்ள இயலாது.

அதனால் தான் அவன் வதங்கித் தேய்கிறான். பகைவர்கள் யாருமே தீங்கு செய்ய முற்படவில்லை! அவனுள்ளிருக்கும் பொறாமையே அவனுக்குப் பகை! அதைவிட அவனுக்கு வீழ்ச்சி தருவதற்கு வேறு பகை தேவையில்லை."

பெரியவரின் விளக்கம் கேட்டு ஊரார் உண்மை உணர்ந்தனர். கார் மேகத்தைக் காரி உமிழ்ந்தனர்.

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது."

அதிகாரம் - 17 - அழுக்காறாமை; பாடல் - 165

ஒன்னார் = பகைவர் வழுக்கியும் = தவறினாலும் ஈன்பது = தருவது



அழகை அள்ளிப் பொழியும் இயற்கைக் காடு! அங்கே துள்ளித் திரியும் மான் கூட்டம்! தோகை விரித்து ஆடிடும் மயில்கள்! அதுகண்டு பொல்லாச் சிறகை அவிழ்த்துக் குதித்திடும் வான்கோழிகள்! இலவம் பஞ்சின் உருண்டைகள்போல் முயல்கள் தரையில் பறந்திடும் காட்சி! கிளைவிட்டுக் கிளை தாவிப் பாய்ந்திடும் குரங்குகட்கும் அந்தக் காட்டில் தனியாட்சி! மலைமுகட்டின் முகில்கள் உருகி, இயற்கையின் அற்புதத்தால் நெய்யருவிகள் பாறைகளில் பெருக்கெடுக்கும் எழிலே எழில்! அதனருகே அமர்ந்து பாடிடும் குயிலோ குயில்! அக்குரல் பயிலத் தவமிருக்கும் காகம்! அது இசைப்பதோ அபத்த ராகம்! அதை ரசிப்பதோ ஒரு வராகம்! இந்த வேடிக்கை பார்க்க அங்கு வாடிக்கையாக வட்டமிடும் பச்சைக் கிளி! நீலப்புறா!

அங்குள்ள பாறைகளில் ஒன்றுதான், பாவையை யாரும் பார்த்துவிடாமல் பாதுகாப்பு அளித்தது. ஆம்; பாவைதான் அவள் பெயர்! பாறை மறைவில் யாரைத் தேடி அவள் நிற்கின்றாள்; யாரைத்தான் தேடுவாள்?

இளங்கவிஞன் பூங்குன்றன், குறித்த நேரத்தில் வரவேண்டும் - வராத காரணத்தால்தான் தவிக்கின்றாள். வழக்கமாகச் சந்திக்கும் காதற்களம்தான் அது!

அங்குள்ள மரம் செடி கொடிகள், மலைப்பாறைகள், அருவிப் பொழிவு, அணில், கிளி, புறா, குயில், மயில் அனைத்துக்கும் எழுத்தாற்றல் வாய்க்கப் பெற்றால், கம்பனையும் இளங்கோவையும் மிஞ்சும் காதற்காவியங்களைப் படைத்திருக்கும்.

அத்துணை இன்பரசக் கேளிக்கைகளை அந்தப்பாறை மறைவில் - பாவையும் பூங்குன்றனும் நடத்தியிருக்கின்றனர். உதயணன் மடிமீது வீணை போல் அவள்!... அவன் மீட்டத் தொடங்கியதும் இருபாலார் நரம்புகளும் அதிர்ந்து எழுப்பும் காதல் நாதம்! இதுதானே அந்த வீணைக்கச்சேரியின் சிறப்பு!

நேரம் சிறிது கழிந்து போனாலும் நிகழ்ச்சிக்குத் தவறாமல் அதோ இசைவாணன் வந்துவிட்டான்! காத்திருந்த வீணை, அவன் கையில் ஏறி மடியில் உட்கார்ந்து கொண்டது.

"பாவை! என்ன அப்படிப் பார்க்கிறாய்? காலம் சிறிது கடந்ததற்காகக் கடுங்கோபம் கொண்டாயோ, என் கட்டாணிமுத்தே!"

"கொண்டது கோபந்தான் எனினும் உன்னைக் கண்டவுடன் என் தாபம் அதைத் துரத்திவிட்டது, அத்தான்!"

"கொய்யாப்பழக் கன்னத்தில் குங்குமக்குழி படைத்தவளே! இதழ் இரண்டு ஏனிப்படித் துடிக்கின்றன?"

"தெரியாததுபோல் கேட்கின்றாயே! எத்தனை நாள் பட்டினியென்று எண்ணிப் பார்க்க விரல்கள் இல்லையோ உன் கையில்?"

"விரல்கள்தான் இந்த வீணையை மீட்டிக் கொண்டிருக்கின்றனவே!"

"அதனால்தான் அதிர்கின்றன என் இதழ்கள்!"

அதற்குமேல் பேச்சில்லை! "இச்" ஒலி மட்டுந்தான் அந்த இயற்கைக் கட்டிலில் எதிரொலித்துக் கொண்டிருந்தது! ஓடிய மான்கள் நின்று பார்த்தன! பறந்த புள்ளினம் கிளைகளில் அமர்ந்து கவனித்தன! ஆடிய மயில் அசைவற்று நின்றது!

முத்தமழை பெய்து கொண்டேயிருந்தது! இனி இன்பவெள்ளப் பெருக்குத்தான்! "அத்தான்" என்றாள்! "உம்" என்றான். "நான்கிதழின் நற்கலவை எப்படி?" என்றாள்.

"இன்பமே! இனிய மென்மை மொழி பேசுகின்ற உன்னுடைய சிறப்புக்குச் சிறப்பு சேர்ப்பதுபோல், உன் பற்களிடையே ஊறுகின்ற நீர் தேனாக மாறி - நீ பேசும் மொழியுடன் தேனும் பாலும் கலந்ததுபோன்ற சுவையை எனக்குத் தருகிறது."

என்றான்! தழுவினாள்! தழுவினான்! தென்றலோ அவர்கள் இருவரையும் தழுவித் தன் வெறியைத் தீர்த்துக் கொண்டது.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்"

அதிகாரம் - 113காதற் சிறப்புரைத்தல்; பாடல் - 1121

பணிமொழி = மென்மையான மொழி; வால் = வெள்ளிய; எயிறு = பல்



ஆட்சி நடாத்துபவனுடைய கடமைகளில் ஒன்றாகக் கொலைவெறி கொண்ட கொடியவர்களைக் கொலைத் தண்டனையளித்து அழித்தலும் உண்டு எனக் கூறும் வள்ளுவர், அந்தக் கொலைத் தண்டனைகூடப் பயிரைக் காப்பாற்றுவதற்குக் களைகளை அகற்றுவதற்கொப்பான செயலாக இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

கழனியில் பயிர்களின் எண்ணிக்கையே அதிகம். களைகளின் எண்ணிக்கை குறைவு. ஆகையினால் கழனிப் பயிர்போல் தழைத்துக் குலுங்கும் குடிமக்களைக் காப்பாற்றுவதன் பொருட்டு எண்ணிக்கையில் குறைவாயினும் கழனிப் பயிர்களை பாழ்படுத்திவிடக் கூடிய களைகள் போன்ற கொலைக்கஞ்சாக் கொடியவர்களை அழித்தொழிக்க வேண்டியுள்ளது என வள்ளுவர் கூறுகிறார்.

"செங்கோன்மை" எனும் அதிகாரத்தில் இடம் பெறும் அரசியல் குறித்த பாடல் இதுதான் :

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

களையை அழிக்கிறேன் என்று சொல்லிப் பயிரையே அழித்துவிடுகிற அரசின் முடிவு என்ன ஆகும் என்பதையும் வள்ளுவர் குறிப்பிடாமல் விட்டுவிடவில்லை.

அத்தகைய அரசுகளை வள்ளுவர் ஒப்பிட்டுக் காட்டும் அருமையே அருமை!

முறையில்லாத செயல்களைத் தொடர்ந்து செய்து, குடிமக்களை வருத்துவ தையே தொழிலாகக் கொண்டு நடக்கும் ஓர் அரசு, கொலையைத் தொழிலாகக் கொண்டவரைவிடக் கொடியதாகும் என்று கூறுகிறார்.

"கொலைமேற்கொண் டாரிற்கொடிதே அலைமேற் கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து"

கொடியவனைக் களையெடுப்பதுபோல் எடுத்து, குடிமக்கள் எனும் பயிரைக் காக்கும் செயலை அரசுக்குரிய செங்கோன்மையென உணர்த்திய வள்ளுவர், குடி மக்கள் எனும் பயிரையே அழிக்கும் அரசு, களைகள் எனும் கொடிய கொலை காரனைவிடத் தீமையானது எனத் திட்டவட்டமாகச் சொல்லுகிறார்.

எனவே, களையைவிட இடர்மிகுந்த அந்த அரசும் அகற்றப்பட வேண்டும் என வள்ளுவர் குறிப்பிட்டுக் காட்டுகிறார் அல்லவா?

பயிர்களையே களைகள் அழிப்பதுபோல் அழித்து மகிழ்ந்த ஓர் அதிகார வெறியன், உகாண்டா எனும் நாட்டில் இருந்தான்.

அவன் பெயர் இடி அமீன்.

சில ஆண்டுகளுக்கு முன்புதான் அந்த நாடு முழுச் சுதந்திரம் பெற்றது. அந்த நாட்டின் திறமைவாய்ந்த அதிபராக ஒபொடே என்பவர் பொறுப்பேற்றார்.

அவர், இடி அமீனின் இதயத்தில் ஓநாய் குடியிருப்பதை உணராமல் தன்னுடைய நம்பிக்கைக்குரிய தளபதியாக அவனை நியமித்தார். அவர் வெளிநாடு சென்றிருந்த போது, அந்த வெறிகொண்ட இடிஅமீன், ஆட்சியைக் கவர்ந்து கொண்டான். அவன் ஆடாத ஆட்டமில்லை; அடிக்காத கூத்து இல்லை. அரசாங்கப் பொறுப் பைத் தலையில் சுமந்துகொண்டு அப்படியொரு கோமாளி உலவுகிற காட்சியை, உலகமே வேதனையுடன் வேடிக்கை பார்த்தது. அவனுக்குப் பிடிக்காதவர்களின் தலைகளைப் பந்தாடிக் களித்தான். குருதியிலே நாள்தோறும் குளித்தான். மங்கையரைச் சுவைத்தான். அவர்தம் மாமிசத்தையும் உண்டான். விசாரணைகளே நடத்தாமல் அவன் அளித்த மரணதண்டனைகள் கணக்கில் அடங்கா!

"எதிர்த்தோர் நாளையதினம் உயிரோடு இருக்கமாட்டார்!" - இது அவனுடைய நடைமுறையாக ஆகிவிட்டது.


குடிமக்கள், நாள்தோறும் வேட்டையாடப்பட்டனர். அவனை விமர்சித்தாலே போதும்; அவர்களுக்குச் சவக்குழி காத்திருக்கும். முடிவு என்ன ஆயிற்று? களைகளை அகற்றுவதாகக் கூறி பயிர்களையே நாசமாக்கும் இந்தப் பாதகன், கொலைவெறிக் கொடியோரினும் கொடியோன்! 'இவனுக்கு இனி ஏன் ஆட்சிக் கொடி?' என்று மிதிக்கப்பட்ட புழுக்கள், புலிகளாக மாறிக் கிளர்ந்து எழுந்தன.

கோமாளி இடிஅமீன், ஓடி ஒளிந்த இடம் தெரியவில்லை.

செங்கோன்மை என்ற பெயரால் கொடுங்கோன்மை நடத்தும் அரசுக்கு இதுவே இறுதி முடிவாக அமைகிறது. எடுத்துக்காட்டப் பெற்றுள்ள இரண்டு குறட்பாக்களுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கும் வண்ணம் இழிமகன் இடிஅமீனின் வரலாறு இருக்கிறதல்லவா?

அதிகாரம் - 55 - செங்கோன்மை; பாடல் - 550

அதிகாரம் - 56 - கொடுங்கோன்மை; பாடல் - 551



"மண் எதற்கு?

பொன் எதற்கு?

மயக்கும் விழிப் பெண் எதற்கு?

மகேசன் அருள் பெற்றுவிட்ட எனக்கு - இந்தப் பற்றெல்லாம் பட்டொழிந்து போயிற்று. அய்யன் திருவடிகளே எனை ஆட்கொண்ட பெரும்பற்று! மண்ணும் பொன்னும் மாயப்பெண்ணும் அடியேனுக்குப் பாம்புப் புற்று!

தண்ணீரும், தவழும் காற்றுமே என்னுடைய உணவாக - தருநிழல்களே நான் தங்கி வாழும் மனைவிகளாக - மான்தோல் மட்டுமே உடல் மறைக்கும் ஆடையாக எனக்குக் கிட்டினால் போதும்!

பெம்மான்! எம்மான்! அவனது பாதங்களில் பேரின்பப் பெருக்கில் திளைப்பதைக் காட்டிலும் அழிந்திடும் சிற்றின்ப சுகத்தை நாடிச் செல்வோர் அறிவிலிகள் என்பேன்!

உடல் கலந்து உருண்டு புரண்டு உலகை மறந்தோம் எனப் புலம்பிக் களிக்கும் உல்லாசம் - சல்லாபம் - எல்லாமே நிலையற்ற உலகத்தில் உருவற்றுப்போய்விடும்!

பிள்ளையென்றும், பேரன் என்றும், கிள்ளையிவள் மனைவியென்றும் வாழ்வின் தொல்லைகளில் சிக்கிடாமல், பிறைசூடிய பெருமானின் அடியார்க்கும் அடியார் என்ற பெரும் புகழ் எய்துதலே பிறவி எடுத்திட்ட பயனன்றோ!"

துறவியின் அருவிப் பெருக்கனைய அருளுரைகேட்டு அன்பர்கள் தேன்குடத்து வண்டாயினர். அவர் வழங்கிய திருநீறு பெற்று நெற்றியில் இட்டுக் கொண்டு வணக்கம் செய்து வாழ்த்தும் பெற்றனர். அறிவுரை முடித்த பின்னர் துறவியார், தண்டு கமண்டலங்களுடன் ஆண்டவன் சந்நிதானத்து மண்டபம் விட்டுப் புறப்பட்டார்.

அவரைப் பின்தொடர்ந்தான் அவருக்குத் தெரியாமல் ஓர் இளைஞன். துறவியார், தான் தங்கியுள்ள மடத்திற்குள் நுழைந்தார். அவர் காணாவண்ணம் அவனும் மறைந்து தொடர்ந்தான். மடத்தின் கதவு தாளிடப்பட்டது. அறைக்கதவு ஒன்றினை அடியார் தட்டினார். முழுநிலவு முகம் படைத்த இளமங்கையொருத்தி ஓடிவந்து துறவியாரைத் தழுவிக் கொண்டாள்.

"சின்ன இடை -
அன்ன நடை -
கன்னல் மொழிக்
கண்மணியே!
காத்திருந்தாயோ?"

எனக் கேட்டார் துறவி! கன்னத்தில் கன்னம் சேர்த்து கனதனங்கள் சுகம் வழங்கக் கட்டி முத்தங்களால் விடையளித்தாள் அந்த விழியழகி.

"பற்றற்று வாழவேண்டுமெனப் பறைசாற்றிவிட்டு வந்தேன். அப்போதும் இந்தப் பத்தரை மாற்றுத் தங்கத்தை நெஞ்சில் பதித்துக் கொண்டேயிருந்தேன்."

துறவியைப் பேச விடவில்லை, அந்தத் தோகை மயில்! அள்ளிப் பொழியலாம் பள்ளியறைக் காவியமெனத் துள்ளிக் குதித்து அவரைக் கட்டிலில் தள்ளினாள்.

இதற்குமேல் இளைஞனால் அங்கு நிற்க முடியவில்லை. அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

"உண்மையிலேயே மனதாரப் பற்றுக்களைத் துறக்காமல், துறந்தவரைப் போல் வாழ்கின்ற வஞ்சகர்களைவிட இரக்கமற்றவர் யாருமில்லை"

என்ற குறளின் வாசகம் அந்த இளைஞனின் நினைவுக்கு வந்தது. மடத்து வாயிலில் அந்தக் குறளை எழுதிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

"நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்."

அதிகாரம் - 28 - கூடா ஒழுக்கம்; பாடல் - 276

வன்கணார் = இரக்கமற்றவர்



தீரர் கோட்டம் - வீரர் பாசறை - இப்படித் திக்கெட்டும் புகழ்ந்தது உரோமாபுரி குறித்து! அந்த நாட்டினை ஆளுதற்கு மகுடம் புனைந்தோர்: படைபல குவித்துத் தடைபல கடந்து பிறநாட்டார் கோட்டைகளில் தமது கொடிகளை ஏற்றி, வெற்றி முரசு கொட்டி மகிழ்ந்தனர்! அவர் தம் குதிரைகளின் குளம்படிச் சப்தம் கேட்டு எதிரிகளின் கூடாரம் அதிர்ந்தது! அலறியது! போர்க்களத்தை விளையாட்டுத் திடலாக எண்ணிக் கொண்டு, உடலில் படும் விழுப்புண்களையே வெற்றிக்குரிய எண்களாகக் கருதிக் கணக்கிட்டுக் கொண்டு வாள் தூக்கிப் பாய்ந்தனர், பகையின் தாள் வணங்கி அறியாத அந்த மாவீரர்கள்! கொப்பளிக்கும் குருதி கொண்டு தங்கள் சாம்ராஜ்யத்தின் எல்லைக் கோடுகளை வரைந்து களித்தனர், அந்த வளையாத வைரநெஞ்சினர்! தொட்டிலிலேயே வீரம் பயின்று, தொகை தொகையாய் எதிரிகளை வெட்டிச் சாய்க்கும் மறவர்களின் மண்ணாக விளங்கிய உரோமபுரி, பிறிதொரு காலத்தில் கட்டிலில் கண்ட சுகத்தையே சொர்க்கமென்றும் - சொர்க்கமும் அந்தச் சுகத்திற்கு ஈடில்லையென்றும் கூறி, அதனைச் செயலில் காட்டவும் தொடங்கியது!

போர்க் கருவிகளைத் தூக்கிப்பிடித்த புலிநிகர்த்த வீரமன்னர்கள், போகக் கருவிகளாம் கேளிக்கை அரசிகளைத் தாங்கிப்பிடித்துத் தழுவத் துடித்து, மெல்லிய இதழைக் கடித்து, இளந்தளிர் மேனியைச் சுவைத்து இன்பத்தில் மூழ்கினர்! இரவு

லீலைகளில் மிதந்தனர்! அந்த அழகிகளோ, அவர்கள் பெற்றிருக்கும் போதையேறிய கண்கள், புருஷர்களை வீழ்த்துவதற்கென்றே அமைந்துள்ள மோகனாஸ்திரங்கள் என எண்ணி, அரசர்களை மடியில் போட்டுக்கொண்டு அரசாங்கத்தைத் தமது பிடியில் வைத்துக் கொண்டனர்.

அரசர்க்கு ஆலோசனை வழங்க அமைச்சர்கள் தேவைப்படவில்லை! அழகியின் அதரங்களில் நனைந்த திராட்சைரசக் கிண்ணங்களின் அருள் தொடர்ந்தால் போதும்; அதுவே ஆண்டவனே நேரில் வந்து வழங்கும் அற்புத ஆலோசனைக்குச் சமம் என்றனர், அழகியின் இடையினைத் தடவியவாறு! "குறைகள் தீர்த்திடுக மன்னவா!" என்று குடிபடைகள் கூட்டமாய் வருவர்! "உனக்கென்ன குறை? அதை உரைத்திடடி கோமளாங்கி!" என்று மஞ்சத்தில் உருண்டு, அவள் மலர்ப் பாதங்களைக் கன்னங்களில் ஒற்றிக் கொள்வான் மன்னன்! ஆட்சிக்குரியவன் அம்சதூளிகா மஞ்சத்தில் ஆடை அணிகள் போனஇடம் தெரியாமல், அவளே உலகம் என்று மந்திரம் ஜபிப்பான்! அவளோ அவனைக் கட்டியணைத்து காமத் தீயில் வேகவைத்துக் களைப்புறச் செய்து கண்ணயர விடுவாள்! பின்னர் ஆட்சிக்கோல் அவள் கையில்! அரசின் கருவூலம் அவள் கட்டளைப்படி திறக்கும்! மயக்கம் தெளிந்து எழுவான் மன்னன்! மதுவைத் தன் வாயிலே நிரப்பி, பின்னர் அதனை அவன் வாயிலே நிரப்புவாள்! இரட்டைப் போதையில் மீண்டும் சுருள்வான்! அழகி, இட்டதே சட்டம்! உரைத்ததே கட்டளை! அவளுக்குக் காதல், அன்பு, பாசம், கணவனின் நலம் இப்படி எதையுமே பற்றிக் கவலையில்லை! தனது உடலின் வனப்பு - தனது அழகின் சிறப்பு - இந்த மூலதனத்தைக் கொண்டு அவனையும் அவன் அரசையும் ஆட்டிப் படைத்திட வேண்டும்! ஐஸ்வர்யம் குவித்திட வேண்டும்! அணைத்து மகிழ்வோர் யாராயினும் கவலையில்லை! அரண்மனையின் சுகபோகங்களைத் தனக்குரியதாக்கிக் கொள்ள வேண்டும்! அந்தச் சொகுசுக்காரிகளின் விழிவீச்சிலே உரோமாபுரி வேந்தர்கள் பலர் உருத்தெரியாமல் போயினர்! அதன் விளைவு; உரோமாபுரியே சீரழிந்தது! சிதறுண்டது! பொதுமகளிரைவிட இழிவான இன்பவல்லிகளின் சரச சல்லாபங்களால் ஒரு மாபெரும் சாம்ராஜ்யமே மண்மேடாயிற்று! இதனை வரலாறு உணர்த்துகின்றது!

இதோ வள்ளுவரும் உணர்த்துகிறார்;

> "நெஞ்சத்தை உறுதியுடன் அசையாமல் வைத்திருக்கும் ஆற்றல் இல்லாதவர்கள்; வேறு காரியங்களை மனதில் எண்ணிக்கொண்டு மயக்குமொழி பேசுகிற பொதுமகளிரின் தோளைத் தழுவிக் கெடுவார்கள்."
>
> "நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
> பேணிப் புணர்பவர் தோள்"
>
> அதிகாரம் - 92 - வரைவின் மகளிர்; பாடல் - 917



சீராளன், ஒரு மலை நாட்டின் சிற்றரசன். வளம் நிறைந்த காடுகளே அவன் நாட்டின் தலைசிறந்த கருவூலம். ஆண்டு வருவாயில் ஒரு பகுதியைப் பேரரசன் பெம்மானுக்குக் கப்பமாகச் செலுத்த வேண்டும். எஞ்சிய நிதியைக் கொண்டு மலைநாட்டு மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டும்.

சீராளன், பேரரசுக்கு வழங்க வேண்டிய கப்பத்தை ஒழுங்காகக் கட்டி விட்டு, மிஞ்சுகின்ற மலைநாட்டுச் செல்வத்தில் பெரும்பகுதியைத் தன் ஆடம்பர வாழ்வுக்கும், அரண்மனைப் பராமரிப்புக்கும், அரசியரின் அணிமணிகளுக்கும் செலவழித்தான்.

அரசாங்க ஊழியர்க்கும் படை வீரர்களுக்கும் ஊதியமளிக்கக் கடுமையான வரிகளை மக்கள் மீது விதித்தான். மலைநாட்டு விவசாயிகள் தாங்க முடியாத வரிச்சுமையினால் தவித்தார்கள்; திகைத்தார்கள். அவர்தம் வியர்வைத் துளிகள் -

குருதிப் பெருக்கு அனைத்தும் வரியாகச் சுரண்டப்பட்டு அந்த விவசாயக் குடிமக்கள் அழுது அழுது நீர் வற்றிய கண்களோடு நின்றிருந்தனர்.

சீராளன் மேலும் ஒருபடி ஏறிச்சென்று, அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தையும் ஒழுங்காகக் கொடுக்காமல், அதனைத் தனது இன்பக் கேளிக்கைகளுக்கு எடுத்துக் கொண்டான்.

ஊழியர்கள், சிற்றரசன் சீராளனை எதிர்த்துக் கொடி உயர்த்தினர். அவர்களை அடக்கப் படை வீரர்களைப் பயன்படுத்தினான். ஊழியர்களின் குமுறலும் கொந்தளிப்பும் அடங்கவில்லை. எதிர்ப்புக் கிளர்ச்சி நின்றபோதிலும் அவர்தம் உள்ளத்தில் எழுந்த சினம், நீறுபூத்த நெருப்பாக இருந்தது.

சிற்றரசன் அடுத்து ஒருபடி மேலேசென்று, படைவீரர்களின் ஊதியத்திலும் கைவைத்தான். தேன் கூட்டில் கைவைத்த கதையாக - வீரர்கள் சீராளனை எதிர்த்து முரசு கொட்டினர்.

அவர்களை அடக்கி ஒடுக்கப் படைத் தளபதிகள் முடுக்கிவிடப்பட்டனர்.

வரி கொடுக்க முடியாமல் வாடிய விவசாயிகள், சீராளனால் மிரட்டப்பட்டுச் சீரழிந்தனர்.

அரசாங்க ஊழியர்களோ அடக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

படைவீரர்களும் பழிவாங்கப்பட்டுப் பரிதவித்தனர்.

சீராளன், கர்வச் சிரிப்பு சிரித்தான். "என்னை எதிர்த்தோர் வாழ்ந்ததில்லை" என ஏகடியம் பேசினான். எவரானாலும் அடக்கியே திருவேன் என்று ஆணவக்குரல் கொடுத்தான்.

இதற்கிடையே சீராளன், மலைநாட்டில் நடத்தும் நெறியற்ற ஆட்சிபற்றிப் பேரரசுக்குச் செய்தி கிட்டியது. சீராளனை உடனே வருமாறு பேரரசன் பெம்மான் ஆணை பிறப்பித்தான்.

சென்ற சீராளன் மீது பேரரசன் சீறிப்பாய்ந்தான். மலைநாட்டு மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, அநியாய ஆணைகளைப் பிறப்பித்து அவர்களைக் கதறியழச் செய்த சீராளன், பேரரசின் முன்னே மண்டியிட்டு, "பெருமானே! என்னை மன்னித்து விடுக!" எனக் கெஞ்சினான்.


தமிழ் மறையாம் திருக்குறளைப் படித்துத் தெளிந்த பேரரசனாம் பெம்மான், சீராளனுக்கு வள்ளுவர் தந்த அறிவுரையொன்றை நினைவுபடுத்தினான்.

"தன்னைவிட மெலிந்தவர்களைத் துன்புறுத்தும்போது, தன்னைவிட வலியவர்களின் முன்னால் அஞ்சிநிற்கும் நிலைமை தனக்கு ஏற்படுவதை நினைத்துப் பார்க்க வேண்டும். அதை நினைத்தால் மெலியாரை வாட்டுகின்ற எண்ணம் எழாது!"

சீராளன், வலியாரிடம் பணிந்து, மெலியாரிடம் மிரட்டுகின்ற தனது இயல்பை எண்ணி வெட்கித் தலைகுனிந்து மரம் போல நின்றான்.

"வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து"

அதிகாரம் - 26 - அருளுடைமை; பாடல் - 250



இந்தியத் திருநாட்டின் விடுதலைப் போராட்டத்தை, அமைதி வழியில் காந்தியடிகள் நடத்திக் கொண்டிருந்தார். அந்த வழி, வெற்றியினை விரைவில் தராது எனக் கருதிய இளைஞர்கள், சுதந்திரப் போராட்டத்தை வன்முறைப் பாதையில் முடுக்கிவிட்டனர். அவர்தம் இதயத்தில் மூண்டெழுந்த இலட்சியக் கனல் அவர்களை ஒரு பாசறையின் பாசமிக்க நண்பர்களாக ஆக்கியது. பகத்சிங், இராஜகுரு, சுகதேவ், ஜெயகோபால் ஆகிய இளைஞர்கள், வெள்ளைக்கார ஆட்சியைத் தங்கள் தலைமையில் நடத்துகின்ற புரட்சியின் வாயிலாக வெளியேற்றி விடலாமென நம்பினர்.

ஒரு வெள்ளைக்கார அதிகாரியின் வெறித்தன்மைக்குப் பாடம் புகட்ட, அந்த அதிகாரியைக் கொன்றனர் அவர்கள்! கொல்லுவதற்குமுன்பு அதற்கான சதித்திட்டம் வகுக்கப்பட்டதாகவும் திட்டமிட்டே கொலையைச் செய்து முடித்ததாகவும் அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கில் அவர்களுக்குக் கொடுந்தண்டனை அளித்திட வேண்டுமென்பது வெள்ளை அரசாங்கத்தின் எண்ணம்!

அந்தக் கூட்டத்தில் இருந்தால் தனக்கு ஆபத்து ஏற்படும் என அஞ்சி நடுங்கினான், அவர்களோடு நண்பனாகப் பழகிக் கொண்டிருந்த ஜெயகோபால்!

வெள்ளையரின் கழுகுக் கண்களிலேயிருந்து எப்படியாவது தப்பிவிட வேண்டுமென்று துடித்தான். அவனது துடிப்பை உணர்ந்த வெள்ளை அரசின் அதிகாரிகள் அவனை நெருங்கினர்! அச்சுறுத்தினர்! ஆசை காட்டினர். தனது நண்பர்களாம் பகத்சிங், இராஜகுரு, சுகதேவ் மூவரையும் காட்டிக் கொடுக்க உடன்பட்டான்! நீதிமன்றத்தில் அவர்களைக் காட்டிக் கொடுத்து, "சதிகாரர்கள்!! என்றும் "கொலைகாரர்கள்" என்றும் சாட்சியம் சொன்னான். தன்னைக் காப்பாற் றிக் கொண்டான்! கால் தூசுக்கும் கீழாக வரலாறு அவனை இழித்துரைக்கிறது!

பகத்சிங்கிற்கு மரணதண்டனை! அவன் பதைக்கவில்லை! வரவேற்று மகிழ்ந்தான்! தங்களின் நண்பன் - இலட்சிய மாவீரன் பகத்சிங்குடன் சேர்ந்து அழிவதே அவனுடன் இணைந்து ஆற்றிய இலட்சியப் பணிக்கும் கொண்டிருந்த நட்புக்கும் பெருமை தரக்கூடியது என்று இராஜகுருவும் சுகதேவும் - தங்கள் உயிருக்காக யாரிடமும் மன்றாடாமல் நாடுமீட்கும் போரில் தங்கள் நண்பனுடன் தூக்குக் கயிறுகளை முத்தமிட்டார்கள்!

அந்தச் சரித்திர வரிகளை இன்றைக்கும் நாட்டுமக்கள் முத்தமிட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறார்கள்.

நட்பின் பெருமையை உணராதவர்கள்தான், இன்னல் வந்துற்றபோது நண்பனை விட்டு விலகி ஓடிவிடுவார்கள்! எடுத்துக்காட்டு, இழிமகன் ஜெயகோபால்!

நட்பின் சிறப்பை உணர்ந்து பழகுகிறவர்கள், அதனால் அழிவே வந்த போதிலும் நட்புக்கொண்டவரின் தொடர்பை அறுத்துக் கொள்ளமாட்டார்கள்!


இந்த உணர்வை விதைப்பதுதான்; இதோ - இந்தக் குறள் :

"எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு."

அதிகாரம் - 81 - பழைமை; பாடல் - 806

தொல்லைக்கண் நின்றார் = நீண்ட நாள் நட்புக் கொண்டோர்
தொலைவிடத்தும் = அழிவு வந்தபோதும்





“**பொ**ன் வேண்டேன் - பொருள் வேண்டேன் - மண்ணாளும் மகராசர் தருகின்ற புகழ் வேண்டேன் - எந்நாளும் கண்ணாளர் அருகிருந்தால்; ஊன் வேண்டேன் - உயிர் வேண்டேன் - தேன் வேண்டேன் - தேவர் வாழ் உலகும் வேண்டேன்!”

எனத் தன் மடியிற் கிடத்தியவாறு கோவலனின் முகத்தில் முகம் புதைத்து மாதவி நல்லாள் காதல் மொழி இசைத்திட, அசைந்திடும் அவள் இதழ் அழகை விழிகளால் மொண்டு மொண்டு குடித்துக் களித்து மயங்கிக் கிடந்தான் மாசாத்துவான் மைந்தன்.

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே! மலையிடைப் பிறவா மணியே என்கோ! யாழிடைப் பிறவா இசையே என்கோ!"

இவ்வாறு அன்பு பொழிந்து அணைத்து மகிழ்ந்தானே கண்ணகியை; அனைத்தையும் எப்படித்தான் மறந்தான் எனக் கேட்கத் தோன்றும் சிலப்பதிகாரம் படிப்பவர்க்கு!

வணிகர் குலத்துதித்த அந்த வண்ண இளம்புறாக்கள், வாழ்வெனும் வானில் சிறகடித்துப் பறந்த எழிலையெல்லாம் பூம்புகாரில் உள்ள அவர்தம் உற்றார் உறவினர் கண்டு வியந்த காலமும் இருந்ததல்லவா?

அந்தக் கற்புத்திரு கண்ணகியைப் பிரிந்து கலைக்கோயிலின் 'கர்ப்பக்கிரகம்' வரையில் சென்று மணிமேகலையாம் மழலையமுதையும் பெற்றெடுத்துவிட்டானே; என்னே - அந்தக் கோவலனின் கொடிய உள்ளம்! என்னே கடிய சிந்தை அவனுக்கு? புகார் நகரம் இப்படிப் புகார் எழுப்பியது. மாங்கனிதான் மாதவி எனினும் அதற்காகப் பலாச்சுளைப் பத்தினியை மறப்பது நன்றோ! ஊர் கேட்டது, உற்றார் கேட்டனர்!

அன்பில்லாக் கோவலன் - நல்ல பண்பில்லாக் கோவலன் - அன்பும் பண்பும் இருப்பின் கண்ணகியைப் பிரிந்திருப்பானா?

கண்டனக் கணைகள் கிளம்பின, கண்ணகிக்கோ மேலும் ஒரு கவலை! கணவனைப் பிரிந்திருக்கும் துன்பத்தைவிட, அவனை அன்பில்லாதவன் என ஊரார் தூற்றுவது அவளுக்குப் பெருந் துன்பமாகிவிட்டது.

கண்ணகிக்குத் தேவந்தியைவிட நெருங்கிய தோழி ஒருத்தி உண்டு. அவள்தான் கண்ணகியின் மனச்சாட்சி! அவளிடம் கண்ணகி, தன் பெருமையைத் தலைநிமிர்ந்து சொல்லிக் கொண்டாள்.

> "காதலன் எப்போதும் என் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆனால், அதை இந்த ஊரார் அறியாமல், 'அவன் என்னைப் பிரிந்து வாழ்கிறான். அன்பில்லாதவன்'என்று வீணாக அவனைப் பழிக்கின்றாரே!"

கண்ணகியின் இந்த உறுதியான அன்புப் பெருக்கினைத்தான் இதோ இந்தக் குறள் விளக்குகிறது.

"உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர்"

அதிகாரம் - 113 - காதற் சிறப்புரைத்தல்; பாடல் - 1130



அன்னம் விடு தூது, கிளி விடு தூது, நாரை விடு தூது என்பன போன்ற எத்தனையோ கவிதைகள் தமிழ் மொழியில் பிறந்துள்ளன. வரலாறுகளிலும் புராண இதிகாசங்களிலும் தூதுவர்கள் பற்றிய குறிப்புக்களும் அவர்களாற்றிய அரும்பெரும் செயல்களும் இடம் பெற்றுள்ளன. தூது செல்பவர் எத்தகைய ஆற்றல் பெற்றவராக இருக்க வேண்டும் என்பதையும் தன் தலைவன் பால் எத்துணை உளப்பூர்வமான பற்றுக் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதையும் பொருட்பாலில் அரசியல் பற்றிப் பேசுகின்ற வள்ளுவர், "தூது" எனும் அதிகாரத்தில் மிக அழகுற விளக்குகிறார்.

சொல்லப்பட்ட இடத்திற்குச் சென்று சொன்ன வேலையைச் செய்துவிட்டு வெறும் எடுபிடிகளாக இருப்பவர்கள் சிலர், தங்களைத் தூதர்கள் என்று விளம்பரப்படுத்திக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் காலம் இது!

இவர்கள் தூதர்களுமல்ல; தூதர்களின் இலக்கணம் இதுவுமல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது திருக்குறள்.

இரு நாடுகளுக்கிடையே நட்புறவு நிலைக்க வேண்டுமென்பதற்காகத் தூதன் பணியாற்றுவதுண்டு.

தனது நாட்டின்மீது வீண் பகைகொண்டு, வெறுப்பு மிகுதியால் போரிடத் தயாராகும் பகைநாட்டு மன்னனிடம் விளக்கங்கள் அளித்து, அவை பயனற்றுப் போனபிறகு, "போருக்கான அறைகூவலை ஏற்றிட எமது மன்னனும் தயார்தான்" எனச் சுடர்முகந்தூக்கி சூளுரைத்துவிட்டு வரும் தூதனும் உண்டு!

இரு சாராருக்கிடையே எழுந்திடும் காழ்ப்பு உணர்ச்சியைக் குறைத்து மோது தலைத் தவிர்த்திட வேண்டுமென முயற்சி மேற்கொள்கிற ஒரு தூதுவன், தான் யாருடைய சார்பில் செல்கிறானோ - அவர்களுக்காகப் பல்வேறு கருத்துக்களையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்துச் சொல்லும் ஆற்றல் உடையவனாகவும் அதே சமயத்தில் சொல்லத் தேவையற்ற பயனற்றவைகளைச் சொல்லாமல் விலக்கிடும் பண்பு கொண்டவனாகவும் இருந்திட வேண்டுமென வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கிற சொல்வன்மை ஆகியவை, தூது உரைப்பவருக்குத் தேவையானவை என்றும் கூறுகிறார். கற்பன கற்று, பிறருடைய பகை நிறைந்த பார்வைக்கு அஞ்சாமல், கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு சொல்லுகிற திறனும் தூதுவனுக்கு வேண்டுமென வலியுறுத்துகிறார். தூய ஒழுக்கம் உடையவனாகவும் - துணை உடையவனாகவும் - துணிவு உடையவனாகவும் தகுதி பெற்றிருப்பவனே தூதனாகப் பணியாற்ற முடியும் என்றும் இலக்கணம் வகுக்கிறார். தனக்கு அழிவே வருவதாக இருந்தாலும் அதற்காக அஞ்சிடாமல், தன் தலைவனுக்கு நன்மை ஏற்படுமாறு கடமையாற்றுகிறவனே நல்ல தூதன் என்றும் அடையாளம் காட்டுகிறார்.

பயனற்றவைகளை நீக்கி, பலவற்றைத் தொகுத்துச் சொல்லித் தன் தலைவனுக்கு நன்மை உண்டாக்குகிறவனே தூதன்! அஃதன்றி, தலைவனையே பகைவர்களிடம் காட்டிக் கொடுத்துத் தன்னையும் தன் சுற்றத்தாரையும் காத்துக் கொள்கிறவன் தூதனல்ல; அவன் 'சூதன்!'

தலைவனுக்கு நன்மை தேடுகிற தூதனைப் பற்றி, இதோ இந்தக் குறள் குறிப்பிடுகிறது.

"தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது"

தனக்கேற்படும் அழிவைப் பற்றிக்கூட அஞ்சாது, தன் தலைவனாம் அரசனுக்கு உண்மையான பற்றுள்ளவனாக இருந்து நன்மையை விளைவிப்பவனே தூதன் என்று விளக்குகிற குறள் இதோ :

"இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவர்க்கு
உறுதி பயப்பதாம் தூது"

அதிகாரம் - 69 - தூது; பாடல்கள் - 685, 690



கிளியூரின் மாங்கிளி

மணல் மெத்தை விரித்திருக்கும் கடற்கரையில், மாங்கிளியும் பூங்கொடியும் கையைத் தலைக்கு முட்டுக்கொடுத்தவாறு நிலா இரண்டு நிலத்திற்கு இறங்கி வந்ததைப் போல் காட்சியளித்துக் கொண்டிருந்தனர். பூங்கொடியின் பூவிதழ்களில் புன்னகை ஒளி! மாங்கிளியின் முகமோ வாடிய மலர்போல! அந்தத் தங்கச் சிலைகளிரண்டின் அங்கங்களைக் கண்டு களித்திட, ஆடைகளைத் தொட்டிழுத்துக் கடற்காற்று குறும்பு விளையாட்டில் ஈடுபட்டிருந்தது.

அலைகளுக்கும் ஆசைபோலும்! திடீரென ஓரலை வந்து தனது முத்தநுரை எச்சிலால் மாங்கிளியின் முழங்கால்வரை நனைத்துவிடும். மற்றோர் அலையோ பூங்கொடியின் தொடையினைத் தொடுவதற்கு எத்தனிக்கும். காற்றின் குறும்பும் கடலலைகளின் சேட்டைகளும் அவர்களிருவரின் உருக்கமிகு உரையாடலைக் கெடுத்துவிடவில்லை.

"மாங்கிளி! நானும் கவனித்துக் கொண்டேயிருக்கிறேன் உன்னை! எப்போது பார்த்தாலும் உன் வட்ட மதிமுகம் வாட்டமுற்றே இருக்கின்றதே! அதற்கென்னதான் காரணம்? கொஞ்சம் சொல்லேன்!"

"பூங்கொடி! உன்னிடம் மனம்விட்டுப் பேச என்றைக்காவது நான் தயங்கியதுண்டா? நேற்றிரவு நடந்த இன்ப நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தேன்..."

"ஓகோ! விண்மீன்கள் வெட்கியோட கடற்கரை மண்மீது கொட்ட மடித்தீர்கள்! அலைகளை ஆடும் படுக்கையெனக் கொண்டு அமளி நடத்திக் குதித்தீர்கள்! வெண்மணலையள்ளி ஒருவர் மீதொருவர் வீசிக்கொண்டு ஈரத் தரையில் உங்கள் காதல் வீரத்தைக் காட்டிக் கொண்டீர்கள்! சரி! இன்னும் என்னென்னவோ செய்தீர்கள்! அதை நினைத்து நினைத்து மகிழ வேண்டுமே தவிர - மலர் கூம்பியதுபோல முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாயே; ஏன்?"

"பூங்கொடி! உனக்கென்ன தெரியும் என் வேதனை?"

"ஏன்; உடம்பெல்லாம் நோகிறதா இன்று?"

"சே! வாயை மூடு! என் கவலை என்ன தெரியுமா? வாரி வாரி இன்பத்தை வழங்கிய அந்த வள்ளல் என்னைவிட்டுப் பிரிந்திருக்கிறாரே; இன்னும் என்னை வந்து காணவில்லையே! அதை நினைத்துத்தான் துடித்துப் போகிறேன்."


"என்னடி இது வம்பு! நேற்றுத்தான் காதலாற்று வெள்ளத்தில் நீச்சலடித்திருக்கிறாய்! அதற்குள் இன்று அவரை அடைய வேண்டுமே என எண்ணிக் கவலையா?"

"நீ என்னை முழுமையாக உணரவில்லை பூங்கொடி! அவர் என்னை வந்து சேராதபோது இன்னும் வந்து சேரவில்லையே என்ற துன்பம்! சேர்ந்துவிட்டாலோ அப்போதும் என் மனத்துக்குத் துன்பம்தான்! என்னை அள்ளுவார், துள்ளுவேன்! அணைப்பார், இதழ் நனைப்பார்! அப்போதும் எனக்குத் துன்பம்தான்! 'அப்போதுகூட என்னடி துன்பம்' எனக் கேட்பாய்! இவ்வளவு இன்பத்தைத் தருகின்றவர் எனை விடுத்துப் பிரிந்து செல்வாரே என எண்ணி அழும் என் உள்ளம்! ஆகவே, அவரை நான் அடையாதபோது, அடைய முடியவில்லையே என்று அஞ்சுவேன்! அடைந்து விட்டாலோ; வரப்போகிற பிரிவை நினைத்து அஞ்சுவேன். எல்லா வகையிலும் என் நெஞ்சம் துன்பத்தையே அனுபவிக்கிறது."

அவளது துன்பமான துன்பத்தையும் - இன்பமான துன்பத்தையும் - அவள் வாயிலாகவே கேட்டுப் பூங்கொடி, "களுக்" கென்று சிரித்தாள்.

"பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு"

அதிகாரம் - 130 - நெஞ்சொடு புலத்தல்; பாடல் - 1295



அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள், இந்தியத் திருநாட்டைக் காண வந்தனர். வரலாற்றுப் பொன்னேடுகளாகத் திகழுகின்ற சிற்பக்குகைகள், ஓவிய மண்டபங்கள், பழங்கால மாளிகைகள், தொன்மை வாய்ந்த கோட்டைக் கொத்தளங்கள் அனைத்தையும் பார்த்து வியந்து போற்றினர்.

அடிமை விலங்கொடிக்க அயராது பாடுபட்டு, அன்பு வழியில் இந்திய நாட்டு விடுதலையைப் பெற்றுத்தந்து, மதவெறியன் ஒருவனால் படுகொலைக்கு ஆளான காந்தியடிகள் எரியூட்டப்பெற்ற இடம், எழில்மிகு இளமைக் காலத்தைக் கொடுஞ்சிறையில் கழித்துத் தியாக வாழ்வு நடாத்தி, இந்திய மண்ணுக்குச் சுதந்திரம் கிட்டியபிறகு ஈடற்ற தலைவராகவும் இணையற்ற தலைமை அமைச்சராகவும் பல்லாண்டு காலம் பொறுப்பேற்று உலகில் சமாதானம் நிலவப் பாடுப்பட்ட நேரு பெருமானின் உடல் எரியூட்டப்பெற்ற இடம், அரசியலில் அருந்திறன் கொண்ட சிந்தனையாளர் மூதறிஞர் இராஜாஜிக்கு அமைக்கப்பட்ட நினைவாலயம், தியாகச்சுடர் காமராஜருக்கு எழுப்பப்பட்டுள்ள நினைவிடம், 'எதையும் ஆராயாமல் ஏற்றுக் கொள்ளாதே! ஏன்! எப்படி? எனக் கேள்!' என்று பகுத்தறிவு ஒளிபரப்பிய பெரியாரின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடம், அனைத்தையும் கண்டனர்.

தென்புலத்துச் சிங்கம் தேவர் திருமகனின் திருவுருவச் சிலையைப் பார்த்தனர் மதுரையம்பதியில்! தாழ்த்தப்பட்டோருக்கென உரிமைக்குரல் கொடுத்த அம்பேத்காரின் புகழ்பாடும் கல்லூரிகளைக் கண்டனர். மதப்பூசல் எழாமல் அரணாகக்

காத்து நின்ற காயிதே மில்லத் அவர்களின் நினைவு கலையாமல் நின்றுகொண்டிருக் கும் கலைக்கூடங்களைக் கண்டனர்.

இந்தியாவின் வடபகுதியிலிருந்து தென்பகுதி வரையில் காணவேண்டிய சுற்றுலா இடங்கள் அனைத்தையும் பார்த்துப் பரவசமுற்ற அந்த அந்நியப் பயணிகளின் பார்வை, சென்னையின் நீண்ட கடற்கரைமீது விழாமல் இருக்குமா?

அந்தக் கடற்கரையில் தென்னஞ்சோலைகளுக்கிடையே, கருமை நிறப் பளிங்குக் கற்களால் ஆன கல்லறையை நோக்கின அவர் தம் கண்கள்!

அணிந்திருந்த காலணிகளையெல்லாம் தொலைவிலே கழற்றிவைத்துவிட்டு, அமைதி குடிகொண்டிருந்த அந்தச் சோலையில் நடந்தனர்.

கல்லறையில் எரிந்துகொண்டிருந்த என்றும் அணையாத விளக்கு, அவர்களை வரவேற்றது!

நெடிய தூண், அவர்கள் வருகையைக் கல்லறைக்குள் உறங்கிக் கொண்டிருக் கும் அந்தத் தூயவருக்கு உணர்த்துவதுபோல் நின்று கொண்டிருந்தது.

சுற்றுலாப் பயணிகள், கல்லறையைத் தங்கள் கண்களால் தொழுதனர்.

"எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது."

அந்த வாசகத்திற்குப் பொருள் புரிந்து கொள்ள அயல்நாட்டினர் அவாக் கொண்டனர். மொழிபெயர்ப்பாளர் விளக்கினார்.

"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - என்ற மூன்று சொற்களை மறைமொழி களைப் போலத் தமிழர்களுக்குத் தந்தவர்! எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று தன்னைப் பின்பற்றியோருக்கு வலியுறுத்தியவர்! அந்த இதயத்துக்குச் சொந்தக்காரர் - அவர் பெயர்தான் அண்ணா! அண்ணாதுரையாகப் பிறந்தார்! இத்தகைய மறைமொழிகளை என்றும் அழியாத அளவுக்குத் தந்த காரணத்தால் அண்ணாவாக மறைந்தார்!"

அந்த விளக்கம்கேட்ட அயல்நாட்டுச் சுற்றுப்பயணிகள், கல்லறையைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - அந்தச் சொற்களின் ஆழத்தை ரசித்தனர்! புகழ்ந்தனர், போற்றினர்!

'பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் சிறப்பை,
உலகில் அழியாமல் விளங்கிடும் அவர்களது மறைமொழிகள் காட்டிவிடும்'

என்ற குறள் கருத்தின் மாண்பும் அந்தப் பயணிகளுக்கு விளக்கப்பட்டது.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

அதிகாரம் - 3 - நீத்தார் பெருமை; பாடல் - 28



மடாதிபதியொருவர், பல்லக்கில் போய்க் கொண்டிருந்தார். பல்லக்கைத் தூக்கிச் சென்றவர்களுக்கோ கால்வலியும் தோள்வலியும் தாங்கமுடியவில்லை. அவர்களது துன்பத்தை மடாதிபதி எப்படி அறிவார்? அவரது வாய் ஆண்டவனின் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டிருந்தது. கையிலோ உருத்திராக்க மாலை! அந்த மணிகளை அவரது விரல்கள் உருட்டிக் கொண்டிருந்தன. சிந்தனையோ அவருக்கு வந்த வாழ்வு குறித்துச் சுழன்று கொண்டிருந்தது.

அந்த மடத்திற்கு ஏராளமான சொத்து சுகம் உண்டு. கண்ணுக்கெட்டிய தூரம் கழனிகள், தென்னந் தோப்புகள், கரும்புத் தோட்டங்கள், ஆற்றுப்படுகைகளில் ஆதீனத்திற்குச் சொந்தமான மூங்கில் காடுகள். அத்தனைக்கும் அதிபதியாகப் போகிறோம் என்று அவர் எதிர்பார்த்து அந்த மடத்திற்கு மாணவனாக வரவில்லை; ஏதோ வந்து சேர்ந்தார்; காவி யுடுத்தினார்; காகுத்தன், கைலைநாதன், கார்மேகவண்ணன் என்றெல்லாம் கடவுளர்களின் கதைகளைக் கற்றுக் கொண்டார். பெரிய மடாதிபதியின் பேரன்பைப் பெற்றார். பெரியவர், காலம் முடிவடையும் கட்டத்தில் அவரை மடத்தின் அதிபதியாக்கிவிட்டுக் கண்ணை மூடினார். அப்படி வந்த மேலான வாழ்வை எண்ணி மகிழாமல் இருக்க முடியுமா?

பல்லக்குப் போய்க் கொண்டேயிருந்தது. நீர்வீழ்ச்சியொன்றின் அருகே பல்லக்குக் கடந்து செல்லும்போது, மடாதிபதியின் திருவிழிகளில் ஒரு காட்சி தென்பட்டது. மங்கையர் இருவர் நீர்வீழ்ச்சியில் குளித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு, நீர் வீழ்ச்சியில் தங்கள் தலை முதல் கால்வரையில் குளிர்ந்த நீர் தழுவிடும் இன்பத்தை அனுபவிப்பதிலே ஓர் உவகை! வேகமாக விழும் அந்த நீரினிடையே கண்ணாடிப் பேழைக்குள் தெரியும் கயல் மீன்களைப் போல் அவர்கள் தோற்றமளித்தனர். அவர்களின் மேலாடையைக் கீழே தள்ளிவிட்டு அந்த நீர்வீழ்ச்சி அவர்களின்

பொங்கிப்பூரித்த அங்கங்களைச் சுவைபார்த்துக் கொண்டி ருந்தது. எஞ்சியிருந்த உடைகளும் அவர்களின் உடலோடு ஒருசேர ஒட்டிக் கொண்டு, இயற்கையின் படைப்பை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

மடாதிபதியின் கண்கள், நீர்வீழ்ச்சியின் பக்கம் பாய்ந்தன. அவர், தனது இமைகளைத் தாழ்போட்டு மூடி, விழிகளுக்குத் தடை போடவில்லை. விழிகளைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டார். அவற்றைவிட அவர் இதயம் வலிவான இறக்கைகளைக் கட்டிக் கொண்டு நீர்வீழ்ச்சியின் பால் பறந்தது! கையிலிருந்த உருத்திராக்க மாலை உருளவில்லை. விரல்கள் அசைவற்றுப் போயின! இதழ்கள் இறைவன் நாமத்தை உச்சரிக்கவில்லை.

"ஏய்! பல்லக்கை நிறுத்துங்கள்! நாம் சற்று இளைப்பாற வேண்டும். உறக்கம் கண்ணைத் தழுவுகிறது." என்று பல்லக்குத் தூக்கிகளுக்கு ஆணையிட்டார். பல்லக்குத் தூக்கியவர்கள் நின்றார்கள். அவர்களும் நீர்வீழ்ச்சியைப் பார்த்தார்கள். மடாதிபதியின் மனநிலை அவர்களுக்குப் புரிந்துவிட்டது. பல்லக்கைக் கீழே இறக்கி வைத்தார்கள். மடாதிபதி, நீழ்வீழ்ச்சியையே பார்த்துக் கொண்டிருந்தார். பல்லக்குத் தூக்கிகளில் ஒருவன் பல்லைக் கடித்துக் கொண்டான். இருந்தாலும் ஆத்திரத்தைக் காட்டிக் கொள்ள முடியவில்லை, வெளிப்படையாக!

"அய்யன்மீர்! உங்கள் விருப்பம்போல் களைப்பாறுங்கள்! இதோ, வெயில் உள்ளே படாமல் இருக்க இந்தப் பட்டுத் திரையைப் போட்டு விடுகிறேன்"

என்று கூறிக்கொண்டே பல்லக்கின் இருபுறத்திலுமிருந்த பட்டுத்திரையை இழுத்து விட்டு நன்றாக மூடிவிட்டான். மடாதிபதிக்குப் பெரிய ஏமாற்றம்! "அரிய காட்சிக் குத் தடை விதித்துவிட்டானே முட்டாள்!" என்று முணுமுணுத்துக் கொண்டார்.

ஆட்கள் நடமாட்டத்தைக் கண்ட அந்த மங்கையரும் அங்கிருந்து உடனடியாக அகன்று விட்டனர். மடாதிபதிக்கு உறக்கமும் வரவில்லை; ஓய்வும் கொள்ள வில்லை. பட்டுத் திரையை நீக்கிவிட்டுப் பார்த்தார். அந்தப் பசும் பொற்சிலை களைக் காணவில்லை. பல்லக் குத் தூக்கிகளோ ஒரு மரத்தடியில் அமர்ந்து, நீர்வீழ்ச்சியின் பக்கம் பார்க்காமலே வேறுபுற மாகத் திரும்பி உட்கார்ந்து ஏதோ சுவடி படித்துக் கொண்டிருந்தனர்.


மடாதிபதி; "என்னப்பா, என்னை இங்கே விட்டுவிட்டுப் படிக்கிறீர்கள்? என்ன அது?" என உறுமினார்.

"திருக்குறள் படிக்கிறோம் ஆண்டவனே! மேல்நிலையில் இருந்தாலும் உயர்ந்த பண்பு இல்லாதவர்கள் மேலானவர்கள் அல்லவாம்! எங்களைப்போல் கீழ்நிலையில் இருந்தாலும் இழிந்த குணம் இல்லாதவர்கள் கீழ்மக்கள் அல்லவாம்! இது வள்ளுவர் கருத்து."

இப்படிச் சொன்னார்கள் அந்தப் பல்லக்குத் தூக்கிகள்! மடாதிபதிக்கு முகம் வாடிப் போயிற்று! மீண்டும் பல்லக்குச் சவாரி தொடர்ந்தது.

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்"

அதிகாரம் - 98 - பெருமை; பாடல் - 973



இன்பமளித்த இரவுக்கு வாழ்த்துக்கூறி பேரன்புப் பெட்டகமாம் காதலனின் கன்னத்தில் நூறு கொடுத்துத் திரும்ப வட்டியுடன் அட்டியின்றி அக்கணமே பெற்றுக் கொண்டு "இரு இரு" என அவனிழுக்க - "ஊஹூம்" என அவள் தடுக்க - அன்றைய காதல் காவியத்தை அத்துடன் முடித்துக் கொண்டு இருவருமே காலைக் கதிருக்கு வணக்கம்கூறிக் கடமையாற்றக் கிளம்பி விட்டனர்.

அழகிய வாசல்புறத்தில் அரிசிமாக்கோலம் இட்டிட வந்தாள். அன்னப்பறவை போல் அமைத்த கோலம் அவள் எண்ணப்பறவையின் சிறகை அசைத்தது. "அன்னம் போல் இருக்கின்றாய்" எனச் சொன்ன அத்தானிடம் "அள்ளி உண்ணுங்களேன்" என்று கேலி புரிந்து தோளில் சாய்ந்துகொண்டதும் - அந்த இனிய பதிலின் தித்திப் பைச் சுவைத்து அவன் அவளை இறுகத் தழுவிக் கொண்டதும் கோலத்தில் கோலம் காட்டின.

வாசல்புறம் விடுத்து அடுக்களைக்கு வந்தவுடன் காய்ச்சுவதற்குப் பால் எடுத்த போது, முன்னாள் இரவு முப்பாலை எழுத்தெழுத்தாய்ப் பிரித்தெடுத்துப் பொருள் கண்டு இன்பம் துய்த்ததெல்லாம் எதிர்நின்று மகிழ்வூட்ட அந்த மங்கை நல்லாள் மயங்கிப் போனாள்.

கூடத்தில் வந்தமர்ந்த அத்தானுக்கு அப்பத்தை எடுத்து வைத்து - அதனை அவன் விரலாலே தொடுகின்ற அழகினையும் அதனை மெல்ல விழுங்குகின்ற பாங்கினையும் பார்த்துக்களித்துப் பணிபுரிய விடைகொடுத்து அனுப்பிவிட்டு, அவன் போகும்வழி விழிவிடுத்து வீட்டில் ஒரு தூண்போல அசையாமல் நின்றிருந்தாள்.

இரவில் அனுபவித்த இன்பத்தையெல்லாம் அசை போட்டுப் பூரித்துப் போக, அந்தக் காலைநேரம் அவளுக்குத் துணையாக இருந்தது.

அதன் பின்னர் அவள் கடமைகளும் தொடர்ந்தன. பணிபுரியப் போயிருந்த கணவனுக்குப் பிற்பகல் உண்பதற்குக் கட்டமுதும் அனுப்பி வைத்தாள்.

அதன்பிறகு மாலை வந்தது. காலைப்பொழுதில் களிப்பிலாடிய அந்த மயில், மாலைப் பொழுது கண்டு மனங்கலங்கி நின்றது! ஏன்? எதற்காக? இரவுதான் அவன் வருவான். அப்படித்தான் சொல்லிவிட்டுப் போயுள்ளான். அதற்குள் காலையில் அரும்பி மாலையில் மலரும் அந்தக் காதல் நோய் அவளைப் பற்றிக் கொண்டதே; அவள் என் செய்வாள்! நோயின் கொடுமையால் துடித்துப் போனாள்! மாலை நேரம் அவளை வருத்தி வாட்டியது. அவளுக்குக் காலையையும் மாலையையும் ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது.


> "நான் காலைப் பொழுதிற்குச் செய்த நன்மை என்ன? இந்த மாலைப் பொழுதிற்கு நான் பகையுணர்வுடன் செய்த தீமை தான் என்ன?"


என்று தன்னையே கேட்டு நொந்து கொண்டாள்.

அவள் கேள்வியின் நோக்கத்தைப் புலப்படுத்துவதே: இதோ இந்தக் குறள்!

> "காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
> மாலைக்குச் செய்த பகை"

அதிகாரம் - 123 -பொழுதுகண்டு இரங்கல்; பாடல் - 1225





தமிழ்நாட்டுக் கலையுலகில் ஒளிமிக்கவராகவும் அறிவாற்றல் செறிந்தவராக வும் வள்ளல் தன்மை வாய்ந்தவராகவும் மக்களைச் சிரிக்கவைத்துச் சிந்திக்க வைக்கும் திறம் கொண்டவராகவும் இந்த நூற்றாண்டில் திகழ்ந்தவர் கலைவாணர் அவர்களாவார்கள்.

பகுத்தறிவு நெறியில் அவரது வாழ்க்கை அமைந்திருந்தது. மூடநம்பிக்கை களை அகற்றி, மக்களை முன்னேற்றப் பாதையில் நடமாடச் செய்ய வேண்டுமென்பது அவரது பேரவா!

தேனில் கலந்து மருந்து கொடுக்கும் மருத்துவ முறை போன்று, கசப்பான உண்மைகளையும் அவர் தமது சொல்வன்மையின் வாயிலாக மக்கள் மனத்தில் பதிய வைத்தார்.

யாருடைய உள்ளத்தையும் புண்படுத்தாமல் பண்படுத்த வேண்டுமென்பதில் அக்கறை கொண்டவர்.

சொர்க்கம் - நரகம் என்று கூறப்படும் இடங்கள் கற்பனையே என்பது அவருக்குத் தெரியும். ஆனால், அந்த இடங்களுக்குக் கூறப்படும் தன்மைகளை மனிதனின் வாழ்க்கையோடு அவர் ஒப்பிட்டுப் பார்த்தார். அவ்வாறே மற்றவர்க்கும் ஒப்பிட்டு விளக்கிக் காட்டினார். அதற்கென அவர் கூறும் நகைச்சுவைக் கதை பின்வருமாறு :

இறந்துவிட்ட ஒருவரின் உடலை, இடுகாட்டுக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள். பெருங்கூட்டம் பின்தொடர்ந்தது. உடல் தளர்ந்த நிலையில் திண்ணையில் உட்கார்ந்திருந்த ஒரு கிழவர், தன்னுடைய பேரனை அழைத்து, "ஏ! ஓடிப்போய் அந்தச் செத்தவன் எங்கே போகிறான் என்று அறிந்துவா!" என்றார். ஓடிச் சென்ற பேரன் சிறிது நேரத்தில் திரும்பிவந்து, "தாத்தா! அவன் நரகத்துக்குப் போகிறான்" என்றான்.

சிறிது நேரம் கழித்து, அதே வழியில் மற்றொரு சவத்தைச் சுமந்துகொண்டு சென்றனர். அதைத் தொடர்ந்தும் பெருங்கூட்டம் சென்றது. தாத்தாவின் ஆணைப்படி பேரன் ஓடினான். பிறகு திரும்பி வந்தான்.

"இவன் எங்கேடா போகிறான்?"

"தாத்தா இவன் சொர்க்கத்துக்குப் போகிறான்"

அருகே அமர்ந்து வெற்றிலை பாக்கு இடித்துக் கொண்டிருந்த கிழவி, அந்தக் கிழவரின் துணைவி - வியப்புடன் கேட்டாள் : "இந்தச் சின்னப் பையனுக்கு அது எப்படித் தெரிந்தது" என்று!

"பாட்டீ! முதலில் போன சவத்தின் பின்னால் சென்றவர்கள் - 'எப்படியோ தொலைந்தான் பாவி!' என்று மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டு மெதுவாகப் பேசிக் கொண்டு போனார்கள்! அடுத்தபடி சென்ற சவத்தின் பின்னால் சென்றவர்கள், 'அய்யோ! ஊருக்காக உழைத்தவன் இப்படி எதிர்பாராமல் போய் விட்டானே'யென்று கண்கலங்கப் பேசிக்கொண்டு போனார்கள். அந்த இரண்டு விதமான பேச்சுக்களையும் வைத்து முதலில் போனவனுக்கு நரகமும், அடுத்தாற்போல் போனவனுக்குச் சொர்க்கமும் என்ற முடிவுக்கு வந்தேன். எல்லாம் தாத்தா சொல்லிக் கொடுத்ததுதான்."

இதைச் சொல்லிவிட்டுப் பேரன், பாட்டியின் முகத்தைப் பார்த்தான். அவள் முகம் மலர்ந்தது. கிழவர், கிழவியிடம் சொன்னார் : "சொர்க்கம், நரகம் என்று தனியாக இடங்கள் எதுவுமில்லை. ஒருவன் தனது வாழ்க்கைக்குப் பிறகு மிச்சமாக விட்டுப் போகிற புகழ்ச்சியையோ அல்லது இகழ்ச்சியையோ பொருத்ததாகும் அது" என்று!

பேரன், தனக்குத் தாத்தா சொல்லிக்கொடுத்த திருக்குறளுக்கான விளக்கத்தையும் பாட்டிக்குக் கூறி அவள் பாராட்டைப் பெற்றான்.

"தமது வாழ்க்கைக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழைப் பெறாவிட்டால் அப்படிப் பெறாத வாழ்க்கை, உலகத்தார் எல்லார்க்கும் பழியெனக் கூறத்தக்க அளவுக்கு ஆகிவிடும்."

"வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்"

அதிகாரம் - 24 - புகழ்; பாடல் - 238

இசை - புகழ்

வசை - பழி



"அறம் எனக்கு வழிகாட்டுகிறது! நீதியும் நேர்மையும்தான் எனக்குத் துணை நிற்கின்றன! சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் என் வாழ்வு மாசற்றது! மறை நான்கு வகுத்தவர்கள்கூட மதித்துப் போற்றக்கூடிய வாழ்வாகும்! நான் பிறர்மீது குறை சொல்லிக் கொண்டே இருப்பதற்குக் காரணம், யார் மீதும் பழி சுமத்த வேண்டும் என்பதற்காக அல்ல! அப்படிப் பிறரைக் குறை கூறி அவர்களை இழித்துப் பேசுவதால், என் சிறப்பு மக்களுக்குத் தெரிகிறது. நான் புத்தனைப்போல எதையும் துறந்துவிடத் தயாராக இருப்பவன். நபிகள் நாயகத்தைப்போல எதிர்ப்புகளைப் புன்னகையுடன் ஏற்றுக் கொள்கின்றவன். ஏசுநாதரைப்போல இலட்சிய வெற்றிக்காக, இழப்பு எதுவாயினும் அதனைப் பொருட்படுத்தாதவன்."

- இப்படி ஒருவன் மக்கள் மத்தியில் பேசிக் கொண்டிருந்ததை ஆங்கு, ஓர் ஆசிரியரின் மகன் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவன் பேசி முடித்ததும் மக்கள் கலைந்தனர். கலைந்து சென்ற மக்களில் பலர் - ஆடவரும் பெண்டிருமாக - அவன் கால்களைத் தொட்டு வணங்கிச் சென்றனர்.

அந்தப் பெரிய மனிதனின் அருகே அவனது மெய்க்காப்பாளன் நின்று கொண்டு, ஏடொன்றில் எதையோ குறித்துக் கொண்டிருந்தான்.

மக்கள் அனைவரும் வெளியேறியபின்பு, அந்தப் பெரிய மனிதன், மெய்க்காப்பாளனைப் பார்த்துக் கேட்டான் : "இன்று என் காலில் விழுந்து வணங்காதவர் எத்தனை பேர்?"

"ஐயா, அந்தத் தொகை நேற்று இருந்ததைவிட சற்று அதிகம்."

"நேற்று இருபது பேர் என்று கூறினாய்; இன்று எத்தனை பேர்?"

"இன்று ஐம்பது பேர் தங்களின் காலில் விழாதது மட்டுமல்ல; தங்களைக் கைகூப்பிக்கூடத் தொழவில்லை!"

"அப்படியா? ஓகோ! சரி! சரி! நேற்று என் குறைகேட்க வந்தோர் எண்ணிக்கை என்ன? மகளிர் எண்ணிக்கை என்ன?"

"நேற்று ஐந்நூறு பேர் வந்தனர். அதில் பாதிக்கு மேல் பாவையர் கூட்டம். ஆனால் இன்றோ மொத்தமே இருநூறு பேர்தான்! அவர்களில் மகளிர் மிகக் குறைவு!"

"நேற்று என்பது கடந்த காலம்! இன்று என்பது நிகழ்காலம்! நாளை என்பது எதிர்காலம்! இப்படியே நிலைமை போகுமானால் கடைசியில் என் அறிவுரை கேட்க ஆட்களே இருக்கமாட்டார்களா?"

"அப்படித்தான் தெரிகிறது அடியேனுக்கு!"

"இந்த நிலையை மாற்ற வழி காண வேண்டும்! என்ன வழி காணலாம்?"

"தங்களின் பெருமையைத் தாங்களே பேசுகிறீர்கள்! இதைவிட வேறு வழி என்ன இருக்க முடியும்?"

"பிறகேன் நமக்கு நாளாக நாளாக மதிப்பு மங்கி வருகிறது?"

"தாங்கள் சொல்வதை மட்டும் நம்பாமல், தங்களின் நடவடிக்கைகளையும் மக்கள் கவனிக்கத் தொடங்கி விட்டார்கள்."

"முட்டாள்! நீயே எனக்குப் பகைவனாக இருப்பாய்போல இருக்கிறதே! போ! போ! என் முன் நில்லாதே! நான் தொடர்ந்து என்னைப் பற்றிய சிறப்புக்களையும் என் நேர்மையான வாழ்வு பற்றியும் பேசிக் கொண்டுதானிருப்பேன். என் வலையில் மக்கள் விழாவிட்டால், அவர்களை விலை கொடுத்து வாங்கவும் தயங்கமாட்டேன்."

- இப்படிக் கூறிவிட்டு அந்தப் பெரிய மனிதன் வேகமாகச் சென்று விட்டான். மெய்க்காப்பாளன் உதட்டைக் கடித்தவாறே வேறு திசையில் நடந்தான், கேலிக்குறி முகத்தில் தோன்ற!

இவற்றையெல்லாம் மன்றத்தின் சுவர் அருகே ஒளிந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த அந்த ஊர் ஆசிரியரின் மகன், தன் தந்தையிடம் ஓடிச் சென்று நடந்ததையெல்லாம் விவரித்தான்.

ஆசிரியர், தன்னுடைய அருமைச் செல்வனிடம் சொன்னார்:

"மகனே! நீ கண்டாயே... அதற்குப் பெயர்தான் சிறுமை."

"என்னப்பா அப்படிச் சொல்கிறீர்கள்? அந்த மனிதன், தன்னுடைய பெருமைகளையெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டினானே...!"

"மகனே! பெருமைப் பண்பு, தன்னைப் பிறர் பணிந்து புகழ வேண்டும் என்று விரும்பாது! பெருமைக்குரிய பண்பே பிறருக்குப் பணிந்து அடக்கமாக நடப்பதுதான். சிறுமைதான், தன்னைத்தானே வியந்து பாராட்டிக்கொள்ளும்! அதன் விளைவையும் விரைவில் காணும்! எனவே, நீ கண்ட உருவம் பெருமையின் வடிவம் அல்ல! சிறுமையின் சின்னம்."

விளக்கம் பெற்ற மகிழ்ச்சியில் ஆசிரியரின் மகன், திருக்குறளை எடுத்துப் புரட்டினான் :

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

அதிகாரம் - 98 - பெருமை; பாடல் - 978



"அலுவல் முடிந்து எவ்வளவு நேரமாகிறது; இத்தனை நாழிகை எங்குதான் போயிருந்தீர்கள்? பணி முடிந்தவுடன் பாவையெனைக் காணும் துடிப்புடன் மனை நோக்கி ஓடிவந்தால் குறைந்தா போய்விடுவீர்கள்? அடுக்களைக்குச் செல்வதும் - வாயிலண்டை வந்து நின்று வீதிமுனை வரையில் விழிகளை எறிந்து, வருகிறீர்களா என்று நோக்குவதும் - அப்பப்பா, எனக்கு எப்படி வேதனையாக இருந்தது தெரியுமா?"

கையில் மல்லிகைச் சரத்துடன் வீட்டுக்குள் நுழைந்த கணவனிடம், மனைவி, இப்படித் தனது இதய கீதத்தை இசைத்தாள். அவனோ அவளின் மனோநிலையைப் புரிந்து கொள்ளாமல், "அலுவல் முடிந்ததும் எனக்கு வேறு பொழுது போக்கே கிடையாதா? நண்பர்கள் வந்தனர். அவர்களுடன் கடற்கரை சென்றிருந்தேன். அங்குதான் இந்த மல்லிகைச்சரம்கூட வாங்கினேன்" என்று சற்றே கடுத்த முகத்துடன் கூறிவிட்டான்.

அதன்பிறகு அவள் பேசவில்லை. சிலையொன்று உயிர்பெற்று - ஆனால் ஊமையாக நடமாடுவதைப் போலச் செயல்பட்டாள். இலை போட்டாள். உணவு பரிமாறினாள். படுக்கையைத் தட்டித் தூய்மைப்படுத்தினாள். அவன் படுத்துக் கொண்டான். பழத்தட்டை அருகில் வைத்தாள். அவன் சாய்ந்தவாறே பழங்களைக் கடித்துச் சுவைத்துத் தின்று முடித்தான். பால் கிண்ணத்தையும் அவனிடம் நீட்டினாள். எப்போதும் அப்படி வழக்கமில்லை. உணவருந்திய பிறகு சிறிது நேரம் பூரிப்பு பொங்க உரையாடுவார்கள். அவன் மடியில் அவளும் அவள் மடியில் அவனுமாக மாறி மாறிப் படுத்துக் கொண்டு இதழ்களை நனைத்துக் கொண்டு இன்பபுரிக்குச் சென்று

வருவார்கள். அதற்குள்ளாகக் கிண்ணத்துப்பாலில் ஆடை படரும்! அவர்கட்கோ ஆடை அகலும்! விளக்கோ, தன் முகத்தை இறுக மூடிக் கொள்ளும், வெட்கத்தால்!

எல்லாம் இன்பமயம்! அதன்பிறகே பால் அருந்துவர். இது வாடிக்கை. இன்றைக்கோ அவள், பால் கிண்ணத்தையும் அவனிடம் தந்துவிட்டு - ஒரு பாய்தனை விரித்துத் தரையினில் படுத்துக் கொண்டாள்.

அவள் எதிர்பார்க்கிறாள்; கணவன் அருகில் வருவான். 'அன்பே! கோபமா?' என்பான். அணைத்துவாரித் தூக்குவான். 'இனிமேல் அலுவல் முடிந்ததும் ஓடோடி உனைக் காண வருகிறேன்' என்பான். உச்சிமுதல் உடல் முழுதும் "இச்" ஒலியுடன் அவன் இதழ்கள் அழுந்தி விளையாடும். அதன்பிறகு ஊடலை உதறிவிட்டு உடல்கள் பின்னிக் கொள்ளும். இப்படியொரு கற்பனைக் காவியம் தீட்டியவாறு கண்களை மூடியும் மூடாமலும் அவள் பாயில் புரண்டு கொண்டிருக்கிறாள். அவனோ, பாலையும் அருந்திவிட்டு அதன் தொடர்பாக ஏப்பம் ஒன்றையும் வெளிப்படுத்திவிட்டு - ஏக்கமுடன் கீழே கிடப்பவளைப் பற்றிக் கவலைப்படாமலே கட்டிலில் கொட்டாவி விடுகிறான்.

"என்னடி பெரிய கோபம்! ஒழுங்காக வந்து படுக்கப் போகிறாயா இல்லையா?" இதுதான் அவளின் ஊடலைத் தீர்க்க அன்றைக்கு அவன் கையாண்டமுறை!

அவள் பேசவில்லை. அவனோ தூங்கிவிட்டான். விடிய விடியத் தூங்காமல் அலைந்த அவள் விழிகள், காலையில் சிவந்து காணப்பட்டன. கண்ணீர்த் துளிகள் கன்னங்களில் உருண்டு கொண்டுதானிருந்தன.

தான் அழைத்தும் வரவில்லையே என்ற கோபம் கொப்பளிக்க, அவன் காலையுணவு கூட அருந்தாமல் கடமையாற்றப் புறப்பட்டுவிட்டான்.

மாலையில் வீடு திரும்பினான். அவளோ கடுங் காய்ச்சலுடன் முனகிக் கொண்டு படுத்திருந்தாள். மருத்துவரை விரைந்தோடி அழைத்து வந்தான். அவர் விவரமறிய விரும்பினார். மருத்துவர் நெருங்கிய நண்பர் என்ற காரணத்தால், முதல் நாளிரவு நடந்தவற்றை விவரித்தான். அவர் குறளுங்கூடக் கற்றுத் தெளிந்தவர்.


"ஊடலால் பிணங்கியவரை ஊடலைத் தெளிவித்து அவர்களிடம் அன்பு செலுத்தாமலிருந்தால், ஏற்கனவே வாடிப் போயிருக்கிற கொடியின் வேரையும் அறுப்பது போன்ற செயலாகிவிடும்.

இப்படி வள்ளுவர் எழுதியிருக்கிறார் தெரியுமா உனக்கு? எனவே நண்பா! இந்த நோய்க்கு மருந்து உன்னிடமே இருக்கிறது! அதைக் கொடு; காய்ச்சல் நின்றுவிடும்..." எனக் கூறிவிட்டு மருத்துவர் போய்விடுகிறார்.

"ஊடிய வரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று"

அதிகாரம் - 131 - புலவி; பாடல் - 1304

உணராமை = ஊடல் தீராமை வள்ளி = கொடி



இந்தியத் திருநாட்டு விடுதலைப் போராட்டத் தொடக்க காலத்தில், அவர்கள் இருவரும் தோளொடு தோள் நின்று முரசு கொட்டினர். விடுதலை பெறுகிற சுதந்திர நாட்டில் சமுதாயம் எல்லா வகையிலும் முன்னேற்றம் பெற வேண்டுமென்ற நோக்கம் நிறைவேற, இருவருமே தனித்தனி வழிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு பணியாற்றினர். அவர்தம் வழிமுறைகளை மக்களிடம் விளக்கிடும்போது, இருவரது கருத்துக்களும் ஒன்றோடொன்று மோதிக்கொண் டன! அந்தக் கருத்து மோதுதல்களுடனேயே ஏறத்தாழத் தொண்ணூற்றி ஐந்து வயதை எட்டுகிறவரையில் அந்த முதுபெரும் கிழவர்கள் உயிர் வாழ்ந்தனர்!

ஒருவர் காடுமேடெல்லாம் சுற்றினார். கருத்து மழை பொழிந்தார். கடுமையான பணியினை ஏற்றார் - பேசினார்! எழுதினார்! அவர்தான் பெரியார்! அறிவுலக மேதை! இன்னொருவர் அரசியல் மேதை! மக்களோடு சென்று அவர்களுக்குப் பிடித்தமான கருத்துக்களைச் சொல்லித் தன் வழிக்கு மெல்ல இழுத்து அதன் வாயிலாகப் புதிய சமுதாயப் பொலிவை உருவாக்க எழுதிப் பேசி உழைத்தவர்! அவர்தான் மூதறிஞர் இராஜாஜி!

கருத்துக்குக் கருத்து - கொள்கைக்குக் கொள்கை - தீப்பொறி பறக்க எதிர் எதிராகப் பாய்ந்த நிலையிலும் இருவரது தொடக்ககால நட்புக்குத் துளியளவு குந்தகமும்

என்றைக்கும் ஏற்பட்டதில்லை. "நானும் பெரியாரும் அன்பான எதிரிகள்" என நெஞ்சம் இனிக்கக் கூறியவர் மூதறிஞர்! அந்த அன்பு பொழியும் நட்புணர்விலேயிருந்து என்றுமே விடுபட்டவர் அல்லர் தந்தை பெரியார்!

பெரியாருக்கு முன்னரே இயற்கையின் மடியில் நீடுதுயில் கொண்டார் இராஜாஜி! அவரது உயிரற்ற உடல்கண்டு பதறிக் கண்ணீர் வடித்தார் பெரியார்! எரியூட்டப்பெறும் இடம் வரையில் தனது இதய நண்பரின் இறுதிப் பயணத்தில் கலந்துகொண்டு பின் தொடர்ந்தார்! நான்குபேர் பிடித்து நடக்க வைக்க வேண்டிய அந்தத் தள்ளாத நிலையிலும் எரியூட்டும் இடத்திற்கருகே சென்று மண் தரையில் அமர்ந்து கொண்டார்! கடைசியாகத் தன் இனிய நண்பரின் சடலத்தின்மீது தீயின் நாக்குகள் சுழலத் தொடங்கியவுடன், அருகிருந்த ஆயிரமாயிரம் பேர் கண்டுருகிடும் வண்ணம், பெரியாரின் ஒளிமிகு விழிகளில் இருந்து, அருவிபோல் நிற்காமல் கொட்டிக் கொண்டிருந்தது கண்ணீர்!

கடுமையான பயணங்கள் - கொடுமையான அடக்குமுறைகள் - இவற்றை ஒன்றாக இருந்து ஏற்ற நண்பர்கள்; இடையிலே இலட்சிய மாறுபாடுகளால் பிரிந்தனர். எனினும் - பிரிந்த பின்னர் புயலென ஒருவரையொருவர் எதிர்த்தனர் எனினும் - அனைத்துக்கும் அப்பாற்பட்டதும் யாராலும் பிளந்திட முடியாததுமான நட்பு உணர்வு, அந்த இருவரிடமும் கொடிகட்டிப் பறந்திருக்கிறது!

அறிவுடையவர்களின் நட்பு, இளமதி முழுமதியாவதுபோல வளர்ந்திடும் தன்மை வாய்ந்தது. அறிவற்றோரின் நட்போ முழுமதி தேய்ந்திடும் தன்மையைப் போன்றது என வள்ளுவர் கூறியதற்கேற்ப வாழ்ந்து காட்டிய அறிவுலக மேதைகளன்றோ இருவரும்!

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு"

அதிகாரம் - 79 - நட்பு; பாடல் - 782

நீர - தன்மையுடையது நீரவர் - அறிவுடையார்





எண்ணிலடங்காதது என்று கூற முற்படுகிறவர்கள்; "வானத்து விண்மீன்களைக் கூட எண்ணிவிடலாம்; அந்தப் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கூற இயலாது" என்பர்!

'நீடு வாழ்க! நெடிது வாழ்க! பல்லாண்டு வாழ்க! பல்லாயிரத்தாண்டு வாழ்க!' என ஒருவரை வாழ்த்திடும் புலவர் பெருமக்கள், 'காவிரி மணல்களைவிட எண்ணற்ற ஆண்டுகள் வாழ்க!' எனக் கூறிக் களித்திடுவர்.

வள்ளுவருக்கு ஒரு துறவியின் பெருமைகளைப் புகழ்ந்து கூறும் எண்ணம் ஏற்படுகிறது!

அவர் எல்லாத் துறவிகளையும் பெருமைமிக்கவர்கள் என்று சிறப்பித்து விடுவாரா?

நாடுபோற்றும் மடாலயம்! அங்கே காவியுடுத்திய பெருந்துறவி! அவரைச் சுற்றித் தண்டு கமண்டலங்களுடன் அவரது மாணவமணிகள்! 'பெருந்துறவி என்றைக்குக் கண்ணைமூடி நீங்காத்துயில் கொள்வார்; மடாலயத்தின் அதிபராகி மாணிக்கமிழைத்த

பீடத்தில் அமர்ந்து - முத்தும் பவளமும் பதித்த தங்கப் பல்லக்கில் ஏறி, பக்தர்களை ஆசீர்வதித்து, பகலை விரட்டிய இரவுக்கு வாழ்த்துக்கூறி, கொல்லை வழிவரும் முல்லைகளைக் கொஞ்சிக் குலவிடலாம் - அதரபானம் இருக்கிறதா? அல்லது அமுதமொழியாள் கையிலேந்தியிருக்கும் திராட்சைரசம் தித்திக்கிறதா? என ஒப்பிட்டுக் கிடந்து உருண்டு புரண்டு, உதயமானதும் 'ஓம்! என ஒலித்தவாறு உலகத்தாரை ஏமாற்றி உடலை வளர்க்கலாம், பொன்போல' என்று தவமிருக்கும் சில துறவிகளைப் பற்றி அறியாதவரா வள்ளுவர்!

எந்த ஒரு துறவி என்றைக்குத் தன் கழுத்தை நெறித்துக் கொன்று யாருக்கும் தெரியாமல் புதைத்துவிட்டு, 'பெருந்துறவியார், நேரடியாக பெருமானடி சேர்ந்தார்' எனச் சொல்லித் தப்பித்துவிடுவானோ என்ற அச்சத்தில் பெருந்துறவிகள் பலர் மடாலயத்தைவிட்டே தப்பிப் பிழைக்க ஓடிவிட்ட கதைகள் எல்லாம் இன்று நடப்பதுபோல் அன்றைக்கும் நடந்திருக்குமன்றோ?

அந்த வகைத் துறவிகளின் போலி வாழ்க்கையை வள்ளுவர் ஏற்றுக் கொண்டதேயில்லை.

தூய வாழ்க்கை! உலகை ஏமாற்றாத ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை! பற்றற்ற வாழ்க்கை! பண்பார்ந்த வாழ்க்கை! அப்படியொரு துறவியார் அவர் கண்ணில் படுகிறார்! தொண்டு செய்வதற்கென்றே தோன்றிய துறவி!

அவரது பெருமைகளை எண்ணிச் சொல்ல இயலாது என்பதைக் குறளார் உணருகிறார்.

விண்மீன்களைவிட எண்ணிக்கை மிகுந்த பெருமைகளுக்குரியவர் என்று கூறினாரா? இல்லை!

காவிரியாற்று மணலினும் அதிகமான எண்ணிக்கையுடைய பெருமைகளுக்குச் சொந்தக்காரர் என்று சிறப்பித்தாரா? இல்லை!

வேறு எப்படித்தான் அந்தத் துறவியின் பெருமைகளைப் பற்றி வள்ளுவர் பேசுகிறார்!

> "பற்றுக்களைத் துறந்த தூய்மையான துறவிகளின் பெருமையை அளந்து கூறுவது என்பது; உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்ற கடினமான செயல்!"

விண்மீன்கள் வரவில்லை! காவிரியாற்று மணல் துகள்கள் வரவில்லை! உலகில் இதுவரை எத்தனைபேர் பிறந்தனர், எத்தனைபேர் இறந்தனர் எனக் கணக்கிட முடியுமா? அதுபோல முற்றும் துறந்த முழுமையான துறவிகளின் பெருமைகளைக் கணக்கிட முடியாது என்கிறார்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எத்தகைய கற்பனை வளம்!

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று"

அதிகாரம் - 3 நீத்தார் பெருமை; பாடல் - 22

துணைக்கூறின் = அளந்து கூறுதல்



நாட்டுக்குரிய சிறப்புக்களைத் தெரிந்துகொள்ள யாரை நாடவேண்டுமென, ஆசிரியரை நோக்கி மாணவன் ஒருவன் கேட்டான். "நாடு பற்றித் தெரிந்து கொள்ள வள்ளுவரை நாடு!" என்றார் ஆசிரியர். "அவர் எங்கிருக்கிறார் இப்போது?" என ஏக்கத்துடன் வினவினான் மாணவன். "குறள் நூல் வடிவம்தான் வள்ளுவர்! அரணியல் எனும் பகுதி, பொருட்பாலில் உளது! அதில் நாடு குறித்து பத்துப் பாடல்கள் உண்டு. அத்தனையும் முத்துப் பாடல்கள்." ஆசிரியர் முகம் ஒளி உமிழ்ந்தது, அந்தக் குறட்பாக்களின் பெருமை குறித்து மொழிந்தபொழுது!

ஊற்றுப் பெருக்கு, மழை வளம் ஆகிய இருவகையான புனலும் வகையாக வாய்த்த மலைத் தொடரும் அந்த மலையிலிருந்து உருவாகி வரும் ஆற்று வளமும் வலிமை மிக்க அரணும் நாட்டின் உறுப்புக்களாகும்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"

என்கிறார் அந்தத் தமிழ்ப் பெருந்தகையாளர். அது மட்டும் அல்ல தம்பி, பசிக்கொடுமையும் நோய் நொடிகளும் பாழ் செய்யும் படையெடுப்புக்களும் தன்னை அணுகிடாமல் இயங்குவதுதான் நாட்டுக்குரிய இலக்கணத்தைப் பெற்றதாகும் என்றும் வள்ளுவர் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

இந்தக் குறள் அந்தச் சிறப்பினைத்தான் சுட்டிக் காட்டுகிறது.

ஆசிரியர், மாணவனுக்கு அளித்த விளக்கங்கள், அவனை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின.

"அய்யா! நாட்டுக்குத் தேவையான பெருமைகளைப் பற்றிக் கூறினீர்கள். எல்லா வளமும் பொருந்தியதாகவும் வள்ளுவர் கூறுகிற அத்துணைச் சிறப்புக்களையும் உடையதாகவும் அமைந்த நாடு, எந்த ஒரு காரணத்தினாலாவது அதன் கீர்த்தியை இழக்க நேரிடுமா? அப்படியானால் அது என்ன காரணமாக இருக்கக் கூடும்?"

மாணவனைத் தட்டிக் கொடுத்தவாறு ஆசிரியர் விடையளித்தார்.


"அன்புத் தம்பி! அதையும் குறளே கூறுகிறது கேள்! எல்லாச் சிறப்புக்களும் வளமும் வலிமையும் ஒருசேர அமைந்திருந்தபோதிலும் அவற்றைக் கட்டிக் காத்துச் சீருடன் நடாத்தும் அரசு ஒன்று இல்லாவிட்டால், நாட்டுக்குரிய சிறப்புக்களால் பயன் எதுவும் மக்களுக்குக் கிட்டாமற் போய்விடும் என்று குறளார் அழுத்தம் திருத்தமாக முத்தாய்ப்பு வைத்திருக்கிறார்!"

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

இந்தக் குறளுக்கான பொருள் கேட்டு, அந்த மாணவன் வியந்து நின்றான். அவன் விழிகள் சிந்தனைச் சுடர்களாகப் பிரகாசித்தன. ஆசிரியர், அவன் கையில் தந்த அழகிய குறட்பாச் சுவடியைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். நாடு எப்போது சீர் பெற்றதாக விளங்குமென்பதையும் எப்போது சீரழியக்கூடு மென்பதையும் எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் அறுதியிட்டுக் கூறியிருக்கிறார் என்பதை எண்ணி எண்ணி அவன் மலைத்துப் போனான்.

அதிகாரம் - 74 - அரணியல்; பாடல்கள் - 737, 734, 740





மாந்தோப்பில் - மணங்கமழ்ப் பூங்காவில் - மணல் பரந்த கடற்கரையில் - மண்டபத்தில் - மண்வீட்டில் - மக்கிப்போன குடிசையில் - இன்னோரன்ன இடங்களில், காதல் தலைவனும் காதல் தலைவியும் ஒருயிர் ஈருடல் என ஓர் நூலிழை இடையில் புகாவண்ணம் இழுத்தும் அணைத்தும் போர்த்தியும் இதழ்கள் பொருத்தியும் சமைத்திடும் இன்ப விருந்தை, மாலைப்பொழுது பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறதாம்!

'பொன்னே! மணியே! கண்ணே! கனியே!' காதல் மொழிகள் தேன்துளிகளாகச் சொட்டும்! அரும்பெனும் புருவத்தில் வியர்வை அரும்பு கட்டும்! மென்தோளில் அவன் விரல்கள் யாழ் மீட்டும் - அவள் மடியோ அவனுக்கு இன்பத் தாலாட்டும்!

மாலைப் பொழுதைப் பயன்படுத்தி ஆடவரும் பெண்டிரும் ஒப்பற்ற விருந்துண்டு, உளப்பசியும் உடற்பசியும் ஆற்றிக்கொள்வர்!

ஆனால், இதோ ஒருவன் மட்டும், தான் உண்ணப்போகும் இன்ப விருந்தைப் பெரிதாகக் கருதாமல், மாலைப் பொழுதுக்கு விருந்து செய்ய வேண்டுமென்று பரந்த மனத்துடன் நினைக்கிறான்.

அவன் நின்று நினைக்குமிடமோ; எதிரியின் கோட்டையை முற்றுகை யிட்டிருக்கும் அவனது அரசனின் படைகள் அணிவகுத்திருக்கும் பாசறைக்கு அருகாமையில்!

பகையரசனின் ஆளுகைக்குட்பட்டிருந்த பல பகுதிகளை வென்று, இறுதியாக அவனைக் கோட்டைக்குள் சென்று வளைத்து வென்றிடத்தான் அந்த முற்றுகை.

முற்றுகையைப் பகையரசன் முறியடிக்க முடியாது! இறுதி வெற்றி அவன் வணங்கும் வேந்தனுக்கே! அந்த நம்பிக்கையுடன்தான் வீரன், தோள் உயர்த்தி நின்று கொண்டிருக்கிறான்.

"மனைவியும் கணவனும் மாலைப்பொழுதில் விருந்துண்ணுகிறார்களே; நான் ஏன் மாலைப்பொழுதுக்கு விருந்து வழங்கக் கூடாது?"

இப்படியொரு கேள்வி யெழுகிறது அவன் உள்ளத்தில்! உடனே அவன் மாலைப்பொழுதுக்கு ஒரு நல்ல செய்தியைச் சொல்லுகிறான். என்ன செய்தி அது?

"மாலைப்பொழுதே பொறுத்திரு! எனது அரசன் ஈடுபட்டுள்ள செயலில் முனைந்துநின்று வெற்றி பெற்றுவிடுவானாக! அந்த வெற்றிக்குப்பிறகு நான் ஓடோடி வந்து என் அன்பு மனைவியுடன் கூடிக்கலந்து உனக்கு விருந்து படைக்கிறேன்."

மாலைப்பொழுதில் மனைவியும் கணவனும் இன்ப விருந்து அருந்துவார்கள் என்பதை மாற்றி - மாலைப்பொழுதுக்கு மனைவியும் கணவனும் இன்ப விருந்து படைப்பார்கள் என்று கூறுவதில்தான் எவ்வளவு சுவை! எவ்வளவு சுவை!

"மஞ்சமே! உன்மீது கொஞ்சிப் புரண்டு மகிழ்வோம்" என்பதற்கும், "மஞ்சமே! நாங்கள் கொஞ்சிப் புரண்டு மகிழ்ந்து உன் தாபம் தணிப்போம்" என்பதற்குமுள்ள தனிச்சுவை புரிகிறதல்லவா?

மஞ்சம் என்பதற்குப் பதிலாக வள்ளுவர் மாலைப்பொழுதைக் குறிப்பிட்டிருக்கி றார்; அவ்வளவுதான்!

விருந்து அருந்தினாலும் சரி; விருந்ததை அளித்தாலும் சரி; அந்தப் பயன் மனைவிக்கும் கணவனுக்குமே தவிர - நிச்சயமாக மாலைப்பொழுதுக்கு இல்லை!

எனினும் கற்பனை வளத்தை எண்ணிடும்போது வியப்பு மேலிடத்தான் செய்கிறது.

"வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து"

அதிகாரம் - 127 - அவர்வயின் விதும்பல்; பாடல் - 1268

அயர்கம் = செய்வோம்



நூற்றி அறுபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பிறந்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு தனது வானளாவிய சிந்தனையை நிறுத்திக்கொண்டு பூமிக்குள் கல்லறை யாகிவிட்ட சமதர்மச் சிற்பி காரல் மார்க்சின் சித்தாந்தங்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறோம். அவனது பொதுவுடைமைச் சிந்தனைகளைச் செயலாக்கும் குறிக்கோள் என்றைக்கும் வெற்றிபெறும் என்ற ஆர்வத்தோடு, உழைக்கும் கூட்டம் இன்னமும் இந்த உலகின் பல நாடுகளில் போர்க்கொடி உயர்த்திக் கொண்டிருக்கின்றது.

அந்த மாமனிதன், சாதாரணக் குடும்பத்தில் பிறந்து மிகச் சாமானிய வாழ்வு வாழ்ந்து வறுமையின் கோரப்பிடியில் அடிக்கடி சிக்கி அறுபத்தி ஐந்தாவது வயதில் கண் மூடும்வரையில் தனது கடமையை ஓய்வின்றி ஆற்றியதற்கு, ஏங்கல்ஸ் போன்ற உற்ற நண்பர் ஓரிருவர் இருந்தபோதிலும் அருகிலேயே இருந்து இறுதிவரையில் இல்லறம் நடத்திய மாதரசு ஜென்னி என்னும் குடும்ப விளக்கின் பெருமையைப் பலர் அறியமாட்டார்கள்.

செல்வக்குடும்பத்தில் உதித்தவள், அழகில் மிகச் சிறந்தவள். அவளை மணக்கப் பலர் தவித்தனர். ஆனால் அவளோ, வளமற்ற குடும்பத்தில் பிறந்த - தனது அழகிற்குப் பொருத்தமற்ற - தன்னைவிட நான்கு வயது குறைவான காரல் மார்க்சையே மணப்பேன் என்று ஏழு ஆண்டுகள் காத்திருந்தாள். அவ்வாறே மணந்து கொண்டாள். கணவன் நாடுகடத்தப்பட்டபோதெல்லாம் அவளும் அவனுடன் சென்றாள். அவன் கைது செய்யப்பட்டபோது, அவளும் கைது செய்யப்பட்டாள்.

அந்தப் பெண்மணி ஜென்னி, தங்களின் குடும்ப நண்பருக்கு எழுதிய மடல் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறாள்:

"எனக்குத் தாங்க இயலாத மார்பு வலி! முதுகு வலி! குழந்தைக்குப் பால் கொடுக்க ஒருத்தியை ஏற்பாடு செய்யக்கூடக் கையில் போதுமான பணமில்லை. என் மார்பு வலியைப் பொறுத்துக்கொண்டு நானே குழந்தைக்குப் பால் கொடுத் தேன். குழந்தைக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு, அதனால் என் மார்பு கடியுண்டு ரணமாகி குருதி வடியத் தொடங்கியது. அதனால் பாலும் குருதியும் கலந்து அது குடிக்க வேண்டியிருந்தது. அந்த நிலையில் கடன்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்து எங்கள் துணிமணிகள், குழந்தைகளின் தொட்டில், விளையாட்டுப் பொம்மைகள் அனைத்தையும் ஏலம் போடுவதற்கு எடுத்துக் கொண்டார்கள். மூன்று நாள் சாவுடன் போராடிய குழந்தை இறந்துவிட்டது. அதன் உடலைப் பின்புறத்து அறையில் மூடிவைத்துவிட்டு, நாங்களும் மற்ற குழந்தைகளும் முன்புறத்து அறையில் இரவு முழுவதும் தரையில் படுத்துக் கிடந்தோம். விடிந்தால் அந்தக் குழந்தைக்கு ஒரு சவப்பெட்டி தயார் செய்யக்கூட எங்களால் முடியவில்லை.


நான் மட்டும் தனிமையில் இந்தத் துன்பங்களை அனுபவிக்கவில்லை. ஒரு வகையில் நான் கொடுத்து வைத்தவள். என் கணவன்தான் எனக்கு எல்லாம்! அவர் என் பக்கத்திலேயே இருக்கிறார் என்பதே எனக்கு ஆறுதல்! நான் அவருடன் அவருக்குத் துணையாக இருப்பதே என் துன்பங்களுக்கெல்லாம் பரிகாரமாகக் கருதுகிறேன். ஆனால், என்னுடையவரிடம் பல வகையிலும் ஆதாயம் பெற்றவர்களில் ஓரிருவரே உதவிக்கு வருகின்றனர். அதை நினைக்கும் போது என் நெஞ்சம் நெருப்பாகிறது; உதவியற்ற நிலையிலும் கடமையாற்றிடும் அவருடன் துணையாக இணைந்து நிற்பதே எனக்கு இன்பமல்லவா?"

இன்று உலகத்தின் கண்கள் எல்லாம் எந்தக் கருத்துக்களைப் படித்திடத் துடிக்கின்றனவோ அந்தக் கருத்துப் புதையலுக்குச் சொந்தக்காரனான காரல்மார்க்சின் இல்வாழ்க்கையில் விளைந்த துன்ப துயரங்கள் ஒன்று இரண்டல்ல! ஓராயிரம்! அத்தனையும் தாங்கிக் கொண்டு அவனையும் தாங்கி நின்ற அந்தத் தாய்குலத்துத் திருச்சுடர் ஜென்னியை "வாழ்க்கைத் துணை நலம்" என்று வாயார மனமார வாழ்த்த வேண்டாமோ? இதோ வாழ்க்கைத் துணை நலத்தின் இலக்கணத்தைக் குறள் கூறுகிறது:

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

அதிகாரம் - 6 -வாழ்க்கைத் துணை நலம்; பாடல் - 51

"இல்லறத்துக்கேற்ற நற்பண்பு கொண்டவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்திற்குத் தகுந்த வாழ்க்கையை மனக்குறையேதுமின்றி நடத்துகின்றவளே வாழ்க்கைத் துணையாவாள்" என்பது பொருள்.



ஒற்றையடிப்பாதை வரப்பு ஒன்றில், ஒடிந்துவிடும் இடைகொண்ட அந்தப் பாவை நடந்து வந்தாள். கழனிகளில் இளம் நாற்றுக்கள் காற்றில் சிலிர்த்திடும் காட்சி, கயல்கள் துள்ளி விளையாடும்போது குளத்தில் குலுங்கும் அலைகளைப் போல் இருந்தது! பசும்புல் பத்தைகளின்மீது அந்தப் பாவையின் பாதங்கள் மெல்லச் சதிராடிக் கொண்டிருந்தன. இரண்டு கயிறுகளை முறுக்கியது போன்ற வெள்ளித் தண்டைகள், அவள் கால்களில் சேற்றின் கறைபட்டு அசைந்து கொண்டிருந்தன. முழங்கால் வரையில் அழகு தெரியும்படியான உடை! தோளைத் தொட்டும் தொடாமலும் காற்றில் ஆடிக் கொண்டிருக்கும் தாவணி! அந்தச் சிற்றூருக்கெனச் செதுக்கப்பட்ட சிற்பம்!

அவள் அழகைத் தொலைவிலிருந்து ஆடவர் பெண்டிர் அனைவருமே அள்ளிப் பருகினர். நெருங்கியிருந்து நெஞ்சோடு நெஞ்சு புதைத்து வயல்வெளியை - களத்து மேட்டை - பஞ்சணையாக்கிக் கொண்டு அவளுக்கே உரியவனாகிவிட்டவன்தான் அழகன்! பெயரில் மட்டுமல்ல, காண்பதற்கும் கட்டழகு கொண்டவனைத்தான் அந்த மொட்டவிழ்ந்த மலர்க்கொடியும் தன்னுடையவனாக ஆக்கிக் கொண்டாள்!

இப்போது அவனின்றித் தனியே வருகின்றாள்! அன்றில் பறவைகள்கூடப் பிரிந்திருக்கக்கூடும்; அவர்களிடம் பிரிவு எனும் பெரும்பாவி இதுவரையில் தலைகாட்டியதே இல்லை!

வாடிய முகம்! புன்னகை பூட்டப்படாத இதழ்கள்! ஒளி மங்கிய விழிகள்! இவ்வாறு அழகிழந்துவரும் மலர்கொடியை, வயலின் எதிர்ப்புறத்தில் நிற்கின்ற அவள் தோழிகள் வியப்புடன் நோக்குகின்றனர்.

"என்னம்மா மலர்க்கொடி! ஏன் இத்தனை சோகம்? அடடே! மேனியெங்கும் பசலை படர்ந்துவிட்டதே! என்னடி நடந்தது?"

"மறைப்பதற்கு நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? நாணம்தான் என்னை விட்டுப் போய்விட்டதே! என்னைப் பிரிந்து வெளியூர் சென்றிருக்கும் அவரை நினைத்தவுடன் பசலை படர்ந்துவிட்ட என் உடல்தான், என் நாணமற்ற தன்மையை ஊராருக்குப் புலப்படுத்திவிட்டதே!"

"அடி! அதற்காகவா இத்தனைக் கவலை? அம்மா மலர்க்கொடி! நாணம் மட்டும் உன்னிடமிருந்து போகவில்லை; கொள்ளையழகுக் கோமளமே! உன் அழகும் கொள்ளை போய்விட்டதுபோல் தோன்றுகிறதடி!"


"ஆமாம்! உண்மைதான். என் உடல் அழகையும் நாணமெனும் தன்மையையும் அவர் என்னிடமிருந்து எடுத்துக் கொண்டு அதற்குப் பதிலாக அவர் எனக்குக் காமநோயையும் - பசலை நிறத்தையும் கொடுத்துவிட்டுப் பிரிந்து சென்றிருக்கிறார்."


காதலின் பிரிவை மறைக்க முடியாமல் தவிக்கும்போதே நாணம் பறந்து போய்விடுகிறது. அதனை உறுதிப்படுத்த உடலைப் பசலை நிறமும் முற்றுகையிட்டுவிடுகிறது!

எனவே, காம நோயையும் பசலை நிறத்தையும் அவளுக்குக் கைமாறாகக் கொடுத்துவிட்டு, அவளது அழகையும் நாணத்தையும் அவன் அவளிடமிருந்து பெற்றுக் கொண்டான் என்று வள்ளுவர் விளக்குவது பொருத்தம்தானே!

"சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து"

அதிகாரம் - 119 - பசப்புறு பருவரல்; பாடல் - 1183





அவனோ பழிவாங்கும் இயல்பினன். அவன் உதடுகள் சில நேரங்களில் இன் சொற்களை உச்சரித்தாலும் உள்ளம் ஓர் எரிமலை! நச்சுமரத்தில் முற்றிய கனிதான் அவன் இதயம்! ஆட்சிக்குத் தலைவனாக - ஆம்! அரசனாகப் பட்டம் சூட்டிக் கொண்டான் அவன்!

பாகு மொழி பேசும் நாகம் அவன் என்பதை உணராமல் நச்சுப்பல்லுக்கு இரையானோர் பலருண்டு! செங்கோல் எனும் பெயரால் கடுங்கோல் ஆட்சி நடாத்திய அவனது வன்முறைச் செயல்களால் வாழ்விழந்தோர்தொகை ஏராளம்!

சிறைச்சாலைகளின் வயிறு நிரம்பிட வேண்டுமென்று அவன் துடியாய்த் துடித்தான். அவன் காலடியில் அவனை எதிர்த்தோர் பிணங்கள் விழுந்தால், அவனுக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி. மாற்றுக் கருத்துடையோர் யாராயினும் அவர்கள் விலங்கிடப்பட்டனர்; வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

நீதியை வளைத்து நேர்மையைக் குலைத்துத் தன் பகைவர்களை வதைத்துச் சிரித்தான். வரிக்கொடுமையோ நாட்டு மக்களை வாட்டியது. கடுகனைய குற்றத்துக்கும் கழுமரம் காத்திருந்தது!

அவன், தான் செய்யும் தவறுகளை நியாயப்படுத்தத் தன் பக்கத்தில் ஒரு கூட்டம் இருக்கவேண்டுமென்று விரும்பினான். அவன் நடத்திய காட்டாட்சியை, நல்லாட்சி என்று சிறப்பித்துக்கூற சிலரைத் தேடினான். நீதி நூல்களைக் கல்லாதவர்களாக - ஒருவேளை அவற்றைக் கற்றிருந்தாலும் அதன்படி நடக்காதவர்களாக சிலர் - தன்னருகே இருந்து தன் புகழ் பாடவேண்டுமென்று திட்டம் தீட்டினான்.

நீதி நூலைப் படித்து அதற்கேற்ப ஒழுகாதவர், "கல்லாதார்" எனும் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியவர்தானே! அப்படியொரு கூட்டத்தின் ஆதரவைப் பெறுவது அந்த மன்னனுக்கு எளிதான காரியமாகவே இருந்தது.

அந்தக் கொடுங்கோலன், நீதி, நெறி கல்லாதவரைத் தனக்குத் துணையாகக் கொண்டிருக்கிறான் எனும் செய்தி வள்ளுவர்க்கு எட்டியது! அவர் முகம் வாடியது. வேதனையோடு கூடிய ஒரு சிரிப்பு வெளிப்பட்டது.


> "எது நீதி? எது நெறி? என்று கல்லாதவர்களைத் தனக்கு அரணாக ஒரு கொடுங்கோல் ஆட்சி அமைத்துக் கொள்ளுமேயானால், அதைப்போன்ற ஒரு சுமை, இந்த நிலத்துக்கு வேறு எதுவுமே இல்லை."

சிரித்துக்கொண்டுதான் இந்த வார்த்தைகளை வள்ளுவர் கூறினார் என்றாலும் அவர் கண்கள் கலங்கியிருந்தன.

மனிதர்களையல்ல; வெறும் தசைப் பிண்டங்களைத் தாங்கும் சுமைதாங்கியாகவும் சில நேரங்களில் இருக்க வேண்டியிருக்கிறதே எனக்கூறி, மண்மகள் பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

> "கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
> இல்லை நிலக்குப் பொறை"
>
> அதிகாரம் - 57 - வெருவந்த செய்யாமை; பாடல் - 570





கற்பனையின் கதவுகள்

ஒரு விசித்திரமான கற்பனை செய்து பார்ப்போம். இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் சாதனையால் மனிதன் சந்திரமண்டலத்தில் இறங்கி சிறிது தூரம் நடந்து பார்த்துவிட்டு அங்கிருந்து கற்களையும் பொறுக்கிக் கொண்டு, தான் கண்டபகுதிகளைப் புகைப்படமும் எடுத்துக் கொண்டு திரும்பிவிட்டான். அவன் அறிந்தவரை அங்கே உயிரினங்கள் வாழுவதாக இதுவரை அறுதியிட்டுக் கூறவில்லை. இதைத் தொடர்ந்து நமது கற்பனையைத் தொடங்கிடுவோம்.

சந்திரமண்டலமோ, அல்லது செவ்வாய் போன்ற வேறு மண்டலமோ - அங்கி ருந்து மனிதர்கள் ஓரிருவர், அவர்கள் கண்டுபிடித்த விஞ்ஞானக் கலங்களின் துணை யோடு பூமிக்கு வருகிறார்கள். தாங்கள் வாழும் கோளினைப்போல் இல்லாது இயற்கையின் பசுமை எழிலுடன் சிரித்துக் குலுங்குவதைக் கண்டு வியக்கிறார்கள். வயல்வெளிகளில் இளங்கதிர்களின் சதிராட்டம் கண்டு மெய்மறந்து விடுகிறார்கள். மலைகளில் அகிலும் தேக்கும் வளம் கொஞ்சிட நிற்பதைக் காணுகிறார்கள். கரும்புத் தோட்டங்களிலிருந்து முற்றிய கரும்புகளைக் கட்டிச் சென்று ஆலையில் பிழிந்து வெல்லத்தைச் சுவைத்துத் தின்றிடும் மக்களைப் பார்க்கிறார்கள். களத்துமேடுகள், அங்கே கதிர்க் கட்டுக்கள், கட்டுக்குலையா மங்கையர் அவற்றைத் தலையில் சுமந்து சென்றிடும் காட்சி; தங்கநிற நெல்மணிகள் முத்துப்போன்ற அரிசிகளாக ஒளிவிடும் புதுமை. அந்த அரிசியைப் பொங்கி அனைவரும் அமர்ந்து உண்டு மகிழ்ந்திடும் அருமை! வெள்ளரிப் பிஞ்சைக் கடித்துக் குதப்பும் ஒரு குழந்தை - மாங்கனியைச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டே எதிரே நிற்கும் எழி லரசி ஒருத்தியின் கழுத்துக்குக் கீழே கண்ணோட்டம் விடும் காளையொருவன்.

இவற்றையெல்லாம் கண்டு அந்த வெளிமண்டலத்து மனிதர்கள் அதிசயிக்கின்றனர். அவர்கள் செல்லும் திசையில் குளிர்ந்த காற்று வீசுகிறது. சிறிது நேரத்திற்கெல்லாம் மழை பெய்கிறது. மலையருவிகளில் தண்ணீர் பூவிதழ்களைச் சுமந்தவாறு ஓடுகிறது. வேலை செய்து களைத்துப் போனவர்கள், வயிறார உண்டு மகிழ்ந்தவர்கள், அந்த அருவியின் நீரை அள்ளி அள்ளிப் பருகுகின்றனர்.

அனைத்தையும் பற்றி வெளி மண்டல மனிதர்கள், புவியிலுள்ள மாந்தர்களிடம் விசாரித்து விபரம் சேகரிக்கிறார்கள்.

அவர்கள், தங்களின் சொந்தக் கோளுக்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்துவிடுகிறது. அவர்கள் கொண்டுவந்த விஞ்ஞான விண்கலத்தில் ஏறிப் புறப்பட்டுப் போகிறார்கள்.

அவர்களை வரவேற்க, அந்த மண்டலத்து விஞ்ஞானிகள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். "புவியில் கண்ட புதுமையைச் சொல்கிறோம் கேளீர்" என்று களிப்புடன் ஆரம்பிக்கின்றனர். அங்குள்ளோர் அவர்தம் வாய்களையே நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

"பூமியில் மழை என்று ஒன்று இருக்கிறது; அது ஓர் அற்புதமான பொருள்! அங்குள்ள மனிதர்கள் உண்பதற்கேற்ற உணவுப் பொருள்கள், அந்த மழை இல்லாவிட்டால் விளையாது! அந்த மழையால் கிடைக்கும் உணவு வகைகளை உண்டு வாழ்கிற மக்கள் அந்த மழை நீரையே குடித்துக் கொஞ்சம்கூட அந்த மழையிடம் இரக்கமில்லாமல் நடந்து கொள்கிறார்கள்! என்னடா! நமக்கு உணவு வகைகளை வழங்குகிற மழையையே குடித்து வாழ்கிறோமே என்ற எண்ணம் பூமியில் உள்ளவர்களுக்கு இல்லவே இல்லை."

இதைக்கேட்டு, அந்த மண்டலத்தில் உள்ளவர்கள் மழையைப் போற்றுகிறார் கள்! அப்படியொன்று நமக்குக் கிடைக்கவில்லையே என்று கவலைப்படுகிறார்கள்! அவ்வளவு உதவி செய்கிற மழைக்கு நன்றி காட்டாமல் புவியில் உள்ளோர் அதையே குடிக்கின்றனரே; என்ன விந்தை என்று பேசிக் கொள்கிறார்கள்.

பூமிக்கு வந்து திரும்பியவர்களில் ஒருவன், அவர்களைப் பார்த்துச் சொல்கிறான்; "அந்த மழையின் சிறப்பைப் பற்றித் திருவள்ளுவர் என்ற மிகப் பெரும் மேதையொருவர், குறளே எழுதியிருக்கிறார்" என்று!

"என்ன எழுதியிருக்கிறார்?"

"என்ன எழுதியிருக்கிறார்?"

குரல்கள் எழுகின்றன.

"உண்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவது டன் அவர்களுக்குப் பருகுவதற்கேற்ற உணவாகவும் இருப்பது மழைக்குரிய சிறப்பாகும்."

இப்படி எழுதியிருக்கிறார் என்கிறான். அந்த மண்டலம் முழுதும் 'மழை' பற்றியே பேச்சு!

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

அதிகாரம் - 2 - வான் சிறப்பு; பாடல் - 12

துப்பு = உணவு ; துப்பார் = உண்பவர் ;
துப்பாக்கி = உணவுப் பொருள்களை உண்டாக்கி

இரண்டு தோணிகளுக்குச் சொந்தக்காரன் அவன். கட்டிளங்காளை. அகன்ற நெற்றி. கூரிய விழிகள். சற்று தடித்த இதழ்களின் மேலே அரும்பனைய மீசைகள். முகத்தில் எப்போதும் வெற்றிப் புன்னகை.

தோளுயர்த்தி அவன் நடந்து செல்லும்போது, வீதியில் அவனைக் கடந்து செல்லும் பாவையர் பார்வை அவனை ஒருமுறை மொய்த்துத்தான் திரும்பும். இரண்டு தோணிகளுக்குச் சொந்தக்காரன் அவன்.

வேலெடுத்துச் சென்று களத்தில் வீரம் விளைத்து வருவான். குருதி கொப்பளிக்கும் விழுப்புண்களைப் பார்த்துப் பெருமை கொள்வான். அந்தக் காயங்களில் கசியும் குருதி, அவன் நீராடும் ஆற்று நீரைச் செந்நீராக மாற்றும். அவன் மனவலிமை கண்டு தாமரை மங்கையர் தங்கள் நெஞ்சம் பறிகொடுத்து ஆற்றங்கரையில் அசையாத சிலையென நின்றிடுவர்! இரண்டு தோணிகளுக்குச் சொந்தக்காரன் அவன்.

ஏடெடுத்துக் கவிதைகளை விதைப்பான். இசைமுகிலாக உருவெடுத்துத் தேன்மழையாகப் பொழிவான். அந்த இனிமையில் மூழ்கி இளங்குரும்பைப் பெண்கள் கூட்டம் மெய்மறந்து கிடக்கும்! இரண்டு தோணிகளுக்குச் சொந்தக்காரன் அவன்.

ஊர் கூடி அவன் புகழைப்பாடும், சீராரந்த செந்தமிழில் தென்றலாகக் குளிர்வான். சீறுகின்ற புயலாகவும் எழுவான். சின்ன இடைச் சேல்விழிகள் அவன் மீது தேன்வண்டாய்த் தாக்கும். இரண்டு தோணிகளுக்குச் சொந்தக்காரன் அவன்.


எவரையும் ஏறெடுத்துப் பார்க்காமல் - யாருக்கும் அசைந்து கொடுக்காமல் - எத்தனைவித மலர்கள் அவன் முன்னால் பூத்துக் காட்டியும்... எத்தனைவித மயில்கள் அவன் எதிரே கூத்துக் காட்டியும் - எதுபற்றியும் சலனமின்றி அவன் தன்னிரு தோணிகளில் மாறி மாறிப் பயணம் செய்து வந்தான். இரண்டு தோணி களுக்குச் சொந்தக்காரன் அவன்.

அவன் பிடிவாதம் நொறுங்கிவிழ, ஒருத்தி அவன்மீது படையெடுத்தாள். அந்தக் காதல் முற்றுகையில் கடைசியில் அவன் தோற்றுப்போனான். அவளைத் தழுவிடத் துடித்துத் தாவிச் சென்றான். அவளோ, அவன் மார்பினில் சாய்ந்து மறைந்து விட்டாள்! தோளினில் உராய்ந்து பறந்து விட்டாள்! தொட்டாள்! தொட்டான்! சிட்டெனக் கிளம்பி வானில் மிதந்துவிட்டாள்! முத்தம் கேட்டான்! ஒன்று கொடுத்தாள்! அதை நித்தம் கேட்டான்! வளையல் சத்தம் காட்டி ஒளிந்து கொண்டாள்!

காதல் நோய் பற்றியது! அது காமத்தீயாக எரிந்தது!

இரண்டு தோணிகளுக்குச் சொந்தக்காரன் அவன். அவற்றில் ஒன்றில் ஏறி காமவெள்ளத்தைக் கடக்கலாமென ஓடினான்! ஓடினான்!

இரண்டு தோணிகளையும் காணவில்லை!



எங்கே அந்தத் தோணிகள்?

அடடா! ஒரு தோணியின் பெயர் நாணம்!

மற்றொரு தோணியின் பெயர் ஆண்மை!

அய்யோ! இரண்டு தோணிகளுமே அவனைச் சுற்றிச் சுழன்று பற்றிக் கொண்ட காமவெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்விட்டன.


"காமம் என்னும் கடுமையான வெள்ளம்; ஓர் ஆடவனின் நல்ல ஆண்மையையும் நாணத்தையும் - அதாவது அந்த இரண்டு தோணிகளையும் அடித்துக் கொண்டு போய்விடுகின்றது."

என்கிறார் வள்ளுவர்! அதற்கு இதோ குறள் :-

"காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை"

அதிகாரம் - 114 - நாணுத் துறவுரைத்தல்; பாடல் - 1134

புணை - தோணி





சிறுகதை மூலம் அறிவோம்

"நீ பெண்ணல்ல! புராணங்கள் கூறுகின்ற தேவர் உலகத்து ரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகியோரில் ஒருத்தியாகத்தான் இருக்க வேண்டும்."

"ஓ! அப்படியா! அவ்வளவு அழகா நான்?"

"அவர்களைவிட நீ அழகியென்பேன்!"

"அந்த மூவரையும் பார்த்திருக்கிறீர்களா?"

"புராணக் கதைகள் வர்ணிப்பதைக் கேட்டிருக்கிறேன்."

"என்னை உங்களுக்குப் பிடிக்கிறதா?"

"கண்ணே! இந்த மீனைப் பிடித்துவிட்ட தூண்டில்முள் அல்லவா உன் பார்வை!"

"ஓ! நல்ல இரசிகர்தான்! அப்புறம்?"

"அடடா! உன் மெல்லிய இதழ்கள், என் நெஞ்சத்தைத் துவைக்கும் மத யானைகளின் பருத்த கால்களைப்போல் காட்சி தருகின்றனவே!"

"உம்! பேசுங்கள்!"

"அலை அலையாய்ச் சுருண்டு கிடக்கும் உன் கரிய கூந்தல்! அழகேறி நிற்கும் உன் அரும்புப் புருவங்கள்! என் நெஞ்சிலே உணர்ச்சி வெறியேற்றிய உன் நீண்ட மூக்கு! மனிதனை மயக்குவதற்கென்றே மாயனால் படைக்கப்பட்ட உன் மாம்பழ மேனி... இன்பவல்லியே! நான் உன்னை விரும்புவதுபோல நீ என்னை விரும்புகிறாயா?"

"நிச்சயமாக! நீங்கள்தான் இந்த இரதிதேவிக்கு ஏற்ற மன்மதன்! இந்த சுபத்திரைக்கு ஏற்ற அர்ச்சுனன்!"

"அப்படியா? இன்றே நான் பிறவியெடுத்த பயனைப் பெற்றேன்! கண்மணி! என்னையே உனக்குத் தந்துவிட்டேன்."

"அன்பு ததும்புகிறது உங்கள் உள்ளத்தில்!"

"உன் உள்ளமும் அப்படித்தானே!"

"அன்பில்லாமலா உங்களருகே வந்தேன்... ஆனாலும், ஆனாலும்...!"

"என்ன, என்ன சொல்கிறாய்...? ஏன் ஆனாலும் என்கிறாய்?"

"இன்றிரவு என்னுடன் இருக்க எவ்வளவு பொருள் தருவீர்கள்? தருவதாகச் சொன்னால் மட்டும் போதாது; முதலில் தந்துவிட்டுத்தான் என்னைத் தொடவே வேண்டும்!"

"சே! விலைமகளா நீ! நல்ல வேளை, உன் விழிவீச்சில் வீழ்ந்த நான் அடுத்த விபத்தில் சிக்காமல் தப்பிவிட்டேன்."

- இப்படிக் கூறிவிட்டு, அவன் அந்த இடத்தைவிட்டு விரைந்து நடந்தான். அவள், கவலையேதுங் கொள்ளாமல், கண்வலை வீச வேறுபக்கம் திரும்பினாள்.

ஏமாற்றத்தால் தாக்குண்ட அவன், ஒரு சோலையோரமாகச் சென்று கொண்டிருந்தான். 'என்ன அண்ணே! சுகம் தானா?' எனக் கேட்டபடி ஒருவன் முதுகில் தட்டினான். இன்னொருவன் 'அவருக்கென்னப்பா, குறைச்சல்!' என்று சிரித்தவாறு எதிரே வந்து நின்றான். நலம் விசாரித்த இருவரும் அவனுக்கு அறிமுகமாகாதவர்கள். நயவஞ்சக் கள்வர்கள். அவன் கைப்பொருளைக் கவர்ந்திட வந்தவர்கள். அவர்களிடமிருந்து தன்னையும் பொருளையும் காப்பாற்றிக் கொள்ள இடையில் செருகியிருந்த கத்தியை எடுத்துப் பாய்ந்தான். கள்வர் இருவரும் கதிகலங்கிப் போய் ஓடி மறைந்தனர்.

விலைமகள், கள்வர் - இவர்களிடமிருந்து தானும் பிழைத்துத் தன் பொருளும் பிழைத்தது பற்றி எண்ணிப் பெருமூச்சுவிட்டான்.

வீட்டுக்குச் சென்றான். வீட்டுத் திண்ணையில் அவன் நண்பன் உட்கார்ந்து கொண்டிருந்தான். "எப்போது வந்தாய்?" என்று அவன், நண்பனைப் பார்த்துக் கேட்டான்.

"எப்போது வந்தால் என்ன? இத்தனை நாள் உன்னோடு எதற்காகப் பழகினேனோ அதை நீ சிறிதுகூட எண்ணிப் பாராமல் உன் வாணிபக் கூடத்து மேலாளராக

வேறொருவனை நியமித்துக் கொண்டாயே; இது நியாயந்தானா என்று கேட்கத்தான் வந்தேன்!"

"நீ இப்படியொன்றை எதிர்பார்த்துத்தான் என்னுடன் நட்புக் கொண்டாய் என்பது எனக்குத் தெரியாது! வாணிபக்கூடத்து மேலாளர் பணிக்கு யார் தகுதியோ அவனைத் தேர்ந்தெடுத்து நியமித்தேன். அதில் என்ன தவறு!"

"போதும் உன் நட்பு! போய் வருகிறேன்!"

"தாராளமாகப் போய் வா! அன்பை எதிர்பார்க்காமல் பொருளை எதிர்பார்க்கும் விலைமகளும் கள்வரும் பயன் கருதித் தோழமைகொண்டு கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பர்களும் ஒரு நிகரானவர் என்று வள்ளுவர் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்! போய்வா நண்பா! போய் வா!"


நண்பன் எனப்பட்டவன் வேகமாகப் போய்விட்டான். வீட்டுக் கதவும் தாளிடப்பட்டது.

"உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்"

அதிகாரம் - 82 - தீ நட்பு; பாடல் - 813

பெறுவது கொள்வார் = விலைமகளிர் உறுவது = பயன்





செல்வந்தர் வீட்டுப் பணியாள் அவன்! பெயர் சேவல்! அந்த வீட்டில் பெரியவர் முதல் குழந்தைகள் வரையில் எல்லோருக்கும் அவன் அடிமை! வயிறு வளர்க்க வேண்டுமே; வேறெப்படி வாழமுடியும் - வறுமைச் சுழலில் சிக்கிக் கொண்ட வனால்! செல்வந்தரின் பாட்டிக்குத் தொண்ணூறு வயது. அந்த அம்மையார் "அடே! சேவல்!" என்று அதிகாரக் குரலில் அழைப்பார். பேரனுக்கு எட்டு வயது. அவனும் "அடே! சேவல்!'' என்றுதான் அழைப்பான். அடிமை வேலை செய்யு மிடத்தில் மரியாதையென்ன வேண்டிக் கிடக்கிறது. அதனால் ஐம்பது வயதான சேவல், அந்த அழைப்புக்களைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்வதேயில்லை.

பேரப்பிள்ளைகளைப் பெட்டிவண்டியில் வைத்து, சேவல்தான் பள்ளிக்கு இழுத்துக் கொண்டு போவான். தேர், திருவிழாக்கள் பல கல் தொலைவில் உள்ள ஊர்களில் நடைபெற்றாலும் பெட்டி வண்டி இழுக்கும் வேலை அவனுடையது தான். நாள்தோறும் கழனிகளைப் பார்வையிடச் செல்வந்தர் செல்லும்போதும் சேவலின் தோள்களே சிவக்கும், வண்டியிழுத்து!

குண்டு குழிகளில் வண்டியேறிச் சற்று ஆடிவிட்டாலோ - அல்லது வண்டியி லிருப்போரின் விருப்பத்திற்கேற்ப வேகமாகப் போகாவிட்டாலோ, சேவலுக்குச் சவுக்கடிகள் விழுவதும் வாடிக்கை!

அந்த வடுக்கள் எல்லாம் அவனது தோளிலும் முதுகிலும் விலாப்புறத்திலும் செந்நிறம் காட்டிக் கொண்டிருக்கும். அடிக்கும்போது வலி பொறுக்க முடியாதுதான்! வாங்கிக்கொண்டால்தான் வயிறு நிரம்பும்! தாங்கிக் கொண்டால்தான் வாழ்வை நகர்த்த முடியும்!

"அடக் கடவுளே! உனக்குக் கண்ணில்லையா? வாயில்லாத இந்த ஊமையை இப்படி அடிக்கிறார்களே!" என்று சேவல் தன் மனத்துக்குள் சொல்லிக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் கண்ணீர்விட்டு அழுவான்!

செல்வந்தர் வீட்டில் திடீரென ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது.

பெட்டி வண்டியிழுக்க, இரண்டு காளைமாடுகள் வாங்கப்பட்டன.

சேவலுக்கு ஒரே கவலை! தனக்கிருந்த வேலை போய்விடுமோ என்பதுதான், அவன் கவலைக்குக் காரணம்!

அப்படியொன்றும் நிகழவில்லை! காளை மாடுகளை வண்டியில் பூட்டி ஓட்டுகிற வண்டிக்காரன் பதவி அவனுக்கு வழங்கப்பட்டது. சேவலுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

பெட்டி வண்டியில் மாடுகளைக் கட்டி, முன்னே அமர்ந்து அவற்றை ஓட்டிச் செல்லுவதை அவன் தனக்குக் கிடைத்த பதவி உயர்வாகக் கருதிப் பெருமை கொண்டான்!

அவன் கால்களால் மாடுகளை உதைத்து ஓட்டுவான்! கைகளால் தட்டி ஓட்டு வான்! மேலும் வேகமாகப் போகவேண்டுமென்றால், காளைகளின் வாலை முறுக்கு வான்! ஓடி ஓடிக் காளைகள் அயர்ந்துபோய், சற்று வேகத்தைக் குறைத்திடுமானால், சேவலுக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும்! கையில் உள்ள சவுக்கால் ஆத்திரம் தீர அடிப்பான். தார்க்குச்சியால் காளைகளின் முதுகெல்லாம் குத்துவான்! அவற்றின் முதுகில் குருதி கொப்பளிக்கும். அதைச் சுவைக்க ஈக்கள் மொய்க்கும்.

அவன் அடிமையாக இருந்து அடிபட்டான். இப்போது அவனுக்கு இரண்டு அடிமைகள் கிடைத்துவிட்டன.

ஒருநாள் இரவு அவன் தூங்கிடும்போது கனவில் அந்தக் காளைகள் வந்தன. இரண்டும் அவனிடம் பேசுவதுபோல் தெரிந்தது. சேவல், காளைகள் பேச்சை உற்றுக் கேட்டான்; கனவில்தான்!

"அய்யா வண்டிக்காரரே! உமது உடலெல்லாம் இருக்கிற வடுக்கள், நீர் வண்டியிழுத்தபோது வாங்கிய அடிகளின் அடையாளம்தானே! அப்போது உமக்கு எப்படி வலித்திருக்கும்? நீர் எங்களை இப்போது அடித்துக் குத்தி வால்களை முறுக்கிடும்போது எங்களுக்கும் அப்படித்தானே வலிக்கும்?"


காளைகளின் இந்தக் கேள்வி காதில் விழுந்ததுதான் தாமதம்; சேவல் கனவு கலைந்து விழித்துக் கொண்டான். இனிமேல் அந்தக் காளைகளை அடிப்பதில்லை யென்று உறுதி செய்துகொண்டு தொழுவத்திற்குச் சென்றான். அவற்றின்மீது மொய்த்துக் கொண்டிருந்த ஈக்களை விரட்டிவிட்டு, அன்புடன் அந்தக் காளைகளைத் தட்டிக் கொடுத்தான்.

"தன்னுயிர்க்குத் துன்பம் தரக்கூடியவை, எவையென்று உணர்ந்த ஒருவன்; மற்ற உயிர்களுக்கு அந்தத் துன்பங்களைச் செய்வது என்ன காரணத்தாலோ?"

என்றுதான் வள்ளுவர் வேதனையோடு கேட்கிறார்:

"தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்"

அதிகாரம் - 32 - இன்னா செய்யாமை; பாடல் - 318



“சிலை வேள்கணை கொலைவேலென
விரிமார்பினில் நடுவே தொளை
செய்வது கண்டிலை இன்னமே - என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே?”

அண்ணாமலை ரெட்டியார் எழுதிய காவடிச்சிந்துப் பாடலைப் பயன்படுத்தி, அவளது நெஞ்சுறுதியெனும் முற்றுகையை உடைத்து வெற்றி காண முனைந்தான் அவன். மன்மதனின் அம்பு, கொலைபுரியும் வேலைப்போல் அவனது மார்பில் பாய்ந்து துளைக்கிறதாம். அதைக் கண்டு உன் மனம் இரங்கவில்லையா என்று கேட்டான். அவள் அசைவதாக இல்லை! தன் உள்ளத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவனை நெருங்காமலும் - அதைப் போல அவனை நெருங்கவிடாமலும் - அவளிருந்தாள்.

பள்ளிப் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லித் தருபவள், அந்தக் கிள்ளை. அவன் அந்த ஊர் பண்ணையார் வீட்டிலே கணக்கப்பிள்ளை! வீதியோரம் - ஆற்றோரம் - கோயில் சுவரோரம் - விழிகள் நான்கும் மோதி, ஏற்கனவே காயமுற்றிருந்தன. எனினும் அவள் எளிதில் வயப்படவில்லை! அவனும் விடுவதாக இல்லை! வரமாட்டானா? வந்து, வேண்டும் வரம் தரமாட்டானா? இப்படி அவள் பெருமூச்சால் வான் பார்த்துப் பேசுவது உண்டு! ஆனால், அருகே அவன் வந்துவிட்டால் சுடுநெருப்பாய்த் தோன்றிடுவாள்.

அன்று கல்விக்கூடம் முடிந்து - சிட்டுக்களும் புறாக்களும் பறப்பதுபோல் பிள்ளைகள் வீடு நோக்கி ஓடினர். பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களும் இல்லம் நோக்கி நடந்தனர். அவளும் தெருவில் போய்க் கொண்டிருந்தாள். பண்ணையார் வீட்டுப் பணிமுடிந்து அவனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

அவன் வரவேண்டுமெனத் துடிக்கிறது நெஞ்சம்! ஆனால், நடையோ அவன் வருவதை விரும்பாததுபோல் நடிக்கிறது!

தனி வீடு! தனியாகத் தானிருக்கிறாள்! கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைகிறாள்! கணக்கப்பிள்ளை - ஆம்; அந்தக் கட்டழகு ஆண்பிள்ளை - காவடிச் சிந்துடன் பின் தொடர்கிறான்.

"வாடியிருப்பது வஞ்சமோ? - பொல்லா
வன் கருங் கல்லோஉன் நெஞ்சமோ? - கொண்ட
மையல் பைத்தியம் கொஞ்சமோ? - சிலை
மதனாகம முதுகாவியம் அதிலேமொழி சுகலீலையின்
மார்க்கம் உனக்கென்ன நஞ்சமோ? - ஒரு
வார்த்தை உரைக்கவும் பஞ்சமோ?"

சுவை மிகுந்த சொல்லாரம் தொடுத்தான்! சுனைத் தமிழில் காதல் கணை விடுத்தான்!

தன் நெஞ்சத்தை அடக்கியாளும் பெண்மையை அவன் வெற்றிகொண்டு விடாமல் - நிறையழியாமல் - பாதுகாத்துக் கொள்வதில் அவள் மிகவும் எச்சரிக்கையாக இருந்தாள்.

"இனியவளே! கனியமுதே! இன்னும் என்ன தயக்கம்? அன்று தேரடியில் கண்டபோது உன் தேனிதழ்கள் துடித்தனவே; அவை எனக்கு என்ன கட்டளையிடப் போகின்றன எனக் கேட்கத்தானே இப்போது கைகட்டி நிற்கின்றேன்! திருவிழாக் கூட்டத்தில் ஓர் நாள் உன் விழிகள் என்னைத் திருடிக் கொண்டிருந்தன! திரும்பிப் பார்த்தேன்! அதே விழிகள் தீச்சுடர்களாய் மாறின! குற்றமென்ன செய்தேன் எனக் கேட்கத்தானே கூப்பிய கரமுடன் உன் முன் இப்போது ஓடிவந்திருக்கிறேன்! உன் அசையும் இடை காட்டும் நடனத்தை ஆணையாக ஏற்று நடக்க அடியேன் என்றைக்கும் எப்போதும் தயாராக இருக்கிறேன். பிறகேன் விழிகளில் தணல்? தாமரை முகம் எனை நோக்கித் திரும்பிடத் தயங்குவது ஏன்! நான் உனைத் தழுவ - நாள் முழுவதும் மண்டியிட்டுத் தவம் புரிய வேண்டுமா? அட்டியில்லை! பஞ்சுபட்டாலும் வலிக்கின்ற உன் பாத மலர்களில், காமபூஜைக்குரிய மலராக என் இதயத்தைப் படைத்திருக்கிறேனே; அதைக்கூட நீ பார்க்கவில்லையா? இன்னும் உனக்கு என்மேல் இரக்கமில்லை யென்றால், புருவ வில்லை வளைத்து என்னை உருவம் தெரியாமல் அழித்துவிடு!"

அவன் பேசிக்கொண்டேயிருந்தான். பணிவும் பாசமும் நிறைந்த அந்தப் பேச்சின் முன்னே அவளது பெண்மையென்னும் அரண் அழிந்துவிட்டது!

ஓட்டிக்கொண்டாள்! அவன் கட்டிக் கொண்டான்! தெருக்கதவு மூடிக் கொண்டது! அந்தச் சிறிய வீட்டில் ஒரே அமைதி!

அவள் நெஞ்சு மட்டும் அவளுடன் பேசியது, "நாளை வருகிறேன்" என்று அவன் விடை பெற்றுச் சென்ற பிறகு!

"மாயக்கள்வனான என் காதலனின் பணிவு நிறைந்த மொழி, என் பெண்மையெனும் அரணை உடைக்கும் படையாக அல்லவா இருக்கிறது!"

இப்படி வியப்புத் தெரிவித்தது அவள் நெஞ்சு! அதனால் விம்மியது அவள் மார்பகம்!

"பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை"

அதிகாரம் - 126 - நிறையழிதல்; பாடல் - 1258



சோவியத் ருஷ்யாவை உருவாக்கிய லெனின் என்ற மாவீரனுக்குப் பிறகு அந்தப் பொதுவுடைமைப் பூமியைக் கட்டிக்காத்த பெருமை ஸ்டாலினுக்கு உண்டு. இட்லரின் மிகப்பெரும் படையெடுப்பிலிருந்து நாட்டையும் காத்து, பொதுவுடைமைத் தத்துவத்தையும் காப்பாற்றியவர் ஸ்டாலின்! அவர் மறைவுக்குப் பிறகு மாலங்கோவும், அவரை வீழ்த்திவிட்டு குருஷேவும் தலைமைப் பொறுப்பேற்றனர். குருஷேவ், ஸ்டாலினை விமர்ச்சிப்பதில் பெரும் பொழுதைக் கழித்தார்.

ஒரு முறை கிரெம்ளின் மாளிகையில் நடைபெற்றக் கூட்டத்தில், குருஷேவ் மறைந்த ஸ்டாலினின் சர்வாதிகாரப் போக்குகளைக் குறித்துக் கடுமையாக விவரித்துக் கொண்டிருந்தாராம். அப்போது ஒருவர் குறுக்கிட்டு, "ஸ்டாலினின் சர்வாதிகார முறைகேடுகள் நடைபெற்றபோது அதனைத் தட்டிக் கேட்காமல் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" எனக் கேட்டாராம். கேட்டவரை குருஷேவ் சினத்துடன் நோக்கினாராம்! கேட்டவர் மௌனமாகி அடங்கி உட்கார்ந்து விட்டாராம்! குருஷேவ் அமைதியாக, "இதைத்தான் நானும் செய்து கொண்டிருந்தேன்" என்று பதில் அளித்தாராம். இப்படி குருஷேவ் காலத்தில், மெருகேற்றப்பட்ட செய்திகள் வருவதுண்டு.

மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் லெனின் உடலும் அருகே ஸ்டாலின் உடலும் பதப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. குருஷேவுக்கு ஸ்டாலின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஸ்டாலினின் பதப்படுத்தப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த உடலை அகற்றி விடுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆணையும் உடனடியாக நிறைவேற்றப்பட்டு விட்டது.

ஸ்டாலின் பெயர்கள், சின்னங்கள், சிலைகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டன; அகற்றப்பட்டன.

இத்தனையும் செய்த குருஷேவ், ஓரிரு ஆண்டுகளில் அவரது கட்சியினராலேயே பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

அவர் எங்கு போனார், என்ன ஆனார் - என்ற விவரங்களே தெரியாமல் இருந்தது.

நீண்ட காலத்திற்குப் பிறகு ஒரு செய்தி வந்தது; சோவியத்தில் நடைபெற்ற தேர்தல் ஒன்றில், எங்கேயோ ஒரு வாக்குச் சாவடியில் குருஷேவ் வாக்களிக்க வந்தார் என்றும் அவரை யாரும் கண்டுகொள்ளவில்லை யென்றும் அந்தச் செய்தி குறிப்பிட்டது.

பின்னர் அவர் இறந்துபோன செய்திகூட ஏடுகளில் இருட்டான ஒரு மூலையில் மிகச் சிறிய அளவில் வெளியிடப்பட்டது.

உலகத்து ஏடுகளில் எல்லாம் ஒரு காலத்தில் முதல் பக்கம் - முழுப் பக்கத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த குருஷேவின் மரணச் செய்திக்குக் கிடைத்த மரியாதை அவ்வளவுதான்!

நீரில் இருக்கும் வரையில்தான் முதலை, பலம் வாய்ந்தது! நீரைவிட்டு வெளிவந்து விட்டால், அதனை ஒரு சாதாரணப் பிராணிகூட வென்றுவிடுமல்லவா? அதிகாரத்தில் உள்ள மனிதர்களில் பலர் முதலையைப் போன்றவர்களாகவும் இருப்பர்! அவர்கள், தாங்கள் அந்த நீரை விட்டு நீங்கினால் என்ன ஆவோம் என்பதையும் சிந்திக்க மறந்துவிடக் கூடாது என்பதற்குக் குருஷேவின் வரலாறு எடுத்துக்காட்டாக விளங்குகிறதல்லவா?

"நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற"

அதிகாரம் - 50 - இடம் அறிதல் பாடல் - 495

புனல் = நீர் அடும் = வெல்லும்



"பசுவின் கன்றின்மீது பாராளும் வேந்தனின் மகன் தேரை ஏற்றி விட்டானாம்! கன்று மாண்டது கண்டு கதறியதாம் தாய்ப்பசு! பசுவின் வேதனையை உணர்ந்த சோழமன்னன், தனது மகனையே தேர்க்காலில் படுக்க வைத்து அவன்மீது தேரைச் செலுத்தினானாம்! இதெல்லாம் என்ன நடக்கக்கூடியதா?" என்று நகைத்தவாறு கேட்ட நண்பன் நலங்கிள்ளியின் முதுகில் தட்டியவாறு, "நடக்காத கற்பனைக் கதையாகக்கூட இருக்கலாம்; ஆனால், அந்தக் கதை விளக்கும் ஆழமான கருத்தொன்று இருக்கிறதே, அதனை மறந்து விடாதே!" என்றான் மறைமுதல்வன்!

"என்னப்பா ஆழமான கருத்து?"

"நாட்டுக்கு - சமுதாயத்திற்கு - ஏன் - ஒவ்வொரு வீட்டுக்கும் தேவையான கருத்து அஃது!"

"முன்னுரை இருக்கட்டும்! முடிவுரையை எழுதுக!"

"எழுதத்தான் போகிறேன்! ஒருவனைப் பார்த்து நீ விரைவில் கெடப் போகிறாய் என்று கூறிவிட முடியும், தெரியுமா?"

"ஓ! ஆருடம் கற்றுக் கொள்கிறாயா?"

"அந்த மூடநம்பிக்கையெல்லாம் என்னை அண்டியதே இல்லை! இப்போது உன்னைக்கூடச் சொல்ல முடியும்; நீ விரைவில் கெடுவாய் என்று!"

"எப்படி? ஏன்?"

"அதுதான் வள்ளுவர் வாக்கு!"

"அதைத்தான் விளக்குக என்கிறேன்!"

"உன் தம்பியை நம்பியிருந்த ஒருத்தி - ஆம்; இளஞ்சிட்டு - அவனால் கைவிடப்பட்டு இறுதியில் இறந்தாளா, அல்லது கொல்லப்பட்டாளா என்று தெரியாமலே புதைக்கப்பட்டுவிட்டாள் அல்லவா?"

"கொல்லப்பட்டாளா?"

"வியப்புத் தோன்ற விழிகளை உருட்டாதே! அதனை விசாரித்து, உண்மையை ஊருக்கு அறிவித்து, உன் தம்பியையும் தண்டிக்க வேண்டிய ஊர்த் தலைவன் பொறுப்பிலே நீ இருக்கிறாய்! ஆனால் நீயே கேட்கிறாய்; கொல்லப்பட்டாளா என்று. இன்னும் சிறிது நேரம் போனால், உன் தம்பியும் அவளும் காதலித்தார்களா என்றுகூடக் கேட்பாய்! பருவமயிலைப் பாழ்படுத்திப் புதைகுழிக்கும் அனுப்பியதுமல்லாமல், அந்த மங்கையைப் பெற்றோரையும் மிரட்டி உண்மையை இருட்டில் தள்ள முயற்சிகளை மேற்கொள்ளுகிறாய்! அதனால்தான் சொல்லுகிறேன், பசுவின் கன்றுக்காகத் தன் மகனையே பலியிடத் துணிந்த சோழன் கதையில் ஆழமான கருத்து இருப்பதாக!"

மறைமுதல்வன் சொற்கேட்டு நலங்கிள்ளி, தலை குனிந்து நின்றான். மறை முதல்வன் தொடர்ந்து பேசினான்:

"நண்பன் என்ற முறையில் இப்போதும் கூறுகிறேன்! தனக்குக் கேடு வரப் போகிறது என்பதை ஒருவன் முன்கூட்டி அறிந்து கொள்ள வேண்டுமாயின், அவனுடைய நெஞ்சம் நடுவு நிலைமை நீங்கித் தவறு செய்ய நினைத்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாலும்போதும்! ஆரூடக்காரனின் வாக்கை வெல்லும் அறிவார்ந்த வாக்கு - அதனினும் மேலான வாக்கு - அன்றே அருளிச் செய்துள்ள வள்ளுவர் வாக்கு!"

இப்படி எச்சரித்துவிட்டு நண்பன், குமுறிக்கொண்டே போய்விட்டான். நலங்கிள்ளியின் நெஞ்சம் நடுங்கியது; கேடு வரப் போவதை அறிந்து!

"கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்"

அதிகாரம் - 12 - நடுவுநிலைமை; பாடல் - 116

நடுஒரீஇ = நடுநிலை நீங்கி அல்ல செயின் = தவறு செய்தால்



அழகுமிழும் மணிமாட வீதியது! பகல் முழுவதும் தொடர்ந்து, பாதி இரவு முடியுமட்டும் நடமாடும் நம்பியர்கள், நங்கையர்கள், பண்டங்களைச் சுவைத்துவிட்டு வீசியெறிந்த இலைகளின் குப்பை, வீதியெங்கும் பரவிக் கிடக்கிற காட்சி! அசையாது கிடக்கும் இலைகளையும் கூளங்களையும் அசைத்து விளையாடிக் காலைக்காற்று குதியாட்டம் போடுகிறது! கழனிகளில் இருந்து இல்லம் நோக்கி எருதுகளை ஓட்டிப்போவர் மாலை நேரத்தில்; அவை கழிக்கும் சாணம், ஆங்காங்கு சிதறிக் கிடக்கிறது. மேய்ச்சல் நிலத்திலிருந்து ஆயர்கள் ஓட்டிவரும் பசுக்கள், அவற்றின் வாயிலிருந்து சிந்திய புல்லைத் திரும்பிப் பாராது செல்லும் காரணத்தால் அந்த வீதியில் ஆங்காங்கு பச்சைத் திட்டுகள்.

காலை மலர்ந்ததும் வீதியை அழகுபடுத்தும் கடமையாற்றிட கையில் நீண்ட துடைப்பக் கம்புடன் வழக்கம்போல் வைகை வந்தாள். அவள் வருமட்டும் காத்திருந்து - வந்தவுடன் வீதி கூட்ட வந்துவிட்டான் வடிவழகன்!

ஒரு முனையிலிருந்து வைகை, வீதியைத் தூய்மைப் படுத்திக் கொண்டு குப்பைக் கூளங்களை அள்ளிக் கூடையில் போட்ட வண்ணம் பணியைத் தொடங்கி நடத்தினாள்.

மற்றொரு முனையிலிருந்து வடிவழகன், வீதியிற் குவிந்துள்ளவற்றை அகற்றியவாறு அவளருகே நெருங்கிக் கொண்டிருந்தான்.

நாள்தோறும் இருவரும் அந்த வீதியில் தூய்மைப் பணியாற்றி வருகின்றனர். எனினும் - அவர்களையும் மீறி அவர்கள் கண்கள் பேசிக் கொள்ளத் தலைப்பட்டன.

பெற்றோர்க்கு அடங்காத பிள்ளைகளைப்போல அவர்களின் விழிகள் மட்டுமல்ல; நெஞ்சங்களும் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி ஒன்றையொன்று நெருங்கிக் கொண்டிருந்தன.

அன்றைக்கு என்னவோ, வீதியைப் பெருக்கிக் கொண்டே வந்தவன், குப்பைக் கூடையைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்ள முடியாமல் வைகை, சற்றுத் திணறுவதைக் கண்ணுற்றான். அதைவிட வேறு வாய்ப்பு வேண்டுமா? துணை புரியச் சென்றான்.

குப்பைக் கூடையைத் தூக்கி அவள் தலையில் வைத்தான். அவளை, அவள் பொலிவுமிக்க அங்கங்களை, மிக நெருக்கமாக காணும் பேறு பெற்றான். அவன் பார்வை, அவள் மேனி முழுவதும் படர்ந்தது. அந்தப் பார்வை, அவளை அப்படியே தூக்கி இன்பச் சிகரத்தில் அமர்த்திவிட்டது.

கூடையுடன் நகர்ந்தாள். அவளது கடைக்கண், அவனைத் தொடர்ந்து வருமாறு கட்டளையிட்டதாக அவன் கருதிக் கொண்டான். விலங்கு மாட்டி இழுத்துச் செல்லப்படும் கைதி தப்பிக்க முடியாததுபோல், அவளது விழியில் சிக்குண்ட வடிவழகன், அவள் பின்னாலேயே போனான்.

குப்பையைப் பெரும் பள்ளமொன்றில் கொட்டிவிட்டு - திரும்பிப் பார்த்தாள். வடிவழகன் பார்வை அவளையே மொய்த்துக் கொண்டிருந்தது. அந்தப் பார்வை தரும் இன்பத்தை, அவள் தனக்குள்ளாகவே வியந்து கொண்டாள்.

அவளது விரல்களைத் தனது விரல்களால் பற்றினான். இப்போது அவள், பின்னால் சென்றாள். குப்பைப் பள்ளத்தையடுத்துப் பெரும் புதர் ஒன்று!

புதர் மறைவில் அவளை அழைத்துச் சென்றான். நாணித் தலைகுனிந்து நின்றாள், தழுவினான். அந்தத் தளிர்மேனி நடுங்கியது. அவள் கண்கள் சுற்றுமுற்றும் சுழன்றன. யாருமில்லை.

வீதி பெருக்கிடுவோர் இருவரும் வீணையும் நாதமுமாகிவிட்டனர்.

அவன் தன்னைப் பார்த்தபோது அவளுக்கு ஏற்பட்ட இன்பக்கிளுகிளுப்பு, அவனைத் தழுவிக்கிடந்தபோது அவளுக்கு இல்லை! மாறாகத் துன்பத்தால் துவண்டாள்! என்ன துன்பம் அது!

"ஆகா! அவர் என்னைப் பார்வையால் விழுங்கியது எனக்கு இன்பமூட்டியது! இப்போது அவரைக் கூடியிருக்கிறபோது அவர் என்னைப் பிரிந்து போகக் கூடுமேயென்ற அச்சம்; எனக்குப் பெருந்துன்பத்தையல்லவா அளிக்கிறது!"

இப்படிக் கவலைப்படுகிறாளாம் அவள்!

அதற்கு இதோ குறள் :

"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு"

அதிகாரம் - 116 - பிரிவாற்றாமை; பாடல் - 1152

புன்கண் = துன்பம் இன்கண் = இன்பம் பார்வல் = பார்வை



குறள் வகுப்பு முடிந்து வீட்டுக்கு வந்த இளங்கோ, இளந் தோழர்களுடன் விளையாடிக் களித்துவிட்டு முகம், கை, கால் கழுவிக்கொண்டு விளக்கடியில் அமர்ந்து, ஆசிரியர் அன்று கற்றுத்தந்த குறட்பாக்களுக்கான பொருள் விளக்கங்களைப் படித்து முடித்தான்.

அவனை அன்புடன் அழைத்து உணவு பரிமாறினாள் அன்னை. தாயின் அருகிலேயே படுத்துக்கொண்ட அந்த இளங்கொழுந்தின் சிந்தனையில் குறட்பாக்கள் பற்றிய விளக்கங்கள் நிழலாடிக் கொண்டிருந்தன. பெற்றவளின் கரங்கள், மென்மையாக அவன் தோள்பட்டையைத் தட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தன. உறக்கம் இளங்கோவின் இமைக்கதவுகளை மெதுவாக மூடிற்று. கண்ணுறங்கும் அந்தக் கற்கண்டுச் செல்வனைக் கனவுலகம் இரு கையேந்தி எடுத்துச் சென்றது.

எதிரே வள்ளுவர் நின்றார். அவனுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை.

விரிந்து பரந்த நெற்றி, விழிகளில் ஒளிவெள்ளம், அள்ளிச் செருகி முடிந்து போட்ட தலைமுடி, அகன்ற மார்பகம் வரையில் நீண்டு வளர்ந்த அழகான தாடி, நீளமான விரல்களின் இடையே உள்ளங்கையில் உறவாடும் ஓலைச் சுவடி, கனிவு நிறைந்த புன்னகை.

இளங்கோ ஓடிச் சென்று அந்தத் தமிழ் மலையின் அடிவாரத்தில் விழுந்து வணங்கினான். குழந்தாய் என்று கொஞ்சுமொழி கூறியவாறு இளங்கோவை

BHARATHIDASAN LIBRARY

வாரியணைத்துக் கொண்டார் வள்ளுவர். "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டுக் கொண்டே அவன் உச்சியில் முத்தமீந்தார்.

"நான் கயவனைப் பார்க்க வேண்டும். நீங்கள் அவனை எனக்குக் காட்ட வேண்டும்."

இளங்கோ இப்படிச் சொன்னதும் வள்ளுவர் கலகலவென நகைத்தார்.

"உலகில் காணவேண்டியவைகள் எத்தனையோ இருக்க, உனக்கு ஏனப்பா இந்த வேடிக்கையான ஆசை!"

"நாளைக்குக் குறள் வகுப்பில் என் ஆசிரியர், கயவர் யார் என்று காட்டுகிறேன் எனக் கூறியிருக்கிறார். அதற்குள் நான் அவனைப் பார்த்துவிட்டால் ஆசிரியர் பாடம் சொல்லும்போது - கயவன் எப்படியிருப்பான் என்று நான் முந்திக் கொண்டு கூறி, ஆசிரியரின் பாராட்டைப் பெற்று விடுவேன். அதனால்தான் கேட்கிறேன், வள்ளுவப் பெரியவரே! அவனை எனக்குக் காட்டுங்கள்."

"அப்படியா சரி! சரி! என்னுடன் வா!"

வள்ளுவர், இளங்கோவை அழைத்துக்கொண்டு போனார். வானத்தில் வண்ண வண்ண வடிவங்கள்! நுரை கடலின் அலையைப் போல் முகிற் கூட்டங்கள்! அனைத்தையும் கடந்து வள்ளுவர் பின் சென்றான் இளங்கோ.

"அதோ பார் குழந்தாய்" என்று சுட்டிக் காட்டினார். இளங்கோ, ஆவலுடன் அவர் காட்டிய திக்கை நோக்கினான்.

மகுடம் புனைந்த மன்னன் ஒருவன்; அவன் காலடியில் மண்டியிடும் மற்றொருவன். மண்டியிட்டுக் கிடப்பவன் பேசுவது இளங்கோவின் காதில் விழுகிறது.

"மன்னா! என்னை மன்னித்து விடுக! எங்கள் குலம் காக்கும் போரில் நான் ஒரு தளபதியாக இருந்தேன். எங்கள் குலத்தலைவராம் எமது மன்னரின் கோட்டையை முற்றுகையிட்டு, அதனைத் தரைமட்டமாக்கத் திட்டம் தீட்டி விட்டாய்! அதை எதிர்த்துத் தாக்க வந்த முதல் படையின் தளபதியாகிய எனக்கு, உனது பெரும்படையைக் கண்டதும் அச்சம் ஏற்பட்டுவிட்டது. போரில் எனக்கு விளையும் துன்பத்தைத் தாங்குவது என்பது என்னால் இயலாது!"

"எதிரிப்படையின் தளபதியே! இப்போது என்ன கூறுகிறாய்? உன் முடிவுதான் என்ன?" அந்த மன்னன் சீற்றத்துடன் கேட்கிறான்.

மண்டியிட்டவன் சொல்கிறான்: "என்னை உனக்கு விற்றுவிட்டேன் வேந்தே!" என்று!

மன்னன், அவனைத் தட்டிக் கொடுத்துத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறான். இந்தக் காட்சியைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த இளங்கோவிடம் வள்ளுவர்:

"குழந்தாய்... எதற்கு உரியவர் கயவர் தெரிகிறதா? ஒரு துன்பம் வந்த காலத்தில் தம்மைப் பிறர்க்கு விலையாக விற்றுவிடுவதற்கு உரியவர். அந்தக் கயவரில் ஒருவனே இவன்! நன்றாகப் பார்த்தாயா?"

"எற்றிற் குரியவர் கயவரொன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து"

இந்தக் குறளையும் வள்ளுவர் கூறினார். இளங்கோவின் ஆவல் அடங்கவில்லை.

"கயவனும் மனிதனைப் போலவே இருக்கிறானே" என்று வியப்புடன் கேட்டான்.

"ஆம் குழந்தாய்! கயவரும் மக்களைப் போலத்தான் இருப்பார்கள். வேறு எந்த இருவகைப் பொருள்களிடத்திலும் காணமுடியாத தோற்றத்து ஒப்புமை மனிதரைப் போலத் தோன்றும் கயவரிடத்திலேதான் உண்டு. இதோ, இவன் உருவத்தில் மனிதன்! உள்ளத்தில் கயவன்! இது பற்றியும் குறட்பா உண்டு; கூறுகிறேன் கேள்:


"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல்"

இளங்கோ விழித்துக் கொண்டான். கனவு கலைந்தது. "அம்மா! அம்மா! கயவனும் மனிதனைப் போலத்தானம்மா இருக்கிறான்!" என்று கூவினான்.

அவன் தாய், "தூக்கத்திலேகூட குறள் பாடந்தானா? காலையில் பேசிக் கொள்ளலாம் தூங்கு" என்று தட்டிக் கொடுத்தாள்.

அதிகாரம் - 108 - கயமை; பாடல்கள் - 1080, 1071





"மல்லிகையே வெண்சங்காய் வண்டூத" எனப் புகழேந்திப் புலவர் பாடியபோது, அந்தப் பாட்டின் பொருளையே ஒட்டக்கூத்தர் மறுத்தார் என ஒரு கற்பனைக் கதையுண்டு. "மல்லிகை மலரை வெண்சங்கு போல வண்டு ஊதுகிறது" என்பது புகழேந்தியின் கற்பனை! வண்டு, மல்லிகையில் அமர்ந்திருக்கிற காட்சி, வெண்சங்கை ஊதுவதுபோலத் தோன்றுகிறதாம், புகழேந்திக்கு!

அதை மறுத்து ஒட்டக்கூத்தர் எடுத்துவைத்த கருத்து என்ன தெரியுமா? "சங்கினை ஊதுபவர்கள், அதன் பின்புறத்தில் அல்லவா உதடுகளைக் குவித்து ஊதுவார்கள்; வண்டு மல்லிகையின் முன்புறத்தில் அல்லவா ஊதுகிறது! இந்தக் கற்பனை எப்படிப் பொருத்தமாகும்?" இவ்வாறு கூத்தர் கேட்டாராம்! சட்டென்று புகழேந்தி அதற்குப் பதில் சொன்னார்.

"வண்டு, மதுவருந்திய மயக்கத்தில் மல்லிகையெனும் அந்தச் சங்கின் முன்புறமெது - பின்புறமெது - என்று தெரியாமல் ஊதுகிறது."

புகழேந்தியின் இந்தப் பதில் கேட்டு புலவர் பெருமக்கள் மகிழ்ந்தனராம்! மலர்த்தேன் உண்ட மயக்கத்தில் வண்டினமே அந்தப் பாடுபடும்போது, காதல் தேனுண்ட ஆடவர் எப்பாடு படுவர் - எப்படியெல்லாம் முன்னுக்குப் பின்னாகக் காம மயக்கத்தில் பேசிடுவர் - என்பதை வள்ளுவர், சில குறட்பாக்கள் வழியாகக் காட்டுகிறார்.

இளங்காளை - இன்ப அருவியில் நனைந்து, நனைத்தவளை நினைந்து மகிழ்பவன் - அனிச்சப்பூவைக் காண்கிறான். அந்தப் பூவின் மென்மையைப் புகழ்ந்து வாழ்த்துகிறான். உடனே அவனுக்கு அனிச்சமலரை அவனது காதலியுடன் ஒப்பிடத் தோன்றுகிறது. "நீ மென்மையாக இருக்கிறாய்! வாழ்க! ஆனால், என் காதலி உன்னைவிட மென்மையானவள்" என்று கூறுகிறான்.

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்"

இப்படி அவன் அனிச்சமலர் நோக்கித் தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கும்பொழுது, அவன் காதலி எதிரே வருகிறாள். வந்தவளின் விழிகள், அவன் மீது பாய்கின்றன. இளநகை புரிகிறாள். அருகே நெருங்குகிறாள். அவள் தோளைப் பற்றுகிறான். தழுவுகிறான்.

தழுவும்போது சொல்கிறான்: தளிரே உன் மேனியென்று! தோளைப் பற்றும் போது, இள மூங்கில் எழிலுடையாள் என வர்ணிக்கிறான்! புன்னகை கண்டு பூரித்து, முத்துக்களே பற்கள் என்கிறான்! நெருக்கம் அதிகமாகிறபோது, இனிய நறுமணம் கமழும் ஏந்திழை எனப் பாராட்டுகிறான்! தன்னைக் கவர்ந்திழுக்கும் மை உண்ட அந்தக் கண், வேல் போன்றது என வியப்புத் தெரிவிக்கிறான்!

அனிச்சமலரைவிட மென்மையானவள் என அவனால் புகழப்பெற்ற அந்தக் காதலி, இப்போது அவன் கற்பனையில், வேல் தாங்கிய விழியினளாகத் தோன்றுகிற விந்தைதான் என்னே?

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு"

மதுவுண்ட வண்டுக்கு மல்லிகைச் சங்கின் முன்பின் தெரியாமற் போனது போலவே, காதல் போதையில் சிக்குண்ட காதலனுக்கும் அனிச்சத்தைவிட மென்மையானவள் என்று சொன்ன காதலியை, வேல் விழிகொண்டவள் எனக் கூறுகிறோமேயென்ற முரண்பாடு தெரியாமற் போய்விட்டது போலும்!

அதிகாரம் - 112 - நலம்புனைந்துரைத்தல்; பாடல்கள் - 1111, 1113

முறி = தளிர்முறுவல் = பற்கள்முத்தம் = முத்து

வெறிநாற்றம் = நன்மணம் வேய் = மூங்கில்





மக்கள் ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்ட ஒருவன், நாடாண்ட மன்னனுக்கு மாசு கற்பித்து, மக்களையும் தன்வயப்படுத்திக் கொண்டு, திடீரெனத் தாக்குதல் நடத்தி நாட்டையும் தன் ஆளுகையின் கீழ்க் கொண்டுவருகிறான். போரில் விழுப்புண் பெற்ற பழைய மன்னன், பகைவனின் காலடியில் வீழ்ந்து விட்ட தனது நாட்டை மீட்டே தீருவேன் எனச் சூளுரைத்து, மலைக்கோட்டை யொன்றில் வாழ்ந்து வருகிறான்.

பகைவனோ, தன் ஆளுகையின்கீழ் வந்த நாட்டு மக்களுக்கு நலம் விளைக்கும் திட்டங்கள் எதுவும் வகுப்பது பற்றி அக்கறை கொள்ளாதது மட்டுமல்ல; நலிவு தரும் செயல்கள் பலவற்றைச் செய்து வருகிறான். பகைவனின் சிந்தனை முழுவதும் பழைய மன்னன் வாழ்ந்துகொண்டிருக்கிற மலைக்கோட்டையையும் கைப்பற்றி, அந்த மன்னனையும் அவனைச் சார்ந்த உறுதிமிக்கப் படை வீரர்களையும் உருத்தெரியாமல் அழித்துவிட வேண்டும் என்பதுதான்.

புதிய மன்னன் ஆட்சி, காட்டாட்சியாக இருப்பதை உணர்ந்து மக்கள் பதைத்தனர். புதியவனின் படைத்தளபதிகள், நாள்தோறும் நாட்டில் நடத்திடும் அட்டூழியங்களுக்கு அளவே இல்லாமற்போயின. அவனை நத்திக்கிடப்போர் சிலர் தவிர, அறிவுத் தெளிவு படைத்தோர் அனைவருமே புதியவனின் போலித்தனத்தைப் புரிந்து கொண்டனர். தெளிவற்ற மக்கள் பகுதியினரையும் தனக்குத் தெண்டனிட்டு வாழ்வோரையும் பயன்படுத்திக் கொண்டு, கருவூலத்து நிதியனைத்தையும் படைக்கலன்களையும் படை வீரர்களையும் பெருக்கிடவே செலவிடத் தொடங்கினான் புதிய மன்னன்.

மலைக்கோட்டையிலிருந்த மன்னனிடம், அவனைச் சுற்றியிருந்த தளபதிகளும் வீரர்களும் முறையிட்டனர். "நமது நாடு காடாகிறதே வேந்தே! நாட்டையும் மக்களையும் காத்திட நமது உயிர் குறித்துக் கவலைப்படாமல், இப்போதே புதிய மன்னனின் கோட்டையின்மீது போர் தொடுத்திடுவோம். ஆணையிடுக!" என்று கூறினர். மன்னன், புன்னகை புரிந்தவாறு அவர்களுக்கு விளக்கமளித்தான்.

"உயிரைப் பற்றிக் கவலைப்படுகிறவனா நான்? என் உயிரோ உங்கள் உயிரோ போர்க்களத்தில் இழக்கப்பட்ட பிறகும்கூட நாட்டுமக்களின் நலிவு தொலைய வில்லையென்றாலோ - அந்த நரிக்குணம் கொண்டவனே தொடர்ந்து நாட்டை நாசமாக்கிக் கொண்டிருப்பான் என்றாலோ - அதனால் என்ன பயன் என்பதைச் சிந்தித்துப் பார்த்திடுங்கள்! என் அன்புக்குரிய வீரர்களே! போர் மீண்டும் மூளத் தான் போகிறது. பகைவனைக் களத்தில் சந்திக்கத்தான் போகிறோம். அதற் கிடையே வள்ளுவர் கூறியுள்ள நான்கு வகை வலிமைகளையும் ஆராய்ந்து, அதன் பிறகே களத்தில் இறங்க வேண்டும்."

ஒரு தளபதி, பணிவாகக் கேட்டான் :

"மன்னவா! குருதி வெள்ளம் திரண்டோடும் களத்தில் வாள் வீசிப் பகைவர் தலைகளைப் பந்தாடிடப் பயின்றவன் நான்! வள்ளுவரைப் பயின்றதில்லை. வலிமை பற்றிய வகை நான்கு வகுத்திருப்பதாகச் சொன்னீர்களே; என்னவென்று அறிந்து கொள்ளலாமா?"

மலைக்கோட்டைவாழ் மன்னன், படைத் தளபதியின் முதுகைத் தட்டிக் கொடுத்து முறுவலித்தவாறு விடையளித்தான்.

"நாம் நடைமுறைப்படுத்த இருக்கும் செயலின் வலிமை எத்தகையது என்பதை ஆராய்ந்து, அந்தச் செயலை வலிமை பொருந்தியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு அடுத்ததாக, அந்தச் செயல் புரியத் தொடங்கும் நமது வலிமையை உணர்ந்து பார்த்து, அது போதுமானதாக இல்லாவிட்டால், மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும். மூன்றாவதாகப் பகைவனுடைய வலிமையைக் குறைத்துக் கணக்கிட்டுவிடக் கூடாது. சூது, சூழ்ச்சி, இவற்றையும்கூட அவன் படைக்கலன் களாகக் கொண்டவன் என்பதை மறந்துவிடக் கூடாது. மக்களின் அறியாமையை ஆயுதமாகக் கொண்டே முதலில் நம்மை வென்றான் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். அவற்றுடன், அவனிடமுள்ள படை வலிமையையும் நாம் சரி யாகக் கணக்கிட வேண்டும். நான்காவது மிக முக்கியம். அவனுக்குத் துணையாக இருக்கும் மன்னர்கள் யார்? நமக்குத் துணையாக இருக்கும் மன்னர்கள் யார்? அந்தத் துணையின் வலிமையை நாம் உணர வேண்டும். ஆம்; வலிமைவாய்ந்த மன்னர்களின் துணை நமக்கு வேண்டும். இந்த நாலு வகை வலிமையையும் ஆராய்ந்து, அதன் பின்னர் எடுக்கும் முடிவுதான் போரில் நமக்கு வெற்றி தரும்! அஞ்சாதீர்கள்! அந்த வெற்றி முகட்டை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம்."

மன்னன் தந்த குறள் விளக்கம், மலைக்கோட்டையில் உள்ள அவனைச் சார்ந்தோர் அனைவரையும் சிந்திக்க வைத்தது; செயல்பட வைத்தது.

செயலில் வலிமை சேர்த்தனர்.

மாற்றான் வலிமையைக் குறைத்திட முனைந்தனர்.

தங்கள் படை வலிமையை வளர்த்தனர்.

வலிமை மிக்க துணைகளைப் பெற்றுக் கொண்டனர்.

போர் மூண்டது! புதிய மன்னன் வீழ்ந்தான்! நல்லாட்சி மீண்டும் தோன்றியது. நாட்டு மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

அதிகாரம் - 48 - வலியறிதல்; பாடல் - 471



நற்குணங்கள் அனைத்தும் கொண்ட பொற்குன்றமாகத் திகழ்பவர்தான் முதியவர் முகிலன்! அவர் அறிவுரைகேட்டு நடந்திட, அந்த ஊரே அவர் இல்லத் தின் முன் நிற்கும். அவருக்கு வாய்த்த துணைவியும் அந்த ஊருக்கே மூதாட்டியாக விளங்குகிற நல்லம்மை! ஊரில் எந்த வீட்டில் நடக்கும் இன்ப நிகழ்ச்சி, துன்ப நிகழ்ச்சியாயினும் முகிலனும் நல்லம்மையும் அங்கு முன்னிலை வகிக்காமல் இருக்கமாட்டார்கள். அந்த நல்லார் இருவருக்கும் பிறந்த செல்வனோ, தாய்தந்தையர் பெருமையைக் குலைத்திடும் தீயோனாகத் திரிந்திடுகின்றான் என்ற பொல்லாத நிலை! பெற்றோர் சூட்டிய நல்லான் என்ற பெயரை அவனே மாற்றி விட்டு, வல்லான் என வைத்துக்கொண்டான். முகிலனும் நல்லம்மையும் தங்களுக்கு வாய்த்த பிள்ளையைத் திருத்திட பெரும் பாடுபட்டு, முடியாத காரணத்தால் அவன் மனம்போல் விட்டுவிட்டனர்.

வல்லானின் வன்முறைச் செயல்கள், ஒழுக்கக்கேடுகள், அந்த ஊரார் அறிந்ததாயினும் அவற்றைப் பெரிதுபடுத்தாது, அவன் தந்தையார் முகிலனிடம் தனித்ததோர் மரியாதை காட்டி வந்தனர்.

ஒரு நாள், தோட்டத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த முகிலனை, பக்கத்து வீட்டுக் காளைமாடு பாய்ந்துவந்து முட்டித் தள்ளியது! விலாப்புறம் குருதி கொட் டியது முகிலனுக்கு! தெருவில் உள்ளோர் அந்த மாட்டைத் தாக்கிடத் தொடங் கினர். அதைத் தடுத்து நிறுத்தி - "வாயற்ற உயிர்! அதையேன் வதைக்கிறீர்கள்?" எனக் கேட்டுத் தனது குண நிறைவைக் காட்டிக் கொண்டவர்தான் அந்தப் பெரியவர்!

இன்னொரு முறை, குறும்புக்காரச் சிறுவர்கள் சிலர் கூடிக்கொண்டு அவர் மீது சேற்றை வாரி வீசிவிட்டனர். அந்தச் சிறுவர்களின் பெற்றோர், செய்தி கேள்வியுற்று அவர்களைத் தங்கள் வீட்டுத் தூண்களில் கட்டிப் போட்டனர். தகவல் அறிந்ததும் அந்தத் தங்கக் குணநலனார், விரைந்தோடிச் சென்று, "அறியாக் குழந்தைகள்

விளையாடினர்! அதற்காக இப்படியொரு தண்டனையா? வேண்டாம்! வேண்டாம்!" எனக் கூறி, சிறுவர்களை அவிழ்த்துவிட்டு அவர்தம் உச்சியிலே முத்தமீந்து, தன்னால் அவர்களுக்குற்ற தொல்லைக்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

"ஊருக்குப் பெரிய மனிதர்! இவர் மகன் மட்டும் ஊதாரியாகத் திரிகிறானே!" இவ்வாறு, அவர்பால் அழுக்காறுகொண்ட இரண்டொருவர் ஊர்ப்பொது மண்டபங்களில் பேசியது அவர் செவிகளில் விழுந்தபோதுகூட, தனது நிலையை நொந்து கொண்டாரே தவிர பேசியவர்கள் மீது கோபங் கொள்ளவில்லை, அந்தக் குணக்குன்று!

ஒரு நாள், இடியென ஒரு செய்தி வந்தது! முகிலனின் முரட்டு மகன் அந்த ஊர்க்கோயில் சிலையொன்றைத் திருடிக் காவலரிடம் சிக்கிக் கொண்டான், என்று!

சினத்தால் முகம் சிவந்தறியாத முகிலனின் முகம், செந்தணல்கூடமாயிற்று! "சிலை திருடியவனைக் கொலை செய்துவிட்டுத் திரும்புகிறேன்'' என்று புலிக்குரல் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார், கையில் கொடுவாளுடன்!

தெருவில் உள்ளோர், "என்னம்மா! பெற்ற மகனைக் கொன்று குவிக்கப் போகிறார்! தடுக்காமல் நிற்கிறீர்களே?" என்று நல்லம்மையைச் சூழ்ந்துகொண்டு கேட்டனர்.

"சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்களே; அதுபோல இன்று நடக்கப் போகிறதே - மகனையும் இழந்து, மணவாளனையும் மரண மேடைக்கு அனுப்பப் போகிறீர்களே" - என்று அனைவரும் துடித்தனர்.

நல்லம்மை, அமைதியாக அவர்களுக்குப் பதில் அளித்தாள்!

"என் கணவர் குணமென்னும் குன்றேறி நிற்பவர்! அவருக்கு ஏற்பட்டுள்ள கோபத்தை அவரால் நீண்டநேரம் நெஞ்சில் வைத்துக்கொள்ள முடியாது! கணநேரம்கூட அந்தக் கோபம் தங்காது! கோபம் குறைந்து மறைந்து இப்போதே திரும்பி விடுவார் பாருங்கள்!"

நல்லம்மையின் இந்தப் பதிலைக் கேட்டு, ஒருவர் சொன்னார் :

"அம்மா! குணக்குன்றுகளான பெரியவர்களின் கோபத்தை, கோபிக்கப் பட்டவர்களால் கணநேரம்கூடத் தாங்கிக் கொள்ள முடியாது என்பார்களே, அப்படித்தானே குறள்கூடக் கூறுகிறது!"

இப்படிக் கேட்டவருக்கு, நல்லம்மை சொன்ன பதில் பின்வருமாறு :

"அப்படியல்ல! பெரியவர்களுக்குரிய குண நலன்களில் ஒன்று; அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிற கோபம் - கணநேரங்கூடத் தங்காமல் மறைந்துவிடும் என்பதுதான்! அதோ பாருங்கள், கொண்ட கோபத்தைக் காத்திட முடியாமல் என் கணவர் திரும்பி வருகிறார்."

முகிலன் திரும்பி வந்துவிட்டார்! "காவலர் கையில் சிக்கிவிட்டான்! நீதிமன்றம் அவனுக்குத் தரவேண்டிய தண்டனையைத் தரட்டுமென்று... நான் திரும்பிவிட்டேன்." எனக் கூறியவாறு, கையிலிருந்த கொடுவாளைக் கீழே வீசி எறிந்தார் முகிலன்.

ஊரார், பெருமூச்சுடன் நிம்மதியாகக் கலைந்து சென்றனர்.

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது"

அதிகாரம் - 3 - நீத்தார் பெருமை; பாடல் - 29



அறம் போற்றிப் புகழ் மணக்க இல்வாழ்வு நடத்திடும், இளமை பொங்கும் இன்பக் காதலர்!

புறப்பாட்டின் திருஉருவாய் மண் காக்கும் மாவீரன்!

மறக்குலத்து ஒளிவிளக்காய் மனைகாத்து, மணாளனையும் வாழ்த்துகின்ற மங்கை நல்லாள்!

போர்ப்பரணி முழக்கிச் சென்று, பகை தொலைத்து, வெற்றி ஆர்ப்பரிப்பு, நகரில் நாதமழையாய்ப் பொழிய - "நெற்றிக் குங்குமம் பிழைத்தது அத்தான்" என்று தோளில் ஓட்டிக் கொண்டவளைலீ தழுவிக் கொண்டான்! அவன் நெஞ்சகத்து விழுப்புண்கள் எல்லாம், மெய்மறந்த அணைப்பினிலே கிடைத்த ஒத்தடத்தால் அணுப்பொழுதில் வலி நீங்கி மறைந்தே போயின!

"போர்க்களத்துப் பணி முடிந்தது! பகை பறந்தது! இனி, போகக் களத்தில் சோகத்தைத் தீர்த்துக் கட்டிக் கனியுண்போம், களைப்புத் தீர! காதல் தேன் உண்போம் களிப்பிலாட! நாம் பிரிந்திருந்த நாளெல்லாம் யுகமாய் நகர்ந்தது; இனி நாளும் காலமும் நமக்கு அடிமை! என்னத்தான் சொல்கின்றீர்?" என அவள் கேட்க, "அதைச் சொல்லத்தான் கற்கண்டே; நானும் நினைத்தேன்!" என்று அணைத்தான் வீரன்!

இன்பத்துச் சிகரத்தில் உடனடியாகப் போய் நின்றால், இரவெல்லாம் விழித்திருந்து - இத்தனை நாள் எண்ணியிருந்த சுவையெல்லாம் பருகிட முடியாதேயென ஏங்கி, அவனைத் தழுவிக் கொண்டே கிடப்பதற்கான தந்திரமாய், அவள் ஊடல் கொண்டு நடித்தாள். ஆனால், அந்தத் தழுவலில் தணலேறிப் பாய்கின்ற உணர்ச்சி, அந்த ஊடலை நீடிக்கவிடாமல் அவளது உள்ளத்தை உடைக்கின்ற படைக்கருவியாகத் தோன்றுகிறதாம்! அடடா! ஊடலை முடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே; அதனால் நெடுநேரம் தொய்வின்றி நுகரவேண்டிய இன்பம் கெடுகின்றதேயென்று அவள் தவிப்பதும் அவனுக்குத் தெரிகிறது!

"புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை"

காதலரைத் தழுவிக் கொண்டேயிருப்பதற்குக் காரணமாக அமையும் ஊடலுக்குள்ளேயே அவளது உள்ளத்தைக் குலைத்திடக்கூடிய படைக்கருவியும் தோன்றிவிடுவதால், ஊடலை நீடிக்க முடியாமல் அவள் துடித்துத் துவளுகிறாள்.

அவனும் அவ்வாறே, அவள் ஊடல் நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறான். இன்ப வானில் ஒரே தாவாகத் தாவிக் களைப்பு மேலிட்டுக் கீழே விழுவதில் பயன் என்ன? அதனால் அவள் ஊடல் புரிய வேண்டும்! அந்த ஒளியிழையாள் மஞ்சத்தின் விளிம்புக்குப் போக வேண்டும்; அவன், அவளைத் தழுவியவாறு புரட்டித் தன்னுடலுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்!

முத்தமாரி! மாறி - மாறி! மீண்டும் தழுவல்! நழுவல்! ஆகா! அவள் ஊடல் புரிந்தவண்ணமிருப்பதிலும் அதைத் தணிக்க அவன் வஞ்சியிடம் கெஞ்சிடுவதிலும் கொஞ்சிடுவதிலும் எத்துணை இன்பம்! அவளுக்கும்தான்! அவனுக்கும்தான்!


ஆனால், அந்த அவசரக்கார இரவு அதற்குள் விடிந்துவிடும் போலிருக்கிறதே! இன்பவல்லியுடன் ஊடல் தீர்த்திட முனைந்தவாறு இதழ்த்தேனும் எல்லையிலாத் தித்திப்பு ஊனும் தரவேண்டுமென வரம் கேட்கும் அவன், இராக்காலத்தை நோக்கியும் ஒரு வரம் கேட்கிறான், கட்டிலறையின் கடுந்தவத்திற்கிடையே!

"என் காதலி இன்னும் ஊடுவாளாக! அந்த ஊடலைத் தணிக்க நான் தழுவல் தவம் புரிந்து இரந்து நிற்குமாறு இந்த இராப்பொழுது இன்னும் நீடிப்பதாக!"

எப்படிப்பட்ட முறையீடு? அவளோ, தனது ஊடலை நீடிக்க முடியாமல் தவிக்கிறாள்! அவனோ, அந்த ஊடல் வளர்ந்தால் அதைத் தணிப்பதில் தனிச்சுவை காணலாமே எனக் கருதி, இரவுப் பொழுதை நோக்கி இறைஞ்சுகிறான்; "பொழுதே! நீ விடியாதே!" என்று!

"ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா"

அதிகாரம் - 133 - ஊடலுவகை; பாடல்கள் - 1324, 1329



தென்பெருங்கோவின் தோற்றம்

"அவன் பெயரே அரிமா! அனல் தெறிக்கும் அவன், போர்க்குரல் கொடுத்தால்! கனல் உமிழ்ந்து களத்திலே பகைப்புலத்தை மிரண்டோடச் செய்யும் அவன் கண்கள்! குறிக்கோள் நிறைவேற, அவன் குருதி கொட்டவும் தயங்காத தீரன்! தலை கொடுத்தேனும் தன் மக்களின் தளையறுக்கத் தயங்காத வீரன்! குன்றனைய அவன் தோள்களின் மீது வலிமை கூத்தாடும்! குத்தீட்டி, கொடுவாள், எது வரினும் தாங்கிக் கொள்ளும் இரும்புக் கவசம் எனலாம் அவன் மார்பை! தன்மான உணர்வென்னும் ஓடங்கள் மிதந்தோடும் அருவியோட்டம், அவனது இரத்த ஓட்டம்!

அவன் இன்று அமைதியாகக் காட்சி தருகின்றான். அவனை வலுவில் போருக்கு இழுக்கின்றனர் எதிரிகள். எனினும் அவன் பொறுமையின் கடல்போலக் காட்சி தருகின்றான். "என்னம்மா நேர்ந்தது அவனுக்கு? சொல்லுங்கள் தாயே!" மீசை துடிக்க - விழிகளில் மின்னல் ஒளி கிளம்ப - வாளுயர்த்தி 'வந்துவிட்டது போர்க்கள விருந்து!' என முரசுபோல் முழக்கிடுவானே; அவன் ஏனம்மா - இன்று இன்னமும் கச்சை கட்டாமல், கவசம் பூணாமல், கட்கம் ஏந்தாமல் - சிந்தனையை எங்கோ செலுத்திக் கொண்டிருக்கிறான்? உங்கள் மகன் குணம் உங்களுக்குத்தானே தெரியும்; அதனால்தான் கேட்கிறேன் - சொல்லுங்கள்!"

"மகன் போன இடம் தெரியவில்லை. ஆனால் அந்தப் போர்ப்புலி வாழ்ந்த குகையிதோ!' என்று தன் வயிற்றைக் காட்டினாள் வீரமகனைப் பெற்ற தாயொருத்தியென்று புறநானூறு பேசுமே; அந்த வழிவந்த தாயல்லவோ நீங்கள், விளக்கம் கூறுங்களம்மா; வீரப்புதல்வன் வெகுண்டெழுந்து வெஞ்சமர் விளைக்கப் புறப்படாத காரணம் என்ன?"

அரிமாவின் அன்னையிடம், பரிதி இந்தக் கேள்விகளைத் திரும்பத் திரும்பக் கேட்டான். முதலில் பதில் சொல்லாமலிருந்த அந்தத் தாய், பரிதியின் பிடிவாதத்திற்குப் பணிந்து புன்னகையை உதட்டில் தேக்கி விடையளித்தாள்:

"பரிதி! அடக்கமற்றோர் ஆணவ மொழி பேசுகின்றனர். அதனைக் கேட்டும் என் மகன் அடங்கிக் கிடக்கிறானேயென்று வியப்படைகிறாய்! அது மட்டுமல்ல; 'போர்! போர்!' எனத் துடிக்கும் அவன் நெஞ்சுறுதியும் - வீரமும் - பகைவர்களால் இழித்துரைக்கப்பட்ட பிறகும் அவன் உறைவிட்டு எழாத வாளாக - நாணேற்றப் படாத அம்பாக - இருக்கின்றானே; என்ன காரணம் என அறிந்துகொள்ளப் பறக்கிறாய்! என் மகன் களம் பல கண்டவன் எனினும் வள்ளுவரின் 'காலம் அறிதல்' எனும் அதிகாரத்தில் உள்ள குறட்பாக்களை வழுவறக் கற்றவன் என்பதை நீ அறியமாட்டாயா?"

"அம்மா! தன் கை வேலை யானைமீது வீசிவிட்டு, பகையைத் தாக்க வேறு வேல் இல்லையே எனத்தேடும்பொழுது, தன் உடலில் தைத்திருந்த ஒரு வேல் கண்டு மகிழ்ந்து அதனை எடுத்துப் போரிட்ட ஆற்றல் மறவனல்லவோ அரிமா! அவனா 'காலமறிதல்' எனும் குறள் படித்துக் காத்துக் கிடக்கிறான்?"

"ஆமாம்! அவன் மறந்துவிட்டாலும் நினைவூட்ட அவனைப் பெற்ற தாய் நானிருக்கிறேனே! எழுச்சிமிகுந்த போர் வீரன் அடங்கியிருப்பதானது, போர் செய்யும் ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்காகத் தன் கால்களைப் பின்னே வாங்குதலைப் போன்றது! எவ்வளவு பின் வாங்குகிறதோ அவ்வளவு வேகமாக முன்நோக்கிப் பாய்ந்து பகையைத் தாக்கும். என் மகன் அந்த ஆட்டுக்கடா போன்றவன். அவன் அடங்கியிருப்பதுபோல் தோற்றமளிப்பதைக் கோழைச் செயல் எனக் கருதிவிடாதே!"

அந்தத் தாயின் விளக்கம் கேட்டுப் பரிதி, பூரித்துப் போனான். "என் ஐயப்பாடு நீங்கிற்று அம்மா!" எனக் கூறி விடை பெற்றுக் கொண்டு பீடுநடை போட்டான்.

"ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து"

அதிகாரம் - 49 - காலம் அறிதல்; பாடல் - 486

ஊக்கம் = மனவெழுச்சி தகர் = ஆடு பேரு = பின்னே கால் வாங்கும்



கோவைக் குறுங்கதைகள்

விழி மின்னல் உயிர் வாங்கும்! மொழிச் சுவையோ மயக்கிப் போடும்; கன்னங்கள் கவர்ந்திழுக்கும்! கழுத்துக்குக் கீழே இன்பமேடு! இழையொன்றே இடையென்றால் எவர் மறுப்பர்! காந்தள் தலைகுனியும் கைவிரல்களின் முன்! காந்தம், உடல் முழுதும்! இத்தரை மீது இப்படியொரு நிறம் பத்தரைமாற்றுப் பசும் பொன்னுக்கே உண்டு! அவள் தோற்றத்தின் எதிர் நிற்க முடியாமல் தோற்றோமென ஓடிடுவர், புராணக் கற்பனையில் ஆடுகின்ற ஊர்வசி, ரம்பை, திலோத்தமை எல்லாம்!

அந்த அழகின் சிகரம், ஒரு நாள் ஓடைக் குளிர்புனலில் குளிக்க வந்தாள். குளித்துக் கொண்டிருந்தாள். அப்போது இடுப்பினிலே குழந்தையொன்றும் தலையினிலே குடமொன்றும் சுமந்தவாறு வேறொருத்தி அந்த ஓடைக்கு வந்தாள். வந்தவள் குழந்தையை இறக்கிக் கரையினில் குந்தவைத்துக் குடத்தைத் தேய்த்து அழுக்கைப் போக்கும் பணியில் ஆழ்ந்தாள்.

அழகிய குழந்தை! அமுதக் கட்டி! ஓடைக் கரையில் உட்கார்ந்து பார்த்தது; என் நினைவோ ஊர்ந்திடத் தொடங்கியது! ஊர்ந்த குழந்தை ஓடைக் கரையைக் கடந்து கீழே ஓடும் புனலை அள்ளிட வந்தது! அது வந்த பக்கம் அழகியின் பக்கம்! குடம்

புதுக்கிக் கொண்டிருந்த தாயார், குழந்தை நீருக்கருகே நெருங்கியதுணர்ந்து அதனிடம் தாவ முயன்றாள்! அதற்குள் அந்த அழகியைப் பார்த்து, "குழந்தையைக் கொஞ்சம் பிடி! பிடி!" எனக் கூவி அலறினாள்! அழகியோ அதனைக் காதில் வாங்கிக் கடுத்த முகத்துடன் கரையினில் ஏறி ஈர உடையைச் சரி செய்துகொள்ள ஓர் ஓரம் போனாள்! தாய் வந்து பிடிப்பதற்குள் குழந்தை தாவிற்று தண்ணீருக்குள்! இருப்பினும் குழந்தையை உடனே தூக்கி, இறப்பின் வாயிலிருந்து மீட்டுக்கொண்டாள்!

உடலெங்கும் நடுநடுங்கக் குழந்தைக்கு முத்தமீந்து "என் உயிரே! நீ பிழைத்தாயா!" என்று தழுவிக் கொண்டாள்!


"அங்கமெல்லாம் அழகிருந்து என்னடி பயன்? அகத்தில் அன்பில்லாதவருக்கு புறத்தழகு என்பது ஒரு போலித்தனம்! அன்பின் அழகு உன் அகத்தில் இல்லை! என்புதோல் போர்த்த உடல் அழகுக்கு என்றுமே மதிப்பில்லை, போ!"

என்று அந்தத் தாய், அந்த அழகு மங்கையைப் பார்த்துச் சினத்தைக் கொட்டி விட்டுப் போனாள்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு"

அதிகாரம் - 8 - அன்புடைமை; பாடல் - 79.





வெண்முகிற் கூட்டத்தைத் தொடும் வண்ணம் உயர்ந்திருக்கும் அந்த மாளிகையின் உச்சி! - அந்த உச்சி முகட்டில் நின்று அவன் கூரிய விழிகளைப் பாய்ச்சிடும் தொலைவுக்குக் காடு கழனிகள் அவனுக்குச் சொந்தமானவை.

ஆண்டுதோறும் அவனுக்குக் கிட்டும் வருமானத்தைத் தங்க நாணயங்களாக மாற்றி - அவற்றை எண்ணிவைக்க இயலாமல் குவியல் குவியலாகக் கருவூல அறையில் கொட்டி வைத்திருந்தான். இப்படியொரு செல்வச் செழிப்பில் மூழ்கிக் கிடந்தவனை நாடே அறியும்.

அவனுக்குப் பெயரும்கூட 'நல் இதயன்' என்றுதான் பெற்றோர் இட்டிருந்தனர்.

இளம் வயதில் அவனுடன் ஆடித் திரிந்த நண்பன் ஒருவனுண்டு.

பெயர் பொற்கோ!

பெயருக்கேற்பப் பொன்பரப்பி அதில் படுத்திருந்த குடும்பத்தினன்தான்; ஆனால், நடத்திய வாணிபத்தில் பேரிழப்பு ஏற்பட்டு பொற்கோவின் குடும்பத்தினர் உள்ளூரில் வாழ்ந்திட நாணமுற்று வெளியூர் சென்று விட்டனர்.

காலம் செல்லச் செல்ல பொற்கோவின் குடும்பத்தை வறுமை கொத்தித் தின்றது. பெற்றோர் மண்ணோடு கலந்தனர்.

தன்னை நம்பி வந்த இல்லத்தரசி நங்கைக்கு மாற்று ஆடை வாங்கித் தரவும் முடியாத நிலையில் கைபிசைந்து கண்ணீர் உகுத்து நின்றான். பொற்கோவின்பால் இரக்கம் கொண்டு மனமுருகியவர்கள், தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தனர். அவர்களும் தொடர்ந்து உதவுகிற அளவுக்கு வளம் படைத்தவர்களல்லர்!

ஒரு நாள் அவர்கள் அவனை அணுகி, "உன் இளமைக்கால நண்பன் நல்லிதயன், அளவிலாச் செல்வத்துடன் வாழ்கிறானே - அவனிடம் சென்று உன் நிலையை விளக்கினால், வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுமே" என எடுத்துக் கூறினர்.

மனைவி நங்கை மறுத்துத் தடுத்தும்கூடக் கேளாமல் பொற்கோ, நல்லிதயனை நாடிப் புறப்பட்டான்.

காலை முதல் மாலை வரை மாளிகையின் வாயிற்புறத்தில் காத்துக் கிடந்தவனுக்குக் கடைசியாக நண்பனைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது.

மாளிகையின் எழில் முற்றத்தில் ஆடிக் கொண்டிருந்த பொன்னூஞ்சல் ஒன்றில் - கோவைக் கனியிதழ்ப் பெண்ணொருத்தியின் மார்பகத்தில் பிடரியழுந்த அவள் மடிமீது சாய்ந்து படுத்திருந்த நல்லிதயன், தன் எதிரே வந்துநின்ற பொற்கோவைக் கேலியாகப் பார்த்தான்.

"வா! பொற்கோ! வா! என்ன இது? திருவோடு வருவாய் என எதிர்பார்த்தேன். நீயோ திருவோடு ஏந்துபவனைப் போல வந்திருக்கிறாய்!"

- என்று குறும்புச் சிரிப்பு அவிழ - அதற்கேற்ப ஆரணங்கின் அரும்புச் சிரிப்பும் தவழ - நல்லிதயன் விடுத்த கேள்வி, சுடுகணையெனப் பொற்கோவின் நெஞ்சைச் சுட்டெரித்தது.

பொற்கோ, தன் பழைய நண்பனைப் பார்த்துச் சினத்துடன் பதில் அளித்தான். அந்தப் பதில் ஒரு குறட்பாவாக இருந்தது.

"நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு"

பொற்கோ இந்தக் குறளைச் சொல்லிவிட்டு, அங்கிருந்து வெளியேறி விட்டான். நல்லிதயனின் மடியில் கிடந்த மாம்பழ அழகி: "அன்பே! அவன் சொல்லிவிட்டுப் போன பாட்டுக்குப் பொருள் என்ன?" எனக் கேட்டுத் தன் கன்னத்தால் அவன் கன்னத்தைத் தேய்த்தாள்.

"பகைமையுணர்வு படர்ந்திருக்கும் நேரத்தில்கூட பிறருடைய இயல்பை அறிந்து நடப்பதே நல்ல பண்பாகும். விளையாட்டு வேடிக்கையாகக்கூட ஒருவனை இகழ்ந்து பேசுதல் துன்பம் தருவதால், அப்படிப் பேசுதல் பண்பாகாது.

இந்தக் குறளைத்தான் சொல்லி என்னை அவன் குட்டிவிட்டுப் போய் விட்டான்" என்று நல்லிதயன் கவலையுடன் முணுமுணுத்தான். முணுமுணுத்த இதழ்களுக்கு முத்தங்களை அதிரசங்களாக அடுக்கி, அவன் நினைப்பை மாற்றித் தன் மடியில் அவனை இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

நொந்து திரும்பிய பொற்கோவின் மனைவி நங்கை, அவன் வாயிலாக நடந்ததை அறிந்து அவனுக்கு ஆறுதல் வழங்கினாள்.

"இத்துணைப் பெருஞ்செல்வம் படைத்த என் பழைய நண்பன் இவ்வாறு நடந்து கொண்டானே என்பதை நினைக்கவே முடியவில்லை என்னால்!"


கண் கலங்கினான் பொற்கோ! நங்கை அவன் விழிநீரைத் துடைத்தவாறு சொன்னாள்:

"அத்தான்! பெருஞ்செல்வம் படைத்திருக்கும் காரணத்தினாலேயே அவன் உயர்ந்தவனாக விளங்க முடியுமா? சுவை பொருந்திய பசுவின் பாலைக் காய்ச்சிக் களிம்பு ஏறிய பாத்திரத்தில் ஊற்றி வைத்தால் அந்தப்பால் எப்படிக் கெட்டு விடுகிறதோ, அதைப் போலத்தான் பண்பு இல்லாதவன் பெற்றுள்ள பெரிய செல்வமும் மதிப்பிழந்து விடுகிறது."

"ஆம் கண்ணே!" என்றான் பொற்கோ! நங்கை சொன்ன கருத்து அமைந்த அந்த அழகிய உவமைக் குறளும் அவன் நினைவுக்கு வந்தது.

"பண்பிலான் பெற்ற பெருங்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று"

அதிகாரம் - 100 - பண்புடைமை; பாடல்கள் - 995, 1000





சேல்கெண்டை அவன் பெயர்! மீனவர் குப்பத்திலேயே குறும்புக்காரன் என்று பெயர் எடுத்த இளைஞன். வாயாடி வம்புக்கிழுப்பது அவன் வேலை என்பதுணர்ந்த மீனவர்கள், அவனைக் கடிந்து கொள்வதேயில்லை. சிறுசிறு வேலைகளை அயராமல் செய்வான். கரையில் மோதும் அலைகளைப்போல் சேல்கெண்டையும் ஓய்வறியாது அந்தக் குப்பத்தில் வீட்டுக்குவீடு சுற்றிக் கொண்டிருப்பான். எல்லா வீடுகளுக்கும் அவன் ஒரு செல்லப்பிள்ளை. பாட்டிகள் மத்தியிலும் அவன் பாட்டொலி கேட்கும்! பருவக்கிளிகள் மத்தியிலும் அந்தச் சின்னப்பிள்ளையின் சேட்டைகள் நடக்கும்! யாரும் அவனிடம் குற்றம் குறை கண்டதுமில்லை! அவனும் அப்படிப்பட்ட குணம் கொண்டவனுமல்ல.

ஒருநாள், கட்டுமரங்கள் மீன் பிடிக்கக் கடல் நோக்கிக் கிளம்பின. சேல்கெண்டையும் ஒரு மரத்தில் தொத்திக் கொண்டான். "நீ குப்பத்தில் அலைந்து கொண்டிருந்தால் எங்களுக்கெல்லாம் ஒரு துணை; நீயும் ஏனடா போகிறாய்?" என்று கயல்விழி எனும் கட்டழகுப் பெண் - தடுத்துப் பார்த்தாள்; அவன் கேட்கவில்லை! கயல்விழிக்கு மணமாகித் திங்கள்கள் நாலைந்துதான் கழிந்திருந்தன! அவள் கணவன் கடல் மீது சென்று, அன்று காலைதான் திரும்பியிருந்தான். அந்த மகிழ்ச்சியில் பூத்து நிற்கும் கயலின் பேச்சு, சேலின் செவிகளில் ஏறவில்லை!

அன்றிரவு பெரும் புயற்காற்று - கடற்கொந்தளிப்பு - ஊரெல்லாம் வெள்ளக்காடு! கடலில் சென்ற கட்டுமரங்களை ஐந்து நாட்களாகக் காணவில்லை! பதறிப்போயினர் குப்பத்து மக்கள் - அலறித் துடித்தனர் ஆண்களும் பெண்களும்! "இப்படியும் ஒரு பிழைப்பா, இறைவா! எங்களுக்கெனத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தாய்" என்று கண்ணீர் வடித்துக் கடலை வென்றனர்.

ஐந்து நாட்கள் கழித்த பின்னர், ஊண், உறக்கம் எதுவுமின்றி ஓட்டிய எலும்புக் கூடுகளை மரத்தில் கட்டியது போல கடலில் சென்றவர் திரும்பினர்! குப்பத்தில் கொண்டாட்டம்! வயிறு குளிர்ந்தது. வாழ்த்தித் தழுவி, அவரவர் வீட்டு ஆண்களை அழைத்துச் சென்றனர்.

சேல்கெண்டை மட்டும் தனியாய் நின்றான். கயல்விழி, ஓடி அவனைக் கண்டுபிடித்து "வாடா தம்பீ! என் வீட்டில் சாப்பிடலாம்!" என்றாள்.

"அக்கா! ஐந்து நாள் பசி எனக்கு! கொண்டுவா சோற்றை! ஐந்து நாள் பசிக்கும் இன்று ஒரு நாள் தின்று தீர்த்துக் கொள்கிறேன்" என்றான்.

"அது எப்படியடா முடியும்? பசியின் பரபரப்பில் சோற்றை அள்ளி அள்ளி விழுங்குவாய்! அவசரமாய் விழுங்குவாய்! இருந்தாலும் ஐந்து நாள் சோறு ஒரு நாளில் உண்டிட இயலுமோ? ஏதோ உன் பசியின் துடிப்பைத்தான் காட்டுகிறாய்" எனக் கேலி செய்தாள் கயல்விழி!

சேல்கெண்டை, குறும்பனாயிற்றே; சும்மா இருப்பானோ?

"அக்கா! நீ மட்டும் உன் கணவன் உன்னைப் பிரிந்து இரண்டு நாள் கடலில் சென்றிருந்தபோது, அடுத்த வீட்டு உன் தோழி அயிரையிடம் என்ன சொன்னாய்?" என்று கேட்டான்.

"என்னடா சொன்னேன்?"

"நான் ஒளிந்திருந்து கேட்டுக் கொண்டுதானிருந்தேன்!"

"என்னடா கேட்டாய்? சொல்லடா!"

" 'என்னைப் பிரிந்து சென்றுள்ள என் கணவன் என்னிடம் வருவார்! வந்தவுடன் என்னுடைய துன்ப நோய் முழுவதும் தீருமாறு நான் அவரோடு கூடி நுகர்வேன்' என்று சொன்னாயா; இல்லையா? அதைப்போலத்தான் நானும் ஐந்து நாள் பசியை ஒரு நாளில் தீர்த்துக் கொள்கிறேன் என்கிறேன்!"

இதை அவன் சொன்னதும், கயல்விழி மௌனமானாள்! அவன் சிறிய கன்னத்தை மட்டும் மெல்லக் கிள்ளிவிட்டாள்!

"சரி! சரி! வா சாப்பிடலாம்" என்றழைத்துக் கொண்டு அவள் வீட்டுக்குப் போனாள். அவள் முகத்தில் மட்டும் நாணம், ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

"வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட"

அதிகாரம் - 127 - அவர்வயின் விதும்பல்; பாடல் - 1266

கொண்கன் = கணவன் பைதல் = துன்பம் பருகுவன் = நுகர்வேன்



“ஆகா! விடக்கூடாது அவனை! என் தோள்கள் துடிக்கின்றன! வாள் புறப்பட்டுவிட்டது உறை நீங்கி! கீழ் மக்களின் வழக்கிலுமில்லாத இழிமொழிகளையன்றோ என்னை நோக்கி வீசியிருக்கிறான்! மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த தமிழ் மரபு என்மரபு என்பதை மெய்ப்பிக்க இப்போதே சென்று அவனுக்குப் பாடம் புகட்டுகிறேன். அவனிடம் பெரும் படையிருக்கலாம். ஒப்பிட்டுப் பார்க்கும்போது அளவிலே சிறியதுதான் என் படை. எனினும் வலுவிலே பெரியது! நெஞ்சுறுதிகொண்ட வீரர்கள்; உயிரைத் துச்சமெனக் கருதும் தீரர்கள் - என் பின்னே அணிவகுத்து நிற்கின்றனர். என்னை யிகழ்ந்தவனைச் சுற்றியிருப்பதோ வெறும் சோற்றுப் பட்டாளம் - எனவே அமைச்சர் பெருமகனாரே! என்னைத் தடுக்காதீர்கள்! உங்கள் கருத்தினை ஏற்றுக் கொள்ளும் நிலையில் நானில்லை. அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்.”

வயது முதிர்ந்து, நரை திரை விழுந்த நிலையில் அமர்ந்திருந்த மூத்த அமைச்சரின் முன்னால் அந்த நாட்டுக்குரிய இளம் மன்னன், கண்களில் கனல் கிளம்ப வாதிட்டுக் கொண்டிருந்தான்.

பெரிய மன்னர் மறைந்து - அப்போதுதான் முடிசூட்டிக் கொண்டிருந்த வயதில் இளைய - ஆனால் வலிமையில் சிறந்த - அந்த வீரநெஞ்சனை இகழ்ந்துரைத்தான் அயல்நாட்டு அரசன் என்ற காரணம் பற்றியே போருக்குப் புறப்பட வேண்டுமெனத் துடித்தான் அவன்.

அமைச்சரோ முதுபெருங்கிழவர்! அவன் தந்தையின் காலந்தொட்டு அப்பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர்! எனவே அவரது அனுபவ அறிவு இளைய மன்னனின் துடிப்புணர்வுக்கு அணையாக எழுந்து நின்றது. அயல்நாட்டு அரசனை எதிர்த்து ஆணவத்தை அடக்க வேண்டுமென்பதில் அவருக்கு ஆர்வமில்லாமல் இல்லை.

இருந்தாலும் படைகொண்டு மோதினால் பகைவனின் தலைகொண்டு திரும்ப வேண்டுமே தவிர - தோல்வியெனும் நிலைகண்டு கலங்கிடலாகாது என்பது அவர் போட்ட கணக்கு!

இளமன்னனோ இப்போதே புறப்பட்டாக வேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்றான். அமைச்சர், அவனிடம் கனிவாகச் சொன்னார்:

"இளவலே! உன் வீரத்தையோ வைரம் பாய்ந்த உள்ளத்தையோ நான் சந்தேகிக்கவில்லை. நம்மை இகழ்ந்த பகைவனுடன் மோதியே தீர வேண்டும். அவன் மகுடம் கழற்றப்பட வேண்டும். இதில் எனக்குக் கருத்து வேறுபாடில்லை. இருந்தபோதிலும் இளைய மன்னா! என்னுடன் சிறிது நேரம் வருக! அரண்மனைக்கு அப்பால் சென்று உலவிவிட்டு வருவோம். அதன்பிறகு முடிவினைச் செய்வோம்."

இளவேந்தனும் முதுபெரும் அமைச்சரும் அவ்வாறே உலவிடச் சென்றனர். சலசலவென ஓடிக்கொண்டிருக்கும் வாய்க்காலின் பக்கம் நடந்து கொண்டிருந்தனர். அமைச்சர் என்ன சொல்லப் போகிறார் என்று அவர் உதடுகளின் அசைவையே எதிர்பார்த்துக் கொண்டு அந்த இளம் மன்னன் அவருடன் நடந்து கொண்டிருந்தான். திடீரென அமைச்சர் நின்றார். மன்னனும் நின்றான். "அதோ!" என்று விரல் நீட்டிக் காட்டினார். ஆம்! வாய்க்கால் ஓரம் கொக்கு ஒன்று ஒற்றைக்காலில் நின்று கொண்டிருந்தது.

"என்ன அமைச்சரய்யா! எனக்கு விளையாட்டுக் காட்டுகிறீர்களா? குழந்தாய்! குழந்தாய்! கொக்கு பார் என்று?"

சிரித்துக் கொண்டே மன்னன் கேட்டான்.

அமைச்சரும் பொக்கைவாய்ப் புன்னகையை அவிழவிட்டு - "ஒலியெழுப்பாமல் அந்தக் கொக்கின் செயலையே உற்று நோக்கிடுக!" என்றார். இருவரும் அதனைப் பார்த்தவண்ணம் ஒதுங்கி நின்றனர்.

கொக்கு வாய்க்கால் நீர்மீது தன் கூரிய விழிகளை செலுத்திக் கொண்டிருந்தது. நீரில் நீந்தியவாறு ஒரு மீன் வராதா என்பதற்காகத்தான்! நீண்ட நேரம் காத்திருந்த கொக்கு, திடீரென நீர் மீது தன் நீண்ட அலகால் குத்தியது! ஒரு சிறிய கெண்டை மீன் சிக்கியது! கொக்கு அதை விழுங்கியவாறு கம்பீரமாக நிமிர்ந்து நின்றது.

"கோமகனே! கொக்கின் திறம் புரிந்ததா? கூம்பும் பருவத்தில் - அதாவது காலம் கனியாத கட்டம் வரையில் அது காத்துக் கிடக்கிறது. ஆனால் சீர்த்த இடத்து - அதாவது காலம் சரியாக வாய்க்கிற சமயத்தில் குறி தவறாமல் குத்தித் தன் காரி யத்தை முடித்துக் கொள்கிறது. இதைத்தான் மன்னா! வள்ளுவர் அழகுறச் சொல்கிறார்."

அமைச்சர் அந்தக் குறட்பாவை விளக்கினார்.

கூம்பும் பருவத்தில் கொக்குபோல் காத்திருந்து பொறுமை கடைப்பிடிக்க வேண்டும். வாய்ப்பு ஏற்படும்போது அதன் குத்துபோலத் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

முதுபெரும் அமைச்சரின் கருத்துக்கு அந்த இளைய மன்னன் இணக்கம் தெரிவித்து, அவர் கைகளைப் பற்றிக் கண்களில் ஒத்திக் கொண்டான்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து"

அதிகாரம் - 49 - காலம் அறிதல்; பாடல் - 490



ஒரு துளி தேன்; இருவர் இதழ்களிலும்! ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டது! இதழில்பட்ட தேனை, நாவில் சுவைத்து இன்பமுறக்கூட நேரமில்லை; அதற்குள் அந்த முரட்டுக் குரல் தோட்டத்துப் பக்கம் கேட்டது - "அடியே அழகம்மை! அங்கே என்னடி செய்கிறாய்?" என்று! அந்தக் குரலுக்குச் சொந்தக்காரி அழகம்மையின் தாயார்தான்! பெண்ணைப் பேழையில் வைத்துப் பூட்டிப் பாதுகாக்காத ஒன்றுதான் பாக்கி! பிணைத்த இதயங்களுடன் அணைத்துக் கிடந்த அழகம்மையும் அன்புமதியும் அதிர்ச்சியுடன் பிரிந்தனர். "ஊருக்குக் கிளம்பத் தெருவிலே வண்டி கட்டித் தயாராக நிற்கிறது, அப்பா காத்துக் கொண்டு நிற்கிறார். நான் உன்னைத் தேடி அலைகிறேன். வாடி இங்கே!" அவளைப் பரபரவென்று இழுத்துச் சென்று வண்டியில் ஏற்றி உட்காரவைத்தாள் அந்தத் தாய்!

அன்புமதியோ, அவன் வீட்டுத் திண்ணையிலிருந்தவாறு அழகம்மையை ஏற்றிக் கொண்டு அசைகின்ற அந்த வண்டியைப் பார்த்துக்கொண்டே நின்றான்.

அவள், வெளியூரில் வாழ்கிறாள். அடிக்கடி உறவினர் வீட்டுக்கு வருவாள் பெற்றோருடன். அப்போதுதான் அடுத்த வீட்டு அன்புமதியின் இதயத்தில் குடியேறிக் கொண்டு அவனையும் தன் இதயச் சிம்மாசனத்தில் கொலுவிருக்கச் செய்தாள். திருமணத்திற்கெல்லாம் திட்டம் போட்டுத்தான் வைத்திருக்கின்றனர் இருவரும்! அதற்கிடையே திங்களுக்கொருமுறையோ இருமுறையோ சந்திக்கும் வாய்ப்புக்


கிட்டும்போது, ஒருவரையொருவர் அள்ளிப் பருகிட - அமுதம் சுவைத்திட - அகிலத்தை மறந்திட - துடித்தனர்! ஆனால், அந்த ஒவ்வொரு சந்திப்பின் போதும் "அடியே! அழகம்மை!" என்ற அந்தக் கடுமையான குரல் தடுப்புச் சுவராக எழுந்து நிற்கத் தவறவில்லை.

ஆனாலும் அவர்கள் பிரிய முடியாத பிரிவிற்கு உடன்பட்டு - அதனால் ஏற்படும் துன்பத்தினால் கலங்குவதையும் விட்டு - பிரிந்த பிறகும் பொறுத்திருந்து உயிரோடு வாழ்கிறவர்கள் உலகில் பலர் இருக்கிறார்கள் அல்லவா; அவர்களைப் போலவே உயிர் வாழ்ந்து என்றோ ஒருநாள் ஒன்று சேர்வோம் என்ற உறுதியோடிருந்தனர். பிரிவைத் தாங்கிக் கொள்கிற கடின இதயம் படைத்த பலரும் இருக்கிறார்களே; அந்தப் பட்டியலில் தங்களையும் இணைத்துக் கொண்டு, தங்களையே கடிந்து கொண்டனர், அந்தக் காதலர்கள்!

அந்த உள்ளங்களின் வேதனை ஒலியைத்தான் இதோ - இந்தக் குறள் விளக்குகிறது.

"அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்"

அதிகாரம் - 116 - பிரிவாற்றாமை; பாடல் - 1160





நாள் தவறினாலும் தவறும்; நாகன் - நல்லானைச் சந்திப்பது தவறாது; நல்லான் அந்த ஊரில் உள்ள பெருநிலக் கிழார்களில் ஒருவன். கண்ணுக்கெட்டிய தூரம் அவனுக்குக் கழனிகள் உண்டு. ஆற்றுப்பாசனம் - அதுவும் ஆற்றுப் படுகையை ஒட்டிய வளம் பொருந்திய பூமி! முப்போகம் விளையக்கூடிய செழிப்பான நிலம்! அவன் வீட்டுக் களஞ்சியத்தில், மாணிக்க நெல்மணிகள் நிறைந்திராத நேரமே இருந்ததில்லை.

நாகன், அவனுக்கு நண்பன். அவனைத் தன் உயிரினும் மேலாக நேசித்தான் நல்லான். எளிதில் யாரையும் நம்பி, அவர்பால் அளவற்ற அன்பும் நட்பும் கொண்டு அவர்கட்குத் தேவையான உதவிகளைச் செய்வது நல்லானின் இயல்பு!

அவனிடம் மிக நெருங்கிப் பழகிய நாகன், நல்லானின் இதயத்தில் சிறந்ததோர் இடத்தைப் பிடித்திருந்தான். நாகன் தங்கைக்குத் திருமணம், அந்த விழா இனிது நிறைவேற தேவைப்பட்ட பணமும் பொருளும் கொடுத்து நாகனுக்கு, நல்லான் உதவினான்.

கிழமைதோறும் நாகன் வீட்டுக்கு நல்லான் மாளிகையிலிருந்து தும்பைப்பூ போன்ற அரிசி, அவன் வீட்டுத் தேவைக்கேற்ப அனுப்பப்பட்டுக் கொண்டே யிருக்கும். குடிசை வீட்டில் வாழ்ந்த நாகனுக்கு, அழகிய கல்வீடு ஒன்று கட்டிப் பரிசாக வழங்கியிருந்தான் நல்லான்.

நாகன், நல்லானைச் சந்திக்கும்போதெல்லாம் அவன் செய்யும் உதவிகளுக்கு நன்றி கூறிக்கொண்டேயிருப்பான். நல்லானின் அறிவாற்றல் - செயலாற்றல் - இனிய குணம் - நல்ல பண்பு - நட்புக்கு இலக்கணமாகத் திகழும் தன்மை இவற்றையெல்லாம் நாகன் பாராட்டிக்கொண்டேயிருப்பான். நல்லானுக்கே சலித்துப்போகிற அளவுக்கு நாகன் அவனைப் புகழ்ந்துரைப்பான்.

"போதுமப்பா! போதும்! என் நண்பனுக்குச் செய்ய வேண்டிய கடமையை நான் செய்கிறேன். அதற்குக் கைமாறாக நீ என்னைப் பாராட்டத் தேவையே இல்லை. எந்த நிலையிலும் நமது நட்பு அழியாமல் நீடித்தால், அது ஒன்றே எனக்கு மனத்தெம்பினை அளிக்கும். மகிழ்ச்சியைத் தரும்" என்று கண்களில் நீர்துளிர்க்க நல்லான், நாகனிடம் கூறுவான்.

திடீரென ஓராண்டு கடும் புயல் - மழை - ஊரெங்கும் வெள்ளம்! தொடர்ந்து பத்துப் பதினைந்து நாட்கள் பெய்த மழையாலும் - அடித்த புயலாலும் ஆறு திசைமாறியது. ஆற்றின் கரைகள் இருந்த இடம் தெரியவில்லை. அதன் விளைவு, ஆற்றுப் படுகையையொட்டிய நல்லானின் கழனிகள் அனைத்தும் மண்மூடிப் போய்விட்டன. அந்த ஊரில் எந்த நிலக்கிழாருக்கும் ஏற்படாத இழப்பு நல்லானுக்கு ஏற்பட்டுவிட்டது.

மழையும் புயலும் ஓய்ந்தபிறகு, நல்லான் தன் நிலங்களைக் காணச் சென்றான். மண்மேடுகள்தான் தென்பட்டன.

குவிந்து கிடக்கும் மண்ணையும் மணலையும் அகற்றி, அமிழ்ந்து கிடக்கும் வயல்களைச் சீர்படுத்துவதற்கு ஓராண்டுக் காலமாகும். நல்லான் மனமொடிந்து போனான். எனினும், மீண்டும் அந்த வளமிகு பூமியைச் செம்மைப்படுத்த முடியுமென்று உறுதியாக நம்பினான்.

தன் துயரத்தை நாகனுடன் பங்கிட்டுக் கொள்ளத் துடித்தான். நாலைந்து நாட்களாகவே நாகன், அவன் வீட்டுக்கு வரவில்லை. வெள்ளத்தில் ஏதாவது நாகனுக்கு விபத்து ஏற்பட்டு விட்டதோ என்ற கவலையில் அவனை அழைத்து வர நல்லான், ஆளை அனுப்பினான். அனுப்பப்பட்ட ஆளிடம் நாகன், "நாளை வருகிறேன்" என்று சொல்லியனுப்பினான். இதே பதில்தான் நாகனிடமிருந்து ஒவ்வொரு நாளும் வந்து கொண்டிருந்தது.

பிறகு நல்லான் கேள்விப்பட்டான்; நாகன் இப்போதெல்லாம் அந்த ஊரின் மற்றொரு நிலக்கிழார் வல்லான் என்பாரின் வீட்டிலேயே இருக்கின்றான் என்று!

வல்லானின் நிலங்கள் மேட்டுப்பாங்கான இடத்தில் இருந்ததால் அதிகம் பாதிக்கப்படவில்லை. நல்லானுக்கு ஏற்பட்டது போன்ற பேரிழப்பு ஏற்படவுமில்லை. நாகன், வல்லானைப் புகழவும் வாழ்த்தவும் தன் நாக்கை வளைத்துக் கொள்வது அவனுக்கு எளிதாகவே இருந்தது.

நல்லான், தன் நிலம் மண்மேடிட்டது குறித்துக் கவலைப்பட்டதைவிட, நாகனின் நட்பு எத்தகையது என்பதை எண்ணித்தான் அதிகமாகக் கவலைப்பட்டான்.

"தமக்குப் பயன் உள்ளபோது நட்புகொண்டு நெருங்கியிருந்துவிட்டு, பயன் இல்லாதபோது நீங்கிவிடுகிறவர்களின் தகுதியற்ற நட்பைப்பெற்றால் என்ன? அல்லது இழந்தால்தான் என்ன?"

என்ற குறள்மொழியை நல்லானின் நெஞ்சம் குமுறலாக வெளிப்படுத்தியது.

"உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பில்லா கேண்மை
பெறினும் இழப்பினும் என்"

அதிகாரம் - 82 - தீ நட்பு; பாடல் 812

உறின்=பயனுள்ளபோது அறின்=பயனில்லாதபோது ஒரூஉம் = நீங்கிடும்



'குற்றம் புரிந்தனையா இல்லையா?' என்று கொலுமண்டபத்தில் அந்தக் குரல் ஓங்கி ஒலித்தது! அமைச்சர்கள், தளநாயகர்கள், வேலேந்திய வீரர்கள், அனைவரும் புடைசூழ இருந்த அவைக்களத்தில் அவன் வீர முழக்கமிட்டான். கொற்றக்குடை நிழலில் வீற்றிருந்த மன்னனோ, தன் உடைவாளை உருவியவாறு எழுந்தான்! அப்போது அரண்மனைக்கு வெளியே பெரு முழக்கம்! ஆம்; கொலு மண்டபத்தில் குரலெழுப்பியவனுக்கு ஆதரவாக - அரசனுக்கு எதிராக - எழுந்த முழக்கம்! வாளை உருவிய வேந்தன், அசையாமல் நின்றான். மண்டபம் முழுவதும் ஒரே அமைதி.

"மக்களுக்கெனச் சேமித்து வைக்கப்பட்ட உணவு தானியக் களஞ்சியத்தை யாரோ கொள்ளையடித்துச் சூறையாடிக் கொண்டு ஓடிவிட்டார்கள் என்பது சூது! சூழ்ச்சி! மன்னவா! நீயே அந்தக் கொள்ளைக் கூட்டத்துடன் உறவுகொண்டு களஞ்சியத்துத் தானியங்களையெல்லாம் இந்தப் பஞ்சகாலத்தில் பக்கத்து நாட்டுக்குக் கொண்டுபோய் விற்றுவிட்டு, சொந்த நாட்டுக்காரர்களைப் பட்டினி போட்டுக் கொல்லுகிறாய்! உன் கருவூலம் தங்கப்பாளங்களால் நிரம்பிவிட்டது - ஆனால், நாட்டில் மக்கள் நாள்தோறும் ஆயிரக்கணக்கில் சாகிறார்கள்! இப்போது சொல்! நீ குற்றவாளியா? இல்லையா?"

மன்னன் இடியொலியெனப் பதில் அளித்தான் : "இல்லை! இல்லை! நான் குற்றவாளி இல்லை!" என்று! அத்துடன் நிறுத்தவில்லை -

"தளபதிகாள்! இந்தத் தலைக்கனம் கொண்டவனைச் சிறையில் அடைப்பீர்! வீரர்காள்! குதிரைப்படை புறப்படட்டும். அதன் குளம்புகளில் கோட்டைக்கு வெளியே கூடியிருக்கும் கும்பல் நசுங்கிப் பிதுங்கி நாசமாகட்டும்! உம்! என் ஆணையை உடனே நிறைவேற்றிடுக."

என்று கர்ச்சனை செய்தான்!

குற்றம் சாட்டியவனைத் தளபதிகள் சிறைப் பிடித்தனர்! குதிரைகளில் வீரர்கள் - கோட்டைக்கு வெளியே குருதி வெள்ளம் - மக்கள் ஆயிரக்கணக்கில் மாண்டொழிந்தனர்.

அவையிலிருந்தோரைப் பார்த்து மன்னன் கேட்டான்: "மாசற்ற என்னைப் பார்த்தா களங்கம் கற்பித்தான் கயவன்! நீங்கள் நம்புகிறீர்களா?" என்று!

"நாடாளும் நாயகனே! நாங்கள் நம்பவில்லை" என்றனர், அவையில் இருந்தோர்.

அவை கலைந்தது! மன்னன் அந்தப்புரம் வந்தான் - தங்கப்பாளங்கள் நிரம்பியிருந்த இரும்புப்பேழை அவனை எதிர்கொண்டு அழைத்தது! அருகே சென்றான். தனது நாட்டு மக்களைப் பட்டினி போட்டுக் கொன்று, அவன் திரட்டிய செல்வம் அது! அவற்றைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

அவன் நெஞ்சில் பலமான ஓர் அடி! அய்யோ என அலறினான்! எதிரே அந்த மன்னனைப் போலவே ஓர் உருவம்! கலகலவெனச் சிரித்தது! அந்தச் சிரிப்பு பயங்கரமாக இருந்தது! உருவம் பேசியது :

"தெரியவில்லையா என்னை? நான்தான் உன் மனச்சாட்சி! நீ வெளித்தோற்றத் திற்கு நீதிமான் - நேர்மையாளன் - மாசற்றவன் - இப்படிச் சொல்லி நீ உலகை ஏமாற்றலாம் - ஆனால், உன் மாசு நிறைந்த செயல்களை என்னிடம் மறைக்க முடியுமா?"

இந்தக் கேள்வி, மன்னன் தலையில் சம்மட்டி அடியாக விழுந்தது. அடி தாங்க முடியாமல் அவன் இரும்புப் பேழைமீது சாய்ந்து, கீழே மயங்கி விழுந்தான். மனச்சாட்சி, மீண்டும் உரக்கச் சிரித்தவாறு அந்த இடத்தைவிட்டு மறைந்தது!


"மனத்தூய்மை இல்லாதவன், ஆரவாரங்களால் தன்னை மாசற்றவன் என்று மெய்ப்பித்துவிட முடியாது! அவன், தன்னுடைய மனத்திற்குக் குற்றமற்றவனாகத் திகழ்ந்தால் அதுதான் அறமாகும்."

அதற்கு இது குறள் :

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற"

அதிகாரம் - 4 - அறன்வலியுறுத்தல்; பாடல் - 34

ஆகுல நீர = ஆரவாரத் தன்மை



நிலைக் கண்ணாடிக்கு முன் நின்றுகொண்டிருந்தாள், அவள்! நேர்வகிடு எடுத்துச் சீவியிருந்த தலையோ - நெற்றியில் ஒளிவிட்ட குங்குமமோ - குறையொன்றிலாக் குளிர் நிலவின் முகமோ - செம்பருத்திப் பூவின் நிறங்காட்டும் இதழோ - செம்மாதுளைக் கனியிரண்டின் அழகோ - அந்தக் கண்ணாடியில் அவள் கண்களுக்குத் தெரியவில்லை! அதில் அவளுக்குத் தெரிந்ததெல்லாம் அவள் கண்கள் மட்டுமே! அந்தக் கண்களின் இமைகளில் முட்டிநின்றன நீர்த்துளிகள்! "அழுகிறாயா?" என்று கேட்டு மெல்ல நகைத்தாள்! அந்தச் சிரிப்பில் வேதனையும் சினமும் மாறி மாறித் தலைதூக்கி நின்றன!

விழிகளையே நோக்கிக் கொண்டிருந்த விழிகளில் நுழைந்து, அவள் நினைவை அசைத்தது ஒரு நிகழ்ச்சி! ஆம்; கடந்தகால நிகழ்ச்சி!

காளையை அடக்கிட வந்தனர் சில காளையர்! அவர்தம் கட்டுடலைக் கண்டு மயங்கினர், மொட்டுடல் மங்கையர் சிலர்! அன்று வென்றவர்களில் அவள் அத்தானும் ஒருவன்! நெஞ்சுப் பகுதியில் காளையின் கொம்புக் கீறலுடன் வஞ்சியை நோக்கி வந்தான்! அப்போது அவள் விழிகள், அவனுக்கு ஆலவட்டம் சுழற்றின! மாட்டுக் கொம்பின் காயம் வலிக்குதோ என்று விழிகள் கேட்டன! மான் கொம்பின் ஒத்தடம் குணப்படுத்துமென்று அவன் விழிகள் விடையளித்தன. அதன்பிறகு நடந்தவைகளும் அவள் கண்முன் தெரிந்தன! ஆனால், நீள்விழிகளில் நீர்த்திரை விழுந்து, அந்த உச்சக்காட்சியை உடனே மறைத்துக் கொண்டது.

தோற்ற காளையைத் தொட்டுத் தட்டி, வெற்றி மாலைகளைத் தோளில் பெற்று, அன்று அவன் தொலைவில் வரும்போதே, இமைக்கதவை உடைத்துக் கொண்டு, புருவ வாயிலில்கூட காத்திராமல் பறந்து சென்று, அவன் பரந்த மார்பில் தொத்திக்கொண்ட இந்தக் கண்களுக்குத்தான் அப்போது மட்டும் என்ன அவசரம்!

இன்று அவன், பொழுதெல்லாம் தழுவிக் கிடக்காமல், "போய் வருகிறேன் விரைவில்!" என்று சொல்லிப் போய்விட்டானாம்; அதனால் இப்போது எவ்வளவு ஆத்திரம்!

"நன்றாக அழு கண்ணே; அழு! நீ அழுவது எனக்குக் கேலிக் கூத்தாகத்தான் இருக்கிறது! அன்றைக்கு அப்படி விரைந்தோடி அவரை நோக்கி; என்னை அவருடையவளாக்கினாயே; இன்று அவரைப் பிரிந்து நீ அழுவது வேடிக்கைதான்!"

இப்படித் தன் கண்களைப் பார்த்துக் கேலி செய்கிறாள், கண்ணாடிக்கு முன் நிற்கும் கண்ணாட்டி, கண்ணீர் பெருக்கியபடி!

அதை விளக்குவதே இதோ, இந்தக் குறள் :

"கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து"

அதிகாரம் - 118 - கண்விதுப்பழிதல்; பாடல் - 1173

கதுமென = விரைவாக

கலுழும் = அழும்





கனிவுடைமை

"அழகு மிளிர் குழந்தைகள் இரண்டை அளவோடு பெற்றிருக்கிறீர்; குவிந்து மேடிட்டுக் கிடக்கிறது செல்வம், எனச் சொல்ல முடியாவிட்டாலும் குறைவின்றி வளங்கொண்டு வாழ்கின்றீர்! கண்ணுக்கு எட்டிய வரையில் உள்ள கழனிகளுக்குச் சொந்தக்காரர் என்ற நிலையில்லாவிடினும் வந்த விருந்தோம்பி, வாழ்வில் இனிமை கண்டு திகழத்தக்க நிலையில், போற்றுதற்குரிய குடும்பத்தின் சொந்தக்காரராக இருக்கின்றீர்! வாய்த்துள்ள மனையாட்டியோ வாய்நீளம் காட்டுகின்ற மங்கையரின் வரிசையில் இடம் பெறாது, இல்லத்துக்கேற்ற எழில் விளக்காக உமக்கு அமைந்துள்ள பாங்கினையும் காண்கின்றேன். இத்துணை இருந்தும் உமது முகத்தில் சோகத்தின் சாயல் படர்ந்து கிடப்பானேன்?

"சென்ற தடவை உம்மைச் சந்தித்தபோது சிரித்துச் செழித்த முகத்துடன் காணப்பட்டீர்! இப்போது இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன? இனிய குடும்பம்! இன்ப வாழ்வு! இதற்கிடையே உம் உள்ளத்திற்கு வந்துள்ள இடர்தான் என்னே?

இப்படிக் கேட்டுக் கொண்டேயிருந்தார், வெளிநாட்டில் சில ஆண்டுகளைக் கழித்துவிட்டுத் தாய்நாட்டுக்குத் திரும்பிய தணிகைமலை!

தணிகைமலை, தனது ஆருயிர் தோழராகக் கொண்டது அருளப்பரை! அந்த அருளப்பர், கடந்த தடவை அகமும் முகமும் மலரத் தன் தோழர் தணிகைமலை

யுடன் உரையாடினார் - உலவிடச் சென்றார் - உற்றார் உறவினரைக் கூட்டி விருந்தளித்து மகிழ்ந்தார். ஆனால், இந்த முறை அவர் கண்களில் ஒளியில்லை; உரையில் உற்சாகமில்லை. இந்தப் பெரும் மாற்றத்தைக் கண்ட காரணத்தி னால்தான் தணிகைமலை, அடுக்கடுக்காகக் கேள்விகளைத் தொடுத்தார். அருளப்பர், மெல்லிய குரலில் விளக்கம் கொடுத்தார் :

"பொருள் இல்லாமல் வறுமையால் வாடுகிற துன்பத்தைவிட, சில நேரங்களில் வளமான நிலைகூட அதிகத் துன்பத்தைத் தருகிறது. அது எப்போது தெரியுமா? முறையின்றி நடைபெறுகிற கொடுங்கோல் ஆட்சியின்கீழே வாழும் போது! இப்படி வள்ளுவர் கூறியிருக்கிறார் அல்லவா? அந்தக் குறள் என்னைப் போன்றவர்களின் இதயக் குரலாக இன்றைக்கு இருக்கிறது."

அருளப்பரின் இந்த விளக்கத்தைக் கேட்டு, தணிகைமலை சொன்னார் :


"ஆமாம்; முறையற்ற அரசின் கீழ் உள்ள குடிமக்களின் உள்ளத்தை வள்ளுவர் எவ்வளவு அழகாகச் சித்திரித்துள்ளார். மெய்தான் தோழரே! நல்வாழ்வு என்பது இல்வாழ்வுடன் முடிந்து விடுவதல்லவே! ஒரு நல்லரசின் கீழ் அமைகிற வாழ்வுதானே நல்வாழ்வாக இருக்க முடியும்!"

இவ்விரு தோழர்களின் நல்லரசு பற்றிய உரையாடலுக்கு அடிப்படையாக விளங்குகிற குறள் இது:

"இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்"

அதிகாரம் - 56 - கொடுங்கோன்மை; பாடல் - 558





"நல்லம்மா! நல்லம்மா!" என்று மகிழ்ச்சிபொங்கிட அழைத்தவாறு அந்த ஊர்ப் பெரியவர் உலகளந்தான், வீட்டுக்குள் நுழைந்தார். நரைத்த முடியும் நடுங்கும் உடலும் என்றாலும் உலகளந்தானின் குரலில் மட்டும் வலிமை குன்றிடவில்லை. "என்னய்யா! இவ்வளவு பூரிப்பு?" என்று நல்லம்மாள், மரியாதையுடன் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்; கூடத்தில் விரித்திருந்த சற்றே கிழிந்த பட்டுப்பாயின் மீதுதான் அவள் படுத்திருந்தாள். காய்ச்சல், இருமல், உடலெங்கும் வலி - நோயின் தொல்லையால், அவள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்தத் துன்பத்துக்கிடையேயும் பெரியவருக்கு மரியாதை காட்ட வேண்டுமென்ற பண்பு, அவளிடத்தில் இருந்தது.

"நீ எழுந்திருக்காதே! நோயாளி! சும்மா படுத்துக் கொள்!"

பெரியவர் அருகே அமர்ந்தார்.

நல்லம்மாளின் நோய்க்குக் காரணமில்லாமற் போகவில்லை.

ஒரு திங்களுக்கு முன்புதான் அவளது முப்பது வயது மகனை, அவள் சாவின் வாயிலே அள்ளிக் கொடுக்க நேர்ந்தது. ஒரே மகன், அவனைத் தவிர அவளுக்கு யாரும் ஆதரவில்லை. அவளைக் கைம்பெண்ணாக்கிவிட்டு அவள் கணவன் பிரிந்து ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. இப்போது மகனும் தந்தையைத் தொடர்ந்து சென்று, தாயைத் தனியாக ஆக்கிவிட்டான்.

நல்லம்மாளின் மகன் கட்டிளங்காளை! அவன் இறந்துபோனது மட்டுமல்ல; அவன்மீது ஒரு பழியும் வந்து சேர்ந்தது.

வண்டியோட்டுவது அவன் தொழில். ஒரு நாள் கணவன் மனைவி இருவர் அவன் வண்டியிலேறி வேற்றூர் சென்றனர். இரவு நேரம்! மலைப்பாதை! தொலைவில் விலங்கினங்கள் உறுமும் ஒலிகூடக் கேட்டது! வண்டிக்குள் இருப்பவர்களோ செல்வந்தர் வீட்டுக்குரியவர்கள்; இளமை ததும்பும் வயதினர்; ஏராளமான நகைகளை அந்தப் பெண் சுமந்து கொண்டிருக்கிறாள்.

இரண்டு நாள் கழித்துச் செய்தி வந்தது: 'நல்லம்மாளின் மகன், தன் வண்டியில் வந்த கணவன் மனைவியைக் காட்டுப் பாதையில் மிரட்டி, ஆடவனைக் கொன்றுவிட்டு, அந்தப் பெண்ணின் கற்பையும் சூறையாடிவிட்டு நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டான். அந்தப் பெண்ணும் கொல்லப்பட்டு விட்டாள். இருவரைக் கொலை செய்துவிட்டு ஓடிய நல்லம்மாளின் மகனும் திருடிச்சென்ற நகைகளுடன் மலைப்பாதையில் கண் தெரியாமல் வழுக்கிக் கீழே உருண்டு செத்துவிட்டான். நகைகளைக் காவலர் மீட்டுவிட்டனர்' இந்தச் செய்தியைக் கேட்டு அலறி விழுந்தவள்தான் அந்த அன்னை! பிறகு நோய் அவளைப் பிடித்துக் கொண்டது.

மகன் மறைந்ததுமட்டுமல்ல; தீயவன் என்ற பெயரையல்லவா சூட்டிக் கொண்டு மறைந்துவிட்டான். 'இதற்காகவா அவனை வலியையும் வேதனையையும் தாங்கிப் பெற்றேன், வளர்த்தேன்' என்று நல்லம்மா புலம்பிக் கொண்டேயிருந்தாள்.

உலகளந்தான், நல்லம்மாளிடம் சொன்னார் : "அம்மா! நடந்த கதையே வேறாக இருக்கிறது. உன் மகன், வண்டியில் அவர்களை ஏற்றிக் கொண்டு மலைப்பாதையில் செல்லும்போது ஒரு கொள்ளைக்கூட்டம் வழிமறித்துவிட்டதாம். உடனே உன் மகன் கீழே குதித்து, அந்தக் கயவர் கூட்டத்தை எதிர்த்திருக்கிறான். அவனை அந்தக் கூட்டத்தினர் சுற்றி வளைத்து வண்டிச் சக்கரத்திலேயே கட்டிப் போட்டு விட்டனர். பிறகு கணவன் மனைவியைக் கைப்பற்றினர். கணவன் கொலையுண்டான். அந்தப் பெண்ணைக் கற்பழித்தே கொன்று விட்டனர். அவள் அணிந்திருந்த நகைகளை மூட்டையாகக் கட்டி அந்தக் கூட்டத்தாரில் ஒருவன் தூக்கிச் செல்ல முனைந்தபோது, வண்டிச் சக்கரத்திலிருந்து தன்னை மீட்டுக் கொண்ட உன் மகன், ஒரேபாய்ச்சலில் அந்த நகை மூட்டையைப் பிடுங்கிக் கொண்டு ஊரை நோக்கி ஓடிவந்திருக்கிறான். கொள்ளைக் கூட்டம் அவனை அந்த இருட்டில் துரத்தியிருக்கிறது. வழி தெரியாமல் தடுமாறி உன் மகன் மலையிலிருந்து உருண்டிருக்கிறான்."

நல்லம்மாள், விழிகளை அகலத் திறந்து பெரியவரைப் பார்த்தாள்.

"இவ்வளவும் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அந்தக் கொள்ளைக் கூட்டம் பிடிபட்டு விட்டது. அந்தக் கூட்டத்தார், காவலர்களிடம் தெரிவித்த உண்மை இது! 'என்னை நம்பி என் வண்டியில் வந்தவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியாவிட்டாலும், அவர்களின் உடைமையைக்


காப்பாற்றியாவது அவர்களின் வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன். என்னைத் தடுக்காதீர்கள்' என்று கூறிவிட்டுத்தான் உன் மகன் அந்த நகை மூட்டையுடன் ஓடிவந்திருக்கிறான்."

நல்லம்மாளின் கண்களில் புதிய ஒளி! அவள் இதழ்களில் பரவசம்! முகத்தில் ஒரு மலர்ச்சி!

"பெரியவரே! அவனைப் பெற்றபொழுது நான் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேனோ! அதைவிட அதிகமான மகிழ்ச்சியை அவன் சான்றோன்தான் எனக் கேட்கும்போது அடைகிறேன்." என்றாள்! நல்லம்மாள் அந்த மகிழ்ச்சிப் பெருக்குடனேயே பாயில் சுருண்டு படுத்தாள். பெரியவர், அவள் உடலைத் தொட்டு அசைத்துப் பார்த்தார். அந்த உடல், இனி அசையாத நிலை பெற்றுவிட்டது. அமைதியை அவள் உள்ளத்திற்கு வழங்கக்கூடிய அருமருந்தாக அந்த மகிழ்ச்சிச் செய்தி அவளுக்கு அமைந்தது போலும்!

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

அதிகாரம் - 7 - மக்கட்பேறு; பாடல் - 69





சோலை மலர் மெய் சிலிர்க்க, இன்பத்தென்றல் வந்து இறுகத் தழுவுதல் போல் அவளை அவன் தழுவினான். இளஞ்சூடு பரவிற்று இருவர் உடலிலும்! பலாச்சுளை நாவினால் அவன் ஈறு தடவி, இனிய நகைகாட்டுகின்ற இதழ்க்குள்ளே இருக்கின்ற பற்களிலே சுவையேற்றி, தேனருவி வாய்க்குள்ளே பாலருவி கலந்து புத்தம் புதுக் கலையைக் கண்டேன் என்று அவன் கூறி, முத்தம் பல நூறு பொழிந்திட்டான்! "மானே! மயிலே! தேனே! அமுதே! அழகுக்கு அழகு செய்வதால் குற்றம் என்ன? சேல் கெண்டைபோல் துள்ளுகின்ற விழியோரம் மை எழுதிக் கொண்டால் இன்னும் சிறப்புச் சேருமே, என் சிற்றிடைச் செல்வமே!" எனக் கேட்டுப் பதிலை எதிர்பார்த்துத் தலையை அவள் கழுத்தோரம் பதித்திருந்தான். அவளோ தாமரைக் கரங்களால், அவன் தலை நிமிர்த்தித் தன் இதழ் அருகே அவன் இதழை வைத்துக் கொண்டு வீணையாக அதிர்ந்தாள், விடை பகரும் ஆவலுடன்!

"அத்தான்! மை எழுதத் தெரியாது இந்த மங்கைக்கு என எண்ணிடாதீர்! மை எழுதும்போது என் கண்ணுக்குள் இருக்கின்ற உம்மை என் விரல் நுனிதான் மறைத்திடுமோ - அன்றி இமை அசைத்து உமக்கு முன்னே திரைபோல நின்றிடுமோ - என அஞ்சித்தான் கண்ணாடியின்முன் நின்று என் கண்களிலே உம்மையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்! உமது அசைவுகள் ஒவ்வொன்றும் என் விழிகளுக்கு முக்கனியின் விருந்து அத்தான், விருந்து!"

நீள் விழியாள் பதில் கேட்டு, வாள்வீரன் நிலைகுலைந்தான். தோள்மீது போட்டுக் கொண்டால் தோகை முகம் காணல் இயலாதென்று, தொடைமீது அவளைச் சாய்த்துக் கொண்டான். அவளோ இமை கொட்டாமல் அவனையே விழுங்கிக் கொண்டிருந்தாள்.

"என்னடி கண்ணாட்டி! இமைக்காமல் பார்க்கின்றாய்! மேலுலகில் வாழ்கின்ற தேவர்களே கண் இமைத்திடார் எனக் கதையளப்பர்! அக்கதையை நீ மெய்யாக்குகின்றனையோ?"

எனக் கேட்டான்! அவள் சொன்னாள் :

"என் அழகத்தான்! அன்பு அத்தான்! மை எழுதினால் கண்ணில் இருக்கும் நீர் மறைவீர் என்று எழுதவில்லை! இப்போது நான் கண் இமைக்கும் நேரம்கூட, நீர் மறைவதை நான் விரும்பவில்லை. அந்தச் சிறுதுளி நேரம்கூட நீர் என்னைப் பிரிந்தால் இந்த ஊரார் உம்மை, என்மீது அன்பில்லாதவர் என்று கூறிடுவர்."

விளக்கம் தந்தவளின் விழிகள் பெற்ற முத்தங்களுக்குக் கணக்கே இல்லை! தந்தவனுக்கு அந்தத் தந்தச்சிலை திருப்பித் தந்ததற்கும் அளவே இல்லை! இருவரிடை எழுந்த உணர்ச்சிப் பெருக்கிற்கு ஓர் எல்லையும் இல்லை!


"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து"

"இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்"

அதிகாரம் - 113 - காதற் சிறப்புரைத்தல்;பாடல்கள் - 1127, 1129

கரப்பாக்கு = மறைத்தல் ஏதிலர் = அன்பில்லாதவர்





தெனாலிராமன்

அரசவையில் அவன் விகடகவி! அவனது நகைச்சுவையைப் பெரிதும் வியந்து போற்றுவர், தலைநகரில் உள்ளவர்கள்! கொலுமண்டபத்தில் அவன் உதிர்க்கும் நகைச்சுவைகளை அரசரும் அமைச்சர்களும் அரண்மனைவாசிகளும் நல்ல பொழுதுபோக்காகக் கருதுவார்கள்.

பொருள் பொதிந்த விகடங்களும் உண்டு! பொருளற்றதும் கேலிக்குரியதுமான விகடங்களும் உண்டு! அவன் ஆற்றலைப் புலப்படுத்தும் விகடங்களுக்கு அரசர் பரிசளித்து மகிழ்வார். சில நேரங்களில் விகடகவியின் பொருளற்ற விகடங்களை அரசர் சுட்டிக்காட்டி, அவற்றை அலட்சியப்படுத்திவிட்டுப் போய் விடுவார்.

ஒரு நாள் கட்டுடல் வாய்ந்த காளையொருவன், மன்னன் முன் வந்து நின்று, தனக்கு நிகராக வாட்போர் புரியும் திறன் படைத்தோர் யாரேனும் இருப்பின், அவருடன் போரிடத் தயாராக இருப்பதாகத் தோள் தட்டினான்.

அந்த வீரனை எதிர்ப்பதற்கு அறைகூவல் விடுத்து அந்நாட்டுத் தளபதி வாய் திறப்பதற்கு முன்பு, விகடகவி அந்த வீரனை நோக்கித் தனது மீசையை முறுக்கித் தான் தயாராக இருப்பதாகச் சொல்லிவிட்டான்.

மன்னர் விகடகவியை எச்சரித்து, "இது உனக்குத் தேவையில்லாத வேலை!" என்றார்.

விகடகவியோ பின் வாங்குவதாக இல்லை. "அரசே! இது என் மானப் பிரச்சினை! இனி நான் விடுத்த அறைகூவலைத் திரும்பப் பெற முடியாது! மோதிப் பார்த்துவிடுகிறேன்" என்று புறப்பட்டான்.

கொலுமண்டபத்தில் வாட்போர் தொடங்கிற்று. வீரனின் வாள்வீச்சு மின்னலையும் மிஞ்சி நின்றது. விகடகவி, வாளைக் கீழே போட்டுவிட்டு எந்தப் பக்கம் ஓடலாமென்று திருதிருவென விழித்தான். அவையோர் கைகொட்டி நகைத்தனர்.

அரசர், விகடகவியைப் பார்த்துக் கேட்டார் :

"மானப் பிரச்சினையென்று கூறினாயே! இப்போது என்ன செய்யப் போகிறாய்? 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்'
என்ற குறளுக்கு உனக்குப் பொருள் தெரியுமா?

தன் உடலில் உள்ள மயிர் நீங்கினால் கவரிமான் உயிர் வாழாதாம்! அதுபோல மானம் அழிய நேர்ந்தால் கவரிமானைப்போல உயிரை விட்டு விடுவார்கள் மானமுள்ளவர்கள்! இப்படி வள்ளுவர் கூறியிருக்கிறார். உன் முடிவு என்ன?"

இந்தக் கேள்வியை அரசர், குறும்புச் சிரிப்புடன் கேட்டதும் விகடகவி, "அரசே! இதோ பாருங்கள்!" என்று கூறிவிட்டு கொலுமண்டபத்தை விட்டு ஓடினான். அனைவரும் திகைத்தனர். சிறிது நேரத்தில் விகடகவி மொட்டைத் தலையுடன் அரசவைக்குத் திரும்பினான். எல்லோரும் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தனர்.

"அரசே! நான் திருக்குறளில் ஓர் எழுத்தை மாற்றிவிட்டேன். மாற்றியதற்கு ஏற்ப என் மானப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டேன்" என்றான் விகடகவி! அவன் மாற்றிய குறளையும் பாடிக் காட்டினான்.


"உயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
மயிர்நீப்பர் மானம் வரின்"

விகடகவியின் திருத்தப்பட்ட இந்தத் திருக்குறளைக் கேட்டு, வாட்போர் வல்லான் உட்பட அனைவரும் கைகொட்டிச் சிரித்தனர்.

"இப்படியொரு விகடகவி இருப்பது இந்த நாட்டு மக்களுக்கே நல்ல பொழுதுபோக்கு" என்று அரசர் கூறியதுடன், அவனது மொட்டைத் தலையை மறைக்க ஒரு பட்டுத் தலைப்பாகையையும் பரிசாக வழங்கினார்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

அதிகாரம் - 97 - மானம்; பாடல் - 969



சுமைதாங்கியின்

கரை புரளும் காவிரியாறு, அந்தச் சோலையினூடே வெள்ளி நிலவிலே தனது உடலைக் குறுக்கிக்கொண்டு ஓடியவாறிருந்தது. கரையோரம் கனிகுலுங்கும் மரத்தினடியில் வழக்கமாக அமர்ந்து கற்பனைக் கவிதைகளை நெய்திடும் அந்தக் கவிஞனும் அன்று வரத்தவறவில்லை. ஆற்றழகியின் அலைக்கரங்களை, நிலவின் ஒளி விரல்கள் நெருடுகின்ற காட்சியிலே கவிஞன் உள்ளம் பறிகொடுத்திருந்தான். அப்போது சிறியதோர் படகு! அதில் செப்புச்சிலை போல - சிங்காரித்த சின்ன ரதம் போல - ஓர் பேரழகி! அவளே துடுப்புக் கொண்டு அந்தப் படகை, ஆற்றின் எதிர்க் கரைக்கு ஓட்டிக்கொண்டிருந்தாள்! "இரவு நேரம்! தனியாக ஒருத்தி! எங்கே போவாள்?" இந்தக் கேள்வி இளங்கவிஞனைத் தாக்கிற்று! கற்பனையை விடுத்து, கன்னி இளமானின் படகையே பார்த்துக் கொண்டிருந்தான்.

எதிர்க்கரையை நெருங்கிக் கொண்டிருந்த படகிலிருந்து ஒரு கூக்குரல்! "அய்யோ!" அந்த ஒலியைத் தொடர்ந்து அடுத்த ஒலி கிளம்பவில்லை. கவிஞன் திடுக்கிட்டு எழுந்தான். நிலவொளியில் நன்றாகவே தெரிந்தது; அந்தப் படகு கவிழ்ந்து போய்விட்டது.

இளங் கவிஞன் ஆற்றில் குதித்தான்; கவிழ்ந்த படகினை நோக்கி விரைந்து நீச்சலடித்தான்! அந்த அழகியைத் தொட்டுத் தூக்கிக்கொண்டு சென்று எதிர்க் கரையில் கிடத்தினான்; அவளுக்குத் தரவேண்டிய சிகிச்சைகளைத் தயக்கமின்றித் தந்து 'உயிர் பிழைத்தாள்' என்று உவகையூத்து நின்றான். அவள் களைப்பில் அயர்ந்து

படுத்திருந்தாள். நீரில் நனைந்த உடை! அவள் உடலோடு ஒட்டி, அந்த வெண்ணிலவின் வெளிச்சத்தில் அவளது கவர்ச்சியைப் பெருக்கிக்கொண்டிருந்தது!

சிறிது நேரத்தில் கண் விழித்தாள்! அவனையே உற்றுப்பார்த்தாள்!

"நீங்களா என்னைக் காப்பாற்றினீர்கள்?"

"ஆமாம்! அதிருக்கட்டும்; இந்த இருட்டில் தனியாக ஒரு படகில்... எவ்வளவு துணிவு உனக்கு!"

"இந்தக் கரையை அடுத்த சிற்றூரில் என் காதலர் இருக்கிறார்! அவரைக் காணக்கூடாதென்று கட்டுக்காவல் எனக்கு! அவர் உடல் நலமின்றியிருக்கிறார் எனச் செய்தி கேட்டேன்! அதனால் காணப் புறப்பட்டேன்!"

அந்த அழகி தனது காதலனைக் காணப் போகிறாள் என அறிந்ததும்; கவிஞன் அவளை நோக்கிக் கூறினான், பரிவுடன் சில வார்த்தைகள்:

"அன்புத் தங்கையே! நீயும் உன் காதலனும் வாழ்க! வாழ்க! உங்கள் இதயக் காதல் வெல்க!"

அந்த வாழ்த்துக் கேட்டு அவள் நெகிழ்ந்துவிட்டாள்! 'ஆபத்திலிருந்து காப்பாற்றினேன்; ஆரணங்கே! அருகில் வா' என்றெல்லாம் புதிய ஆபத்துக்குத் தொடக்க விழா நடத்தாமல், அண்ணனாக நின்று, தன்னைத் தங்கையாக ஏற்றுக் கொண்டவனின் கால் தொட்டு வணங்கினாள்.


"என்ன பலன் கிடைக்குமென்று கணக்கிட்டுப் பாராமல் உதவி புரிகிற ஒருவரின் அன்புடைமையைக் கணக்கிட்டுப் பார்த்தால் அது கடலைவிடப் பெரியதாகும்."

இந்தக் குறளின் பொருள், இருவர் உள்ளத்திலும் இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தது.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

அதிகாரம் - 11 - செய்ந்நன்றி யறிதல்; பாடல் - 103





மாங்காடு ஓர் அழகிய சிற்றூர். அங்கே மருதனைத் தெரியாதவர் யாருமிலர். பெரிய குடும்பத்தில் பிறந்தவன். செல்வச் செழிப்பின் காரணமாகவே அவனை அந்த ஊரார் ஏற்றிப் போற்றி மதித்து நடந்து வந்தனர். அறிவுத் திறன் பெற்றவன் என்று அவனை யாரும் புகழத் தயாராக இல்லை. அவனிடம் பரிசில் பெற விரும்பிக் கையேந்தி நின்ற சில புலவர்கள் மட்டுமே அவனது அறிவைக் கடலுக்கு ஒப்பிட்டும் - திறமையை வானுக்கு ஒப்பிட்டும் கவிதைகளைப் பாடித் திரிந்தனர்.

எதுவும் தெரியாதவன்கூட ஏற்றம் பெற்றுவிட்டால் எல்லாம் தெரிந்தவனைப் போல நடிக்கும் இந்த உலகில், ஏதோ ஒன்றிரண்டு தெரிந்த மருதன், தன்னை எல்லாம் தெரிந்த அறிவுச் சுரங்கம் என எண்ணிக்கொண்டு பீடுநடை போட்டதில் வியப்பில்லை.

மாங்காட்டில் பொங்கல்விழா நடைபெற்றது. அதனையொட்டிக் காளைகளை அடக்க, கட்டிளங்காளைகள் முன் வந்தனர்.

அவர்களில் வெற்றிபெற்ற அறுவருக்கு அந்த ஊரார் சார்பில் பொற்கிழி அளிக்கும் நிகழ்ச்சி. மருதனின் கரங்களால் அவற்றை வழங்க வேண்டுமென ஊரார் விரும்பினர். மருதன், அந்த வீர இளைஞர்களைப் பாராட்டுவதற்குப் பதில் இகழ்ந்துரைத்தான். "மாடுகளோடு போரிடப் பயிற்சி செய்வது பெரியவீரமோ? முரட்டுத்தனத்திற்கும்

முட்டாள்தனத்திற்கும் பெயர் வீரமென்று எவன் சொன்னான்? சரி! சரி! ஏதோ பரிசுக்காக உயிரைப் பணயம் வைத்துப் பிழைக்கிறீர்கள்; போய்த் தொலையுங்கள்!" என்று கூறிக்கொண்டே அவர்களுக்குப் பொற்கிழியை வழங்கினான். பரிசு பெற்ற இளைஞர்கள், மருதனை மனத்துக்குள் திட்டிக்கொண்டு சென்றனர்.

திருமண நிகழ்ச்சியொன்று! அதைத் தொடர்ந்து அந்த இல்லத்தில் நடன ஏற்பாடு. ஆடிய பெண்ணை வாழ்த்துமாறு மருதனை அழைத்தனர். முறையாக நாட்டியம் கற்றவள் அவள். நாட்டிய இலக்கணம் பற்றிச் சிறிதும் அறியாத மருதன், அவள் ஆட்டத்தில் குறையிருப்பதாகக் கூறினான். அந்தப் பெண், அவனது வாழ்த்துரை முடியும் முன்பே அரங்கத்தைவிட்டுக் கோபமாக வெளியேறினாள்.

தங்களுக்குக் கல்வி கற்பித்து ஆளாக்கிய ஆசிரியப் பெருமகனார்க்கு நன்றி சொல்லும் விழாவொன்றினை, மாங்காட்டு மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். விழாத்தலைவராக மருதன்தான் அழைக்கப்பட்டிருந்தான்.

ஆசிரியரைப் பாராட்டுவதற்குப் பதில், அவர் இன்னும் என்னென்ன கற்றிட வேண்டுமென, அவருக்கு அறிவுரை வழங்கினான். வெறுப்புற்ற மாணவர்கள் மருதனைக் கேலி செய்து வெளியேறினர்.

ஊரில் கொலை களவு போன்ற தீய செயல்கள் பெருகிவிட்டன என்பதறிந்து அதனைத் தடுத்திடப் படைவீரர்களைப் பாதுகாப்புக்காக அரசினர் அனுப்பி வைத்தனர்.

"மாங்காட்டில் மருதனை மீறி, களவும் கொலையும் நடந்துவிடுமா? என்னை விடப் பலம் வாய்ந்ததோ இந்தக் காவல்படை?" என ஏகடியம் செய்தான் மருதன்.

காவல் படையினர், மாங்காட்டிலிருந்து அடுத்த ஊருக்குச் சென்று விட்டனர்; மருதனுக்கு அறிவு புகட்ட வேண்டுமென்ற ஆசையுடன்!

ஒரு நாள் இரவு, மருதன் இல்லத்தில் கொள்ளைக்காரர் நுழைந்தனர். கொடுவாட்களைச் சுழற்றி அவனைப் பயமுறுத்தினர். மருதன் குடும்பத்தார் சிதறியோடினர். மருதனும் அந்த நள்ளிரவில் திக்குத் தெரியாமல் ஓடினான்.

அகல்விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது, ஒரு வீட்டின் முகப்பில்-! அங்கே நுழைந்து "அய்யோ! காப்பாற்றுங்கள்" என அலறினான். அந்த வீட்டுக்குரியவள், அவனால் இழித்துரைக்கப்பட்ட நாட்டியப்பாவை! அவள், அவனுக்கு இடம் தர மறுத்துக் கதவைத் தாழிட்டுக்கொண்டாள்.

மருதன் அங்கிருந்து ஓடினான்! ஓடினான்! ஓடிக்கொண்டேயிருந்தான். பொழுதும் விடிந்தது. கூட்டமாக மாணவர்கள் வந்தனர். அவர்களிடம் நின்று "என்னைக் கொள்ளைக்காரர் துரத்துகின்றனர்" என்று கதறினான்; ஏற்கனவே மருதன் மீது வெறுப்புக்கொண்ட மாணவர்கள், அவனைச் சூழ்ந்து நின்று கேலியாகக் கும்மியடிக்கத் தொடங்கினர். அதைத் தாங்கமுடியாமல் மருதன் ஓடினான்.

மிரண்டுபோன காளையொன்று அவனை முட்டித்தள்ளத் துரத்தியது. அப்போது இரு இளைஞர்கள் அங்கு வந்தனர். அவர்தம் வீரத்தைப் பழித்த மருதன், இப்போது அவர்கள் காலில் விழுந்து "அபயம்" கேட்டான். அந்த இளைஞர்கள் முரட்டுக் காளையை அடக்கி மருதனைக் காப்பாற்றினார்கள் என்றாலும் அவனது ஆணவம் அளவுக்கு அவனை ஏளனம் செய்து அனுப்பினார்கள்.

பித்துப் பிடித்தவனைப்போல ஆகிவிட்ட மருதன், தள்ளாடியவாறு தன் வீடுநோக்கி வந்தான். வீட்டைச் சுற்றிக் காவலர்கள் நின்றனர். படைக் காவலர்களைப் பார்த்ததும் மருதன் "அய்யா! வீரர்களே! என்னை மன்னித்து விடுங்கள்! 'நான்' என்ற அகந்தையால் எல்லோரையும் பகைத்துக்கொண்டேன். பெரிய அறிவாளி என்ற நினைப்பில் எல்லோரையும் இகழ்ந்தேன். இப்போதுதான் புரிகிறது; ஒரு பித்தனின் அறிவைவிட என் அறிவு குறைவானது!" எனக் கூறிக் கொண்டே அவர்களைத் தொழுது வணங்கினான்.

படைவீரர்களால் காப்பாற்றப்பட்ட அவனது குடும்பத்தாரும் மருதனைப் பார்த்து, "இனிமேலாவது எல்லோருடைய பகையையும் தேடிக்கொள்ளாதே!" என்று அறிவுரை கூறினர். மருதன் திருந்தினானா என்பதுதான் தெரியவில்லை.

"ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்"

அதிகாரம் - 88 - பகைத்திறம் தெரிதல்; பாடல் - 873

ஏமுற்றவர் - பித்துப்பிடித்தவர் ஏழை - அறிவற்றவன்

தமியன் - தனித்தவன்





காதலன் பிரிந்து சென்றால் காதலியின் உடல் பசலை படர்ந்துவிடுமாம். தோள்கள் மெலிந்துவிடுமாம். வளையல்கள் கழன்று விழுந்துவிடுமாம். காதலனின் பிரிவு, இவ்வளவு கடுமையான துன்பங்களைக் காதலிக்குத் தந்து வாட்டிவிடும் என்கிறார் வள்ளுவர்! சரி, பிரிவின் கொடுமையை விவரிப்பதற்குக் குறளில் இப்படியெல்லாம் தமிழ், கொஞ்சிக் கூத்திடுகிறது; ஒப்புக் கொள்வோம் - இதோ இன்னொரு அதிசயத்தையுமல்லவோ அவர் நிகழ்ச்சியாக்கி அதனைக் காட்சியாக்கி நம்முன்னே காட்டுகிறார்!

காதலன் அருகேயிருக்கும்போது காரிகையொருத்திக்குப் பசலை படர்ந்து விடுகிறதாமே! அது எப்படி? ஏன்?

கதவைத் தாளிட்டனர்! கட்டிலில் அமர்ந்தனர்! கனி வகைகளை உண்டனர்! பாலை மட்டும் பிறகு அருந்தலாமேயென்று அவன் கண்ஜாடை காட்டிட, சூடு ஆறாத பாத்திரத்தில் அதை மூடியபடி வைத்தாள். எரிந்து கொண்டிருந்த பெரிய விளக்கிற்கு ஓய்வு வழங்கிவிட்டு, சிறியதோர் அகல் விளக்கை மட்டும் ஒளியுதவிடுமாறு பணித்தனர். அவன் மடியில் அவளும் - அவள் மடியில் அவனுமாக மாறி மாறிச் சாய்ந்தனர். சொற்கள் கோக்கப்படாத இசை இருவரிடையே எழுந்திட, இதழ்களோ எண்ணப்படாத முத்தங்களைத் தாள ஓசைகளாக ஆக்கிக்கொண்டிருந்தன. காலை முதல் மேனியை அழகு படுத்திக்கொண்டிருந்த ஆடைகளுக்கு நன்றி தெரிவிக்காமல் அவற்றை இப்படியா தூக்கி எறிவது? ஒருவேளை அவைகள், உடல்களை இறுக்கின என்ற கோபம் போலும்! அழகுக் கோலத்தை மிகைப்படுத்திக்கொண்டிருந்த ஆடைகளும் அணிகளும், தாங்கள் ஒரேயடியாகப் புறக்கணிக்கப்பட்டதை எண்ணி வருந்தி அந்த அறையின் மூலைகளில் சிதறிச் சுருண்டு கிடந்தன.

அகல் விளக்கின் சுடர் இனிய தென்றலில் ஆடிக்கொண்டிருந்தது! அவர்கள் உடல்களும்தான்!

"நம் இருவர் உடல்களையும் ஒரே உடலாகப் படைத்திருந்தால் எப்படியிருக்கு மத்தான்! அப்படியே பிரியாமல் ஒட்டிக்கொண்டேயிருக்கலாம்; இல்லையா?"

இது அவளது கேள்வி!

"நாம் எப்படிப் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைத்தான் - நம்மைப் படைத்ததாக ஒருவனிருந்தால் - அவனுக்கு இப்போது காட்டிக் கொண்டிருக்கிறோம்."

அவன் பதில் அளித்தவாறு மேலும் அழுத்தமாகத் தழுவிக்கொண்டான்.

வெட்கத்தால் முகம் சிவந்துபோன அகல்விளக்கின் அழகிய சுடர், எந்த வழியாகவாவது வெளியே ஓடிவிடலாமா என்று சுற்றிச் சுழன்று முட்டி மோதிப் பார்த்தது; முடியவில்லை. கட்டிலின் காட்சியை வேறு வழியின்றி அந்தச் சிறிய விளக்கு கண்டு களித்துக்கொண்டிருந்தது.

அவள் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் உதடுகளால் வருடினான். அவளோ அவனது உள்ளங்காலில் பதித்த இதழ்களைப் பறிக்காமலே, அவனது உச்சந்தலை வரையிலே இன்பத்தைப் பொழிந்து பதிலுக்கு இன்பத்தைப் பெற்றுக் கொண்டாள். வட்டியும் முதலும் உடனுக்குடன் அட்டியின்றிக் கொடுக்கப்படும் இடம் கட்டிலறைதானே! மொய் எழுதினால் பதிலுக்கு ஒன்றுக்கு மூன்றாக மொய் எழுதப்படும் இடமும் அதுதானே!

"நழுவினாள்; தழுவினான்!" என்றில்லாமல் தழுவினர்! தழுவினர்! தழுவியே கிடந்தனர்!

இப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது! ஆம் - அவள் எழிலுறு நெற்றியில் பசலை நிறம் படர்ந்துவிட்டது!

அமுதத்தால் நனைத்தும் - அமுத கலசங்களால் அணைத்தும் - பிணைந்து கிடந்தவரிடையே உருவாகிய பிணக்குத்தான் என்னே!

பிறகு ஏன், அவளது நெற்றியில் பசலை நிறம் படரத் தொடங்கியது?

பிரிவில் வந்து தலை நீட்டும் அந்தப் பிணி, கூடிக் கிடக்கும் காதற்களத்தில் அடியெடுத்து வைப்பானேன்?

ஓ! ஓ! இப்போது காரணம் மிக எளிதாகப் புரிந்துவிட்டது!

என்ன காரணம்?

"காதலன் காதலியைத் தழுவிக்கொண்டிருந்த கரங்களைச் சற்றுத் தளர்த்தி விடுகிறானாம்! அந்தச் சிறு பிரிவைக்கூடத் தாங்கிக்கொள்ள முடியாமல் பசிய வளையல் களை அணிந்த அந்தப் பாவையின் நெற்றியில் பசலை நிறம் ஓடிவந்து பாய்ந்து விடுகிறதாம்!"

இதோ - அந்தக் குறள்.

"முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்"

அதிகாரம் - 124 - உறுப்புநலன் அழிதல்; பாடல் - 1238

முயங்கிய = தழுவிய ஊக்க = தளர்த்திட



ஆதனூர் சிற்றரசின் அமைச்சுப் பொறுப்பை, கூத்தன் என்பான் ஏற்றுக் கொண்டான். நிருவாகத் திறமையில் அவனுக்கு நிகரில்லையென்று அரசன் உறுதியாக நம்பி, அமைச்சுப்பணிகளில் எந்தத் தலையீடுமின்றி அந்தப்புரத்திலேயே ஆடிக் களித்துக்கொண்டிருந்தான். கூத்தனுக்குத் தன்னை மக்களிடம் ஒரு பெரும் மேதையென்று காட்டிக் கொள்ளவும் - தும்பை மலரையொத்தத் தூய்மையாளன் என்று காட்டிக்கொள்ளவும் - பெரு விருப்பம்!

நாட்டு மக்கள் அவ்வாறு தன்னை நம்ப வேண்டுமென்று, அரசின் சார்பில் பல திட்டங்களை வெளியிட்டான். அவற்றை நிறைவேற்றிடும் எண்ணம் அவனுக்குத் தொடர்ந்து இருந்திடவில்லை. எனவே திட்டங்கள் வாயளவில் வடிவெடுத்து செயலளவில் வாடிக்கிடந்தன.

மதுவருந்தும் கொடிய பழக்கத்திலிருந்து மக்களை விடுவிக்கப் போகிறேன் என்று அமைச்சன் கூத்தன் திடுமென ஓர் அறிவிப்பை விடுத்தான். அந்த அறிவிப்பு கடுமையான ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டது.

அந்த ஆணையில் அரசனின் உத்திரவு முத்திரை இடப்படவேண்டும். அரசனோ மதுவருந்தி மதிமயங்கி மங்கையர் மடியை மஞ்சமாக்கிக்கொண்டு கிடந்தான். அதனால் அந்த ஆணையில் அவனது ஒப்புதல் முத்திரையைப் பெறுவது கூத்தனுக்கு எளிதாகவே இருந்தது.

ஆணை பற்றிய விளக்கங்கள் ஆதனூர் முழுதும் அறிவிக்கப்பட்டன. அமைச்சன் கூத்தனை அணுகி அவ்வூர்ப் பெரியோர் பலர் முறையீடு செய்து கொண்டனர். "மதுப்பழக்கம் தீமை தரக்கூடியதுதான்! நாங்கள் மறுக்கவில்லை. எனினும் இவ் வளவு கடுமையாகச் சட்டங்களைத் தீட்டி, மக்களைத் தண்டிப்பது தகாது!" என்றனர்.

அவர்களின் முறையீட்டைக் கேட்ட கூத்தன், மேலும் தன்னைப் புனிதனைப் போலக் காட்டிக்கொள்ளச் சீற்றத்துடன் பேசினான்:

"பெரியவர்களே! உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா? அரசின் ஆணையை மீறுகிறவர்களை நாடு கடத்தக்கூடச் சட்டம் இருக்கிறதல்லவா? இதோ இந்தச் சட்டநூல் என்ன கூறுகிறது; படியுங்கள்"

என முழங்கினான். பெரியவர்கள் மௌனமாக நின்றனர்.

"நீங்கள் என்னை அணுகி இந்தச் சட்டத்தைக் கொடிது என்று கூறுகிற காரணத் திற்காகவே, இதனை மேலும் கடுமையாக்குகிறேன். இனிமேல் எனது ஆணையை மீறி மதுவருந்துகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள்" என்று கூத்தன் கூச்சல் போட்டுவிட்டு, அவ்வாறே ஆணை பிறப்பித்தான்.

ஆணையை மீறிக் குடித்தவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள்! ஆணையின் வேகம் அடங்கவில்லை. வெகு விரைவில் ஆதனூர் மக்கள் தொகையில் முக்கால் பகுதி குறைந்துவிட்டது. கால் பகுதி மக்கள் தொகையே மிஞ்சி நின்றது.

நாடு கடத்தப்படும் ஆணை, தங்களுக்கு நலம் பயக்கும் ஆணையென்று கூறிக்கொண்டு பெரும்பாலான மக்கள் அடுத்த நாடு சென்றுவிட்டனர். ஆதனூர் அரசின் செலவிலேயே அவர்கள் பக்கத்து நாடுகளில் கொண்டுபோய் விடப்பட்டனர். அந்த நாடுகளில், மதுவருந்துகிறவர்களைத் திருத்திடும் முயற்சிகள் உண்டே தவிர நாடு கடத்தும் சட்டங்கள் இல்லை.

ஆதனூரில் விவசாயப் பணிகள், ஊரைச் சீர்படுத்தும் பணிகள், எந்தப் பணியை யும் நிறைவேற்ற ஆட்களே இல்லை! ஆதனூர் வளமின்றித் தவித்து வறுமையில் ஆழ்ந்தது!

காரணத்தைப் புரிந்துகொண்ட கூத்தன், அவன் பிறப்பித்த ஆணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டதாக அறிவித்தான். அதுமட்டுமல்ல; ஆதனூர் மக்கள் அனைவருக் கும் அரண்மனையிலேயே மதுபானக் கடை திறக்கப்படும் என்றும் முரசறையச் செய்தான்.

அவனது அறியாமையை எள்ளி நகையாடாதார் எவருமே இல்லை.

"நூலில் சொல்லப்படுபவைகளைத் தெரிந்து கொண்டிருந்தாலும்கூட அவற்றை நடைமுறைப்படுத்தும்போது உலகத்தின் இயற்கையை உணர்ந்து அதனோடு பொருந்துமாறு செயல்படவேண்டும்."

என்ற குறளின் கருத்தை அமைச்சன் கூத்தன் இப்போதாவது உணர்கிறானா என்று, அந்த ஊர்ப் பெரியவர்கள், கொலுமண்டபத்திலேயே கேலிச் சிரிப்புடன் கேட்டனர். கூத்தனோ, கொலு மண்டபத்திற்கே வராமல் இருந்து விட்டான்.

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்"

அதிகாரம் - 64 - அமைச்சு; பாடல் - 637

(செயற்கை = நூலறிவால் செயலைச் செய்யும் வகைகளை)



எதிர்பாராத சந்திப்பு - ஒருவரையொருவர் இழந்துவிட்ட நிகழ்ச்சி - இல்லம் திரும்பிய காதலன், அவளைப்பற்றிய நினைவுடன் - அலைமோதும் உள்ளத் துடன் உறக்கமின்றித் தவிக்கிறான். அவள் நிலையும் அப்படித்தான் இருக்கு மென்று கருதுகிறான். மன அழுத்தத்தைப் போக்கிக்கொள்ள, அவளுக்கு மடல் தீட்டுகிறான். இதயச் சுமையை இறக்குவதற்கு யாரிடமாவது பேசவேண்டும். அல்லது அந்தச் சுமையான செய்தி குறித்து எழுதியாவது தீர்த்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் அவன், அவளுக்கு எழுதும் மடல்தான் இது!

"தேன் தமிழே! திருவிழாக் கூட்டம்! தீவட்டி வெளிச்சத்தில் உன் செந்தாமரை முகம் பொன்மெருகேறிக் காணப்பட்டதை, இதயத்தால் சுவைத்துக் கொண்டேயிருந்தேன். அந்த நேரம் அப்படியொரு சூறாவளிக் காற்று எங்கிருந்துதான் வந்ததோ; தெரியவில்லை! அதுவும் நமக்கு நன்மையே செய்தது. தெருவில் ஏற்றி வைக்கப் பட்டிருந்த எல்லாத் தீவட்டிகளும் அந்தச் சூறாவளியில் அணைந்துவிட்டன! ஒரே இருள்! திருவிழாவுக்கு வந்த யானை கட்டறுத்துக் கொண்டு ஓடியது. மக்கள் அச்சத்தால் அலறிக்கொண்டு அங்குமிங்கும் சிதறிக் கீழேயும் விழுந்தனர். நீ என்ன ஆனாய்? எங்கிருக்கிறாய்? என்று தெரியாமல் இருட்டில் தடுமாறி நடந்துகொண்டிருந்தேன்.

"அப்போது என் கால் விரல்களில் மலர் ஒன்று தட்டுப்படுவது போல் இருந்தது. மலரை மிதித்துவிடக் கூடாதேயென்று அந்த இருளிலும் கீழே குனிந்து மலரை எடுக்க முயற்சி செய்தேன். என் கைவிரல்களை ஒரு மெல்லிய கை அழுத்திப் பிடித்து உடனே விட்டுவிட்டது! அடடா! என்ன சுகம்! என்ன சுகம்! அந்த ஒரு நொடியில்? யாராக இருக்குமோ என்ற பயம் - இருந்தாலும் கீழே விழுந்து கிடக்கும் ஒரு பெண்ணுக்கு உதவி செய்வது தவறில்லையே என்ற நினைப்புடன் உன்னைத் தூக்கினேன். ஆமாம், உன்னைத்தான் தூக்கினேன். அது நீயாகத்தான் இருந்தாய். கண்மணிதானே என்றேன். என் குரலைப் புரிந்து கொண்டு, அந்த இருளில் என்னைத் தழுவிக் கொண்டாய். அச்சம் பறந்துவிட்டது. அனல்மேவிய இரு இணை இதழ்கள் அழுத்தமாகப் பொருந்திக் கொண்டன. தேன் கிண்ணத்தில் ஊறிக் கொண்டிருந்த உன் பலாச்சுளை நாவினை, நான் விழுங்கிவிடவே முயற்சித்துப் பார்த்தேன்.

"அதற்குள் திருவிழா நடத்தியவர்கள், ஏழெட்டுத் தீவட்டிகளை ஏற்றிக் கொண்டு மக்களுக்கு ஒளி காட்டித் துணை நிற்க வந்துவிட்டனர். நாம் ஏதுமறியாத சாதுக்கள்போல விலகி நின்றோம். என் உள்ளத்தில் அந்தச் சூறாவளிக் காற்றுக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது. திடுக்கிட்டு விழித்துக்கொண்டேன். தேன்குடமே! கனவென்று கவலைகொண்டு மடல் தீட்டுகிறேன் உனக்கு! உறக்கமில்லாத போது கனவு எப்படி வரும் எனக் கேட்காதே! அப்படியொரு கற்பனை! அதிலேயொரு இன்பம்!"

மடலை எழுதி முடித்துவிட்டுக் குறளைக் கையில் எடுக்கிறான்.

"கண் நிறைந்த அழகுடையவளும், மூங்கில் போன்ற தோளுடையவளுமான என் காதலிக்குப் பெண்மைத்தன்மை நிறைந்து விளங்கக்கூடிய இயல்பு மிகுதியாக உள்ளது."

என்றெண்ணியவாறே இன்பத்துப்பாலைப் புரட்டுகிறான். அதற்கும் குறள் தீட்டியிருக்கிறார் வள்ளுவர்!

"கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது"

அதிகாரம் - 128குறிப்பறிவுறுத்தல்; பாடல் - 1272

காம்பு = மூங்கில் நீர்மை = இயல்பு





“விடியான்” என்று அவனுக்கு ஊரார் வைத்த பெயர் வேடிக்கைக்காக அல்ல! அவன் கால்பட்ட இடம் விடிந்ததே இல்லை. அவன் தொட்டது துலங்கியது மில்லை; தொடாதது எதுவுமில்லை. தன்னுடைய நலமொன்றையே குறிக்கோளா கக்கொண்டு, யாருடனும் ஓடிச்சென்று ஒட்டிக் கொள்வான். ஒட்டிக் கொண்ட பிறகு, அந்த இடத்தில் வேறு யாரையும் நெருங்க விடமாட்டான். உப்பரிகைகளில் அவனுக்கு நண்பர்கள் கிடைப்பார்கள். விடியானின் தொடர்பால் அந்த நண் பர்கள் ஒட்டாண்டிகளாகி, ஒட்டுத் திண்ணைகளில் வாழ நேரிடும். அவ்வளவு தான்! விடியான், தனது தன்னல வேட்டைக்கு வேறிடம் பார்த்துக் கொள்வான்.

இப்படியொரு வாழ்வை அமைத்துக்கொண்ட அவன், பிறரைப் பார்த்து ‘சுயநலவாதிகள்’ என்பான்! பதவிப் பித்தர்களென்பான்! ஆனால், அவனது இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் “பதவி! பதவி!” என்றே சுயநல வேகத்துடன் துடித்துக் கொண்டிருந்தது.

அவனை உயிராக நேசித்த ஒரு நண்பனைச் சோதனையான நேரத்தில் கழுத்தறுத்துவிட்டு, அவ்வூரில் வளமாக வாழ்ந்த பேராளன் என்பவன் நட்பைத் தேடிப் பெற்றான். அவனது திறமையான தந்திரப் பேச்சிலும் - எதிரேயிருந்து முகத்துக்கு

நேராகப் புகழ்கிற ஆற்றலிலும் - பேராளன் தனது மனத்தை விடியானிடம் பறிகொடுத்தான்.

பேராளனுக்கு நிறைய நண்பர்கள் உண்டு! அந்த நண்பர்கள், பேராளனைத் தூய்மையாக நேசித்தார்கள். அவர்களுடன் சேர்ந்துகொண்டு விடியான், பேராளனின் அலுவல்களையெல்லாம் தானும் கவனிப்பது போல நடித்துவந்தான். அந்த நண்பர்கள் இல்லாத நேரம் விடியான், பேராளன் காதில் அந்த நண்பர்களைப் பற்றி ஏதாவது 'கோள்' மூட்டி வந்தான். எல்லோரையும்விடத் தனக்கே பேராளனிடம் தனிப்பட்ட செல்வாக்கு ஏற்படுமாறு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டான். அவன் சதியில் ஏமாந்துபோன பேராளனும் தனது உயிருக்குயிரான நண்பர்களை ஒவ்வொருவராக விலக்கிவிட்டான். பேராளனை, இணைபிரியாமல் இருந்தும், இரண்டொரு தடவை பேராபத்துக்களில் இருந்து காப்பாற்றிய இளவேனில் என்ற நண்பன் மட்டுமே அருகிருந்தான்.

ஒரு நாள் இளவேனில் இல்லாத சமயம் பேராளனிடம், விடியான் தனது வலையைப் பின்னிடத் தொடங்கினான்.

"அந்த இளவேனில் இருக்கிறானே; அவன் மனம் ஓர் எரிமலை! உன்னைப் பற்றி அவன் பிறரிடம் பேசும்போது அந்த எரிச்சலைக் கொட்டுகிறான். மிகுந்த பொறாமை பிடித்தவன்."

இந்த வார்த்தைகளைப் பேராளனின் காதில் விடியான் நுழைத்துக் கொண்டிருக்கும்போது, இளவேனில் அந்த இடத்தில் வேகமாக நுழைந்து, விடியானின் காதைப் பிடித்துத் திருகிக்கொண்டே அவன் கன்னங்களில் மாறி மாறி அடித்துவிட்டான். பேராளன், இளவேனிலைத் தடுக்காவிட்டால் விடியான் கீழே வீழ்ந்தவன் எழுந்திருக்கவே முடியாது!

"அடே! மூடா! அறநூல்கள் சொல்லும் ஆக்கம் என்ன தெரியுமா? புறங்கூறிப் பொய்யாக உயிர் வாழ்வதைவிட வறுமையுற்று இறந்துவிடுதல் எவ்வளவோ மேல்!"


என்று இளவேனில் உரக்கக் கத்தினான். பேராளன், விடியானை அணைத்துக் கொண்டு இளவேனிலைக் கடிந்து கொண்டான்.

"நான் சொல்லவில்லை நண்பா! குறள் சொல்வதைச் சொன்னேன்; நான் வருகிறேன்!"

என்று கோபமாகக் கூறிவிட்டு இளவேனில் அந்த வீட்டை விட்டு வெளியேறினான். குறள் என்ன கூறுகிறது?

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்"

அதிகாரம் - 19 - புறங்கூறாமை; பாடல் - 183



“ஏடெடுத்தேன் கவியொன்று வரைந்திட

‘என்னை எழு’தென்று சொன்னது வான்”

என்பதாகப் பாரதிதாசன் பாடுகிறாரே கண்ணா; நீங்கள் ஏடெடுத்து எழுதத் தொடங்கினால் என்னை எழுதென்று எதிரே வந்து நிற்பது எது? அல்லது யார்?” எனக் கேட்டாள், அவன் தோள்மீது முகத்தைப் பதிய வைத்துக்கொண்டு அந்தப் பாவை!

“யாரைப்பற்றி எழுதுவதில் எனக்கு எல்லையற்ற பூரிப்பு! எதைப்பற்றி எழுதுவதில் எனக்கு அளவிலா மகிழ்ச்சி! உனக்கே தெரியுமே கண்ணே!”

என்றான், அவள் தாமரைக் கன்னங்களை வருடியபடி அவன்!

“சொல்லுங்களத்தான்! நீங்கள் சொல்லக்கூடாதா? அதை நான் சுவைக்கக்கூடாதா?”

சிணுங்கினாள்! சிந்திடும் புன்னகையால் கெஞ்சினாள்! “உம்” என்று கொஞ்சினாள்!

“பழங்கதை படிப்போர் சிலர், தேவலோகம் என ஒன்றிருக்கிறது - அங்கே தேன்பலாச் சுளைகளாய் ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமையென தெய்வப்பெண்கள் இருக்கின்றனர். மோனத்தவமிருக்கும் முனிவர்களை யெல்லாம் மோகம் தலைக்கேறித் தங்கள் இதழ்பானம் பருக வைக்கும் ஏந்திழையர்.

அவர்களின் கால் தரையில் படாது - கண் இமைகள் அசையமாட்டா என்றெல்லாம் கற்பனைகளை அளந்திடுவர் அல்லவா; அப்பெண்களை அணங்குகள் எனக் கூறுவர் ஒரு சாரார்! அந்த அணங்குகளைப்பற்றி எழுதலாமா என எண்ணினேன்; அவர்களை வென்றிடும் கற்புடைக் கட்டழகி - கயற்கண்ணழகி - என் கண்மணியொருத்தி என்னையே நினைத்து நெஞ்சு நெக்குருகிடும்போது அணங்குகளையா எழுதுவேன்?"

"யாரத்தான் அந்தக் கட்டழகி - கண்ணழகி - கண்மணி?"

அவள் பவள உதடுகள் துடித்தன; பதிலைத் தெரிந்து கொள்ள இதயம் விம்மியதை, அவள் மார்பகம் காட்டிக்கொடுத்தது!

"வண்டார் சோலையில் வண்ணமிகு மயில்கள் பலவற்றில் ஒரு மயிலை ஆய்வு செய்து தேர்ந்தெடுத்தேன். அதை எழுத்தோவியமாக்கலாமா என எண்ணினேன்! ஆனால், நான் ஆய்ந்து தேர்ந்த மயிலின் வனப்பையும் வசீகரத்தையும் இரண்டாவது இடத்திற்குத் தள்ளிவிட்ட எழில் ரதமாக, அவள் ஜொலிக்கின்றாள்! அதனாலே அவளை அணங்கு என்று பாராட்டுவதா? ஆய்மயில் என்று போற்றுவதா? இரண்டு புகழாரங்களும் புறங்காணுகின்றன! காரணம்; அவள் கனத்த ஒளிமிகு காதணிகளை அணிந்த பூமகளாகவே இருக்கிறாள். அணங்கையும் மயிலையும் அழகிலும் சாயலிலும் வெற்றி கொள்கிறாள்! சரி! விண்மகளுமல்ல; விரித்த தோகை மயிலுமல்ல; மண்மகள் என்று, என் மனங் கவர்ந்தவளைச் சிறப்பிக்கலாமா எனச் சிந்தித்தேன் - எதுவும் வேண்டாம்; என் நெஞ்சம் மயக்கியவள் என்று அவளைப்பற்றிக் குறித்துக்கொண்டேன்."

அவன் பதில் கேட்டபிறகும் அந்தப் பாவைக்கு நிறைவு ஏற்படவில்லை! "யார்தான் அந்த நெஞ்சு மயக்கி?" என்று சினந்து கேட்டு எழுந்துபோக முயன்றாள்!

"நீயேதான்!" என்று அவள் இடை தொட்டிழுத்து மடியில் கிடத்தினான்.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"

என்ற குறளை இசையுடன் பாடினான்! ஊடினாள்! பின்பு கூடினர்!

அதிகாரம் - 109 - தகையணங்குறுத்தல்; பாடல் - 1081

மாலும் = மயங்கிடும்





கம்பவாரிதியின் கம்பராமாயணம்

அடேடே! என்ன கூர்மையான வாள்! கடுமையான இடியொலிகளுக்கிடையே காரிருளில் பளிச்சிடுகின்ற மின்னலைப்போலக் கண்ணைப் பறிக்கிறதே, அந்த வாளின் பளபளப்பு! அந்த வாளை உருவாக்கித்தந்த கொல்லரின் திறமையே திறமை! அந்த வாள் போன்ற படைக்கலன்களைப் பெற்றிருக்கிற ஒரு படையைத் தோல்வியென்பது தொட்டுப் பார்க்கவும் முடியாது. களத்தில் அந்த வாள் சுழன்றாலே, பகைவர் அதிர்ச்சியடைவர். ஒரே வீச்சில் இரண்டு மூன்று தலைகளைத் தூக்கியெறிந்து பந்தாடக்கூடிய வலிமைமிக்க வாள்; இதோ அந்த வாளை, ஒரு கரம் தூக்கிப்பிடிக்கிறது; வாளின் ஒளிக்கீற்று வான்மீது கோடுகளைக் கிழிக்கிறது.

ஓலைச்சுவடிகள் இறைந்து கிடக்கின்றன. அந்தச் சுவடிகளுக்கு மத்தியில் அந்த மனிதன். அவன் விழிகள், சுவடிகளின் மீது மொய்த்துக் கிடக்கின்றன. அகமென்றும் புறமென்றும் ஐம்பெருங் காப்பியமென்றும் எத்தனை எத்தனையோ சுவடிகள்! அத்தனையும் அவன் படித்து மனத்தில் பதிய வைத்து விட்டானா? அல்லது பார்ப்பவர்களுக்கு அப்படியொரு மயக்கமா? அழகு சிந்தும் நூல்கள் - அறிவு மணக்கும் நூல்கள் - பண்பாடு உணர்த்தும் நூல்கள் - அறமுரைக்கும் நூல்கள் - அனைத்தையும் வாரிக் கட்டிக்கொள்கிறான்; எழுந்து கம்பீரமாக நடக்கிறான். அவனைப் பார்த்து இருவர் பேசிக்கொள்கிறார்கள். "ஏ, அப்பா! எவ்வளவு கருத்துக்கள் மூளையில்

ஏறியிருக்கின்றன. இன்று அவைக்களத்தில் இவரை எதிர்த்து வாதிடுவோர் புறமுதுகிட்டு ஓடுவர்! அதில் சந்தேகமேயில்லை.” புகழ்ந்தவர்களைப் பார்த்து ஒரு புன்னகை உதிர்த்துவிட்டு அவன் போய்விடுகிறான்.

இப்போது முதல் காட்சிக்குச் செல்வோம். கூர்மைகொண்ட போர்வாளை ஒரு கரம் எடுத்ததல்லவா! அந்தக் கரத்துக்குரிய உருவம், களம் நோக்கி வாளுடன் சென்றது. அந்த உருவைப் பார்த்துப் பகைவர்கள் நகைத்தனர். உருவமோ வெட்கப்பட வில்லை. கைவாளைச் சுழற்றியது. அப்போது ஒரு யானை, தனது துதிக்கையால் அந்த வாளை அலட்சியமாகத் தட்டிவிட்டு அந்த உருவத்தை உற்று நோக்கியவாறு நின்றது! அது கண்டு நடுங்கிய அந்த உருவம் ‘அய்யோ’ என அலறியவாறு ஓடியது. “பேடி! பேடி!” என உரக்கக் கூறிச் சிரித்தனர் களத்தில் நின்றோர்.

மீண்டு, இரண்டாவது காட்சிக்குச் செல்வோம். ஆர்ப்பரிப்புடன் அவைக் களத்திற்கு வாரிக்கட்டிய ஓலைச்சுவடிகளுடன் சென்றவன்; அவனை எதிர்த்து வாதிடக் கூடியவர்களை ஒருமுறை நோக்கினான். “ஆகா! தமிழிலக்கிய நூல்கள் அனைத்துடனும் வந்திருக்கிறானே; இன்று வெற்றி நம் பக்கமே!” என அவனைச் சார்ந்தோர் மகிழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவன் கையில் தமிழ்ப் பெரு நூல்கள்! அவற்றையே கருத்தில் தாங்கியிருந்த எதிர் அணியினர் அதே நூல்களில் இருந்து சான்றுகளைக்காட்டி உரையாற்றினர். திடீரென்று ஒரே பரபரப்பு! ‘ஓலைச் சுவடி மனிதனைக் காணவில்லை! ஓடிவிட்டான் அவையைவிட்டு!’ மண்டபம் சிரிப்பால் அதிர்ந்தது!

பகையைச் சந்திக்கப் பளபளப்பான வாளுடன் சென்றவனையும் - அவையைச் சந்திக்கப் பற்பல நூல்களுடன் சென்றவனையும் - நமது அகக்கண்கள் மாறிமாறிக் காட்சிகளாக்கிக் கொள்கின்றன!

நாமும் நம்மையறியாமல் சிரித்துவிடுகிறோம்!

வள்ளுவரும் அவையஞ்சும் அந்த மனிதனைப் பார்த்துச் சிரிக்கிறார். அவனை யாருடன் ஒப்பிடுவது எனச் சிந்திக்கிறார். பகையஞ்சும் அந்தப் பேடி, அவர் நினைவுக்கு வரவே; குறள் வடித்துக் கொடுத்துவிடுகிறார்.

அதுவே இது:

“பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல்”

அதிகாரம் - 73அவை அஞ்சாமை;பாடல் - 727



தோற்றப் பொலிவும் தோள் வலிவும் கொண்டவர்தான் வீரராக்கியர்! ஒரு காலத்தில் நாட்டுக்குத் தளபதியாகப் பொறுப்பேற்றிருந்தார்! பகை நாட்டுடன் நடந்த போரில் சிறைப்பட்டு, நீண்ட நாட்களுக்குப்பிறகே விடுதலை பெற்றார். இரு நாடுகளுக்கும் ஏற்பட்ட நல்லுறவு உடன்பாட்டின் அடிப்படையிலேதான் வீரராக்கியருக்கு விடுதலை கிடைத்தது. சிறையில் வாடிய அவரது தியாகத்தை மன்னர் மதித்தார் என்றாலும் பகை நாட்டாரை வீழ்த்துகின்ற திறமை வீரராக்கியருக்கு இல்லையென்பதை உணர்ந்து, அவரிடமிருந்து தளபதிப் பொறுப்பைப் பறித்து வேறொருவருக்கு அளித்துவிட்டார்.

பதவியிழந்த தளபதி வீரராக்கியர், பழைய நூல்களுக்கு விளக்கவுரை விரிவுரைகள் எழுதிக் காலத்தைக் கழித்துவந்தார். முதுமையும் அவரைத் தழுவிக்கொள்ளத் தொடங்கியது. வயது ஏற ஏற வீரராக்கியருக்குக் குடும்பத்தைப் பற்றிய கவலையும் தன் முதுமைக் காலத்திலும் தனக்குப் பிறகும் வசதியோடும் ஆடம்பரத்தோடும் தன் குடும்பம் வாழ்ந்திட செல்வத்தைக் குவிக்க வேண்டுமென்ற ஆசையும் தோன்றியது!

மண்மீது அவருக்கிருந்த பற்று இளமைக் காலத்தில் நாட்டுப் பற்றாக இருந்தது. இப்போதோ அது நிலபுலப் பற்றாக மாறிவிட்டது! தோட்டம் துரவுகள், காட்டு நிலங்கள், மலை வளங்கள் இவற்றைச் சேர்த்திட வேண்டுமெனத் துடித்தார்.

மன்னனிடம் சென்று, தனது அறிவாற்றலை மட்டுமாவது பயன்படுத்திக்கொள்ள அமைச்சர் பதவியை யாசித்தார். மன்னவரோ, மௌனம் சாதித்துவிட்டார்.

சிறிது காலத்திற்குப்பிறகு மன்னர் இயற்கை எய்திடவே, மன்னரின் தம்பி 'செந்தமிழ்வேள்' என்பான் ஆட்சிக்கு வந்தான். அவனிடமும் சென்று வீரராக்கியர் கெஞ்சினார் பதவிக்கு! முதியவராயிற்றே என்ற இரக்க நெஞ்சத்துடன் இளைய மன்னன் 'வேள்', அவரை அமைச்சர்களின் ஆலோசனை அவைக்குத் தலைவராக நியமித்தான். அந்தப் பதவியைப் பயன்படுத்திக்கொண்டு, அவர் வேண்டிய மட்டும் கையூட்டுகளைப் பெற்றுத் தன் குடும்பத்தைச் செல்வச் செழிப்பில் ஆழ்த்திக்கொண்டார்.

ஏதோ ஒரு காரணத்தால் பக்கத்து நாட்டான் திடுமெனப் படையெடுத்து, வேளின் அருகிருந்த சதிகாரர்கள் துணையுடன் வேளின் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான்! அதுவரையில் வேளின் புகழ்பாடி விரைந்து பொருளீட்டிக்கொண்ட வீரராக்கியர், இப்போது பக்கத்து நாட்டானின் சிறப்புகளை முழக்கத் தொடங்கினார்.

போரில் சதிச்செயல் புரிந்தவர்களால் தோல்வியுற்ற 'வேள்', மீண்டும் தனது நாட்டைக் கைப்பற்ற படை தயாரித்துக்கொண்டிருந்தான். வீரராக்கியரோ தனக்குப் பதவியளித்த வேள் மீது குறைகள் பலவற்றை அடுக்கி, அதன் காரணமாக பகைநாட்டானின் பாசத்தைப் பெற்று அந்தப் பதவியில் ஒட்டிக்கொண்டார்.

நாடிழந்து பல்வேறு பகுதிகளில் பாசறையமைத்துப் படை திரட்டிக் கொண்டிருந்த வேளிடம், அவனது தளபதிகளில் சிலர் சென்று வீரராக்கியர் போக்குக் குறித்துக் கூறினார்கள்.

"இப்படித்தான் வாழவேண்டுமென்றில்லாமல், எப்படியும் வாழலாம் என்று திட்டம் வகுத்துக்கொண்டவர்கள், நிலைக்காத செல்வத்தைப் பெறலாம்! ஆனால், நிலைத்த புகழைப் பெற முடியாது."

இதை வேள் சொல்லிவிட்டுத் தளபதிகளைப் பார்த்து, "இத்தகைய மனிதர்களைப் பற்றி வள்ளுவர் கூறியுள்ளது தெரியுமா?" எனக் கேட்டுவிட்டு அதையும் விளக்கினான்:


"புகழற்ற வாழ்வுடன் தங்களது உடம்பைச் சுமந்து கொண்டிருக்கிறார்களே; அந்த உடம்பைச் சுமந்த நிலம்கூட வளமான விளைவு இல்லாமல் குன்றிவிடும்."

அதற்கு இது குறள்:

"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்"

அதிகாரம் - 24 - புகழ்; பாடல் - 239

வசை - பழிப்புவண்பயன் - வளமான பயன் இசை - புகழ்



வறுமையில் வாடும் புலவரின் மகன் அவன். இருபது வயது தாண்டிய இளைஞன். அவனிடம் கற்பனைச்செல்வம் கரை புரண்டதே தவிர, அவர்கள் வீட்டில் அடுப்பு ஒரு வேளை எரிவதற்கே அலைந்து திரிந்து கடன் வாங்கவேண்டும். கட்டழகன்கூட அந்தக் காளை! வறுமைக்கோடு, செல்வச் செழிப்பு இவற்றையெல்லாம் பார்த்து அளவெடுத்துக்கொண்டா காதல் எனும் காட்டாறு பெருக்கெடுத்து ஓடுகிறது? அந்த வெள்ளத்தில் சிக்குண்டான் அந்த இளங்கவிஞன், வளம் தழைத்த குடும்பத்தின் வசந்தம் அவள்! வாலிபக் கவிஞனின் வண்ணத் தமிழுக்கு அடிமையானாள்! வழக்கம்போல் இரு குடும்பத்தாருக்கும் தெரியாமல் மலர்ந்த காதல்; மணம் வீசத் தொடங்கிற்று!

நாட்கள் நகர நகரக் கவிஞனின் இளம் இதயத்தில் நடுக்கம் பிறந்தது. "நீயோ விண்ணில் ஒளிவிடும் நட்சத்திரம்! நானோ மண்ணில் கிடக்கும் கரிக்கட்டை! நமக்குள் மனப் பொருத்தமிருக்கலாம்; மணப்பொருத்தம் உண்டென்று யார்தான் ஒப்புவார்? அதிலும் பெருஞ்செல்வத்தில் புரளும் உன் பெற்றோர் ஏற்றிடுவரோ" எனக் கூறித் தன்னை மறந்து விடுமாறு கேட்டுக்கொண்டான், அவளிடம்!

திடுக்கிட்டாள்! திகைத்தாள்! "நீங்கள்தான் பேசுகிறீர்களா? 'மீனை அள்ளும் வலையோ - வலையில் துள்ளும் மீனோ இந்தக் கண்கள்?' எனக் கவிதையால் கேட்டு என் இமைகளை இதழ்களாக்கி முத்தமிந்தீர்களே; அந்தக் கண்களை நீரில் ஊறவைக்க எப்படியத்தான் துணிந்தீர்கள்?" அழுதாள் அவள்!

அவன் ஊமையாக உட்கார்ந்திருந்தான்.

"ஏழையின் மகனைக் காதலிப்பதாக என் தாய் தந்தையரிடம் நான் சொல்ல வில்லை. உண்மைதான்! என்னுடன் நீங்களும் ஒத்துழைத்து 'ஆம்' என்று கூறவேண்டும்! மணம்

முடிந்தபிறகு என் வீட்டாரைச் சமாதானப்படுத்திக்கொள்ள என்னாலே முடியும்! வாருங்கள், முதலில் உங்கள் தந்தையிடம் சென்று சம்மதம் பெற்று வரலாம்!”

அவள் பேச்சைக் கவனித்தவாறு, அவன் அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவள் விடவில்லை; அவனை இழுத்துக்கொண்டு புலவரைக் காணப் புறப்பட்டாள்.

இருவரும் புலவர் முன்னே நின்றனர். அவரோ, தூங்கும் அடுக்களைக்கருகே ஒரு கிழிந்த பாயில் அமர்ந்து பனை ஓலைகளில் கவிதைகளைப் பதித்துக் கொண்டிருந் தார். இருவரையும் கண்டு வியப்பு மேலிட்டவராகத் தன் மகனிடம் கேட்டார்; “யார் இந்தப் பெண்?”

“அப்பா!” என்று மட்டுமே இளங்கவிஞனின் உதடுகள் அசைந்தன! அதற்குள் அந்தக் துணிச்சல்காரக் கிள்ளை, “நாங்கள் இருவரும் இதயமாரக் காதலிக்கிறோம், தங்களின் வாழ்த்துப் பெற்றுத் திருமணம் செய்துகொள்ள...” என்று முடிக்கவில்லை! புலவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது!

“கால் பணத்துக்கு வழியில்லை! கடன் கொடுக்கவும் இனிமேல் ஆள் இல்லை! காதல் வாழ்கிறதோ காதல்! ஏண்டா முட்டாள்! இதெல்லாம் என்னடா கூத்து? எங்கே அகப்பட்டாள் இந்த வேசிக்குட்டி?”

பொலபொலவென வார்த்தைகளைக் கொட்டிவிட்டார்! அச்சமின்றி அவனை அழைத்துவந்த அந்தப் பச்சைக்கிளி, “அய்யோ!” எனக் காதுகளைப் பொத்திக் கொண்டு திசை தடுமாறி ஓடிற்று! அவனும் அவளைத் தொடர்ந்து பறந்தான்! சுழன் றோடும் பேராறு! அந்தச் சுழலில் அவள் சிக்கிச் சாவதற்குள் அவன் தடுத்துத் தூக்கிவிட்டான்.

மெல்ல அவள் செவ்விதழ்கள் அசைந்தன! “நற் குடும்பத்தில் பிறந்தவர் நீங்கள்! உங்கள் தந்தையும் அவ்வாறே! இப்படி எண்ணியிருந்த என்னைப் பார்த்தா இந்த இழிமொழி! இல்லை; இடிமொழி!”

தேம்பித் தேம்பி அழுதாள்! அவளை இறுக அணைத்துக்கொண்டான்! அந்த அணைப்பின் மகிமையால் மூடிக்கொண்ட அழகிய கண் இமைகளில், தன் இதழ்களால் ஒத்தடம் கொடுத்தான்.

“என் கோகிலமே! நீ குறள் படித்ததில்லையா? வறுமையெனும் கொடுமை; நல்ல குடியிற் பிறந்தவர்களையும் அதன் கொடுமையின் வெப்பத்தால் இழிவான சொற்கள் பிறப்பதற்கான ஒரு சோர்வை உண்டாக்கிவிடும் என எவ்வளவு உருக்கமாகக் கூறுகிறது! அதற்கு என் தந்தையென்ன விதிவிலக்கா! அதனால் அந்த இழிதகைச் சொல்லைப் பொருட்படுத்தாதே!”

அவள், அவன் மடியில் மட்டுமல்ல; அந்த விளக்கத்திலும் ஆறுதல் பெற்றாள்! ஆற்றோரத்தில் “நிச்சயதாம்பூலம்” நடத்திக்கொண்டனர்! மாற்றிக் கொள்ளத் தாம்பூலம் இல்லாவிட்டாலும்; தாம்பூலங்களாயின தளிர் இதழ்கள் நான்கும்.

“இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்”

அதிகாரம் - 105 - நல்குரவு; பாடல் - 1044

இற்பிறந்தார் = நல்ல குடிப்பிறந்தவர்; இளி = இழிவு; இன்மை = வறுமை



அழகு சுமந்து வரும் பெண்ணைப் பருவச் சுமையால் கனத்துப் பருத்த இதயம் படைத்த ஒரு வாலிபன் பார்க்கிறான். பார்த்தவன், தன் பாதையில் போவதுதானே நியாயம்? அந்த அழகியின்மீது பழி கூறி விட்டுப் போகாவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது போலும்! மனித வழக்கமே அப்படித்தான் ஆகிவிட்டது. வானத்தில் தவழும் நிலவைப் பார்த்து, "ஏ, நிலவே! ஏன் என்னை இப்படித் தகிக்கிறாய்?" என்று கோபித்துக் கொள்வான். சலசலவெனப் பாயும் நீரோடை நிலங்கிழித்துச் செல்வதைப் பொறாமைக் கண்களோடு மனிதன் பார்த்து வயிற்றெரிச்சலை வெளியிடுவான். 'நான் வருந்தும்போது நீரோடை இப்படி இசைபாடிச் செல்வதா?' என்று கவிதா உள்ளத்தோடு வசை பொழிவான். அத்தகைய ஓர் இளைஞனைத்தான் இதோ நம் கண் முன்னே - மன்னிக்கவும் - ஒரு மங்கையின் கண் முன்னே - நிற்க வைத்துக் கதற வைக்கிறார் வள்ளுவப் பெருந்தகையார்.


"கொடுமை பொருந்திய புருவங்கள் கோணுதல் இல்லாமல் தடுக்குமானால், இவளுடைய கண்கள் என்னை நடுங்க வைக்கும் அளவுக்கு என் மீது பாயமாட்டா!"

அவளது பார்வையில் பட்டுத் தெறிக்கிறதாம் அவனது பருவ நெஞ்சம்! அந்த இன்பவேதனையில் புலம்புகிறான். அய்யகோ; அணை சரியாகப் போடப் பட்டுத் தடுக்கப்பட்டிருந்தால் விரகதாப வெள்ளம் என்னை மூழ்கடித்திருக்காதே! என்ற கருத்திலே கூறுகிறான், 'அவள் சுந்தர விழிகளை - அவள் புருவங்கள் சுவர் போலத் தடுத்திருக்கக்கூடாதா' என்று! வள்ளுவர் நடையில் அதைப் படியுங்கள்:

"கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்(கு)அஞர்
செய்யல மன்இவள் கண்"

அதிகாரம் - 109 - தகையணங்குறுத்தல்; பாடல் - 1086

நடுங்கு அஞர் செய்யல - நடுக்கம் தரும் துன்பத்தைச் செய்ய மாட்டா.



பழங்காலத்தில், சிற்றூர் ஒன்றில் ஒரு போட்டி நடத்தப்பட்டது. போட்டியைக் காணப் பெருங்கூட்டம் திரண்டிருந்தது. அந்தவூரின் தலை நரைத்த முதியவர் ஒருவர் போட்டியின் நடுவராக இருந்து, வெற்றி பெற்றவர் பெயரை அறிவித்து, வாகைமாலை சூட்டுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. எத்தகைய போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

விலை உயர்ந்ததும் மதிப்பு மிகுந்ததுமான அணிகளை, யார் பூண்டு வருகிறார்களோ அவர்களில் வெற்றி பெற்றவர் யார் என்பதை அந்த முதியவர் ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவார்.

அந்த ஊரிலேயே பெருஞ்செல்வத்திற்குரியவன், வீரசிங்கம் என்பான்! அவனை மிஞ்சக்கூடிய பொருள் வசதியும் அணிமணிகளும் கொண்டவர்கள் அந்த வட்டாரத்திலேயே யாரும் கிடையாது! அவன் அந்தப் போட்டியில் கலந்து கொள்ளப் போவதாக முன்னரே அறிவித்துவிட்டான்.

“நானும் அந்தப் போட்டியில் கலந்து கொள்கிறேன்”

என்று இன்னொருவனும் அறிவிப்புச் செய்திருந்தான்! அவன் பெயர் அன்பானந்தன்! வீரசிங்கத்திற்கு அடுத்தபடியாகச் செல்வம் படைத்தவன்!

அன்பானந்தன், வெற்றியிலே மிக்க ஆர்வங்கொண்டுள்ளான் என்றும் அதனால் தனது செல்வத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டு இணையற்ற அணிகளைப் பூண்டு அந்தப் போட்டியில் கலந்துகொள்ளக் கூடுமென்றும் எனவே வீரசிங்கம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமென்றும் அவனைச் சுற்றியிருந்தோர் அறிவுரை கூறினர்.

வீரசிங்கமும் வெற்றியொன்றையே குறிக்கோளாகக்கொண்டு, விலை மதிப்பற்ற அணிகளைத் தயார் செய்யுமாறு பொற்கொல்லர்களுக்குப் பொருள் வழங்கினான்.

போட்டிக்குரிய மேடையில் வீரசிங்கமும் அன்பானந்தனும் தோன்ற வேண்டிய வேளை வந்துவிட்டது! குழுமியிருந்தோர் விழிகளை அகலத் திறந்து, அந்த மேடையையே நோக்கியவண்ணமிருந்தனர்!

முதலில் வீரசிங்கம் வந்து நின்றான். கதிரொளியை வெல்லக்கூடிய வைரமணிகள் கொண்ட குண்டலங்கள் அவன் காதுகளில்! பத்தரைமாற்றுப் பொன்னிழையில் கோக்கப் பட்ட ஒன்பான்மணிகளும் குலுங்கிடும் மாலையும் அதன் முகப்பில் கொற்கை முத்துக் களால் ஆன பதக்கமும் கழுத்தை ஈர்த்து அகன்ற மார்பில் புரண்டுகொண்டிருந்தன.

மாணிக்கக் கல் பதித்த காப்புகள் கைகளில்!

போட்டி காண வந்திருந்தோர் வீரசிங்கத்தின் அணிகளைக் கண்டு, திறந்த வாய் திறந்தபடியிருந்தனர். அவனை வென்றிட அன்பானந்தனால் இயலாது என முடிவு கட்டினர். அப்போது அன்பானந்தன் அந்த மேடைக்கு வந்தான். கூட்டம் ஆச்சரியத்தில் மூழ்கியது. காரணம்! அன்பானந்தன் காதுகளிலோ- கழுத்திலோ- கைகளிலோ எந்த அணியும் இல்லை!

அவனைப் பார்த்த வீரசிங்கம் கலகலவெனச் சிரித்தான்! இறுமாப்புடன் நெஞ்சை உயர்த்தி, வெற்றிப்பூரிப்பில் விழிகளை மக்கள் மத்தியில் ஓடவிட்டான்! "முதியவர் எம்மிரு வரையும் ஒப்பிடவே தேவையில்லை! நானே வென்றேன்!" என்று முழங்கினான்.

"வீரசிங்கம் அவர்களே! தாங்களே வெற்றி பெற்றதாக இருக்கட்டும்! போட்டி நம் இருவருக்குமிடையே அல்ல! ஒன்றை மறந்து விடாதீர்கள்! நாம் இருவரும் சேர்ந்து முதியவராம் இந்தப் பெரியவரின் அறிவாற்றலுக்குத் தேர்வு வைத்திருக்கிறோம்! அவர் கூறட்டும் தீர்ப்பை!"

அன்பானந்தன், இவ்வாறு கூறியதும் வீரசிங்கம் கேலியாகச் சிரித்து-

"என்னை வெற்றிகொள்ள, வேறொரு செல்வந்தன் இந்த ஊரில் இருக்கிறானா? இல்லை! இல்லை!"

என்று உரக்கக் கத்தினான். அன்பானந்தன், அவனைப் பார்த்து, "வெற்றி வீரரே! நீவிர் வாழ்க!" என்று வாழ்த்தினான்.

அப்போது முதியவர் குறுக்கிட்டார்!

"இந்த இருவரில் வெற்றி பெற்றவர் அன்பானந்தனே! வீரசிங்கமல்ல!"

முதியவர் தீர்ப்புக் கேட்டு கூட்டத்தினர் அதிர்ந்தனர்! அவர் விளக்கினார்:

"பணிவான இயல்பும், இன்சொல்லும்தான் ஒருவனுக்கு உண்மையான அணிகலன்களாகும்! மற்றைய அணிகள் எவ்வளவு விலைமதிப்பற்றவையாக இருப்பினும் அவை அணிகள் அல்ல; என்று வள்ளுவர் கூறியிருக்கிறார் - அதையொட்டியே இந்தத் தீர்ப்பு வழங்கப்படுகிறது."

முதியவரின் விளக்கம் கேட்டு, வீரசிங்கம் தலைகுனிந்தான்! அன்பானந்தன் கழுத்திலே வெற்றிமாலை ஏறிக்கொண்டது!

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற"

அதிகாரம் - 10 - இனியவை கூறல்; பாடல் - 95



தென்பாண்டியன் குமரியின்

இழித்துரைத்தல், பழித்துப் பேசுதல், கடுமொழி கூறுதல், சுடுமொழி பொழிதல், ஊரார் தூற்றிடத் தீவினைகளில் ஈடுபடுதல், உலகம் பழிக்கும் செயல்களில் உவப்புடன் இணைந்திடல் - இப்படிச் சிறுமைக்குணமுடைய கூட்டமொன்று ஆதிக்கம் பெற்று ஆடிக்களித்தது! அதற்கெதிரான முழுவினர், பண்பாடு காத்திடவும் பழம் பெருமை போற்றிடவும் பணிகள் பல ஆற்றினர். அந்தக் குழுவினர் பணியைக் குலைத்திடும் நோக்குடன், சிற்றினத்தாராம் சிறுமைக் குணத்தினர், தமது ஆதிக்க வல்லமையைக் காட்டியும் அளவிலாப் பொருளாசையைக் காட்டியும் ஒருசிலரைத் தம்பால் இழுத்துக் கொண்டனர். ஆசைகள் அலைமோதிய நெஞ்சினர் அவர் வயப்பட்டதில் ஆச்சரியம் இல்லை அல்லவா? பண்பாட்டுக் குழுவில் இருந்து நழுவி சிற்றினத்துடன் சேர்ந்தோரிலும் புலமை மிக்கோர் இருந்தனர். இருந்தென்ன பயன்? அங்கு போய்ச் சேர்ந்தவுடன், அவர்கள் பெற்றிருந்த புலமையும் ஆற்றலும் புகழும் எங்கோ போய் ஒளிந்துகொண்டன. குழுவில் இருந்தபோது புலியென நடைபோட்டோர் புழுவென நெளிந்தனர், சிற்றினக் கழிவுநீர்த் தொட்டியில்! அழகு தமிழ் நடமாடிய நாவில் அழுக்குச் சொற்கள் ஆலவட்டம் சுழற்றின! எழிலார்ந்த மொழிக் கருவூலங்களாகத் திகழ்ந்த அவர்தம் எழுத்துக்கள், கல்லறைச் சவங்களாக அழுகி நாற்றமெடுத்தன! அவர் என்செய்வார்! சேர்ந்த இடம் அப்படி!


பாறையின் உச்சியிலிருந்து பளிங்குபோல் நீர் கொட்டுகிறது! அந்த நீர் வீழ்ச்சியில் ஆடவர் பெண்டிர் குளித்துக் களிக்கின்றனர். வெள்ளியை உருக்கி ஊற்றுவதுபோல் கண்கொள்ளாக் காட்சி, அந்தக் குளிர் நீர்வீழ்ச்சி! தங்கநிற மேனியில் அத் தண்ணீர் பட்டுத் தெறிக்கும்போது பொங்கும் மகிழ்ச்சியால் பூக்களைப் போல் சிரிக்கின்றனர் பூவையர்! பாறையை விடுத்துத் தரையில் விழுந்த தெளிநீர் கண்ணாடிபோல ஓடுகிறது! அதன் பின்னர் கரிசல் நிலத்தில் தாவுகிறது! பளிங்காகவும் கண்ணாடியாகவும் தெளிந்த நிலையில் விளங்கிய அந்த அருவியின் நீர், தனது இயல்பை இழந்து, தான் சென்றடைந்த கரிசல் நிலத்தின் வண்ணத்தைப் பெறுகிறது. இதைத்தான் வள்ளுவர் அழகாகச் சொல்கிறார்:


"சேர்ந்த நிலத்தினுடைய தன்மையால் - நீரானது வேறுபட்டு அந்த நிலத்தின் தன்மையை அடைந்துவிடும். அதுபோல மக்களுடைய அறிவும்; தாங்கள் சேர்ந்த இனத்தின் தன்மையைப் பெற்றதாகிவிடும்."

இதோ குறள்:

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இன்பத்தியல்ப தாகும் அறிவு"

அதிகாரம் - 46 - சிற்றினம் சேராமை; பாடல் - 452





புதிய புதிய நூல்களைப் படித்துக்கொண்டே யிருக்கவேண்டும் அவனுக்கு!

பழங்கால இலக்கியங்களைத் திரும்பத் திரும்பப் படித்துச் சுவைப்பான்!

மறுமலர்ச்சி இலக்கியங்கள் எவை வரினும் அவன் கைகளில் ஏறிக் கொள்ளும்! கண்வழி சென்று கருத்தறையில் அமர்ந்துகொள்ளும்!

நில நூலா - வரலாறா - அறிவுத்துறை ஏடுகளா - கட்டுரையா - கவிதைகளா - நவீனங்களா - நாடகங்களா - அனைத்தையும் படித்து முடித்தால்தான் அவன் ஆசையில் ஒரு துளி நிறைவேறும்.

படித்தவை போக எஞ்சியிருப்பவைகளுக்காக ஏங்கிக்கொண்டிருப்பான். அவ்வளவு அறிவுப்பசி அவனுக்கு! இதயத்தில் மூண்டிருந்த அந்தப் பசிக்கு ஈடுகொடுக்க, நூல்நிலையங்களே விருந்து மண்டபங்களாயின.

இரைப்பை இருக்கிறதே; அது உண்டிட உண்டிட ஓய்வு தேவை என்று எச்சரித்துவிடும்!

இதயப்பையோ அறிவுத்தீனி கிடைத்திடக் கிடைத்திட விரிந்து கொடுக்கும்! தின்ற தீனி செரித்துக்கொண்டேயிருக்கும்! புதிய தீனியைத் தேடிக் கொண்டேயிருக்கும்.

நூல்களை நாடிப் பெற்று நூற்பொருளைத் தெளிவாய்க் கற்ற ஒருவன்; தான் - புதிது புதிதாக அறிந்திட அறிந்திட, தனக்கு ஏற்கெனவே இருந்த அறியாமையை எண்ணிக்கொண்டு வியப்படைகிறானாம்! இன்று ஒரு நூற்பொருளைப் புரிந்துகொண்டு அறிவு நீரோடையில் மூழ்கிடும்போது - நேற்று குளித்தெழுந்த நீரோடை இதனினும் சிறப்புக் குறைந்ததேயென்று முடிவுக்கு வருகிறான்.

இப்படி நூற்பொருளைப் புதிது புதிதாகக் கற்றுணரும்போது அவனுக்கு ஏற்படும் இன்ப உணர்வை, எதனுடன் ஒப்பிடுவது எனச் சிந்திக்கிறான்.

அவனது அருமைக் காதலியுடன் கூடும்பொழுதெல்லாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளையும் இன்பம் புதுமையாக இருந்து - அதற்கு முன் கண்ட சுகம் இதற்கு இரண்டாவதே என எண்ணிடத்தக்க அளவுக்கு அமைகிறதல்லவா - அந்த ஓர் உணர்வுடன் மட்டுமே ஒப்பிட முடியுமென்ற முடிவுக்கு வருகிறான்.

"கண்ணின் மணியே! இன்று கண்ட இன்பம் நான் இதுவரையில் கண்டதில்லை!"

"நானும்தான் அத்தான்!"

ஒவ்வொரு முறையும் இப்படியே இன்ப உணர்வில் மயங்கி, இதற்கு முன்பு இதனை அறியாமல் இருந்தோமே என நினைத்திடும் காதலர் நிலைதான், ஒவ்வொரு நூலையும் படித்து அதன் நூற்பொருளை அறிந்திடுகின்றவருக்கும்! இதுவரை இருந்த அறியாமை, புதிது புதிதாக, அறிந்திட அறிந்திட வெளிப்படுவதுபோல, இதுவரை கற்றிடாத கூடல்வகையும் புதுப்புது விதமாய்க் கூடிக் களிக்கும்போது புலப்படுகின்றன போலும்!

"செந்நிற அணிகலன்களைப் பூண்ட இவளிடம் பொருந்தும்பொழுதெல்லாம் ஏற்படுகின்ற இன்பத்தை உணர்வது, நூற்பொருளை அறிய அறிய முன்னிருந்த அறியாமையை உணர்ந்தாற் போன்றது"


என்றார் திருவள்ளுவர்! என்னே அழகான உவமை! இதோ அந்தக் குறள்:

"அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு"

அதிகாரம் - 111 - புணர்ச்சி மகிழ்தல்; பாடல் - 1110

செறிதோறும் = சேர்ந்து பொருந்தும்போதெல்லாம்





"தமிழுக்கு அமுதென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்."

அடடா! புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எத்துணை உணர்ச்சிப் பெருக்குடன் இந்த வரிகளைப் பாடியுள்ளார். தமிழும் உயிரும் ஒன்றாம்! அதற்கு அமிழ்தம் எனப் பெயர் இருந்தாலும்கூட, உயிருக்கு நேராக அல்லவா விளங்குகிறது! அந்த உயிர்த்தமிழைக் காத்திடத்தானே தமிழகம் போர்க்கோலம் பூண்டது! "வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் வீரத்தோள்கள்" என ஆயிரமாயிரம் தமிழர்கள் குருதி கொட்டினர்; சிறைக்கோட்டம் சென்றனர். எட்டுத் தமிழ்ச் சீயங்கள் எந்த நாட்டிலும் இல்லாத வரலாறு படைத்து, மொழி காக்கத் தீக்குளித்து மடிந்தனர்!

எனவே; தமிழா! 'கிளம்பிற்றுக்காண் தமிழ்ச் சிங்கக்கூட்டம் - கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை!' எனும் புரட்சிக் கவியைப் போர்ப் பரணியாக்குக! "தமிழன் என்று சொல்லடா - தலைநிமிர்ந்து நில்லடா!" என்ற நாமக்கல் கவிஞரின் வீரங்கொப்பளிக்கும் பாட்டு முழக்கத்தைச் செய்திடுக! "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே!" பாரதியாரின் இந்தப் பாடல் தரும் உணர்ச்சிகளை எதிரொலித்து, எக்காளமிட்டுக் கிளம்புக!

தமிழனின் கீர்த்திக்கொடி பட்டொளி வீசிப் பறந்தது பல நாடுகளில்! அவன் செலுத்திய கலங்கள், கடல் அலைகளைக் கிழித்துக்கொண்டு அயல்நாடுகள்

பலவற்றுடன் வாணிபம் நடத்தியதாக வரலாறு, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உண்டு! அதங்கோட்டு ஆசானின் அறிவுசால் மாணவர் தொல்காப்பியர், நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழுக்கு இலக்கணம் கண்டார் என்றால்; அதற்கு முன்பு நாலாயிரம் ஆண்டுகளாவது வளர்ந்த மொழியாகத்தானே நம்மொழி - செம்மொழி- தமிழ்மொழி இருந்திருக்கவேண்டும்!

'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி நம் தமிழ்க் குடி'யன்றோ! அகமென்றும் புறமென்றும் வாழ்வுக்கு இலக்கியம் வகுத்துக் கொண்ட பெருமைமிகு இனமல்லவா தமிழ் இனம்! கற்கண்டெனும் சொற் கொண்டு கண்ணகியின் கதைக்குச் சிலப்பதிகாரக் காப்பியம் வடித்த இளங்கோவும் அவர் அண்ணன் செங்குட்டுவன் இமயம் வரை படை நடத்திக் குயிலாலுவம் எனும் இடத்தில் கனகவிசயர் தலையில் கல்லேற்றிக்கொணர்ந்து அந்தக் கற்பரசிக்குச் சிலை வடித்த செயலும் - தமிழ் இனத்திற்குக் கிடைத்த பெருமைகளன்றோ?

-தமிழ் இளைஞன் ஒருவன் இப்படி அவை நடுவே நின்று தன் இனப் பெருமையை உரத்தக் குரலில் அடுக்கிக் கொண்டிருந்தான். நூற்றுக்கணக் கானோர் அந்த அவையில் கூடியிருந்தனர் முதலில்! இளைஞன் பேசப் பேச, அவை இளைக்கத் தொடங்கியது; ஒவ்வொருவராக உதட்டைப் பிதுக்கியவாறும்- நெற்றியைச் சுளித்தவாறும் - விழிகளை அகல விரித்தவாறும் - அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். அவர்களின் வாய்கள் முணுமுணுத்துக் கொண்டும் இருந்தன.


"ஆமாம்! பெரிய இனத்தைக் கண்டான்! தமிழ் இனமாம் தமிழ் இனம்; தகரக்குவளை இனம்! பித்தன் போல் உளறுகிறான்" - இப்படிப் பேசிக்கொண்டும் கேலி புரிந்துகொண்டும் அனைவரும் வெளியேறிவிட்டபோதிலும் ஒரே ஒரு தாடிக்காரப் பெரியவர் அங்கே நின்றுகொண்டிருந்தார். கடல் நுரைபோல் நரைத்து நீண்ட தாடி! பொன்மேனி! சிங்கத்தின் தோற்றம். அவர் அருகே இளைஞன் சோகம் ததும்பிடும் முகத்துடன் சென்றான். "பெரியவரே! நமது தமிழ் இனத்தைப் பற்றிப் பேசுகிறேன். அவையிலிருந்தோர் அனைவரும் போய்விட்டனரே! என்ன காரணம்?" என்று கேட்டான்.

"தம்பீ! தூய்மையில்லாமல் அழுக்குப் படிந்திருக்கும் முற்றத்தில் அமிழ்தம் சிந்திவிட்டால் என்ன ஆகுமோ, அதைப்போலத்தான் நம் இனத்தவர் அல்லாத ஒரு கூட்டத்தின்முன் பேசுவதும் ஆகிவிடும்' என்று வள்ளுவர் எழுதியிருக்கிறாரே... அதை மறந்து விட்டாயா?" என்று பதில் சொல்லிவிட்டு இளைஞனைத் தட்டிக் கொடுத்து விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்"

அதிகாரம் - 72 - அவை அறிதல்; பாடல் - 720

அங்கணம் = முற்றம் கணத்தர் = இனத்தவர்



பசுஞ்சோலையின் நடுவே அமைந்தது அந்தப் பர்ணசாலை. அடர்ந்த காட்டுக்குள்ளே மலைவீழ் அருவியும் மான்களின் துள்ளலும் மலர்களின் மணமும் அந்தப் பர்ணசாலைக்கு இன்பமூட்டிக் கொண்டிருந்தன. அங்கேதான் குடத்துக்குள் விளக்கென அந்தக் குடிலுக்குள் வாழ்ந்தாள் அழகின் எல்லை அகலிகை. ஓவியப் பெண்ணுக்குக்கூட ஒரு குறையிருந்திடலாம் - சிற்பச் சிங்காரிக்கும் அழகிலொன்று குறைந்திடலாம்! அகலிகையோ, அவள் பிறந்தபிறகே அழகு எனும் சொல் பிறந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பிறந்தவள்! வேலானாலும் சேலானாலும் அவள் விழிகளுக்கு எதிர் நிற்கமாட்டா! பூக்காத வாழைப்பூவும் தாமரை மொக்கும் கூட அவள் மார்பகத்திற்கு முன்னால் மண்டியிடும்! அந்த நிலவு இன்னும் உலகில் தோன்றவில்லை, அவள் ஒளி முகத்துடன் ஒப்பிட்டு உவமை கூற! பசலைக்கொடியொன்று பாறையைத் தழுவிக் கிடப்பது கண்டால் அக்கொடிமீது பரிதாபம் ஏற்படுமன்றோ! அப்படித்தான் அவள், முற்றும் துறந்த முனிவருடன் அந்தக் குடிலில் வாழ்க்கை நடத்துவதும் இருந்தது. அந்த அழகின் எல்லையை ஒருநாள் அருவியோரத்தில் கண்டுவிட்டான் இந்திரன்! "மண்ணுலகை மட்டும் ஆள்பவனில்லை நான், விண்ணுலகையும் ஆள்பவன்" என்று தனது ஆட்சியின் கீழ் உள்ள நிலப்பரப்பை எண்ணி எண்ணி இறுமாப்புக் கொண்டவன் அவன்! அவளோ அவனை அலட்சியமாகப் பார்த்துவிட்டுக் குடிலுக்குள் மறைந்துவிட்டாள்.

வேட்டைக்கு வந்த வேந்தன், இந்த மானை வேட்டை நடத்தாமல் திரும்பமாட்டேன் எனச் சூளுரைத்துத் தன் தங்குமிடம் சென்றான். விடியற்காலை! முனிவரைப்போல் வேடமிட்டுக் கொண்டான்! முனிவரோ வைகறைக்கு முன்னெழுந்து வைதீகநெறி காக்க, ஆற்றில் குளித்தெழுந்து ஆண்டவனை வணங்கச் சென்றிருந்தார். வேடம் குலையாமல், காமவேகம் தணியாமல் இந்திரன் குடிலுக்குள் நுழைந்தான். உறங்கிடும் பேரழகை அள்ளிப் பருகினான்; அணைத்து உருகினான். தனை மணந்த முனிவரேயென எண்ணி நெடுநாளைய தாபத்தைத் தணித்துக் கொண்டாள். இடையிலே அவன் கணவனில்லையெனக் கண்ட பிறகும் புலன் அடக்கும் சக்தியின்றி இன்பப் போதையிலே மயங்கிக் கிடந்தாள்.

பூஜை முடித்துத் திரும்பிய முனிவர், புயலாய்ச் சீறினார்! புலியாய்ப் பாய்ந்தார்! சதிகாரர்களே - சண்டாளர்களே - எனச் சபித்தார். கல்லாக நின்றாள் அகலிகை, கணவனுக்குப் பதில் அளிக்க முடியாமல்! கண்ணெல்லாம் புண்ணாகக் கலங்கியழுதான் இந்திரன், புலன் அடக்க முடியாத தனது தவற்றினை எண்ணி!

இதைத்தான் குறள் குறிப்பிடுகிறது: புலன்களை அடக்க முடியாமல் வழி தவறிச் சென்றிடும் மனிதனுக்குச் சான்றாக இந்திரன் இருந்து, ஐம்புலன்களால் ஏற்படும் ஆசைகளை அகற்றிடும் மனிதனின் வல்லமையை உலகிற்கு எடுத்துக் காட்டுகிறான் என்று! இதோ அந்தப் பாடல்:

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி"

அதிகாரம் - 3 நீத்தார் பெருமை; பாடல் - 25

அகல் விசும்புளார் கோமான் = அகன்ற வான் பரப்பில் உள்ளோர்க்கு மன்னன்
சாலுங் கரி = போதுமான சான்று





நெறி தவறாதவன் - நேர்மையாளன் - நீதியின் உருவம் - நெஞ்சம் தும்பைப்பூ- இப்படியெல்லாம், அவனைச் சூழ்ந்திருப்போர் புகழ் பாடினர். அறமே மனித உருவில் வந்து நடமாடுவதாக நாப்பறை கொட்டித் தமக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

அவனோ அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு, பொருள்மலை குவிக்கத் தொடங்கினான். ஏற்கெனவே அவன் ஈட்டியுள்ள செல்வம், ஏழு தலைமுறைக்குப் போதும்; இப்போது அவனுக்குப் பொருள் மீது வேட்கை வரவே காரணமில்லையென்று திட்டவட்டமாகக் கூறியவர்கள்கூட வியப்புறும் வண்ணம், அவன் தீயவழிகள் அனைத்தையும் பயன்படுத்தித் தனது கருவூலத்தைச் சூலுற்ற மங்கையாகத் தோற்றம் பெறச் செய்தான்.

ஏழைகட்கு இறைவன்போலக் காட்டிக்கொண்டு - அவர்கட்குக் கடன் வழங்கி, அந்தக் கடனுக்கு வட்டிக்கு வட்டி போட்டு வாட்டி, அவர்பாலிருந்த பண்டம் பாத்திரங்களைக்கூடச் சுருட்டிக் கொண்டான். சூதாடும் களத்தில் எதிர் அமர்ந்திருப்போருக்கு விழிகளைச் சுழற்றும் மதுவகைகளை, ஆடையற்ற அழகிகளைக் கொண்டு வழங்கச் செய்து - அவர்தம் பொருள்களையெல்லாம் இரவு நேரத்தில் வாரிக்கொண்டு - பகல் வேளையில் பசுப்போல உலா வருவான்.

பத்திரமாக இருக்கட்டுமென்று அவனை நம்பி ஒப்படைக்கப்பட்ட அணிமணி கள் அனைத்தும், ஒப்படைத்தோருக்குத் திருப்பித் தரப்பட்டதில்லை. கைதேர்ந்த கயவர்கள் சிலரை வைத்துக்கொண்டு தங்கம், வைரம் போன்ற விலை உயர்ந்த பொருள்களைக் கடத்திடும் கலையிலும் அவன் வல்லவனாக விளங்கினான். இத்தனை கேடான செயல்களும் ஊருக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டன.

ஒருநாள், அதிர்ச்சி தரும் செய்தியொன்று அவனுக்குக் காத்திருந்தது. பயங்கரக் கொள்ளைக்காரன் ஒருவன், தனது கொலைவெறிப் படையுடன் வந்து, அந்த ஊரில் உள்ள செல்வந்தர் வீடுகளை முற்றுகையிடப்போவதாகவும், முதல் வீடு அவன் வீடுதான் என்பதாகவும் தீப்பொறிபோல் வந்த செய்தி கேட்டுத் திடுக்கிட்டான்; திகைத்தான். திரட்டிய திரவிய மூட்டைகளையெல்லாம் பெரும் படகொன்றில் அடுக்கிக்கொண்டு ஆற்றைக் கடந்து அக்கரை சென்று, அங்கிருந்து பொருள் களுடன் பத்திரமாகத் தப்பித்துவிட வேண்டுமென்று திட்டமிட்டான்.

அவ்வாறே படகில் புறப்பட்டான். ஆற்றுப் பெருவெள்ளத்தில் படகு கவிழ்ந்தது. பொருள்கள் அனைத்தும் ஆற்றோடு போயின. அவன் மட்டுமே நீந்திச்சென்று அடுத்த கரையை அடைந்தான்.

பணமலையின்மீது படுத்துறங்கியவன், பசிப்பிணியால் தாக்குண்டு தள்ளாடி நடந்து வந்தான். நெடுந்தொலைவு நடந்த பின்னர் நாவறண்டு, தெருவினிலே ஒரு பெண்ணைப் பார்த்துத் தாகம் தணிக்கத் தண்ணீர் தருக, எனக் கெஞ்சிக் கேட்டான். அவள் சொன்னாள்:

"அய்யா! நான் ஓர் அறிவற்ற பெண்! இந்தப் பகுதியில் தூய்மையான குடிநீர் கிடைக்காது! அதனால் இரண்டு கல் தொலைவு நடந்து சென்று குடிநீர் கொண்டு வந்து பானையில் பாதுகாப்பாக வைத்திருந்தேன். ஆனால் அந்தப்பானை பச்சை மண்ணால் செய்யப்பட்ட பானை! அது நான் சேகரித்து வைத்த தண்ணீரைத் தாங்க முடியவில்லை. தீயவழியில் சம்பாதிப்பவர்களின் செல்வம் எப்படித் திடீரென அழிந்துவிடுமோ - அதைப் போல பச்சை மண்ணால் ஆன பாத்திரத்தில் ஊற்றி வைத்த நீரும் பானை தாங்காமல் உடைந்து கீழே போய்விட்டது."

இப்படி அந்தப் பாவை பதில் கூறிவிட்டு, அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

அவன் உதடுகள் முணுமுணுத்தன!

"ஆமாம்! வஞ்சனையால் சேர்த்துக் காப்பாற்றப்படும் பொருள்; பச்சை மண்ணாலான பாத்திரத்தில் ஊற்றி வைக்கப்பட்ட நீரைப்போன்றதுதான்."

ஆற்றோடு போன அவன் பொருளைப் பற்றி எண்ணிப் பெருமூச்சுவிட்டவாறு அந்த இடத்தைக் கடந்து சென்றான்.

"சலத்தால் பொருள்செய்துர மார்த்தல் பசுமட்
கலத்துள் நீர்பெய்திரீஇ யற்று"

அதிகாரம் - 66 - வினைத்தூய்மை; பாடல் - 660

சலம் - வஞ்சனை ஏமார்த்தல் - பாதுகாப்புச் செய்தல்

பசுமட்கலம் - பச்சை மண்பாண்டம்



"நெஞ்சே! நீ அவரைத் துரத்திக்கொண்டு அவர் பின்னாலேயே ஓடும்போது என் கண்களையும் உன்னுடன் அழைத்துச் செல்வாயாக! இல்லாவிட்டால் அவரைக் காணவேண்டுமென்ற துடிப்பில் அவை, என்னைக் கொத்தித்தின்றுவிடுகின்றன!"

காதலனுக்கு எழுதிய மடலின் இறுதியில், இந்தக் குறள் மொழியை அந்தக் காதலி குறிப்பிட்டிருந்தாள். அவன் கண்களுக்கும், அவன் நெஞ்சுக்கும், ஏன், அவனுக்குங்கூட அதே நிலைதான் என்பதை அவள் அறியமாட்டாளா என்ன!

இந்தக் குறளுக்கு அவன், தன்னையே எடுத்துக்காட்டாக அமைத்து அவளுக்கு ஏற்கனவே இன்பமடல் தீட்டியிருக்கிறான்.

மடல் விடு தூதுகள் முடிந்தபின்னர் மடப்பிணையும் கலைமானும், மலர்க்கொடிகளில் தென்றல் ஊஞ்சலாடும் ஆற்றோரத்து மணல் மேடொன்றில் சாய்ந்தவாறு, ஒருவர் அழகை ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு பருகிக் கிடந்தனர்.

"என்னடி கண்ணாட்டி! என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறாய்? அப்படியென்ன அற்புத அழகை என்னிடம் கண்டு கண்டு வியக்கிறாய்?"

அவன் கேள்வியால் அவள் முகம் மேலும் ஒளி பெற்றது.

"ஒன்றுமில்லையத்தான்! உங்கள் உதடுகளில் சதிராடும் புன்னகையை, உங்கள் உதடுகளில் காட்சிதரும் காமவேள் நடன அரங்கை ஒரு முறையா - இரு முறையா -

எத்தனையோ ஆயிரமுறை பார்த்துப் பார்த்து மெய்மறந்து போயிருக்கிறேன். தெவிட்டாத காரணத்தால்தான் இப்போதும் அந்தத் தேன்பலாச் சுளைகளைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன்! அதிருக்கட்டும்! - ஏனத்தான்? நான் எங்கிருந்தாலும் நீங்கள் மட்டும் என் கண்களை அப்படியே விழுங்கி விடுவது போல் பார்க்கிறீர்களே; அது ஏன் என்கிறேன்?"

வினாக்கணை விடுத்தவாறே அவன் மடியினில் சாய்ந்துகொண்டாள்.

"வெள்ளை மலர் நடுவில் அமர்ந்து மது உறிஞ்சும் வண்டுகள்போல் அவை தோன்றினாலும் - வில்லின் நாண்விட்டு, கிளம்புகின்ற அம்புகள் போல் என்னை உன் கண்கள் குறி பார்ப்பதால்தான், எப்போது பாயுமோ என்மீது என்று எதிர்பார்த்து, வைத்த விழி மாறாமல் இருக்கின்றேன்; இதுகூடவா புரியவில்லை!" என்றான்.

மடியில் கிடந்தவளைத் தூக்கி மார்புறத் தழுவிக்கொண்டான். அந்த அமளியில் சிக்கிக் கசங்கிடத் தயங்கிய ஆடைகள், அவர்களிடம் தற்காலிக விடைபெற்றுக்கொண்டன! வான் மீன்கள், வட்ட நிலாவைப் பார்த்துக் கேலியாகக் கண்சிமிட்டின! நிலவோ, முகில் ஒன்றை இழுத்து முகத்தை மூடிக்கொண்டது!

ஆற்றுப்படுகையில் காற்றுப் புகவிடாத அளவுக்கு ஈருடல்கள் ஓருடலாய் ஒட்டிக்கொண்டன!

"கடல்! கடல்! இன்பக் கடல்!" என இருவர் இதழ்களும் மென்மையாகக் கூத்தாடின!

"ஆமாம்! இன்பம்; நாம் இணைந்திருக்கும்போது கடலாகத்தான் இருக்கிறது! அதேபோலத்தான் துன்பமும் கடலையும் வெல்லுமளவுக்குப் பெருக்கெடுத்து விடுகிறது, காமம் நம்மை வருத்தும்போது!"


அந்த இன்பபுரிப் பயணத்திலும் பிரிவென்னும் துன்பபுரி, இடையே குறுக்கிடுமே என்ற கவலைதான் அவர்களுக்கு!

"இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது"

அதிகாரம் - 117 - படர்மெலிந்திரங்கல்; பாடல் - 1166

அடுங்கால் = வருத்தும்போது





"இனிய சொற்கள் இருக்கும்போது இன்னாத சொற்களைக் கூறக்கூடாது என்று குறள் வடித்துக்கொடுத்த வள்ளுவரேகூடத் தனக்கு ஏற்பட்ட சினத்தை அடக்கிக் கொள்ள முடியாமல், கடுமையான சொற்கொண்டு ஒருவனைத் தாக்கியிருக்கிறார் தெரியுமா?"

என் நண்பன் இப்படியொரு திடீர்க்கதையை என் முன்னால் தூக்கிப் போட்டான்.

"நண்பா! என்ன அளக்கிறாய்? வள்ளுவர் வீட்டுக்கு அடுத்த வீட்டில் குடியிருந்தவனைப் போலக் கூசாமல் பொய் சொல்கிறாயே; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் வள்ளுவர் என்பதை மறந்துவிடாதே!"

என்று நான் அவனை மடக்கினேன். நண்பன் தான் சொன்னதைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக இல்லை! என்னைத் தன்பக்கம் இழுத்துக் கொள்வதிலேயே நாட்டமாக இருந்தான்.

"இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் வாழ்ந்தவர் வள்ளுவர் என்று யார் கூறியது? அவர் இன்னமும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார். வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர், அவர் வழங்கிய குறட்பாக்கள் உள்ளவரையில் வாழ்ந்து கொண்டுதானிருப்பார்.

நண்பன், மலர்ந்த முகத்துடனும் ஒளி பொருந்திய கண்களுடனும் பதிலளித்தான்.

"சரியப்பா! அவர் கடுமையான சொற்களைப் பொழிந்தார் என்றாயே, யார் மீது? எப்போது? அதையாவது விரிவாகச் சொல்!" என்றேன் நான்.

"அப்படிக் கேள்! வள்ளுவர், மனித குலத்திற்கு அறநெறி நூல் வழங்கிட ஊர்பல சுற்றினார்; நாடுகளைக் கண்டார்; அங்கு நடைபெற்ற ஆட்சிகளைக் கவனித்தார்; மக்களிடையே எழுந்த வேறுபாடுகளை அறிந்தார். இல்வாழ்வோர், துறவறம் பூண்டோர், அரசு நடாத்துவோர், காதல் புரிவோர், வீரம் விளைப்போர் - போற்றிட வேண்டிய நெறிகளை உணர்த்திட, அவர் முதலில் உலகத்தையே ஒரு நூலாகக் கற் றார். பிறகு அந்த உலகத்தையே குறளாக ஆக்கி வழங்கினார். அப்போது அவர் சந் தித்த மனிதர்களில் ஒருவன்தான், அவரது அடக்கமுடியாத சினத்திற்கு ஆளானான்!"

"நண்பா! இன்னமும் புதிர் போட்டபடியே இருக்கிறாயே; யார் அவன்? அவன் மீது வள்ளுவர் சினங்கொள்ளக் காரணம் யாது? அப்படியென்ன கடுஞ்சொற்களைக் கொட்டிவிட்டார்?"

நான் கேள்விகளைப் பரபரப்பாக அடுக்கினேன்; நண்பன் அமைதியாக விளக்கமளித்தான்.

"உலகிற் பலரைச் சந்தித்த வள்ளுவர், அந்த ஒரு மனிதனையும் சந்தித்திருக்கிறார். அவன், தன்னை மிகப்பெரிய அறிவாற்றல் படைத்தவனாகக் காட்டிக் கொண்டானாம்! எதுவும் தனக்குத் தெரியாது என்ற போதிலும் எல்லாம் தெரிந்தவனாகப் பெருமை பேசிக்கொண்டானாம்! ஏதாவது ஒன்றைச் சொல்லிக்கொண்டேயிருக்க வேண்டுமென்று அவனது உதடுகள் துடிதுடித்துக் கொண்டேயிருக்குமாம். எதையும் ஆழமாகச் சிந்தித்து, அமைதியாக எடுத்துரைக்கும் மனப்பக்குவமேயில்லாதவனாம். ஆனால், அவன் தன்னை அறிவாளியெனக் கருதிக்கொண்டு, வள்ளுவரிடமே வாதத்திற்கு வந்திருக்கிறான். வள்ளுவரையே எதிர்த்திடும் ஆற்றலாளன் என, வையம் புகழும் என எதிர்பார்த்திருக்கிறான். அவனைப் புரிந்துகொண்டார் வள்ளுவர். அறிவுச் சூன்யம் என்பதை அவர் அடையாளம் கண்டுகொண்டார். இருந்தாலும், அந்த அறிவிலி எதையாவது உளறித் தன்னைப் பேரறிஞனாக அறிமுகப்படுத்திக்கொள்ள முயன்றது, வள்ளுவருக்குப் பெருங் கோபத்தை ஏற்படுத்தியது. அவனைப் பார்த்து, என்ன சொன்னார் தெரியுமா?"

"அடடா! தெரியாது! சொல்லப்பா சொல்!"

அந்த மனிதனைப் பார்த்து, "உன்னைப் போன்ற அறிவிலிகள், எல்லாம் அறிந்த வர்களைப்போலக் கூத்தடிப்பது எப்படியிருக்கிறதென்றால், இயல்பாகவே இரண்டு கொங்கைகளும் இல்லாத ஒருத்தி; பெண்தன்மையுடையவளாகத் தன்னைக் காட்டிக்கொள்ள விரும்பியதுபோல இருக்கிறது' என்று வள்ளுவர் கூறினார்!"

"அப்படியா? அவ்வளவு சீற்றம் பிறந்துவிட்டதா அவருக்கு?"

"ஆமாம் - இதோ சொல்கிறேன் கேள் அந்தக் குறளை."

நண்பன் குறிப்பிட்ட திருக்குறள் இதுதான்.

"கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதான் பெண்காமுற் றற்று"

அதிகாரம் - 41 - கல்லாமை பாடல் - 402



பாலூட்டி, மகனை வளர்த்துச் சீராட்டி மகிழ்ந்த பருவமுதல் - அவன் பள்ளிக்குச் செல்லும்போது வாயிற்புறம் நின்று வழியனுப்பிவிட்டுப் பின்னழகு கண்டு பூரித்த காலம் வரையில், அந்தத் தாய் பொழிந்த அன்பு மழையிலேதான் அவன் நனைந்துகிடந்தான்.

அரும்பனைய மீசை தோன்றி, ஆணழகன் என ஊரார் - உற்றார் - மகிழ்ந்து போற்றி உறுதியும் வீரமும் ஒருங்கே பெற்றவன் என்று நல்லோர் எல்லாம் வாழ்த்துரைத்த பருவத்திலேதான், தொத்திக்கொண்டது அவன் தோளில் ஒரு பச்சைக்கிளி! அந்தச் சித்திரச் செந்தமிழ்ப் பாவையிடம் சிந்தை பறிகொடுத்தான்! ஆயினும் அன்னை தந்தையிடம் அவன் கொண்டிருந்த அன்புக்கு அணுவளவும் குறைவு நேர்ந்ததில்லை.

தகுதிக்கேற்றவாறு செல்வம் கொழிக்கும் மனையிற் பிறக்காத அந்த மங்கை நல்லாளைத் தன் மருமகளாக ஏற்றிட அவனது தந்தை தயாராக இல்லை. அதை அவனிடமே அவர் நேரடியாகக் கூறிவிட்டார். அவனோ, அவன் இதயத்தில் இடம் பிடித்துக்கொண்டவளை விரட்டுதற்கு விரும்பவில்லை! அதனால் தந்தையின் மிரட்டல்களும் எடுபடவில்லை! தாய் தவித்தாள்! செய்வதறியாது செயலற்று விழித்தாள்!

நம்பிவந்த நங்கையை நட்டாற்றில் விடுவதற்கு அந்த நம்பியும் உடன் படவில்லை. பெற்றோரை எதிர்த்து வெற்றிகாண முடியாமல் வெளியூர் ஓடிவிட்டான், அந்த ஒளியுமிழ் தங்கச் சிலையுடன்!

மானம் போனதென்று குலப்பெருமையால் குமுறிக் கொந்தளித்துத் தந்தை நெஞ்சடைத்து உயிர் விட்டார்.

தொலைவிலிருந்து செய்திகேட்டு அவன் துடித்தான்! தந்தையின் சாவுக்குக் காரணமானவன், தாயின் முகத்தைக் காண்பதுதான் எவ்வாறு என ஏங்கித் தவித்தான்!

ஆண்டுகள் சில உருண்டோடின! அவனும் அவளும் - தந்தையும் தாயுமாயினர்! கிள்ளைபோல் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தனர்!

மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு மனையாளுடனும் மகிழம்பூ மகவுடனும் ஊருக்குத் திரும்பிவந்தனர் ஓர் இரவு - ஆம்! நள்ளிரவு!

கதவு தட்டப்படும் ஒலி கேட்டு, அந்தத் தாய் எழுந்து வந்து தாழ் அகற்றிக் கதவைத் திறந்தாள்!

கையிலிருந்த அகல்விளக்கின் துணையோடு, அவர்கள் முகத்தைப் பார்த்தாள்.

“அம்மா!”

கடந்த கால நிகழ்ச்சிகள் மின்னல் கீற்றுக்களாக உள்ளத்தில் ஓடி மறைந்தன!

கதவை அடைத்து வைத்திடத் தாழ் இருந்தது! அதனால் அதனை அவள் அகற்றிவிட்டுக் கதவைத் திறக்க வேண்டியிருந்தது!

அதுபோல அன்பின் உச்சகட்டத்தை வெளிப்படுத்த, விழிகளில் கிளம்பிடும் நீர்த் துளியை அடைத்து வைக்கக்கூடிய தாழ் உண்டோ? இல்லை! இல்லவே இல்லை! அன்பு பீறிட்டதும் அந்தத் தாழ், தானாகவே திறந்துகொண்டு கண்ணீர்த்துளி வடிவில் அன்பின் பெருக்கைக் காட்சியாக்கிவிடுகிறது!


“அம்மா!”

அந்த ஒலி கேட்டமாத்திரத்தில் - மகனின் தவறு மறைந்துபோய் அன்பு வெளிப்படும் உருக்கமிகு நிகழ்ச்சியை இதோ இந்தக் குறள், ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிறது.

“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்”

அதிகாரம் - 8 - அன்புடைமை; பாடல் - 71

பூசல் தரும் = வெளிப்படுத்தும்



கட்டுப்பாடு எதுவுமின்றித் தன்னுரிமையுடன் காட்டில் திரியும் யானையைப் பிடிப்பதற்குச் செல்கிறவர்கள், ஏற்கெனவே தங்களிடமிருக்கும் பழகிய யானை யொன்றை அழைத்துக்கொண்டு செல்வார்கள். காட்டு யானையை வீழ்த்து வதற்கேற்ற குழியொன்று அமைக்கப்படும். குழியிருப்பது தெரியாதவாறு இலை தழைகளாலும் மெல்லிய குச்சிகள் கம்புகளாலும் மேல் பகுதி மூடிவைக்கப்படும். ஒரு முனையில், பழக்கப்பட்ட யானை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

காட்டு யானையோ, குழிக்கு மறுமுனையில் நிற்பதும் தன்னுடன் காட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் யானைதான் எனக் கருதி அதனருகே வரும்! வரும் வழியில்தான் அந்தக்குழி! யானையின் காலடிகள் குழியை மூடியிருக்கும் பச்சைப் பசுங்கொடிகளின் மீது பட்டவுடன், யானை குழிக்குள் விழுந்துவிடும்.

அதன்பிறகு அந்த யானையைப் பெருங் கயிறுகளாலும் இரும்புச் சங்கலிகளா லும் பிணைத்து வெளியே தூக்கி, காட்டிலிருந்து நாட்டிற்குக் கொண்டு செல்வர்.

பழகிய யானையொன்றைப் பயன்படுத்தி, பழகாத மற்றொரு யானையைப் பிடித்துப் பழக்கிடும் இந்தச் செயலை, வள்ளுவர் அறிந்துகொள்ளாமல் இருப்பாரா? அறிந்துகொண்ட அந்த நிகழ்ச்சியைத் தனது குறட்பாவில், எங்கேயாவது உவமையாக

ஆக்கிட வேண்டுமென்றுதானே எண்ணியிருப்பார். அதற்கு எத்தகைய பொருத்தமான இடம் அவருக்குக் கிடைக்கிறது!

ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிவருகிறது! கரைகள் உடைத்துக் கொண்டால் ஊர்கள் பலவும் கழனிகள் பலவும் அழிந்து ஒழிந்துவிடும். அரசின் கவனத்திற்கு இந்த அதிர்ச்சி தரும் செய்தி கிடைக்கிறது. கரைகளைப் பலப்படுத்துமாறு உடனடியாக ஆணை பிறப்பிக்கப்படுகிறது. ஆயிரக்கணக் கானோர் அந்தப் பணி யில் ஈடுபடுத்தப்பட்டுக் கரைகள் வலுப்படுத்தப்பெற்று உயர்த்தவும் படுகின்றன. ஆற்று வெள்ளத்தால் ஏற்பட இருந்த அழிவிலிருந்து ஊர்களும் உடைமைகளும் காப்பாற்றப்பட்டன.


பெருக்கெடுத்துப் பாயும் வெள்ளம் வீணாகக் கடலில்தானே போய்க் கலக்கிறது; நிலையாக அங்கோர் அணையைக் கட்டி வெள்ளத்தைத் தேக்கி - தேவைப்படும் போது கழனி காடுகளுக்குப் பாய்ச்சிக்கொண்டால் என்ன - என்ற சிந்தனையும் அரசு புரிந்தோர்க்கு உதயமாகிறது. அவ்வாறே கரையை உயர்த்தும் செயலைத் தொடர்ந்து, அணையை எழுப்பும் செயலையும் செவ்வனே முடிக்கின்றனர். ஊர் செழிப்புறுகிறது.

ஒரு செயலைச் செய்யும்போது அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளவேண்டுமென்பது வள்ளுவரின் கருத்து! ஒரு செயலைப் பயன் படுத்தி இன்னொரு செயலையும் முடித்துக்கொள்க! முதற் செயலைப் பழகிய யானைக்கு ஒப்பிடுகிறார்! அதைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய செயலைப் பழகிடாத காட்டுயானைக்கு ஒப்பிடுகிறார்.

என்னே சிந்தனை! என்னே உவமை! எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்பு.

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று"

அதிகாரம் - 68 - வினைசெயல்வகை; பாடல் - 678





"என் அன்பே! நீங்கள் மிகவும் மோசம்! அத்தனைபேர் கூடியிருக்கும் இடத்தில் என்னை அப்படியா அடிக்கடி பார்ப்பது? பெற்றவர் இருந்தனர் பக்கத்தில்! மற்றவரும் நீங்கள் என்னைப் பார்ப்பதையே கவனித்தனர்! உங்கள் விழிகளுக்குக் கொஞ்சமாவது அடக்கம் வேண்டாமா? இந்த உதடுகள் ஏன்தான் அப்படித் துடித்து என்னை அழைத்திட வேண்டும்? போங்கள் அன்பே; எல்லோரும் நம்மைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டிருப்பார்கள்!"

"ஓ! நீ என்னைக் குற்றம் கூறுகிறாயா? நான் உன்னைப் பார்த்ததை நீ எப்படிப் பார்த்தாய்? நீ என்னையே நோக்கிக் கொண்டிருந்ததால்தானே அடக்கமற்ற என் விழிகளைப்பற்றி - அழைப்பிதழ் அனுப்பிடும் என் உதடுகளைப்பற்றி இவ்வளவு சரியாகக் கூறமுடிகிறது! ஆமாம்; கண்ணே! உன் கன்னம் என்னைக் கண்டதும் சந்தனக் கிண்ணத்தில் குங்குமம் தூவியது போலாயிற்றே; அது ஏன்? உன் நெடிய மூச்சையும் அதில் கலந்த தாபத்தையும் உன் அழகிய நாசியினால் வெளிப்படுத்த முடியவில்லையென்றுதானே, உன் நெஞ்சத்து மொக்குகள் அடிக்கடி விம்மிப் புடைத்துக்கொண்டிருந்தன! என்னைப்போலத்தானே உன்னையும் காமம் காட்டிக் கொடுத்தது! இல்லையா?"

"என்னத்தான் செய்வது? சோலையில் ஓடிப்பிடித்ததை - சுகத்தில் கூடிக்களித்ததை - நினைத்துக்கொண்டேன்! என்னை அறியாமல் இதயத்தை இன்பத்தால் நனைத்துக்கொண்டேன்! மனத்தை அடக்கிட கனைத்துக்கொண்டும் சமாளித்தேன்! அனைத்தையும் மீறி அணையுடைத்து எழும் வெள்ளம் போல் அல்லவா அந்த உணர்வு பீறிட்டுக் கிளம்புகிறது!"

"என்ன இருந்தாலும் காம உணர்வு பொல்லாத எமன்! சிறிதுகூட அதற்கு இங்கிதம் தெரிவதில்லை! பாவம்; இவர்கள் நெஞ்சை அடக்கி நிறுத்தும் உறுதிமிக்க நிறையில்லாதவர்கள் என்றோ - அல்லது மிகவும் இரங்கத்தக்கவர் என்றோ கருதாமல், பலரும் சூழ்ந்துள்ள மன்றத்திலும் நம் போன்ற காதலர்களைக் காட்டிக் கொடுத்து விடுகிறது."


காதலர் இருவரின் இந்த உரையாடலுக்குப் பொருத்தமான குறள் ஒன்று உண்டு! அது, இதோ!

"நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும்"

அதிகாரம் - 114 - நாணுத்துறவுரைத்தல்; பாடல் - 1138

நிறையரியர் = நிறையில்லாதவர் அளியர் = இரங்கத்தக்கவர்





தென்னையின் மகன்

பேன்கள் ஓடி விளையாடுகின்றன தலையில்! சளி ஒழுகிக் கொண்டிருக்கிறது மூக்கில்! வெண்முத்துப் பற்களோ மஞ்சள் பூசிக்கொண்டு நிற்கின்றன. விழிகளின் ஓரத்தில் வெள்ளை அழுக்கு எட்டிப் பார்த்தவாறு இருக்கிறது. பல இடங்களில் கறை பட்டுள்ள பட்டுச் சொக்காயும் பட்டு வேட்டியும் உடலைத் தழுவிக் கொண்டிருக்கின்றன. பெரியவீட்டுப் பிள்ளைதான்! ஆனால் நாகரீகத்திற்கோ, தூய்மைக்கோ அவனிடம் எள்ளின் முனையளவு இடமுமில்லை. சலவைக்கல் பதித்த வீட்டுத் தாழ்வாரத்தில் அவன் உட்கார்ந்திருப்பான். அவன் விளையாடு வதற்காக அழகான நாய்க்குட்டியொன்றுகூட உண்டு. அவனோ அதைத் திரும்பி யும் பார்ப்பதில்லை. தெருக்கோடியில் சகதியை சந்தனமாகப் பூசிக்கொண்டு உறுமியவாறு ஓடுகிற பன்றிக்குட்டிகளைத் துரத்திச்சென்று, அதனைப் பிடித்து மார்போடு அணைத்துக்கொண்டு மகிழ்ச்சிக் கூத்தாடுவான். பெரியவீட்டு இளைஞனாயிற்றே; அவனை யார் கேட்கமுடியும் அந்த ஊரில்! உள்ளத்திலிருந்து கிளம்பும் கேலிச்சொற்களுக்கு அவர்களாகவே தடை விதித்துக்கொண்டு, அவனைப் பார்க்காதது போலவே சென்று விடுவர், ஊர் மக்கள்.

ஒருநாள் அவன், தன்னுடைய கோலத்தில் எந்தவிதமான மாற்றமுமின்றி, ஒரு செத்துப்போன எலியை வாலைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு குளக்கரைப் படிக்கட்டுகளுக்கு வந்தான். அது அந்த ஊரின் பொதுக்குளம். குளத்தில் குளித்துக்

கொண்டிருந்த மற்றொரு இளைஞன், பெரிய இடத்து இளைஞனை வியப்போடு பார்த்தான். "பொன்னையா! என்ன இது, எலியைத் தூக்கிக்கொண்டு நிற்கிறாய்!"

செல்வந்தர் வீட்டுச் செல்வனின் பெயர் பொன்னய்யா!

"ஏ! சின்னய்யா! எப்படியடா என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடலாம்? அவ்வளவு கொழுப்பா உனக்கு?"

ஏழை வீட்டு இளைஞன் சின்னய்யாவை, பொன்னய்யா கடிந்து கொண்டான்.

"சரி! சரி! மன்னித்துக்கொள்ளுங்கள் அய்யா. எலியைத் தூக்கிக் கொண்டு எங்கே வந்தீர்கள். அதைச் சொல்லுங்கள்."

"இது செத்துப்போன எலி. இந்தக் குளத்தில் உள்ள மீன்களுக்கு உணவாகப் போடுவதற்கு வந்தேன்" என்று கூறிக்கொண்டே எலியைக் குளத்திற்குள் வீசி எறிந்தான் அவன்.

"அய்யய்யோ - இது பொதுக் குளமாயிற்றே, நீங்கள் தூய்மையற்று இருப்பது போதாதா? இந்தக் குளத்தையுமா அசுத்தப்படுத்திக் கெடுக்க வேண்டும்?"

சின்னய்யாவின் இந்த வார்த்தைகளை, பொன்னய்யாவினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"என்ன சொன்னாய்? மூடனே! யார் தூய்மையற்று இருப்பது நீயா? நானா? உன் உடம்பில்தான் அழுக்கு இருக்கிறது. அதனால்தான் நீ குளிக்கிறாய். நான் குளிப்பதே கிடையாது - காரணம் என் உடலில் கடுகளவு அழுக்கும் கிடையாது" என்று உரக்கக் கூவிவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான், மலையளவு அழுக்கை மேனியில் ஏற்றிக்கொண்டிருப்பவன்.

சின்னய்யா, சிறிது நேரம் அசைவற்று நின்றான். தொலைவில் யாரோ குறட்பா இசைப்பது அவன் காதுகளில் விழுந்தது.


"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

மற்றவர்களுடைய குறையையோ குற்றத்தையோ காண்பதுபோல, தங்கள் குற்றத்தையும் காண வல்லவரானால் வாழ்க்கையில் தீமை என்பது உண்டோ?

இதுதான் வள்ளுவரின் கேள்வி. சின்னய்யா குளிப்பதே குற்றமென்ற பொன்னய்யா, சின்னய்யாவின் உடலில் அழுக்கு இருப்பதற்குச் சான்று அவன் குளிப்பதுதான் என்று சுட்டிக்காட்டுகிறான். ஆனால், அவனோ அழுக்குப் பாண்டமாக அலைந்து கொண்டிருக்கிறான். நல்லது சொன்னதற்காக சின்னய்யா இழித்துரைக்கப்பட்டான். இழித்துரைத்த பொன்னய்யாவுக்கு, அவனது நடைமுறையும் நாகரீகமற்ற தன்மையும், உடனடியாக அவற்றின் விளைவைக் காட்டாவிடினும் அவன் வாழ்க்கைக்குத் தீமைதரும் நோய் நொடிகளை எதிர்காலத்தில் வழங்கியே தீரும்.

சின்னய்யா, புன்னகை புரிந்தவாறு குளத்தைவிட்டுக் கரை ஏறினான்.

அதிகாரம் - 19 - புறங்கூறாமை; பாடல் - 190



"வான் கிழிக்கும் மின்னலாய் வந்தாள்! தேன் கொழிக்கும் செவ்விதழ் தந்தாள்! கூன் பிறைப் புருவமேற்றி மீனிரண்டைத் துள்ளவிட்டாள்! மான் என்றன் மடிமேல் புரண்டு மாயமாய் மறைந்ததேனோ?"

"கண்மணியே! உனக்காகக் காத்திருக்கும் கண்ணாளன், இப்படிக் கூறியன்றோ என்னிடம் கண்களைக் குளமாய்க் காட்டுகின்றான். நீயோ அவனைக் குறை கூறுவதையே வாடிக்கையாய்க் கொண்டிருக்கும் வேடிக்கைதான் என்னே!"

தோழி தோகையின் தோளைக் குலுக்கியபடி, தும்பை கேட்டாள். தும்பை மலர் போன்ற தூயவள் அவள்; அதனால் தோகையின் துயர்போக்கத் துடித்திட்டாள். அவள் காதலன் குறையொன்றிலான் என மெய்ப்பிக்க முனைந்திட்டாள். தோகையோ, தும்பையின் கைகளைத் தட்டிவிட்டபடி "சரிதான் போடி! அவருக்காக வாதாட வந்துவிட்டாயா நீ? என்னதான் நீ அவரைப் புகழ்ந்துரைத்தாலும் என்மீது அவருக்கு அளவில்லாத காதல் எனக் கதை சொன்னாலும் நம்புவதற்கு நான் ஒன்றும் அறிவிலி அல்ல!" எனச் சினந்தாள்.

"அடியே தோகை; அன்றைக்கு நீதானே சொன்னாய் - அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும்; பழமுதிர்ச் சோலையின் நிழலில் இருப்பதுபோல்

இன்பமென்று! வெட்கத்தைவிட்டுச் சொன்னாயே; உன் உச்சித்தலை தொடங்கி உள்ளங்கால் வரையில் அவர் உதடுகளால் உழுதார் என்று - அதையெல்லாம் மறந்து விட்டாயா? அன்று வெல்லமென இனித்ததெல்லாம் இன்று வேம்பாய்க் கசப்பது ஏனடி?"

தும்பையின் குறும்புப் பேச்சில் கரும்பின் சாறு கொட்டியது என்றாலும் தோகை அவளைச் சற்று செல்லமாகத் தள்ளிவிட்டு, "ஆமாம் போடி; பெரிய அழகன்! உலகத் தில் இல்லாத மாவீரன்! என்னைப் பொறுத்தவரையில் - எனக்கு அவரைப் பிடிக்க வில்லை! பிடிக்கவில்லை! பிடிக்கவில்லை!" என்று சொற்களுக்குச் சூடேற்றினாள்.

"அம்மா! தோகையம்மா! என்னிடம் ஏமாற்றதே! அவரைப் பிடிக்காதது போல் நடித்துக் குறை கூறாதே! நானும் பெண்தானே! எனக்கும் தெரியும். ஒருவர்மீது உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு அவர் வருகைக்காக வாடிக் காத்திருக்கும்போது, மற்றவர்கள் தெரிந்து கொள்ளக்கூடாதேயென்று அவரிடம், அன்பில்லாததுபோலப் பேசுவதும், மனத்திற்குள் கடலளவு காதலுணர்வைத் தேக்கி வைத்திருப்பதும் நம் இனத்திற்குரிய இயல்புதானே!"

"என்னடி தும்பை; என்ன சொல்லுகிறாய்?"

"ஒன்றுமில்லை! காதலரைப்பற்றி வெளியிலே விரோதமாகப் பேசினாலும் உள்ளுக்குள்ளே அவரைப் பகைக்காமல் பாசத்தால் பின்னிக் கிடக்கிறாய் என்பது விரைவில் வெளியாகப் போகும் உண்மையென்று சொல்கிறேன்."

தும்பையும் தன்னைப் போன்றவள்தானே! அதனால் தன்னுள்ளத்தை அளந்து வைத்திருக்கிறாள் என்று நாணிக் கோணியவாறு, தோகை அங்கிருந்து நகர்ந்து, பிறகு ஓடிவிட்டாள்.

"உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்"

அதிகாரம் - 110 - குறிப்பறிதல்; பாடல் - 1096

உறாஅதவர்=அயலார்; செறாஅர்=சினமடையாதவர்; ஒல்லை=விரைவில்





கலைஞரின் தமிழ்ச்சோலை

சிலம்புச் செல்வத்தைத் தமிழ் உலகிற்கு வழங்கிய இளங்கோவடிகளாரின் அண்ணன் சேரன் செங்குட்டுவன், வீரங்கொழிக்கத் தாயகத்தை ஆண்டு கொண்டிருந்த காலம்! அப்போது வடபுலத்து மன்னர்களில் புகழ்மிக்கவர்களின் வரிசையில் கனகன், விஜயன் என இருவர் இருந்தனர். அடக்கமிலாத நா படைத்தவர்கள் அவர்கள். எவரையும் எளிதில் கேலி பேசக்கூடிய இயல்பினர். ஒரு நாள், விருந்தொன்றில் கலந்துகொண்டு மது வெறியில் தள்ளாடினர். அப்போதும் அவர்களின் மமதை வெளிப்படத் தவறவில்லை. விருந்தில் கலந்து கொண்ட மன்னர்கள் சிலர், தமிழகத்து மூவேந்தர்கள் இமயம் வரையில் படையெடுத்து வந்து, அவர்தம் ஆட்சிச் சின்னங்களான புலி, வில், கயல் ஆகியவற்றை மலைகளில் பொறித்துச் சென்றனர் என்ற பழைய செய்திகளைக் கூறினர். அப்போது வெகுண்டெழுந்த கனக - விஜயர் இருவரும் தமிழ் மன்னர்களின் வீரத்தை இகழ்ந்துரைத்தனர்.

"சேரனோ, சோழனோ, பாண்டியனோ இமயம் வரையில் சேனையுடன் வந்து செம்மாந்து திரும்பியபோது எம்மைப்போன்ற மன்னர்கள் இங்கே இல்லைபோலும். இருந்திருந்தால் அவர்கள் புறமுதுகிட்டு ஓடியிருப்பர்" எனப் பழித்துப் பேசினர்!

இந்தச் செய்தி செங்குட்டுவனின் செவிக்கு எட்டியது! "தமிழ் மன்னர்களைப் பழித்த தருக்கர்களை என் தாள்பணிய வைக்காமல் விடேன்!" எனச் சூளுரைத்துப் போர் முரசு கொட்டினான். வடபுலம் நோக்கி அவன் படை புறப்பட்டது. அமைச்சர் அழும்பில் வேள் அருகிருக்க, வில்லவன் கோதை படை நடத்த - செங்குட்டுவன், தனது துணைவி வேண்மாளிடம் விடைபெற்று வீர வாளேந்திக் கிளம்பிவிட்டான்.

வழியில் பல மன்னர்கள் அவனை வரவேற்றுப் பணிந்தனர். சில மன்னர்கள் அவனுக்குத் துணையாகப் படைகளும் அனுப்பினர். வடக்கே, குயிலாலுவம் என்ற இடத்தில் கனக - விஜயர்களுடன் செங்குட்டுவன் மோதினான். இறுதி வெற்றி சேரன் செங்குட்டுவனுக்குத்தான்! கனக - விஜயர்களைக் காணவில்லை. கடைசியாக அவர்களைத் துறவிகள் வேடத்தில் கண்டுபிடித்து, செங்குட்டுவன் எதிரே கொண்டு வந்து நிறுத்தினர்.

"கற்பரசி கண்ணகிக்குச் சிலை வடிக்க இமயத்திலே கல் எடுத்து; அதனை இந்த எருதுகளைச் சுமந்துவரச் செய்க!" என ஆணையிட்டான் செங்குட்டுவன்! அவ்வாறே கனக - விஜயர் தலையில் கல் ஏற்றப்பட்டது! அதனைத் தூக்கிக்கொண்டு கால் கடுக்க நடந்தனர், அந்த வாயடக்கமற்றப் பிறவிகள்!

அப்போது அமைச்சர் அழும்பில்வேள் சொன்னார்:


"நல்லதும் கெட்டதும் ஒருவன் சொல்கின்ற சொல்லால் வருவதால், சொல்லில் தவறு நேராமல் காத்துக்கொள்ள வேண்டும்" என்று!

அதைத்தான் இந்தக் குறள் விளக்குகிறது.

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு"

அதிகாரம் - 65 - சொல் வன்மை; பாடல் - 642





மானங்காத்தல் உயிர் காத்தலைவிடச் சிறந்தது! ஏன்; மானத்தைக் காப்பதற்காக உயிரையும் கூடத் துறந்துவிடலாம்! அந்த ஒப்பற்ற உயர்தனிப் பெருமையுடைய மானம், காதலர்களிடம் சிக்கிக்கொண்டு என்ன பாடுபடுகிறது! ஆணாகவும் இருக்கலாம்; ஆரணங்காகவும் இருக்கலாம்; காதலர் எனும் பொதுப்பெயரில் அடங்கிடும்போது, ஒருவர் பிரிவை ஒருவர் தாங்கிக்கொள்ள இயலாமல் அல்லற்படும் நேரத்தில் அவர்கள் எந்த நிலைக்கு ஆளாகிறார்கள் என்பதைக் குறளார் சுட்டிக்காட்டும் சுவையே சுவை!

கண்ணோடு கண் - கன்னத்துடன் கன்னம் - கன்னல் இதழுடன் இதழ் - மாதுளை மார்புடன் மார்பு - உலகையே மறந்து உடலுடன் உடல் - உயிருடன் உயிர் - இப்படி ஒட்டிக்கிடந்தோரை வெட்டிப் பிரித்த 'பிரிவு' எனும் துன்பத்தை மட்டுமா அந்தக் காதலர் வெறுத்தனர்? இல்லை!

பிரிந்த காதல் பறவைகளே ஒன்றையொன்று வெறுத்தன! நீயேன் எனைப் பிரிந்தாய் எனப் பெண்ணும்; நீ பிரிந்திருந்து என் உயிரைப் பிழிவது மட்டும் நியாயமோ என்று ஆணும், மனத்தால் சினத்தைக் கொட்டினர்.

அந்தச் சினம் நிலைத்ததா? அதுதான் இல்லை! பிரிந்திருப்பவன், அவனே வரட்டுமே என்று உறுதியோடு இருக்க, அவளாலும் முடியவில்லை! பிரிந்திருக்கும் அந்தப் பாவைதான் தன்னிடம் பறந்தோடி வரட்டுமேயென்று பொறுமையாக இருக்க, அவனாலும் முடியவில்லை.

பெரிய நதியொன்றில் பிரிந்து கழனிகளை வளமாக்கும் கால்வாய் ஒன்று! எப்போதும் நீர் நிறைந்திருக்கும். கடந்து செல்வதற்குப் பனைமரப் பாலம் ஒன்று உண்டு. இக்கரையில் இருந்து அவன் எண்ணினான், அவளே வருவாள் என்று! அக்கரையிலிருந்து அவள் நம்பினாள், அவனே வருவானென்று!

ஆனால், அவர்களைப் பிடித்திருந்த காமநோய், அவர்தம் திட உள்ளத்தைத் தீபோலக் கருக்கிவிட்டது. பாலத்திலே அவனும் நடக்கத் தொடங்கினான்; அவளும் நடக்கத் தொடங்கினாள். இருவரும் பாலத்தின் நடுவே ஒருவரையொருவர் வைத்த விழி வாங்காமல் பார்த்துக்கொண்டே நின்றனர்.

சற்றுத் தொலைவில் யாரோ சிரிப்பது கேட்டது! உற்றுக் கவனித்தனர்! அவளது தோழிதான்!

“தம்மை வெறுத்துப் பிரிந்தவரின் பின்னால் செல்லாமல் இருப்போம் என்ற மான உணர்வு, இந்தக் காதல் நோய்க்காரர்களுக்கு மட்டும் கிடையாது.”

என்றாள் தோழி!

“என்னடி சொல்கிறாய்” எனச் சீறினாள், சிவந்த முகத்துடன் அந்தச் சேயிழையாள்!

“குறளடி குறள்” எனக் கூறியவாறு, அந்த இடத்தைவிட்டுக் குதித்தோடினாள் தோழி.

“செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன்று அன்று”

அதிகாரம் - 126 - நிறையழிதல்; பாடல் - 1255

செற்றார் = வெறுத்துவிட்டவர்





நீலவானும் நெடுந்திரைக் கடலும் இரண்டறக் கலந்து ஒன்றாகி விட்டனவோ? வான் நிறமும் கடல் வண்ணமும் இருளைத் தோற்கடிக்கும் கரு வண்ணம் கொண்ட கொடுமைதான் என்னே! வான் வீசுகின்ற மழைச் சரங்களை கடலின் அலைகள், எத்துணை உயரம் எழும்பி எதிர்கொண்டு தாக்குகின்றன! புயலா? சூறாவளியா? தென்னைமரங்களும் பனைமரங்களும் தெருவில் கிளம்பும் தூசி களைப் போலப் பறக்கின்றனவே! ஆலமரங்களைப் பூச்செண்டுகளைப்போலக் காற்றின் கரங்கள், எத்தனை கல் தொலைவு தூக்கி எறிகின்றன! அடடா! அதோ, அழகு நகரங்களின் மணிமாடங்கள், கூடங்கள் எல்லாமே அழிகின்றன.

"இவ்வளவு பெரிய அழிவா?" என்று நிலமகள் ஆச்சரியத்துடன் வாயைப் பிளக்கிறாள். அவளது அகண்ட வாய்க்குள்ளே நாடுகளும் காடுகளும் விழுகின்றன. அதைத் தாங்கமுடியாமல் அவள் வயிறு பாளம் பாளமாக வெடிக்கிறது. வலி தாங்காது துடிக்கிறாள். அந்தத் துடிப்பில் வையகமே துடிக்கிறது. அதுதான் பூகம்பம்! பூகம்பம், தான் உண்டது செரிக்க ஏப்பம் விடுகிறது! அது எரிமலைகளாகக் குமுறுகிறது. "நான் எரிப்பேன்" என்று நெருப்புக் குழம்பை ஆறுகளாகப் பெருகவிடும் எரிமலைகளும்;

"நான் அணைப்பேன்" என்று பொங்கிக் கொந்தளித்துவரும் கடல் அலைகளும் ஒரே காரியத்தைத்தான் செய்கின்றன!

இயற்கையின் இந்தப் பயங்கரக்கூத்து அன்றாடம் இல்லாவிட்டாலும் எப்பொழுதாவது நடைபெறத்தான் செய்கிறது. ஊர்கள் அழிக்கப்படலாம் - நாடுகள் நாசமுறலாம் - ஏன்; உலகமே கடலால் பந்தாடப்பட்டு - கடும் புயல் சூறாவளியால் கசக்கி எறியப்பட்டு - நிலநடுக்கங்களால் நிலை குலைந்திட்டு - அழிவுசூழ் அலங்கோல உருண்டையாக எரிந்துகொண்டிருக்கலாம்! அந்த அழிவைத்தான் ஊழி என்றனர் முன்னோர்!

அத்தகைய ஊழிபோன்ற துன்பங்கள், தொல்லைகள், துயரங்கள் மனிதனைத் துரத்துவதுண்டு. அப்படித் துரத்தும்போது அசையாமல், ஆடாமல், நிலை குலையாமல், நெஞ்சம் பதறாமல், கைபிசையாமல், கலங்கி அழாமல், எந்த வேறுபாடுகள் ஏற்படினும், தான் எக்காரணம்கொண்டும் வேறுபடாமல் இருப்பவனை, வள்ளுவர் எவ்வாறு புகழ்கிறார் தெரியுமா?

அந்தச் செயலை வீரமென்றோ, துணிவு என்றோ பாராட்டி அத்துடன் முடித்து விடவில்லை, அவர்!

சிறு துன்பங்களையே தாங்கமுடியாமல் வேறுபட்டுப் போய்விடும் கோழை மனிதர்களின் மேலுள்ள கோபத்தை; மிகப்பெரும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, வேறுபடாமல் உறுதியாக நிற்கின்ற கொள்கையுடையவர்களை மனந் திறந்து போற்றுவதன் மூலம் தீர்த்துக்கொள்கிறார்! அது எவ்வாறு? அதை ஒரு பண்பு என்றே சிறப்பிக்கிறார். அதுவும் எத்தகைய பண்பாம்? பண்புக் கடலாம்!

"ஊழிக்காலத்து மாற்றங்களே நேர்ந்தபோதிலும்கூட, ஒருவர் - தாம் கொண்ட கொள்கையில் மாற்றமில்லாது அந்தத் துன்பங்களை எதிர்கொண்டு, உறுதியாக நின்றால், அவர் பண்பெனும் கடல் எனப் புகழப்படுபவராவார்."

அந்தக் கருத்தை உள்ளடக்கியதே இந்தக் குறள்:

"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்."

அதிகாரம் - 99 - சான்றாண்மை; பாடல் - 989

சான்றாண்மை = சால்பு எனும் தன்மை சால்பு = பண்பு





ஏந்திழை, தூரிகை கொண்டு எழுதாத ஓவியம்! எழுதுகோல் படைத்திடாத காவியம்! சில நாழிகைச் சுகத்தில், அவள் பெற்றோர் வடித்தெடுத்து பத்துத் திங்கள் மெருகேற்றி, இருபது ஆண்டுகளாய் இயற்கைப் பொலிவேற்றி நடமாட விட்டுள்ள பொற்றாமரை! வாகான வடிவும் தேன்பாகான மொழியும் அவளைத் துணைவியாய் அடைந்தவனுக்குத் தொடர் இன்பமாய்ப் பொழியும்! அவ்வாறே அடைந்திட்டான் அவளை ஆடற்கோ எனும் ஆணழகன்! முடைந்திட்ட ஓலைகள் போல் முழுநாளும் இணைந்திருந்தார்! ஒருநாள் வந்து தொலைந்தது பிரிவு எனும் பெரும்புயல்! "சில நாள்தான், சென்று வருகிறேன் என் செல்வமே!" என்று, அந்த நாள்வரை அவள் சிந்தாத கண்ணீரைச் சிந்தச் செய்து அவன் பயணப்பட்டான், வெளியூர் நோக்கி!

அவன் அன்புப் பணியில் அன்றாடம் நனைந்து பூத்துக் குலுங்கும் அந்த மலர், தனிமையில் வாடியது! வழி நோக்கி விழி தேடியது! அருவியின் ஓரம் நின்று அவனைக் கண்டிட அலைந்தது உள்ளம்! ஆற்றங்கரையில் சென்று, அவன் எங்குளான் என ஏங்கினாள் ஏந்திழை! அப்போது ஆட்டுக்குட்டியொன்றைத் தோளில் போட்டுக்கொண்டு ஆயர்குல இளைஞன் ஒருவன், அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடியவன், அவளைக் கண்டவுடன் "அக்காள்! அக்காள்! அலையாய் அலைகிறேன், என்

ஆட்டுக்குட்டியைக் காணவில்லை! தேடித் தவிக்கிறேன்! நீ கண்டாயா?" எனக் கேட்டான்!

துன்பத்திலும் ஏந்திழைக்குச் சிரிப்புத் தாங்கவில்லை!

"ஏடா தம்பி, ஆட்டுக்குட்டியை உன் தோளிலேயே போட்டுக்கொண்டு தேடுகிறாயே!" எனக் கேலி செய்தாள்.

இளைஞன், நினைவு வந்தவனாக, "அடேடே! ஆமாம்!" என்று கூறிவிட்டு அவளுக்கு நன்றி சொல்லிச் சென்றுவிட்டான்.

ஏந்திழையின் தோழியொருத்தி, அவளைக் குறும்பு செய்வதற்கென்றே திட்டமிட்டபடி அங்கு வந்தாள்! "எங்கேடி இந்தப்பக்கம்?" என்றாள் ஏந்திழை! "ஒன்றுமில்லையடி! எனக்கு அவசரமாக நெய் வேண்டும்; அதற்காக ஆயர்பாடிக்குப் புறப்பட்டேன்" என்றாள் தோழி!

"கையில் என்ன வைத்திருக்கிறாய் குவளையில்?" என்று அவளைப்பார்த்து ஏந்திழை கேட்டாள்!

"வெண்ணெய்" என்றாள் தோழி.

"ஓர் இளைஞன் இப்போதுதான் ஆட்டுக்குட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு தேடினான்! நீயோ கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறாய்! நல்ல வேடிக்கைகள்!" என்று ஏந்திழை சிரித்துக்கொண்டே இருந்தாள்.

"சரி, சரி! சிரிப்பை நிறுத்து! நீ மட்டும் என்னவாம்? உன்காதலனை உன் உள்ளத்திலேயே வைத்துக்கொண்டு, அவனை வேறு எங்கேயோ எவரிடமோ தேடிச் செல்கிறாயே! அதை உனக்கு உணர்த்திடத்தான், ஆட்டுக்குட்டி தேடும் இளைஞனை அனுப்பினேன்! பிறகு நானே இங்கு வந்தேன்! நான் மாத்திரம் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது வேடிக்கை; அந்த இளைஞன் தோளில் ஆட்டைப் போட்டுக்கொண்டு அதைத் தேடுவது மாத்திரம் வேடிக்கை; நீ காதலனை நெஞ்சில் வைத்துக்கொண்டு, அவனைத் தேடியலைவது மாத்திரம் வேடிக்கை இல்லையாக்கும்?"

ஏந்திழை, தோழியின் குறும்பில் பொதிந்து கிடக்கும் உண்மையைப் புரிந்துகொண்டு, நாணத்தால் முகம் சிவந்தாள்.

"உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு"

அதிகாரம் - 125 - நெஞ்சொடு கிளத்தல்; பாடல் - 1249

உழை = இடம் சேறி = செல்கின்றாய்



சுயமரியாதை

கற்கள் அவன் காலைக்குத்தின!
இரத்தினங்கள் பதித்தவை போல்
இரு பாதங்களும் காட்சி தந்தன!
கோடை வெயில் கொளுத்திற்று-
குடை பிடிக்க வழியில் ஒரு மரமும் தயாராக இல்லை!
தலை வெடித்தாலும் பரவாயில்லையென்று
கால்களை முடுக்கி விட்டான்;
கடும்பயணத்தை நிறுத்தாமல்!
நாக்கைச் சுருட்டியது தாகம்-
பாக்கை வெட்டும் கருவிபோலப்
பசி, குடலை வெட்டியது!
இன்னும் பாதித் தொலைவு இருக்கிறது
இன்னலை வென்று நடந்திடுக என்று
இதயத்தில் வேண்டுகோள் பிறந்தது-

அந்தியும் வந்தது, அக்கினிப்பகல் நீங்கி!
மந்தியாம் இருட்டும் வேகமாய் வந்து
குந்திக்கொண்டது!
கோட்டான் கீதம் - கொடும்புலி உறுமல்
காட்டானைப் பிளிறல் - நரிகளின் ஊளை!
வழக்கமாய் நடக்கும்
வனமகோற்சவம் அது! பார்த்தும் கேட்டும்
பழக்கமில்லாதவன் பயந்தே மடிவான்!
இவனோ;
கர்ப்பப்பையில் ஊறியபோதே
அச்சம் என்பதைத் தவிர்த்த மறவன்
அதனால்
நடந்தான் - நடந்தான் -
நடந்துகொண்டே யிருந்தான்!
பாம்பொன்று சுற்றியது காலில்-
பசலைக்கொடி போல எடுத்துப் போட்டுப்
பாதை மாறாமல் பார்த்தபடி
பாழ் காட்டில் பயணம் செய்தான்!
தூற்றலும் போட்டது வானம்-
கூற்றமாய்ச் சிரித்தது மின்னல்-
மூட்டமாய்ச் சேர்ந்த முகில்கள்
முழங்கின இடிகளாய்ப் பின்னே!
வரவேற்பையேற்று வந்தன
மழையும் புயலும்!
வாடவுமில்லை - வருந்தவுமில்லை
அவன் வழியில்,
வைத்த விழி தவறவுமில்லை!
நடந்தான் - நடந்தான் -
நடந்துகொண்டே யிருந்தான்!
நஞ்செனத் தோன்றிய துன்பங்கள் அனைத்தும்
பஞ்செனப் பறந்தன - பயணமும் முடிந்தது!...
நாடிய இலட்சியக் காதலி காத்திருந்தாள் - பிறர்
கோடியைக் கொட்டினும் தொடாமலே

குடிசையில் ஒண்டி அவனைப் பார்த்திருந்தாள்!
வந்தவன் அவளை வாரி அணைத்தான் - அந்த
நந்தவன மலரும்,
வண்டின் முத்தம் மொண்டு குடித்தாள்!
இதனைத்தான் வள்ளுவ அறிஞன்
துணிவுடன் துன்பத்தைக் கடந்தால்
பணிவுடன் இன்பம் வந்து
கைகட்டி நிற்குமென்றான்.

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை."

அதிகாரம் - 67 - வினைத்திட்பம்; பாடல் - 669





தன்னுயிரின் துளி

இந்த நூற்றாண்டின் காந்திய வழித்தோன்றல் வினோபா எனில், இரு கருத்துக்கு இடமேயில்லை. அவரது கருத்துக்களில் வேறுபாடு கொண்டோர் பலர் உண்டெனினும் அவரது உள்ள உறுதிக்கு, அவரெல்லாம் மதிப்பளிக்கவே செய்வர். சமுதாயத்தைச் சூழ்ந்துள்ள இருள் அகற்ற, அவர் கைகளில் ஏந்தியது அகல் விளக்குதான் எனினும் அவரது உள்ளத்தின் உறுதியொளியை உலகு தொழுதது எனலாம்.

ஓய்வின்றி மக்களுக்காக உழைத்துக்கொண்டேயிருந்த அந்த முதியவரை, மாரடைப்பு நோய், திடீரெனத் தாக்கியது. சற்று நலம் பெற்றார் எனினும் இனி உடல் பலம் பெற்று உழைத்திட இயலாது என்பதை உணர்ந்து கொண்டார். அதனால் நடைப்பிண வாழ்வை வெறுத்திட்டார். சிறந்த மருந்துகள் அருந்துக என்றும் மருத்துவ மேதைகளின் சிகிச்சைகளை ஏற்றிடுக என்றும் அவரது மாணவ மணிகளும் உற்றார் உறவினரும் ஏன்; நாடாள்பவர்களுங்கூட மனமுருகி வேண்டினர்.

அவரோ, மெல்ல மெல்லத் தன் உயிரை விழுங்கும் சாவுக்கே இடமளிப்பேன் எனக் கூறிவிட்டார். பால்பொழியும் பசுவொன்றை வாயில் கௌவிக் கொண்ட மலைப்பாம்பு, அதனைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்குதல் போல், அந்த உறுதி மிக்க

உத்தமரைச் சாவு விழுங்கத் தொடங்கியது. பிழைத்தும் பயனில்லை என அறிந்த அக்கிழவர், புன்னகை பூத்த முகத்துடனே சாவின் வயிற்றுக்குள் நடந்திட்டார்! பாம்புவாய்ப் பசுக்கூடத் தப்பித்து வெளி வரத்தான் துடித்திடும்! வீரமுனிவர் வினோபாவோ, மருந்துகள் எதையும் தொடேன் என மறுத்துவிட்டு மரணத்தை வரவேற்றார்.

சாவு அவரை வென்றதா? அல்லது சாவை அவர் வென்றாரா? என்ற கேள்விக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவப் பெருந்தகை விளக்கமளித்துள்ளார்.

அந்தக்குறள் இதோ:

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"

நோன்பிருந்து உறுதியொளியினைப் பெற்ற ஆற்றலுடையவர்கள், சாவைக் கண்டு அஞ்சாமல் அதனை வெற்றி காண்பார்கள், என்பது இந்தக்குறளின் பொருள்!

அதிகாரம் - 27 - தவம்; பாடல் - 269

கூற்றம் = சாவு குதித்தல் = வெல்லுதல்





கோவலனும் கண்ணகியும்

கொலைகள் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. கொள்ளையும் களவும் பொழுது போக்குகளாகிவிட்டன. இப்படியொரு நாடு! அங்கே ஆள்பவர்களின் கூட்டத்தாரே அநீதிக்குக் கோபுரம் கட்டி, வன்முறைக் கலசங்களுக்கு நாள் தோறும் குடமுழுக்குவிழாநடத்தி வந்தனர். கொலைக்கும் கொள்ளைக்கும் பலியானவர்கள் போக, மிச்சமிருந்த குடிமக்களோ கோலோச்சியவர்களின் கொடுமைக் கரங்களால் வேளைதோறும் சீரழிக்கப்பட்டு வந்தனர்! அவர்களை வறுமை தாக்கிற்று! ஏழ்மையில் உழன்று தவித்தனர்! அந்த நிலையிலும் வரியைப் பிழிந்தெடுக்க ஆளும் கணத்தார் வரிந்து கட்டிக்கொண்டு, அந்த மக்களை வளைத்தனர்! வாட்டினர்! சாவு ஒன்றே அந்த ஏழை எளியோர்க்கு இன்பம் தரவல்லதாகத் தோன்றியது. அல்லலுக்கு ஆட்பட்டோர் அலறிப் பயனில்லை; அந்தக் கூக்குரல் ஆளவந்தவர்களின் காதில் விழுந்திட வாய்ப்பில்லை. அவர்கள் சுவைத்ததெல்லாம், தங்களைச் சுற்றி நின்று காமக்கணை தொடுத்துக் கொண்டிருந்த இன்ப வல்லிகளின் இசையைத்தான்! கூத்தில் ஒலிக்கும் சதங்கை ஒலியைத்தான்! ஏன் என்று கேட்டோர் நசுக்கப்பட்டனர்! ஆகுமா இந்த அநியாயம் என அறிவுரை புகன்றோர், அழிவுப் பள்ளத்தில் தூக்கி வீசப்பட்டனர்! ஏச்சுக்கும் இழிவான பேச்சுக்கும் ஓர் எல்லையே இல்லாமற் போயிற்று! இல்லாமையாற் கதறும் மக்களுக்காக ஓங்கிக் குரல் கொடுக்க எவர் வரினும், அவரைத்

தமது ஆதிக்கக் கொழுப்புக்கு இரையாக்கிக் கொள்ளவே, அரசுக் கட்டிலில் வீற்றிருந்தோர் திட்டங்களைத் தீட்டினர்.

ஆனால், எத்தனை நாட்களுக்குத்தான் ஆமைகளாகவும் ஊமைகளாகவும் மக்கள் அடங்கிக் கிடப்பர்? புழுக்களும் புலிகளாகுமன்றோ புரட்சிப்புயல் கிளர்ந்தெழுந்தால்!

இறுதியாக, அதுதான் நடந்தது அந்த நாட்டில்! நித்தம் நித்தம் செத்துக் கொண்டிருப்பதைவிட ஒரேயடியாகச் செத்துவிடலாமென்று தங்கள் கரங்களைப் போர்வாட்களாகவும் நெஞ்சப் பலகைகளைக் கேடயங்களாகவும் ஆக்கிக்கொண்டு, ஆதிக்க வெறியர்களின் அரண்மனையில் படையெடுத்தனர், பசியால் துடித்தோர்! பழிவாங்கும் போக்கினால் பதைத்தோர்!

வெற்றித் திருமகள் அந்த 'நிராயுதபாணி'களின் கழுத்தில்தான் மாலை சூட்டினாள்! ஆயுதம் தாங்கியோர் - ஆதிக்க வேங்கைகள் - அரண்மனையை விட்டு எங்கேயோ ஓடி எப்படியோ உயிர் தப்பிப் பிழைத்தனர்; இனி நாடமாட்டோம் இந்த நாச முறையை, என மன்னிப்புக் கேட்டு மண்டியுமிட்டனர். அந்த வெறியர்களின் கொடுமைகள் புதைக்கப்பட்ட கல்லறையின் மீது, உழைப்போரின் நாடு உதயமாயிற்று, கதிரொளியைப் பரப்பியவாறு!

உலகில் இப்படித் தோன்றிய நாடுகளின் பட்டியல் நீளும்!


இப்படித் தோன்றிடக் கூடும் என்பதை வள்ளுவர், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே எழுதி வைத்திருக்கிறாரே!

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்"

அதிகாரம் - 57 - வெருவந்தசெய்யாமை; பாடல் - 563

வெருவந்த = அஞ்சிடத்தக்கஒருவந்தம் = உறுதியாக ஒல்லை = விரைவில்





வழிமேல் விழியோட்டிக் காத்திருந்த வஞ்சிக்கொடியின் முன்னால் அவன் வந்து நின்றான். அருகில் யார் இருக்கின்றார் என்ற அச்சம்கூடச் சிறிதுமின்றி அவள் அழகிய கண்கள், அவன் முகத்தின்மீது மேயத் தொடங்கின.

வீட்டிலிருந்தோர் விலகிக் கொண்டனர்.

"பிரிவு, என் நெஞ்சைத் துளைத்தெடுத்துவிட்டது கண்மணி" என்றான்.

"என் நெஞ்சுக்கு என்ன நேர்ந்ததோ எனக்குத் தெரியாது! காரணம்; அது, நீ என்னைப் பிரிந்து சென்றபோது உன்னுடனேயே வந்துவிட்டது" என்றாள் அவள்.

கரங்களை நீட்டிக் கார்குழலாளைக் கட்டியணைத்தான்! அவளோ, தன் தலையை அவனது மார்பினில் அழுந்தப் புதைத்துக்கொண்டு ஆனந்த சுகம் கண்டாள்.

உச்சந்தலையில் உதிர்த்தான் முத்தங்களை! அவளோ அவன் மார்பில் மழையாகப் பொழிந்தாள் முத்தங்களை! "ஏனடி தங்கம்! உன் தேனிதழ்கள், திரும்பிப் பார்க்க மறுக்கின்றன என் உதடுகளை?" எனப் புன்னகையரும்பிட வினவினான்!

"அத்தான்! அதற்கென்ன அதற்குள் அவசரம்! இரவு முழுவதும் ஈரத்தால் நனைந்திடத்தான் நான்கிதழ்கள் நாமெல்லாம் தவம் கிடக்கின்றனவே; கிடக்கட்டும்!

BHAVAN LIBRARY

வரம் அளிப்போம் பின்னர், நமது வாய்முகப்பின் கரும்புக் கதவுகட்கு! இப்போதென்னை உந்தன் மார்பில் இறுகப் போர்த்திக் கொள்க! என் கன்னங்கள் சுவையேறட்டும்!”

அவன் நெஞ்சப் பஞ்சணையில், அவள் முகத்தைப் படுக்கவைத்து மெய்மறந்தாள்!

“மார்பகத்தால் என்னைப் புலன்மாற்றிப் போட்டவளே! கண்ணொளியால் என்னைக் கவர்ந்துகொண்ட பொன்மணியே! என் மார்பில் சாய்வதில்தான் உனக்கேனிந்த மயக்கம் மானே?”

தழுதழுத்த குரலில் கேட்டான், இன்ப மயக்கத்தில் தள்ளாடிக்கொண்டு!

அவள் சொல்லுகிறாள்:


“என்னைக் கொள்ளைகொண்ட கள்வனே! கள்ளுண்டவர்களைக் கண்டிருக்கிறாய் அல்லவா? அவர்கள் அந்த மயக்கத்தில் இழிவு தரத்தக்க செயல்கள்கூடப் புரிந்திடுவர். கள்ளுக்கு அடிமையாகித் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு பிறர் தூற்றுதலுக்கும் கூட ஆளாகிவிடுவர். ஆனாலும் அவர்கள் அந்தக் கள்ளையுண்டு களித்த நிலையில், மேலும் மேலும் அந்தக் கள்ளையே அருந்திட விரும்புவர்! தன்னையுண்டு மயங்கியோர் மென்மேலும் தன்னையே விரும்புமாறு செய்கிற கள்ளைப் போன்றது கள்வா, உன் மார்பு! அதனால்தான் நான் உன் மார்பில் முகம் புதைத்திடும் சுகத்தைத் திரும்பத் திரும்ப விரும்புகிறேன்.”

அவளின் இந்த விளக்கத்திற்குப் பிறகு பேச்சுக்கே இடமில்லை!

“இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.”

அதிகாரம் - 129 - புணர்ச்சி விதும்பல்; பாடல் - 1288





கல்லாத ஒருவனைக் 'கற்றறி கோவே!' எனப் புகழ்ந்தான்! பொல்லாத செயல்களின் உருவத்தைப் 'புனிதச் சுடரே!' எனப் போற்றினான்! பழிவாங்கும் இயல்புடைய மனத்தானைப் 'பண்புப் பெட்டகமே!' எனப் பாமாலை தொடுத்தான். கொள்கை, குறிக்கோள் எதுவுமற்ற கோணல்மதி கொண்டவனைக் 'கொள்கைக் குன்றமே!' எனத் தொழுதான்!

இந்தப் புகழாரங்களையெல்லாம் அவன் கட்டிமுடித்து பகைநாட்டு வேந்தனின் காலில் சூட்டியபோது இதழ்கள் சிரித்து நடித்தன! இதயமோ அழுதுகொண்டிருந்தது. மனச்சாட்சியின் மறுப்புக் கணைகளை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! இருப்பினும் அரண்மனைக் கொலுமண்டபத்தில் அமருவதற்கேற்ற ஒரு பதவி, எப்படியும் பெற்றிட வேண்டுமென்பதற்காக அவன், தனக்குற்ற இழிநிலையை மறந்திட முனைந்தான்.

கற்றவன்! திறமை படைத்தவன்! அறிவைப் பயன்படுத்தி அருஞ்செயல்கள் புரியக்கூடிய ஆற்றல் கொண்டவன்! அவன் தளபதியாக இருந்து நடத்திய போரில், பகைவர்களிடம் தோற்றிடவேண்டிய நிலை! முழுமையான தோல்வி ஏற்பட்டு, களத்தில் மாண்டிடவோ - சிறையில் அடைபடவோ விரும்பாமல் பகைமன்னனிடம் சரணடைந்தான்.

அவனைத் தளபதியாகப் பெற்றிருந்த மன்னனோ, அதிர்ச்சிகொண்டான். எனினும் உறுதியும் நன்றியுணர்வும் நாட்டுப்பற்றுமிக்க தளபதிகளையும் வீரர்களையும் பெற்றிருந்த காரணத்தால் போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தான்.

இதற்கிடையே பதவி கிடைக்காது பகைமன்னன் காலடியில் கிடந்த தளபதிக்கு, நல்வாய்ப்பாக ஒரு சிறு பதவி வந்து சேர்ந்தது.

வாழ்த்து! வணக்கம்! வண்ண வண்ணத் தமிழில் பாராட்டுரைகள்! பதவி தந்த பகைவேந்தனைத் தெய்வத்துடனே ஒப்பிட்டுப் பேசலானான்.

அவன் போக்கினை, அவன் துணைவியும் அவன் மகனுமே கண்டித்தனர். பகைமன்னன் அரண்மனையில் பதவி பெற்று, கொடியவனைக் கோமான் என்றும் பூமான் என்றும் கொட்டி முழக்கிக் கொண்டிருப்பதைவிட, நமது மன்னருடன் இணைந்திருந்து போர்முனையில் விழுப்புண் ஏற்பது எவ்வளவோ பெருமை என்று இடித்துரைத்தனர்.

ஊரார் - உற்றார் - தோழர்கள் - பகை மன்னன் கொலுவில் இருந்தோர் - அனைவருமே அவனை மதித்திடத் தயாராக இல்லை.

ஒருநாள் அவன், தலையைத் தொங்கப்போட்டவாறு இல்லத்தில் நுழைந்தான். முகவாட்டத்திற்குத் துணைவி, காரணம் கேட்டாள்! "பதவி பெரிதென எண்ணினேன்! ஆனால், பலரும் என்னைப்பற்றி நேரிலும் மறைவிலும் பேசுவதைக்கேட்க வெட்கமாக இருக்கிறது" என்றான் கண் கலங்கிட!

அப்போது அவனது மகன், மரத்தினால் செய்யப்பட்ட ஒரு பாவையைக் கயிறுகொண்டு ஆட்டியவாறு அங்கே வந்தான்.

"என்னடா இது, மரப்பாவை?" என்றாள் தாய்!

"அம்மா! இதற்கு உயிர் உண்டு! இதோ பார்!"


எனக் கயிற்றைப் பிடித்து ஆட்டிக்காட்டினான். மனைவியும் மகனும் செய்திட்ட கேலியை அவன் புரிந்து கொண்டான்.

"மனத்தில் வெட்கமில்லாதவர்கள் உலகில் இயங்குவது; மரத்தினால் செய்யப்பட்ட பாவையைக் கயிறுகொண்டு கட்டி உயிர் உள்ளதெனக் கூறி மயக்குவதைப் போன்றது."

இப்படியொரு குறளை வள்ளுவர் தீட்டியிருக்கிறார். அதைத்தான் நாணமற்ற தனது செயலுக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார்கள் தனது மனைவியும் மகனுமெனப் புரிந்துகொண்டான்; மனம் புழுங்கிப் போனான்.

"நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று."

அதிகாரம் - 102 - நாணுடைமை; பாடல் - 1020



காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் ஆண்டுகொண்டிருந்த காலம். பிற்காலப் பல்லவர்கள், நந்திவர்மனைப்போல தமிழின்பால் தணியாத வேட்கை கொண்டவர்கள். அவர்களில் ஒரு பல்லவன் ஆட்சியிலே படைத் தளபதிகளின் குழுவில் சோழநாட்டைச் சேர்ந்த அருளாளன் என்பானும் இருந் தான். அவனிடம் மன்னருக்குத் தனியன்பு உண்டு. தனது அமைச்சர்களிடமும் தளபதிகளிடமும் அடிக்கடி நாட்டுநிலை குறித்தும் அரசுப் பொறுப்புகள் குறித்தும் பல்லவ மன்னர் விவாதித்து முடிவெடுப்பார் எனினும், அருளாளன் கருத்துக்கும் அவர் தனி மதிப்புக் கொடுத்து அவ்வண்ணம் செயலாற்றுகிற வழக்கம் கொண்டிருந் தார். துணைத்தளபதிகளின் பதவிகளில் சிலரை அமர்த்திப் படையின் வலிமையை மேலும் உறுதியாக்கிட வேண்டுமென்று ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அந்தச் சில பதவிகளுக்கு வர, பலரும் போட்டியிட்டனர். அந்த நேரம் சோழத்தளபதி அருளாளன், பல்லவப்படை முகாம்களை நேரில் கண்டு ஒழுங்குபடுத்திவரச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தான்.

பரளியெனும் பாசறையைப் பார்வையிட்டபோது, அணிவகுத்து நின்ற வீரர்களில் ஒருவன் அருளாளனின் காலில் விழுந்து கண்ணீர் மல்க நின்றான். "என்னப்பா! என்ன வேண்டும்?" என இரக்கம் நிறைந்த இதயங்கொண்ட அருளாளன், கேட்டான்.

"நீண்ட நாட்களாகப் படையில் போர்வீரனாக இருக்கிறேன். துணைத் தளபதிப் பதவிகளில் ஒன்று எனக்குக் கிடைக்க, மன்னரிடம் தாங்கள்தான் பரிந்துரை செய்திடல் வேண்டும்; அதுவரையில் உமது பாதங்களை விடமாட்டேன்" என்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

துணைத்தளபதிப் பொறுப்புக்குத் தகுதியும் ஆற்றலும் வாய்ந்தவர்கள் சிலர் பரளிப்பாசறையில் இருந்தும்கூட, அருளாளன் அவனுக்கு வாக்குறுதியளித்து விட்டுத் திரும்பினான்.

துணைத்தளபதிப் பெறுப்பென்றால் தகுதியும் உயரும் ஊதியமும் அதிகம் கிடைக்கும்.

ஐந்தாறு துணைத் தளபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் ஒருவன், அருளாளனின் காலில் விழுந்தவன். இந்த நன்றியை என்றும் மறக்கமாட்டேன் என்று அவன் அருளாளனை மூன்று முறை சுற்றி வந்து காலில் விழுந்து வணக்கம் செலுத்தினான். துணைத்தளபதிக்குரிய உடைகளைத் தயாரித்துக் கொள்ளக்கூட அருளாளனே, தனது சொந்தப் பொறுப்பில் தொகை வழங்கி உதவினான். ஏதோ ஓர் அன்பு அவன்மீது அருளாளனுக்கு! அதனால் அந்த வீரனின் முகத்தை விகாரப்படுத்திக்கொண்டிருந்த துடைப்பம் போன்ற மீசையைக் கூட முடிதிருத்தும் தொழிலாளியைக் கொண்டு அழகுபடுத்தச் சொன்னான்.

"நீ இப்படிச் சிலருக்கு இரக்கம் காட்டி ஏமாந்து போனவனாயிற்றே! இவன் உனக்கும் எனக்கும் நாட்டுக்கும் நன்றியுடையவனாக இருப்பானா?"

என்று பல்லவ மன்னர் கேட்டபோது, அருளாளன் உறுதியளித்தான், நிச்சயமாக இருப்பான் என்று!

நாட்கள் ஓடின! உடல்நலிவுடன் போராடி வெற்றிபெற முடியாமல், பல்லவ மன்னன் இயற்கை எய்திவிட்டார்!

அவர் கொலை செய்யப்பட்டதாகக் கதை கட்டி, அரண்மனையில் இருந்த சிலர் தங்களுக்குப் பிடிக்காத ஓரிருவரைப் பழிவாங்கத் திட்டமிட்டனர். அந்த நரிமனத்தினரின் நயவஞ்சகக் கண்கள் அருளாளன் மீதும் விழத் தவறவில்லை. மன்னரின் கொலைக்குக் காரணமாக இருந்தவன் அருளாளன் எனக்கூறி, பல்லவ நாட்டு நீதிமன்றத்தில் குற்றம் சாட்டினர். நோய்வாய்ப்பட்டு மறைந்த மன்னர், கொலை செய்யப்பட்டதாகப் புனையப்பட்ட அந்த வழக்கில் அருளாளன் இணைக்கப்பட்டது கண்டு, பல்லவ பூமியே பதறியது!

"கொலைதான் என்பதற்கு என்ன சான்று?" - நீதிமன்றம் கேட்டது!

"இதோ கட்டாரி! இறந்து போன மன்னரின் அருகில் கிடந்தது!"

வழக்காடிய வன்னெஞ்சன் இதுபோலப் பதில் கூறினான்.

"மன்னர் மேனியில் காயம் ஏதுமில்லையே!"

"காயமின்றிக் கழுத்து நெறிக்கப்பட்டிருக்கலாம்!"

"நெறித்தவர் யார்?"

"இதோ - இந்தத் தளபதி அருளாளன்தான்."

சூழ்ச்சிக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

"அருளாளன்தான் என்பதற்குச் சாட்சியம் யார்?"

நீதிதேவனின் இந்தக் கேள்விக்கு விடையளித்திட; "இதோ! நான்தான்!" என்று ஒருவன் மன்றத்தின் நடுவே வந்து நின்றான். கூடியிருந்தோர் அவனைப் பரபரப்புடன் நோக்கினர். அவன் வேறு யாருமல்ல; அருளாளனின் பரிந்துரையால் துணைத்தளபதியாக ஆக்கப்பட்டவன்தான்!

"அடப்பாவி! நீயா? அருளாளன் காலைத்தொட்டு வணங்கி வாழ்வுபெற்ற நீயா - இப்படித் துரோகியாக வந்து நிற்கிறாய்?"

மன்றத்திலிருந்தோர் உதடுகள் இவ்வாறு முணுமுணுத்தன! அவனோ நாணம் சிறிதுமின்றி நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தான்! தோற்றத்தில்தான்! ஆனால், உள்ளம் துவண்டு கிடந்தது!

"அருளாளா! உன் வயிறு எரிந்தால் அவன் உருப்படுவானா?"

என்று ஒரு பெரியவர் கொந்தளித்துக் கேட்டார்!

"எப்படியும் வாழலாம் என்று முடிவெடுத்து விட்டவன்! பாவம்; எப்படியோ வாழ்ந்துவிட்டுப் போகட்டும்!"


என்று பதில் அளித்தான் அருளாளன்! இறுதியில் நீதிவென்றது! அருளாளன் மீது பழிசுமத்தியோர், தலை தொங்கிப் போய்த் திரும்பினர்!

அவன் முகத்தில் விழிக்கவே முடியாத நிலையில் - அந்த நன்றி மறந்தோனும் மன்றம் விட்டு அகன்றான்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

இந்தக் குறள் மொழி, இசைவழியாக எங்கிருந்தோ ஒலித்துக் கொண்டிருந்தது.

அதிகாரம் - 11 - செய்ந்நன்றி அறிதல்; பாடல் - 110



வலிமைமிக்க படைகளையுடைய மன்னன் ஒருவன் இருந்தான். தனது ஆளுகை யின் கீழ் உள்ள மக்களை, வளமிக்க வாழ்வு உடையோராகத் திகழச் செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்துச் செயல்படாமல், புதிய நாடுகளைத் தன் ஆட்சிக்கு அடிமைப்படுத்தித் தனது ஆதிக்கத்தின் எல்லைக்கோட்டை விரிவாக்கிக் கொள்வதி லேயே அவன், நேரத்தையும் நினைப்பையும் செலவிட்டான். ஒவ்வொரு முறையும் அவன் புதிய நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று போரிட்டு வென்று வருவதற் குள், அவன் நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கானோர் உயிர்ப்பலி ஆகவேண்டி யிருந்தது; பலநாட்கள் பட்டினி கிடக்க வேண்டியிருந்தது. சுற்றிலும் பகைவர்களை வளர்த்துக்கொண்ட காரணத்தால், அவனது படையை வலிமையுள்ளதாக வைத்துக்கொள்ளக் கருவூலம் முழுவதையும் அந்தப் படைப்பெருக்கத்திற்கே செலவிட வேண்டியிருந்தது. நல்வாழ்வும் அமைதியான வாழ்வும் கிட்டாமல் மக்கள் அல்லற்பட்டுக்கொண்டிருந்தனர். பசியும் பிணியும் கூத்தாடத் தொடங்கி, நாட்டின் பல்வேறு பகுதிகள் வறுமைக் களங்களாக வாடிக் கிடந்தன.

அந்த நிலை பற்றி அணுவளவுக் கவலையும் கொள்ளாத வேந்தன், அவனது ஆட்சி யின் மாட்சி குறித்துப் புலவர்கள் பாடிட வேண்டுமென்று விரும்பினான். பறை அறிவிக்கப்பட்டது. பாராளும் வேந்தனின் செங்கோல் திறன் குறித்துப் பாடிப் பரிசு பெறுவோர்க்கு முதல் பரிசாகப் பத்தாயிரம் பொற்காசு வழங்கப்படுமென்று அப்பறை முழங்கிற்று.

ஆட்சியின்பால் வெறுப்புக்கொண்ட இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் வறுமையில் வாடிய நடுத்தர வயது நண்பன் ஒருவனுக்குப் புலவர் வேடம் கட்டிவிட்டு, அந்த நண்பனிடம் பாட்டொன்றையும் எழுதிக்கொடுத்து, இதைப்போய் மன்னன் முன்னால் பாடிப் பத்தாயிரம் பொற்காசுகளைப் பெற்றிடுக என அனுப்பி வைத்தான். குறும்புக்கார இளைஞனின் சேட்டையைப் புரிந்துகொள்ளாத அந்த வறியோனும் பொற்காசின் மேற்கொண்ட ஆசையால், அவன் எழுதித் தந்ததை வாங்கிக் கொண்டு அரண்மனைக் கொலுமண்டபத்திற்குள், புலவர் போல நுழைந்து விட்டான்.

அவனைப் பார்த்து மணிமுடி தரித்தோன் கேட்டான்: "எனது ஆட்சி குறித்து என்ன கவிதை தீட்டி வந்திருக்கிறீர்" என்று! புலவர் வேடதாரி "ஆட்சி குறித்துத் தானே? இதோ சொல்கிறேன்! உமது ஆட்சி எப்படி இருக்கிறது தெரியுமா?" எனப் பதிலளித்தான்! மன்னன், ஆவல் மிகுந்திட "எப்படியிருக்கிறது?" என வினவினான்!

"கன்னா
பின்னா
மன்னா
தென்னா"
எனச் சொல்லிப் புலவர் வேடதாரி நிறுத்திவிட்டான்!

புலியெனப் பாய்ந்தான், வேந்தன் சீற்றங்கொண்டு! வாளை உருவினான்! வேடதாரியின் தலையைக் குறிபார்த்து ஓங்கினான்! உடனே குறுக்கே பாய்ந்து அரசனைத் தடுத்து நிறுத்தினார், அரண்மனைப் புலவர்! இளைஞன், தனது நாட்டு நிலையை அந்தச் சொற்களின் வாயிலாக அறிவுறுத்தியிருப்பது உண்மைதான் எனினும், அது அரண்மனைப்புலவரும் உணர்ந்த ஒன்றுதான் எனினும், அந்த வேடதாரியாம் வறியவனைக் காப்பாற்றவே அவர் துடித்தார்!

"வேந்தே! அழகான பாடல்! அருமையான பாடல்! உம்மைப் போற்றிப் பரிசு பெற இதைவிட வேறு கவிதையைத் தேர்ந்தெடுக்க முடியாது!" என்றார் அரண்மனைப் புலவர்.

"அப்படியா?" என்று திகைத்தான் மன்னன்!

"ஆமாம்! 'கன்னா' என்றால் குந்திதேவியின் கன்னத்தில் வழியாகப் பிறந்த கர்ணனே; எனப்பொருள்! 'பின்னா' எனிலோ, அந்தக் கர்ணனுக்குப் பின் பிறந்த நேர்மையாளனான தர்மனே; என்று பொருள்! பிறகு...மன்னா; மன்னவனே! தென்னா; தென்புலத்தை ஆள்பவனே! என்று பொருள்-"

அரண்மனைப் புலவர் அளித்த விளக்கம் கேட்டு ஏமாளி மன்னன், புலவர் வேடத்தில் வந்தவனைக் கட்டித் தழுவி, முத்தாரத்தைக் கழுத்தில் சூட்டி, பொற்கிழியையும் கையில் கொடுத்து வழியனுப்பி வைத்து, மகிழ்ச்சியில் மூழ்கினான்.

இந்த இன்பச் செய்தியை அவன் தனது பட்டத்தரசியிடம் பகிர்ந்து கொண்டபோது உண்மை வெளிப்பட்டது. அரசியார், இலக்கியப்புலமை பெற்றவள்! அவள், அரண்மனைப் புலவர் அந்த வறியவனை மிகத் திறமையாகக் காப்பாற்றியிருப்பதைக் கூறிவிட்டாள்! மீண்டும் அரசன் வெகுண்டெழுந்தான்! அவனைத் தடுத்துப் பஞ்சணையில் வீழ்த்தி, அரசி சொன்னாள்: "மன்னவரே! உங்கள் போக்கினால், நாடு நிம்மதியாக இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்! சிறிது நிதானமாகச் சிந்தியுங்கள்! குறை கூறுவோர் கடுஞ்சொற் களைப் பயன்படுத்தினால்கூட, அந்தச் சொற்கள் காதைக் குடையும் நிலையிலே பாய்ந்தால் கூட அதைப் பொறுத்துக்கொள்கிற பண்பு இருந்தால்தான், அந்த அரசனது குடை நிழலில் நாட்டு மக்கள் தங்கியிருப்பர்! இல்லையேல், நாடே நம் கையைவிட்டுப் போய்விடும்" என்றாள்.

மன்னன் அமைதியாக இருந்தான். அரசி, இனிய குரலில் திருக்குறள் ஒன்றை இசைத்தாள். குரல் மட்டுமல்ல, குறளும் மன்னனைக் கவர்ந்தது!

இதோ அந்தக் குறள்:

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு."

அதிகாரம் - 39 - இறைமாட்சி; பாடல் - 389

கவிகை - குடை கைப்ப - வெறுக்குமாறு



வானத் தடாகத்தில் நீந்துகின்ற வெண்முகில் வாத்துக்களிடையே... கருமுகில், தாமரையிலைகளை நீக்கிக்கொண்டு ஒளிமுகம் காட்டுகின்ற நிலவைக் கண்டேன். அந்த ஒளிச்சிதறல், வானின் அலைகளிலே விண்மீன்களாய்த் துள்ளி மின்னும் அழகைக் கண்டேன். எங்கிருந்தோ ஆயன் ஒலிக்கும் குழலின் இசையைக் கேட்டேன். யாழ் எடுத்து எவளோ ஒருத்தி எழில் மாடமிருந்து மீட்டினாள் போலும். தென்றலில் கலந்து அந்தத் தேனமுதம் என் செவிகளில் பாய்ந்தது. நின்று கேட்டவாறு அங்கிருந்து பின்னர் அகன்றேன். இல்லத்திலோ என் தாய், வெல்லத்தில் செய்திட்ட பண்டங்கள் போதாதென்று வாழை, மா, பலா எனும் முக்கனியைப் பக்குவமாய்ப் படைத்துண்ணச் செய்தாள். உண்டு மகிழ்ந்தேன்; உவகை கொண்டேன்; உலவிடச் சிறிது சோலையோரம் சென்றேன். முல்லையும் மல்லிகையும் பரப்பிய மணத்தில் மனத்தைப் பறிகொடுத்து மீண்டேன். நான் வளர்த்திடும் முயலின் பஞ்சு மேனியைத் தடவிப் பரவசமுற்றேன். என் முதுகில் அழுந்திய மயிலின் தோகையைத் தழுவியபோது, மென்மையின் சுகத்தை உணர்ந்தேன்.

ஆம் - கண்ணால் கண்ட இன்பம்! காதால் கேட்ட இன்பம்! மூக்கால் முகர்ந்த இன்பம்! நாவினிக்க உண்ட இன்பம்! மெய்தீண்டி உணர்ந்த இன்பம்! இவ்வாறு

ஐம்புலனும் தனித்தனியே அனுபவித்த இன்பத்தை ஒருசேர எங்கு காண்பேன் என ஏங்கிடும் உள்ளத்தோடு, ஏரிக்கரை மீது நடந்தேன். அடடா! அந்த இன்பத்தை என் சொல்வேன். ஐம்புலன்களுக்கும் தனித்தனியாகக் கிடைத்த இன்பமெல்லாம் ஒருருக்கொண்டு என்னை ஓடிவந்து தழுவிக்கொண்டது!

நீங்கினாலும் நெருங்கினாலும் என் நெஞ்சிலேயே பிரியாமல் நிலைத்திருக்கும் என் காதலியைக் காண்பதிலும் - அவள் அன்புமொழி கேட்பதிலும் - எனை மயக்கும் மணத்தில் ஆழ்வதிலும் - இதழ்த்தேனை உண்பதிலும் - ஈருடல் ஒருடலாய்ப்பின்னிப் பிணைந்து கிடப்பதிலும் - ஐம்புலன்களும் ஒருசேர அனுபவிக்கும் இன்பத்தை எப்படி நான் விவரிப்பேன்!

ஒளிபொருந்திய வளையணிந்தவளிடம், ஐம்புலன்களுக்குமேற்ற இன்பம் உளது என்று வள்ளுவர் கூறியதில் அணுவளவு ஐயமுமில்லை!

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

அதிகாரம் - 111 - புணர்ச்சி மகிழ்தல்; பாடல் - 1101





புலிகள் ஆயிரம் சேர்ந்து உறுமுவதுபோல், புயல் காற்றில் அலையெழுப்பிக் கடல் கொந்தளித்துக் குமுறுகிறது! சுழன்றடிக்கும் சூறாவளியோ மரங்களைப் பெயர்த்துத் தலைகீழாக நட்டு விளையாடுகிறது! பளபளக்கும் வாட்களைக் கொண்டு முகத்துக்கெதிரே வீசுவதுபோல மின்னல் வெட்டுகிறது! வானக் கூரை இடிந்து விழுந்து பல திக்கிலும் சிதறுவதுபோல இடி முழக்கம்! காலந்தாழ்ந்து வந்த கூலிக்காரனைக் கடின மனமுடைய முதலாளியின் கையாள், சவுக்குக் கொண்டு தாக்குவதுபோல மழைச் சரங்கள்! இருட்டோ, இரக்கமற்றோன் இதயத்தைப்போல!

இந்தச் சூழலில் ஒருவன் தன்னந்தனியாக நடக்கிறான். கம்பளித்துணி போட்டு மூடிய ஒரு பொருள், அவன் கைகளில் அணைத்தபடியிருக்கிறது! அந்தத் துணிக்குள்ளிருந்து மெல்லிய குரலில் அழுகைச் சத்தம்! ஆம்; ஒரு சின்னஞ்சிறு குழந்தைதான் அது!

அந்த அரும்பை ஈன்றெடுத்த அன்னை, கண்ணை மூடிவிட்டாள்! தந்தையையும் இயற்கையின் வாய் விழுங்கிவிட்டது! அந்தக் குழந்தையின் அண்ணன் அவன்! அதைக்கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய இடத்திலே சேர்த்து விட்டால், அதைச் சீராட்டி வளர்க்க எத்தனையோ பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"வசுதேவன்; தனக்கும் தேவகிக்கும் பிறந்த எட்டாவது குழந்தையை ஆயர்பாடியில் கொண்டுபோய் விட்டுவிட்டால், ஆபத்து எதுவுமின்றி அமோகமாக வளர்ந்திடும் என்பதற்காக நெடும்பயணமொன்றை நள்ளிரவில் மேற்கொண்டான்" என்று கண்ணன் கதையில் ஒரு நிகழ்ச்சி சித்திரிக்கப்படுமல்லவா; அதைப்போலத் தான் - தனது மழலைத் தம்பியை மார்போடு அணைத்து அந்தப் பயங்கர இருளில், பயணத்தை நடத்துகிறான்.

அவனுடன் தொடக்கத்தில் துணைக்கு வந்த சில பேர், மழைத் தூறலைக் கண்டதுமே வழியிலேயே திரும்பிவிட்டனர்!

"நாம் ஆருயிர் நண்பர்களடா! அன்புச் சகோதரர்களடா!" என்றெல்லாம் இனிக்கப்பேசி - அவனுடன் ஆடிப்பாடிக் களித்த தோழர்கள் எல்லாம் பாதிப் பயணத்திலேயே பலமான இடியோசை, மழை, புயல்காற்று - இவற்றினைக் கண்டு மிக வேகமாகத் திரும்பி ஓடிவிட்டனர்!

அவர்களை நினைக்க நினைக்க அவனுக்குச் சிரிப்பாக வந்தது! இன்பத்தை மட்டுமே சுவைக்கக் கற்றவர்கள், துன்பத்தைத் தொடவும் அஞ்சுகிறார்கள் என்றால் - இவர்கள் என்றைக்குமே யாருக்கும் உற்றவர்களல்லர் என்று அவனது உதடுகளும் முணுமுணுத்தன!

இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட வேதனையைவிட - இருக்கும்போது இளித்துக் கிடந்தவர்கள், இன்னல் வந்துற்றபோது முகம் சுளித்து விலகிவிட்ட வேதனைதான் அவனை மிகவும் வாட்டியது!

இருப்பினும் தனது கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றி, அந்தக் குழந்தையைப் பாதுகாத்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியைப் பெறுவதற்காக, அவன் இயற்கையின் தாக்குதலை எதிர்த்து வீரநடை போட்டான்; இறுதியில் வெற்றியும் பெற்றான்.

அந்தக் கடமை வீரனைப் பார்த்துத்தான், வள்ளுவர் இவ்வாறு பாராட்டுகிறார்.

"உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் எவனொருவன் முயற்சி மேற்கொள்கிறானோ; அந்தப் பெருமைக்கு மேலாகப் பிறிதொரு பெருமையில்லை."

அதற்கு இது குறள்:-

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்."

அதிகாரம் - 103 - குடி செயல்வகை; பாடல் - 1021

கைதூவேன் = சோர்வடைய மாட்டேன்.



"உடையரெனப்படுவது ஊக்கம்" என்கிறார் வள்ளுவர்!

பார்வைக்கு எட்டியமட்டும் பரந்து கிடக்கும் நிலபுலங்கள் - தோட்டம் துறவு -

உச்சி வானத்தை முத்தமிடத் துடிப்பதுபோல் கலசம் வைத்துக் கட்டிய கோபுரம் போன்ற மாளிகை-

களஞ்சியத்தில் நெல்மணிகளுக்குப் பதிலாகப் பொற்காசுக் குவியல்கள்-

தங்கத் தகடு பொருத்திய சுவர்களில் எல்லாம் வண்ண வண்ணமாய்க் கண் சிமிட்டும் வைரங்கள் - முத்துக்கள் - பிற இரத்தினங்கள் -

வெள்ளிக் கம்பிகள் இணைத்த பலகணி வழியே சந்தனம், சவ்வாது, புனுகு முதலிய மணங்களைச் சுமந்து வீசுகின்ற தென்றல்-

அந்தத் தென்றலின் குறும்பால் அடிக்கடி நழுவிடும் ஆரணங்கின் மேலாடை-

ஆரணங்கைத் தழுவியவாறு அவள் மடிமீது முடிவைத்து விழிமூடிக் கிடக்கும் சுகம்-

அந்தச் சுகத்தைப் பெருக்கிட மெல்ல அதிர்ந்திடும் யாழ் ஒலி - யாழினும் இனிய ஒலி-

ஒலி வந்த திசையை நோக்கினால், அவர்கள் இன்பத்தில் உதித்த அன்பின் அமுதமாம் அழகு மழலை-

- இவ்வளவும் உடையவன்தான் அவன் எனினும்; ஊக்கமெனப்படுகிற மன எழுச்சியில்லையேல் - அவனை "உடையவன்" என்றே கூறமுடியாது என்கிறார் வள்ளுவர்.

"ஊக்கமுடையவர்" என்றுதான் ஒருவரைச் சொல்லிப் பெருமைப்பட முடியுமே தவிர; அதைத்தவிர மற்ற அனைத்தையும் பெற்றிருந்தாலும் பயனில்லை என்பதே வள்ளுவரின் கருத்து.

மன எழுச்சியில்லாதவன் மனிதனே அல்ல என்று சினங்கொண்டு கூறுகிறார்.

வாழ்க்கை, என்றுமே வசந்தமாக இருப்பதில்லை: வறண்ட பாலைகளைக் கூடக் கடந்திட வேண்டியிருக்கும். புயல்களையும் பூகம்பங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். எரிமலைகளை எதிர்த்து நிற்கவேண்டியிருக்கும். எதிர் நீச்சல் போடுவதே சிலரது வாழ்க்கையாக ஆகிவிட்டிருக்கும். அப்போதெல்லாம் ஒருவனுக்குள்ள வலிமையென்பது, அவனிடமுள்ள மன எழுச்சியின் மிகுதியே ஆகும்!

அத்தகைய எழுச்சியற்றவன், மரமென அழைக்கப்படுவான் எனக் கூறும் வள்ளுவர், எவ்வளவு அழகாக அவனை ஏகடியம் செய்கிறார் பாருங்கள்!

"அந்த மன எழுச்சியில்லாத மரங்கள், வடிவத்தால் மக்களைப்போல இருப்பது வேறு விஷயம்!"


அதற்கு இதோ குறள்:

"உரமொருவற்கு உள்ள வெறுக்கைஅஃ தில்லார்
மரம்மக்க ளாதலே வேறு."

அதிகாரம் - 60 - ஊக்கம் உடைமை; பாடல் - 600

உள்ளவெறுக்கை = மன எழுச்சி அல்லது ஊக்க மிகுதி





கலைஞரின் சிறுகதையும்

இருபதாம் நூற்றாண்டு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கொலைச்செயலில் ஈடுபட்டவர்களை மரண தண்டனைக்கு ஆளாக்கலாமா; அல்லது அதற்குக் குறைவான தண்டனை வழங்கி அந்தக் கொலைகாரனைத் திருத்திடலாமா என்ற இருவகையான கருத்து, பல்லாண்டுக் காலமாகவே உலகத் தில் விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்தக் காலத்தில் மரண தண்டனையைக்கூட சில நாடுகளில் மிகக் கொடூரமாக நிறைவேற்றுகிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கூடிடும் பொது இடங்களில் குற்றவாளிகளைச் சுட்டுத் தள்ளுகிறார்கள். சில நாடுகளில் தலையை வெட்டிச் சாய்த்துத் தண்டனையை நிறைவேற்று கிறார்கள். கொலைக் குற்றமில்லாத வேறு சில கொடுங் குற்றங்களுக்குக்கூட மரண தண்டனையை நடைமுறைப் படுத்தும் நாடுகளும் உள்ளன.

பயிரைக் காத்திட களைகளைக் களைவதுபோல, சமுதாயத்தைக் காத்திட கொடியவரைக் கொலைத் தண்டனையால் ஒழித்திடும் பணி அரசனுடையது என்று வள்ளுவர், பொருட்பாலில் - அரசியலில் குறிப்பிடுகிறார்.

பொருட்பாலில் கொலைத்தண்டனையை அரசின் கடமைகளில் ஒன்று என எடுத்துக்காட்டுகிற வள்ளுவர், அறத்துப்பால் துறவறவியலில் கொலைத்தொழிலில் யாரும் ஈடுபடக்கூடாது என்பதை வலியுறுத்த எப்படி அச்சுறுத்துகிறார் என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

கொலை செய்தல் எனும் வன்முறையை அறவே வெறுப்பவர் வள்ளுவர். எந்த ஓர் உயிரையும் கொல்லக்கூடாது என்பதில் அழுத்தமான கருத்துடையவர். கொடிய குற்றவாளிகளுக்குக் கொலைத்தண்டனை விதிப்பது கொற்றவனின் கடனாக இருக்கிறது என்ற நிலை விளக்கத்தோடு நிறுத்திக்கொள்ளவில்லை அவர்.

மரண தண்டனை தேவையா இல்லையா என்ற போராட்டம் அவர் மனத்தில் அப்போதே எழுந்திருக்கிறது. அதனால்தான் மன்னர்களின் கடமையைக் குறிப்பிடுகிற அவர், கொலைகள் நிகழாவண்ணம் தடுப்பதற்கென அச்சுறுத்தலையும் ஒரு குறள் மூலம் வழங்குகிறார்.

வறுமையில் ஆழ்ந்து வாடித்துடிக்கிறான் ஒருவன். எத்தனை நோய்கள் அவன் உடம்பை முற்றுகையிட்டு ஆட்டிப்படைக்கின்றன எனக் கூற இயலாது. நோய்களின் கிடங்காகவே அவன் உடல் விளங்குகிறது. அவனைக் காணவும் விரும்பாமல் உற்றார் உறவினர் ஒதுங்கிச் செல்கிற அளவுக்குத் தீய வாழ்க்கையில் நெளியும் புழுவாகக் கிடக்கிறான்.

அவனை வள்ளுவர் பார்க்கிறார். "இவனை உலகத்தாரிடம் காட்டுவதின் வாயி லாக, யாரும் கொலைத்தொழிலில் ஈடுபடாமல் தடுக்கலாம்" எனக் கருதுகிறார்!

"உலகீர் நான் உரைப்பது கேண்மின்! இதோ இல்லாமையில் உழன்று பொல்லாத நோய்களின் பொந்தாக உலவுகின்றானே; இவன் யார் தெரியுமா? ஒரு காலத்தில் பல கொலைகளைச் செய்தவன்; அந்தக் கொடுஞ் செயலுக்குரிய தண்டனையைத் தான் இப்படி அனுபவிக்கிறான்."

என்று அறிவிக்கிறார்! அவன் உண்மையிலே கொலை செய்தவனோ இல்லையோ; நமக்குத் தெரியாது! பிறகேன் வள்ளுவர் அப்படிச் சொல்லுகிறார்? கொலைசெய்தோர், கொடுமை புரிந்தோர் அனைவரும்- தரித்திரர்களாய்- தாங்கொணா நோய் கொண்டவர்களாய் தவிக்கிறார்களா? மாறாகப் பலர் "குபேரர்"களாய் - குதூகலமாய் வாழவில்லையா?

ஆனால், இங்கே வள்ளுவர் விடுக்கும் எச்சரிக்கை; நல்ல உள்ளத்திலிருந்து புறப்படும் அறிவுரை! கொலை போன்ற கொடுஞ்செயல்களைத் தடுத்திடும் அடிப்படையில் எழும் அச்சுறுத்தல்!

"கொலையெனும் கொடுஞ்செயலில் ஈடுபட்டால் வறுமை தாக்கிடும்; நோய்கள் சூழ்ந்திடும், என்று கூறுவதற்குப் பதிலாக -

"வறுமையிலும் நோயிலும் வாடுபவர்கள்; முன்பு கொலைபல செய்து உயிர்களை உடல்களில் இருந்து நீக்கியவர் என அறிஞர்கள் கூறுவர்."

என்று மிகத் திறமையுடன் மற்றவர்களைக் கொலை போன்ற கொடுஞ்செயல் களை நினைத்திடாவண்ணம் தடுத்திட முனைகிறார்.

அதற்கு இதோ குறள்:

"உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்."

அதிகாரம் - 33 - கொல்லாமை; பாடல் - 330

செயிர் = நோய் செல்லா = வறுமையால் நலிவுற்ற



ஒரு குவளையில் பால் வைக்கப்பட்டிருக்கிறது. அதனருகே இன்னொரு குவளையிலும் பால் கொண்டுவந்து வைக்கப்படுகிறது. இரண்டு குவளைகளில் உள்ள பாலையும் சேர்த்து ஒரு குவளையில் ஊற்றி, அடுப்பில் வைத்துக் காய்ச்சி இறக்கிக் கற்கண்டுப் பொடி சேர்த்துக் கண்ணாளனுக்கும் கண்மணிகளாம் இரு குழந்தைகளுக்கும் அத்தைக்கும் மாமனாருக்கும் அவள் ஆற்றிக் கொடுத்திட வேண்டும். இரு குவளைகளில் உள்ள பாலையும் ஊற்றிச் சூடேற்ற அவள் ஒரு பெரிய குவளை எடுத்து வருகிறாள். குவளைகளில் உள்ள பால், ஒன்றையொன்று பார்த்துக் கொண்டு பரவசமடைகின்றன. பால், பாலோடு சேர்வதால் ஏற்படும் மகிழ்ச்சி அது!

இந்த அடுக்களையை விட்டுவிட்டு மற்றுமொரு வீட்டு அடுக்களைக்குச் சென்று கவனிப்போம். முதலில் ஒரு குவளையில் பால் கொண்டுவந்து வைக்கப்படுகிறது. இல்லக்கிழத்தி, தனது குறும்புக்கார மகனிடம் கூறி இன்னொரு குவளைப்பாலைக் கொண்டுவந்து வைக்கச் சொல்லுகிறாள். அந்தக் குறும்புக்காரன் ஏதாவது சேட்டை செய்ய வேண்டுமென்று எண்ணி, ஒரு குவளையில் வெண்சுண்ணத்தைக் கரைத்துப் பாலைப்போலக் கொண்டுவந்து வைக்கிறான்.

இல்லக்கிழத்திக்குப் பால் எது - சுண்ணம் எது என்று தெரியவில்லை! இரண்டும் வெண்மையாக இருப்பதால், பாலும் சுண்ணமும் ஒன்று என்றே எண்ணி விடுகிறாள்!

சுண்ணம் இருக்கும் குவளையை எடுத்துப் பெரிய குவளையில் ஊற்றுகிறாள். பிறகு, பால் இருக்கும் குவளையையும் எடுத்துச் சுண்ணம் ஊற்றப் பட்ட குவளையிலேயே ஊற்றப் போகிறாள். அப்போது அந்தக் குவளையில் உள்ள பால் நினைத்துக்கொள்கிறது; "முதலில் ஊற்றப்பட்டது பால் அல்ல சுண்ணம்தான் என்று தெரிவித்தாலும் தெளிவு பெறவா போகிறாள்! இல்லை - இல்லவே இல்லை! அதனால் நாமும் சுண்ணம்போலவே இருந்துவிடுவோம்!" என்று!

ஒரு வீட்டில் பாலும் பாலும் கலந்து சூடேறிச் சுவையேறிப் பலரும் பருகி மகிழ்ந்திடுதல் கண்டோம்.

பிறிதொரு வீட்டில் சுண்ணத்தில் கலக்கப்பட்ட பாலும் சுண்ணம்போல் ஆகிவிட்டதைக் கண்டோம்.

நாம் கண்ட இந்தக் காட்சிகளைப் போலவே வள்ளுவரும் கண்டார்போலும்! அவர் முன்னால் பாலுக்குப் பதிலாகப் பகுத்தறிவு படைத்தவர்கள் தெரிந்தனர். சுண்ணாம்புக்குப் பதிலாக, அறிவாளிகளைப்போலத் தோன்றும் அறிவிலிகள் தெரிந்தனர்.

அவரது சிந்தனை சிறகடித்தது! அறிவாளிகளின் முன்னால் அறிவாளிகள், தங்கள் அறிவைப் பயன்படுத்தி விவாதிக்கவேண்டும். அறிவில்லாதவர்களின் முன்னால், அறிவாளிகள்கூட அறிவில்லாதவர்களைப்போல மௌனமாய் இருந்து விட வேண்டும். அவரது சிந்தனை ஈன்றெடுத்த கருத்துக் குழந்தை இதுதான்.

பாலுக்கு முன்னால் பால், பாலாகவே இருந்தது! இது ஒரு மனையில்!

சுண்ணாம்புக்கு முன்னால் பால், தன்னையும் சுண்ணாம்பாகப் பாவித்துக் கொண்டு சும்மா இருந்தது! இது வேறொரு மனையில்!

ஒள்ளியர் எனப்படும் ஒளியார் - அதாவது அறிவாளிகள்; அறிவாளிகளின் முன், அறிவாளிகளாய்த் திகழவேண்டும்! வெளியார் எனப்படும் அறிவிலிகளின் முன், வெண் சுண்ணம் என அறிவற்றவர் போலத் தம்மைக் காட்டிக் கொள்ளவேண்டும் என்று எழுதினார் குறள்!


அது இதோ:-

"ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்."

அதிகாரம் - 72 - அவை அறிதல்; பாடல் - 714

வான்=வெண்மைசுதை=சுண்ணாம்பு - ஒளியார்;ஒள்ளியர்=அறிவுடையார்

வெளியார் = அறிவில்லாதவர்



சுயமரியாதைச் சுடரொளி

வழித்துணையான், நடுத்தரக் குடும்பத்து வாலிபன். அவன் தனது வாழ்க்கைத் துணையுடனே ஓர் ஓட்டுவில்லை வீட்டிலே வாழ்ந்து வந்தான். ஊருக்கு உழைப்பதில், ஊர் மக்களுக்காக ஓய்வின்றிப் பணியாற்றுவதில் அவனுக்குத் தனித்ததோர் மகிழ்ச்சி. எந்நேரமும் அவ்வூரார் பலர் அவனைச் சூழ்ந்துகொண்டு உதவிகளைப் பெற்றுவந்தனர். ஏழை எளியோர்க்குத் தொண்டாற்றுவது - இருக்க இடமின்றித் தவிப்போருக்கு குடில் அமைப்பது - குடிநீர் இன்றி அலைவோர்க்குக் குளம், கிணறு வெட்டுவது - இப்படி நண்பர்களின் துணையோடு அவன் நற்பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அவனது எளிய இல்லத்திற்கு எதிரே, ஏழடுக்கு மாளிகையொன்றுக்கான அடித்தளம் போடப்பட்டது. நச்சு நினைப்பினர் சிலர், அந்த மாளிகை வழித் துணையான் எழுப்புவதுதான் என்று ஊரெல்லாம் கொட்டி முழக்கினர். முதலில் ஊரிலும் சிலர் நம்பினர்; சிலர் ஐயம் கொண்டு வியப்புற்றனர். ஆனால், உண்மை சில நாட்களுக்கெல்லாம் வெளிவந்து விட்டது. வழிப்பறிக்காரன் ஒருவன், சேர்த்த பணத்தையெல்லாம் செலவழித்து அந்த மாளிகையை உருவாக்கியிருக்கிறான். அந்த வழிப்பறியாளன் மிகப்பெரும் விழா கொண்டாடி, அந்த மாளிகைக்குக் குடியேறிய பிறகுதான் வழித்துணையானின் முழுத் தூய்மையும் மக்களுக்குப் புரிந்தது.

ஆயினும் ஒரு சிலர், ஏழடுக்கு மாளிகையின் பெருமைக்கு ஆசைப்பட்டு வழித்துணையானை விட்டு நீங்கி, வழிப்பறியாளன் வசம் தங்களை ஒப்படைத்துக் கொண்டனர். ஏராளமான செல்வம் - ஏழடுக்கு மாளிகை - இவற்றால் இயல்பாக ஏற்படும் செருக்குடன்; எதிர்த்த வீட்டு வழித்துணையானின் நண்பர்கள் சிலரையும் விலைபேசி வாங்கிவிட்ட ஆணவம் வேறு, வழிப்பறியாளனின் வன்னெஞ்சத்தில் குடிகொண்டது. எத்தனையோ வித்தகர்கள் தன் முன்னே தாசர்களாகத் தாள் பணிந்து நின்றிடத் தயாராக இருக்கும்போது, எதிர் வீட்டுக்காரன் தலை மட்டும் தனக்கு வணங்க மறுக்கிறதே என்ற சினம் கொப்பளித்தது! சீற்றம் பொங்கியது! எனவே வழித்துணையானைப் பற்றி வாயில் வந்ததையெல்லாம் பேசித் தூற்றினான். ஓரிருமுறை ஊரின் ஏரிக்கரையோரம் வழித்துணையான் உலவிடச் சென்றபோது, தனது ஆட்களை ஏவிவிட்டு அவனைத் தாக்கிடவும் செய்தான். வழிப்பறியாளனின் வாயில்காப்போரில் இருந்து, அருகிருந்து அளவளாவிடும் நண்பர்கள் வரையில் வழித்துணையானைப் பற்றி வசைமாரி பொழிந்தவண்ணமிருந்தனர்.

அவற்றைக் குறித்து அவன் கவலைப்பட்டுக் கொள்ளவேயில்லை! அளவற்ற செல்வமிருக்கிறது - ஆள் அம்பு இருக்கிறது - அதனால் எல்லையற்ற செருக்கு கொண்டலைகிறான்! அவன் கொண்டுள்ள செருக்கே அவனைத் தண்டிக்குமென்று கூறிவிட்டு வழித்துணையான், தனது பணிகளைத் தொடர்ந்தான். இழிமொழிகள், சுடுசொற்கள், கடுந்தாக்குதல்கள், பழிசுமத்தும் பாடல்கள் - அனைத்துக்கும் பொறுமையெனும் கவசம்பூண்டு வழித்துணையான் நிமிர்ந்து நடந்தது கண்டு ஊரார் குமுறினர்!

அவன் காட்டிய பொறுமையே அவனுக்குக் கிடைத்த படைக்கலன் ஆயிற்று! அந்தப் பொறுமைக்குக் கிடைத்த பரிசாக, ஊரார் அனைவரும் வழித்துணையான் பக்கம் அணிவகுத்தனர். வழித்துணையான், அவர்களை அப்போதும் அமைதிப்படுத்தி அனுப்பிவிட்டு, ஆற்றில் கரையுடைத்தெழும் வெள்ளத்திற்கு அணைகட்ட விரைந்து சென்றுவிட்டான், ஆருயிர்த் தோழர்கள் சிலருடன்!

அப்போது மாளிகையின் முகப்பில் வந்து நின்று வழிப்பறியாளன் வாய் வலிக்கச் சிரித்துக்கொண்டே, "என்னடா! எல்லோரும் எதிர்வீட்டுக்காரனுக்கு எடுபிடிகளாக வந்தீர்களா?" என்று கேட்டதுதான் தாமதம், அமைதியாகத் திரும்பிக்கொண்டிருந்தோர் அரிமாக் கூட்டமாயினர்! பாய்ந்தனர் அந்தப் பளிங்கு மாளிகையின் மீது! இடிந்து தகர்ந்து தூள் தூளானது அந்த இறுமாப்புக்காரனின் அரண்மனை!

அதோ தொலைதூரத்தில் தன்னந்தனியாக ஓடிக்கொண்டிருக்கிறான் ஆணவங்கொண்ட அந்த ஆர்ப்பாட்டக்காரன்!

வழித்துணையானோ ஆற்று வெள்ளத்தைத் தடுத்துவிட்டு, ஊரார் நல் வாழ்த்துக்களுடனே இல்லம் நோக்கி வந்துகொண்டிருக்கிறான்.


இறுமாப்பினால் தீமைகளை விளைவிப்போரைத் தம்முடைய பொறுமை யினால் வென்றுவிடலாம் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் வழித்துணையான் வரலாறு!

அதற்கு இதோ குறள்:

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்."

அதிகாரம் - 16 - பொறையுடைமை; பாடல் - 158

மிகுதி=செருக்கு மிக்கவை=தீயவை தகுதியால்=பொறுமைப் பண்பினால்



நாய்களும் பன்றிகளும் ஓடித்திரியும் நடைபாதை! குப்பைக் கூளங்கள் ஆங்காங்கு குவிந்து கிடக்கும் காட்சி! இரவெல்லாம் பெய்த பனியில் அந்த மேடு பள்ளம் நிறைந்த நடைபாதை ஈரமாகிக் கிடக்கிறது! கிழப்பசு ஒன்று இன்னமும் குளிர் தாங்க முடியாமல் கூனிக்குறுகி அந்தப் பாதையோரத்தில் தலையைத் தரையில் கிடத்தியவாறு படுத்துக்கிடக்கிறது! கூரையில்லாத ஒரு குடிசை அந்தப் பாதையிலே! கதவுகூடக் கீழே சாய்ந்து கிடக்கிறது! நன்றாகப்பொழுது விடிந்திருந்தும்கூட, அந்தத் திறந்த வீட்டில் ஒரு நடுத்தர வயதுப்பெண் மார்பகங்கள் திறந்த நிலையில் படுத்திருக்கிறாள். அவள் மார்பை மாற்றி மாற்றிக் குடித்துப் பார்த்து; வீறிட்ட அழுகையுடன் ஒரு குழந்தை புரண்டுகொண்டிருக் கிறது! ஆம் - அவள் வறுமையின் கொடுமை தாங்கமுடியாமல் விடியற்காலையிலே தான் இறந்து போயிருக்கிறாள். சாவையும் வாழ்வையும் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ள முடியாத அந்தப் பச்சைக் குழந்தை, தாயின் வரண்டுபோன மார்புகளைச் சப்பிப்பார்த்து ஏமாற்றத்தால் - பசியால் - அழுதுகொண்டிருக்கிறது! அப்போது அந்த வழியே வரும் வள்ளல் வயலூரான் கண்களுக்கு அந்தக் காட்சி தப்பிடவில்லை! நின்று நிதானித்துக் கவனிக்கிறான்.

"என்னய்யா பாக்கிறீங்க! நீங்கதான் வள்ளல் பட்டம் பெற்றவராச்சே! நீங்க இப்பப்பார்க்கிறது பசியால் செத்துப்போன தாயையும், சாகத் துடிக்கிற சேயையும்!"

என்ற குரல் கேட்டு, வயலூரான் திரும்பினான். இரண்டு கால்களுமற்ற ஒரு நொண்டி, பக்கத்துக் குடிசையிலிருந்து இந்த விளக்கத்தை அளித்துக் கொண்டிருந்தான். வள்ளலுக்குச் சினம் பொங்கியது. நொண்டியை முறைத்துப் பார்த்துவிட்டு வேகமாக அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டான்.

"என்னய்யா! வள்ளல் கதை எப்படியிருக்கு பார்த்தீர்களா?"

எனக் கேட்டுக்கொண்டே நொண்டியிடம் ஓர் இளைஞன் வந்தான்! இளைஞன் பெயர் செம்மல்!

"என்னப்பா செய்றது! விளம்பர வள்ளல்களின் காலம் இது! இங்கேயொரு நூறுபேர் கூடியிருந்தால் உடனே அந்த வள்ளல், இந்த அனாதைக் குழந்தையை எடுத்து அணைத்துக்கொண்டு, இறந்துபோனவளின் இறுதிச் சடங்குகளையும் முன் நின்று நடத்தியிருப்பான்" என நொண்டி முணுமுணுத்தான்.

அங்கிருந்து விரைந்து அகன்ற வள்ளல், ஆலயத்தில் நடைபெற்ற இசை விழா ஒன்றுக்குச் சென்றமர்ந்தான்.

பல இசைவாணர்கள் இசை மழை பொழிந்தார்கள்! இறுதியில் ஒருவன் இசை பாடிட மேடையில் தோன்றினான். அவன் பாடத் தொடங்கி சில விநாடிகள் கூட ஆகவில்லை; வள்ளல் வயலூரான், "போதும் நிறுத்து! உன் பாட்டுக்கும் இசைக்கும் ஒன்றோடொன்று பொருந்தவே இல்லை!" என்று உரத்த குரல் எழுப்பினான்.

"ஆமாம்! உமது கண்ணுக்கும் கருணைப் பண்புக்கும் எப்படிப் பொருத்த மில்லையோ, அதைப் போல இந்தப் பாட்டுக்கும் இசைக்கும் பொருத்தமில்லை!"

எனக் கூறியவாறு, வள்ளலின் தோளில் கைவைத்தான் இளைஞன் செம்மல்! வள்ளல் திடுக்கிட்டுத் திரும்பினான். செம்மலின் கையில் அந்தத் தாயை இழந்த குழந்தை இருந்தது.

"அய்யா வள்ளலே! அங்கே கண்டீரே, அவலக்காட்சியொன்றை! தாய் பிணமாய்க் கிடக்கவும் - குழந்தை பசியால் துடிக்கவும் - எவ்வளவு பெரிய துயரக்காட்சி! உமக்குக் கண்ணிருந்தும் கருணை பிறக்காத காரணத்தால் அந்தக் கண்களால் பயன் என்ன? பாடலும் இசையும் பொருந்தாவிடில் பயன் இல்லாதது போலவே கண்ணும், கருணையும் பொருந்தாவிடில் பயன் ஏதுமில்லை என்பதை உணர்வீராக!"

செம்மல் இதைச் சொல்லிவிட்டு, அந்தச் சின்னக் குழந்தையுடன் சென்று விட்டான். வள்ளல் வயலூரான் திகைத்து நின்றான்.

"பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்"

அதிகாரம் - 58 - கண்ணோட்டம்; பாடல் - 573

கண்ணோட்டம் = அருள், இரக்கம், கருணை



என் திருவிழிகளே! நீங்கள் எல்லை கடந்து ஆடிய ஆட்டத்தின் விளைவைக் கண்டீர்களா? எதற்கும் ஓர் அளவு வேண்டும் என்பதை மறந்து நீங்கள் குதித்ததற்கு இதோ உங்களுக்குத் தண்டனை கிடைத்துவிட்டது.

பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் சிட்டுக் குருவியொன்று கொய்யாமரத்துக் கிளைகளில் தாவித்தாவி சதிராடித் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. பதுங்கிப் பதுங்கி வந்த பூனை, திடீரெனப் பாய்ந்தது. கட்டுக் கடங்காத களிப்பிலாடிய குருவியின் "கீச்! கீச்!" ஒலி மட்டும் காற்றோடு கலந்தது. பாவம்; சிட்டுக்குருவி!

நீராடிவரக் குளத்திற்குச் சென்றேன். சின்னஞ்சிறு சேல்கள் இரண்டு; என் கண்களே - உங்களைப் போலத்தான் இருந்தன! நீரில் எழும்பி எழும்பிக் குதித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தன! எவ்வளவு உயரந்தான் எழும்பிக் குதிப்பது? அதற்கோர் வரம்பு வேண்டாமா? நீரிலிருந்து உயரத்திற்குப் பாய்ந்த அந்தச் சேல்மீன்கள், திடுமெனக் கரையில் வீழ்ந்தன! துடித்தன! துவண்டன! காப்பாற்ற ஓடினேன்! அதற்குள்

தூண்டில்காரச் சிறுவன் ஒருவன் அவற்றைத் தூக்கித் தன் குவளையில் போட்டுக்கொண்டு பறந்தேவிட்டான்!

என் அழகு விழிகளே! உங்கள் சதிராட்டங்களையும் துள்ளல்களையும் இன்றைக்குக் காணமுடியவில்லையே! அப்போது நீங்கள் புரிந்த ஆரவாரம் கொஞ்சமா?

மல்லிகைசூடிய கூந்தலுடன் நெற்றிக் குங்குமம் ஒளிவிட மாலைநேரத்தில் வீட்டு வாயிலில் கோலம் தீட்டிக்கொண்டிருப்பேன். அவர் தெருக்கோடியில் வருவார். என்னைத் தனியாக விட்டுவிட்டு; என் கண்களே! நீங்கள் இருவரும் அவரிடம் ஓடி விடுவீர்கள். அவரை எதிர்கொண்டழைத்து வீட்டுக்குள் அமரவைத்து, அவரது திண்தோள்களில் தொத்திக்கொள்வீர்கள். அசையும் அவர் இதழ்களின் அழகையே சுவைத்துக்கொண்டிருப்பீர்கள். உணவருந்த உட்காருவார்; சாப்பிடும் அழகையே அப்படியே பார்த்துக்கொண்டு மெய்மறந்து போவீர்கள். படுக்கையில் சாய்ந்திருக்கும் அவர் கையில் உள்ள புத்தகத்தை என் மெல்லிய விரல்களால் வாங்கி வைத்துவிட்டுப் பால்கிண்ணத்தை அவர் உதட்டருகே கொண்டுபோவேன். அதற்குள் நீங்கள் அவரது விழிகளுடன் விரகதாப விளையாட்டுக்களில் ஈடுபட்டுவிடுவீர்கள்.

உங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு இப்போது கிடைத்துள்ள பரிசைப் பார்த்தீர்களா?

கொய்யாமரத்துச் சிட்டுக்குருவியைப் பூனை கௌவிக்கொண்டு போனது போல, என்னையும் அவரையும் "பிரிவு" தனிமைப்படுத்திவிட்டது. கரையில் குதித்த மீன்களைப்போலத் துடிக்கிறீர்கள்.

இப்போது கண்ணீர்! கண்ணீர்! உங்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!

"விரும்பி நெகிழ்ந்து காதலரைக் கண்ட கண்களே! இன்று உறங்க முடியாமல் தவித்துத் துன்பத்தால் வடிக்கின்ற கண்ணீரும் அற்றுப்போகட்டும்."

இப்படியொரு பெண்மணி, தன் கண்களுக்கே சாபம் கொடுக்கிறாள், பிரிவு வேதனையைத் தாங்கமுடியாமல்!

"உழந்துழந்து உள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்."

அதிகாரம் - 118 - கண்விதுப்பழிதல்; பாடல் - 1177

உழந்துழந்து = வருந்தி வருந்தி



கற்கோவையும் கற்றுமறந்தும்

"உயிர் நீப்பர் மானம்" எனத் திட்டவட்டமாகத் திருவள்ளுவர் கூறுகிறார். உடலில் இருந்து மயிர் நீக்கப்பட்ட கவரிமான் எப்படி உயிர் வாழாதோ அதைப்போலக் கவரிமான் போன்றவர்கள், தங்களுடைய மானம் அழியக்கூடிய சூழ்நிலை உருவானால் உயிரை விட்டுவிடுவார்கள் என்பது அவரது கணிப்பு! மான உணர்வுக்கு அவ்வளவு சிறப்புத்தன்மை காட்டி எழுதப்பட்ட அறிவுரையாகும் அது! குடியியல் என்ற தலைப்பில் மானத்தின் மாண்பு கூறும் வள்ளுவர்; அதே தலைப்பில் பிறிதொரு அதிகாரத்தில் குடிப்பெருமை காத்திடுவதற்கு எவ்வளவு பெரிய தியாகத்திற்குத் தயாராக இருக்கவேண்டுமென்று குறிப்பிடுகிறார் தெரியுமா?

'குடி' என்ற சொல், குடும்பத்தையும் குறிக்கிறது! பிறந்த குலத்தையும் குறிப்பிடுகிறது! சார்ந்துள்ள இனத்தையும் குறித்து நிற்கிறது! குடும்பத்தைப் பற்றிப் பேசும்போது உயர்வாக வைத்து எண்ணப்படுகிற மானம்; குலப் பெருமைக்கு ஒளி தருகின்ற வகையில் போற்றப்பட வேண்டிய மானம்; இனத்தைக் காப்பாற்றுவதற்கும் இனத்தை முன்னேற்றுவதற்கும் ஒருவர் செயல்படும்போது எப்படி நோக்கப்படுகிறது என்பதை ஆழ்ந்த சிந்தனையுடன் கவனிக்க வேண்டும்.

நிறைந்த செல்வக் குட்டையில் கிடந்து ஊறுவதற்காகச் சிலர் மானத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அந்தச் சேற்று நீரில் குதித்துவிடுகிறார்கள்.

பதவியின் மீதுள்ள விடாப்பற்றின் காரணமாக ஊரார் பழிப்புக்கும் உலகத்தார் இகழ்ச்சிக்கும் நாணமடையாமல், சிலர் மானமிழந்து மதிகெட்டு அலைகின்றனர்.

இப்படித் தன்னலம் கருதி மானத்தை இழப்போரைக் கண்டிக்கிற வள்ளுவர்; தன் இனமக்களின் உயர்வுக்காக மானமெனும் விலைமதிப்பிலாப் பொருளையும் இழக்கலாம் என்று ஒப்புதல் வழங்குகிறார் என்றால் - இன முன்னேற்றத்தை முன் நிறுத்தித் தன்னைப் பின்னால் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றுதானே அவர் தெளிவுபடுத்துகிறார்.

குடி செய்வார் - அதாவது தனது இனமக்களின் உயர்வுக்கான செயல்களில் ஈடுபடுவோர் - காலம் நேரம் பார்த்துக்கொண்டு அந்தச் செயலில் இறங்கிடத் தேவையில்லை! "குடி செய்வார்க்கு இல்லை பருவம்" என்கிறார். பருவம் என்பது உரிய காலத்தை மட்டும் குறிப்பிடுவதாகக் கருதாமல், இனமக்களின் உயர்வுக்காகப் பாடுபடுகிறவர்களுக்கு இளமைப்பருவமா - முதுமைப்பருவமா என்ற கேள்விக்கே கூட இடமில்லையென்று பொருள் கொள்ளலாம் அல்லவா!

இன உயர்வைக் கருதி உழைத்திடுவோர், சோம்பல் கொண்டு அயர்ந்து விட்டாலும் - தம்மீது பகைவர்கள் வீசிடும் இழிசொற்கள், பழிமொழிகள் ஆகியவற்றால் தமது மானத்திற்கு ஊறு வந்துவிட்டதே என்று கவலைப்பட்டாலும் அவர்களது குறிக்கோளான இன உயர்வை ஏற்படுத்திட இயலாமற் போய்விடும் என்று அறுதியிட்டுக் கூறுகிறது குறள்!


உயிரினும் உயர்ந்தது மானம் எனக் குறிப்பிட்டவர்; அந்த மானத்தைப் பற்றிக்கூடக் கவலை கொள்ளாமல் இன உயர்வுக்கு உழைத்திடவேண்டும், இல்லையேல் இன முன்னேற்றம் கெட்டொழியும் எனக் கூறுகிறார்.

"குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்."

அதிகாரம் - 103 - குடிசெயல் வகை; பாடல் - 1028

மடி = சோம்பல்





அன்று தகடூரை ஆண்டுவந்த அதியமான் நெடுமானஞ்சி, வாள் தூக்கி வையம் கலக்கும் மாவீரன்! ஈட்டியொன்று முகத்தில் பாய்ந்திடத் துள்ளிவரக் கண்டபோதும் இமை கொட்டாத துணிவு மிக்கோன்! போர்க்களம் அவன் தவழ்ந்து விளையாடிய தாழ்வாரம்! வேலும் கணைகளும் அவன் பிள்ளைப் பருவத்து விளையாட்டுக் கருவிகள்! விழுப்புண்களை மார்பில் புரளும் முத்தார மாகக் கருதும் வீரத்திருவினன்! புறமுதுகிடுவதை இழுக்கென்று எண்ணிடும் புறநானூற்று இலக்கியம் கண்ட தமிழ் இனத்தின் வெற்றிச் சுடர் விளக்கு!

போர் ஆர்வம் கொண்ட அந்தத் தமிழ்ச்சீயம்; அவ்வாறே தனை வளர்த்த மொழியின் மீதும் பேரார்வம் கொண்டவன்! அவனைக் குறித்துப் புறப்பாடல் வழங்கிய ஔவை, பின்வருமாறு கூறிப் புகழ்கிறாள்.

“வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னாற்
களம்படக் கடந்த கழல் தொடித் தடக்கை
ஆர் கலி நறவின் அதியர் கோமான்.”

பாராட்டு அத்துடன் நிற்கவில்லை! மேலும் கூறுகிறாள் ஔவை:

“சிறியிலை நெல்லித் தீம் கனிகுறியாது!
ஆதல் நின் அகத்து அடக்கி
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே!”

அதாவது, மிக நீண்ட ஆயுள் பெற்று வாழக்கூடிய வலிமையைத் தரவல்ல அரிய நெல்லிக்கனியொன்று, தகடூர்த்தரணியாளும் அதியமான் நெடுமானஞ்சிக்குக் கிடைக்கிறது. சாவைத் தடுக்கக்கூடிய அருமருந்தாம் அந்த நெல்லிக்கனியை அவன் உண்பதற்கு முனைந்தபோது, வெளிப்புறத்தில் விருந்தொன்று வந்திருப்பதாகச் செய்தி கிடைக்கிறது. யார் அந்த விருந்தினர்? ஔவைதான்!

அப்போது அதியமானின் பரந்து விரிந்த உள்ளம் பேசுகிறது! என்ன பேசுகிறது?

“விருந்தினராக வந்தவரை வெளியே விட்டுவிட்டு, சாகாத மருந்தாக இருந்தபோதிலும் அதனைத் தான் மட்டுமே உண்பது விரும்பத்தக்கதல்ல!”

தான் மட்டும் உண்ணக்கூடாது - வந்த விருந்தினர்க்கும் அளித்துப் பகிர்ந்துண்ண வேண்டும் என்பதே விருந்தோம்பல் இலக்கணம் என்றாலும்கூட, வந்திருக்கும் விருந்தினரோ தமிழ் விருந்து படைப்பவராயிற்றே; அதனால் அதியமான் அந்த நெல்லிக்கனியை, தான் உண்டு நீண்டகாலம் வாழ்வதைவிட ஔவை உண்டால் தமிழுக்குப் பயனுண்டு எனக் கருதி, அந்தக் கனியை ஔவைக்கே வழங்கிவிடுகிறான்.

பகிர்ந்துண்ணும் விருந்தோம்பல் பண்புக்கே ஒருபடி மேலே சென்று, சங்க இலக்கியத்தில் அழியாத இடம் பெற்றுவிட்டான் அதியமான்! ஆம்; சாவாமருந்தென ஔவைக்கு நெல்லிப்பழம் அளித்தவன், இலக்கியச் சாவாமருந்தால் என்றென்றும் உயிர் வாழ்கிறான்.

விருந்தோம்பல் சிறப்பினைக் கூறும் குறள் இதோ:

“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.”

அதிகாரம் - 9 - விருந்தோம்பல்; பாடல் - 82





"மலைவாழை அல்லவோ கல்வி
நீ வாயார உண்ணுவாய் போ என் புதல்வி"

பாவேந்தர் என்றும் புரட்சிக் கவிஞர் என்றும் செந்தமிழ்ச் செல்வம் என்றும் இருபதாம் நூற்றாண்டின் எழுச்சிப் புலவன் என்றும் ஏற்றிப் போற்றிடும் பாரதிதாசனின் தென்றல் நடைத் தீஞ்சுவைக் கவிதை பாடிக் கல்விக்கூடத்திற்குத் தன் மகளை அனுப்பிவைத்தாள் அன்னை!

"தலைவாரிப் பூச்சூடி உன்னை
பாடசாலைக்குப் போ என்று
சொன்னாள் உன் அன்னை"

தாய்மொழி கேட்டுத் தாய்மொழித் திறன்பெற மகளும் சென்றாள், ஊக்கமுடன் பயின்றாள்; உலகத்து அறிவுக் கருவூலங்களையெல்லாம் அவள் நெஞ்சத்துப் பேழையில் அள்ளிப் போட்டுக்கொண்டாள்.

இளந்தளிராய் - குளிர் பிறையாய் - இனியவளும் வளர்ந்தாள்! இதழ்கள் செங்கனிகளாயின! பொன்னுருக்கில் தோய்த்தெடுத்த சிலைதான் மேனி! அவளைக்

காணும் ஆடவர் கண்ணின் இமைகள், மீண்டும் மூடிக்கொள்ள மறுத்தே விட்டன! போற்றிப் புகழத் திறந்த வாய்கள், திறந்தே இருந்தன! கருவண்டு சுழன்று சுழன்று நடனமாடும் வெள்ளியம்பலந்தான், அவள் விழிகள்! அந்தத் தாமரையை ஈன்றெடுத்த அவள் தாய், ஒரு நாள் அந்தத் தங்க மகளை அருகழைத்து அமரவைத்து, அவள் எதிர்கால வாழ்வுக்கான தேர்வு ஒன்றை நடத்தினாள்.

"என்னருமை மகளே! உனக்குத் திருமண விழா நடத்திப் பார்க்க நானும் உன் தந்தையும் முடிவு செய்துள்ளோம். உன் அழகிற்கு அடிமையாக எத்தனையோ செல்வந்தர் வீட்டுப்பிள்ளைகள் தூது விட்டுக்கொண்டிருக்கின்றனர்! அரச வம்சத்து இளவல்கள் பலரும் ஆள் அனுப்புகின்றனர்! உன் விருப்பம் தெரியாமல் நாங்கள் ஒப்புதல் அளிக்க இயலுமா? இதோ பார்; அவர்களின் உருவ ஓவியங்கள்!"

அந்த மாணிக்கவல்லியை மணக்க விழைந்த ஆடவர்களின் உருவங்களை ஒவ்வொன்றாக எடுத்து அவள் முன் வைத்தாள்.

"அம்மா! தலையில் வைரமுடியும் கழுத்தில் முத்தாரமும் அணிந்து காணப்படும் இவர் யாரம்மா?"

"ஓ! என் மகளே! நீ எடுத்த எடுப்பிலேயே உயர்வாகத்தான் எண்ணுகிறாய்! இவர்தான் இளவரசர் இளநாகர்! ஏழு ஊர்களுக்கும் எட்டு மலைகளுக்கும் உரிமையுடையவர்!"

"அப்படியா? இதோ கூரிய பார்வையும் கொடிய தோற்றமும்கொண்டு நிற்கிறாரே; இவர் யார்?"

"இவரா? வல்லமையிலும் சிறந்தவர்! வளத்திலும் பெரியவர்! அழகு குறைவே ஆயினும் அள்ள அள்ளக் குறையாத செல்வம் உடையவர்!"

"அம்மா! இவர்களில் யாரையும் நான் மணக்க விரும்பவில்லை! வளமுடையவர்! வல்லமையுடைய்வர்! அழகுடையவர்! அறிவுடையவர்! அதிகாரம் செலுத்தும் சிறப்பும் உடையவர்! இப்படி ஒவ்வொருவர் படங்களாக நீங்கள் என்னிடம் காட்டிடக் காத்திருக்கிறீர்கள்; இல்லையா?"

"ஆமாம் மகளே! இவர்களில் யாரை நீ உயர்ந்தவராகக் கருதுகிறாயோ அவரை மணந்திட நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்!"

"அம்மா! உயர்ந்தவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமோ?"

"ஆம் கண்ணே! எண்ணுவதையெல்லாம் உயர்வாகவே எண்ண வேண்டும் என்று வள்ளுவர்கூடக் குறள் பாடியிருக்கிறாரே - நீ படித்திருப்பாயே!"

"படித்திருக்கிறேன் அம்மா! ஆனால், உயர்வு என்பது உப்பரிகையிலே உலவிடும் அளவுக்குப் பெருமையும் - மாட மாளிகைகளில் வாழ்ந்திடும் அளவுக்குச் சிறப்பும் கொண்டது என்று இலக்கணம் வகுத்து விடாதீர்கள்! நான் இந்த உயர்வுகளை, "உயர்வுகள்" என்ற பட்டியலிலேயே இணைத்துப் பார்க்கவில்லை!"

"என்னம்மா சொல்லுகிறாய்? அழகின் திருவுருவமான உன்னை அடைந்திட எத்தனை பேர் தவம் இருக்கிறார்கள்! நீ இவர்களையெல்லாம் விட்டுவிட்டு யாரைத்தான் மணக்க விரும்புகிறாய்?"

"அம்மா! எண்ணுவதெல்லாம் உயர்வான எண்ணமாக இருக்க வேண்டுமல்லவா? அதன்படிச் சொல்லுகிறேன்; அன்னைத் தமிழ்மொழி காத்திடும் போராட்டத்தில் ஈடுபட்டு, ஒரு கையை இழந்து - இன்னமும் சிறையில் பூட்டப் பட்டுக் கிடக்கிறாரே; 'அரிமா' என்னும் தியாகத் தமிழன்; அவருக்காகவே நான் காத்திருக்கிறேன்."

"என்ன? அவனுக்கா? அந்தக் கையிழந்த சிறைப்பறவைக்கா? இதுதான் நீ மிக உயர்வாக எண்ணிய அழகோ? உன் எண்ணம் ஈடேறவே முடியாது; ஈடேறப் போவதுமில்லை!"

"தாயே! தயவு செய்து என்னை மன்னித்திடுக! வள்ளுவர் குறளின் அடுத்த அடியை மறந்துவிடலாமா? 'எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ணவேண்டும்! அந்த உயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது!' என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்!"

தாய், கவலையே உருவாகக் கன்னத்தில் கைவைத்தவாறு உட்கார்ந்திருந்தாள். அந்தக் கன்னியோ, எழுந்து வந்து பலகணி வழியாகப் பரந்த விண்வெளியைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து."

அதிகாரம் - 60 - ஊக்கம் உடைமை; பாடல் - 596





"ஆடலரங்கில் அவள் தோன்றியதும் பார்வையாளர் முகங்கள் எல்லாம் ஒளிபெற்றுத் தகத்தகாயமாயின!

மலர்விழி அவள் பெயர்! மலர் என்றே அழைத்தனர்! விழிகள், மலர்கள்! மேனியோ மலர்க்கொடி! பிறந்தபொழுதே பெற்றோர் அவளது கண்ணழகைக் கண்டு, காரணப் பெயராகவே மலர்விழி எனச் சூட்டி மகிழ்ந்தனர் போலும்! அன்றைய ஆடலரங்கில் அவள் ஆட்டத்திற்குக் குழல் இசைப்போன் வரவில்லை. அதனால் அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டியது. என் குழல் ஒலி அவளைக் கவர்ந்தது போலும்! முகபாவத்தின் மாறுதல்களில் மின்னிடும் முறுவல், என்னை நோக்கிச் சிலநொடிகள் நிலைத்து நின்று ஏதோ ஒரு பாராட்டுச் செய்தியைக் கூறுவது போல எனக்குத் தோன்றியது.

தாளம் தவறாது - எள் முனையளவும் தடுமாறாது - சதங்கையொலித்து ஆடிடும் அந்தப் பாதங்கள் முதல், பால் நிலா முகத்தில் விளைந்திடும் மாற்றப் பொலிவுகள் வரையில் என்னைச் சுண்டியிழுத்துக்கொண்டேயிருந்தன. கலையார்வத்துடன் - உளத்தூய்மையுடன், அந்த அழகியின் அற்புதக் கூத்தினை மெய்மறந்து சுவைத்தேன். வேறெந்த விபரீத எண்ணங்களும் என் உள்ளத்துக் கழனியில் முளைத்திடவில்லை.

அவளும் அப்படித்தான் என் இசைத்திறனில் வயப்பட்டிருக்கக்கூடும்! ஆமாம்; அப்படித்தான்! நீண்ட நாட்களுக்குப் பிறகு நாங்கள் சந்தித்து, என்னை அவளுக்கும் - அவளை எனக்கும் ஒப்படைத்துக்கொண்டு, புன்னைமரத்து நிழலிலே தழுவிப் புரண்டபோது அவள் அதைத்தான் சொன்னாள்! என்ன சொன்னாள்?

'அன்று ஆடலரங்கிலும் சரி; அதற்குப்பிறகு ஓரிரு முறை உங்களைச் சந்தித்தபோதும் சரி - காதல் எனும் ஓர் உணர்வு என் நெஞ்சில் நிழலாடக்கூட இல்லை! ஆனால், இந்த ஊரார் என்னைத் தவறாகக் கருதி என் கலையுள்ளத்தைப் புரிந்துகொள்ளாமல் - பலர் அறிய 'அலர்' தூற்றி - எனக்கும் உங்களுக்கும் காதல் முகிழ்த்து முற்றிவிட்டது எனப் பேசத் தொடங்கினர்! அந்தப் பேச்சே, எனக்கு இப்படியொரு உணர்வை உருவாக்கிவிட்டது!'

இதை மலர்விழியாள் சொன்னதும் நானளித்த பதில் என்ன தெரியுமா?

'என் செய்தியும் அப்படித்தான் செந்தேனே! நறுந்தமிழே! உன் ஆடற் கலைக்கே அடிமையானேன்! ஆனால், இந்த ஊர் நம் இருவரைப்பற்றியும் கட்டிவிட்ட கதைகள், தட்டிவிட்ட குதிரைகளைப்போலப் பல திக்கும் பரவி ஓடிவிட்டபிறகு, இனியென்ன பயமென்று நானும் துணிந்துவிட்டேன்! தங்களையுமறியாமல் நமக்கு உதவி செய்து நம்மைச் சேர்த்துவைத்த இந்த ஊராரை வாழ்த்துவோம்' என்றேன்.


இருவரும் சேர்ந்து வாழ்த்தினோம்! எங்களைப் புன்னைமரத்துக் கிளைகளில் இருந்த பறவைகள் வாழ்த்தின!"

"மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் வூர்."

அதிகாரம் - 115 - அலர் அறிவுறுத்தல்; பாடல் - 1142

அலர் = பலர் அறிதல்





பூங்குன்றன், செல்வக்குடியில் பிறந்தவன். அவனுக்கு உற்றார் உறவினர் நண்பர்கள் நிறைய உண்டு. அனைவருமே அவனிடம் இனிமையாகப் பழகுவார் கள். பழகுதற்குக் கேட்கவா வேண்டும்!

தங்க நாணயங்கள் நிறைந்த பேழைகளைத் தாழ்வாரத்திலேயே அடுக்கி வைத்திருக்கக்கூடிய அளவற்ற செல்வத்திற்கு உடைமையாளனாயிற்றே!

அவர்களின் கருத்துக்களையே, அவன், அறிவார்ந்த ஆன்றோர்களின் பொன் மொழிகளாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வந்தான்.

அவனது ஒவ்வோர் அசைவையும் போற்றியும் புகழ்ந்தும் அவனைச் சூழ்ந்திருந்தோர் அவன் இதயத்தைக் குளிர வைத்துக் கொண்டிருந்தனர்.

இவ்வாறே ஆண்டுகள் பல உருண்டன. ஒரு நாள் அந்த ஊரையடுத்த சிற்றூர் ஒன்றில், பற்றற்று வாழ்கின்ற துறவியாரின் குடிலுக்குள் அவரது மாணவன் ஓடோடி வந்து, பூங்குன்றன், துறவியாரைக் காண வந்திருப்பதாகச் சொன்னான். அழைத்து வருமாறு துறவியார் கூறினார்.

உள்ளே வந்த பூங்குன்றனைக் கண்டு துறவி வியப்புற்றார். "நான் காண்பது பொன் கலசம் வைத்து வீடு கட்டி வாழ்ந்த பூங்குன்றனைத்தானா?" என்று அதிர்ச்சியுடன் கேட்டார். அந்த அளவுக்கு ஏழ்மைக்கோலத்தில் இருந்தான் பூங்குன்றன்.

"என் நிலையைக் கண்டீர்களா?"

அவன் துறவியின் கரங்களைப் பற்றிக்கொண்டு கண்கலங்கக் கேட்டான்.

"உன் நிலை இப்படி ஆகக்கூடும் என நான் எதிர்பார்த்ததுதான். உன்னைச் சுற்றியிருப்போர் உன்னை இப்படி ஆக்கிவிடுவர் என நான் கேள்விப்பட்டேன். அது நடந்தேவிட்டது போலும்."

துறவி, அமைதியாக இந்தப் பதிலைச் சொன்னார்.

"அய்யனே! என் அருகிருந்த சுற்றத்தார் அப்படியொன்றும் கொடியவரில்லை. அன்புடன்தான் பழகினர். நண்பர்கள் இனிமையானவர்கள். நச்சு எண்ணம் கொண்டவர்கள் என்று கூறிடவே முடியாது!"

பூங்குன்றனின் விளக்கத்தைக் கேட்டுத் துறவி சிரித்தார்.

"குன்றனே! நீ இன்னமும் திருந்தியதாகத் தெரியவில்லை. உன்னைச் சூழ்ந்திருந் தோர் உன் பார்வைக்குப் பகையாளிகளாகத் தெரியவில்லையே தவிர, அவர்கள் உட்பகை கொண்டவர்கள் என்பதை நீ அறியமாட்டாய்! அதை அவ்வளவு எளிதில் உணர்வதும் இயலாதுதான். ஒன்று சொல்கிறேன் கேள்! இனிய நிழலைத் தருகிறதேயென்று புளிய மரத்தடியில் படுத்து இளைப்பாறினால், உடல் கொதிப்பேறி நோயுண்டாகும்.

குளிர்ந்த நீர்தானே எனக்கருதி, நச்சுக்கிணற்று நீரை அள்ளிப் பருகினால், நரம்புச்சிலந்தி நோய் பற்றிக்கொண்டு அணு அணுவாகக் கொல்லும்!

உன்னைச் சூழ்ந்திருந்த சுற்றமும் நட்பும் - புளிய மரத்து நிழல்போலவும் நச்சுக்கிணற்றுக் குளிர் நீரைப்போலவும் உட்பகையைக் காட்டிக் கொள்ளாது உன்னை மெல்ல மெல்ல வறியனாக்கித் தீர்த்துவிட்டன. வள்ளுவர் எழுதிய குறளை நீ படித்ததில்லையா?"

"என்ன குறள் அய்யனே!"

"இனிமையாகத் தோன்றும் நிழலும், நீரும் கூட நோய் தரக்கூடியவைகளாக இருப்பின் அவை தீயனவே ஆகும்! அதைப்போல, சுற்றத்தாரின் தன்மைகளும் துன்பம் அளிக்குமானால் தீயனவே ஆகும்!"

அந்தக் குறளின் பொருள் கேட்டு, பொருளிழந்து நின்ற பூங்குன்றன், துறவியாரின் காலில் விழுந்து வணங்கினான், "உண்மை! உண்மை!" என்று உரக்கக் கூவிக்கொண்டே!

"நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்."

அதிகாரம் - 89 - உட்பகை; பாடல் - 881

தமர்நீரும் = சுற்றத்தார் தன்மையும்



துறவறம் மேற்கொண்டோர்க்கென அறத்துப்பாலில் எடுத்துக்காட்டி யிருக்கும் துறவறவியலில், கொல்லாமை எனும் அதிகாரம் தனித்தலைப்புடன் திகழ்கிறது. குறட்பாக்களை அறம், பொருள், இன்பம் எனும் முப்பால்களாக வள்ளுவர் வடித்துத் தந்திருக்கக்கூடும். ஆனால், அதிகாரத் தலைப்புகள் கட்டி ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக் குறள்களை வரிசைப்படுத்தி அவரே வழங்கியிருக்க முடியுமா? இது ஐயத்திற்குரியதே! அவருக்குப் பின் வந்தோர் இயல்களையும் அதிகாரங்களையும் பிரித்துத் தொகுத்திருப்பர் என்றே தெளிந்திட வேண்டியிருக்கிறது. துறவறத்திற்குரிய பல அறிவுரைகள் இல்லறத்தாரும் ஏற்று நடத்திட வேண்டிய வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. பொருட்பாலில் சொல்லப்படும் கருத்துக்கள், நெறிமுறைகள், மக்களைப் பேணிக்காக்கும் அரசின் பொறுப்புமிக்க கடமைகள் சிலவற்றை அறத்துப்பாலிலும் காணமுடிகிறது! பொருட்பாலுக்கே உரியதாகத் தோன்றும் கருத்துக்களை, அறத்துப்பாலில் இணைத்திருக்கின்றனரே என்ற வியப்பும்கூட எழுகிறது!

அனைத்துக்கும் அறவழியே அடிப்படை என்பதால், பொருட்பாலுக்குரியது போலத் தோன்றும் கருத்துக்களை அறத்துப்பாலில் காண்பதும் இயற்கைதானே!

நிலமும் கடலும் அறமெனக் கொண்டால் - அவற்றில் விளையும் அனைத்தும் பொருட்பால் எனக் கொள்வதே சிறப்பு!

ஆரணங்கின் கழுத்தில் அணி சேர்ப்பது முத்தாரம்!

அந்த ஆரத்திற்குரிய முத்துக்கள் கிடைக்குமிடம் ஆழ்கடலின் அடியில்தானே!

பொன் அணி பூண்டு புன்னகை சிந்துகிறாள் பெண்ணழகு!

அந்தப் பொன்னைத் தன் மடியில் சுமப்பது பூமித் தாய்தானே!

முத்தாரமும் பொன்னணியும் பொருட்பாலில் ஒளிவிடுகின்றன எனினும் முத்தும் பொன்னும் விளைவது அறம் எனும் கடலிலும் நிலத்திலும் அல்லவா?

இப்படித்தான் பொருட்பாலில் பொருத்தமுடையதென எண்ணிடும் சில புதிய சிந்தனைகளை - இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு திருவள்ளுவரின் எண்ணைச் சோலையில் மலர்ந்த புரட்சிக் கருத்துக்களை - அறத்துப்பாலில் தொகுத்தளித்தனர் போலும்!

முடியாட்சி இருந்த காலத்தில் அந்த முதுபெரும் அறிஞர் திருமகனார்; வள்ளுவத்தை உலகிற்கு வழங்கினார்.

இப்போதும் குடியாட்சி என்ற பெயரால், பல நாடுகளில் வல்லார் வகுத்த தடியாட்சிகள் நடைபெறுகின்றன.

குடியாட்சி, குடிமக்களால் தங்களை ஆளத் தகுந்தவரைத் தேர்ந்தெடுக்கும் முறை கொண்ட ஆட்சி!

முடியாட்சி புரிந்தோர்க்குச் சொன்ன அறிவுரைகள், இன்று குடியாட்சி நடத்துவோருக்கும் பொருந்தும்!

மக்களால் அரசு மட்டும் அமைக்கப்படுதல் போதாது! அந்த மக்கள் அரசே மக்களுக்குத் தேவையானவற்றை விளைவித்து - தருவித்து -அவற்றைக் காப்பாற்றி - அப்படிப் பாதுகாக்கப்பட்டதை மக்கள் அனைவர்க்கும் வகுத்தளித்திடல் வேண்டும்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

இந்தக் குறள், பொருட்பாலின் தொடக்கத்தில் அரசியலில் - இறை மாட்சியெனும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது! அது மணிமகுடம் இருந்த காலம்! அதனால், இறை என்று மன்னவனின் கடமையைச் சுட்டிக் காட்டினார்.

மக்களால் அரசுகள் தேர்வு செய்யப்படவேண்டுமென்ற மக்களாட்சியின் மாண்பினைப் போற்றும் காலம் இது!

எனினும், அரசுக்குரிய கடமை எதுவென வலியுறுத்தப்படுகிறது!

பொருட்பாலில் கூறப்படும் இந்தப் பொறுப்புணர்வுக்கு மேலும் வலிசேர்க்கும் வண்ணம் அறத்துப்பால் - துறவறவியலில், கொல்லாமை எனும் அதிகாரத்தில் ஒரு பாடல்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை."

ஓர் உயிரைக்கூட கொல்லாததுதான் அறம் என்று திட்டவட்டமாகக் கூறும் வள்ளுவர், கொல்லாமைக்குத் தனிச் சிறப்பையே அளிக்கிறார்.

ஆட்சி நடத்துவோரின் கொள்கை காரணமாக - செல்வமும் செழிப்பும் ஓரிடத் தில் குவிந்து சிலர் வாழவும் - பலர் வாடவுமான நிலை அமைந்திடின், வறுமையால் செத்திடும் மக்கள், மறைமுகமாகக் கொல்லப்படுகிறார்கள் என்று தானே பொருள்!

அந்தக் கொலைச்செயல் நிறுத்தப்பட வேண்டுமானால், கோலேந்திகளின் கொள்கை, பொதுவுடைமை மணங்கமழ்வதாகவும், அவர்களால் அமையும் அரசே சிறந்ததெனப் போற்றப்படுதலாகவும் இருத்தல் வேண்டும்!

அத்தகைய அரசை உருவாக்கும் மக்கள், வலியுறுத்த வேண்டியது என்ன?


"எத்தனையோ அறநூல்கள் அறநெறிகளைத் தொகுத்தளித் திருக்கின்றன! ஆனால், அந்த நூல்களில் காணப்படும் அறநெறிகள் அனைத்துக்கும் தலையானது ஒன்று உண்டு! அதுதான், உள்ளவன் இல்லாதவன் என்ற நிலையை மாற்றி, இருப்பதை அனைவர்க்குமே பகுத்துக்கொள்ளக் கூடிய கொள்கையை வகுத்து, எல்லா உயிர்களையும் வாழ வைப்பது என்பதாகும்."

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழகத்தில் தோன்றிய புரட்சிகரமான சிந்தனைக்குச் சொந்தக்காரன், பொதுவுடைமைக் கொள்கையின் வழிகாட்டி - வள்ளுவன் என நினைக்கும்போது நெஞ்சமெல்லாம் இனிக்கின்றதன்றோ!

அதிகாரம் - 39 - இறைமாட்சி; பாடல் - 385

அதிகாரம் - 33 - கொல்லாமை; பாடல் - 322





தெனாலிராமன்

பிள்ளையார் கோயில் வாசலில் ஐந்தாறு இளைஞர்கள் சடுகுடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே ஒரு பக்தர் தேங்காயுடன் வந்தார். விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர், அவர் கையில் இருக்கிற தேங்காய் சூறைத் தேங்காய் என்பதைப் புரிந்து கொண்டு!

பக்தர், பிள்ளையாரை வணங்கிவிட்டு, அந்தத் தேங்காயை அங்கிருந்த கருங்கல்லின் மீது ஓங்கி அடித்தார். அது சுக்கல் சுக்கலாகச் சிதறிற்று. இளைஞர்கள் ஒருவர் மீது ஒருவர் வீழ்ந்து, சிதறிய தேங்காய்த் துண்டுகளைப் பொறுக்கிட முற்பட்டனர். சிலருக்குத் தேங்காய்த் துண்டுகள்! ஓரிருவருக்கு உடைந்துபோன ஓடுகள்! ஓர் இளைஞன் கையிலே மட்டும் பெரிய மூடி ஒன்று சிக்கியது! அதை எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடி தொலைவில் உள்ள பாழ்மண்டபத்தில் ஏறி நின்று முழுவதும் அவனே தின்று தீர்த்தான். ஒரு சிறு துண்டுத் தேங்காய்கூடக் கிடைக்காத இளைஞர்கள் ஏமாந்து போய் நின்றனர். எல்லோருமே ஏழை வீட்டு இளந்தளிர்கள்தான்; வறுமையில் வதங்கிப் போனவர்கள்தான். பெரிய தேங்காய் மூடியைத் தின்றுவிட்டு, எதுவும் கிடைக்காதவர்களைப் பார்த்துப் பழிப்புக் காட்டிக்கொண்டிருந்த இளைஞனிடம் அந்த பக்தர் சென்றார்.

"தம்பீ! நீ இப்படிச் செய்யலாமா? எவ்வளவு பிள்ளைகள் ஏங்கிப்போய் விட்டார்கள் பார்த்தாயா?" என்று பரிவுடன் கேட்டார்.

"என் திறமை எனக்குக் கிடைத்தது! அவர்கள் கையாலாகாத்தனத்திற்கு நானா பொறுப்பு?"

என்று அந்த இளைஞன் பதில் சொன்னான். அப்போது அருகில் உள்ள ஒரு பெரிய வீட்டு வாயிற்புறத்தில், நாலைந்து எச்சில் இலைகளை வேலைக்காரி வீசி எறிந்து விட்டுப் போனாள். ஒவ்வொரு இலையிலும் சில பண்டங்கள் எஞ்சியிருந்தன. அந்த இலைகள் தெருவில் விழுந்ததை, பசியோடிருந்த ஒரு காக்கை பார்த்து விட்டது. பறந்து வந்து இலையிடம் அமர்ந்தது. அடுத்த விநாடியே அது "கா! கா!" என்று கத்தத் தொடங்கியது. கூட்டமாகப் பத்துப் பதினைந்து காக்கைகள் அங்கு வந்து சேர்ந்தன. அவை, ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் நிதானமாகவும் கட்டுப்பாடாகவும் அந்த இலைகளில் இருந்த பண்டங்களைத் தின்றன.

பக்தர், அந்த இளைஞனைப் பார்த்துச் சொன்னார்:

"தம்பீ! பார்த்தாயா? ஒரு சாதாரணப் பறவை இந்தக் காக்கை! இது கூடத் தனக்குக் கிடைத்த உணவை, தான் மட்டுமே அருந்தவேண்டுமென்ற எண்ணமில்லாமல், தன் இனத்தையே கூவியழைத்துப் பகிர்ந்துண்ணும் பண்பைப் பெற்றிருக்கிறது! இத்தகைய இயல்பு படைத்தவர்களுக்கே இந்த உலகில் உயர்வு உண்டு! எல்லாம் தனக்கே என்பவருக்கு ஆக்கமில்லை; அழிவேதான்! இதனை அறிந்துகொள்க தம்பி!"

இப்படிக் கூறிவிட்டுப் பக்தர் சென்றதும், அந்த இளைஞன் தனது செயலுக்கு வருந்தி நாணித் தலை கவிழ்ந்து நின்றான்.

"தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தனது சுற்றத்தைக் கூவியழைத்துக் காக்கை உண்ணும். அந்த இயல்புடையவர்க்கே உயர்வு உண்டு உலகில்."


என்கிறது குறள்!

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள."

அதிகாரம் - 53 - சுற்றந்தழால்; பாடல் - 527

ஆக்கம் = உயர்வு அன்ன = போன்ற நீரார் = இயல்புடையவர்





சிறுகதை

கோத்த மணிகளையும் கோத்திடாத மணிகளையும் விற்பனை செய்யும் தொழில் மேற்கொண்டு, காலை முதல் மாலை வரையில் ஊர் ஊராக அலைபவன் அழகன். அந்தப் பெயர், அவனுக்குக் காரணப் பெயராகக்கூட அமைந்துவிட்டது எனலாம். மீன்குஞ்சுகளைப் போன்ற மீசை! தேக்குமரம் கடைந்து செய்யப்பட்டது போன்ற தேகம்! அகன்ற - கூரிய - ஆனால், குளிர்ச்சி பொருந்திய கண்கள்!

ஊரெல்லாம் அலைந்து திரிந்து மணி வியாபாரம் நடத்தும் அவன், நாலு நாட்களுக்கு ஒரு முறை எப்படியும் திங்களூர் வீதிகளுக்கு வந்துவிடுவான். அவன் வருகையை அந்த ஊரில் எல்லோரையும்விட, அவள் ஒருத்தி மட்டும் அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பாள். அவளுக்கும்கூடப் பெயர் பொருத்தம்தான். அழகி, அவளது பெயர்.

வழக்கம்போல் அழகன் அன்று திங்களூர் வந்தான். மாலை நேரம்; வியாபாரம் அப்படியொன்றும் அவனுக்கு மன நிறைவாக இல்லை. அதனால் பரவாயில்லை; அவளைச் சந்திப்பதுதானே அந்த ஊர் வருகையின் தலையாய நோக்கம்!

ஏமாற்றமே அவனுக்குக் காத்திருந்தது. ஒவ்வொரு வீடாகச் சென்று மணி விற்பனையை நடத்திவிட்டு, வேக வேகமாக அவள் வீட்டுப் பக்கம் வந்தான்.

ஒவ்வொரு தடவையும் அவள், வாயிற்புறம் நின்று அவன் கொண்டு வரும் மணிமாலைகளையும் மணிகளையும் பார்த்துவிட்டு அவனையும் விழிகளால் ஆசை தீரப் பருகிவிட்டு - ஏதாவது ஒன்றிரண்டு மணிகளை வாங்கிக்கொண்டு வீட்டுக்குள் சென்றுவிடுவாள். அதற்கு மேல் வீதிப்பக்கம் நின்றால் - அதுவும் ஓர் ஆடவன் முன் நின்றால், அவளது தாயின் கடுமையான குரல், வீட்டுக்கூடத்திலிருந்து கிளம்பிவிடும். அழகன் - அழகி இருவரிடையே அதன் காரணமாகவோ என்னவோ வேறு எந்தப் பேச்சும் இருந்ததில்லை. மணி வாங்குதல், காசு கொடுத்தல், விழிகள் நான்கும் ஒன்றோடொன்று மோதுதல், பிரிந்து விடுதல் - அழகனுக்கு அதிலே ஒரு இன்பம். அதற்காகவே, நாலு நாட்களுக்கு ஒருமுறை திங்களூரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டான்.

அன்றும் அந்த வீட்டுக்கு வந்தான். அழைத்துப் பார்த்தான்; கூவினான், மணி வியாபாரி வந்திருப்பதாக! யாரும் வந்து எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

கதவோரம் சென்று பார்த்தான். பூட்டப்பட்டிருந்தது. பூட்டை இழுத்துப் பார்த்தான். கெட்டியாகப் பூட்டப்பட்டிருப்பதை உணர்ந்தான்.

"என்னா மணி வியாபாரம்! பூட்டை இழுத்துப் பார்க்கிறே! வீட்டிலே யாருமில்லேன்னா, தேட்டை போடலாமேன்னு நினைப்பா?"

எதிர்த்த வீட்டு மூதாட்டியொருத்தி, கனத்த குரலில் கடுமையாகவும் கேலியாகவும் கேட்டுக்கொண்டே வந்தாள்!

"சே! சே! இல்லை பாட்டி! வழக்கமாக இங்கேயொரு பெண்மணி, என்னிடம் மணியோ, மணிமாலையோ வாங்குவாள். இந்தத் தடவை நல்ல மாலைகள் கொண்டு வந்திருக்கிறேன். வீட்டில் யாரையும் காணவில்லையே என்று பார்க்கிறேன்"

என்றான் அழகன், சோர்ந்த முகத்துடன்!

"மாலை கொண்டு வந்தாயா? அந்தப் பெண்ணுக்குக் காலையில்தான் ஒருத்தன் மணமாலை சூட்டியிருக்கான். பக்கத்து ஊர்லேதான் திருமணம். நாங்கள்ளாம் அங்கே போய்ட்டுதான் வர்ரோம்."

எதிர்வீட்டு மூதாட்டி, இதைச் சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றாள். அழகனால் நிற்க முடியவில்லை. அந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்தான். தலை சுற்றியது. அப்படியே சாய்ந்துவிட்டான். உலகமே இருண்டுவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி. அழகீ! அழகீ! என அவன் உதடுகள் உச்சரித்துக்கொண்டே அடங்கிவிட்டன.

முகத்தில் தண்ணீர் தெளிக்கப்பட்டது. மெல்லிய கரமொன்று அவன் முகத்தை வருடியது. கண் விழித்தான். மலர்த் தலையணை மீது அவன் தலையிருப்பது போல ஓர் உணர்வு. விழிகளை அகலவிரித்துப் பார்த்தான். அழகியின் மடிமீது தான் படுத்திருந்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் சிரித்தாள். "நன்றாக ஏமாந்தீர்களா?" என்று கேட்டாள்.

மீண்டும் ஏமாற்றமா? அழகன், அழகியின் கழுத்தைப் பார்த்தான். தாலியில்லை! ஆறுதல்! அப்பாடா என்ற பெருமூச்சு!

"இதெல்லாம் என்ன நாடகம் அழகி?"

"நாடகமில்லை! நீங்கள் உண்மையிலேயே என் மீது அன்பு கொண்டிருக்கிறீர்களா என அறிந்துகொள்ள, என் தாயும் எதிர்வீட்டுப் பாட்டியும் நடத்திய சோதனை!"

"அதுதானே பார்த்தேன்! நீ என்னை விடுத்து யாரையும் மணக்க மாட்டாய் என்று எனக்கு முன்னமேயே தெரியும்."

"எப்படித் தெரியும்?"

துள்ளிடும் புள்ளிமானாம் இந்தத் துடியிடையாள் மீது இயற்கை அள்ளிக் கொட்டியிருக்கும் அழகுக்குள்ளே; இதோ இந்த மணிமாலைக்குள்ளே ஊடுருவுகின்ற நூலைப்போல, நமது காதலைப் பற்றிய குறிப்பு ஒன்று இருப்பதை நான் உணர்ந்திருந்தேன் கண்மணி!"

அழகன், மணிமாலையையும் அதனுள் கோத்துள்ள நூலையும் காட்டினான். அழகீ! இது அறுந்திடாத உறுதியான நூல்! இல்லையா என் இன்பமே!" என்றான்.


அவள் முந்திக்கொள்வதற்குள், அவன் முந்திக்கொண்டு தழுவிக் கொண்டான்.


"தெருத் திண்ணையிது!"

இருவருமே அந்தச் சொற்றொடரை உதிர்த்தனர். விலகிக்கொண்டனர். அந்த நேரம் பார்த்து அழகியின் தாயும் எதிர்வீட்டுப் பாட்டியும் - சிரித்துக் கொண்டே வந்தனர். அழகனும் அழகியும் அவர்களின் வாழ்த்துக்கோரி தலைகுனிந்து நின்றனர்.

"மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு."

அதிகாரம் - 128 - குறிப்பறிவுறுத்தல்; பாடல் - 1273





அடிப்பாகம் அகலமாகவும், உச்சிப்பகுதி குறுகலாகவும் அமைக்கப்பட்டுள்ள கோபுரங்களுக்கு நேர்மாறாக, அடிப்பகுதியைக் குறுகிய அளவில் அமைத்து, மேலே போகப்போக உச்சிப்பகுதியை விரிவாக்கிக் கோபுரம் ஒன்றை உருவாக்கினால் என்னவென்று ஓர் ஊரார் சிந்தித்தார்கள். சிந்தனைக்குச் செயல்வடிவம் தருவதற்கு முற்பட்டார்கள். இயல்பாகக் கோபுரங்கள் ஆங்கிலத்தில் உள்ள "A" என்ற எழுத்துப்போலத்தானே இருக்கும்! ஆனால் அந்த ஊரார், ஆங்கிலத்தில் உள்ள "V" என்ற எழுத்தைப் போலக் கோபுரத்தைக் கட்டத் தொடங்கினார்கள். அதற்கான கருங்கற்கள், செங்கற்களை அடுக்கினார்கள். விளைவு தோல்வியில் முடிந்து கட்டிடத் தொழிலாளர் பலர் காயமுற்றுக் கால்கள் முறிந்து, உலவிட முடியாமல் ஊனமுற்றனர்.

கருமுகில்கள் வடித்த கண்ணீர், மலைக்கன்னங்களில் அருவிகளென வழிந்து சிற்றாறுகளாக உருவெடுத்து, அவையனைத்தும் இணைந்து பேராறு ஒன்று பெருகி கடல் நோக்கி ஓடிக்கொண்டிருந்த காட்சியைக் கண்டான் அந்தக் காலத்து அறிவார்ந்த மனிதன். எவ்வளவு தண்ணீர் வீணாகச் சென்று கடலில் வீழ்கிறது எனக் கவலை கொண்டான். அந்த ஆற்றுக்கோர் அணை கட்டித் தேக்கினால் என்ன என்ற கேள்வி எழுந்தது, அவன் நெஞ்சத்தில்! அவ்வாறே அணை எழுப்பினான். "அடடே! ஆற்றுத் தண்ணீரை ஏன் தடுக்கிறாய்?" எனச் சிலர் கேட்கத்தான் செய்தனர்! "வருகிற நீர்

அனைத்தும் நஞ்சை புஞ்சை நிலங்களை வளமாக்குவதற்குப் பயன்பட வேண்டுமல்லவா? அதனால்தான் அணைகட்டி, நீரைத்தேக்கி, தேவைப்படும் காலத்தில் தேவைப்படும் பகுதிகளுக்கு வழங்குவதற்கேற்ப நீரைச் சிக்கனப்படுத்தலாம் என்று திட்டமிட்டுள்ளேன்" என்றான், அணை கட்டியவன்.

காட்டாற்று வெள்ளம் - கரை கண்டு, அணையும் கண்டு, நிலபுலங்களில் வளமும் காணப் பயன்படுவதுணர்ந்து உழவர்கள் உவகை பூத்தனர்.

ஒரு குடும்பம்: கணவன், மனைவி, குழந்தைகள் இருவர்! திங்கள்தோறும் ஆயிரம் வெண் பொற்காசுகள் வருமானம்! ஆனால், கணவனும் மனைவியும் போட்டி போட்டுக்கொண்டு செலவுசெய்தனர். ஊர்ப்பயணங்கள் என்ன - உல்லாசக் கேளிக்கைக் காட்சிகள் என்ன - விதவித உடைகள் என்ன - வருவாய்க்கு மீறிய செலவு! வாங்கிய கடன்களைத் திருப்பித்தர முடியவில்லை. வாழ்ந்த வீட்டை விற்றும் - பாட்டன் காலத்துக் கழனிச் செல்வத்தை விற்றும் - கடன் கொடுத்துவிட்டுக் கன்னத்தில் கைவைத்துக்கொண்டு மூழ்கினர்.

இன்னொரு குடும்பம்: இதேபோலக் கணவன் - மனைவி - இரு குழந்தைகள் தான்! வருமானமோ; எண்ணூறு வெண் பொற்காசுகள்தான்! வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிக் கருமிகளாக வாழாமல், தேவையான செலவுகளைச் செய்து மாதந்தோறும் நூறு வெண் பொற்காசுகளை மிச்சப்படுத்தி, மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். கடன் தொல்லையில்லை. கவலையின் சாயல்கூட அவர்கள் வாழ்க்கையில் தலைகாட்டவில்லை.

அடித்தளம் குறுகி - மேல் பகுதியை ஆகாயமளாவிட விரிவுபடுத்தினால் கோபுரம் சரிகிறது!

ஆற்று நீரைத்தேக்கி வைத்து, வகைப்படுத்தி, அளவுடன் பயன்படுத்தா விட்டால், பயிர் பச்சைகளைக் காணமுடியாது!


வருவாய் குறைவாக இருந்தாலும் செலவு அதிகமாகாமல் பார்த்துக் கொண்டால், அதனால் தீமை ஏற்படுவதில்லை!

இதனை விளக்குவதே இந்தக் குறள்:

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

அதிகாரம் - 48 - வலியறிதல்; பாடல் - 478

ஆகாறு = வருவாய்க்கான வழி அளவு இட்டிது = அளவில் சிறிது
போகாறு = செலவிடும் வழி



சாரைப் பாம்பு போல நீண்டு வளைந்து நெளிந்திருக்கும் தெரு! இருட்டும் கப்பிக் கொண்டிருந்தமையால் "சாரைப்பாம்பு போல" என்பது பொருத்தமான உவமையாகவே அமைந்தது. அந்தத் தெருவுக்கும் அதில் உள்ள வீடுகளுக்கும் நிரம்பத் தொடர்பு! அதனால்தான் வீட்டுக்குள் இருக்க வேண்டிய பல பொருள் கள் தெருவிலும் கிடந்தன. தெருவில் இருந்திடும் தூய்மையற்ற நிலை வீடுகளுக்குள் ளும் இருந்தது. வீடுகள் என்பதே தவறு! குருவிக்கூடுகள்! மனிதப் பறவைகள்தான் வசித்தன! பறவைகள் என்றால் இறக்கைகள் வேண்டுமே! கள்ளோ சாராயமோ இரண்டிலொன்றைத் தோள்பட்டைகளின் இரத்த நாளங்களில் ஓடவிட்டு, இறக்கைகளை முளைக்க வைத்துக்கொண்டு தெருப்புறத்தில் படுத்தபடியே திசை யெட்டும் பறந்து கொண்டிருந்தனர். "மினுக் மினுக்" என்று பல்லை இளித்துக் காட்டியவாறு அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில "சிம்னி" விளக்குகள், தங்க ளின் வெளிச்சப் பெருமையை விளம்பரப்படுத்திக் கொண்டு காற்றில் கூத்தாடின!

அந்தத் தெருவைக் கடந்துதான் அந்தப் "பெரிய" மாநகரில் மிக அகன்ற வீதியை அடுத்துள்ள அழகிய பூங்காவுக்குச் செல்ல வேண்டும். பணி முடிந்து இல்லம் திரும்பிய பகலவனும் அவன் துணைவி பாவையும் ஓய்வாகவும் உற்சாகமாகப் பேசிக் களிப்பதற்காகவும் அந்தப் பூங்கா சென்றிட விரும்பினர். அவர்கள் செல்லும் வழியிலேதான் அந்தச் "சிங்காரத் தெரு!"

அளவுக்கும் குறைவாக மூச்சை இழுத்து, அதற்கு அதிகமாகவே வெளியே விடுத்துக்கொண்டு அந்தத் தெருவில் நடந்தனர் இருவரும். ஓர் குடிசையின் வாசலில் நாற்பது வயதுடைய ஒரு ஆடவன் - முப்பதைத் தொட்டிடாத வயதுள்ள ஒரு பெண் - பத்து வயதிலிருந்து இரண்டு வயது வரையுள்ள ஐந்து குழந்தைகள், அவர்களைச் சுற்றிப் பூனையின் மீது குட்டிகள் உராய்வது போலச் சிரித்தும் அழுதும் சப்தமிட்டுக்கொண்டும்

மடியிலும் முதுகிலும் புரண்டு கொண்டிருந்தனர். அந்தப் பெண்ணின் மார்பைச் சுவைத்தவாறு கைக்குழந்தை! தற்காலிகமாகக் கடைசிக் குழந்தை போலும்!

பாவை, அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டுப் பகலவனை நோக்கினாள்.

பகலவன் கேலியாகச் சொன்னான்: இருவரும் தமிழ் இலக்கியம் பயின்றவர்கள். அதனால் பாவைக்கு எளிதில் விளங்குமென்ற நம்பிக்கையோடு சொன்னான்.

"பெற்றெடுத்த மக்கள் பெற்றோரின் உடலைத் தொடுதல், உடல் முழுமைக்கும் இன்பம்! அந்த மக்களின் மழலையைக் கேட்பது செவிக்கு இன்பம்! என்பதாக வள்ளுவர் எழுதியிருக்கிறாரே; அதுதான் இந்தக் காட்சி."

"அத்தான்! வள்ளுவர் மக்கள் என்று சொன்னதால், ஒரு மக்கள் பேரணியே பெற்றோரை முற்றுகையிட்டு, மெய்தீண்டி இன்பம் தரவேண்டுமா? அல்லது கூச்சல் போட்டுச் செவிக்கு இன்பம் தர வேண்டுமா? அதோ பாருங்கள், அந்தப் பெற்றோரின் முகத்தை! எத்துணை சலிப்பு! எவ்வளவு சுளிப்பு! அவர்களின் மெய்தொட்டு, மழலை பேசும் குழந்தைகள் இரண்டாக மட்டும் இருந்தால் - உண்மையிலேயே இந்த ஏழை வீட்டிலேகூட இன்பம்தான் பொங்கிடும்!"

பாவைக்குப் பகலவன் பதில் கூறத் தயங்கவில்லை: "பிறகேன் வள்ளுவர் அளவுடன் பெற்று வளமுடன் வாழ்க - என்று கூறிடவில்லை! இரண்டே போதும், அதுவே இன்பம்! என்று அவர் குறளில் குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா?" என்றான், கேலிச் சிரிப்பைப் பொழிய விடுத்து!

"அத்தான்! குழல் இனிது யாழ் இனிது - என்ற குறளின் வாயிலாக வள்ளுவர் இரண்டு மக்களைத்தான் குறிப்பிட்டிருக்கிறார் என்று நாம் ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?"

"எப்படி? எப்படி?"

"ஆமாம் அத்தான்! குழல் பொதுவாக ஆண்களுக்குரிய இசைக்கருவி! யாழோ, பெரும்பாலும் பெண்களே மீட்டிடும் இசைக்கருவி! அந்த இரண்டு இசைக் கருவிகளைப்போல் குழலைத் தோற்கடிக்கும் மழலை பேசிட ஓர் ஆணும் - யாழைத் தோற்கடிக்கும் மழலை மொழிந்திட ஒரு பெண்ணும் போதும் என்று குறள் குறிப்பிடுவதாகச் சொல்லலாம் அல்லவா? ஏககாலத்தில் பல குழந்தைகளின் கூச்சல் செவியைப் பிளக்கவேண்டும்; அதுதான் இனிது என வள்ளுவர் எண்ணியிருந்தால் குழல், யாழ் என்ற இரு இசைக்கருவிகளைச் சொல்லாமல் - 'வாத்தியக்குழு இனிது' என்ற கருத்துப்பட அல்லவா வர்ணனை செய்திருப்பார்?"

பகலவன், பாவையின் திறமையை வியந்தான். இருவரும் மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்த வண்ணம் பூங்காவை நெருங்கினர். அங்கிருந்து விரைவில் வீடு திரும்பினர். தாழ்வாரத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த பத்து வயது மகன், "அப்பா! அம்மா!" என்றவாறு ஓடி வந்து கட்டிக்கொண்டான்! "வாடா வா! குழலிசை தோற்றது உன் குரலிசையின் முன்னே!" என்றான் பகலவன்! ஒலி கேட்டு ஓடிவந்தாள் ஐந்து வயதுப் பெண்! "அப்பா! அம்மா!"

"என்னம்மா கண்ணு; நீ யாழைத் தோற்கடித்துவிட்டாய்!" என்று அணைத்துக் கொண்டான். இரண்டு மக்களும் பெற்றோரை இறுகத் தழுவிக் கொண்டனர்.

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு."

அதிகாரம் - 7 - மக்கட்பேறு; பாடல் - 65



இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு உலகப்பொது ஞாயிறு எனத்தக்க வகையில் ஒளியுமிழ்ந்து தோன்றியது திருக்குறள். அந்தக் குறளுக்கு நான் ஓவிய உரை தீட்டிடும் இந்நாள், மக்கள் வாழ்வுடன் ஒன்றியிருக்கும் எத்தனையோ நிலைமைகள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வள்ளுவரால் ஆராய்ந்து அறிவிக்கப்பட்டுள்ளன என்பதை எண்ணும்போது, வியப்பே மேலிடுகிறது.

இந்நாள், ஒரு மருத்துவமனைக்குச் செல்வதாகக் கற்பனை செய்துகொள்வோம். அங்கே ஓர் அறையில் நமக்கு நண்பரோ அல்லது உறவினரோ நோயுற்றுப் படுத்திருக்கிறார். அவர் படுத்திருக்கும் அறைக்குள் நுழைகிறோம். ஆங்கில மொழியில் 'டாக்டர்' எனப்படும் மருத்துவர், நோயுற்றவரைப் பரிசோதித்துக் கொண்டிருக்கிறார். நாம் சற்றுத் தொலைவில் நின்று கவனிக்கிறோம்.

பரிசோதனை முடிந்தபிறகு அருகே நிற்கும் 'நர்ஸ்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் செவிலியரை மருத்துவர் நெருங்கி, அவர் காதில் மட்டும் கேட்கும் படியாக ஏதோ சொல்கிறார். செவிலியர், சில மருந்துப் புட்டிகளையும் மாத்திரைகளையும் மருத்துவரிடம் காட்டுகிறார். பிறகு மருத்துவர் போய் விடுகிறார். செவிலியர், நோயுற்றவரை மெதுவாகத் தூக்கி, அவரது வாயில் ஒரு மாத்திரையைப் போட்டுச் சிறிது தண்ணீரையும் ஊற்றுகிறார்.

எத்தகைய நோய் எனினும் - நோயுற்றவர், மருத்துவர், மருந்து, உடனிருந்து மருந்தளிப்பவர் என்ற அடிப்படையான இந்த நான்கு கூறுகளை உடையதாகவே இருக்கும் மருத்துவ முறை!

அதை இந்தக் காலத்திலே காணுகிறோம். இந்த அடிப்படையான பாகுபாட்டி னைக் கொண்டதுதான் மருத்துவ முறையாகும் என்ற விளக்கத்தை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குறள் தந்திருக்கிறது.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து."

உற்றவன் என்பது நோயுற்றவரையும் தீர்ப்பான் என்பது மருத்துவரையும் மருந்து என்பது நோய்க்கேற்ற மருந்தையும் உழைச்செல்வான் என்பது உதவியாக அருகில் இருப்பவர் என்பதையும் குறிப்பிடுவதோடு - இந்த நான்கு அடிப்படைக் கூறுகளே மருந்து எனப்படும் மருத்துவ முறையென்றும் வகுத்துச் சொல்லுகிறது வள்ளுவம்!

அளவுக்கு மீறி உண்ணாமல் இருந்தாலே பெரும்பாலான நோய்களைத் தடுத்துவிட முடியும் என்பதை, எத்துணை நயமாகவும் தெளிவாகவும் தீர்க்கமாகவும் குறளார் கூறுகிறார் தெரியுமா?

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்."

முதலில் அருந்திய உணவு செரித்துவிட்டதா என்பதை உணர்ந்து, அப்படிச் செரித்து இருந்தால் அதற்குப்பிறகு தக்க அளவு உண்டால்; அத்தகைய வழக்கத்தைக் கடைப் பிடிப்பவரின் உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை என்பது இதன் பொருள்.

நோய் தீர்ப்பதற்கு எந்த வழியைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறாரோ; அந்த வழி சமுதாயத்தில் ஏற்படுகிற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஏற்ற வழியாக அமைந்திருக்கிறது!

கிளர்ச்சிகள், வன்முறைகள், போராட்டங்கள், அடக்குமுறைகள் - இப்படி நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நிலைமைகளை மேலெழுந்தவாரியாக ஆராய்ந்து முடிவெடுப்ப தில் பயனில்லை அல்லவா?

நோயின் அடையாளங்களை வெளித் தோற்றத்தால் மட்டும் கண்டுபிடித்துச் சிகிச்சையளித்துப் பயனில்லை.

நோய் இன்னதென்று ஆராய்ந்து - அந்த நோய்க்கான காரணங்களையும் ஆராய்ந்து - அதனைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து பொருத்தமான சிகிச்சை - அதாவது நோயுற்றவரின் உடலுக்கேற்றவாறு சிகிச்சை அளிக்க வேண்டுமென்கிறார் வள்ளுவர்.

இது உடல் நோய்க்கு மட்டுமல்ல; மனித சமுதாயத்தில் எழுகிற எல்லாவிதப் பிரச்சினைகளுக்கும் பொருந்துகிற குறள் அல்லவா?

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

அதிகாரம் - 95 - மருந்து; பாடல்கள் - 950, 942, 948



பொழுது நோக்கி வாழ்த்திய பூவையொருத்தி, இன்று அந்தப் பொழுது நோக்கி வசைபாடுகிறாள். "வாழி பொழுது" எனப் பல நாள் அவள் வாழ்த்தியது உண்டு. வைகறைத் துயில் எழுந்தவுடன் அவள், இனித்திட்ட இரவைச் சுவைத்திட்ட மகிழ்ச்சியுடன் நிருாடிச் சீராடை பூண்டு, நெற்றிக்குப் பொட்டிட்டு, நல்ல குடும்பமெனும் பல்கலைக்கழகத்துப் பணிகளில் அயராது ஈடுபடுவாள். அதன் பின்னர் மாலைநேரம் எப்போது வருமென்று ஏங்கித் தவிப்பாள். மாலைப் பொழுதுதானே, இரவுப் பொழுதெனும் யானை வரப்போவதை அறிவிக்கும் மணியோசை! வணிகர் வீதியில் அலுவல் முடித்துவிட்டு, நாள்தோறும் அந்த மாலையில்தானே அவள் கண்நிறைந்த கண்ணாளன் வந்திடுவான். அந்திசாயும் நேரம் அடுக்களை வேலையை முடித்து, ஆனந்தமாகக் குளித்து, குங்குமத்தால் பொட்டிட்டு, கூந்தல் நிறைய மலரிட்டு, திண்ணையிலே தூண் ஓரத்திலே நின்று கண்ணை இமைக்காமல் கணவன் வருகைக்காகக் காத்து நிற்கிற பெண்ணைப் படைத்த நாடல்லவா தமிழ்நாடு. அந்தத் தமிழ்நாட்டுத் தங்கச்சிலைதான், மாலையெனும் ஒரு பொழுதை வழங்குகின்ற மொத்தப் பொழுதையும் வாழ்த்துகிறது! "வாழி பொழுது!" என்று அந்த வண்ணத்தமிழ் ஓவியம் வாழ்த்துவதிலேகூட இரு மாறுபட்ட உணர்வுகள்!

கரிய இரவைக் கனிச்சாறு - காதற்சாறு பருகும் இனிய இரவாக்க - முன்னறிவிப் புக் கொடுக்கும் மாலைப்பொழுதை நாள்தோறும் அவள் வாழ்த்தியிருக்கிறாள். ஆனால்,

இன்று அவள் வாழ்த்தமாட்டாள். வாழ்த்துவதுபோல "வாழி பொழுது!" என்று முணுமுணுக்கிறாள். ஆனால் அது வாழ்த்து அல்ல! வாழ்த்து என்றால், அந்த வாசத்தாமரைமுகம் வாடிக்கிடப்பானேன்! மேலுதடு, கீழ்உதட்டை அழுத்துவானேன்! கீழ் உதட்டை அந்த முத்துப்பற்கள் கடிப்பானேன்! அகன்று விரிந்து தொலைதூரம் பாய்ந்து தனது ஆளனின் தோள் தொத்திவரும் அந்த விழிகள், இமைக் கதவுகளுக்குள் மறைந்து கிடப்பானேன்!

இன்றைய மாலை நேரம் அவள் மகிழ்வுடன் வாழ்த்துவதற்குரியதல்ல! காரணம்; அவன் ஊரில் இல்லை! அவன் வருகின்ற அழகைக் காணமுடியாத மாலைப் பொழுதும் தருகின்ற இன்பத்தை நுகரமுடியாத இரவுப் பொழுதும் அவளால் வரவேற்க முடியாதவை! இதயமார வாழ்த்துதற்கு முடியாதவை!

அதனால் அவள், மாலைப்பொழுதை மாலைப்பொழுது என்று ஏற்றுக் கொள்ளவே தயாராக இல்லை! கதிரவன் மேற்றிசையில் ஆழ்ந்து கொண்டிருக் கிறான். வானம், தங்கத்தை உருக்கியது போல் காட்சி தருகிறது. மணம் சுமந்து வரும் தென்றலும் வீசுகிறது. சிறகடித்துப் பறவைகள் மரக்கிளைகளை நோக்கிப் பறக்கின்றன. சிறார், வீதிகளில் விளையாடி மகிழ்கின்றனர். ஆனால், அவள் மட்டும் அதை மாலைப் பொழுதாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

"ஏ, பொழுதே! நீ மாலையல்ல, பிறகென்ன தெரியுமா? மணந்தவரைப் பிரிந்து வாழும் நிலை இன்று எனக்கு ஏற்பட்டிருப்பதால், என்னைப்போல் கணவனைப் பிரிந்து அவன் வருகைக்காகத் துடித்துக் கொண்டிருக்கும் மகளிரின் உயிரை உண்ணக்கூடிய வேற்படையாக நீ விளங்குகிறாய்! அதுதான் உனக்கு மகிழ்ச்சியென்றால் வாழ்ந்துவிட்டுப் போ!"

இப்படிக் கடிந்து கொள்கிறாள் மாலைப்பொழுதினை!

"வாழி பொழுது" என்றும் கூறி, அந்தப் பொழுது தரும் வாட்டத்தையும் காட்டுகின்ற குறள்தான் இது!

"மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது."

அதிகாரம் - 123 -பொழுதுகண்டு இரங்கல்; பாடல் - 1221



தீரை கடலோடி பொருளீட்டிடும் பெருவணிகன் ஒருவன். உதியன் அவன் பெயர். கடலில் மிதந்த கலங்கள், வெளிநாடுகள் பலவற்றுடன் தமிழகத்திற்கு இருந்த வாணிபத் தொடர்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. அந்தக் கலங்கள் சிலவற்றுக்கு உதியன் உரிமையாளன். அவனுக்கோர் நண்பன் உண்டு. பெயர் நன்னன். இருவரும் இணைபிரியாத உயிர்க்குயிரான தோழர்கள் என்று உலகம் பாராட்டியது.

ஒருநாள் உதியன், நண்பன் நன்னனுடன் கடற்கரையில் அமர்ந்து இனிய உரையாடிக் கொண்டிருந்தபொழுது, இடியென ஒரு செய்தியை அவனது ஊழியன் கொண்டு வந்தான். கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பால், பெரும் சூறாவளியால் கலங்கள் அனைத்தும் மூழ்கிவிட்டன. வெளிநாட்டு வாணிபத்துக்கு மிளகு, முத்து, மயில்தோகை, அரிசி போன்ற பொருள்களை ஏற்றிச்சென்ற அந்தக் கலங்கள், நடுக்கடலில் சிதறிச் சின்னாபின்னமாயின.

இச்செய்தி கேட்ட உதியன், நெஞ்சு வலியால் துடித்து மணலில் சாய்ந்தான். நன்னன், அவனை உடனே மருத்துவர் வீட்டுக்கு எடுத்துச் செல்லுமாறு அங்கு வந்த ஊழியனிடம் கூறினான். கடற்கரையில் ஒரு பகுதியில் மருத்துவர் உலவிக்கொண்டிருப்பதாகச் சொல்லிவிட்டு, அவரை அழைத்து வருவதாக ஊழியன்

ஓடினான். நினைவற்ற நிலையில் இருந்த உதியனை உற்றுப்பார்த்தான் நன்னன். அவன் விரல்களில் மின்னிக்கொண்டிருந்த பச்சைக் கல் கணையாழியும் சிகப்புக்கல் கணையாழியும் விலை உயர்ந்தவை என்பது அவனுக்குத் தெரியும். ஊழியன் திரும்புவதற்குள் அந்தக் கணையாழிகளைக் கழற்றிக்கொள்ள நன்னன் துணிந்தான். முயற்சி செய்தான். உதியன் முனகினான். நன்னன் நல்லவனைப் போல் இருந்துவிட்டான்.

அதற்குள் ஊழியன், மருத்துவருடன் அங்கு வந்தான். உதியனை மருத்துவர் இல்லத்திற்குத் தூக்கிச் சென்றனர். சிறிது நேர சிகிச்சைக்குப் பிறகு உதியன் கண் விழித்தான். உயிர் பிழைத்தான் என மருத்துவர் மகிழ்ச்சி தெரிவித்தார். பின்னர் உதியன், நன்னன், ஊழியன் மூவரும் உதியன் இல்லம் திரும்பினர். நன்னன், உதியனைக் கட்டித் தழுவி வாழ்த்திவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான்.

அவன் சென்ற சில நாழிகை கழித்து, அவனுக்கு ஒரு மடல் வந்தது.

"அன்புள்ள நன்னனுக்கு, நீ என்பால் கொண்டுள்ள நட்பு எவ்வளவு போலியானது என்பதை எனது ஊழியன் பலமுறை சொல்லியும் நான் கேட்டதில்லை. என் ஊழியனின் திட்டப்படி, நேற்று மாலை எல்லாம் நடந்தது. கடலில் எனது கலங்கள் மூழ்கி விட்டன என்ற செய்தியும் பொய்! எனக்கு நெஞ்சு நோய் ஏற்பட்டு மயங்கியிருந்ததும் பொய்! என் விலை உயர்ந்த கணையாழிகளை நீ கழற்ற முனைந்தாயே; அதுதான் மெய்!

ஒத்த பண்பில்லாதவருடைய நட்பை எந்த விலை கொடுத்தாயினும் விலக்கிக் கொள்க என்ற குறள் மொழிப்படி, நீ விரும்பிய கணையாழிகளை உனக்கு அனுப்பியதின் வாயிலாக உன் நட்பை இன்று முதல் விலக்கிக் கொள்கிறேன்.

என் நலம் நாடிடும் எனது ஊழியனின் நட்பு, உன் நட்புடன் ஒப்பிடும்போது, நீ மடு! அவன் மலை! அவன் போன்றோர் நட்பையே நான் நாடுகிறேன்.

வணக்கம். உதியன்."

"மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு."

அதிகாரம் - 80 - நட்பாராய்தல்; பாடல் - 800

மருவுக = பழகுக ஒருவுக = விட்டுவிடுக ஈத்தும் = கொடுத்தும்



"நான் உன்னிடம் ஒன்று கேட்கலாமா?"

"கேளுங்களேன்! நான்கூட உங்களிடம் ஒன்று கேட்கவேண்டும்."

"நீ என்ன கேட்க விரும்புகிறாய் என்னிடம்?"

"நீங்கள் என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்பதைப் பொருத்துத்தான் என் கேள்வியிருக்கும்."

"ஓகோ! கேள்விதான் கேட்கப் போகிறாயா?"

"அப்படியானால் நீங்கள் கேட்க எண்ணியது என்னவோ?"

"நானும் கேள்விதான் கேட்க நினைத்தேன்! இருந்தாலும் என்னை ஒரு தயக்கம் தடுத்து நிறுத்துகிறது."

"தயக்கம் உங்களுக்கு மட்டுமா? எனக்கும் கூடத்தான்!"

"முதலில் நான் உன் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா?"

"காவிரி!"

"நல்ல வளமான பெயர்!"

"உங்கள் பெயரை வெளியிடலாமா?"

"தெரிந்துதான் கேட்கிறாய்! இருந்தாலும் சொல்லிவிடுகிறேனே; என் பெயர் கரிகாலன்! காவிரிக்கும் கரிகாலனுக்கும் நீங்காத் தொடர்புண்டல்லவா?"

"ஆமாம்! கருநாடகத்தில் தோன்றி, கரிகாலனைத் தேடிப் பூம்புகார்ப் பட்டினம் வரை வந்தவள் அல்லவா காவிரி! வரலாற்றை மறைக்கமுடியுமா?"

"வரம் கேட்க வந்தேன்! வரலாற்றுச் சிறப்பின் பக்கம் என்னைத் திசை திருப்பிவிடப் பார்க்கிறாய்!"

"வரம் கேட்கத் தவம் இருப்பவளிடம், வரம் கேட்க வருவது விந்தையல்லவா?"

"என்ன வரம் கோரித் தவம் புரிகிறாய்? யாரிடம்?"

"நீங்கள் கேட்க வந்த வரம் யாதோ?"

"இன்னுமா புரியவில்லை! மெருகேற்றிய பொன்னுமா மின்னவில்லை!"

"மின்னுவதெல்லாம் பொன்னல்லவென்று பழமொழியொன்றுண்டே!"

"அழகாகப் பேசுகிறாய்!"

"உங்களைப் பார்த்ததால் ஏற்பட்ட பயன் போலும்!"

"என்னை அந்த அளவுக்கு மதிக்கிறாயா?"

"ஒருவரையொருவர் மதிப்பதுதான் நல்ல பண்பாடு!"

"காவிரி! வெளிப்படையாகவே கேட்டுவிடத் துடிக்கிறேன்!"

"அதற்குத் துடிப்பானேன்! துணிந்து கேளுங்கள்!"

"கேட்டால், நீ - சீறும் புலியாக மாறிவிடமாட்டாயே!"

"கேட்பது உங்கள் உரிமை! கொடுப்பதும் கொடுக்காததும் என் நிலைமை!"

"சந்தேகச் சுழலில் என்னைத் தள்ளிவிடுகிறாயே!"

"அன்புச் சுழலில் அகப்பட்டு நான் தவிப்பது புரியவில்லையா?"

"காவிரி! நான் வேண்டிய வரம் எனக்குக் கிட்டி விட்டது! ஏன் மௌனம்? அடடா எவ்வளவு நாணம்! எங்கே....எங்கே....!"

காதலர் இருவர், தங்கள் உள்ளங்களில் அலைமோதிக்கொண்டிருந்த அன்பினை வெளிப்படுத்தி, ஈருயிர் ஒருயிராகிட இவ்வளவு பேசிய காட்சிதனைக் கண்டோம்! அதுவும் யாருமில்லாத இடத்தில், கிடைத்த தனிமையைப் பயன் படுத்திக்கொண்டு!

ஆனால், வள்ளுவர் கூறுகிறார்; இந்தத் தனியான இடமும் தேவையில்லை - வாய்ச் சொற்களை இவ்வளவு நேரம் செலவழிக்கவும் வேண்டியதில்லை; வாய்ச்

சொற்களின்றியே ஒரு கணத்தில் இரண்டு நெஞ்சங்களைப் பேசவிடுவதற்கு அற்புதமான கருவிகள் உண்டென்று!


அந்த அரிய கருவிகள்தான் எவை?


தடாகத்தில், மகளிர் பலர், தாமரைகளாய்த் தோன்றி நீராடுகின்றனர்! வேறொரு பக்கத்தில் காளையர் நீராடுகின்றனர்! அங்கே ஒரு காவிரியும் கரிகாலனும் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வோம். காவிரியின் பார்வை கரிகாலன் பார்வையில் திடீர்ப் பாய்ச்சல் நடத்துகிறது. கரிகாலன் பார்வையும் அவ்வண்ணமே காவிரியின் பார்வையில் மோதுகிறது. தயங்கித் தடுமாறி, நடுங்கி நாக்குழறி மெல்ல மெல்ல வாயினால் வெளிப்படுத்தப்பட்ட காதல் நெஞ்சினை; அந்தப் பார்வைகள் ஒரே நொடியில் வெளிப்படுத்தி, ஆயிரம் கதைகளைப் பேசி முடித்துவிடுகின்றன.

ஒத்த அன்புடன் கண்களோடு கண்கள் கலந்து ஒன்றுபட்டு விடுமானால்; வாய்ச்சொற்கள் எந்தப் பயனுமில்லையென்கிற அளவுக்குத் தேவையற்றுப் போகின்றன. அதற்கு இதோ குறள்:-

> "கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனும் இல"

அதிகாரம் - 110 - குறிப்பறிதல்; பாடல் - 1100





ஏந்திய கொள்கையார் அவர் - ஆம்! உயர்ந்த கோட்பாடுகளை உலக மக்களுக்கு எடுத்துக்கூறி, அவர்தம் உள்ளத்திலே அந்தக் கோட்பாடுகளைப் பதிய வைத்திடப் பணியாற்றினார். மனிதரில் நீயுமோர் மனிதன் - மண் அன்று! மனித சமத்துவம் இல்லாத நாடு, விலங்குகள் வாழும் காட்டிலும் கேடுடையதாகும்! மனிதனை மனிதன் சுரண்டுவது - மனிதனை மனிதன் ஏமாற்றுவது - பகை நெஞ்சு டன் எதனையும் பார்ப்பது - பழி வாங்கும் உணர்வுடன் அலைவது - இவை மனி தப் பண்பாடுகளே அல்ல! அறிவுச் சுடர்விளக்கை சகதியில் வீசிவிட்டு, மூட நம் பிக்கை இருளில் முட்டிக்கொள்வது பைத்தியக்காரத்தனமாகும்! தன்னலத்தை எள் முனையளவு கருதாமல், தன்மானத்தை உயிரெனப் போற்றிடும் உறுதி வாய்ந்த நெஞ்சம் தேவை!

இவற்றை அவர் அழுத்தம் திருத்தமாக அறிவுறுத்தி, அவரையொத்தக் கொள்கையுடைய அறிவுப் படையொன்றையே திரட்டினார்.

அந்தப் படையின் எண்ணிக்கைப் பெருகிற்று! அவரது கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளாத - அல்லது உணராத சிலரும் அந்த அணியில் கலந்து கொண்டனர்!

அவரது கொள்கைகளே நாட்டில் செல்வாக்குப் பெறக்கூடியவையென்று கணக்கிட்டுப் பார்த்து, அந்த ஆதாயத்தைத் தேடுவதற்காக அந்த அணியில் கலந்துவிட்டோரும் உண்டு!

அந்தச் சிலரின் குறிக்கோள், அந்தக் கொள்கைகளை வைத்துத் தங்களது சுயநல மாளிகையைக் கட்டிக்கொள்வதுதான்!

அதில் அவர்கள் வெற்றியும் பெற்று, அவர்களில் ஒருவனை ஆட்சிக் கட்டிலில் அரசனாகவும் ஏற்றி வைத்தனர்.

கொள்கையாளர்கள் குழுவில் இருந்தவன்; கொற்றவனாகிவிட்டானே யென்று கொள்கை அணியினர், மகிழ்ந்து கொண்டனர்!

அரசின் ஆதரவும் தமது கொள்கைகள் விரிந்து பரந்து மக்களை விழிப்புறச் செய்யுமென எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், அந்த அரசனோ; தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ள, அவன் ஏற்றுக்கொண்டதாகக் கூறிக் கொண்டிருந்த கொள்கைகளைக் காற்றிலே பறக்க விட்டான்.

அவன், அந்தக் கொள்கைகளை வளர்த்திட ஒரு சொட்டுக் குருதி சிந்தியவனல்ல! களம் கண்டவனல்ல! கொள்கையின் முழு வடிவத்தையும் அறியாதவனுங்கூட!

கொள்கைகள் குழிதோண்டிப் புதைக்கப்படுவது கண்டனர், அந்தக் கொள்கை களுக்காகக் குன்றேறி முழங்கியோர்! அந்தக் கொள்கைகளுக்காக உயிர் தரவும் முன் வந்தோர்! அந்தக் கொள்கைகளுக்காக ஆயிரம் தழும்புகளை உடலில் ஏற்றோர்!

குடை நிழலில் இருந்தவனிடம் படை பலம் உண்டு! கொள்கையைப் படைக்கலனாகக் கொண்டோரிடம் அவனது படை வரிசை என் செய்யும்?

வெட்டிச் சாய்க்கும்! சுட்டுத்தள்ளும்! கொள்கை வீரர்களின் உறுதியைக் குலைக்குமோ?

எழுந்தனர், அவர்கள் எரிமலைகள் போலே!

நடந்தனர், அவர்கள் புயல் காற்று போலே!


கொள்கைப்படை முன்னே, அரசனின் கோழைப்படை நிற்கவில்லை! அவை குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படையென பலவகைப் படையாயினும் - கொள்கை மறவர் திரட்டிய மக்கள் படையின் முன்னே தோற்றோடிப்போயின!

கொள்கையற்ற அரசு, குடைசாய்ந்து போயிற்று! அதைத்தான் குறள் இப்படிக் கூறுகிறது! எப்படி?

“ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்”

“உயர்ந்த கொள்கையுடைய உறுதியாளர்கள் சீற்றம் கொண்டால், அரசன் இடையிலேயே அரசுப் பொறுப்பை இழந்து கெடுவான் என்பது பொருளாகும்.

அதிகாரம் - 90 - பெரியாரைப் பிழையாமை; பாடல் - 899



தேசத் தந்தையின் தேசிய மகன்

அறிவில் சிகரமாய் - ஆற்றலில் சிங்கமாய் - அன்பின் அருவியாய் - அடிமைத் தளை அறுக்கும் வீர உருவமாய் அவர் இருந்தார். இளமைப் பொலிவு மிகுந்த பருவத்தில், இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குக் களம் பல கண்டார். பண்டித நேரு, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் போன்றவர்களின் வரிசையில் இடம்பெற்ற தளநாயகர் அவர், சிறைக் காவல் மீறி தப்பித்து வெளியேறியதும் உண்டு. ஜெயபிரகாஷ் நாராயண் என்பது அந்தப் புகழ் பெற்ற மாவீரரின் பெயர். அந்தத் தீரமிக்க வாலிபரைத் திருமணம் செய்துகொள்ளுமாறு காந்தியடிகளே வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். முதலில் மறுத்தவர், முடிவாக ஒரு நிபந்தனையைக் கூறி இறுதியாகத் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தார். நாடு விடுதலை பெறும்வரையில் கணவனும் மனைவியும் உடல் உறவு இல்லாமலே வாழ்வோம் என்றார். அவரது நிபந்தனையை ஏற்றுக்கொண்டு, பிரபாவதி எனும் பெண்மணி மணம் புரிந்துகொண்டார்.

வசந்தகாலமெனும் வாலிபம் விடைபெற்றுக்கொள்கிற வரையிலே இந்தியாவுக்குச் சுதந்திரமும் வரவில்லை. இருவரிடையே உடலுறவும் ஏற்படவில்லை.

இரு உள்ளங்களும் இந்திய நாட்டு விடுதலைக்காக ஏங்கித் தவித்தன! இரு உள்ளங்களும் அந்த விடுதலைப் போர் வெற்றிக்காக உழைத்தன!

பிரபாவதி அம்மையார் கற்பரசியாகத் தன்னையும் காத்துக்கொண்டு, தாய்நாடு மீட்கும் களத்தில் நின்ற தன் கணவனுக்கும் உறுதுணையாக இருந்து அவரையும் காத்துக்கொண்டு, அளித்த வாக்கில் சற்றும் உறுதிநிலை தவறாமல் வாழ்ந்து, தகுதி வாய்ந்த புகழுக்கும் உரியவராகத் திகழ்ந்து, ஜெயப்பிரகாஷ் அவர்களுக்குப் பெருமை சேர்த்தார்.

தனக்கு வாய்த்த உறுதிநிறைந்த பெண்மணியின் துணையினால், ஜெயப்பிரகாஷ் எத்தனையோ இன்னல்களையும் கொடுமைகளையும் புன்னகையுடன் தாங்கிக் கொள்ள முடிந்தது.

இயற்கை உணர்வை அடக்கி - அல்ல; அல்ல. அப்படியொரு உணர்வே அவர்களை அணுக முடியாத நிலைபெற்று நாட்டுப்பற்றில் ஆழ்ந்திருந்த அந்த வீரரையும் வீராங்கனையையும் எண்ணும்போதெல்லாம் இளைய தலைமுறை யினர் தியாகச் சுடர்களாக மாறிடுவர் என்பது திண்ணமன்றோ!


"பெண் யார்? அவள் எப்படி யிருக்கவேண்டும்?"

வள்ளுவர் வகுத்த அந்த இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்த பெண்ணன்றோ; பிரபாவதி தேவியார்!

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

அதிகாரம் - 6 - வாழ்க்கைத் துணைநலம்; பாடல் - 56





இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே "பிறப்பொக்கும்" என்று வள்ளுவர் அழுத்தம் திருத்தமாகக் கூறவேண்டியிருந்திருக்கிறது. இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில், சமுதாயம் நூற்றுக்கணக்கான - ஆயிரக்கணக்கான சாதிப்பிரிவு களால் சிதறுண்டு கிடப்பது போலவே, அன்றும் வள்ளுவர் காலத்திலும் பிறப்பால் உயர்வு தாழ்வு மனப்பான்மை பாராட்டப் பட்டிருக்கிறது. அந்த வேதனையைத் தாங்க முடியாமல்தான் வள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று குறள் தீட்டியுள்ளார்.

எல்லா உயிர்க்கும் என்று வள்ளுவர் குறித்தவுடன், விலங்கினங்களும் பறவை யினங்களும் ஊர்ந்து சென்றிடும் புழு பூச்சி இனங்களும் - அவரைப் பார்த்துக் கேள்விகளை அடுக்கின.

"எங்களுக்குள் சாதிப் பூசல்களே என்றைக்கும் இருந்ததில்லை. சாதி உணர்வுகள் தலைதூக்கி அதன் காரணமாக நாங்கள் அமளிகளை உருவாக்கியதே இல்லை! அங்ஙனமிருக்க 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று எம்மையும் சேர்த்து இழிவுபடுத்துதல் முறைதானோ?"

இவ்வாறு மிருகங்கள் கேட்டன! பறவைகள் கேட்டன! ஊர்வன கேட்டன!

"உயிர்கள் என்று பொதுவாகச் சொன்னதால் எல்லா உயிர்களையும் குறிப்பிடு மெனினும் - உங்களுக்கு ஆறாவது அறிவான பகுத்தறிவு இல்லாத காரணத்தால் உங்களிடையே சாதிப்பூசல்கள் எழுவது இல்லை! பகுத்தறிவுள்ளவர்களாகக் கூறிக் கொள்ளும் மனிதர்களிடையேதான் பல்லாயிரம் சாதிகள்! சண்டைகள்! உயர்வு தாழ்வு உணர்வுகள்! குறளைப் படிக்கக்கூடியவர்களுக்காகத்தான் இதனை எழுதி னேன். நீங்கள் படிக்க இயலாதவர்கள். உங்களுக்காக, இதனை நான் எதற்காக எழுதப்போகிறேன்! எனவே நான் 'உயிர்கள்' என்று குறிப்பிட்டிருப்பது இந்தக் குறளைப் பொறுத்தவரையில் மனிதர்களை எண்ணித்தான்!"

வள்ளுவர் விளக்கமளித்துவிட்டு, வேறு வழியாகப் பயணம் தொடர்ந்தார். அங்கே இருவர், விவாதித்துக் கொண்டிருந்தனர்.

ஒருவர் : பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென்று குறள் கூறினாலும்கூட அவர வர் செய்கின்ற தொழில்களின் வேற்றுமையால், சிறப்பு இயல்புகள் மாறுகின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறது. அதனால் இசைவாணனாகிய நான் ஆசிரியத் தொழில் புரியும் உம்மைவிடச் சிறப்புடையவன்.

மற்றவர் : இல்லை! மறுக்கிறேன்! ஆசிரியர் தொழிலே சிறந்தது! அதற்கு ஒப்பிடக்கூடியதுகூட அல்ல உமது இசைத்தொழில்!

இருவரின் உரையாடல் சூடேறுவதற்கு முன்பு, வள்ளுவர் குறுக்கிடுகிறார்.

"சொற்போரை நிறுத்திடுக! நான் தொழிலுக்குத்தொழில் உயர்வு தாழ்வு இருப்பதாகவோ - சிறப்பு இயல்புகள் மாறுவதாகவோ - கூறிடவில்லை! ஒவ்வொரு தொழிலுமே அதனைச் செய்வோரைப் பொறுத்து வேறுபடுகின்றன. இதோ உங்களையே எடுத்துக் கொள்வோம்! ஓர் இசைவாணர், பாடினாலே ஊரார் காது கொடுத்துக் கேட்க மறுத்து வேறு அலுவல்களைக் கவனிப்பர்! மற்றொரு இசைவாணரின் இனிய இசையை விடிய விடியக் கேட்டு மகிழ்வர்! அது போலத் தான் ஓர் ஆசிரியர் மாணவரிடையே கேலிப் பொருளாக விளங்குவார்! இன்னோர் ஆசிரியரோ மாணவரால் மதிக்கத்தக்க மாண்புடையவராகத் திகழ்வார்! ஆகையால் தொழிலுக்குத் தொழில் வேறுபாடுகாண நான் விழைந்திடவில்லை. செய்யுந் தொழில் எதுவாயினும் அதிலே எய்துகிற சிறப்புகள் வேறுபடுகின்றன; செய்பவரின் அறிவாற்றலைப் பொறுத்து! இப்படித்தான் என் கருத்துக்கு விளக்கம் பெற வேண்டுமேயல்லாமல் நீங்கள் மோதிக்கொள்வது முறையல்ல."

குறள் தந்த கோமானின் விளக்கவுரை கேட்டு, இசைவாணரும் ஆசிரியரும் மகிழ்ந்து வணங்கினர்!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

அதிகாரம் - 98 - பெருமை; பாடல் - 972



நீல வானத்தில் நிலவுத் தேரினை நட்சத்திரங்கள் வடம் பிடித்து நிதானமாக இழுத்துக்கொண்டிருக்கின்றன!

அருவித் தாவணியால் மலைமேடுகளை மறைக்க முடியாமல் நிலப்பெண் ணாள் தழைக்காடுகளில் தன் முகத்தைப் புதைத்துக்கொள்கிறாள், வெட்கத்தால்!

இயற்கையின் அற்புதத்தைக் கற்பனைத் தேனெடுத்து எழுதிக் காட்டி, அதற்குப் பரிசாகக் காதலியின் இதழ்த்தேனைப் பெற்றுக்கொள்கிறான், காதலன்.

மலர்களால் கோலம் வரையப்பட்ட அந்தச் சோலையில், எங்களைவிட எழிற்கோலமோ இதுவென அறைகூவல் விடுத்து, ஆரத்தழுவிக் கிடக்கின்றனர் கண்ணொத்த காதலனும் - கண்மணியாம் காதலியும்!

அவள் சுருண்ட கூந்தலைக் கோதுகிறான்; அவளோ அவனது அகன்ற மார்பினில் சாய்கிறாள்! அவள் விழியழகில் மயங்கிடும் வண்டு அவன்! அவளோ அவன் இதழ் நடுவில் தன் இதழை இணைத்திடத் துடிப்பவள்! உச்சி முதல் உள்ளங்கால் வரையில் விரல்களால் வருடி - அந்த இன்பத்தில் அவள் மெய்மறந்து கிடப்பதைச் சுவைப்பது தான் அவனுக்குச் சொர்க்கம்! "சொர்க்கமென ஒன்றிருந்தால் இருக்கட்டும்;

அப்படியொன்றில்லையேல் அதை நாம் இங்கே படைத்திடுவோம் அத்தான்" என்று அவன் மேனி முழுதும் அவள் உதடுகளை மேயவிடுவாள்!

அந்தக் காதல் புறாக்களின் கலவியரங்கம்தான் அன்றைய மலர்ச் சோலையின் சிறப்புக் காட்சி!

"தந்தத்தால் ஆனதோ இந்த உடல் கண்ணே!"

"உங்களுக்குத் தந்திடத்தான் பெற்றார்கள் என்னை; கண்ணா!"

"மாங்கனிகள் பறிக்கலாமா?"

"மரத்தில் வைத்தே சுவைக்கலாமே!"

கொஞ்சுமொழி! கோடியின்பம்! சோலையெலாம் மஞ்சமாமே! இடை அணைத்து இடையிலோர் இழை நூலும் புகவிடாமல் இன்பத்தின் உச்சிக்குச் சென்றபோது, "என் பிரியமுள்ளவளே" என்றான்! "பிரியமாட்டீர்களே எப்போதும்!" என்றாள் அவள்!

"இப்பிறவியில் யாம் பிரியவே மாட்டோம்!"

என்று மேலும் கட்டிக்கொண்டான்! அவளோ, கண்ணீர் வடித்தாள்!

"பிறப்புக்கள் பல உண்டு" என நம்பும் அறியாமை, அவளுக்கு உண்டு! அதனாலே அவள் அழுதாள்! கட்டிக் கிடந்தவன் கன்னத்தில் நீர் ஊர்ந்திடவே, திடுக்கிட்டுக் கேட்டான்; "தினைமாவு தின்னும்போது வினையென்ன வந்ததென்று!"

"எத்தனையோ பிறப்புக்கள் உண்டே! இப்பிறப்பில் மட்டும் பிரியமாட்டேன் என்கின்றீரே!"

எனக் கூறி அழுதாள்! எழுந்தாள்! காற்றில் பறந்து நீரூற்றுக்கருகே கிடந்த ஆடைகளை எடுத்து உடுத்திக்கொள்ள ஆயத்தமானாள்! அவன்; அவளுக்காக - மறுபிறப்புகளை ஒப்புக்கொண்டு எப்பிறப்பிலும் உன்னைப் பிரியமாட்டேன் என்று கூறியபிறகே, ஊடல் தவிர்த்துக் கூடலுக்கு வீணையானாள்!

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்."

அதிகாரம் - 132 - புலவி நுணுக்கம்; பாடல் - 1315





தோல் சுருங்கிய மாம்பழம் போல அந்தக் கிழவர், ஊர்க் கோடியில் உள்ள மேடையில் உட்கார்ந்திருந்தார். இளஞாயிறு போல் முகம் படைத்த சிறார் சிலர் அவரைச் சுற்றிப் புன்னகைப் பொலிவுடன் நின்றிருந்தனர். அவர்களுடைய கரங் களில் நெற்கதிர் - மாங்கனி - மலர்க்கொத்து - இப்படிப் பல பொருள்கள் இருந்தன.

"தாத்தா! இந்த நெற்பயிர் எந்த நிலத்தில் விளைந்தது சொல்லுங்கள்!" - ஒரு சிறுவன் கேட்டான். கிழவர் அதை வாங்கி உற்றுப் பார்த்துவிட்டுச் சொன்னார்; "கொழு கொழு என்று பயிரும் - கொத்துக் கொத்தாகக் கதிரும் இருப்பதால் இது; ஆற்று வண்டல் படிந்திடும் நிலத்தில்தான் விளைந்திருக்க வேண்டும்." என்று!

"தாத்தா! இந்த மாங்கனி தரும் மாமரம் எங்கேயிருக்கிறது?"

இன்னொரு சிறுவன் கேட்டான்.

"அடேடே! ஒட்டுமாங்கனி ஆயிற்றே இது! இது நேர்த்தியாகக் காய்க்கக் கூடிய மண்வாகு சேலம் பகுதியில்தான் இருக்கிறது."

கிழவரின் பதில் கேட்டுத் தலையசைத்துக் கொண்ட சிறுவர்கள்; ஒரு மலர்க் கொத்தை அவரிடம் கொடுத்து,

"இது எங்கே பூத்தது?"

எனக் கேட்டனர்.

"இதுவா? இந்த மலர்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன! ஆனால், கொஞ்சம் கூட மணம் இல்லை பார்த்தீர்களா? இவைகள் குளிர்ப்பகுதிகளான மலைப்பகுதிகளில்தான் மலர்ந்திருக்க வேண்டும்! குளிர் பாயும் நிலத்தில் பூக்களுக்கு மணம் இருப்பதில்லை!"

இப்படி விளக்கமளித்தார் கிழவர். அதுவரையில் அந்த மேடையில் வேறொரு மூலையில் சுருட்டுப் புகைத்தவாறு உட்கார்ந்திருந்த ஒரு தடித்த உருவத்தினன்; கிழவரை நோக்கி நடந்து வந்தவாறு, "அடே கிழவா! நீ என்னடா பெரிய ஆராய்ச்சி மேதையோ?" எனக் கேட்டுக் கலகலவெனச் சிரித்தான்.

கிழவர்; தன்னைச் சுற்றியுள்ள சிறுவர்களைப் பார்த்து, "இந்த மனிதர் நற்குடியில் பிறந்தவரல்ல! இழிவான ஒரு குடியில் பிறந்தவர்!" என்றார். உடனே அந்தத் தடிமனிதன், கிழவரை அடிப்பதற்குப் பாய்ந்தான். ஆனால், அந்தச் சிறுவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு எதிர்த்து விரட்டிவிட்டனர்! அவர்களில் ஒரு சிறுவன் கிழவரைப் பார்த்து, "தாத்தா! அவன் கீழான குடியில் பிறந்தவன் என்று எப்படி அவ்வளவு விரைவில் கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டான்.


"தம்பீ! இதோ இந்த நெற்கதிரும் மாங்கனியும் மலர்க்கொத்தும் எந்த நிலத்தில் விளைந்தவை என்று இவைகளைப் பார்த்தே கண்டுபிடிக்க முடிகிறதல்லவா? அதைப் போலவே ஒருவன் எப்படிப்பட்ட குடியில் உதித்தவன் என்பதை அவனது வாய்ச்சொற்கள் வாயிலாகவே கண்டுபிடித்துவிட முடியும்."


கிழவரின் விளக்கத்திற்கு இதோ; இந்தக் குறள்.

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்"

அதிகாரம் - 96 - குடிமை; பாடல் - 959

கால் = பயிரின் முளைப்பு





இன்னா செய்யும் இம்மன்னவன் இனியும் ஆட்சியில் இருத்தலாகாதென்று எதிர்நாட்டார் பலர் கூட்டாகச் சேர்ந்து, பெரும் படைகொண்டு வளைத்தனர். வளைத்துச் சூழ்ந்தவர்களோ சிறு சிறு கோட்டங்களுக்கு வேந்தர்கள்! சிற்றரசர் நிலையில் இருந்தவர்கள்! எனினும் சிறுதுளி பெரு வெள்ளமென அவர்தம் படைப் பெருக்கம், பேரரசின் கோட்டையைத் தாக்கியது. திடீர்த்தாக்குதலால் நிலை குலைந்த பேரரசன், கோட்டையைப் பகைவர் வசம் விடுத்துத் தனது வீரர்கள் சிலருடனும் ஓரிரு தளபதிகளுடனும் தப்பிப்பிழைத்து ஓடிவிட்டான்.

மலைகள் மொய்த்துக் காடுபடர்ந்த பள்ளத்தாக்குப் பகுதிக் குகையொன்றில் பேரரசனின் குடும்பமும் அவனது தளநாயகர்களும் வீரர்களும் மறைந்து வாழ்ந் தனர். இழந்த நாட்டை மீட்க வேண்டும்; பறிக்கப்பட்ட அரசை மீண்டும் கைப்பற்ற வேண்டும் - இந்த எண்ணக் கனவுகளால் பேரரசனின் இதயம் கனத்துப்போனது.

அவனை வீழ்த்தி அரசைக் கைக்கொண்டவர்களோ - அவர்களுக்குள் ஒற்றுமையின்றி அடிக்கடி ஒருவருக்கொருவர் போர் தொடுத்த வண்ண மிருந்தனர். எந்நேரமும் "போர்! போர்!" என்ற கூச்சலால் குடிமக்கள் நிம்மதி யிழந்து தவித்தனர். அந்நிலையை மாற்றிடவேண்டுமெனத் திடமனம்கொண்டு குடிமக்கள், தங்களுக்கோர் தலைவனைத் தேர்ந்தெடுத்தனர்.

அந்தத் தலைவன், அடவியில் ஒளிந்து வாழும் பேரரசனைப்போய்ச் சந்தித்தான். அவனைப் பேரரசன் மிக்க அன்புடன் வரவேற்று, ஏதோ ஒரு சூழ்நிலையில் மக்களைப்பற்றிக் கவலைப்படாமல் ஆட்சி நடத்தியதற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டான். பேரரசனைப் பார்த்து, அந்தத் தலைவன் சொன்னான்.

"அரசே! அருகிலிருந்தோர் போட்ட தூபத்தில் அநியாயங்களுக்கு ஆதரவு அளித்தீர்! நச்சுமனத்தினர் 'அறிவுரை' கேட்டு நல்லோர் பலரை பகைவராக்கிக் கொண்டீர்! அதன் விளைவாகக் கொடி இழந்தீர்! கோல் இழந்தீர்! ஆனால், உம்மை வீழ்த்தியவர்கள் அவர்களுக்குள் சீறிப்பாய்ந்து ஒருவரையொருவர் அழித்திட முனைகின்றனரேயன்றி, மக்கள் நலம் காத்திடத் தயாராக இல்லை!"

தலைவனின் உரைகேட்டுத் தலைகுனிந்திருந்த பேரரசன்; அவனது இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு -

"நண்பனே! உன் உறுதியை நானறிவேன். நட்புக்கொண்டாலும் பகை கொண்டாலும் ஒரு நிலையில் நிற்பவன் நீ! என்னை நம்பு! மக்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளுக்காக நான் வருந்துகிறேன். மீண்டும் மக்களின் சார்பில் உன் துணை இருந்தால், இழந்த அரசைப்பெற்று என்றென்றும் நன்றி மறவாது உன் நட்பைப்போற்றி, மக்களையும் காப்பாற்றுவேன்."

என்று உருக்கமாகக் கூறினான். தலைவனின் மனம் உருகியது. பேரரசனுக்குத் துணை நிற்பதாகக் கூறி, அதனை உடனடியாக நாட்டு மக்களிடமும் அறிவித்தான்.

குடிமக்கள் தன் பக்கமிருந்ததால், தனது நாட்டைப் பிடித்துக்கொண்டவர்கள் மீது படையெடுத்துச் செல்வது பேரரசனுக்கு எளிதாயிற்று! அதற்குள் சிற்றரசர்களும் ஒற்றுமையின்றிச் சிதறிவிட்டனர். நடைபெற்ற பெரும் போரில், பேரரசன் வெற்றிமாலை சூடினான்.

ஆனால், அந்த வெற்றிக்கு அடித்தளம் அமைத்துக்கொடுத்தானே - மலைக் குகையில் மறைந்து கிடந்தபோது வலியவந்து வலிமை சேர்த்துக் கொடுத்தானே - அந்த மக்கள் தலைவனுக்கு அளித்த வாக்குறுதியைப் பேரரசன் மதிக்க மறந்துவிட்டான். அதனால் ஏமாற்றமடைந்த அந்தத் தலைவனைப் பார்த்து ஒரு சிற்றரசன் ஏகடியமாகவும் இரக்க சிந்தையோடும் கேட்டான்:

"இப்போதாவது தெளிவு பிறந்ததா? உண்மை புரிந்ததா?" என்று!


"என் செய்வது! உங்களுக்குள் ஒற்றுமையில்லை! அதனால் வந்த வினை!" என விடையளித்த தலைவன், மற்றொரு விளக்கமும் கூறினான்.

"உள்ளத்தில் கோணல் இல்லாத உறுதி வாய்ந்தவர்களுக்குத்தான் சொல்லிலும் கோணல் இல்லாமல் இருக்கும். அதன் பெயரே நடுவு நிலைமை என்ற அறநெறியாகுமென வள்ளுவர் கூறியுள்ளார்."

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்"

அதிகாரம் - 12 - நடுவு நிலைமை; பாடல் - 119

செப்பம்=நடுவுநிலைமை கோட்டம்=கோணுதல் ஒருதலையா=உறுதியாக



குதிரைகளை வளர்த்து அவற்றைப் பழக்குகின்ற தொழிலில் ஈடுபாடு கொண்ட ஒருவர்! குட்டியிலிருந்தே குதிரைகளை முறைப்படி உணவு தந்தும் உடல் வலிவு பெறச் செய்தும் பட்டாளத்திற்கானாலும் பந்தயத்திற்கானாலும் வளர்ப்பதில் திறமையாளர் என்று பெயர் பெற்ற காரணத்தால், அத்தொழிலில் பெரும் செல்வமும் புகழும் ஈட்டுகின்ற வாய்ப்பினைப் பெற்றார். குதிரை வகைகளைப்பற்றிய நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நிரம்பப் படித்திருந்தார். அவரால் வளர்க்கப்பட்ட குதிரைகள், வாட்டசாட்டமாகவும் வலிவு கொண்டவைகளாகவும் வெற்றிகளை எளிதில் தரக்கூடியவைகளாகவும் விளங்கின. அவரது நீண்டகாலத்தொழில் நுட்பத்தையும் குதிரை வளர்ப்புப் பற்றிப்பல நூல்களில் இருந்து அவரால் எடுத்துத் தொகுக்கப்பெற்ற அழகிய நூல் ஒன்றையும் பாராட்டி விழா நடத்திட அவரது ஆதரவாளர்கள் விரும்பினர். எல்லாவகையிலும் விழா சிறப்புற எண்ணிப் பெருந்தலைவர்களையும் பல்துறை அறிஞர் பெருமக்களையும் அழைத்திருந்தனர்.

விழாவில் அவருக்கு "புரவிப் புரவலர்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. வந்திருந்த மேதைகள், அவரை வாழ்த்திப்போற்றினர். இறுதியாக "புரவிப்புரவலர்" நன்றி கூற எழுந்தார். குதிரை வளர்ப்பு மட்டுமல்லாமல், தனக்கு எல்லாமே தெரியும் என்பதை

அந்த அவையில் காட்டிக்கொள்ள வேண்டும் என ஒரு திடீர் ஆசை அவருக்குத் தோன்றியது! உரையாற்றத் தொடங்கினார்! அவரது உரை வருமாறு:-

"குதிரைகள் - இன்று நேற்றல்ல; நமது நாட்டில் வரலாற்றுக் காலந்தொட்டு வீரமிக்க ஒரு பரம்பரையை உருவாக்கியிருக்கின்றன! கரிகாலன் என்ற சோழ மன்னன், கனக - விஜயர் என்ற மன்னர்களைத் தோற்கடிக்கத் தனது குதிரைப் படையைக் கொண்டுசென்றான். அவர்களை வெற்றிகண்டு விந்திய மலையில் கல் எடுத்து, அதை அவர்கள் தலையில் வைத்து மதுரைக்குக் கொண்டுவந்து மாதவிக்குச் சிலை வைத்தான். அந்த மாபெரும் வெற்றிக்குப் பயன்பட்டவை குதிரைகள் அல்லவா? அதைப்போல பல்லவ மன்னன் இலங்கைமீது போர் தொடுத்து, அங்கிருந்து பல்லாயிரம் கைதிகளைக் கொண்டுவந்து வைகை நதியிலே கல்லணை கட்டுவதற்குப் பயன்பட்டது குதிரைப்படையேதான்!"

புரவிப் புரவலரின் இந்த உரையைக் கேட்டு, விழா மேடையில் இருந்தோர் வெடிக்கும் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியாமல் தவித்தனர்! என்ன இருந்தாலும் விழாவின் கதாநாயகராயிற்றே; நேருக்கு நேராக அவர் பேச்சைக் குறை கூறமுடியுமா? அதனால் எப்போது விழா முடியும் என்று காத்திருந்துவிட்டு, முடிந்ததும் பெருமூச்சு விட்டவாறு கலைந்து சென்றனர்.

அப்படிச் செல்லும்போதே அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

"வரலாற்றையே புரட்டிப் போட்டுக் குழப்பிவிட்டாரே; மனிதன்!"

"நிறையப் படிப்பவர் என்பார்களே இவரைப் பற்றி! இவரது தகுதி இப்போதல்லவா புரிகிறது."

"சும்மாவா சொன்னார் திருவள்ளுவர்!"

"என்ன சொன்னார்?"

"அறிவில்லாதவர்கள்; தாங்கள் கற்றிராதவைகளைப் பற்றிப் பேசிக் கற்றவர்களைப் போலக் காட்டிக் கொள்ளும்போது - அவர்கள் ஏற்கெனவே கற்றிருப்பதாகச் சொல்கிறார்களே; அதைக்கூடக் குறைவறக்கற்றார்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் என்று வள்ளுவர் குறள் தீட்டியுள்ளார்."

"இவரைப் போன்ற மனிதர்களுக்காகவே அப்படி எழுதியிருப்பார்."

இவ்வாறு பேசிக்கொண்டே விழாவுக்கு வந்திருந்த பெருமக்கள் மண்டபத்திலிருந்து வெளியேறினர்.

"கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்"

அதிகாரம் - 85 - புல்லறிவாண்மை; பாடல் - 845



தென்பாண்டி மறவன்

பளபளப்பான உடலைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்தான். தன்னை வளைத்துத் தழுவி நெளிந்திடும்போது மேனி முழுதும் புல்லரிக்கப் புளகாங்கித முற்றான். குழைந்து குழைந்து ஆடிடும்போது குதூகலத்துடன் குதித்தான். "பாலருந்தடி என் கண்ணே" என்று பால் கிண்ணத்தை நீட்டுவான். "என் தங்கமல்ல; உனக்காக ஒரு தாலாட்டே இயற்றியிருக்கிறேன் - அதைக் கேட்டுக் கொண்டே என் மடியில் உறங்கிடுக" என்று தலைமுதல் வால்வரையில் தடவிக் கொடுப்பான்.

அவ்வளவு அன்பாக அந்தப் பாம்பை வளர்த்தான் அவன்! அதுவும் அவனோடு அந்தக் குடிலிலேயே வசித்தது. குடிலோரமுள்ள குட்டையில் இருந்து தவளைகள் கரைக்குத் தாவி, அந்தப் பாம்பின் வயிற்றுக்குள் போய்விடும். சில நேரங்களில் எலி வேட்டையும் நடத்தும் அந்தப் பாம்பு! ஓய்வு கொள்வது அந்தக் குடில்தான்! உறங்குவது அவன் படுக்கையிலேதான், உடலைச் சுருட்டிக் கொண்டு!

"மான் வளர்ப்பர் - மாடப்புறா வளர்ப்பர் - கிள்ளை வளர்ப்பர் - கீரிப் பிள்ளை வளர்ப்பர் - நாய் வளர்ப்பர் - பூனை வளர்ப்பர் - ஆனால், யாரும் நான் வளர்ப்பது போலப் பாம்பு வளர்த்திட மாட்டார்! அப்படியே வளர்த்தாலும் அதற்கெனப் பெட்டி

செய்து, நச்சுப்பல்லை அகற்றிவிட்டு, நச்சுப் பையையும் நீக்கிவிட்டுத்தான் வளர்ப்பார்கள் - அந்தப் பெட்டிக்குள் போட்டு மூடி! அதுவும் பாம்பை வைத்துத் தொழில் நடத்துவதற்காக! ஆனால், நானோ பாம்புடன் நட்புக் கொண்டிருக்கிறேன். பாசத்துடன் பழகுகிறேன். ஒன்றாகப் படுத்துறங்குகிறேன்."

இப்படிப் பெருமை பேசுவது அவனுக்கு வாடிக்கை! வழக்கம்போல் பணிகளை முடித்துவிட்டுக் குடிலுக்குத் திரும்பியவன், பாம்புத் தோழனுடன் கொஞ்சினான்; குலவினான். பின்னர், அதை அருகில் படுக்க வைத்துக்கொண்டு உறங்கினான். பாம்பும் நன்கு உறங்கியது.

நள்ளிரவு! அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தவன் புரண்டு படுத்தான். அப்படிப் படுத்தபோது, அவன் கை வேகமாக அவனது தோழனின் தலையின் மீது விழுந்துவிட்டது. மின்னல் வேகத்தில் "நாக நண்பன்" சீறிக்கொண்டு படமெடுத்தான் - சீறிய வேகத்தில் அவன் கழுத்தில் நச்சுப்பல் நன்கு அழுந்திவிட்டது - மிக அருகிலிருந்த மூளைக்கும் இதயத்திற்கும் நஞ்சின் வாய்க்கால் பெருகியோடியது! நட்பு, விஷக்கொடி கட்டிப் பறந்தது - நண்பனின் உயிரும் பறந்தது! குட்டைக் கரையில் ஒரு தவளையின் அழைப்பு; அதையேற்றிட அந்தப் பாம்பு, அமைதியாக ஊர்ந்து சென்றது!

மனப்பொருத்தம் இல்லாதவர்களுடன் கூடி வாழும் வாழ்க்கையானது; ஒரு குடிலில் பாம்புடன் இணைந்து வாழ்வதால் ஏற்படும் விளைவை, என்றோ ஒரு நாள் சந்திக்க வேண்டியதைப் போன்ற நிலையை உருவாக்கக் கூடியதாகும் என்று வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

"உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று"

அதிகாரம் - 89 - உட்பகை; பாடல் - 890

உடம்பாடு = மனப் பொருத்தம்
குடங்கர் = குடிசை





நாடாளும் மன்னன் அவன்! நாள்தோறும் அவன் புகழ் பாடத் தமிழில் நாவல்லார் வருதல் வேண்டும்! இத்தரையில் ஊர்ந்து செல்லும் எறும்புகள் போல், எத்தனையோ புலவர்கள் அணிவகுத்தார் அவன் அரண்மனைக்கு! பாடிக் குவித்தார் அவனைப்பற்றி! கைகுவித்தார் அவன் பாதம்பற்றி! கொடுப்பதில் குமணன் என்றார்! கணைதொடுப்பதில் காண்டீபனையும் வெல்வான் என்றார்! வீரத்தில் சேரன் என்றும் வெற்றிகளை விளைப்பதிலே சோழன் என்றும், பற்றுக் குறையாத் தமிழ்ச் சங்கப் பாண்டி மன்னன் மறுபிறப்பே அவன்தானென்றும் கவியாரம் தொடுத்திட் டார்! அவனும் கையில் கிடைத்ததைக் கொடுத்திட்டான்!

வரிசையாய் நிறைந்து நின்று வாழ்த்துப்பா, வண்ணப்பா வரைவதற்கு விரைகின்ற கவிஞர் கூட்டத்தைக் கண்ட மன்னன்; ஒரு நாள் அமைச்சரவையைக் கூட்டிக் கேட்டான், ஆச்சரியமாய் ஒரு கேள்வி!

"என் ஆளுகைக்கு உட்பட்ட நிலத்தில் உள்ள அருங்கவிஞர் - பெரும் புலவர் - அனைவருமே எனைநோக்கிப் புகழ் மணக்கும் மலர்களாலே பூஜித்துப் பயனைப் பெறும்போது - ஒரு தனி மனிதன்; தன்மானச்சிங்கமெனும் பேர்படைத்த கவிமனிதன் இன்னும் ஏன் இங்கு வர மறுக்கின்றான்? இனிய நற்கவிதைகளை என்மீது இயற்றுதற்குத் தயங்குகின்றான்?"

வினாக்கள் இரண்டுக்கும் விடையளிக்க ஓர் அமைச்சர் முன்வந்தார்!

"மன்னவனே! மகுடத்தின் பெருமை சொல்லி அழைத்துப் பார்த்தோம்; மண்டியிட்டுக் கெஞ்சியும் அழைத்துப் பார்த்தோம்; இரண்டு முறைகளுமே பலிக்கவில்லை அவனிடத்தில்! 'வாள்கொண்டு தலைகொய்திடுவீர் என்றாலும் வரமாட்டான் இந்தத் தமிழ்க் கவிஞன்; காரணம் தன்மானக் கவிஞன்!' என்று கூறிவிட்டான்."

அது கேட்ட மன்னவனும் 'அடலேறாய்'க் கொதித்தெழுந்து "அற்ப மனிதன் அவன்! ஓங்கி வளர்ந்த உப்பரிகை அழைப்பையொரு ஓலைக்குடில் இல்லறத்தான் உதாசீனப்படுத்துவதா? உடன் ஆணை பிறப்பித்திடுக! அந்த வீணனை விலங்கிட்டு இழுத்து வருக!" என்றான்.

அமைச்சரவை ஆணைப்படியே, தன்மானச் சிங்கத்தைக் கோவேந்தன் கொலுமுகப்பில் விலங்கிட்டு நிறுத்திவைத்தனர்!

"ஏனடா - புலவரேறே! இந்நாட்டை ஆளும் வேந்தன் நான்! நீயோ என் பிடிக்குள் இருக்கின்ற எத்தனையோ இல்லறத்துக் குடிகளிலே ஒரு மனிதன்! நின் இல்வாழ்வு நல்வாழ்வாய்த் திகழ்வதற்கு நாட்டமின்றி எதற்காக நாக்குத் தடிப்பேறி அலைகின்றாய்? எத்தனையோ பேர் எனைப்பாடி நத்திக்கிடக்கும் போது, நீ மட்டும் என் காலைத் தொத்திக் கிடக்க எதற்காகத் தயங்குகின்றாய்? விடையளித்திடுக! இல்லையேல் தலை நொறுக்கும் தண்டனைக்கு, நீ ஆளாவாய்!"

மமதையால் மன்னன் மிரட்டிய போதும் தன்மானச் சிங்கம் தலை தாழாமல் சொன்னான்.

"உன் கரம் வழங்குகின்ற பரிசுகள்; கனகமணிக்குவியல்களாய் என் கால்களை முத்தமிடினும் - அந்தக் கறைபட்ட பொருளை நான் தொடமாட்டேன். பழிக்கு அஞ்சாமல் நீ சேர்த்த பொருட்கணக்குப் பலகோடி என நான் அறிவேன்! 'பழிக்கு அஞ்சிச் சேர்த்த பொருளைப்பகுத்து உண்ணும் பண்பிலேதான் வாழ்க்கை நெறி குறையாத சிறப்பு உண்டு' என்று வள்ளுவர் கூறியதை மறவாத இல்லறத்தான் நான்! நீ இந்நிலத்தை ஆண்டாலும் - உன் முன்னே இறங்காது என் மானம்! பாடமாட்டேன்; உன்னைப் பாடமாட்டேன், பழிக்கஞ்சாமல் பொருள் சேர்க்கும் உன்னைப் பாடமாட்டேன்"

காவலன் வெகுண்டான்! கடும்புலியின் உறுமலுடன் "கழுவிலேற்றுக இந்தக் கவிஞனை!" என்றான்.


"கறைபடிந்த உன் கரங்களாலே பொருள் பெறுவதைக் காட்டிலும் கழுமரத்தின் கூர்முனையே இன்பம்."

எனச் சொல்லித் தண்டனைக்கு அஞ்சாமல் அங்கிருந்து நடந்திட்டான்! அவைக்களம் அசைவற்று அதிசயத்தால் திறந்த விழி மூடாமல் அப்படியே இருந்தது!

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

அதிகாரம் - 5 - இல்லறவியல்; பாடல் - 44

பாத்தூண் = பகுத்து உண்ணுதல்



சுரபுன்னை

அழகர்குடி ஒரு சிற்றூர்! அந்தச் சிற்றூருக்கே ஒரு சிங்கம்போல செவத்தான் என்பவன் இருந்தான். காட்டில் எல்லா மிருகங்களும் சிங்கத்தைத்தானே அரசனாக ஏற்றுக்கொண்டு அஞ்சி நடுங்கிடும் என்பார்கள். அதைப்போல அழகர்குடி மக்கள் செவத்தானுக்குப் பயந்துகொண்டு பணிவிடை புரிந்து வாழ்ந்தனர். செவத்தான் செய்யாத கொடுமைகள் இல்லை. அந்த ஊர்த் தோட்டத்தில் அழகிய மலர் ஒன்று பூத்துச் சிரித்தால், அதை முகர்ந்து பார்த்து அதன் இதழ்களைக் கடித்துத் துப்பினால்தான் அவனுக்குத் தூக்கம் வரும். இப்படி எத்தனையோ பருவமலர்கள் அவன் படுக்கையில் காம்பொடிந்து நசுங்கிப்போய்விட்டன. உழைத்திடும் கூட்டம் சேர்த்திடும் பொருள் அனைத்துக்கும் அவனே உரிமை கொண்டாடுவான்.

அவன் நுழைந்தால், யார் வீட்டுக் கதவானாலும் தானே திறந்துகொள்ள வேண்டும்! அவன் எதிரில் எவராயினும் காலணி அணிந்து நடப்பதுகூட அவனை அவமதிப்பதாகக் கருதப்பட்டு, அக்குற்றம் புரிந்தோர்க்கு ஆயிரம் சவுக்கடிகள் தண்டனையாகத் தரப்படும்.

நீர் வீழ்ச்சியில் குளித்திடும் பெண்கள் - தடாகத்தில் நீராடும் பெண்கள் - அவன் கண்களில் பட்டுவிட்டால் உடனடியாக நிர்வாணமாகக் காட்சி தர வேண்டும். அவர் தம் ஆடை அணிகலன்களை அவன் அபகரித்துக்கொண்டு மரக்கிளையில் அமர்ந்து "கலியுகக் கண்ணன்" என்று தன்னை வர்ணித்துக்கொள்வான்.

இவன் சேட்டைகளைத் தடுத்து அழகர்குடியில் தன்மான உணர்வு தலைதூக்கச் செய்ய, யாருமே முன்வரவில்லை!

அழகர்குடிக்குப் பல கல் தொலைவில் மலைப்பாறையொன்றில் குகைகுடைந்து வாழ்ந்துகொண்டிருந்த இளந் துறவியொருவர் - குறள் நெறி நெஞ்சினர் - இச்செய்தி கேள்வியுற்றுப் பெரிதும் வருந்தினார். அவரைச் சந்தித்த அழகர்குடி மக்கள் சிலரிடம், "செய்தக்க செய்யாமை யானும் கெடும்" என்று கடிந்துகொண்டு கூறினார்.

இளந்துறவி, என்ன கூறுகிறார் என்று புரியவில்லை அழகர் குடியினருக்கு!

"செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமையாலும் கெட்டுவிடும்! அழகர்குடி மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அந்தக் கொடியவன் செவத்தானை எதிர்த்துத் துரத்தியிருக்கலாம் அல்லவா; அதைச் செய்யாததால்தான் இவ்வளவு கேடுகளும்" என்று இளந்துறவி விளக்கினார்.

"ஆமாம்! அப்படியே செய்கிறோம்" என்று அழகர்குடி மக்கள் ஆர்த்தெழுந்தனர். செவத்தான் வீட்டை நோக்கித் திரண்டு வந்தனர். அப்போது செவத்தானுக்கு இருதய நோய் ஏற்பட்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தான். உயிர் போகும் தருவாயில் அவன் ஊர்மக்களிடம் பேசினான்.

"எல்லோரும் என்னை மன்னித்துவிடுங்கள்! நான் உங்களுக்குப் பல தீமைகள் செய்துவிட்டேன். நான் இறந்தபிறகு என் பிணத்தைக்கூட இந்த ஊர் இடுகாட்டில் புதைக்காதீர்கள்! இந்தப் பாவியின் பிணத்தை பக்கத்து ஊர் இடுகாட்டில் புதைத்து விடுங்கள்"

செவத்தானின் இறுதி வேண்டுகோளை அழகர்குடியினர் ஏற்றுக் கொண்டனர். அவன் கண் மூடியதும் அவன் பிணத்தைத் தூக்கிச்சென்று பக்கத்து ஊர் இடுகாட்டில் புதைத்தனர். செய்தியறிந்த பக்கத்து ஊரார் ஆத்திரப்பட்டு இடுகாட்டுக்குத் திரண்டு வந்தனர்.

"வெளியூர்ப் பிணத்தை எம் ஊரில் புதைப்பதா?" என வெகுண்டனர்! விளைவு? இருதரப்பாரும் மோதிக்கொண்டனர். இடுகாட்டில் இரு ஊரார்ப் பிணங்களும் இருபது வீழ்ந்தன! நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றனர்.

இச்செய்தி கேள்வியுற்ற இளந்துறவி, அங்கு ஓடிவந்து அமைதி உருவாக்கினார்!

"செய்ய வேண்டிய காரியத்தை முதலில் செய்யாமல் கெட்டீர்கள்! இப்போது செவத்தான் பேச்சைக் கேட்டு செய்யக்கூடாத காரியத்தைச் செய்தும் கெட்டீர்கள்!"

எனச் சொல்லி வருந்தினார். அழகர்குடி மக்கள் தலைகுனிந்து மெய்சோர்ந்து நின்றனர்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

அதிகாரம் - 47 - தெரிந்து செயல்வகை; பாடல் - 466

சிறுவெருளின் மருதுபாண்டியர்



சிவகங்கைச் சீமையெனப் புகழப்படும் வீரம் மணந்திடும் மண்ணில் மருது பாண்டியர்களின் நினைவுச் சின்னங்களாக அவர்களது சிலைகள் மாத்திரமன்றி காளையார் கோயிலும் விளங்குகின்ற காட்சியை இன்றைக்கும் காணலாம். பெரிய மருது, சின்ன மருது என்ற அந்த மாவீரர்களின் சிலைகளுக்கிடையே கோயிலின் முகப்பின் வலதுபுறத்தில் ஒருவன் கையில் துப்பாக்கியுடன் நிற்பது போன்ற சிலையும் உள்ளது. அந்தச் சிலையுடன் ஒரு கரடியும் சிலையாக நிற்கிறது. மருது பாண்டியர்களில் இளையவனான சின்ன மருதுவுக்கு உற்ற தோழனாக விளங்கிய கறுத்தான் என்பவனின் சிலையே அது! வேட்டையாடுவதில் மிகத் திறமை படைத்த கறுத்தானை, விலங்குகளை அவன் தனது வலைக்குள் வீழ்த்துகிற காரணத்தால் 'வலையன்' என்றும் அழைத்தார்கள் போலும். ஒரு சமயம் மருதிருவர், காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோது அவர்களைக் கரடி ஒன்றின் தாக்குதலில் இருந்து காப்பாற்றி அந்தக் கரடியையும் சுட்டு வீழ்த்தினான் கறுத்தான்! அவனது வீரத்தையும் துணிவையும் திறனையும் மெச்சிய மருது பாண்டியர், தங்களது சிலைகள் அமைக்கப்பட்டபோது கறுத்தானுக்கும் ஒரு சிலை அமைத்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

ஆனால், ஒரு கட்டத்தில் தக்க துணைவனாகவும் உற்ற நண்பனாகவும் மருது சகோதரர்களிடம் பழகிய அந்தக் கறுத்தான், தனக்குப் பெருந்துன்பம் நேரப் போகி

றது என்று உணர்ந்தோ - அல்லது நேரிடக்கூடும் என்று ஐயமுற்றோ தன்னைக் காப் பாற்றிக்கொள்ளும் தன்னல நோக்குடன் இழிசெயல் ஒன்றினைப் புரிந்திட்டான்.

வாணிபத்திற்கென வந்து இந்தியத்துணைக் கண்டத்தின் பல்வேறு நாடுகளை வளைத்துக்கொண்ட ஆங்கிலேயர், தென்னகத்தையும் - குறிப்பாகத் தமிழ் நாட்டையும் தங்கள் ஆதிக்கத்திற்குக் கீழே கொண்டுவர அரும்பாடுபட்டனர். மரணத்தை, மங்கையுடன் கொஞ்சும் மஞ்சமெனக் கருதிய உறுதிவாய்ந்த தமிழ் வீரர்களை, அவர்கள் எதிர்த்து அடிமைப்படுத்துவது அவ்வளவு எளிதாக இருந்திடவில்லை. அந்த வீரத்தலைவர்களின் வரிசையிலேதான் சிவகங்கை மன்னர்களான மருதுபாண்டியர்கள் இருந்தார்கள்.

அவர்களைத் தோற்கடிக்க ஆங்கிலேயர் அங்குலம் அங்குலமாகத்தான் முன்னேற வேண்டியிருந்தது. மருதிருவரின் படைகளுக்கு முன்னால் பல இடங்களில் ஆங்கிலேயர் படை சிதறி ஓடிற்று! எனினும் புதியமுறைப் போர்த் தளவாடங்களையும் தமிழினத்திலேயே துரோகம் புரியத் தயாராக இருந்த பாளையக்காரர்களையும் குறுநில மன்னர்களையும் துணையாய்க் கொண்டு ஆங்கிலேயர் வெற்றியின் உச்சக்கட்டத்தை எட்டிக் கொண்டிருந்தனர். அதன் விளைவாகப் பதுங்கிப் பாய்வதற்கு பெரிய மருது, காட்டுக்குள் தனது படைகளுடன் செல்ல நேர்ந்தது. இனி ஆங்கிலேயரை வெல்லமுடியாது எனக் கண்டுகொண்ட கறுத்தான் எனும் அந்த உயிர்த்தோழன்; தன்னைக்காத்துக் கொண்டால் போதும் என்ற கடுகு உள்ளத்துடன், சின்ன மருதுவை ஆங்கிலேயருக்குக் காட்டிக்கொடுத்து விட்டான்.

பிடிபட்ட சின்ன மருதுவையும், தோல்வியுற்ற பெரிய மருதுவையும் ஆங்கிலேயர் தூக்கிலே தொங்கவிட்டனர். காட்டிக்கொடுத்த அந்தக் கறுத்தானாவது தப்பினானா என்றால்; அதுவுமில்லை! அவனையும் ஆங்கிலேய அதிகாரிகள் தூக்கில் மாட்டிக்கொன்று போட்டனர்.

என் செய்வது; அந்தக் கறுத்தானின் சிலையும் இன்னமும் காளையார் கோயிலில் அவன் செய்த துரோகத்தின் அடையாளமாக நின்றுகொண்டு தானிருக்கிறது! தோழமையின் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய சிலை, துரோகத்தின் சின்னமாகத் திகழ்கிறது!

இதைத்தான் அன்றைக்கே அழகாகச் சுட்டிக்காட்டி இடித்துரைக்கிறது குறள்!


“மனங்குலையாத அறிவுத் தெளிவுடைய உறுதி படைத்தவர்கள்; துன்பத்திலிருந்து மீளமுடியாத நெருக்கடி நிலையில் சிக்கிக்கொண்ட நேரத்திலும் இழிவான செயல்களில் ஈடுபடமாட்டார்கள்.”

இந்தப் பொருளுக்குரிய குறள்தான் இது!

“இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்”

அதிகாரம் - 66 - வினைத்தூய்மை; பாடல் - 654

இளிவந்த = இழிவான; காட்சி = அறிவு



பேரனைப் பார்த்துப் பாட்டனார் கேட்டார், "உன்வாழ்க்கையின் குறிக் கோளாக எதைக் கொண்டிருக்கிறாய்?" என்று!

"தாத்தா! எனக்கு வயது பதினாறு ஆகிறது! இதுவரையில் யாராலும் இகழப்படா மல் நல்லபெயர் எடுத்துவிட்டேன்! இன்னும் நான் வாழவேண்டிய பெரும்பகுதி நாட்களிலும் பிறரால் இகழப்படாமல் வாழவே விரும்புகிறேன். அதுவே என் குறிக்கோள்! அதற்கு ஏற்ற நல்வழியைத் தாங்கள் எனக்குக் கூறவேண்டும்."

"குழந்தாய்! இங்கிருந்து இருபது கல் தொலைவில் உள்ள அருளூரில் அன்பின் அடிகளார் என்ற பெரியவர் ஒருவர் வாழ்கிறார். வாழ்க்கையின் கடமைகளை உணர்த்தி அவர் ஒரு பெரும் நூல் எழுதிக்கொண்டிருக்கிறார். திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதும் அந்த நூலுக்கு "நல்வாழ்க்கை" என்றே பெயர்! அவரைச் சூழ்ந்துள்ள நூற்றுக்கணக்கான மாணவர்க்கு அடிகளார், அவரது நூலில் இருந்தே கருத்துரைகளை எடுத்துக்கூறி, கனித்தமிழில் விளக்கங்கள் அளிக்கிறாராம்! நீயும் விரும்பினால், அங்கு சென்று பயின்று வருதல் சிறப்புடையதாக அமையும்."

பாட்டனின் சொற்கேட்டுப் பேரன், அருளூரை நோக்கி விரைந்தான். அடிகளார், "நல்வாழ்க்கை" எனும் சுவடியை எழுதி முடித்துவிட்டார் என்றும் புதிய மாணவர்களைப் புன்முறுவலுடன் ஏற்றுக்கொள்கிறார் என்றும் ஊரார் கூறிடக் கேட்டு, அடிகளார் மனை நோக்கிச் சென்றான்.

அடிகளார் மனையில் பயிற்சி முடித்த மாணவர்கள், பல்வேறு பொதுப் பணிகளுக்குச் சென்றிருந்தனர். அடிகளார் மட்டுமே தனித்திருந்தார். அவர் எழுதிய "நல்வாழ்க்கை" எனும் சுவடியைத் தலையணைபோல் தலைக்கு வைத்துக் கொண்டு சிந்தனைத் துயில் கொண்டிருந்தார்.

இளைஞன், "வணக்கம்" என்றுரைத்த ஒலி கேட்டுக் கண்விழித்து, "யார்?....என்ன வேண்டும்?" என்ற விளக்கம் கேட்டார்.

அவன் வந்துள்ள விபரமறிந்து மகிழ்ச்சியடைந்தார். ஆயினும் மாணவர் குழுவில் இணைத்துக்கொள்வதற்கு முன்பு வழக்கமாக ஏதாவது ஒரு சோதனை செய்வது உண்டு! அதை அவனிடமும் நடத்திப் பார்க்க விரும்பினார்!

"தம்பீ! இதோ என் தலைக்கு வைத்துப் படுத்திருக்கிறேனே; இதுதான் எனது அரிய உழைப்பின் விளைவாக உருவாகியுள்ள 'நல்வாழ்க்கை' எனும் சுவடி! இதனை ஒருவன் படித்து முடித்துவிட்டால், அவன் வாழ்க்கை முழுதும் புகழ்மணம் கமழும்! யாரும் அவனை இகழ்ந்திடா வண்ணம் வாழ்ந்திடும் வகையைச் சொல்லும் இந்தச் சுவடி! இதிலிருந்தே நான் நாள்தோறும் மாணவர்களுக்குக் கருத்துக்களை வழங்கு கிறேன்! நீயும் காத்திரு; நாளை முதல் நீயும் அவற்றைக் கேட்டுத் தெளியலாம்."

எனக் கூறிவிட்டுச் சுவடிக்கட்டில் தலைவைத்துப் படுத்துக்கொண்டார். இளைஞன் சிந்திக்கத் தொடங்கினான். அடிகளாருக்கு நல்ல உறக்கம்.

"ஏ, அப்பா! எத்தனை நாட்கள் இங்கு தங்கிப் பாடம் கற்பது! இந்தச் சுவடியே நம் கையில் கிடைத்துவிட்டால்? இதைப் படித்து நாமே நமது வாழ்க்கையைச் சீராக அமைத்துக்கொள்ளலாமே!"

சிந்தனைக்கு, சிறகுகளும் முளைத்தன! அடிகளாரை நோக்கினான்! அவர் ஆழ்ந்த உறக்கத்தில் புரண்டு படுத்தார்! அவர் தலை, சுவடிக் கட்டிலிருந்து கீழே இறங்கியிருந் தது! 'இதுதான் சமயம் - இந்தச் சுவடியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டால்? யாருடைய துணையுமின்றி, பிறர் இகழாத வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளலாமல்லவா?'

மெல்லச் சென்றான்! சுவடிக் கட்டைத் தூக்கிக்கொண்டான்! அங்கிருந்து பூனைபோல் வெளியேற முனைந்தபோது,

கலகலவெனச் சிரிப்பு! அடிகளாரின் சிரிப்புதான்! அவன் கைகளைப் பிடித்துக் கொண்டே எழுந்தார்!

"தம்பீ, உனக்குத் தேவையானதைத்தான் எடுத்துக் கொண்டாய்! நல்ல காரியத்திற்காகத்தான் இதைப் பயன் படுத்த எடுத்துக்கொண்டாய்! ஆனால் ஒன்று - சுவடியின் முதல் கருத்தாக நான் என்ன எழுதியிருக்கிறேன் தெரியுமா? இதோ; படித்துப்பார்! திருக்குறள் கருத்தொன்றைத் தீட்டியிருக்கிறேன்!"

அடிகளாரே அதைப் படித்துக் காட்டினார்.

"மற்றவர்களால் இகழப்படாமல் வாழ்ந்திட விரும்புகிறவன், எத்தன்மையான பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக் களவாட எண்ணாதபடி தனது நெஞ்சத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்."

இளைஞன், தலைகுனிந்து விழிநீர் வழிய நின்றான்! எத்தன்மையான பொருளாக இருந்தாலும் அதனைப் பிறரை வஞ்சித்துப் பெற முனைதல் இகழ்ச்சிக்கு உரியது என்பதை உணர்ந்து, அடிகளார் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். பின்னர் அவரது மாணவனாக ஏற்றுக்கொள்ளப் பட்டான்.

"எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு"

அதிகாரம் - 29 - கள்ளாமை; பாடல் - 281

எள்ளாமை = இகழப்படாமை; கள்ளாமை = களவு செய்யாமை



ஒரு வீட்டு அடுக்களையில் சமையலுக்கும் உணவு பரிமாறுவதற்கும் ஏற்ற பாத்திரங்கள் இருந்தன! இல்லத்தரசி இளநகை என்பவள் ஒருநாள் வீட்டு வேலை களை ஒய்வின்றிக் கவனித்துவிட்டுக் களைப்பு மிகுதியால் அடுக்களையிலேயே பாயும் தலையணையும்கூட இல்லாமல் படுத்துறங்கி விட்டாள். உறங்குவதற்கு முன்பு அவளுக்கு அவளது குடும்பத்தைப் பற்றிய ஒரு கவலை!

இளநகையின் கணவன் எழிற்கோ, இனிய இதயமுடையவன். இரங்கும் இயல்புடையவன். எவரையும் மனம் நோகப் பேசுவதுகூட அவனுக்குப் பிடிக்காது. அவனுக்கு ஒரு தம்பி - பெயர் கோவெண்கோ! நல்ல ஆற்றலாளன். இருப்பினும் அண்ணனுக்கும் அவனுக்கும் ஒத்துவராத ஒரு சூழ்நிலை! இயற்கையிலேயே சினத்தை அடக்கிக்கொள்ளத் தெரியாத கோவெண்கோ, அண்ணன் எழிற்கோவிடம் எப்படியோ பகைமை பாராட்டுகிறவனாக மாறிவிட்டான். இந்த நிலைமை, இளநகையை வாட்டிக்கொண்டேயிருந்தது. ஒற்றுமையாக இருந்த குடும்பத்திற்குள் இப்படியொரு உட்பகையா என்ற கவலையுடன் அடுக்களையில் படுத்த அவள், சிந்தித்துக் கொண்டேயிருந்தாள்.

அன்று காலையில் கோவெண்கோ அவளிடம் பேசிக்கொண்டிருந்தபோது, "அண்ணீ! கவலை கொள்ளாதீர்கள்! எனக்கும் அண்ணனுக்கும் எந்தப் பகையும் இல்லை! இதோ; நீங்கள் பயன்படுத்துகிறீர்களே; இந்தச் செப்புதான் அண்ணன்! இந்தச் செப்பின் மூடியாக இருப்பதுதான் நான்!" என்று உவமை கூறி விளக்கமளித்தான்.

அந்த விளக்கம், அவளுக்கு மன நிறைவைத் தரவில்லை! அந்த நினைவு அலைகளினூடே அவள் தூங்கிவிட்டாள்!

கனவு படர்ந்தது! அடுக்களையில் இருந்த செப்பும் மூடியும் அவளெதிரே நின்று ஒன்றோடொன்று பேசுவதுபோல் தோன்றியது!

செப்பு: எனது உடலில் ஒரு பகுதியான மூடியே! நாம் இருவரும் இணைந்திருப்ப தாகத்தானே எல்லோரும் கருதுகிறார்கள்?

மூடி: ஆம்! அதில் என்ன சந்தேகம்? நான் என்றைக்கும் உன்னைவிட்டு நீங்காமல்தானே இருக்கிறேன்.

செப்பு: நீங்காமல் இருக்கிறாய் என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கி றார்கள்! ஆனால் என்னுள் இருக்கும் பொருளை பிறர் எடுக்க முனையும் போது; நீ அவர்களுக்குத் துணையாக என்னைவிட்டு அகன்று போய்விடு கிறாய்! உன் செயலைச் சாதகமாக்கிக்கொண்டு அவர்கள் என்னுள் இருப்பவற்றை எடுத்துக்கொள்கிறார்கள்!

மூடி: அதற்கு நான் என்ன செய்வது? எந்நேரமும் நான் உன்னுடன்தான் இணைந்திருக்கிறேன்! இணைவதற்கு உவமை கூறுகிறவர்கள்கூட "செப்பும் அதன் மூடியும்போல" என்றுதான் சிறப்பிக்கிறார்கள்!

செப்பு: உண்மைதான்! வெளித்தோற்றம் அப்படி! ஆனால்; நம்மிடையே நல்ல பிணைப்பு இல்லாததால் நீ என்னைவிட்டு அகலுமாறுச் செய்துவிட்டு, என்னுள் இருப்பவற்றைப் பிறர் எடுத்துக்கொள்கின்றனர்! மூடியே! இச்செயல் எப்படியிருக்கிறதென்றால் - இந்த வீட்டு அண்ணன் தம்பி ஒற்றுமையைப்போல உறுதியற்றதாக இருக்கிறது! தம்பி அண்ணனிடம் கொண்டுள்ள கருத்து மாறுபாடுகளால், அவனை அண்ணனிடமிருந்து தனிமைப்படுத்தி எதிரிகள் காரியத்தைச் சாதித்துக்கெள்ள முனைகிறார்கள் அல்லவா; அதைப்போல இருக்கிறது!

இளநகை திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள். கனவு கலைந்து போயிற்று! காலையில் கோவெண்கோ அவளிடம் சொன்ன "செப்பும் மூடியும்" என்ற உவமை அவள் நினைவுக்கு வந்தது! மீண்டும் எழுந்த அந்த நினைவுடன் அடுக்களையை விட்டுப் படுக்கையறைக்கு வந்தாள். அங்கே அவள் கணவன் எழிற்கோ திருக்குறள் படித்துக்கொண்டிருந்தான்.

"இன்றைக்கு எந்தக் குறளை ஆய்வு செய்கிறீர்கள்?" எனக் கேட்டாள்!

"உட்பகை குறித்து வள்ளுவர் எத்துணை அழகான உவமையைக் கூறியிருக்கிறார், தெரியுமா?" என வியந்தான் அவன்!

"எங்கே, எனக்கும் சொல்லுங்களேன்."

"சொல்லுகிறேன்! செப்பு எனப்படும் சிமிழில் பொருந்தியிருப்பது போலப் புறத்தே தோன்றினாலும் அந்தச் சிமிழின் மூடி, அந்தச் சிமிழை விட்டு அகன்று சிமிழில் உள்ளவற்றைப் பிறர் பயன்படுத்திக்கொள்ள வழிவகுக்கும். அதைப் போலத்தான் புறத்தே பொருந்தியிருப்பதுபோலத் தெரிந்தாலும், உட்பகையென்பது அகத்தே பொருந்தியிருக்காது."

பொருளை முதலில் கூறிவிட்டுக் குறளைப் பிறகு படித்துக் காட்டினான் அவன்!

"செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி"

அதிகாரம் - 89 - உட்பகை; பாடல் - 887

புணர்ச்சி = பொருந்துதல், தொடர்பு, இணைப்பு செப்பு = சிமிழ்



"**பொ**ன்மலர் அத்தான் நீங்கள்!"

"மணக்கவில்லை என்கிறாயா?"

"ஆமாம்! இன்னும்தான் என்னை மணக்கத் தயங்குகிறீர்களே!"

"குறும்புக்காரி! இந்தப் பொன்மலர் நீ தொட்டவுடன் மணக்கத் தொடங்கிவிடுகிறதே! பொன்மலர் மணமுடைத்து என்ற புகழுரையே நம்மைப் பார்த்துத்தான் தோன்றியிருக்கும்!"

"அத்தான்! மணம் தென்றலில் தவழும்! அதைப்போல நமது மணமும் காற்றிலே கலந்துவிடக்கூடியதுதானா?"

"பொன்மலரில் மணம் கலந்தால், அதனைப் புயல்கூட அசைக்க முடியாது! அவ்வளவு பத்திரமான இடத்தில் பாதுகாக்கப்படும்!"

"சொற்சிலம்பம் போதும் - சொல்லுங்கள் இப்போதே! எப்போது திருமணம் நமக்கு?"

"அலர் தூற்றுகின்றார் ஊரார்! உன் அன்னையோ கடுஞ்சொல் கூறித் தடுக்கின்றாள்! இத்தனையும் நீதான் என்னிடம் சொல்லுகின்றாய்! இப்போது மணவிழா

என்றைக்கென்று என் மடிமீதே படுத்து, விழிக்கணை பூட்டிப் புருவவில்லை வளைக்கின்றாய்!”

“ஆமாம்! நமது காதல் குறித்துப் பலரும் அறிய ஊரார் இழித்துரைக்கின்றார்! என் தாயும் கடுமொழி உதிர்த்துத் தடுத்து நிற்கின்றாள்! ஆனால் ஒன்று அத்தான்; ஊரார் பேச்சு எருவாகவும், அன்னையின் எதிர்ப்பு நீராகவும் அமைந்து நமது காதல் பயிர் செழித்து வளருவதை நீங்கள் அறியமாட்டீர்களா?”

“அறிவேன் நன்றாக!”

“அறிந்தும் ஏன் தயக்கம்?”

அவன் மடிவிட்டெழுந்து ஊடியவாறு விலகி நின்றாள்.

“விலகாதே! விலகினால் இந்தப் பொன்மலர் மணமிழக்கும்” எனக் கூறிக் கொண்டே தொடர்ந்து நெருங்கி இடையைத் தழுவி அந்தக் கொடியை அணைத்தான்.


“உம்! மயக்கியது போதும்! மணம் எப்போது?”

எனக் கேட்டபடி அவளும் அவன்மீது ஒட்டிக்கொண்டாள்.

“ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்”

அதிகாரம் - 115 - அலர் அறிவுறுத்தல்; பாடல் - 1147

கௌவை = பழிதூற்றுதல்





ஓரிடத்தில் அமர்ந்து 'உபதேசம்' செய்வதற்கொப்ப, ஏதோ ஓர் அறிவுரைக் கொத்தினை எழுதுவதைப்போல் அல்லாமல் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மக்கள் அமைத்துக் கொண்டுள்ள வாழ்க்கை முறைகளைக் கண்டு, கேட்டு, உணர்ந்து ஓர் உயர்ந்த வாழ்க்கை நெறியையே குறள் வாயிலாக வழங்கிய பெருமை வள்ளுவருக்கு உண்டு. அவ்வாறு அவர் நடத்திய பயணத்தில் ஒருநாள் "பாலூர்" என்னும் பழந்தமிழூர் ஒன்று அவரது காலடிகள் பதியும் பேற்றினைப் பெற்றது. அவ்வூரில் அழகடியான் எனும் தமிழ் ஆர்வங் கொண்டோன், வள்ளுவரை அவனில்லத்திற்கு அழைத்துச் சென்றான். விருந்துண்டு செல்லுமாறு வேண்டினான். வள்ளுவரும் அதற்கு இணங்கினார். விருந்துக்கான ஏற்பாடுகளை அழகடியானின் துணைவி, அடுக்களையில் செம்மையாகச் செய்து கொண்டிருந்தாள். கூடத்தில் அமர்ந்து சிந்தனை தேங்கிய முகத்துடன் விளங்கிய வள்ளுவரிடம் அழகடியான் உரைநிகழ்த்திக் கொண்டிருந்தான். அழகடியானின் தமிழ்ப்பற்று, திறம், அனைத்தையும் வியந்து பாராட்டினார் வள்ளுவர்.

தான் கொண்டுள்ள தமிழ் உணர்வையும் தனக்குள்ள ஆற்றலையும் பழித்துக் கூறுவதையே தொழிலாகக் கொண்டிருந்த ஒருவன், அந்த ஊரில் பெருஞ்

செல்வந்தனாகத் திகழ்கிறான் என்ற செய்தியை அழகடியான் கூறினான். பெருஞ்செல்வம் அவனுக்கு வாய்த்த விதம் எவ்வாறு? எப்போது? எனக்கேட்டார் வள்ளுவர். அது பெரிய கதை எனத் தொடங்கி, அழகடியான் சுருக்கமாகவே சொல்லி முடித்தான். வளமற்று வறுமை மிஞ்சி வாழ்ந்தவன்தான் அந்தப் புதுச் செல்வந்தன்! திடீரென ஒருநாள் கண்டெடுத்தான் பெரும் புதையல்! அந்தப் புதையலை அவனுக்கே உரிமையாக்கிக் கொண்டான். மாடமாளிகை, கூடகோபுரம் என்ற வகையில் செழிப்பு சிரிக்கிறது இப்போது! இத்தகு வளத்திற்கு அவன் சொந்தக்காரனாவதற்கு முன்பே எனக்கும் அவனுக்கும் பகையுண்டு. இப்போதோ இந்தப் பாலூரில் அவன்தான் கொடிகட்டி வாழ்கிறான். இப்படிச் செய்தி சொல்லி முடித்தான் அழகடியான்.!

"அளவற்ற வளம் பெருகிவிட்ட காரணத்தாலேயே உன் அறிவுச் செல்வத்தை அவன் வீழ்த்திவிட முடியுமா - என்ன? அஞ்சற்க!"

என்றார் வள்ளுவர். ஆனால் அழகடியானோ, வள்ளுவரைப் பார்த்து ஏதோ இழுத்தாற்போல் கூறலுற்றான்.

"பெருமகனாரே! எதற்காக அந்தச் செல்வனின் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று நானும் ஆழ்ந்து சிந்திக்கலானேன்! என் துணைவியும்கூட அப்படித்தான் கருதினாள்! இதற்கிடையே அந்தச் செல்வனிடமிருந்து எனக்கு ஓர் அழைப்பும் வந்தது. அதனைத் தட்டிக் கழிக்க மனமின்றிச் சென்றேன். ஆனால், முதல் நாள் - இரண்டாம் நாள் - மூன்றாம் நாள், இப்படி மூன்று நாட்கள் காத்திருந்தும் அவனைச் சந்திக்க இயலவில்லை. 'நாளை வரச்சொல்' என்ற பதிலே எனக்கு அளிக்கப்பட்டது. இறுதியாக ஒரு நாள் அவனைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். ஒரு தட்டு நிறையத் தங்க நாணயங்களை எனக்கு வழங்குமாறு அங்கிருந்த ஒருவனுக்கு ஆணையிட்டான். பெற்றுக் கொண்டேன். என் தமிழ் அறிவாற்றலைப் பயன்படுத்தி அச்செல்வந்தனைக் குறித்து அரியதோர் நூலொன்று நான் எழுத வேண்டுமெனக் கூறியுள்ளான்."

அழகடியானின் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த வள்ளுவர், அவனைப் பார்த்து-

"இதுவரை நீர் எனக்குச் சித்திரித்துக் காட்டியுள்ள மனிதனைப்பற்றி என்னால் ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லையே! முதலில் உமக்குப் பகைவன் என்று கதையைத் தொடங்கினீர்! தமிழுக்கும் பகைவன் என்று குறித்துக் காட்டினீர்! இப்போது தங்க நாணயங்களை வாரிக் கொடுத்து நூல் எழுதச் சொல்லியிருக்கிறான் என்கிறீர்! அந்த நூலை எழுதத் தொடங்கி விட்டீரா இல்லையா?"

என்று விழிகளை அகல விரித்தவாறு கேட்டார்.

"வள்ளுவப் பெருந்தகையே! அதற்குத்தான் தங்கள் துணையை நாடுகிறேன். அந்த நூலின் மையக் கருத்தாக எதனைக் கொள்ளலாம் என்று தங்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பகைவனாக இருந்தும் அவன் என்னிடம் காட்டிய பரந்த மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டு நூலை எழுதி முடிக்கலாம் அல்லவா?"

அழகடியானின் இந்தக் கேள்விக்கு வள்ளுவர் சிரித்துக்கொண்டே பதில் அளித்தார்.

"பகை கொண்டோர் பகைநீங்கி உறவாடுவதை நான் பாராட்டக்கூடியவன்! ஆனால் உம்மிருவரிடையே இருந்த பகை ஒரு தட்டுத் தங்க நாணயத்தால் அல்லவா தீர்க்கப்பட்டிருக்கிறது. செல்வந்தனின் பரந்த மனப்பான்மையை இது காட்டுவது போலத் தோன்றினாலும் - முற்றிலும் உமது இழிதன்மையையே இது புலப்படுத்துகிறது. அழகடியான் அவர்களே! பகைவனைச் சேர்ந்து வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதைக் காட்டிலும் - அவ்வாறு அந்தப் பகைவனைத் தொழுது தொடாத காரணத்தாலேயே, ஒருவன் அழிந்தான் எனக் கூறப்படுவது பெருமையுடையதாகும் என்று ஒரு குறள் எழுதுவதற்கான உணர்வை உமது வாழ்க்கை எனக்கு ஏற்படுத்தி உதவியுள்ளது. நன்றி, வருகிறேன்."

இவ்வாறு கூறிக்கொண்டே வள்ளுவர் புறப்பட்டார்! - அழகடியான், சோர்ந்த முகத்துடன் "விருந்துண்டு செல்க!" என வேண்டி நின்றான். "விருப்பமில்லை! மன்னித்திடுக:" என்று பதிலிறுத்துவிட்டு, வள்ளுவர் வேகமாக வெளியேறினார். இந்தச் சிறிய கற்பனைக் கதைக்கான சிறப்புமிகு குறள் இதோ.

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று"

அதிகாரம் - 97 - மானம்; பாடல் - 967





"ஓ! என் நண்பனே! உன்னையொன்று கேட்பேன், எனக்கு விளக்கம் உரைப்பாயா?"

"தயக்கமின்றிக் கேள். இயன்றவரையில் எது குறித்துக் கேட்டாலும் விளக்கம் தர முயற்சி செய்கிறேன்."

அருகருகே இரண்டு குதிரைகளில் அமர்ந்து, காட்டுச்சாலையில் பயணம் செய்துகொண்டிருந்த வாலிபர் இருவரிடையே நடந்த உரையாடல் இது! விளக்கம் கேட்டவன் பெயர் வேழமுகன்! விடையளித்தவன் பெயர் வேங்கை மார்பன்! முதலாமவன் பெருத்த உடலைச் சுமப்பவன்! இரண்டாமவன் கட்டுக் கோப்பான உடலமைப்புக் கொண்டவன்!

வேழமுகன் கேட்டான், "நான் இந்த ஊராளும் பொறுப்புக் குழுவிலே ஒருவனாக இருக்கிறேன் உன்னைப்போல! ஆனால் நான் நம்மவரில் பலரது வெறுப்புக்கு ஆளாகிறேனே; அதை நீ கவனித்து வருகிறாயா, வேங்கை?" என்று!

வேங்கை சிரித்தான்! பதிலும் அளித்தான்!

"நானேகூடப் பல நேரங்களில் உன்னை வெறுப்பது உண்டு வேழம்! ஏன் தெரியுமா? இருக்கும் பொறுப்புணர்ந்து நடந்து கொள்ளாதவர்களில் நீயும் ஒருவன்!"

"நீயே என்னை வெறுக்கிறாயா? அப்படியென்ன நான் பொறுப்பற்று நடந்துவிட்டேன். அறிவற்றவனைப் போலப் பேசாதே! அளந்து பேசு!"

"பார்த்தாயா! பார்த்தாயா! வாயை வாளாக மாற்றிக் கொண்டு என் மீதே வீசுகிறாயே! உன்னைப் போன்றோர், தமது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை உயர்வை எண்ணிப்பார்த்து அதற்கேற்ப நடந்துகொள்ளவேண்டும்! ஆத்திரப்படு கிறாய் - அவசரப்படுகிறாய்! ஆணவமான சொற்களைத் தங்கு தடையின்றிப்

பொழிகிறாய்! இளையோரிடமே இனிமையாகப் பழகவேண்டிய நிலையில் உள்ள நீ, மூத்தவர்களிடமே மீசையை முறுக்குகிறாய்?"

"அது என் இயல்பு வேங்கை! அதனை நான் மாற்றிக்கொள்ள முடியாது! ஊரா ளும் குழுவில் இருக்கிற என்னிடம்தான் மற்றவர்கள் பணிந்து போக வேண்டும்!"

"அறிவு கண்டு பணியலாம்! ஆணவத்திற்கு அடிமைகள் வேண்டுமானால் குனியலாம்; ஆன்றோர் அதற்கு என்றுமே தலைவணங்கிடார்!"

"வேங்கைமார்பா! என்றைக்கும் என் வழியே தனி வழி!"

"எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் எனப் பேசுவது நல்லவழியல்ல! உனக்குத் தனி வழியாக இருக்கலாம்! ஆனால், அது தகாத வழி!"

"என் நிலைக்கேற்ற நினைப்பு இருத்தல் கூடாதா?"

"அதைத்தான் சொல்லுகிறேன்; எந்த நிலையில் இருக்கிறோம்! எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற நினைப்பு வேண்டும்."

"நீ பெரிய உபதேசியாகி விட்டாய்! உன்னோடு இணைந்து பயணம் செய்தாலே உன் உபதேசத்தைக் கேட்கும் தொல்லை என்னை விடாது!"

இப்படிக் கூறிக்கொண்டே வேழமுகன், தனது குதிரையை வேறு பக்கம் தட்டிவிட்டான். வேறு வழியில் குதிரை ஓடத்தொடங்கியது!

"ஏ! ஏ! நீ செல்வது ஆபத்தான வழியப்பா!"

"நான்தான் முன்பே சொன்னேனே, என் வழி தனி வழியென்று!"

வேழமுகன் வேகமாக வேறு வழியில் சென்று, வேங்கைமார்பனின் விழிகளில் இருந்து மறைந்தான். வேங்கை ஒரு புன்னகையைச் சிந்திவிட்டு மெல்ல உதடுகளைப் பிரித்துச் சொன்னான்.

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

தன் நிலையை உணர்ந்து அதற்கு ஏற்ப அடக்கத்துடன் நடப்பதிலிருந்து சிறிதும் மாறுபடாமல் இருப்பவனின் பண்பு, மலையின் உயர்வைவிடப் பெருமை யுடையதாகும்.

குறளையும் அதற்குரிய பொருளையும் அவன் உணர்ந்து கூறி முடிப்பதற்குள் சற்றுத் தொலைவில் "அய்யோ" என்ற அவலக்குரல் கேட்டு அடங்கியது!

பரபரப்புடன் வேங்கைமார்பன், வேழமுகன் சென்ற திசை நோக்கிக் குதிரையைத் திருப்பிப் பறந்தான்.

ஒரு பயங்கர படுகுழிக்குள் வேழமுகனும், அவன்மீது குதிரையுமாக, வெளியில் எடுத்துக் காப்பாற்ற முடியாத எல்லையற்ற ஆழத்துக்குள் போய்க்கொண்டிருந்த காட்சி கண்டு வேங்கைமார்பன் ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக்கொண்டான்.

நிலையில் திரியாமல் இருந்து மலையென உயர்வடைய வேண்டியவன், நிலை தடுமாறிய காரணத்தால் பூமியின் பாதாளத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டான் என எண்ணியவாறு, வேங்கைமார்பன் தனது குதிரையிலேறிப் பயணத்தைத் தொடர்ந்தான்.

அதிகாரம் - 13 - அடக்கமுடைமை; பாடல் - 124



குறளைக் குறைவறக் கற்றோ அல்லது கேட்டோ அறியாத ஒருவன், குறட்பாக்கள் சிலவற்றை அரைகுறையாகத் தெரிந்து வைத்துக்கொண்டு, அதுவும் தெரியாத பலரிடம் தன்னை ஒரு புலவன்போல் காட்டிக்கொண்டு ஏமாற்றி வந்தான். அவனைத் தமிழ்மேதையென ஊரார் எண்ணிப் புகழ்ந்து, போற்றி வந்தனர்.

அடுத்த ஊர்களிலும் தன் சிறப்புப் பரவிட வேண்டுமென்ற அவாவுடன், அவன் வெளியூர்ப்பயணம் புறப்பட்டான்.

அவன் சென்ற ஊர்களில் ஒன்றுக்கு உரிமை படைத்த குறுநில மன்னன் ஒருவன், தமது புலவனைத் தனது அமைச்சராக இருந்து தமிழ் இலக்கியம் பரப்பிடும் பணியைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டான்.

புலவனுக்கு அமைச்சர் பொறுப்புக் கொடுத்ததைத் தமிழுக்கு, தான் செய்த பெருந்தொண்டு எனக் கருதிக்கொண்டான் அந்தக் குறுநில மன்னன். நல்ல தமிழ் பயின்றவன், இலக்கியங்களை முறையாகக் கற்றவன். தன் அமைச்சரவையில் ஒரு புலவரும் அமைச்சராக இருக்க வேண்டுமென்று விரும்பினான். அந்த விருப்பத்தை நிறைவேற்றினான். ஆனால், விளைவுதான் வேறுவிதமாக இருந்தது!

திடீரெனக் காட்டு விலங்குகள் இரவு நேரங்களில் ஊருக்குள் புகுந்து பயிர் பச்சைகளை அழிப்பதோடு, மக்களின் உயிரையும் பறிக்கின்றன என்ற செய்தி குறுநில

மன்னன் செவிக்கு எட்டியது. உடன் அதனைத் தடுத்து மக்களைக் காக்க நடவடிக்கையெடுப்பதுபற்றி அமைச்சர்களைக் கலந்தாலோசிக்க அமைச்சரவையைக் கூட்டினான். புலவன் மட்டும் வரவில்லை. நெடுநேரங் காத்திருந்து, பின்னர் ஓர் ஆளை அனுப்பிப் புலவனை அழைத்து வரச் செய்தான்.

"என்ன புலவரே! அமைச்சர் பொறுப்பை மறந்துவிட்டு இவ்வளவு காலந்தாழ்த்து வருகின்றீர்?"

எனக் கேட்டான் மன்னன்.

"தூங்கி விட்டேன்."

- இது அந்த அமைச்சுப் புலவனின் பதிலாக இருந்தது!

"என்ன, தூங்கி விட்டீரா? நமது ஆளுகையின் கீழ் உள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அல்லலைத் தீர்க்க எப்படிச் செயல் மேற்கொள்ளலாம் என்று கருத்தறிவதற்கு அழைத்தால், தூங்கி விட்டேன் என்று கூறுகிறீரே; இது என்ன வேடிக்கை?"

மன்னன் இப்படிச் சொன்னதும், புலவன் சிரித்துக்கொண்டே விடையளித்தான்;

"மன்னவா! வினை செயல்வகை பற்றி வள்ளுவர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? 'தூங்குக தூங்கிச் செயற்பால' என்று கூறியிருக்கிறார். அதாவது தூங்கிச் செய்ய வேண்டிய செயல்களுக்காகத் தூங்குக என்று கூறியிருக்கிறார். அதனால் தான் நான் தூங்கினேன்."

இப்படிக் கூறிய புலவன், தனது தமிழாற்றலை மன்னர்க்கும் மற்றவர்க்கும் உணர்த்தி விட்டதாக எண்ணி மார்பை நிமிர்த்துக்கொண்டு அமர்ந்தான். குறுநில மன்னன் மிகுந்த ஏமாற்றத்துடன் அந்தப் புலவனை நோக்கி, "அய்யா! நீர் விளையாட்டாகப் பொருள் கூறுகிறீரா? அல்லது உண்மையான பொருளே அதுதான் என்று கருதுகிறீரா?" எனக்கேட்டான்.

"இதில் விளையாட்டே இல்லை! தூங்குக தூங்கிச் செயற்பால - என்று திருக்குறளே தெளிவாக இருக்கிறது! அதனால்தான் தூங்கிக் கொண்டிருந்தேன். காட்டு மிருகங்கள் இரவிலேதான் வருகின்றன. இரவு என்பது நமக்குத் தூங்கும் நேரம்! ஆகையால், 'தூங்கும் நேரத்தில் செய்யவேண்டிய காரியங்களுக்காகத் தூங்குக' என்றுதான் குறள் கூறுகிறது" என்றான் புலவன்!

அறியாமையாலும் அவசரத்தாலும் தான் செய்துவிட்ட செயலை எண்ணி மன்னன் வருந்தினான். எனினும், மன்னன், புலவனுக்கு விளக்கமளித்தான்.

"தூங்குக தூங்கிச் செயற்பால் - என்றால், 'காலந்தாழ்த்துப் பொறுமையாகச் செய்யவேண்டிய காரியங்களைக் காலந்தாழ்த்தே செய்யவேண்டும்' என்று தான் பொருள். அதை விடுத்துத் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று பொருள் கொள்வது பெரும்பிழை! அதுபோகட்டும், புலவரே! அந்த முழுக் குறளையும் ஒருமுறை சொல்லுங்கள் பார்ப்போம்."

மன்னன் கேட்டவாறு முழுக் குறளையும் சொல்ல புலவனால் இயலவில்லை. மன்னன், புலவனை ஏளனமாக நோக்கினான். "புலவரே! நான் சொல்லுகிறேன் கேளும்; தூங்கற்க தூங்காது செய்யும் வினை - அதாவது 'காலந்தாழ்த்தாது உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யக் காலந்தாழ்த்தக் கூடாது' என்று பொருள் - புரிகிறதா இப்போது?" எனக் கேட்டான்.

"எனக்கு எல்லாம் தெரியும். மன்னருக்குத் தெரிகிறதா என்று சோதிக்கத்தான் இப்படிச் செய்தேன்."

எனப் புலவன் சமாளித்தான். உடனே குறுநில மன்னனின் ஆணை பிறந்தது. "நமது வீரர்கள் இப்போதே காட்டு மிருகங்களைத் துரத்தி மக்களைக் காக்கப் புறப்பட்டாக வேண்டும். அதற்கான முறைகளை அமைச்சரவை வகுக்கும்! அந்த மிருகங்களைத் துரத்துவதற்கு முன்பு, இந்தப் புலவரை நமது ஊரை விட்டுத் துரத்துகிறேன்." -ஆணை பிறந்த பிறகு அரைகுறைப் புலவனுக்கு அங்கென்ன வேலை? இந்தக் கற்பனை ஓவியம் வரையப் பயன்பட்ட குறள் இதுதான்!

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை"

அதிகாரம் - 68 - வினைசெயல்வகை; பாடல் - 672





கதிரோனைத்தான் மணப்பேன் என உறுதிபூண்டு நின்ற அவளைப் பெற்றோர் எவ்வளவோ இடித்துரைத்து மனத்தை மாற்றிட முயன்றனர். அவர்தம் திருமகளாம் தேன்மொழியோ, அவன்பால் தந்துவிட்ட இதயத்தைத் திரும்பப் பெறமுடியாது என மறுத்துரைத்துவிட்டாள். இருவரையும் சந்திக்க விடாமல் செய்தால்தான் தங்கள் எண்ணம் ஈடேறுமென முடிவுக்கு வந்தனர் தாயும் தந்தையும்.

இன்ப அருவியில் ஆடி மகிழ - பஞ்சு மெத்தையில் கொஞ்சிக் குலவிட - அணைத்தும் தழுவியும் உலகில் அனைத்தையும் மறந்து கிடந்திட - அவரும் நானும் இணையும் நாள் எந்நாளோ?

இப்படி ஏங்கிக்கிடந்து கட்டிலில் புரண்டு புரண்டு இறுதியில் விடியற்காலை தூங்கி விழித்த மங்கை, தன் அறையின் கதவு வெளியே பூட்டியிருப்பதை உணர்ந்தாள்.

வீட்டுக்குள்ளே சிறை வைத்துவிட்டால், என் இதயப் பூக்காட்டுக்குள்ளே அந்தக் காதல் வண்டு மொய்க்காமல் இருந்துவிடுமோ?

தன்னை வெளியிற் செல்லவிடாமல்- ஒளியுமிழ்க் கண்ணன் கதிரோனைக் காண விடாமல் - அவனுதிர்க்கும் சுவைமிகு காதல் மொழி கேட்கவிடாமல் - தடுத்து விட்ட பெற்றோர் மீது இன்றுமுதல் போர் தொடுத்துவிட்டேன் என்று, தன்னைக் காண வந்து பலகணிக்கு வெளியே நின்று பேசிய தோழியிடம் சூளுரைத்தாள்.

வருத்தத்தால் சுருக்கமுற்ற முகத்துடனே நின்றிருந்த தோழியும் அவளுக்கு ஆறுதல் கூறி, "கவலைப்படாதே! கண்ணின் மணியை இமைக் கதவால் மூடிவைத்தாலும் - நினைவுகள் விழித்துக்கொண்டு வெளியேதான் உலவும் என்பதை உன் பெற்றோர் உணரவில்லை போலும்!" என்றுரைத்தாள். மேலும் அவளைப் பார்த்து அந்தத் தோழி சொன்னாள்:

"கதிரோனைக் காணாமல் பிரிந்திருப்பதால் உனக்கேற்படும் துன்பத்தை நானறிவேன். கட்டுக்கடங்காத காமம் எனும் மதயானை உன் நெஞ்சில் எப்படி மிதித்துத் துவைக்கும் என்பதும் எனக்குப் புரியாமல் இல்லை."

இப்படித் தோழி சொன்னதும்; அவள் சிரித்துக்கொண்டாள்! ஆனாலும் கண் கலங்கியிருந்தது! கண்கலங்கிய காரிகை சிரித்துக்கொண்டே தனது தோழியைப் பார்த்து;

"நீ உன் அனுபவத்தைச் சொல்கிறாயா? ஆனால், எனக்கு அப்படியொன்றுமில்லை! நான் விரும்புகின்ற நாயகரைப் பிரிந்திருக்க நேரிட்டாலும்கூட அவரை நான் நினைத்துக்கொண்டேயிருப்பதால் - இந்தப் பிரிவால் ஏற்படும் துன்பம் என்னை நெருங்காமல் போய்விடுகிறது! அதனால் காமத்தின் தாக்குதலும் என்னைச் சோர்வடையச் செய்யாமல் இன்ப உணர்வையே வழங்குகிறது." என்று கூறினாள்!

உடனே தோழி அவளைப் பார்த்து, "வியப்புக்குரியவளடி நீ! விட்டுப் பிரிந்தவரை எண்ணி மழைகொட்டும் கண்களுடன் - வளைகழன்ற கைகளுடன் - துன்புற்றுக் கிடக்கும் தோகையரைத்தான் குறள்கூடத் தொகை தொகையாகக் காட்டுகிறது? ஆனால் நீயோ....."

என முடிப்பதற்குள்; அவள் குறுக்கிட்டு "அவசரப்படாதே! அந்தக் குறளிலும் என்னைப் போன்ற பெண்களைக் காணலாம்! அவர்களில் ஒருத்தி நான்" என்றாள், பெருமூச்சுடன்! பெருமிதத்துடன்!

ஆமாம்; அந்தக் குறள் எந்தக் குறள்? இதோ - இந்தக் குறள்!

"எனைத்தொன்று இனிதேகாண் காமம் தாம்வீழ்வார்
நினைப்ப வருவதொன்று இல்"

அதிகாரம் - 121 - நினைந்தவர் புலம்பல்; பாடல் - 1202

எனைத்தொன்று = எவ்வளவாயினும் வீழ்வார் = விரும்பப்பட்டவர்



கலைஞரின் குறுநாவல்

நல்லரசு ஒன்றை நிலைநாட்டல் - நாட்டு மக்கள் அனைவரும் நலிவு நீங்கி வளமிகு வாழ்வு பெற்றிடச் செய்தல்; கூனன் நிமிர்ந்திடவும் - குருடர் கண் பெற்றிடவும் - திட்டங்களை வகுத்தல் - வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிவதைத் தடுத்தல் - பசி, பட்டினி என்ற சொற்களுக்கே இடமில்லாமல் ஆக்குதல் - உழவர்க்கும் உழைக்கின்ற பாட்டாளிகட்கும் உற்ற துணையாக ஆக்கப் பணிகளை இயற்றல் - கறையொன்றுமில்லாக் கரங்கள், குறையொன்றுமில்லா ஆட்சி எனும் பெருமையை உலகுக்கு அறிவித்தல் - மகளிர் குலத்தின் மாண்பு காத்திடப் பாதுகாப்பு அரணாக அரசு விளங்கிடச் செய்தல் - இப்படியெல்லாம் அறிவித்துவிட்டு அமைச்சுப் பொறுப்பை ஏற்றனர் அந்தக் குழுவினர்!

அறிவித்தவைகளை நடைமுறைப்படுத்த, அரசின் அலுவலர்களைக் கூட்டிக் கலந்து பேசினர். முறைப்படக் காரியங்கள் எப்படி நடைபெற வேண்டுமென்பதற்கான வழிமுறைகளை, அறிவு முதிர்ச்சி கொண்ட உயர் அலுவலர்கள் எடுத்தியம்பினர்.

அறிவித்தவை அனைத்தும் நடைமுறைக்கு வந்துவிட்டது போன்ற ஒரு மாயத்தோற்றமே நாட்டில் இருந்ததே தவிர, நலிவு, மலிவுப் பொருளாகி விட்டது!

சூதும் சூழ்ச்சியும் பெருகின! கொலையும் கொள்ளையும் மக்களை அதிர்ச்சியுறச் செய்தன! குறையில்லாத துறையே இல்லை; கறைபடாத கரமேயில்லை அரசு நடத்துவோரிடம் - என்ற நிலை விரிவடைந்து கொண்டேயிருந்தது!

அமைச்சர்கள், தாங்கள் அறிவித்த நல்ல திட்டங்கள் அனைத்தும் செயல்பட்டு நாடு செழிப்பதாக அடிக்கடி அறிவித்து வந்தனர்!

நாளைக்கொரு சட்டம் - வேளைக்கொரு திட்டம் - அதுவும் நிலைப்பதில்லை நிற்பதில்லை உறுதியாக! தள்ளாடிக்கொண்டேயிருந்தது!

உழவரின் பெருமூச்சு, உழைப்போரின் நெடுமூச்சு, ஊரார் விட்ட எரி நெருப்பு மூச்சு - இவற்றுக்கிடையே அந்த அரசு, தடுமாறியது! தத்தளித்தது!

இப்படியொரு அரசு இருப்பதை உணர்ந்த புலவர் பெருமான் ஒருவரிடம்; அவரது நண்பர்கள் எடுத்துரைத்தனர்!

"முறைப்படச் செயல்புரிய வேண்டி கருத்துக்களைத் தொகுத்தனர் என்று கேள்விப்பட்டேனே!"

என்றார் புலவர்!

"உண்மைதான் புலவரே! ஆனால் முடிந்த முடிப்பாக எந்தக் காரியங்களையும் செய்யாமல் நாட்டைக் காடாக்கிவிட்டனர்!"


என விளக்கினர், வேதனையுடன் நண்பர்கள்!

"முறைப்படச் சிந்தித்து அறிவித்தனர்! ஆனால் முடிவில்லாமல் குறைப்படவே செயலாற்றினர்! காரணம் தெரிகிறதா? அவர்கள் திறப்பாடு இல்லாதவர்! அதாவது சொல்வதையும் நினைப்பதையும் செய்யும் திறமையற்றவர்!" என்று கேலி கலந்த சினத்துடன் புலவர் பெருமான் கூறிவிட்டுக் கண்கலக்கமுற்றார்.

அதைத்தான் வள்ளுவர்; இதோ இந்தக் குறள் வாயிலாகச் சுட்டிக் காட்டுகிறார்.

"முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்"

அதிகாரம் - 64 - அமைச்சு; பாடல் - 640



குறுந்தொண்டன்

ஒரு குறும்புக்கார இளைஞன்! பெயர், குன்றன்! அவனது ஆசிரியர் அவனிடம் அடிக்கடி கூறுகிற அறிவுரை; "குறளைப் படி! அதன்படி நட" என்பது தான்! அந்த அறிவுரை அவனுக்குக் கசப்பாக இருந்தது. "குறள், வாழ்க்கை நெறியை வகுத்தளிக்கும் அறிவுக் கருவூலமாகும். ஆடவர் பெண்டிர் இருபாலாரும் - குறள் வழி நடந்தால் அவர்கள் ஏற்றுள்ள எந்தப் பொறுப்பிலும் புகழ் எய்துவதோடு நெஞ்சுறுதியாளர் களாகவும் திகழ்ந்து வாழ்க்கையின் இலக்கணத்திற்கு எடுத்துக்காட் டாக அமைவர்." இப்படி நாள்தோறும் தனது மாணவர்களிடம் - அதிலும் குறிப்பாகக் குன்றனிடம் ஆசிரியர் கூறிடத்தவறுவதில்லை. ஒரு நாள், குன்றன் - தனது குறும்புத்தனத்தை ஆசிரியரிடமே காட்டிவிட முடிவு கட்டிக்கொண்டான். அவ்வாறே செயல்பட்டான்.

ஆசிரியர், மரத்தடியில் நாற்காலியொன்றில் அமர்ந்து நூலொன்றைப் படித்துக் கொண்டிருந்தார்! குன்றன், அவருக்கு எதிரே வந்து அவர் கண்களில் படும்படியாகத் தன்னைத்தானே பம்பரம்போல் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தான். ஆசிரியர் அவன் செயலைக் கவனித்தார். தன்னைத்தானே சுற்றிக்கொண்டிருந்த குன்றன், அவ்வாறு செய்துகொண்டே ஆசிரியர் எந்த மரநிழலில் அமர்ந்திருந்தாரோ அந்த மரத்தையும் மெதுவாகச் சுற்றி வரத் தொடங்கினான். வியப்புற்ற ஆசிரியர் அவனைப்பார்த்து, "என்னப்பா செய்கிறாய்?" எனக் கேட்டார். "குறள் கூறிய வழி நடக்கிறேன் அய்யா!" எனச் சிரித்துக்கொண்டே குன்றன் பதிலுரைத்தான்.

"குறள் வழியா? இஃதென்ன கூத்து" என ஆசிரியர், சற்று சினங்கொண்டு கேட்டார்.

"அய்யா! "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் வேண்டும்' என்று குறள் கூறுகிறதல்லவா? நேற்றுத்தானே அந்தப் பாடம் நடத்தினீர்கள்! உலகத்தோடு ஒட்ட ஒழுகுவது எப்படியென்று யோசித்துப் பார்த்தேன்! உலகம், தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும் சுற்றி வருகிறது அல்லவா? அதனால் நானும் உலகத்தைப்போல என்னையே நான் சுற்றிக்கொண்டு இந்த மரத்தையும் சுற்றி வருகிறேன்."

எனக் குன்றன் பதில் அளித்தான்.

"இது குறும்புத்தனமான விளக்கம்! அல்லது குறளைச் சரியாகப் புரிந்துகொள்ளாத அறியாமை! உலகம் என்று வள்ளுவர் குறிப்பிட்டிருப்பது, உலகத்தில் உள்ள மக்களைத்தானே தவிர, பூமியெனப்படும் இந்தக் கோளத்தையல்ல! உலகில் வாழும் மக்களின் இயல்புகளோடு ஒட்டிப் போக வேண்டும் - அப்படி ஒட்டிப் போகும் இயல்பைக் கற்காதவர்கள்; வேறு பல்வேறு நூல்களைக் கற்றிருந்த போதிலும் 'கல்லாதார்' என்ற பட்டியலிலேதான் அடங்குவார்கள்! இது தானப்பா அந்தக் குறளின் கருத்து!"

என ஆசிரியர் மொழிந்தார்!

"அப்படியானால், உலக மக்களில் பெரும்பாலோர் மூடர்களாக இருப்பதாக வைத்துக்கொள்வோம்! இன்னமும் காட்டு மிராண்டிக் காலத்தில் வாழுகின்ற நிலையில் இருப்பதாக வைத்துக்கொள்வோம்! அந்த உலக மக்களின் இயல்போடு நாமும் நம்மை இணைத்துக்கொண்டு ஒழுகிட வேண்டுமா?"


என வினாக்களைத் தொடுத்தான், குறும்புக்காரக் குன்றன்!

"தம்பீ! வள்ளுவர் குறிப்பிடும் உலக மக்கள்; உயர்ந்த பண்பாடும் அறிவும் உடைய மக்கள்தானே தவிர - மாக்களைப் போல வாழும் மக்கள் அல்ல! ஒன்றைப் புரிந்து கொள்க! வீட்டிலே எரியும் விளக்கில் கிடைப்பதும் ஒளிதான்! சுடுகாட்டிலே பிணம் எரியும்போது கிடைப்பதும் ஒளிதான்! இரண்டிலும் ஒளிதானே கிடைக்கிறது எனக் கூறி சுடுகாட்டு ஒளியைப் பயன்படுத்திக்கொள்ள முனைவாயோ? முனையமாட்டாய்! அதுபோலத்தான் மக்கள் என்றால், மக்களுக்குரிய உயர்ந்த பண்புகளைக் கடைப்பிடிப்போர் எனக்கொண்டிட வேண்டுமே தவிர, மனித உருவில் இருப்போரெல்லாம் மக்களல்ல! எனவே, நற்பண்புவாய்ந்தவருடன் பொருந்தி ஒழுகிடல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிற வள்ளுவர், அப்படி ஒழுகிடாதவர் எவ்வளவு கற்றவராயிருப்பினும் கற்றறியா மூடரேயாவார் எனத் திட்டவட்டமாகக் கூறுகிறார்."

ஆசிரியரின் இந்த விரிவுரை கேட்டு குறும்புக்காரக் குன்றன் தலை குனிந்தான்! அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்! "குறள் வழி இனி நடப்பேன்" என்று உறுதி கூறி அவரை வணங்கினான்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

அதிகாரம் - 14 - ஒழுக்கமுடைமை; பாடல் - 140



மெல்லிய சிற்றலைகள் அசைந்தாடிடும் தடாகத்தில், மேலிருந்து கல் எதுவும் வீசப் படாமலே திடீரென மேல் மட்டத்து நீர் கலங்குகிறது. எப்படி? எவ்வாறு நிகழ்கிறது?

நீருக்கடியில் நீந்தி விளையாடும் மீன்களுக்கிடையே ஏற்பட்ட மோதுதலால், தெளிந்த நீர்த் தடாகத்து மேல்பரப்பில் ஒரு கலக்கம்.

அந்த மனிதனின் முகம் அமைதியாகக் காட்சி தருகிறது. தென்றலின் கரம்பட்டு அந்த இன்பத்தைச் சுவைத்திடும் புன்னகை வேறு; அமைதி நிரம்பிய அந்த முகத்திலே ஒளி நடனம் ஆடிக்கொண்டிருக்கிறது. அவனது உயிர்த்தோழன் அவனருகே அமர்ந்து, சமண பௌத்த துறவிகள் எவ்வாறெல்லாம் துன்பங்களையேற்றுக்கொண்டு, தாங்கள் கொண்ட கொள்கைகளை உலக மக்களுக்கு எடுத்துச் சொல்லிப் பரப்பிட ஓய்வின்றி உழைத்தனர் என்ற உள்ளமுருக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் வகைப்படுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறான். அந்த மாண்புகள் கேட்டு, அவன் அந்த நிகழ்ச்சிகளோடு ஒன்றிப் போய்விடுகிறான். தெளிந்த மெல்லிய சிற்றலைகள் அசைந்தாடிடும் அமைதியான தடாகம் போன்று அவன் முகம் விளங்குகிறது.

எங்கிருந்தோ ஓர் இசைப்பாடல் ஒலிக்கிறது! ஆம்; அவன் கேட்ட பாடல்! பலமுறையும் கேட்ட பாடல்

“இன்பஅமுதே! அன்பின் உயிரே!
இதயமலரே! உதயக்கதிரே!
என்னை மறந்து உன்னைத்தழுவ-
உன்னை மறந்து என்னைத்தழுவ-
அருகில்வருக! அள்ளிப்பொழிக!”

அவன் பாடியது! அவனும் இணைந்து பாடியது! இப்போது அவள் பாடவில்லை; அவனும் பாடவில்லை! அவர்கள் பாடியதை யாரோ ஒருத்தி எங்கிருந்தோ பாடு கிறாள்! அவனுக்கு இப்போது பாடுகிறவளைப் பற்றிக் கவலையில்லை- அப்போது பாடினாளே அந்த அழகரசி - அவள் இப்போது இல்லை - அவளை இயற்கை பறித் தோடிச் சென்றுவிட்டது! பல திங்கள்கள் பறந்து விட்டன! இப்போது அதே பாட்டு! அதே பாட்டு! அவன் நெஞ்சத் தடாகத்தின் கீழ்ப்பரப்பில் மீன்கள் முட்டிக் கொள்கின்றன! எத்தனையோ நினைவுகள்! எத்தனையோ நிகழ்ச்சிகள்! ஒன்றோ டொன்று மோதிக்கொள்கின்றன! அக்குளத்தின் மேற்பரப்பு; முகம்தானே; அதில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த அமைதியைக்காணவில்லை! கலக்கம்! கவலையின் பேரலைகள்!

நெஞ்சின் அடித்தளத்தில் நிகழ்ந்திடும் போராட்டத்தின் விளைவு! அந்த விளைவு கண்டு, நெஞ்சுக்குள் நடப்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

நெஞ்சத்தில் ஏற்படும் மாறுபாடு எத்தகையது என்பதை, முகத்தின் வாயிலாக எளிதில் அறிந்துகொள்ளலாம் அல்லவா? தன்னெதிரில் உள்ளதைத் தன்பால் காட்டுகின்ற கண்ணாடியைப்போல், அகத்தில் ஏற்படும் உணர்வுகளை - முகம் தன்மூலமாகக் காட்டிவிடுகிறது என்கிறார், வள்ளுவர்.

அமைதியின் மெருகு, பொலிவை வழங்கிடும் வண்ணம் விளங்கிய அவன் முகத்தில், எங்கிருந்தோ ஒலித்த ஒரு பாடல், எத்தகைய சோகக் கொந்தளிப்பை உருவாக்கி விட்டது!

இது அவனது நெஞ்சத்தை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணாடிதானே! எனவே அகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி முகம்தானே!

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்னதான் மனப்புயலை மறைக்க முயன்றாலும் - மன உணர்வுகளை ஒளித்திட முயன்றாலும் - தன்னை அடுத்துள்ள பொருளைத் தன்னிடம் காட்டுகிற கண்ணாடி யைப்போல முகம் காட்டிவிடும்!

அங்கிருந்த உயிர்த்தோழன், தனது நண்பனின் முகமாற்றத்தைக் காணுகிறான். இசையொலியையும் கேட்கிறான். நண்பனின் முகம் ஏன் இப்படி மாறிவிட்டது என்பதை, நுட்பமாக அவனால் அறிந்து கொள்ள முடிகிறது.

அத்தகைய நுட்பமான அறிவுடையவன் எனத்தக்க அளவுக்கு, பிறர் கருத்து என்ன என்பதை - அவர் நெஞ்சில் அலைபாய்ந்திடும் உணர்வு எத்தகையது என்பதை - அவரது முகத்தைப் பார்த்து அளந்து கூறுகிற கோலாக இருப்பது எது என ஆராய்ந்து பார்த்தால், அது கண்களைத் தவிர வேறில்லை என்று குறள் திட்டவட்டமாகக் கண்களின் பெருமையைப் பேசுகிறது!


அகத்தின் மாற்றம் முகத்தில் தெரிகிறது! அப்படித் தெரிவதை அளந்து சொல்லும் கோலாகக் கண் விளங்குகிறது!

"நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற"

அதிகாரம் - 71 - குறிப்பறிதல்; பாடல்கள் - 706, 710

பளிங்கு = கண்ணாடிக்கல்; கடுத்தது = மிகுந்துள்ளது;
நுண்ணியம் = நுட்பமான அறிவு

BHAVAN LIBRARY



கலைஞரின் குறுநாவல்

மலைவீழ் அருவி! வெள்ளி நூல்கள் வேகமான காற்றில் அசைந்தாடுகின்றனவோ! அல்ல! அல்ல! இடையிடையே பனங்குகள் நூற்றுக்கணக்கில் கொட்டப்படுவது போலவும் காட்சி தருகின்றதே! சுற்றிலும் பலாமரங்கள்! அவற்றின் வேர்களிலே கனிகள்! அந்தக் கனிகளுக்குள்ளே இருக்கும் சுளைகள்! அவை வெளியே தெரிவதில்லை. ஆனாலும் பலாக்கனிகளைப் பார்க்கும்போதே, அவைகளுக்குள் இருக்கும் சுளைகள் தேனாகச் சுவைக்கும் என்ற இன்ப உணர்வு எழுகிறது!

அந்தப் பலாக்கனி திடீரென வெடித்துச் சுளைகள் வெளிப்பட்டால், அந்த அருவியோரம் நிற்கும் மாதுளை மரத்தில் ஒரு கனி கீழே விழுந்து உடைந்து மாதுளை முத்துக்கள் சிதறினால் - அவற்றைக் கண்டவுடன், அவைகளின் அழகுமட்டுமல்ல; அதற்குள் அடங்கியிருக்கும் சுவையும் நம்மையொரு இனந்தெரியாத மகிழ்ச்சியில் ஆழ்த்திடும் அல்லவா?

அந்த அருவியில் ஒரு பொற்பதுமை குளிக்கிறது! அருவியின் நீர்க்கரங்கள் அந்தப் பதுமையின் மேனி முழுவதையும் தழுவித் தடவுகின்றன. வண்ணத் தாமரையொத்த முகத்தை - வலம்புரிச்சங்கனைய கழுத்தை - வாழைப் பூக்கள் இரண்டு முளைத்தெழுந்த விதத்தை - வாடுமே இடையெனத் தாங்கிப் பிடிக்கும் இரு தந்தத்தை

- அருவி, அணைத்தும் பிடித்தும் ஆடிடும் குதூகலத்தைத் தொலைவில் நின்ற அவன், பொறாமையுமிழும் கண்களோடு பார்த்துத் துடித்துக் கொண்டிருந்தான்.

அவள் குளித்து முடித்து, ஆடையைப் போர்த்தி அழகு மேடுகள் அதிகம் தெரியா வண்ணம் அருவியின் கரையோரம் ஏறி நின்றாள். அவனும் அவள் எதிரே வந்து நின்றான். அவனை அடிக்கடி அங்கு அவள் சந்திக்கிறாள் எனினும் ஆழமாக நோக்கியதில்லை. அங்கு ஒருகணம் நின்றதுமில்லை. அவனோ விடாப்பிடியாக நாள்தோறும் அங்கு நடந்து கொண்டிருந்தான். அன்று அவளும் அவன் வரமாட்டானா என்று எதிர்பார்த்து ஏங்கினாள் போலும்!

அதனால்தான் அவனைக் கண்டதும் மான் போல் துள்ளி ஓடிவிடாமல், மயங்கி நின்றாள். பின்னர் அங்கிருந்து நகர்ந்தாள். நகர்ந்தபோது ஒரு புன்னகை அவள் இதழ்களில்! அந்தப் புன்முறுவலை அவன் விழிகளால் பருகிக் கொண்டிருக்கும்போதே, அவள் மறைந்து விட்டாள்.

அவன், வேரில் பழுத்த பலாவைக் கண்டான்! மரத்தில் தொங்கிய மாதுளையைக் கண்டான்! அங்கு கொடிகளில் நிரம்பியிருந்த அரும்புகளைக் கண்டான்!


கொடியிலாடிக்கொண்டிருந்த ஓர் அரும்பை விரல்களால் மெல்லத் தொட்டான். பலாச்சுளையில் சுவை மறைந்து கிடப்பதைப்போல் - மாதுளை முத்தில் சுவை ஒளிந்து கொண்டிருப்பதைப்போல் - இதோ இன்னமும் மலராத இந்த அரும்புக்குள் நறுமணம் அடங்கிக் கிடக்கிறது! அரும்பில் பதுங்கியுள்ள நறுமணம் போலத்தான் - அதோ முறுவலித்து விட்டுப்போகிறாளே; அவளது புன்னகையென்ற அரும்புக்குள் 'அவன் மீது அவளுக்கும் அளவற்ற காதல் உண்டு' என்ற இன்பக் குறிப்பு அடங்கியிருக்கிறது - என அவன் கருதிக்களிக்கிறான்.

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு"

அதிகாரம் - 128 - குறிப்பறிவுறுத்தல்; பாடல் - 1274

முகை = அரும்பு





குறளில் வரும் 'குடிசெயல்வகை' எனும் அதிகாரம், குடும்பத்தை மட்டுமே குறிப்பதல்ல! சுற்றியிருப்போர், நாட்டு மக்கள், இனத்தார் எனப் பல பொருள் கொண்டு காணவேண்டிய கருத்துக் கருவூலம் அது! நாட்டுக்கு உழைக்கும் தியாக மறவனாயினும் - அப்படி உழைத்திடும் தன்னலமற்றோர் அணியின் தளபதியாயி னும் - இன எழுச்சியூட்டி இழிவு போக்க எழுந்து நிற்கும் இலட்சியவாதியாயினும் - அவனை நோக்கி எத்தனையோ எதிர்ப்புகள்! ஏசற் கணைகள்! தூற்றல் மொழிகள்! சிறைகள்! வதைகள்! தலையெடுக்கவொட்டாமல் தனிமைப்படுத்திட வேண்டுமென்ற தடைகள்! சூழ்ச்சிகள்! அடக்குமுறைகள்! பழி வாங்கும் படலங்கள்! அவதூறுகள்! துரோகங்கள்! இத்தனையையும் ஒருவன் தாங்கிக் கொண்டால்தான்; அவன் யாருக்காக - எந்த இனத்திற்காக அல்லும் பகலும் பாடுபடுகிறானோ; அந்த இனத்திற்கு அவனால் இயன்ற அளவு மேன்மையைத் தேடித்தரமுடியும். அப்படியொருவன் தன் மீது வீசப்படுகிற ஆவேசக் கண்டனங்களை - ஆபாசப் பொழிவுகளைத் தாங்கிக்கொள்வது எப்படியிருக்கிறது தெரியுமா? என்ற கேள்வியைக் கேட்டு, அதற்கு வள்ளுவரே விளக்கமும் தருகிறார்.

விளக்கம் தருவதற்கும் - அதனை நாம் பெறுவதற்கும் ஏற்ற இடமாக அவருக்குப் போர்க்களம்தான் தெரிகிறது. கத்திகளின் ஒளி வீச்சுக்களும் - கட்டாரிகள், சிறகின்றி எதிரும் புதிருமாகப் பறக்கும் காட்சிகளும் - கவசங்களுக்குள் நுழைந்தும் கேடயங்களில் மோதியும் சதிராடிடும் போர்வாட்களும் - களத்திலே நாம் காண்பவை! குதிரைகள் பாய்ந்து வந்து குளம்படிகளால் மிதிக்கின்றன! யானைகள் துதிக்கையால் தூக்கி அடிக்கின்றன! கடுவேகத்தில் உருளும் தேரின் சக்கரங்கள் உடலில் ஏறிச் செல்கின்றன! ஏ! அம்மா! பயங்கர எதிர்ப்பைத் தாங்கமுடியாத படைவீரர் சிலர் பதுங்குகின்றனர்! சிலர் திரும்பியோடுகின்றனர். சிலர் எதிரிகளிடம் மண்டியிடுகின்றனர்! சிலர் செத்து மடிவோம் என்று சிரித்த முகத்துடன் வேல் தாங்கி - விழுப்புண் தாங்கி - களத்தில் வீர மரணத்தை அணைக்கின்றனர்! படை நடத்திடும் அஞ்சாநெஞ்சு கொண்ட தளபதியோ; தன்னுடன் களம்புகுந்தோர் புறமுதுகிட் டாலும் அதனையும் தாங்கிக்கொண்டு - தன்னுடன் அணிவகுத்து வந்தோர் பகைவனிடம் பணிந்து குனிந்தாலும் அதற்காகவும் உறுதியைத் தளரவிடாமல் - எப்பக்கமிருந்து படைக்கலன்கள் பாய்ந்திடினும் அவற்றைத் தானேதான் தாங்கித் தீர வேண்டிய பொறுப்புக்கு உரியவன் என்ற திடமனத்துடன், தன்னுடன் தொடர்ந்து வரும் வீரர்களின் துணையோடு களத்தில் முன்னேறிக் கொண்டேயிருக்கிறான்.

குடிப்பெருமையெனும் இனப்பெருமை காத்திடப் பொறுப்பேற்றுக் கொண்டவனும் போர்க்களத்தில் எதிரிகளின் தாக்குதலைத் தாங்குகிற அஞ்சா நெஞ்சத் தளபதியைப்போல இருந்திடல் வேண்டுமென்கிறார் வள்ளுவர்!

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை"

அதிகாரம் - 103 - குடிசெயல்வகை; பாடல் - 1027

அமரகம் = போர்க்களம் தமரகம் = சூழ இருக்கும் இனத்தார்

வன்கண்ணர் = அஞ்சாத வீரர்





கதிருடன் எழுந்த கழனியில் உழன்று, நெற்கதிரினைக் குவிக்கும் கடமையில் தவறாக் கணியன் என்பான், குன்றன் என்னும் மகனைக் குலவிளக்காய்ப் பெற்றிருந்தான். அவனுக்கு எதிர்வீட்டில் பச்சையெனும் முதியோன் பசலையான் எனும் மகனைப் பாசமுடன் வளர்த்து வந்தான். கணியன் கற்றுத்தந்த நற்கல்வியெலாம் பயின்று கோபுர விளக்கென உயர்ந்தான் குன்றன். பசலையான் அருகிலிருந்தால் போதுமெனக்கூறிப் பகுத்தறிவு அவன் பக்கம் நெருங்காமலே ஆக்கிவிட்டான் பச்சை!

ஒரு நாள், நெருங்கிய உறவினன் வீட்டில் அவனது தாய் இறந்துவிட்டாள் எனச் செய்தி வர, அவ்வூர் நோக்கிப் பசலையானும் குன்றனும் சென்றனர், இரங்கல் தெரிவிக்க! தாயை இழந்து சோகத்தில் வீழ்ந்திருந்த உறவினனைப் பார்த்துக் குன்றன் ஆறுதல் மொழியாக, "உன் தாய் உனக்கு மட்டுமா தாயாக இருந்தாள். இந்த ஊருக்கே தாயாகத்தான் திகழ்ந்தாள்;" என்று கூறினான். கண் கலங்கினான்! இறுதிக் காரியங்கள் நடைபெற்றபிறகு இருவரும் ஊர் திரும்பினர்.

சில நாட்கள் கழிந்தன! பக்கத்து ஊரில் பசலையானின் நண்பன் ஒருவன்! அவனது மனைவி இறந்துவிட்ட செய்தி கிடைக்கவே பசலையான் பறந்தோடினான், நண்பனுக்கு ஆறுதல் கூறிட முனைந்தான்! தாயை இழந்த மகனைப் பார்த்துக் குன்றன் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன! நண்பன் கதறியழுது கொண்டிருக்கிறான்.

ஊரார் கூடியிருக்கின்றனர். பசலையான், நண்பனின் தோளில் கைவைத்து, "அழாதே! உன் மனைவி உனக்கு மட்டுமா மனைவியாக இருந்தாள்! இந்த ஊருக்கே..." என்று அவன் முடிக்கவில்லை.

அவன் உடையெல்லாம் கிழிந்தது! உடல் எங்கும் புண்ணானது! ஓடிவந்தான் தந்தையிடம்! நடந்த உண்மையை ஒளிக்காமல் சொன்னான். கணியனும் குன்றனும் அங்கு விரைந்து வந்து அவன் காயங்களைக் கண்டு உருகினர்.

"இப்படி எனக்கொரு பிள்ளை வந்து பிறந்தான் பார்த்தாயா?" என்று பச்சை, கணியனிடம் கவலை தெரிவித்தான்.

கணியன் சொன்னான்.

"ஒருவன் பெறவேண்டிய பேறுகள் அனைத்திலும் மிக உயர்ந்த பேறு, அறிவறிந்த மக்களைப் பெறுவதைத் தவிர வேறொன்றுமில்லை."

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

அதிகாரம் - 7 - மக்கட்பேறு; பாடல் - 61





உருவிய வாளை உறையிலே போடாமல் போரிட்டுக் களம் பல வென்று அசைக்க முடியாத பேரரசை உரோமானிய மன்னர்கள் உருவாக்கினார்கள்.

அவர்கள் கட்கமேந்திச் சென்று கால்வைத்த இடமெல்லாம், அவர்கள் காலடியில் வீழ்ந்தன. கரங்களில் ஏந்திச்சென்ற கொடிகளை, எதிரிகளின் கோட்டை உச்சியில் ஏற்றிவிட்டே திரும்பினர்.

மகுடபதிகள் பலர் அவர்கட்கு மண்டியிட்டனர். கப்பப் பொருளாக முத்துக்களும் பவளங்களும் அவர்தம் கொலுமண்டபங்களில் குவிக்கப்பட்டன.

உரோமாபுரிப் பேரரசு, உலகின் தங்கக் கிரீடமாக ஒளிவிட்டு விளங்கிய காலத்தை, அந்நாட்டு வீரர்களின் தோள்வலிமையால், அவர்களை வழிநடத்திய தவ நாயகர்கள் படைத்துக் காட்டினார்கள்.

சீசரின் புகழும் - அண்டனியின் கீர்த்தியும் - அகஸ்டசின் ஆற்றலும் அகிலத்தில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தன. வீர வரலாற்றுப் பெட்டகமாக விளங்கிய அந்தப் பேரரசு, அதன் வழி வழி வந்த ஆளுநர்களால் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து மாய்ந்ததற்கும் வரலாறு உண்டு!

வாளேந்தி நின்ற வரிப்புலிகள், மானனைய மங்கையரின் மென்மைமிகு தாளேந்திக் கிடந்தனர். பாசறைகளில் கூடிக்கிடந்தோர் பஞ்சணைகளில் வஞ்சியரை விட்டுப் பிரிந்து வர இயலாமல் அவருடன் கொஞ்சு மொழி பேசிப் பொழுதைக் கழித்தனர். மதுபானம் சுவைக்கிறதா! அல்லது மங்கையரின் இதழ் பானம் சுவைக்கிறதா - என ஒப்பிட்டுப் பார்ப்பதிலே, அம்சதூளிகா மஞ்சங்கள் ஆராய்ச்சிக் கூடங்களாக மாற்றப்பட்டன.

பகைவரின் தோளோடு மோதிய தோள்கள் - பாவையின் தொடையோடு இணைந்து கிடந்தன. நெஞ்சிலே காமநெருப்பு - தலையிலே மதுவின் கிறுகிறுப்பு - கலகலவெனக் கட்டித்தழுவிக் கொட்டிடும் இன்பச்சிரிப்பு! ஆடல்! பாடல்! ஊடல்! கூடல்! வெறிபிடித்து மேலே விழுகின்ற காண்டாமிருகங்களைக் கண்டு மிரண்டோடிக் கண் கசக்கும் இளநங்கையரைப் பார்த்து, "போர்க்களத்தில் ஒப்பாரியும் போகக் களத்தில் புலம்பலும் கோழைகள் செயலடி கோமளாங்கி!" என ஆறுதல் கூறி, அணைத்துக் கசக்கி முகர்ந்திடும் காட்சிகள்! நாளைக்கொரு ராணியை மாற்றும் ராஜாக்கள்! வேளைக்கொரு ராஜாவை மாற்றும் ராணிகள்! கழுதைப்பாலில் குளித்து மேனியை மெருகேற்றிக்கொள்ளும் பேரழகிகள்! அவர்களைத் திருப்திப்படுத்த "காயகல்பம்" அருந்தும் ஆடவர்கள்!

வீரம் செழித்திருந்த நிலம், விரகதாபக்காரர்களின் வேட்டைக்காடாயிற்று! மாவீரர்கள் பவனி வந்த பூமி, மதனகாமராஜாக்களின் கேளிக்கை அரங்கமாக மாறிற்று!

களிப்பு! காதல்! காமம்! மது! மகிழ்ச்சி! வெறிக்கூத்து! இதிலே கடமையுணர்வு இருந்த இடம் தெரியாமல் போயிற்று!

அரசு அலுவல்கள் தேங்கிக் கிடந்தன! அலுவல்களைத் தூண்டிட வேண்டிய அரசர்கள்தான் அழகிகளின் மீது தூங்கிக்கொண்டிருந்தனரே! எல்லாம் தானே நடக்குமென்று "எல்லாம் இன்பமயம்" எனப் பாடி மகிழ்ந்த அரசினர் - எல்லாம் இழந்து நின்றனர்.

- இது உரோமாபுரி, உச்சிவானத்திலிருந்து தரையில் உருண்டுபோன வரலாறு!

இந்த வரலாறு - அடுத்து வருகிறவர்களுக்குப் பாடமாக இருக்க வேண்டுமல்லவா?

அதைத்தான் வள்ளுவர் அழகு பொழிந்திடக் கூறுகிறார்.


"களிப்புக்கடலில் வீழ்ந்து செருக்குக் கொண்டு கடமையை மறந்திருக்கும் போது; அவ்வாறு கடமை மறந்து சோர்ந்தவர்கள் முற்காலத்தில் அழிந்து போனதை நினைக்க வேண்டும்".

அதற்கு இதோ குறள்:

"இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து"

அதிகாரம் - 54 - பொச்சாவாமை; பாடல் - 539

இகழ்ச்சியின் = கடமையை மறந்து இருந்தமையின்



காட்டாற்று வெள்ளம் எனக் காதல் கரை புரள, தோட்டத்தில் தோகையினைத் தொட்டுச் சுவை பார்த்தான். மானாக முன்னர் மருண்ட நிலைமாறி, அந்த ஆணழகன் மடியினிலே அவளும் துவண்டுவிட்டாள்.

கூட்டுக்குரல் எடுத்துக் குயில்கள் நலங்கு இசைக்க - ஓட்டம் பிடித்து அணில்கள் மரங்களில் இலை அசைக்க - மீட்டிய வீணையென மெல்லியள் முனகலிட - இன்ப வேட்டையே நடத்தினான் வெற்பு நிகர் தோளுடையான்!

எழிலுக்குப் பெருமைதனை இணைக்க வந்த ஏந்திழையாள், விழியாலே அவனை விழுங்கியே மனத்திரையில் அழியாத ஓவியமாய் ஆக்கிக் களித்திடுவாள். தொழுதறியாள் தெய்வத்தை - நெஞ்சினுள்ளே தொழுதிடுவாள் காதலனை!

எப்போதும் தழுவியே கிடந்திட்டால் தருவார் யார் செலவுக்கு? எனவே தொழில் புரிய வேண்டித் துணைவனும் சென்றிட்டான்.

பொழுதோ போகவில்லை பூவைக்கு; முன்னர்ப் பழகி வந்த தோழியைப் பார்த்து வரப் புறப்பட்டாள்.

நீண்டநாள் கழித்து வரும் நேரிழையைக் கண்டதுமே தாண்டவமே ஆடினாள் - தணியாத பாசத்தாள் - தங்கம் நிகர் தோழி. ஏதேனும் தின்னக் கொடுப்பதற்கோ தித்திப்புப் பொருள் இல்லை. பால் மட்டும் இருந்தது; அதனைப் பக்குவமாய்ச் சுடவைத்தாள். சீனியைக் கலந்தாள்; சேயிழைபால் நீட்டினாள்.

குவளைவிழிக் கோதையவள் பால் குவளையைத் தொட்டதுமே,

"என்னடி இவ்வளவு சூடு?" - என்று உடனே வைத்துவிட்டாள் கீழே.

"சூடு குறைந்துவிட்டால் சுவைக்காது என்று முன்பு கூறுவாயே! இப்போது எப்படி மாறிவிட்டாய்?" - என்று வியப்புக் கணை தொடுத்தாள் விளங்காத தோழி.

அவள் அறிவாளா ஆரணங்கு நினைப்பதனை?

'கொஞ்சும் தமிழாலே என்னைக் குளிப்பாட்டும் காதலரோ என் நெஞ்சோடு நெஞ்சாக நிறைந்து உறைகின்றார். தோழியோ, கொஞ்சமும் புரியாமல் கொதிக்கும் பால் தருகின்றாள். சூடு பறக்கும் பால் நான் குடித்தால் - அந்தச் சூடு பொறுக்காமல் துடிப்பாரே நெஞ்சுக்குள் இருக்கின்ற என் தலைவர்! எப்படிப் பருகிடுவேன்? எப்படி என் அன்பரை வேக வைப்பேன்? தப்பன்றோ நான் அவரைத் தகிக்கவிட்டுப் பால் அருந்தல்?'


எண்ண ஓட்டந்தான் இவ்வாறு ஓடிட, அன்ன நடையழகி - பால் ஆறும்வரை காத்திருந்தாள்.

காதற் சிறப்பினை எத்துணைக் கனிச் சுளையாய் வழங்குகிறார் வள்ளுவர்!

"நெஞ்சத்தார் காதல் அவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து"

அதிகாரம் - 113 - காதற் சிறப்புரைத்தல்; பாடல் - 1128





உருண்டு திரண்டு கருங்கல்லால் செதுக்கப்பட்டது போன்ற உருவம்; முரட்டு மீசைகள்; பாறைகளையொத்த தோள்கள்; கண்டோர் அஞ்சிடும் கனல் பொழியும் கண்கள்; அவனை மிஞ்சிடும் கம்பீரம் கொண்ட குதிரையொன்றில் அமர்ந்து பயணம் நடத்துகிறான். பெயர் அன்புக்கடல்! பெயருக்கும் அவனுக்கும் எவ்வளவு பொருத்தம் என்பதைக் காணத்தான் போகிறோம். அவனது தோளில் ஒரு பை தொங்குகிறது. அதன் வயிறு நிறைய வைரக்கற்கள். பயணத்தினிடையே அவன் வயிறு நிறைவதற் காக மற்றொரு பையில் உணவுப் பண்டங்கள். அந்தப் பையைக் குதிரையின் கழுத்தின் மேல்பகுதியில் கட்டியிருக்கிறான்.

வழியில் ஒரு குளிர் நீரோடை! கரையில் ஒரு நிழல்! குதிரையை நிறுத்தி அங்கே இறங்கினான். வைரம் நிரம்பிய பையைக் கையுடன் எடுத்துக்கொண்டு, உணவுப் பையை அவிழ்த்தவாறு மரத்தடியில் அமர்ந்தான். குதிரையோ, பசும்புல் தரையில் படுத்துப் புரண்டு களைப்பைப் போக்கியது. அன்புக்கடலின் பசி அடங்கியது. எஞ்சிய உணவுப் பண்டத்தை மீண்டும் பையிலிட்டுக் கட்டிக் கொண்டிருந்தான்.

“அய்யா! குடல் எரியுது! ஒரு துளி உணவு!

நீங்கள் மகராசனாயிருப்பீர்கள்.”

குரல் கேட்டு, அன்புக்கடல் திரும்பினான்! ஓர் ஏழை! எலும்பும் தோலுமாக ஏக்கம் குடி கொண்ட முகத்துடன்! இறப்புலகின் அழைப்பைப் பெற்றுள்ள நிலையில்!

“சே! பிச்சைக்காரக் கழுதை போடா! போ!”

அன்புக்கடலின் சீற்றம் பொங்கியது!

"அடப்பாவி! எச்சிற் கையால்கூட காக்கை விரட்ட மாட்டாயா?"

ஏழை குமுறினான்!

"ஆமாண்டா! ஆமாம்! எதற்காக எச்சிற் கையால் காக்கையை விரட்ட வேண்டும்! அந்தக் கையிலிருந்து விழுகிற பருக்கையை காக்கைக்குத் தருவதைவிட, நானே தின்பது குற்றமா என்ன?"

"சரியான கஞ்சன்!"

ஏழை, இந்தச் சொல்லை உதிர்த்தவுடன், அன்புக்கடல் அவன் மீது பாய்ந்தான். ஏற்கெனவே செத்துக்கொண்டிருந்த உடல், முழுவதும் சாகாமல் கீழே சுருண்டு விழுந்தது!

அப்போது மின்னல் போல ஒரு நிகழ்ச்சி! அன்புக்கடலுக்கு எதிரே அவனைவிட வலிமை கொண்ட தோற்றமுடைய ஒரு முரடன் நின்றான்.

அந்த முரடனின் நீண்ட கரங்கள் வளைந்தன. வளைந்த கரங்கள், அன்புக் கடலின் கன்னத்தில் புயல் வேகத்தில் விளையாடின. அவன் அலறி வீழ்ந்தான். அவன் தோளில் இருந்த வைரம் நிரம்பிய பையை முரடன் பறித்துக்கொண்டான். அதைத் திரும்பப் பெற அன்புக்கடல் நடத்திய போராட்டத்தில் வெற்றி கிடைக்க வில்லை. முரடனைத் துரத்திக்கொண்டு ஓடிக்கொண்டேயிருந்தான். முரடன், வெகு தொலைவு சென்று மறைந்து விட்டான். அன்புக்கடல் விட்டுச்சென்ற உணவுப் பண்டங்களைக் காக்கை குருவிகள் வயிறு புடைக்கத் தின்றுகொண்டிருந்தன.

சருகாகக் கிடந்து சாகப்போகும் அந்த ஏழ்மையின் உருவம், ஏதோ முணு முணுத்தது! உற்றுக் கேட்டபோது அது ஒரு திருக்குறள்!

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கும்"

"தமது கன்னத்தில் குத்துவிட்டு உடைக்கிற அளவுக்குக் கையை மடக்குகிற தம்மினும் வலியோர்க்கன்றி, ஈகைக்குணமற்ற கயவர்கள் எளியோருக்காகத் தமது ஈரக்கையையும் உதறமாட்டார்கள்."


இது அந்தக் குறளுக்குப் பொருள்!

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகி விட்டால்-
ஓடப்பர் உதையப்பர் எல்லாம்
ஓர் நொடிக்குள்
ஒப்பப்பர் ஆகிடுவர், உணரப்பா நீ!"

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடிய கருத்தினை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் எவ்வளவு அழகாக ஈன்றெடுத்துத் தந்திருக்கிறார்!

அதிகாரம் - 108 - கயமை; பாடல் - 1077

ஈர்ங்கை = ஈரக்கை
விதிரார் = உதறமாட்டார்
கொடிறு = கன்னம்
கூன்கை = வளைத்த கை



ஆசையை அறுத்து அறத்தை வளர்த்திட வேண்டுமென்று கங்கணம் பூண்ட இரண்டு துறவிகள்! மற்ற உயிர்களுக்கு உதவிட வேண்டுமென்பதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றிடுவோமென, அவர்கள் இருவரும் தங்களின் குருவினிடத்திலே உறுதிமொழியளித்து விட்டுப் பயணம் மேற்கொண்டனர். ஒரு துறவியின் பெயர் அறவாழி! இன்னொருவர் பெயர் ஏனாதி! மலைக் குகையொன்றில் இருவரும் இளைப்பாறத் தங்கியுள்ளனர் எனக் கேள்வியுற்ற அவ்வூர் செல்வந்தர் ஒருவர், அவர்களைக் காண்பதற்குச் சென்றார். இரண்டு தட்டுகளில் பழம் வைத்துக் கொடுத்து அவர்களைச் செல்வந்தர் வணங்கினார். துறவிகள் தங்கள் பசி நீக்க இரண்டு பழங்களை வைத்துக்கொண்டு, மிச்சமிருந்த எல்லாப்பழங்களையும் ஏழை எளியோர்க்குக் கொடுத்து மகிழ்ந்தனர். செல்வந்தர், துறவிகள் இருவரையும் தனது இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். அவர்கள் மறுத்துவிட்டனர். செல்வந்தர், பத்து பொற்காசுகளை எடுத்து அறவாழியிடம் ஐந்து காசுகளையும் ஏனாதியிடம் ஐந்து காசுகளையும் அளித்து - "வழிப்பயணத்தின் போது பிறர்க்குதவிட இதனைப் பயன்படுத்திக் கொள்க!" எனக் கூறி விடைபெற்றுச் சென்றார்.

பொற்காசுகளைப் பையில் போட்டுக்கொண்டு துறவிகள் அந்தக் குகையிலேயே சற்றுக் கண்ணயர்ந்தனர். அறவாழி நிம்மதியாகத் தூங்கினார். ஏனாதி அமைதியான உறக்கமின்றி அவதிப்பட்டார்.

ஏனாதியின் உறக்கத்தில் ஓர் கனவு! செல்வந்தரின் அழைப்பை ஏற்று அவர் மாளிகைக்குச் செல்கிறார். ஆடம்பரமான வரவேற்பு தரப்படுகிறது! பாத பூசை நடைபெறுகிறது! அவரது காலடியில் வெள்ளி நாணயங்கள் கொட்டப்படுகின்றன! என் இல்லத்திலேயே தங்கிவிடுங்கள் என்று செல்வந்தர் கேட்கிறார்! ஏனாதி, புன்னகையுடன் அதனையேற்று அந்த இல்லத்தில் தங்கிவிடுகிறார். தங்குவதற்கேற்ற தனியறையொன்று ஒதுக்கப்படுகிறது! நாள்தோறும் செல்வந்தர், ஏனாதியை வணங்கி வாழ்த்துப் பெற்றே வெளியே செல்கிறார்.

தனியறையில் தரையில் படுத்துறங்கிய ஏனாதிக்கு, கட்டிலும் மெத்தையும் தேவைப்படுகின்றன! சில நாட்களுக்குப்பிறகு கால்கை பிடித்திட ஆட்களும் தேவைப்படுகிறார்கள்! பின்னர் அந்த ஆள் ஓர் ஆரணங்காக இருந்திடல் நலமன்றோ என்ற ஆசையும் எழுகிறது ஏனாதிக்கு! செல்வந்தரிடம் இந்தச் செய்தி சொல்லப்படுகிறது! கண்டுகொண்டிருந்த கனவில் திடீர் மாற்றம்! செல்வந்தர் வீட்டுப் படிக்கட்டில் ஓர் ஓரத்தில் ஏனாதி நின்றுகொண்டிருக்கிறார். அவரைப் பார்த்தும் பார்க்காதது போலச் செல்வந்தர் தனது பல்லக்கு வண்டியில் ஏறி வெளியே போகிறார்! ஏனாதி முகத்தில் அசடு வழிகிறது!

கனவு கலைந்து ஏனாதி விழித்துக்கொள்கிறார். அறவாழியை எழுப்பித் தான் கண்டகனவைச் சொல்லி, மனத்தில் ஏற்பட்ட கலக்கத்திற்கு மருந்து கேட்கிறார்!


அறவாழி, ஏனாதியைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறுகிறார்!

“செல்வந்தர் என்னிடம் தந்த ஐந்து பொற்காசுகளின் மதிப்பைப்பற்றி நான் கவலை கொள்ளாமல் - வழியில் சந்திக்கும் ஏழைகட்கு வழங்கிவிடலாமென்ற நினைவுடன் தூங்கினேன்! உமது நிலை அப்படி இருந்திடவில்லை! ஐந்து பொற்காசுகளின் மதிப்பையும் அவற்றை வழங்கிய செல்வந்தரின் மகிமையையும் அவர் விடுத்த அழைப்பையுமே பெரிதாக எண்ணிக் கண்ணை மூடியிருக்கின்றீர்! குறள் மொழியை மறந்துவிட்டீரா? ஒருவன் ஆசைகளைக் கண்டு அஞ்சி வாழ்வதுதான் அறம்! ஏன் தெரியுமா? ஒருவனைச் சோர்ந்து போய்ச் சுருண்டு விழுமாறு செய்து வஞ்சிப்பது, அவனை முற்றுகையிடும் ஆசைகளேதான்!”

அறவாழியின் அறிவுரை, ஏனாதியின் நெஞ்சில் குறள் வரிகளை அலைபாய விடுகின்றது!

“அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா”

அதிகாரம் - 37 - அவா அறுத்தல்; பாடல் - 366



வளநாடு எனும் பெருநாட்டை ஆண்டுவந்த பேரரசன், நிலா நாட்டுப் படையெடுப்பை எதிர்க்க வொண்ணாது தோல்வி கண்டான். வெற்றி கண்ட நிலா நாட்டு மன்னன், வளநாட்டுப் பேரரசனைச் சிறையில் அடைத்துவைத்தான். சிறைக் கோட்டத்தில் இருந்தவாறே, வெளியில் குறுநில மன்னர்கள் பலரது துணையை வளநாட்டான் யாருமறியாவண்ணம் தேடிக்கொண்டான். ஒருநாள், நிலா நாட்டுச் சிறையிலிருந்து வளநாட்டான் தப்பி வெளியேறிவிட்டான். மலைநாட்டுக் குறுநில மன்னன் ஒருவன் மட்டும், வளநாட்டுப் பேரரசனுக்குத் துணை நிற்க மறுத்து விட்டான். மறுத்ததோடு மட்டுமல்லாமல், வளநாட்டான் நேர்மையற்றவன் என்றும் நெறிகெட்டவன் என்றும் மலைநாட்டான் செய்திகளைப் பரப்பி வந்தான். வளநாட்டானைத் தோற்கடிக்க நிலா நாட்டானுக்குத் தன் படைகளை அனுப்பினான். வளநாட்டானுக்குத் துணையாக இருந்த மற்ற குறுநில மன்னர்களையெல்லாம் சந்தித்து, வளநாட்டானைக் குறித்து இழிவான செய்திகளையெல்லாம் கூறினான். அந்தக் குறுநில மன்னர்களோ, மலை நாட்டான் பேச்சைக் காதிலே போட்டுக்கொள்ளாமல் வளநாட்டான் பக்கம் நின்றனர். போர் முரசு கொட்டப்பட்டது. நிலா நாடு படுதோல்வி அடைந்தது. நிலா நாட்டு மன்னன் இறுதிவரை போராடிக் களத்திலேயே உயிர் நீத்தான்.

வளநாட்டுப் பேரரசு, நிலா நாட்டையும் இணைத்துக்கொண்டு தன் ஆட்சியின் பரப்பை மேலும் விரிவாக்கிக் கொண்டது. வளநாட்டானுக்கு துணைநின்ற குறுநில மன்னர்கள் எல்லாம் பேரரசனை வாழ்த்தினார்கள். வளநாட்டானும் அவர்கட்கு நன்றி கூறி வழியனுப்பி வைத்தான். வளநாட்டான் ஒருநாள் கொலுமண்டபத்தில் அமர்ந்திருந்தபோது, மலைநாட்டுக் குறுநில மன்னனிடமிருந்து தூதுவன் ஒருவன் ஓலையுடன் வந்து வணங்கி நின்றான். அது, மலைநாட்டான், வளநாட்டானுக்கு அனுப்பிய மன்னிப்புக்கோரும் மடல்! "பேரரசே! தங்கள் அறிவையும் ஆற்றலையும் நேர்மை நெறிகளையும் உணராமல், தங்களைப் பற்றித் தவறான செய்திகளை பரப்பிவிட்டேன். அத்துடன் நில்லாமல் நிலா நாட்டுடன் சேர்ந்து போரிலும் தங்களை எதிர்க்கும் நிலைக்கு ஆளானேன். போரின் இறுதிக் கட்டத்திலேதான் உண்மையை

உணர்ந்து, தங்களின் உத்தம குணங்களைப் புரிந்துகொண்டு நானும் என் படை வீரர்களும் நிலா நாட்டானைத் தனியே களத்திலே விட்டுவிட்டுத் திரும்பி எங்கள் மலைநாட்டுக்கு ஓடி வந்துவிட்டோம். என்னை மன்னித்துத் தங்கள் காலடியில் என் மணிமுடி இருப்பதாகக் கருதி அருள் புரிய வேண்டுகிறேன்.

மலைநாட்டுக் குறுநில மன்னனின் ஓலை, அவைக்களத்தில் உரக்கப் படிக்கப் பட்டது. உடனே அவைப் புலவர், கேலிப் புன்னகை புரிந்தவாறு எழுந்தார். புலவரைப் பேரரசன் நோக்கினான். புலவர் பேசினார்:

"பேரரசே! மடல் அனுப்பியுள்ள மலைநாட்டான், மானத்தைப்பற்றிக் கவலைப்படாதவன் மட்டுமல்ல; ஆட்சி முறைக்கு உரிய அறங்கள் அனைத்தையும் மறந்து நாடாளுகின்றவன். தாங்கள் தங்களுக்குத் துணை நின்ற மன்னர்களை மறந்துவிட்டு, மலைநாட்டானுக்கு மன்னிப்பு அளித்தால், அறமல்லாத ஒரு செயலை செய்கிறீர்கள் என்று மக்கள் கருதுவர். மலைநாட்டு மன்னன் எப்போதும் வெற்றி பெறுவோர் பக்கம் சேர்ந்து அவர்தம் அடிதொழுவதை வேலையாகக் கொண்டவன். வீரத்திற்கும் அவனுக்கும் தொடர்பில்லை. அதனால்தான் நிலா நாட்டானைப் போலக் களம்பட்டுச் சாகும் உறுதியைப் பெறாமல் அவனையும் தனியே விடுத்துக் களத்திலிருந்து ஓடிவிட்டான். அவனை ஏற்பது அறமாகாது."

பேரரசன், புலவரின் அறிவுரையைப் புறக்கணித்துவிட்டு, மலைநாட்டானை மன்னித்து ஏற்றுக்கொள்வதாகப் பதில் முடங்கல் அனுப்புமாறு அமைச்சருக்கு ஆணை பிறப்பித்தான். புலவரால் அதனைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சினந்து சீறி பேரரசனைப் பார்த்து முழங்கினார்:

"பேரரசே! தங்களையும் தங்களிடம் மன்னிப்புக் கோரி மடல் தீட்டியுள்ள மலைநாட்டுக் குறுநில மன்னனையும் நான் அரசர்களாகவே கருதவில்லை! ஏன் தெரியுமா? தாங்களோ ஆட்சிமுறைக்குரிய அறம் தவறி அறமல்லாதவற்றைச் செயல்படுத்துகின்றீர்கள். துணை நின்ற மன்னர்களைத் துச்சமெனக் கருதி துரோகம் புரிவதையே தொழிலாகக்கொண்டவனை அரவணைத்துக் கொள்கின்றீர். இது அறமாகாது! வீரத்தில் குறையாத மானமுடையவனே அரசன்! இந்த அளவுகோல் மலைநாட்டு மன்னவனுக்குப் பொருந்தவே பொருந்தாது! எனவே நீவிர் இருவரும் வள்ளுவரின் கருத்துப்படி அரசர்கள் அல்ல!"

இந்தச் சொற்களைத் தீப்பொறி போல வீசிவிட்டுப் புலவர் அவைக்களம் விட்டு வெளியேறினார்.

புலவர் குறிப்பிட்டாரே, வள்ளுவரின் கருத்து - அஃது என்னவென அறிய வளநாட்டுப் பேரரசன் திருக்குறளைப் புரட்டிப் பார்த்தான்.

"ஆட்சி முறைக்குகந்த அறநெறி வழுவாமல் அறமல்லாதவற்றை அகற்றி வீரத்தில் மங்காத மான உணர்வு பொருந்தியவனே சிறந்த அரசன்"

என்ற பொருள் கூறும் குறள், அவன் கண்ணில் பட்டது. பேரரசன் அப்படியே அசைவற்று அரியாசனத்தில் அமர்ந்துவிட்டான். இதோ அந்தக் குறள்:

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு"

அதிகாரம் - 39 - இறைமாட்சி; பாடல் - 384



"அகிற்புகையன்ன நான் உடுத்தியிருந்த ஆடையும் என் அழகை மறைக்கிறதென்று முகஞ் சுளித்தார்! இறுதியில் அவர் முகம் கோணாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, நான்தான் தோல்வியை ஏற்றுக்கொண்டேன். அந்தத் தோல்வியிலும் எனக்கோர் தெவிட்டாத இன்பம்தான்; மறுக்கவில்லை!

உச்சி மாடத்துத் திறந்த வெளியில் யாருமே இல்லை - வான்மீது உலவும் நிலவுப் பெண்ணாள்கூட, முகில் திரையிட்டுத் தன் வீட்டுப் பலகணியை மறைத்துக்கொண்டு தூங்குகிறாள் போலும்; அதனால் வெட்கம் தேவையில்லை அன்பே! அமுதே! அந்த இடத்தில் இன்பக் கூத்து நடத்தலாம் என எனையிழுத்தார் - நாணத்தால் "முடியாது" எனத் தலையை ஆட்டினேன் எனினும், கடைசியில் அவர்தான் வென்றார்! அந்த வெற்றியை நான் கொண்டாடிக் களித்தேன்; இல்லையென்று சொல்லவில்லை.

சலசலவென ஒலியெழுப்பும் சருகுகளின் மீது கட்டிப் புரண்டு, கற்கண்டில் கரைந்த தேனிதழ்களைக் கௌவிச் சுவைப்பதும் உன் காற் சதங்கை நமக்கேற்ப இசை கூட்டுவதும் எப்படியிருக்கும் தெரியுமா என்று கேள்வி கேட்டு, இன்ப வேள்வியொன்றை நடத்திக் காட்டினாரே; அந்த மாந்தோப்பின் நிழலுக்கிடையே - அடடா! உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஏறிற்று உணர்ச்சி!

கன்னங்கள், மதுக்கிண்ணங்கள் என்றார்! மாதுளையே மார்பகம் என்றார். சன்ன இழையே உன் மின்னலிடை என்றார்! நானோ அவர் மொழியில் மயங்கிக் கண்மூடிக் கிடந்தேன், அவர் மடிமீது! என் முடியைக் கோதியது அவர் கரம்! கதையின் முடிவைக் கூறிட முடியாது! யாரும் கற்பனையும் செய்து பார்க்க முடியாது! அனுபவத்தில் மட்டுமே அந்த அமுத வேளையை உணர்ந்திட இயலும்!

எல்லாம் சரிதான் என் நெஞ்சே! ஈடு இணையற்ற இன்பத்தை வாரி வழங்கியவர் எனப் புகழ்ந்து மகிழ்கிறாய்! உன் நன்றியுணர்வை மதிக்கிறேன்!

ஆனால், இப்போது உன்னைப் பிரிவுத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டுப் போயிருக்கிறாரே; உடன் திரும்பிவந்து இரக்கம் காட்டி ஆறுதல் கூறவில்லையென்று ஏங்கிக் கிடக்கிறாயே; இந்தச் சூழ்நிலையிலும் நீ அவர் பின்னாலேயே அவரைத் துரத்திக்கொண்டு திரிகிறாயே - அய்யோ, நெஞ்சமே! உனக்கு அறிவே கிடையாது! நீ ஒரு பேதை!"

பிரிந்து சென்ற காதலர் வந்து அன்பு காட்டவில்லையே என்று ஏங்கிடும் நிலையிலும் அந்தக் காதலர் பின்னால் ஓடுகிற நெஞ்சமே! நீ யொரு பேதை!"

என நொந்துகொள்கிறாளாம்! அவளைத்தான் - இதோ; இந்தக் குறள் அடையாளம் காட்டுகிறது.

"பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு"

அதிகாரம் - 125 - நெஞ்சொடு கிளத்தல்; பாடல் - 1248

நல்கார் = அன்பு செய்யார்





திருக்குறளில் அரண்

★ பகைவர் மீது படைகொண்டு சென்று தாக்குவதற்கேற்ற வலிமை யுடைய வீரர்களையும் போர்க்கலன்களையும் உடையதாகவும் அதே நேரத்தில் பகைவரிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளும் பாதுகாப்பு இடமாகவும் இருப்பதுதான் அரண்!

★ மணியெனத் தெளிந்த நீரும், உறுதியும் செழிப்புமிக்க நிலமும் மதில் எனத்தகும் மலைகளும் நெருக்கமிகு நிழல் தரும் காடுகளும் அமைந்துள்ள பகுதி, அரண்போன்ற பாதுகாப்பு வழங்கக்கூடியதாகும்!

★ வானோக்கிடும் உயரம், அதற்கேற்ற அகலம், பகை புகமுடியாத வலிமை, உறுதி, இந்த நான்கும் அரணுக்குரியவை என நூலோர் உரைத்திடுவர்.

★ பாதுகாக்கப்பட வேண்டிய பரப்பளவு சிறியதாகவும் எஞ்சியுள்ள பாதுகாப்பு நிறைந்த இடம் பரந்த அளவிலும் உள்ள அரண்; தன்னை எதிர்த்து வரும் பகைப்புலத்தின் ஊக்கத்தை அழிக்க வல்லதாகும்.

★ பகைவரால் கைப்பற்ற முடியாததாகவும் - நிறைந்த உணவுப்பொருளைக் கொண்டதாகவும் - எத்தனை நாட்கள் முற்றுகையிடப்பட்டாலும் உள்ளிருப்போர் நிலைத்திருப்பதற்கு வசதியுள்ளதாய் இருப்பதே அரண்!

★ எந்தப் பொருளும் இல்லை எனச் சொல்லத்தக்க நிலைமையில்லாத பெருமையுடன் - போர்முரசு கேட்டவுடன் அரிமாக்களெனக் கிளம்பிடும் வீரர்களைத் தன்னகத்தே கொண்டது அரணுக்குரிய சிறப்பாகும்.

★ முற்றுகையிடப்பட்டோ, அல்லது நேரடித்தாக்குதல் வாயிலாகவோ, சூழ்ச்சிவலை பின்னியோ - எதிரிகளால் கைப்பற்றப்பட முடியாத அருமையுடையதே அரண் எனப்படுவது!

★ பகைவர் கோட்டை கொத்தளங்களை முற்றுகையிடுகிற அளவுக்கு வலிமை பெற்றிருப்பதுடன்; முற்றுகையிட்டுச் சூழ்கிற பகைவர்களையும் பற்றிக் கொண்டு வெற்றிக்கொடி நாட்டுவதே அரணுக்குரிய சிறப்பு!

★ உள் நுழைந்து போரிடும் எதிரிகளைக் களத்தில் அழித்தொழிக்கும் போர் முறைகளை வகுத்துப் பெருமைபெற்றுத் திகழ்வதே அரணாகும்!

"அரண்" எனும் அதிகாரத்தில் ஒன்பது குறட்பாக்களின் மூலம் அதன் சிறப்புக்களையும் இலக்கணங்களையும் விளக்குகிற வள்ளுவர்; பத்தாவது பாடலின் மூலமாக எதை வலியுறுத்துகிறார்!

அரண் என்பது எப்படியிருக்க வேண்டுமென்பது குறித்தும் - அது பாதுகாப்புப் பாசறையாக - படைவீரர்களின் கோட்டமாக - வசதிமிக்க களஞ்சியமாக - வலிமைமிகு கருவூலமாக எவ்வாறெல்லாம் திகழவேண்டும் என்பது குறித்தும் ஒன்பது பாக்களில் ஒளியுமிழ்க் கருத்துக்களை வழங்குகிறார்.

இவ்வளவு சிறப்பும் செழிப்பும் பகைவர் செருக்கடக்கும் வீரமும் தீரமும் - அனைத்துப் பெருமையும் உடையதாக இருந்தாலும் ஆற்றலற்றவர்களால் இயக்கப்படும் நிலைமை அந்த அரணுக்கு இருக்குமேயானால் - அந்த அரண் எந்தப் பயனுமற்றதாக ஆகிவிடும் என்று கூறி முடிக்கிறார்!

இதோ; அந்தப் பத்தாவது குறள்:-

"எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்"

அதிகாரம் - 75 - அரண்; பாடல் - 750





மீன் தொட்டியிலே, வண்ண வண்ணக் கயல்களை விளையாட விட்டுக் கண்டு மகிழ்கிறோம். சின்னஞ்சிறு முயல்கள் வீட்டுத் தோட்டத்திலே, காற்றிலே உருளும் பஞ்சு உருண்டைகளைப்போல் சுற்றிச் சுற்றி ஓடுவதை, உவகை பொங்கிடக் கண்டு சுவைக்கிறோம்.

புறாக்களின் சிறகுகளைத் தடவிக் கொடுத்து, அவற்றுக்கு உணவு தானியங்களை அள்ளி இறைத்து, அவை, கொத்தி உண்ணும் கோலத்தில் உள்ளத்தைக் கொள்ளை கொடுக்கிறோம்.

வளர்க்கும் மீன்களில் ஒன்றையோ, புறாக்களில் ஒன்றையோ, முயல், கோழி, இவற்றில் ஒன்றையோ அறுத்துச் சமைத்து இன்றைக்கு அமுது பரிமாறட்டுமா என்று வீட்டில் உள்ளோர் கேட்டால், "வேண்டாம் வேண்டாம்!" என்று அன்பு பீறிடச் சொல்கிறோம்.

நம் கைபட்டு வளர்ந்து விட்டவை என்பதால், அவற்றைக் கொல்வதும்- உண்பதும் நம் இதயம் ஏற்றுக்கொள்ளாத ஒன்றாக ஆகிவிட்டது.

நம்மால் வளர்க்கப்பட்டவைகள் மட்டுமல்ல; வளர்க்கப்படாத உயிரினங்களும் கொல்லப்படுகின்றன; அதுவும் உணவுக்காகக் கொல்லப்படுகின்றன என்பதை ஆழ்ந்து எண்ணிடும் பொழுது - வளர்க்கப்பட்ட உயிரினங்களின் மீது காட்டப்படும் அதே அன்பினையும் இரக்கத்தையும் வளர்க்கப்படாத நிலையில் பறந்து திரியும்

புறாக்களையும் குருவிகளையும் ஆடுகளையும் மாடுகளையும் மான்களையும் முயல்களையும் உணவுக்காகக் கொன்றிடும் பொழுது இரக்கம் காட்டிட வேண்டாமோ என்ற கேள்வி எழுத்தான் செய்கிறது!

மக்கள் தொகையின் பெருக்கம், கோடி கோடியாக வளர்ந்துகொண்டே போகும் போது - உணவு தானியங்களே மட்டும் போதாமல் ஊன் உணவும் தேவைப்படுகிற நிலை உலகில் தவிர்க்க முடியாததாகிவிட்டிருக்கிறது. ஊன் உணவு வாயிலாகவும் உணவுத் தேவையை நிறைவுசெய்து, ஊட்டச்சத்தினையும் பெற்றிடுக; என்று அரசுகள், மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். புலால் உண்ணுதலைப் பெருங் கொடுமையாகக் கருதாமல் - புலாலும் உணவு வகையினுள் ஒன்றாக இணைக்கப்பட்டே உலகம் இயங்கிவருகிறது!

ஆனால் வள்ளுவர், நம் கை தொட்டு வளர்க்கிற உயிரினங்களைக் கொன்று புசிப்பதை நாம் வெறுப்பதே போல் - உலகில் எந்தவொரு உயிரையும் கொன்று புசிப்பதை வெறுத்துக் கடிகிறார்!

ஓர் உயிரை வளர்ப்பதற்காக இன்னொரு உயிர் போக்கப்படுவதை அவரால் சகிக்க முடியவில்லை!

"எந்த உயிரையும் கொன்று உணவாக ஆக்கிக் கொள்ளாமல் இருப்பவரை, உலகில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பிக் தொழும்" என்று குறள் தீட்டுகிறார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

இதற்கு மேலே வள்ளுவர் ஒருபடி சென்று அவிசொரிந்தாயிரம் வேள்விகள் செய்வோரையும் சாடுகிறார்! நெய்யைக் குடம் குடமாகக் கொட்டி ஆயிரக்கணக் கில் யாகங்கள் செய்வதைக் காட்டிலும் ஓர் உயிரைக் கொன்று தின்னாதிருத்தல் மேலானது - நன்மை பயக்கக் கூடியது - என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்.

அவியெனும் நெய் சொரிந்து மட்டுமல்ல; ஆடு மாடு குதிரைகளைக்கூட வெட்டி யாகங்கள் நடத்தியோரும் - நடத்துவோரும் உண்டே!

நெய்யைப் பெய்து வேள்விகள் செய்வதே கூட; ஓர் உயிரைக் கொன்று புசிப்பதைத் தவிர்த்தால் தேவையற்றது எனக் கூறும் வள்ளுவர் - பல உயிர்களைக் கொன்று நடத்திடும் யாகங்களை ஏற்றுக்கொள்வாரா? ஏற்றுக்கொள்ள மாட்டார்! ஏற்றுக்கொள்ளவில்லை!

புலால் மறுத்தல் எனும் இந்த அதிகாரத்துப் பாடல்கள், துறவறவியலில் இணைக்கப்பட்டுள்ளன என்றாலும்கூட, இல்லறம் மேற்கொண்டோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய உள்ளமுருக்கும் கருத்துகள் அல்லவா?

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

அதிகாரம் - 26 - புலால் மறுத்தல்; பாடல்கள் - 260, 259

சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும்



வீதியில் பசுவொன்று, தனது கன்றுடன் போய்க்கொண்டிருந்தது. கன்றுக்குட்டி, தாயைச் சுற்றி சுற்றி ஓடியும் தாயுடன் நடந்தும் அந்த வீதியில் சென்ற காட்சி, அனைவரையும் கவர்ந்தது; தன்னை விட்டு விலகி அந்தக் கன்று தொலைவில் போய்விடக்கூடாது என்பதிலே தாய்ப்பசு கண்ணும் கருத்துமாக இருந்தது. கன்றுக்குட்டி, மான்போலத் துள்ளி வீதிக்கு நடுவே ஓடும். பசுவோ, அப்படியே நின்று அதையே உற்றுப் பார்த்துக்கொண்டு தனது கூரிய கொம்புகளைக் காட்டி முட்டுவது போலப் பயமுறுத்தும். தாயின் கோபத்தைப் புரிந்துகொண்ட இளங்கன்று, உடனே அதனருகே துள்ளிவரும். பசு, தனது நாவினால் கன்றின் உடலைத் தடவிக் கொடுக்கும்.

அந்த வீதியில், ஒரு கரும் பன்றி, மலம் தின்ற வாயுடன் உறுமிக்கொண்டே கன்றுக்குட்டியிடம் வந்து உரசிடத் தொடங்கியது. கன்று, தனக்கு ஒரு இணைகிடைத்துவிட்டதாக எண்ணியோ என்னவோ அந்தப் பன்றியுடன் வீதியில் குறுக்கும் நெடுக்குமாக ஓடியது. பசுவுக்குப் பொல்லாச்சினம் பொங்கிவிட்டது. கன்றுக்குட்டியை ஆத்திரத்துடன் நோக்கி, அதனைத் தன்னருகே வருமாறு கத்திக் காட்டியது. கன்று, பன்றியிடமிருந்து விடுபட்டு வர முயற்சித்தபோதிலும் அதைப்

பன்றி, விடாமல் துரத்தித் தன் மீது படிந்துள்ள சகதியைக் கன்றின் உடலில் ஒட்ட வைத்தது. தாய்ப் பசுவுக்கு அதற்கு மேல் பொறுமையில்லை. கொம்புகளை நீட்டியவாறு பன்றியின் மீது பாய்ந்தது. பசுவின் வேகத்தைக் கண்ட பன்றி, பயங்கரமாக ஒலியெழுப்பிக்கொண்டு அந்த வீதியிலே நெடுந்தொலைவு ஓடி, இறுதியாக அங்கிருந்த சின்னஞ்சிறு கழிவு நீர்க் குட்டைக்குள்ளே குதித்தது. அங்கு ஏற்கெனவே பத்துப் பதினைந்து பன்றிகள், புழுக்கள் நெளியும் அந்தக் குட்டையில் ஊறிக்கொண்டிருந்தன! தமது இனத்தைச் சேர்ந்த மற்றொன்று வந்ததும் எல்லாமே அதனைச் சூழ்ந்துகொண்டு கட்டிப்புரண்டு களிப்புக் கொண்டாடின!

இந்தக் காட்சியனைத்தையும் கண்ட வள்ளுவர், சிற்றினம் சிற்றினத்தைத்தான் சேரும் என்பதற்கான குறட்பாவை மனிதகுலத்திற்கு வடித்தளித்தார்.

"சிற்றினத்திற்கு அஞ்சி அதனை ஒதுக்குவது உயர்ந்தோரின் இயல்பு! அந்தச் சிற்றினத்தை சுற்றமாகக் கருதித் தழுவிக் கொள்ளுதல் இழிந்தோரின் இயல்பு"

"சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்"

அதிகாரம் - 46 - சிற்றினம் சேராமை; பாடல் - 451



கதிரொளியின் குடிசையில்



மாமல்லபுரத்துச் சிற்பங்கள் படைக்கப்பட்ட காலம். பகற்பொழுது முழுவதும் சிற்றுளிகளின் ஓசை, கடல் அலைகளின் நடனத்திற்குத் தாளம் போடுவதுபோல் கேட்டுக்கொண்டிருக்கும். பல்லவமன்னரின் கலையார்வத்தை இன்றும் என்றும் புவனமெங்கும் பறையறிவித்துப் புகழ்ந்துகொண்டிருக்கும் அந்தச் சிற்பத் தேர்களையும் மலைகளைக் குடைந்த கலைக்குகைகளையும் பாறைகளில் ஓவியம் வரைந்ததுபோல் சிலைக்குவியல்களையும் உருவாக்கிய சிற்பிகள், கடற்கரை யோரத்தில் எளிய குடில்களை அமைத்துக்கொண்டு தங்கியிருந்தனர். அவர்களில் கதிரொளியென்னும் கட்டழகன் - வாலிபன் - மொட்டவிழ்ந்த மல்லிகைக் கொத்தனைய சிரிப்புக்குச் சொந்தக்காரன்.

சிற்பிகளுக்குத் துணையாக சிறு சிறு பணிகளிலும் உணவு சமைத்து வழங்குவதிலும் அந்தப் பகுதி பெண்டிர் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் ஒரு மூதாட்டி பொன்னியம்மை! அவளுக்கு உயிரோடு பிறந்த சிலையொருத்தி மகளாக வாய்த்திருந்தாள்! பெயர் கண்மணியாள்! கதிரொளிக்குச் சோறும் கூழும் கொண்டு செல்லும்போது, அவளும் கூடவே போவாள்! சில நேரங்களில் களைப்பு மிகுதியில்

பழுப்பு இலை, குடிசையில் தங்கிவிட, கண்மணியாள் அந்தப் பணியை மேற்கொள்வாள்.

எத்தனையோ அழகிகளின் சிற்பங்களை வடித்தெடுத்த அவனுக்கு, அவளைப் போல் சிற்பமொன்று வடித்திட முடியவில்லை. வயப்பட்டான்! வயப்பட்டாள்! இருவருமே பயப்பட்டுப் பிரிந்துவிட்டனர். கதிரொளியின் கண்களும் கண்மணியின் கண்களும் யாருமறியாமல் பேசுகின்ற மொழிகளை மூதாட்டி கவனித்துவிட்ட காரணத்தால்; அவளை அடைகாக்கத் தொடங்கிவிட்டாள்.

தடைகள் வரும்போதுதானே அதனை மீறவேண்டும் என்று காதலுக்குப் புதிய வலிவே வரும்! எப்படியும் ஒருநாள் அவளைச் சந்தித்து மனம்விட்டுப் பேசி வாழ்வின் துணைகளாக - வசந்தத்தின் இணைகளாக - ஆகிவிடவேண்டுமென்று அவன் துடித்தான்! அதனால், சிலைகளைக்கூட அரைகுறையாகவே வடித்தான்!

ஒரு நாள், அவளுக்கு ஒரு துண்டு மடலை எழுதி முடித்தான்! அன்றிரவு எப்படியும் அவள் வந்து தன்னைச் சந்திக்க வேண்டும்! இவன் அங்கு போக முடியாதே; அவளது தாய் இருப்பாளே - அதனால் மடல் தீட்டினான்; தன் மனங்கவர்ந்த மங்கை நல்லாளுக்கு!

"கண்மணி! இன்றிரவு எந்நேரமாயினும் என் குடிலின் கதவு தாளிடப் படாமலேயிருக்கும்! விடியும் வரையிலேகூட உனக்காகக் காத்திருப்பேன்."

மூதாட்டியுடன் சோறு கொண்டுவந்தபோது, அவள் கையில் எப்படியோ திணித்துவிட்டான், அந்தக் காதல் மடலை!

அவளோ, தூங்குவதுபோல் அன்னையின் அருகே படுத்திருந்தாள்! கதிரொளியின் குடில் அருகாமையில்தானிருக்கிறது! இருந்தாலும் எப்படித் தாயை ஏமாற்றிவிட்டுச் செல்ல முடியும்! இதயத்தில் பெரும் போராட்டம்! வெளியே இடி மின்னல் வேறு! மழையும் கொட்டியது! கடலும் பேரிரைச்சல் போட்டுக் கொண்டிருந்தது. அந்த ஒலியில் கதவைத் திறந்தால், மூதாட்டியின் செவிகளில் கதவொலி விழப்போவதில்லை! துணிந்துவிட்டாள். எழுந்துவிட்டாள்.

கதிரொளியின் குடில் நோக்கி நடந்தபோது, மழை அவளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது! ஈரத்துணி அவள் உடலில் ஒட்டிக்கொண்டு, அவளது அழகை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

கதிரொளி வீட்டுக் கதவைத் தொட்டாள்! திறந்துகொண்டது! தயாராக இருந்த கதவுகள்தானே!

பேச்சில்லை! அவன், அவளை ஆரத் தழுவிக்கொண்டான். மழையில் நனைந்திருந்த அவள் மேனி, இப்போது அவனது இதழ்களால் சூடேறிவிட்டது! இருவருமே சுவையேறி நின்றபோது, அந்த நடுங்கும் குளிரில் பொன்னியம்மை உள்ளே நுழைந்துவிட்டாள். கண்மணியின் கரங்களை அழுந்தப் பற்றியவாறு இழுத்துக்கொண்டு வெளியேறினாள். கதிரொளி, அசைவற்று நின்றான். அவன் உதடுகள் மட்டும் மெல்ல அசைந்தன.

இறுகத்தழுவியபோது அவள் அணிந்திருந்த அணிகலன்கள், அவன் உடலில் பதிந்திருப்பதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டவாறு அவனது உதடுகள் அசைந்தன!

"ஆராய்ந்த அணிகலன்களைப் பூண்டிருந்த அவள், கூடும்போது உயிர்க்கு வாழ்வு அளிப்பவளைப்போல இருந்தாள்! பிரியும்போது என் உயிர்க்குச் சாவு அளிப்பவளைப்போல ஆகிவிட்டாளே!"


வானத்து இடி முழக்கமும் மின்னல் வீச்சும் மழை ஓசையும் அலைகளின் குமுறலும் - நிற்கவில்லை! அவன் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

அவன் மனத்துயரை விளக்குவதே இந்தக் குறள்!

"வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து"

அதிகாரம் - 113 - காதற் சிறப்புரைத்தல்; பாடல் - 1124





தளபதி, தடந்தோள் தட்டினான்! "இளமைக் காலந்தொட்டு இந்த அரண்மனைச் சோற்றைத் தின்று வளர்ந்தவன் மன்னா நான்! எங்கேயோ திரிந்து கொண்டிருந்த என்னை மாளிகைக்கு அழைத்து வந்து ஆற்றலாளனாக்கி, படை முகத்துப் பெருவீரர்களில் ஒருவனாகத் திகழச் செய்து, கடந்த ஆண்டு பகை மன்னன் கொட்டத்தை அடக்கத் தளபதியாக என்னையே நியமித்து, அந்தக் களத்தில் பெற்ற வெற்றிக்காக விருது வழங்கினீர்களே; அதனை என் வாழ்நாளில் பெற்ற பேறாகவன்றோ நான் எண்ணியிருக்கிறேன்! இப்போது எனக்கு ஒரு புதிய வாய்ப்பு வலிய வந்திருக்கிறது! அதை இழந்து விடமாட்டேன் நான்! நம்மிடம் தோற்றுத் தனது நாட்டின் ஒரு பகுதியை இழந்த அதே பகைவன், புது வலிவு திரட்டிக் கொண்டிருக்கின்றான் - நம்மோடு போரிடவும், இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றிடவும்! ஆணையிடுங்கள், ஆட்பெரும் படையுடன் நானே தலைமையேற்றுப் போரை நடத்துகிறேன்!" என முரசு கொட்டுவதுபோல் அதிர்ந்தான்!

மன்னனும் தளபதியை மார்புறத் தழுவி; "சென்ற தடவை நீ பெற்ற வெற்றியால் உனக்குக் கிடைத்த புகழைவிடப் பெரும்புகழ் இந்த முறை நீ பெறப்போகும் வெற்றியால் கிடைக்க இருக்கிறது! எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன் எனும் எஃகு உள்ளம் படைத்தவர்களில் நீயொருவன் என்பதிலே எனக்கு அசையாத

நம்பிக்கையுண்டு! அஃதேபோல் உன் ஆற்றலிலும் படை நடத்தும் பாங்கிலும் எனக்கு எள் முனையளவு ஐயமுமில்லை! உனக்குப் புகழ் மாலைகள் மேலும் குவியட்டும்! வாழ்க! வெல்க! சென்றுவா! வென்றுவா!" எனக் கூறி வழியனுப்பி வைத்தான்.

தளபதி, பெரும்படையுடன் சென்று பகை மன்னனின் கோட்டையை முற்றுகையிட்டான். எதிர்பாராத முற்றுகை கண்டு எதிர்நாட்டான் திகைத்தான். போருக்கான முன்னேற்பாடுகளில் அவன் முனைந்திருந்தான் எனினும் இப்படித் திடீரென முற்றுகையிடப்படும் தனது கோட்டையென்பதை அவன் நினைத்துக்கூடப்பார்க்கவில்லை.

தனது தளபதியின் போர்த்திறனையும் திடீர் முற்றுகையால் பகை மன்னன் அதிர்ச்சியுற்று அடங்கிக் கிடப்பதையும் வேந்தன் அறிந்தான்! விழிகள் ஒளி பொழிய "வெற்றி வெற்றி" எனக் கூறிக் களித்தான். முற்றுகைக்குள் முடங்கிவிட்ட பகைவனின் ஆணவம், அழிந்து சிதறியது என ஆர்ப்பரித்தான்! அரண்மனையில் விருந்து வைத்து மகிழ்ந்தான்!

திடீரென ஒரு செய்தி வந்து, உற்சாகத்தில் திளைத்திருந்த மன்னனைத் தாக்கியது!

பகைவன் கோட்டையை முற்றுகையிடச் சென்ற தளபதி, பகைவனிடம் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு போர் நிறுத்தம் செய்துவிட்டான்! பகைவன் நாட்டில் சில பகுதிகளைத் தளபதிக்கு அளித்து, அவற்றுக்கு அவனைச் சிற்றரசனாக ஆக்குவது என்று முடிவு ஏற்பட்டுவிட்டது! தளபதியும் தனக்கு வந்த "அரசன்" எனும் சிறப்பை யெண்ணி, பகைவனுடன் கை குலுக்கிக்கொண்டு விட்டான்! அவன் தலைமையில் சென்ற படை வீரர்களில் ஒருவன், இந்தச் செய்தியை எடுத்துக் கொண்டு ஓடிவந்தான்!

சிறிது நேரம் முகம் சிவந்து சோகத்தில் ஆழ்ந்த மன்னன், தனது மௌனத்தைக் கலைத்துவிட்டுச் சிங்கமென எழுந்து நின்றான்!

"பரவாயில்லை.....பகை வெல்ல வாள் எடுத்துச் சென்ற தளபதி, பகைவனின் தாள் பிடித்துக் கிடக்கிறான்! அதற்கான பரிசும் அவனுக்குக் கிடைத்துவிட்டது! அவனையும் சேர்த்துக்கொண்டு எதிரி, நம்மீது மோதுவான்! சமாளிப்போம்! சந்திப்போம்! ஆனால், எனக்குள்ள கவலையெல்லாம்; மலையென உயர்ந்த புகழால் நிமிர்ந்து நின்ற நமது தளபதி, தனது இழிந்த செயலின் மூலம் தன்னையே தாழ்த்திக் கொண்டுவிட்டானே என்பதுதான்!"

எனக்கூறி, கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு களம் புகுந்தான்.

குன்று போல் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள், தாழ்வுக்குக் காரணமான செயலை ஒரு குன்றிமணி அளவு செய்து விட்டாலும் மக்கள் மன்றத்தில் தாழ்ந்தவராகவே கருதப்படுவார்கள்.

"குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்"

அதிகாரம் - 97 - மானம்; பாடல் - 965



இலக்கிய ஏடுகளைப் புரட்டுகின்றாள்; ஒவ்வொன்றும் அவள் உள்ளத்தில் காதலன் பிரிவை நினைவூட்டித் துவளச் செய்கின்றனவே தவிர, ஆறுதல் கரம் நீட்டிடவில்லை. இதிகாசங்கள், புராணங்கள் எதை எடுத்துப் படித்தாலும் அவற்றில் வருகின்ற கோபாலன், கோபிகைகளுடன் கூடி மகிழ்வதும் சிவனார், மோகினியை அணைத்துச் சுகிப்பதும் காண்டீபன், அல்லியை முகர்வதும் இப்படித்தான் சுவையான கட்டங்கள் அவள் முன்னால் தோன்றி அவளைத் தகிக்கச் செய்கின்றன. ஏடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, கண்ணயர்ந்தாவது கவலையை மறப்போம் என்று விழிகளை இமைகளால் தாளிட்டுக் கொள்கிறாள்.

அந்தப் பொல்லாத விழிகள், இமைக் கதவுகளைத் தட்டிப் பார்த்துவிட்டு - நினைவுச் சாளரத்தின் வழியாக வெளியே எட்டிப் பார்க்கின்றன.

அந்தக் காலத்தில் அன்னங்களைத் தூது விட்டிருக்கிறார்களே! கிள்ளைகளைத் தூதாக அனுப்பியிருக்கிறார்களே! புறாக்கள்கூட செய்திகளை ஏந்திச் சென்று காதலர்களை மகிழ்வித்திருக்கின்றனவே! அதுபோல என்னைப் பிரிந்து சென்றுள்ள என்னுயிரனையக் காதலர், தூது ஒன்றை எனக்கு அனுப்பி என் சோகத்தில் ஒரு துளியளவாவது துடைத்திடக் கூடாதா? அவர் இருக்குமிடம் எனக்குத்

தெரிந்தாலாவது, ஏதாவது ஒரு தோதான தூதினை அவர்பால் அனுப்பி வைத்திருப்பேன்.

எத்தனை நாட்களாயின நான் உறங்கி! எதையாவது மறக்க முடிந்தால்தானே உறக்கம் வரும்!

எதை மறப்பேன் நான்? அவர் என்னைத் தொட்டதையா? அப்போது அங்கமெலாம் சுட்டதையா? அந்தக் கொதிப்பு அடங்கக் குளிர் முத்த மாரி பொழிந்ததையா? கொடுத்ததைத் திருப்பிக் கொடுக்கும் மனமில்லையா என அவர் கேட்டதையா? அவர் கேட்டு வாய் மூடுவதற்குள் திரும்பப் பெற்றுக் கொண்டதையா? தொடர்ந்து நடந்த இன்பக் கதையையா?


இப்படிக் கேள்விகளை அடுக்கிக்கொண்டேயிருந்தவள்; தன்னை மறந்து தூங்கி விடுகிறாள். பல நாள் தூங்காத களைப்பு! தூக்கத்தில் கனவு! அந்தக் கனவில் ஓர் அன்னம்! அது அவளிடம் பேசுகிறது! அவளுடைய காதலன் அனுப்பி வைத்தானாம்! இன்னும் இரண்டு நாட்களில் திரும்பி வந்து விடுவதாக உறுதியளித்தானாம். கவலைப்படாமல் இருக்கச் சொன்னானாம். பலாச்சுளையொன்றை அவள் பாதி கடித்துவிட்டு, மீதியை அவனுக்கு அனுப்பி வைக்கச் சொன்னானாம். அன்னத்தின் மொழி கேட்டு அவள் இன்பத்தில் மூழ்குகிறாள். பருவக்கிளியின் கரம், படுக்கையிலிருந்தவாறே பலாச்சுளைக் கிண்ணத்தைத் தேடுகிறது. விழித்துக் கொள்கிறாள். அன்னம் மறைந்து விடுகிறது. கனவு மறையாமல் நினைவில் நிற்கிறது.

"என் காதலர் தூதாக அனுப்பிய அன்னத்தை அழைத்து வந்த இந்த இன்பக் கனவுக்கு, நான் என்ன விருந்தளித்து உபசரிப்பது என்றே தெரியவில்லையே; அவ்வளவு மகிழ்ச்சியை அல்லவா இந்தக் கனவு எனக்கு வழங்கியுள்ளது!"

இப்படி ஆனந்தப் பெருமூச்சு விடுகிறாள். அவளது தாபத்தைச் சித்திரிப்பதே; இதோ - இந்தக் குறள்!

"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து"

அதிகாரம் - 122 - கனவுநிலை உரைத்தல்; பாடல் - 1211





அதோ தெரிகிறதே ஊர்ப் பொது மன்றம் - அந்த மன்றத்திலேதான் குடவோலை முறைப்படி அந்த ஊர்ப் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பார் கள் மக்கள். அந்தத் தலைமைப் பணிக்கென முறைப்படுத்தப்பட்டுள்ள தகுதியுள்ளவர்கள்தான் பொறுப்புக்களுக்குப் போட்டியிட உரிமை படைத்தவர் களாவார்கள். அத்தகைய தகுதி வாய்ந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பெற்ற ஓலைகள், ஒரு குடத்தினுள் போடப்படும். மன்றத்தினுள் கூடியுள்ள ஊர் மக்கள் நடுவே, அந்த ஓலைகள் குடத்துடன் குலுக்கப்பட்டு, போட்டியில் கலந்து கொள்ளாத ஒருவர் ஓலைகளை ஒவ்வொன்றாக எடுத்திடுவார். எடுக்கப்பெற்ற வரிசைக்கேற்ப அந்த ஊர்ப் பொறுப்பாளர்கள் அமைவர். இந்தக் குடவோலை முறைத் தேர்தல், தமிழகத்துப் பழங்காலக் கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. அதற்கென அமைந்த மன்றங்களில், அந்தப் பணி நடைபெறாத காலத்தில், ஊர்மக்களில் பலர் கூடிப் பொழுது போக்குவர். அவர்தம் உரையாடல்களில் எத்தனையோ கருத்துக்கள் மிளிரும்! நல்லோர் மட்டுமே பொது மன்றங்களில் கூடுவர் என்று கூறிட இயலாதன்றோ! ஊரார், ஒருவருக்கொருவர் பகையற்ற நிலையில் வாழ்ந்தனர் என்றும் கூறிவிட முடியாதன்றோ!

அந்த மன்றத்தில் அன்று கூடியிருந்தோர், ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்கள்.

ஊரிலுள்ள எல்லோரையும் பற்றி ஆய்வு நடத்தி வீண்காலம் கழிக்கும் இயல்புடையவர்கள். அன்றும் அவ்வாறே ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொண்டு ஊர்க்கதைகளைப் பேசிக் கொண்டிருந்தனர். யாரையாவது இகழ்ந்து பேசுவது என்பது, அவர்களுக்கு இனிமையான பொழுது போக்கு. பகை புகுந்தது எனக் கண்டு, ஊரில் படை திரண்டால், இந்தக் கூட்டத்தினர் ஓடிப் பதுங்கிக் கொள்வர். பகை முடித்து ஊர்ப்படையினர் வெற்றிக்கு விழா எடுத்திடும்போது, ஒளிந்தோர் திரும்பி வந்து, எப்படிக் கிடைத்தது வெற்றியென வீண் உரையாடல் நிகழ்த்துவர். ஊர்ப்பணிகளிலும் ஈடுபடும் ஊக்கமில்லை. ஊரைக் காத்திடும் வீரச் செயல்களிலும் நாட்டமில்லை. வக்கணை பேசிப் பொழுதைக் கழிப்பதிலே மட்டும் பேரார்வம்!

தங்கள் பணியின் நிமித்தம் அந்த மன்றத்தைக் கடந்து செல்வோர், அவர்களைப் பொருட்படுத்துவதில்லை. வணிகர்கள் அவ்வழி செல்வர். வீரர்கள் அவ்வழி நடந்திடுவர். அழகு மங்கையர் அவ்வழி ஏகிடுவர். அவர்கள் யாரும் அந்தக் குழுவினரைக் கண்டு மதிப்புத் தந்ததில்லை. தங்கள் பணியுண்டு, தாங்களுண்டு என்றே சென்றிடுவர்.

அன்று மட்டும் ஏனோ, ஒரு வீரன் அந்த மன்றத்தைக் கடந்திடும்போது தலையைக் கவிழ்த்துக் கொண்டான்!

அவன் கால்கள் தள்ளாடின. முதுமை அவனை வருத்திடவில்லை. காரணம், அது அவன்மீது ஆட்சி நடத்தவே தொடங்கிடவில்லை. நோய் அவனை அணுகிட வில்லை. மலைத் தோள் கொண்டவன்தான். கதிர் ஒளிபரப்பும் கண்கள்தான் அவனுக்கு. இரும்புச் சிலையொன்று நடப்பதுபோல் நடப்பவன்தான். போர்க் களத்தில் பகைக் குலத்தின் இடுப்பு முறிப்பதில் புலிப் போத்துத்தான் அவன்.

அந்த ஆற்றல் மறவன், அந்த மன்றத்தைக் கடந்திடும்போது, புழுவாக நெளிவானேன்? புயல்காற்றுத் துரும்பாக அவன் உள்ளம் இருப்பதால்தானே பூனைபோல் பதுங்கிச் செல்கிறான்!

எல்லோரையும் இகழ்ந்து பேசுவதையே தொழிலாகக் கொண்ட அந்தக் குழுவினரை அவன் அகன்ற விழியின் நோக்கே, அலறிப் புடைத்து ஓடச் செய்துவிடும்.

ஆனால், அந்தப் பெருமித நோக்கு எங்கே?


அந்தப் பீடு நடை எங்கே? யாரும் பதில் கூறவில்லை. மன்றத்தில் குழுமியிருந்த இகழ்ச் சொல்லாளர்களும் அந்த வீரனின் தளர்ந்த நடைக்குக் காரணம் அறியாது பல கதைகளைப் படைத்தனர்.

உண்மையான காரணத்தை, அவன் உளச்சான்று உரைத்திடுகின்றது.

எல்லாப் புகழும் அவனுக்கு இருந்தும்கூட, அந்தப் புகழைக் காக்க விரும்பும் மனைவி அவனுக்கு வாய்க்கவில்லை. அதனால்தான், இழித்துப் பேசுவதைத் தொழிலாகக் கொண்டவர்களின் முன்னால் செல்லும்போது, அவன் உள்ளம், அவனைத் துளைத்தெடுக்கிறது. நடை தளருகிறது. தலை கவிழ்கிறது.

"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை"

அதிகாரம் - 6 -வாழ்க்கைத் துணைநலம்; பாடல் - 59



"பிரிந்திருந்தமைக்காகப் பெரிதும் கலங்கினாயோ கண்ணே! 'இருக்கின்றேன் சாகவில்லை'யென்று பாவேந்தர் கவிதை வரியினைத் தீட்டிக் காட்ட உனக்கு மட்டும்தான் தெரியுமோ? 'இங்கென்ன வாழ்கிறது!' எனப் பதில்மடல் எழுதிடவில்லையே தவிர, என் இதயத்தைப் பிழிந்தெடுத்த பிரிவுத் துன்பத்தை நீயென்ன கண்டாய்! அடடா! அப்படியேன் பார்க்கிறாய்? சிறார்கள் தெருவினில் விளையாடும் கோலிக் குண்டுகளைப்போல், உன் விழிகள் என்மீது விர்ரென்று பாய்கின்றனவே! பசலை படர்ந்திருக்கும் - பைந்தொடிகள் கழன்று இருக்கும் - 'இனிப் பார்ப்பதேயில்லை இந்த இரக்கமற்றவனை' என்றெல்லாம் கூடச் சூளுரை; உன்னைச் சினக்காட்டின் மத்தியிலே நிறுத்தியிருக்கும் - எல்லாம் அறிவேன் அன்பே! அழகே! அமுதமே! சத்து நிறைப் பலாச்சுளை முத்தங்களைக் கத்து கடல் ஓரத்தில் பரிமாறிக்கொண்டதையும் முத்து மொழிக் கொஞ்சலுக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கட்டிலறைக் காவியத்தின் உச்சகட்டக் கவிதையினை மௌனமாய் இசைத்ததையும் எப்படித்தான் மறந்திட இயலும் பெண்ணே! அந்த நினைவுகளின் தித்திப்பால்தான் விநாடி யுகங்களை விரட்டிட முடிகிறது என்பது உனக்கும் பொருந்துகிற உண்மைதானே கண்ணே! சீறிடாதே! வா! ஆறிடாது அல்லும் பகலும் வருந்துகின்ற காதல் அனலைக் கட்டித் தழுவிச் சற்றுக் குளிரவைப்போம் வா! தழுவிடும்போது ஏற்படும் தகிப்பு; தண்ணிலவின் குளிர் மழைபோல் இருக்குமென அறிவோம் நாம்!

அதனாலே ஊடல் விடுத்துக் கூடல் கோபுரத்துக் கலசத்தில் என்னை உலவவிடு; நீயும் கைகோத்து இன்பப் பூங்காவில் நடை பயிலத் தொடங்கு! பிரிவுக்குப்பின் விளைகின்ற சந்திப்பு, பேரின்பப் பெருக்கன்றோ! அந்தக் காதல் இன்பத்திற்கு வழிவிட்டுக் கதவைத் திறந்திடுக!

காதலன், காதலியிடம் தன் நெஞ்சத்தை வளைய வைத்து முறையீடு அளித்தவுடன், அவளும் மஞ்சத்துக் கதவுதனை மூடி - மகிழ்வால் பூத்த உதடுகளைத் திறந்து, நாமணக்க - நல்ல தேன் மணக்க - "அத்தான்" என்றாள்!

அத்தானா நின்றிடுவான்? "ஆருயிரே! நாம் ஒருயிர்!" என்று அள்ளிக் கொண்டான், அந்தப் புள்ளி மயிலை! அவள் விரும்பியதையெல்லாம் அவன் புரிந்துகொண்டு, இதுவரையில் இருவரும் காணாத இன்பமெல்லாம் துய்த்தனர்!

அப்போது, தென்றலில் நீந்தும் அந்தத் தேன்மொழியாளின் நினைவில் ஒரு மின்னல் கீற்று! என்ன அது?

"பேரன்பு காட்டி என் பிரியம்போல் இவர் என்னைக் கூடி இன்பம் தருவதெல்லாம், மீண்டும் என்னை விட்டுப் பிரிந்து அவரது அன்பின்மையை வெளிப்படுத்தப்போகிற குறிப்பாகுமோ?"

இதோ அதற்குரிய குறள்:

"பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வது உடைத்து"

அதிகாரம் - 128 : குறிப்பறிவுறுத்தல்; பாடல் - 1276

பெரிதாற்றி - பெரிதும் அன்பு காட்டி பெட்ப = விரும்பியவாறு





உலகத்தை “நிலமகள்” என உருவகப்படுத்துவது உண்டல்லவா? அந்த நிலமகள், ஒரு நாள் வள்ளுவரைச் சந்திக்க வந்தாள். உலகமே மங்கை வடிவு கொண்டு வரும்போது, வள்ளுவர் எங்கே அமர்ந்திருந்தார் என்று கேட்டுவிடக் கூடாது. இது ஒரு மிகையான கற்பனை என்று கருதிக்கொள்ள வேண்டும். இது போன்ற கற்பனைகளை உண்மையெனக் கொள்ள வேண்டுமெனப் புராணங்களின் வாயிலாகக் கூறும்போதுதானே வாதங்கள், எதிர்வாதங்கள் எழுகின்றன.

அதிருக்கட்டும்; வள்ளுவர் - நிலமகள் இருவரின் சந்திப்பை நோக்குவோம். அவர்தம் உரையாடலில் கருத்தைச் செலுத்துவோம்.

“வா, தாயே, வா! எங்கே இப்படித் திடீரென்று வருகை?”

“அன்பு மகனைக் காண அன்னை வரக்கூடாதா; இதிலென்ன வியப்பு?”

“காரணமின்றி வந்திருக்கமாட்டாயே அம்மா!”

“அருங்குறட் காவியம் எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறாயே! உன்னிடம் ஓர் ஐயப்பாட்டுக்கு விளக்கமறிந்து போகலாம் என்றுதான் வந்தேன்.”

“என்னம்மா அப்படியொரு ஐயம் உனக்கு?”

“எனக்குள்ள பெருமைகளைப் பற்றி நீ என்ன கருதுகிறாய்? அதை உன் குறளில் எழுதிக் காட்டு. நான் அதைத் தெரிந்துகொள்ளவே துடிக்கிறேன்.”

“உலகத் தாய்க்கு இப்படி ஓர் ஐயமும், அவாவுமா? வேடிக்கைதான்! பரவா யில்லை. இப்போது உனக்குள்ள பெருமைகள் எவ்வாறெல்லாம் கூறப்படுகின்றன?”

“மகனே! அவற்றை நானே சொல்ல வேண்டுமா?”

"நான் விரும்பியவாறு நீ விவரித்தால், நீ விரும்புகிறவாறு உன் பெருமையை நான் எழுதுகிறேன்."

"அப்படியா! மகிழ்ச்சி! இதோ கூறுகிறேன். இரவும் பகலுமாக மாறி மாறிக் காட்சியளிக்கிறேன். இதம் தரும் பனிக்காற்றையும் வீசுகிறேன். பாலைவனத்து மணற்காற்றையும் கொட்டுகிறேன். ஏரி, குளம், ஆறு என இயற்கை எழிற் செல்வங் களையும் வழங்குகிறேன். எரிமலை, பூகம்பம் எனும் விளைவுகளும் என்னாலேதான்."

"பச்சைப் பட்டாடை விரித்தது போல் கழனிகள் - பார்க்கப் பார்க்கக் கண் குளி ரும் பழமுதிர்ச் சோலைகள்; அங்கே மானினம், தேன்சிட்டு, மயில், குயில், மணிப் புறா இன்னோரன்ன படைப்புகள்! அதற்கெதிராகச் சினங்கொண்ட வேங்கை, சீறும் சிறுத்தை, சிங்கம், கரடி எனக் கொடிய விலங்கினங்கள், மாறிவரும் பருவ காலங்கள், மழை, மின்னல் இடிகள்! அருவிகள், நீர்வீழ்ச்சிகள், ஆனந்தப் பள்ளுப் பாடும் பூங்காக்கள்!"

"கடலுக்கடியில் முத்து - மண்ணைத் தோண்டினால் பொன், அவைகளை எடுத்துப் பயன்படுத்தும் மனித இனம்!"

"அந்த இனத்திலேயே அழகுப் பாவைகள்! அலங்கோலப் பதுமைகள்! அறிவுடையோர் - அறிவற்றோர்."

"இத்துணை மகிமை பொருந்திய படைப்புக்கள் என் வலிமையினால்தானே கிடைத்தன. இப்படி அடுக்கிக்கொண்டே போகலாமே என் பெருமையை! இன்னும் சொல்லவா?

"போதும்மா! போதும்! இதுவரை நீ சொன்னவற்றை எதையுமே நான் உனக்குரிய பெருமையாகக் கருதவில்லை; இவற்றையெல்லாம்விட மிகச் சிறந்த பெருமை யொன்று உனக்கு உண்டு."

"என்ன மகனே அது?"

"அதைத்தான் நான் குறளாக எழுதப்போகிறேன். நேற்று இருந்த ஒருவர் இன்று இல்லாமல் மறைந்து போய் விடுகிறார் அல்லவா; அதுதான் உலகத் தாயே! உனக்குள்ள பெருமை!"

"என்னைப் புகழ்வது போல, என் மீது உனக்குள்ள சினத்தைக் காட்டுகிறாயா?"

"எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்க! நீ வகைப்படுத்திக் கூறிய எதுவும் உன் பெருமைக்குப் பொருத்தமாகத் தெரியவில்லை. நேற்றிருந்தவரை இன்று இல்லாமல் செய்து விடுகிறாயே, அதுதான் உனக்குப் பொருத்தமான பெருமை!"

வள்ளுவர் பேசிக் கொண்டிருக்கும்போதே நிலமகள் மறைந்துவிட்டாள்; அவர், தன் விழிகளைத் திறந்தார். கொடிகட்டிப் பறந்த சிந்தனையின் விளைவாக எழுத் தாணியையும் ஓலையையும் எடுத்தார். உலகத்தின் பெருமை சொல்லும் குறள் பிறந்தது.

அதுதான் இது:

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

அதிகாரம் - 34 - நிலையாமை; பாடல் - 336

பொருளடக்கம்

1.	வையத்துள் வாழ்வாங்கு	17
2.	அ. காலை அரும்பி	
	ஆ. அழல்போலும் மாலைக்கு	20
3.	குழல்இனிது யாழ்இனிது	22
4.	அ. ஒருமைக்கண் தான்கற்ற	
	ஆ. ஓர்த்துள்ளம் உள்ளது	24
5.	அ. இருநோக்கு இவளுண்கண்	
	ஆ. யான்நோக்குங் காலை	26
6.	சொல்லுதல் யார்க்கும்	28
7.	உறாஅர்க்கு உறு நோய்	31
8.	அறத்தாறு இதுவென	33
9.	அற்றேமென்று அல்லல்	35
10.	அ. மதியும் மடந்தை	
	ஆ. தாம்வீழ்வார் மென்றோள்	37
11.	வாள்போல் பகைவரை	39
12.	அ. கெடுப்பதூஉங் கெட்டார்க்கு	
	ஆ. தெய்வந் தொழாஅள்	41
13.	மறமானம் மாண்ட	43
14.	அ. தொடியொடு தோள்நெகிழ	
	ஆ. நனவினால் நல்கா	
	இ. கயலுண்கண் யானிரப்ப	45
15.	நாடொறும் நாடி	47
16.	பயனில்சொல் பாராட்டு	49
17.	பழுதெண்ணும் மந்திரியின்	51
18.	அ. காணிற் குவளை	
	ஆ. அனிச்சமும் அன்னத்தின்	
	இ. கருமணியிற் பாவாய்நீ	53
19.	அவையறியார் சொல்லல்மேற்	55
20.	அற்றார் அழிபசி	57
21.	அல்லற்பட்டு ஆற்றாது	59
22.	ஓஒ இனிதே	61
23.	இழத்தொறூஉம் காதலிக்கும்	62
24.	அவர்தந்தார் என்னும்	64
25.	வேலன்று வென்றி	66
26.	நனவென ஒன்றில்லை	68
27.	இறந்தமைந்த சார்புடைய	70
28.	அ. காமமும் நாணும்	
	ஆ. கரத்தலும் ஆற்றேன்இந்	
	இ. புல்லிக் கிடந்தேன்	72
29.	கணைகொடிது யாழ்கோடு	74

30.	அ. மறைபெறல் ஊரார்க்கு	
	ஆ. வாராக்கால் துஞ்சா	76
31.	கண்ணுடையர் என்பவர்	78
32.	அ. சிறுமை நமக்கொழிய	
	ஆ. முயக்கிடைத் தண்வளி	80
33.	நெடுநீர் மறவி	82
34.	புலப்ப லெனச் சென்றேன்	85
35.	அமரகத்து ஆற்றறுக்கும்	87
36.	செல்லிடத்துக் காப்பான்	89
37.	வாளற்றுப் புற்கென்ற	91
38.	அ. விரைந்து தொழில்கேட்கும்	
	ஆ. இணரூழ்த்தும் நாறா	92
39.	ஊடுதல் காமத்திற்கு	95
40.	நுண்மான் நுழைபுலம்	97
41.	உள்ளக் களித்தலும்	99
42.	அ. பொய்மையும் வாய்மை	
	ஆ. தன்நெஞ் சறிவது	100
43.	எழுதுங்கால் கோல்காணா	102
44.	தேரான் தெளிவும்	104
45.	அவர்நெஞ்சு அவர்க்காதல்	107
46.	அ. என்பி லதனை	
	ஆ. தொழுத கையுள்ளும்	109
47.	அ. வழுத்தினாள் தும்மினேன்	
	ஆ. ஊடி யிருந்தேமா	111
48.	இனிய உளவாக	113
49.	அ. கோட்டுப்பூச் சூடினும்	
	ஆ. நினைத்திருந்து நோக்கினும்	115
50.	செவியிற் சுவையுணரா	117
51.	காதலர் இல்வழி	119
52.	பகல்வெல்லும் கூகையை	121
53.	கண்ணும் கொளச்சேறி	123
54.	புறங்குன்றி கண்டனையர்	125
55.	கண்டது மன்னும்	127
56.	நன்றாற்ற லுள்ளும்	129
57.	விடாஅது சென்றாரை	131
58.	அ. அறன்கடை நின்றாருள்	
	ஆ. எளிதென இல்லிறப்பான்	133
59.	கலந்துணர்ந்தும் காதலர்	136
60.	உணலினும் உண்டது	137
61.	எப்பொருள் யார்யார்வாய்	139
62.	செல்லாமை உண்டேல்	141
63.	காலாழ் களரின்	143
64.	துன்னியார் குற்றமும்	145
65.	ஒருதலையான் இன்னாது	147
66.	தாளாண்மை இல்லாதான்	149
67.	கெட்டார்க்கு நட்டாரில்	151

68.	பெயக்கண்டும் நஞ்சுண்டு	153
69.	பெண்ணினால் பெண்மை	155
70.	சிதைவிடத்து ஒல்கார்	157
71.	அ. கொடியார் கொடுமையின்	
	ஆ. மன்னுயிர் எல்லாம்	159
72.	அ. இடுக்கண் வருங்கால்	
	ஆ. ஒற்றொற்றித் தந்த	162
73.	உள்ளினேன் என்றேன்	164
74.	அ. ஊழிற் பெருவலி	
	ஆ. ஊழையும் உட்பக்கம்	167
75.	புன்கண்ணை வாழி	170
76.	வெள்ளத் தனைய	172
77.	அ. இல்லை தவறவர்க்கு	
	ஆ. புலத்தலின் புத்தேள்நாடு	174
78.	சாதலின் இன்னாதது	176
79.	அ. ஒண்ணுதற் கோஓ	
	ஆ. கடாஅக் களிற்றின்மேல்	
	இ. நோக்கினாள் நோக்கெதிர்	178
80.	இன்பத்துள் இன்பம்	180
81.	வீழும் இருவர்க்கு	183
82.	கைவேல் களிற்றொடு	185
83.	நெய்யால் எரிநுதுப்போம்	188
84.	அ. விழுப்புண் படாத	
	ஆ. விழித்தகண் வேல்கொண்டு	190
85.	உள்ளம்போன்று உள்வழி	192
86.	அறிவினுள் எல்லாம்	194
87.	நாணும் மறந்தேன்	196
88.	புரந்தார்கண் நீர்மல்க	198
89.	உப்பமைந் தற்றால்	200
90.	கெடுங்காலைக் கைவிடுவார்	202
91.	செறிதொடி செய்திறந்த	204
92.	அ. மையல் ஒருவன்	
	ஆ. பெரிதினிது பேதையார்	206
93.	அ. நினைப்பவர் போன்று	
	ஆ. தும்முச் செறுப்ப	
	இ. மறைப்பேன் மன்யான்	208
94.	அ. அகழ்வாரைத் தாங்கும்	
	ஆ. அறன்நோக்கி ஆற்றும்கொல்	210
95.	நினைத்தொன்று சொல்லாயோ	212
96.	பொருட்பெண்டிர் பொய்ம்மை	214
97.	கண்தாம் கலுழ்வது	216
98.	மோப்பக் குழையும்	218
99.	அ. அறுவாய் நிறைந்த	
	ஆ. மாதர் முகம்போல்	220
100.	களித்தானைக் காரணம்	222
101.	விளக்கற்றம் பார்க்கும்	224

102.	அ. சுழன்றும் ஏர்ப்பின்னது	
	ஆ. அமிழ்தினும் ஆற்ற	226
103.	அ. துனியும் புலவியும்	
	ஆ. நீரும் நிழலது	228
104.	அ. உழுதுண்டு வாழ்வாரே	
	ஆ. வலியில் நிலைமையான்	231
105.	அ. தினைத்துணையும் ஊடாமை	
	ஆ. ஊடற்கண் சென்றேன்மன்	
	இ. கண்ணின் துனித்தே	233
106.	செல்லான் கிழவன்	235
107.	காமக் கணிச்சி	237
108.	நெருப்பினுள் துஞ்சலும்	239
109.	அ. கண்ணுள்ளின் போகார்	
	ஆ. உள்ளுவன் மன்யான்	241
110.	தீயினாற் சுட்டபுண்	243
111.	யாங்கண்ணின் காண	245
112.	கேட்டினும் உண்டோர்	247
113.	நனவினால் நம்நீத்தார்	249
114.	ஒறுத்தாரை ஒன்றாக	251
115.	ஊடலில் தோற்றவர்	253
116.	ஒழுக்கம் உடைமை	255
117.	புலப்பேன்கொல் புல்லுவேன்	257
118.	நுனிக்கொம்பர் ஏறினார்	259
119.	உய்த்தல் அறிந்து	261
120.	கழாஅக்கால் பள்ளியுள்	263
121.	தம்மில் இருந்து	265
122.	இடிப்பாரை இல்லாத	267
123.	நசைஇயார் நல்கார்	269
124.	அ. பற்றி விடாது	
	ஆ. பற்றுக பற்றற்றான்	271
125.	ஒருநாள் எழுநாள்போல்	273
126.	பற்றற்ற கண்ணும்	275
127.	கூடிய காமம்	277
128.	உலைவிடத்து ஊறஞ்சா	279
129.	துஞ்சுங்கால் தோள்மேலர்	281
130.	மடியுளாள் மாமுகடி	283
131.	அ. செற்றவர் பின்சேறல்	
	ஆ. நிணந்தீயில் இட்டன்ன	
	இ. நாணென ஒன்றோ	286
132.	பல்லார் முனிய	288
133.	தஞ்சம் தமரல்லர்	290
134.	அ. ஆக்கம் அதர்வினாய்	
	ஆ. மடுத்தவா யெல்லாம்	292
135.	காமம் விடு ஒன்றோ	294
136.	இலமென்று அசைஇ	296
137.	பசந்தாள் இவள்	298

138.	அமைந்தாங் கொழுகான்	300
139.	செறாஅச் சிறுசொல்லும்	302
140.	அ. அளவறிந்து வாழாதான்	
	ஆ. உடைத்தம் வலியறியார்	305
141.	சிறைகாக்குங் காப்புஎவன்	307
142.	பண்டறியேன் கூற்றென்	309
143.	அற்றார்க்கொன்று ஆற்றாதான்	311
144.	அழுக்காறு அவா வெகுளி	313
145.	கடுமொழியும் கையிகந்த	315
146.	பெயலாற்றா நீருலந்த	317
147.	கொடுத்துங் கொளல்வேண்டும்	319
148.	இன்னா செய்தாரை	321
149.	தந்நெஞ்சத்து எம்மை	323
150.	ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான்	325
151.	கூத்தாட்டு அவைக் குழாத்து	327
152.	பிரிவுரைக்கும் வன் கண்ணார்	329
153.	நாளென ஒன்று போல்	331
154.	பிணிக்கு மருந்து	333
155.	உள்ளற்க உள்ளம்	335
156.	அழுக்காறு உடையார்க்கு	337
157.	பாலொடு தேன்கலந்து	339
158.	அ. கொலையிற் கொடியாரை	
	ஆ. கொலைமேற் கொண்டாரின்	341
159.	நெஞ்சில் துறவார்	343
160.	நிறைநெஞ்சம் இல்லவர்	345
161.	வலியார்முன் தன்னை	347
162.	எல்லைக்கண் நின்றார்	349
163.	உவந்துறைவர் உள்ளத்துள்	351
164.	அ. தொகச்சொல்லித் தூ வாத	
	ஆ. இறுதி பயப்பினும்	353
165.	பெறாஅமை அஞ்சும்	355
166.	நிறைமொழி மாந்தர்	357
167.	மேலிருந்தும் மேலல்லார்	359
168.	காலைக்குச் செய்த நன்று	361
169.	வசையென்ப வையத்தார்க்கு	363
170.	பணியுமாம் என்றும்	365
171.	ஊடி யவரை	367
172.	நிறைநீர நீரவர்	369
173.	துறந்தார் பெருமை	371
174.	அ. இருபுனலும் வாய்ந்த	
	ஆ. உறுபசியும் ஓவா	
	இ. ஆங்கமை வெய்திய	373
175.	வினைகலந்து வென்றீக	375
176.	மனைத்தக்க மாண்புடையள்	377
177.	சாயலும் நாணும்	379
178.	கல்லார்ப் பிணிக்கும்	381

179.	துப்பார்க்குத் துப்பாய	383
180.	காமக் கடும்புனல்	385
181.	உறுவது சீர் தூக்கும்	388
182.	தன்னுயிர்க்கு இன்னாமை	391
183.	பன்மாயக் கள்வன்	393
184.	நெடும்புனலுள் வெல்லும்	395
185.	கெடுவல்யான் என்பது	397
186.	இன்கண் உடைத்தவர்	399
187.	அ. எற்றிற் குரியர்	
	ஆ. மக்களே போல்வர்	401
188.	அ. நன்னீரை வாழி	
	ஆ. முறிமேனி முத்தம்	404
189.	வினைவலியும் தன்வலியும்	406
190.	குணமென்னுங் குன்றேறி	408
191.	அ. புல்லி விடாஅ	
	ஆ. ஊடுக மன்னோ	410
192.	ஊக்கம் உடையான்	412
193.	புறத்துறுப் பெல்லாம்	414
194.	அ. நகையுள்ளும் இன்னாது	
	ஆ. பண்பிலான் பெற்ற	416
195.	வருகமன் கொண்கன்	419
196.	கொக்கொக்கக் கூம்பும்	421
197.	அரிதாற்றி அல்லல்நோய்	423
198.	உறின்நட்டு அறின் ஒரூஉம்	425
199.	மனத்துக்கண் மாசிலன்	427
200.	கதுமெனத் தாம்நோக்கி	429
201.	இன்மையின் இன்னாது	431
202.	ஈன்ற பொழுதின்	433
203.	அ. கண்ணுள்ளார் காத	
	ஆ. இமைப்பின் கரப்பாக்கு	435
204.	மயிர்நீப்பின் வாழா	438
205.	பயன்தூக்கார் செய்த	440
206.	ஏமுற் றவரினும்	442
207.	முயங்கிய கைகளை	445
208.	செயற்கை அறிந்த	447
209.	கண்ணிறைந்த காரிகை	449
210.	புறங்கூறிப் பொய்த்துயிர்	451
211.	அணங்குகொல் ஆய்மயில்	453
212.	பகையகத்துப் பேடிகை	455
213.	வகையிலா வண்பயன்	457
214.	இற்பிறந்தார் கண்ணேயும்	459
215.	கொடும்புருவம் கோடா	461
216.	பணிவுடையன் இன்சொல்லன்	462
217.	நிலத்தியல்பால் நீர்திரிந்து	464
218.	அறிதோற றியாமை	466
219.	அங்கணத்துள் உக்க	468

220.	ஐந்தவித்தான் ஆற்றல்	470
221.	சலத்தால் பொருள் செய்து	472
222.	இன்பம் கடல்மற்று	474
223.	கல்லாதான் சொற்கா	476
224.	அன்பிற்கும் உண்டோ	478
225.	வினையால் வினையாக்கி	480
226.	நிறையரியர் மன்அ ளியர்	482
227.	ஏதிலார் குற்றம் போல்	484
228.	உறாஅ தவர்போல்	486
229.	ஆக்கமுங் கேடும்	488
230.	செற்றார்பின் செல்லா	490
231.	ஊழி பெயரினும்	492
232.	உள்ளத்தார் காதலவர்	494
233.	துன்பம் உறவரினும்	496
234.	கூற்றம் குதித்தலும்	499
235.	வெருவந்த செய் தொழுகும்	501
236.	இளித்தக்க இன்னா	503
237.	நாண்அகத் தில்லார்	505
238.	எந்நன்றி கொன்றார்க்கும்	507
239.	செவிகைப்பச் சொற்பொறுக்கும்	510
240.	கண்டுகேட்டு உண்டுயிர்த்து	512
241.	கருமம் செயஒருவன்	514
242.	உரமொருவற்கு உள்ள	516
243.	உயிர்உடம்பின் நீக்கியார்	518
244.	ஒளியார்முன் ஒள்ளிய	520
245.	மிகுதியான் மிக்கவை	522
246.	பண்என்னாம் பாடற்கு	524
247.	உழந்துழந்து உள்நீர்	526
248.	குடிசெய்வார்க்கு இல்லை	528
249.	விருந்து புறத்ததா	530
250.	உள்ளுவ தெல்லாம்	532
251.	மலரன்ன கண்ணாள்	535
252.	நிழல்நீரும் இன்னாத	537
253.	அ. இயற்றலும் ஈட்டலும் ஆ. பகுத்துண்டு பல்லுயிர்	539
254.	காக்கை கரவா	542
255.	மணியில் திகழ்தரு	544
256.	ஆகாறு அளவிட்டி	547
257.	மக்கள்மெய் தீண்டல்	549
258.	அ. உற்றவன் தீர்ப்பான் ஆ. மருந்தென வேண்டாவாம் இ. நோய்நாடி நோய்முதல்	551
259.	மாலையோ அல்லை	553
260.	மருவுக மாசற்றார்	555
261.	கண்ணொடு கண்ணினை	557
262.	ஏந்திய கொள்கையார்	560

263.	தற்காத்துத் தற்கொண்டான்	562
264.	பிறப்பொக்கும் எல்லா	564
265.	இம்மைப் பிறப்பில்	566
266.	நிலத்தில் கிடந்தமை	568
267.	சொற்கோட்டம் இல்லது	570
268.	கல்லாத மேற்கொண்டு	572
269.	உடம்பாடு இலாதவர்	574
270.	பழியஞ்சிப் பாத்தூண்	576
271.	செய்தக்க அல்ல	578
272.	இடுக்கட் படினும்	580
273.	எள்ளாமை வேண்டுவான்	582
274.	செப்பின் புணர்ச்சி போல்	584
275.	ஊரவர் கௌவை	586
276.	ஒட்டார்பின் சென்றொருவன்	588
277.	நிலையில் திரியாது	591
278.	தூங்குக தூங்கி	593
279.	எனைத்தொன்று இனிதேகாண்	596
280.	முறைப்படச் சூழ்ந்தும்	598
281.	உலகத்தோடு ஒட்ட	600
282.	அ. அடுத்தது காட்டும் ஆ. நுண்ணியம் என்பார்	602
283.	முகைமொக்குள் உள்ளது	604
284.	அமரகத்து வன் கண்ணர்	606
285.	பெறுமவற்றுள் யாமறிவது	608
286.	இகழ்ச்சியின் கெட்டாரை	610
287.	நெஞ்சத்தார் காதல்	612
288.	ஈர்ங்கை விதிரார்	614
289.	அஞ்சுவ தோரும்	616
290.	அறனிழுக்கா தல்லவை	618
291.	பரிந்தவர் நல்காரென்று	620
292.	எனைமாட்சித் தாகிய	622
293.	அ. கொல்லான் புலாலை ஆ. அவிசொரிந் தாயிரம்	624
294.	சிற்றினம் அஞ்சும்	626
295.	வாழ்தல் உயிர்க்கன்னள்	628
296.	குன்றின் அனையாரும்	631
297.	காதலர் தூதொடு	633
298.	புகழ்புரிந்த இல்லிலோர்க்கு	635
299.	பெரிதாற்றிப் பெட்ப	637
300.	நெருநல் உளனொருவன்	639

இந்நூலின் முதற்பதிப்பு வெளிவந்தபோது சீர்திருத்த எழுத்துகள் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே நான்காம் பதிப்பாகிய இது வெளியிடப்படும்போது இணைக்கப்படும் இப்பொருளடக்கம் மட்டும் சீர்திருத்த எழுத்துகளில் அமைந்துள்ளது.

RAJ BHAVAN LIBRARY
MADRAS

